JL
Y15m211, M99
MC
M99.3-4
16164 ✓

# மாதர் மனோரஞ்சனி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். ஔவையார்.

| VOL. 3. | MADRAS : MARCH 1901. | No. 1. |
|---|---|---|
| புத்த. ௩. | சென்னபட்டணம் 1901ஸு மார்ச்சு மீ | இல. ௧. |


## இந்துஸ்திரீகள் பொழுதுபோக்கும் விதம்

தென்னிந்தியாவிலுள்ள இந்து ஸ்திரீகள் பொதுவாய் வீட்டுக்கு வெளியில் சஞ்சரித்து பொழுது போக்கும் வழக்கமுள்ளவர்களல்ல. வட இந்தியாவில் சில வகுப்பைச் சேர்ந்த இந்து ஸ்திரீகள் மகமதியர்களைப் பார்த்து அவர்களுடைய கோஷா வழக்கத்தை அனுசரித்து எந்தக்காரியத்துக்கானாலும் வீட்டிற்கு வெளியே போகாமல், தங்கள் வீட்டுக்குள்ளேயும் தங்கள் கணவன், அண்ணன், தம்பிகள், பெற்றோர்களிவர்களைத் தவிர மற்ற புருஷர்களுடைய பார்வையில் விழாமல் மறைந்து வசிப்பது வழக்கம். இந்த வழக்கம், பங்காளம், அலஹாபாத், பஞ்சாப் முதலான தேசங்களில் மகமதியர்களுடைய அதிகாரம் மேலிட்டிருந்தபடியால் அந்த தேசங்களிலேயே விசேஷமாயிருக்கின்றதே யன்றி குச்சராதியார் வசிக்கும் மேற்கிந்தியாவிலும் மகாராஷ்டிரர் வசிக்கும் மத்திய இந்தியாவிலும் திராவிடசாதியார் வசிக்கும் தென்னிந்தியாவிலும் இவ்வழக்கமில்லை. அவசியம் நேரிடும்போது ஸ்திரீகள் தங்களுக்கியல்பாயுள்ள நாணம், அடக்கம் முதலான குணங்களை மீறாமல் சம்பாஷிப்பதில் குற்றம் ஒன்றுமில்லை. வீட்டுக் காரியங்களுக்காக கடைகண்ணிகளுக்குப் போவதும், சுவாமி தரிசனத்திற்காக தேவாலயங்கட்குப் போவதும், அக்கம் பக்கத்திலிருக்கும் இஷ்டமித்திரர்களைப் பார்க்கும் பொருட்டு வெளியேபோய் வருவதும், கலியாணம் கார்த்திகை முதலான விசேஷ உற்சாக சமையங்களில் ஸ்திரீகள் தங்களுக்குரியபடி கொண்டாடுவதும் ஸ்திரீகளின் சுபாவத்திற்கு உற்றவைகளே யன்றி மாறானவைகளல்ல. ஏழை வகுப்பைச்சேர்ந்த ஸ்திரீகள் மேற்குறித்த காரியங்களுக்காக வெளியே சஞ்சரிப்பதுமன்றி தங்கள் குடும்ப சம்ரக்ஷணார்த்தம் வேலை செய்து சம்பாதிக்கவும் வீட்டுக்கப்பால் சென்று திரிதல் அவசியமாயிருக்கின்றது. கோஷா விஷயத்தை அனுசரிக்கும் வட இந்தியா வாசிகளான இந்துக்களும், மகம்மதியர்களும் பலவிதமாய் சங்கடப்படுகின்றார்களென்றே தெரிகின்றது. தென்னிந்தியாவில்

600 008.

[illegible]ளென்றவகுப்பாரும் பூர்வம் வட இந்தியாவிலிருந்து வந்தவர்களாதலால் மகமதியர் வழக்கமாகிய கோஷா வழக்கத்தை அனுஷ்டித்து கிரககிருத்திய சம்பந்தமாய் பலவித சங்கடங்களை யனுபவிக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட வழக்கம் நம் தமிழருளில்லாதது தமிழருடைய ஆசார மேன்மையையும், நல்லொழுக்கத்தையும், தைரியத்தையும் காட்டுகிறதென்றே சொல்லவேண்டும். இப்பேர்ப்பட்ட வழக்கமில்லாத தாழ்ந்த ஸ்திரீகள் அதை அனுசரிக்கும் மற்றையவகுப்பு ஸ்திரீகளைவிட நடத்தையில் தாழ்ந்தவர்களென்று சொல்வது அறியாமையாகும். மேலும் கோஷா வழக்கமானது உலகத்தில் மகமதிய மதத்தை பின்பற்றின மகமதிய ஜாதியார்களால் மட்டும் அனுசரிக்கப்பட்டு வருகின்றதே யல்லாமல், மற்ற எந்த ஜாதியாராலும் அனுஷ்டிக்கப்பட்டு வரவில்லை. ஐரோப்பியர் அமெரிக்கர், ஜப்பானியர், சீனர் முதலான ஜாதி ஸ்திரீகள் கோஷா வழக்கத்தை யனுஷ்டிக்காதவர்களாயினும், அவர்கள் ஒழுக்கத்தில் சீர் கெட்டவர்களென்று எந்த மூடன் தைரியமாய்ச் சொல்வன்? ஆகையால் ஸ்திரீகளுக்கு வீட்டுக்கு வெளியே சஞ்சரிக்கும் ஸ்வதந்திரமானது சிலவரை யறைக்கு உட்பட்டிருக்குமானால் நன்மை செய்யத்தக்கதேயன்றி தீமை செய்யத்தக்கதல்ல. ஸ்திரீகளுக்குபுருஷருக்குள்ளதுபோலவே பழக்கத்தாலும், சாவகாசத்தாலும், பெற்றோர்களுடைய மேல் பார்வையாலும் நன்மை தீமைகள் உண்டாகின்றனவேயன்றி வெளி சஞ்சாரத்தாலும், புருஷர்களிடத்தில் அவசியமானபோது சம்பாஷிப்பதாலும் உண்டாவதில்லை. ஆயினும் மனுஷ சுபாவத்தின்படி ஸ்திரீகள் கிருக கிருத்தியங்களைப் பார்க்கவேண்டியதென்றும், புருஷர்கள் சம்பாதித்தல் முதலான வெளிக்காரியங்களைப் பார்க்கவேண்டுமெனும் வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறபடியால் ஸ்திரீகள் தங்கள் காலத்தை விசேஷமாய் வீட்டுக்குள்ளேயே யிருந்து போக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். அப்படி யிருப்பதில் சாமானிய நிலைமையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஸ்திரீகள் சமையல் செய்தல், குழந்தைகளைப் பரிபாலித்தல், இன்னும் மற்ற வீட்டுக்காரியங்களைப் பார்த்தல், இவ்வாறாக பொழுதுபோக்க நேரிடுகிறது. சாமானிய அந்தஸ்துக்கு கீழ்ப்பட்ட அந்தஸ்திலுள்ள குடும்பங்களிற்சேர்ந்த ஸ்திரீகள் மேற்சொன்னபடி வீட்டுக்காரியங்களைப் பார்ப்பதோடுகூட வெளியிற்போய் வேலைசெய்து சம்பாதிக்கவும் வேண்டியிருக்கிறபடியால் அவர்கள் பொழுதுபோகாமல் சோம்பேறிகளாயிருக்கும் நிலைமையுள்ளவர்களல்ல. இவ்விரண்டு வகுப்பார்க்கும் மேல்வகுப்பாரான சில குடும்பங்களில் ஸ்திரீகள் வீட்டு வேலைகள் செய்யவும் வெளியிற்போய் சம்பாதிக்கவும் ஆவசியம் நேரிட்டுயிராதிருப்பதால்

JL
Y15m211,M79M0
M99.3-6



அவர்களுக்கு வீட்டுக்குள்ளேயே பொழுதைப்போக்க அனுகூலங்களில்லாமல் சங்கடப்படுவதுண்டு. அப்படி சங்கடப்படும்போது அக்கம்பக்கத்து ஸ்திரீகளை வரவழைத்து அவர்களுடன் வீண்பேச்சுகள் பேசுவதும், சோழி, புளியங்கொட்டை, பல்லாங்குழி, அம்மானை, கழக்கோடி, முதலான ஆட்டங்களாடுவதும் அல்லது சும்மா படுத்து உறங்குவதும் பொழுது போக்காக கொள்ளப்படுகின்றன. ஆனால் இவ்விதமாய் பொழுது போக்குவதால் சரீரத்திற்காவது, புத்திக்காவது, ஒரு விதமான நன்மையுமுண்டாவதில்லை. தீமையுண்டாகிறதென்றே சொல்லலாம். ஆகையால் இப்படி நன்மையை யுண்டாக்காமல் சில சமயங்களில் தீமையையும் உண்டாக்கக்கூடிய விதங்களாய் பொழுது போக்குவதை ஒழித்து நன்மையும், லாபமும் உண்டாக்கக் கூடிய விதமாய் பொழுது போக்கப் பார்ப்பது மகாவசியம். இக்காலத்தில் நாகரிகம் அதிகப்பட்டு வருவதால் சிறு பிராயமுள்ள ஸ்திரீகள் தங்கள் புருஷரோடு தனிக்குடித்தனம் செய்ய நேரிட்டு, வீட்டுவேலை அதிகமாகச் செய்ய அவசியம் நேரிடுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் தக்கபடி தங்களுக்கோ, தங்கள் கணவர்களுக்கோ, தங்கள் குழந்தைகளுக்கோ நன்மையுண்டாகும்படியாக யோக்கியமும் பெருந்தன்மையுமான வேலைகள் செய்து காலத்தைப்போக்கத் தெரிந்திருப்பது மிகவும் அவசியம். முதலாவது எழுத வாசிக்கக் கற்றிருந்தால் வீணாக யாதொரு நன்மையும் உண்டாகாமல் பொழுது போக்குவதைவிட நல்ல விதமாய் பொழுது போக்குதல் சாத்தியமாகும். அதனால் தங்கள் புத்தி தேர்ச்சி பெறுவதுமன்றி தங்கள் புருஷர்களோடு சம்பாஷிப்பதில் சாமர்த்தியத்தைக் காட்டுதலும், தங்கள் குழந்தைகளுக்கு பொதுவாய் அறிவை விருத்திபண்ணுவதும் சாத்தியமாகும்; மேலும் எப்போதும் எழுதுதலும் வாசித்தலும் சாத்தியப்படாதாகையால் ஒழிந்த நேரத்தில் தையல் வேலை செய்வதும் அல்லது தங்களுக்குப் பிரியமாயும் பிரயோஜனப்படும்படியான வேலையைச் செய்தல் நல்லது. சங்கீதம் கற்றிருத்தலும், சித்திரம் எழுதுதலும், பூ கோர்ப்பதும் செடிகள் பயிர் செய்வதும், வீட்டு சாமான்களைச் சுத்தம் செய்து அவைகளிருக்கவேண்டிய விடங்களில் வைத்து சேதமுண்டாகாமல் பாதுகாப்பதும் ஸ்திரீகளுக் குற்றவேலைகள். இன்னும் அவரவர்களுடைய சந்தர்ப்பங்களுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்றபடி பற்பல. வேலைகளைச் செய்து பிரயோஜனப்படும்படியாக பொழுது போக்கல் சாத்தியமேயன்றி அசாத்தியமல்ல. லோகோபகாரமான காரியங்களில் ஸ்திரீகள் செய்யக்கூடிய காரியங்கள் நேரிடுமானால் அவைகளிலும் பிரவேசித்தல் உத்தமம். சமீபத்

தில் சென்னைக் கவர்னர் மாளிகையில் சில ஐரோப்பிய ஸ்திரீகளும் இந்து ஸ்திரீகளும் சேர்ந்து காலஞ் சென்ற விக்டோரியா மகாராணியவர்கள் பெயர் நிலைத்திருக்கும் பொருட்டு வைத்திய சாலைகளில் (Hospital) நோயாளிகளுக்கு பணிவிடைசெய்ய தாதிகள் தயார் செய்யவேண்டுமென்று ஆலோசனை செய்தபோது சர் வேம்பாக்கம் பாஷியம் அய்யங்காருடைய பத்தினியாரும் வேறு சில கிருஸ்துவ ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். பம்பாய்ப்பட்டணத்தில் ஸ்திரீகள் சேர்ந்து ஒரு சபை ஸ்தாபித்து அது சம்பந்தமாய் அடிக்கடி கூட்டங்கள் கூட்டி இறந்துபோன மிஸ்டர் ரானடேயினுடைய பத்தினியாரும் மற்ற இந்து ஸ்திரீகளும் நடத்திவருகிறார்கள். இன்னும் சில விடங்களில் பெண் குழந்தைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களை கௌரவ ஸ்திதியிலுள்ள ஸ்திரீகள் போய்பார்த்து வருவதும் சகஜமாகி வருகின்றது. இப்பேர்ப்பட்ட பொது விஷயங்களிலும் அந்தஸ்தும் அவகாசமுமுள்ள ஸ்திரீகள் கவனம் செலுத்திவருதல் பெருமையும், நன்மையுமாகுமே யன்றி குற்றமாகமாட்டாது.

ஜி. சுப்பிரமணியய்யர்.

---

## விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1901-ம் ௵ பிப்ரவரி ௴ 11௳.

நெ. 115.—கீழ்வரும் இந்தியா கவர்ன்மெண்டாருடைய கெஜட் எக்ஸ்ட்ரார்டினெரி பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிறது:—

### ஹோம் இலாக்கா.

### பப்ளிக்.

கல்கத்தா, 1901-ம் ௵ பிப்ரவரி ௴ 5௳

நெ. 510—மாட்சிமைதங்கிய மன்னராகிய இந்து தேசத்துச் சக்கிரவர்த்தியானவர் இந்து தேசத்து ஸமஸ்தான அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் அடியிற்கண்ட நிருபத்தைக் களிகூர்ந்து அனுப்பியிருக்கின்றனர்:—

"இந்து தேசத்து ஸமஸ்தான அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்,—என் அன்புக்கும் பெருந்துக்கத்துக்கும் இடமாகிய என் தாயார் (யாவரும்) துயரடையும்படி தேக வியோகமான காரணத்தினால், மிகப்புராதனமான வம்ச பரம்பரை வழியாக எனக்குக் கிடைத்த ஸிம்ஹாஸனத்தை யான் உரிமை வாயிலாகப் பெற்றேன். என் இந்திய ராஜ்ஜியங்களிலுள்ள சுதேச ஸமஸ்தானங்களை ஆண்டுவரும் அதிபதி



களுக்கும் குடிஜனங்களுக்கும் என் வாழ்த்துரை அனுப்பவும், அவர்களுடைய க்ஷேமத்தில் எனக்கு மனப்பூர்த்தியாயுள்ள சிரத்தையை அவர்களுக்கு வற்புறுத்தித் தெரிவிக்கவும் இப்போது விரும்புகிறேன். எனக்கு முன் மிகவும் பிரசித்தி பெற்றவரும், என் துயரத்துக்குக் காரணமாய் மரித்தவருமான மஹாராணியாரே - இந்து தேசத்து விவகாரங்களைப் பரிபாலிப்பதென்னும் பொறுப்பைத் தாமே நேரில் வகித்தவரும், அந்த அகண்ட தேசத்தின் துரைத்தன விஷயத்தில் முன்னிருந்ததைவிட அதிக சம்பந்தத்தைப் பெற்றிருந்ததற்கு அறிகுறியாகச் சக்கிரவர்த்தினி என்னும் பட்டத்தை வகித்தவருமாகிய இத்தேசத்து முதல் வேந்து.

"இந்தியாவைச் சேர்ந்த சகல விஷயங்களிலும் மஹாராணியாராகிய சக்கிரவர்த்தினியார் நேரில் இடைவிடாத ஆழ்ந்த சிரத்தை காட்டி வந்தார்கள்; அத்தேசத்துக் கோடானுகோடி பிரஜைகள் அச்சக்கிரவர்த்தினியார் விஷயத்திலும் அவர்களது ஸிம்ஹாஸனாதிபத்தியத்திலும் தெரிவித்த ராஜவிசுவாசமும் அன்பும் எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றன.

"சக்கிரவர்த்தினியாருடைய மேன்மைதங்கிய நீடித்த ஆளுகையின் கடைசி வருஷத்திலே தென் ஆபிரிகாவில் நடந்த யுத்தத்தில் சுதேச சமஸ்தான அதிபதிகள் தேசாபிமானத்தினால் செய்த பெருந்தன்மையான உதவியினாலும், சுதேச ராணுவத்தார் தங்களுடைய ஜன்ம தேசத்தின் எல்லைகளுக்கப்பால் செய்த பராக்கிரமமான சேவகத்தினாலும் மேற்படி ராஜ விசுவாசமும் அன்பும் பிரசித்தமாய் விளங்கின.

"அந்தச் சக்கிரவர்த்தினியாருடைய விருப்பத்தினாலும் அனுமதியினாலுமே யான் இந்தியாவுக்கு வந்து, பிரசித்திபெற்ற புராதனமான ராஜ்ஜியத்தைச் சேர்ந்த ஸமஸ்தான அதிபதிகளையும் பிரஜைகளையும் பட்டணங்களையும் நேரிற்கண்டு தெரிந்துகொண்டேன்.

"அப்போது என் மனதில் ஆழ்ந்து பதிந்த விஷயங்களை யான் ஒரு போதும் மறவேன்; முதல் மஹாராணியாராகிய சக்கிரவர்த்தினியாரைப் போலவே யானும் சகல வகுப்புகளைச் சேர்ந்த என் இந்திய குடிஜனங்களின் அசேஷ க்ஷேமத்திற்காகப் பாடுபடவும் அந்த ஜனங்களுடைய இடைவிடாத ராஜ விசுவாசத்திற்கும் அன்பிற்கும் அச்சக்கிரவர்த்தினியாரைப் போலவே பாத்திரனாகவும் முயல்வேன்.

(ஒப்பம்) எட்வர்ட், மன்னரும் சக்கிரவர்த்தியும்."

விண்ட்ஸர் காஸில்;

1901-ம் ௵ பிப்ரவரி ௴ 4௳.

## சுகன்னியா.

(2-வது புத்தகம் 236-வது பக்கத் தொடர்ச்சி.)

சௌநகமுனிவர் இராஜனது வேண்டுகோளுக் கிசையவே இராஜன் அவ்விடத்திலேயே கல்யாண மண்டபமியற்றித் தன் குமாரத்தியை அவருக்கு கன்னிகாதானமாகக் கொடுத்து கலியாணத்தை செய்து வைத்தார். இராஜன் அம்முனிவரிடம் விடைபெற்றுக்கொண்டு தனது நகரத்திற்கு சேனைகளுடன் போய்ச்சேர்ந்தான்.

பின்பு சுகன்னியாவானவள் தனது பர்த்தாவுக்கு பணிவிடை செய்து கொண்டு அவருடன் மிக நேசத்துடன் வசித்துக்கொண்டிருந்தாள். இப்படி சில காலஞ்சென்ற பின்பு ஒருநாள் அந்த சுகன்னியா தனது பர்த்தாவினுடைய பூசைக்குச் சலந்திரட்டி வரச்சென்றாள். அவ்வழியில் அஸ்வனி தேவதைகளிருவரும் எதிர் வந்து ஓ, சௌந்தரியமுள்ள பெண்ணே! நீ யார்? உனது பெயரென்ன? உன் கணவன் யார்? அவன் பெயரென்ன? வென்று கேட்க, அந்தச் சுகன்னியா என் கணவனார் சௌநகமுனிவர், என் பெயர் சுகன்னியாவென மறுமொழி பகர்ந்தாள். இதைக்கேட்ட அஸ்வனி தேவதைகள் ஆ! ஆ!! இவள் மகா பதிவிரதைபோல் தோன்றுகிறது. இவளைச் சோதிப்போமென ஆலோசித்து "ஓ பெண்கள் நாயகமே! உன்னிளமைப் பருவத்துக்குத் தகுந்த கணவனைத் தேடிக்கொள்ளாமல் மிகுந்த கிழத்தனத்தையுடையவராயும், ஐம்புலனு மொடுங்கினவராயு மிருக்கின்ற சௌநகமுனிவரைக் கணவனாகக்கொண்டதில் நீ கண்ட பலனென்ன? ஒன்றுமில்லையே? ஆதலால் எங்களிருவர்களில் யார்பேரில் உனக்கிச்சையிருக்கிறதோ அவர்களைக் கணவனாக்கிக்கொள். இதனாலே நீ பெற்ற அழகின் பயனை அடைவாய், இப்படிச் செய்வதில் தோஷமொன்றுமில்லை" யென, இக்கன்னிகை மிகக் கோபங்கொண்டு மறு உத்தரவு ஒன்றும் சொல்லாமல் மௌநமாய் தனது கணவரிடத்து வந்து வணங்கி பின்வருமாறு கோபத்துடன் சொல்லுகிறாள் :—

"பிராணநாதா! நான் தமது பூசைக்குச் சலம் திரட்டி வரச்செல்லும்பொழுது இருவர் வந்து மறித்து என்னை யாரென்றும், எனது கணவர் யாரென்றும், மிக கர்வத்துடன் கேட்கவே நான் அவர்களுக்கு எனது பெயரையும் தமது பெயரையும் சொன்னேன். சொன்னவுடன் அவர்கள் "கிழவனைப் புருஷனாக வைத்திருப்பது உன்னழகுக்குத் தகுந்ததல்ல. எங்களிருவர்களி லொருவரை விவாகம் பண்ணிக்கொள்வதினால் தோஷமில்லை" எனச் சொன்னார்கள். நான் கோபங்கொண்டு பதிலுரைக்காமல் தங்களுக்குத் தெரிவிக்க வந்தேன்" என்றாள். முனிவர் தமது ஞானதிருஷ்டியினால் அவர்கள் அஸ்வனி தேவதைகளென்று அறிந்துகொண்டு "ஓ, பெண்ணே நீ பயப்படவேண்டாம். நான் சொல்வது பிரகாரம் நீ செய்!" என, அவள் "பிராணநாதா! நான் அவ்விதம் செய்ய காத்திருக்கிறேன்." என்றாள். முனிவர் "அவர்களின்னும் முன்னிருந்த விடத்திலேயே யிருக்கின்றார்கள். நீ அவர்களிருக்குமிடத்திற்குச் சென்று உங்களிலொருவரை மணஞ்செய்து கொள்ளுகிறேன். ஒருவர் ஏற்படுங்களென்று சொல்லு; அவ்விருவருக்கும் வழக்கு உண்டாகும். அதன் பின்பு என்னிடத்திற்கு வருவார்கள். அப்பொழுது நான் செய்யவேண்டியதைச் செய்கிறேன்." என்று சொல்லி சுகன்னியாவை யனுப்பினார். அவள் மஹா பதிவிரதையாதலால் கணவன் கூறியபடி அஸ்வனி தேவதைகளிருக்குமிடத்திற்குச் சென்று அவர்களைக் கண்டு "ஐயா நான் செய்யவேண்டிய ஏற்பாடு செய்தாய்விட்டது. உங்களிருவரிலொருவரைக் கணவனாகக் கொள்ளுகிறேன். சீக்கிரம் நீங்களும் ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொன்னாள். இதைக் கேட்ட அவ்விருவர்களும் "ஆ! ஆ!! இதென்ன ஆச்சரியம்! நாம் வேடிக்கையாகச் சொன்னது வினையாகமுடிந்ததே என்று" ஒவ்வொருவரும் மனதுக்குள் நினைத்து ஒவ்வொருவரும் நான் இவளை மணம்புரிகிறேன், நான் இவளை மணம்புரிகிறேன், என்று வழக்கிட்டார்கள். வழக்கு முடிவுக்கு வருவது அசாத்தியமென்று இருவரும் யோசித்து சௌநகமுனிவர்தான் இவ்வழக்கின் தீர்ப்பைச் சொல்லவேண்டும் என்று எண்ணி அப்பெண்ணையும் அழைத்துக்கொண்டு சௌநகமுனிவரிடத்துக்குப் போய் இவ்விருவர்களின் வழக்கை விஸ்தாரமாகச் சொன்னார்கள். தவசிரேஷ்டராகிய அச்சௌநகர், அவ்விருவரையும் பார்த்து புன் சிரிப்புடன் "எனக்கும் உங்களைப்போல அப்பெண் பாத்தியமாதலால் எனக்கும் வழக்கிருக்கிறதென்று" பதில் சொன்னார். அவர்கள் இது என்ன "குரங்கு பிடிக்க பூதமாக முடிந்தது" என்ற பழமொழிபோல இவரும் தமக்கு வழக்கிருப்பதாகச் சொல்லுகிறாரே; நாமென்ன செய்வது என்று கொஞ்சநேரம் யோசித்து "ஐயா முனிவரே உமக்கும் எங்களைப்போல வழக்கிருப்பதனால் நாமெல்லோரும் மற்றொருவரிடத்திற் சென்று இவ்வழக்கைத் தீர்த்துக்கொண்டு மூவரிலொருவர் இந்த சுகன்னியாவை மணஞ்செய்து கொள்வதே உத்தமம். ஆகையால் நாம் புறப்படுவோம்" என்றார்கள். மூவரும் சுகன்னியாவும்வெகுதூரம் சென்றார்கள். வழியில் ஒரு சுனை தென்பட்டது. இதன் மகிமையென்னவெனில் இதில் வயது சென்றவர்களும் மற்றவர்களும் முழுகி வெளியில் வரும்பொழுது யாவரும் அச்சுவார்த்தாற்போல ஒரே மாதிரியாக திவ்விய அழகுள்ள பால குமரர்களாயிருப்பார்கள். இவர்களிவ்வித சுனையைக் கண்டு ஒருவன் "இதில் நாமூவரும் முழுகிவருவோம், நம்மில் எவனை

யேனும் அவளே தொடட்டும். அப்படி அவள் தொட்டவன்தான் அவளுக்கு கணவனாவான்" என்று சொன்னான். இம்மூவரும் சம்மதித்து அக்கன்னியைப்பார்த்து ஓ! பெண்ணே? இச்சுனையில் நாங்கள் மூவரும் முழுகி யெழுந்து வருகிறோம். உனக்கு இஷ்டமான புருஷனைத் தொடு" வென்று சொல்லவே அவள் சம்மதித்தாள். உடனே இம்மூவரும் அச்சுனையில் முழுகி வெளி வந்தார்கள். அவர்களில் கிழத்தனத்தையுடைய சௌநகரும் அந்த அஸ்வனிதேவதைகள் எவ்வுருவத்தோடு வெளிப்பட்டார்களோ அவ்வுருவத்தைக்கொண்டு வெளிப்பட்டு நின்றார். சுகன்னியானவள் ஈஸ்வரா! நான் என் கணவனிடத்தில் விசுவாசமும் பக்தியும் பதிவிரதையாயுமிருந்தால் நான் தொடும் மனிதன் எனது அருமையான கணவனாகவிருக்கவேண்டும். ஓ பகவானே! என்னை இவ்விதம் பரீட்சிக்கலாமா? ஜகதீசா! என்னை இச்சமயத்தில் காத்தருளவேண்டும் என்று தியானித்து பின்பு தனது கணவனையும் ஸ்தோத்திரம் செய்து தெய்வமே என்று மறுபடியும் மனதில் நினைத்துக் கடவுளை வணங்கி ஒருவரைத் தொட்டாள். அப்படி மிக பயந்து பயபக்தி விசுவாசமுடைய சுகன்னியானவள் தொட்ட புருஷன் சௌநக முனிவராயிருக்கக் கண்டு மிகச் சந்தோஷித்து மறுபடியும் ஈசனைத் தியானித்தாள். அஸ்வனிதேவதைகள் சுகன்னியா மகா பதிவிரதாசிரோமணியென்று மதித்து தாங்கள் அவளைப் பரீட்சிக்க வந்ததாகச் சொன்னார்கள். பின்பு அவர்கள் சுகன்னியாவை வாழ்த்தி சௌநக முனிவரிடம் விடைபெற்றுத் தமது லோகம் போய்ச் சேர்ந்தார்கள்.

சௌநகர் அதே ரூபத்துடனிருக்கும்படி சுகன்னியா வேண்டிக்கொண்டமையால் அவரும் சம்மதித்து இருவரும் தங்களிருப்பிடத்திற்குச் சென்று கூடிக்குலாவி வாழ்ந்துகொண்டிருந்தார்கள். சிலகாலஞ் சென்ற பின்பு சுகன்னியா கர்ப்பம் தரித்து ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்புத்திரனுக்கு சநகனென்று பெயரிட்டார்கள். இவன் சகலகலைக்கியான சொரூபியாய் மகா நிலைபெற்றதவ சிலாக்கியனாகி ஒரு மகாமுனி புத்திரியை விவாகம் செய்து வாழ்ந்துகொண்டிருந்தான்.

இச்சுகன்னியா மகா பதிவிரதையென இக்கதையால் தெரிகிறது.

[இது ஸ்ரீமகாபாரதம் ஆதிபருவம் பிருகுமுனி சருக்கத்திலிருந்து எடுக்கப்பட்டது.]

[நமது பார்வைக்கு வந்த புஸ்தகம் :—பண்டித S. M. நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட வால்மீகி ராமாயணவசனம் பாலகாண்டம்.]



## மிஸ்ஸஸ் அரண்டேலும் இந்துமாதர்களும்.

இந்து மாதர்கள் ஐரோப்பிய மாதர்களுடன் கலந்து பேசுவது மிகவும் நம்மவர்களில் அரிதாகவிருந்தாலும் சில வருடங்களாக நமது மாதர்கள் ஐரோப்பிய மாதர்களுடன் கலந்து உற்சாகமாய் சிற்சில வார்த்தைகளைப் பேசிவருவதைக் கேட்க மிக சந்தோஷப்படுகிறோம். சென்ற மாதத்தில் கூடலூரில் டிஸ்டிரிக்ட் முன்சிப் அவர்களின் சம்சாரமும், இன்னும் அங்குள்ள சில மாதர்களும் ஐரோப்பிய மாதர்களுடன் கலந்து பேசினார்களாம். சில தினங்களுக்கு முந்தி சென்னை அடையாற்றிலுள்ள மிஸ்ஸஸ் அரண்டல் அவர்கள் லேடி ஆம்ப்திலை அவர்களை வரவழைத்தபொழுது சில இந்து மாதர்களையும் வரவழைத்தாராம். மிஸ்ஸஸ் அரண்டேலும் மிஸ் அரண்டேலும் விருந்தினரை யெதிர்கொண்டழைத்து ஒரு பெரிய மண்டபத்தில் உட்காரவைத்து நமது கவர்னரின் மனைவியாருக்கு ராஜா சர் இராமசுவாமி முதலியார் அவர்கள், கனம் ஜட்ஜ் சர், S. சுப்பிரமணிய அய்யரவர்கள், கனம் சர் V. பாஷியம் அய்யங்கார் அவர்கள், ராய் பஹதூர் M. எ[illegible]ஜுலு பிள்ளையவர்கள், கனம் P. ரங்கைய்ய நாயுடு அவர்கள், காலஞ்[illegible]ன பஹதூர் P. இராமசுவாமி செட்டியாரவர்கள், முதலியவர்களுடைய குடும்பத்தைச்சேர்ந்த மாதர்களைக் காண்பிக்கவே நமது கவர்னரின் மனைவியார் மிகக் களிப்படைந்து அவர்களுடன் உல்லாசமாக பேசிக்கொண்டிருந்தனராம். பின்பு ராய் பஹதூர் எம். எதிராஜுலு பிள்ளையவர்களின் இரண்டு குமாரத்திகளும் நமது லேடி ஆம்ப்திலுக்கு ரோஜா புஷ்பச் செண்டை வெகுமதியாக அளித்தனர்கள். கனம் சர் வி. பாஷியம் அய்யங்காரவர்களுடைய புத்திரியும் மற்றொரு மாதும் வீணை வாசித்தார்கள். இங்கிலீஷ் வாத்தியங்களும் சில மாதர்களால் வாசிக்கப்பட்டன. கவர்னரின் மனைவியார் மிக சந்தோஷப்பட்டு பின் வருமாறு சொன்னார்:—"நான் இந்தியாவிற்கு வரும் முன்னமே நமது காலஞ்சென்ற மகாராணியாரைக் கண்டபோது அவர் என்னிடத்தில் இந்தியாவிலுள்ள புத்திரர்களும், புத்திரிகளும் ராஜவிசுவாசமுள்ளவர்களென்றும் என்னை இந்தியாவிலுள்ள மாதர்களுக்கும் பெண்களுக்கும் செய்யவேண்டிய நன்மையைச் செய்யும்படியாகவும் சொன்னார்."

பின்பு விருந்தினர்களை வேறு அறைக்கு இட்டுக்கொண்டு போய் (பிராமணர்களுக்கு தனிமையாய்) அவாளவாள் மதம், ஜாதி முதலியவைகளுக்கு விரோதம் வாராவண்ணம் அவர்களுக்கு பல தின்பண்டங்களளிக்கப்பட்டபின் சந்தன புஷ்பம் தாம்பூலம் முதலியவைகளும் கொடுக்கப்பட்டு சபை கலைந்தது.

## முக்கிய குறிப்பு.

---

பஞ்சாபிலும் மாதர்களொரு சபைகூட்டி கர்ஸன்பிராட்டியின் வேண்டுகோள் சம்பந்தமான ட்ப்ரின் பெருமாட்டியின் தருமநிதிக்கு உதவிசெய்ய தீர்மானித்திருக்கிறார்கள்.

---

இங்கிலண்டுஏகாதிபத்தியத்துக்குத்தலைவராயிருக்கும் அந்தஸ்துடையவர்களுக்கு மகாராணி அல்லது மகாராஜா வென்றபட்டம் அவரவர்கள் வகுப்புக்குத் தகுந்தபடி அளிக்கப்படும். அவர்கள் காலத்துக்குப் பின்னால் செங்கோல் செலுத்த உரித்தானவர்களுக்குப் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் பட்டங் கொடுப்பது சென்ற 700 வருஷங்களாக இங்கிலாண்டில் வழங்கிவருகிறது. இனி இப்பேர்ப்பட்ட பட்டம்கொடுக்கப்பட மாட்டாதாம்.

---

பெங்காளத்திலுள்ள மாதர்கள் மகாராணியாரின் ஞாபகச்சின்னவிஷயமாய் ஒரு சபை கூடினார்கள். அக்காலத்தில் விதந்துகளுக்கு ஒரு [illegible]புச்சாலையை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். இவ்விஷயத்தை நிறைவேற்ற குச்பீஹார் தேசத்து மகாராணியார் சபைத்தலைவராகவும், அச்சபைக்கு மிஸ் கோஷல் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

பங்களூரில் 200 மாதர்கள் ஒரு சபைகூட்டி இந்துப் பெண்களுக்கத்தியாவசியமான மருத்துவப்பெண்களுக்கு வேண்டியு திரவிய உதவி செய்யவேண்டுமென தீர்மானித்தார்கள். தனவந்தரான மாதர்களிலொவ்வொருவரும் 240 ரூ. தருவதாக வாக்களித்தார்கள். மற்றவர்கள் சுமார் ரூபா 2,000 வரையிலும் கையொப்பம் செய்திருக்கிறார்கள். நமது சென்னையிலுள்ள மாதர்கள்தான் இன்னுமொன்றும் செய்ய முன் வரவில்லை.

---

தமதருமைத் தாயார் மரிக்க அவர்களது ஞாபகம் நிலைத்து நிற்குமாறு எவ்விதமான ஞாபகச்சின்னம் ஏற்படுத்தலாமென்னும் விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்து யாதாயினும் ஒரு தீர்மானத்தைத் தமக்குத் தெரிவிக்கும்படியாக எட்வர்ட் மகார்ராஜா அவர்கள் தெரிவித்தார். மகாராஜரீ அவர்கள் நியமித்த சங்கத்தார் ஞாபகச்சின்னம் ஒரு உன்னதக்கோபுரக் கட்டிடமாக விருத்தல் சிறந்ததென்று சொன்னார்கள். மகாராஜாவும் அவர்களது யோசனையை அங்கீகரித்திருக்கிறார்களாம். இந்த ஞாபகச்சின்னவிஷயமாகப் பொருள் சேகரிக்கப்பட்டவுடன் லண்டனில் இக்கட்டிடம் கட்டப்படுமாம்,



நம்தேசத்தில் வைசூரி அல்லது அம்மை வந்தால் குழந்தைகள் வெகு கஷ்டப்படுவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இதற்காகத்தான் அம்மை குத்திக்கொள்வது நலமென சில டாக்டர்களபிப்பிராயப்பட்டு குத்தியும் வருகிறார்கள். இப்பொழுது அம்மை திடீரென ஒரு குழந்தைக்கு வந்துவிட்டால் சிவப்புக் கண்ணாடிகளுள்ள லாந்தலில் விளக்கை ஏற்றி வைத்து அக்குழந்தை யிருக்குமறையில் வைத்தால் அம்மை சீக்கிரம் இறங்குமென்பதையும், மேலும் சிவப்பு வஸ்திரத்தால் அந்தக் குழந்தையை மூடிவைப்பது நலமென்பதையும் சில பேர்போன டாக்டர்கள் கண்டு பிடித்தார்கள். சிவப்புக் கண்ணாடி வெளிச்சம் உள்ளிருப்பதால் அம்மை 5 தினத்திற்குள் போய்விடுமாம்.

---

ருஷியா சக்கிரவர்த்திக்கு ஒருநாள் வரும்படி 5,000 பவுன் அதாவது 75,000 ரூ. துருக்கி சுல்தானவர்களுக்கு 3,600 பவுன் அதாவது 53,000 ரூ. ஆஸ்திரியா சக்கிரவர்த்திக்கு 2,000 பவுன் அதாவது 30,000 ரூ. ஜர்மனி சக்கிரவர்த்திக்கு 1,600 பவுன் அதாவது 23,000 ரூ. இட்டாலியா தேசத்து அரசனுக்கு 1,300 பவுன் அதாவது 19,500 ரூ. காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாருக்கு 13,000 பவுன் அதாவது 1,95,000ரூ. பிரஞ்சுதேசத்து பிரசிடெண்டுக்கு 1,000 பவுன்; அதாவது 15,000 ரூ. ஐக்கியமகாணத்து பிரசிடெண்டுக்கு 25 பவுன் அதாவது 375 ரூபா.

---

உலகத்தில் மிக சுத்தியான நகரம்:—பாரிஸ், உலகத்திலுள்ள நகரங்களில் மிக சுத்தியானதாம். தினம் காலையில் 2,000 புருடர்களும், 600, ஸ்திரீகளும் தெருக்களையெல்லாம் சுத்திசெய்து வருகிறார்களாம். இவர்கள் காலையில் 4 மணிக்கு எழுந்திருந்து சாயங்காலம் 4 மணி வரையிலும் வேலை செய்கிறார்கள். மத்தியில் இரண்டுமணி நேரம் இவர்கள் சாப்பிடுவதற்காக விடப்படுவார்கள். ஆக ஒரு நாளைக்கு சுமார் 10 மணி நேரம் வேலைசெய்து வருகிறார்கள். ஸ்திரீகள் காலையில் மாத்திரம்தான் வேலை செய்து வருகிறார்கள். இவ்வித மிங்குமிருந்தால் நமது சென்னைமா நகரமும் இரண்டாவது சுத்தியுள்ள நகரமென்று சொல்லலாமல்லவா?

---

நமது மகாராஜாவின் குமாரராகிய யார்க்கோமகன் (Duke of York) ஆஸ்திரேலியா முதலிய விடங்களுக்குச் சென்று பின்பு லங்கைக்கும் விஜயம் செய்வார். முன் 1875-ம்வருஷத்தில்நமது மகாராஜா அவர்கள்பிரின்ஸ் ஆப் வேல்ஸாயிருக்கும் பொழுது இந்தியாவிற்கு வந்திருந்தார். அக்காலத்தில் ஜனங்கள் வெகு சந்தோஷம் கொண்டாடினார்கள். நமது மகா-

ராஜா அவர்களும் பிரியத்தோடு தமது பிரஜைகளைக் கண்டுகளித்தார். அவ்விதமே இவர் குமாரரும் இந்தியாவிற்கு இப்போது வந்தால் நலமென சிலரபிப்பிராயம். ஆனால் பார்லிமெண்ட் கன்ஸர்வெட்டிவ்கட்சியில் மெம்பராயுள்ள சர், எம், எம். பௌனகரி என்பவர் பார்லிமெண்டில் கோமகன் இந்தியாவிற்கும் சென்றால் நலமென சொன்னதற்கு மிஸ்டர் பால்பர் அவருக்கு சாவகாசமில்லாமையால் இப்பொழுது இந்தியாவிற்குப் போக முடியாதென மிக விசனத்துடன் தெரிவித்ததாகத் தெரிகிறது. இது நமது துர்பாக்கியமேயாம்.

---

சென்ற டிசம்பர் மாதம் சென்னைக் கவர்ன்மெண்டார் நடத்திய அப்பர் ஸெகண்டரி பரீக்ஷைக்குச் சென்ற 150 பேர்களில் 17 பேர்கள் அந்தப் பரீக்ஷையில் தேர்ந்ததாக கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் முதன்மையாக முதலாவது வகுப்பிலும் முத்துரமணியம்மாள் என்று சென்னையில் உபாத்திச்சிமார்கள் பழக்கும் பிரெஸிடென்ஸி பாடசாலையில் உபாத்திச்சி வேலையில் அமர்ந்திருக்கும் ஒரு ஹிந்துஸ்திரீ எனத்தெரிய மகத்தான சந்தோஷத்தைத் தருகின்றது. பி. ஏ., எம். ஏ. முதலிய பெரிய பட்டங்களை எளிதில்பெறலாம்; ஆனால் அப்பர் ஸெகண்டெரி என்ற மகா கடினமான பரீட்ஷையில் தேறுவது கஷ்டமான விஷயம். இந்தப் பரீட்சைக்கு அநேக புத்திமான்கள் போய்த் தவறியதை நாமறிவோம். அன்றி இந்தப் பரீட்சைக்கு அநேகர் முயற்சிப்பதையே விட்டிருப்பதைப் பார்த்தாலும் அந்தப் பரீட்சை கஷ்டமானதென வெளியாகும். இதில் ஒரு ஹிந்து ஸ்திரீ கியாதியுடன் தேறினாரென்றதை யார் கொண்டாடா திருப்பார்?

---

ஆங்கிலேய ஸ்திரீகளுக்கும் இந்து ஸ்திரீகளுக்குமிருக்கும் வித்தியாசம் பின்வரும் கதையால் தெரியவரும்:—நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்கள் குழந்தையாயிருந்தபொழுது தமது தாயாருடன் ஒரு பிரபு வீட்டிற்குச்சென்றனர். அக்காலத்தில் அப்பிரபுவின் பத்தினியார் இவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது குழந்தை கூச்சத்தால் பேசாமலிருக்குமோ என்று எண்ணி "குழந்தையைப் பார்த்து அம்மா! உனது வீட்டில் எப்படியிருப்பாயோ அவ்விதமே இங்கேயுமிருக்கலா" மெனச்சொல்லவே நமது விக்டோரியா மகாராணியார் உடனே இடுப்பிலுள்ள வஸ்திரத்திற்குமேல் வேறொரு துணியையும் கட்டிக்கொண்டு கையில் ஒரு துணியையும் எடுத்துக்கொண்டு ஜன்னல்கள் கண்ணாடிகளைத் துடைக்க ஆரம்பித்தாராம். நம்மவரில் இவ்வித வழக்கமில்லை. பணமுள்ளவர்கள் தங்கள் வேலைக்காரனைக்கொண்டு வேலையைச் சரிவர செய்யச்சொல்லலாம். மத்திய



வகுப்பார் தாங்கள் தாங்களே தங்கள் வீட்டிலுள்ள வஸ்துக்களையும், புஸ்தகங்களையும் துடைத்து சரியாயும் வைத்துக்கொள்ளலாம். இவைகளைத் தாங்கள் குழந்தைகளுக்கும் போதித்து வரவேண்டிய தவசியமே.

---

ஸர் தாமஸ் லிப்டன் என்ற தர்மோத்தமர் தாம் சிறுவயதில் ஏழ்மையாயிருந்தபொழுது ஏழைகள் இங்கிலாண்டில் சாப்பாட்டிற்கு படும் கஷ்டத்தைப்பார்த்து சகிக்காமல் "தாம் எப்பொழுதாவது திரளான திரவியம் சம்பாதிக்கும்பொழுது ஏழைகளுக்கு சொல்ப காசுக்கு ஆகாரம் அளிக்க ஏற்பாடுசெய்கிறேன்" என்று சபதம் செய்துகொண்டார். இவரும் அவ்விதமே தனவந்தனாகவே, ஒரு பெரிய கட்டிடத்தை லண்டன்மா நகரத்தில் கட்டி அதில் தினம் ஒன்றுக்கு அரை பென்னி அதாவது 6 பைக்கு 10,000 ஜனங்களுக்கு அன்னம் அளித்து வருகிறாராம். இதை முதலில் ஸ்தாபிக்கும் பொழுது நமது மகாராஜாவாகிய 7-வது எட்வர்ட் அவர்கள் அரை பென்னி கொடுத்து சர் தாமஸ்லிப்டனுடன் போஜனம்செய்தாராம். இதல்லவோ தர்மசிந்தனை. நமது சென்னையில் எவ்வளவு ஏழைகள், குருடர்கள், நொண்டிகள், வியாதிஸ்தர்கள் தெருத் தெருவாக அலைந்து திரிந்து ஆலா பறக்கிறார்கள். இவர்களைக் காப்பாற்ற ஒரு புண்ணியவான் தோன்றி இவர்களுக்கு ஒரு கைத்தொழிற் சாலையொன்றை யேற்படுத்தி அன்னமுமளிக்கலாம். இவர்கள் செய்யும்படியான வேலை கூடை, முறம், பாய் முதலியவைகள்தான் தற்காலத்திற் கேற்றதாகும்.

---

## ஸிம்பலைன்.

### 6-வது அத்தியாயம். (முன் தொடர்ச்சி.)

---

இமோஜன்.—ஏ, பாஸ்துமஸ்! உன்னுடைய செய்கையைப் பார்க்கிறபோது நல்ல மனிதர்களைக்கூட நம்பக்கூடாது. பிஸானியோ, இங்கே வா, நீ யோக்கியனாயிரு: உன் எஜமானன் சொன்னவற்றை உடனே செய்: நீ அவனைப்பார்த்தால் நான் விரோதம் சொல்லாமல் அவன் சொன்னவற்றிற்குச் சம்மதித்தேனென்று சாக்ஷி சொல்லவேணும்: இதோ பார், வாளையுருவித் தருகிறேன். அதை யெடுத்து என் இருதயத்தைவெட்டு; பயப்படாதே. அதில் துக்கமே தவிர வேறொன்றுமில்லை. இதுவரையில் என் பிராணனாயிருந்த உன் எஜமானன் இப்பொழுது அதிலில்லை. அவன் சொன்னவற்றைச் செய்; என்னை வெட்டு; வேறே நல்ல விஷயத்தில் நீ வீரனாயிருக்கலாம்; ஆனால் நீ இதில் அதைரியவானாய் விட்டாயே!

பிஸானி:—கொடியவாளே ஓடிப்போ! (வாளைவிட்டெறிகிறன்) என் கையைப் பழிக்குள்ளாக்காதே.

இமோஜன்:—என்ன சொல்லுகிறாய். ஏண்டா இந்த புத்திவந்து விட்டது. நான், என் பர்த்தா சொன்னபடி இறக்கவேண்டியதுதான். என்னைக் கொல்லாமற்போனால் நீ உன்னுடைய எஜமானனின் வேலைக்காரனல்ல. தற்கொலை செய்வோமென்றால் சாஸ்திரங்கள் அதைத் தோஷமென்று சொல்லுகின்றன. நான் தோஷத்துக்குப் பயந்தவளாகையால் அதைச்செய்ய என் கைநடுங்குகிறது. இதோ, என் இருதயம் இருக்கிறதைப்பார். பஞ்சுபோல் மிருதுவாயிருக்கிறது. அதைத் தடுக்க ஆதரவு ஒன்றும் வேண்டாம் வாள் உறையில் போவதுபோல் என் இருதயத்திலும் இலேசாய்ப் போகட்டும். என் இருதயத்தின்மேல் என்ன இருக்கிறது. பாஸ்துமஸ் எழுதியகடிதங்களெல்லாம் பொய்யாய்ப் போய்விட்டதே. என்னுடைய விசுவாசத்தைக் கெடுத்த கடிதங்களே! என்னைவிட்டு ஓடிப்போங்கள். (விட்டெறிகிறாள்) என் இருதயத்தின்மேல் இனி இருக்கவேண்டாம் ஐயோ! என்னைப்போல சில மூடர்கள் துரோகிகளை நம்புகிறார்கள். இவர்கள் அதிக விசனப்பட்டாலும் துரோகஞ் செய்தவர்கள் அதிக துன்பத்தையடைகிறார்கள். ஏ பாஸ்துமஸ்! என் வயிறு கொதிக்கிறதே! என் தகப்பனுக்கு நான் செய்யவேண்டிய மரியாதையைவிட்டு அவனை விரோதித்து, என்னைப்போல உயர் குடியிற்பிறந்து என்னைக் கலியாணஞ்செய்யவந்த அனேக சிற்றரசர்களை நிந்திக்கும்படி செய்த நீ, இனிமேலாக இந்த சங்கதி சாதாரணமாய் நடக்கக்கூடியதென்று நினையாதே. அந்த எண்ணத்தைவிட்டுவிடு, அபூர்வமாயுள்ளதென்று நிச்சயமாய் நினைத்துக்கொள். ஆ! இப்படியா செய்தாய், இரும்பைக் காய்ச்சிப் புண்ணில் நுழைத்தாற்போலிருக்கிறதே! உன்னைக் கைவசப்படுத்தி எனக்குத் துரோகஞ்செய்து உனக்கு இன்பத்தைக் கொடுக்கிற சண்டாளி உன்னை நிந்தித்துப் போனவுடன் என்னை நினைந்து பிராணவஸ்தைப்படுவாயே; அதை நினைக்கிறபோது எனக்கு அதிக விசனமாயிருக்கிறது; அப்பொழுது தான் உனக்குத் தெரியும். மாதர்களே! என்னைப்போல் துரோகிகளுடைய வலையில் அகப்படாதே யுங்கள்; நான்விடைபெற்றுப் போகிறேன். ஆனால் என் நாயகனுடைய உத்தரவினால் நான் இறக்கப் போகிறேன்; அதினால் சந்தோஷமடைகிறேன். ஏ, பிஸானியோ, தயவு செய்து என்னைவெட்டு, ஆடு, கசாப்புக்காரனைச் சீக்கிரம் வெட்டென்று கெஞ்சிக்கேட்கிறது; வாள் எங்கே? உன் எஜமானன்



உத்தரவுக்குட்பட நான் அதிகமாக விரும்பினாலும், நீ ஏன் பின்வாங்குகிறாய்.

பிஸானி.—ஓ, கருணையுள்ள மாதே! நான் இச்செய்கையைச் செய்ய உத்தரவு கிடைத்தது முதல் என் கண் கொட்டவில்லையே (நித்திரை செய்யவில்லையே.)

இமோ.—என்னை வெட்டிவிட்டுச் சீக்கிரம் தூங்கப்போ.

பிஸானி.—அப்படியானால் என் கண் கெட்டுப்போகிறவரையில் விழித்துக் கொண்டிருக்கிறேன், விரோதமில்லை. உன்னை வெட்டவா!

இமோ.—உன் எஜமானன் இட்ட வேலையைத் தடுக்காதே!

பிஸானி.—மாதே, இச்செய்கையை நான் செய்யமாட்டேன்.

இமோ.—அப்படியானால் அந்த வேலையைச் செய்ய ஏன் உடன்பட்டாய்? பாசாங்கு செய்து ஏன் இவ்வளவு தூரம் என்னை யழைத்துவந்தாய்? இந்த இடத்துக்கு ஏன் கூட்டிக்கொண்டு வந்தாய்? உன்னுடைய செய்கையும் என் செய்கையும் எவ்விதமிருக்கின்றன? குதிரைகளை வீணாய்க் கஷ்டப்படுத்துவானேன், நம்முடைய காலத்தை வீணாய் இவ்விதம் கழிப்பானேன்? நான் இல்லாததினால் அரண்மனையிலுள்ளவர்களை ஏன் கலங்கச்செய்யவேணும்? அங்கே திரும்பிப் போக மாட்டேன். குறிப்பிற்கிலக்ஷியமாயிருக்கும் மான் அம்புபோடென்று தானாகவே எதிரே நிற்கிறபோது அம்பு எய்யவேண்டாமென்ற புத்தி எங்கேயிருந்து உனக்கு வந்துவிட்டது?

பிஸானி.—அந்தக் கொடூரமான வேலையைச் செய்யாமலிருக்கச் சமயம் கிடைக்கத்தான் இவ்வளவு தூரம் வந்தேன். இதற்குள் நான் ஒரு ஆலோசனை செய்தேன். எனக்கு நன்மையைச் செய்கிற மாதே, நான் சொல்வதைப் பொறுமையுடன் கேட்கவேணும்.

இமோ.—வீண் வார்த்தைகள் சொல்லவேண்டாம். சொல்வதைச் சீக்கிரம் சொல், நான் விபசாரியென்ற பெயரைக்கேட்டாய்விட்டது. எனக்கு இதைவிட வேறே புண் கிடையாது. இந்தப் புண் எவ்வளவு ஆழமிருக்கிறதென்று என்னால் சொல்லமுடியாது. வேண்டியவற்றைச்சொல்.

பிஸானி.—ஆனால் திரும்ப ஊருக்குப் போகமாட்டாயென்று நினைக்கிறேன்.

இமோ.—சந்தேகமேயில்லை, என்னைக் கொலைசெய்ய இங்கே கொண்டுவந்ததினால், நான் எவ்விதம் திரும்பப் போவேன்! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?

பிஸானி:—அப்படியல்ல. நான் யோக்கியனாயிருப்பதுபோல ஞானமுள்ள
வனுயுமிருந்தால் நான் நினைத்தகாரியம் தடையின்றி நிறைவேறும்.
உன் பர்த்தாவை யாரோ ஒரு வஞ்சகன் பொய்சொல்லி ஏமாற்றி
யிருக்கிறானேதவிர வேறொன்றுமில்லை. அந்த வஞ்சகனோ தன்
தொழிலில் அதிக பெயர் பெற்றவனாயிருக்கிறான். அவன்தான் உங்க
ளிருவரையும் கெடுத்துவிட்டான்.

இமோ:—என்னைக் கெடுத்தது ஒரு ரோமாபுரிவேசை யென்று தோன்று
கிறது.

பிஸானி:—இல்லை, என்பேரில் ஆணையிடுகிறேன். இனி நடக்கவேண்டி
யதைச் சொல்லுகிறேன் கேள். நீ யிறந்துவிட்டாயென்று சொல்
லிப் பாஸ்துமஸ்-க்கு ஒரு இரத்தக்குறியை யனுப்புகிறேன். ஏனெ
ன்றால் நான் அப்படி செய்யவேணுமென்று பாஸ்துமஸ் எனக்கு
உத்தரவு செய்திருக்கிறான். அரண்மனையிலும் உன்னைக் காணமாட்டார்
கள். அது நான் சொன்னவற்றை நிச்சயமாக ஸ்தாபிக்கும்.

இமோ.—என் பிரியமுள்ள பிஸானியோ, அதுவரையில் நான் என்னசெய்
யவேண்டியது? எங்கே தங்குகிறது? எவ்விதம் ஜீவிக்கிறது? அல்
லது என் பர்த்தாவுக்கு இறந்தவளைப்போலிருந்தால் எனக்குத்தான்
என்ன சுகமுண்டு?

பிஸானி.—நீ திரும்ப அரண்மனைக்குப் போனால்—

இமோ.—அரண்மனையுமில்லை, தகப்பனுமில்லை. எனக்கு இனிமேல்,
கொடூரமும், அயோக்கியனும் முட்டாளுமான அந்த க்ளோட்
டனிடத்தில் கஷ்டப்படவும் வேண்டாம். ஐயோ, என்னைக் கலி
யாணஞ் செய்துகொள்ளவேணுமென்ற பிரயாசையானது ஒரு கோட்
டையை முற்றுகை செய்தாற்போல் பயங்கரமாயிருக்கிறதே.

பிஸானி.—அரண்மனைக்குப் போகாமற்போனால் ப்ரிட்டன் தேசத்தில்
இருக்கக்கூடாது.

இமோ.—அப்படியானால் வேறே எங்கே? சூரியன் ப்ரிட்டன் தேசத்
தில் மாத்திரமா பிரகாசிக்கிறது? இரவும் பகலும் ப்ரிட்டன் தேசத்
தைத் தவிர வேறே இடத்தில் கிடையாதா? பூலோகத்தில் இத்தே
சம்; ஒரு பெரிய குளத்தில் ஒரு அன்னப் பறவையின் கூடு இருக்கி
றதுபோலக் காணப்படுகிறது; ஏ, பிஸானியோ, மனிதர்கள் ப்ரிட்
டன் தேசத்தில் மாத்திரமா? எல்லா இடங்களிலுமிருக்கிறார்கள்ல்
லவா?

பிஸானி.—ப்ரிட்டன் தேசத்தைத் தவிர வேறே இடத்தை நினைக்கிறதி
னால் நான் அதிக சந்தோஷப்படுகிறேன். ரோமாபுரி ஸ்தானாதிபதி



யாகிய லூஷியஸ் நாளையதினம் மில்போர்ட் ஹேவனுக்கு வருகிறான்.
உன்னுடைய அதிர்ஷ்டம் இப்பொழுது தாழ்ந்த ஸ்திதியிலிருக்கிறது
போல உன்னையும் தாழ்ந்த ஸ்திதியில் பிறந்ததாக எண்ணினால் (அதா
வது நீ இராஜ கன்னிகையென்பதை கொஞ்சகாலத்துக்கு மறக்கவே
ணும். ஏனென்றால் இராஜ கன்னிகையென்று தெரிந்தால் உன்னு
யிருக்கே அபாயம் நேரிடும்) நாம் நினைத்ததற்கேற்றபடி நடக்கலாம்;
தவிர உன்னை யாருமறியாமலே வெளியில் நடக்கிற சங்கதிகளை நீ நன்
றாய்அறியலாம்; அதுமாத்திரமல்ல, நீ பாஸ்துமஸ் தங்கியிருக்கிற வீட்
டுக்கு அதிகச் சமீபத்தில் போய், அவனுடைய நடத்தைகளை நீ பார்க்
காமற்போனாலும், அதை யாராவது சொல்லி உண்மையாக அறிய
லாம்.

இமோ.—இவ்வித பாக்கியம் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷமாயிருப்
பேன். பெண் மரியாதைக்கும், நாணத்துக்கும் அபாயம் வந்தாலும்—
(ஆனால் அழிவுவரக்கூடாது), அபாயம் வந்தாலும் நீ சொன்னவற்
றைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.

பிஸானி.—நல்லது, அப்படியானால் நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்.
நீ ஸ்திரீ என்பதை மறந்துவிடவேணும். ஏவுகிறதற்குப் பதிலாக
பிறர் ஏவ நீ செய்யவேணும். எல்லாப் பெண்களுக்கு மியற்கையா
யுள்ள பயத்தையும், நாணத்தையும் விட்டு நல்ல தைரியசாலியாயிருக்
கவேணும். வழக்குகளில் தயாராயும், சீக்கிரம் பதில் சொல்லக்கூடி
யவளாயுமிருக்கவேணும், ராஜ கீரியைப்போல அதிகப் பொல்லாதவ
ளாயுமிருக்கப் பிரயாசைப்படவேணும். உன்னுடைய அழகை மறந்து
விட்டு—என்ன கோடூரமான இருதயம், ஐயோ வேறே கதியில்
லையே வெயிலிற்போகவேணும், தவிர உன் நடையைப் பார்த்து
அன்னமும் கோபிக்கக்கூடிய கம்பீரமான நடைகளை மறந்து எந்த
இடத்திலும் வேகமாய்ப்போகவேணும்.

இமோ.—வேண்டாம், சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேள்; உன் அபிப்
பிராயத்தைப் பூராவும் அறிந்துகொண்டேன். மனிதவேடம் போடு
கிறதற்கு முன்னே அவருடைய குணங்கள் எனக்கு வந்துவிட்டன!

பிஸானி.—நீ இந்த வேடம் எடுக்கவேணுமென்று நான் முன்னே எண்ணி,
அதற்குவேண்டிய, உள்சட்டை, வெளிச்சட்டை, தொப்பி, கால்சட்
டை முதலிய சாமான்களைத் தயாராக்கிக் கொண்டுவந்திருக்கிறேன்.
அவைகளை இதோ ஒரு பையில் வைத்திருக்கிறேன். நீ இவைகளை
யணிந்துகொண்டு உன் வயதுக்கேற்றபடி நடந்து, பிரபுவாகிய லூஷி
யஸ் முன்னே போய், அவனிடத்தில் வேலை வேணுமென்று கேட்டு

நீ எதில் அதிக சந்தோஷமாயிருப்பாயென்று தெரிவித்தால், யோக்கியதையும் பரிசுத்தமுமுள்ள அவன் உன்னை வேலைக்கு எடுத்துக்கொள்வான். அவனுக்குச் சங்கீதத்தில் ஞானமிருந்தால் அது உனக்குத்தெரியுமென்று தெரிவிக்கவேணும். உனக்கு திரவியம் வேண்டியதைப் பற்றி ஆலோசிக்கவேண்டாம். நான் இதோ கொண்டுவந்திருக்கிறேன், அதை யெடுத்துக்கொள்; மேன்மேலும் நான் அனுப்பிக்கொண்டு வருகிறேன்.

**இமோ.**—நீ தெய்வத்தைப்போல ஆறுதல் சொல்லுகிறாயே. தயவுசெய்து நீ போகலாம். இன்னும் ஆலோசிக்கவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. இதுமாத்திரமல்ல, இனிமேல் நடக்கவேண்டிய விஷயங்களையும் இப்பொழுதே செய்யத் துணிவோம். ஒரு வீரனைப்போலவும் சிற்றரசனைப்போலவும் இதைச் செய்யத் துணிந்தேன். வந்தனம் செய்கிறேன். நீ போகலாம்.

**பிஸானி.**—நல்லது, மாதே, சீக்கிரம் விடைபெற்றுப் போவோம். ஏனென்றால் உன்னை யெங்கேயோ கொண்டுபோய் விட்டேனென்று என்னைப் பழி சொல்வார்கள். இதோ ஒரு பெட்டியில் அதிக விலையுயர்ந்த மருந்து இருக்கிறது. அதை எனக்கு அரசன் மனைவி தந்தாள். கடலிலோ, நிலத்திலோ உனக்கு ஏதாவது அசௌக்கியம் வந்தால், இதில் கொஞ்சம் சாப்பிடு; உடனே வியாதி ஓடிப்போம். ஒரு மரத்தினிழலில் போய் இந்த உடைகளை அணிந்து கொண்டு, ஒரு மனித வேடம் தரித்துக்கொள். கடவுள் உன்னை கருணையுடன் ஆசீர்வதிக்கட்டும்.

**இமோ.**—நானும் அவ்வண்ணமே வேண்டிக்கொள்ளுகிறேன். உனக்கு வந்தனமளிக்கின்றேன்,

என்று சொல்லி இருவரும் வெவ்வேறு வழியாய்ப் போனார்கள். இமொஜன் பின்பு ஆண் வேடம் தரித்து அலைந்து திரிந்து நடுக்காட்டில் ஓர் குகையை யடைந்து தனக்குள் பின் வருமாறு சொல்லிக்கொண்டாள் :

"புருஷருடைய ஜீவகாலமோ களைப்பைத்தரக்கூடியதா யிருக்கிறது. நான் அதிகமாய்க் களைத்துப்போய்விட்டேன். இரண்டு நாள் இராத்திரி தரையிலேயே படுத்துக்கொண்டிருந்தேன். என்னுடைய தீர்மானம் என்னைச் சகாயிக்காமற்போனால் இதற்கு முன் நான் வியாதியாயிருந்திருப்பேன். மில்போர்ட்! உன்னை மலையின் உச்சியிலிருந்து பிஸானியோ எனக்குக் காட்டினவுடன், நீ அதிக சமீபத்திலிருக்கிறதாக எண்ணினேன். இரண்டு பிச்சைக்காரர்கள் நான் வழிதவறிப் போகமாட்டேனென்று சொன்னார்கள். இந்த அற்ப ஜனங்கள் பொய்



சொல்வார்களா? மாட்டார்கள்; ஏனென்றால் தண்டனையாயோ அல்லது சோதனையாயோ, இந்தத் துன்பத்தை யனுபவிக்கிறார்களென்று அவர்களுக்கே தெரியும். சரிதான்; தனவான்கள் ஒருக்காலும் நிஜம் சொல்லாததைப் பற்றி ஆச்சரியப்படவேண்டாம். தரித்திரர்கள் பொய் சொல்வதைப் பார்க்கிலும், தனவான்களும், அரசர்களும் பொய் சொல்லுகிறது அதிக கடினமான குற்றமாக நினைக்கப்படும். என் பிராணநாதா! பொய்யர்களில் நீயும் ஒருவன்தான். ஒரு நிமிஷத்துக்கு முன் பசியினால் அதிக வருந்தி கீழே விழுவது போலானேன். இப்பொழுது உன்னை நினைத்தபோது பசி என்னைவிட்டு ஓடிப்போயிற்று. இது என்ன? இதோ ஒரு பாதை காண்கிறேன். இது பயங்கரமான மனிதர்கள் வசிக்கப்பட்ட குகையென்று தோன்றுகிறது. கூப்பிடாமலிருந்தால் நலமாயிருக்கும். கூப்பிடுகிறதற்கு மனம் துணியவில்லையே; ஆனால் பசியினால் களைத்துப்போய் விட்டேன், அதினால் அதைரியம் எனக்கு அதிகரிக்கிறது. தாராளமான வஸ்துக்களும் அமரிக்கையாயுமிருக்கிற இடத்தில் அதைரியமுண்டு கஷ்ட துன்பங்களுள்ள இடத்தில் தைரியத்தைக் காணலாம். யார் அங்கே? நாகரீகமடைந்தவர் யாராவதிருந்தால் நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள். காட்டு ஜனங்களாயிருந்தால் என்னிடத்தில் பணத்தை வாங்கி சாப்பாடு கொடுங்கள், அல்லது கடனாகத்தாருங்கள். யார், பதிலில்லையா? ஆனால் நான் உள்ளே போகிறேன். என் கத்தியை யுருவிக்கொள்ளுகிறேன். எனக்கு விரோதியாராவதிருந்தால் எதிர்த்துச் சண்டைசெய்கிறேன்" என்று சொல்லி உள்ளேபோக அங்கே எவருமில்லை. கொஞ்சம் தின்பண்டங்கள் காணப்பட்டன; அவைத பசியாறப்புசித்துக் களைப்புத்தீர்ந்து இன்புடனிருந்தாள்.

## நமது பத்திரிகை.

நமது பத்திரிகையை ஆரம்பித்து 2-வருடம் பூர்த்தியாய் மூன்றாவது வருடம் துவக்கமாகிறது. இப்பத்திரிகையை அபிமானித்து கையொப்பம் செய்து இதுகாறும் உதவி புரிந்தவர்களுக்கும், போஷகர்களுக்கும், அபிமானிகளுக்கும் நமது மனப்பூர்வமான வந்தனத்தை அளிக்கின்றோம். மேலும் நமது பத்திரிகைக்கு இதுவரையிலும் விடாது நிருபம் அனுப்பி வந்தவர்களுக்கும் அடிக்கடி புரூப்புகளைப் பார்த்துவரும் ம-ள-ள-ஸ்ரீ, தி. முத்துராம பிள்ளையவர்கட்கும், நமக்கு இலவசமாய் பத்திரிகைகளை யனுப்பிவரும் பத்திராதிபரவர்கட்கும் வந்தனமளிக்கின்றோம்.

நமது பத்திரிகைக்கிப்பொழுது போதுமான கையொப்பம் சேர்ந்திருக்கிறதைப்பற்றியும் மிகச் சந்தோஷப்படுகிறோம்.

நாம் நமது கஷ்டத்தை யிங்கெடுத்து உரைப்பது அசாத்தியமாயினும், நாமே அடிக்கடி எழுதுவதும், பத்திரிகைக்கு வேண்டிய அச்

சுக்கூலி காகிதம் முதலியவைகளுக்குப் பணம் போடுவதும், நிரூபங்களைப் பார்வையிடுவதும், பத்திரிகைகளை வெளிக்கு அனுப்புவதும், கடிதங்களுக்கு அப்போதைக்கப்போது பதிலெழுதுவதும், நமது கையொப்பக்காரர்களுக்குத் தெரிந்த விஷயமே யன்றி தெரியாததன்று. முதலில் நஷ்டம்வந்தபோதிலும் அதைச்சகிக்க தீர்மானம் செய்துதா னிப்பத்திரிகையை ஆரம்பித்தோம். இப்பொழுது தெய்வானுக்கிரகத்தாலும், கையொப்பக்காரர்களுடைய பெரும் உதவியாலும், இப்பத்திரிகையின் செலவுக்குப் போதுமானதாக விருக்கிறதைப்பற்றியும், எமக்கு இதனால் தொந்திரவில்லாததைப் பற்றியும் மிக சந்தோஷப்படுகிறோம். ஆகையால் இப்பொழுது இதன் பத்திராதிபர் இதற்கு இனமாக வேலைசெய்து வருகிறார் என்றுதான் சொல்லவேண்டும். நாம் முதலில் சொல்லியபடி இப்போதும் பெண்கல்விப்பயிற்சியே எமது கருத்தாகையால், பெண்கள் தங்கள் சகோதரிகள் க்ஷேமத்தின்பொருட்டு எழுதுபவைகளுக்கு இப்பத்திரிகையில் முதலிடங்கொடுப்போம். இப்பத்திரிகையால்நமது தமிழ் நாட்டுப் பெண்கள் எள்ளளவேனும் கல்வியும் விவேகமும் அடைந்தார்களென்று ஏற்பட்டால் அதுவே எமக்கு பெரிய பரிசு.

இவ்வருடம் நமது பத்திரிகைக்கு சுதேசமித்திரன் பத்திராதிபர் ம-ா-ா-ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர், பி ஏ, இந்து புராப்ரைட்டர் ம-ா-ா-ஸ்ரீ எம். வீரராகவாசாரியாரவர்கள் பி ஏ, புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் பிரின்ஸ்பால் ம-ா-ா-ஸ்ரீ எஸ். ராதாகிருஷ்ண அய்யரவர்கள் பி ஏ, சென்னை சர்வகலாசாலை புரொபெஸர் ம-ா-ா-ஸ்ரீ H. நாராயணராவு எம் ஏ, எப். ஜி. எஸ்., T. K. ஹனுமந்தராயரவர்கள், பி ஏ, பண்டிதர் கோபாலாசாரியாரவர்கள், பண்டிதர் திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள், பண்டிதர் கிருஷ்ணய்யரவர்கள் ம-ா-ா-ஸ்ரீ K. G. வெங்கிடசுப்பய்யரவர்கள் பி. ஏ., பி. எல்., எல் டி., ம-ா-ா-ஸ்ரீ வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியாரவர்கள், பி ஏ, பி எல் ம-ா-ா-ஸ்ரீ திருவேங்கடாசாரியாரவர்கள் பி ஏ. பி. எல், ம-ா-ா-ஸ்ரீ C. V. கிருஷ்ணசுவாமி அய்யரவர்கள் பி. ஏ. பி. எல், மதுரை வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ S. சங்கரய்யரவர்கள் பி. ஏ. எல். டி, நிரூபம் எழுதுவதாக வாக்களித்திருக்கிறார்கள். இவைகள் நமது பத்திரிகையில் வந்தபின் புஸ்தக ரூபமாக பிரசுரிக்கப்படும்.

சிலர் நமது பத்திரிகைக்கு இன்னும் 12 பக்கம் சேர்த்து ரூ. 2-8-0 வருட சந்தாவாக ஏற்படுத்தினால் நலமென்றும், வேறு சிலர் 4 பக்கம் மாத்திரம் சேர்த்து ரூ. 2 ஆக ஏற்படுத்தினால் போதுமென்றும், வேறு சிலர் இவ்விதமே யிருந்து அடுத்த வருடம் ரூ. 3 ஆக ஏற்படுத்தி மாதமிருமுறையாக பிரசுரிப்பது நலமென்றும், எமக்கு கடிதங்கள் எழுதுகிறார்கள். இவைகளை நமது பத்திரிகையில் பிரசுரிக்க இடம் போதாதென நினைத்து சுருக்கமாக அவர்களினபிப்பிராயத்தை மாத்திரம் வெளியிட்டோம். நமது சந்தாதாரர்களும் தங்களபிப்பிராயத்தை ஒரு மாதத்திற்குள் எமக்குத்தெரிவித்தால் யாவருக்கும் அனுகூலமாயிருக்கும்படி பத்திரிகையைப் பெரியதாகச் செய்யலாகும். இதற்கு எல்லாருடைய சம்மதமும் வேண்டுமாகையால் கூடிய சீக்கிரத்தில் தெரியப்படுத்துதல் நலமாகும்.

# மாதர் மனோரஞ்சனி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 3. | MADRAS: APRIL 1901. | No. 2.
புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901ளு ஏப்பிரல்மீ | இல. ௨.

## பெற்றோர்பெருமை.

### அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்.

குழந்தைகளே! இந்தச் சிறுவாக்கியத்தை நெடுநாட்களுக்கு முன்னமே அறிவோம். நெடுங்கணக்குப் படித்தபின், தனிமொழிகளையும், தொடர்மொழிகளையும், அதன் பின்பு சிறுவாசகப்பாடங்களையும் படித்து, ஔவையார் அருளிச்செய்த "நீதிநூற்றிரட்டுப் படிக்கத்தொடங்கி முதலில் "ஆத்திசூடி" என்ற சிறு நூலைப்படித்தோம். மேல் "கொன்றை வேந்தன்" என்கிற நூலைப்படித்தோம். அந்த நூலில் முதலாவது வாக்கியமே இதுவாம். அப்பொழுது நாம் அந்த வாக்கியத்தின் அர்த்தத்தை நன்றாய் ஆராய்ந்து படிக்கவில்லை. புத்தகத்தில் எழுதியிருந்த சிறிய "பதவுரையைப்" படித்து ஒப்புவித்துவிட்டு, இவ்வளவுதான் பொருளும் பயனுமென்று எண்ணியிருந்தோம். இப்பொழுது நாம் பெருநூல்களில் பழகி நமது புத்தி சற்று விசாலப்பட்டிருப்பதினால் அந்த வாக்கியத்தின் பொருளை நன்றாய் ஆராய்ந்து பார்ப்போம். அந்த வாக்கியத்துக்கு அர்த்தமென்ன? "தாயும் தந்தையும் ஆகிய (இருவரும்) முதலில் அறியத்தக்க (அல்லது அறியப்படுகிற தெய்வமாகின்றார்கள்" என்பதே. நம்மைப் போன்ற மனிதசரீரம் உடைய அவ்விருவரும் நமக்குத் தெய்வமாவதெப்படி? அவர்களையும் நம்மையும் படைத்துப் பரிபாலித்துவரும் ஏகநாயகனாகிய சர்வேசுவரன் ஒருவனிருக்கையில் இவர்களைத்தெய்வமென்று வழிபடுவது பாபமாகாதோ? என்றால் ஆகாது. நமது அன்னையாராகிய ஔவையார் சிறுவருக்கென்றே அந்தநூலைச் செய்ததில்லை. மற்று சிறியார் பெரியார்யாவருக்கும் உபயோகமாகும்படி தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்கிற நால்வகைப்பொருள்களையும் அந்தச் சிறியநூலில் அடக்கி உலகத்தாருக்கு உபகரித்திருக்கின்றார்கள். அந்நூலில் சிலவாக்கியங்கள், இம்மைக்கு உரியன. சில மறுமைக்குரியன. சில இம்மை மறுமையிரண்

டுக்கும் உரியனவாய் மோட்சந்தருவனவுமாயுள்ளன. நாம் கீழே குறிப்பிட்டவாக்கியம் இந்த மூன்றாவது வகுப்பிற்சேர்ந்தது. ஆதலால் அதை நாம் அவசியம் விசாரித்து அறிய வேண்டியது. அதை யோசிப்போம்.

தெய்வவிசுவாசமில்லாத நாஸ்திகர்களுக்குஇந்த வசனத்தினால் பெரும்பயனில்லை. தெய்வநம்பிக்கையுடைய ஆஸ்திகர்களாகிய நமக்கே முழுவதும் பிரயோசனப்படுவதாகும். ஆஸ்திகர்களுக்குள்ளும் வேறுபட்ட பல கொள்கையருண்டு. அவர்கள் நம்மைப்போலப் பெற்றோரைத் தெய்வமாகமதியாவிட்டாலும் நாம் வணங்கத்தக்கவர்கள் எல்லோரையும் விட மேலானவர்களாக மதித்து வணங்கும்படியான கொள்கையுடையவர்கள். ஆரியர்களாகிய நாமோ அவர்களை நமக்கு உலக இன்பத்தை உண்பிக்கும் மாதாபிதாக்களாகவும், பரபோகமோட்சானந்தங்களை அளிக்கும் தெய்வமாகவும் கருதி வழிபடுகிறோம். ஆனால் இப்பொழுது, கால வித்தியாசத்தாலும், பலவிதமான அநாரியர் சகவாசத்தாலும் நமது முன்னோர் கொள்கைக்கு மாறுபட்டு மாதாபிதாக்களைச் சத்துருவாகப் பாவிக்கிறோம். இது கலியுக மகிமை என்பர் மூதறிவாளர். தாய்தந்தையரைத் தெய்வமாகக் கருதுவானேன்? என்றால் அது ஒரு நல்ல கேள்விதான். அது விசாரிக்கக்கூடியதே. ஆஸ்திகராயுள்ளவர்கள் எல்லாரும் தெய்வத்தின் சுபாவத்தையும், அதை அறிந்து அடையும் மார்க்கத்தையும் மற்றவர்களுக்கு விளக்கிக்காட்டுவதற்கு ஒரு "குரு" அவசியம் வேண்டுமென்றே கூறுகின்றார்கள். இதை எந்த மதஸ்தரும் மறுக்கமாட்டார்கள். அந்தக் "குருவும்" சகல சாஸ்திரங்களையுங் கற்றறிந்து, தெய்வ இலட்சணத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு, தேவனால் அருளிச்செய்யப்பட்டிருக்கிற வேதங்கூறிய நெறியில் நிற்பவராயிருக்கவேண்டும். அப்படி இல்லாதவர்கள் குருவாகார் என்பார்கள். அது வாஸ்தவமே. ஆனாலும் நமது வேதங்கூறிய நெறி நின்ற ஆரியப்பெரியோர்கள் கண்டறிந்த சித்தாந்தமாவது—"தெய்வமென்பது நுட்பமானவைகளுக்கெல்லாம் நுட்பமானது. அணுவுக்கும் அணுவாயிருப்பது. கண் மனம் முதலிய அறிகருவிகளுக்கும் எட்டாதிருப்பது. என்றால் கண் முதலிய இந்திரியங்களாலும் மனதாலும் அறியப்படாத அதிசூட்சுமப்பொருள். அது தனக்கென்று ஒரு சொரூபம் இல்லாதது. ஆனாலும் பக்தானுக்கிரகார்த்தமாக அநந்த சொரூபங்களை யெடுத்துக்கொள்ளும் பேராற்றலுடையது. ஏனென்றால், சொரூபமில்லாததும், ஒன்றாலும் அறியப்படாததுமானால் ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத சூனியப்பொருளாகும். ஆகையால் தன் இச்சையால், பக்தர் இச்சித்தபடி சொரூபமெடுத்துக்கொண்டுவந்து அநுக்கிரகம் செய்யும் வல்லமையுடையது. இன்னதன்



மையான இலட்சணத்தையுடையதென்று வாக்கினால் சொல்லக்கூடாதது. என்றால், உலகத்தில் அதற்குச் சமானமான அல்லது மேலான பொருள் ஒன்றுமில்லையாகையால் என்பது. சுவானுபூதியில் அறியத்தக்கது. என்றால், உலகம் கடந்த பக்தர்களுடைய பெரிய ஞான அறிவிலே தோன்றத்தக்கது. அப்படியானால் அதை யறிகிறதுதான் எப்படி? அதற்குச் சொரூபந்தான் என்ன? என்றால் முதலாவது கேள்விக்குமேலே சொல்லப்போகிற "தெய்வமகிமை"யில் விரிவாய்க்கூறப்படும். இரண்டாம் கேள்வியைக் கவனிப்போம்.

வேதங்களிலே தெய்வத்துக்குப் பல சொரூபங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சொரூபங்களே சிலாவிக்கிரகங்களாகவும், சொர்ணம் முதலிய விக்கிரகங்களாகவும் செய்யப்பட்டு நமது தேவாலயங்கள்தோறும் விளங்கிக்கொண்டிருப்பன. அதன் விவரம் மேலே பேசப்படும்; பின்னும் குரு லிங்கசங்கமம் என்கிற மூவகைச் சொரூபங்கள் கூறப்பட்டன அவற்றுள் "லிங்கம்" என்பது மேற்குறித்த விக்கிரக சொரூபந்தான், "குரு" என்பது வேதங்கூறிய மார்க்கத்தில் நடந்து, தெய்வலட்சணத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு, முறைதவறாமல்ஆராதித்துத் தெய்வத்தன்மையை யடைந்து பிறருக்கு உபதேசிக்கிற பெரியோர்களது திருவுருவமேயாம். "சங்கம" வடிவமாவது—தெய்வத்தினிடத்தில் இடையறாத பக்தி செலுத்திவருகிற மெய்யடியார்களுடைய திருவுருவமாகும். சங்கம வடிவத்தினிடத்தில் பக்தி செலுத்துவது எல்லாருக்கும் எளியதன்று. குருவுருவமே யதற்குரியது. ஏனென்றால் தனக்கொரு பொருளை உபதேசிப்பவனிடத்தில் பயபக்தி விசுவாசம் வைப்பது எல்லாமனிதருக்கும் சகஜம். ஒரு மனிதன் எவனாவதொருவனிடத்தில் ஒரு பொருளைக் கேட்டுத் தெரிந்துகொண்டால், கற்றுக்கொடுத்தவனை அலட்சியம் செய்வது எந்த மதஸ்தருக்கும் இயல்பல்ல. அப்படி யலட்சியஞ்செய்யப்பட்டவனை மிருகத்தன்மை யுடையவனென்று யாவரும் வெறுப்பார்கள். "எழுத்தறிவித்தவனிறைவனாகும்" என்ற முதுரையும் இந்தக் கருத்தையே விளக்க எழுந்தது. நமது ஆரியோத்தமர்கள் ஒரு எழுத்தை உபதேசித்தவனைக்கூடத் தெய்வமென்று நினைக்கும் பெருந்தன்மையுடையவர்கள். ஏனென்றால் இதில் ஒரு இரகசியமுண்டு. அதாவது "அறிவு" என்பதே கடவுளுக்கு இயல்பான சொரூபமென்று நமது வேதம் சொல்லுகின்றது; அவ்வறிவையுடைய ஜீவாத்மாவையும் தெய்வம் என்றே நினைக்கவேண்டுமென்பது ஆரியர்சித்தாந்தம். நமக்கு ஒன்றை அறிவித்தவன், அதை யறியாதிருந்த நம்மைவிட மேலானவனாகுமல்லவா? அறிவே தெய்வத்துக்குரிய சொரூ

பமானால் அவனிடந் தெய்வத்தன்மை அதிகமாக விளங்குகிறதென்று கருதவேண்டும். ஓர் எழுத்தை யுபதேசித்தவனையே இப்படி நினைக்க வேண்டியதானால் சகலகலைகளையும் உபதேசித்த குருவை யெப்படி நினைக்கவேண்டியது? அவனே மேலான தெய்வமென்று நாம் வணங்கவேண்டியது உசிதமல்லவா? இப்பொழுது சொல்லப்பட்ட குருமார்கள் எல்லாரும் அநித்தியமான பொருளை உபதேசித்தவர்கள். அநித்தியமான பொருள்களின் இலக்கணங்களை முழுதும் அறிந்து உபதேசிப்பதற்கே அவனிடம் தெய்வவிளக்கம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் ஒன்றையும் உணரமாட்டான். இதனது விபரங்களெல்லாம் இச்சிறு நூலில் அடங்காதாகையால் வேறு நூலில் எழுதுவோம். உலகப்பொருளை யறிவதற்கே தெய்வத்தன்மை வேண்டுமானால் உலகத்துக் கெட்டாமலிருக்கிற பரம்பொருளை யறிந்து உபதேசிக்கும் அந்த குரு தெய்வமாகவே யிருக்கவேண்டும் என்பது நிச்சயம். தெய்வ வுண்மையை அறிவதற்குத் தெய்வத்தன்மையேவேண்டும். இல்லாவிட்டால் அதை ஒருபொழுது மறியக்கூடாது அதை யறிந்தவனையே நமது பெரியோர்கள் 'ஞானி' என்பார்கள். ஞானி என்றால் பேரறிவுடையவனென்று அர்த்தம். மற்றையவர் எல்லாரும் ஞானியல்ல. அறிஞர் என்னப்படுவார்கள். பேரறிவுடைய ஞானியாகிய குருவையே தெய்வமாகவழிபட வேண்டுமென்பது வேதசம்மதம். அவனே முக்கியமான குரு. மற்ற குருமார்கள் அவ்வளவு சிறந்தவர்கள் ஆகார்கள். இவ்வளவு தூரம் சொல்லிவந்ததனால் தாய் தந்தையர் தெய்வமாவார்களென்பது விளக்கப்படவில்லையே யென்றால் அப்படியல்ல; அதை விளக்குவதற்காகவே யிவ்வளவு தூரம் சொல்லிவந்தோம். எப்படியென்றால் சொல்லுவோம்.

நமது ஆரியர்கள் கொண்ட விவாக சம்பந்தமென்பது புறத்தேசத்தாரும், புறமதஸ்தரும் கொண்டது போல உலக இன்பத்தை அனுபவிப்பதற்காக அல்ல. சற்சந்தான விருத்தியைக் குறித்தே. சற்சந்தானமாவது ஞானியாகியபுத்திரனாகும். இந்த விவாக விஷயம் முற்றும் கற்புடைமையைப்பற்றிப் பேசுமிடத்தில் விவரித்தெழுதப்படும். நிற்க ஞானியாகிய; புத்திரர் புத்திரிகளைப் பெற்று அவர்களால் உலகத்தில் ஆஸ்திகமத உண்மையை நிலைநிறுத்தி யாவரையும் மோட்சாநந்தத்தில் மூழ்கச் செய்ய வேண்டுமென்பதே யாரியர்கள் கொள்கை. வெகுகாலந்தவமிருந்து அப்படிப்பட்ட புத்திரோற்பத்திக்குரிய காலதேசகுண தோஷங்களைச் சோதிட முதலிய சாஸ்திரங்களால் நிச்சயித்தறிந்து கர்பபாதான முதலியவைதிக சற்கருமங்களைச் செய்து அறிவிற்சிறந்த குழந்தைகளைப் பெறுவது வழக்கம். இங்கு யோசிக்கத்தக்கது இது! அறிவே சொரூபமாக இருக்கப்



பட்ட ஆத்துமாவானது நிர்மல சரீரியாயிருக்கிற தகப்பனிடத்தில் ஜீவசக்தியைப் பெறுகிறது. பின் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்துச் சரீரத்தைப் பெறுகிறது. சரீரமாவது அந்தக் கரணங்கள், ஞானேந்திரியங்கள், மனம் முதலிய அறிகருவிகள், கருமேந்திரியங்களாகிய தொழிற்கருவிகளுமான அவயவப் * பகுப்புகளோடுங் கூடிய ஒரு பிண்டம். அறிகருவிகள் உலகப்பொருள், உலகங்கடந்த பரம் பொருளாகிய இரண்டையும் அறிவதற்குரியன. அவற்றையடைவதற்குரிய சாதனமாக நிற்பன தொழிற்கருவிகள், இச்சரீரமில்லாவிட்டால் ஜீவாத்மா ஒருபொருளையுமறியாது. மனமாதி அறிகருவிகளில்லாமல் ஜீவாத்மா ஒன்றையும் அறியாதென்பதை ஒருவரும் மறுக்கத்துணியமாட்டார்கள். அப்பேர்ப்பட்ட அறிகருவிகள் எங்கிருந்து கிடைத்தன? அருமையான மாதாவின் சரீரத்திலிருந்துதான்? சாதனப்பொருளாகிய கரசரணாதி அவயவங்கள் எங்கேயிருந்து வந்தன. மாதாவின்சரீரத்திலிருந்துதான். அறிவுஸ்தானமென்று சிலரால் சொல்லப்படும் மூளையென்னும் சிறந்த அறிகருவி எங்கேயிருந்து வந்தது? நமது தாயின் திருமேனியிலிருந்துதான். குழந்தைகளே! நீங்கள் உங்களுடையதென்று நினைத்து இறுமாந்திருக்கிற சரீரத்தில் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரைக்குமுள்ள அவயவங்கள் ஒவ்வொன்றையும் இப்படியே விசாரித்துப்பாருங்கள். அப்பொழுது உங்களுக்குச் சொந்தமான சரீரமொன்று இல்லாமற்போம். அவைகளெல்லாம் தாய்க்கே சொந்தமும் உங்களுக்கு இரவலுமாம். ஆகையால் தாயே நமக்குத் தன் சரீரத்தைக்கொடுத்து இகபர ஆநந்தபோகங்களைக் கொடுத்தருளும் பரம குருவாகவிருக்கின்றாள் என்பது நிச்சயமாகத் தெரியவரும். இன்னம் சற்றுயோசிப்போம். இவ்விதமான சரீரத்தைக் கொடுத்தருளியுபகாரம் செய்ததும் ஒரு பெரிதல்ல வென்றாலும், பாருங்கள் நாம் கர்ப்பாசயத்திலிருந்தபொழுது நமது அருமைத்தாய் நம்மாலே பட்டபாட்டை நாம் அறியாவிட்டாலும் உலகத்தில் மற்றதாய்மார்கள் படுகிற கஷ்டத்தை யறியக்கூடுமல்லவா? நிற்கவும், உட்காரவும், படுக்கவும் கூடாமல் கஷ்டப்பட்டதெத்தனை? அன்னந்தண்ணீர் ஆகாராதி நித்திரையில்லாமல் பட்டபாடு எத்தனை? இடையில் நேர்ந்த வியாதிகளெத்தனை? மரணாபாயகரமான விபத்துக்களெத்தனை? இவ்வளவு பெரிய கஷ்டங்களை நம்மால் அனுபவித்தும் நமது தாய் நம்மேலே அணுவளவாவது துவேஷம் வைத்ததுண்டோ? நம்மைப் பெற்றவுடனே நமதன்னைக்குண்டான ஆநந்தம் அளவிலடங்குமோ? அது நிற்கட்டும்; நம்மைப் பெற்றபின் நமக்குச் சரீரத்தைக் கொடுத்ததே போதுமானது என்று நினைத்துத், தூரத்தில் போட்டுவிட்டாளோ? இல்லை; இல்லை; நமது சரீரம் பலப்படும்படியாகத் தனது சரீ

* பகுப்பு=பிரிவு.

ரத்திலுள்ள சத்தாகிய பாலைக்கொடுத்து எத்தனைகாலம் போஷித்தாள்? நாம் வியாதிப்பட்டகாலத்தில் தனது சுகத்தைச்சிறிதும் நினையாமல் அன்னபானாதிகளையும் வெறுத்து நமக்காக எவ்வளவு பாடுபட்டாள்? கண்ணை யிமை காப்பதுபோல நமக்கொருதுன்பமும் உண்டாகாதபடி பாதுகாக்கும் நிமித்தம் பட்டபாடு சொல்லமுடியுமோ? இப்படி நம்மைக்காக்கும் நிமித்தம் கஷ்டப்பட்டதனாலே அவள் தெய்வமாவதெப்படியெனில்; நமது கருவி கரணாதி சரீரத்தைக்காத்து ஏன் இரட்சித்தாள்? நம்மிடத்தில் உண்டான கருணையினாலேதான். இங்கே யிரகசியம் இது "கருணாகரன்" என்று தேவனுக்கொரு பெயர். அதாவது கருணையையே சொரூபமாகவுடையவன் என்பது. கடவுளின் சொரூபமாகிய அறிவையுடைய குருவைக் கடவுளாகக் கருதியதுபோலக் கருணையையுடைய தாயையுந் தெய்வமாகக்கருதுவது இங்கே சிறந்தது. அதனால் தெய்வத்தின் கருணையை 'சக்தி' என்றும், அதைப் பெண்பாலாகச் சொல்வதும் நமது முன்னோர்கள் அபிப்பிராயமாவதன்றியும், வேதநிச்சயமுமாகும். அந்தக்கருணையையே ஸ்ரீ பார்வதிதேவியார் என்றும், ஸ்ரீ இலட்சுமிதேவியாரென்றும், ஸ்ரீ சரஸ்வதியம்மையார் என்றும் பெரு நூல்கள் கூறுகின்றன. பெண் சொரூபமாகவருணிக்கப்பட்ட கருணையாகிய தெய்வசக்தியானது பெண்களிடத்தில் விசேஷித்திருக்கும் என்பதும், அது தமது குழந்தைகளினிடத்தில் களங்கமற்றுப் பிரகாசிக்கும் என்பதும், அந்தக் களங்கமற்றக் கருணையே தனக்கும் சொரூபமாக இருந்து குழந்தைகளைப்பெற்று வளர்க்கும் தாய் தெய்வமேயாவாள் என்பதும், சிறந்த இரகசியம். இதுமட்டும் அல்ல; நமக்கு முதலில் அறிவு புகட்டிய குருவாவதும் தாயேயாம். எவ்வாறென்னில் நாம் குழந்தையாயிருந்த காலத்தில் அன்னபானாதிகளை பருக்கக்கற்பித்ததும் அன்னையே. நாம் பேசும்படி கற்பித்துக்கொடுத்ததும் அன்னையே. தந்தைமுதலியோரை நமக்குத் தெரிவித்ததும் அன்னையே. நன்மை தீமைகளைப்பகுத்து அறிவித்து, நன்மைகளைச்செய்து தீமைகளை ஒழிக்கும்படி கற்பித்ததும் அன்னையே. நாம் கல்விபயில்வதன் முன் அறிந்த அறிவெல்லாந் தாயினாலேயே யன்றி வேறல்ல. அறிகருவிகளைத்தந்து அவற்றை விருத்தியாக்கி யறிவைப்புகட்டியதும் கருணை மிகுத்ததாயே யாகும்.

இனி ஜீவாத்மாக்களுக்கு அறிவைக் கொடுப்பதும், இகபரசுகத்தைக் கொடுப்பதும், தெய்வஉண்மையை விளக்குவதும் தெய்வத்தின் செய்கையேயன்றி மற்றவராலில்லையென்பது வேதத்தின்கருத்து. அதுவே ஆரிய நூ துணிபுமாகும். அதை விளக்குவதற்கே "அவனன்றி ஓரணுவும்அசையாது" என்னும் முன்னோர் திருவாக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் தெய்வத்துக்குச் சுபாவத்தில் ஒரு சரீரமில்லாமையால் மனிதரைக்காத்திரட்சிக்க மனிதர்போலவே யெழுந்தருளுமென்று நூல்களெல்லாம் கூறுகின்றன. ஆகையால் நாம் சிறிதும் அறிவில்லாமல் கிடந்த குழந்தைப்பருவத்தில் சருவவல்லமையுள்ள தெய்வமே மாதாபிதாக்கள் சொரூபமாகி நம்மைக்காப்பாற்றி யறிவுபுகட்டியதென்பதும் நியாயமே. குழந்தைப் பருவத்தில் தெய்வமுண்டென்றும், பாபபுண்ணிய முண்டென்றும், பாபத்தின்பலன் கஷ்டமாகுமென்றும், புண்ணியத்தின்பலன் ஆனந்தமாகுமென்றும், அவற்றைக்கொடுப்பது தெய்வமேயாமென்றும், அந்தத்தெய்வத்தைக் களங்கமற்ற சிந்தையோடு தியானித்தல் வேண்டும் என்றும், அப்படிச்செய்தால் நமக்குத் தெய்வகிருபையுண்டாகு மென்றும் போதித்ததும் நமதுதாயேயாகும். இப்படியாக நமக்குப் பேருபகாரஞ்செய்து அறிவுபுகட்டி யிம்மை மறுமை வாழ்வுகளைக் கொடுத்தருளக் கங்கணம்கட்டிக்கொண்டு முன்னின்ற பரமகுருவாவது நம்மிடத்தில் கருணைசொரூபியாக விளங்கிக் கொண்டிருந்ததாயேயாகும். நம்மை யீன்று காத்து இரட்சித்து அநுக்கிரகம் புரிந்தருளியதாயைத் தெய்வமேயாமென்று வணங்குவது ஆரியர்களாகிய நமக்கு ஒருபோதும் குறைவாகாது. அதுவே நமக்குப் பரம புண்ணியமும் நன்றியறிதலுமாம். தாயால் நமக்கு அநுக்கிரகிக்கப்பட்ட அறிகருவிகளைக் கல்வியாகிற துணைக்கருவியால் விளக்கி, அன்னையருளிய அறிவை விருத்தியாக்கினது தந்தையாகும். தந்தையிடத்திருந்து பெற்றுக்கொண்டது ஜீவசக்தியும், தாயினிடத்தில் பெற்றுக்கொண்டது சரீரமுமாகையால் [illegible]தையும் தாயுமே ஆத்மாவுக்குச் சகலாதாரமாய் நிற்பவர்கள். [illegible]விடக் குழந்தைகளுக்கு வேறு தெய்வங்கிடையாது. குழந்[illegible] தந்தையை யறிவிப்பதும் தாயே. தந்தையைக் குருவாகக் கொ[illegible]திரோப தேசாதிகள்பெற்று நல்வழிபட்டுய்யும்படி உபதேசிப்பதும் [illegible]யே யாகையால் முதற்குருதாயேயாம். தாய்அறிவித்த பிறகு தந்[illegible]ந்து வழிபட்டு நன்மைபெற வேண்டுமாகையால் தந்தை பிரண்[illegible] குருவாகும். இதனாலேயே தாய்தந்தையரை "இருமுது குரவர்" [illegible] நூல்கள் அவர்களைப்புகழ்ந்து கூறியதுமாம். அவ்விருவரையும் [illegible] செய்தால் நரகதுன்பமடைவது நிச்சயமென்று நூல்கள் [illegible]. தெய்வமே குருவாகும் என்கிற நியாயத்தால் இருமுது[illegible] தாய்தந்தையருந் தெய்வமே யாவார்கள் என்பதிற் சிறிதும் சந்[illegible] தாயுந்தந்தையும் அறிவித்த பின்னரே தெய்வவுண்மையை [illegible] கொள்வதால் மாதா பிதாக்களை "முன்னறிதெய்வம்"

என்று நமதன்னையாராகிய ஔவையார் அவர்களுடைய பெருமையைப் புகழ்ந்து கூறினார். தாயானவள் தனக்குத் தெய்வமாய் விளங்குகிற நாயகனை மந்திர தந்திரோபதேசமில்லாமல் சொல்மாத்திரையால் தன் குழந்தைக்கு உபதேசித்து உண்மை வெளிப்படுத்துவதால் "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை" என்றும்; தந்தை, மந்திரதந்திர முதலியவற்றால் தெய்வவுண்மையை விளக்குவதால் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்றும் ஔவையார் உபதேசித்தருளினார். இதனால் தாய்தந்தையருடையசொல்லை மீறி நடவாமையே குழந்தைகளுக்குப் பெருந்தவமாகுமென்றும், அதுவும் பிரதானமான தெய்வவழிபாடாகும் என்றும் தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியருளினார். இவ்வாறாகத் தந்தை தாயைத் தெய்வமாக வழிபட்டு மோட்சானந்தம்பெற்றவர்கள் அளவில்லாதவர்கள் உண்டென்று பாரதாதி பெரிய நூல்கள் நிச்சயித்துரைக்கின்றன. ஆகையால் குழந்தைகளே! நமது தாய்தந்தையருடைய திருவாக்குக்கு எதிர்வார்த்தைக் கூறாமலும், அவர்களுடைய மனங்கோணாமலும் நடக்க முயலவேண்டும். அப்படி நடப்போமானால் நமக்குத் தெய்வகடாட்சம் தானே கிடைக்கும் என்பது சத்தியம். சுபம்!

அ. சுப்பிரமணியஐயர்.

## மாயாபுரி விநோதக் கதை.

2-வது புத்தகம், 233-வது பக்கத்தொடர்ச்சி.

பிறகு ஜகதீசன் தன் குருவையும், வழிபடு தெய்வத்தையும் மனத்தில் தியானித்துக்கொண்டு ஒரு யோசனைச் சதுரமான கோட்டைச்சுவரெழுப்பி, நாற்புறமும் மஹாமேருவோ வென்று சந்தேகிக்கும்படியான பெரிய கோபுரங்களை யெழுப்பி அதனுள்ளே பற்பல தெருக்கள், சாலைகள், சோலைகள், செய்குன்றங்கள், ஆறு, குளம், கிணறு, ஓடை முதலியவைகளையும் நிருமித்து, நடுமையமான இடத்தில் பதினொரு நிலைகள் அமைந்த உன்னதமான அரண்மனை ஒன்றைச் சொர்க்க மத்திய பாதாளமென்கிற மூவுலகங்களிலும் இல்லாத அற்புத விநோதமாக இயற்றி முடித்தான். வெளிப்புறத்திலிருந்து பார்ப்பவர் கண்ணுக்குக் கோட்டை முதலியன தோன்றாமலும், உள்ளிருந்து பார்ப்பவருக்கு வெளியிலிருப்பவை யாவும் தெரியும்படியாகவும் பற்பல மாயாவிநோதங்கள் அமைய உண்டாக்கப்பட்டபடியால் அதற்கு மாயாபுரி என்று பெயரிட்டு மகிழ்ந்து, தன் தோழனைப்பார்த்து நீ போய் உன் மனைவியை அழைத்துக்கொண்டு வாவென்று சொல்லக்; கங்காதரன் இவற்றை யெல்லாங்கண்டு பயந்து இவன் சித்தனோ, தேவனோ? வென்று ஐயுற்று மறுபேச்சுப் பேசாமல் செலவு பெற்றுக்



கொண்டுபோய் ஒரு வாரத்தில் தன் மனைவியை இட்டுக்கொண்டு மாயாபுரி வந்து சேர்ந்து தனக்கென்று நிருமிக்கப்பட்ட விடுதியிலிறங்கி, ஜகதீசனிடத்தில் வந்து வணங்கிச் சுவாமி! இனிமேல் செய்யவேண்டுவதென்ன என்று கேட்டான். அவன் அப்பா கங்காதரா! சீக்கிரத்தில் நமது நகரத்தைக் குடிகளால் நிரப்பு. அதன் பிறகு பேசிக்கொள்வோமென்று அனுப்பிவிட்டு, அன்றிரவு தனித்திருக்கையில் தான் மங்களாம்பாளுக்குக் கெடு வைத்திருந்த இரண்டு வருஷங்களும் முடிவதற்கு, இன்னம் ஆறுநாட்களிருக்கின்றனவென்று கணக்கிட்டுப் பார்த்தறிந்து திடுக்கிட்டு அக்கணமே ககனமார்க்கமாக அவிநாசி சென்று ஒருவரும் அறியாவண்ணம் அவள் வீட்டுக்குள் பிரவேசித்துச் சற்று மறைந்திருந்தான். அப்பொழுது நாழிகை பதினைந்து ஆய்விட்டது. வீட்டில் எல்லாரும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள். ஓர் அறைக்குள் மெதுவான பேச்சுத்தொனி கேட்டது. அதென்னவென்று உற்றுக்கேட்டான். "பாலாம்பா! என் கணவன் குறித்த காலம் கடந்து போயிற்று. ஆறுநாளிருக்கின்றன. இனிமேல் அவர்வருவார் என்கிற நம்பிக்கையில்லை. இன்னம் ஒருதடவை அவருடைய மந்தகாசம் விளங்கிய சுந்தரவதனத்தைக் காணலாகுமென்கிற நம்பிக்கை கொண்டே யிதுவரைக்கும் உயிர்தரித்திருந்தேன். அளவில்லாத கஷ்டங்களையும் சகித்தேன். வேதசாஸ்திராதிகளையும், அவற்றை யோதி உண்மை உணர்ந்த பேரறிவாளர் வசனங்களையும் மெய்யென நம்பி, கணவனையே தெய்வமாக வழிபடும் பெண்மணிகளின் திவ்யசரித்திரங்களை யுணர்ந்த நான் இனி வேறொரு புருஷனைக் கனவிலும் கருதேன். நான் பிழைத்திருப்பேனானால் பெற்றோர் கட்டாயமாக வேறொருவருக்கு மணம் செய்து கொடுப்பார்கள். அது அவர்களது கடமை. அப்படியானால் கற்புடைமை முற்றுங்கெட்டு நரகதுக்கம் அநுபவிக்க நேரிடும். அதைவிட இந்த ஆறுநாளளவும் பொறுத்திருந்து பின் உயிர் துறப்பதே தகுதி. அக்கால எல்லைக்குள் பிராணனைவிட்டு விடுதல் நன்மையானாலும் அதனால் கணவனுடைய கட்டளையை மறுத்த பாபம் சம்பவிக்குமென்று பயப்படுகிறேன். ஒருக்கால் அவர் வெகு கஷ்டப்பட்டுத் தமது எண்ணங்களை முடித்துக்கொண்டு வெகு ஆசையோடும் என்னைப்பார்க்கும்படி தேடிவந்து, நான் இறந்துபோனேன் என்று கேள்விப்பட்டால் என்னபாடு படுவார்? அது எனக்கு எல்லாப்பாபங்களிலும் மேலான பாபமாக முடியுமல்லவா? ஆ! தோழீ! நான் என்னசெய்வேன்? என் கதி யிப்படியாயிற்றே! இன்னமொருதரம் என் நாயகனுடைய திருமுகதரிசனம் காணக்கிடைக்குமோ வென்று மனம் உருகுகின்றது. இப்பிறப்பிலேயே காண்பேனோ? காணமாட்டேனோ தெரியவில்லை." இச்

சமையம் உன்னையன்றி யெனக்கு ஆறுதல் சொல்பவர் ஒருவருமில்லை. இரவும் பகலும் கண்ணிமை மூடாமல் என்னைக்காத்து ஆறுதல் கூறிவருமுனக்கு நான் செய்யும் கைம்மாறு என்ன விருக்கிறது. சர்வேசுவரன் தான் உனக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டும் எனப், பாலாம்பாள் அம்மா! எனக்கென்ன வருத்தமிருக்கிறது? நீ சுகப்பட்டு முன்போல என்னோடு இன்பமான வசனங்களைப்பேசிக் கொண்டிருப்பாயானால் அதுவே யெனக்குப் பரமசுகம். நீ உன் கணவனோடு கூடிவாழ்ந்திருப்பதைக் கண்களாரப்பார்ப்பதே யெனது பெரும்பாக்கியம். இதற்கு நான் என்ன செய்கிறது? என்னால் ஒன்றும் செய்யக்கூடவில்லையே? நீயிருக்கும் நிலைமையைக்காணும்பொழுது வயிறும் மனமும் பற்றியெரிகின்றன. ஆனால் உன் கணவன் இந்த ஆறுநாட்களுக்குள் வருவார்; வாராமலிரார். அப்படி யவர் வாராமலிருந்து நீயும் உயிர் துறப்பாயானால் நானு முன்னைப் பின்தொடர்ந்து வருவேனேயன்றி இவ்வுலகில் தனியே யிருக்கமாட்டேன். வேறுநினைக்கவேண்டாம். உன்னுயிர்வேறு என்னுயிர்வேறென்று நினையாதே. நம்மிருவருக்கும் உடல் வேறாகவிருப்பதேயன்றி உயிர்வேறல்ல; ஒன்றேயாம். உன்சுகம் என்சுகமே; உன்துக்கம் என்துக்கமே; சந்தேகமில்லை. நிற்க நீ கவலைப்படவேண்டாம். இரண்டு நாட்களாகப் பல பல நற்சகுனங்கள் காண்கின்றனவாதலால் நமக்கு நல்லகாலம் பிறக்குமென்றே நினைக்கிறேன். தெய்வத்துக்குக் கருணையில்லாமற் போகாது. என்னவோ பார்ப்போம்" என்று இனியவசனங்கள்கூறினாள். இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஜகதீசன் இருவருடைய சிநேகத்துக்கும், தன் மனைவியின் கற்புடைமைக்கும் மகிழ்ந்து நாமினிச் சும்மாவிருக்கலாகாது. இருந்தால் அநியாயம் நேரிடும். நாமிதற்குள் வந்துசேர்ந்தது தெய்வகடாட்சமும், மங்களாம்பாளுடைய கற்புடைமையும் காரணமாக இருந்தமையால் தான். பதிவிரதையான பெண்ணுக்கு ஒரு குறைவும் நேரிடுகிறதில்லை. அப்பெண்ணும் அப்பெண்ணைமணந்த கணவனும், அவர்களுடைய குடும்பங்களும் இம்மை மறுமையிரண்டிலும் சுகத்தையடைந்து கடைசியில் மோட்சத்தை அடைகிறார்கள். "இல்லதெனில்லவண்மாண்பானால்" "பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந், திண்மையுண்டாகப்பெறின்" என்ற நீதிவசனங்களுக்கு நானேயிலட்சியமானேன். "தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்றவாக்கியத்துக்கு மங்களாம்பாள் இலட்சியமானாள். ஆதலால் நம்மைவிடப் பாக்கியசாலி ஒருவருமில்லை. என்றுகருதித் தன் மனதுக்குள் மகிழ்ச்சியடைந்து மங்களாம்பா! சொன்ன கெடுதவறாமல் வந்துவிட்டேன்.



நீ அஞ்சவேண்டாம்; உன்துக்கத்தை ஒழி. மகிழ்ச்சியடை எனக்கூறி பெதிரில்வந்து நின்றவுடனே பாலாம்பாள் தன்னையறியாமல் நித்திரையுண்டாக மயங்கி அயர்ந்து தூங்கிவிட்டாள். மங்களாம்பாள் தன் கண்களைத்திறந்து பார்த்து, அளவுக்கடங்காத மகிழ்ச்சிகொண்டு உடனே எழுந்திருந்து கணவன் பாதத்தில்வணங்க முயன்றும் சரீரத்தில் சக்தியில்லாதுவருந்துவது கண்ட ஜகதீசன் அவளருகில்சென்று அவள் சரீரத்தைத் தன் கைகளால் தடவிக்கொடுத்து, இருகையாலும் அவளைத்தூக்கித் தன் மடிமீதுவைத்துக் கொண்டு முத்தமிட்டு, என் செல்வமே! இதுகாறும் மெத்த வருத்தப்பட்டு இளைத்துப்போயிருக்கிறாய்; இவ்வித கஷ்டத்துக்கு நான் அல்லவோ! காரணமாயிருந்தேன்? என் வேலை நிறைவேற இத்தனைநாட்களாயின? இல்லாவிட்டால் தாமதித்திருப்பேனோ? உனக்குச் சொன்னவாக்குத் தவறுவேனோ? இனி யுனக்குச்சுகமேதவிர துக்கமென்பதேயில்லை. என்று இனிய வசனங்கள்கூற, மங்களாம்பாள் பிராணநாதா! எனக்குத் துக்கமாவது எது? சுகமாவது எது? சதா உமது திருவடி தரிசனம்செய்துகொண்டு பிரியாமலிருப்பதே சுகம்; அதுவே சொர்க்கவாழ்வு. பிரிந்திருப்பதே துக்கமும் நரகதுன்பமுமாம். இனி அரைக்ஷணமகூடத் தனித்திருக்கமாட்டேன். கூடவே வருவேனெனப், பெண்ணே! அதென்ன? அப்படிச் சொல்லுகிறாய்? உன்னைத் தனியாகவிட்டுப்போகவோ இவ்விரவில் உன்னைத்தேடிவந்தேன்? இல்லையில்லை; உன்னையழைத்துக்கொண்டு போகத்தான் வந்தேன். நீயும் கூடவே வாவென்று சொல்லிக்கொண்டிருக்கையில், செவ்வொளி, கருவொளி, பொன்னொளி, மின்னொளி, வெயிலொளி, நிலவொளி கலந்துபரவி நிற்றலாலித்தன்மையதென்று காணப்படாதகரிதாய்ப் பற்பல அற்புத நிறைந்த பொற்புடைய உப்பரிகையில் தன் கணவனோடுதான் வீற்றிருக்கக்கண்ட மங்களாம்பாள் அச்சமும் ஆச்சரியமும் அடைந்து கனவு நனவு என்கிற வேறுபாடுகாணாமல் மயங்கச் சுவாமி! இதென்னமாயம்? நான் மிகுதியும் அஞ்சுகிறேன். அச்சம் நீக்கிக்காத்தருளும் என்று வேண்ட என் கண்ணே! நீ ஒன்றுக்கும் அஞ்சாதே! உன்னுடைய கற்புடைமைக்கு ஸ்ரீ பரமேசுவரன் உனக்குக்கடாட்சித்தருளிய திரு அரண்மனையாகும். இதில்தான் நீ வசித்திருக்கவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கையில் காலிலணிந்த பாதுகுறடும், கையிற்பிடித்த பொற்பிரம்பும், காவிகாம்பிரவுடையும், திருநீரணிந்து நிலவொளி வீசுந்திருமேனியழகும், சிறுநகைதோன்று மதிமுக எழிலுந்தோன்ற வந்துநின்ற சித்த சுவாமியைக்கண்டு ஜகதீசன் தன் மனைவியோடு திடீரென்றெழுந்திருந்து, தன் மனைவியோடு சென்று அவர் பாதத்தில் வணங்கி ஆசீர்வசனம் பெற்று, அழைத்துக்கொண்டுவந்து ஒரு இரத்தின பீடத்திலெழுந்தருளச்

செய்து, ஷோடச உபசாரங்களாலுபசரித்துப் பூசித்துப் பெண்ணே! நம்தெய்வம் எழுந்தருளியது. நீ பணிந்துகொள்ளென்று கூறித்தானும் பணிந்து கைகட்டி வாய்புதைத்துநின்று சுவாமீ! மேல்நடக்கவேண்டிய காரியங்களைக் கட்டளையிட்டருளவேண்டுமென, அவர் கருணையோடு அப்பா குழந்தாய்! நாளையதினமே நல்ல சுபதினமாகையால் மங்களாம்பாளை விவாகஞ் செய்துகொண்டு உலகமுழுதும் உன்வச மாக்கிக்கொண்டு நீதி முறைதவறாமல் அரசுபுரிந்திரு. வேறொரு இரகசியம் இருக்கிறது. அதென்னவென்றால் கருநாடகத்து அரசன் பிரபாகரன் என்பவன் புத்திரனில்லாமல் தவம்புரிந்து நமது கருணையால் இலட்சுமியும்நாணும் திருவெழில்மிகுந்த ஒரு பெண்குழந்தையைப்பெற்று வளர்த்துவருகையில் அப்பெண் மங்கைப்பருவம் அடைந்ததுகண்ட சகல இராஜகுமாரர்களும் மணம்பேச வந்தார்கள். அவர்களுள் சக்கிரவர்த்தி புத்திரனும் ஒருவன். சக்கிரவர்த்தியோ நாஸ்திகன். அவன் தனக்கேதரவேண்டுமென்று கட்டாயம் செய்தபடியால் பிரபாகரன் வேறுவழியில்லாமல் அவனுக்கே கொடுக்கத்தீர்மானித்தான். நாஸ்திகனை மணஞ்செய்துகொள்ள தனக்கு மனமில்லையென்று அந்தப்பெண் நிச்சயமாகச் சொல்லிவிட்டபடியால் பிதா சக்கிரவர்த்திக்குப் பயந்து அந்தப்பெண் பைத்தியம்பிடித்தவளென்று தீர்மானித்துக் கொடுஞ் சிறையில்வைத்திருக்கிறான். ஆகையால் நீ நமது ஆணையின்படி அந்தப் பெண்ணையும் மணம்புரிந்து சுகமாகவாழ்ந்திருவென்று கூறியருளி மறைந்துபோனார். பிறகு மங்களாம்பாள் சுவாமி! நமது சுவாமியின் கட்டளைப்படிசெய்வது எனக்கு மிகச் சந்தோஷம். சீக்கிரம் அப்படியே அந்தப்பெண்ணையும் மணம்புரிந்து இங்கே கொண்டுவரவேண்டுமென்று களங்கமற்ற உள்ளத்தோடு மகிழ்ந்துகூறினள். பின்பு சுவாமீ! என்தோழி பாலாம்பாளிடத்தில் ஒரு வார்த்தைகூட பேசாமல் வந்துவிட்டேனே! அவள் என்ன ஆனாளோ-தெரியவில்லை என்று சொல்ல, அவன் பெண்ணே! அதோ! பாரென்றுகாட்டி, அவ்விடத்தில் தன்தோழி நித்திரை செய்யக்கண்டு மனமகிழ்ந்து அவளருகில்போய்த் தட்டியெழுப்பிக்கொண்டு வந்து நடந்தவற்றைக்கூறி மகிழ்ந்து, இராமுழுவதும் அரண்மனையின் விநோதங்களைச் சுற்றிச்சுற்றிப் பார்த்துக் களித்திருந்தார்கள். விடிந்தவுடனே மந்திரி கங்காதரன் வந்துவணங்க ஜகதீசன் அவனைநோக்கி இன்று நல்ல சுபதினமாகையால் என் விவாகம்நிறைவேறவேண்டும்; சீக்கிரம் அதற்குத் தயார்செய்யென்றுகூற அவன் மகிழ்ந்துபோய் நகரத்தாருக்குப் பறைசாற்றித்தெரிவித்துச் சகலமுந் தயார்செய்துமுடிக்கக்குறித்த முகூர்த்தத்தில் விவாகம்நிறைவேறியது. விவாககிரியை நாலுநாளும்மு



ந்தபின் நகரத்தார் யாவரும்வணங்கித் துதிக்க மங்களாம்பாளோடுதன்னரசுசெலுத்திக்கொண்டு இருவரும் வாழ்ந்திருந்தார்கள். நாகராஜன் என்கிற ஒரு மந்திரி பாலாம்பாளை மணம்புரிந்துகொண்டான். சில நாட்களானபின் மங்களாம்பாள் ஜகதீசனை நோக்கிப் பிராணநாதா! கருநாடக தேசம்போகவேண்டாமோ? எனப், பெண்ணே! நான் நாளையதினம் போய்வருவேனென்றுகூறி அவளைச் சந்தோஷிப்பித்தான்.

[இன்னும் வரும்.] தேவதஞ்சரியம்மாள்

---

## கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷெப்பர்ட் பெண்கல்விவிஷயமாக பேசியது.

---

இந்தியாவில் கல்கட்டா, அலஹாபாத்து, லாஹோர், பம்பாய்முதலிய விடங்களில் சர்வகலாசாலைச் சங்கங்களிருக்கின்றன. இவ்விதமே சென்னைக்கும் ஒருசங்கம் 1854-ம் வருஷம்முதல் ஏற்படுத்தப்பட்டு நடந்துவருகிறது. இச்சங்கத்தார் பல பரீக்ஷைகளிற்றேறியவர்களுக்கு வருஷத்திற்கொருதடவை சபைகூட்டி கௌரதப்பட்டங்களும், வெகுமதிகளும் கொடுப்பது வழக்கம். இவ்விதப் பட்டமளிக்க மார்ச்சுமீ 29-ந் தேதி சாயங்காலம் சேப்பாக்கத்திலுள்ள விசித்தரமான "ஸெனட் அவுஸ்" என்ற மண்டபத்தில் இச்சங்கத்தார் சபைகூடிற்று, அப்பொழுது நமது கவர்னரவர்கள் சபா நாயகராகவீற்றிருந்தார். உப அத்தியக்ஷத்தலைவராயிருந்த மிஸ்டர் ஷெப்பர்ட் பெண்கல்வியைக் குறித்து பின்வருமாறு சொன்னார்:—

"மிஸ்ஸஸ் சத்தியநாதன் எம்.ஏ., பரீக்ஷைதேறினது இந்தியரனைவருக்கும் சந்தோஷந் தரத்தக்கது. இவரைப்போல் அநேக இந்திய ஸ்திரீகள் உயர்தரக் கல்விகற்பது அவசியம்; ஆனால் உயர்தரக் கல்விகற்ற இந்திய புருஷர்கள் தங்கள் பெண்களுக்கும் உயர்தரக் கல்விகற்பிப்பதில் அக்கரைபாராட்டுகிறதில்லை, சர்வகலாசாலைச் சங்கத்தாரால் வித்தியாப் பட்டங்கள்பெற்ற வித்தியார்த்திகள், அவர்கள் மனதிற்பட்ட உண்மைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் சரியாக உள்ளும்புறமும் ஒத்துநடந்துகொள்ள முடியாமல், வெளியிலொருவிதமாகவும் ஸ்திரீகளுக்கும் முதியோர்களுக்கும் பயந்து வீட்டில் வேறுவிதமாகவும் நடந்து சீவிக்கிறார்கள். இவ்விதம் இவர்கள் செய்துவருவதால் ஜனங்களுக்கு உண்மையான ஞான ஒளியானது பரவுவதுகஷ்டம். பெண்களுக்கு கல்வி அவசியமென யாவரும் ஒத்துக்கொண்டவிஷயம். தாழ்ந்த படிப்பில் பெண்கள் அதிகரித்துவருகிறதானது ஜனங்களின் ஊக்கத்தைக்காட்டுகிறது. அப்பர், லோயர்

சகண்டரி பாடசாலைகளில் பெண்களோ வெகு சொற்பம். கல்வி விசாரணை யதிகாரியாகிய டைரக்டர், சென்ற வருடத்தில் பெண்கல்விப்பயிற்சி அதிகரிப்பதில்லையென்றும், திருப்திகரமாகவில்லை என்றும் சொன்னது ஆச்சரியமல்ல. பெண்கள் பாடசாலைக்குப்போய் கற்காமலிருந்தபோதிலும், தங்கள் தங்கள் கிரகத்திலாவது கற்றுவருவார்களென்று நாம் நம்பக்கூடும்."

ஜஸ்டிஸ் ஷெப்பர்ட் துரையவர்கள், நம்மவர்கள்; மனதில் ஒரு அபிப்பிராயமும், வெளியில் வேறொரு அபிப்பிராயமும்கொண்டு நடந்துவருகிறார்களென்றுகூறியது அவர்கள் நம்மவர்களிடத்தில் அதிக பழக்கமில்லாமையால் அவ்வித அபிப்பிராயத்தை வெளியிட்டாரென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். அப்பர் லோயர் சகண்டெரி பாடசாலைகளில் பெண்கள் வெகு சொற்பமாக படிக்கிறார்களென்று அபிப்பிராயப்படுகிறார். இது வாஸ்தவமே. நம்மவர்கள், புருஷர்கள் உபாத்தியாயர்களாகவிருக்கும் பாடசாலைகளுக்கும், மிஷன் பாடசாலைகளுக்கும் வயது சென்ற பெண்களை அனுப்ப அஞ்சுவதே இதற்கு காரணமாயிருக்கிறது. சிலர் பெண்களுக்கு தகுந்த புத்தகங்களில்லையென்று சொல்வது தப்பு. அவர்களுக்கு படிக்க வேண்டிய புத்தகங்களிருக்கின்றன. நமது பெண்களுக்கு உயர்தரப்படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டுமானால், ஸ்திரீகளே உபாத்தியாயர்களாகவிருக்கும் தனிமையான உயர்தரப் பாடசாலை வேண்டியது அவசியமாயிருக்கிறது.

நமது தமிழ்நாட்டிலோ ஏழைப்பெண்களும், தாயாருக்கு உதவியாக வீட்டுவேலைசெய்துகொண்டு பள்ளிக்குச்சென்று கற்கப்பொழுதில்லாமலிருக்கிற சில பெண்களும்தவிர சுமார் 80,000 பெண்கள் கல்வி கற்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் எழுதப்படிக்கத்தெரியும் வரைதான் கற்றுவருகிறார்கள். இவ்வித கல்வியினால் பெண்களுக்கு யாதொரு பிரயோசனமுமில்லை. அல்லாமலும் குறைப்படிப்பு எப்பொழுதும் கெடுதியையேவிளைவிக்கும். நமது பெண்களோ கல்வித்தேர்ச்சியால் புருஷர்களைப்போல பொருள் தேடப்போவதில்லை. ஆயினும் நற்குணநற்செய்கைகளை கற்பிக்க கல்வி முக்கிய சாதனமன்றோ? கல்வியறிவிருந்தாலொழிய, குணமுள்ள பெண்டிர்களாகவும், இல்லற நடத்துவதற்கு இசைந்த மனைவிகளாகவும், சிறந்த தாயார்களாகவும் நமது பெண்கள் எவ்விதம் ஆவார்கள்? ஆகையால் தாழ்ந்த பாடசாலைகளில் படித்து கல்விதேர்ச்சியடையாததினாலுண்டாகும் குறையை எவ்விதமாகிலும் நீக்குவதவசியம். இதற்கு வீட்டிலேயே பெண்கள் பற்பல நீதிகளடங்கிய புத்தகங்களைப்படித்துவரவேண்டியதவசியம்.



## விக்டோரியா ஞாபகஸ்தாபனம்.

மார்ச்சு மீ 31-உ ஞாயிறன்று ஆனரெபில் ஜஸ்டிஸ் ஸர். வெ. பாஷியமையங்கார் பங்களாவில் மேற்கண்ட விஷயமாய் ஸ்திரீகள் சேர்ந்து கூடினபோது, ஸர். வெ. பாஷியமையங்காரின் மூத்த குமாரத்தியாகிய ஸ்ரீமதி சீதம்மாளவர்கள் பின் வருமாறு ஒரு வியாசம் எழுதிக்கொண்டு வந்து படித்தார்கள். அதின் சுருக்கமாவது "மகாகனம் தங்கிய நமது சீமை ராணியாரவர்களாகிய விக்டோரியா சக்கிரவர்த்தினி காலம்சென்ற சமாசாரத்தை நாம் தெரிந்து நிரம்பவும் துக்கிக்கிறோம். மேற்படி சக்கிரவர்த்தினியாரின் குணங்களை விவரித்துச்சொல்ல நம்மால் சாத்தியமல்ல. இங்கிலண்டு தேசத்தை 63 வருஷகாலம் நீடித்து ஆண்டிருக்கிறார்கள். ஸ்திரீயாயிருந்தும் அவர்களுடைய ஆளுகையில் கல்வி நாகரீகம் முதலானவை பெரும்பாலும் விருத்தி யடைந்து வந்தன. நம்முடைய தேசத்துக்குப் பஞ்சம் வந்தாலும் ஜனங்களுக்குக் கொடிய வியாதி ஸம்பவித்தாலும் மகாராணியவர்கள் தங்கள் குழந்தைகள் விஷயத்தில் அருமை பாராட்டுவதுபோல் நம்மிடம் அன்பு பாராட்டி நம்மை ஆதரித்து வந்தார்கள். இந்தியா தேசத்துக்கு அனுப்பப்பட்ட பிரதி கவர்னர் ஜனரலவர்களிடத்திலும் அவர்கள் பாரியை இடத்திலும் இந்தத் தேசத்து ஸ்திரீகளை ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டிருந்தார்கள். இத்தேசத்து ஸ்திரீஜனங்கள் வர்ணாசிரமத்துக்குப் பயந்து வியாதியால் சிரமப்படும்போது ஆசுபத்திரிகளில் வந்து வைத்தியம் செய்துகொள்ள அஞ்சிக்கைப்படுவதை நமது காலஞ்சென்ற சக்கிரவர்த்தினியார் தெரிந்துகொண்டு, லார்ட் டப்ரின் அவர்கள் இராஜப்பிரதிநிதியாக இவ்விடம் வந்தபோது அவர்கள் பாரியாளவர்களிடம் ஹிந்து காஸ்டு கோஷா ஆஸ்பத்திரி கட்டவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். அதைச் சிரஸாவகித்து லேடி டப்ரின் அவர்கள் பணம் வசூலித்து நமது சென்னபட்டணத்தில் ஒரு ஆசுபத்திரி நமது மகாராணியின் பேரால் வைத்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் வாசமாகவிருந்து வைத்தியம் பார்த்துக்கொண்டவர்கள் தவிர வெளியிலிருந்துவந்து வைத்தியம் பார்த்துக்கொண்டவர்கள் சென்ற வருஷத்தில்மட்டும் பதினோராயிரம்.

புருஷர்கள் நமது காலம்சென்ற சக்கிரவர்த்தினியார் ஞாபக ஸ்தாபனத்திற்காகப் பல விடங்களில் பல காரியங்கள் எத்தனித்திருக்கிறார்கள்.

நமது காருணிய கவர்னரவர்களின் பாரியையான லேடி ஆம்ப்ட்ஹில் அவர்களின் கருத்தாவது, இந்த இராஜதானியின் 22-ஜில்லாக்களிலுள்ள

ஸ்திரீகள் அவரவர்களுக்குத் தோன்றுகிற தொகை உதவிசெய்து மேற்படி ஆஸ்பத்திரியில் இன்னும் 20-படுக்கைகளுக்கு (Beds) இடம் முதலானவை கட்டி தாதிகள் முதலானவர்களை யேற்பாடு செய்யும்படி எத்தனித்திருக்கிறார்கள். இது விஷயத்தில் அவரவர் தங்களுக்குத்தோன்றுகிற தொகை உதவிசெய்வதுடன் தங்களுக்குத் தெரிந்த சிநேகிதர்களுக்கும் இதன் கருத்தைத் தெரியப்படுத்தி அவர்களாலும் உதவி செய்யவேண்டுமாய் கோரப்படுகிறது.”

மேற்படி அபிப்பிராயத்தை வாசித்தபின் அவ்விடத்தில் கூடியிருந்த ஸ்திரீகளில சிலா மகாராணியா ரவர்களின் குணங்களைப்பற்றியும் சிலா் இப்பொழுது ஆஸ்பத்திரி எவ்விதமான உபகாரம் உண்டுபண்ணுகிற தென்பதைப்பற்றியும் விவரித்துச் சொன்னார்கள்.

## * நமது கவர்னர்.

சென்னை ராஜதானியின் கவர்னராயிருந்த சர் ஆர்தர் ஹாவ்லக் இங்குவந்து சென்ற டிசம்பர் மாசத்தோடு ஐந்து வருஷமாய்விட்டபடியால் இவருக்கு பதிலாக லார்ட் ஆம்ப்ட் ஹில் என்கிறவரை காலஞ்சென்ற மகாராணியின் மந்திரிகள் சென்னைக்கு கவர்னராக நியமிக்கவே, 1900ளு டிசம்பர்மீ 28-ந் தேதியன்று இவர் தமது வேலையை ஒப்புக்கொண்டார். இவர் இங்கிலாந்திலுள்ள பெரிய குடும்பங்களி லொன்றைச்சேர்ந்த லார்ட் ஓடோ ரஸ்ல் என்பவருடைய மூத்தகுமாரர். இவர் ஈட்டன், ஆக்ஸ்போர்ட், கலாசாலைகளிற் படித்து வித்தியாப் பட்டங்களைப்பெற்று வெகு புத்திசாலியென பேர்பெற்றார். எல்லா ஆங்கிலேயர்களைப்போலவே இவருக்கும் கிரிக்கட்டு, பட குவிடுவது முதலிய ஆட்டங்களில் விசேஷப்பிரியமெனச் சொல்லப்படுகிறது. இவர் பேசுவதில் மிகசாமர்த்திய முடையவர். ஆளுந்திறமையுள்ளவர். இவர் இங்கிலாந்தில் யாவராலும் மதிக்கப்பட்டு வந்தார். இவர் சுமார் 6 வருடங்களுக்குமுன் நார் லார்ட் பூசாம் என்பவருடைய குமார்த்தியாகிய லேடி மார்கரட் லீகன் என்பவரை மணம்புரிந்தார். இப்பொழுது 7-வது எட்வர்டின் குடியேற்ற நாடுகளுக்கு மந்திரியாகிய மகா சாமர்த்தியவானான மிஸ்டர் சாம்பர்லேனுக்கு ப்ரைவேட் ஸெக்ரிடெரியாய்ச் சிலகாலம் வேலைபார்த்தார். 1898-ம் வருஷத்தில் சர்க்கரையேற்றுமதிக்குச் சில ஐரோப்பிய ராஜாங்கத்தார் பண உதவிசெய்கிற வழக்க சம்பந்தமாய் பிரஸல்ஸ் நகரத்தில் பல ராஜாங்கத்தார்களின் பிரதிநிதிகள் ஆலோசனை செய்யக்கூடினபோது, லார்ட் ஆம்ப்ட்ஹில் பிரிடிஷ் ராஜ்ஜியத்துக்கு ஒரு பிரதிநிதியாகப்போனார். இவருக்கு இப்பொழுது



வயது 31-க்கு மேலில்லை. ராஜாங்க விஷயங்களில் அனுபோகம் அதிகமில்லாம லிருந்தபோதிலும் இவருடைய புத்திசாதுரியத்தினால் இவர் ஜனங்களுக்கு நன்மைசெய்யக்கூடும். இவர் கவர்னர்வேலையை ஒப்புக்கொண்டமுதல் சென்னையிலுள்ள பலதொழிற் சாலைகளையும், கல்விச் சாலைகளையும், ஆஸ்பத்திரி, கப்பல்கள் தங்குமிடம் முதலியவைகளையும் பார்த்துவந்தார். சென்ற பிப்ரவரி மீ 20-உ சென்னையைவிட்டுப் புறப்பட்டு செங்கற்பட்டு, வட ஆற்காடு, கடப்பை, முதலிய ஜில்லாக்களில் சுற்றுபிரயாணம்செய்து குடிகளை நேரிற்கண்டு, அவர்கள் குறைகளை நன்றாக தாமே விசாரித்து அவர்களுக்கு தக்க பதிலளித்தார். 28-உ சென்னைவந்து சேர்ந்தார். மார்ச்சு மீ 11-உ சேலத்துக்குச் சென்று அங்குள்ள குடிகளுடன் கலந்துபேசி அவர்களுக்குள்ள குறைகளை யறிந்துகொண்டு ஆறுதலான பதிலளித்து சென்னைக்குவந்து சேர்ந்தார். இவர் இப்பொழுது நீலகிரிமலைக்குச் சென்றிருக்கிறார். இவர் வயதில் குறைந்தவரானாலும் புத்தியிலும், நல்லெண்ணத்திலும், குடிகளிடத்தில் அனுதாபம் காட்டுவதிலும் மேலானவராகத் தென்படுவதாகத் தோன்றுகிறது.

## மாதர்மனோரஞ்சினி வாழ்த்து அகவல்.

ஆழிசூழுலகில் வாழிநின்பெருமை
வாழிமாதர் மனோரஞ்சினி நீ
தளர்நடையிட்டுத் தவழ்ந்திருவருடம்
பூர்த்தியாய்முற்றினை பூரணிவாழி
இவ்விருவருடம் செவ்வையாய்நின்னை
வாங்கிவாசித்த மடநலார்வாழி
ஓங்கு நின்னுகமுயர்மொழிக்கலனால்
சிறக்கப்புனைந்த திறலோர்வாழி,
பாங்கு நீ பெறவே பரிவுடன் மூன்றும்
வயதுடன்வந்து வயங்குமிந்நாளில்
நின் சுவை யறியாமின்னலை நிகராய்
இடைமட மாணரிடம் புகுந்தன்னோர்
தம்பானிற்கும் வம்பாமடமையைப்
போக்குமாறறிவைப் பொலிவுறப்புகட்டிக்
கற்பைக்காக்குங் கடைப்பாடதனை
வெற்பெனவவருளவினைநிலத்திட்டுப்
பொற்புடனுன்னைப் போற்றிவெளியிடும்
நற்குண நல்லாசிரியர் வாழியவே.

தி. முத்துராம பிள்ளை.

## விடுகதை.

வட்டமாய் வெண்மதிபோலிருக்கும்—வானிலாச் சந்திரனல்ல ;
பொழுது போனதைப் புகட்டும்—ஞாயிறுமல்ல ;
மேனியில் முட்களிருக்கும்—முள்ளம்பன்றியுமல்ல ;
ஆடவர் மகளிர்க்கோரணிகலமாகும்—பூணாரமுமல்ல ;
ஆறுக்கும் கொள்ளலாமதை அறுநூறுக்கும் கொள்ளலாம்—ஆழ்ந்த மணிமுத்துமல்ல ;
நொச்சொலி யதற்குண்டு—சுவரூர்ந்து வாழும் பல்லியுமல்ல ;
மனோரஞ்சனி போற்றுமாதரே இதன் பொருளுணர்ந்து பொலிவீரே.

ஓர் மாது.

1. ஏராதமரத்தில் எண்ணாயிரங்காய்.
2. மூக்குத்திபோல் பூப்பூக்கும் அப்பாடா என்ற காய்காய்க்கும்.
3. ஜன்னல்பின்னல்கயிறு, ஜாதிலிங்கக்கயிறு, எண்ணெய்ப்பட்டதகயிறு என்னகயிறு.
4. போவான் வருவான் திம்மப்பன் ஒருகாலால் நிற்பான் திம்மப்பன்.
5. ஊருக்கெல்லாம் ஒரே கல்.
6. எங்கள் மாட்டுக்கு மூன்றுகொம்பு பின்பக்கத்தால் பாயும்.

R. இலக்ஷ்மி அம்மாள்.

## NOTES and NEWS.

நாளது தேதிவரையில் தென்னாப்பிரிக்கா யுத்தத்துக்காகச் செய்யப்பட்ட செலவானது 1510 லட்சம்பவுன். ஒரு பவுன் இப்போது 15 ரூபாய் கொண்டதாகையால், இது 226½ கோடி ரூபாய்க்குச் சமானமாகிறது. இன்னும் யுத்தம் முடிவதற்கு முன்னால் 50 கோடி ரூபாயாவது செலவாகும் !!

---

கில்பர்ட் என்ற சிறுவன் அமெரிக்காவில் 1890-ஆம் பிறந்தான். 1897-ஆம் வக்கீல் பரீக்ஷையிற்றேறி பட்டமும் பெற்றான். 1897-ஆம் டிசம்பர்-மீ 21-ந்தேதி தானே ஒரு கேசுக்கு வக்கீலாகச்சென்று வெகு நன்றாக வாதாடினானும். இப்பையன் புத்தியே புத்தி, இப்பையனுக்கு ஈசன் தீர்க்காயுளளிப்பாராக.

---

மிஸ்டர் சத்தியநாதன் அவர்களுடைய பாரியாகிய கமலரத்னம் அம்மாள் எம். ஏ., பட்டம் பெற்றவிஷயம் யாவருக்கும் தெரிந்தவிஷயம். இப்போது இவருடைய தங்கையார் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் எம். ஏ., பரீக்ஷைக்குப் படித்துவருகிறதாக அறிந்து மிகச் சந்தோஷப்படுகிறோம்.

---

மாமிசத்தைப்புசிப்பது உசிதமல்லவென் றநேகரபிப்பிராயம். நமது சாஸ்திரத்தின் கொள்கையுமிதுதான். பழம், காய்கிழங்குகள்முதலியவை



களைப் புசிப்பவர்கள் அதிகநாள் ஜீவிக்கக்கூடியவர்களென்றும், சௌக்கியமான தேகத்தையுடையவர்களென்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையே. உலகத்தில் 10-ல் 7-பேர் காய் கிழங்குகளைப் புசிப்பவர்களென தெரிகிறது. எக்கால[illegible]லாருமே [illegible] கிழங்குகளைப் புசிப்பவர்களாவார்களோ ?

---

நமது பத்திரிகையை இதுவரையிலும் காலணா ஸ்டாம்பு ஒட்டிவைத்து அனுப்பிவந்தோம். இப்பொழுது இதற்கு ½ அணா ஸ்டாம்பு ஒட்டிவைத்து அனுப்பவேண்டுமென போஸ்டாபீசிலிருந்து நமக்கு கடிதம் வந்திருக்கிறது. நாமிதைக்குறித்து ஒரு கடிதம் எழுதி போஸ்ட்மாஸ்டர் ஜனரலவர்களுக்கு அனுப்பியிருக்கிறோம், இவ்விதம் அரையணா ஸ்டாம்பு ஒட்டிவைத்து அனுப்புவதில் நமது ஆபீஸுக்கு மாதமொன்றுக்கு ரூ. 6, நஷ்டமாகும் அதாவது வருடம் ரூ. 72.

---

மிஸ்டர் குருகர் :—தென்னாப்பிரிக்கா யுத்த சம்பந்தமாய் ராஜிபேச்சு நடந்தபொழுது லார்ட் கிச்சனருடைய நிபந்தனைகளை ஜெனரல் போதா ஆதாரவாய்க் கேட்டதற்குக் காரணம் பிரிடிஷார் எவ்வளவு தூரம் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்று அறிந்துகொள்வதற்காகவே என்று சொன்னதோடு “ நாங்கள் சரணாகதமடையாமல் பிரிடிஷாருக்குச் சமாதானம் கொடுப்போம். ஆனால் எங்களுடைய சுயேச்சையை நாங்கள் இழக்கமாட்டோம். நான் போவர்களுக்காக ஏசுநாதனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன் என்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஏசுநாதன் நானாவது என்னுடைய கூட்டத்தாராவது நசித்துப் போம்படி வைக்கமாட்டார் ” என்றும் மிஸ்டர் குருகர் சொன்னதாகத் தெரியவருகிறது.

---

சென்னையில் சென்ற டிசம்பர் ஜெனவரி மாதங்களில் ப்ரைமரி பரீட்சைக்கு அனுப்பின பெண்களில் 86 பேர்தான் தேறியிருக்கிறார்கள். இவர்களில் ஒரு பெண் முதல் வகுப்பில் தேறியிருக்கிறாள். மற்ற 85 பேரும் இரண்டாவது வகுப்பில் தேறியிருக்கிறார்கள். திருவல்லிக்கேணி பெண் பாடசாலையில் 3 பேரும், மைலாப்பூரில் 2 பேரும், ராஜா சர் சவலை இராமசுவாமி முதலியார் பாடசாலையில் 6 பேரும், வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் 16 பேரும், மகம்மதியப் பெண்கள் 4 பேரும் இன்னுமிதரப் பாடசாலையில் 54 பெண்களாம். ப்ரைமரி பரீட்சையில் இவ்வளவு பெண்கள் தேறியது நம்மவர்கள் தங்கள் பெண்களுக்கு கல்வி புகட்டவேண்டுமென ஆசையிருப்பதாகத் தெரிகிறதல்லவா ?

திருச்சினாப்பள்ளியில் இந்துமதாபிமானச் சங்கத்தாரால் நடத்தப்பட்டுவரும் ஓர் பெண்பாடசாலை சென்ற 5 வருஷமாக நடந்துவருகிறது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. இதில் சென்ற வருடத்தில் அநேக பெண்கள் கி[illegible]களில் சேர்ந்திருக்கிறதைக் குறித்து சந்தோஷப்படுகிறோம். இப்பாடசாலைக்கு வரவேண்டிய ரிசல்ட் கிராண்டில்பெரும் பாகத்தை இச்சங்கத்தார் கவர்ன்மெண்டாரைக் கேட்டதற்கு ஐவேஜியில்லையென்று சொல்லிவிட்டது மிகவும் விசனிக்கத்தக்கதே. இங்குள்ள பெண்மணிகளுக்கு இந்து மதமும் கற்புடைமாதர்களின் சரித்திர பூர்வமாய் கற்பு முதலியநற்குண நற்செய்கைகளும் போதிக்கப்பட்டுவருகின்றன. இச்சபையார் ஊக்கமும், நல்லெண்ணமும் வீண்போகாது பயன்பெறுமெனக் கருதுகிறோம்.

---

ருஷியா தேசமும், ஐக்கியமாகாணமும் தான் முன்னுக்கு வருவதில் விசேஷ கீர்த்தியையடைந்து வருகின்றன. ருஷியா தேசத்தில் 1897௵-ல் ஜனத்தொகை 129,000,000, ஐக்கியமாகாணத்தில் 76,000,000, இதனால் ருஷியா ஐக்கியமாகாணத்தைப் பார்க்கிலும் அதிக ஜனங்களை உடையதாக தெரிகிறது. ஆனால் ஐக்கியமாகாணத்திலுள்ள ஜனங்கள் ருஷியர்களைப் பார்க்கிலும் அதிக புத்தியுள்ளவர்களென்றும், சுறுசுறுப்புள்ளவர்களென்றும், விடா முயற்சி, கல்வி அறிவுள்ளவர்களென்றும், சொல்லப்படுகிறது. இப்போது ருஷியர்களும் அவர்களுக்குச் சமமாகவிருக்க முயலுகிறார்களாம். 200 வருடங்களுக்குமுன் அமெரிக்காவில் 300,000 ஜனங்களிருந்தார்களாம். இப்பொழுதோ 80,000,000 ஜனங்களிருக்கிறார்கள். அமெரிக்காவில் அரிசோனா என்ற ஊருக்கு மேற்குபாகங்களில் 100 மைல் தூரமுள்ள ஒரு காடு இருக்கிறதாம்.

---

மகா விநோதப் பிறவி:—நாளது மாதம் 11-ந்தேதியாகிய வியாழக்கிழமை தினத்தில் புதுக்காட்டைச் சேர்ந்த வல்லூரில் ஓர் நாயர் ஸ்திரீ சில தினங்களாய் பிரசவ வேதனைகண்டு கடைசியாய் மரணாவஸ்தையும் ஜன்னியும் கண்டு மரிக்கும் சமயத்தில், புதுக்காட்டிலுள்ள ரெயில்வே டாக்டர் மிஸ்டர் பொன்னுசாமி பிள்ளையைக் கூட்டிக்கொண்டுபோய் கடும் பிரயோகம் செய்து குழந்தைகள் எடுக்கப்பட்டனவாம். குழந்தைகளோ இரட்டையாம். தவிர இரண்டு தலையும், இரண்டு கைகளும், இரண்டு மார்பும், மார்பின்கீழ் தொப்புள்வரையில் ஒரு வயிறும், ஒரு தொப்புளும், தொப்புளின்கீழே மறுபடியும் இரண்டாகப்பிரிந்து, இரண்டு தொடைகளும் கால்களும் வேறாக விருந்தனவாம். இரண்டும் 10 மாதம் நிறைந்த புஷ்டியுள்ள பெண்குழந்தைகளாம். ஒரு நாளைக்கு முன்னதாகவே வயிற்றில் செத்துக்கிடந்தனவாம். தாயும் உடனே மரித்துப்போனாளாம். இதனால் முன் காலத்தில் ராக்ஷசர்களிருந்தார்களென இராமாயணம் முதலியவைகளில் சொல்லியிருப்பதும் நிசமாகுமல்லவா?



# மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்

VOL. 3. | MADRAS: MAY 1901. | No. 3.
புத். ௩. | சென்னப்பட்டணம் 1901௵ மே௴ | இல. ௩.

## திருவள்ளுவநாயனார் மனைவியாராகிய *வாசுகியம்மாளின் சரித்திரம்.

வாசுகியம்மாள் நித்தியாநந்த மோட்சத்தில் சென்று சேர்ந்தபொழுது, நாயனார், மனைவியாரின் பிரிவாற்றாமையால் வருந்தித் தமது கருத்தைப் பின்வரும் செய்யுளால் வெளிப்படுத்தியருளினார்.

“அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என்றூங்குமென் கண்ணிரா” என்பதுவே அதுவாம்.

“அடிசிற்கு இனியாளே!” என்றது வாசுகியம்மாள் கணவர் கொடுத்த மணலை அன்னமாக்கிப்படைத்த கற்புடைமையைப் புகழ்ந்து கூறப்பட்டது என்பர்; அன்றியும், தனக்குத் தலைவரும் தெய்வமுமாகிய கணவரது சுகதுக்கங்களை தன்னுடைய சுகதுக்கங்களாக எண்ணும் கற்பிற் சிறந்த அற்புதகுணபூஷணாலங்காரம் அமைந்த பொற்கொடிமகளிர், தாங்கள் ஏழைகளாயிருந்தாலும் கிடைத்ததைக்கொண்டு வாய்க்கு இனிமையாயிருக்கும்படி சமைத்துக் கணவரது பசிவேளையறிந்து, அவருடைய வயிற்றினளவுதெரிந்து அன்னம்படைத்து, பக்கத்திலிருந்து இலையைப்பார்த்து வேண்டியதைத் தாமே யறிந்துகொடுத்து உபசரித்து, இனியவசனங்கூறி அவரையுண்பித்து மனமகிழ்ச்சியடையும் இயல்புள்ளவர்களாகையால் வாசுகியம்மாள் அப்படியே தம்மைப் போஷித்துவந்த அருமையை நினைந்து வருந்தினார் என்பது மாகும். “அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட, மறுசிகை நீக்கியுண்டாரும்” என்ற முன்னோர்வசனத்தாலும் மேலே காட்டிய நியாயம் பொருந்துவதையும் கண்டுகொள்ளலாம். சமயம் அறிந்து இல்லறத்திற்கு வேண்டியபொருள்களை ஆராய்ந்து சேகரித்துக்கொண்டு வீண்செலவு செய்யாமலும், கணவரது வரவையும், கால இயல்பையும் அறிந்து அவர்மனம் நோகாதபடி செலவுசெய்து போஷித்துவருகிற கற்

* இதன முன்தொடர்ச்சி, புத்தகம் I. 131-வது பக்கத்தில் காண்க.

புடைமாதரிலக்கணமும் இவ்வாக்கியத்திலமைந்த பொருளாகக்கொள்ளலாம். "இல்லறத்திற்கியைவனவிட்டுவார், அல்ல செய்தேவறிதினழித்திடார், புல்லு காதலராயுட்பொலிவுற, மல்லலோங்கணிமஞ்சளணிவரால்" என்ற பிரமாணவசனத்தாலும் அப்பொருள் அமைவது காணலாம். இதனால் வாசுகியம்மாள் கணவர் வருந்தாதபடி சமயமறிந்துவேண்டிய பொருளைச் சேகரித்துக்கொண்டு, வீண்செலவு செய்யாமல் நாயனாரைக் காப்பாற்றிவந்த அரியகுணம் வெளியிடப்பட்டது.

"அன்புடையாளே" கற்புடைமாதர் கணவரிடம் செலுத்தும் அன்பு இருவகைப்படும். தாய் தன் குழந்தையைப் பாதுகாப்பதில் தோன்றுவதுபோன்ற அன்பு ஒன்று. மோட்சத்தை விரும்புகிறவர்கள் தெய்வத்தினிடம் செலுத்துவதுபோன்ற அன்பு ஒன்று. தாய்போன்ற அன்பு கணவருக்கு அன்னபானாதிகளூட்டிச் சரீரபோஷணை செய்யும்பொழுது உண்டாவது. மற்றொன்று எப்பொழுதும் கற்பினர் இருதயத்தில் கணவர் நீங்காதிருப்பது. "கொழுநன் சொற்கடவாதுறை கொள்கையே, வழுவினல்லறம் வான்றவ மாற்றுதல், தொழுது தெய்வம்பராய்மலர்தூவுதல், பழுதில் கற்புடைப் பத்தினிக்கென்பவே" "வாள்விழிக் குலமங்கையரன்பர்பொற், றாள்விளக்கிய தண்புனல் கங்கையக், கேள்வரேகிளர் தேவர் கண்மூவரில், ஆளுமெய்ம்மையடிகளென் றெண்ணுவார்." என்ற செய்யுள்களால் கணவரையே தெய்வமாக வழிபடும் பக்தியாகிய அன்பும், முன்னேகூறிய "அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட" என்றதனால் தாய்போன்ற அன்பும் பெறப்படுவது அறியலாம். இவ்விருவகையன்பும் நிரம்பப்பெற்றுத் தன் கணவரைக்காத்த வாசுகியம்மாளின் பெருமை கூறப்பட்டது. "படிசொல் தவறாதபாவாய்" தான் தெய்வமாகக்கொண்ட கணவருடையவாக்கியம் எதுவாயிருந்தாலும் அதுவே தனக்கு உபதேசமொழியாகக்கொண்டு, அதற்கு மாறுபடாது நடந்து, அதனைப் பரிபாலிப்பதையன்றிக் கற்புடைமாதர்க்கு வேறு மந்திரோபதேசங்கள் கிடையாமையால் தம் கணவர் மொழிகடவாது நடப்பதே தங்களுக்குப் பெருந்தவமென்று கருதி அவ்வாறு நடப்பதே பதிவிரதாசிரோமணிகளின் அரிய செய்கையாம். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" "மேவுகாதலருள்ளம் விழைந்தன, ஏவுமுன்னர் குறிப்பினியற்றுவார்" "மையில் காதலர் வந்தெவையாயினும், செய்திரென்றலுஞ் செய்தனமென்பரால்" என்ற பிரமாணவசனங்களாலும் முன்னேகூறிய "கொழுநன் சொற்கடவாதுறைகொள்கையே, பழுதினல்லறம்" என்றதனாலும் காணலாம். இந்தச் சிறந்த குணத்தை ஆபரணமாகக்கொண்டிருந்த வாசுகியம்மாளுடைய பெருமை இவ்வாக்கியத்தால் இனிது விளக்கப்பட்டது. "அடிவருடி"



பகற்பொழுதில் பலவகையான வேலைகளைச்செய்தும், குடும்ப போஷணைக்காக அலைந்து திரிந்தும் வருந்திய கணவருக்குச் சரீராரோக்கியம் உண்டாவதற்கு இரவில் நல்ல நித்திரையே சிறந்த சாதனமாக இருப்பதால் அந்த நித்திரை ஆகாராதிகளைவிட மிகவும் முக்கியமானது. சுகமான நித்திரையுண்டாகச் செய்வதும் கற்புடைமாதர்க்குப் பெரியதாகிய ஒரு காரியமாகும். ஆகையால் தாயானவள் நித்திரை பிடியாமலிருக்கிற இளங்குழந்தைகளைத் தட்டித்தூங்கச் செய்வதுபோல மனைவியானவள் தன் கணவரது பாதங்களை உள்ளன்போடு தனது மலர்போன்ற மெல்லியகைகளால் தடவிக்கொடுப்பதனால் சீக்கிரத்தில் நல்ல நித்திரை உண்டாமென்கிற விருப்பத்தினால் அவருடைய பாதங்களைத் தடவிக்கொண்டிருந்து தூங்கப்பண்ணுவது கற்புடை மாதரிலக்கணத்தில் சிறந்தது ஒன்றாகும். இதுவும் தாய் அன்புபோன்ற அன்பேயாம். அன்றியும் தெய்வத்தினிடம் பக்தி செலுத்துகிறவர்கள் தாம் ஆராதிக்கிற திவ்யவிக்கிரக சொரூபத்தைச் சதாசிந்தையில் தியானித்துக் கொண்டிருந்து அத்திருவுருவத்தைத் தமது கைகளால் பரிசித்து ஆநந்தமடைவதற்குப் பூசாகாலத்தை யெதிர்நோக்கியிருந்து அக்காலம் வந்தவுடனே வெகு ஆவலாக அதனைத்தொட்டு மகிழ்வது போல்வதாகிய தெய்வபக்திபோல்வதே என்பதும் நியாயமாகும். ஏனென்றால் "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்" என்றகற்பிலக்கணம் பொருந்திய பெண்கள், தாங்கள் துயில் நீங்கி எழுந்திருந்தது முதல் கிருகசுத்தி, பாத்திரசுத்தி, சமையல்செய்தல், வைதிக கருமங்களுக்குபசரித்தல், தேவராதனைக்குச் சகாயஞ் செய்தல், கணவனைப் போஷித்தல், தன்னைப்பாதுகாத்தல், மற்றுமுள்ள குடும்ப சம்ரட்சணை, கணவரிடத்து சாஸ்திரோபதேசங்கேட்டல் முதலிய செய்கைகளால் தமது வழிபடு தெய்வமாகிய நாயகர் திருமேனியைத் தொட்டு மகிழ்தற்குப் பகற் பொழுதில் சாவகாசம் கிடைப்பது அரிது; கிடைப்பினும் கணவருடைய விருப்பத்தாலன்றி அவருடைய சரீரத்தைத் தொடுதல் கூடாதென்கிற சாஸ்திரத்தடையும் உண்டு. இரவில் நித்திரைக்குப் போகுங்காலத்தில் அந்த நிர்ப்பந்தங்கள் ஒன்றுமில்லாமையால் தன் கணவரது சரீரத்தைப் பரிசித்து ஆநந்தமடைவதற்கு அது நல்லகாலமாகையால் அக்காலத்தில் அவரது பாதங்களைத் தடவிக்கொடுப்பதில் பதிவிரதைகளுக்குப் பேரானந்தம் விளையும். ஆதலால் அது தெய்வத்தினிடம் செலுத்தும் அன்பிலடங்குவதும் காணலாம். அக்குணம் சிறந்து விளங்கிய அம்மையாரின் பெருந்தன்மை இதனால் பிரகாசிப்பிக்கப்பட்டது. இந்த அரிய குணத்தை வியந்தே நாயனாரும் "என்றூங்கு மென்கண்ணிரா" என்றுகூறிப் புலம்பினாரென்று கொள்ளலாம். நாயனார் இர

வில் நன்றாய்த்தூங்குவதற்கும் "வாசுகியம்மாள்" செய்கையே காரணமாயிருந்ததென்பது இனிது விளங்குதல் காணலாம்.

"பின்றூங்கி முன்னெழுந்த பேதையே" என்றது "கொழுநனுண்டபின்றுனுகர்கொள்கையும், விழிதுயின்ற பின்றுஞ்சலுமென்றுயில், எழுதல் முன்னமெழுதலுமேயன்றே, பழுதில் கற்புடைப்பாவையர் செய்கையே" அன்பர் துஞ்சிடிற்றுஞ்சுதலாங்கவர், துன்பமெய்திடிற்றுழுமத் துன்புறல், இன்பமுற்றிடிலின் புற்றிருத்தலே, மன்பெருந்தவங் கற்புடைமாதர்க்கே". என்ற பிரமாண வாசகங்களுக்கு இலக்கியமாக எழுந்தது. இச்செய்கை மிகச் சிறந்தது, இச்சமையமே கற்புடைமாதர்க்குத் தெய்வ பக்திக்கிலக்கணமாகிய ஆனந்தம் நிரம்பப்பெறுவது. ஏனென்றால் முன்னே குறித்த கிரகசுத்தி முதலாகிய பலவேலைகளினால் தடைபட்டுத் தன் தெய்வமாகிய கணவரை யாராதிக்கும் ஆனந்தத்திற்குப் பல இடையூறுகள் உண்டாகும். இப்பொழுதிலோ சகல குடும்பவேலைகளும் முற்றுப் பெற்றுக்கரசரணாதி அவயவங்களும், மனமாதி அறிகருவிகளும், ஞானேந்திரியங்களும் ஒழிவு பெற்றிருப்பதனால் அவ்வெல்லாவற்றாலும் தன் வழிபடு கடவுளைப் பக்தி செய்து பஞ்சேந்திரியங்களும் ஏககாலத்திலானந்தம் அடையக்கூடிய காலமாக விருக்கிறது. எப்படியென்றால் தன் கரசரணாதி அவயவங்களெல்லாம் அவருடைய சரீரத்தைப் பரிசித்துச் செய்கிறதாகிய தேவாராதனையில் பொருந்தி ஆனந்தமடைகின்றன. இது சரீரானந்தம். காதுகள் அவர் பேசுகிற இன்பமான மதுரவசனங்களைக்கேட்டு ஆனந்தமடைகின்றன. இது சுரோத்திரானந்தம் கண்கள் அவருடைய உருவத்தைத் தடையறப்பார்த்து மகிழ்கின்றன. இது நேத்திரானந்தம். மூக்கானது அவருடைய சரீரத்திலிருந்துண்டாகும் நறுமணத்தைக்கவர்ந்து திருப்தியடைகின்றது. (இந்த மணம் இக்கலிகாலத்தில் சிலமாதர்க்கு அருவருப்பைத்தருவதாக இருந்தாலும் கற்புடைமை தவறாத பொற்புடைய மாதர்க்கு இன்பமே தருவதாகும்) இது நாசிகானந்தம். அவரிடத்தில் உண்மைவசனங்களை மதுரமாகப் பேசுவது வாக்கானந்தம். இவ்வகையாகச்சகல கருவிகரணங்களும் ஒன்று கூடி ஆராதனை செய்து ஆனந்தமுறுங்காலமாதலால் இப்பணிவிடை மற்றவை யெல்லாவற்றையும் விட மிகச்சிறந்தது என்று சொல்லப்பட்டது. கணவர் துயில்வதன் முன் தான் துயின்றால் இப்படி அருமையான பணிவிடையாகிய தேவாராதனைப்பயனையிழந்துவிடநேரிடுமென்கிற காரணத்தாலும், கணவர் விழித்திருக்கையில் தான் தூங்கினால் ஒருக்கால் அவருக்கு நல்ல நித்திரையில்லாவிட்டால் அவருடைய சரீராரோக்கியம் குறைவுபடுமே யென்ற



அச்சத்தாலும் கற்புறுசிந்தை மாதர்கணவர் துயிலுமுன் தூங்காதிருப்பது சிறந்த நியாயமாயிற்று. பகற் காலத்தை விட இராக்காலத்தில் செய்யப்படும் தேவாராதனையே ஆடவர்க்கும் சிறந்ததென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பகற் பொழுதிலும் சாயங்காலத்தும், முன்னிரவிலும் ஆலயஞ்சென்று தெய்வதரிசனம் செய்வதைவிட அர்த்தஜாமத்தில் தரிசிப்பது அநந்தமான பலன் தரும் என்று சிவாலயதரிசன விதி கூறுகின்றது ஆதலால், இந்தப்பணிவிடை மாதர்ச்கு மிகச் சிறப்பைத்தருவது என்று கருதவேண்டும். இந்தச்செய்கை வாசுகியம்மாள் இடம் சிறந்திருந்ததென்பதைப் "பின்றூங்கி" என்ற தொடர்மொழி விளக்கியது. இவ்வாறு பணிவிடைசெய்து கணவர் தூங்கினபின் அவரையே தியானித்துக்கொண்டு தூங்குகின்ற தெய்வத்தன்மையுள்ள பெண்களுக்கு மறுநாள் அவர் பணிவிடைகளைத் தடைபடாமல் செய்யவேண்டியது அவசியமாகையால் அவர் நித்திரை தெளிந்து எழுந்திருப்பதற்கு முன்னமே தான் துயில் நீங்கி எழுந்திருப்பது முக்கிய இலக்கணமாயிற்று. இந்த அருமையான செய்கையையே "தெய்வந்தொழாஅள்கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்ற தெய்வவாக்கு வியந்துகூறி, அவள் பெய் என்று சொல்லுதன்முன் மழை பெய்யும் என்று பயனும் உடன் கூறியது ; மழை பெய்யுமென அப்பூதத்தின் மேல்வைத்துக் கூறியிருப்பினும் "ஒருமொழியொழிதன்னினங் கொளற்குரித்தே" என்றதனால் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்கிற பஞ்ச பூதங்களும் அவள் ஏவிய ஏவல்செய்துகொண்டிருக்கும் என்று கொள்க. பஞ்ச பூத அதிஷ்டான தேவதைகளாகிய பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய தேவர்களும், மற்றையதேவரும் அவள் மனக்குறிப்பின் வழிநிற்பார்கள் என்றும் கொள்ளலாம்.

இதனால் இதுவரைக்கும் கூறிவந்த சகல கற்பிலக்கணங்களும் நிறையப்பெற்று மகிமைவாய்ந்த வாசுகியம்மாளுடைய கற்புடைமையை அந்த அம்மாளுடைய கண[illegible] பெண்களுக் [illegible] உய்யும்பொருகைக்கொண்[illegible]சானந்தமாகிற பெரும்பயனைப்பெற்று உய்யும்பொருட்டு இசசிறிய செய்யுளில் அடக்கிக்கூறி அந்த அம்மாளுக்காகப் புலம்பிஞரென்று கொள்ளலாம்.

இந்தவிதமாகக் கூறப்பட்ட கற்பிலக்கணங்களெல்லாம் நிறைந்திருக்கும் மங்கையர் மகிமையை அளவிட்டுச்சொல்ல ஒருவராலும் முடியாது. ஆயினும் கொஞ்சம் எழுதுகிறோம். "நண்ணுகற்புடை நங்கையர் சிறடி, மண்ணினெவ்விடந்தோயினுமற்றஃ, தெண்ணுகின்ற தவங்களெவற்றினும்,

"புண்ணியத்தலமென்று புகல்வரால்" இதன் பொருள் நிலைபெற்ற கற்பினையுடைய மாதரது சிறிய திருவடிகள் எந்தவகையான பூமியில் பட்டாலும் அந்தப்பூமியானது, புண்ணிய பூமியாக மதிக்கப்படுகிற எல்லா க்ஷேத்திரங்களையும்விட அதிகமாகச் சிறந்த புண்ணிய க்ஷேத்திரமென்று பெரியோர் சொல்வார்கள் என்பதாம். "கற்றவர்க்கு நலனிறைந்த கன்னியர்க்கும், சாதியொன்று நன்மை தீமையில்லையால்" என்றதனால் கற்புடைமாதர் ஜாதிபேதம் எண்ணாமல் எல்லாராலும் வணங்கப்படவேண்டும் என்று ஏற்பட்டது. மாதர் கால்பட்ட இடத்தையே மகாபாதகங்களை நீக்குகிற புண்ணிய க்ஷேத்திரமாகச் செய்யக்கூடிய "கற்புடைமை" எவ்வளவு சிறப்பு பொருந்தியது? அதனையுடைய பெண்களின் பெருமை அளவிலடங்குமா? ஜாதிபேதம் கூட அவர்களுக்கு இல்லையென்றால் அவர்களே தெய்வம் என்பதில் சந்தேகமுண்டோ? மானிடப் பெண்களை தெய்வத்தன்மையுடையவர்களாக்கி எல்லாராலும் வணங்கச் செய்கிறதும், முடிவில்லாத மோட்சானந்தம் தருவதும், இகத்தில் உலகமெங்கும் புகழச்செய்வதுமாகிய "கற்புடைமை" என்கிற அரிய பெரிய செல்வத்தை, அநந்தகாலஞ்செய்த தமது தபோமகிமையால் கண்டு எடுத்துரைத்த நமது ஆரியப்பெரியாருடைய பெருங்கருணைக்கு வியந்து, அவர்களை நமது குல தெய்வமென்று கொண்டாடாமல் இகழ்வது எவ்வளவு கொடுமை பாருங்கள்! இந்தப் பெரிய செல்வத்தை யாதொரு பிரயாசமும், முயற்சியுமில்லாமல் எளிதில் அடையக்கூடியதாயிருக்கக் கையிலிருக்கும் ஆகாய கங்கா ஜலத்தையிகழ்ந்து கொட்டிவிட்டு உப்பந்தண்ணீருக்காக ஓடித்திரிவதுபோல வேறுவகையான முயற்சியிலிருப்பது எவ்வளவு பேதைமையாமென்று கவனித்துப்பாருங்கள். ஆ! எனதன்புக்குரிய ஆரியகுலதிலகமாகவிளங்கும் சகோதரிகளே! அருமையான பலனைக் கொடுப்பதும் அடைவதற்கு எளியதுமான "கற்புடைமை"யின் மகிமைப் பிரபாவங்களை யெல்லாம் நமது பெரியோர்களிடம் கேட்டுதெளிந்து அதனைக் கைப்பற்றிக்கொ[illegible]டந்தால் உங்களுக்கொரு [illegible]றவுவாராதாகையால் நீங்களெல்லாரும் அரியகுலதனமாகிய பெரிய "கற்புடைமையை" உடையவர்களாய்ச் சொர்க்கமத்திய பாதாளமென்கிறமூன்றுலோகங்களிலும்உங்களது கீர்த்தி பிரகாசிக்கமகிமையோடு நீடூழிவாழ்ந்து களித்திருக்க உள்ளன்போடு முயற்சிசெய்து வாழ்ந்திருப்பீர்களாக.

கற்பெனப்படுதல் சொற்றிறம்பாமை காண்கெனு
மௌவை தன்வாக்கை



நற்கலனெனவே பூண்டுதென் பதிக்கு நாடொறும்
பணிகள் நன்கியற்றிச்
சொற்பொருடெரியா வொருபணிப்பொருளைச்
சொல்லென முகதெரி சனத்தால்
கற்பினை நிறுத்திச் சேட்டரனடிக்கீழ்க்
கலந்த வென்னம்மைதாள் போற்றி.

(முற்றிற்று) அம்மாக்கண்ணு அம்மாள்.

---

## மாயாபுரி விநோதக் கதை.

33-வது பக்கத்தொடர்ச்சி.

மறுநாள் பகலில் தேவாராதனை முடித்துப்போஜனம் உண்டானபின் ஜகதீசன் தன்மனைவியோடு சிறிதுநேரம் விளையாட்டாகப்பேசிக்கொண்டிருந்து அவளிடம்செலவுபெற்றுக்கொண்டு புறப்பட்டு கருநாடகதேசம்போனான். அதன் தலைமைநகரமாகிய மார்த்தாண்டபுரம் போய்ச் சேர்ந்து அங்குள்ள வளப்பங்களைக்கண்டு களித்துப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுக் கீழ்திசைநோக்கி ஒரு கூப்பிடுதூரம்போய் அங்கே காணப்பட்ட ஒரு உப்பரிகையின் கிட்டப்போய், இது என்ன அற்புதமாயிருக்கிறது? நாலுபுறத்திலும் வாயில் இல்லை. இதுதான் அந்தப்பெண் இருக்கும் சிறைச்சாலையாக விருக்குமோ என்னவோ? தெரியவில்லை. இதன் உண்மையை அறிந்துகொள்வோமென்று உருமறைந்து நாலுபுறமுஞ் சுற்றிப்பார்த்துத் தென்புறச்சுவரில் ஒரு சாலகப்புரை இருக்கக்கண்டு அதன் அருகிற்போய் நின்றான். அப்பொழுது உள்ளுக்குள்ளிருந்து மிருதுவான ஒரு தொனி வெளிப்பட்டது. அதென்னவெனில் ஆ! தெய்வமே! நான் செய்த தப்பிதந்தான் என்ன? எதற்காக எனக்கு இந்தத் தெண்டனைவிதித்தாய்? சூரியன் ஒளியையாவது, என் தோழிமார் முகத்தையாவது, மற்ற மனிதர் முகத்தையாவது பார்த்துக்களியாமல் ஒன்றரைவருஷங் கழிந்துபோய்விட்டது. நானிப்பொழுது இருக்கும் நிலைமைக்கும் தாயின் கர்ப்பாசயவாசத்துக்கும் யாதொருபேதமுமில்லை. ஆனால் கர்ப்பவாசத்திலிருந்தபொழுது இந்த துக்கமும் துன்பமுமிருந்திரா; ஏனென்றால் அப்பொழுது அறிவதற்குரிய கருவிகரணங்கள் தத்தம்தொழில்செய்யும் சக்தி குறைந்திருந்தபடியாலேதான். இந்தச் சிறையோ அதனிலும் பதினாயிரம்பங்கு கொடியது. பொறிபுலனறிகருவிகள் நன்கு அமையப்பெற்ற இக்காலத்தில் எனக்கு இந்தச்சிறை எவ்வளவு துயரந்தரும் என்பது என் தெய்வமே யுமது திருவுளமுணராதிராது. நாஸ்திக சகவாசம் கூடாதென்று வெறுத்தொதுக்கி, உமது திருவருளைச் சிந்தித்துக்கொண்டிருப்பதற்காகவோ என்னை யிப்படிப்பட்ட சிறையிலிட்டு வருத்துகின்றீர்? ஒவ்வொரு நிமிஷமும் பலயுகங்.

களாகத் தோற்றுகின்றன. இந்த ஒன்றரை வருஷமும் அன்னபானாதிகளையும்வெறுத்து உமதுதிருவடியைச் சிந்தித்துக்கொண்டு கொடுந்தவஞ்செய்தும் பயனில்லாமற்போயிற்று. இனி மீட்சியுண்டாமென்னும் நம்பிக்கையில்லை. உயிர்துறப்போமென்றாலும் முடியவில்லை. தெய்வமில்லையென்று கருதிக்கவலையற்றிருக்கவும் மனம் ஒருப்படவில்லை. யாதுசெய்வது? அன்னியர்செய்யுந் துன்பத்தை விலக்கிக்காப்பவர் தந்தை தாயாகும். அவரால் நேரிடும் துன்பத்தை அரசனே கவனிக்கவேண்டும். அரசனால் நேரிடும் துன்பத்தைத் தெய்வந்தான் விலக்கிக்காக்கவேண்டும். தெய்வமே நடுநிலை நீக்கிக்கொடுமை செய்தால் கேட்பவரார்? சர்வேசுவரா? பக்தரட்சகா! அகிலேசா! இனித் துன்பந்தாங்க ஒண்ணாது. எப்படியுமென்னைக் காத்தருளவேண்டும். இல்லாவிட்டால் பட்டினிகிடந்து பிராணனைவிடுவேன். இன்றுமுதல் ஆகாரத்தைக் கண்ணாற்பார்ப்பதில்லை; என் ஜீவ சரீர ஆத்மாக்களை உன்வசம் ஒப்புவித்துவிட்டேன்; இனிகாத்தாலும் சரி; கைவிட்டாலும் சரி; இந்தப் படுக்கையைவிட்டெழுந்திருப்பதில்லை என்று கூறித்தரையிற் சாய்ந்துவிட்டாள். இவைகளையெல்லாம் ஜகதீசன் கேட்டு மனம்வருந்தி இது என்ன ஆச்சரியம்! பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இப்படியும் வருத்துவார்கள்? இதுவும் நீதியாகுமா? தன் குழந்தையின் வருத்தம்பாராத அரசன் பிரஜைகளுக்கு நீதி செய்வதெப்படி? அதைப்பற்றிப் பிறகு யோசிப்போம். தெய்வபக்தியிற் சிறந்த பெண்மணியைத் தேற்றவேண்டியது தானிப்பொழுது அவசியமென்று கருதிச்சூட்சும சொரூபங்கொண்டு உள்ளே பிரவேசித்து, அப்பெண்ணரசியின் கண்கள் களிக்கும்படி மன்மதனைப்போல நின்று, அரியதவஞ் செய்து பெரிய நிலைமைபெற்ற கண்மணிப்பாவாய்! இக்கணத்தோடு உன்சிந்தைத்துயரம் ஒழிந்தது; அஞ்சாமலெழுந்திரு என்றான். என்றுங்கேட்டறியாத அமிர்த வசனத்தைக்கேட்ட அந்த மயிலியற்பாவை திடுக்கிட்டு எழுந்திருந்து எதிரேநிற்கும் வடிவழகனைக்கண்களாரக்கண்டு பரவசமடைந்து, தேவர், தானவர், மானிடரில் யாவரோ இவரென்று ஐயுற்று சற்றுநிதானித்து நான் கனவிலேகண்ட திருவுருவமேயிவ்வடிவம்; எப்படியாயினுமாகுக. வந்தவருக்கு மரியாதை செய்யவேண்டுமென்று ஒருபீடமளித்து உட்காரச்செய்து, ஒருபுறமாக ஒதுங்கி நாணிநின்றுகொண்டு, ஈயும், கொசுகும், எறும்பும், காற்றும்புகாது கடுங்காவல்கொண்ட இவ்வறைக்குட்கட்டுக்கடந்து தடையறப்புகுந்த தேவரீர் யாவரோ? யாதுவிரும்பி யிவ்விடம்வந்தீரோ? எனக்குச் சொல்லியருளவேண்டுமென்றாள். பெண்ணே! நான் மாயாபுரி அரசன்; என்பேர் ஜகதீசன். தேவன்கருணைபால் உன்னைச் சிறைமீட்டுக்



கொண்டுபோகவந்தேன். தெய்வத்தைநம்பித் தவம்புரிவோர்க்கொருகுறையும் நேருகிறதில்லை. நான் ஒரு காரணார்த்தமாக இவ்வழிவருகையிலிந்தத் தாழ்வாரத்தில் சற்று உட்கார்ந்து இளைப்பாறுகையில் நீ பேசிக்கொண்டிருந்த வசனங்களைக்கேட்டு மனம்வருந்தி உனது மனத்துயரை ஒழிக்கவேண்டுமென்று கருதி உள்ளே புகுந்தேன் மற்றொன்றுமில்லை. நீயார்? உன் பெயரென்ன? நீ இச்சிறையில் இருக்கவேண்டியகாரணமென்ன? சவிஸ்தாரமாகச்சொல்லவேண்டும் என்றான். அந்தப்பெண்ணரசி யுள்ளமகிழ்ந்து, சுவாமீ! நான் இந்த நகரத்தரசன் புத்திரி; என்பெயர் சௌந்தரவல்லி. நாஸ்திகராகிய சக்கிரவர்த்தி குமாரனை மணம்புரிய மாட்டேனென்றதற்காக இக்கொடுந் தண்டனைக்குள்ளானேன். அதுவும் என் தாய்தந்தையர் குற்றமன்று. சக்கிரவர்த்தி கொடியவனாகையால் அவனுக்குப் பயந்து இப்படிச்செய்தார்கள். இந்த நிலைமைக்குவந்து ஒன்றரை வருஷமாயிற்று. உமது திருவுருவத்தை அடிக்கடி கனவில் காண்பதுண்டு. அதனை நனவிலுங்கண்டு களிக்கவேண்டியே கொடுந்தவமிழைத்தேன். என் தவம் பலித்தது; என் கோரிக்கை நிறைவேறிற்று; தெய்வ உண்மை சித்தித்தது; இனிக்கவலைவிண்டேன்; துக்கக்கடலைக் கரைகண்டேன்; என்னுடலையும் உயிரையும் உமக்கே காணிக்கை கொடுத்துவிட்டேன். எனது இருதய தாமரையில் நீங்காதிருக்கும்வள்ளலே என்று திருவடியில்வணங்கின சௌந்தரவல்லியைத் தூக்கியெடுத்துக் கண்ணீர்துடைத்துக் கவலையைமாற்றிச் சித்தசுவாமியை மனதிற்சிந்திக்க அவர் தமதுகூட்டத்தோடும் அங்கேவந்து, அவ்விருவருக்கும் திருமணம் புரிவித்து ஆசீர்வதித்துத் தமதிருப்பிடம் சேர்ந்தார். பின்பு இருவரும் உடலுமுயிரும்போல நேசித்துக்கலந்து விளையாடிக்கொண்டிருக்கையில் ஜகதீசன் பெண்ணே! உனக்கு உண்மை சொல்லுகிறேன் கேள். எனக்கு மங்களாம்பாள் என்று ஒரு மனைவியிருக்கிறாள். அவள் சிறுபெண், அவள் தனித்திருக்க அஞ்சுவாள். இப்பொழுது எழுந்தருளிய சித்தசுவாமியின் ஆக்ஞையினால் உன்னை மணம்புரிந்து சிறைமீட்டுக் கொண்டுபோகவே வந்தேன். வந்த காரியநிறைவேறியது. இன்னும் கொஞ்சகாலம் நீ இங்கேதானிருக்கவேண்டியது. சமையம்பார்த்து உன்னை யழைத்துக்கொண்டு போகிறேன். நான் பக்கத்திலில்லையென்று வருந்தாதே. நீ நினைக்குமுன் வந்துநிற்பேன். உன் பக்கத்திலிருப்பதாகவே நினைத்துக்கொள். மங்களாம்பாளிடம் போய்வருகிறேன். இங்குமங்குமாயிருக்கிறேனென்றுகூறிச் செலவுகேட்க அவள் உள்ளமகிழ்ந்து சுவாமீ! நான்வேறு அவள் வேறென்று நான் நினைக்கவில்லை. உமது சித்தப்பிரகாரம் நடந்துகொள்ளத்தடையேயில்லை. ஆனால் அடிக்கடியெனக்

குத் தரிசனந்தந்தருள வேண்டுகிறேன். எனக்கு வேறுகவலையில்லை. சிறையிலிருப்பதாகவே நான் நினைக்கவேயில்லை என்றுகூற, ஜகதீசன் அவளைத்தழுவி முத்தமிட்டுப் பெண்ணே! அஞ்சாதே! நானுன்னை ஒருபோதும் மறப்பதில்லை. நான் வந்த சமாசாரம் மங்களாம்பாளுக்குத் தெரியும்; அவள் உன்னைக்குறித்து மெத்த வருந்தியிருக்கிறாள். உன் சமாசாரத்தை அவளுக்குச் சொன்னால் மிகுந்த ஆனந்தப்படுவாள். ஆகையால் அவளுக்கு இங்கே நடந்த விருத்தாந்தங்கூறிக் களிப்பிக்கவேண்டும் என, சௌந்தரவல்லி இந்த முத்துமாலையை அவள் கழுத்திலிட்டு என் வந்தனமும் சொல்லுங்களென்று விடைகொடுத்து மகிழ்ந்திருந்தாள். ஜகதீசன் மாயாபுரிபோய்த் தன்னின்ப நாயகியைக்கண்டு முத்துமாலையை அவள் கழுத்திலிட்டு நடந்த சமாசாரமுங்கூறினான். அவள் கேட்டு பரமானந்தம் அடைந்திருந்தாள். இப்படியாக ஆறுமாதங்கள் சென்றன.

பின்பு ஒரு நாள் ஜகதீசன் மார்த்தாண்டபுரம்போய்ச் சௌந்தரவல்லியோடு பேசிக்கொண்டிருக்கையில் பெண்ணே! நீ மாயாபுரிக்கு வரவேண்டியகாலம் சமீபித்துவிட்டது. இப்பொழுது ஆறுமாத கர்ப்பமாயிருக்கிறாய். சீக்கிரம் ஊருக்கு அழைத்துக்கொண்டு போகிறேன் என்று கூற, அவள் சுவாமி! இப்பொழுதே வந்துவிடுகிறேன் என, பெண்ணே! அவசரப்படாதே. எனக்குச் சமையந்தெரியுமென்றுகூறி விடைபெற்றுக்கொண்டு இருப்பிடம் போய்ச்சேர்ந்தான். இப்படியிருக்கையில் ஒரு நாள் சௌந்தரவல்லிக்குப் போஜனங் கொண்டுவருகிற பணிவிடைப் பெண்களிருவரில் ஒருத்தி மற்றவளைநோக்கிச் சுந்தரம்மா இந்த அதிசயங்கேட்டாயா? என, அவள் இரத்தினம்மா! என்ன ஆச்சரியம் என? அவள் நீயும் என்கூடத் தினந்தோறும்வந்து கொண்டிருக்கிறாயே நமது இராஜகுமாரத்தியென்ன நிலைமையிலிருக்கிறாளென்று கவனித்தாயா? என, அவள் ஆம் சுந்தரம்மா! நான் கவனித்தேன் அதற்கு நான் செய்யவேண்டுவதென்ன என்றாள். நீ கவனித்து அறிந்தது என்ன? உனக்குத் தெரிந்திருந்தால் இப்படிச் சொல்லமாட்டாய் என்றாள். இரத்தினம்மா இல்லை இல்லை; எல்லாம் எனக்குத் தெரியும்; நீ கவனிக்கவில்லையென்று நினைத்து நான் சும்மா இருந்தேன் என்றாள். அப்படியானால் அது என்ன சொல்லென்று சுந்தரம்மாள் கேட்க, நமது இராஜகுமாரத்தி கர்ப்பவதியாயிருக்கிறாள் அது தானேயென்று கூற, அவள் ஆம்! ஆம்; நான் இரண்டுமாதமாக அறிவேன். இனி நாம் சும்மாவிருந்தால் இராஜ தண்டனைக்குள்ளாவோம்; ஆகையால் இன்று அரசியிடம் சொல்ல உத்தேசித்திருக்கிறேன். உன் கருத்தென்னவென, இரத்தினம்மாள் நியாயந்தான் தெரிவிப்பதே உத்தமம்.



இல்லாவிட்டால் நமக்கு ஆபத்துவருமென்று பேசிக்கொண்டேபோய் இராஜகுமாரத்திக்குப் போஜனங்கொடுத்து அவளிடம் சற்று[illegible] கொண்டிருந்து அவள் கவலையற்றிருப்பதையும், ஒருவரையும் மதியாத பெருந்தன்மையான குணத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டுச் சில குறிகளால் அவள் கர்ப்பவதிதானென்று நிச்சயம் பண்ணிக்கொண்டு மீண்டு அரசியிடம்போய்ப் பணிந்து அம்மா! இன்று அதிசயங்கண்டு கூறவந்தோம்; உத்தரவானால் சொல்லுகிறோமென்றார்கள். அரசி அதென்ன சொல்லுங்கள் என, அவர்கள் அம்மா! இவ்வளவு பலமான கட்டுக்காவலிலிருக்கும்போதே தமது குமாரத்தியெப்படியோ கர்ப்பவதியாயிருக்கிறாள். சிலநாளாய்ச் சந்தேகந்தோன்றி யின்று நிச்சயமாய் அறிந்துவந்து கூறினோம். உமது சித்தம் எப்படியோ? கோபிக்கவேண்டாம். எங்களுக்குத் தோன்றினதைச் சொல்லிவிட்டோம். அப்புறம் உமது சித்தம். எங்கள்பேரில் பழியில்லையென்றார்கள். அரசி கேட்டுத் திடுக்கிட்டு, அதென்ன? அசம்பாவிதமான சங்கதி சொல்லுகிறீர்கள். காற்றுக்கூட நுழையாத கட்டிடத்துக்குள் யார் புகுந்திருப்பார்கள்? நான் நம்பவில்லையென, அவர்கள் நாங்களும் சந்தேகப்பட்டே யித்தனைநாள் சும்மாவிருந்தோம். எங்களுக்கும் இது மெத்த புதுமையாகவே யிருக்கிறது. இன்று சந்தேகமறத்தெளிந்து வந்துகூறினோம் என்று சொல்லிப் போய்விட்டார்கள். அரசி இதே கவலையாயிருந்து நம்பணிப்பெண்கள் நம்மிடம் அபவாதம் கற்பிப்பார்களோ? மாட்டார்கள். இதைத் தீரவிசாரிக்கவேண்டுமென்றிருக்கையில், அரசன் அந்தப்புரத்துக்குவந்து, அரசியைப்பார்த்துப் பெண்ணே! ஏது மனங்கலங்கியிருக்கிறாய்? சொல்லென, அவள் பணிப்பெண்கள் சொன்னதைக்கூறி வருத்தப்பட்டாள். அரசன் பெண்ணே! நான் நம்பவில்லை. அந்த அறைக்குள் எவன் புகுவான்? பணிப்பெண்கள் முட்டாள்தனமாகக் கூறியிருப்பார்கள். அதைப்பற்றி நீ வருந்துவது நியாயமல்ல. ஆயினும் விசாரித்தறிவோம் என்றுகூறி, அரண்மனை மருத்துவப்பெண்களை யழைத்து, இச்சங்கதிகூறி இரகசியம்வெளிப்படாமல் போய் உண்மை அறிந்துவாருங்கள் என்று கட்டளையிட்டான். அவர்கள் அப்படியேபோய் இராஜகுமாரத்தியோடு சிறிதுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்து சங்கதி நிச்சயமென்று தெரிந்து அரசனிடம்போய்ப் பணிப்பெண்கள் சொன்னது வாஸ்தவந்தான்; பொய்யல்ல என்று சொல்லிப் போனார்கள். இதுகேட்ட அரசன் மஹாகோபமும் வருத்தமு மடைந்து அரசியைப்பார்த்துக் கேட்டாயா? பெண்ணே! இனி நாம் செய்வதென்ன? நமக்குத் தீராத அபவாதம்வந்துவிட்டது. சந்திரசூரியருள்ளமட்

டும் இந்த அப்வாதம் நம்வம்சத்தை வழிவழியாக அடிமைகொண்டிருக்கும். ஆகையால் நீ என்ன சொல்கிறாயென, அவள் சுவாமீ! நாம் நேரில் போய் ஒருதரம் பார்த்துச் செய்யவேண்டுமென்று சொல்ல, மறுநாட்காலையில் அரசனும், அரசியும் தம் புத்திரியைப்பார்க்கப் போவதுபோலப் போய்ப், புத்திரியை யழைத்துப் பார்த்து நிச்சயந்தெரிந்து கொண்டு குழந்தாய்? என்னகாரியம் பண்ணினாய். நடந்ததை ஒளியாமற் சொல்; நீ கர்ப்பவதியான தெப்படி? என, அவள் அப்பா! நான் ஒன்றும் அறியேன் தனிச்சிறையிலிருந்து தவிக்குமெனக்கு இந்தக்கொடுமையும் வேண்டுமோ ஒன்றுமில்லை யென்றாள். அரசன் மிகக் கோபங்கொண்டு ஒன்றும் பேசாமல் மனைவியோடு எழுந்திருந்துபோய் அரண்மனைசேர்ந்து, தன் மந்திரியை யழைத்து நடந்த சமாசாரத்தைத் தெரிவித்து இதற்கென்ன செய்யலாமென, வல்லவனாகிய மந்திரி சுவாமீ! அப்படியிருந்தால் அது தெய்வச்செயல்; அதற்காகத் தேவரீர் கோபங்கொள்ளாதிருக்கப் பிரார்த்திக்கிறேன். குழந்தையைச் சிறைவிடுத்து வீட்டுக்கு அழைத்துவருவதே தகுதியென, அரசன் சினந்து நீ எனக்காக அப்படிச் சொல்லுகிறாய்; அது முறைமையன்று. கேட்டோர் நகைப்பார்கள் அல்லவா? இதெல்லாந் தெய்வச்செயலென்று கூறலாமா? ஏதோபிசகு நடந்திருக்கிறது. அது மறைபடாது. ஆகையால் என் புத்திரியைக் கொலை செய்வதே இதற்குப் பிராயச்சித்தமாம். நான் அப்படியே செய்ய உத்தேசிக்கிறேன். அந்தக் கட்டளையை நீயே நேரிலிருந்து நிறைவேற்றிவரவேண்டும். இல்லாவிட்டால் உலகத்தில் அபக்கியாதி நிலைபெறுவதுந்தவிரச் சக்கிரவர்த்தி யறிந்தால், நாம் நமது பெண்ணை யவனுக்குக் கொடுக்கச் சம்மதியாமல் வேறொருவனுக்குக்கொடுத்து விட்டதாகநினைத்து படை யெடுத்து வந்து, நமது இராஜ்யத்தை நிர்மூலஞ்செய்து விடுவான். பல ஆபத்துக்கள் வரும். ஆகையால் என் கட்டளையை மறக்காமல் நாளையதினம் நீயேபோய் அந்தத் துஷ்டையைக் கொலை செய்துவாவென, மந்திரி மீண்டும் வணங்கிச் சுவாமி! என் வார்த்தைக்குச் செவிகொடுக்கவேண்டுகிறேன். கொலைசெய்வது உசிதமல்ல. பெண்கொலை மஹாபாபம். இது கொலை செய்யத்தக்க குற்றமுமன்று. இப்படிப்பட்ட குற்றஞ்செய்த பெண்ணைக்கானகத்துக் கோட்டிவிடுவதே நீதி முறையாம். பூர்வமன்னரெல்லாம் அப்படியே செய்துவந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. சாஸ்திரங்களும் அப்படியே யிருக்கின்றன. ஆகையால் ஒரு பெரிய பேழையிலிட்டுக் காட்டுக்குள் கொண்டுபோய் விட்டுவிட்டால் உண்மையில் பாவியாயிருந்தால் கரடி, புலிகட்கு இரையாய்ப்போகட்டும். இல்லாவிட்டால்



எங்கேனும் ஜீவிக்கட்டும் இதுவே நியாயமென்றுகூற, அரசன் அப்படியேசெய் தாமதியாதே. தச்சர்களைக் கூப்பிட்டுத் தகுந்த பெட்டிசெய்வித்து நாளை யிரவுவிடியுமுன் எங்கேனும் கொண்டுபோய் விட்டுவா? என்னை மீறிநடவாதே யென்று கண்டிப்பான உத்தரவுகொடுத்துவிட்டு அந்தப்புரம் போய்விட்டான். மந்திரி தச்சர்களைக் கூப்பிட்டுப் பெட்டிசெய்ய உத்தரவு செய்துவிட்டுத்தன் வீடுபோய் மனைவியோடு நடந்ததைச்சொல்லி விசாரப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது அவ்வூர்ச் சேனாதிபதிக்கு வாழ்க்கைப்பட்டிருந்த மந்திரி புத்திரி யிதைக்கேட்டுத் திடுக்கிட்டு மனம் பதைத்து வருந்தினாள். ஏனென்றால் அவள் இராஜபுத்திரிக்கு உயிர்த்தோழி. அவள் உடனே அவ்விடம்விட்டெழுந்திருந்து தன் வீடுபோய்ச் சேர்ந்து, தன் நாயகனைப்பணிந்து பிராணநாதா! இராஜபுத்திரிக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்து நேர்ந்தது. அவள் என்னுயிர்த்தோழியென்பது தேவரீர் அறிந்த விஷயம் அல்லவா? ஆகையால் அவளைப்பார்க்க விரும்புகிறேன். அவளுக்கு இந்தச் சமாசாரந் தெரிவித்தால் அவள் ஒருக்கால் தப்பித்துக்கொள்ளவும்கூடும். ஏனெனில் இது தெய்வச்செயலாக இருப்பதால் அந்தப் புருஷனும் தெய்வத்தன்மையுடையவனாகவே யிருப்பான். அல்லவாவென்று கூறியிரந்துகேட்க, அவன் பெண்ணே! அரசன் அறிந்தால் நமக்கும் ஆபத்துவரும் ஆகையால் இரவில் ஊரடங்கினபிறகுநானுங் கூட வருகிறேன். இருவரும்போய் வருவோமென்றுகூற, அவள் இரவுக்கு எதிர்பார்த்திருந்து, அஸ்தமித்தபின் ஊரடங்கி நிச்சப்தமாயிருக்கும்போது தன் நாயகனோடு புறப்பட்டு ஒருவரும் அறியாமல் இராஜபுத்திரியிடம்வந்து, அவளைக் கூப்பிட்டுக் கலந்துபேசிக் கொண்டிருக்கையில், அம்மா சௌந்தரவல்லி நீ கர்ப்பவதியானாய், உன் தகப்பன் கோபித்துநாளை இரவுக்குள் உன்னைக் காட்டில் கொண்டுபோய்விடும்படி தீர்மானம் செய்திருக்கிறான். உன்னை வைத்துப் பூட்டிக்கொண்டுபோவதற்காக ஒரு பெட்டிதயாராகிறது. இந்தக் கட்டளையை என் தகப்பனே நிறைவேற்றவேண்டுமாம். இது கேட்டதுமுதல் என் மனம் பதைக்கின்றது ஆவி சோர்கின்றது. ஐயோ என்ன செய்வேன்? நடந்த காரியமென்ன? என்று கேட்டாள்.

தேவதுஞ்சரியம்மாள்

## ஸிம்பலைன்.

(7-வது அத்தியாயம். 19-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்படியிருக்க அந்தக் குகையின் வரலாற்றை இப்பொழுது எடுத்துரைப்போம். அந்தக் குகை வேல்ஸ் என்ற ஊரின் மலைகளுக்கு மத்தியில் அனந்தரமாயிருக்கிறது. அதில் வயது சென்ற ஒருவரும், இரண்டு

சௌந்தரியமுள்ள வாலிபர்களும் கொஞ்ச காலமாக வசித்துக்கொண்டிருக்கிறார்கள். பையன்களோ கோடிசூரியப் பிரகாசமுடைய மன்மதனைப்போல் காணப்படுகிறார்கள். அவர்களைப்பார்த்த மாத்திரத்தில், ஐயோ! இந்தக் குழந்தைகள் ஓர் பட்டணத்தில் நல்ல வம்சத்தில் பிறந்து மேன்மையான பதவியை யடைந்து ஆனந்தத்துடன் இருக்கக்கூடாதா, இப்படியா துஷ்ட ஜெந்துக்களுள்ள நடுக்காட்டில் ஒரு குகையில் வந்து வசிக்கவேணும் என்று மனதிரங்கும்படியாய் நேரிடும். ஆனால் பட்டணங்களிலுள்ள பிள்ளைகளைப்பார்க்கிலும் கல்வியில் அதிகத்தேர்ச்சியடைந்து, வில்வித்தை, வாள்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் இவைகளை நன்றாய்க்கற்று தங்கள் காலங்களை ஒரு விசாரமன்னியில் இன்பமுடன் கழித்துக்கொண்டுவருகிறார்கள். இவர்கள் மூவரும் ஒருநாள் தங்கள் குகையின் முன்னின்றுகொண்டு பின்வருமாறு சம்பாஷிக்கிறார்கள் :—வயது சென்றவரின் பெயர் பேலாரியஸ், குழந்தைகளின் பெயர், கைடீரியஸ்,ஆர்விராகஸ்.

**பேலாரியஸ் :**—ஆ! ஆ! நல்லகாற்று வீசுகிறது. நம்மைச் சுற்றிலும் பார்க்கிறபோது எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது. இந்த தினத்தில் வீட்டிலிருந்து காலத்தைக் கழிக்கிறதைப் பார்க்கிலும் வெளியிலே போய் வேட்டையாடிச் சந்தோஷமாயிருந்தால் எவ்வளவு குணமாயிருக்கும். மைந்தர்களே! பெரிய இடங்களிலுள்ள வீட்டின் வாசல்கள் அதிக உயரமாயும் அதிக அகலமாயுமிருக்கின்றதினால் அவைகளின் வழியாய்ப் போகிறவர்கள் தலைகுனியாமல் இறுமாப்புடன் போவார்கள். நம்முடைய குகையின் வாசலோ அதிகமாய்த் தாழ்ந்திருக்கிறது. ஆகையால் கடவுளுக்கும், சூரியனுக்கும் அதிகாலையில் வணங்கவேணுமென்றும், தெய்வத்தை மறக்கக்கூடாதென்றும், இந்தக் குகை தானாகவே கற்பிக்கிறது. இதை நீங்கள் ஒரு பாடமாகவைத்துக்கொண்டு தெய்வத்தை எப்பொழுதும் வணங்கி, சன்மார்க்கத்திலிறங்கி மோக்ஷத்தையடையவேணும். மறந்து போகாதேயுங்கள். இப்பொழுது தெய்வத்தை வணங்கி வெளியிலே போகலாம் வாருங்கள், சீக்கிரம் வாருங்கள்.

**கைடீரியஸ், ஆர்விராகஸ் :**—தலைகுனிந்து வெளியே போகிறார்கள்.

**பேலாரியஸ் :**—இப்பொழுது மலைகளில் வேட்டையாடப் போகிறேன். அதோ பாருங்கள், அந்த மலையின் உச்சியில் போகிறேன். நீங்களோ வாலிபர்கள், உங்களால் நடக்கமுடியாது. நான் இந்தப்பள்ளத்தாக்குகளைக்கடந்து மலையின் உச்சியில் போனவுடன் என்னை ஒரு காகத்தைப்போல் காண்பீர்கள். இதனால் நீங்கள் ஒன்று நன்றாக அறியலாம்



இப்பொழுது ஒரு பெரியமனிதனாகக்காணப்படுகிற நான் அந்த இடத்தை யடைந்தவுடன் ஒரு சிறு காகமாகக் காணப்படுவேன். ஆகையால், மைந்தர்களே! ஒருவனை பெரிய மனிதன் அல்லது அற்பமனிதன் என்று உலகத்தில் சொல்வது அவனுடைய இயற்கையாயுள்ள குணங்களினாலல்ல; ஆனால் அவன் அடைந்திருக்கும் பதவியினால் தானென்று அறிந்துகொள்ளுங்கள். யோக்கியதையில்லாத ஒரு அற்பன் நல்ல வம்சத்தில் பிறந்தால் அவனை பெரிய மனிதனென்று தோத்திரம் செய்வார்கள். நல்ல குணங்களையுடைய ஒருவன் இழிகுடியிற்பிறந்தால் அவனை ஒருவரும் மதிக்கமாட்டார்கள். நான் மலையின் உச்சியில்போனவுடன் அரண்மனைகளையும் சிற்றரசர்களையும், சண்டையிலுண்டான தந்திரங்களையும் பற்றி நான் உங்களுக்குச்சொன்ன கதைகளை நன்றாய் ஆலோசித்துப் பாருங்கள். ஒருவனிடத்தில் நாம் வேலைசெய்கிறதாயிருந்தால் நம்முடைய மனதுக்குத் திருப்தியாகச் செய்தால் மாத்திரம்போதாது; நம்முடைய எஜமானனுக்குத்திருப்தியாகச்செய்து அவன் சந்தோஷமடைந்தால் தான் நல்லவன் என்ற பெயரையடையலாம்; நமக்கு நல்ல லாபமும் கிடைக்கும். இதற்குத்திருஷ்டாந்தமாகப்பாருங்கள். கழுகுகள் தங்களுடைய பெரிய சிறகுகளைவிரித்துக்கொண்டு கண்ணால் பார்க்கக் கூடாததூரம் போகின்றன. வண்டுகளோ கொஞ்சந்தூரம் தான் பறக்கின்றன. இவைகளில் வண்டல்லவோ அபாயமில்லாத ஸ்திதியிலிருக்கிறது. மேலும் தன்னால் கூடிய சிரமமெடுத்து வேலைகளைச்செய்து கடைசியில் எஜமானன் அதன் யோக்கியதையை யறியாமல் அவனைப் பழிசொல்லுகிறதைப் பார்க்கிலும் நம்முடைய ஜீவகாலம் எவ்வளவோ பேரானந்தமுடையதா யிருக்கிறது. இது மாத்திரமல்ல, தையல் காரனிடத்தில் நல்ல உடைகளைவாங்கி யுடுத்திக்கொண்டு அதின் விலையைக்கொடாமல் அவனிடத்தில் இழிவான வார்த்தைகளையும் வசைச்சொல்லையும் கேட்டுக் காலத்தைக் கழிக்கிறதைப்.பார்க்கிலும் நம்முடைய காலம் எவ்வளவு மேன்மையுடையதா யிருக்கிறது?

**கைடீரியஸ் :**—பிதா, நீங்கள் உலகப்பயிற்சியினால் சொல்லுகிறீர்கள். கூட்டைவிட்டுப் போகாத குஞ்சுகளைப்போல இக்குகையை விட்டுப்போகாமல் சர்வகாலமும் இங்கே தவித்துக் கொண்டிருக்கிற நாங்கள் எவ்வித மறிவோம். இந்தக் குகையைவிட்டு வெளியே நடக்கிற சங்கதிகள் கொஞ்சமாகிலும் எங்களுக்குத் தெரியாதே. அரண்மனைகளில் கஷ்டதுன்பங்களை யனுபவித்துக் கொ

ண்டிருந்த உங்களுக்கு இந்த ஜீவகாலம் நல்லதென்று தோன்றலாம். அமரிக்கையாயுள்ள ஜீவகாலம் நல்லதென்றால் நம்முடைய காலத்தைப்பார்க்கிலும் மேன்மையுடையது வேறே கிடையாது. வயது சென்றவர்களுக்கு இது நல்லதென்று தோன்றலாம். சிறுவர்களாகிய எங்களுக்கு, இருந்த இடத்தைவிட்டுப் போகக்கூடாமல் கஷ்டப்படுகிற ஒரு கைதி அடையப்பட்டிருக்கிற ஜெயிலைப்போலஇந்தக் குகை காணப்படுகிறது. ஒருவன் ஒருபொழுதும் வேறே யிடத்துக்குப்போகாமல் படுக்கையறையைச் சுற்றிக்கொண்டுவருகிறதினால் அவனுக்கு என்ன சந்தோஷமுண்டு. அதே மாதிரியாக நாங்கள் இங்கேயிருந்து துன்பப்படுகிறோம்.

**ஆர்விராகஸ்** :—பிதா! உம்மைப்போல் எங்களுக்கும் வயதானால் எதைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். மழையும் காற்றும் நன்றாக அடிக்கும் காலங்களில் இந்தக்குகையிலிருந்து எங்களுடைய காலங்களைக் கழிக்க எதைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் கண்ணால் ஒன்றும் பார்க்கவில்லை. மிருகங்களுக்குச் சமமாக விருக்கிறோம். இரைகளின்மேல் வேகத்துடன் செல்லுகிற நரிகளைப்போலும் ஓநாய்களைப்போலும், பராக்கிரமசாலியாயிருக்கிறோம். ஓடுகிற ஜெந்துக்களை பிடிப்பதில்தான் எங்களுடைய தைரியத்தைக் காட்டுவோம். சங்கீதத்தை வேறே இடத்தில் போய்க்கேட்கிறதற்கும் வழியில்லை. பக்ஷிகளைப்போல இந்தக் குகையில் நாங்களே பாடி நாங்களே கேட்டு ஆனந்தப்படவேண்டியிருக்கிறது. இப்படி எவ்வளவு நாளாகக் காலங்கழிக்கப்போகிறோமோ தெரியவில்லையே. காட்டில் மாத்திரம் இருந்தால் போதுமா. பட்டணங்களின் நடவடிக்கைகளை யறியவேண்டாமா. இந்த இடத்தில் எங்கள் காலங்களைக் கழித்தால் எங்களுக்கு என்ன சுகமுண்டு. ஆகையால் தயவு செய்து எங்களைப் பட்டணங்களுக்கு அழைத்துக்கொண்டுபோய் அதன் மகிமையை எங்களுக்குத் தெரிவிக்கவேணும்.

**பெலாரியஸ்** :—என்ன அறிவில்லாமல் பேசுகிறீர்கள். நீங்கள் ஊரிலுண்டான நடவடிக்கைகளைப்பார்த்து அதன் கஷ்டத்தை யனுபவித்தால்தான் உங்களுக்குத்தெரியும். அரண்மனையிலுண்டான கபடங்களுக்குட்படுகிறது எவ்வளவு கஷ்டமா யிருக்கிறதோ அதேமாதிரியாக அதிலிருந்து தப்பிப் போகிறதும் கஷ்டமாயிருக்கும். அதன் உச்சியில் போனால் நிச்சயமாய்க் கீழேவிழுவோம், அல்லது அதைப்போல் அதிக அபாயமுள்ள ஸ்திதியிலிருப்போம், யுத்தங்களில் எவ்வளவு



கஷ்டத்தை யனுபவித்தாவது கீர்த்தியைப் பெறவேணுமென்று போகிறார்கள்; ஆனால் அவர்கள் அபாயத்தையடைகிறார்கள். கீர்த்தியடைய வேணுமென்று நல்ல காரியங்களைச் செய்தாலும் அவர்கள் இறக்கும்போது உலகத்தாரால் நிந்திக்கப்படுகிறார்கள். தவிர அனேக விஷயங்களில் நல்ல காரியங்களைச் செய்தவர்கள் பழிக்கப்படுகிறார்கள். அது மாத்திரமல்ல பழிச்சொல்லை விரோதஞ் சொல்லாமல் கேட்கும்படிக் சட்டாயப் படுத்துகிறார்கள். பிள்ளைகளே! நான் சொன்னவற்றை நீங்கள் என்னிடத்தில் தானே காணலாம். நான் ரோமன்ஜாதியாருக்கு விரோதமாய் அனேகந்தரம் சண்டைசெய்து அவர்கள் கத்திகளினால்பட்ட புண்ணின் தழும்புகளை இதோ என் உடம்பில் பாருங்கள். நான் கீர்த்திபெற்ற வீரர்களைப்பார்க்கிலும் அதிகக் கீர்த்திப்பெற்றவனா யிருந்தேன். ஸிம்பலீன் என்னும் அரசன் என்னை யதிகப் பிரியத்துடன் வைத்திருந்தான். வீரர்களைப்பற்றிப் பேசவேண்டி யிருந்தால் என்னைத்தான் முதலில் பேசுவான். நான் அப்பொழுது, நல்லகனிகளின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் வளைந்துகொண்டிருக்கிற கிளைகளையுடைய ஒரு மரத்தைப்போல உலகத்திலுள்ளவர்களுக்கும் ஸிம்பலீனுக்கும் காணப்பட்டேன். ஐயோ! ஒருநாள் இராத்திரி புசல் காற்றோ அல்லது தீவட்டிக்கொள்ளைக் காரரோவந்து என்னுடைய பழங்களை உதிர்த்துவிட்டார்கள். அது மாத்திரமல்ல, என்னுடைய இலைகளையும் உதிர்த்து மொட்டைமரமாக்கிக் கடுங்காற்றில் நிறுத்திவிட்டார்கள். என்னுடைய அதிர்ஷ்டம் அத்தோடு முடிந்துவிட்டது. பிறகு இக்கதியை யடைந்தேன்.

வி கோபாலஐயங்கார் பி.எ.

## ஒரு விவாகமகோற்சவம்.

ராவு பகதூர் எம். எதிராஜுலு பிள்ளையவர்களுடைய "ஸ்வீட் ஹோம்" என்னும் கிரஹத்தில் நடந்த விவாஹ மஹோற்சவத்தைப்பற்றி ஒரு நிருபர் எழுதி நமக்கனுப்பியதை இங்கு பிரசுரிக்கிறோம்:—

கிழக்கு சமுத்திரக்கரையோரமான மாகாணங்களிலும் ஜில்லாக்களிலும் தமது நற்குண நற்செய்கைகளால் மஹா கீர்த்திப்பிரதாபத்தைப் பெற்ற உத்தமசீலப்பிரபுவாகிய மிஸ்டர் ராவு பகதூர் எதிராஜுலு பிள்ளையவர்களுடைய ராயப்பேட்டை மோபிரே வீதியில் அமைக்கப்பட்ட "ஸ்வீட்ஹோம்" என்னும் நாமம் சூட்டப்பட்டுள்ள அரண்மனையில் சென்ற சிலநாளாகப் பிள்ளை யவர்களுடைய அனேக சிநேகிதர்கள் வெகுகாலமாய் எதிர்பார்த்திருந்த வண்ணம் அவருடைய சிரேஷ்ட

புத்திரன் சிரஞ்சீவி ம. எ. கஜபதிராவு பிள்ளையவர்களுக்கும் கனம்பொருந்திய திருவேங்கிடம்பிள்ளையவர்களுடைய கனிஷ்ட புத்திரி தேவகி அம்மாளுக்கும் நடந்தேறின விவாஹ சம்பந்தமாய் உற்சவங்கள் கொண்டாடப்பட்டன. பெண்ணுக்கும் பிள்ளைக்கும் அளிக்கப்பட்ட விலை ஏறப்பெற்றவைகளும் ஏராளமானவைகளுமான பரிசுகளும், சென்ற மே மாதம் 22-ந்தேதி புதன்கிழமை காலையில் நடந்த முகூர்த்தத்தில் வெளிதேசங்களிலிருந்து பிள்ளையவர்களுடைய அருமை பெருமையான சிநேகிதரில் சிலரும், சென்னை நகரிலுள்ள அவருடைய பேர்போன இஷ்டர்களில் அநேகரும், விவாஹத்திற்கு வந்திருந்து சிறப்பித்ததும், பிள்ளையவர்கள் அடைந்திருந்த பேர்போன கீர்த்திப் பிரதாபத்தை வெளிப்படுத்துவதற்குப் போதுமான அத்தாக்ஷியாயிருந்தன.

சென்ற ஒரு மாதக்காலமாக கட்டடங்களெல்லாம் வெள்ளையடிக்கப்பட்டு அழகான தோட்டங்களெல்லாம் சுத்திகரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டன. அவைகள் இப்போதுபார்வைக்கு மிகவும் அலங்காரமாய்க் காணப்படுகின்றன. கிரஹத்தின் விசாலமான உள் முற்றத்தில் அன்று சாயரக்ஷை பாட்டுக்கச்சேரிக்கு வரும் இஷ்டர்கள் உட்காருவதற்கு கவர்களுள்ள தொங்கு விளக்குகள் வரிசை வரிசையாய்ப் போடப்பட்டு வெகு உன்னதமாய் அலங்கரிக்கப்பட்டதும் ரேக்குத்தொங்கல்கள் வெண்ணிறமான மஸ்லின் துணியால் மூடப்பட்டும் மேற்கூரையிலிருந்து தொங்கினமாதிரியாய் 300 பேர் வீற்றிருக்கக்கூடிய பெரிய பந்தலொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகாமையான இன்னொரு முற்றத்தில் சித்திரவேலைக்காரர்களால் தங்கள் யுத்தியை யெல்லாம் பிரயோகித்து சித்திரந்தீர்ந்த மணவரையொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஓர்பாகம் முகூர்த்தசடங்குக்கும் வந்திருந்த நாயகிமாரை மறைக்கும்படி ஜப்பான் திரைகள் போடப்பட்டிருந்தன. முகூர்த்த சம்பந்தமான ஆரம்பசடங்குகள் அதிகாலையில் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பதுமணிக்கு முடிவாகி அப்புறம் முக்கியமான சடங்குகள் துவக்கப்பட்டன. அங்கு வந்தவர்களில் ஆனரெபில் சர், வெ. பாஷியம் அய்யங்கார் அவர்கள், Kt. C. I. E., ராஜா சர், சவலை ராமசாமிமுதலியாரவர்கள், Kt. C. I. E., திவான் பகதூர் எஸ் ராகவாசாரியார், ராய்பகதூர் எம். ஏ. சிங்கராசாரியார், எம். வீரராகவசாரியார், ராய்பஹதூர் பட்டாபிராம அய்யர், கிஷ்ணராவு முதலான கனவான்களையும் கவனித்தேன்.

சென்னையிலுள்ள அன்னதான சமாஜங்களில் ஏழைகளுக்கு மூன்று நாள் போஜனங் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது. பெஜவாடாவிலுள்ள நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு அன்ன வஸ்திரங் கொடுக்கவும் அங்குள்ள ஆலயங்களுக்கு அர்ச்சனைகள் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## NEWS & NOTES.

**கூச்பேகார் மகாராணி:**—தம்முடைய குழந்தைகள் கல்விபயில வேண்டியிருத்தலினாலும் அதனாற்றானே தாம் தமது குழந்தைகளுடனிருக்கவேண்டுவது அவசியமாயிருத்தலினாலும் கூச்பேகார் மகாராணியவர்கள் தமது மக்களுடன் இங்கிலண்டுக்கு இன்னும் சிலகாலத்துக்குள் செல்வார்கள்.



**மிஸ்டர் கிளாட்ஸ்டன் சரித்திரம்:**—மிஸ்டர் ஜான் மார்லியென்ற பெரியவரால் எழுதப்பட்டு வரும் மிஸ்டர் கிளாட்ஸ்டனின் திவ்விய சரித்திரம், அடுத்த மழைகாலத்திற்குள்ளாகப் பிரசுரிப்பதற்குத் தயாராகு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா பதிப்பு இரண்டு புத்தகங்களாகவும், பிரிடிஷார் பதிப்பு மூன்று புத்தகங்களாகவும் இருக்கும் என்று அறிகிறோம்.

**தேக சௌக்கியத்தைப்பற்றி உபந்நியாசம்:**—மிஸ் டிகான்ட்ஸோ என்னும் அம்மாள் பக்கிங்காம் ஹோடல் ஹாலில் மெல்லிய தேகத்தையுடைய குழந்தைகளை வைத்து வளர்ப்பதைப்பற்றியும் பாலாரிஷ்ட வியாதிகளைப்பற்றியும் உபந்நியசித்து தக்க போஷணையில்லாமலே குழந்தைகள் வியாதியால் வருந்துகின்றன வென்றும் நீவ்ஸ் பூட் (Neavs food) என்னு மாகாரங் குழந்தைகளுக்கு வெகுநல்லதென்றும் சொன்னார்.

**பெண்கல்விப் பெருமை:**—மைசூர் மகாராணி காலேஜில் வாசித்த இரண்டு பிராமணப் பெண்மணிகள் நடந்த எப். ஏ. (F.A.) பரீக்ஷையில் தேறினார்களென்றும், அவர்கள் அப்படிதேறினதாக ஏற்பட்ட தேதி முதலாக மாதம் 1-க்கு 150-ரூபாய் வீதம் சம்பளம் ஏற்பட்டதென்றும், கீழ் வகுப்புகளில் அவர்களை உபாத்திச்சிகளாக இருந்து பிரதிதினம் பிற்பகலில் பி.ஏ B.A.) வகுப்பில் படித்துவருவார்களென்று மைசூர் ஸ்டாண்டர்டு கூறுகிறதைக்கேட்க நாம்மிகசந்தோஷப்படுகிறோம், ஈசனிவர்களுககு தீர்க்காயுளளிப்பாராக.

**ஆஸ்டிரியா தேசத்துச் சக்கிரவர்த்தி:**—தற்போது ஆஸ்டிரியாவில் சக்கிரவர்த்தியா யிருப்பவர் வருஷத்துக் கொருமுறை 12 தரித்திரர்களுக்குத் தமது கையால் அன்னம் பரிமாறி அவர்களது கால்களைக் கழுவும்உற்சவம் கொண்டாடும் வழக்கப்படியே இவ்வருஷமும் 700 கனவான்கள் நிறைந்திருந்த ஒரு பெரிய ராஜசபையிலே அவர் ஆகாரத் தட்டுகளைத் தரித்திரர் முன்வைத்து மூன்றுதரம் ஆகாரம் பரிமாறி அவர்கள் புசித்தாய் பின்னர் அன்னார் பாதங்களைக் கழுவிப் பிற்பாடு அவர்கள் ஒவ்வொருவர் கழுத்திலும் முப்பது வெள்ளிநாணயங்கள் கொண்ட பையொன்றையும் கட்டினார். அவ்விராஜ குடும்பத்துச் சிம்மாசன பதிகளுக்கு இன்றியமையாததாக ஏற்பட்ட கடமைகளிலிதொன்றாம்.

சீனா தேசத்திற்கு தென் கிழக்கில் சூலு என்ற ஒரு தீவு யிருக்கின்றது. இது ஸ்பெயின் தேசத்துக்குச்சொந்தம். இதுவெகு உஷ்ணபூமி. ஏனெனில் இது சமரேகை (Equator) க்கு கொஞ்சம் வடக்கிலிருப்பதால் தான். பலவர்ணமுள்ள கிளிகள், இன்னும் பல விநோதமான பட்சிகளிங்கிருக்கின்றன. இங்கு கடலில் முத்துகள் விசேஷமாக அகப்படுகின்றன. இங்குள்ளவர்கள் ஜலத்தில் சுமார் 50 அடி ஆழத்தில்மூழ்கி முத்து சிப்பிகளைக்கொண்டுவருவதில் சாமர்த்தியமுள்ளவர்கள். தேங்காய் அபரிமிதமாகபயிரிடப்படுகின்றன; தவிர பழங்களும் அதிகமாக விருக்கின்றன. 10 வயதுள்ள குழைந்தைகள் துணிகளை தரிப்பது கிடையாதாம். ஜலத்தில் முழுகுவதும் நீந்துவதுமே இவர்கள செய்யும்வேலையாம். இவர்களுக்கு பத்து பன்னிரண்டு வயதாய் விட்டால் மற்ற ஜனங்களைப்போல உடைகளை தரித்துக்கொள்வார்களாம்.

**கொசுகும் ஆமணக்குச் செடியும்:**—சிற்றாமணக்குச் செடிகள் பயிரிடப்படும் இடங்களில் கொசுகு அண்டாதென்று சொல்லப்படுகிறது. படுக்குமிடங்களில் சிற்றாமணக்கு இலைகளைக்கொண்டு புகைபோட்டாலும் அல்லது அவைகளைப் பக்கத்தில் சற்றுநேரம் வைத்திருந்தாலும் கொசுகுகள் அந்த இலைகளின் கீழ்ப்புறத்திலுள்ள ஒரு

வித விஷமான சாரத்தால் இறந்துபோகின்றனவாம். தென்னிந்தியாவில் இந்தச் செடிகள் வெகு சாதாரணமாயிருக்கையில், இந்தச் சிகிச்சையைச் செய்து ஜனங்கள் ஏன் கொசுகுகளை அழிக்கிறதில்லையோவென்று அன்னியர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். சிற்றாமணக்குச் செடிகளை மண் தொட்டியில் பயிர் செய்து இரண்டு மூன்று தினங்களுக்கொரு முறை படுக்கு மிடத்தில் கொண்டுவைக்கலாம். இந்தச்செடிகளுக்கு வெயில் அவசியமாகையால், சிறிது நேரந்தான் நிழலில் வைக்கப்படவேண்டும். சாதாரணமாய்ச்செடிகளும் மரங்களும் அடர்ந்த இடங்களில் அவைகளின் ஈரத்துக்காகவும் நிழலுக்காகவும் கொசுகுகள்சேருகிறபடியால், வாசஸ்தலங்களுக்குச் சமீபத்தில் அதிகமாகச் செடிகளும் மரங்களும் அடரவிடாமலிருத்தல் நலம்.

---

**விக்டோரியா சக்கிரவர்த்தினியைப்பற்றின ஓர்கதை:**—மிஸ்டர் டானல்ட் நிகல் என்பவர் சிலகாலம் லண்டனில் ஷெரிப்பாக(Sheriff) இருந்து இறந்துபோனார். இவர் பாலியமாயிருக்கையில் சக்கிரவர்த்தினி யவர்களின் கென்ஸிங்டன்மாளிகையின் பக்கங்களிலுள்ள சந்துகளில் வேலியில் தானாயுண்டாகும் ஓர்வித நாவல்பழங்களைத் தமது குல்லாவில் பொறுக்கிப் போட்டுக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் விக்டோரியா கோமகளும் சிறுபிராயமுள்ளவர்களாகி, ஒரு கோவேறு கழுதைமீது அந்தப்பக்கம் சவாரி வந்தார்கள். மிஸ்டர் நிகல் பொறுக்கிக் கொண்டிருக்கும் பழங்களைப் பார்த்து, எனக்கு "கொஞ்சம் கொடு" என்று குழந்தைகேட்க, அவர் இன்னாரென்று தெரியாதிருந்தும், ஸ்திரீக்குக் காட்டவேண்டிய மரியாதையைப் பற்றித் தமது குல்லாவை அப்படியே காட்டினர். விக்டோரியாவும் கைநிறையப்பழத்தை ஆசையோடு எடுக்கையில், ஒருவேலைக்காரன் பரபரப்பாய் வந்து பழத்தை தன்கையில் வாங்கிக்கொண்டு கழுதையை விரட்டினான். விரட்டுவதற்கு முன்னால், மிஸ்டர் நிகலைப்பார்த்து, "விக்டோரியா கோமகளிடம்நீ பேசத்துணிந்தது உனமேல் பெரும்பிசகு," என்றான். வெகுகாலத்துக்குப்பின், மிஸ்டர் நிகல் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டு மகாராணியவர்களுக்கெழுத, மகாராணியவர்கள் அன்புடன் தமது காரியதரிசி மூலமாக அனுப்பினவிடையில், "தமக்கு அது ஞாபகத்திலிருக்கின்றதென்றும், முகமறியாதவையனிடத்தில் தாம் பேசினதற்காகத் தமது தாயார் அதிகமாகக் கடிந்து கொண்டனரென்றும், அக்காலம் முதல் நாவல்பழத்தைத் தான் புசித்ததேயில்லை யென்றும், ஆனால் மிஸ்டர் நிகல் கடிதத்தைக் கண்ட பிறகு, தமது ஜனங்களுக்கு அதிப்பிரியமான இந்தக் காட்டுப் பழத்தை ருசிபார்க்கத் தமக்கு விருப்பம் வருகிறது" என்றும் சொல்லியருளினார்கள்.

---

நமது பத்திரிகைக்கு வழக்கம் போல் காலணா ஸ்டாம்பு ஒட்டிவைத்து அனுப்பலாமென போஸ்ட் மாஸ்டர் ஜனரலவர்களிடமிருந்து உத்தரவு வந்திருக்கின்றது. இப்படி போஸ்ட்மாஸ்டர் ஜனரலவர்கள் அனுகூலஞ்செய்தது அவருடைய பெருந்தன்மையையும், பத்திரிகைகளிடத்திலுள்ள அபிமானத்தையும் காட்டுகின்றதல்லவா? நமது பத்திரிகைக்கு எவ்வளவோ இடையூறுகள் தோன்றி உடனே மறைந்துபோகின்றன. இனியாதொரு இடையூறும் நமதுபத்திரிகைக்கு வாராதென நம்புகின்றோம். இப்பொழுது பத்திரிகை தாமதமாக பிரசுரிக்கப்பட்டு வருவதைப்பற்றி நாம் மிகவும் விசனப்படுகிறோம். நமது கையொப்பக்காரர்களும் தயவு செய்து தங்கள் சந்தாவை தாமதமின்றி அனுப்பி வரின் நமது பத்திரிகையை கிரமமாக பிரசுரிக்கமுடியும். இப்பெரும் உதவியை நமது கையொப்ப நேயர்கள் செய்வார்களென்பதற்குச்சந்தேகமில்லை. நமது பத்திரிகைக்கு அதிகபக்கம் அடுத்த வருடம் மார்ச்சு ௴ முதற்கொண்டு சேர்க்கவும் உத்தேசித்திருக்கிறோம். இப்படிச்செய்வது தான் உத்தமமென நமது கையொப்ப நேயர்களின் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனது பற்றி நமது கையொப்பநேயர்கள் இதன் விருத்தியைக்குறித்து தங்களாலியன்றமட்டும் இதற்கு சந்தாதாரர்களைச்சேர்க்க முயன்று நமது பத்திரிகையை உன்னதப்பதவியில்வைத்து ஆதரிப்பார்களென நம்புகின்றோம். C. S. R. Ed.

OFFICE OF THE REGIST...
REGISTERED
30 JUL. 1901
MADRAS.

# மாதர் மனோரஞ்சனி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 3. | MADRAS: JUNE 1901. | No. 4.
புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901௵ ஜூன்௴ | மல. 4.

## மாயாபுரி விநோதக் கதை.

---

சௌந்தரவல்லி கலகலவென்று நகைத்துத் தோழீ! தெய்வம் பார்த்தென்ன செய்தாலும் அதைத்தடுப்பார் யார்? நம்மாலகுமோ? வந்ததையனுபவித்தே தீரவேண்டும். இந்தக் கொடிய சிறையிலிருந்து தனியே வாணாள்கழித்து வருந்துவதைவிடக் காட்டுமிருகங்களுக்கு இரையாய் விடுதல் எனக்கு மிகச்சந்தோஷமே. அதைக்குறித்து நான் வருந்தவில்லை. களிப்படைகின்றேன். என் சிறைமீட்சியைக் குறித்து நீயும் மகிழ்ந்திரு; கவலைப்படாதே; ஆனால் பெற்று வளர்த்ததாய் தந்தையருக்கிந்தத் துர்எண்ணமுண்டானதற்குமட்டும் சிறிது வருந்துகிறேன். சகல சாஸ்திரங்களின் உண்மையைத் தெரிந்திருந்து அரசுபுரியும் பெரியோருக்குப் புத்திசொல்வதுயார்? என்று கம்பீரமாகக் கூறியதுகேட்ட தோழி மறுமொழி பகராமல் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து, தான் வந்தசங்கதி யெங்கே வெளிப்படப் போகிறதோவென்று பயந்து விடைபெற்றுக்கொண்டு போய்விட்டாள். பிறகு சௌந்தரவல்லி தான் கேட்ட வார்த்தையைக் குறித்துச் சிறிது வருந்திப் பின் நாளைப்பகலில் நமது கணவன் வாராதிரார். ஆகையால் அப்பொழுது பேசிக்கொள்வோமென்று தன் கணவன் திருவடியைச் சிந்தித்துக்கொண்டு கவலையற்றுத் துயின்றாள். மறுநாளுதயத்தில் பெட்டிதயாராகி வந்துவிட்டது. அரசனும், அரசியும் அதைப்பார்வையிட்டுப் பின் மந்திரியை அழைத்து இன்றிரவு விடியுமுன் என் கட்டளையைத் தடையற நிறைவேற்றிவிடென்று கண்டிப்பான உத்தரவுகொடுத்துப் போய்விட்டார்கள். மந்திரி மனம் வருந்தி அரசனுடைய அநீதிக்கு இரங்கி, என்செய்வது? எஜமான் உத்தரவை நிறைவேற்றுவதே வேலைக்காரன்கடமையாதலால் அரசன் ஆக்ஞைப்படிநடப்போம். பழிபாவத்துக்கு அவனே பாத்திரனாகட்டும் என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு, இராப்பயணத்துக்கு வேண்டியவற்றைச் சேகரித்துவைத்துக்

கொண்டு, இரவுப்பதினைந்து நாழிகைக்குமேல் அரசன்கட்டளையை நிறவேற்றுகிற தென்று தீர்மானஞ் செய்திருந்தான்.

இங்கேயிப்படியாயிருக்க மாயாபுரியில் ஜகதீசன்மத்தியான்னம் தேவபூசை முடித்து போஜன மருந்தித்தன் மனைவியோடு விளையாட்டாகப் பேசிக்கொண்டிருக்கையில் அவளை நோக்கி என்கண்ணே! மங்களாம்பா! உனக்கு ஒரு சந்தோஷம் சொல்லுகிறேனென, அவள் அது என்ன அருள் செய்ய வேண்டுகிறேனென்றாள். பெண்ணே! இன்றுதினம் உன்சகோதரி சௌந்தரவல்லியை அழைத்துக்கொண்டு வரவிரும்புகிறேன். உன் கருத்தென்ன வென்றான். அவள் நகைத்துப் பிராணநாதா! இதென்ன வேடிக்கை? எனக்கு அவளைப்பார்க்கவேண்டு மென்கிற ஆவல் மிகுதியாக இருக்கிறது. தங்கள் திருவுளத்துக்கெதிர் பார்த்திருந்தேன்; அவள்வந்து விட்டால் இருவரும் மனமொத்து விளையாடிக் கொண்டிருப்போம். என்சகோதரி யிருக்கையில் எனக்கு வேறு தோழிமார் என்னத்துக்கு? அரண்மனையில் எத்தனைகாரியங்களிருக்கின்றன? அவைகளை நாங்களிருவரும் பங்குபிரித்துக்கொண்டு எளிதாகச்செய்துவிடுவோம். தேவரீர் என் மனதைச்சோதிக்கிறாப் போலக்காண்கிறது. அப்படிச்சோதிக்கவேண்டாம். இந்த க்ஷணத்திலேயே போய் அழைத்துக்கொண்டு வாருங்களென்று மனக்களிப்புடன் விடைபகர்ந்தாள். ஜகதீசன் என்கண்ணே நானின்றுதானா உன்மனதைச் சோதிக்கப்போகிறேன். அப்படியல்ல; விளையாட்டுக்காகச் சொன்னேன். அவள் இப்பொழுது ஆறுமாதகர்ப்பம். அவள் தாயும் தந்தையும் அந்த அவமானத்துக்காக அவளைக்காட்டில் கொண்டுபோய் விடத்தீர்மானித்து, இன்றிரவு பதினைந்து நாழிகைக்குமேல் அதைநிறைவேற்றப் போகிறார்கள். அதற்கு முன் அவளை யிங்குகொண்டுவந்து விடவேண்டும் என்றான். அதுகேட்டு மங்களாம்பாள் நகைத்து நல்ல காரியஞ்செய்தார்கள். என்தாய் தந்தையர்கள் மிகநல்லவர்களென்று தோன்றுகிறது. நிற்கட்டும்; இந்தச்சமாசாரம் அவள் காதில் பட்டிருக்கவும்கூடுமே? அதனால் அவள் மிகவருத்தப்பட்டுக்கொண்டிருப்பாள். ஆகையால் தேவரீர் சீக்கிரம்போய் அழைத்துக்கொண்டு வாருங்கள். அதுவரைக்கும் நான் என்தோழியோடு விளையாடிக்கொண்டிருப்பேன். வரும்வழியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ஐயோ! பாபம்; என்ன எண்ணிவருந்துகிறாளோ வென்று மனம் வருந்தி, இரக்கத்தோடும் சொல்ல ஜகதீசன் பெண்ணே! அவளுக்கு யாதொரு கெடுதியும்வாராது. நான் போய்வருகிறேன் என்றான். மங்களாம்பாள் எழுந்திருந்து உள்ளேபோய் உயர்ந்த ஆடையாபரணங்கள் கொண்டுவந்து கொடுத்து, அந்தப் பாவிகளுடைய சொத்து இங்கேவர



வேண்டாம். அங்கேயே கழற்றியெறிந்துவிட்டு அவளை யிவ்வாடையாபரணங்களால் அலங்கரித்து இங்கே அழைத்துக்கொண்டு வாருங்களென்றாள். அவன் தன் மனைவியின் நற்குணங்களுக் கதிசயப்பட்டு அவளிடம் விடைபெற்றுக்கொண்டு மார்த்தாண்டபுரம்போய் யாதுசெய்வதென்று பலபல எண்ணமிட்டுக்கொண்டு வருந்துகிற சௌந்தரவல்லி முன் போய் நின்றான். அவள் மிக ஆனந்தத்தோடும் எதிர்கொண்டழைத்துப் போய்ப் பீடத்திலிருக்கச்செய்து உபசரித்து நடந்த சமாசாரங்களைக்கூறி மனம் வருந்தினாள். ஜகதீசன் பெண்ணே! நான் முன்னமே சொல்லவில்லையா? இன்று தான் நீ மாயாபுரிக்கு வரவேண்டியநாள். உன் தந்தை யளித்தவஸ்திராபரணங்களைக்கழற்றி இங்கேயேவைத்துவிட்டு, இவற்றையணிந்துகொண்டுவரும்படி மங்களாம்பாள் கொடுத்தனுப்பினாள் என்று கொடுக்க, அவள் உடனேயெழுந்திருந்து தன்னிருகையாலும் வாங்கிக் கண்களிலொற்றிக்கொண்டு, மனமகிழ்ந்து அவற்றை யணிந்துகொண்டு தன்கணவன் பக்கத்தில் வந்துட்கார்ந்தாள். அஸ்தமித்தபின் இருவரும் தேவாமுத போஜனம் அருந்தித் தாம்பூலந்தரித்துக்கொண்டு விநோதமாகப்பேசிக் கொண்டிருக்கையில் சௌந்தரவல்லிக்குத் தன்னையறியாமல் நித்திரை தோன்றித் தன்கணவன் தோளின்மீது சாயந்துகொண்டு தூங்கிப்போய்விட்டாள். பிறகு சிறிது நேரம் கழித்துக் கண்திறந்து பார்த்து நாலுபக்கமும் நோக்கித்தான் தன்நாயகன் தோளில் சாய்ந்து கொண்டிருப்பதையும் அவன் பக்கத்தில் திருமகள் நாணும் எழில்நலம் கனிந்து தங்கமொத்தொளிருந்த திருமேனிவாய்ந்த மங்கைப்பருவத்துப் பெண்ணரசி மந்தகாச முகாரவிந்தத்துடன் வீற்றிருப்பதையும்கண்டு, புத்திசாலியாகையால் இது மாயாபுரி என்றும், பக்கத்திருப்பவள்தான் மங்களாம்பாள் ஆகவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, திடீரென்று எழுந்திருந்து மங்களாம்பாள் பாதத்தில்வணங்க, அவள் இருகையாலுங் கட்டித்தழுவிப் பக்கத்திருத்திப் பலநாட்பழகினவளைப்போல அளவளாவி மகிழ்ந்தாள். சௌந்தரவல்லி அக்காள்! நான் உன்திருவடிநிழலில் வந்து அண்டிவிட்டேன். நான்செய்யுந்தப்புத்தவறுகளைக் கவனியாமல் என்னைப்பரிபாலிக்க வேண்டுகிறேனென, ஙகளாமம்பாள் மகிழ்ந்து சௌந்திரவல்லீ நமக்குக் குற்றம் குறை யென்ன விருக்கப் போகிறது? நாமிருவரும் ஒரு எஜமானனுக்குட்பட்ட வேலைக்காரிகளே யாதலால் இருவரில் உயர்வு தாழ்வு கிடையாது. நாமிருவருமொருமித்து நம்எஜமானனுக்கு மனக்களிப்போடு ஊழியஞ்செய்வோமென்று கூறி அவளைமகிழ்வித்தாள். சௌந்தரவல்லி ஆனவள் மங்களாம்பாளுடைய குணாதிசயங்களுக் காச்சரியப்பட்டு இந்தப்புண்ணியவதியின் பேச்சைக்கேட்டு, அவளுக்குப்பணிந்து நடப்பதே

நமக்குப் பெரும்பாக்கியமென்று கருதிமகிழ்ந்திருந்தாள். இப்படியாக இருமனைவிமாரும் பணிவிடைசெய்ய, ஜகதீசன் மாயாபுரியில் தன்னரசு நடாத்திமகிழ்ந்திருந்தான்.

இங்கேயிப்படியிருக்க, மார்த்தாண்டபுரத்தில் மந்திரியானவன் இராத்திரி குறிப்பிட்ட காலத்தில் வந்து கன்னியாமாடத்தினுட்போய் ஒருவழியிடித்துக்கொண்டு உள்ளே புகுந்துபார்க்க, உள்ளே ஒருவருமில்லாமையால் ஆச்சரியப்பட்டு, நாலுபுறத்திலும் சுற்றிப்பார்த்து இராஜபுத்திரியின் ஆடையாபரணங்களைக் கண்டெடுத்து, இது வென்னவிந்தை? உள்ளேயிருந்த பெண் எப்படி வெளியில் போயிருக்கக்கூடும். நாமல்லவோ இப்பொழுது வழியுண்டாக்கினோம். முன்பு சாலகம் தவிர வேறுவழியில்லை. இது தெய்வச்செயலோ? இராட்சதர் செயலோ? தெரியவில்லையே யென்று கலங்கி அரசனுக்கறிவிக்க, அரசன் தக்ஷணம் அவ்விடம் வந்து பார்த்து வியந்து, உடனே யநேகதூதர்களை ஏவி யெங்குந்தேடிப் பார்த்துக்கண்டுபிடித்துவந்து சமாசாரங்கள் தெரிவியுங்கள் என்று ஆக்ஞாபித்து அனுப்பிவிட்டு மந்திரியோடு அரண்மனைபோய்ச் சேர்ந்து பலவாறு யோசித்துக்கொண்டிருந்தான். மறுநாள் சாயங்காலப்போதில் தூதர்கள் வந்து சுவாமீ! எங்கும் காணவில்லை. கண்டுபிடித்து செல்வதற்கு யாதொரு அடிச்சுவடுகூடத் தென்படவில்லை என்று கூறிப்போனார்கள். பிறகு பிரபாகரன் தன் மந்திரியை யழைத்து மந்திரீ! இதென்னவிந்தையாயிருக்கிறது? நமது குமாரத்தி எப்படிபோயிருப்பாள்? உனக்கென்ன தோன்றுகிறது? என்று கேட்க, மந்திரி மஹாராஜாவே! தேவர்கள் அல்லது அசுரர்கள் செய்த வேலையாகுமே தவிர மனிதர்களால் நடந்ததல்லவென்று நிச்சயமாய் நம்புங்கள். நமது பெண் தெய்வசிந்தனை செய்துகொண்டு அருந்தவம் புரிந்தமையால் யாரோ ஒரு தேவனே யழைத்துப்போயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நாம் இரகசியமாய்ச் செய்யத்துணிந்தகாரியந் தெரிந்துகொள்ளுஞ்சக்தி மனிதர்களுக்கில்லை. தவிர கட்டிடத்தில் எவ்விடத்திலும் திறப்புக்காணப்படவில்லை. நானே புதுவழியுண்டாக்கிக்கொண்டு உட்பிரவேசித்தேன். அந்தப் புதுவழியைத் தவிர வேறு வழியில்லாதிருப்பதை மஹாராஜாவே நேரில் தெரிந்துகொள்ளலாமென்று கூறினான். பிரபாகரனுக்கு ஒன்றுந்தோன்றாமல் அந்தப்புரம்போய்த் தன் பத்தினி கமலாட்சிக்கு இந்தச் சமாசாரந் தெரிவித்து மௌனமாயிருந்தான். அந்தம்மாளுக்குத் தன் செல்வக்குழந்தை துன்பத்தினின்று விடுபட்டதற்கு மனதுக் கடங்காத மகிழ்ச்சியும், இதனால் என்ன தீமைவிளையுமோ வென்கிறதுக்கமு மடைந்து தன் கணவனுக்குப் பலவகையான ஆறுதல்சொல்லித் தேற்றினாள். இந்தச்சமாசாரம் பட்



டணமெங்கும் பரவவே அதுகேட்டவர்களிற் சிலர் அரசனையிகழ்ந்து இராஜபுத்திரியைப் புகழ்வாரும், சிலர் இராஜபத்தினியைப் புகழ்ந்து களிப்பாரும், சிலர் மந்திரிசெய்த தந்திரமாயிருக்கலாமென்று அவனை மெச்சுவாரும், சிலர் இதனால் இராஜ்யத்துக்கென்ன சம்பவிக்குமோ வென்று மனம் மறுகுவாரும், சிலர் தெய்வச்செயலென்று கருதிமகிழ்வாரும் ஆனார்கள். நகரத்தில் இதைத்தவிரவேறு பேச்சேயில்லை. எல்லாருக்கும் கவலையுண்டாயிற்று. இவ்வாறு நான்குமாதங்களாயின.

நிற்க மாயாபுரியில் சௌந்தரவல்லி பத்து மாதமானவுடன் நல்ல சுபமுகூர்த்தத்தில் ஒருபுத்திரனைப் பெற்றாள். ஜகதீசன் அதற்குச் செய்யவேண்டிய ஜாதகர்மாதிகளை வைதீகமுறைதவறாமற் செய்து தன்பத்தினிமார்களுடன் மகிழ்ந்து; அக்குழந்தைக்குக் கிருபாகரன் என்று பெயரிட்டு மிக அன்போடு வளர்த்துவந்தான். அக்குழந்தைக்கு ஒருவயதாயிற்று. ஒருநாள் ஜகதீசன் தன்பத்தினி மார்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் சகலாபரணாலங்காரத்துடன் தவழ்ந்து வருகிற குழந்தையைக் கண்டு மங்களாம்பாள் ஓடிவந்து தூக்கி மடியில் வைத்துக் கொஞ்சிமுத்தாடி மகிழ்ந்தாள். அப்பொழுது சௌந்தரவல்லி சற்று முகம்வாடியிருப்பதை மங்களாம்பாள் பார்த்து இதென்ன புதுமை நாம் குழந்தையை எடுத்ததேயொழிய வேறொன்றும் செய்யவில்லையே? இதற்குத் தங்கை மனம்வருந்தினாளே யென்று கவலைகொண்டிருந்ததை ஜகதீசன் அறிந்து கலீரென்று நகைத்து என் கண்ணே மங்களாம்பா நீ யேன் மனம் வருந்தினாய்? உன் தங்கை தனது தாயாரை நினைந்து துக்கிக்கிறாள். உன்னிடத்தில் யாதொருகெட்ட நினைவும் கொள்ளவில்லையென்று சொன்னான். சௌந்தரவல்லி அதுகேட்டு மனங்கலங்கி உடனே யெழுந்திருந்து தமக்கையின் பாதத்தில் பணிந்து அக்கா! என் தந்தையின் செய்கையெல்லாம் எனது தாயாருக்குச் சம்மதமில்லை. என்னிடத்தில் அதிகப் பிரியமுள்ளவள். இந்தக்குழந்தை பிறந்து விளையாடிக்கொண்டிருப்பதை அவள்பார்த்துச் சந்தோஷிப்பதற்கில்லாமற் போய்விட்டதே யென்று மனம்வருந்தினேனே தவிர உன்னைக்குறித்து யாதொன்றும் நினைக்கவில்லை. நீயே யெனக்குத் தாயும் தமக்கையும் மற்றுமுள்ள பந்துக்களுமாயிருக்க உன்னிடத்திலே நான் கெட்ட அபிப்பிராயங்கொள்வேனோ? என்று இனியவசனங்கூறக்கேட்டு மங்களாம்பாள் மனம் வருந்தித்தன்கணவனை நோக்கிச் சுவாமீ! பெண்களுக்குத் தாயினிடத்தில் அதிக நேசவிசுவாசமிருப்பது வாஸ்தவந்தான். என் தங்கை தாயை நினைந்து வருந்துவதும் நியாயமாமேயாம். அவளுடைய துக்கநிவர்த்திக்கு யாதொரு பரிகாரமுமில்லையோ வென்றாள். ஜகதீசன் மங்களாம்பாளினது தயாளகுணத்துக்கு வியந்து பெண்ணே! உனக்கு மனமிருந்தால் பரி

காரமுண்டு. நீ கவலைபடவேண்டாம். இன்று இரவில் இங்கேயழைப்பித்துக் காட்டுகிறேனென்று கூறியவளை மகிழ்வித்தான், சௌந்தரவல்லியும் மிகக்களிப்படைந்தாள். இரவு வந்தவுடன் மூவரும் போஜனமுண்டு களித்து விளையாடிக் கொண்டிருக்கையில் நாழிகை பனிரண்டாயிற்று. அப்பொழுது ஜகதீசன் சௌந்தரவல்லீ! அதோ உன்தாயார் நித்திரைசெய்கிறாள். அவளைத்தட்டியெழுப்பி உபசாரஞ்செய்து பேசிவா. நமது உண்மை ஒன்றும் சொல்லாதே யென்று அனுப்பினான். அவளும் மனதுக்கடங்காத மகிழ்ச்சியோடு போகையில் அவள் தாயார் விழித்துக்கொண்டு பக்கத்தில் தன்கணவனில்லாதிருப்பதையும், தான் என்றும் பார்த்திராதவோர் புதிய அரண்மனையிலிருப்பதையும் பார்த்து ஒன்றுந்தோன்றாமல் பலவகையாக யோசித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது சௌந்தரவல்லி கிட்டவந்து அம்மா! என்று கூப்பிட்டு நமஸ்காரஞ்செய்தாள். தாயார் திடுக்கிட்டெழுந்திருந்து தன் மகளைக்கட்டித்தழுவி முத்தமிட்டு ஆ! என் கண்ணே! நீ க்ஷேமமாயிருக்கிறாயா? நீ எவ்விதம் ஆனாயோ வென்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்த என் வயிற்றில் பால் வார்த்தாயோ? நான் உன்னைக்காணப்பெற்றது பூர்வஜன்மத்துப்புண்ணிய பலத்தினாலல்லவோ என்று கூறிக்கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கையில் இணையில்லாத அழகுபொருந்திய ஒரு குழந்தை தவழ்ந்து வரப்பார்த்துக்குழந்தாய்!இது யார் குழந்தையென்று கேட்டதும் அவள் குழந்தையைத் தூக்கிக்கொண்டுவந்து அம்மா! இது என் செல்வக்குழந்தை யென்றுகூறி மடியில்வைத்தாள். தாயார் மகளையும் குழந்தையையும் பார்த்து பார்த்து மகிழ்வடைந்து ஒன்றுஞ்சொல்ல மாட்டாதவளாய்ப் பிரமித்து நின்று, பின்பு தெளிவடைந்து குழந்தையை முத்தமிட்டு விளையாடிக் கொண்டிருக்கையில் சில தாதியர் சொர்ணத்தட்டுகளில் மதுரமான சிற்றுண்டிகளையும், கனிவர்க்கங்களையும் கொண்டுவைத்துப்போக அதைத் தன் புத்திரியின் விருப்பத்தின்படி கமலாட்சி புசித்து மகிழ்ந்திருக்கையில் சௌந்தரவல்லி எழுந்திருந்து அம்மா அதோவருகிற மஹாபுருஷர்தான் என் பர்த்தாவென்று கூறினாள். அப்பொழுது ஜகதீசனும்வந்து தன் மாமிக்கு வந்தனம்செய்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். கமலாட்சி தன் மருமகனுடைய ரூபலாவணியத்தையும், குணாதிசயத்தையும்கண்டு மகிழ்ந்து அவனதுவரலாறு முதலியவற்றைக்கேட்க விருப்புற்றிருப்பதைத் தெரிவித்தவுடனே யவளுக்கு அதிக நித்திரையுண்டாகித் தன்னை மறந்து நித்திரை போய்த்திடுக்கிட்டு விழித்துப்பார்க்கத்தான் தனதுகணவனது பக்கத்தில் படுத்திருக்கக்கண்டு மிகுந்த ஆச்சரியமும், பயமும் உடையவளாகிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், அரசன் கண்விழித்துப்பார்த்து அடீ! பெண்ணே! உனக்கு நித்திரை வரவில்லையோ! நான் என்ன சொன்னாலும் கேட்கமாட்டேனென்



கிறாயே, உன் கவலையைவிட்டொழி. அதனால் என்ன பிரயோசனம்? எனக்கோ அளவில்லாத கவலைகளும் துக்கமுமிருக்கின்றன. அவையெப்படி ஆறும்? உனது மலர்ந்த முகத்தாலும், இனியவசனங்களாலும், உபசாரங்களாலுமல்லவோ தீரவேண்டும். நீயும் கவலைப்பட்டு வருந்தியிருந்தால் என்துக்கம் எப்படி நிவிர்த்தியாகுமோ தெரியவில்லை?

இன்னும் வரும் தேவதஞ்சரியம்மாள்.

---

# சத்தியவதி சரித்திரம்.

## 1-ம் அதிகாரம்.

—o—

மார்கழி மாதம் ஆரம்பித்தபடியால் குளிர்காலத்து விடுமுறை ஞாபகம்வந்து, சத்தியவதி நாராயணமூர்த்தியினது வரவையெதிர் பார்த்துக்கொண்டு தினமொருயுகமாய் கழித்துக்கொண்டுவந்தாள். ஓ ஸ்திரீரத்தினங்களே! இந்த வாக்கியத்தைப் படித்தவுடன் சத்தியவதி யாரோ,நாராயணமூர்த்தி அவளுக்கு என்ன ஆகவேண்டுமோ தெரிந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் ஆவல் கொள்ளக்கூடும். உங்களுக்கு அவர்கள் கதையைச்சொல்லப்போகிறேன். ஆனால் அதில் சித்திர விசித்திரங்கள் இருக்கும் என்று மாத்திரம் நீங்கள் எதிர்பார்க்கப் போகிறீர்கள். நமது புராணங்களிலிருப்பதுபோல் பத்துத்தலை மனிதர்களும், ஆயிரம் கையுடைத்தவர்களும், சமுத்திரம் முழுவதும் ஒரே விழுங்காய் குடிப்பவரும், பூமியைப் பாய்போல் சுருட்டுவார்களும், இதில் யாரும் வரமாட்டார்கள். அப்படிக்கொத்த அதிசயங்கள் நடந்த காலங்களும் அவைகளனைத்தையும் நம்பின காலங்களும் வெகு வருஷங்களுக்கு முன்னேயே கழிந்துவிட்டன. நமது சிங்காரக்கதைகளி லிருப்பதுபோல் இதில் வன்சஞ்சாரங்களைக் குறித்தும் ஜலக்கிரீடைகளைக் குறித்தும் காதலர் காதலிகள் அன்னியோன்னியங்களைக்குறித்தும் இன்னும் இத்தகைய வர்ணனைகள் ஒன்றும் காணப்படா. ஸ்திரீகள் சுயர்ச்சையாய்த் தங்கள் தோழிகளுடன் வனசஞ்சாரம் செய்யுங் கதைகள் கனவிற்காணும் கதைகள்தான்; ஜலக்கிரீடைகள் புஸ்தகங்களில் தானிருக்கின்றன. இப்போது குழந்தைகள் பொம்மைக்கலியாணம் செய்வதுபோல, தாய்தகப்பன்மார் தாங்கள் பார்த்து சந்தோஷமடைவதற்காகபேசத் தெரியாக் குழந்தைகளுக்குகலியாணம் செய்து அவர்களைச்

சிங்காரித்துபல்லக்கில் ஊர்கோலம் செய்து இன்னும் வேடிக்கைகளெல்லாம் செய்கிறார்கள். ஆகையினால் இந்த நிஜமான சரித்திரத்தில் இக்காலத்தில் நமது குடும்பங்களில் நமது அனுபவத்தில் சாதாரணமாய் காணும் விஷயங்கள்தவிர இந்திர ஜாலங்கள் ஒன்றும் காணப்படா. ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கும். கற்பனைக்கதைகளைக்கேட்ட உங்கள் காதுக்கு. இந்த உண்மையான கதை இனிமையாயிருக்குமானாலும் இதைப்படித்து ஆநந்திக்கவும் இதில் வர்ணிக்கப்பட்டிருக்கும் கதாநாயகர் நாயகிகளுடைய நடவடிக்கைகளை யனுசரிக்கவும் உங்களுக்கு வேண்டிய சுதந்தரமுண்டு.

சத்தியவதி நாராயணமூர்த்தியின் பெண்சாதி; முக்கொண்டா அக்கிரஹாரத்தில் வசிக்கும் லக்ஷ்மீநாராயணபந்துலுவுடைய இரண்டாவது மருமகள், முக்கொண்டா அக்கிரஹாரம் என்பது கொனசீமயம் தமலாபுரத்திற்கு அருகிலிருக்கிறது. லக்ஷ்மிநாராயணபந்துலு பரமசாது, அக்கிரகாரத்தில் அவரிருக்குமிடங்கூட தெரியாது. சிலருக்கு அவருடையபேர்கூட்டதெரியாது. ஆயினும் அந்தகிராமத்தில் அவருடைய மனைவியின் பெயரை அறியாதவர்கள் யாருமில்லை. அந்தம்மாள் கிணற்றிற்குவரும்போதே ஜலமெடுக்கும் சூத்திரஸ்திரீகளெல்லாம் மேலேஜலம்விழுந்தால் யசோதம்மாள் சண்டைபிடிப்பளென்று நீர்க்குடங்களை மேலே எடுத்துக்கொண்டு தூரமாய் ஒதுங்கி, நின்று கொள்வார்கள்; மடிஜலதிற்காக ஏரிக்குப்போனால் பிள்ளைகள் இவள்வரவை தூரத்திலிருந்து பார்த்து பயத்தோடு எல்லோரும் நீந்துவதை நிறுத்திவிட்டு ஓடிப்போவார்கள். கிராமத்தில் குழந்தைகள் யாராவது ஆகாத்தியம்செய்தால் யசோதம்மாளிடத்தில் விட்டுவிடுவேனென்று தாய்மார்கள் அவர்களை பயமுறுத்துவார்கள். அவளுடைய பிரசித்தியினால் கிராமத்தில் அநேகர் லட்சுமிநாராயண பந்துலுவை யசோதம்மாள் புருஷனென்பார்களேயொழிய யாரும் பேர்சொல்லி அழைக்கமாட்டார்கள்.

லக்ஷ்மீநாராயண பந்துலுவுக்கு நான்கு குமாரர்கள். அவர்களில் பெரியவன் பெயர் வெங்கடேஸ்வரன், இரண்டாவதவன் பெயர் நாராயணமூர்த்தி என்று உங்களுக்கு முன்பே தெரியும், மூன்றாவது குமாரன் ராமசுவாமி, அவனுக்கு இளையவன் பெயர் சுப்பிரமணியன். இந்த நான்கு புத்திரர்களைத்தவிர இரண்டு பெண்களுண்டு. அவர்களுள் பெரியவள் சாவித்திரி சின்னவள் சீதா.



வெங்கடேஸ்வரனுக்கு இப்பொழுது 27 வயது. நமது தேசவழக்கத்தின்படி சிறுவயதிலே காளிதாசதிரியம் படித்தானே யொழிய காவியபாடங்களில் அவனுக்கு சிரத்தையில்லாமல் போனபடியினாலும், படிப்பதைப்பார்க்கிலும் குரு உபசாரம் செய்தலிலேயே விசேஷகாலத்தை கழித்தமையாலும், சம்ஸ்கிருதம் அவனுக்கு பிடிக்கவேயில்லை; ஆகையால் கொஞ்சம் கணக்குப்போடுவதற்கும், செவ்வையாய் எழுதுவதற்கு மாத்திரம் அவன் கற்றுக்கொண்டான். அவனிப்பொழுது ஒரு கணக்கனிடத்தில் குமாஸ்தாவாகவிருந்து மாதம் 10 ரூ. சம்பாதித்துக்கொண்டிருக்கிறான். அவன் மதத்தில் ஸ்மார்த்தனாக விருந்தாலும் வைஷ்ணவர்களுடைய சகவாசத்தினால் விஷ்ணு பக்தி முதிர்ந்து கழுத்து நிறைய துளசிமாலைகளையணிந்துகொண்டும், பெரியநாமங்களைத் தரித்துக்கொண்டும் ஹரிபக்தனென்று சொல்லிக்கொண்டிருந்தான். அவன் மனைவியின் பெயர் சுந்தரம்மாள். அவளுக்கு படிப்புவாசனையில்லை, ஆகையினால் சிலசமயங்களில் சண்டைபோட்டுக் கொண்டிருந்தாலும் புருஷன் பெண்சாதியிருவரும் மனங்கலந்து ஒருவார்த்தையாயிருப்பார்கள். அந்ததம்பதிகளுக்கு ராமானுஜமென்ற இரண்டுவயதுக்கு மேற்பட்ட ஒரு பெண் உண்டு.

இன்னும் வரும். K. G. V.

---

## ஸிம்பலைன்.

கைடிரியஸ்:—ஐயோ! அதிர்ஷ்டம் நிலையில்லாததா யிருக்கிறதே!

பெலாரியஸ்:—நான் முன்னுரைத்தபடி என்பேரில் கொஞ்சமாகிலும் குற்றமில்லை. நான் ஸிம்பலீனுக்கு விரோதமாய் ரோமன் ஜாதியாரோடு சேர்ந்திருந்தேனென்று இரண்டு துரோகிகள் சத்தியம்பண்ண, நான் உள்ளதைச்சொல்லியும் என்னை மதியாது அத்துரோகிகள் சொன்னவற்றை அரசன் நம்பி என்னை நாட்டைவிட்டுப் போவென்று துறத்திவிட்டான். அது முதல் இருபது வருஷகாலமாக இந்தக்குகையை வீடாகவும், இந்த மலையை எனக்கு உலகமாகவும் நினைத்துக்கொண்டு வசிக்கிறேன். இந்த இடத்தில் என்னுடைய இளமைப் பருவத்திலிருந்ததைப்பார்க்கிலும், அதிக தெய்வபக்தியோடு ஒருவருடைய கட்டுக்குள்படாமல் சுயேச்சையாயும் யோக்கியமாயும் காலத்தைக்கழித்துக்கொண்டு வருகிறேன். வேடர்களுக்கு இதைப்பற்றிப் பேசவேண்டாம். நம்முடைய காரியத்தைப்பார்ப்போம். சீக்கிரம் மலைக்குப்போய் வேட்டையாடி யார்முதலில் மிருகத்தையடிக்கிறானோ அவன் தான் இன்றையவிருந்துக்கு பிரபுவாகவேணும்; மற்றவர்கள் அவனுக்கு

வேலைசெய்து மாம்சத்தைத் தயாராக்கிக் கொடுக்கவேணும். பெரிய இடங்களில் பயப்படுவதுபோல யாராவது விஷத்தைச் சேர்ப்பார்களோ வென்று இங்கேநாம்பயப்படவேண்டாம். நான் உங்களைப் பள்ளத்தாக்குகளில் சந்திப்பேன்,

என்று சொல்ல இரண்டு பிள்ளைகளும் போய்விட்டார்கள். அப்பொழுது,

**பெலாரியஸ்** :—இயற்கையாயுள்ள குணங்களைமறைத்தல் எவ்வளவு அரிதாயிருக்கிறது! இந்தப்பிள்ளைகளுக்கு, தாங்கள் யாருடைய பிள்ளைகளென்று சிறிதேனும் தெரியாது, அவர்கள் என்னுடையபிள்ளைகளென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை இவ்வளவு இழிவான குகையில் வளர்த்தாலும் அவர்களுடைய எண்ணங்களோ அரண்மனையின் கூரையைப்பார்க்கிலும் உயர்ந்து போகின்றன. அற்ப காரியங்களில்கூட சாதாரணப்பிள்ளைகளைப் போலிராமல் சிற்றரசர்களைப்போல் எண்ணம்போகிறது. பாலிடோர்என்று நான் கூப்பிடும் இந்தகைடீரியஸிடத்தில் என்னுடைய வீரத்தன்மையைச் சொல்லும்போது, தன்னுடையமனதை வேறேயிடத்தில் செலுத்தாமல் நான் சொல்லுகிறதைக் கவனவாய்க்கேட்டு அதிக உற்சாகத்துடன் குதித்துவிளையாடுகிறான். திருஷ்டாந்தமாக—"என்னுடையஎதிரி என் கத்திக்கிரையாகி இவ்விதமாக என்காலில் விழுந்தான். நான் இவ்விதமாக அவன் கழுத்தில் என்காலால்மிதித்தேன்." என்று சொல்லும்போது சிற்றரசர்களுக்கு இயற்கையாயுள்ள இரத்தம்விரைவில் அவன் முகத்தில் ஓடி, வேர்வையால் முகமெல்லாம் நீர்த்துளியாக, நரம்புகளெல்லாம் படபடென்று துடிக்க, நான் சொன்னவற்றைச் செய்பவனைப்போல் பாவனைகாட்டுவன். காட்வால் என்று நான் கூப்பிடும் இவன் தம்பியாகிய ஆர்விராகஸ் என்பவனும் கைடீரியஸுடைய குணங்களையுடையதாய் நான் கதை சொல்லும்போது, அதையுற்றுக் கேட்டு நெஞ்சு படபடெனத்துடித்தும் தன்தைரியத்தைக் காட்டுவன். ஏ, ஸிம்பலீன், அந்யாயமாக என்னை நாட்டைவிட்டுப் போகச் சொல்லி என்சொத்துக்களை யிழக்கச்செய்து தெய்வத்துக்கும் உன் மனதுக்கும் நன்றாகத்தெரியும். அதினால் நீயடைகிற துன்பமோ நான் படுகிறதைபார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாக விருக்கிறதென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். இவ்விதம் அநேக காலமாக வேட்டையாடித் தங்களுடைய காலத்தைக்கழித்துக் கொண்டுவந்தார்கள். இமோஜன் குகையில் வந்த தினத்திலும் வேட்டையாடப்போய், அவள் தின்பண்டங்களைப் புசித்துக் களைப்புதீர்ந்திருக்கிற சமயத்தில் இம்மூவர்களும் வேட்டைகழிந்து திரும்பி யங்கேவர,



**பெலாரியஸ்** :—ஏ, பாலிடோர், இன்றையதினம் வேட்டையில் நீசமர்த்தனாய். ஆகையால் இன்று விருந்துக்கு நீ பிரபுவாயும் காட்வாலும் நானும் உன்னுடைய வேலைக்காரர்களாயு மாய்விட்டோம். இது நாம் செய்த உடன்படிக்கை நமக்குப் பின்னால் வரக்கூடிய வெகுமதியையும் லாபத்தையும் கருதாமற்போனால் வேலைசெய்கிறது கஷ்டமாகத் தோன்றும். வாருங்கள், நம்முடைய பசியோ அதிகமாய்விட்டது. பசியிருந்தால் எந்தப்பதார்த்தத்தையும் தேவாமிர்தம்போல் புசிக்கலாம்; ஏனென்றால் "நித்திரை சுகமறியாது" என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். களைப்புள்ளவனுக்கு ஒருகல் நல்ல மெத்தையாகத்தோன்றும்; சோம்பேறிக்கோ நல்ல மெத்தையும் கல்லாகத் தோன்றும். ஆகையால் நாம் இப்போது வேட்டையாடிக் கொண்டுவந்ததைத் திருப்தியுடன் புசிப்போம், வாருங்கள்,நேரமாய்விட்டது.

**கைடீரியஸ்** :—ஐயோ! நான் முற்றிலும் களைத்துப் போய்விட்டேன்.

**ஆர்விராகஸ்** :—இன்று அடைந்த சிரமத்தினால் பலவீனமாய்ப் போய்விட்டேன். பசியோ நரம்பைத்தின்னுகிறது.

**கைடீரியஸ்** :—குகையில் பழைய மாம்சமிருக்கிறது. இப்பொழுது கொண்டுவந்ததைத் தயார்செய்கிறதற்குள், அதைச் சந்தோஷமாய்ச் சாப்பிடுவோம்.

**பெலாரியஸ்** :—(குகைக்குள்பார்த்து) நில்லுங்கள், உள்ளேவரவேண்டாம். உள்ளே யாரோ ஒருவன் இருக்கிறான். அவன் நம்முடைய மாம்சத்தைப் புசித்திராமற்போனால் அவனை ஒருதெய்வமென்று சொல்லலாம்.

**கைடீரியஸ்** :—பிதா, விசேஷமென்ன!

**பெலாரியஸ்** :—பிரகஸ்பதியின்பேரில் ஆணையிடுகிறேன்; இவன் தெய்வதூதனோ, அல்லது உலகத்திலுள்ள தெய்வத்துக்குச் சமானமானவனோ தெரியவில்லையே. ஆ! அவனிடத்திலுள்ள தெய்வத்தன்மையைப் பார், சிறுபிள்ளையாகத் தானிருக்கிறான்—

[இமொஜன் வெளியிலே வருகிறாள்.]

**இமோஜன்** :—பிரபுக்களே! புண்ணியவான்களே! என்னை உபத்திரவப்படுத்தவேண்டாம்; நான்குகைக்குள் போகிறதற்குமுன் கூப்பிட்டேன். யாராவதிருந்தால் கொஞ்சம் தின்பண்டங்களையாசித்தாவது, அல்லது விலைக்குவாங்கியாவது சாப்பிடலாமென்று நினைத்திருந்தேன். கூப்பிட்டதற்கு ஒருவரும் பதில்சொல்லவில்லை.. குகைக்குடையவர்

கள் வந்தபின் சாப்பிடலாமென்று நினைத்திருந்தேன். பிரயோசனமில்லாமற் போய்விட்டது; ஏனென்றால் நான்பசியினால் வாடித்துடித்துப்போனேன். நான் ஒன்றையும் அபகரிக்கவில்லை. இவ்விடத்தில் நவரத்னங்களை வெளியிலே போட்டிருந்தாலும் அதைக்கவர்ந்துபோக என்மனம்இசையாது. நான் சாப்பிட்டதின்பண்டங்களுக்கு இதோபணம் எடுத்துக்கொள்ளுங்கள். நான்சாப்பிட்டவுடன் பணத்தைஇவ்விடத்தில் வைத்துவிட்டுப்போயிருக்க வேண்டியது. அதிகமாகக் களைத்துப்போனதினால்இதைவிட்டுப்போகவில்லை. தயவுசெய்து இந்தப்பணத்தை யெடுத்துக்கொண்டு அநுதியாகவந்த என்னை க்ஷமிக்கவேணும்.

**கைடிரியஸ்** :—சிறுவனே! பணமா? பணமென்றால் என்ன, பிதா! இச்சிறுவன் பணம்தருகிறேனென்று சொல்லுகிறான் பணம்என்றால் என்ன?

**பெலாரியஸ்** :—பணம்,செம்பு, பொன், வெள்ளியினால் செய்யப்படுகின்றது. உலகத்தில் ஒரு பதார்த்தம் வேணுமானால் பணத்தைக்கொடுத்து வாங்குவார்கள். இச்சிறுவனும் நம்முடைய மாம்சத்தைத்தின்றதினால் பணம்தருகிறேனென்று சொல்லுகிறான்.

**ஆர்விராகஸ்**:—தங்கமும் வெள்ளியும் யாருக்குவேணும். அவைகள் தூளைப்பார்க்கிலும் அதிகபிரயோசனமற்றதாக நினைக்கிறோம். எங்களுக்குப் பணம்வேண்டாம். நீயேயெடுத்துக்கொள்.

**இமோஜன்** :—கோபித்துக் கொள்ளவேண்டாம்; நான் அப்பொழுது சாப்பிடாமலிருந்தால் நிச்சயமாய் இறந்து போயிருப்பேன்.

**பெலாரி** :—எங்கேபோகிறதற்கு வந்தாய்?

**இமோ** :—மில்போர்ட்ஹேவனுக்கு.

**பெலாரி** :—உன் பெயர் என்ன?

**இமோஜன்** :—ஐயா! என் பெயர் **பைடிலி**. என்னுடைய சினேகிதன் ஒருவன் இட்டாலிக்குப் போகவேணுமென்று புறப்பட்டு **மில்போர்ட்ஹேவனில்** தங்கியிருக்கிறான். நான் அவனைப்பார்க்கப்போகிறபோது வழியில் பசியினால் அதிக வருத்தப்பட்டு இக்குற்றத்தைச் செய்தேன்.

**பெலாரி** :—பிள்ளாய்! வசிக்கிற இடத்தைப்பார்த்து, நாங்கள் சாட்டுமனிதர்களென்றும், எங்களிடத்தில் நல்ல குணங்கள் கிடையாதென்றும் நினைக்கவேண்டாம்; நல்ல சமயத்தில் இங்கேவந்தாய், இராத்திரியாய் விட்டது. இதைவிட்டுப்புறப்படு முன் உனக்கு நல்லவிருந்து செய்ய வேணும். அதைச் சாப்பிட்டுவிட்டுப் போகலாம். பிள்ளைகளே! இவனுக்கு உபசாரம் செய்யுங்கள்.



**கைடிரியஸ்** :—வாலிபனே! நீ ஒரு பெண்ணாய்ப் பிறந்திருந்தால் உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ள எவ்வளவுதூரம் கெஞ்சி ஒரு வேலைக்காரனைப்போல உனக்குப் பணிவிடைகள் செய்வேன்.

**ஆர்விராகஸ்** :—இவன் ஒரு ஆண் என்று மனதில் சமாதானப்படுத்திக் கொள்ளுகிறேன். ஏனென்றால் பெண்ணானால் கலியாணஞ்செய்துகொள்ள, என் சகோதரன் சொன்னபடி அதிகக்கஷ்டப்பட்டு உழைக்கவேணும். ஆணாயிருந்தால் இப்பொழுது அவனை சீக்கிரத்தில் இஷ்டனாகவைத்துக்கொண்டு அதிகப்பிரியமாயிருப்பேன். அநேககாலமாக நம்மைவிட்டுப் பிரிந்து திரும்பிவந்தவனுக்கு எவ்வளவு உபசாரம் செய்யவேணுமோ அவ்வளவு உபசாரம் இவனுக்கும் செய்யவேணும். சந்தோஷத்துடனிங்கேயிரு; நீ மித்திரர்களிடத்திலிருக்கிறதுபோல நினைத்துக்கொள்.

**இமோஜன்** :—(தனக்குள் சொல்லுகிறாள்) இவர்கள் என்னுடைய சகோதரர்கள் தானோ தெரியவில்லையே, அப்படியானால் **பாஸ்துமஸ்** வேறே யாரையாவது கலியாணம் பண்ணிக்கொள்ளவேணும். ஏனென்றால் அவன் நினைத்தபடி நான் பட்டஸ்திரீயாக மாட்டேன்.

**பெலாரி** :—ஐயோ! அவன் எதையோ நினைத்து வருத்தப்படுகிறான்.

**கைடீ** :—அந்த வருத்தத்தை நான் தீர்க்கிறேன்.

**ஆர்விராகஸ்** :—என் உயிருக்கு அபாயம்வந்தாலும் நான் அதைத்தீர்க்கத் தயாராயிருக்கிறேன்.

**இமோஜன்** :—இவ்விருவர்களுக்குச் சமானமாக உலகத்தில் ஒருவரையும் காணமுடியாது. **பாஸ்துமஸ்** எனக்குத் துரோகஞ் செய்ததினால் என்ரூபத்தைமாற்றி இவர்களுடைய தோழனாகவிருக்கிறதினால் தான் என்ன? ஒரு தோஷமுமில்லை.

**பெலாரியஸ்** :—பிள்ளைகளே! நாம் கொண்டுவந்த மாம்சத்தைப் பாகஞ்செய்து சாப்பிடுவோம். பசியுடன் பேசிக்கொண்டிருக்கவேண்டாம் உண்டபின் உன் வரலாற்றைக் கேட்கிறோம் என்றுசொல்லி பசியாற உண்டு இன்புடனிருந்தார்கள். அடுத்தநாள் காலையில் வழக்கப்படி இம்மூவர்களும் வேட்டைக்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது,

**பெலாரியஸ்**:—(இமொஜனைப்பார்த்து.) உனக்கு உடம்பு சௌக்கியமில்லை. நீ இந்தக்குகையிலே இரு, எங்கள் கூடவரவேண்டாம். நாங்கள் வேட்டையாடிச் சீக்கிரம் இங்கே வருவோம்.

**ஆர்விராகஸ்** :—(இமோஜனைப்பார்த்து) இங்கே தங்கியிரு, தம்பி! நாங்கள் போகிற இடத்துக்கு நீ வரவேண்டாம். நாம் சகோதரர்கள் அல்லவா. நான் சொல்வதைத் தயவு செய்து கேள்.

**இமோஜன்**:—மனிதர்களெல்லாரும் சகோதரர்கள் தான். களிமண் ஒன்றுக்கொன்று வித்தியாசப் படுகிறது. ஆனால் அவைகளின் பொடிகளெல்லாம் ஒன்றுதான்; அதே மாதிரியாக நாமெல்லாரும் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தாலும் கடைசியாக நாமனைவரும் சகோதரர்கள்தான். எனக்கு உடம்பு சௌக்கியமில்லை, ஆகையால் நான் இங்கே இருக்கிறேன். நீங்கள் வேட்டையாடி வாருங்கள்.

**கைடீரியஸ்** :—நீங்கள் வேட்டைக்குப்போங்கள். நான் இவனுக்குத் துணையாக இங்கேஇருக்கிறேன்.

**இமோஜன்** :—நீ இங்கே இருக்கும்படியாய் அவ்வளவுவியாதியஸ்தனாயில்லை. என்னைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். வியாதிவருகிறதற்குள் இறந்து போகும்படியாய் அவ்வளவு சுகத்தில் வளரவுமில்லை. ஆகையால் என்னை நீங்கள் விட்டுவிட்டுப்போகலாம். வழக்கப்படி உங்கள் காரியங்களை நிறைவேற்றுங்கள். எனக்கு சௌக்கியமில்லை; நீங்கள் கிட்ட இருந்தாலும் சுகமாகப்போகிறதில்லை. என்னைப்பற்றிக்கவலைப் படவேண்டாம். என்பேரில் நம்பிக்கையுடன் போங்கள். என்னைத் தவிர வேறொன்றையும் இவ்விடத்திலிருந்து நான் அபகரிக்கமாட்டேன். நீங்கள் வேட்டைக்குப்போய் வாருங்கள்.

**கைடீரியஸ்** :—நான் உன்னைநேசிக்கிறேன், உன்னிடத்திலும் சொன்னேன். என்பிதாவிடத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேனோ, அதே மாதிரியாக உன்னிடத்திலும் பிரியமாயிருக்கிறேன்.

**பெலாரியஸ்** :—என்ன சொன்னாய்! எப்படி!! எப்படி!!!

**ஆர்விராகஸ்** :—கைடீரியஸ் சொன்னது பாவமானால்; நாங்கள் இருவரும் ஒரேகுற்றத்துக்குள்ளாகிறோம். இவனிடத்தில் ஏன் இவ்வளவுபிரியமாயிருக்கிறேனென்று எனக்கேதெரியவில்லை. பிரியத்துக்குக்காரணமில்லையென்று அனேகந்தரம் நீங்கள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறீர்கள். கையில்வாளைவைத்துக்கொண்டு, என்னிடத்தில் பிதா இறக்கவேணுமோ அல்லது இந்தப்பையன் இறக்கவேணுமோ வென்று கேட்டாலும், என்உயிரைவெறுத்து கொஞ்சமாகிலும் அச்சமின்றி என் பிதா இறந்துபோகட்டும், இவனைக் காப்பாற்றவேணுமென்று நிச்சயமாய்ச் சொல்வேன். பிதா இதற்காக என்னைக் கோபித்துக்கொள்ள வேண்டாம்.



**பெலாரியஸ்** :—(தனக்குள் சொல்லுகிறான்) ஆ! என்ன பெருந்தன்மையான குணம்! இயற்கையின் செல்வமே!! பெருந்தன்மையின்வடிவே!!! "இனம் இனத்தோடு வெள்ளாடு தன்னோடு" என்ற பழமொழி இப்பொழுது தான் தெரிகிறது. உலகத்தில் நல்ல அன்னமும், உமியும், அனுக்கிரகமும், நிந்தித்தலும் உண்டு. நான் அவர்களுடைய பிதா அல்ல. ஆனால் இந்த மனிதன் யாரோ தெரியவில்லை. என்னிடத்தில் இருக்கவேண்டிய பிரியத்தைப் பார்க்கிலும் இவனிடத்தில் அதிகப் பிரியமாயிருக்கும்படி செய்த இந்த மகானுபாவன் யாரோ தெரியவில்லையே.

**ஆர்விராகஸ்** :—தம்பி! நான் வேட்டையாடி வருகிறேன்.

**இமோஜன்** :—சந்தோஷமாய்ப் போய்வாருங்கள்.

**ஆர்விராகஸ்** :—உன் உடம்பை நன்றாய்ப் பார்த்துக்கொள் இதோ சீக்கிரம் வந்துவிடுகிறோம்.

**இமோஜன்** :—[தனக்குள் சொல்லுகிறாள்] இவர்கள் எவ்வளவு பக்ஷமாயிருக்கிறார்கள். தெய்வமே! உலகத்தார் கடும்பொய் சொல்லுகிறார்கள்! அரண்மனையிலுள்ளவர்களைத் தவிர மற்றவர்களுக்கு நல்ல குணங்கள் கிடையாது, காட்டு ஜனங்களுக்குண்டான குணங்கள்தான் உண்டென்று சொல்லிக் கேட்டிருக்கிறேன். உலகப் பயிற்சியானது இதற்கு நேர் விரோதமாக ருஜுக்காட்டுகிறது. பெரிய கடல்களில் பெரிய மீன்களைக் காணலாம். ஆனால் சாப்பிடுகிறதற்கு உபயோகப்படுகிற மீனோ சிறு ஆறுகளிலிருந்துதான் கிடைக்கிறது. அதேமாதிரியாக இச்சிறுவர்களுடைய குணங்களையும் இப்பொழுது கண்டேன். ஐயோ! உலகத்தார் என்ன அநியாயவார்த்தைகளையும் பொய்யையும் சொல்லுகிறார்கள். எனக்கு மனோவியாதி பிடித்துவிட்டது. பிஸானியோ! நீ தந்த மருந்தில் கொஞ்சம் சாப்பிடுகிறேன்.

(கொஞ்சம் சாப்பிடுகிறாள்.)

**கைடீரியஸ்** :—அவனுடைய சரித்திரத்தைச் சொல்ல அவனுக்கு மனம் இசையவில்லை. ஆனால் அவன் ஒரு பெரிய குடியிற்பிறந்து, அதிர்ஷ்டமில்லாமல் போனதாய்ச் சொன்னான்; துரோகிகளால் இந்த ஸ்திதியிலானான். நல்லயோக்கியன்.

**பெலாரியஸ்** :—காட்டுக்குப் போங்கள். குழந்தாய்! உன்னைவிட்டுப்போய் வேட்டையாடிச் சீக்கிரம் வருகிறோம். உள்ளேபோய் உன்களைப்பைத்தீர்த்துக்கொள்.

**ஆர்விராகஸ்** :—நாங்கள் சீக்கிரம் திரும்புவோம்.

பெலாரியஸ் :—நீஅதிகவியாதியஸ்தனாகப்போகக்கூடாது. ஏனென்றால் எங்களுக்கு வீட்டுக்காரியங்களைச் செய்து சந்தோஷத்தைத்தரவேணும்.

இமோஜன் :—வியாதியாயிருந்தாலும், சௌக்கியமாயிருந்தாலும், உங்களுக்கு இந்தவேலையைச் செய்யக்கட்டமைப்பட்டிருக்கிறேன், செய்யவும் தயாராயிருக்கிறேன்.

பெலாரியஸ் :—(இமொஜன் குகைக்குள் போகிறாள்) இந்தப்பையன் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், நல்லவம்சத்தில்பிறந்தவனென்று தோன்றுகிறது.

ஆர்விராகஸ் :—தெய்வப்பெண்ணைப்போல் இவன் நம்முடைய மாம்சாதிகளைத்தயாராக்குகிறான்.

கைடீரியஸ் :—நம்முடைய பதார்த்தங்களையும், கிழங்குகளையும் விநோதமாய்த்துண்டித்து வெகுநேர்த்தியாகப் பாகஞ்செய்கிறான். இவ்விதம் பாகஞ்செய்ததை இதுவரையில் நான் கண்டதேயில்லை.

பெலாரியஸ் :—நாழிகையாய்விட்டது வாருங்கள் சீக்கிரம். [இப்படி பேசிக்கொண்டு சிறிது தூரம் போகும்போது, ஓரிடத்தில் க்லோட்டனைச் சந்தித்தார்கள். அவன் அங்கேவந்தவிஷயத்தைப்பற்றிச் சுருக்கமாகச்சொல்வோம்.]

வி. கோபால ஐயங்கார் பி.ஏ.

## இந்தியா மாதர்களுக்கு ஒரு ஆங்கிலப்பத்திரிகை.

ஜூலைமீ முதற்கொண்டு இந்தியமாதர்களுக்கென்று ஓர் தனிமையான மாதாந்திரப்பத்திரிகை ஆங்கிலத்தில் மிஸ்ஸஸ் சத்தியநாதன் எம். ஏ. அவர்களால் பிரசுரிக்கப்படும். சுயபாஷையில் வெகுசில பத்திரிகைகள்தானிருக்கின்றன. அவைகளை மிகசொற்பஜனங்கள் வாங்கிபடித்து வருவதால் இந்தியாவிலுள்ள எல்லா ஸ்திரீகளுக்கும் உபயோகமானதல்ல. புருடர்கள் ஆங்கிலத்தில் விருத்தியடைந்து வருவதுபோலவே சில ஸ்திரீகளும் கல்வியில் விருத்தி அடைந்து வருகிறார்கள். ஸ்திரீகளில் பெரும்பான்மையோர் படிக்காதவர்களாயிருந்த போதிலும் சிறுபான்மையோர் ஆங்கிலம் கற்று யூனிவர்சிடி பரீக்ஷைகளிலும் தேறி கௌரதபட்டங்களையும் பெறுகிறார்கள். இவர்களாலே மற்ற பெண்மணிகளுக்கு பற்பல உதவிகள் செய்யப்படும்; இவர்களுக்கு ஒரு பத்திரிகை தனிமையாக யிருந்தால் மிகவும் நல்லது. இந்த பத்திரிகையில் இந்தியா ஸ்திரீகளைக்குறித்து அக்கரை எடுத்துகொள்கிற ஐரோப்பிய மாதர்கள் தங்கள் சகோதரிகளின் அபிவிருத்தியைப்பற்றி பற்பல மார்க்கங்களில் உழைத்தும்



பாடுபட்டும்வருகிறார்கள். இந்த பத்திரிகை இந்தியமாதர்களுக்கும்நமக்காக உழைத்துவரும் ஐரோப்பியமாதர்களுக்கும் உபயோகமுள்ளதாகும். கல்வி, நாகரீகம், ஜனோபகாரம், முதலியவைகளின் விருத்தாபிவிருத்தி முதலியவைகளும், இந்து சாஸ்திரத்தில் சொல்லிய ஸ்திரீகளின் தர்மமும் எழுதப்படும். இந்திய ஸ்திரீகளின் நடவடிக்கைகள் கதா பூர்வமாகவும் எழுதப்படும். ஐரோப்பிய ஸ்திரீகள் இந்திய ஸ்திரீகளுக்காக செய்து வரும் ஜனோபகாரமான காரியங்களும், இந்திய ஸ்திரீகளால் தங்கள் சகோதரிகளுக்குச் செய்துவரும் நன்மையான விஷயங்களும் பிரசுரிக்கப்படும். இந்து மனைவிகளும் தாய்மார்களும் செய்யவேண்டிய உபயோகமான காரியங்களும், குடும்பவிஷயமான விஷயங்களும், பாகசாஸ்திரம், தையல்வேலை, குழந்தைகளைப் பாதுகாத்தல் முதலியவைகளும் வெகுஜாக்கிறதையாக எழுதப்படும், இதை யாவரும் விருத்தி செய்வார்கள் எனநம்பப்படுகிறது.

வேண்டியவர்கள் "இந்தியன் லேடிஸ் மேகாஸின் மானேஜர் ராயப்பேட்டை சென்னை" என்று எழுதவேண்டும். இது 24 பக்கங்களடங்கிய ஒரு புஸ்தகமாகவிருக்கும். இதன் வருட சந்தா 4 ரூ.

## தென்னாலுராமன் கதை.

### I

### விகடகவியானவிதம்.

வடதேசத்தில் தென்னாலுவென்றவூரில் இராமன் என்று ஒரு பிராமணப்பிள்ளைபிறந்தான். ஒரு நாள் ஒரு தெருவிலே ஒரு சந்நியாசி இவனைக் கண்டு, இவனுடைய ரூபத்தையும், குணாதிசயத்தையுங் கண்டு ஆச்சரியப்பட்டு ஒருமந்திரத்தையுபதேசம்பண்ணியபின் "அப்பா! மகனே! இந்த மந்திரத்தை மூன்றுகோடிதரம் ஒரு இராத்திரியிலே காளியம்மன் கோயிலிலே போய் ஜெபித்தாயானால், ஆயிரமுகத்துடன் அம்மன் உனக்குப் பிரத்தியட்சமாவாள். அப்பொழுது நீ அவளைக்கண்டு பயப்படாமல் இருந்து வேண்டியவரங்களைப் பெற்றுக் கொள்" என்று சொல்லிவிட்டு போய்விட்டார். இராமன் அன்று முதல் தன்னூருக்கருகாமையிலுள்ள காளிகோவிலுக்குப்போக நல்ல வேளைப்பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு நல்ல தினத்தில் காளிகோவிலுக்குள்ளேபோய் அந்த சந்நியாசி உபதேசித்தமாதிரி ஜெபம் பண்ணினான். பத்திரகாளியானவள் ஆயிரமுகம், இரண்டுகையுமாகப் பெரிய பயங்கரமான ரூபத்தை யெடுத்துக்கொண்டு பிரசன்னமானாள். அப்போது மிகுந்த தைரியமுடையவனாகிய அச்சிறுவன் அவள் கோரத்தைப் பார்த்து அஞ்சாமல் நகைத்தான். "ஏண்டா நகைக்கிறாயென்று" பயங்

கரமான தொனியுடன் காளி கேட்டாள், "அம்மா! மனிதர்களாகிய எங்களுக்கு ஒரு மூக்குக்கு இரண்டு கைகளிருந்துஞ் ஜலதோஷங்கண்டால் சிந்த வருத்தமாயிருக்கிறது. உமக்கு ஆயிரமுக மிருக்கிறபடியால் ஒரு வேளை ஜலதோஷங்கண்டால் இரண்டு கையினாலே இந்த ஆயிரமூக்குகளையும் எப்படி சிந்துவாய்," என்று இராமன் மறுமொழி பகர்ந்தான். விகடமாய் சொன்ன பையனது வார்த்தையினால் சந்தோஷப்பட்டு "அடா பையா! நீ என்னைப்பார்த்து விகடம் பண்ணினபடியால் நீ இன்று முதலாக விகடகவி யாகப் போகக்கடவாய்" என்று பத்திரகாளி சொன்னாள். "மகாதேவி, ஆ! ஆ!! நல்லவரங் கொடுத்தாய்!!! வலதுபக்கத்திலிருந்து இடதுபக்கம் வரையிலும் பார்த்தாலும் விகடகவிதான். இடதுபக்கத்திலிருந்து வலதுபக்கம் வரைக்கும்பார்த்தாலும் விகடகவிதான்" என்று தைரியமாக உடனே சொன்னான். இவ்விதம் இச்சிறுவன் சொன்னதைக் கேட்டு மிகமகிழ்ந்து இவன்மேல் இரக்கம் வந்து "உன்னுடைய புத்திக்குச் சரியாகவே இராஜசபை மெச்சும்படியான விகடகவி யாயிருக்கக்கடவாயென்று," சொல்லியபின் மறைந்து போய் விட்டாள். அன்று முதல் இவன் விகடம் செய்வதிலேயே வெகு சமர்த்தனாகி இராய* ரிடத்திலே போய்ச் சேர்ந்து ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தான்.

* இராயர் :—விஜயநகர இராஜவம்சத்தைச்சேர்ந்த ஒரு அரசன், இவர் ஹம்பி என்ற ஊரில் கி.பி. 16 வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசாண்டு வந்தவர்.

## இந்தியாவிற் பெண்களின் தொகை யேன் அதிகப்படவில்லை.

"இந்த வருஷம் எடுக்கப்பட்ட ஜனத்தொகைக் கணக்குப்படி கிரமமாய் அதிகமாயிருக்க வேண்டிய ஜனத்தொகையில் சுமார் 300 லட்சம் ஜனங்கள் கம்மிப்பட்டிருத்தல் காணப்பட்டது. இதற்குப் பஞ்சமும் விஷசுரமும் கொஞ்சக்காலமாக ஜனங்களை விடாது பிடித்து வருகிறதே காரணமென்று சொல்லப்படுகிறது. மேலும் சென்ற 20 வருஷக்காலமாகத் தேசத்தில் சகலசாமான்களும் விலையேறி விற்பதால் ஏழைகள் ஜீவனம்செய்வதே கஷ்டமாயிருக்கிறது. அவர்கள் கலியாணஞ் செய்து கொள்ளுவது அருமையாகி, அப்படிக் கலியாணம் செய்து கொண்டாலும், சரீரபுஷ்டியில்லாமற் பிரஜோற்பத்தியும் உண்டாவதில்லை. இப்படிப்பல துக்ககரமான காரணங்களால் ஜனவிருத்தி குறைந்திருந்தாலும், பெண்களின் விருத்தியே அதிகமாகக் குறைந்திருக்கிறதாகத் தெரிகிறது. பொதுவாய் நாகரீகமும் செழிப்பும் நிலைத்திருக்கும் தேசங்களில் ஆண்களைவிடப் பெண்களே அதிகப்பட்டிருப்பது வழக்கம். இந்தியாவிலே விபரீதமான நிலைமையுண்டாயிருப்பதற்குப் பலபேர் பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். லண்டன்நகரத்தில் குளோப் (Globe) என்ற கன்ஸர்வேடிவ் பத்திரிகை எப்



போதும் இந்தியர்களின் சார்பாகப் பேசுகிறதில்லையாகையால், இப்படிப் பெண்களின் தொகை குறைவதற்கு இந்துக்களின் ஆசாரங்களே காரணமென்கின்றது. இந்தப் பத்திரிகையானது, போன வருஷம் மிஸ்டர் பாலகங்காதர திலகரை ராஜத்துவேஷி யென்றும், சதியோசனைக்கார ரென்றும் சொன்னதற்காக, மிஸ்டர் திலகர் லண்டன் கோர்ட்டில் வெகு பணம் செலவு செய்தும் வெகு சிரமப் பட்டும் குற்றவழக்குத் தொடர, பத்திராதிபர் தாம் சொன்னது பிசகு என்று ஒப்புக்கொண்டு விசனப்பட்டதுந்தவிர, சொற்பத் தொகை மிஸ்டர் திலகருக்கு மான நஷ்ட ஈட்டுக்காகக் கொடுத்தார். இந்தப் பத்திரிகை, இந்தியாவில் நல்ல குடும்பங்களில் பெண்களால் விசேஷச் செலவும் துக்கமும் நேரிடுகிறபடியால், பெற்றோர் பெண்களைக் கொன்று விடுகிற வழக்கமே பெண்களின் விருத்திக் குறைவுக்குக் காரணமென்று அபிப்பிராயம் சொல்லுகிறது. இந்த அபிப்பிராயமானது எழுதினவருடைய மூடத்தனத்தைத் தெரிவிக்கின்றதேயன்றி, அறிவைத்தெரிவிக்கவில்லை. சுமார் 100-வருஷங்களுக்கு முன்னால் வட இந்தியாவிலுள்ள ராஜபுத்திர சாதியாருள்ளும் வேறு சில மிலேச்ச சாதியாருள்ளும் இந்த வழக்கமிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. சுமார் 60-வருஷத்துக்கு முன்னால் பிரிடிஷ் ராஜாங்கத்தார் இந்த வழக்கத்தைப் பலாத்காரமாய் நிறுத்திவிட்டார்கள். அந்தக்காலம் முதல் இப்பேர்ப்பட்ட கோரமான வழக்கம் அடியோடு நின்றே போய்விட்டது. அக்காலத்திலுங் கூட இந்தியாவில் எல்லாப் பாகங்களிலும் இந்த வழக்கமிருந்ததில்லை; இப்போது அது எங்குமேயில்லை. போன கானிஷுமாரிக் கணக்குப்படி கல்கட்டா, பம்பாய், ரங்கூன், முதலான நாகரீகம் முதிர்ந்த முக்கிய பட்டணங்களில்மட்டும் 6 லட்சம் பெண்கள் குறைவா யிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்பேர்ப்பட்ட பட்டணங்களில் பெண்களின் கொலை நேரிடுவதேயில்லையானால், இந்தப் பாதகச் செய்கையே இந்தியாவில் ஸ்திரீ பிரஜாபிவிருத்திக் குறைவுக்குக் காரணமென்பது உண்மையாகமாட்டாது. உண்மையில் இப்படி நேரிடும் குறைவுக்குக் காரணம், நமது அபிப்பிராயப்படி, பெண்கள் கேவலம் இளம்பிராயத்திலேயே தாய் நிலைமை பெறுவதேயன்றி வேறல்ல. சராசரி 14-வது வயதில் இந்தியப் பெண்கள் குழந்தைகளைப் பெற ஆரம்பிக்கிறார்கள். 14-வது வயதில் சரீரம் முதிர்ச்சி பெறாமல் பிஞ்சாயிருப்பதால், கர்ப்பமாகும் பெண்களில் வெகுபேர் பிரசவகாலத்தில் இறந்து போகிறார்கள். முதல் பிரசவத்திலேயே பலவித அபாயங்கள் நேரிட்டு மரித்துப் போகும் பெண்கள் அனேகர். முதல் பிரசவ விபத்தைத் தாண்டினபோதிலும், இரண்டாவது மூன்றாவது பிரசவங்களுக்குள்ளாகப் பலவித ரோகங்கள் நேரிட்டுப் பெண்களைக்கொன்று விடுகின்றன; அல்லது ரோகங்களுக்குத் தப்பினாலும் யௌவனம் என்று கிரமமாய்ச் சொல்லவேண்டிய காலத்திலேயே கிழத்தனம் வந்து இறந்துபோகும் பெண்களும் பலருண்டு. இப்படிச் சாதாரணமான நல்ல குடும்பங்களிலேயே நேரிடுகிறதென்றால், ஏழைக் குடும்பங்களில் விசேஷமாகவே நேரிடுமல்லவா? ஸ்திரீகள் கர்ப்பமாயிருக்குங் காலத்தில், முக்கியமாய் முதல்தடவை கர்ப்பமாயிருக்கும்போது, அவர்களுடைய சரீரஸ்திதி வெகு மெலிவுகொண்டு மிருக்குமாகையால், ஆழ்ந்த கவலையுடன் அதைக் கவனித்து வரவேண்டும். தகுந்த ஆகாராதிகளும், தகுந்த ஔஷதங்களும், மனசுக்கு உற்சாகமான வாழ்வும் கர்ப்பிணிகளுக்கு

மகா அவசியம். இவைகளைக் கவனிக்கத் தெரியாமலும், தெரிந்தாலும் [illegible]மான செலவைச் செய்யச் சக்தி யின்றியும், வெகு பெண்கள் பாலியத்திலேயே இறந்து போகிறார்கள். மேலும் நமது தேசத்திற் பெண்ணாய்ப் பிறந்த ஒவ்வொரு மனித சீவனும் சமுசார வாழ்க்கையை யேற்றே தீரவேண்டுமல்லவா? மேற்குத் தேசங்களில் இந்தக் கட்டாயமில்லை? இஷ்டமிருந்து மற்ற வசதிகளும் ஒத்து வந்தால் விவாகம் செய்துகொள்ளு வார்கள்; இந்த இரண்டு மில்லாத அநேக ஸ்திரீகள் கலியாணமில்லாமல் ஆயுள்பரியந்தம் சும்மாவிருந்துவிடுவார்கள். இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள், கடவுள் செயலாய் நேரிடும் ஆபத்துக்களைத்தவிர, வேறு காரணங்களால் இறப்பது சாதாரணமல்ல. தவிர, அத்தேசங்களில் ஸ்திரீகள் சரீர சௌக்கியமும் போஷணையும் செய்துகொள்ளுவதில் புருஷரைப்போலவே கவலைகொண்டிருக்கிறவர்கள். நமது தேசத்தில் ஸ்திரீகள் வீட்டுக்குள் அடைத்துக்கிடந்து நல்லகாற்று நல்ல சரீரப் பயிற்சி முதலான நன்மைகள் பெறக்கூடியவர்க ளல்ல. மேலும் நல்ல சாப்பாடும் புருஷர்களுக்குக் கிடைப்பது போலக் கிடைப்பதில்லை. வியாதி வந்தாலும் நமது ஸ்திரீகள் உடனே வெளியிடுவதில்லை; வெளியிட்டாலும் புருஷர்கள் அதிகக் கவலைப்படுவதில்லை. இப்படிப் பலவிதங்களிலும் ஸ்திரீகளுடைய தீர்க்காயுளுக்கு விரோதமான வழக் கங்களும் பழக்கங்களும் உண்டாயிருப்பதே ஸ்திரீ பிரஜாபிவிருத்தி புருஷப் பிரஜாபிவிருத்தியைவிடக் குறைவுபட்டிருக்கிறதற்குக் காரணம்." கு.மீ.

## விடுகதை.

1. கூத்திதனக்கே யலைவான் குடியனல்ல குலமில்லாக் குலம்புகுந்தான்யிடியனல்ல, வாத்திதனையே படித்தான் வம்பனல்ல மயில்கோழி மிக வளர்த்தான் மறவனல்ல, தேற்றுந்தேன் தினையுண்டான் வேடனல்ல, திகழ்வேடந்தான் தரித்தான் சித்தனல்ல, பூத்தமலர்க்கணையுடையாள் தேவி யானோ பண்மயிலே இக்கதையை புகலுவாயே.

2. பிள்ளைகளைப் பெருக்கமாய்ப் பெற்றுவளரவளரப் பக்ஷணம் பண்ணும் பெருநீலித் தாய்யவள்.

3. ஒருவனுக்குத் தேகத்தில் எலும்பு தசையில்லை சிரசில்லை, கையுண்டு, விரலில்லை நித்தியபுருஷ ஆகாரம்தினம் கிராமசஞ்சாரம்.

பாரதிஅம்மாள்.

I. ஏறநழுவுமரம் இலைசுருளுமரம் காய்துவர்க்குமரம் பழம் இனிக்குமரம் என்னமரம்.

II. படமெடுத்தே நின்றாடும் பாம்புமல்ல, ஆகாயத்திலே பறக்கும் கெருடனுமலல, நாலுபக்கம் சட்டமுண்டு வீடுமல்ல நண்பரே இக்கதைக் கருள் கூர்வீர்.

III. முட்டையிடும் சட்டைகளத்தும் மூன்றுமாசம் அடைகிடக்கும் நாக்கை நீட்டும் படமெடுக்கும் நாயினுணை பாம்புமல்ல.

ஞானவடிவுடையம்மாள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 AUG. 1901
MADRAS.

# மாதர் மனோரஞ்சனி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

| VOL. 3. | MADRAS: JULY 1901. | No. 5. |
| --- | --- | --- |
| புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901வருஷம் ஜூலை௴ | இல. 5. |

## கிரிசல் காக்ரேன் என்ற பெண்மணியின் சரித்திரம்.*

இப்பொழுது நம்மை ஆளும் ஆங்கிலேயர் இராச்சியத்தை, இருநூறு வருஷங்களுக்கு முன் இரண்டாவது ஜேம்ஸ் என்ற ஓரரசன் ஆண்டு வந்தான். அவன் இராச்சிய பரிபாலனம் செய்த விதம், அவன் குடிகளில் அநேகருக்குப் பிடிக்கவில்லை. இவ்வாறு அரசன் பகைமையை அடைந்தவர்களுக்குள், டண்டோனல்டு என்ற ஒரு பிரபு இருந்தார். தம் விரோதிகளால் குற்றஞ்சாட்டப்பட்டு, அவர் சிறைச்சாலையில் இராஜதுரோகத்துக்காக அடைக்கப்பட்டார். அரசன் தம்மை மரணதண்டனைக்கு உட்படுத்துவானென்று அவருக்கு நன்றாய்த்தெரியும். அடிக்கடிசிறைச்சாலையில் தம்மை வந்து பார்ப்பதால் தம் அருமை மக்களுக்கும் இராஜசந்தேகத்தால் கேடு விளையக்கூடு மென்று கருதி, தம்மக்கள் ஒருவருமே தம்மைக் காணவரக்கூடா தென்று சட்டளை யிட்டிருந்தார். ஓரிரவு சிறையறைக் கதவுதிறக்கப்பட்டவுடன், யாரோ காவலாளிகள் வருவதாக நினைத்து, அவர் தலையைக் கூடநிமிர்த்திப் பாராமலிருந்தார். பாலைவனத்தில் குயில் கூவினாற்போல், திடீரென்று அவர் அருமை மகள் சீமந்த புத்திரி கிரிசல் காக்ரேன் என்ற பெண்மணியின் குரல் கேட்டது. ஆறாத் துயரத்தோடு, அவளே தன் தந்தையைக் காணத்துணிந்து வந்திருந்தாள். செவிக்கின்பமாகிய அவள் இனிய மொழிகளைக் கேட்டும், உடற்கின்பமாக அவளை அன்போடு தழுவி முத்தமிட்டும், உச்சி மோர்ந்தும், அப்பிரபு, தம் பொறுத்தற்கரிய துக்கத்தை மறந்து, மனமகிழ்ச்சி யுற்றார். இவ்வாறு தகப்பனும் மகளும் நீர்க்குமிழி போன்ற ஆநந்தத்தை யநுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதே, அரசன் அப்பிரபுவைக் கொலைசெய்து விடு

* Based on a story related by the Earl of Aberdeen in his speech at the dinner of the United Kingdom Postal and Telegraph Service Benevolent Society.

ம்படி உத்திரவுசெய்து விட்டதாகவும், செல்வாக்குள்ள அவர் சிநேகிதரில் யாரேனும் சிபார்சுசெய்து தடுக்காவண்ணம், அவ்வாரத்துத் தபாலிலேயே, இரண்டு மூன்று தினங்களுக்குள் இராஜ ஆக்கினை வருவதாகவும், சமாசாரம் தெரியவந்தது. அக்காலத்தில் ரயில்வண்டி கிடையாது; பிரபு அடைபட்டிருந்த நகரத்துக்கு, வாரம் ஒரு முறை, இராஜதானியிலிருந்து ஒரு குதிரை வண்டியில் தபால் வருவது வழக்கம்; இப்பொழுது மதுரைக்கும் இராமநாதபுரத்துக்கும், சிதம்பரத்துக்கும் விருத்தாசலத்துக்கும், தபால் கொண்டுபோவது போலவே. இச்சமாசாரம் கிட்டியவுடன், அப்பெண்மணி துக்கசாகரத்தில் ஆழ்ந்து பிரலாபித்துக் கொஞ்சநேரத்துக்குப்பின் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள். அவள் போகும் பொழுது. அப்பிரபு, தம்பொருட்டுத் துயரப்படவேண்டாமென்றும், தம்மை விடுவிக்கும் பொருட்டுத் துணிகரமானவை யொன்றும் செய்யவேண்டாமென்றுஞ் சொல்லி யனுப்பினார்.

இராஜதானியாகிய **லண்டன்** நகரத்துக்கும், பிரபு அடைபட்டிருந்த **எடின்பரோ** நகரத்துக்கும் இடையே, வழிப்பாதையில், **பேர்விக்கு** என்ற ஓர் சிற்றூரிருக்கின்றது. முன்கூறிய சங்கதி நடந்ததற்கு இரண்டாநாள் அவ்வூரில், சோற்றுக்கடை வாசலில், பகல் இரண்டுமணி சுமாருக்குத் தபால்வண்டி நின்றுகொண்டிருந்தது. தபாற்காரன் அங்கு சாப்பிட்டு இளைப்பாறுவது வழக்கம். அப்பொழுது ஒரு வாலிபன் குதிரைமேல்வந்து, அச்சோற்றுக்கடை வாசலில் இறங்கினான். அவனுக்கு இருபது வயதுகூட ஆகவில்லை யென்றே தோன்றிற்று. முகத்தில் மீசையே இல்லை; பார்த்தால், ஆணுடைதரித்த ஒரு அழகிய பெண்ணோவென்று சந்தேகிக்கும்படியிருந்தான். அவன் கீழேயிறங்கி வீட்டுக்குட்போய், அங்கிருந்த வீட்டுக்கிழவியைச் சோறு போடும்படி வேண்டினான். அவள் சோறுபடைக்கும் பொழுது, அடுத்த அறையில் தபாற்காரன் களைத்துத் தூங்குவதால், சத்தம்போடாமற் சாப்பிடும்படி அவனை வேண்டிக்கொண்டாள். சாப்பிட்டான பின் குடிக்கத் தண்ணீர்கேட்டான். அதற்கவள், தேசவழக்கப்படி வாலிபர்கள் சாராயமே குடிக்கவேண்டுமென்றும், குடி தண்ணீர் வீட்டிலில்லையென்றும், கிணறு தூரத்திலிருப்பதாகவும், போக்குச் சொன்னாள். ஆனால் வாலிபனோ, நயமாகப்பேசி, அவளுக்குச் சாராயத்தின் விலை குடி தண்ணீருக்குக் கொடுப்பதாக வாக்களித்து, மெதுவாக, அவளைத் தண்ணீர் கொணர வெளியேபோகும்படி செய்துவிட்டான். கிழவி வெளிச்சென்றவுடன், வாலிபன், தபாற்காரன் நித்திரைசெய்துகொண்டிருந்த அறைக்குட் செல்ல, அங்கே, தபாற்பையைத் தலையணையாகவைத்துக்கொண்டு அவன் குறட்டைவிட்டுத் தூங்குவதையும், பக்கத்தில் மேஜை



மேல் அவன் காவல் ஆயுதங்களாகிய இரண்டு சிறு துப்பாக்கிகள் பார்செய்யப்பட்டு இருப்பதையும் கண்டான். மெதுவாகச் சிறிதும் சத்தமன்னியில் அத்துப்பாக்கிகளிலிடப்பட்டிருந்த மருந்து குண்டுகளை வெளிக்களைந்து, வெறுந் துப்பாக்கிகளை மேஜையின்மேல் முன்போலவே வைத்தான். இதற்குள் கிழவி திரும்பிவரும் அடிச்சத்தம்கேட்க, மெதுவாய் வெளியே வந்துவிட்டான். தண்ணீரைக்குடித்துவிட்டுக் கொடுக்கவேண்டிய பணத்தையும் கொடுத்தானபின், வாலிபன் குதிரையேறி மறைந்துவிட்டான். இதொன்றுமே தபாற்காரனுக்குத் தெரியாது.

அவ்விரவு எட்டுமணி சுமாருக்கு 'மெயில்' தபால்வண்டி தனிமையாய்ச் சென்று கொண்டிருந்தது. கொஞ்சநேரத்தில் குதிரையின்மேல் ஒரு வாலிபனும் வந்துசேர்ந்து, தபாற்காரனோடு சம்பாஷித்துக்கொண்டே போனான். பிறகு திடீரென்று தன்குதிரையை வண்டிக்கருகே நடாத்தித் தபாற்காரனைப்பார்த்து, "நண்பனே! உன் தபாற்பையின்மேல் எனக்கு மிகவும் ஆசையாயிருக்கிறது." என்றான். அதற்குத் தபாற்காரன், "என்ன, கேலியா பண்ணுகிறாய்? விளையாட்டு வினையாய் முடியும்; பத்திரம்." என்றான். குதிரை வாலிபன் தன் உடுப்புப் பையிலிருந்து ஒரு சிறு துப்பாக்கியை யெடுத்து நீட்டிக் கொண்டு, "இப்பொழுது என்ன சொல்கிறாய்?" என்று கேட்கத், தபாற்காரன் கோபமாய்த் தன்துப்பாக்கிகளில் ஒன்றை யெடுத்துச் சுட்டான். 'டக்'; தீக்கிளம்பவில்லை. அதை யெறிந்து விட்டு மற்றத்துப்பாக்கியை யெடுத்துக் குறிப்பாய்ச் சுட்டான். 'டக்'; இதுவும் தீக்கிளம்பவில்லை. மருந்தும் குண்டும் இருந்தாலன்றோ தீக்கிளம்பும். பிறகு உயிரைக் கொடுப்பதிலும் தபாற்பையைக் கொடுத்துவிடுதலே உத்தமமென்று கருதித் தபாற் பையைக் கொடுத்துவிட, குதிரைவாலிபன் அதை வாங்கிக்கொண்டு காட்டிற்குள் மறைந்து விட்டான். கொஞ்ச தூரம் சென்றபின், அவ்வாலிபன், அங்கிருந்த ஒரு வீட்டிலிறங்கித் தபாற்பையைத் திறந்து, அதிலிருந்து இராஜ முத்திரை யிடப்பட்ட ஒரு கடிதத்தை யெடுத்துத் தூள் தூளாகக்கிழித்து நெருப்பிற் போட்டுப் பொசுக்கினான். பின்பு தன் ஆடைகளைக் களைந்து, அவ்வீட்டுக் கிழவி கொணர்ந்து கொடுத்த பெண்ணுடையைத் தரித்துக் கொண்டான். ஆ! ஆ!! இதென்ன ஆச்சரியம்! உற்றுப்பார்! அப் பெண்ணே கிரிசல்காக்ரேன்; அவள் கிழித்துக் கொளுத்திய கடிதமே அவள் தந்தையை மரணதண்டனைக்குட் படுத்தும் இராஜ ஆக்கினை; அவ்வீடு, அவளைப் பாலூட்டி வளர்த்த செவிலித்தாயின் வீடு. இவ்விதமாக நேரிட்டதாமதத்தால், அப்பிரபுவின் உயிர் தப்பியது. அவர் நண்பர்களின் வேண்டுகோளின் பொருட்டும், அவர் புத்திரி செய்ததைரி

யமான அற்புத நடவடிக்கையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு இரக்க முற்றும், அரசன், அப்பிரபுவின் குற்றத்தை மன்னித்தான். இதை வாசிக்கும் பெண்களில் எத்தனை பேர் இவ்வாறு நடக்க வல்லார்? ஆனால், அன்பின் வலி அளப்பரிதே; நாம் சற்றும் எதிர் பாரா வண்ணம் ஆச்சரியமான சங்கதிகளை அது நடத்த வல்லது.

மாதவம்.

---

## ஸிம்பலேன்,

---

8ம்-அதிகாரம்.

இமொஜன் மில்போர்ட் ஹேவனுக்குப்போன இரண்டாம் நாள் ஸிம்பலீன் தன் மனைவியைப்பார்த்து இமொஜனை இரண்டு நாளாகக் காணவில்லை, அவள் நமக்கு வேண்டிய மரியாதைகளையும் செய்யவில்லை, அவளை சீக்கிரம் அழைத்துக்கொண்டு வரவேணுமென்றுரைக்க, அவள் ஒரு வேலைக்காரனை யனுப்பினாள். அவன்போய் இமொஜனைக் கூப்பிட அவளைக்காணவில்லை. உடனே அவன் அரசன் சபைக்குவந்து, இமொஜனிருந்த வீட்டின் கதவுகள் பூட்டப்பட்டிருக்கின்றன, எவ்வளவு சத்தமிட்டு கூப்பிட்டழைத்தும் பதில் சொல்லவில்லையென்று சொன்னான். அப்பொழுது,

**மனைவி**:—நாதா! அவளைக் கடைசியாக நான் பார்த்தபொழுது, தனக்கு ஜ்வரமிருக்கிறதாயும், அதினால் அரசன் சபைக்கு வரமுடியாது, தயவுசெய்து மன்னிக்கவேணுமென்றும், அந்த விவரத்தை உங்களிடத்தில் தெரிவிக்கும்படியாயும் என்னிடத்தில் உரைத்தாள். இந்த அரண்மனையில் அதிக அலுவலிருந்ததினால் அதைமறந்து விட்டேன்.

**ஸிம்பலீன்**:—கதவுகளை யடைத்திருக்கிறதா? கொஞ்சநேரமாக அவளைக்காணவில்லையா? தெய்வமே! நான் பயந்துகொண்டிருந்த சங்கதி பொய்யாகப் போகவேணும்—(வெளியே போகிறான்.)

**மனைவி**:—மகனே! அரசன் கூடப்போ.

**க்ளோட்டன்**:—அவளுடைய விசுவாசமுள்ள வேலைக்காரனாகிய பிஸானியோவை இரண்டு நாளாக நான் காணவில்லை.

**மனைவி**:—சீக்கிரம் போய்ப்பார்—(க்ளோட்டன் போகிறான்). பாஸ்துமஸுக்கு அதிக விசுவாசமாயிருந்த பிஸானியோ விடத்தில் நான் ஒரு ஔஷதம் கொடுத்திருக்கிறேன். அதைச் சாப்பிட்டதினால் தான் அவனை யிங்கே காணவில்லை யென்று தோன்றுகிறது; ஏனென்றால் அதை அவன் ஒரு விலையுயர்ந்த மருந்தென்று நினைத்திருக்கிறான். அப்படியானால் இமொஜன் எங்கேபோய்விட்டாள்? ஒரு வேளை ஏக்கத்தினால் தன் னுயிரை விட்டிருப்பாள். அல்லது தன் பர்த்தாவிடத்திலுண்டான பிரியத்தினால் அவனிடத்திற்கு ஓடிப்போயிருப்பாள். ன்றில் அவள் இறந்திருக்கலாம். அல்லது தன் மானத்தைக்கெடுத்து ஓடிப்போயிருக்கலாம். எவ்விதத்திலும் என் காரியம் சித்தியாய்விட்டது; எப்படி யென்றால் அவள் இங்கே இல்லாததினால் இராஜப்பட்டம் என் மகனுக்கு நிச்சயமாகக்கிடைக்கும். (க்ளோட்டன் திரும்பிவருகிறான்) என் மகனே! என்னசங்கதிசொல்.



**க்ளோட்டன்**:—நிச்சயமாக அவள் இவ்விடத்திலிருந்து ஓடிப்போய்விட்டாள். நீபோய் அரசனைச் சமாதானப்படுத்து. அவன் அதிகக்கோபத்துடனிருக்கிறான், அவனருகில் வருகிறதற்கு ஒருவரும் துணியவில்லை.

**மனைவி**:—(தனக்குள் சொல்லுகிறாள்) நிரம்பவும் சந்தோஷமடைந்தேன். தெய்வமே! அவன் இன்றைய தினமே துக்கத்தினாலிறந்து போகட்டும்.* (போகிறாள்...........)

**க்ளோட்டன்**:—அவளை ஒரு சமயத்தில் வெறுக்கிறேன், மற்றொரு சமயத்தில் அவளிடத்தில் அதிகப்பிரியமாயிருக்கிறேன். அவள் அதிகரூபவதியாயும், ராஜவம்சத்தில் பிறந்து நற் குணங்களையுடையவளாயு மிருக்கிறாள். ஒவ்வொரு பெண்ணின் நற்குணங்களை யுடைத்தாயிருக்கிறாள். இக்குணங்களெல்லாம் சேர்ந்து அவளிடத்தில் குடி கொண்டிருக்கிறதினால் அவள் ஒப்புயர்வற்றவளா யிருக்கிறாள். இக்காரணங்களால் அவள் பேரில் அதிகபிரியமாயிருக்கிறேன். ஆனால் அவள் என்னை நிந்தித்து இழிகுலத்தில் பிறந்த பாஸ்துமஸிடத்தில் அதிகபிரியமாயிருக்கிறதினால் அவளை நான் வெறுக்கிறேன்; இது மாத்திரமல்ல. அவளிடத்தில் பழி வாங்கப்போகிறேன்.

(பிஸானியோ வருகிறான்).

அதோ வருகிறதுயார்? எங்கே ஓடிப்போகிறாய், இங்கேவா ஏ, துரோகி! உன் எஜமானி யெங்கே யிருக்கிறாள்? ஒரு நொடிப்பொழுதிற் சொல்; இல்லையானால் நீ உடனே யிறப்பாய்.

**பிஸானி**:—என் பிரபுவே!

**க்ளோ**:—உன் எஜமானி யெங்கே? பிரகஸ்பதியின் பேரில் ஆணையிடுகிறேன், நீ சொல்லாமற்போனால் இனிமேல் உன்னிடத்தில் கேட்கமாட்டேன். நீ ஒரு இரகசிய முள்ள வஞ்சகனாயிருக்கிறாய். இந்த இரகசியத்தை நீ சொல்லாமற்போனால் உன் இருதயத்தை வெட்டி அதிலிருந்து கண்டுபிடித்துக்கொள்வேன். அவள் பாஸ்துமஸிடத்தில் போயிருக்கி

---

* எவ்வளவு விசுவாசமுள்ளபத்தினி, பதிவிரதா சிரோன்மணி!

ருளா? அவனிடத்தில் இழிவே குடிகொண்டிருக்கிறது; நல்ல குணம் ஒரு துளிகூட கிடையாது.

பிஸானியோ :—ஐயோ! அவள் பாஸ்துமஸுடன் எவ்வித மிருப் பாள். அவள் இதைவிட்டு எப்பொழுதுபோனாள்? அவனோ ரோமாபுரியி லிருக்கிறான்.

க்ளோ :—அவள் எங்கே யிருக்கிறாள். சீக்கிரம்சொல், இனிமேல் என்னால் பொறுக்கமுடியாது. அவளுக்கு என்ன நேரிட்டது? உள்ளதைச் சொல். வீண்வார்த்தைகள் பேசாதே, சீக்கிரம்சொல், மௌனமாயிருந் தால், நீ உடனே யிறந்தாய்.

பிஸானி :—அப்படி யானால் அவள் ஓடிப்போன விவரம் இந்தக் கடித த்தைப்பார்த்தால் தெரியும்...............(ஒரு கடிதத்தைக் கொடுக்கிறான்.)

க்ளோட் :—நான் அதைப்பார்க்கட்டும். அவள் பாதாள லோகத்துக்கு ப்போயிருந்தாலும் அங்கேபோய் நான் அவளைப்பிடித்துக்கொண்டு வருகி றேன்.

பிஸானியோ :—(தனக்குள் சொல்லுகிறான்). என்னுடைய நல்லகா லத்தினால் இந்த உபாயம் எடுத்தேன். இல்லாமற்போனால் நான் உடனே இறந்திருப்பேன். இமொஜனோ அதிக தூரம்போய்விட்டாள். இந்தக் கடிதத்தைக் கண்டதினால் அவன் அதிகதூரம் சிரமப்பட்டு நடக்கவேணு மேதவிர அவளுக்குக் கொஞ்சமாகிலும் அபாயம் நேரிடாது. அவள் இற ந்துபோய்விட்டாளென்று என் எஜமானனுக்கு எழுதுகிறேன். ஏ. இமொ ஜன், நீ க்ஷேமத்துடன் அலைந்து திரிந்து, திரும்ப க்ஷேமத்துடன் வரக் கடவாய்!

க்ளோட்டன் :—ஏ, பிஸானியோ! இதில் எழுதியிருக்கிறது உண்மை தானா?

பிஸானியோ :—நான் அவ்வண்ணமே நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

க்ளோ :—இது பாஸ்துமஸுடைய கையெழுத்துதான், எனக்கு நன் றாகத் தெரியும். நீ என்னை வஞ்சியாமல், எனக்கு நல்ல உபகாரங்களைச்செ ய்து, நான் இட்டவேலையை சுறுசுறுப்புடன் செய்தால், அதாவது நான் எவ்விதமான வஞ்சகத்தொழில் செய்ய ஏவுகிறேனோ அவைகளை விசுவாச த்துடன் செய்தால், உன்னை ஒரு யோக்கியனாக நினைப்பேன்; உனக்கு வே ண்டிய திரவியங்களைக் கொடுப்பேன்; மேலான பதவியிலும் வைப்பேன்.

பிஸானி :—என் பிரபுவே! நான் அப்படியே செய்கிறேன்.

க்ளோட்டன் :—நான் சொன்னவற்றை யெல்லாம் செய்வாயா? ஒன்று மில்லாதபிச்சைக்காரனாகிய அந்த பாஸ்துமஸ் இட்டவேலையை



பொறுமையுடன் செய்துவந்த நீ என் விஷயத்தில் அதிக சுறுசுறுப் போடு செய்யமாட்டாயா?

பிஸானி :—அவ்விதமே செய்கிறேன்.

க்ளோட் :—உன் கையைக்கொடு, இந்தப் பணப்பையை யெடுத்துக் கொள். பாஸ்துமஸுடைய உடை ஏதாவது உன்னிடத்திலிருக்கிறதா?

பிஸானி :—என்னுடையஎஜமானியிடத்தில் விடைபெற்றுப் போகும் சமயத்தில் தரித்திருந்த உடையை என் வீட்டில் வைத்திருக்கிறேன்.

க்ளோ :—எனக்கு முதலில் நீ செய்யவேண்டிய வேலை, அந்த உடை யை யிங்கே கொண்டுவரவேண்டியது. சீக்கிரம் போ.

பிஸானி :—இதோ போகிறேன்,...................(போகிறான்.)

க்ளோட்டன் :—உன்னை மில்போர்ட் ஹேவனில் சந்திக்கவா! அவனி டத்தில் ஒரு சங்கதியைக்கேட்க மறந்துவிட்டேன். அது சீக்கிரத்தில் என் ஞாபகத்துக்குவரும் (பாஸ்துமஸை) ஏ. சண்டாளா! அந்த இடத்தில் வந்தே உன் உயிரைவாங்குகிறேன். இந்த உடைகள் கிடைத்தால் என் காரியம் சித்தியாகும். உயர் குடிபிறப்பு முதலியவைகளால் அலங்கரிக்கப் பட்ட என்னுடைய மேன்மையாயும், இயற்கையாயுமுள்ள உடம்பைப்பார்க் கிலும், பாஸ்துமஸுடைய உடைகளை அதிக பெரிதாக நினைத்திருக்கிறே னென்று அவள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறாள். இந்த உடைகளை யே தரித்துக்கொண்டு அவளிடத்தில்போய் பாஸ்துமஸை அவள் கண்மு ன்பாகக் கொல்லுவேன். அங்கே என்னுடைய வீரத்தன்மையைக் கண்ட மாத்திரத்தில் என்னை இதற்கு முன் நிந்தித்ததற்காக அவள் மனம் வாடி த்துடிக்கும். இந்த உடையைத் தரித்துக்கொண்டு அவளைப் பலவிதமாக வைது, அவளைக் காலால் உதைத்துத்தள்ளி அரண்மனைக்குக் கூட்டிக்கொ ண்டு போவேன். என்னை எவ்வளவு சந்தோஷத்துடன்நிந்தித்தனளோ அவ்வளவு சந்தோஷத்துடன் அவளிடத்தில் பழிவாங்குகிறேன்.

(பிஸானியோ உடைகளைக் கொண்டுவருகிறான்)

பாஸ்துமஸுடைய உடை இதுதானா?

பிஸானி :—ஆம், இதுதான்.

க்ளோட் :—அவள் மில்போர்ட் ஹேவனுக்குப்போய் எவ்வளவு நேர மாய்விட்டது?

பிஸானி :—இன்னும் அங்கே போய்ச் சேர்ந்திருக்கமாட்டாள்.

க்ளோட் :—அதை என்னுடைய அறைக்குக் கொண்டுவா. இது தான் இரண்டாவது வேலை. நான் செய்கிறதை ஒருவரிடத்திலும் சொ ல்லக்கூடாது. இது தான் மூன்றாவது வேலை. நான் சொன்னவற்றை விசு.

வாசமாகச் செய்தால் உன்னை நல்லபதவியில் வைக்கிறேன். நான் மில்போர்டில் பழிவாங்கப் போகிறேன். அங்கே போக சிறகுகள் இருந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருப்பேன்! ஏ, பிஸானியோ! என்னிடத்தில் விசுவாசமாயிரு...................(உடையைத்தரித்துக் கொண்டுபோகிறான்.)

**பிஸானி** :—என்னை நாசப்படுத்தவா இந்த வேலைகளை என்னிடத்தில் ஏவினாய்? உனக்கு விசுவாசமாக இருக்கவேணுமானால், என்னிடத்தில் அதிகப்பிரியத்துடனிருக்கிற பாஸ்துமஸுக்கு துரோகஞ்செய்பவனாவேன். ஆகையால் க்ளோட்டன் சொன்னதைச் செய்யமாட்டேன். மில்போர்டுக்குப்போய் அவளைக் காணாமலிருக்கவேணும் கடவுளே! அவளையாசீர்வதியும். அவனுடைய வேகம் குறைந்து அவன் நடந்தது தான் பலனாகப் போகட்டும்.

இது இங்ஙன மிருக்க, க்ளோட்டன் பிரயாணமாகி, பெலாரியஸுடைய குகையருகில்போனவுடன் சொல்லுகிறான் :—

**க்ளோட்டன்** :—பிஸானியோ! எனக்குச் சொன்னது உண்மையானால் இமொஜனும் பாஸ்துமஸும் சந்திக்கவேண்டிய இடத்தை நெருங்கிவிட்டேன். பாஸ்துமஸுடைய உடைகள் எனக்கு இசைந்திருக்கின்றன; இப்படியிருக்க இமொஜனும் ஏன் எனக்கிசைந்திருக்கக்கூடாது. என்னுடைய உடம்பு அவனுடையது போலிருக்கிறது. அவனைப்பார்க்கிலும் வயதில் சிறியவனாயிருந்தாலும் நான் அதிகப்பராக்கிரமசாலியா யிருக்கிறேன். அதிர்ஷ்டத்திலோ அவனுக்குத் தாழ்ந்துபோகவில்லை. இப்பொழுது ஒவ்வொருவருடைய ஸ்திதியையும் பார்த்தால் நான் அவனைப்பார்க்கிலும் அதிக மேன்மையுள்ளவனா யிருக்கிறேன். பிறப்பிலோ நான் உயர்ந்த வம்சத்தில் பிறந்திருக்கிறேன். சேர்ந்து சண்டைசெய்வதில் இருவரும் சமமாயிருக்கிறோம். தனிமையாய் சண்டைசெய்வதில் நான் அவனைவிட அதிகப் பராக்கிரமசாலியா யிருக்கிறேன். இவ்வளவு மேன்மையான குணங்களை உடைத்தாயிருந்தும் புத்தியில்லாத இமொஜன் என்னை விரும்பவில்லை. மனிதஜென்மம் கெட்டஜென்மமாயிருக்கிறது. பாஸ்துமஸ்! இன்னும் ஒரு மணிநேரத்தில் உன் தலையை வாங்கிவிடுகிறேன், உடனே இமொஜனைப்பலவந்தப்படுத்துகிறேன். உன் உடையை அவள் முன்பாகத் துண்டு துண்டாகக்கிழித்து உன்னைக்கொன்று இமொஜனைக் காலால் உதைத்துத்தள்ளி வீட்டுக்குக் கொண்டுபோகிறேன், பார்! நான் இவ்வளவு முரட்டுத்தனமான வேலையைச்செய்ததற்காக ஸிம்பலீன் கோபித்துக்கொள்வான். ஆனால் அவன் கோபம் என்னசெய்யும். அவன் என் தாயார்கைக்குள் தானே சிக்கிக்கொண்டிருக்கிறான். அவள் ஒரு வார்த்தை சொன்னால் கோபமெல்லாம் வெயிலிற்பட்ட பனிபோல் பறந்து, நான் செய்ததைப்பற்றி



அதிகமாய்ப்புகழ்ந்து கொள்வான் என்று சொல்லிக் குதிரையைவிட்டுக் கீழேயிறங்கி அதை ஒரு மரத்தில் கட்டிவிட்டு "தெய்வம் என்னைச் சகாகிக்கட்டும், அதிர்ஷ்டம் என்னிடத்தில் வந்தடையட்டும். அவர்கள் சந்திக்கவேண்டிய இடம் இதுதான். பிஸானியோ என்னை யேமாற்றுவனா." என்று சொல்லிக்கொண்டு நடந்துபோனான். சிறிதுதூரம் போனவுடன் இமொஜனிடத்தில் விடைபெற்று வேட்டையாடப்போன மூவர்களும் அவனைக்கண்டார்களென முன்னுரைத்தோம். பின் அங்கே நடந்தனவற்றை யெடுத்துச் சொல்வோம்.

**பெலாரியஸ்** :—அதோயார், அறியேன்.

**க்ளோட்டன்** :—[பாஸ்துமஸையும் இமொஜனையும் மனதில் நினைத்துக்கொண்டு] அந்த நாடோடிப் பயல்களைக் காணவில்லை., எங்கேபோனார்களோ, அறியேன். அந்தத்துரோகி (பிஸானியோ) என்னை யேமாற்றிவிட்டான், ஐயோ! களைத்துப்போனேன்.

**பெலாரி** :—நாடோடிப் பயல்களா! அவன் நம்மையல்லவா இவ்விதம் இகழ்ந்துபேசினான்; அவன் இன்னானென்று தெரியவருகிறது. அவன் இந்த தேசத்து இராணியின் புத்திரனாகிய க்ளோட்டன்; நமக்குக் கஷ்டகாலம்வந்துவிட்டது. நம்மைப்பிடிக்க யாரோவந்திருக்கிறார்களென நம்புகிறேன். நான் இவனை அனேக நாளாகப் பாராமற்போனாலும், க்ளோட்டன் தானென நிச்சயமாக அறிகிறேன். நம்மை நாட்டைவிட்டுப் போகும்படியாக அரசன் உத்தரவு செய்ததினால் சீக்கிரம் போங்கள்; இங்கே நிற்கவேண்டாம்.

**கைடீரி** :—பிதா! நீங்களும், என் தம்பியும் இவன்கூட யார்வந்திருக்கிறார்களென்று பார்த்துவாருங்கள், இவன் தனிமையாய்த் தானிருக்கிறான், நான் இவனைப் பார்த்துக்கொள்ளுகிறேன்.

(பெலாரியஸ், ஆர்விராகஸ் போகிறார்கள்.)

**க்ளோட்** :—நான் சொல்வதைக்கேள். என்னை இவ்விதம் பயப்படுத்துகிறாயே நீயார்? மலைகளில்வசிக்கிற துரோகிகளைப்பற்றியும், காட்டுமனிதர்களைப்பற்றியும் நான் கேட்டிருக்கிறேன். அடிமைக்குச் சமானமானபயலே நீயார் சொல்.

**கைடீரி** :—இந்த வார்த்தைகளை நீ சொன்னதற்கு உன்னைக் கொல்லாமலிருந்ததினால் நான் ஒரு இழிவான அடிமைப்பயல்தான்.

க்ளோட் :—நீ ஒரு திருடன், சட்டத்துக்கு விரோதமாய் நடக்கப்பட்டவன். ஏ, திருடா! என்னிடத்தில் சீக்கிரம் சரணமடைந்துகொள்.

கைடீ :—யாரிடத்தில்! உன்னிடத்திலா! நீயார்? உன்னைப்போல எனக்கும் கையில்லையா? உன்னிருதயத்தைப்போல எனக்குமில்லையா? வீணாப் பெருமை பாராட்டிக்கொள்ளாதே, நீயார்? உன்னிடத்தில் நான் ஏன் சரணமடையவேணும்?

க்ளோட் :—அற்பப்பயலே! என்னுடைய உடையைப்பார்த்தால் நான் இன்னானென்று உனக்குத் தெரியவில்லையா.

வி. கோபால ஐயங்கார், பி. ஏ.

---

## தெய்வவணக்கம்.

"ஆலயந்தொழுவது சாலவுநன்று."

குழந்தைகளே! முன் "அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்" என்ற வாக்கியத்தைச்சிறிது ஆராய்ந்தோம். அந்த வாக்கியத்தின் கடைசியில் இருக்கிற "தெய்வம்" என்கிற ஒரு சொல்லைப்பற்றி இப்பொழுது கொஞ்சம் ஆராய்ச்சி செய்வோம். அதனையே "ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்ற சிறுவாக்கியம் விளக்குகின்றது. ஆலயத்தில் (போய்) தேவனைவணங்குவது மிகவும் நல்லதாயிருக்கிறது என்பதேயதன்பொருள். "ஆலயம்" என்கிற பல அற்புதவினோதங்கள் அமைந்த கட்டிடத்தை நாம் நமது தேசங்களிலெங்கும் பலமுறை பார்த்திருப்போம். அங்கேபோய்த் தெய்வலணக்கமும் செய்திருப்போம். "தெய்வமிகழேல்" என்றும், "தெய்வஞ்சீறிற்கைதவமாளும்" என்றும் அன்னையார்பலதடவைகூறியிருக்கின்றார்கள். இவ்வசனங்களால் தெய்வத்தையிகழப்படாது என்றும், தேவகோபத்துக்காளானால் நாம் செய்திருக்கிற சகலபுண்ணிய பலன்களும் அழிந்துபோமென்றும் வெளியாகிறது. "தெய்வம்" என்பது யாது? அது எத்தன்மையுடையது? அதை யெப்படி அறிவது? என்று பலசந்தேகங்கள் நமக்குண்டாகலாம். அதைப்பற்றிச்சிறிது கவனமாய் விசாரிப்போம். முதலிலுள்ள இரண்டு கேள்விகளுக்குப் "பெற்றோர் பெருமை" கூறுமிடங்கொஞ்சம் சொன்னோம். அதை யிங்கேமீண்டும் அநுவாதம் செய்து (மறுபடியும் வருவித்துக்கூறி) அவ்சியம் வேண்டியவற்றையும் எடுத்துக் கொள்வோம். "தெய்வம்," தனக்கென்று ஒரு சொரூபமில்லாதது. சத்தியஞான ஆனந்தமே சொரூபமாயுள்ளது. எங்



கும் உள்ளது. ஆதியந்தமற்றது, சர்வவல்லமையுள்ளது, சர்வஞானமுடையது. அளவிலாத சக்தியுடையது. சர்வஅண்டகோடிகளுக்கும் ஆதாரமாயுள்ளது. தனக்கு வேறொரு ஆதாரமும் இல்லாதிருப்பது. சர்வ அண்டங்களையும், அவைகளில் வசிக்கின்ற அசையும் பொருள் அசையாப்பொருள் எல்லாவற்றையும் படைத்துக்காத்து அழிக்கும் தொழிலுடையது. ஜீவாத்மாக்களுடைய பாப புண்ணியங்களுக்குத் தக்கபலனையறிந்து அவைகளுக்கு ஊட்டுவிக்கும் மகிமையுடையது. அணுவுக்கணுவாயிருப்பது, மலைக்குமலையாயிருப்பது. அதற்கு ஒப்பானதுமில்லை. மேலானதுமில்லை. மனம் வாக்குமுதலியவற்றுக்கு எட்டாதிருப்பது. விதண்டாவாதிகளால் அறியப்படாதது. அன்பருடைய களங்கமில்லாத பக்திநிறைந்த சித்தத்தில்தோன்றி அவர்களுக்கு அனுக்கிரகம்செய்யக்கூடியது. தன்னுடைய இச்சாமர்த்தியத்தால் அளவில்லாத திவ்விய சொரூபங்களை யெடுத்துக்கொண்டு தன் பக்தர்களுக்கு அநுக்கிரகம்செய்யும் பேராற்றலுடையது. ஆகாயத்தில் நட்சத்திரங்களாக நமது கண்ணுக்குப் புலப்படுகிற அநந்தமான அண்டங்களும், சந்திரன் சூரியன் முதலிய கிரகங்களும் தெய்வத்தாற் சிருஷ்டிக்கப்பட்டு, அதனுடைய மஹாசக்தியில் நிராதாரமாய் நின்று சுழன்றுகொண்டிருக்கின்றன. நமது கண்களுக்கும், சூட்சுமப்பொருள்களைக் கண்டறியத்தக்க கருவிகளுக்கும் இன்னம் காணப்படாமலிருக்கிற அநந்தகோடி யண்டங்கள் தெய்வத்தால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. நமது கண்களுக்குக் காணப்படுகிற சந்திர சூரியர்களைத் தவிரவேறு அளவில்லாத சந்திர சூரியர்கள் உண்டென்று நமது வேதசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அவைகளிலெல்லாம் ஜீவராசிகள் வசிக்கின்றனவென்றும் சொல்லுகின்றன. வியர்த்தமாக ஒன்று மிராதாகையால் அதுவும் உசிதந்தான் என்பதில் தடையில்லை. இவைகளெல்லாம் தெய்வமகிமையை விளக்கிக்கொண்டிருக்கின்றன. அந்தமகிமை ஒருவராலும் அறியப்படாது. அளவிடப்படாது. பாருங்கள்! பலசாஸ்திரவாதிகள், உலகத்துக்குக் காரணப்பொருளாயிருப்பது "காலமே" என்றும் "பரமாணுக்களே" யென்றும் "சுபாவமே" என்றும் "தற்செயலே" என்றும் "பூதங்களே" என்றும் பலவிதமாக மயங்கிக்கூறினார்கள். இவர்களெல்லாரும் "நாஸ்திகர்" என்று நமது ஆரியர்கூறுவார்கள். சிலர் "தெய்வம் உண்டு, என்றும் இல்லை யென்றும்கூறத்துணியாமலிருக்கிறார்கள். வேறுசிலர் தெய்வமுண்டு என்பதில் ஆக்ஷேபனையில்லை; அதனை யிந்தச்சரீரத்துடனிருக்கிறவரையிலும் காணக்கூடாதென்றும், சரீராந்தமாகிய மோட்சத்தில் காணலாமாகையால் அது அரூபப்பொருளா மென்பார்கள்; இன்னம்சிலர் தெய்வம் உருவப்பொருளே யென்பார்கள். பின்னும் சிலர் தெய்வம் உருவம் அருவமாகிய இருவகைச் சொரூபமுமுடையதென்பார்கள். இவர்களெல்

லாரும் "ஆஸ்திகர்" என்னப்படுவார்கள். இப்படிப்பலவிதமாக அறிஞரால் மயங்கக்கூறும்படி நிற்கிற தெய்வமகிமையையாரால் அளவு படுத்திச் சொல்லும் தரமாகும்? நமது ஆரியோத்தமர்களே தெய்வமுண்டு என்று சித்தாந்தப்படுத்தி, அது "தனக்கென்று ஒரு சொரூபமில்லாதது என்றும், பக்தர்களுக்கனுக்கிரகம் செய்யும் பொருட்டு அதற்கு வேண்டிய சரீரத்தைத்தனது விருப்பத்தாலெடுத்துக்கொண்டு அன்பர்களுக்குப் பிரத்தியட்சமாகுமென்றும், இந்தச்சரீரத்துடனிருக்கும்போதே காணவுங் கூடுமென்றும், அப்படிக்காண்பதற்கு வேண்டிய வழிகளையின்னதென்றும் அளவில்லாதகாலம் தவத்திலிருந்து கண்டு அறிந்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதனைக் காண்பதற்குப் பொய்யற்ற நெஞ்சும், உண்மையான பக்தியும், வஞ்சனைதுரோகங்களில்லாத குணமும், ஜீவகாருண்ணியமும், மாதாபிதாவை வழிபடுத்தலும், குருசேவையும், தெய்வபக்தர்களுடைய கூட்டுறவும், சஜ்ஜனசகவாசமும், துர்ஜன சங்க ஒழிவும் அவசியம் வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இவற்றுக்குமாறான குணங்களும், உலக இன்பத்தில் அதிபற்றுதலும் கூடாதென்று விளக்கினார்கள். சதா தெய்வசிந்தனையுடனிருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இவ்விதமான சற்குணங்களையுடையவனாக இருந்து தெய்வவழிபாடு செய்தால் அதைப்பிரத்தியட்சமாகக் காணலாம் என்று வழிகாட்டியிருக்கின்றார்கள். அப்படி பக்திசெய்வதும், முன்னேசொன்னபடி குருலிங்கசங்கமபக்தியென்கிற மூன்றுவகையாகும் என்றும், இவற்றுள் தனக்குப்பற்றுதலுண்டாயிருக்கிற ஒன்றில் சிந்தையைச்செலுத்தி ஆராதிப்பதே தெய்வத்தைக்காண்பதற்கு நல்லவழியென்று விளக்கியிருக்கிறார்கள். மாதாபிதாக்களைத் தெய்வமாக வழிபட்டும் பேறுபெறுவதும், குரு, சங்கமபக்தி செய்து பிரயோசனம் அடைவதும் அளவில்லாத புண்ணியபலனுடைய தவசிரேஷ்டர்களுக்கேயல்லாமல் மற்றவரால் இக்காலத்தில் முடியாது. ஏனென்றால் இக்காலத்தில் உண்மையான குருவும் உண்மையான பக்தர்களும் காணப்படுவதுஅரிது. காணப்பட்டாலும் அவர்களிடம் பக்திசெலுத்திப் பயன்பெறக்கூடியவர்கள் மிகவும் அரிது. பெற்றோரிடம் தெய்வ விசுவாசம் வைப்பவரும் இக்காலத்தில் காண்பதருமை. முற்றும் ஒழிந்து போகவில்லை. பல புண்ணியவான்கள் இருக்கிறார்கள். பெற்றோரும் குருவடிவிலடங்குவதால் மூன்றுவகைப் பக்தியே விசேஷமென்று கூறப்பட்டது. உண்மையான தெய்வபக்தியுண்டானால் மேற்குறித்த மூவகைப்பக்தியும் தானே யுண்டாகும். அதற்கு வழி யாதென்றால் அதனையே "ஆலயந்தொழுவது சாலவும்நன்று" என்ற வாக்கியத்தில் அன்னையார் விளக்கியருளினர். எப்படியென்று விசாரிப்போம்.

குழந்தைகளே! நாம்பலதடவை ஆலயங்களுக்குப் போயிருக்கிறோமே; அவ்விடத்தில் நாம் என்னத்தைப்பார்த்தோம். லோகங்களாலும் சிலையாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களையேயாம். என்ன என்றால் தேவன் தன் பக்தர்களுக்குக்காட்சிகொடுக்கும் பொருட்டுத் தனது இச்சையால் எடுத்துக்கொண்ட சொரூபம் பலவுண்டென்று வேதம்கூறுகிற திவ்விய சொரூபங்களேயாம். வேதம் என்பது என்ன? தெய்வமானது தனது உண்மையை வெளிப்படுத்தி நமக்கு அநுக்கிரகஞ் செய்வதற்காக வெளிப்படுத்தியருளிய உண்மைநூல். அது தெய்வசொரூபம் இப்படிப்பட்டது என்றும், அதில் விக்கிரகசொரூபமும் ஒன்றென்றும், அதைச் செய்கிற முறைமையையும், அதனிடத்தில் தெய்வத்தை வரும்படிசெய்து வழிபடுகிற ஒழுங்கும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படி செய்யப்பட்ட விக்கிரகங்களில் வேதம் சொன்னபடி தெய்வத்தை எழுந்தருளும்படி செய்து, நாம் ஆராதித்து நினைத்தகாரியங்களைச் சித்தியாக்கிக்கொள்ளும்படியாக நமது முன்னோர் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த விக்கிர சொரூபங்களையேநாம் ஆலயத்தில் கண்டு தெரிசித்து மகிழ்ச்சி அடைகிறோம். விக்கிரகத்தில் தெய்வமிருப்பது கூடுமோ? என்றால் கூடும். அது எப்படி? எங்கும் நிறைந்திருப்பதாகிய சிறந்த வியாபகசக்தியையுடைய தெய்வம் விக்கிரகத்திலும் நிறைந்திருப்பதுகூடியதல்லவா? அதையன்றி வேறு சொரூபங்களில் தெய்வவழிபாடு செய்யக்கூடாதோ? கூடும். நாம் காணக்கூடியதும் காணக்கூடாததுமான சகலத்திலும்தெய்வவியாபகமிருப்பதால் எல்லாப்பொருள்களிலும் தெய்வ வழிபாடு செய்யலாம். அது மிகக்கடினம். பேரறிவுடைய பெரியோர்களுக்குமாத்திரம் பயன்படும். நம்மைப்போன்றவர்களுக்கு விக்கிரகாராதனையே சிறந்தது. மனதிலே நினைத்து வழிபாடு செய்யக்கூடாதோ? எதைச்சிந்திக்கிறது? தெய்வத்தை. தெய்வமெப்படி யிருக்கிறது? விக்கிரக சொரூபம்போல என்று வைத்துக்கொள்வோம். அந்தச் சொரூபத்தை மனதினால் நினைத்து மகிழ்வதுபோலக் கண்களால்கண்டு தரிசித்தும் களிப்படைவதினால் குற்றமென்ன? சொரூபத்தில் ஆராதிப்பது பயனில்லையென்று சொல்லுகிறார்களே? அது பிரயோசனமில்லாதபேச்சு. ஏன்? சொரூபத்தில் ஆராதிக்கக் கூடாதென்றால் அதை யெப்படி தியானிக்கிறது? சொரூபமில்லாத பொருளாகச் சிந்திக்கக்கூடாதோ? இது விந்தைதான். சொரூபமில்லாத பொருளை மனம் அறியுமோ? இனிப்பு, புளிப்பு, கசப்பு முதலிய ரூபமில்லாதவற்றை மனமறிந்து அநுபவிக்கவில்லையா? நாக்குமுதலிய கருவிகள் அறிவிப்பதினால் அன்றித்தானே மனதறிந்ததில்லை. சப்தாதிகளும் அப்படியே கொள்க. அன்றியும் இனிப்பு, புளிப்பு முதலியன குணங்களே யன்றிக் குணத்தையுடைய குணப்பொருள்களல்ல. தெய்வமும் இனிப்பு, புளிப்புப் போல்வதானால் அதுவும் ஒரு குணமாகவேண்டுவதேயாம். குணமென்பது

தனித்து நில்லாது; ஒரு பொருளைப்பற்றியே நிற்கும். அப்பொழுது கடவுள் நிராதாரமான பொருளென்கிற இலட்சணவிரோதமடையும். மனமோ பஞ்சேந்திரியங்களைத் துணையாகக்கொண்டால் அல்லாமல் ஒரு பொருளையும் அறியாது. இந்திரிய உதவியால்தெரிந்த பொருளைச்சிந்தித்தறியும் வல்லமையுடைய மனமானது அவ்விந்திரியங்களால் காணப்படாத கடவுளை யெப்படிச் சிந்திக்கும்? நீங்கள் மனதினால் நினைக்கக்கூடியதெல்லாம் இந்திரியங்களால் முன்னேபார்த்தறிந்த பொருளேயன்றிப் பாராதது அல்ல.

(இன்னும்வரும்) அ. சுப்பிரமணியஐயர்.

---

## மகளீர் நிலைமையும் மனத்துயரும்.

---

சோதரிகளே!

இவ்வுலகிலுள்ள சீவர்கள் பொதுவாகத்துன்பத்தையே ஆபரணமாகவுடையரென்றாலும் உற்று நோக்குழி அவ்வவர் தன்மைக்கேற்ப உட்பிரிவுகள் அநேகமுள. அவைகள் வறுமைத்துன்பமென்றும் புத்திரமித்திரகளத்திராதியரால் நேருந்துன்பமென்றும், பல்வகைப்பிணிகளால் உளதாகுந் துன்பமென்றும், அநாதி தொட்டுள்ள ஆணவமலத்தால் மறைப்புண்டு தன் சொரூபந் தெரியாமல் செல்வப்பெருக்கால் இறுமாந்து தான் ஆண்டானென்றும் பிறர் அடிமைகளென்றும் கருதி அநேகவித துன்பங்களுக்குட்படுத்த வினைக்கேற்ப அவர்க்குள் அடங்கி நின்றனுபவிக்குந் துன்பமெனவும், இன்னும் இத்தகைய பகுதிகள் அநேகமுள. ஆனால், இப்பகுதிகளில் பெரும்பான்மையான துன்பத்தையுரித்தாகவுடையவர்கள் பேதமைப் பெண்பாலாரும் சிறுபான்மை பாகஸ்தர் ஆடவருமாகமுடிகிறது. சிறுபான்மை பெண்பாலாரிலும் சிலர்மேற்கூறிய துன்பத்தினை மிகுதியும் அநுபவிக்கமார்க்கமில்லாமல் நல்வினையாற்பெருஞ்செல்வமும்மனமொத்த தலைவரையும் பெற்றுவாழ்வுற்றிருக்கின்றனர். இத்தகைய செம்மைப்பாடுள்ள பெண்கள் ஆயிரத்திலொருவரெனக்கூறலாகுமன்றி நூற்றிலொருவரெனவும் கூறக்கிடைப்பதரிது. ஆதலின் பெரும்பான்மையான பெண்களின் நிலைமைகளைப்பற்றிச்சிறிது கவனிப்பாம். எல்லாத்துன்பங்களினும் கொடியது வறுமைத்துன்பமே யென்பதுண்மை. இதுபற்றியே

“கொடிதுவறுமை கொடிது” என ஔவைப்பிராட்டியாரும்

“இன்மையின்னாத தியாதெனினின்மையின்மையே யின்னாதது” என தெய்வப்புலமைத்திருவள்ளுவ நாயனாரும் விளக்கியருளினர்களாகும். அத்



தகைய முதற்றுன்பம் உற்றுநோக்குமிடத்து பெண்களுக்கே முழுச்சுதந்தரமுடையது. தற்சுதந்தரமுடைய ஆடவரைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகமாகிய ஆடையாபரணாதிகளைப்பெண்கள் அணிந்த போதிலும் பரதந்திரமானதே தவிரச் சுதந்தரமாக அணியப்பட்டதல்ல. காரணம். சுயசம்பாத்தியம் ஆடவர்க்கே யுள்ளதன்றி பெண்களுக்கு இம்மியளவும் இல்லாததே. தேகாதிகளைத்தானெனமருளும் ஆன்மாவைப் போல் எவ்வளவுகாலம் யாவும் தற்சுதந்தரமாக நினைக்கப்பட்டதும் முடிவில் ஆன்மாவின் சுதந்திரம் வேறாகவும், தேகாதிகளின் சுதந்தரம் வேறாகவும் ஒழிவதுபோலவே பொருளைத்தேடும் ஆடவர் சுதந்திரம் வேறாகவும் பெண்களின் சுதந்தரம் வேறாகவும் நிற்பதன்றிவேறில்லை. இது சாதாரண காலங்களில் தோன்றாவிடினும் குடும்ப விவகாரங்களில் வருத்தம்தோன்றும் ஒவ்வோர்சமையங்களிலும், (தற்சுதந்திரமென்னும் செல்வமுடைய ஆடவர் இப்பெண்களை ஆடுமாடுகளை நடத்துவதுபோல் கேவலத்தன்மையாய் நடத்தியும் இகழ்ந்த பலமொழிகள் வழங்கியும் அவர்கள் மனம் இல்லறக்கடமைகளை மீறியும் மனம்வேறுபடும்படி அவ்வளவு கொடுமையாக நடத்திவருவதால்) தோன்றா தொழியவிதியில்லை. முழுமூட புத்தியுடைய பெண்களெனினும் மிக்கதுயரத்தை யுண்டுபண்ணக்கூடிய இத்தகைய கொடுமைகள், கல்விப்பாடும் நுண்ணறிவும் உடையவர்களாயுள்ள பலபெண்களுக்கு எவ்வித பெருந்தாக்குதலாகவும் சரித்தற்கரிய சங்கடமாகவும் எண்ணப்படும் என்பது அறிவுடைய ஆடவர்க்குமே தெரியாமற்போகாது.

மிகுந்த கல்விப்பாடும் விவேகமும் உடைய ஆடவர்கள் தாங்கள் வெகுளியுற்றகாலத்தும் இப்பெண்களின் போலிச் சுதந்தரநிலைமையை யுணர்ந்துள்ளோராதலின் தங்கட்குற்ற வெகுளியை நல்லறிவால் தணித்து அவ்வெகுளிக்கு இப்பெண்களை யெதிரியாக்கித் தமது தகுதிக்கிழுக்கை வருவித்துக்கொள்ளாமல் சமாதானமடைவர். மேற்கூறிய தன்மை சிறிதுமற்ற பல ஆடவர் நடக்கும் அநாகரிகமான நடைகளும் அதனால் இப்பெண்கள் அடையும் துன்பங்களும் விரியக்கூறுவது அநுசிதமாகும். பாருங்கள்! சர்வஜீவதயாபரனான கடவுள் அறிவு, உணவு, முதலிய அனைத்தையும் இருபாலார்க்கும் சமமாக அளித்திருக்கவும், அதை யநுபவிக்கும் செல்வம் அரிதாகின்றது.

பெண்பாலிற்கு ஆடவனது சகாயமும் ஆதரவும் எத்துணையின்றியமையாததோ? அவ்வாறே பொருள்தேடி இல்லறம் நடத்தும் ஆடவருக்கும் பெண்பாலினது துணையும், ஆதரவும், அவசியமுடைத்தேயாம். ஒருவரதுகடமைக்கு மற்றொருவரது கடமையும் பொறுப்பும் குறைந்தனவல்லவென்பது நெறிப்படி யொழுகுவோர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கமாகும். இவ்வுண்மையறியாது பொருளீட்டும் காரணமொன்றினா

லே தமது கடமையே பொறுப்பேறிய தெனக்கருதி தமக்கெழுமைக்கும் இன்றியமையா அருந்துணையாய் ஒத்துநின்றின்பதுன்பங்களை யநுபவிக்கக் கூடிய இல்லறக்கிழத்திகளின் கடமைகளை யிகழ்ந்து இடர்செய்வதால் அத்தகையாடவர்களை மணந்த பெண்களுக்கு வறுமைத்துன்பமும் அதுகாரணமாகவே சமத்துவமின்றி ஒருவர்க்குள் அடங்கி நின்றனுபவிக்கும் துன்பமும் நிரந்தரமாகின்றன.

இதுபோலவே மக்கட்பேற்றினால் நேருந் துன்பமும் தகப்பனைக் காட்டிலும் தாய்க்கு நூறுமடங்கதிகமான தேகப்பிரயாசையும் அதுபற்றிப்பெரும்பாசமும் அதனால் துன்பமும் ஏற்படுகிறது. அதையறிந்தன்றோ தந்தையின் வணக்கங்கொள்ளும் சந்நியாசிகளும் தாயைவணங்குவதும், பட்டினத்தடிகள் அனைத்துந்துறந்தும் அன்னையன்புமாறாமல்

"முந்தித்தவங்கிடந்து முன்னூறுநாட் சுமந்தே
யந்திபகலாய்ச் சிவனையாதரித்துத்—தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத்தழல் மூட்டுவேன்"

என விரங்கியதும், அன்னையும் பிதாவு முன்னறிதெய்வமென்று முற்படத்தாயை ஓதி ஒளவைப் பிராட்டியார் சிறப்பித்ததும், அன்னையின் அருங்கடமை அதிகமென்பதை யறிந்தேயன்றோ? "மகவினைப் பெறுநாள் துன்பம் வளர்த்திருநாளுந் துன்பம் விதலைசோர்பெய்திற்றுன்பம் வியன்பருவத்துந்துன்பம் கதமுறு காலம்வந்து கைப்பற்றிற் கணக்கில் துன்பம் இதமுறலென்னாள் சேயா லெற்றைக்குந் துன்பமேயால்" என்னும் இவ்வளவு துன்பங்களில் ஒன்றாவது ஆடவர்க்குச் சம்மந்தமுடையதன்று. இதுவுமன்றி

ஆடவரைக்காட்டிலும் வலுவின்மையும் அதனால் நேரும் பற்பலபிணிகளுக்கும் பெண்கள் உரியவராகின்றனர்.

ஆதலின் பெண்களின்நிலை அறக்கொடிது! அறக்கொடிது!! அந்தந்தோ!!! பெண்ணென்றால் பேயுமிரங்கும் எனும் ஆன்றபழமொழியும் உலகில்வழங்குகின்றது. பெண்பாலாரின் அருங்கடமைகளையுள்ளபடி யுணர்ந்து மதிப்பொடுநடத்தி அதனால் தாமும் சுகத்தையும் களிப்பையும் அடைந்துவரும் பெருமதி ஆங்கில வகுப்பினர்க்கே யமைந்த பெருந்திருவன்றி வேறில்லை. அத்தகைய மேன்மையையடையாத இந்து சுதேசப்பெண்கள் கல்விப்பாடும் வாய்ந்திலராயின் அன்னோர் மனம் அடங்கும் மார்க்கந்தானேது? அடையுங்கதிதான்யாது? ஆதலின் ஒவ்வொரு பெற்றோர்களும் தமது சிறுமிகள் துன்பத்திலழுந்திப்பாழ்மனத்தராகாமல் உய்யுமாறு இளமையிலேயே கல்விச்செல்வத்தினையளித்து உபகரித்தல் குருடனுக்குக் கோல் கொடுத்ததுபோன்ற பேருபகாரமாகமுடியும்.

உருக்குமணியம்மாள்.



## தென்னாலுர்ரமன் கதை.

### 2. ஆனைக்காலிலிடறலுக்குத் தப்பித்துக்கொண்டது.

தென்னாலுராமன் ஒரு நாள் ஹாசியத்திலே மிதமிஞ்சி இராயரிடத்தில் வேடிக்கையாக பேசிவிடவே இராயர் மிககோபங்கொண்டு அவனை யானைக்காலிலே யிடறும்படியாக உத்தரவு கொடுத்தார். சேவகர்கள் அவனைக் கொண்டுபோய் ஊருக்குப்புறத்திலே ஒரு மைதானவெளியிலே ஆழமான ஒரு குழி வெட்டி முகம், தலை முழுவதும் தெரியும் படியாகப் புதைத்தார்கள். அவர்கள் இவன்தலையை யிடறும்படி செய்ய யானை கொண்டு வருகிறதற்கு பட்டணத்திற்குப் போனார்கள். அத்தருணத்தில் கூன்வளைந்த வண்ணான் அந்த வழியாகப் போகும்போது "ஏன், ஐயா! புதைக்கப்பட்டிருக்கிறாய்" என்று கேட்டான். அதற்கு தென்னாலுராமன் "எனக்கு நெடுநாளாக் கூன்வளைந்திருந்தது. அது நிமிரும்படியாக ஒரு வைத்தியன் என்னையிங்கே புதைத்துவைத்தான். எனக்கு இப்பொழுது கூன் நிமிர்ந்து போச்சுது. அது அவ்விதமிருக்கிறதாயில்லையா வென்று அறியவேண்டுமானால் என்னைத் தோண்டி வெளியிலேவிட்டுப்பார்த்துக் கொள்" என்று மறுமொழிபகர்ந்தான். அந்தப்படியே வண்ணான் செய்துபார்த்து கூனில்லாமலிருக்கிறதைக் கண்டு ஐயா! எனக்குக் கூன் நிமிரும்படியாகப் புதைக்கவேண்டுமென்று கெஞ்சி கேட்டுக்கொண்டான். தென்னாலுராமன் மிகசந்தோஷத்துடன் அவனை வைத்துக் கழுத்தளவு புதைத்து மூட்டையை யெடுத்துக்கொண்டு வந்து இராயரைக் கண்டான். இராயர், அடே! யானையின் காலிலேயிடறும்படியாகச் சொன்னேனே. அதற்குத்தப்பி எப்படி வந்தாயென்று" கேட்டார். "ஐயா! எனக்குப் பதிலாக வண்ணான் இடறுண்ணும்படியாகச் சாக்கிரதைசெய்துவிட்டு, நான் அவன்மூட்டையை வாங்கிக்கொண்டு வந்தேன்" என்று மிக வணக்கத்துடன் பதிலுரைத்தான். இதை இராயர்கேட்டு நகைசெய்து அந்தக் குற்றத்தை மன்னித்துவிட்டார்.

### 3. தலைவெட்டுக்குத் தப்பித்துக்கொண்டது.

மற்றொருநாள் தென்னாலுராமன் ஹாசியத்திலே இராயருக்கு அதிக கோபமுண்டாகும்படியாய் பிரபலமான குற்றஞ்செய்தான். இராயர்கண்டு இரண்டு சேவகர்களையழைத்து "இதோயிருக்கிற இந்த வஞ்சகனையிட்டுக் கொண்டுபோய் இவன்தலையை வெட்டிப்போடுங்களென்று" கண்டிப்பாய் ஆக்கியாபித்தார். அவ்விதமே அந்த சேவகர்கள் அவனைத்தூக்கிக்கொ-

ண்டுபோய் வெட்டப்போகிற சமயத்திலே அவர்களிடத்தில் பின்வருமாறு சாந்தமாய் சொன்னான், " நீங்கள் எப்படியும் என்னை வெட்டப்போகிறீர்கள். நான் நல்லகதியடையும்படியாக ஒரு குளத்திலே இறங்கி மாரளவு ஜலத்திலே ஒரு * முகூர்த்தகாலம் கடவுளை தியானம்பண்ணிக் கொண்டிருக்கிறேன்; அத்தருணத்திலேயே நீங்கள் இரண்டுபேரும் இரண்டுபக்கத்திலேயுமிருந்து ஒரேவீச்சாக என்தலையைவெட்டிப் போடுங்கள்." இதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். தெனாலிராமன் ஜலத்தில் மாரளவு நின்றுகொண்டு ஜபம்செய்பவன்போல பாசாங்குசெய்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் விசையாக கத்திகளைவீசினபொழுது, தெனாலிராமன் ஜலத்தில் முழுகிவிடவே ஒருவன் கத்தி மற்றொருவன்மேல்பட்டு அச்சேவகர்களிருவரும் வெட்டுண்டார்கள். காலதாமதம் செய்யாமல் தெனாலிராமன் உடனே இராயருக்கெதிரேபோய் நின்றான். இராயர் எப்படி தப்பிவந்தாய் என்று கேட்டார். அதற்கு தெனாலிராமன் " கைபழக்கமில்லாத அந்த மூடர்கள் ஒருவரால் ஒருவர் வெட்டுண்டு போகும்படிசெய்து நான் தப்பிவந்தேன்" என்றான். இராயர் அன்றையதினமும் அந்தக்குற்றத்தை மன்னித்துவிட்டார்.

---

## † விளக்கு கூண்டுகள்.

---

சமுத்திரத்தில் அநேக கற்பாறைக ளிருக்கின்றன. இவைகள் அலைகள் அதிகமாகயில்லாவிடில் தென்படும்; அலைகள் அதிகமாக விருக்கும்பொழுது இவைகள் தென்படா. அக்காலத்தில் கப்பல்களுக்கு அபாயம் நேரிடக்கூடும். புயல் காற்று அடிக்கும் சமயத்தில் கப்பல்கள் பாறைகளில் மோதப்பட்டு அதிலுள்ள மாலுமி முதலியவர்கள் முழுகிப்போவார்கள். இராத்திரியிலோ அபாயம் இன்னுமதிகம்; ஏனெனில் பகலில் சிறிய அலைகள் வந்து நின்று விடும்பொழுது பாறைகளிருப்பது நன்றாகத் தெரியும். இராத்திரியிலும் இவ்விதம் பாறைகளைக் கண்டு ஜாக்கிரதையாய் கப்பல்களைச்செலுத்த விளக்கு கூண்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

---

* முகூர்த்தம்—ஒன்றரைமணிநேரம்.

† பிரான்சு தேசத்தில் முதல் முதல் 1584 ௵ ஒரு விளக்கு கூண்டு கண்டுபிடிக்கப்பட்டு 1610 ௵ முடிவு பெற்றது. 1727 ௵ அது விருத்தி செய்யப்பட்டது. இது 197 அடி உயரம். கிருஸ்து பிறப்பதற்கு 300 வருடத்திற்கு முன் ஒரு விளக்கு கூண்டு யிருந்ததாக தெரியவருகிறது. இதன் உயரம் 550 அடி.





குழந்தைகளே! விளக்கு கூண்டுகளென்றால் என்ன? ஒரு விளக்கு கூண்டு ஒரு பெரிய கோபுரத்தைப்போல் உயரமாகவாவது அல்லது ஒரு நீண்ட ஸ்தம்பத்தைப்போலிருக்கும். உச்சியில் ஒரு அறை யிருக்கும். இதற்கு நாலாபக்கத்திலும் பலகணிகளுண்டு; இந்த அறையில் ஒரு பெரிய விளக்கு இராத்திரி முழுவதும் எரிந்து கொண்டிருக்கும்.

இந்த விளக்கை சரிவர ஏற்றி வைப்பவன் எவன்? ஒரு மனிதன் தான் தினம் இந்த விளக்கை நன்றாகத்துடைத்து ஏற்றி வைக்க வேண்டும். இவனுடன் இவன் மனைவி, குழந்தைகள் முதலான வர்களும் அடிக்கடி வசித்துக் கொண்டிருப்பதுடன் இவனுக்கும் உதவியாக யிருப்பார்கள். சிலவேளைகளில் கடல் கொந்தளிப்பா யிருக்கும் பொழுது (புயலடிக்கும் பொழுது) இவனைச்சேர்ந்த ஜனங்கள் கரைக்கு இரண்டுமூன்றுவாரம் வரையிலும் போகமுடியாமலிங்கேயே தங்க வேண்டிவரும். கரையிலிருந்தும் ஒருவரும் விளக்குக் கூண்டிருக்குமிடத்திற்குப் போகமுடியாது. ஒருகாலத்தில் விளக்கு கூண்டு சேவகன் கரைக்கு ஆகாரத்திற்காக படகில் சென்றான். அப்பொழுது விளக்கு கூண்டில் இவனது பனிரண்டு வயதுள்ள பெண்ணைத்தவிர வேறொருவருமில்லை. இவன் கரைக்குவந்து சேர்ந்ததும் பெருத்த புயல்காற்று வீசியது; இருட்டோ அதிகரித்தது. இவன் விளக்குக் கூண்டை அடைய முடியாதென்று தெரிந்து கொண்டதும் தவிர, விளக்கையேற்ற அங்கு ஒருவரு மில்லாதபடியால் கப்பல்கள் பாறைகளில்தாக்கி எங்கு மோதப்படுமோ வெனபயந்திருந்தான். சிலநேரம் சென்றபின்பு விளக்கு கூண்டில் வெளிச்சம் பிரகாசமாக தெரிகிறதைப்பார்த்தவுடன் இவனுக்கு

உண்டான் சந்தோஷமிவ்வளவவ்வளவல்ல. யார் அந்த விளக்கை ஏற்றியது? உங்களுக்குத் தெரியாதா? விளக்குக்கூண்டில் இவனுடைய குமாரத்தி ஒருவள்தானிருந்தாள். இவள் தனது அருமந்தகப்பனார் தினம் விளக்கைத்துடைத்து ஏற்றுவதைப்பார்த்திருக்கிறாள். இருள்மூடிய பின் விளக்கை ஏற்றவேண்டுமென்று இவளுக்குத் தெரியும். இவள் உச்சிக்குப்போக நிச்சயித்து ஒவ்வொரு படிகட்டிலும் மெதுவாக காலைவைத்து சென்றாள். அப்பொழுது அலைகள் மொம்மரமாக விருந்தமையால் இவைகள் இந்தவிளக்குகூண்டின்மேலும் விழுந்துகொண்டிருந்தன. சத்தமோமிக பயங்கரமாயிருந்தது. பெண்ணோ பயப்படாமல் ஒரு நாற்காலியை எடுத்து அதின் மேல் ஏறினாள். இவளுக்கு விளக்கு எட்டவில்லை. அங்கிருந்த சில புத்தகங்களை எடுத்து நாற்காலியில் உயரமாகவைத்து மறுபடியும் ஏறிப்பார்த்தவுடன் விளக்கு இவள் கைக்கு எட்டவே விளக்கை ஏற்றி விட்டாள். அநேக மாலுமிகள் வெளிச்சத்தைக் கண்டு சந்தோஷித்து தப்பித்துக் கொண்டார்கள். இந்த விளக்கு ஏற்றப்படாமலிருந்தால் இவர்களுக்கு என்ன ஆகுமோ நீங்களே யோசித்துப்பாருங்கள்! இங்கு படத்தில் விளக்குக் கூண்டைப்பாருங்கள். இம்மாதிரி நமது சென்னையில் கரையோரத்தில் ஒன்றிருக்கிறது. இதை இப்பொழுது உபயோகப்படுத்துவதில்லை. ஆனால் இதைவிட வெகு நேர்த்தியாய் ஒன்று ஐகோர்ட்டில் கட்டப்பட்டிருக்கிறது. இதன் வெளிச்சமோ மிகப்பிரகாசமாயும் வெகுதூரம் தெரியக்கூடியதாயுமிருக்கிறது. இதில் விளக்கு சக்கராகாரமாக உருண்டு கொண்டேயிருக்கும். இதன் வேடிக்கையை அநேகர் பார்க்க வேண்டியது தான். சில விளக்கு கூண்டுகள் கரைக்கு கொஞ்ச தூரத்திலிருப்பதுண்டு. அல்லது பாறைகளிருக்குமிடத்திற்குச் சமீபத்திலுமிருப்பதுமுண்டு. இவ்விஷயமாக பலகதைகளிலிருக்கின்றன. இச்சமயம் இத்துடன் நிறுத்தி மற்றொரு சமயம் ஒரு ஸ்திரீயின்கதையை எழுதுகிறோம்.

## முக்கிய அறிவிப்பு.

நமது பத்திரிகைக்கு சென்ற வருடத்திற்கும் இவ்வருடத்திற்கும் சந்தா கொடுக்காதவர்களுக்கு ஆகஸ்டு மாதப்பத்திரிகையை வி. பி. மூலமாக அனுப்பி சந்தாவசூல்செய்யப்படும், அதற்குள் வி. பி. மூலமாக பெற்றுக்கொள்ள இஷ்டமில்லாதவர்கள் உடனே தெரியப்படுத்தி சந்தாவை யனுப்பவேண்டும். ஆகஸ்டுமாதப்பத்திரிகை 20-உ யிலும் செப்டம்பர் மாதப்பத்திரிகை 15-ந் தேதியிலும் பிரசுரிக்கப்படும்.

C. S. இராமசுவாமி ஐயர்.
மாதர்மனோரஞ்சினி புரோப்ரைட்டர்.

THE REGISTRAR OF ... OFFICE REGISTERED 7-SEP 1901 MADRAS.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்."—ஔவையார்.

VOL. 3. | MADRAS: AUGUST 1901. | No. 6.
புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901ளு ஆகஸ்டுமீ | இல. 6.

## தெய்வமகிமை.

### ஆலயந்தொழுவது சாலவுநன்று.

(94-வது பக்கத்தொடர்ச்சி.)

மனதுக்கு ஒரு பற்றுக்கோடுவேண்டும். மெய் வாய் மூக்கு என்கிற மூன்று இந்திரியங்களாலும் அறிந்த பொருள்களைவிடக் காது கண் ஆகிய இரண்டு புலன்களாலும் கண்டபொருள்களே மனதில் நன்றாய்ப் பதியும். இனிப்பு, வாசனை, முதலியவற்றை நாக்காலும், மூக்காலும் உணர்ந்த மறுக்ஷணத்தில் அந்தச்சுவை வாசனை யெப்படியிருந்தது என்று கேட்டால் நன்றாயிருந்தது என்று சொல்வோம். அவ்வளவேயல்லாமல் அந்தச் சுவையும் வாசனையும் மனதிற்கு அப்பொழுது அநுபவத்தில் வருவதில்லை. காதாலே கேட்டபொருள் விசேஷமாய் மறக்கப்படுவதில்லை. ஆதலால் காது மற்றைய மெய், வாய், மூக்குகளைவிட மனதுக்குச்சிறந்த அறி கருவியாகும். கண்ணினால் காணப்படுவதோ ஒரு போதும் மறக்கப்படுவதில்லை. வெகுகாலத்துக்குமுன் நாம் பார்த்திருக்கும் நமது சிநேகிதர், அண்ணன் தம்பி, மாதா பிதா, மற்றுமுள்ளவர்களை நினைத்துப்பார்த்தால் அவர்களுடைய சொரூபம், அப்பொழுதிருந்தபடியே நமது மனதில் தோன்றுவது யாவரும் பிரத்தியட்சமாகக் காணக்கூடியது. இதனால் "சர்வேந்திரியாணாம் நயனம்பிரதானம்" என்று சாஸ்திரங் கூறியது. கண்ணைவிடச் சிறந்த புலன் ஒன்றுமில்லை. கண்ணுக்கும் மனதுக்கும் அதிகசம்பந்தம் உண்டென்று தோன்றுகிறது: ஆகையால் நாம் தெய்வத்தைக் கண்டு தெரிசிக்க வேண்டுமானால் பக்தியிற்சிறப்படையவேண்டும். பக்தி முதிர்ச்சியடைவதற்கு முன் தெய்வம் வெளிப்படுவதில்லை. அந்தபக்தியும் பல நாள் பழக்கத்தினாலன்றி யெளிதில் முதிர்ச்சியடைவதில்லை. அது முதிர்ச்சி பெறும் பொருட்டுத் தேவாராதனைசெய்து சதாதெய்வத்தை மனதிலிருத்தவேண்டும். அதற்கு வேறு வழியில்லாமையால் விக்கிரக சொரூ-

JL
161164
Y15m211,M99M0

பமே ஆராதித்துப்பக்தி செய்வதற்கேற்றது, அந்த விக்கிரகங்களில் வேதமந்திரங்களாலும் நமது உள்ளன்பினாலும் தெய்வத்தை யெழுந்தருளச்செய்து ஆராதித்துப் பெரும்பேறு அடையலாம். அவ்வாறு சித்தி பெற்றவர்கள் எண்ணிலடங்கார்கள். "சொல்லினும் சொல்லின் முடிவிலும் வேதச்சுருதியிலும், அல்லினுமாசற்ற வாகாயந்தன்னினு மாய்ந்துவிட்டோர், இல்லினு மன்பரிடத்தினு மீசனிருக்குமிடம், கல்லினும் செம்பினுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே." என்று கூறிய செய்யுளால் சிலாவிக்கிரகங்களிலும், உலோகத்தாற் செய்யப்பட்ட விக்கிரகங்களிலும் கடவுளிரார் என்று காணப்படுகிறதே என்றால், குழந்தைகளே! அதை விளக்கிச் சொல்லுகிறேன். என் கேள்விகளுக்குச்சரியான பதில் சொல்லிக் கொண்டுவாருங்கள்.

அந்தச் செய்யுள் யாரால் சொல்லப்பட்டது? பட்டணத்துச் சுவாமிகளால் என்று தெரிந்து கொண்டிருக்கிறோம். அப்படியானால் அவருடைய மதம் என்ன? சைவமதம். சைவமதக் கொள்கையுடைவரானால் சைவசமயத்துக்குரிய நூல்களுக்கு விரோதமாகப் பேசுவாரோ? பேசமாட்டார். பேசினால் அவர் சைவராவாரோ? ஆகார். அவரது திருவாக்கைச் சற்றுக் கவனிப்போம் "நச்சரவம் பூண்டானை." "கண்டங்கங்கரியதாம் கண்மூன்றுடையதாம்" "கண்ணுதல்" பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத், திருமிடற்றடக்கிய சிவனே யடைக்கலம். அடங்கலு மடக்கிடுங்கடுங் கொலைக்காலனைக், காலெடுத்தடக்கிய கடவுணின்னடைக்கலம். உலகடங்கலும் படைத்துடையவன்றலை பறித், திடக்கை யடக்கிய விறைவனின்னடைக்கலம்." "இமவான்பயந்த, பச்சைப்பசுங் கொடி யுண்ணுமுலைபங்கர்." இவை போன்ற அவரது திருவாக்குகளால் சர்வேச்வரனாகிய தேவனுக்குச் சொரூபம் உண்டென்று வெளிப்பட்டது. "திருச்சிற்றம்பலத் தொளிருஞ்சிவனை" "அம்பலத்தானை யானந்தக்கூத்தனை" "என்னவிசாரம் வைத்தாயிறைவாகச்சி யேகம்பனே" என்பவைகளால் ஆண்டவனுக்கு ஸ்தலமும் ஆலயமுங்குறிப்பிடப்பட்டது. இந்தச் சொரூபம்யாது? என்றால் வேதங்குறித்த சொரூபமாம். இதனையே பட்டணத்து சுவாமிகள் தாம் தமது ஞான அறிவிற்கண்டுதெரிசித்தபடி, உலகத்தாருக்கு வெளிப்படுத்திக் கருணைசெய்தார். விக்கிரகசொரூபங்களினால் பிரயோசனமில்லை யென்பதேயவரது கருத்தானால் "பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி, மெச்சிச் சிவபதவீடருள்பவனை" என்ற அப்பெரியாருடைய திருவாக்குப்பிரயோசனமில்லாமற்போம். சொரூபம் ஒன்று இல்லாவிட்டால் பச்சிலை புஷ்பாதிகளை யெங்கே இடுவது? ஒரு சொரூபத்தின்மேலேயே வைக்கவேண்டுமாகையால் அதுவே விக்கிரகசொரூபங்களென்று



தெரிந்துகொள்க. அதைநமக்கு உணர்த்தும்பொருட்டுத்தான் சுவாமிகள் வேதங்குறித்த திவ்யசொரூபங்களையும், அவைகள் பிரகாசித்துக்கொண்டு இருக்கிற திருவாலயங்களையும் விளக்கிக்காட்டி, அண்டரண்டமுமனைத்துளபுவனமும், கண்டவண்ணலைக்கச்சியிற்கடவுளை, ஏகநாதனை யிணையடிபோற்றுமின், "மென்று விழுங்கிவிடாய் கழிக்கநீர்தேடல், என்று விடியுமெனக்கென்கோவே—நன்றி, கருநார்புரமூன்று கட்டழலாற்செற்ற, மருதாவுன் சந்நிதிக்கேவந்து." "கண்டங்கரியதாம் கண்மூன்றுடையதாம், அண்டைத்தைப்போல அழகியதாம்—தொண்டர், உடலுருகத்தித்திக்குமோங்குபுகழொற்றிக், கடலருகேநிற்குங் கரும்பு." அதனை வணங்குங்கள் என்றும், அது கரும்புபோன்று அடியார்பக்தியில் இனிப்பைத் தருமென்றும் தமது சுய அனுபவமூலமாக உபதேசித்தருளினார், இப்படிப்பட்டகருணை மூர்த்தியாகிய சுவாமிகளுக்கு விக்கிராராதனை வெறுப்பாகும் என்பது கால்காசுக்கும் பயன்படாது என்று அறியுங்கள். ஆனால் கல்லினுஞ் செம்பினுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே" என்ற வாக்கியம்பொய்யாமோ வென்றால் அல்ல; அதனுண்மைகளை நன்றாய் விளக்கிக்காட்ட இந்தச் சிறு நூலிடந்தராது ஆகையால் சுருக்கமாய்க் கூறுவோம். முன்னமே சொன்னபடியே சர்வேசுவரனாகிய தேவனுக்குத் தனக்கென்று சொந்தமான ஒரு ரூபமில்லை' தன் கருணையினால் பக்தர்களுக் கநுக்கிரகிக்கும் பொருட்டுப் பலவகையான ரூபங்களை யெடுத்துக்கொண்டாரென்று வேதம் சொல்லியது. அதனையே விக்கிரக சொரூபமாக ஆராதிக்கும்படி அந்த வேதமே வழிகாட்டியது. அதனை யாராதிக்கும் முறைமையாதெனின், வேதமந்திரபலத்தாலும், தன் தியானத்தாலும் தெய்வத்தை விக்கிரகத்தில எழுந்தருளும் படி செய்து குறைவற்ற தெய்வ பக்தியோடு ஆராதிக்கவேண்டும். அப்படி யாராதிக்கும் பொழுது அடியார்க் கெளியனாகிய ஜகதீசுவரன் ஆராதிப்பவருடைய பக்திக்கிரங்கி விக்கிரகத்தில் சாந்நித்தியமாயிருந்து அநுக்கிரகம் செய்வார். இதையே பட்டணத்துச் சுவாமிகளும் "பச்சிலையிடினும் பத்தர்க் கிரங்கி, மெச்சிச் சிவபதவீடருள்பவனை" என்று கூறினார். இதனால் பக்தியுண்டானால் பயனுண்டாம்; இல்லாவிடில் இல்லையாம் என்பதும், விக்கிரகத்தில் ஈசன் பிரகாசிப்பது பக்தருடைய பக்தியினாலேயேயன்றி வேறொன்றாலும் அல்ல என்பதும் நன்றாய் விளங்குகிறது. உண்மையானபக்திகாரணமாக ஈசுவரன் விக்கிரகத்தில் பிரகாசிக்கிறார் என்கிற வேதவசனத்தைக் கவனியாமலும், விக்கிரகமே ஈசுவரனாகுமென்றும் கருதுகிற மந்தமதியுள்ளவர்கள் மேல் இரக்கங்கொண்ட பட்டணத்துச்சுவாமிகள் அவர்களுக்குத் தெய்வ ஆராதனையே முக்கியமாய்வேண்டும் எனவும், அது இல்லாவிட்டால் வீண்பிரயாசமேதவிரப் பிரயோசனமில்லை யென்பதையும் விளக்குவ

தற்காகமேல்கண்டவாக்கியத்தை கூறியருளினர். விக்கிரகத்தில் ஆண்டவன் இரான் என்று சொன்னதைக்கேட்டு அதையே பிரமாணமாக நம்பித்தேவாராதனையைவிட்டு நாஸ்திகராகி நரகவாதனைக்குள்ளாகிமானிடர்வருந்துவார்கள் என்று கருதி, அதனைவிலக்கி விக்கிரகாராதனையாற் பலனுண்டென்று போதிப்பதற்காகவே "வாதுற்றதிண்புயரண்ணுமலையர் மலர்ப்பதத்தைப், போதுற்றெப்போதும் புகலு நெஞ்சே" என்றும், "பொன்முகரிக் கரைக்கேகல்லால் நிழற் கிழமர்ந்தருள் காளத்தியே" நெருப்பானமேனியர் செங்காட்டிலாத்திநிழலருகே, யிருப்பார்" என்றும்; "சோறிடுநாடு துணிதருங்குப்பை தொண்டன்பரைக்கண், டேற்றிடுங்கைகளிறங்கிடுந்தீவினை யெப்பொழுது, நீறிடுமேனியிர்சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா, லூறிடுங்கண்களுருகிடு நெஞ்சு மென்னுள்ளமுமே," என்றும்! "நினைமின்மனனே நினைமின்மனனே, சிவபெருமானைச் செம்பொன்னம்பலவனை." என்றும் தாமே பலக்ஷேத்திரங்களுக்கும் போய் அவ்வவ்விடங்களிலுள்ள தேவாலயத்தில் விக்கிரக சொரூபமாகவிருக்கும் பரமேசுவரனைப்பணிந்து பலவிதமான செய்யுள் மாலைகளையும் சாத்தியருளினர். அப்படி விக்கிரகாராதனை செய்யுங்கால்பக்தி அவசியம் வேண்டும் என்றும் பக்தியில்லாத விக்கிரகாராதனை மட்டும் பயன் தாராதென்பதனையும் "கையொன்று செய்ய விழியொன்று நாடக்கருத் தொன்றெண்ணப், பொய் யொன்று வஞ்சகநாவொன்று பேசப்புலால் கமழும், மெய்யொன்று சாரச்செவியொன்று கேட்க விரும்புமியான், செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே" என்ற செய்யுளால் உபதேசித்தருளினர். அன்றியும் பக்தியாலாராதனை செய்தால் பயன் பெறலா மென்பதை "கண்ணுண்டு காணக்கருத்துண்டு நோக்கக்கசிந்துருகிப், பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையால் எண்ணுண்டு சாத்த வெதிர் நிற்க வீசனிருக்கையிலே, மண்ணுண்டு போகுதையோ கெடுவீருடல் மானிடரே" என்ற செய்யுளால் விளக்கி யருளினர். இன்னம் அளவில்லாத பிரமாண வசனங்களுண்டு, விரியுமாதலால் இம்மட்டில் நிறுத்துவோம். இதுவரைக்கும் சொல்லிக்கொண்டு வந்ததனல் "கல்லினும் செம்பினுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே" என்ற வசனத்துக்குப் பக்தியில்லாத விக்கிரகாராதனையே பிரயோசனமில்லை என்பதும், பக்தியோடு செய்யப்படும் விக்கிரகாராதனை பெரும்பயனைத் தருமென்பதும், சுவாமிகளுடைய திருவாக்கைக்கொண்டே நிரூபிக்கப்பட்டதனல் நாம் கூறியதே அவ்வாக்கியத்திற்கு அர்த்தமாகுமே யல்லாமல் வேறு அர்த்தமில்லையென்று கொள்க. மனதுக்குள் தேவனைச் சிந்திப்பதற்கு விக்கிரக சொரூபங்களைக் கண்ணால் பார்த்துத் தரிசிப்பதே முக்கிய சாதனமாக இருக்கிறது. இப்படியே விக்கிரக சொரூபங்களைக் கண்களாற்கண்டு மன



தில் பதியச்செய்து கொண்டபின் அதனை மனதிலும் இடைவிடாமல் தியானித்தால், மனதில் பக்தி முற்றி ஈசனுடைய உண்மையான ஞான சொரூபம் நமக்கு வெளிப்படும்; அப்பொழுது நமக்குக் கிட்டாததுஒன்றுமில்லை. குழந்தைகளே! எப்பொழுதும் நமது மதப் பெரியோர் சொல்லியிருக்கிற வாக்கியங்களுக்கு நமது மதசாஸ்திரப்படி அர்த்தம் பண்ண வேண்டுமேயல்லாமல் அன்னிய மதஸ்தர் சொல்லும் அர்த்தம் ஒரு போதும் பயன்படாதென்று நினையுங்கள்.

குழந்தைகளே! இப்பொழுது சொல்லிக்கொண்டு வந்தப்படி பக்தியோடு செய்யப்படும் விக்கிரகாராதனை பெரும்பயனைத் தருமாகையால் ஆஸ்திகராகிய நமது ஆரியப் பெரியோர் கண்ட சித்தாந்தப்படி மனிதஜன்மமெடுத்ததற்கு முக்கிய பிரயோசனமான மோட்சத்தைப் பெறுவதற்கும், தத்தம் இஷ்டகாமியார்த்தங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும், ஆலயதரிசனம் அவசியம் வேண்டுமென்றும் கருத்துடைய நமது அன்னையாராகிய ஔவையார் இந்த வாக்கியத்தைக் கூறி யருளினர். எந்தக் காரியமும் தெய்வகிருபையில்லாமல் முடியாதாகையால் மனிதர்க்குத் தெய்வ வழிபாடு அவசியம் வேண்டுமென்பதற்காகவே, ஆலய வழிபாட்டைச் "சாலவு நன்று" என்று கூறினர். அன்னையார் ஆலய தெரிசனத்தைச் சொல்லி லிங்கவழிபாட்டைத் தெரிவித்தார் ஆனாலும், "குருலிங்க சங்கம்" என்கிற மூன்று பக்தியையும் கொள்ள வேண்டுவது அவசியமாகும். ஏனென்றால் "சொக்கிட்டரண்மனை புக்குட்டிருடிய துட்டர் வந்து, திக்குற்ற மன்னரைக் கேட்பது போற் சிவநிந்தை செய்து, மிக்குக்குருலிங்க சங்கம் நிந்தித்து வீடிச்சிக்கு மெய்க்குப் பெருத்தவர்க்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே" என்றதனல் பட்டணத்துச் சுவாமிகள், காஞ்சிபுரியில் எழுந்தருளியிருக்கிற ஏகம்பநாதரே, குரு லிங்க, சங்கம், நிந்தையும், சிவநிந்தையும் செய்து திரிந்து கொண்டிருக்கிறவர்கள் மோட்சத்தைவிரும்புவது, அரண்மனைக் காவற்காரர் முதலானவர்களைச் சொக்குப் பொடி தூவி மயக்கி, அரண்மனையினுள்ளே புகுந்து திருடியதுஷ்டர்கள் இராஜாக்களிடம் வந்து தங்களுக்கு வெகுமதி கேட்பதுபோலிருக்கிறது என்று விளக்கியிருக்கிறாகையாலேதானென்று அறியுங்கள். லிங்கமாகிற விக்கிரகத்தில் தெய்வவிளக்க மிருக்கிறதென்றறிவிப்பவர்கள் குருவும், அடியார்களுமேயாகையால் அவ்விருவரையும் அலட்சியம் செய்யாமல் ஆலயந்தொழுதால்தான் ஆண்டவன் கருணைகிடைக்கும். ஆதையால் நாம் ...ப்போதும் பொய்வஞ்சனையற்ற சுத்தமனதும், பரோபகாரசிந்தையும், ...வகாருண்யமும் உடையவர்களாய், மாதா பிதா குரு அடியார்களை விசுவாசித்துத் தெய்வத்தை ஆராதனைசெய்து வருவோமானல் நாம் அளவில்

லாத பிரயோசனத்தை அடைவோம். அதனால் இவ்வுலகத்தில் நோயற்ற வாழ்வும், குறையற்றசெல்வமும், பூர்ணாயுசும், எல்லாராலும் புகழப்படும் கீர்த்தியும் அடைந்து மறுமையிலும் பேரின்பத்தை அனுபவிப்போம். ஆகையால் "ஆலயந்தொழுவது சாலவு நன்று" என்கிற சிறுவாக்கியத்தைச் சொல்லி நமக்குண்மையையுபதேசித்து நல்வழி காட்டிய நமது அன்னையாருக்கு வந்தன மளித்து, அவரது கட்டளையைச் சிரசின்மேற்கொண்டு, நாடோறும் காலை பகல் மாலையென்கிற மூன்று பொழுதிலுமாவது, அல்லது இரண்டு பொழுதிலுமாவது, அல்லது ஒரு பொழுதாவது ஆலயம்போய்த் தேவனைத்தெரிசித்தும், வீடுகளில் பூசித்து ஆராதித்தும் அன்பு செலுத்திப் பெரும்பயனடைந்து சுகிப்போமாக.

முற்றிற்று. அ. சுப்பிரமணிய ஐயர்.

## ஸிம்பலேன்.

8-ம் அதிகாரம் 90-ம் பக்கத்தொடர்ச்சி.

**கைடீரியஸ் :**—அடா துஷ்டா, நீ ஒரு முட்டாள், உன்னையடிக்கிறதற்குக்கூட நான் வெறுக்கிறேன்.

**க்ளோட் :**—ஏ திருடா, என்பெயரைக்கேட்டமாத்திரத்தில் நடுங்குவாயே!

**கைடீ :**—உன்பெயரென்ன?

**க்ளோட் :**—நீசா, என்பெயர் க்ளோட்டன்.

**கைடீ :**—நீசனிலும் நீசனே, உன்பெயர் க்ளோட்டனா. இந்தப் பெயரைக்கேட்டமாத்திரத்தில் நான் நடுங்குவதற்குக்காரணம் ஒன்றும் தோன்றவில்லை. சர்ப்பமாயிருந்தால் ஒருவேளைபயப்படலாம். உனக்கு ஏன் பயப்படவேணும்.

**க்ளோட் :**—இன்னும் ஒன்றை நான் வெளியிட்டால் நீ அதிகமாய் நடுங்குவாய். சொல்லுகிறேன்கேள், நான் இந்த தேசத்து இராணியின் குமாரன்.

**கைடீ :**—கஷ்டம், என்ன செய்வேன். உன் உயர்குலத்துக்குத் தகுந்த குணங்களில் ஒரு அம்சமாவது உன்னிடத்திலில்லையே. அதிக விசனப்படுகிறேன். உண்மையாக நீ இராணியின் புத்திரன்தானா?

**க்ளோட் :**—இவைகளைக் கேட்டு நீபயப்படவில்லையா?

**கைடீ :**—யோக்கியர்களுக்கும், புத்திமான்களுக்கும் நான் மரியாதை செய்கிறேன், அவர்களுக்குத் தான் நான் பயப்படுவேன் முட்டாள்களைப் பார்த்து நான் சிரிப்பேனே தவிர பயப்படமாட்டேன்,



**க்ளோட் :**—நிச்சயமாக நீ யமலோகத்துக்குப் போவாய், என் வாளால் உன்னைக் கொன்று பிறகு உன்னை விட்டுப் பிரிந்த மற்றவர்களையும் கொன்று அவர்கள் தலைகளை வெட்டியெடுத்து லண்டன் நகரில் நாட்டி வைக்கப்போகிறேன். ஏ, காட்டு மனிதா! சரணமடைவாயாக என்று பலவாறு சொல்லி இருவரும் சண்டை செய்து கொண்டுபோனார்கள். கைடீரியஸும் க்ளோட்டனும் அதிகமும்முரமாய்ச் சண்டைசெய்து, க்ளோட்டனுடைய கத்தியைப் பிடுங்கி அவனுடைய தலையை, கைடீரியஸ், ஒரே வெட்டாய் வெட்டி தள்ளினான். அப்பொழுது,

[பெலாரியஸும் ஆர்விராகஸும் அங்கே வருகிறார்கள்.]

**பெலாரியஸ் :**—நீ போய் பார்த்தனையே, அவன் கூட ஒருவரும் வரவில்லையா?

**ஆர்விராகஸ் :**—ஒருவருமில்லை. அவன் க்ளோட்டனல்ல.

**பெலாரி :**—நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன், நான் அவனைப் பார்த்து அதிகநாளாய்விட்டது; அன்று நான் பார்த்த அடையாளங்கள் ஒன்றும்மாறவில்லை. அந்த சத்தமும் அவனுடையதே. நிச்சயமாகச் சொல்லுகிறேன். அவன் க்ளோட்டன்தான்.

**ஆர்விராகஸ் :**—இந்த இடத்தில்தான் அவர்களைவிட்டுப் பிரிந்தோம். க்ளோட்டன் குரூரமானவனென்று சொல்லுகிறீர்கள். என் தமயன் அதிக தைரியத்துடன் யுத்தம் செய்திருக்கவேணுமே.

**பெலாரி :**—அதோபார், கைடீரியஸ் வருகிறான்.

[கைடீரியஸ் க்ளோட்டனுடையதலையை வெட்டி அதைக்கையில் ஏந்திக்கொண்டுவருகிறான்.]

**கைடீ :**—இந்த க்ளோட்டன் ஒரு முட்டாள்தான், அவன் தலையில் கொஞ்சமாவது மூளையில்லை, புத்திகெட்டவன். யார்தான் இவனைக் கொல்லுவார்கள். ஆனால் நான் அவனைக் கொல்லாமற்போனால், இப்பொழுது அவன் தலையை நான் கொண்டு வந்தது போல என் தலையை அவன் கொண்டு வந்திருப்பான்.

**பெலாரி :**—என்ன காரியம் செய்தாய்?

**கைடீ :**—நான் நல்ல காரியந்தான் செய்தேன். இராணியின் புத்திரனாகிய க்ளோட்டன் என்பவனின் தலையை வெட்டிக் கொண்டு வந்திருக்கிறேன்; அவன் தான் தன்னுடைய விவரத்தைச் சொன்னான். நம்மைத் துரோகிகளென்றும் காட்டு மனிதர்களென்றும் தாறுமாறாக வைது, நம்மை ஜெயித்து, தலைகளை வெட்டி லண்டன் என்னும் ஊரில் நிறுத்துவேனென்று சொன்னான். நம்முடைய தலையை வெட்ட அவன் அதிக சிரமம் எடுக்க

வேணுமே என்று நினைத்து, அச்சிரமத்தினின்றும் அவனைக் காப்பாற்ற அவன் தலையை நான் வெட்டினேன்.

பெலாரி :—நமக்கு இப்பொழுது கஷ்டகாலம் வந்து விட்டது; நீ இந்தக் காரியத்தைச் செய்ததினால் நாமனைவரும் இத்துடன் தொலைந்தோம்.

கைடீரியஸ் :—ஜனம்பொருந்திய பிதா! நம்முடையபேரில் குற்றமொன்றுமில்லை. அவன் நம்மைக் கொன்றுவிடுவேனென்று என் சத்தியம் செய்தான். நாம் சட்டத்துக்கும் நியாயத்துக்கு முட்படாமற்போனால், ஒருவன் வந்து நம்மை பயமுறுத்தித் தாறுமாறாக திட்டலாமா? அவன் கூடயாராவதுவந்தார்களா?

பெலாரி :—நாங்கள் தேடிப்பார்த்ததில் ஒருவரையும் காணோம். ஆனால் அவன் கூடயாராவது வந்திருப்பார்கள், தனியாக அவன் வரமாட்டான். அவனுக்குப் பைத்தியம் பிடித்திருந்தாலும் இவ்வளவுதூரம் தனியாக வரமாட்டான். நாம் காட்டில் வேட்டையாடிச் சஞ்சரிக்கிறதைக் கேள்வியுற்று, நாம் சிலநாளைக்குள் அதிகசேனைகளுடன் வந்து அவர்களை எதிர்ப்போமென்றுபயந்துகொண்டிருப்பார்கள்; அதைக் கேட்ட க்ளோட்டன் மூவர்களையும் பிடித்துக்கொண்டுவருகிறேனென்று தைரியமாய் புறப்பட்டு வந்திருக்கலாம். ஆனால் அவனைத்தனியாய் அனுப்பமாட்டார்கள். பின்னால் பரிவாரங்கள் வந்திருக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை. அதைப்பற்றி நாம் அதிகமாய்ப்பயப்படவேண்டியதுதான்.

ஆர்விராகஸ் :—வந்தது வரட்டும், நமக்குப் பயமில்லை. தலையில் எழுதினது நடக்காமல் போகாது. கைடீரியஸ் செய்கை நல்லது தான், என் மனம் இப்பொழுது தான் திருப்தியானது.

கைடீரி :—என் கழுத்துக்கு நேராக வீசின அவனுடைய சொந்த வாளைக் கைப்பற்றி அவன் தலையை வெட்டினேன்; இந்தப் பாறைகளுக்கடுத்து போகிற நதியில் எறிந்து விடுகிறேன். அது சமுத்திரத்தில் போய், நான் இராணியினுடைய மகனாகிய க்ளோட்டனுடைய தலையென்று மீன்களிடத்தில் சொல்லட்டும். இது தான் என்னுடைய வேலை. இப்பொழுது வேறே வேலையொன்றுமில்லை.................. (போகிறான்).

பெலாரி :—என்ன நாசம் வருமோ அறியேன் ஏ, பாலிடோர்! இந்தக் காரியத்தைச் செய்யாதிருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருப்பேன்.

ஆர்விராகஸ் :—இந்தக் காரியத்தை நான் செய்யாமல் போனேனே. நான் செய்திருந்தால் அந்தப்பழி என்னை மாத்திரம் சூழும், அது எனக்குச் சந்தோஷமாயிருக்கும். நீ சகோதரனாயிருக்கிறதினால் உன்னிடத்தில் அதிகப் பிரியமாயிருக்கிறேன். ஆனால் இவனை நான் கொல்ல வேணுமென்று நினைத்திருக்கிற போது நீ கொன்றதினால் உன்னைப் பற்றி அதிகப் பொறாமைப் படுகிறேன். நாமிருவர்களும் எதிர்க்கக் கூடிய விரோதிகள் இந்தப் பழியைத் தீர்க்க வந்தால், அவர்களுடன் சண்டை செய்து ஓட்டலாம்.



பெலாரி :—நல்லது நாம் வேட்டையாடினது போதும். பிரயோசனமில்லாத இடத்தில் அபாயத்தைத் தேட வேண்டாம். நீ சீக்கிரம் குகைக்குப் போய் பைடலிகூட, சாப்பாட்டுப் பதார்த்தங்களைப் பாகம் பண்ணித் தயாராக்கிவை; பாலிடோர் திரும்பி வருகிற வரையில் இங்கேயிருந்து, அவனை யழைத்துக் கொண்டு வருகிறேன்.

ஆர்விராகஸ் :—பைடலி என்ன செய்கிறானோ? அவனிடத்தில் போகிறது எனக்கு அதிக சந்தோஷந்தான். அவனுடைய வியாதியென்னமாயிருக்கிறதோ தெரிய வில்லை. அவனுடைய சொந்த நிறம் வருகிறதற்கு எவ்வளவு க்ளோட்டனுடைய இரத்தத்தைச் சிந்த வேணுமானாலும் தயாராயிருக்கிறேன்..................... (போகிறான்).

பெலாரி :—இயற்கையே! இந்த இராஜ புத்திரர்களின் நடத்தையால் உன்னுடைய குணங்கள் முழுமையும் வெட்டவெளிச்சம் போல் காணப்படுகின்றன. பூச்செடிகளில் வீசுகின்ற காற்றைப் போல் இவர்களுடைய குணங்கள் அதிக சாந்த மாயிருக்கின்றன. கோபத்தால் மனது இளகும் போது, மலைகளிலுள்ள பெரிய மரங்களை வேருடன் பறித்துத் தள்ளும் சண்டமாருதம் போல, அவர்கள் குணங்கள் அதிக கொடூரமயிருக்கின்றபடியால் இவர்களிடத்தில் காணப்படுகிற இராஜகுணங்களும், யோக்கியதையும், ஒருவரைப் பார்த்துக் கிரகித்துக் கொள்ளாத மரியாதையையும் பார்க்கிறபோது எவ்வளவு விந்தையாயிருக்கிறது! இவர்கள் எங்கேயிருந்து படித்தனரோ? அறிகிலேன். இங்ஙனமிருக்க, க்ளோட்டன் வந்து இங்கே இறந்ததின் பலன் என்னவோ தெரியவில்லை. நமக்கு நாசகாலம் வந்து விட்டதே!

[கைடீரியஸ் திரும்பிவருகிறான்.]

கைடீரி :—என் தம்பி எங்கே? நான் க்ளோட்டனுடைய தலையை ஒரு நதியில் எறிந்து விட்டேன். அது அவனுடைய விதியை அரசன் மனைவிக்குத் தெரிவிக்கும்.

[புல்லாங்குழல் வாசிக்கிற சத்தம் கேட்கிறது.]

பெலாரி :—என்னுடைய புல்லாங்குழலின் ஓசையல்லவா! பாலிடோர் உற்றுக்கேள். அந்த ஓசை உனக்குக்கேட்கிறதா. காட்வால் இப்பொழுது அதை வாசிக்கவேண்டியகாரணம் என்ன?

கைடீரி :—அவன் வீட்டில் தானிருக்கிறானா?

பெலாரி :—அவன் சற்று முன்தான் வீட்டுக்குப்போனான்.

கைடீரி:—தம்பியினுடைய எண்ணம் என்னவென்று அறியேன். என் தாயார் இறந்தபின் அதின் ஓசையை இதுவரையில் நான் கேட்டதில்லை. இந்த வாசிக்கவேண்டிய சந்தர்ப்பம் என்ன? காட்வாலுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?

பேலாரி:—இதோபார்! காட்வால் வருகிறான். இந்த புல்லாங்குழலின் சத்தத்துக்குக் காரணமான இமொஜனையும் கையில் ஏந்திக்கொண்டு வருகிறான்.

[பிரேதம்போல் கிடந்த இமொஜனைக் கையில் தாங்கிக்கொண்டு ஆர்விராகஸ் வருகிறான்..................]

ஆர்விராகஸ்:—நாம் இவ்வளவு நாளாக அன்புடன் வைத்துப் பெருமைப்படித்துக்கொண்டிருந்த குயிலுக்குச் சமானமான தம்பி இறந்துபோய்விட்டான். உன்னை இந்தஸ்திதியில் பார்க்கவா, தம்பி போல நினைத்து ஒருவர்க்கொருவர் அதிகப் பிரியத்துடன் விளையாடி வளர்ந்து வந்தோம். இங்கே வந்து இறந்துபோனதைப் பார்க்கிலும் இங்கே வராமலேயிருந்தால் எவ்வளவு பாக்கியசாலியாயிருப்பேன்? என்னைக் கஷ்டப்படும்படியாகச் செய்தனையே!

கைடீரியஸ்:—கண்களைக் கவரக் கூடிய மெல்லிய புஷ்பத்துக்குச் சமானமானவனே! முன்னே உன்னிடத்திலிருந்த அழகில் பாதி அழகு இப்பொழுது உன்னிடத்தில் காணவில்லையே!!

பேலாரி:—அவன் எப்பொழுதும் மனதில் துக்கப்பட்டுக் கொண்டேயிருந்தான். துக்கத்தினால் தான் இறந்திருப்பான். ஒருவனுடைய மனதிலுண்டான துக்கத்தின் அளவை யாரால் கண்டு பிடிக்க முடியும். அவன் உயிருடனிருந்தால் உலகத்தில் எவ்வளவு விநோதங்களைச் செய்யமாட்டான். ஏ, பைடலி! உன்னைப் பார்க்கிறபோது நான் படுகிற விசனம் அளவுக்கு மிஞ்சிவிட்டது. காட்வால்! நீ போய் பார்க்கிற போது அவன் எந்த ஸ்திதியிலிருந்தான் சொல்.

ஆர்விராகஸ்:—தூக்கத்தை ஒரு ஈ கெடுத்தாற் போல் நீங்கள் இப்பொழுது பார்க்கிற மாதிரி புன்சிரிப்புடன், தன் முகத்தை வலது பக்கமாக ஒரு மெத்தையின் மேல் வைத்துப் படுத்துக் கொண்டிருந்தான்.

வி. கோபால்ஐயங்கார் பி. ஏ.

## சத்தியவதி.

(69-வது பக்கத்தொடர்ச்சி.)

நாராயணமூர்த்திக்கு இப்பொழுது 20 வயதாயிற்று. அவன் மிகவும் புத்தி சூக்ஷமமுள்ளவன், அவனுக்கு படிப்பில் மிக்கவும் விருப்பம். அவன் சிறந்தகுணமுள்ளவனென்று அவனைத் தெரிந்தவர்களெல்லாரும் சொல்லி



க்கொள்வார்கள். அந்தக்கிராமத்து கணக்குப்பிள்ளையின் தம்பி இராஜமகேந்திரபுரத்தில் இங்கிலீஷ்படித்து உத்தியோகம் செய்வதைப்பார்த்து தானும் ஆங்கிலேயவித்தை பயிலவேண்டுமென்று மிகவும் அபேக்ஷையுள்ளவனாய் தன் தாய்தகப்பனிடம் சொல்லாமல் அமலாபுரம்சென்று இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாரம் சாப்பிட்டுக்கொண்டு கஷ்டப்பட்டு படித்துக்கொண்டு செல்வவான்கள் வீட்டுப்பிள்ளைகளுக்கு இரவில் பாடஞ்சொல்லி சம்பாதித்து அப்பொருளைக்கொண்டு புஸ்தகமும் துணிமுதலியவைகளை வாங்கிக்கொண்டு சில வருஷங்களுக்குள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷை முதல் வகுப்பில் மெச்சும்படி தேறினபடியால் மாதத்திற்கு பத்துரூபாய் உபகாரசம்பளம்பெற்று ராஜமகேந்திரபுரம் காலேஜில் எப். ஏ. வகுப்பில் சேர்ந்து நன்றாய்ப்படித்துக் கொண்டிருந்தான். அவ்வகுப்பில் படிப்பவர்களெல்லாரையும்விட சுறுசுறுப்பாயிருந்தபடியால் அந்த வகுப்பிலே தன் கூடபடித்துக்கொண்டும் தன் சிநேகிதனாயுமிருந்த மாதவய்யருடைய தூண்டுதலினாலும் கோர்ட்டில் எட். குமாஸ்தாவாகவிருந்த ராகவய்யரென்பவர் 12 வயதுள்ள தனது குமாரத்தியை அவனுக்கு விவாகம்செய்துகொடுத்தார். மாதவய்யன் ராகவையருடைய பிள்ளைதான். கலியாணமான இரண்டு மூன்று மாதங்களுக்குப்பின் ராகவையர் டிஸ்டிரிக்ட்டு முனிசீபாக நியமிக்கப்பட்டு பெத்தாபுரத்திற்கு புறப்பட்டு போய்விட்டார். அப்பொழுது தனக்கு நேர் மூத்த தம்பியாகிய ராமசுவாமியும் வந்து பள்ளிக்கூடத்தில் சேர்ந்தபடியால் பத்து ரூபாய் போதாமல் கொஞ்சம் கடன்பட்டபோதிலும் இவனுடைய தாய் தகப்பன் ஒன்றும் அனுப்பாமலிருந்து விட்டார்கள். அவர்கள் வெங்கடேசுவரனுடைய கலியாணத்தில் பிராமண சமாராதனை செய்வதற்கும் தக்ஷிணை கொடுப்பதற்கும் மானியத்தை அடமானம் வைத்து வாங்கியகடன் இன்னும்தீராமல் வட்டி யதிகரித்துக்கொண்டிருந்தபடியால் அவர்களுக்கு ஜீவனம் நடப்பதே கஷ்டமாகவிருந்தது. இச்சங்கதியை இவன் மாமனார் கேள்வியுற்று இவன் வாங்கியிருந்த கடனைத் தீர்த்து மாதமொன்றிற்கு ரூ 4 வீதம் மருமகனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். இப்பொழுது நாராயணமூர்த்தி எப். ஏ. பரீக்ஷையில் தேறி பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருக்கின்றான். எப். ஏ. பரீக்ஷை தேறின முதல் அவனுக்கு உபகாரச் சம்பளம் மாதத்திற்கு 20 ரூ வீதம் வந்து கொண்டிருக்கிறது. சத்தியவதி ஒரு வருஷத்திற்கு முன் புத்தியறிந்தபடியால் புருஷன் பெண்சாதியை ஒன்று சேர்த்து ராகவய்யர் குமாரத்தியை சீருடன் மாமியார் வீட்டிற்கு அனுப்பிவிட்டார். அப்பொழுது குளிர்கால விடுமுறை சமீபித்திருந்தபடியால் லீவுக்கு ஊருக்கு வருவதாய் நாராயணமூர்த்தி தகப்பனுருக்கு கடிதம் எழுதினான். ஆகையினால்தான்

சத்தியவதி அவனது வரவை பிரதிதினமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

காந்தாமணிகளே! நீங்களிந்த சரித்திரத்தை படித்தவுடன் உங்களுக்கு சத்தியவதி யினுடைய நற்குணம் தெரிந்து அவளிடத்தில் அதிகபிரிய மதிகரிப்பதுமல்லாமல் அவளது சம்சாரத்தில் மற்றெல்லாருடைய சுபாவ லக்ஷணங்கள்கூட தெரிந்து யாரை எந்தப்பிரகாரம் அறிந்துகொள்ள வேண்டுமோ நீங்களே ஆலோசித்துக் கொள்வீராக.

### 2-ம் அதிகாரம்.

பகல் இரண்டு மணிக்கு இராஜமகேந்திர புரத்திலிருந்து புறப்பட்ட படகில் சிரஸ்ததாரவர்கள் ஏறியிருந்த படியால் பொய்பரு தீவுக்கு 4 காதம் தூரத்திலே ஒரு சிறிய கிராமத்திற்கு சமீபத்தில் தீபம்வைக்கும் வேளையில் படகை கட்டி வைத்து போஜனம் செய்வதற்காக அவர் அந்த கிராமத்திற்குச் சென்றார். அவர் சுகமாய் கணக்கன் வீட்டில் நல்ல பக்ஷணங்களுடன் விருந்து சாப்பாடு சாப்பிட்டு தாம்பூலம் தரித்துக் கொண்டு சங்கீதம் கேட்டு விட்டு, மெதுவாக படகுக்குத் திரும்பி வந்து சேர்ந்த பொழுது இராத்திரி பத்து மணி ஆய் விட்டது. இதற்குள்ளாக படகிலிருந்த வர்களெல்லாரும் பச்சை குழந்தைகள் முதல் பசியினால் தத்தளித்து, வருந்தி, நாளைக்கு இரண்டு மணிக்காவது இரண்டு பருக்கை கிடைக்குமோ கிடைக்காதோவென்று வருந்தி ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் நினைத்துக்கொண்டிருந்தபடியே படகு மறுநாள் அமலாபுரம் சேர்ந்த பொழுது மத்தியானம் 2-ஜாமம் கழிந்துவிட்டது. அப்பொழுது படகிலிருந்து இறங்கி நாராயணமூர்த்தி ஓட்டலில் சாப்பிட்டு குளிர்ந்த வேளையில் புறப்பட்டு சாயங்காலம் தனது கிராமம் வந்து சேர்ந்தான். வீடு வந்து சேர்ந்தபொழுது கிரககிருத்திய சங்கதிகளைக் குறித்து பேசிக்கொண்டு வீதியிலேயே உட்கார்ந்திருந்த தாய் தகப்பன்மார்கள் குமாரனைப் பார்த்து சந்தோஷித்து அவன் தங்களுக்கு சாஷ்டாங்கநமஸ்காரம் செய்யவே அவனை ஆசிர்வதித்து, எடுத்து ஆலிங்கனம் செய்து க்ஷேம சமாசாரம் விசாரித்தார்கள். இதற்குள்ளாக உள்ளேயிருந்த தம்பி மார்களும் கூடவந்து அண்ணனை ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். தமையனார் மாத்திரம் வரவில்லை. அவர் மாசாந்தரகணககுகளில் பிழைகளிருக்கின்றன வென்று தாசில்தார் அர்ஜி எழுதியிருந்தபடியால் அமலாபுரம் சென்று இரண்டு தினமாக அங்கேயே யிருந்து கொண்டிருந்தார். வெள்ளி நாணய ரூபமுடைய திவ்விய ஔஷதம் தாலூகா குமாஸ்தாக்கையில் விழுந்தால் அதனு-



டைய மகிமையால் கணக்குகளிலிருக்கும் பிழைகளெல்லாம் சரியானவைகளாய் விடு மென்றும், அந்த திவ்விய ஔஷதம் கையில்படாவிட்டால் சரியாயிருக்கும் கணக்குகள்கூட பிழைநிறைந்தவைகளாய் விடு மென்றும் அநுபவசாலிகள் சொல்வார்களே யல்லாமல் அதனுடைய உண்மை எனக்குத் தெரியாது. நாராயணமூர்த்தி கொஞ்சநேரம் க்ஷேமசமாசாரத்தைக் குறித்து விசாரித்து வீதிக்குச் சென்று கிராமத்திலுள்ள தன்னுடைய சிநேகிதர்கள் எல்லாரையும் பார்த்து விட்டு வந்து இராத்திரி போஜனம் செய்து படுக்கையறை சென்று மனைவிவராததால் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சத்தியவதி தன் சந்தோஷத்தை வெளிக்கு காட்டாவிட்டாலும் அவளது முகமலர்ச்சியாலும், உற்சாகத்தைக்காட்டு மின்னுமநேக நடவடிக்கைகளினாலும், அவளுடைய மனோபாவத்தையறிந்து மாமியார் முனு முனுத்துக் கொண்டு தான் விழித்திருந்து நாட்டுப்பெண் அறைக்குள் எப்படிபோவாள் பார்ப்போ மென்று பருத்தி பெட்டிக் கூடையை முன்னால் வைத்துக் கொண்டு திரி திரிப்பதற்காக தீபத்திற்கு முன் வந்து உட்கார்ந்து விட்டாள்.

(இன்னும் வரும்.)

கே. ஜி. வே.

## மாயாபுரி விநோதக்கதை.

(67வது பக்கத்தொடர்ச்சி).

புத்திரியைப் பற்றியகவலை உனக்குமட்டுந்தானோ? எனக்கில்லையா? உன்னைவிட எண்மடங்கு எனக்குண்டு. நீ அதையறியாய். இனியாவது நான் சொல்வதைக்கேட்டு அந்தக் கவலையை மறந்திரு என்றான். கமலாட்சி நாயகனை வணங்கிச் சுவாமீ! தமது கட்டளைக்கு மாறுண்டோ? இப்பொழுதொரு ஆச்சரியங்கண்டேன். சொர்ணமயமான ஒரு உப்பரிகையில் நான் படுத்துக்கொண்டிருக்கையில் நமது குமாரத்தி பக்கத்தில் வந்து நின்று உபசரித்துப் பற்பல சிற்றுண்டிகளைத்தந்து உண்ணச்சொல்லி யென்மடிமீது உட்கார்ந்து கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தாள். அவளுடைய அழகையும், அந்த அரண்மனையின் அழகையும் பார்த்துப்பார்த்துமகிழ்ச்சியால் பரவசப்பட்டிருக்கையில், குமாரசுவாமியைப்போல திருவுருவமைந்த ஒரு இளங்குழந்தை சர்வாபரணாலங்காரத்தோடுந் தவழ்ந்துவந்தது. அதைக்கண்டு நம்குமார்த்தி ஓடிச்சென்று எடுத்து வந்து என்மடியில் வைத்து இது என் செல்வகுக்ழந்தை; அதோவருகிறவர்தான் என் பர்த்-

தாவென்று சொல்ல, மன்மதனைப்போலும் வடிவழகமைந்த அந்த மணவாளன் வந்து என்னை வணங்கியுட்கார்ந்தார். நான் குழந்தை முதலிய மூவரையும்பார்த்துத் தன்னைமறந்திருந்து, இவ்வூர்ப் பெயரென்ன? நீ இங்கே எப்படிவந்தாயென்று சௌந்தரவல்லி யைக்கேட்க வாய்திறந்ததும் மதிமயங்கினேன். கண்திறந்துபார்க்கும்போது இங்கேயிருக்கக்கண்டேன். இந்த ஆச்சரியத்தைக் குறித்து யோசித்துக் கொண்டிருந்தேன். இதனுண்மை தெரியவில்லை. கனவென்று கூறவும் இடமில்லை. நனவென்று கூறவுமிடமில்லை. இந்தக் காட்சியைத் தேவரீர் கண்டிருந்தால் மிக ஆச்சரியப் படுவீர்கள் என்று கூறினாள். அரசன் அதைக் கேட்டுச் சிரித்துப் பெண்ணே! நீ உன்மனதில் குமாரத்தியையே நினைத்துக் கொண்டிருக்கிறாய். எது மனதில் மிகுதியும் அதிகமாய்ப் பதிந்திருக்கிறதோ அது கனவில் வரும். ஆதலால் நீ கண்டது கனவுதான். அதை மறந்து விடு என்றான். கமலாட்சி ஒன்றும் பேசுவதற்கில்லாமல் வாய் மூடிக் கொண்டிருந்தாலும், அந்தக் கனவென்று கருதாமல் மனம் மறுகிக் கொண்டிருந்தாள். சூரியோதயமான பின் அவ்விருவருமெழுந்து நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு ஆகவெண்டியகாரியங்களைச் செய்து விட்டு, இரவில் முறைப்படி பள்ளியறை சேர்ந்து பஞ்சத்தில் படுத்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து நித்திரை போனார்கள். அப்பொழுது மாயாபுரி யில் ஜகதீசன் தன் பத்தினி மார்களோடு விநோதமாய்ச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து சௌந்தரவல்லி யைப்பார்த்துப் பெண்ணே! அதோ உன் தகப்பன் நித்திரை செய்கிறார் பாரென்று கூறினான். அது கேட்ட அந்தப் பெண்ணரசி களங்கமற்ற மனதுடையவளாய்ச் சித்தங்களித்துப் பலவகைச் சிற்றுண்டிகளுடன் வந்து தன் தந்தை படுத்திருக்கும் மஞ்சத்தையடைந்து மலர்போன்ற தன்கைகளால் மெதுவாகத்தட்டி யெழுப்பினாள். நித்திரை கலைந்தபிதாவானவர் திடுக்கிட்டெழுந்து, பக்கத்தினிற்கும் பத்தரைமாற்றுத் தங்கமாகியதன் புத்திரியைக்கண்டு, அளவுக்கடங்காத மகிழ்ச்சியடைந்து, தன்னிருகைகளாலும் அவளை வாரியெடுத்து மடிமேல்வைத்துக் கொண்டு முத்தமிட்டு உச்சிமோந்து என் செல்வக்குழந்தாய்! நீ எங்கிருக்கிறாய்? இந்த அற்புதமாளிகை யாருடையது? நீ இவ்விடத்திலிருக்க வேண்டியகாரணமென்ன நீ சிறைச்சாலையினின்று மெப்படிதப்பித்துக் கொண்டாயென்று கேட்க, அவள் ஒரு போக்காக விடையளித்துத் தான் கொண்டு வந்த சிற்றுண்டிகளையுண் பித்து மழலை மொழியால் செவிக்கின்பமளித்து விநோதமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், அம்மா! அம்மா வென்று கூப்பிட்டுக் கொண்டு தவழ்ந்து வருகிற தன் குழந்தையையும், அதன் பின்னாலே அடிமேலடி வைத்து வருகிற தன் நாயகனையுங்கண்டு திடீரென்றெழுந்து போய்க் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து தந்தை மடிமேல் வைத்து அதோ வருகிற மஹா புருஷரே யென் ஆவி நாயகரென்று கூறுவதன் முன் ஜகதீசன் வந்து மாமன் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு தன் காதலியையும் உட்காரச் சொல்லி மூவரும் பிரிய வசனங்கள் பேசிக் கொண்டிருக்கையில் அரசன் ஜகதீசனை நோக்கி யிவ்வூருக்குப் பேரென்ன? என் மகளை நீர் மணந்த விதமெப்படி யென்று கேட்டுக் கொண்டே தன்னை மறந்து படுத்து உறக்கங் கொண்டான். சிறிது நேரத்துக்குப்பின் கண் விழித்துப் பார்க்கத்தான் தன்பள்ளியறை மஞ்சத்திற்படுத்திருப்பதையும், பக்கத்தில் மனைவி நித்திரைவாராமல் புரண்டுகொண்டிருப்பதையும் பார்த்துத் திப்பிரமைகொண்டு ஒன்றுந் தோன்றாமல் பலபல எண்ணமிட்டுக் கடைசியில் தன்மனைவியைக் கூப்பிட்டுப் பெண்ணே! நானும் உன்னைப் போலவே யிப்பொழுது கனவுகண்டு விழித்தேன். அந்த அரண் மனையின் ஒரு பாகத்தையே நான் பார்த்தேன். அது உலகத்திலில்லாத அற்புதமானது. நமது குழந்தை சௌந்திரவல்லி யைக்கண்டேன். அவள் நம்மிடத்தில் யாதொரு குற்றமும் நினையாமல் களங்கமற்றவளாய்ச் சிற்றுண்டிகளாலுபசரித்துப் பாலசுப்பிரமணியரைப் போல விளங்கியதன் பச்சிளங் குழந்தையை யென்மடிமீல் வைத்துத்தன் நாயகனையும் அழைத்து என் பக்கத்திலுட்காரவைத்தாள். அவள் கணவனது ரூபலாவண்ணியகுணாதிசயத்தைப் புகழ்ந்து பேசுவேனோ? குழந்தையின் அழகையும் அதன் விநோத விளையாட்டையும் புகழ்ந்து பேசுவேனோ? அவ்வரண்மனையின் அதிசயத்தைப் புகழ்ந்து கூறுவேனோ? நம்புத்திரியின் அதிர்ஷ்டத்தை வியந்து மகிழ்வேனோ? எனக்கொன்றுந் தோன்றவில்லை. இதென்ன விந்தை? இதென்னகாட்சி? இது நினைவோ கனவோ? நினைவென்றால் இத்தன்மையான அரண்மனையும், சௌந்தர புருஷனையும் நானெங்கும் பார்த்ததுமில்லை. உண்டென்று கேட்டது மில்லை. கதைகளிற் படித்ததுமில்லை. ஒருபோதும் கேட்டறியாத ஒன்று கனவில் வருவது, எப்படி? ஒருக்கால் நீ நேற்றைய தினம் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தேனே அதுதான் இன்று கனவாகத் தோன்றியதோ? அப்படியானால் நீ அவைகளை விவரமாகச் சொல்லவில்லையே? என்று கூறக் கமலாட்சி சுவாமீ! தேவரீர் அப்படிச் சொல்வது தகாது. ஏனெனில் மனமறியாத பொருள் கனவில் எப்படி வரும்? தேவரீராவது நான் சொல்லிக் கேட்டறிந்திருக்கிறீர்கள். தங்களுக்கது கனவென்று சொன்னாலும் சொல்லலாம். இப்படிப்பட்ட அற்புதங்கள் உண்டென்று என்றாவது கேள்விப்பட்டிருப்பேனோ? இவ்வற்புதம் என் நினைவில் தனக்குத்தானே வரக்கூடியதோ? தேவரீரே யோசிக்கத்தக்கது. அப்படியானாலும் நாமிருவரும் ஒரே மாதிரியான கனவைத் தவறுதலில்லாமல் காணக் கூடுமோ? அது சம்பவிக்கக் கூடிய

தோ? ஒரு போது மில்லை யாகையால் நாம் கண்டது கனவல்ல. இது
வாஸ்தவமேயாம். இன்னும் சந்தேகம் வேண்டுவதில்லை. தெய்வரகசிய
மாகக்காணுகிறது என்று கூறினாள். பிறகு இருவரும் நித்திரையில்லாமல்
தாங்கள் கண்டகாட்சிகளை யொருவருக் கொருவர் பேசிக் கொண்டுவிடியு
மளவும் நித்திரையில்லமாலிருந்து விடிந்த பின்னெழுந்திருந்து ஒருவருட
னும் சொல்லாமல் தங்கள் தங்கள் காரியத்தில் பிரவேசித்தார்கள். சில
தினஞ் சென்ற பின்பு ஒரு நாள் அரசனாகிய பிரபாகரன் தன் மனைவியோடு
பள்ளியறையில் சயனித்துத் தாங்கள் கண்ட அற்புத் காட்சியைப் பற்றிப்
பேசிக் கொண்டு நித்திரை போனான்.

இங்கே யிப்படி யிருக்க மாயாபுரியில் ஜகதீசன் தன் அன்பிற் குரிய
இன்பநாயகிகளோடு மிராப் போஜன முண்டு பள்ளியறை சேர்ந்து தாம்
பூலந் தரித்துக் கதம்ப கஸ்தூரிக் கலவைபுனைந்து விநோதமாகப் பேசிக்
கொண்டிருக்கையில் சௌந்தரவல்லியை நோக்கிப் பெண்ணே! இன்று
உன் தாய் தந்தை யிருவரும் வருகின்றார்கள். அவர்களோடு இன்பமா
ய்க் கலந்து பேசி யிவ்வரண் மனை விநோதம் முழுமையுங் காட்டி அவர்
கள் விரும்புகிற பொருள்களையுந் தடையில்லாமல் கொடுத்தனுப்பு.
நமது இரகசியமொன்றையும் வெளியிடாதே யென்று கூறினான். சௌந்
தரவல்லி மனமகிழ்ந்து என்பிராணநாதா! மந்திரிமகள் பங்கயச்செ
ல்வி எனக்குத்தோழி. அவளை யொருதரம் பார்க்க விரும்புகிறே
னென்று பணிந்துகூற அவனுமப்படியே யாகட்டுமென்று சொல்லி
வாய்மூடுமுன் அம்மூவரும் ஒரு பக்கத்தில் படுத்திருப்பதைச் சௌந்தர
வல்லி கண்டு, உடனே யெழுந்துபோய் மூவரையு மெழுந்திருக்கச் செய்து
பற்பல சிற்றுண்டி பண்டு பலாதிகளாலுபசரித்துப் பயந்திருக்கும் தோ
ழியைத்தேற்றி, அமிர்தமொழுகும் மதுரவசனங்கள் பேசி அம்மூவரும்
தம்மைத்தாமேமறக்கும்படியாகச் செய்து, அவர்களையழைத்துக்கொண்டு
போய்ச் சித்திரமண்டபம், வசந்தமண்டபம், சபாமண்டபம், நந்தவனம்,
உத்தியானவனம், பளிக்குமேடை, மரகதமாளிகை, விளையாட்டுச்சாலை
முதலியவற்றின் விநோதங்களைக் காட்டிக்கொண்டு வருகையில் அவர்
கள் மூவருந் தம்மை மறந்து சூத்திரபாவைபோல சௌந்தரவல்லி
யை பின்பற்றி நடந்து ஆங்காங்குள்ள அற்புதங்களைப் பார்த்து மகிழ்ந்து
வருகையில் விடியநாலு நாழிகைப் போது இருப்பது தெரிந்து கொண்ட
ஜகதீசன் ஒரு தூண் மறைவிலிருந்து கொண்டு தன் மனைவிக்குச் சாடையால்
தெரிவிக்கத் தெரிந்து கொண்டவுடனே அம்மூவரையும் அழைத்துக் கொ
ண்டு தானும் மங்களாம்பாளும் விளையாடுகிறதற்கு அமைத்திருக்கும் விநோ
த சாலைக்கு வந்தாள். அவ்விடத்தில் பல வகையான இரத்தினங்களினாலே



உயிருள்ளன போல விசித்திரமாய்ச் செய்து வைத்திருக்கிற பற்பல மிருக
ங்கள் பறவைகளைப் பார்த்து அதிசயித்து மெய்மறந்து போனார்கள்.
அங்கோரிடத்தில் மாணிக்கத்தால் சரீரமும் வயிரக்கற்களால் புள்ளியும்
உடையதாய்த் தாவி ஓடுகிற பாவனையாய்ச் செய்து வைக்கப்பட்டிருந்த
ஒரு ஜோடு புள்ளிமான்களை யரசனும் அரசியுங் கண்டு வைத்தகண் வாங்
காமற் பார்த்திருப்பதையும், மரகதத்தாலியன்ற பவள மூக்குப் பசுங்
கிளியைத்தன்தோழிகண்கொட்டாமல் பார்த்திருப்பதையுங் கண்டு
அவைகளை அவர்களுக்கு வெகு மதியாகக் கொடுத்து அழைத்துக்கொண்டு
வந்து பீடத்தின் மேலிருக்கச் செய்து தன் குழந்தையையும் அவர்களு
க்கு நேரில் விளையாடவிட்டு வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருக்கையில்
தந்தை முதலிய மூவரும் நித்திரைமயக்கங் கொண்டு தம்மை மறந்து பிறகு
கண் திறந்து பார்க்கையில் பிரபாகர ராஜன் தன் பள்ளியறையில் மனை
வியோடு சயனித்திருப்பதை யறிந்து தன் மனைவியை யெழுப்ப அவள் மிக
அற்புதம்! மிக அற்புதம்! என்று கூறிக் கொண்டே கண் விழித்துத் தன்
நாயகனைப் பணிந்து இதோ பார்த்தீர்களோ? நமது புதல்வி யளித்த
மானென்று காட்டினள். அரசன் வியப்படைந்து தான் வெகுமதியாகப்
பெற்ற மானையுங்காட்டி, இது கனவானால் நாம் பெற்ற வெகுமதி கையிலி
ருக்கின்றனவே. இதை யெப்படிக் கனவென்று கூறலாம் என்று நெடு
நேரஞ்சிந்தித்து மனைவியைப் பார்த்துக் கமலாட்சீ! இதை யென்ன வெ
ன்று கூறுகிறது? நாமிருவருஞ் சேர்ந்து ஒரு கனவைக்காண்பதும், அது
ஜாக்கிரத்தில் பலிதமாவதுங்கூடுமோ? இது நமது புத்திக்கெட்டவில்லையே
இருக்கட்டும். மந்திரிமகள் வந்திருந்தாளே அவளையழைத்து விசாரிப்போ
மென்று சொல்லிக் காவற்காரரைக்கூவுமுன் மந்திரிதன்மகளோடும் வந்து
அரசனுக்கெச்சரிக்கை செய்ய அரசன் அவர்களை யுள்ளே வரவழைத்து,
அவர்கள் வாய் மொழியைக்கேட்டு, வெகுமதியையும் பார்த்து, மந்திரி
க்கு நடந்த விருத்தாந்தத்தைக் கூறி மந்திரீ! இதற்கு நீ என்ன சொல்
கிறாய் என்ன, அவன் சுவாமீ! இதைக் குறித்துத் தீர்க்காலோசனை செய்ய
வேண்டியிருக்கிறது. இப்பொழுது என் புத்திக்கு ஒன்றுந் தோன்ற
வில்லை. இது தேவர் இராக்கதர்களுடைய செய்கையாக விருக்கிறதே
தவிர மனிதர் செயலாகத் தோன்றவில்லை. அன்றேல் கடவுளின் கிரு
பைக்குப் பாத்திரர்களாயிருக்கிற பெரியோர் செயலாக வேண்டும் என்று
கூறி உத்தரவு பெற்றுக்கொண்டு தன்குமாரத்தியோடுந் தன் வீட்டுக்குப்
போய், மந்திரவாதிகள், அஞ்சனக்காரர்கள், கட்டுமுட்டிச் சிந்தனைச் சாத்
திரவல்லவர் முதலானவர்களை யழைத்து இந்தச் சங்கதியைத் தெரிவித்
துச் சீக்கிரம் இதன் உண்மையைக் கண்டு பிடியுங்களென்று கட்டளை
யிட்டுத் தீராக்கவலையோடு இராஜகாரியத்திற் பிரவேசித்தான். அரசனும்

தன் மனைவியோடு நெடு நேரம் யோசித்து ஒன்றுந் தோன்றாமல் அவ்விடம் விட்டெழுந்திருந்து தன் வேலையைச் செய்யப் புகுந்தான். இவ்விடத்தில் இப்படியிருக்க மாயாபுரியில் நடந்த விருத்தாந்தம் அடுத்த சஞ்சிகையில் எழுதப்படும்; இவை வெகுவேடிக்கையாகவேயிருக்கும்.

தேவதுஞ்சரியம்மாள்

## இந்தியா மாதர்களுக்கு ஒரு ஆங்கிலப் பத்திரிகை.

### * THE INDIAN LADIES' MAGAZINE.

இந்தியா மாதர்களுக்கு ஓர் தனிமையான மாகாந்திரப் பத்திரிகை ஜூலை மீ முதல் கொண்டு ஆங்கிலத்தில் மிஸ்ஸஸ் கமல சத்திய நாதன் எம். ஏ., அவர்களால் பிரசுரிக்கப் படுமென்று ஜூன் மீ பத்திரிகையில் நாம் எழுதியிருந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமேயாம். ஜூலை மீ 12 உல் வெளியிடப் பட்ட ஒரு சஞ்சிகையையும் ஆகஸ்டு மாதத்திய சஞ்சிகை ஒன்றையும் வரப்பெற்றோம். ஜூலை மாதத்திய பத்திரிகையில் அநேக ஆர்டிகல்கள் வெகு சிரத்தையுடன் நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. ஆகஸ்டு மாதப் பத்திரிகையிலும் நமது காலம்சென்ற விக்டோரியா மகாராணியும், மகாராணி அலக்சாண்டரா என ஒரு சிறந்த ஆர்டிகலும், ஐரோப்பியருக்கும் இந்தியர்களுக்கு மிருக்க வேண்டிய லோக வியவகாரம் என்ற ஆர்டிகலும், வேத சம்பந்தமான மனைவி, இந்துக்கதை என்றதும் பண்டித ராமாபாயின் அற்புதமான சரிதமும். அஹலியாபாயின் சுருக்க சரிதமும் பத்திராதிபரின் விசேஷ குறிப்புகளும் மிக கோர்த்தியாகவும் நமது மாதர்களுக்கு அறிவைப்புகட்டக் கூடியதாகவு மிருக்கின்றன வென்பது சொல்லாமலே விளங்கும். இதற்கு அநேக இந்தியா மாதர்களும், ஐரோப்பிய மாதர்களும் நிருபம் எழுதுவதாக வாக்களித்திருப் பதைக் கேட்க மிக சந்தோஷப்படுகிறோம். மிஸ்ஸஸ் சத்திய நாதன் அவர்கள் எம். ஏ., பரீக்ஷையில் தேறி தமது சகோதரியவர்கட்கு அறிவைப் புகட்டுவதற்காகவும் மாதர்களுக்கும் பெண்களுக்கும்,

"இம்மை பயக்கு மாலீயக் குறைவின்றாற்  
றம்மை விளக்கு மாற்றா முணாக் கேடின்றா  
லெம்மையுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்  
மம்மராறுக்கு மருந்து."

என்ற பாட்டிற்கிணங்க கல்விக்கு மேலான தொன்றுமில்லை என்பதை போதிப்பதற்காகவும். இப்பத்திரிகையை சுயநலம் கருதாது பிரசுரிக்க தீர்மானம் செய்தது இந்த அம்மாளுடைய நற்குண நற்செய்கையையும், பரோபகாரத்தையும், தமது சகோதரிகளிடத்திலிருக்கும் வாஞ்சையையும், அநுதாபத்தையும் காண்பிக்கின்றதல்லவா?

இப்பத்திரிகையை நமது இந்து மாதர்களில் அநேகர்தாமே படிக்க முடியாததால் தங்கள் கணவரைக் கொண்டு இதிலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டியதவசியமென நம்புகிறோம். இப்பத்திரிகை இந்தியா முழுவதும் பரவி இந்தியா மாதர்களுக்கு ஒரு முக்கிய ஆபரணமாக விருக்கும் படியாகவும், மாதுஸ்ரீ கமல சத்தியநாதனவர்களுக்கு கடவுள் தேகபலத்தையும் தீர்க்க ஆயுளையும் அளித்து நீடூழிவாழும்படி கிருபை செய்வாராக.

* Edited by Mrs. Kamala Sathianathan M.A., its yearly subscription is Rs. 4.



## இந்து ஸ்திரீகளின் தினசரிவேலை.

படித்த ஸ்திரீகள் தங்கள் காலத்தை சரிவர நடத்தபலவழிகளிருந்தாலும் அநேகர் காலத்தை வீணாகப் போக்கு வதிலேயே செலவழிக்கிறார்களே தவிர தங்களுக்கு பிரயோஜனமாக செலவழிப்பதில்லை. நாம் யிப்பொழுது ஸ்திரீகளின் தினவேலையைப் பற்றி சாதாரணமாய் படித்த ஒரு மனைவியும், புருஷனும் புருஷன் தாயும்,மனைவிக்கு ஒரு கைக்குழந்தையுமுள்ளஒருசிறிய குடும்பத்தைப் பற்றி எழுதுவோம். சாதாரணமாய் ஹிந்துக்களில் ஸ்திரீகள் அதிகாலையில் அதாவது 5½ மணிக்கு எழுந்து நித்திய கடன்களை முடித்துக் கொண்டு கைக்குழந்தை யழுதால் அதற்கு கொஞ்சம் பால் கொடுத்து விட்டு வீட்டுவேலையைச் செய்து புருஷனுக்கும் தனக்கும், மாமியாருக்கும் காப்பி காய்ச்சி கொடுத்தபின்னர் எட்டு மணிக்குள் ஸ்நானம் செய்து ,புருஷன் ஆபீஸுக்குப் போகவேண்டிய காலத்திற்கு ஒன்றரை மணிக்கு முன்னே அதவாது 9 மணிக்கு திவ்வியமான போஜனத்தை தயார் செய்து புருஷனுக்கு ஸ்நானத்திற்கு வெந்நீர் எடுத்துவைக்கவேண்டும். புருஷனும் உடனே ஸ்நானம் செய்து சுத்தமுள்ள வஸ்திரத்தை தன் மனைவியிடம் பெற்று தரித்துக் கொண்டு நித்திய கடனை முடித்து விட்டு தான் கடவுளுக்கு நைவேத்தியம செய்ய சாவகாசமிருந்தால் இவனே செய்வான். இல்லாவிடின் மனைவி நைவேத்தியம் செய்து விட்டு புருஷனுக்கும் மாமியாருக்கும் அன்னம் படைத்து குழந்தையழுதால் நடுவில்கொஞ்சம் பாலும் கொடுக்கலாம். புருஷன் மாமியார் இவர்கள் போஜனம் செய்தபின் இவளும் உண்டு சாமான்களை யெல்லாம் மூடிவைத்துவிட்டு தாம்பூலம் மிதமாகதரித்து தன் குழந்தையுடன் கொஞ்சம் கொஞ்சி விளையாடலாம். பின்பு ஒரு மணிநேரம் படிக்கவேண்டும். இப்பொழுது மணி சுமார் 12 ஆய்விடும், மனைவி சுமார் 6 மணி தேசகாலம் வேலைசெய்தவளாகையால் இளைப்பாகவிருக்கும். இளைப்பு நீங்க கொஞ்சநேரம் அதாவது ஒரு மணிநேரம் நித்திரைசெய்யலாம்; சாதாரணமாக மனிதர்களும், ஸ்திரீகளும் பகல் காலத்தில் நித்திரை செய்யக்கூடாது: ஆனால் வெகுநேரம் வேலை செய்த ஸ்திரீ அல்லது புருஷன் பகலில் ஒரு மணி நேரம் நித்திரைசெய்வதில் தீங்கில்லை, நித்திரைசெய்தபின் எழுந்து கை கால்களை சுத்திசெய்துகொண்டு குழந்தையைக்கவனித்து தானுமிரண்டாம் தரம் கொஞ்சம் ஆகாரம் செய்து கொள்ளவேண்டியது. பின்பு அசுத்தமாயுள்ள பாத்திரங்களை சுத்தி செய்து வைத்துவிடவேண்டியது. இப்பொழுது சுமார் 4 மணியாயிருக்கும் 4 மணி முதற்கொண்டு 5½ வரையிலும். படித்துக்கொண்டாவது தையல் வேலை முதலியவைகளில் ஒன்றைச் செய்து கொண்டாவதிருக்கலாம்.பின்பு சாயங்கால போஜனம்சுமார் 6மணிக்குச் செய்ய ஆரம்பித்து 7மணிக்கு முடித்து விடலாம். முடித்தபின எஜமானருக்கு சந்தியா வந்தனத்திற்கு ஜலம் முதலியவைகளைத் தயார் செய்து வைக்கவேணடும். அவர் நித்திய கடனை முடித்தவுடன் போஜனத்திற்கு இலைபோட்டு அன்னம் படைக்க வேண்டும். யாவரு முண்டபின், இவளும் போஜனம் அருந்தி புருஷனுக்கு தாம்பூலம் கொடுத்து விட்டு தானும் தம்பூலம் தரித்துக் கொண்டு சுகேசமித்திரன். மாதர் மனோரஞ்சினி முதலிய பத்திரிகைகளைப படித்து தெரியாதவைகளைத் தனது கணவரைக் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம், பின்பு 9½ மணிக்கு நித்திரைக்குப் போவது நலம். இவ்விதம் நமது கற்றறிந்த மத்திய வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீகள் செய்து வந்தால் அவர்கள் நல்ல மனைவிகளாகவும், நல்ல தாய்மார்களாகவும், பரோபகார ஸ்திரீகளாகவும், ஆவார்களென்பதற்குச் சந்தேக முண்டோ? திரவிய முள்ள முதல் வகுப்பு ஸ்திரீகளுக்கு வேலைசெய்யவேண்டியதவசியமில்லை யாகையால் எப்பொழுதும் படிக்கலாம்.

குழந்தைகளில்லாத ஸ்திரீகளுக்கோ இன்னும் சுலபமேயாம் குழந்தைகளிருந்தால் கஷ்டமென்று நினைப்பது பிசகு. எதையும் கிரமமாகசெய்து வந்தால் அது கஷ்டமாக விராது. ஆனால் சில விடங்களில் மருமகள் சாணிதட்டி வரட்டி செய்துகொண்டிருப்பது வழக்கம். இத்தகைய வழக்கம் அநேகமாக குறைந்துகொண்டே வருகிறதைக் கேட்க சந்தோஷப்படுகிறோம். மாமியார் மருமகளைக் கொடூரமாக நடத்தும் வழக்க

மும் குறைந்து தானிருக்கிறது. ஆனால் மனைவி நகைவேண்டும் என்று சொல்லும் வழக்க மின்னும் குறையவில்லை, இதுவும் சீக்கிரத்தில் நின்றுவிடு மென்று நம்புகிறோம்.

## நீவழி.

### சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு.

(1) தயவின்மை, காரணமன்றியில் கலகம், பிறர் பொருளிலும், பிறர் ஸ்திரீயிடத்தும் ஆசை, நல்லோர்களிடத்தும், தன் இனத்தார்களிடத்தும் வெறுப்பு, இவை, தீயோர்களுக்கு இயல்பாக ஏற்பட்டுளது.

(2) கெட்டவனானால் வித்தையோடு விளங்கினாலும் விலக்கவேண்டும். சர்ப்பமானது இரத்தினம் பூண்டிருந்தாலும், பயம் போகுமோ?

(3) நாணமுடையோனை மூடனென்றும் விரதமனுட்டிப்போனை (வீண்) டம்பனென்றும், பரிசுத்தமானவனை கபடனென்றும், சூரனை ஈசமற்றவனென்றும், ஆலோசனையில் ஆழ்ந்தவனை அறிவற்றவனென்றும், மதுரமாய் பேசுபவனை (பிறர் திருப்தியின் பொருட்டு இனியசொல் சொல்லும்) தரித்திரனென்றும். சாமர்த்தியமுடையோனை கர்வம் பிடித்தவனென்றும், சொல்திறமை உடையோனை வம்பனென்றும், சஞ்சலமற்றவனை (கையால்) ஆகாதவனென்றும், சொல்வார்கள். இவ்வாறு துஷ்டன் தூஷியாத நற்குணம் யாது உளது?

(4) பேராசை (ஒன்று) இருந்தால், கெட்டகுணம் (வேறு) வேண்டுமோ? கோட்சொல்லும் தன்மையிருந்தால் மகாபாதகங்களும் வேண்டுமோ? சத்தியவாக்கு இருந்தால், தபசால் ஆவது என்ன? உள்ளம் சுத்தமாயிருந்தால் தீர்த்த (யாத்திரையால்) ஆவது என்ன? நன்மையிருந்தால் ஆள்பலம் வேண்டுமோ? மகிமையிருந்தால், (ஆடை ஆபரணங்களால்) அலங்காரமும் வேண்டுமோ? நல்ல வித்தை இருந்தால் பணத்தால் ஆவது என்ன? அபகீர்த்தி இருந்தால், மரணம் (வேறு) வேண்டுமோ?

(5) பகலில் ஒளியற்று (நிற்கும்) சந்திரனும், இளம்பிராயமிழந்த மாதரும், தாமரையழிந்த தடாகமும், எழுத்து (வாசனை) அற்ற அழகனும், பண ஆசைகொண்ட பிரபுவும், இடைவிடாது துன்பப்படும் நல்லோரும், அரசனண்டையில் சேரும் அயோக்கியனும். இவ்வேழும் (என் மனதில் நாட்டிய) ஏழு சூலங்களுக்கொப்பாகும்.

(6) கடுங்கோபிகளான அரசர்களுக்கு தனனுடைய மனிதன் என்று ஒருவனும் இரான். ஏன் என்றால், அக்கினி, ஆகுதி அளிப்பவனையும் சுடுமல்லவா?

(7) பேசாதிருந்தால் ஊமையன் என்றும், பேசினால், அதிகபிரசங்கம் செய்கிறான் பிதற்றுகிறானென்றும், (அரசன்) சமீபத்தில் இருந்தால், என்ன தைரியம் என்றும், தூரத்தில் (ஒதுங்கி) இருந்தால், சமர்த்தனல்லவென்றும், பொறுமையாயிருந்தால், பயங்குள்ளி யென்றும், பொறுக்காவிட்டால் இழிகுலத்தானென்றும் (சொல்லுவார்கள்) ஊழியம் செய்தல் வெகு கஷ்டம்; யோகிகளும் அறியார்கள்.

(8) துஷ்டர்களனைவரையும், முன்னுக்கு கொண்டு வந்து, (தருமம் அதருமம் என்ற) வரம்பற்று, தான் செய்வது இழிய தொழில் என்ற ஞாபகம் முழுதும் அற்று குணத்தை துவேஷிக்கும் அதமன், அதிருஷ்டத்தினால் ஐசுவரியம் பெற்றாலும், அவனண்டை சேர்ந்தவர்கள் எவர் சுகமடைவார்?

(9) துஷ்டர் சிநேகம், பகல் முன்பாதி நிழல்போல், பெரியதாய் ஆரம்பித்து வரவரக்குறுகும். நல்லார் நண்போ பகல் பின்பாதி நிழல்போல், முதலில் சொற்பமாய் இருந்து போகப்போக பெருகும்.

(10) புல்லை (த்தின்று) பிழைக்கும் மானுக்கும், வேடனுக்கும், ஜலத்தில் ஜீவிக்கும் மீனுக்கும், தூண்டிக்காரனுக்கும், திருப்தியாய் காலம் கழிக்கும் சாதுக்கும் துஷ்டனுக்கும் உலகத்தில் ஏற்பட்டிருக்கும் விரோதம் யாதொரு ஹேதுவு மன்றியில் உண்டானதே.

ஏ. ஸ்ரீ.

OFFICE OF ... OF BOO
REGISTERED
9-OCT. 1901
MADRAS.

# மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

| Vol. 3. | MADRAS: SEPTEMBER 1901. | No. 7. |
|---|---|---|
| புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901ஞு செப்டம்பர்மீ. | இல. 7. |

## * விக்டோரியா மகாராணியாரும், அலக்சாண்டரா மகாராணியாரும்.

ஆங்கிலேய வரசாட்சியின் கீழமைந்திருக்கிற ஏராளமான ஜனசமூகங்களில், நமது பிரியமுள்ள விக்டோரியா மகாராணியவர்கள் இறந்துபோன சமாசாரத்தைப்பற்றி, நம் இந்தியதேச ஸ்திரீகளைவிட அதிக மனவருத்தமடைந்தவர்கள் ஒருவருமில்லை. ஏனென்றால்; ஆங்கிலேய ராஜாங்கத்தின் கௌரவமும், எல்லாமகிமையும் மாட்சிமைதங்கிய நமது விக்டோரியா மகாராணியார் அவர்களாலேயே. ஜனங்களுக்கு, மகாராணியவர்கள் ராஜாத்தியென்கிறதுமாத்திரமல்ல. அவர்களுடைய மனதில் சதாதியானிக்கக்கூடிய பரிசுத்தம், பெருந்தன்மை முதலிய நற்குணங்கள் பொருந்தியவர்களாயுமிருந்தார்கள். ஆங்கிலேய விராஜாங்கத்திற்கு அவசியமாகவேண்டியவர்களாகவும், ஆங்கிலேய சிம்மாதனத்தில் வீற்றிருக்கத்தக்க சகல நற்குணங்களும் பொருந்தியவர்களாகவுமிருந்தார்கள். இந்திய ஸ்திரீகளுக்கு, இந்த கவர்ன்மெண்டு நடத்துகிற இராஜ்ய தந்திரம் ஒன்றுந் தெரியவராது. ஆனால் நமது மகாராணியார் அவர்களின் உருவம்மாத்திரம், அவர்களுடைய பார்வையின் எதிரில் நின்றுகொண்டிருக்கிறது வாஸ்தவமான விஷயம். மகாராணியவர்கள் நமது தேசத்திற்கு அதிகதூரத்திலிருந்தும், ஈஸ்வர கடாட்சம் பெற்று, இப்பெரிய உலகத்தை அரசாண்டு வந்த நமதரசியைக் குறித்து யாவரும்ஓர் நிச்சயமான அபிப்பிராயத்தை அடைந்திருந்தார்கள்.

இப்பொழுது நமது மகாராணியாருடைய ஜீவசரித்திரத்தைப்பற்றியாவது, சொயாவது, அல்லது அரசாட்சியின் முக்கிய சங்கதிகளைப்பற்றியாவது சொல்லப்புகுந்தோமல்ல. பின் என்னவென்றால், அந்தச் சீமாட்டியின் இயற்கை சுகுணத்தை மாத்திரம் பேசுவது நியாயமாயிருக்கிறது. அந்த அம்

* Translated from the Indian Ladies' Magazine.

மாள் தங்கள் தாயாரால் வெகு ஜாக்கிரதையாக வளர்க்கப்பட்ட இளமை, பால்ய பருவத்தைக் குறித்து யாவரும் நன்கு அறிந்திருக்கலாம்.

ஒரு காலத்தில், மகாராணியார் இராஜ்ய பரிபாலனம் வகிப்பார்களென்று எண்ணினபோது, மகாராணியார் "கண்ணியம் பெரிதுதான் எனினும், வகிக்கவேண்டியபாரம் அதிலும் பெரிது" என மறுமொழிபகர்ந்தார்கள். இதற் கநுகுணமாக இராஜ்யபாரத்தை செலுத்தி வந்தார்களென்பதில் ஆட்சேபனை யில்லை. "நான் ஸ்திரமாகவே ஜனங்களுடைய சுதந்தரத்தை காப்பாற்றுவதுடன், என் குடிகளின் க்ஷேமத்தையும், சௌக்கியத்தையும், என்னாலான வரையிலும் செய்வேனெனவும்" வாக்களித்தார்கள். உலகசரித்திரத்தில் நமது அரசியைப் போல ஜனங்களுக்கிசைந்த துரைத்தனமும், மேன்மையான நன்னடக்கையும் பொருந்திய அரசர்கள் ஆங்கிலேய நாட்டில் இருந்தது மில்லை, இனி உண்டாகப்போகிறதுமில்லை. மகாராணியவர்களுக்கும், ஜனங்களுக்கு மிருந்த விசுவாசம் மிகவும் உருக்கமானது. மகாராணியவர்களின் முக்கியமான கவனம் இந்தியாவின் பேரிலேயே இருந்ததென்பது சொல்லாமேயமையும். இந்து ஸ்திரீகளின் அபிவிருத்தியே மகாராணியா ரவர்களின் முக்கிய கோரிக்கை. துரைத்தனஞ் செய்தது பெரிதல்ல. மெச்சத்தக்க அபூர்வமான குணங்களினால் ஜனங்களின் இருதயத்தைக் கொண்டதே மிகவும் பெரிது. அவர்களுடைய பரிசுத்த சுபாவமும், உண்மையான தெய்வபக்தியும், ஏழைகளைப்பாதுகாக்கவேண்டுமென்கிற தயையும், அவஸ்தைப்படுகிறவர்களைக் கண்டால் அநுதாபமும், கொடுமை குரூரமான காரியங்களைக் கண்டால் அவைகளின்மேல் வெறுப்பும் பிராணிகளிடத்தில் அதிக விசுவாசமும், பெண்களுக்கு உரிய சிறந்த நற்குணங்களும் அவர்களிடத்தில் பொருந்தியிருந்தது இந்துதேசத்துக் குடிகள் மிகவும் அபிமானிக்கத்தக்கவைகளாக விருந்தன. அவர்களுடைய கற்பும், பரிசுத்தமான நடையும் ஜனங்களால் அறியத்தக்கவையே. ஒரு பெண்பால் உலகத்தில் எவ்வளவு நன்மைசெய்யக்கூடுமென்பதை தெரிவிக்கப் பிறந்த ஒரு அவதாரம்போல் விளங்கி யிருந்தார்கள். உலகத்துக்கெல்லாம் பெரிய சக்கிரவர்த்தனியாயிருந்தும், தன் புருஷனுக்குக் கீழ்ப்படிந்தே நடந்து வந்தார்கள். இவ்விஷயத்தை எல்லா ஸ்திரீகளும் தெரிந்துகொண்டு தக்கபடி நடந்து கொள்வார்களாக. தன் குழந்தைகளை வளர்ப்பதிலும், கிருககிருத்தியத்திலும், சாதாரண ஸ்திரீகளைப்போலவே இருந்தார்களென்பது, அவர்களுடைய கௌரவமற்ற தன்மையும், கள்ளம் கபடமற்ற குணமும் தெரிவிக்கின்றது. அனத யாவரும் அறிந்து அதன்படி நடப்பார்களென்பது நமது கோரிக்கை. மகிமை பொருந்திய மகாராணியவர்களின் சரித்திரத்தின் பெருமையை நாம் என்னவென்று கூறுவோம்.



இந்தியர்களாகிய நமக்கு அந்த சரித்திரம் ஒன்றையும் போதிக்கவில்லையா? ஸ்திரீயாயிருந்தும், மகாராணியாருடைய ஆளுகைத் திறமையானது, நமது தேசத்துப் புருடர்கள் ஸ்திரீகளுக்கு மனப்பயிற்சி உண்டாகும்படி அவகாசம் கொடுப்பார்களானால் எவ்வளவோ காரியங்கள் கைகூடுமென்பதை தெரிவிக்கவில்லையா? சுதேச கனவான்கள், மாட்சிமைதங்கிய மகாராணியைப்பற்றியும், அவர்களது நற்குணம் சாமர்த்தியம் முதலியவைகளைப்பற்றியும் வெகுவாய்ப்பேசியாராயுமிடத்து ஒவ்வொருவரும் நமது தேச ஸ்திரீகளின் கல்வி யபிவிருத்தியை நாடுவது தங்கள் கடமையல்லவென்று நினைக்கிறார்கள்போலும். ஸ்திரீகள் குழந்தைபெறுவதும், வீண்பேச்சுபேசுவதற்குந்தான் சிருஷ்டிக்கப்பட்டவர்களென்று அபிப்பிராயப்பட்டவர்களாய்க் காணப்படுகிறது. இதுநிற்க, மற்றொரு இராஜஸ்திரீயைப்பற்றிப் பேசுவோம். முன் விக்டோரியா மகாராணியாரை எவ்வளவு நேசத்துடன் ஜனங்கள் பாராட்டிவந்தார்களோ அவ்விதமாகவே இப்பொழுதும் அரசாண்டுவரும் இராஜபத்தினி அலெக்சான்டிராவையும், நமது நண்புள்ள அரசியென்று மெச்சுகிறார்கள்.

இங்கிலாந்துதேசத்துக் கன்னியராயில்லாவிடினும் அவர்கள் இங்கிலாந்தில் அடிவைத்தது முதல் ஆங்கிலேயர்களும், இந்தியர்களும் அவர்களை மிகப்பிரியத்துடன் நண்புபாராட்டுகிறார்கள். ஆச்சீமாட்டியைப்பற்றி ஒரு சிறுகதையுண்டு. அதாவது:—சில சிநேகிதர்கள்கூடி அவர்களுடைய முக்கியமானமனோபீஷ்டத்தைச் சொல்லிக்கொண்டு வரும்பொழுது, "யாவராலும் நேசிக்கத்தக்கவராக விருக்கவேண்டுமென்பது தன் கொள்கையென்று, நம்மரசியார் சொன்னார்கள். அவர் எண்ணம் நன்றாய் நிறைவேறுகிறது. ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் விருத்தியாகிற பிரியத்துடன் நடந்துவருகிறார்கள்; விக்டோரியாவைப்போல அவ்வளவு உயர்ந்தபதவியில் இல்லாவிட்டாலும், சக்கிரவர்த்தியுடைய பாரியையாயிருப்பதால் அவருடைய அதிகாரம் அளவற்றதே. காலஞ்சென்ற நமது மகாராணியாருக்கும் முடியாத சில ராஜகாரியங்களை தற்கால சக்கிரவர்த்தியும், சக்கிரவர்த்தினியும் பார்த்துவந்தமையால் இப்போது அவர்களுடைய அநுபோகத்தையுபயோகிக்கத்தக்க சமயமே. விக்டோரியாவைப்போலவே எல்லாரும் புகழத்தக்க மனைவியாகவும், தாயாராகவும் இருக்கிறாள். இதனால் மகாராணியவர்களைப்போலவே இவர்களும் புகழுடன் இருப்பார்களென்பதற்கு ஐயமில்லை. இந்தியஸ்திரீகளாகிய நாம் அந்தம்மாள் கணவரோடு நீடூழிகாலம் வாழும்படி கடவுள் அருள்புரிவாரென்று நல்வரவு கூறுவோமாக.

## சத்தியவதி.

### 2-ம் அதிகாரம்

(113-வது பக்கத்தொடர்ச்சி,)

உள்ளே நாராயணமூர்த்தி பெண்சாதியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு கொஞ்சம் காலடி சத்தமானபோதெல்லாம் தலை நிமிர்ந்து கதவுபக்கம் பார்த்து யாரும் உள்ளே வராததினால் மன வெறுப்புடன், மறுபடி தலையை தலையணைமேல் சாய்த்துக்கொண்டு புஸ்தகமொன்றைத் திறந்து படிக்க ஆரம்பித்து படிப்பு ஓடாததினால் கட்டிலை விட்டிறங்கி பெண்சாதியை அழைத்துவரலாமென்று கதவுவரையில் சென்று வெட்கத்துடன் திரும்பிப்போய் (மனசஞ்சலத்துடன்) படுக்கையில் புறண்டுகொண்டிருந்தான். மனமொப்பியமனைவியைவிட்டு கொஞ்சகாலம் இடைபிரிந்திருந்தபின் மறுபடிசந்திக்கும் காலையில் காதலன் மனம் இவ்வாறு இருத்தல் இயல்பேயொழிய ஆச்சரியப்படத்தக்கதல்ல.

இது இப்படியிருக்க, சத்தியவதியும் புருஷனைப்பார்த்து ஒருதடவை க்ஷேமசமாசாரம் விசாரித்து வரவேண்டுமென்று எவ்வளவு ஆவலாயிருந்தபோதிலும் வாசற்படியில் மாமியார் உட்கார்ந்துகொண்டிருந்தபடியால் போகவகையில்லாமல், அவள் எப்பொழுதுபோய் படுத்துக்கொள்வாளோவென்று கோடானுகோடி பிரார்த்தனைகள் செய்துகொண்டு, ஒரோர் வேலையும் செய்ததும் அவள் போனாளோவென்று எட்டிஎட்டிப்பார்த்துக்கொண்டு, வீட்டுவேலைகளையெல்லாம் செய்துவிட்டு ஓர்ப்படி யின் அறையில் எவ்வளவு நேரமிருந்தபோதிலும் மாமியார் அன்றைக்கு எழுந்துபோய் படுத்துக்கொள்ளும் ஜாடைகாணாமல், கடைசியாய் காதலனைப்பார்க்கவேண்டுமென்னும் ஆவல் வெட்கத்தை மனதிலிருந்து தூரத்திவிடவே துணிந்து தீர்த்தச் சொம்பு ஒன்றை கையில் எடுத்துக்கொண்டு, காலடி சத்தம் செய்யாமல் பயத்துடன் மெதுவாய் சுவற்றோரமாய் நடந்து படுக்கையறைக்குள் பிரவேசித்தாள். அதை கடைக்கண்ணால் பார்த்து தலை அசைத்துக்கொண்டு உடனே எழுந்து மாமியார்தனது அறைக்குள்போய் கதவைச்சாத்திக்கொண்டுவிட்டாள். சத்தியவதி உள்ளே சென்று வலதுகையால் ஒரு குச்சியையெடுத்து தீபத்தைத்தூண்டி பிரியமதிகரித்து கணவனை நோக்கிப்பார்க்கவே நாராயணமூர்த்தியும் அன்பு பொழியும் கண்களுடன் மனைவியின் முகநோக்கி புன்சிரிப்பு சிரித்தான். அச்சமயத்தில்* வதுவையர்களுக்கு மனதிலுண்டான ஆநந்தப்பரவசத்தை அவர்கள் மனதுக்குள் நுழைந்து பார்க்க வேண்டுமே ஒழிய சொல்லவொண்ணாது.

* வதுவையர்கள்—தம்பதிகள்.



நாராயணமூர்த்தி பெண்சாதிகையைப்பிடித்து அவளை தன்பக்கத்திலுட்காரவைத்துக்கொண்டு "இவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருந்தும் உள்ளேவரவேயில்லையே. நான் வந்தேனென்ற சங்கதி மறந்துபோய்விட்டாயா?"

சத்தியவதி :—மாமியார் வாசற்படியிலிருக்கையில் எப்படிவருகிறது?

நாரா :—வந்தாலென்ன? அவள் கடித்து விழுங்கிவிடுவாளா?

சத்தி :—நீங்கள் மிகவும் இளைத்துப்போய்விட்டீர்கள். இன்றைக்கு வழியில் மிகவும் ஆயாசப்பட்டீர்கள்போலும்.

நாரா :—இராத்திரிகாலத்தில் நெடுநேரம் வரையில் வாசித்துக்கொண்டிருப்பதினால் கொஞ்சமிளைத்துப்போனேன்; அதுவுமல்லாமல் ஓட்டல் சாப்பாடு என்தேகத்திற்கு ஒத்துக்கொள்ள வில்லை; நீ கூட ஏன் இளைத்திருக்கிறாய்?

சத்தி :—நான் முன்புமாத்திரம் பெருத்திருந்தேனா? எப்பொழுதும் ஒரேமாதிரியாயிருக்கிறேன். நான் பெரியவளாய் வீட்டு குடித்தனத்திற்கு வந்திருந்தும் தாங்கள் பரதேசத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தால் நான் தங்களுடைய எந்த வேலைக்கும் உபயோகப்படாமலிருப்பது நானிருந்துமில்லாதவள்போல் ஆயினேன்.

நாராய :—இதோ! இங்கேவந்திருக்கிறேனல்லவா? இந்த ஒருமாதத்திலேயே என்னை எவ்வளவு பெருக்கச்செய்கிறாயோபார்ப்போம்?

சத்திய —தாங்கள் வரும்பொழுது என் தமையனாரைப்பார்த்தீர்களா? வீட்டில் எங்கள் பந்துக்கள்யாவரும் க்ஷேமமாயிருக்கின்றார்களன்றோ?

நாராய :—நான் நாளையதினம் புறப்படுவதென்றிருக்கையில் உன் அண்ணன் எனக்கு தென்பட்டார். அவர்படிப்பைவிட்டு வேலையிலமர்ந்திருக்கிறார். உன் பந்துக்களெல்லாரும் சௌக்கியமாயிருப்பதாக முந்திய நாள் கடிதம் வந்ததாம்.

சத்திய :—என் தகப்பனார் பதினைந்து தினங்களுக்குமுன் 10 ரூ அனுப்பினார். அது முதல் எனக்கு அவர்கள் சங்கதியாதொன்றும் தெரியவில்லை.

நாராய :—என் மதினி எங்கே? இருக்கிறசைகைகாணோம், நான் வந்தால் என்னைப்பாராமலிருப்பவளல்ல, அந்தண்டைதெருவில் தாய்வீட்டிற்குபோனாளா என்ன?

சத்தி :—இல்லை, வீட்டில்தானிருக்கிறாள், காலையில் மாமியார் ஏதோ காரணமாககோபித்துத் திட்டினாள். அதன் மீது சோபம் வந்து காலை முதல் போஜனம் செய்யாமல் அறையில் முக்காடிட்டு கிழேபடுத்திருக்கிறாள்; நான் எத்தனை விதமாக கேட்டுக்கொண்டாலும் போஜனத்திற்கு எழுந்து வந்த

வளல்ல. நான் இதுவரையில் அந்த அறையிலேயே உட்கார்ந்திருந்தேன்; தாங்கள் வந்து கூப்பிட்டால் வருவாளோ என்னமோ ஒரு தடவை எழுந்துவாருங்கள்.

நாராய :—அவர்களுக்கு இன்று சண்டை ஏன் உண்டாயிற்று? குழந்தை ராமானுஜ அம்மாளுடைய சைகைகூட ஏன் காணோம்?

சத்திய :—அது அழுது அழுது தாங்கள் வருவதற்கு முந்திதான் தூங்கி விட்டது. அக்குழந்தைதானிதற்குக்காரணம்—இன்று யாரோ வொருவர் நமது வீட்டிற்கு பால்குடிக்கும் ஆண்குழந்தையைக்கொண்டு வந்தார்களாம். ஏதோ சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் "உங்களனைவர்க்கும் பலாப்பழத்தைப்போல் ஆண்குழந்தைகள் பிறக்கின்றன. எங்கள் நிர்ப்பாக்கியவதிக்கு எதற்கும் பிரயோஜனப்படாத பெண்பிறந்திருக்கிறது. பெண்செத்தை எதுக்கு? என் குமாரன் செய்தபிராரப்தத்திற்குத் தக்கபடி இப்படிப்பட்ட மனைவி கிடைத்தாள்" என்று மாமியார் சொன்னாளாம். அதன் மீது அக்காளுக்கு கோபமுண்டாய் "பெண்பிறந்தால் நான் என்ன செய்வேன்? அது உங்கள் குமாரருடைய தப்பிதமே யொழிய எனதல்ல" என்று சொல்லுகையில் இருவருக்கும் சண்டை மூண்டுகொண்டது. பெரியவள் சொன்னால் என்ன? சும்மாயிருவென்றால் என் வார்த்தையைக் கேட்டவளல்ல. மாமியார் என்னை எத்தனையோ வார்த்தைகள் சொல்லுகிறார்களல்லவா? சொன்னவார்த்தைகளுக்கெல்லாம் எதிர்வார்த்தை பேசி சண்டைபோடுகிறேனா?

நாராய :—அவர்களிருவருமிருவரே. ஒருவரிடத்திலும் பொறுமை கிடையாது. நம்மவரில் பெண்கள் மிக மூடர்கள்; அற்பத்திற்கெல்லாம் காரணமில்லாமல் சண்டையிட்டு பட்டினிகிடக்கிறார்கள். புருஷக்குழந்தையல்லாமல் பெண்குழந்தை பிறந்தால் புழுத்துப்போயிற்றா என்ன? உபயோகத்திற்கு புருஷன் எவ்வளவோ பெண்ணுமவ்வளவே; இருவரும் கூடயிருந்தாலல்லாமல் எப்பொழுதும் சௌக்கியமுண்டாகமாட்டாது. பாவம்! பூர்ணகர்ப்பிணி போஜனம் செய்யாமலிருந்தால் மகாகஷ்டம். நாம் போய் சாப்பாட்டிற்கு எழுந்திருக்கச்செய்வோம் வா என்று சொல்லிக்கொண்டு இருவரும் சுந்தரம்மாள் அறைக்குள் போனபின்பு, சத்தியவதி மெதுவாய் ஓர்ப்படியின் முகத்திலிருந்த முக்காட்டை எடுத்து—அக்கா! உனக்காக யாரோ வந்திருக்கிறார்கள்பார்.

சுந்தரம்மாள் :—மைத்துனர் முகத்தை இடக்கண்ணால் பார்த்து கண்ணை மூடிக்கொண்டு மறுபடியும் முக்காடு இட்டுக்கொண்டாள்.



நாராயணமூர்த்தி மறுபடியும் முக்காட்டைத்திறந்து—மதினி! என்னை மறந்துவிட்டாயா என்ன? வெகுநாள் பொறுத்து ஊரிலிருந்து வந்த மைத்துனனை இவ்விதமாகத்தானா நடத்துகிறது? நீ என் க்ஷேமசமாசாரத்தைக் கேட்டு தெரிந்துகொள்ளவேண்டுவதில்லையா?

உள்ளுக்குள் பேசவேண்டுமென்று விருப்பமிருந்தபோதிலும் பேசாமல் சுந்தரம்மாள் கண்திறந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது இருவரும் அவள் கையைப்பிடித்துக்கொண்டுபோஜனத்திற்கு எழுந்திரு என்று எழுப்பி அவளைப்பலவந்தமாய் அழைத்துக்கொண்டுவந்து மணையின் மீது உட்காரவைத்தார்கள். வெளிக்கு சாப்பிடக்கூடாதென்றிருந்த போதிலும் உள்ளுக்குள் காலை முதல் பசிதேவதை எழுந்திருந்து சாப்பிடு வென்று பாதித்துக் கொண்டிருந்ததால் அபிமானத்தை மறந்து, இது வரையில் யாராவது பலவந்தமாய் தன்னை எழுப்பவேண்டுமென்று ஆலோசித்துக்கொண்டிருந்தாள். ஆகையால் இவர்களிருவரும் கையைப்பிடித்துக் கொண்டார்களே தவிர பசியே அவளை எழுப்பி மணையண்டைக்குக் கொண்டு வந்து சேர்த்தது. அப்பொழுது சத்தியவதி இலை போட்டு பரிமாறின பிறகு அவள் வலதுகை மெதுவாக அன்னத்தின் மீது சென்று வேலை செய்ய ஆரம்பிக்கையில் இலையிலிருந்த காய்கறிகள், பருப்பு அன்ன முதலியவைகள் ஒன்றின்பின் ஒன்றாக மாயமாய்ப்போக ஆரம்பித்தன. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இலைகாலியானவுடனே அவ்வளவுநேரம் பிகுவாயிருந்தவள் நிமிஷத்திற்குள்ளே இலையிலிருந்த அன்னமெல்லாம் மாயமாகும்படி இந்திரஜாலம் செய்தனையே! என்று சிரித்து மதினியாராகையால் கொஞ்சம் வேடிக்கையாக பரிகாசம் செய்து, நாராயணமூர்த்தி தன் படுக்கையறைக்குப் போனான். சத்தியவதியும் ஓர்ப்படியை படுக்க வைத்து தன் வரவுக்காக எதிர்பார்த்திருந்த பர்த்தாவையடைந்து அறையின் கதவை மூடிக்கொண்டாள்.

கே. ஜி. வே.

---

## ஸிம்பலைன்.

(8-ம் அதிகாரம் 110-வது பக்கத்தொடர்ச்சி.)

கைடீரியஸ் :—எந்த இடத்தில்?

ஆர்விராகஸ் :—தன்னுடைய கைகளை மடக்கிக்கொண்டு தரையில் தான்படுத்துக் கொண்டிருந்தான். அவன் தூங்கினானென்று நினைத்து, தூக்கத்தைக் கலைக்காமலிருக்க வேணுமென்று என் பாதரக்ஷைகளைத் தூரத்தில் கழற்றிவிட்டு மெதுவாக அவனிடத்தில் போனேன். பார்த்தவுடன் இறந்துபோனதாக நினைத்து அவனை யிங்கே யெடுத்துவந்தேன்.

கைடீரி :—ஐயோ! விசனப்பட்டுப் பிரயோசனமில்லை. அவன் இறந்து போயிருந்தால் அவனுடைய கல்லறையைப் படுக்கையறையாக நாம் வைத்துக்கொள்ளவேண்டியது. தேவதைகளே! அடிக்கடி இங்கேவந்து இவனைப் புழுக்களினின்றும் காப்பாற்றவேணும்.

ஆர்விராகஸ் :—நான் உயிருடனிருக்கிறவரையில் வசந்த காலங்களில் உன் கல்லறையை, ரோஜா, பிச்சி, முல்லை, இருவாக்ஷி முதலிய பூக்களினால் அலங்கரித்துக் கொண்டுவருகிறேன். அனேகவிதமான பக்ஷிகளும் உன்மேல் இரக்கப்பட்டு பலவித புஷ்பங்களாலும் மெல்லிய இலைகளாலும் அலங்கரிக்கும். எங்கள் கதி யிவ்விதமாய் விட்டதே!

கைடீரி :—உன் விளையாட்டு வார்த்தைகளை விட்டுவிடு. சீக்கிரம் இவனை பிரேதக்குழிக்குக் கொண்டுபோய் அடக்கம் செய்வோம். சீக்கிரம் போகலாம், வாருங்கள்.

ஆர்விராகஸ் :—எங்கே அடக்கஞ் செய்யலாம்?

கைடீரி :—நம்முடைய தாயார் பக்கத்தில் புதைப்போம்.

ஆர்விராகஸ் :—நல்லது, பாலிடோர்! நம்முடைய தாயார் இறந்து அவளை யடக்கஞ்செய்த சமயத்தில் எவ்வளவு மரியாதைகள் செய்து பாடினோமோ அதேமாதிரியாக இப்பொழுதும் ஒன்றும் குறைவின்றிச் செய்வோம். அதே பாட்டுகள் தான் இப்பொழுதும் பாடவேணும்.

கைடீரி :—காட்வால்! என்னால் பாடமுடியாது. பாடல்களை என் வாயால்சொல்லி அழுதுகொண்டிருக்கிறேன்; நீபாடவேணும்.

ஆர்விராகஸ் :—ஆனால் நாம் பாடலாம், வா.

கைடீரி :—அதிக்துக்கம் வந்தபோது சிறிய துக்கத்தைக் கவனியாமல் போனோம். இது உலகத்தின் இயற்கையோ! க்ளோட்டனைப் பூராவும் மறந்துவிட்டோம். பிள்ளைகளே! அவன் இந்த தேசத்து இராணியின் மகன், நமக்கு விரோதியாகவந்தான்; அதற்குத் தகுந்தபடி அவனுக்குச் செலவுக்குக் கொடுத்தனுப்பி விட்டோம். உயர்ந்தவர்களும், தாழ்ந்தவர்களும் ஒரேமண்ணால் உண்டாக்கப்பட்டாலும், அவர்களுக்குத் தக்க மரியாதைகள் செய்வதை மறந்துபோகக் கூடாது. இது உலகவழக்கமா யிருக்கிறது. நம்முடைய எதிரி அரசனுடைய புத்திரனா யிருக்கிறான். நீங்கள் அவன் உயிரைவாங்கினபோதிலும் அரசர்களுக்குத் தக்க மரியாதையுடன் அவனை யடக்கஞ் செய்யுங்கள்.

கைடீரி :—தம்பி! தயவுசெய்து அவனுடைய பிரேதத்தைக் கொண்டுவா. இறந்த பின் பெரியவனும் சிறியவனும் ஒன்றுதான்.

ஆர்வி :—(பெலாரியஸைப் பார்த்து) நீங்கள்போய் க்ளோட்டனைக் கொண்டுவந்தால், நாங்கள் இங்கே துக்கப்பாட்டு பாடிக்கொண்டிருப்போம். பாலிடோர்! ஆரம்பிப்போம்................(பெலாரியஸ் போகிறான்.)



கைடீரி :—காட்வால், அப்படியல்ல, தலையைக் கிழக்கில் வைக்கவேணும். அதின் காரணம் பிதாவுக்குத் தெரியும்.

ஆர்விராகஸ் :—வாஸ்தவந்தான்.

கைடீரி :—சீக்கிரம் எடுத்துக்கொண்டு போவோம்

[பிரேதக்குழிக்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள்.]

அழுது புலம்புகிறார்கள்.

கைடீரியஸ் :—பின்னோனே * பின்னோனே என்னுடைய பின்னோனே

எங்கள் பின்னோனரண்மனைக்கு பின்னோனே
நாங்கள் பிரியமுடன் வந்தாலும்
எங்களருமை மிகப்பாராட்டி பின்னோனே
யெங்களை ஆதரிப்பாராருமில்லை

ஆர்விராகஸ் :—நாங்கள் தம்பி யரண்மனையில் என் பின்னோனே
நாங்கள் தளர்ந்து மிக வந்தாலும்
தயவுடனே வார்த்தைசொல்லிக்கொண்டு பின்னோனே
என் தளர்ந்தமுகம் பார்ப்பவரார்

கைடீரியஸ் :—நான் ஆளரண்மனையில் என் பின்னோனே
நான் ஆடல்பட்டுவந்தாலும்
என் ஆடலைத்தீர்ப்பதற்கு என் பின்னோனே
நான் ஆருமற்றவனாகிவிட்டேன்

ஆர்விராகஸ் :—என் கொற்றவனரண்மனைக்கு என் பின்னோனே
நான் கோபங்கொண்டுவந்தாலும்
என் கோபங்களைத்தீர்ப்பவரார் என் பின்னோனே
என்னைக் கொண்டணைத்துப் பார்ப்பவரார்

கைடீரியஸ் :—என் அன்னக்களஞ்சியமும் என் பிறவி
உன் அன்புடையவார்த்தைகளும்

ஆர்விராகஸ் :—உன் தங்கக்களஞ்சியமும் என் பின்னோனே
உன் தயவுடைய வார்த்தைகளும்

கைடீரியஸ் :—உன் பொன்னுந்திருமுகமும் என் பிறவி

ஆர்விராகஸ் :—உன் பெருமையுள்ள நற்குணமும்

கைடீரியஸ், ஆர்விராகஸ் :—மறந்திருப்போமென்றாலும் என் பின்னோனே

எமக்கு மறக்க மனங்கொள்ளலையே
நாம் தணிந்திருப்போமென்றாலும் அட என் பிறவி
தணிய மனந்தோனலையே

கைடீரியஸ் :—மின்னல்களுக்கு இனி அஞ்சவேண்டாம்

*பின்னோன்—தம்பி

**ஆர்விராகஸ்**:—இடிகளுக்கும் இனி அஞ்சவேண்டாம்.

கைடீரி :—அவதூறுக்கும், கெட்ட அபிப்பிராயங்களுக்கும் இனி பயப்பட வேண்டியதில்லை.

**ஆர்வி** :—உன்னுடைய சந்தோஷமும் துக்கமும் இத்தோடு முடிந்துவிட்டது.

**இருவர்களு்** :—ஒவ்வொரு வாலிபர்களும், இஷ்டர்களும் கடைசியில் உன்னுடைய கதியைத்தான் அடைவார்கள்,

**இருவர்களும்** :—மந்திரவாதிகள் ஒருவரும் தங்களுடைய மந்திரங்களினால் உன்னைக் கைவசப்படுத்தமாட்டார்கள்.

**கைட** :—பிசாசு ஒன்றும் உன்னிடத்தில் அண்டாது.

**ஆர்வி** :—கெடுதிகள் ஒன்றும் உன்னிடத்தில் வாராது.

[பெலாரியஸ் க்ளோட்டனை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.]

**கைட** :—நாங்கள் துக்கச்சடங்குகள் முழுவதும் செய்துவிட்டோம். பிதா! அவனை யிங்கே வையுங்கள்

**பெலாரி** :—இதோ! கொஞ்சம் பூக்களிருக்கின்றன!! நடுராத்திரியில் இன்னும் வேண்டிய பூக்கொண்டு வருகிறேன். இரவில் பனியால் நனைந்த செடிகள் கல்லறைகளுக்குத் தகுந்த சாதனங்கள்தான். இந்தப் புஷ்பங்களை அவர்கள் பேரில் தூவுங்கள். நீங்கள் நல்ல புஷ்பங்களுக்குச் சமமாகவிருந்தீர்கள்; இறந்ததினால் இப்பொழுது உங்களுடைய காந்தி ஓடிவிட்டன. அதேமாதிரியாக உங்கள்பேரில் தூவியிருக்கப்பட்ட புஷ்பங்களும் இலைகளும் சிறிது நேரத்தில் வாடிப்போகும், வாருங்கள்; நாம் தனித்தனியாய் பிரிந்திருந்து முழங்காலிட்டு ஜெபம்பண்ணுவோம்; மண்ணாலாக்கப்பட்ட நீங்கள் மண்ணாகமாறிவிட்டீர்கள். உங்களுடைய சந்தோஷங்களும் கஷ்டங்களும் இத்தோடு முடிந்துவிட்டன என்றிவ்வாறு இமோஜன் க்ளோட்டன் இவர்களைப்பற்றி அழுது புலம்பிக்கொண்டு தங்களிருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

**வி. கோபாலஐயங்கார் பி. ஏ.**

---

## புற்புலத்து நெட்டிலிங்கமையர் வைபவம்.

(2-வது புத்தகம்) 192-வது பக்கத்தொடர்ச்சி.

6வது அத்தியாயம்.

---

நெட்டிலிங்கம் 19-வது வயதில் உத்தியோகம் பண்ண ஆரம்பித்தான் என்று சொன்னோமே, இனிமேல் அவரைப்பற்றி நாம் மரியாதையாகத்தான் பேசவேண்டும். ஏகவசனத்தில் பேசுவது கௌரவமல்ல," இதுவரையில் அவர் சிறுபருவத்திலிருந்தார். இனி உத்தியோகஸ்தரல்லவா? தானு



ய்தன்வயிறு வளர்க்க சாமுவையர் வழிதேடிக் கொடுத்தவுடன் இவர் தனது குடும்பம் அவ்வளவையும் புற்புலத்திலிருந்து வரவழைத்து தன்னருகாமையில் வைத்துக்கொண்டார். சிறு குழந்தையா யிருந்தகாலத்தில் பிறர் வருத்தங்களையும், நமது சரியான நிலைமையையும் நாம் அறிவது வருத்தம். இதே காரணத்தால் நெட்டிலிங்கமையருக்கு தான் பெரியவம்சத்தில் பிறந்தவனாக விருந்தபோதிலும் வெகு ஏழை என்பதும், தான் மட்டில் அக்காள்வீட்டில் எவ்வளவு சௌக்கியமாய் வாழ்ந்துவந்தபோதிலும் தன்னைப்பெற்றவர்களும், மற்ற பந்துக்களும், வெகு வருத்தப்பட்டு ஜீவிக்கிறார்கள் என்பதும், தனக்கு 18-19-வது வயதுவரையில் தெரியவேயில்லை. அவர் புத்திமானாயிற்றே; எப்படி தெரியாமற்போகும் என்று எண்ணக்கூடும். அப்படியல்ல, இளமைப்பருவம் கவலையற்ற பருவம். தனது படிப்பிலும், விளையாட்டிலும், அக்காள் வீட்டில் தானனுபவித்த சுகத்திலும், தனது சொந்த குடும்பவிஷயத்தைப்பற்றி உட்புகுந்து பார்க்கவாவது கவனிக்கவாவது நெட்டிலிங்கமையருக்கு அப்பொழுது ஸாவகாசமே யில்லாமற் போயிற்று. உத்தியோகம்வந்து தனது பொறுப்புத் தனதானவுடன் ஸர்வவித கவலையும், மஹோஷதியை இருட்டில் அதனுடைய சுடர்வந்து அணுகுவதுபோல இவருக்கு வந்துவிட்டது. இவர் ஸதா குதூஹல புருஷர். தயாளு. சாமுவையர் பெரும் ஸ்வபாவத்தில் வளர்ந்து அவருடைய உத்தம குணங்கள் யாவற்றையும் பற்றினவர். ஐயோ! இதுவரையில் நமது குடும்பம் வறுமையால் வருந்தியதே என்றும், அவ்வறுமையை நீக்க தனது ஸம்பாத்தியந்தான் முக்கிய காரணம் என்றும் உத்தேசித்து வெகு விதமாய் முயன்று ஸமுத்திரம் போன்ற தனது அபாரமான குடும்பத்தை ரட்சிக்க ஆரம்பித்தார். இவருடன் இவரது தகப்பனார், அக்காள், தங்கைகள் ஐந்து பெயர்கள், அவர்களுடைய குடும்பத்தில் இவ்வளவு பெயர்களும் ஒன்று கூடி வசித்து வந்தார்கள். இவர்களில் ஒவ்வொருவருக்கும் நெட்டிலிங்கமையர் மனங்கோணாமல் நடப்பார். யார் என்ன வேண்டும் என்கிறார்களோ அதை உடனே வாங்கிக் கொடுப்பார். இவருடன் தினந்தோறும் 10-15 பெயர்கள் உட்கார்ந்து புசிக்காத நாள் கிடையாது.

உத்தியோக தோரணையில் 200-300 சம்பளம் வாங்கப்பட்ட உத்தியோகஸ்தர்களும் நெட்டிலிங்கமையரைக்கண்டால் அவர் என்ன தான் சின்ன உத்தியோகஸ்தராயிருந்த போதிலும் வேலை தெரிந்தவர் என்று மரியாதை பண்ணுவார்கள். தனக்கு இட்ட வேலையை அரைநாழிகையில் செய்து விட்டு, மற்ற சிப்பந்திகள் வேலைகளையும் வலுவில் வாங்கப்பார்ப்பார். அக்காலத்தில் லஞ்சமில்லாதவேலையேகிடையாது,லஞ்சம்வாங்காதஉத்தியோகஸ்தனும் வேலைக்காரனல்ல என்பது கொள்கை. இந்த விஷயத்தைப்பற்றி நாம்

முன்னமேயே ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறோம். சம்பாத்தியத்தில் நெட்டிலிங்கமையர் வெகு கெட்டிக்காரர். சின்ன உத்தியோகஸ்தர்கள் பெரிய உத்தியோகஸ்தர்கள் எல்லாரையும் தனது கைக்குள் போட்டுக்கொண்டு ஒருவித புகாரன்னியில் கொடுக்கப்பட்டவன் ஒருவனுவது மனவருத்தம் என்பது லவலேசமுமில்லாதபடி ஏராளமாய் சம்பாதிப்பார். என்ன தான் வந்த போதிலும் ஒரு திரணங்கூட இவருக்கு மீறாது. இவரது ஜாதகவிசேஷ மப்படி யிருந்தது. அவ்வளவு உதாரி. எத்தனைபேர் தன் வீட்டுக்குவந்தபோதிலும் இரவு 15-நாழிகைக்கு அன்னம் என்று யார்வந்து கேட்டபோதிலும் இல்லை என்னும் வாக்கில்லாமல் இவர் அமுதளித்துவந்தபடியா லிவருக்கு அன்னதானம் நெட்டிலிங்கமையர் என்ற பெயரும் கீர்த்தியும் வந்துவிட்டது. அந்த மகாநுபாவனுக்குக் கொடுத்தால் இன்னும் 4-பெயர்கள் புசித்துப்போவார்கள் என்பது லோகவதந்திபா யிருந்தது. இது என்ன தா்மம்! இது என்ன நியாயம்!! "மாட்டைக்கொன்று செருப்புதானம் பண்ணும்" பிரமாணமாக விருக்கிறதே!!! நான்கு பெயர்கள் மனம் நோக பணம் வாங்குவானேன். அதை அன்னதானத்தில் செலவிடுவானேன் என்று இக்காலத்தில் சிலர் கேட்கலாம். இவர்கள் கேட்பது வெகு நியாயந்தான்; நாமிப்பொழுது அடைந்திருக்கும் படிப்பினுலும் நியாயத்தினுலும் சீர்தூக்கிப்பார்த்தால் நெட்டிலிங்கமையர் செய்தது கொஞ்சமேனும் நீதியல்ல என்பது ஒரு நொடியில் நமக்கு விளங்கிவிடும். அக்காலத்திய உத்தியோகஸ்தர்களோ இவ்வளவு மேலான நாகரீகத்தை யுணராதவர்களா யிருந்தார்கள். தாங்கள் செய்வது நியாயவிரோதம் என்பது எள்ளளவேனும் அவர்கள் மனதில் ஏறவில்லை. நியாயமா அனியாயமா என்று யோசித்துப் பார்க்கத்தகுந்த விசால்புத்தியும் அவர்களுக்குக் கிடையாது. இச்சரித்திரத்தை உள்ளது உள்ளபடி சொல்லி எழுதநாம் உத்தேசித்திருக்கிறபடியால் இதை ஒளித்து நெட்டிலிங்கமையர் உத்தியோக தோரணையில் மகாபரிசுத்தா் என்று நாம் சொல்வது நமது மனச்சாட்சிக்கு விரோதமானகாரியம். பழையகாலத்திய சங்கதியும் உள்ளது உள்ளபடி நமது நண்பர்களுக்கு தெரியாமலும் போய் விடும். ஆகையால் உள்ளதை உள்ளபடி உண்மையை வைக்கொண்டு உரைப்போம்.

நெட்டிலிங்க மையருக்கு அமைந்த தனுதயம் என்ற மாது சிரோன்மணி ஸ்திரீகளுக்குள் ஒரு ரத்தினம் என்றே சொல்லலாம். புருஷன் எந்த சமயத்தில் என்ன கேட்பாரோ அதை எள்ளு என்பதற்கு முன் எண்ணெய் என்ற வேகத்தோடு செய்து வைப்பாள்; தனது குடும்பம் கஷ்ட திசையிலிருந்து இப்பொழுது தான் நல்ல திசைக்கு வந்து கொண்டிருக்கிறது;



நம்மைச் சேர்ந்த பந்துக்களும், விருந்தாளிகளும் வயிறு நிரம்ப புசித்தலே போதும் என்று எண்ணி தனது மாமனுரும், நாத்தனர்களும் என்ன என்ன செய்யச் சொல்லுகிறார்களோ அவ்வளவும் செய்து அதற்கும் மேலாக இரண்டொன்று கூட பண்ணி அமுதளிப்பாள். பட்சபாதம் என்பதே இவளைக் கண்டால் நடுங்கி காதவழி விலகி நிற்கும். காலமே எழுந்து ஸ்நானம் செய்து விட்டு நெற்றியில் குங்குமமிட்டு இவளைச் சேவித்தால் அன்றுவரையில் செய்த பாவம் போம். கோமுட்டி வீட்டு பெருச்சாளிக்கு சொண்டென்ன கொடுத்தென்ன என்று நிர்விசாரமாக தனுதயத்தின் நாத்தனர்கள் தங்கள் தங்கள் குழந்தைகளுக்கு நெய்யும் நெய்யும் சோறுமாக நாளைக்கு நாலைந்து தடவை வயிறு புடைக்க புடைக்க ஊட்டுவார்கள். தனுதயமோ வாய் திறக்காள். அது மட்டுமல்ல, ஐயோ! இத்தனை நாளாக புற்புலத்தில் புளித்த பழையமுது கூட வயிறு நிரம்ப கிடைக்காமல் வருத்தப்பட்ட குழந்தைகள் ஆசை தீர நன்றாக சாப்பிடட்டும் என்று ஆனந்தத்துடன் தானும் அதிகமாக குழந்தைகளுக்குச் செய்வாள். சிறுபருவம், கட்டழகி, நமக்கு நகை நட்டுகள் இப்பொழுது போட்டுக் கொண்டால் நன்றாயிருக்குமே! இக்காலங்கடந்தால் அப்புறம் நகை என்னத்திற்கு என்ற எண்ணம் இவளுக்கு ஈஷத்தேனுங் கிடையாது. ஒரு நாளாவது தனது வாயைத்திறந்து தனக்கு திருகஞ்சுரை ஒன்று வேண்டும் என்று தனது புருஷனைக் கேட்டதில்லை. எப்பொழுதாவது இவளது உத்தமகுணங்களைக் கண்டு தனது மனதுக்குள் அகமகிழ்ந்து உனக்கு அடுத்த சம்பளத்தில் 4 ரூபாய்க்கு ஒரு தளுக்கு வாங்குவதாக யோசித்திருக்கிறேன் என்று தனது புருஷன் நெட்டிலிங்கமையர் சொன்னால் "அவசரம் என்ன, இப்பொழுது வேண்டாம் கொஞ்சநாள் போகட்டும், முக்கிய காரியம் எல்லாம் முதலில் அடங்கட்டும், நல்ல வல்லத்துத் துவரை ரூபாய்க்கு 40 படியாக மலிந்திருக்கிறதாம். அடுத்த சம்பளத்தில் 4 ரூபாய்க்கு வாங்கினுல் வருஷாந்தரம் நமக்குக்காணும்" என்பாள். புருஷன் முன்னிலையிலோ புரு பேசாள். உத்தியோக தோரணையிலோ ... ஷன் நேரஞ்சென்று வீடு வந்தால் எத்தனை நாழிகை சோற்றை வைத்து காத்துக்கொண்டிருக்கிறது என்று சில அவலட்சண பெண்டுகள் போல் மன்சாள். எந்த சமயத்தில் புருஷனை சாந்தமுடன் உபசரிக்க வேண்டு கூறி யெழுவில்லாமல் சிலர் நொந்த வேளைபார்த்து புருஷர்களை இம்சிப்பது நாயகனுக்குத் தெரியும் அவர்கள் சாப்பிடும்போதுதான் பற்பல குடும்ப கூட இருந்தும், அவலட்சணமான குடும்ப வருத்தங்களையும், கஷ்டங்களை துக்கொண்டு பேசி கலத்தில் போட்ட சோற்றை விஷமாகப் பண்ணுவது விதகெட்ட குணங்கள் தனுதயத்தினிடம் ஒன்றுமில்லை.

அவள் முகம் பூரணசந்திரன்போல் அகன்ற அழகானமுகம். எப்பொழுதும் பந்துக்களிடத்திலும், புருஷனிடத்திலும் புன்சிரிப்பு மேலிட்டதாகவேயிருக்குமேயல்லாது கடுகடுப்பென்பதே கிடையாது. அரைநாழிகையாவது வீண்போதுபோக்காள். ஏதாவது ஒருவேலைசெய்து கொண்டேயிருப்பாள். இவள் நடந்துகொண்ட மாதிரியைப்பார்த்த சில பெரிய பெண்பிள்ளைகள் இவளை ஒவ்வொரு சமயத்தில் பெரியவஞ்சகியோ என்று சந்தேகிப்பார்கள். ஏனெனில் யார் என்ன செலவு செய்தாலும் தான் குடும்பத்தின் நாயகியாயிற்றே. ஏன் அப்படி பொருளை அழிக்கிறீர்கள் என்றுகேட்க அதிகாரமும் இவளிடம் உண்டே, வாயைத்திறவாள். வெகு பொறுமையுள்ளவள். கோபம், கடுகடுப்பு பட்சபாதம், கோட்சொல்லல், அஸூயை, அசட்டுத்தனம் இவ்வித துர்க்குணங்களவளிருந்த ஊரிலேயே கிடையா. எப்பொழுதும் சாந்தசுபாவமுள்ளவள். புன்சிரிப்பு மேலிட்ட முகக்காட்சி விளங்கி நின்றவளாய் எல்லாரிடமும் ஆதரவுடன் சந்தோஷப் பேச்சே பேசுவாள். எல்லாருக்கும் தான் நடந்து கொள்ள வேண்டிய விஷயங்களில் வித்தியாசமேயில்லாமல் நடந்து கொள்ளுவாள். ஒவ்வொரு சமயத்தில் யாராவது அயல் வீட்டுப் பெண்டுகள் "அடியே தனேதயம் 8 படி எண்ணெய் 15-நாளில் எப்படி ஆய்விடுமடி? எண்ணெயை மொண்டு மொண்டு குடித்தீர்களா? தோசைக்குத் தோசை 4 முட்டை எண்ணெய் குத்திக்கொண்டு எண்ணெய் சொட்டச் சொட்ட 5 கைம்பெண்டாட்டிகள் பலகாரம்பண்ணினால் அந்த வீடு எப்படி உருப்படும்? எத்தனை நாள் நீயிப்படி அசடாயிருப்பாய்? எல்லாரும் தின்று உருட்டி விட்டுப் போனால் அப்புறம் நாளைக்கு உனக்கு என்ன இருக்கிறது? நமக்குள் நாம் சமர்த்தாயிருந்தாலல்லவோ நாளைக்கு வாழலாம்" என்று புத்திமதி சொல்லுவதுபோல் சொன்னால் அதை சொல்லுகிறவர் மனங்கோணாதபடி ஒரு காதால்வாங்கி மற்றொருகாதால் விட்டுவிடுவாள். ஒருவர் சொன்னதை மற்றொருவரிடஞ் சொல்லாள். [illegible]மாதிரி [illegible]ந்தனர்களும் அவர்கள் குடும்பங்களும் சொத்தையழிக்கிறதே என்ற கோபதாபங்கள் எள்ளளவேனும் அவளுக்குக் கிடையாது. கெட்டிக்காரி. அரைநாழிகையில் 50 பெயர்களுக்கு சமையல் பண்ணுவாள். அவள் பண்ணும் ஒவ்வொரு பதார்த்தமும் வெகு ருசியாயும் நாஸூக்காயுமிருக்கும். பொன், புடவை இவைகளில் இவளுக்கு ஆசையேயில்லை, [illegible]ரான பந்துக்களும் தன் புருஷனுடைய மித்திரர்களும் வயிறு நிரம்ப ச[illegible]புருஷன் எந்த போதும் என்பது இவளது முக்கியகொள்கை. எல்லாரிடமு[illegible] லபெயர்வாங்கினாள், அவள் பெயரைச்சொன்னால் "அப்பா! [illegible] கட்ட திசையிலட்சுமியாயிற்றே" என்று ஒவ்வொருவரும் சொல்லுவாாகள் [illegible]டிருக்கிறது; [illegible]உத்தமி.

(இன்னும் வரும்.)

மாதர்மி;



## மாயாபுரி விநோதக்கதை.

118-வது பக்கத்தொடர்ச்சி.

மாயாபுரியில் மங்களாம்பாள், சௌந்தரவல்லி என்கிற இரண்டு மனைவிமாரும் உபசாரஞ்செய்ய இராஜபோகவைபோகத்தில் அமர்ந்திருக்கும் ஜகதீசன் ஒரு நாள் தன் தாய்தந்தையரை நினைந்து, அடடா! என்ன மூடத்தனஞ் செய்துவிட்டோம். பெற்றோருக்கு நேரிட்ட அபவாதத்தை நிவர்த்திக்கவல்லவோ நாம் இந்தத்தொழிலில் பிரவேசித்தது. நமது காரியசித்தியான பிறகு பெற்றோரை மறந்து பயனற்ற காரியங்களைச்செய்து கொண்டிருந்துவிட்டோமே. அவர்கள் எக்கதியானார்களோ? என்ன நினைந்து வருந்துகின்றார்களோ? என்ன பாடுபடுகிறார்களோ? அவர்கள் மனத்துயரத்தை நீக்கவேண்டுமே யென்று அதேகவலையாயிருந்தான். அவனுக்கு வேறு சிந்தையில்லை. அன்ன பானங்களிலும் வெறுப்பு நேர்ந்தது. இப்படிக் கவலை கொண்டிருப்பதை யறிந்த புத்திசாலியான மங்களாம்பாள் தன் சகோதரியை யழைத்து, நமது கணவன் மனம் மடிந்திருப்பதைக் கண்டாயா? இரண்டு மூன்று நாளாய் நம்மோடு சரியாக மனமொத்துப் பேச வில்லை. ஆகார நித்திரையு மில்லை. நீ ஏதாவது தப்பிதஞ் செய்தாயோ? என் மனமறிந்து நானொன்றுஞ் செய்ய வில்லை. ஏதாவதுண்டானால் சொல்லு என்றாள். அதுகேட்டுச் சௌந்தரவல்லி திடுக்கிட்டு அக்கா! எப்போதும் நாமிருவரும் சேர்ந்திருக்கிறோமே அல்லாமல் ஒரு போதுந் தனித்திருந்த தில்லையே. உமது மனமறியாமல் நானென்ன செய்யப்போகிறேன். நமது நாதன் மனம் வருந்தி யிருக்கிறார் என்று மட்டும் நானறிவேன். நாம் எவ்வாறு அவர் மனதைத் தேற்றுவோமென்று யோசித்துக்கொண்டிருக்கிறேன். நீர் சொன்னபடி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். எனக்கு வேறொன்றுந் தெரியாது என்றாள். மங்களாம்பாள் சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையிலிருந்து கலீரென்று நகைத்துத் தங்காய்! எனக்குச் சங்கதி தெரிந்தது. அதென்ன வென்றால் நமது நாயகன் தமது பெற்றோரைக் கருதிக்கலக்கமடைந்திருக்கிறார். அதை ஒரு நிமிஷத்தில் மாற்றி விடுகிறேனென்று கூறி யெழுந்திருந்து நானாபேதமான பதார்த்தங்களோடு சமையல் செய்து நாயகனுக்குத் தேவாராதனைக்கு உபசரித்து, தானுந்தன் சகோதரியுடன் கூட இருந்து போஜனமிட்டுத், தாங்களும் புஜித்துத் தாம்பூலாதிகளெடுத்துக்கொண்டு போய்க் கணவன் பக்கத்திலிருந்து உபசாரதனமுருக

பேசி அவனை மகிழ்வித்தாள். அப்பொழுது ஜகதீசன் மனமகிழ்ந்து மங்களாம்பாளோடு கொஞ்சிவிளையாடிக்கொண்டிருக்கையில், சௌந்தரவல்லியுங் கலந்துகொண்டாள். மூவரும் மனமொத்து விளையாடிக் கொண்டிருக்கையில் மங்களாம்பாள் வாய்திறந்து என் பிராணேசா! தேவரீர்மாத்திரம் உமது மாமனார் மாமியாரை யழைத்துவைத்துக்கொணடு குலாவினீர்களே. அது போல நானும் என் மாமியாரையும் மாமனாரையுங் கண்டு களிக்க வேண்டாமோ? அக்காலத்தில் கூறியவார்த்தையை மறந்து விட்டீர்களோ? அவர்கள் என்ன நினைந்து வருந்துகின்றார்களோ? அதைக் குறித்துப் பிரயத்தனஞ் செய்யப் பிரார்த்திக்கிறேனென்ற மதுரவசனஞ் சொல்லப்பட்டவுடனே ஜகதீசன் கலீரென்று நகைத்து என் கண்ணே! என் கருத்தை யெப்படியறிந்து கொண்டாய்! நானும் அதைக் குறித்தே யோசிக்கின்றேன் என்றான். ஒன்றிலும் குறைவு படாத தேவேந்திர போகத்திலிருக்கும் தமது சித்தத்துக்கு விரோதமாக நானாவது என் தங்கையாவது நடந்தறியோம். மந்திரி முதலியோரும் ஒரு குற்றமும் செய்யத் தக்கவர்களல்ல. அப்படியிருக்கத் தமது திருவுளம் வருந்தக் காரணம் வேறு இல்லாமையால் இது தானென்று ஊகித்தேன். தவிர எனக்கும் இக்கருத்து வெகு நாளாயுண்டு. பல காரணங்களால் அதனைத் தமது திருவுளமும் உணர்ந்திருக்கும். ஆதலால் தாமதியாமல் அவர்களையழைக்க முயற்சிக்கவேண்டினேனென்று கூறக்கேட்ட கணவன் மகிழ்ந்து மதியூகியான மந்திரிக் கொப்பான என் கண்மணிச் சுடரே! உன்னை மனைவியாகப் பெற்ற எனக்கும் துயரமென்பதுண்டோ? வழுக்கி விழுவோனுக்கு ஊன்றுகோல் போல அறம் நோக்கி உற்றதுணை செய்யும் உத்தம சற்குண மணியே! கவலை யொழிக்கும் கற்பகக் கனியே! சிந்தை வருந்தாதே! உன் பெற்றோரையும், என் மாதா பிதாக்களையும் வெகு சீக்கிரம் அழைப்பிக்கிறேன் என்று கூறி, இன்றிரவு நான் அவிநாசி சேர்ந்து முத்தம்மாளைக் கண்டு சமாசாரந் தெரிந்து கொண்டு பிறகு ஆகவேண்டியகாரியங்களைச் செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்றான். மங்களாம்பாள் மகிழ்ந்து சுவாமீ! தேவரீர் சித்தம் போல நடத்துகிறது என்றாள். இப்படி மூவரும் தீர்மானித்துக் கொண்டு அஸ்தமனமானபின் மாலைக் கடனையும் போஜனத்தையும் முடித்துக் கொண்டு, ஜகதீசன் தன் மனைவியரை நோக்கி நான் போய் விடியுமுன் திரும்பிவருகிறேன் என்று சொல்லிவிட்டு புறப்பட்டான்.

(இன்னும் வரும்.) தேவதஞ்சரியம்மாள்.



## எறும்பு.

இவ்வுலகத்தில் நம்மைச் சூழ்ந்துள்ள பல பிராணிகளுள்ளும் எறும்பு ஈ என்பவற்றை நாம் மிகக் கடைப்பட்டவையாகக் கருதுகின்றோமல்லவா? ஆயினும் அவற்றின் செய்கைகளிலிருந்தும் நாம் அறிந்துகொள்ளக்கூடிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. நாம் ஒரு இனிப்பான தின்பண்டம் வைத்துத் தின்றுகொண்டிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அதை நாம் தின்று முடியுமுன் அதைப்பங்கிட எத்தனை ஈக்களும் எறும்புகளும் அழைப்பில்லாத விருந்தாளிகளாய்வந்து கூடிக்கொள்ளுகின்றன. அந்த பண்டமிருப்பதும் அது தமக்குண்ண உதவுமென்பதும் அவைகட்கார் அறிவித்தார்கள்? கடவுளாலவற்றிற்குத் தரப்பட்டிருக்கும் அதிநுட்ப இந்திரிய உணர்ச்சியினாலே அவை அதனை உணர்ந்துகொள்ளுகின்றன. உணவுப்பொருள் எந்தத்திசையில் எவ்வளவு தூரத்தில் இருக்கினும் காந்தத்தினால் இரும்பு கவரப்படுதல்போல இவையும் அப்பொருள்களினிடத்து இழுக்கப்படுகின்றன. எறும்புகள் ஓயாமல் எந்நேரமும் திரிந்து தம் உணவைச் சேகரிப்பதில் முயற்சியாயிருக்கின்றனவென்று நம் வீட்டிலேயே நம்மைச்சுற்றிச் சிறிது கவனித்தால் தெரியவரும். நம்முள் எவ்வளவுபேர் இவ்வாறு தம்நேரத்தை யெல்லாம் பயன்படச் செலுத்துவாருண்டு? எவ்வளவுபேர் தம் நெஞ்சின்மேல் கைவைத்து "நான் எறும்பைப்போலக் கணப்பொழுதும் வீணிற்கழியாது என் நாட்களை நன்முயற்சியில் செலவிட்டேன்" என்று மனதாரச்சொல்லுதல்கூடும்?

"நெடுநீர்மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக்கலன்"

என்ற நாயனார் கூறியபடி நெடுநீர்மைக்கும் (அதாவது விரைந்து செய்வதனை நீட்டித்துச்செய்யுமியல்பு) சோம்பலுக்கும் மறதிக்கும் பெருந்தூக்கத்திற்குமாகத் தம் காலத்தைப் பறிகொடுக்காதவரெத்தனைபேர்? கிராமங்களிற் சில கொடியார் காடுகளிற்சென்று எறும்புக் குழிசளைத்தோண்டி அவற்றில் அவை நெடுநாளாகத் தம் மாரிக்காலத்திற்கென்று சேர்த்து வைத்திருக்கும் தானியத்தையெடுத்துச் சீவிக்கிறார்கள். இவ்வெறும்புகள் விடாமுயற்சியோடு பிற்காலத்திற்கென்று சேகரிப்பதுபோல நம்முள் எத்தனைபேர் நாளைக்கென்செய்வோமென்னும் கவலைகொண்டு தம் கஷ்டகாலத்திற்குதவியாகப் பண்டம் சேர்த்துவைத்திருக்கிறார்கள்? எத்தனைபேர் சிறிதுப்பின்யோசனையில்லாது கையிலிருப்பதுவரையிற் சுகிப்பது லாபம் என்ற கொள்கையோடு கையிற் கிடைத்ததை அவ்வப்போழ்து செலவழித்துவிட்டு, கஷ்டம்வந்து தம்மாலுழைக்க இயலாதகாலத்துத்

துன்பப்படுவாரில்லை. எல்லா அறிவும் நிறைந்தும் இங்ஙனம் வீணாள் போக்கும் நாம் ஓரறிவே மிகுந்துள்ள எறும்புகளைப் பார்த்தாவது விடா முயற்சியும் சோம்பலின்மையும் துன்பங்களை வருமுன்காத்தலும் அறிந்து முன்வருவோமாக.

குமாரசாமி.

## "இந்துமாதர்களின் எதிர்கால எச்சரிப்பு"

ஆரியர்காள்!

இதைப்பற்றிச் சிறிது கவனத்துடன் ஆராய்ந்து கொள்ளவேண்டியது காலத்தை நோக்கி அவசியமுடைத்தென்பதை யாவரு மறிவீர்கள் எனினும் அவ்விஷயமாய் எமக்குத் தோன்றிய சில கருத்துக்களையும் சுருக்கிக் கூறுகின்றனம்.

நந்தேயத்துச் சுதேசமாதர்களின் நிகழ்காலக் கல்விப்பயிற்சியானது ஒரு பாகத்தில் களிப்பையும் மற்றோர்பாகத்தில் அச்சத்தையும் கொடுக்கக்கூடியதாகக் காண்கின்றது.

இறந்த காலநிலைமைக்கும் நிகழ்கால நிலைமைக்கும் உள்ள வித்தியாசங்களைக் காணும்போது அக்களிப்பு உண்டாக ஏதுவும், நிகழ்கால நிலைமைக்கும், இனி வரக்கூடியதாகிய எதிர்கால நிலைமைக்கும் உள்ள வித்தியாசங்களை யூகித்துக் காணும்போது அவ்வச்சமும் விளையக்கூடியதாகின்றது. எதிர்கால நிலைமை யின்னதுதானென வறிந்துகூறுதல் எவர்க்கு மியல்வதன்று எனினும், நிகழ்கால நிலைமையை யூன்றிச் சிந்திக்குமிடத்து எதிர்கால நிலைமை அச்சத்திற் கேதுவாகலாமென நமக்குள்ளபகுத்தறிவைக் கொண்டு அநுமானிக்க நேருகிறது. முதற்கண் திருப்திக்கிடந்தந்த இறந்தகால நிகழ்கால வித்தியாசங்களைப்பற்றிச் சிறிது கவனிப்போம். இறந்தகாலமென்று யாம் இங்கு கூறவந்தது நமது தேசம் வேற்றரசர்கள் கைக்குள்ளாகிப் பற்பல வேற்றெண்ணங்களாலும், விரோதக்கோள்கைகளாலும், சுயநலக்கேட்டினாலும் மூடப்பட்டு உருமாறிச் சீரழிந்து நிற்க நேரிட்ட மத்தியகாலத்தையே யாகும். அம்மத்தியகாலத்தில் தன் பெண்கள், கல்வி கற்பதற்கு பற்பல விகாதங்கள் விளைந்தது. அக்காலத்தில் தான் நந்தேயமாதர்கள் தத்தமக்குரிய மானத்தையும் கற்பினையுங் காத்துக்கொள்ளவேண்டி எல்லாச்சுகங்களையும் எல்லாவுரிமைகளையுமிழந்து மூலைமுடுக்குகள் எங்கேயெனத் தேடிப்பதுங்கிக் காலங்கழிக்கத் தலைப்பட்டனர். இன்னும் எண்ணிறந்த கஷ்டங்களையும் நம்முதியோர் அடைந்ததாகவுங்



கேழ்க்கின்றோம். அத்தகைய துர்ப்பல நிலைமையை வகித்திருந்த இத்தேசம் பின்னர் காலக்கிரமத்தில் அக்கொடுமைகளினின்றும் சிறிது சிறிதாக விடுபட்டுத் தப்பிப்பிழைத்து நல்லுயிர் பெற்று விளங்கியது. விளங்கியதென்றாலும் நமது பூர்வீகமாதர்களின் உத்தம உயர்குணங்களும் சத்தியநெறியும் காண்பதருமையாகவே முடிந்தது. பூர்வகாலத்து மாதர்களுக்கு அத்தகைய உயர்குணம் அமைந்திருந்ததற்குக் காரணம், அவர்களது அமரிக்கையான சுதேசபாஷாபயிற்சியும் தெய்வ நம்பிக்கையும் புண்ணியப்பற்றும் தான் என்று உறுதியாகக் கூறலாம். அக்காலத்தில் அதற்கேற்ற வசதிகளும் அவ்வாடவர்களால் அமைக்கப்பட்டுள தென்பதற்குப் பல பிரமாணங்களுண்டு. அக்காலத்தில் ஆண்மக்களை யொப்பப் பெண்மக்களும் எல்லாக்கலைகளும் பயில இடம்பெற்றிருந்ததும், பருவமடைந்த பிறகு அப்பெண்களின் கருத்தையறிந்தே மணவினைமுடிப்பதென்பது அந்தணர் அரசர்முதலிய மேல்வகுப்புக்களிலும் ஆசரிக்கப்பட்டுவந்ததும் ஆகிய இரண்டு வழக்கங்களே அக்காலத்து மாதர்களின் நற்குணப்பேற்றிற்கு அசைக்கவொண்ணாத அஸ்திவாரங்களாக விருந்தன.

நாம் சாதாரணமாய் நமது புராணங்களில் கேட்கும் கற்புடை மங்கையர்களாகிய திரௌபதை, சீதை, நளாங்கினி, சாவித்திரி முதலாகிய இராஜஸ்திரீகளும், உலோபாமுத்திரை, அநசூயை, மயித்திரி, அருந்ததி முதலிய பல ரிஷிபத்னிகளாகிய பிராமண மாதர்களும், தங்கள் தங்கள் யுக்தவயது வந்தபின் கணவர்களைத்தேர்ந்து மணம்புரிந்தவர்களேயன்றி தற்காலத்தைப் போன்று பாலிய விவாகம்புரிந்துகொண்டவர்களன்று, சாஸ்திரப்பயிற்சியும் நுண்ணறிவும் அடையப்பெறுதவர்களுமன்று. இதுபோன்ற உதாரணங்கள் இன்னும் எண்ணிறந்தனவுண்டு: ஆதலின் நமது பூர்வீக சுதேச மாதர்கள் குணதீபங்களாய்க் கற்பரசிகளாய் இருந்துவந்தவர்களென்பதும் அவ்வாறவர்கள் இருந்துவந்ததற்குக் காரணம், அவர்களது சுதேசபாஷாபயிற்சியும், நந்நூல்களினாராய்ச்சியும், பருவமணமுமேயென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

அத்தகைய சீர்திருத்தந்தான் தேசம் வேற்றரசர் கொடுங்கோன்மைகட்குள்ளாகிய மத்தியகாலத்தில் மாறுபட்டு மேலே யாம் குறிப்பிட்ட விபரீத வழக்கங்கள் பல கையாளப்பட்டு வந்ததாகும். நல்ல பழக்கங்கள் எவ்வளவு துரிதத்தில்மாறி (நமக்குப்பெருந் தீமைகளை தற்காலம் விளைவித்து நிற்பதாகிய) தீயப்பழக்கங்கள் உண்டாயிற்றோ, அதுபோல அவ்வளவு ஆதலின் நந்தேசம் நல்ல நிலைமைக்குவந்த பின்னர் அத்தீய நிலைமையினி வர்களாயிருப்ப பழைய நல்லனுஷ்டானங்களுக்கு விரச்சாத்தியமில்லை. ஒரு டிருக்கும் இயர்ள்ளை வஸ்திரத்தில் எவ்வளவு சீக்கிரத்தில் அழுக்கேறுவ

121

தோ அவ்வளவு சீக்கிரத்தில் ஏறிய அழுக்கை அகற்றமுடியுமோ அது போலவே முடிந்தது நமது ஆசாரவிவகாரங்களும். கொடுங்கோன்மை மிகுந்திருந்த காலத்தில்கண்டது காட்சி கொண்டது கோலமாய் பரலோக புத்தி யென்னும் பேரறிவு நம்மை ஆளவந்தவர்களுக்கு இன்மையால், நமது மாதர்கள் பகிரங்கத்தில் பழகவும், சிறந்த ஆடை ஆபரணங்களை யணி யவும், கூடப்பயந்து தங்கள் கற்பினைக் காத்துக்கொள்ளும் பொருட்டே ஒடுங்கிவந்ததாகத் தெரிகிறது. பாலியவிவாக மேற்பட்டதும் தங்கள் மாதர் பதிவிரதாபங்கத்திற் குள்ளாக்கப்படாம லிருக்கவேண்டு மென்பதை யுள் ளிட்டே யென்று கருதவேண்டி யிருக்கிறது. அவ்விதம் அசவுக்கியங்களு க்கிடமான வழக்கங்களில் அவர்கள் தலையிடாமல் அக்காலம் இருந்திருப் பார்களாயின் நமதிந்திய மாதர்களின் கற்பின் பெருமையும் கீழ்ப்படியும் குணமும் இருந்தவிடந் தெரியாமல் அன்றே அழிந்தொழிந்திருக்கு மெ ன்பது திண்ணம். எதை யிழந்தாலும் மானத்தையும் புகழையும் இழக்கக் கூடாதெனும் பிடிவாதத்தை நமது தேசத்தினர் எக்காலமும் உடையவர்க ளாதலின், சமயத்திற் கேற்றபடி ஒத்துணர்ந்து ஒழுகிவந்தார்கள். அத னால் அக்காலத்தினரின் நோக்கம் அவர்களுக்கு நேர்ந்த ஆபத்துகளினி ன்று உய்யவேண்டித் தமது காலத்திற்கேற்ற சில வழக்கங்களைக் கையாள வேண்டும் என்பதேயல்லாமல் தேசம் கொடுமை நீங்கி சுகத்துறையிற் கால்வைக்கும் நற்காலம் கிடைத்தபின்னரும் தாங்கள் இடையிற்கொண்ட புதியவழக்கங்களையே அநுசரிக்கவேண்டு மென்பதல்ல வென நம்மிந்து ஜனங்களின் மதப்பற்று, வழக்கப்பற்று முதலியவைகளைச் சின்னாள் பழகி வரும் அயல்நாட்டினர்களும் வெகு தெளிவாய் அறிந்துகொள்ளலாகும் எனின், நாமேயுணர்ந்துகொள்ளல் அரிதோ? அன்றன்று. எனினும், பழைய நாகரீகங்களைக் கைவிட்டுப் புதிய நாகரீகங்களை மேற்கொள்வதில் சிறிதும் துணிவற்றவர்களாய்த் தொன்றுதொட்டு அந்நிய தேசத்தாரானை வராலும் கருதப்படும் நாம் நமது மத்திய காலத்து முன்னோர் தங்கள் ஆப த்நிமித்தம் அநுசரித்துவந்த (இக்காலத்திற்கு ஒவ்வாத பல நஷ்டங்க ளை விளைவிக்கத்தக்கதாகிய) சில அத்தீயவழக்கங்களைக் கைவிடவும், அத ற்கு முந்திய ஆதிக்காலத்தில் அநுசரிக்கப்பட்டுவந்ததாகிய நல்வழக்கங்க ளைக் கைக்கொள்ளவும் துணிவில்லாமலே துன்பத்திற்குள்ளாகின்றோம்.

அசலாம்பிகையம்மாள்.

கொள்

புஸ்தக வரவு: ஸ்ரீராமாநுஜ சரித்திரம்: அடுத்தடவை ... மூலமுடு தலைப்பட்டனர்.
வரும்:—

பாரதீயம்மாள். அடுத்த தடவை விடுகதைகளவசியம் பிரவுடைந்ததாகவும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 20 DEC. 1901 MADRAS.

# மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.— ஔவையார்.

Vol. 3. | MADRAS: OCTOBER 1901. | No. 8.
புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901ௗ அக்டோபர்மீ. | இல 8

## ஓர் எச்சரிப்பு.

பண்டிதை அசலாம்பிகையம்மாள் எழுதியது:—

அறிஞர்களே!! நமது தேசத்தினர்க்குப் பழையகொள்கைகளில் பெரும் பற்றுள்ளதென்பதற்கு இதுவே பிரத்தியட்சப் பிரமாணமாகவும்கொள்ள லாம். ஆகவே இத்தகைய நம்முன்னோர் இன்றளவும் ஆபத்திற்காக அநுசரிக்கப்பட்ட அவ்வயுக்த வழக்கங்களையே பெரும்பான்மையும் உடை யவர்களாய் இருத்தலன்றி நன்மையானவழிகளில் துணிந்து பிரவேசிக்கக் கூடியவர்களாயிருக்கவில்லை. தற்காலம் பெண்களுக்குக் கல்விப்பயிற்சி செய்விப்பதென்னும் ஓர் விஷயம்மட்டில் அநேகமாய் நகரவாசங்களிலுள்ள எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டுவந்திருக்கிறது. இன்றும் சில நாட்டுப் புறங்களில் வசிப்பவர்கள் பலரும் கல்வியென்பது ஆங்கில நாட்டினின்றும் புதிதாய் நம் நாட்டிற்குக்கொண்டுவரப்பட்ட கப்பற் சரக்கென்பதாகவே எண்ணிப் பேர்சொல்லவும் துணியாதவர்களாயிருக்கின்றனர். அத்தகைய இடங்களில் உள்ளவர்களின் காலப்போக்கும் மனப்போக்கும் மிகவும் அநாகரீகமாகவும், வீண்வம்புக்கிடமாகவும், அடக்கமின்மைக்குவழியாக வும், வன்சொற்கள் பயிலவசதியாகவுமேயிருந்துவருகின்றன. அவ்விடங் களில் பெண்களின் நிலைமைமட்டில்தான் இத்தகையதென்று மதிக்கவேண் டாம். ஆடவர்களின் நிலைமை ஜீவனோபாயமொன்று எவ்வெவர்க்கும் உண்டாதலின் இவ்வளவு கேட்டிற்கிடமிராதெனினும், இதில் முக்கால் திட்டமாவது இருப்பார்கள். சிலவருடங்களுக்குமுன் பல குக்கிராமங்களி லிருந்த உயர்வகுப்பின் ஆடவர்களுக்கே எழுத்துநடை தெரியாது. ஆதலின் மகளிர் கல்வியென்னும் மொழியின் காற்றும் அடிக்கப்படாத வர்களாயிருப்பது புதுமையோ? ஜீவர்களுக்குள் கடவுளால் ஏற்றப்பட் டிருக்கும் இயற்கை அறிவென்னும் ஓர் தீபமானது செயற்கையறிவென்னும்

கல்வித்தூண்டுகோலைப் பெறுமெனின் நீண்டகாலம் ஒளிதழைத்துப் பிரகாசித்தல் எங்ஙனே சாத்தியம்? ஆதலின் நமது கல்வியறிவில்லாத மாதர்கள் பலர் பற்பல அநாகரீகத்துறைகளிலிறங்கிக் காலம் போக்குவதைப்பற்றி அவர்கள்மீது நாம் குறைகூறி யாதுபயன்? ஆடவர்களே யதற்குக் காரணர்களாதலின் அன்னோரே ஆடவிகளைக் கல்விப்பயிற்சிக்குள்ளாக்கவேண்டும். எனினும், நாம் மேலேகூறிய நகரப்பழக்கமில்லாத நாட்டுப்புறவாசிகளாய ஆடவர்கள் தங்கள் பெண்டிரை கல்விப்பயிற்சிக்குள்ளாக்குவதில் ஊக்கங்கொள்ளவும், பெண்கள் பயில்வதால் கெடுதிவிளையாதென்னும் நம்பிக்கையைப்பெறவும் இன்னும் பல நாட்கள் செல்லவேண்டிவருமன்றி விரைவில் எதிர்பார்க்கவுங்கூடியதன்று. இவர்கள் நிலைமை இதுவாக நகரவாசிகளாய்ப் பெண்களைக் கல்விபயிற்றுவிக்கும் நாகரீகத்தினர்களைப்பற்றிச் சிறிது கவனிப்போம். இந்த வகுப்பினர் தத்தம் சிறுமிகளைப் பெண்பாடசாலைகளுக்கனுப்பிவருவது உண்மையே. இதைத்தான் நாம் ஆரம்பத்தில் திருப்திக்கிடமாகவிருக்கும் பாகமாகக்குறிப்பிட்டது. இதனால் நமது பெண்கள் அதற்கு முந்தியிருந்ததைவிட எவ்வளவோ நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார்கள் என்பது திண்ணம். நகரவாசங்களிலும் பாடசாலைப் பயிற்சியில்லாத சிறுமிகள் பகலெல்லாம் பொழுதுபோக்க, (அம்மானை, பல்லாங்குழி, தட்டாமாலை முதலியவிளையாட்டுகளையும், அநாகரீகமான பழமொழிகள், பரிகாசப்பாட்டுகள், வசைமொழிப்பாடங்கள், சண்டை சச்சரவுகள், இறந்தோர்க்கு அழவேண்டிய வரிசைப்பிலாக்கணங்கள், புஷ்பவதியாதல், நிஷேகம்பெறுதல், கெர்ப்பமுறுதல், சீமந்தபும்ஸவன நடத்தல், மகவீன்றல், முதலிய எல்லா மேல் நடவடிக்கைகளுக்கும் வியாக்கியானம்செய்தல், முதலிய) உலகியலுக்குரிய மர்மங்கள் அனைத்தையுமே கருவிகளாகக்கொண்டு பழகிவருகின்றனர். இவைகளுமின்றி மாமிநாத்தி கொடுமை, மருகி, மாமிநாத்தியைச்செய்யும் கொடுமை, மகன், தாய் தாரம் முதலியவர்களைச் செய்யுங்கொடுமை முதலிய ஊரிலுள்ள ஒவ்வொருவீட்டு வர்த்தமானங்களும், தங்கள் தாய்மார்களாகிய வயதில் முதிர்ந்த பெண்டுகள் கூடிப்பேசும் பெரிய கமிட்டிகளில் கீழ்க்கமிட்டிகளாகவும் இச்சிறுமிகள் கூடிப்பேசிவருவார்கள். இத்தியாதி விஷயங்களிலேயே இவர்களுக்கு மனப்பயிற்சி உண்டாதலினால் பிஞ்சிற் பழுத்ததுபோன்று தங்கள் எண்ணங்களும், அபேட்சைகளும், வம்புவீண்களும், பருவத்திற்கேற்றபடி வளராமல் அதிசீக்கிரத்தில்முற்றி விவாக சிந்தனையே பெரிதாகி வெகு துரிதத்தில் குடும்பத் தலைவிகளுமாகித் தாய்மார்களுமாகிப் பாட்டிமார்களுமாகி நாலைப் பெற்றவளே நியாயாதிபதியென்று தன்னினத்து மாதர்களால் மதிக்கப்பட்டு பேதமையாளராய்க்



கழிவர். இதிற்சிலர் இவ்வாறு மிக்க இளமையிலேயே மங்கைப்பருவத்திற்குள்ள மனோபாவங்களை வலிதிற்பயின்று பயின்று அவயவ வளர்ச்சிகள் சரிவர நிரம்புதற்கு முந்தியே விஷயாபேட்சையென்னும் விலங்குக்குட்பட்டு அவ்வெண்ணமுதிர்ச்சியால் புஷ்பவதிகளாகி விரைவில் நாயகனையடைந்து கருவுற்று சரீரபலங் குன்றியிருப்பதும், உறுப்புக்களின் வளர்ச்சியின்மையுமே காரணமாக அகாலமரணங்களுக்கிரையாகின்றனர். தப்பித்தவறியிருந்தாலும் அவர்களுடைய சரீரப்பான்மையும் முகப்பொலிவும் மிக்க அருவருப்பை விளைக்கக்கூடியவைகளாகவேயிருப்பதுடன் அவர்கட்குப் பிறக்கும் சிசுக்களும் குறைமாதத்தில் வெளியான சிசுக்களைப்போலவும், காந்தியற்றதாகவும் சிரங்கு, சொறி, செவ்வாப்பு என்னும் வியாதிகளுள்ளதாகவும், பெற்றவளைத்தவிரப் பிறர் எடுக்க மனம் ஒவ்வாத நிலைமையிலும் இருக்கின்றன. முகலட்சணம் குறையக்குறைய அகலட்சணமுங் குறைதல் ஆன்றோர் கொள்கையும் அநுபவசித்தமுமாதலின், தேஜஸுங் குன்றக் குன்ற அறிவுங்குன்றித் தேயுமென்பதை நீங்களே உய்த்துணரலாகும். அறிவுகுன்றப்பெற்ற சீவர்களின் வாழ்க்கை எவ்வளவு விரஸமென்பதும் யான் விளம்பவேண்டியதில்லை.

---

## ஸிம்பலீன்.

---

(9-ம் அதிகாரம்-130வது பக்கத்தொடர்ச்சி.)

இவர்கள்போய் சிறிது நேரங் கழிந்தபின் இமொஜன் நித்திரையினின்றும் எழுந்து பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள்.

இமோஜன்:—ஆம்! ஆம்!! நான் மில்போர்ட்ஹேவனுக்குத்தான் போகவேண்டியது; அதற்கு வழியெங்கே? உனக்கு வந்தனமளிக்கின்றேன். அந்தப் புதரின் பக்கத்தில்தானிருக்கிறதா? தயவு செய்து எவ்வளவு தூரத்திலிருக்கிறதென்று சொல். கடவுளே! என்பேரில் இரக்கமில்லையா? இன்னும் ஆறு நாழிகை தூரம் போகவேண்டியிருக்குமா? இராத்திரி பூராவும் நடந்து களைத்துப்போனேன். சற்று நேரம் படுத்து உறங்கி களைப்பைத்தீர்த்துக் கொள்ளுகிறேன். நான் தனியாய்த் தானிருக்கிறேனா? தெய்வமே! என்பேரில் சிறிதேனும் இரங்கக்கூடாதா? ஆ! இதென்ன ஆச்சரியம்! புஷ்பங்கள் சிதறிக்கிடக்கின்றன!! ஐயோ! பயங்கரமாயிருக்கிறதே! என்னைக் காப்பாற்றவேணும். ஆ! ஆ!! புஷ்பங்களின் பக்கத்தில் ஒரு தலையற்ற மனிதனையல்லவோ காண்கிறேன். இதென்ன விந்தையாயிருக்-

கிறது? கடவுளின் செயலோ? அனாதியாக வந்த என்னை இவ்விதமா பரீக்ஷை செய்யவேணும்? இதைப்பார்த்தால் பயங்கரமாயிருக்கிறதே! நான் கனவுதான் காண்கிறேனோ! இவைகள் இங்கே வரவேண்டியகாரண மென்ன? நான் சற்று முன் குகையைக் காத்துக்கொண்டு அந்த மூன்று யோக்கியர்களுக்கும் சமையல்காரனாயல்லவோ இருந்தேன்; இப்பொழுது வேறே ஸ்திதியில் காண்கிறேனே. எல்லாம் மாயமாகத் தோன்றுகின்றன. இவைகளெல்லாம் கடவுளின் செயலே தவிர வேறன்று. சில சமயங்களில் நம்முடைய அபிப்பிராயங்கள் மாறுபடுவனபோல இப்பொழுது என் கண்களும் மயங்கிப்போய் விட்டனவோ! என் உடம்பெல்லாம் நடுங்குகின்றது; தெய்வமே! என்பேரில் இரக்கமில்லையா? சீ, நான் கனவுதான் காண்கிறேன் கண்ணைத்துடைத்துப் பார்ப்போம், என்று கண்ணைத்துடைக்கிறாள், உடனே பின்வருமாறு சொல்லுகிறாள்.

தலையற்றமனிதனா! பாஸ்துமஸுடைய உடைகளல்லவா! என் பிராணநாதா! உன்னை இவ்விதத்தில் காணவா இக்காட்டுக்குவந்தேன். உன்னுடைய கை, கால், துடைகளை நன்றாய் அறிவேன். அவைகளுக்கும் இவற்றிற்கும் கொஞ்சமாகிலும் வித்தியாசமில்லை. தெய்வத்துக்குச் சம்மாயிருக்கின்றனையே! தேவலோகத்தில்தான் கொலை நடந்ததோ! ஆ! என்ன பரிதாபம்!! நாதா! நீ இறந்து போய் விட்டனையோ? இவைகளைப்பார்க்கிறபோது நான் பூர்வ ஜென்மத்தில் எவ்வளவு பாவம் செய்திருக்கவேணும்? அவைகளல்லவா என்னை இந்த ஜென்மத்தில் தொடருகின்றன; அவைகளின் பலனை யல்லவோ இப்பொழுது அனுபவிக்கிறேன். பிஸானியோ! இவ்விதம் என்னை யேமாற்றி விட்டனையே. உன்னை ஒரு நல்ல விசுவாசமுள்ள வேலைக்காரனென்றல்லவா இது வரையில் நினைத்திருந்தேன். இக்காரியஞ் செய்ததற்காக எல்லாருடைய சாபங்களும் என்னுடைய சாபங்களும் உன்னை யடையட்டும். துரோகியாகிய அந்த க்ளோட்டனுடன் துர்ஆலோசனை செய்து என் நாதனை வெட்டி விட்டனையோ. இனியேலாகிலும் எழுதவாசிக்கத் தெரிகிறது நம்பிக்கைத் துரோகமென்று நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. கண்டமாத்திரத்தில் வெறுக்கத்தக்க பிஸானியோ கள்ள எழுத்துக்களை வைத்துக்கொண்டு மன்மதனுக்குச் சமமான என் நாதனை வெட்டி அவனை மோக்ஷலோகத்துக்கு அனுப்பிவிட்டான். என் நாதா! நீ போகும் போது என்னையும் அழைத்துக்கொண்டு போகக் கூடாதா? நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே. ஏ! பாஸ்துமஸ்! ஐயோ! உன் தலை யெங்கே? எங்கேபோய்விட்டது? ஐயோ! என்பேரில் இரக்கமில்லையா! எங்கே போய் விட்டது சொல். இவ்வளவு தூரம் கத்தியழுதும் என் வருத்தப்பட்டு அழுகிறாய் என்று எழுந்திருந்து ஒரு வார்த்தையாவது



சொல்லக்கூடாதா? என் பிராணநாதா! என் பேரில் இரக்கமில்லையா? உன் தலை யெங்கேபோய்விட்டது? பிஸானியோ உன்னைக் கொன்று தலையை எறிந்து விட்டானோ? இந்த செய்கையை பிஸானியோ எவ்விதம் செய்திருக்கக் கூடும்? ஏ பிஸானியோ! நீயா இக்காரியத்தைச் செய்தாய்! நீயும் க்ளோட்டனும் துர் ஆலோசனை செய்து இக்காரியத்தைக் செய்தீர்களோ? ஆ! ஆ!! வாஸ்தவந்தான். க்ளோட்டனுக்கு என்னிடத்திலுண்டான விரோதத்தினால் செய்தான். நீயோ பிரதிபலனைக் கருதி செய்து விட்டாய். நீ செய்ததைப்பற்றி நான் சந்தேகப்படவில்லை. நல்ல ஔஷதமென்று ஒரு விஷத்தைத் தந்து, அதினிமித்தம் என் பஞ்சேந்திரியங்களை யிழக்கச்செய்து பிரேதத்தைப்போலாக்கினவனல்லவோ! நீ தான் இக்காரியத்தைச் செய்தாய், சந்தேகமேயில்லை. ஏ! பாஸ்துமஸ்! உன்னை நினைக்கிறபோது என் வயிறு கொதிக்கிறதே! என் பிராணநாதா! நான் இனியென்ன செய்வேன்? எங்கே ஓடிப்போவேன்? ஐயோ!!

என்-கர்த்தாவே யென்துரையே தெய்வமே!

என்-கண்மணியைக்காணோமே.

என்-பர்த்தாவே யென்துரையே தெய்வமே!

என்-பாக்கியத்தைக் காணோமே

என்னை-யஞ்சு பிராயந்தனில் என்துரையே!

நான்-அறியாதநாளையிலே.

பத்துப் பிராயத்திலே என்துரையே!

நான் பால் குடிக்கும் நாளையிலே.

நீர்-ஆணழகர்மாலையிட்டு என்துரையே!

அழகாக வைத்திருந்தீர்.

ஐயோ!

நீர்-கட்டழகர்மாலையிட்டு என்துரையே!

என்னை காட்சியுடன் வைத்திருந்தீர்.

என்னை-காட்சிகுலைத்துவிட்டீர் என்துரையே!

நீர்-கர்த்தன்பதி தான் நடந்தீர்.

என்-மகிட்சி குலைத்துவிட்டீர் —; என்துரையே!

நீர்-மணல்மேலே போய்படுத்தீர்.

என்னை-கொண்ட அருமை யென்ன? என்துரையே!
நாம்-கோலம்வந்த நேர்த்தி யென்ன?
இப்போ-வேண்டார் நகைக்கவிட்டு என்துரையே!
நீர்-வைகுண்டம் போய் நடந்தீர்.

ஐயோ! என்ன செய்வேன்? கதியில்லையே யென்று புலம்பி தன் பர்த்தாவாகிய பாஸ்துமஸ் என்று நினைத்த க்ளோட்டன்மேல் மூர்ச்சையற்று விழுந்தாள்.

இப்படியிருக்க, ரோமாபுரி சக்கரவர்த்தி, தன்னுடைய ஸ்தானாதிபதியாகிய லூஷியஸ் என்பவனை பிரிட்டன் தேசத்துக்குச் சென்று அரசனிடத்தில் வழக்கப்படி கப்பம் வாங்கிக் கொண்டுவா, தராமற்போனால் யுத்தத்துக்குத் தயாராயிருக்கச் சொல்லவேணுமென்று அனுப்ப, அவன் பிரிட்டன் தேசத்துக்குப்போய் அரசனைக் கண்டவுடன் அவனைத் தக்கமரியாதையுடன் உபசரித்தார்கள். உடனே ஸிம்பலீனிடத்தில் கப்பப்பணத்தைக் கேட்க தன்னுடைய மனைவியுடையவும், க்ளோட்டனுடையவும் துர்ப் போதனையால் அவ்வரசன் கப்பம் தரமாட்டேனென்று சொன்னான். அப்பொழுது லூஷியஸ், இது வரையில் கொடுத்துவந்த கப்பப்பணத்தை இப்பொழுது தரமாட்டேனென்றதினால் நீங்கள் எங்களுடைய விரோதியானீர்கள் அதிக சீக்கிரத்தில் யுத்தம் நேரிடும், அதற்கு தயாராயிருங்களென்று சொல்லி; தன்னுடன் வந்த இராணுவதளகர்த்தன் முதலிய பரிவாரங்களுடன் தன்னூரை நோக்கிச் சென்றான். போகும்போது மில்போர்ட்ஹேவனில் இமொஜனிருந்த இடைத்தையடைந்தவுடன் பின் வருமாறு சொன்னான்.

லூஷியஸ் :—ஸிம்பலீன் கப்பம் தரமாட்டேனென்றான், சீக்கிரம் யுத்தத்துக்குத் தயார் செய்வோம், பிரிட்டன் தேசத்துக்கு கேடுகாலம் வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. ஆ! இதோ பார், ஒரு தலையற்ற பிரேதம் கீழேகிடக்கிறது. அது யாரென்று அறியேன். உடலைப்பார்த்த மாத்திரத்தில் நல்ல வம்சத்தில் பிறந்தவனாகத் தோன்றுகிறது. ஆ! ஆ! அதோ ஒரு பையனைப்பார்; அவனும் இறந்து போனானோ அல்லது அப்பிரேதத்தின்மேல் படுத்துத் தூங்குகிறானோ. நிச்சயமாய் அவன் இறந்து போயிருக்க வேண்டியது; ஏனென்றால் ஒருவனும் பிரேதத்தின்மேல் படுத்துத் தூங்கமாட்டான். அந்தப் பையனுடைய முகத்தைப்பார்த்தால் நம்முடைய சந்தேகம் பூராவும் நிவர்த்தியாகும், நாம் கிட்ட போய்ப்பார்ப்போம்.

**தளகர்த்தன்** :—அவன் உயிருடன்தானிருக்கிறான். இறந்துபோகவில்லை.



லூஷியஸ் :—அவனிடத்தில் நடந்த சங்கதியைக்கேட்டால் விவரமாயுரைப்பான். வாலிபனே! உன்னுடைய யோகக்ஷேமங்களைச்சொல், உனக்கு இந்த ஆபத்து எவ்விதம் நேர்ந்தது? உன்பக்கத்தில் தலையற்றிருப்பதுயார்? நீ அவன்மேல் சாய்ந்துகொண்டிருக்கவேண்டியகாரணம் என்ன? இந்தப்பயங்கரமான செய்கையைச் செய்தவன்யார்? உனக்கும் இவனுக்குமுண்டான சம்பந்தமென்ன? இது எவ்விதம் நேர்ந்தது? நீயார்? அவன் யார்? வாலிபனே! விவரமாய்ச் சொல்லவேண்டும்.

இமோஜன் :—நானோ பிரயோசனமற்றவன், அனாதி; இவன் என்னுடைய எஜமானன்; இவனை காட்டுமனிதர்கள் கொன்றுவிட்டார்கள். இவன் பிரிட்டன் தேசத்தில் பிறந்தவன் இவனுடைய பெருந்தன்மையை என்னால் விவரிக்க முடியாது. இவனைப்போல் வேறே எஜமானனை யெங்கே காணப்போகிறேன், இந்த ஈரேழுலோகத்தில் தேடினாலும் காணமுடியாது; எவ்விதம் உழைத்தால்தான் என்ன, நல்ல குணங்களையுடைத்தாயிருந்தால்தான் என்ன, இவனுக்குச் சமானமானவன் இவனே தவிர வேறே ஒருவரும் கிடையாது.

லூஷியஸ்.—ஐயோ! என்ன பரிதாபம்! வாலிபனே! அதிகமாய் வருத்தப்படுகின்றனையே, இவன் பெயர் என்ன தயவு செய்து சொல்.

இமோஜன்.—ரிச்சார்ட்டுஷாம்ப—(தனக்குள்) கடவுளே நான் பொய்யுரைத்ததற்காக என்னை மன்னிக்க வேணும்.

லூஷியஸ்.—சரிதான், உன் பெயர் என்ன?

இமோஜன்.—என் பெயர் பைடலி*

லூஷியஸ்.—உன் குணத்துக்குத் தகுந்த பெயர்தான். உன் விசுவாசமும் உன் பெயரும் நன்றாய்ப்பொருந்தியிருக்கின்றன. சில மனிதர்களுக்கு ‘பொய்சொல்லா மெய்யன்’ என்ற பெயருண்டு, ஆனால் அவர்களுக்கு ஒருநாளும் உண்மை சொல்லுகிற வழக்கமில்லை, சத்தியம் என்கிற வார்த்தையையும் கேட்டதேயில்லை. உன்னுடைய விசுவாசமும், பெயரும்நன்றாகப் பொருந்தியிருக்கின்றன. என்னிடத்தில் ஒரு வேலையில் அமர்ந்திருக்க உனக்கு இஷ்டம்தானா? உனக்கு நான் இவனைப்போல நல்ல எஜமானன் ஆகாமற்போனாலும் உன்னை அதிகப்பிரியத்துடன் வைத்துக்கொண்டிருக்கிறேன். எங்கள் சக்கரவர்த்தி உன்னை ஒருவேலையில் வைத்துக்கொள்ள எவ்வளவு ஆனந்தமாயிருப்பான். என்னுடன் வருகிறாயா?

* பைடலி என்றால் விசுவாசமுள்ளவன் என்று பொருள்

## மிஸ்ஸஸ் B. அட்சாம்பாள்.

மிஸ்ஸஸ் B. அட்சாம்பாள் "பெருமைபொருந்திய பெருமாட்டிகளின் சரித்திரம்" என்ற ஒரு புஸ்தகத்தை தெலுங்கில் எழுதியுள்ளார்கள். இந்த புஸ்தகம் யாவராலும் சந்தோஷத்துடனும், பிரியத்துடனும் வாங்கப்படும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் ஸ்திரீகளின் மனோசக்தியை விருத்திசெய்ய தக்க சமயம் நேரிட்டால் ஒரு இந்திய ஸ்திரீ செய்யக்கூடும் விஷயத்தை இது காண்பிக்கிறது. இந்தமாது கிருஷ்ணா ஜில்லாவில் ஒரு ஜமீனில் திவானாயிருந்தவருடைய குமாரத்தியாயும், மத்திய மாகாணத்தில் கவர்ன்மெண்டு உத்தியோகம் வகித்திருக்கிறவருடைய மனைவியாயுமிருக்கிறார்கள் இம்மாது தெலுங்கு பிராமணஜாதியைச் சேர்ந்தவர்கள். இந்தமாது எழுதியநடையும், விஷயங்களும், தெளிவாகவும், இனிமையாகவும், கற்றோர் புகழத்தக்கதாயுமிருக்கின்றன. இந்த அம்மாள் தமது சகோதரிகளுக்கு உபயோகமாகும்படியாய் கல்வியின் மிக்க விருப்பத்தாலுமே இப்புஸ்தகத்தை வெளியிட்டதாகத் தெரிகிறது. தமது "குழந்தை" என்று இதைக் கூப்பிடுவதுடன் இதை அவர் எவ்விதம் எழுத ஆரம்பித்தாரென்பதற்கு ஒரு வேடிக்கையானகதையும் எழுதுகிறார்கள். தமது அருமையான ஒரே குழந்தையை இழந்தமையால் இந்தமாது மிக்க விசனத்தில் ஆழ்ந்திருக்கும்பொழுது இப்புஸ்தகத்தை எழுதினார்கள். அக்காலத்தில் தமது சகோதரர் வந்து இதேவிதமாக விசனத்திலிருந்த ஒரு கவி இரண்டு புஸ்தகங்களை இயற்றி ஒன்றுக்கு எனது "குமாரன்" என்றும், மற்றொன்றுக்கு எனது "குமாரத்தி" யென்றும் பெயரிட்டாரெனச் சொன்னாராம். இந்த மாது அக்கவியைப்போல் எனக்கு கல்வியறிவில்லாவிடினும், அவர் தமது அருமையான குழந்தைகளை யிழந்த காரணத்தினால் புஸ்தகங்களெழுதினமாதிரியே நானும் இப்புஸ்தகம் எழுத ஆரம்பித்தேன் என்று சொல்லுகிறார்கள்.

இப்புஸ்தகம் தமது பிரியமுள்ள கணவருக்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. "அவர் எனக்கு தைரியப் படுத்தாமலும், சுதந்திரம் அளிக்காமலுமிருந்தால் நான் இந்த புஸ்தகத்தை எழுதியிருக்கக்கூடுமா"? எனச் சொல்லுகிறார்கள். தமக்கு வேண்டிய விஷயங்களைச் சொல்லிக்கொடுத்து உதவி புரிந்த தமது சகோதரரையும் குறிப்பிடுகிறார்கள். இப்பூமியிலுள்ள ஸ்திரீகளுக்கு அவரவர்களுடைய கணவர்களும், சகோதரர்களும் இவ்வித உதவிபுரிந்து வந்தால் அவர்கள் கல்வியில் தேர்ச்சி சீக்கிரமடையலாம். கார்கி, மைத்திரேயி இவர்களைப்போல் வேதம் முதலியவைகளைப்



படித்துதத்துவ வாதம்புரிய வல்லமையுள்ளவர்களாயும், மேன்மையாய் அரசு புரிந்துவந்த அஹல்யாபாய், பவானி முதலியவர்களைப்போல் ஆளுந்திறமையுள்ளவர்களாயும், மங்கா, மொல்லா என்ற கவிமாதர்களைப்போல் கவித்துவமுள்ளவர்களாயும், ஜீஜாபாய் முதலியவர்களைப்போல் சிறந்ததாய்மார்களாகவுமிருப்பார்கள்.



என்பதற்குச் சந்தேகமுண்டோ? இது இவ்விதமிருக்குமானால் முன்காலத்தைப்போலவே எல்லா தேசத்தாராலும் இந்தியா கண்ணியப்படுத்தப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆ! அந்த மாதின் வார்த்தை உண்மையாக வரக்கடவது. இந்த மாதுக்கு ஹிந்தி, மராட்டி, குஜராட்டி, பெங்காளி, சம்ஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய பாஷைகள் நன்றாகத் தெரியும். மேற்கூறிய பாஷைகளில் பிரசுரித்திருந்த கிரந்தங்களைப் பரிசோதித்து தமக்கு வேண்டியவிஷயங்களைத் திரட்டியதானது இந்த மாதின்கல்விச்சிறப்பை காண்பிக்கின்றதல்லவா? இந்தமாது முதலில் சிற்சில பாகங்களாக ராவுபஹதூர் கே. வீரேசலிங்கம்பந்துலு அவர்களால் பிரசுரிக்கப்படுகிற "சிந்தாமணி" என்ற மாதாந்திர தெலுங்கு பத்திரிகையில் பிரசுரித்துவந்து பின்பு புஸ்தகரூபமாக வெளியிட்டார்கள். இந்த புஸ்தகத்தை இவர் பிரசுரித்ததற்கு முக்கியமாய் மூன்று காரணங்களுள: அவையாவன
1-ஸ்திரீகள் மூடர்களென்றும், புத்தியில்லாதவர்களென்றும், கெடுதிக்கெல்லாம் குடியிருப்பென்றும் சொல்லும்படியான அபிப்பிராயத்தை மாற்றவும், முன்காலத்தில் ஸ்திரீகள் தைரியமுடையவர்களென்றும், கல்வியிற்

நேர்ச்சி உடையவர்களென்றும், ஞானமுடையவர்களென்றும், தேசத்தை ஆளுந்திறமை உள்ளவர்களென்றும், எல்லா நன்மையுங்கூடி தங்கள் சகோதரி முதலியவர்களுக்கு நன்மைவிளைவிக்கக்கூடியவர்களென்றும் சொல்லுகிறார்கள். 2. கல்வி ஸ்திரீகளைக்கெடுத்து, வீட்டுவேலைக்கு தகுந்தவர்களாயில்லாமலிருக்கும்படிசெய்கிறதென்ற தப்பெண்ணத்தைமறுக்கவும், அது தீங்குசெய்வதற்குப் பதிலாக நன்மையை செய்துவருகிறதென்றும் சொல்லுகிறார்கள். 3. இந்திய ஸ்திரீகளுக்கு படிப்பினைக்காக ஒரு புஸ்தகமிருக்கவும், நாவல்கள், கதைகள் முதலியவைகளுக்குப்பதிலாக, கற்பிற் சிறந்ததும் தங்கள் தேசத்திற்கு பரோபகார சிந்தையுள்ளதும் கல்விற்சிறந்ததுமான தங்கள் சகோதரிகளின் சரித்திரமே மிக நல்லதென்றுதான் நினைத்ததாகவும் சொல்லுகிறார்கள்.

இந்த மாது இதுடன் இப்புஸ்தகத்தை முடிக்கவில்லை. இதேவிதமாக இன்னுமிரண்டு புஸ்தகங்களையும் எழுத உத்தேசித்திருக்கிறார்களாம். இந்த முதல் புஸ்தகத்தில் 1000 வருடத்திற்குள்ளாக சரித்திர சம்பந்தமாய் கீர்த்திபெற்ற ஸ்திரீகளின் சரித்திரங்களடங்கியிருக்கின்றன. இரண்டாவது புஸ்தகத்தில் வேதசம்பந்தமானதும் புராணசம்பந்தமானதுமான காலத்திலுள்ள ஸ்திரீகளின் சரித்திரம் எழுதப்படுமாம். மூன்றாவது புஸ்தகத்தில் ஆங்கில தேசத்திலும் இன்னுமிதர தேசங்களிலுமுள்ள மேன்மையான ஸ்திரீகளின் சரித்திரம் எழுதப்படுமாம். இந்த மாது சிரமப்பட்டு தமது சகோதரிகளுக்கு கல்விபுகட்டவேண்டுமென எண்ணத்துடன் இப்புஸ்தகம் எழுதியதற்காகவும், இந்த அம்மாளுடைய ஊக்கமும் விடாமுயற்சியும் மேன்மேலும் விருத்தியாகி நாம் மேலேகுறித்த இரண்டு புஸ்தகங்களை சீக்கிரத்தில் பிரசுரிக்கவும், கடவுள் இந்த அம்மாளுக்கு தீர்க்க ஆயுளையும் தேக சௌக்கியத்தையும் அளிப்பாராக.

---

## புற்புலத்து நெட்டிலிங்கமையர் வைபவம்.

(130-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வித மாதுசிரோமணியை பெண்சாதியாகப்படைத்த நெட்டிலிங்கமையர் பாக்கியத்துக்கு சொல்லவும்வேண்டுமோ. 19-வது வயதில் அவருக்கு 6 ரூபாய் வேலையாயிற்று. 25-வயதுக்குள் 25 ரூபாவரையில் உயர்ந்து அநேகவிடங்களுக்கு மாற்றலுமாயிற்று. தனக்குக் கிடைத்த இவ்வளவு சம்பத்துக்கும் தனது சம்சாரத்தின் சாதகதசையே காரணமாக நெட்டிலிங்கமையர் கூறுவார். இவர்களுடைய ஸ்நேகத்துக்கு ஒரு பலமான கட்டுபோல் தனையத்தின் வயிற்றில் குணநிதி என்ற ஒரு குமாரனும் பிறந்தான். நற்குண நற்செய்கையுள்ள பத்தினியின்பாக்கியங்கள் யெவைகளுண்டோ அவ்வளவும் நெட்டிலிங்கமையர் அனுபவித்தார். அவைகள் யாவை என்று நமது நண்பர்கள்கேட்கலாம். சுருக்கிச்சொல்ல நெட்டிலிங்கமையர் 6 ரூபாயில் வருத்தப்படுங்காலத்திலும் அப்புறம் 25 ரூபாயில் ஸந்தோஷப்படுங்காலத்திலும் அவருடைய மனதுக்கிசைந்து தனையம் அவருடைய கஷ்டத்தைத் தன் கஷ்டமாகவும், அவருடைய சுகத்தை தனது சுகமாகவும்பாவிப்பாள். ஒரு விஷயத்திலும் தனது நாதனை விரோதித்து ஒரு பேச்சும்பேசாள். வீட்டில் தனக்குப் பெரியவர்கள் யார் யார் உண்டோ அத்தனை பெயர்களுக்கும் அடிமைபோல் அடங்கிநடந்து அவர்கள் மனங்கோணாமல் வேலைசெய்துவருவாள். அதிக வேலைதொந்திரவாலோ வேறு எவ்விதகாரணத்தாலோ தனது புருஷன் காரணமில்லாமல் கோபித்துக்கொண்டபோதிலும் முகத்தினாலாவது அல்லது பேச்சினாலாவது தானும் கடுந்ததாக காட்டாள். அந்தரங்கத்திலும் வருத்தமுறாள். வேலைக்காரிகளிடம் அன்பும் ஆதரவுமாயிருப்பாள். ஒருநாள் வேலைக்காரி வரத்தவறினால், என்னமோ ஏதோ அவளும் நம்மைப்போல் ஒரு பெண்தானே காலவலித்ததோ தலைவலித்ததோ என்றெண்ணி பத்து பாத்திரம் அவ்வளவையும் தேய்ப்பாள். அவள் மறுபடி வரும்போது ஏன் அன்றையதினம் வரவில்லை என்று கடுந்தாவது மற்றவிதமாயாவது பேசாள். வேலைக்காரிகள் பெரும்பான்மை ஏழைகளென்று தன் வீட்டுவேலைக்காரிக்கு அடிக்கடி வயிறுகுளிர அமுதளிப்பாள். கூலியைப்பிடியாள். எப்பொழுதுமே நாலு காசு அதிகமாகவே கொடுப்பாளேயல்லாமல் அன்றுவரவில்லை இன்றுவரவில்லை என்றுசொல்லி கூலியைப்பிடிக்கமாட்டாள். தனையத்தின் வீட்டிற்கு வரும் வேலைக்காரி ஒவ்வொருவளும் 'இன்னும் 4 மாதம் இந்த அம்மணியிடம் வேலைசெய்யும் பாக்யமில்லாமற்போயிற்றே. எஜமானனுக்கு சேலத்துக்குமாற்றலாயிற்றே நானும் அங்குவருகிறேன். என்னை அழைத்துப் போகிறீர்களா' என்று அன்பாய்கேட்பார்களேயன்றி "சீ இந்த அம்மாள் பெரும்முசுடு எனிவள் வாயால் வார்த்தைகேட்டு உழைக்கவேண்டும்' என்ற எண்ணம் இருக்கவேயிருக்காது. கிருஹ கிருத்யத்தில் இவ்வளவு ஸமர்த்தி தனையம், அதேமாதிரி புருஷனிடம் நடந்துகொள்ளுவதிலும் அவர் ஸந்தோஷமாய் தன்னிடம் ஏதாவது பேசவந்தால் 1000 வேலையிருந்தபோதிலும் அலட்சியம்செய்துவிட்டு அவரைவிட அதிக ஸந்தோஷத்துடன் எதிர்நின்று சமத்காரமாக பேசி அவர் மனதை குதூகலம்பண்ணிவைப்பாள். இரவு எக்காலமானபோதிலும் விழித்திருந்து, அதிக வேலைசெய்து புருஷன் களைத்து படுக்கப்போகும் சமயம்பார்த்து பொழுது புகுந்து ஒரு நாழிகைக்கெல்லாம் தாங்கள் சாப்பிட்டீர்கள் அப்புறம் பசிக்குமோ என்னமோ என்று கொஞ்சம் ரவை உப்புமா பண்

ணிவைத்திருக்கிறேன். இதை சாப்பிட்டுவிட்டு தூங்கினால் இளைப்புக்கு அனுகூலமாயிருக்கும் என்று எடுத்துக்கொடுப்பாள். தனது புருஷன் தேக சௌக்கியத்துக்கு எப்படி எப்படி நடந்துகொள்ளவேண்டுமோ அப்படி எல்லாம் நடந்துகொள்வாள். புருஷனுக்கு கொஞ்சம் ஜலதோஷமாயிருந்தால் அதை அவர் சொல்லும் முன்னறிந்து மிளகு தொகையல் செய்து வைப்பாள். சாப்பிடும்போது புருஷனதைக்கண்டு மகிழ்ந்து "எப்படியடி உனக்குத்தெரிந்தது எனக்கு உடம்பு சரியில்லை, மிளகு துகையல் பண்ணவேண்டும்" என்றுகேட்டால் விடியற்காலமே படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்போது நான்கு தும்பல் தும்பினீர்கள் அதனால் உடம்பு சௌக்கியமில்லை என்று எண்ணி ஸ்நானத்திற்கு வெந்நீர்போட்டு சமையலிலேயே மிளகு துகையலும் தூதுவளங்காய் பொரித்த குழம்பும் பண்ணினேன் என்று சிரிப்புமுகமாய் சொல்லுவாள். இதைக்கேட்ட புருஷன் மனதிற்குள் வெகு ஸந்தோஷமடைந்து வெளியிலும் "நீ வெகு கெட்டிக்காரி" என்று சொல்லுவார். எத்தனைவித வேலையிருந்தபோதிலும் தனது குழந்தையை அரைநாழியாவது அழவிடமாட்டாள். எந்தெந்த சமயத்தில் இரவில் விழித்திருந்து அதுக்கு பால்கொடுக்கவேண்டுமோ அப்போதெல்லாம் கொடுப்பாள். குழந்தைசெய்யும் அஸஹ்யத்தை பிறர்பார்க்குமுன் எடுத்து துணிகளை அடிக்கடி கசக்கி உணர்த்திவிடுவாள். ஸதா தன் குழந்தையிடம் அவளுக்கு அதிக கவலையிருந்தும் தான் செய்கிற சுச்ரூஷை குழந்தைக்கு அதிகமாகவிருந்தும் பார்ப்பவர்களுக்கு மாத்திரம் தனேதயம் தன் குழந்தையை விரலாலேகூட தொடுகிறதில்லைஎன்று தோன்றும். குழந்தை நன்றாய் ஸ்நானம்செய்து விளையாடுகிறகாலம் பார்த்திருந்து அதை எடுத்துவந்து தன் மாமனாரிடமாவது புருஷனிடமாவது விடுவாள். அப்பொழுது அவர்களதைக்கண்டு ஆனந்தித்து கீழேவிட மனமில்லாதவர்களாகவிருப்பார்கள்.

ஸர்வவிதத்திலும் தனேதயம் உத்தமி. அவளால் அவள் புருஷன் அடைந்தசௌக்கியம் அபரிமிதம். அவள்காலம்முடிய நெட்டிலிங்கமையர் வீடு குபேரன் மனைபோல் விளங்கிற்று. எங்குபார்த்தாலும் ஸாமான்கள் குவியல் குவியலாக குவித்திருக்கும் அரிசி, பருப்பு, உளுந்து முதலிய நவதானியங்கள் சாக்கு சாக்காய் அடுக்கப்பட்டிருக்கும். மிளகாய், தனியா, மிளகு, சீரகம் சால் சாலாக வாரிவைக்கப்பட்டிருக்கும்; பழக்குலைகள், மேட்டில்கட்டி தூக்கப்பட்டு மிதிபடும். எப்பொழுதும் வீட்டில் 4 பசு, 2 எருமை கறவை ஸதா இருந்துகொண்டிருக்கும். காலமே தூங்கி எழுந்து நெட்டிலிங்கமையர் வீதித்திண்ணையில் வந்து உட்கார்ந்தால் 100 பெயர்கள் கிராம உத்தியோகஸ்தர்களும் மிராஸ்தாரர்களும் பண முடிப்பை



இரகஸ்யமாய் இடுப்பில் கட்டிக்கொண்டு 'சாமி' 'சாமி' என்று ஐயரை முதலில், செருப்பை தூரகழற்றிவிட்டுவந்து, வணங்குவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஐயரிடம் நன்மைபெற்றவர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஐயர் அனுகூலமாயும் அன்பாயும் பேசி அவர்களிடம் வாங்க வேண்டியதை வாங்கிக்கொண்டு அனுப்புவார். பட்டிக்காட்டு சீமைகளிலிருந்து குடம் குடமாய் நெய் வந்துகொண்டிருக்கும். நெட்டிலிங்கமையர் வீட்டில் என்னகுறைவு. தனேதயம் மகா உத்தமியாகையால் வரும் ஸாமான்கள் ஒன்றாவது நிற்காமல் எல்லாருக்கும் கொடுப்பாள். நெட்டிலிங்கமையருடைய அபாரஸம்ஸாரத்திற்கு இவ்வளவு வரவும்வேண்டியிருந்தது. வந்த அவ்வளவையும் சரியாய் செலவிட தனேதயம் கையும் மனமும் ஒத்திருந்தது. இவள் காலத்தில் அநேக ஜில்லாக்கள்போய் உத்தியோகம்பண்ணி அநேக திரவியமும்தேடி நெட்டிலிங்கமையர் புற்புலத்தில் தனது முன்னோர்களால் உடையான்களுக்கு இழக்கப்பட்டிருந்த 40 50 காணிகளை கொஞ்சங்கொஞ்சமாய் ஒத்தி கிரயம்; இந்த விதங்களாக திருப்பியும்விட்டார். தனேதயத்தின் வயிற்றில் குணநிதி என்று ஒரு குழந்தை பிறந்ததாகச்சொன்னோமே. நெட்டிலிங்கமையர் 22-வது வயதில் இப்புத்திரன் ஜனித்தான். அதற்கு 2 வருஷத்திற்கெல்லாம் இவர்களுக்கு ஒரு பெண்குழந்தையும்பிறந்தது. நெட்டிலிங்கமையர் 25-வது வயதில் சாமுவையர் தான் ஸர்கார்வேலையில் பென்ஷன் வாங்கிக்கொண்டு தன் கையிலிருந்த சில பொருளுடன் நெட்டிலிங்கமையர் வீடுவந்துசேர்ந்தார். இவருக்கு வேறுஇடமும் உண்டோ. நெட்டிலிங்கமையரிடம் இவருக்குப் புத்திரவாஞ்சல்யம் என்பது நமது நண்பர்களுக்குத்தெரியும். நடந்தவரையில் நடக்கட்டும், நம்மால் தள்ளாதகாலத்தில் நமக்கு கதி நெட்டிலிங்கமும் தனேதயமும்தான் என்று எண்ணினதுமாத்திரமல்ல. இவர்களும் வயதாய்விட்டது, சீக்கிரம் பென்ஷன் வாங்கிக்கொண்டு வந்துவிடுங்கள் என்று அடிக்கடி சாமுவையரையும் தொந்தரைசெய்துவந்தார்கள். ஆகச்சே சாமுவையரும் அவருடைய சம்சாரமாகிய நெட்டிலிங்கத்தை எடுத்து வளர்த்த அக்காளும் பரமசிவன் பார்வதிபோல் தங்கள் கையிலிருந்த கொஞ்சத்தை எடுத்துக்கொண்டு தங்கள் அபிமானபுத்திரன் வீடுவந்துசேர்ந்தார்கள். இது நெட்டிலிங்கமையர் 25-வது வயதில்.

25-வது வயதில் நெட்டிலிங்கமையரிருந்த ஸதிதி எல்லாரும்பார்த்து புகழத்தகுந்ததாக இருந்தது. இதற்குள் அவர் 25 ரூபாய் சம்பளமுள்ள ஸர்க்கார் வேலையில் வந்திருந்தார். அக்காலத்திய 25 ரூபாய் என்றால் குறைந்தபட்சம் இக்காலத்திய 250 ரூபாய் வேலைக்குச் சமானம். 40, 50 காணி தன் சொந்தமாக புற்புலத்தில் வாங்கிவிட்டார். சாமுவய்யரும்

அவர் சம்சாரமும் பென்ஷனுடன் நெட்டிலிங்கமையரிடம் வந்துவிட்டார்கள். குணநிதியின் படிப்பு முதலியவைகளைப்பற்றி நெட்டிலிங்கமையர் கவலைப்படவே வேண்டியதில்லை. 3-வயது குழந்தையைப் பருவத்திலேயே குணநிதி சாமுவய்யர் அபிமானப்பேரனான். நெட்டிலிங்கமையர் 27-வது வயதில் அவருக்கு பெருஞ்சீரகவல்லி ஜில்லா காரிநாட்டில் 60 ரூபாய் சம்பளமுள்ள நாட்டுகார்பாரிவேலையாயிற்று. இவ்வளவு சம்பளத்தை ஒரு மாதத்தில் சாமுவய்யர் தான் 30-வருஷ உத்தியோகம்பண்ணின ஒரு மாதத்திலாவது கண்டதேயில்லை. தான் எடுத்து வளர்த்து வித்தை புகட்டின பிள்ளை இவ்வளவு சிறு பருவத்தில் 60 ரூபாய் சம்பளம் வாங்கினதைக் கண்ட அவர் மனம் பூரித்தது. எல்லாரும் காரிநாட்டின் பிரதான பட்டணமாகிய அடம்பன்கோவில் என்ற ஊரில்வந்து அகண்டகாவேரி ஸ்நானஸௌக்கியம் முதலியவைகளை முற்றிலும் அனுபவித்துக்கொண்டு ஆனந்தமாய் வாழ்ந்திருந்தார்கள். இம்மாதிரி 3, 4, வருஷஞ்சென்றது. குணநிதி 7, 8,-வயது பையன்; நெட்டிலிங்கமய்யருக்கு வயது 30; தனதையம் ஏறக்குறைய வயது 26 ; இந்த பாலகுடும்பத்தின் பாக்யம் குபேரன்-பாக்யமாயிருந்தது. இவ்வளவுக்கும் காரணம் தனதையத்தின் மேலானகுணம் ; நெட்டிலிங்கமையர் வம்சத்தின் லட்சுமி தேவதையாக விளங்கிவந்தாள் என்று தனதையத்தை பார்க்கிறவர்கள் சொல்லுவார்கள். எல்லாருக்கும் அவ்வளவு நல்லவளாகவும் ஒவ்வொருவரிடமும் அவ்வளவு அபிமானமுள்ளவளாகவும் விளங்கிவந்தாள்.

மாதர் மித்திரன்.

---

## சென்னை விக்டோரியா ஞாபகச் சின்னநிதி.

---

ஆறுமாதத்திற்கு முன், சென்னைக் கவர்னரின் மனைவியாராகிய H. E. லேடி ஆம்தில் அவர்கள், சென்னையிலுள்ள மாதர்கள் தங்களாலியன்றவளவு "விக்டோரியா ஞாபகச்சின்னத்திற்கு" திரவியசகாயம் புரிய வேண்டுவது சென்னை ராஜதானியிலுள்ள பொதுஜனங்களின் அபிப்பிராயமென வுணர்ந்து, ஒரு விளம்பரம் பிரசுரித்தது யாவருக்குந் தெரிந்தவிஷயமே. காலஞ்சென்ற மகாராணியாரவர்கள் இந்திய ஸ்திரீகளுக்கு வைத்திய விஷயமாக உதவிபுரியவேண்டுமென முக்கியகருத்துக் கொண்டிருந்ததுபோல, இப்பொழுது வசூல்செய்யப்பட்ட பணத்தைவைத்தியத்திற்கே செலவு செய்யவேண்டுமென்று லேடி ஆம்தில் அவர்கள் தெரிவித்தார்கள். இக்காரியம் நிறைவேறுவதற்காக "சென்னை டப்ரின்பெறமாட்டியின் தருமநிதியார்" விக்டோரியா காஸ்ட் அண்டு கோஷா ஆஸ்பத்திரிக்கு உதவி



புரிந்து வருகிறபடியால் அந்நிதிக்கே இந்த திரவியம் கொடுக்கப்படவேண்டுமென்றும், மீதியுள்ளதை தரும வைத்திய சாலைகளிலும், வித்தியா சாலைகளிலும், மருத்துவம் கற்றுக்கொள்ளுகிற பெண்களுக்குக் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள்.

இவ்விதம் நமது லேடி ஆம்தில் அவர்களின் வேண்டுகோளுக்கு ஐரோப்பிய, சுதேசமாதர்கள் இணங்கி தங்களால் கூடியவளவு தாங்கள் தாங்கள் இருக்குமிடங்களிலேயே திரவியசேகரம் செய்வதாக ஏற்பாடு செய்து ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்கள். லேடி ஆம்தில் அவர்களே சென்னை ராஜதானியில் முக்கியமான கௌரவமுள்ள சுதேசமாதர்களுக்கு தாம் கோறியவிஷயத்தையெடுத்துக்காட்டி அவர்களையும், இக்கமிட்டியில் சேர்ந்து உழைக்கவேண்டுமென்று கடிதங்கள் எழுதினார்கள்.

இவ்விதமாக எழுதிய கடிதங்களுக்கு, உற்சாகத்துடனும், பரோபகாரசிந்தையுடனும் பலவிடங்களிலுள்ள மாதர்கள் இவ்வேற்பாட்டை முழுமனதுடன் ஆமோதித்து அப்படியே உழைப்பதாக பதில் விடுத்தார்கள். இந்தக் கடிதங்களில் சிலவற்றை பிரசுரிக்கும்படி நமக்கு லேடி ஆம்தில் அவர்கள் அன்புடன் மனமுவந்து அனுப்பியிருக்கிறார்கள் :— அவைகளில் சில வருமாறு.

1. மைசூர் மகாராணியார், "கான்வசர்ராணி லேடி ஹார்மன்சிங் அவர்கள் ஊக்கத்துடன் ஏற்படுத்திய நிதிக்கு திரவிய சகாயம் செய்வதாக வாக்களித்திருக்கிறேன். ஆனாலும், "விக்டோரியா காஸ்ட் அண்டு கோஷா ஆஸ்பத்திரியின்" உபயோகத்தை விருத்திசெய்வதே அவர்களுடைய முக்கிய கருத்தாகையால், நீங்கள் செய்யும் பிரயத்தனத்துடன் நானும் என்னாலான மட்டும் உதவி புரிவதற்கு மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆகையால் ஸ்திரீகளின் "ஞாபக நிதிக்கு" மிக மனமகிழ்ந்து 1000 ரூபா கையொப்பமிடுகிறேன்" என்று எழுதியிருக்கிறார்கள்.

2. இராணி சிட்டி ஜனகைய கஜபதி அவர்கள் "நீண்டகாலம் பெருமையுடனும், ஜனங்கள்மீது விசுவாசத்துடனும் அரசு புரிந்து வந்த நமது மகாராணியாரின் ஆளுகை யாவராலும் மெச்சத் தகுந்ததே. எனது தேசத்து ஸ்திரீகளின் கஷ்டத்தை நீக்க "கோஷா ஆஸ்பத்திரிகளை" ஏற்படுத்துவது நலமே. மகாராணியாரவர்கள் இவ்விஷயத்தில் அதிக கஷ்டத்தை எடுத்துக் கொண்டிருந்ததும் யாவருக்குந் தெரியும். இவர்களுடைய ஞாபகார்த்தமாக இப்படிச்செய்வது மிக்கப் புகழத்தக்கதே. இந்திய ஸ்திரீகளிடத்தில் தங்களுக்கிருக்கும் மிகுந்த ஊக்கத்தையும், பிரியத்தையும் இது காண்பிக்கிறது. நான் அடிக்

கடி இந்த ஆஸ்பத்திரியைக் குறித்தும், இதனாலுண்டாய்வரும் நன்மைகளைக் குறித்தும் பத்திரிகைகளில் படித்தும், கேட்டுமிருக்கிறேன். எனது கிரகத்தில் வசூலான 278 ரூபாயையும் எனது கையொப்பத்தொகை 2000 ரூபாயையும் மிகக் மகிழ்ச்சியுடன் அனுப்புகிறேன்" என்று எழுதியுள்ளார்கள்.

3. பர்லகுமுடி இராஜாவின் மனைவியாரும், புத்திரியும் நாலாயிரம் ரூபாய் அனுப்பி இந்திய ஸ்திரீகளுக்கு "லேடி ஆம்தில் அவர்கள்" உதவி புரிய முன்வந்ததற்காக தங்கள் நன்றியறிதலையும் தெரிவித்தார்கள்.

4. ஜெயபூர் மகாராணியாரவர்கள் மிக்க பிரீதியுடன் 2400 ரூபாய் அனுப்பினார்கள்.

5. மண்டாலா இராஜா அவர்கள் தமது மனைவியார் பேர்மூலமாக 2000 ரூபாய் அனுப்பினார்கள்.

6. குருப்பன் இராணி பத்மதேவி அம்மாள் "நமது மகாராணியாரின் சகல நற்குணங்களும் அவர்களது பிரஜைகளால் புகழப்பட்டவைகளே. தமது பிரஜைகள் விசனப்படும்போதும், கஷ்டப்படும்போதும் மிக்க அனுதாபத்துடன் அவர்களுக்கு மகாராணியாரவர்கள் கடிதங்களெழுதியது யாவருக்குந்தெரியும். இதனால் பிரஜைகள் அவர்களை தங்கள் தாயார்களென்றும் அழைத்தார்கள். இந்த ஆஸ்பத்திரி தருமத்தைவிட மேலான தர்மம் வேறொன்றுங்கிடையாது" என்று எழுதியிருக்கிறார்கள்.

லேடி ஆம்தில அவர்களுக்குவந்த கடிதங்களோ அளவற்றன. அவைகளையெல்லாம் பிரசுரிப்பதானால் எமது பத்திரிகை இடங்கொடாதென விடுத்து அவர்கள் உதவிபுரிந்த தொகைகளைமாத்திரம் கீழே எழுதுகின்றோம். போபிலி மகாராணியார் 2000 ரூபாயும், ஆரணி ஜாகிரதாரின் மனைவியார், கன்னனூர் ராஜாவின் மனைவியார், கள்ளிக்கோட் ராணியார், பங்கனபல்லி பீகம் அவர்கள், கோபால்பூர் இராணியார், விஜயநகரம் மகாராணியார் அவர்கள், பரப்பநாடு ராணியார் முதலானவர்களும் கையொப்பஞ் செய்து உதவிபுரிந்தார்கள்.

இவ்விஷயமாய் சுதேசஸ்திரீகளும் கமிட்டிகளேற்படுத்தி, திரவியவசூல்செய்ய முன்வந்தது மிகவும் கவனிக்கத்தகுந்ததே. கனம் ஜட்ஜ் சர் வே. பாஷியம் ஐயங்கார் அவர்கள் மூத்த குமாரத்தியாகிய ஸ்ரீமதி. சீதம்மாள் அவர்கள் தமது கிரகத்தில் ஸ்திரீகள் கூடிய சபையில் இவ்விஷயமாக ஒரு உபந்நியாசஞ்செய்ததை நமது ஏப்பிரல் மாதபத்திரிகையில் அநேகர் கண்டிருக்கலாம். ஆஸ்கா கஞ்சம் முதலிய விடங்களிலும் சுதேசஸ்திரீகள் சபைகூடி பேசினார்கள்.



ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் உபயோகமான ஆஸ்பத்திரிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அநேக ஜில்லாக்களில் வசூல் செய்யப்பட்ட பணத் தின் ஒரு பாகம் விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரி தர்மநிதிக்கு அனுப்ப பட்டது; மற்றவை லேடி ஆம்திலின் அனுமதியின் மேல் அங்கங்குள்ள ஆஸ்பத்திரியின் உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளபட்டது. பெல்லாரியில் 20,000 ரூ வசூலானதில் 6000 ரூ மாத்திரம் சென்னைக்கு அனுப்பப்பட் டது. மீதியுள்ளதொகை அவ்விடத்து ஆஸ்பத்திரியின் செலவிற்கு வைத் துக்கொள்ளப்பட்டது. கள்ளிக்கோட்டையிலும் 5000 ரூ வசூலானதில் 2833 ரூ சென்னைக்கும் மீதியுள்ளது அவ்விடத்திற்கு உபயோகப்படுத்தப் படும்; மங்களூரிலும் இவ்விதமே செய்யப்படும். இப்பொழுது மொத்தம் 45,000 ரூ வசூல் செய்யப்பட்டிருக்கிறது; தவிர ரூ 17,000 வெளியூருகளி லுள்ள ஆஸ்பத்திரிகளின் உபயோகத்திற்கும் வசூல் செய்யப்பட்டிருக் கிறது.

சென்னை விக்டோரியா காஸ்ட் அண்டு கோஷா ஆஸ்பத்திரி இந்துக் களுக்கும், மகமதியர்களுக்கும் உபயோகமாகும்படி ஸ்தாபிக்கப்பட்ட விஷயம் யாவருக்கும் தெரியும். தென் இந்தியாவிலுள்ள எல்லாபாகங்க ளிலிருந்தும் இங்குவந்து சிகிச்சைசெய்துகொண்ட ஸ்திரீகளின் தொகை யினால் இது எல்லாராலும் மதிக்கப்பட்டும், ஸ்லாகிக்கப்பட்டும் வருகிற தென்பது சொல்லாமலே விளங்கும்.

இவ்வருஷத்தில் முதல் எட்டு மாதத்திற்குள் வெளிதேசத்திலிருந்து 112 பேர் ஆஸ்பத்திரிக்குவந்து சிகிச்சைசெய்து கொண்டார்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாலக்காடு. | 5. | சைதாபேட்டை. | 14. | வேலூர். | 5. |
| நெல்லூர். | 10. | கோடம்பாக்கம். | 15. | மதுரை. | 2. |
| திருவநந்தபுரம். | 2. | ஐதராபாக்கம். | 2. | திருநெல்வேலி. | 1. |
| கள்ளிக்கோட்டை. | 3. | பல்லாவரம். | 2. | வி.ாகபட்டணம். | 5. |
| மங்களூர். | 4. | பரங்கிமலை. | 10. | திருவள்ளூர். | 2. |
| செங்கல்பட்டு. | 10. | சடப்பை. | 1. | புதுச்சேரி. | 5. |
| கோகநாடா. | 2. | ஆம்பூர். | 3. | ஆவணி | 1. |
| கும்பகோணம். | 4. | தஞ்சாவூர். | 4. | | |

ஸ்திரீகள் விக்டோரியா ஞாபகச் சின்னமாக ஏற்படுத்திய இந்த ஆஸ் பத்திரியின் வேலையைப்பற்றி தமக்குத் தெரிந்தவரையிலும் மேற்குகரை பாங்கிலுள்ள ஒரு ஐரோப்பியமாது பின்வருமாறு எழுதுகிறார்கள்;— "இந்த ஏற்பாடு ஐரோப்பிய மாதர்களும், சுதேசமாதர்களும் கலந்து பேசவும் அந்நியோந்நியம் பாராட்டவுமே. சுதேசமாதர்கள் இவ்விஷயத்தில் நமக்கு வெகு உதவிபுரிந்திருக்கிறார்கள். இன்னுமிதர் அநேக ஆங்கிலமாதர்கள் இதைப் படித்து தங்கள் அனுபவத்தால் உறுதிபடுத்துவார்கள். நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரின் திவ்வியசரித்திரம் நமக்கு நன்றாக தெரியும்; சென்னை ராஜதானியிலுள்ள இந்திய ஸ்திரீகள் விஷயத்தில் லேடி ஆம்தில் அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையும், ஊக்கமும், அநுதாபமும் அளவற்றதே. இந்திய ஸ்திரீகளின் க்ஷேமத் தைக்கோருமவரும் காலஞ்சென்ற மகாராணியார் அவர்கள் ஏற்படுத் திய 'டப்ரின் பெருமாட்டியின் தர்மநிதியை' விருத்திசெய்வதே நலம்."

H. E. லேடி ஆம்தில் அவர்களுடைய பிரியமான எண்ணமும், அனுதாபமான வார்த்தைகளும், சென்னை இராஜதானியிலுள்ள ஒவ்வொருவருக்கும் தெரியும். லேடி ஆம்தில் அவர்கள் அன்பு மிகுந்த காலஞ்சென்ற மகாராணியார் பேருக்கென்றே இந்நிதியை ஏற்படுத்தியும் இந்நிதிக்குத்தலைமை வகித்தும் மிகஊக்கத்துடன் உழைத்து வருவதால், இவர்கள் தெந்நிந்தியாவிலுள்ள யாவராலும் புகழப்படுவார்களென்பதற்குக் சந்தேகமில்லை.

---

## முக்கிய குறிப்புகள்.

1. பம்பாயில் நடந்த ஜனசார சபையில் மாதர்கள் பெண்கல்வியைப்பற்றி பேசியதுமிகவும் மெச்சத்தக்கதே. இவர்களிலொருவள் மிஸ்டர் சந்திரவர்க்கரின் புத்திரி. மற்றொருவள் மிஸ்ஸஸ் கஞ்சி தாராம்.

2. திருவநந்தபுரம் கவர்ன்மெண்டார் பெண்கல்வி விருத்தியின் விஷயமாக மிக ஊக்கத்துடன் செய்துவரும் காரியமானது யாவரும் சந்தோஷிக்கத்தக்கதேயாம். எப். ஏ. பரீக்ஷையிற்றேறிய ஒரு பெண்மணியை வைத்தியசாஸ்திரம்கற்க சென்னைக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டிருக்கிறது ; அக்கவர்ன்மெண்டார் பெண்கல்வி விருத்தியை கோருபவரென்பது சொல்லாமலே விளங்கும். இனி மருந்துகளை எடுத்துக் கொடுப்பதற்கு ஸ்திரீகளையே ஏற்படுத்தப் போகிறார்களாம். இதுவும் நலமேயாம்.

3. மிஸ் ஹெலன் கெல்லர் என்ற அமெரிக்காதேசத்து பெண்ணுக்கு கண்ணும் தெரியாது, காதும் கேட்காது. இப்படியிருந்தும் அவள் பிரவேச பரிக்ஷையிற்றேறியிருக்கிறாளாம். இவளுக்கு பிரஞ்சு, இங்கிலீஷ், ஜெர்மன் பாஷைகள் தெரியும். இவைகளையும், சரித்திரத்தையும் கற்று பரீக்ஷைக்குச் சென்றாள். பரிக்ஷைபத்திரிகைகளில் எழுத்துக்கள் உயரமாக விருக்கும்படி அச்சடித்திருந்ததாம், இவள் இவைகளையறிந்துகொண்டு டைப்ரைடரின் உதவியால் விடைகளை எழுதினாளாம். பிரசங்கம் செய்யுங்காலத்தில் இவள் தனது உபாத்திச்சியுடன் சென்று அவள் கையால் காட்டும் ஜாடைகளைக்கண்டு பிரசங்கமுழுமையும் அறிந்து கொள்வளாம். இது வல்லவோ புத்திசாதுர்யம் ?

4. சிம்ளாவில் கல்விச்சங்கம் கூடியகாலத்தில் வைஸிராய் லார்ட் கர்ஸன் பெண்கல்வி விஷயமாக பின்வருமாறு பேசினார் :—“பெண்கல்வி விருத்திஅடையாமல் தாழ்ந்த ஸ்திதியிலேயே யிருக்கிறது. “ இந்தியாவின் கல்வி இலாகாவின் ஏற்பாட்டில் இது ஒரு முக்கியமான குறைவு” வென மிஸ்டர் காட்டன் என்பவர் சொல்லுகிறார். சென்ற வருடத்தில் மொத்த ஜனத்தொகையில் 425,000 பெண்கள்தான் பாடசாலைக்குச் சென்று கற்று வந்தார்கள். இவர்களில் மூன்றில் ஒரு பகுதியார் சென்னையில் படித்திருந்ததாகவும், இதில் அநேகமாக கிருஸ்துவர்களும் ஐரோப்பியர்களும்அதிகம்.’

5. மைசூர் மகாராணி பெண்கலாசாலையில் சென்ற வருடம் கொள்ளை நோய் விசேஷத்திருந்த போதிலும் பெண்களதிகமாக கல்வியில் விருத்தியடைந்திருக்கிறார்கள். சென்ற ஜூலை மீ 397 பெண்களில் 329 பிராமணர்கள், 12 க்ஷத்திரியர்கள், 4 வைசியர்கள், 19 லிங்கம் கட்டிகள், 33 இதரவகுப்பைச் சேர்ந்தவர்கள். மைசூர் கவர்ன்மெண்டார் பஹுமானசம்பளம் கொடுப்பதில் மாதமொன்றிற்கு ரூ 10 முதல் 30 ரூ வரையில் ரூ 729-8 செலவழிக்கிறார்கள். 10 மாதர்களும், 14 பாலிய விதந்துகளும் கலாசாலையில் கற்று வருகிறார்கள். க. சுப்பம்மா, ஸ்ரீரங்கம்மா என்ற இரண்டு மாணவிகள் எப். ஏ. பரிக்ஷையிற்றேறி அதேகலாசாலையில் உபாத்தியாயர்களாக மீ 150 வீதம் பெற்று வருகிறார்கள். சாவகாசமுள்ள வேளையில் இவர்கள் பி. ஏ. பரீ



க்ஷைக்குப் படித்தும்வருகிறார்களாம். பிரத்தியேகமாய் உபாத்தியாயாராகபழக்கப்படுத்த ஒருவகுப்பும், பாட்டு, வீணை, சித்திரம் முதலியவைகளுக்கு தனித்தனியாய் ஒரு வகுப்பும், கிண்டர்கார்டன் வகுப்பு ஒன்றும் யிருக்கிறது. இந்த காலேஜ் மேலும் மேலும் செழித்தோங்கும்படி கோருகிறோம்.

6. ஒரு விநோதபறவை :—ஆபிரிகாவில் ஸோமாலிலாண்டு என்ற பிரதேசத்தில் தேன் பறவையென்ற ஒரு சாதி பட்சிகளிருக்கின்றன. அவைகளுக்கு தேனிருக்கு மிடத்தையும், சிங்கங்களின் உறைவிடங்களையும், பாம்பிருக்கும் புற்றுக்களையும் அறிந்து காட்டும் சக்தியுண்டு. வேட்டையாடுவோர் அப்பறவைகளின் உதவியைக் கொண்டு தேனடைகளிருக்கு மிடங்களை எளிதில் அறிந்து கொள்ளுவார்கள். அவ்விதப் பறவை ஆபிரிகாக் கண்டத்தில் இருப்பதாகக் கேட்டதுண்டேயொழிய போய்பார்த்து வந்தவர் இதுவரையிலும் இல்லாதிருந்தார்கள். இப்பொழுதோ பத்திரிகா நிருபர் ஒருவர் தன் கண்ணாற்பார்த்து வந்தார். அவர்மலைச்சரிவிலுள்ள பள்ளத்தாக்குக்களில் போய் வேட்டையாட மிருகங்களேனும் பறவையேனும் அகப்படுகின்றனவாவென்று பார்த்துக்கொண்டு திரிந்துகொண்டேயிருக்கும் பொழுது எதிரே யொருமரத்தில் பறவையொன்றைப்பார்த்தாராம். அது அவரைக் கண்டவுடன் வாய்விட்டுக்கத்த ஆரம்பித்ததாம். அப்பொழுது அவர்கூட இருந்த சோமாலிநாட்டார் அதுதான் தேன் பறவை யென்று சொன்னார்களாம். உடனே அப்பறவையை அவர் கவனிக்க ஆரம்பித்தாராம். கூடவந்தவர்கள் சீட்டிஊத ஆரம்பிக்கவும் அப்பறவையும் ஓயாமல் கத்தியதாம். இப்படி அவரையும் அவருடன் கூடவந்தவர்களையும் அப்பறவை சிறிதுதூரம் அழைத்துக்கொண்டேபோய் கடைசியாய் அகாரணமாய் இடம்பெயராது நின்று விட்டதாம். அது நின்றவுடன் சோமாலிநாட்டார் அருகாமையில் சிங்கமிருக்கிறதா, பாம்பின் புற்றிருக்கிறதா, அல்லது தேன் அடையிருக்கிறதாவென்று பார்த்ததில் மரச்சோலைக்குள் தேனடையிருந்ததாம். இப்பறவைகளுக்கு மேற்சொல்லிய சாமார்த்தியமும் தவிர பலபேர் கூடி வசிக்கும் கிராமங்களில் அக்கிரமச் செய்கைகள் செய்கிறவர்கள் யாரேனும் இருப்பார்களானால் அவர்களுடைய வீட்டின் கூரையுச்சியில் விடாது போய் உட்கார்ந்து பிறருடைய மனதில் அவ்வீட்டைப்பற்றிக் கவனமுதிக்கும்படி செய்து விடக்கூடிய சக்தியுண்டாம். இது தெய்வசிருஷ்டியின் ஆச்சரியமன்றோ?

7. இராஜகுமாரர்களும் குமாரிகளும் :—இங்கிலண்டு மகாராஜா அவர்களுக்கு மூன்று குமார்த்திகளும், ஒரே குமாரரும், மூன்று பேரன்மார்களும், மூன்று பேத்திகளும் மூன்று சகோதரிகளும், ஒரு சகோதரருமிருக்கின்றார்கள். ஜர்மனிச் சக்கிரவர்த்திக்கு ஆறு குமாரர்களும், ஒரு குமார்த்தியும், ஒரு சகோதரரும், நான்கு சகோதரிகளுமிருக்கின்றார்கள். ஆஸ்டிரியாச் சக்கிரவர்த்திக்கு இரண்டு குமார்த்திகளும், ஐந்து பேரன்மார்களும், ஐந்து பேத்திகளுமிருக்கின்றார்கள். பெல்ஜியம் தேசத்து அரசருக்கு மூன்று குமார்த்திகளும், ஒரு பேரனும், இரண்டு பேத்திகளுமிருக்கின்றார்கள். ருஷியச் சக்கிரவர்த்திக்கு நான்கு குமாரத்திகளும் ஒரு சகோதரருமிருக்கின்றார்கள். டென்மார்க் தேசத்து அரசருக்கு மூன்றுகுமாரர்களும், மூன்று குமார்த்திகளும், ஐந்து பேரன்மார்களும் பதின்மூன்று பேத்திகளுமிருக்கின்றார்கள். கிரீஸ் தேசத்து அரசனுக்கு ஐந்துகுமாரர்களும், ஒரு குமார்த்தியுமிருக்கின்றார்கள். ஸ்வீடன் தேசத்து அரசருக்கு நான்கு புத்திரர்களிருக்கின்றார்கள். ஸ்பெயின் தேசத்து அரசருக்கு இரண்டு சகோதரிகளிருக்கின்றார்கள். போர்த்துக்கேசிய நாட்டு அரசருக்கு இரண்டு குமாரர்களும், ஒரு சகோதரருமிருக்கிறார்கள். இட்டாலியதேசத்தரசருக்கு ஒரு குமார்த்திமட்டுமுண்டு.

8. ராணி சேதுபதி பெண்கள் பாடசாலை :—மதுரை மேல் கோபுரவாசல் பெண்பிள்ளைப் பாடசாலைக்கு ராணிசேதுபதி பெண்பிள்ளைப் பாடசாலை யென்ற பெயரிட்டு சேதுபதி டவுன் பிரைமெரி பாடசாலையோடு சேர்ந்து நடத்தப்பட்டு வந்த பெண்பிள்ளைப் பாடசாலையை ஹைஸ்கூலை யொட்டியிருக்கும் சின்னமணி ஐயர் பங்களாவில் நடத்த ஆரம்பித்துவிட்டதாக அறிகிறோம். இந்தப்பள்ளிக்கூடத்தில் பெண்பிள்ளைகளுக்கு ஹிந்துக்களுடைய வீட்டுமாதிரிக்கிணங்கப் படிப்பு சொல்லிவைக்கப்படும். தற்போது இப்பள்ளிக்

கூடத்துக்கு ஆண்பிள்ளைகளை உபாத்தியாயர்களாக நியமித்து நடத்துவதாகவும், பெண்பிள்ளை யுபாத்தியாயர்கள் கிடைக்கும்போது அவர்களை நியமித்துக்கொண்டுவிட உத்தேசமிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இப்பள்ளிக்கூடத்தின் ஒரு கிளை காட்டுச் செட்டி மண்டபத்திலே நடத்தப்படுமென்றும் சொல்லப்படுகிறது. இப்பாடசாலை நீடித்து நடக்கும்படி கடவுள் அருள் புரிவாராக.

9. மிஸ் கிருஷ்ணம்மா:—இந்த இந்தியப் பெண்மணி திரிசிராப்பள்ளியில் தற்போது சப்-ஜட்ஜியாகவிருக்கும் மிஸ்டர் சிவராம கிருஷ்ணம்மாவின் புத்திரியும் மிஸஸ் கமலாவின் (Mrs. Kamala Sathianadhan) சகோதரியும் ஆவாள். இந்த அம்மாள் பி. ஏ. பரீட்சை கொடுத்த பட்டதாரியுமாவாள். அக்டோபர் மீ 19உ சனிக்கிழமை ஸ்ரீரங்கம் ஸர்க்கார் பெண்பிள்ளைப் பாடசாலையில் வருஷாந்திர வெகுமதி கொடுக்கும் உற்சவம் கொண்டாடப்பட்ட பொழுது இம்மாது அக்கிராசனத்தை வகித்து அப்பள்ளிக்கூடத்துச் சிறுமிகளுக்கு வெகுமதிகள் கொடுத்துவிட்டுச் சபையோர்களைப்பார்த்துச் செய்த உபந்நியாசம் வெகு சமயோசிதமாயிருந்ததாம். இத்தருணமே முதல் முதல் இந்த மாது சபையில் பேச நேர்ந்ததாயினும் சிறிதும் மனக்கோழையில்லாமலும் சபை நடுக்கமில்லாமலும் பேசியதாகக் கேட்டு மிக சந்தோஷிக்கிறோம். இம்மாது எம். ஏ. பரீக்ஷைக்குப்படித்து வருகிறார்கள்; ஈசன் இம்மாதுக்கு தீர்க்க ஆயுளையளிப்பாராக.

10. குவாலியர் நாடும் பெண்கல்வியும்:—இந்தியாவில் பெண்பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிவைப்பதில் எவ்வளவோ கஷ்டமிருக்கின்றது. பெண் குழந்தைகள் பருவமடைந்துவிட்டால் பள்ளிக்கூடங்களில்போய் வாசிப்பதற்கு இயலுவதில்லை. இன்னும் சில பெண்பிள்ளைகள் கோஷாவாக விருததலால் அவர்கள் வெளியிற் புறப்படுவதற்கும் சரிப்படுகிறதில்லை. மகாராஷ்டிரர்களுள்ளும் பெண்பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட சங்கடங்களெல்லா மிருந்து வருகின்றன. இவ்விஷயங்களை யெல்லாம் நன்கறிந்த மகாராஜா சிந்தியா, தமது நாடாகிய குவாலியர் நாட்டில் மகாராஷ்டிரப் பிரபுக்கள் வீட்டுக் குழந்தைகள் பருவமடையும் வரையிலுமாவது வாசிப்பது நலமாகுமென்றெண்ணி அச்சிறுமிகளுக்காகத் தனியாக ஒரு பள்ளிக்கூட மேற்படுத்தத் தீர்மானித்திருக்கிறாரென்ற விஷயத்தைக்கேட்க மகிழ்கிறோம்.

11. மகாப்பெரிய மரம்:—மெக்ஸிகோ என்னும் தீவில் ஓர் மரம் இருக்கின்றது. அது உலகத்திலுள்ள எல்லா விருக்ஷங்களைக் காட்டிலும் மிகவும் பெரிதானதாம். அதன் வேருக்குச் சமீபமாகப் பூமியில் பரவியிருக்கும் சுற்றளவு 154 அடியும் 29 அங்குலமாம். அதன் உயரத்தைப் பார்க்கவேண்டுமானால், அனேக கஜதூரத்திற்கப்பால் நின்று ஆகாயத்தை அண்ணாந்துபார்த்தால் அப்பொழுதும் மரம் இன்னும் மேலேயே போவதாகத் தோற்றுமாம். அதன் வயது சிலர் 500 வருடங்களென்றும், பலர் 1000 வருடங்களென்றும் சரித்திர மூலமாய் தெரிவிக்கின்றனராம். இதன்மேல் எத்தனையோ ஆயிரம் பக்ஷிகளும், நாற்கால் ஜந்துக்களும் வசித்துவருவதாகவும் சொல்லுகின்றனர். * * * * * * * * * * *

மகாராஜாவை என்னோடு பேசவைத்தேன்.

"இன்றைத்தினம் மகாராஜா என்னோடு பேசினார்" என்று ஒருவன் மற்றொருவனோடுரைத்தான்.

மற்றவன் மிகவும் ஆச்சரியப்பட்டு "உன்னோடா மகாராஜா பேசவந்தார்? என்ன பேசினார்? அடே! உனக்குச் சுக்கிரதசை யடிக்கிறதடா!" என்றான்.

"நான் கோட்டை வாசல் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தேன். மகாராஜா அவர்கள் குதிரைவண்டியிலே வந்தார். நான் ஒதுங்காமல் நின்றேன். இராஜாவுக்கு முன்னே வந்துகொண்டிருந்த ஒருவருக்கும் நான் நகரவேயில்லை. பிறகு மகாராஜா அவர்களே என்னைப்பார்த்து "அடே! ஆரடா நீ? விலகி நில்; நீ ஏன் இங்கே நிற்கிறாய்?" என்று கேட்டார்."

ஞானபோதினி

27 ...02 MADRAS

மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

VOL. III. புத்த. 3. | Madras: November 1901. சென்னப்பட்டணம் 1901ளு நவம்பர்மீ. | No. 9. இல. 9.

# அலெக்ஸாண்டிரா மகாராணியாரின் சரித்திரம்.

(முதல் அத்தியாயம்.)



எத்தேசத்திலும் மிக்க செல்வம் மலிந்தோங்கும் நமது இந்தியா தேசத்தின் சக்கிரவர்த்தியாராகிய எ-வது எட்வர்டின் பட்டமகிஷியாயும், நமது சக்கிரவர்த்தினியாராகியு மிருக்கின்ற அலெக்ஸாண்ட்ரா மகாராணியாரின் சரித்திரத்தை நமது இந்தியாதேசத்திலுள்ள மாதர்கள் நன்கறியும் பொருட்டு பிரசுரிக்கலாயினோம். ஸ்திரீகள் இதை நன்றாய் வாசித்து அவர்களுடைய குணாதிசயங்களைப் பின்பற்றி நடப்பார்களாக.

அலெக்ஸாண்டரா மகாராணியார் அவர்கள் டென்மார்க் தேசத்து அரசராகிய பிரின்ஸ் கிறிஸ்டியனுடைய செல்வக் குமாரத்தியாய் 1845-வது வருடத்தில் உதித்தார்கள். இவர்களுடைய தாயாரும், தகப்பனாரும் அதிக செல்வமாக வளர்க்க வளர்ந்து, கல்வியில் அதிக தேர்ச்சியடைந்தபிறகு, தமது மங்கைப்பருவத்தையடைந்தார்கள். இவர்களுடைய 18-வது வயதாகிய 1863-வது வருஷத்தில் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவர்களுக்கு விவாகம்செய்து கொடுக்கப்பட்டார்கள். இப்போது இவர்களுக்கு வயது 56-ஆகிறது. தம் பத்தாவைவிட இவர்கள் நான்கு வருடம் வயதில் குறைந்தவர்கள். இவர்களுடைய ரூபலாவணியத்தைக் குறித்தும், தெய்வபக்தியைக் குறித்தும், ஸ்டான்லே என்கிற ஒரு பெரிய மடாதிபதி பின் வருமாறு எழுதியிருக்கிறார்.

"இவர்கள் யுக்தியும், சௌந்தரியமும் உள்ளவர்கள். ஈஸ்டர் பண்டிகையின் ஓர்நாள் மாலையில் நான் தெய்வ ஆராதனை செய்து, வேத புத்தகத்தை என் கையில்எடுத்துக்கொண்டு, இந்த அழகிற் சிறந்த ஸ்திரீயை ஆசீர்வாதம் செய்தேன். சௌந்தரியத்தில் நமது புராணங்களில் வருணிக்கப்படுகிற திவ்ய சுந்தர விக்கிரகங்களைப்போ லிருக்கிறார்க ளென்று சொல்லலாம்."

இவர்கள் உன்னத அந்தஸ்தை அடைய விரும்பாம லிருந்தபோதிலும், எவர்களாவது தம்மை பட்ட மகிஷியென்று சொல்லாமல் இளவரசருடைய பத்தினியென்று மாத்திரம் சொன்னால் அவர்கள்மீது சினங்கொள்வார்கள்.

அரசர்கள் குடும்பத்தில் அர்த்தாங்கி, பிராண நாயகன், (Consort) என்று அழைக்கும்படியான வழக்கம் எப்படி வந்ததென்றால், சொர்க்கத்தில் தற்காலம் அரசுபுரிந்துவரும் நமது விக்டோரியா மகாராணியாருக்கு ஆல்பர்ட் என்பவர் பிராணநாயகரானதே தவிர, இராஜ்ஜியத்திற்கு அதிபதியாகாததினிமித்தம் அவரை அரசர், அல்லது சக்கிரவர்த்தியென்று அழைக்க முடியாமல் இராணியாரின் பிராணநாயகரென்று மாத்திரமே அழைத்துவந்ததினால், அதே வழக்கப்படி இந்த அம்மாளையும் இளவரசருடைய பாரியை யென்றே எவரும் அழைத்து வந்தார்கள்.

கான்சர்ட் என்று சொல்லும்படியான ஆங்கில வார்த்தையானது, ஆண்பாலார், பெண்பாலார் இருவருக்கும் உரியதாகையால், அந்த வார்த்தையை புருஷரான ஆல்பர்ட் என்பவருக்கும், ஸ்திரீயாகிய அலெக்ஸாண்டிரினா மாதுக்கும் உபயோகித்து வருகிறார்கள். பூர்வத்தில் இளவரசராயிருந்தவரும், இப்போது ராஜ்ஜியத்திற்கு அதிபதியாயிருப்பவருமாகிய 7-வது எட்வர்ட் என்பவருக்கு இந்த அரசாட்சி கிடைப்பதற்கு முன்னமே இந்த மாது தெய்வ சாட்சியாய் பாணிக்கிரஹணஞ்செய்துகொண்ட அர்த்தாங்கி யாகையால் அவருக்குக் கிடைத்த இளவரசு பிரபுத்துவத்தையும், இராஜ்யபரிபாலன அதிகாரத்தையும், இந்த அம்மாளும் அநுபவித்து வந்தார்க ளல்லவா? ஆகையால் அந்தந்த காலத்தில், அந்தந்த அதிகாரங்களினால் இந்த அம்மாளும் கௌரவிக்கப்படாம லிருந்தால் இந்த அம்மாளுக்கு அதுவிஷயத்தில் வருத்தம் உண்டாகாதா? அதனால் நம்முடைய அலெக்ஸாண்டிரினாவை பாலியத்தில் இளவரசியென்றும், இப்போது இராணி யென்றும் அழைப்பதே முறைமை. இது இந்த அம்மாளுக்கு ஒரு கௌரவ மல்லவா? இந்த மாதின் தந்தையாராகிய டென்மார்க் அரசர் தனவந்தராக விருந்தாலும், தக்கபடி நடத்தின தகப்பனாரின் ஆக்கினைகளுக்கு இந்த அம்மாள் கீழ்ப்படிந்து வந்ததுந் தவிர, பெண்பாலார்க்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்கிற நான்கு நற்குணங்களும் பொருந்தியுள்ளவர்களா யிருக்கிறார்களென்று ஜனங்கள் மிகவும் புகழ்ந்து வந்தார்கள்.

இந்த மாது கலியாணஞ் செய்துகொண்டு தமது கணவருடைய அரண்மனையை யடைந்த பிறகு, தாம் அநந்த ஐஸ்வரியத்தால் நிறைந்தவர்களா யிருந்தபோதிலும், பெருமையென்கிற வார்த்தையை ஒரு சிறிதேனுங் கொள்ளாமல் சாதாரண ஸ்திரீயைப்போல் விளங்கிவருகிறார்கள். அதிக விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்துகொள்வதிலும், மனதிற்கு ஆநந்தத்தை உண்டாக்கும்பொருள்களைவாங்குவதிலும், திரவியத்தை அதிகமாகச் செலவுசெய்யாமல்போதுமான அளவு செலவுசெய்வார்கள். தாம்அதிகஐஸ்வரியமுள்ளஒரு அரசருடைய செல்வக் குமாரத்தியாயிருந்தாலும், "மாமியார்வீட்டில் மரு



மகள் எவ்விதம் அடங்கி நடக்கவேண்டுமோ அவ்விதம்" அடங்கி நடந்துவந்தார்கள். இதல்லவா சந்மார்க்க நடக்கையுள்ள மருமகளின் இலட்சணம்! இவ்விதமாக சமுசாரஞ்செய்ய ஆரம்பித்த சில தினங்களுக்குள் அம்மாது ஓர் பெண் குழந்தையைப் பெறும் பாக்கியவதியானார்கள். அம்மாது ஓர்நாள் சாயங்காலம் உல்லாசமாய் பொழுது போக்குவதற்காக, தன் னரண்மனையின் சமீபத்திலிருந்த ஓர் நதிக்கரைக்குப் போயிருந்த காலத்தில், பெண் குழந்தையைப் பிரசவித்தார்கள். அக்காலத்தில் அந்தம்மாளுடன் இரண்டொரு வேலைக்காரிகள்மாத்திரம் இருந்தார்களே யன்றி, வேறு ஒருவரும் அவ்விடத்தில் இல்லை. இச் சங்கதி அரண்மனைக்குத்தெரிந்தவுடனே, மகாராணியாரவர்களும், ஆல்பர்ட்டும், மற்றுமுள்ள பந்துக்கள் யாவரும் ஆச்சரியத்துடன் திகிலும் அடைந்திருந்தார்கள். அங்கு ஜனித்த இளங் குழந்தைக்கு போர்ப்பதற்கு, அந்தம்மாள் அக்காலத்தில் போர்த்துக் கொண்டிருந்த பிளானல் வஸ்திரம் தவிர வேறு வஸ்திரம் ஒன்றும் இல்லாமையால், அதையே அக்குழந்தைக்கு போர்வையாக போர்த்தார்கள். கடவுளின் செய்கையைப் பார்த்தீர்களா? அக்குழந்தைக்கு என்ன குறைவு? அதன் தகப்பனார் வேல்ஸ் தேசத்தின் இளவரசர். பாட்டியாரோ இங்கிலாந்து, இந்தியா முதலிய தேசத்தை ஏக சக்கிரவர்த்தினியாய் ஆண்டுவந்த மகாராணியாரவர்க ளன்றோ? இவ்வித பெருமை வாய்ந்த அக்குழந்தைக்கு ஒரு நதி தீரம் ஜென்ம ஸ்தானமாக வாய்த்தது விதியின் பயனல்லவா? தமது இரண்டொரு வேலைக்காரிகள் தவிர வேறு ஒருவரும் இல்லாத அந்நதி தீரத்தில் அந்தம்மாள் அக்குழந்தையைப் பிரசவித்தபோதிலும், கடவுளுடைய கிருபையால் தாயாரும், குழந்தையும் சுகமாகவே யிருந்தார்கள். உடனே ஆல்பர்ட் சில வேலைக்காரர்களையும், பெண் வைத்தியர்களையும், மருத்துவப்பெண்களையும் அனுப்பி அதிக பத்திரமாக அந்தம்மாவை அழைத்துவரும்படி உத்தரவுசெய்தார்கள். அவர்கள் வேண்டிய மருந்துகளுடன் அவ்விடம் சென்று, தாயும், குழந்தையும் சௌக்கியமாயிருப்பதைக் கண்டு மகிழ்ந்து, வேண்டிய சீதோபசாரங்களையெல்லாஞ் செய்து, வண்டியில் அவர்களை வெகு சாக்கிரதையாக ஏற்றி அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள். ஜனன சௌசம் முடிந்தபிறகு குழந்தையைத் தொட்டிலில்வளர்த்தி தாலாட்டி நாளொருமேனியும்பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துவந்தார்கள். இந்தம்மாள் பெண் குழந்தையைப் பெற்று சந்தோஷமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில் இவர்களுக்கு பெரிய விசனமொன்றுண்டாயிற்று. அஃதென்னவெனில், தமது தகப்பனாருக்கும், ஜெர்மனிதேசத் தரசனுக்கும் அதிகநாளாக பொங்கிக்கொண்டிருந்த கோபமானது நாளுக்குநாள் வளர்ந்து விவாதமுண்டாகி யுத்தம் செய்யும்படி நேரிட்டது. இந்த சங்கதியை இந்த மாது செவியேற்றலும், தாம் வயதில் சிறியவர்களாயும், அநுபவம் இல்லாதவர்களாயுமிருந்ததனால் அதிக மனவருத்தமுடையவர்களாய் இந்த ஆபத்து நீங்கும்பொருட்டு கடவுளைப் பிரார்த்தித்து, தானும் பிரயத்தனம்செய்தார்கள். இதற்குமுன் விக்டோரியா மகாராணியாரின் குமாரத்தி பிரெஷியா தேசத்து இளவரசனை விவாகஞ் செய்துகொண் டிருந்ததனாலும், அந்தம்மாள் தமக்கு நாத்தனார் ஆனதாலும், அந்தம்மாள் மூலமாக இந்த யுத்தமானது நடவாவண்ணம் பிரயத்தனஞ்செய்து, தம் தகப்பனருக்கும் அவ்விதமான சாகச காரியங்களில் பிரவேசிக்காம லிருக்கும்படி கடிதமும் எழுதினார்கள். இந்த யுத்த சங்க

தியானது பஞ்ச் என்கிற ஆங்கில பத்திரிகையில் சித்திரப்படத்துடன் நன்றாய் விளக்கிக் காட்டியிருக்கிறது. மேற்கூறிய இரண்டு தேசத்தார்களுக்கும், யுத்தம் நடவாமல் நிற்காதென்றெண்ணி இருவரும் தமக்கு நெருங்கிய பந்துக்களாகையால் அவர்களுக்கு ஒருவரும் யுத்தத்தில் சகாயம் செய்யக்கூடாதென்று விக்டோரியா மகாராணியாரவர்கள் தமது எண்ணத்தை வெளியிட்டார்கள். இந்த யுத்தம் மும்மரமாய் நடந்தால் இங்கிலாண்ட்தேசத்திலிருந்து தமது தகப்பனுருக்கு ஒத்தாசை கிடைக்குமென்று ஆவலோடு இருந்த அலெக்ஸாண்டிரினாவுக்கு, தமது மாமியார் கொண்ட நிஷ்பட்சபாதமான எண்ணம் சிறிது துக்கத்தை உண்டுபண்ணியது. இப்படி சிலநாள் சென்றபிறகு, மேற்கூறிய இரண்டுதேசத்தார்களுக்கும் யுத்தம் ஆரம்பித்தது. இதைக்குறித்து இந்த அம்மாள் அதிகமாக விசனப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒருநாள் ஒரு மூர்க்கமான குதிரைக்காரன் வந்து, பிரஷியாதேசத்தார் ஜெயித்தார்களென்ற தந்திசமாசாரம்போல இடிபோன்ற வார்த்தை சொன்னதைக்கேட்டு, கண்ணீர் தாரை தாரையாய் வடிய அழுது சோகத்தில் மூழ்கியிருந்தார்கள். பிரின்ஸ்ஆப் வேல்ஸ் தமது மனைவியார் விசனமாயிருப்பதைக் கண்டு தாமும் அதிக விசனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். யுத்தம் முடிந்தவுடனே, அலெக்ஸாண்டிரினாவும், பிரின்ஸ்ஆப் வேல்ஸ் அவர்களும் தமது குழந்தையுடன் டேன்மார்க் தேசத்துக்குச் சென்றார்கள். சிலகாலம் அங்கு சந்தோஷமாய் தமது பந்துக்களுடன் உறவாடியிருந்து மறுபடி, இங்கிலாண்ட் தேசத்துக்குவந்து சேர்ந்தார்கள், அதற்கு அடுத்த வருஷம் மேமாதத்தில்அலெக்ஸாண்டிரினாவுக்கு இரண்டாவது புத்திரசந்தானம் உண்டாயிற்று,

இந்த அம்மாளுக்கு இரண்டாவது சந்தானம் உண்டானது, ஆளுகைவிஷயத்தில் மனம் செலுத்தவேண்டிய ஓர் நற்குறியாக விருந்ததால், அதுமுதல் இந்த அம்மாள் ஆளுகை விஷயத்தில் தமது கவனத்தைச் செலுத்திவந்தார்கள். 1865 - வது வருஷத்தில் இந்த அம்மாள் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையைப் போய் பார்வையிட்டார்கள். அடுத்த வருடத்தில் பார்லிமெண்டு மகாசபையையும் பார்வையிட்டார்கள். அப்போது தான் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்கள் பார்லிமெண்டு மகா சபைக்குப் போனது முதல் தடவை. ஆஸ்டிரோ-பிரஷியா யுத்தம் நடந்தேறினபிறகு அலெக்ஸாண்டிரினா அவர்கள் நெதர்லேண்ட் பிரபுவினுடைய வீட்டிற்குப் போயிருந்து தமது அரண்மனைக்குவந்து சேர்ந்தார்கள். இவர்களுடைய கணவராகிய பிரின்ஸ் ஆல்பர்ட் எப்போதும் தன் நிழல் தன்னைவிட்டுப்பிரியாமலிருப்பதுபோல, தமது மனைவியாரை விட்டுப் பிரியாமலிருந்தார்கள். இவ்விதம் சிலகாலஞ் சென்றபின் இளவரசரான பிரின்ஸ் ஆல்பர்ட் ருஷியாதேசத்துக்குப் போயிருந்தபோது, அலெக்ஸாண்டிரினா இராணியார் தமது அருமைத் தாயாருடன் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தபோதிலும் தமது அன்புள்ள கணவரது வரவையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதல்லவா உத்தம பதிவிரதா சிரோன்மணிகளின் இலட்சணம்! நமது அலெக்ஸாண்டிரினா "கற்புறு சிந்தை மாதர் கணவரைத் தெய்வமாக, அற்பகலென்றுங் கொண்டு அகமகிழ் சிறப்பினார்கள்" என்ற பாடலுக் கிணங்க தமது கணவரையே தெய்வமாக எண்ணி, அதிக விசுவாசத்துடனும், பிரியத்துடனும் நடந்து, பரம பதிவிரதா சிரோன்மணியென்று கண்டோர் கூறும்படி விளங்கிவருகின்றார்கள்.





# *"எலிசபெத் பாரெட் ப்ரௌனிங்"

நமது விக்டோரிய சக்ரவர்த்தினியாரின் அரசாட்சியில் பெயர்பெற்ற பெருமாட்டிகளின் சரித்திரங்களில் "கவியரசி" யென்று சொல்லப்பட்ட "எலிசபெத் பாரெட் ப்ரௌனிங்" என்பவரின் சரித்திரத்தை இந்துப்பெண்களுக்கு உபயோகப்படுமாறு இங்கு சுருக்கி எழுதுகிறோம். ஏனெனில் அது, தேக சௌக்கிய மற்றுக்குறைய தன் ஆயுள் முழுவதும் வியாதியஸ்தையாய், பெருமையான சிலகாவியங்களை தன்னூ மற்று மிகவும் மெலிந்த ஒரு ஸ்திரீ, பெருமையான சிலகாவியங்களை தன்னூ ரிலக்கியத்திற்கு சேர்ப்பதோடும் கூட, மற்றுமுள்ள உதவியற்ற ஸ்திரீகளுக்கு, தனக்கு ஸ்வாமி கொடுத்த புத்தியை உபயோகித்து எவ்வளவுதூரம் உதவிசெய்யலாமென்பதையும்நன்கு காட்டுகிறது. இம்மாது 1806ம் வருஷத்தில் இங்கிலாந்தின் வடபக்கத்தில் பிறந்தவள். இவள் பிறந்த கொஞ்சகாலத்திற்குப் பிறகு இம்மாதின் தகப்பன் இங்கிலாந்தின் மேற்கே தனக்குச் சொந்தமான ஒரு வெகு அழகான இடத்தில் ஒரு வீட்டைக்கட்டினார். இதிற்றான் இம்மாது தன்னுடைய சிறு பிராயத்தைக் கழித்தாள். இம்மாதுக்கு எப்பொழுதும் இயற்கைக் காட்சிகளிலும், புஷ்பங்களிலும் வெகு பிரியம். சிறு பெண்ணாயிருக்கும்போதே வெள்ளை ரோஜாச்செடிகளை வளர்ப்பதில் மிக சமர்த்தளென்று இவளுடன் பிறந்தார்களுக்குள் பெயர் பெற்றவள்.

* Translated from "The Indian Ladies' Magazine."

சிறு பிராயத்திலேயே இம்மாது கவியெழுத ஆரம்பித்து நான்கு பாகங்களுள்ள ஒரு காவியத்தை முடித்தபின்பேரில் இவளுடைய தகப்பனார் பெருமகிழ்ச்சியடைந்து அதை அவளுக்கு அச்சிட்டுக்கொடுத்தார். மிகவும் மெலிந்தவளானபடியால் இவள் தன்னுடைய காலத்தையெல்லாம் வீட்டிற்குள்ளேயே போக்கும்படியா யிருந்தது. அப்பொழுது தன் கைக்குக் கிடைத்த நூல்களெல்லாவற்றையும் தான் படிப்பதும் தவிர, இவளுடைய சகோதரராகிய (Edward) "எட்வார்ட்" உடன் 'க்ரீக்' "லாட்டின்" நூல்களையுங் கற்றாள். இவளுடைய பாட்டியார் "எழுதப்படிக்கத் தெரிவதில் என்ன உபயோகம், தையல்வேலையை நன்றாய்க் கற்றுக்கொள்ளவேண்டுமென்று பலமுறை கூறுவாள். ஆனால் இவளுடைய தகப்பனோ இவள் செய்வதையே நலமென்று சொல்லி அதிகஆசையை மூட்டினார். இவளுக்கு 20ம் பிராயத்திலேயே தன்னுடைய் கவிகளெல்லாம் ஒரு சிறுபுத்தகத்தில் தன்பெயர் போடாமல் பிரசுரப்படுத்தப்பட்டன.

இரண்டு வருஷங்களுக்குப் பிற்பாடு இவளுடைய தாய் இறந்துபோக, இவள் வியாதியஸ்தையா யிருந்தபோதிலும், தகப்பனுடைய விசனத்தை யாற்றுவதும், இவளுடன் பிறந்த எழுவரைப் பாதுகாப்பதும் இவளுடைய கடமைகளாயின.

கொஞ்சகாலத்திற்குள் "மோல்டன் பாரெட்" என்னும் இவர் தகப்பனுக்கு திரவியநஷ்டம் வெகுவாய் உண்டானதால், இவளுடைய குடும்பத்திற்கு வரும்படி குறைந்துபோக மால்வர்ன் குன்றுகளினருகிலுள்ள அழகான வீட்டைவிட்டு, இவர்கள் லண்டனில் குடியேறும்படியாயிற்று. மத்தியில் இரண்டு வருஷகாலம் தென்கரையின் கடலோரத்திலுள்ள ஒரு சிறு பட்டணத்தில் இவர்கள் காலங்கழித்தார்கள். அப்பொழுது தான் 1833ம் ௵ இவளுடைய கவிகளில் இரண்டாவது புத்தகம் பிரசுரப்படுத்தப்பட்டது. பிறகு இவர்கள் லண்டன் நகர் சேர்ந்தார்கள். இவள் நாட்டுக்காட்சிகளிலேயே களிப்படைந்தவ ளானதாலும், நாட்டுப்புறவாசமே இவளுக்கு சௌக்கியத்தைக் கொடுத்துவந்ததாலும், லண்டன் சேர்ந்தவுடனே, இவளை வியாதிபிடிக்க ஆரம்பித்து, இவள் வெளியே போகக்கூடாமலும், வந்த சிநேகிதர்களைப் பார்க்கமுடியாமலும் இருந்தது. இவள் அப்பொழுது சிநேகிதர்களுக்கு கடிதங்கள் எழுதிக்கொண்டும், படித்துக்கொண்டும், கவிகள் எழுதிக்கொண்டும் இருந்தாள். இவள்செய்த நூல்கள் ஒன்றில் இந்துப்பெண்கள் தேங்காயோட்டில் ஒரு விளக்கையும், புஷ்பத்தையும் வைத்து கங்கையில் மிதக்கவிட்டு, கண்ணுக்கெட்டின மட்டில் விளக்கவியாமலிருந்தால் தங்களுடைய புருஷர்கள் தங்களிடத்தில் நேசமா யிருப்பார்களென்று எண்ணுவதைப் பற்றி வெகு அழகாய் வர்ணித்திருக்கின்றனள். இவளுடைய கவிகளில் சில அறிவதற் கருமையாயும், சில வெகு சுலபமாயும், படிப்போர் மனதை உருக்கும்படியாயும் இருக்கின்றன. இவள் இப்படி எழுதுவதும், படிப்பதும்



தன் தம்பிமார்களுக்கு கிரீக் பாஷை கற்றுக்கொடுப்பதுமா யிருக்க, இவளுடைய தேக அசௌக்கியம் "சுகப்படுவது அரிது" என்று சொல்லும்படி கெட்டுப்போயிற்று. வைத்தியர்கள் லண்டனைவிட்டு வேறு சௌக்கியமான இடத்திற்கு போகவேண்டுமென்று சொன்னார்கள். இவள் தன்னுடைய சகோதரர் Edward உடன் இங்கிலாந்தின் தென்மேற்குக் கரையிலுள்ள "டார்க்வே" என்னும் ஒரு அழகிய பட்டணத்திற்கு வந்துசேர்ந்தாள். சில மாதங்கள் பிழைப்பாளோ பிழைக்கமாட்டாளோவென் றிருந்தாள். இவள் இப்படி இருந்தபொழுது இவளுக்கு மற்றொரு வியாகூலம் நேர்ந்தது. (எட்வர்ட் ஒரு சிறிய படகில் போகையில் ஜலத்தில் விழுந்து இறந்தார். கொஞ்சநாட்கழித்து அவர்பிணம் அகப்பட்டது. இதனால் எலிசபெத்துக்குண்டான வருத்தம் இவ்வளவு அவ்வளவல்ல. இவளுக்கு அந்த சங்கதியைக் கேட்டவுடன் மனவருத்தத்தினால் வியாதி மறுபடியும் பீடிக்கத்தொடங்கி, மிகவும் இவளுடைய தேகம் மெலிந்து சிநேகிதர்கள் ஒருவரையும் பார்க்கக்கூடாமலே சிலகாலமிருந்து, பிறகு அங்கிருக்க மனம்வராமல் லண்டனுக்கே வந்து சேர்ந்தாள். அங்கு படிப்பதும் கவிகள்எழுதுவதுந்தான் இவள்வேலை. இவள் வெகுநாள் வியாதியால் பீடிக்கப்பட்டு அயலாரைப் பார்க்காம லிருந்தமையால், இவளுடைய கவிப்பிரதாபத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு வந்தவர்களைப் பார்க்க இவளுக்கு கூச்சம் அதிகரித்தது.

நிலக்கரிச் சுரங்கங்களிலும் யந்திரசாலைகளிலும் சிறு பாலர்களை நிலக்கரி வண்டியை இடுப்பில் கயிறுகட்டி இழுக்கச்செய்வதினா லுண்டாகும் நினைத்தற்கரிய துன்பங்களைப்பற்றி இவள் எழுதி அவர்களுக்கெல்லாம் பெருநன்மையைச் செய்தனள். இவள் அவர்களுடைய துன்பங்களை எடுத்துக் காட்டுமுன், அவர்களுக்கு சூரிய வெளிச்ச மென்பதே தெரியாது; கல்வியும் அவ்வளவே. எப்பொழுதும் சிறு சந்துகளில் கரிவண்டிகளை குனிந்துகொண்டே இழுப்பதினால் நிமிர்ந்து நடப்பதே அருமை. விளையாட்டுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமேயில்லை. இடையில் ஓய்வில்லாமல் ஒரேகாலத்தில் 14, 15 மணிநேரம் வேலை செய்யவேண்டி யிருந்தது. ஆகையால் இவர்கள் சந்தோஷம் இன்னதென்று அறியவே அறியார்கள். சற்றேறக்குறைய இவர்கள் வாழ்க்கை மிருகஜன்மத்திற்கு சமானமாயிருந்தது. எலிசபெத் பெருமாட்டி இவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் பார்த்து மனம்வருந்தி அவைகளினின்றும் மீட்க ஜனங்களது கண்களைத்திறந்தனள். இவர் எழுதியபின்புதான் ஜனங்கள் 'பார்லிமெண்டு' மகாசபையை இது விஷயமாய் ஓர் சட்டம் ஏற்படுத்தும்படி தூண்டினார்கள். ஆனால் இச்சட்டங்கள் வெகுகாலம் சென்று ஏற்படுத்தப் பட்டாலும் அவைகளுக்கு மூலகாரணம் எலிசபெத்தே என்பதற்கு ஐயமில்லை. 1841ம் ௵ முதல் 1846ம் ௵ வரையில் இவள் லண்டனிலேயே யிருந்துகொண்டு படிப்பதும் கவியெழுதுவதுமாய் காலம்கழித்து வந்தாள். இப்பொழுது தான் இவளுக்கும், இவளைப் பிறகு மணஞ்செய்துகொண்ட

(Robert Browning) ராபர்ட் பிரௌனிங் என்பவருக்கும் முதல் முதல்
சிநேக முண்டாயிற்று. இவ்விருவரும் ஒவ்வொருவருடைய கவித்திறமை
யைப்பற்றி முன்னமேயே கேள்விப்பட்டிருந்தனர். இவர்களுடைய சிநேகம்
வரவர அதிகரித்து முடிவில் ராபர்ட் இவளை மணம்புரியக் கோரினார். இவள்
அவர் விருப்பத்துக் கிணங்கின், அவருக்கு நோயினால் எப்பொழுதும் வரு
ந்தும் தின்னால் யாதும் இன்பம் பயக்காது; மனத்துயரையே கொடுக்கு
மென்று அஞ்சி முதலில் தயங்கினார். ஆனால் அவர் வேண்டுகோளின்பேரில்
இவள் சம்மதித்தும், இவளுடைய தகப்பன் மறுக்கவே இவள் 1846ம் ஆு
செப்டம்பர்மீ ஒருவரும் அறியாமல் மணம்புரிந்துகொண்டு இங்கிலாந்தை
விட்டு இதாலியிலுள்ள பைஸா நகரத்தை அடைந்தனள். இங்கு கொஞ்ச
காலம் தங்கி கடைசியாக பிளாரன்சைச் சேர்ந்தார்கள். அப்பொழுது இதாலி
ஆஸ்திரியாவின் பந்தத்தினின்றும் விடுவித்துக்கொள்ள முயன்று வந்தது.
எலிசபேத் அக்காலத்தில் தன்னாலியன்றவளவு அவர்களுடைய சுவாதீனத்தை
மீட்க உதவிசெய்து மனங்களித்தனள். 1849ம்ஆு இவளுக்கு ஓர் அருமைப்
புதல்வன் உற்பவித்து இவளுடைய சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்த
னன். 1850-ம் ஆு இங்கிலாந்தில் சமஸ்தான கவியாகிய வேர்ட்ஸ் வேர்த்
என்பவர் இறக்க, சிலர் அந்த ஸ்தானத்திற்கு இவளை நியமிக்கலா மென்று
சொன்னார்கள். அக்காலத்தில் இவள் பிரதாபம் அவ்வளவு அதிகரித்திரு
ந்தது. இப்படி ("Italian") இடாலியர்களுக்கு உதவி செய்துகொண்டிருந்து
1861 ம் ஆுத்தில் இவள் இவ்வுலகத்தைத் துறந்தனள்.

எவ்விதக் கஷ்டத்திலும் பொறுமையா யிருந்துகொண்டு, தன் துக்கங்
களைப் பாராட்டாமல் அயலாருக்காகவே உழைப்பது இவளுக்கு ஒரு ஒப்ப
ற்றகுணமா யிருந்தது. இவள் ஒருபோதும் தான் வெளியிட்டு சொல்வது
இல்லை. ஆனால் மிகவும் முக்கியமான காலத்தில் நியாயத்திற்காக தன்னுயிரை
யும் துறக்கத்தயாரா யிருந்தவள். பிறர் சந்தோஷிப்பதைக் கண்டு தானுங்
களிப்பதும், அவர்கள் துயருறுங்கால் விசனமடைவதும் இவளுடைய இய
ல்பு. தெய்வபக்தியை அதிகமாக உடையவள்.

இவளுடைய பிரியமுள்ள தோழியான மிஸ் மிட்பர்ட் இவளைப்பற்றிப்
பின்வருமாறு வர்ணித்திருக்கின்றனள். மிகவும் மெலிந்து இளைத்த சிறு
பெண்போ லுருவமும், வெகு அழகுள்ள கைகால்களும், உருண்டை முக
மும், பெருந்தன்மை தோன்றும் பரந்த நெற்றியும், வெகு வனப்புவாய்ந்த
வாயும், பவழம்போன்ற உதடும், மிக வெண்மையான பற்களும், வண்டு
போற் கரிய விழியும், மேகம்போன்ற அடர்ந்த கூந்தலும், இத்தகைய பேரழ
குவாய்ந்த பெண்பாலின் சிறந்த குணத்தையும், பிரதாபத்தையும் எடுத்து
ரைக்கற்பாலதோ, ஆயினும் நம்மாலியன்றவளவு இங்கு சுருக்கிவரைந்தனம்.



# ஓர் எச்சரிப்பு.

பண்டிதை அசலாம்பிகை யம்மாள் எழுதியது:—

அறிஞர்களே! இத்தகைய பல விபரீதங்களும் பாலிகைகளுக்கு இந்து
பாடசாலைப்பயிற்சி யின்மையினாலேயே விளைபவைகளாதலின் அப்பயிற்சியி
னால்நாம் அடைந்துவரும் லாபம் அதிகமே. பாடசாலைப் பயிற்சியுள்ள பெண்
கள் பெருங் கல்விபெற்று அதனால் அறிவு விருத்தியடைந்து விளங்காவிடி
னும், பொதுவாய் வீணான வம்புக் கமிட்டிகளில் சேராதவர்களாகவும், விஷ
யாதி மர்மங்களில் ஆராய்ச்சி செய்யும் மனப்போக்கு அற்றவர்களாகியும்,
உபாத்தியாயருக்கு அஞ்சுதலால் கீழ்ப்படியுங் குண முடையவர்களாகவும்,
நடையுடை பாவனைகளில் நாகரீகத்தை யறிந்து நடப்பவர்களாய் வசை
மொழி, சண்டை சச்சரவுகளில் அதிகமாய்ப் பழக இடமில்லாதவர்களா
யும், கல்விப் பயிற்சியால் முகப்பொலிவு உள்ளவர்களாகவும் காணப்படுகின்
றனர். இதையே நமக்கு லாபகரமாகவும் திருப்திக்கிடமான முகாந்தரமாக
வும் மேலே குறிப்பிட்டதாம். இதற்கு மேல் அதிக பயனை நமது சிறுமிகள்
பெறுவதற் கில்லாமல் பாடசாலைகளினின்றும் நிறுத்தப்படுகிறார்கள். நிறுத்
தப்படவேண்டியது அவசியமே யாயினும், நிறுத்தப்பட்ட பின்னர் வீடு
களில் அப்பெண்களுக்குத் தங்கள் கல்வியை விருத்திசெய்துகொள்ளத்தக்க
வசதிகள் கிடைப்பது அபூர்வந்தான். மாமிமார்களுடைய விரோத அபிப்
பிராயமே பெரும்பான்மையு முண்டு. இப்பெண்கள் படிப்பதில் அவர்களுக்
குச் சிறிதும் சம்மதமிராது. காரணம் தாங்கள் படிப்பில்லாதவர்களா யிரு
க்க இவர்கள்மட்டில் படிப்புள்ளவர்களாய்விடின் தங்கள் புதல்வர்களுக்குப்
படிப்புள்ள மனைவியிடம் அதிக அன்பும், அதிக மதிப்பும் உண்டாகிவிடும்
என்னும் பொறாமையே. பொதுவாய் நமது வீடுகளிலுள்ள வயது முதிர்ந்த
மாதர்கள் யாவருக்குமே. தத்தம் புதல்வர்கள் இனிய முகத்துடன் தன்
மனைவியிடம் பேசினாலும், நெருங்கிப் பழகினாலும், அன்பைக் காட்டி நடந்
தாலும், சுயமாய் ஆடையாபரணங்களை வாங்கி யளித்தாலும், மனம் பொறு
த்த லரிதென்பது நிச்சயம். இவர்களிற் சிலர் தமக்குள் இத்தகைய விஷ
யங்களைக் காண்பதால் விளையும் ஆத்திரத்தைச் சகிக்கமாட்டாதவர்களாய்
வாய்விட்டே கூறிப் போர்மூட்டிக்கொண்டே யிருப்பார்கள்.

பாலிய சதிபதிகளும் சிலகாலம் மரியாதையாக விருந்து பிறகு அவர்
களுக்கும் துணிவுண்டாகி ஒருவர்க்கொருவர் பெரியோர் சிறியோ ரென்ப
தின்றி வார்த்தைகள் தடித்து தெருவா ரெல்லாம் பஞ்சாயத்திற்கு வரும்
படியும் வைத்துக்கொள்வதுண்டு.

இன்னுஞ் சிலர் மானத்திற்கஞ்சி வெளியில் விடாமல் அடங்கியே அவர்
கள் அநுமதி கேட்டு அவர்கள் உள்ளமட்டில் தானே என நடப்பதுண்டு.

பின்னுஞ் சிலர் தாயின் சொற்கேட்டு குற்றமில்லாத மனைவியெனினும், அவளை யடித்துப் புடைத்து சதா பற்பல துன்பங்களுக் குள்ளாக்கி அப் பெண்கள் தற்கொலை செய்யத்தகுந்த அளவிற்கும் கொண்டுவந்து விடுவதுண்டு. அப்பெண்களும் அவ்வாறே இக்கஷ்டம் தாள முடியாமல் உயிர் விடுவதுண்டு. ஆனால் இவ்வித கொடுஞ்செய்கை அறிவிலாதவர்களென் றெண்ணப்படும் படிப்பில்லாத ஆடவர்களிடத்தில் தான் நேரிடுமென்பது பிசகு. நல்ல நிலைமையிலும், தக்க பொருள்தேட்டமும், சாதாரணப் படிப்பும் உள்ள ஆண்பிள்ளைகளிடத்திலும் சம்பவிக்கின்றதுண்டு. நிற்க,

இன்னுஞ் சிலர் மனைவியின் போதனையையே குருவுபதேசமாகக் கொண்டு சாதுவாயுள்ள தாய் தந்தையரையும் கொடுமைக்குள்ளாக்கி அவர்களுக்கு மனைவியைக்கொண்டு படியரிசி யளக்கச்செய்து இனி ஏழேழுபிறவியெடுப்பினும் புத்திரன் வேண்டியதில்லை யென்று அவர்கள் கண்ணீர்வடிக்கும்படிச் செய்வதுமுண்டு.

படிப்பில்லாத பெண்களாக மருமக்கள்மா ரிருந்தாலும் அவர்கள் தங்கள் தாய் வீட்டிலிருந்து அதிகமாய்ச் சீதன வரிசைகள் கொண்டு வரவில்லையென்னுங் காரணங்களால் வெட்டுக் கருவிக ளுட்பட்ட பாக்கைப்போல சதா வயதுமுத்த மாமிவீட்டுப் பெண்டுகள் அனைவராலும் நிர்ப்பந்தப்பட்டே காலங் கழிக்கவேண்டும். ஆனால் இவ்விதத் துன்பங்கள் வரவர வெகுவாய்க் குறைவென்றே சொல்லவேண்டும். என்றாலும் பற்றறத்தவிர்ந்தபாடில்லை. முற்காலத்தில் மாமிநாத்திக் கொடுமைகள் மட்டில் இருந்தது. இக்காலத்தில் சிற்சில இடங்களில் நாம் மேலே கூறியபடி மருமகள் கொடுமை மகன் கொடுமைகளும் தோன்றி வருகின்றன. இதுவே குடும்ப நடவடிக்கைகளில் முற்காலத்திற்கும் தற்போதைக்கும் உள்ளமாறுதல்.

சிறுபான்மை இவ்வித மாறுபாடுகளுக் குட்பட்டிருப்பினும், நகரவாசிகளாய் இலௌகிக விர்த்தி யுடையவர்களாயுள்ள ஆடவர்கள் பெரும்பான்மையும் தத்தம் மனைவிமாருக்குக் கல்வியை விருத்திசெய்யும் விஷயத்தில் தாமே துணிந்து ஊக்கஞ் செலுத்திச் சகாயர்களாகவே இருந்து வருகிறார்கள். இதற்கு மேல்தான் நாம் ஆரம்பத்தில் எடுத்துக்கொண்ட அச்சத்திற் கேதுவாகிய அமிசம் யாதெனத் தீர ஆலோசிக்கவேண்டி யிருக்கிறது. அதாவது,

இவ்வாறு ஆடவர்களின் முயற்சியினால் கல்வி யபிவிர்த்தியைப் பெறும் பெண்கள் நன்னெறிப்படுவதற்கு இன்றியமையாததாகிய பல இனிய சரித்திரங்கள் நிரம்பிய நமது சுதேச பாஷையை நன்கு பயிற்றப்படாதவர்களாய் ஜீவனோபாய நிமித்தமாக ஆடவர்களால் பயிலப்படும் பிறதேச பாஷையாகிய ஆங்கிலத்தில் பயிற்றப்பட்டு வருகிறார்கள். இதைப் பயில்வதே உயர்ந்த நாகரீகமெனவும் மதிக்கின்றனர். சுதேச பாஷையாகிய அஸ்திவாரத்தில்



பல மில்லாமல் மேற் சுவர்போன்ற அன்னிய பாஷையால் இவர்கள் அடையும் பயன் தீமையேயென்று சொல்லக்கூடும். ஏனெனில் ஒவ்வொரு பாஷைகளும் ஒன்றற்கொன்று உச்சரிப்பில் எவ்வளவு வித்தியாஸமுள்ளவைகளோ அதுபோல அப்பாஷைகளைப் பயிலும் மதஸ்தர்களும், வெவ்வேறு வித்தியாஸமான கொள்கைகளையும் நடையுடை பாவனைகளையும் பெற்றிருக்கின்றதல்லாமல் ஒரே தன்மைத்தாக விருக்கவில்லை. சுதேச பாஷையாகிய இனிய தமிழில் அழுந்திய தேர்ச்சி யிருக்குமாகில், அன்னிய பாஷைகள் ஒன்றல்ல. எண்ணிறந்தவைகள் படித்தாலும் தீமைவிளையாதென்பது திண்ணம். பெற்ற தாய் இன்னவளென்று அறியாது ஒப்பாரித் தாயின் குலங் கோத்திரங்களைச் சிலாசாசனமாக்கி வைத்துக்கொண்டவனைப்போல, சொந்த பாஷையில் நல்லறிவை விருத்தி செய்விக்கப் பெறாமல் அந்நிய பாஷையைப் பயிறப்படுவதினால் அப்பயிற்சிக்குள்ளாகும் மாதர்களின் மனப்போக்கு, சுயமதப்பற்று, தெய்வப்பற்று, சுற்றப்பற்று, சாஸ்திர நம்பிக்கை முதலிய நற்குணங்களினின்றும் விலகித் தாங்கள் புதிதாய்க் கவலையுடன் பயிலும் அந்நிய பாஷையிலும், அதிற் றேர்ச்சி யுடையவர்களிடத்திலும், அப்பாஷையைச் சுய பாஷையாகவுடைய வேற்று மதத்தினர்களிடத்திலும் ஓர்வித மதிப்பும், நம்பிக்கையும் உண்டாகி அதன்வழி அன்னாரின்நடையுடைபாவனைகளிலும் விருப்புடையவர்களாகித் தமது தாய்ப் பாஷையையும் தாய் மதத்தினையும் அதிற் பற்றுள்ள சிலர்களையும் அவமதித்து அவர்களை அறிவிலாதவர்களாகவும், தாமே உயர் நலம் பயக்கும் உத்தம உபாயத்தைக் கண்டுகொண்ட நுண்ணறிவாளராகவும் கருதத் தலைப்படுகின்றனர்.

## ஸிம்பலஸன்.

(முன்தொடர்ச்சி)

இமோஜன்— நீங்க ளுரைத்தபடி நான் உங்களுடன் வரத் தயாராயிருக்கிறேன். ஆனால், முதலில் என் கைகளாகிய மண்வெட்டியால் பூமியை எவ்வளவு தூரம் தோண்ட முடியுமோ அவ்வளவு தூரம் தோண்டி அதில், ஈ, எறும்புகளினின்றும் காப்பாற்ற இவளை யடக்கஞ் செய்து, பிரேதக் குழியை இளந்தளிர், புஷ்பங்களா லலங்கரித்து, பின் ஜெபங்கள் செய்து, கருமங்களை முடித்து, என்னால் பெரு மூச்சுவிட்டு இரண்டு மூன்றுதரம் அழுத பின், உங்களுடன் வருகிறேன். பின்னால் நீங்கள் இட்ட வேலையைச் செய்யத் தயாராயிருக்கிறேன். என்னை இதுகாறும் அதிகப் பிரியத்துடன் ஆதரித்துவந்த எஜமானனை இங்கே இவ்விதம் விட்டுவிட்டுப் போகலாமா?

லூஷியஸ்— நல்ல வாலிபனே, என்ன ஆச்சரியம்! சிறிய பையனாகவிருந்து எனக்கு நல்ல புத்திகளைக் கற்பித்தாய். இனிமேலாக நான் உனக்கு எஜமானன் அல்ல, உன்னை என் பிதாவாக மதிப்பேன்.

மித்திரர்களே,

"மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறிய ரென்றிருக்க வேண்டாம்—கடல்பெரிது
மண்ணீரு மாகாத தனருகே சிற்றூரல்
உண்ணீ ருமாகி விடும்."

"முற்று முணர்ந்த வரில்லை முழு வதூஉம்
கற்றென வென்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகருந்தகரா கனங் குழாய்
கொல்லுலை கூடத்தி னால்."

என்றதுபோல் இச் சிறுபையன் எனக்கு நல்ல புத்தி சொன்னான். தவிர "அலர்கதிர் ஞாயிற்றைக் கைக் குடையுங் காக்கும்" என்பதுபோலவும் ஆள வந்தார், மகா பண்டிதராகிய கோலாகலனை யடக்கினதுபோலவும் என்னை இவ்வாலிபன் தன்னுடைய வார்த்தைகளினால் அடக்கிவிட்டான்.

நண்பர்களே! இப்பையன் எனக்கு மனித குணங்களைக் கற்பித்தான், ஆகையால் நல்ல புஷ்பங்கள் நிறைந்த ஒரு இடத்தைத் தேடி, கத்திகளாலும், வாள்களாலும், ஈட்டிகளாலும் ஒரு நல்ல குழியைத் தோண்டி, இப் பிரேதத்தை யடக்கஞ் செய்வோம். இவனை உங்கள் கையில் ஏந்தி வாருங்கள். வாலிபா! இவனை இராணுவவீரர்களுக்குத் தகுந்த ஆடம்பரத்துடன் அடக்கஞ் செய்வோம். விசனப்படாமல், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சந்தோஷத்துடனிரு. துக்கம் சுகத்துக்குக் காரணமா யிருக்கிறது. ஆகையால் இனிமேலாக நீ நல்ல பாக்கியசாலியா யிருப்பாய்.

என்று சொல்லி, அப்பிரேதத்தை இராணுவவீரர்கள் ஆடம்பரத்துடன் அடக்கஞ் செய்தபிறகு, இமோஜனை யழைத்துக்கொண்டு, லூஷியஸ் ரோமாபுரிக்கு வந்து பிரிட்டன் தேசத்தில் நடந்தனவற்றை சக்கரவர்த்தியிடத்தில் விவரமா யுரைத்தான். இதைக் கேட்டவுடன் சக்கரவர்த்திக்கு அடங்காக் கோபமுண்டாய், நல்லது, இன்றையதினமே யுத்தத்துக்குத் தயாரா யிருங்களென்று சொல்ல, உடன், யாவரும் ஆயுதபாணிகளாய் பிரிட்டன் தேசத்தை நோக்கிச் சென்று அத்தேசத்தை நெருங்கினார்கள். இவர்களில் இமோஜனும் லூஷியஸுடன் போனாள்.

இது இங்ஙனமிருக்க ஸிம்பலீனுடைய அரண்மனையிலுண்டான வரலாற்றை இப்பொழுது விவரமா யுரைப்போம். க்ளோட்டன் வெட்டுண்டபின் அவனைக் காணாமல் அரசன் மனைவி துக்கசாகரத்தில் மூழ்கி, உடம்பெல்லாம் மெலிவுற்று சோர்ந்துகொண்டிருந்தாள். இவ்விதம் நெடுநாளாக வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில் ஒருநாள்,

ஸிம்பலீன்— அங்கே சென்று என் மனைவி எந்த ஸ்திதியிலிருக்கிறாளென்று பார்த்துக்கொண்டுவா. க்ளோட்டனைக் காணாததினால் ஜுரம் வந்து பைத்தியம் பிடித்தவளைப்போல் தன்னுயிரை யிழக்குந் தருணத்தி லிருக்கிறாள். ஐயோ இச்சமயத்தில் என்ன செய்யவேண்டியதெனத் தெரியவில்லை. கஷ்ட காலங்களில் எனக்குத் தேறுதல் வார்த்தைகள் சொல்லி எனக்கு உயிருக்குயிராயிருந்த இமோஜன் போன இடம் தெரியவில்லை. பிரிட்டன் தேசத்தார் சண்டை செய்ய வந்திருக்கிற இச்சமயத்தில் எனக்கு யுக்தி சொல்லக்கூடிய என் மனைவியும் பிராணாவஸ்தையி லிருக்கிறாள். மூன்றாவது இச்சமயத்தில் அதிக உபகாரம் செய்யக்கூடிய அவளுடைய மகனும் எவ்விடம் போயினனோ அறியேன். "பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பதுபோல நான் பல துக்கங்களால் சூழப்பட்டிருக்கிறேன். ஐயோ! என்ன செய்வேன்? எனக்குத் தேறுதல் செய்வார் யாரையுங் காணேன். (பிஸானியோவைப் பார்த்து) இமோஜன் போன இடம் தெரியாததுபோல் பாவனைக் காட்டுகிற உன்னைச் சித்திரவதை செய்து உள்ளதை யறிந்துகொள்ளுகிறேன் பார்.



பிஸானியோ—மகாராஜாவே! நான் உங்களைச் சரண மடைந்தேன், என்னுடைய உயிர் உங்கள் கையில்தானிருக்கிறது. உண்மையாகச் சொல்லுகிறேன், இமோஜனிருக்கிற இடமும், அவள் எப்பொழுது எதற்காகப் போனாளென்ற விபரமும் யான் அறியேன்.

ஒரு பிரபு— இமோஜன் போன தினத்தில் க்ளோட்டன் இங்கேதானிருந்தான் நான் நன்றாய் அறிவேன், அவன் பொய் சொல்லவில்லை. க்ளோட்டனைத் தேடிப்பார்த்தால் காணலாம்.

ஸிம்பலீன்— இப்பொழுது முக்கியமான விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கவேண்டியிருப்பதால் உன்னை இப்பொழுது விட்டுவிட்டேன். பின்னால் உனக்குத் தக்க ஏற்பாடு செய்துகொள்ளுகிறேன்.

பிரபு— ரோமன் ஜாதியார் படையெடுத்து உங்கள் தேசத்தில் பிரவேசித்திருக்கிறார்கள். நாம் அதற்குத்தக்க ஏற்பாடுகள் செய்யவேணும்.

ஸிம்பலீன்— இச்சமையத்தில் எனக்கு புத்திசொல்ல என் மனைவியையும் காணேன் க்ளோட்டனையும் காணேன், என்னசெய்வேன்? பித்தம் பிடித்தவனைப் போலாய்விட்டேன்.

பிரபு— நீங்கள் செய்யவேண்டிய தொன்றுமில்லை, நம்முடைய இராணுவ வீரர்களை ஒன்றாய்ச்சேர்த்து யுத்தத்துக்குப் புறப்படவேண்டியதைத் தவிர இப்போது வேறொன்றும் செய்யவேண்டாம். ஆலோசிப்பதில் பிரயோசனமில்லை.

ஸிம்பலீன்— அப்படியே செய்வோம், நம்முடைய அதிர்ஷ்டம்போல நடக்கட்டும் போகலாம் வாருங்கள் (பிஸானியோவைத் தவிர மற்றவர்கள் போய் விட்டார்கள்.)

பிஸானியோ—இமொஜனிறந்த சமாசாரம் பாஸ்துமஸுக்குத் தெரிவித்தபிறகு அவனிடத்திலிருந்து ஒருகடிதமும்கிடைக்கவில்லை. இமொஜனிடத்திலிருந்து ஒருசங்கதியும் தெரியவில்லை. க்ளோட்டன் எந்தஸ்திதியிலிருக்கிறானென்றும் அறியேன். இவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்களோ? இமொஜன்! நீ எவ்விதம் தவித்துக்கொண் டிருக்கின்றனையோ நீ ஆண்வேடந்தரித்து ரோமாபுரிக்குப் போகவேணுமென்று சுலபமாகச் சொல்லிவிட்டேன். நீ படுகிற கஷ்டத்தை நானு இப்பொழுது பார்க்கிறேன் என்று சொல்லி அவனும் வந்தவழி போய்விட்டான்.

லூஷியஸ் தன்சேனைகளைச் சேர்த்துக்கொண்டு பிரிட்டன் தேசத்தின் மேல் படையெடுத்துப் போனதாக முன்னுரைத்தோம். இவ்விரு ஜாதியாரும் அதிக பயங்கரமாக யுத்தம் செய்துகொண்டிருக்கையில் பெலாரியஸ், கைடேரியஸ் ஆர்விராகஸ் இம்மூவரும் வசித்துக்கொண்டிருக்கிற குகையில் நடந்தனவற்றை விவரிப்போம்

கைடேரியஸ்— நம்மைச் சுற்றிலும் அதிகசத்தம் கேட்கிறது, என்ன சங்கதியோ அறியேன்.

பெலாரியஸ்— ரோமன் ஜாதியாருக்கும் பிரிட்டன் தேசத்தாருக்கும் யுத்தம் நடக்கிறதென்று தோன்றுகிறது. நாம் இதைவிட்டு சீக்கிரம் ஓடிப்போவோம் வாருங்கள்.

ஆர்விராகஸ்— ஒருவேலையும்செய்யாமல் இங்கேஅடைப்பட்டுக் கொண்டிருக்கிறதினால் நமக்கு என்ன சுகமுண்டு. அங்கே சென்று என்னவென்று பார்த்து நம்மாலான உபகாரத்தைச் செய்துவிட்டு வருவோம். சீக்கிரம்போவோம்.

கைடேயேஸ்— நாம் இவ்விதம் ஒளித்துக்கொண் டிருக்கிறதினால் நமக்குஎன்ன பிரயோசனமுண்டு? நாம் அங்கே போகாமற்போனால் ரோமன் ஜாதியார் நம்முடைய ஸ்திதியைஅறிந்து பிரிட்டன் தேசத்தாரென்று எண்ணிநம்மை ஒன்றில் கொல்லுவார்கள்; அல்லது நம்மை அவர்களுடன் சேர்த்து சண்டைசெய்யச்சொல்லி சண்டை முடிந்தபின் நம்மை வெட்டுவார்கள்; இது திண்ணம், பிதா! என்னசொல்லுகிறீர்கள்.

பெலாரி— பிள்ளைகளே! நாம் சீக்கிரம் மலையினுச்சியில் போய் ஒளித்துக்கொள்ளுவோம். சண்டையில் அரசனுடைய பக்கத்தில் சேரக்கூடாது, ஏனென்றால் க்ளோட்டன் இறந்துபோன விபரம் ஒருவரும் மறந்திருக்கமாட்டார்கள். அவர்களுடைய சேனையில் நாம்புதிதாயிருப்பதினால் நாம் எவ்விடத்திலுள்ளவர்களென்றும்,நம்முடையசமாசாரங்களைத் தெரிவிக்கும்படியாயும் உத்தரவு செய்வன். அப்பொழுது க்ளோட்டனிறந்தது வெளியாகும்! அது கேட்டவுடன் அரசன் நம்மை சித்திரவதை செய்து நம்முயிரை வாங்கிவிடுவன் 'ஆகையால் சீக்கிரம் மலையினுச்சியில் போய் ஒளித்துக்கொள்ளுவோம் தாமதிக்கவேண்டாம். போவோம் சீக்கிரம்'

கைடே— இச்சமயத்தில் இந்த பயத்தை வைத்துக்கொண்டிருக்கிறது உமக்குத் தகுதியில்லை. நீங்கள் சொன்ன காரணமும் எங்களுக்குத் திருப்தியாகவில்லை "பிதா சண்டைக்குப் போகலாம் வாருங்கள்" ஏ தம்பி! சீக்கிரம் புறப்படு நேரமாய் விட்டது.

ஆர்விராகஸ்— ரோமன் ஜாதியாரும் பிரிட்டன் தேசத்தாரும் மும்முரமாய்ச் சண்டைசெய்கிற இச்சமையத்தில் தானா நம்மைப்பார்த்து எங்கேயிருந்து வந்தீர்களென்று கேட்கப்போகிறார்கள். உமக்குப்பைத்தியம் பிடித்துவிட்டதா? பிதா! நான் இதோபோய் வருகிறேன் விடைதரவேணும்.

பெலாரியஸ்— சேனையிலுள்ள அனேகம் பேர்களுக்கு என்னை நன்றாய்த் தெரியும் ஆகையால் என்னைக்கண்டுபிடித்து அரசனிடத்தில் சொல்லுவார்கள் அதினிமித்தம் நமக்கு ஆபத்துநேரிடும். இவ்வளவு வருஷத்தில் என்னை மறந்துபோ யிருப்பார்களென்று நீங்கள் சந்தேகிக்கலாம். நான் க்ளோட்



டனை சிறவயதில்தான் பார்த்தேன். அவனைக் கண்டவுடன் அவன் இன்னானென்று நிச்சயமாய்ச் சொல்லவில்லையா, ஆகையால் அங்கே போகவேண்டாம். தவிர இந்த அரசனுக்கு நாம் உபகாரஞ் செய்யவேண்டிய கடைமையுமில்லை; சீக்கிரம் மலையினுச்சிக்குப் போவோம் வாருங்கள். சீக்கிரம் போவோம்.

கைடேரி— பிதா! சீக்கிரம் சண்டைக்குப்போகலாம் சண்டை முடிந்தபின் அங்கே போனால் பிரயோசனமில்லை. எங்களிருவரையும் ஒருவரும் அறியமாட்டார்கள். நீங்களோ முன்னிலும் இப்பொழுது அதிகவயது சென்றவரா ய்விட்டீர்கள் ஆகையால் நம்மைக்கண்டால் ஒருவருக்கும் இன்னாரெ ன்று கண்டுபிடிக்க முடியாது, தாமதியாமல் சண்டைக்குப் போகலாம், செலவு கொடுக்கவேணும்.

ஆர்விரகஸ்— சூரியன்மேல் ஆணையிடுகிறேன் நான்இதோ சண்டைக்குப்போகிறேன். காட்டு மனிதர்கள் இறக்கிறதைக் காணாத ஜென்மம் என்ன ஜென்மம்? காட்டு மிருகங்களுடைய இரத்தத்தைத் தவிரவேறே இரத்தத்தை இதுவரையில் காணவில்லையே! என்ன பரிதாபம்! வேட்டைக்குப் போகிற சமயத்தில் தவிர வேறே விஷயங்களில் குதிரையேறிப் போனதையும் காணவில்லை. குதிரைகளை ஓட்டுகிறதற்குத் தூண்டுதல் செய்யும் முள்ளையும் நான் இதுவரையில் கண்டதேயில்லை. ஐயோ! சூரிய கதிர்களின் உபயோகத்தைப் பெற்றுக்கொண்டு நான் உபயோகமற்றவனா யிருக்கிறதை நினைக்கிறபோது என் மனம் வெட்கத்தால் வாடித் துடிக்கிறது; பிதா! தயவுசெய்து சண்டைக்குப்போக உத்தரவு கொடுங்கள், நேரமாய் விட்டது.

கைடே— கடவுள் பேரில் ஆணையிடுகிறேன், நான் யுத்தத்துக்குப் போகத்தயாரா யிருக்கிறேன். பிதா எங்களை யாசீர்வதித்து அனுப்புங்கள், அதினால் எங்களுக்கு க்ஷேமமுண்டாகும். இல்லையானால் எங்களுக்குவரப்போகிறதை யனுபவித்துக் கொள்ளுகிறோம்.

ஆர்விராகஸ்— நானும் அவ்வண்ணமே வேண்டிக்கொள்ளுகிறேன். பிதா, நீங்கள் பயப்படுகிறதினால் வரவேண்டாம்; நாங்கள் போய் வெற்றியுடன் சீக்கிரம் திரும்பி வருகிறோம், விடைகொடுத்தனுப்ப வேண்டிக்கொள்ளுகிறோம். நீங்

பெலாரியஸ்— இதைப்பற்றி வீணாய் வழக்காடுவதில் பிரயோசன மொன்றுமில்லை. நீங்களோ உங்களுடைய உயிர்களைத் திரணமாக நினைக்கிறீர்கள். இப்படியிருக்க நான் என் என்னுயிரைப் பிரமாதப்படுத்திக் கொள்ளுகிறேன்? மைந்தர்களே! சண்டைக்குப் போகலாம் வாருங்கள். உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள் இச்சண்டையில் நீங்கள் வெற்றிபெறக்கடவீர்கள், இதில் நீங்கள் இறந்தால் அதேஎனக்குப் படுக்கையிடமாகும். நான் இவ்விடத்தில் தானே என்னுயிரை விடுவேன் கடவுளே! இந்த யுத்தத்தில் இவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கவேணும், தாமதிக்கவேண்டாம் சீக்கிரம் போங்கள் (தனக்குள்) இதுதான் இவர்களுக்குத் தகுந்த சமயம். இவர்களுடைய நரம்புகள் படபடவென்று துடிக்கின்றன. சிற்றரசர்களுக்குரிய இரத்தம் இவர்கள் முகமெல்லாம் விரைவில் ஓடி தாங்கள் சிற்ற

ரசர்களென்று ரூபிக்கக் கூடிய சமயமாயிருக்கிறது. மைந்தர்களே! சீக்கி
ரம் போகலாம், தாமதிக்கவேண்டாம்.

கைஊரியஸ்.

ஆர்விராகஸ்— இதுவரையில் இதைப்போல் சந்தோஷ மடைந்ததேயில்லை. பிதா! நாங்
கள் இதற்காக வந்தனமளிக்கின்றோம்.

என்று சொல்லி மூவர்களும் ஆயுதபாணிகளாய் யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள்.

வி. கோபால ஐயங்கார் பி. ஏ,

# சத்தியவதி.

## 3-ம். அதிகாரம்.

அந்த மறுநாள் முதற்கொண்டு ஸ்திரீகள் எங்கு பார்த்தபோதிலும்
சத்தியவதியின் தப்பிதங்களையே சொல்லிக்கொண்டு மூக்குகளின்மேல் விர
ல்களைவைத்து ஆச்சரியப்படத் தலைப்பட்டார்கள். அவர்கள் சத்தியவதியி
னிடம் முதல்முதல் கண்டுபிடித்த பெரியதப்பிதம் பகலில் தன் புருஷனு
டன் பேசியதாம். இதென்ன ஆச்சரியமோ? யசோதையம்மாளின் இரண்டா
வது மருமகள் மாமனார் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே நேற்று புருஷ
னுடன் குசுகுசுவென்று பேசினாளென்று சொல்பவள் ஒருத்தியும், எப்பொ
ழுதுமில்லாத இப்பேர்ப்பட்ட விநோதமான விஷயங்கள் உண்டாவதைப்
பற்றி காலத்திற்கு ஏதோ வந்ததென்று சொல்பவள் ஒருத்தியும், இக்கால
த்தி லிருப்பவளுக்கு அடியோடு மாமியார் மாமனார் லக்ஷியமே யில்லையென்று
சொல்பவள் ஒருத்தியும், நம்முடைய காலத்தில் பகல்காலத்தில் புருஷனுக்கு
முன் ஒருபெண் நின்றால் அவள் பிழைத்திருப்பாளா வென்று. சொல்பவ
ளொருத்தியும், நான் அவளுக்கு மாமியாயிருந்தால் இப்பேர்ப்பட்ட ஆட்ட
ங்களுக்கு இடங்கொடுப்பேனா வென்று சொல்பவ ளொருத்தியும், முற்கா
லமா யிருக்கும்பட்சத்தில் இப்பேர்க்கொத்த காரியங்களைச் செய்ததற்கு
வாழைப்பட்டையை உரிப்பதுபோல் தோலை யுரித்துவிடுவேனென்று சொல்
பவளொருத்தியும், கிணற்றண்டையிலும், ஸ்நானஞ்செய்கிற விடத்திலும்
சேர்ந்து கிழங்கள் நானாவிதமாக கைகளை நீட்டியும், வார்த்தைகளை நீட்டி
யும் பேசிக்கொண்டிருந்தார்கள். சத்தியவதியின் சொந்த மாமியார் வீட்டில்
அவளை திட்டினதிட்டிற்கு அளவே கிடையாது. சத்தியவதியினிடம் அந்த
ஊரார் கண்டுபிடித்த இரண்டாவது தப்பானது இவளுடைய படிப்பு. இவளு
டைய தாய்தந்தையர்கள் படித்தவர்களாதலால் இவளைப் பாலிகா பாடசா
லைக் கனுப்பியும், சாவகாசம் நேர்ந்தபோதெல்லாம் தங்கள்வீட்டில் பாடஞ்
சொல்லிக்கொடுத்தும், சத்தியவதிக்கு தெலுங்கில் உருசியுண்டாக்கி நன்
றாய் வாசிக்கவும், எழுதவும், படித்தவிஷயத்தின் அர்த்தத்தைத் தெரிந்து



கொள்வதற்கும், கற்பித்துவந்தது மல்லாமல், சமயம் நேர்ந்தபோதெல்லாம்
கதை, லோகவியவகாரம் முதலியவைகளின் மூலமாக நல்ல நீதிகள் மனதில்
பதியும்படி போதித்தும், சத்தியம் பொறுமை முதலிய சற்குணங்களையும்
உண்டாக்கி விருத்தியடையும்படி செய்து வந்தார்கள். இதனால் இவள் சந்
மார்க்கத்திலேயே நடந்துவந்தாள். தற்காலத்தில் அரைப்படிப்புப் படித்தவ
ர்களும், படிப்பிலாதவர்களும் சாதாரணமாய் கலியாணமானவுடனே தங்கள்
பெண்ஜாதிகளை பாடசாலைக்கு அனுப்பக்கூடாதென்று தங்கள் மாமனார்களு
டன் சண்டைசெய்வது போலல்லாமல், நாராயணமூர்த்தி தன்மனைவியை படி
ப்பிப்பதற்காக மாமனார், மைத்துனன், மற்றுமுள்ளவர்களுக்கு மனவருத்த
மில்லாமல், யாவரு மறியாதபடி, தானும் புத்தகங்களை வருவித்துக் கொடு
த்து இரகசியமாய்க் கற்பித்து வந்தார். அதனால் சத்தியவதி வித்தையிலும்,
புத்தியிலும் தனக்கிணை யொருவருமில்லையென்று கண்டோர்கூறும்படி அதி
கமாக தேர்ச்சியடைந்தாள். தற்காலத்தில் அற்பபடிப்பு படித்த சில பெண்
கள், அல்லிஅரசாணிமாலை, புலந்திரன்களவு, தேசிங்குராஜன்கதை, ஏணியேற்
றம், ஏலப்பாட்டு முதலியவைகளைப் படித்து காலங் கழிப்பதைப்போலக்
காலத்தைக் கழிக்காமலும், அப்பேர்ப்பட்ட சிருங்கார புத்தகங்களின்
பேரையும் கேட்க விருப்பமில்லாமலும், தனக்குச் சாவகாசமுண்டான கால
ங்களில் பதிவிரதா சிரோன்மணிகளின் சரித்திரங்களையும், நீதி நூற்களையும்,
படித்துக்கொண் டிருப்பாள். பக்கத்திலிருக்கும் பெண்களுக்கு, இதர பெண்
களின்மீது குற்றங் கூறுவதையே தொழிலாகக்கொண்டு காலத்தைக் கழிக்
கும் பெண்களுடன் இவள் கூடாமலிருப்பதைக் குறித்து வருத்தமா யிருந்
தது. இதன்றியும், அவள் சொக்கட்டான், பந்து, கழங்கு, அம்மனை முதலிய
ஆட்டங்கள் ஆடுவதைவிட்டு சதா படித்துக்கொண் டிருக்கிறாளென்பதைக்
குறித்தும் அவள்மீது அவர்களுக்குக் கோபமாயிருந்தது. சத்தியவதியின்
மாமியார், எவ்விதத்திலாவது அவளுடைய படிப்பை நிறுத்தவேண்டுமென்று
மன உறுதிகொண்டு, "பெண் வாசித்துக் கெட்டாள், புருஷன் வாசியாமற்
கெட்டான்" என்கிற பழமொழியை யுதாரணமாகக் காட்டி, ஸ்திரீகள் படி
த்து கச்சேரியில்போய் உத்தியோகஞ் செய்யப்போகிறார்களா? ஆகையால்
உனக்கு படிப்பு என்னத்திற்கு, அதை விட்டுவிட்டு வீட்டு வேலைகளைப் பாரெ
ன்றும், அக்கம்பக்கத்தி லுள்ளவர்கள் நீ எக்காலமும் படித்துக்கொண்டிரு
ப்பதைப்பார்த்து சிரிக்கிறார்களென்றும், அதனால் எனக்கு தலையிறக்கமா
யிருக்கிறதென்றும், பலவாறு நிந்தித்து, படிக்கக் கற்றுக்கொண்ட பெண்
ணும், சமையல்செய்ய கற்றுக்கொண்ட புருஷனும் இல்லற தருமத்துக்குரிய
ராகார்களென்பது உண்மையென பலவிதமாக திட்டுவாள். சிலவேளை சத்தி
யவதியின் புத்தகங்கள் தன்கையிற் கிடைத்தால் அவைகளைக் கிழித்தெறிந்து
விட்டு, நயத்திலும் பயத்திலும் திட்டியும், அடித்தும் தன்வல்லமை முழுவ
தையும் உபயோகித்து வந்தாளேயொழிய சத்தியவதியினுடைய வாசிப்பை

தன்றால் நிறுத்த முடியவில்லை. சத்தியவதி இவைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு பதில்வார்த்தை ஒன்றும் பேசாமல், பகற்காலத்தில் போஜனமுண்டு தன் மாமியார் படுத்துக்கொண்ட பிறகு, தன் அறைக்குட்சென்று கதவைத் தாளிட்டு படித்துக்கொண் டிருப்பாள். இராத்திரி காலத்திலும் இவ்விதமாக தன் கல்வியை விருத்தி செய்துகொண்டு வந்தாள். படிப்பில் ஆசை ஒன்றுமாத்திரம் இருக்கும்பட்சத்தில் எவ்விதத்திலும்கற்றுக்கொள்ளலாம். ஆசை யில்லாமற்போனால், எத்தனை புத்தகங்க ளிருந்தபோதிலும் அதனால் ஒரு பிரயோஜனமும் ஆகமாட்டாது.

சத்தியவதியிடம் அவ்வூரார் கண்டுபிடித்த மூன்றாவது தப்பிதமாவது யாதெனில்: தான் சுத்தியாயிருப்பதுடன், தன்வீட்டுக் காரியங்களை யெல்லாம் சுத்தமாய் வைத்துக்கொண்டிருப்பதுதான்.

## மாயாபுரி விநோத கதை.

### 136-ம் பக்கத் தொடர்ச்சி.

இப்படியாக மங்களாம்பாளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அவிநாசிபோய் மூத்தம்மாள் வீட்டினுட்புகுந்து சின்னம்மா! என்று கூப்பிட்ட மதுரவசனங் காதிற்பட்டவுடனே, மரணதருவாயிலிருப்பவர்க்கு அமிர்த சஞ்சீவி கிடைத்தாற்போல மனமிக மகிழ்ந்து தனது துயரமெல்லாவற்றையும் மறந்து ஓடிவந்து தன் பாதத்தில் பணிந்த ஜகதீசனை யிருகைகளாலுந் தூக்கி மடியில் வைத்து முத்தமிட்டு, அப்பா! என் செல்வக் குழந்தாய்! நீ க்ஷேமமாய் வந்து சேர்ந்தாயோ? உன் எண்ணம் நிறைவேறிற்றோ? என்று வினவ அம்மா! உமது பூர்ணகிருபையும், ஆசீர் வசனமும் இருக்கும்போது ,எனக்கென்ன குறைவு இருக்கின்றது? எல்லாம் நிறைவேறிற்று. அஃதிருக்கட்டும் வயலூர் சமாசாரம் ஏதாவது தெரியுமோவென்று கேட்க, அவள் அப்பா குழந்தாய்! அந்த வயிற்றெரிச்சலையென்னென்று சொல்வேன்? நான் உனது சொல்லின்படி மங்களாம்பாளுக்கு ஆறுதலும், திடமும் கூறிக்கொண்டிருக்கையில் அவளுக்குவிவாக நிச்சயமாயிற்று. அதுகேட்ட அப்பொழுதே அவள் வியாதிப்பட்டு எவ்வித வைத்திய சிகிச்சையாலும் சொஸ்தப்படாமல் மரணகாலத்தையும், உன்வரவையு மெதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் ஒருநாளிரவில் அவள்மாயமாகக் காணமற்போனாள். அவளுடைய தகப்பன் உலகமுற்றுந் தேடிப்பார்த்தும் அவள் அகப்படாமையால் கடுஞ்சினத்தோடு, என்பர்த்தாவிடம்வந்து அடாமூடா! குடிகேடா! உன்னாலேதான் இந்த நிந்தனைக்காளானேன். நீயே என்னை மோசஞ்செய்தாய். என்வலிமையை நீயறியாயா? நல்லது உனக்குத் தகுந்தபுத்தி சொல்கிறேனென்று கறுவிக்கொண்டு போனான். பிறகு ஒருவாரஞ் சென்றதும் புஜங்காபுரியிலிருந்து இராஜகிங்கரர்கள் வந்து என் பர்த்தாவைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது குப்புசுவாமி ஐயர் வந்து என்கணவனைப்பார்த்து அடா! இப்பொழுது என்ன சொல்கிறாய்? உன் தோழர்களும் சீக்கிரம் வருவார்கள். நீங்கள் அடையப்போகிற கதியைக் கண்குளி



ரக்கண்டுகளிக்க நானும் வருவேன், போவென்று சொன்னான். பிறகு எனக் கொன்றுந் தெரியாது. பித்தம் பிடித்தவள் போலானேன். இன்று உன்னைக்கண்டதும் கண் திறந்து பார்த்தேன். மனமகிழ்ச்சி கொண்டேன். வானத்தை யெதிர்நோக்கி வாடும் பயிர்போல உனது வரவுக்கெதிர் பார்த்திருந்த எனக்கென்ன சொல்லுகிறாய் என்றாள். ஜகதீசன், சின்னம்மா! உமக்கொரு குறைவும் வாராது. சிறிது நேரத்துக்குள் மங்களாம்பாள் உம்மைக்கண்டு பேசுவாள். அவளோடு மகிழ்ந்திரும். நான் விடியுமுன் உம்மைவந்து காண்பேன். என் தந்தையிடம் போய்வருகிறேன். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாமென்று கூறிப் புஜங்காபுரிபோய் அவ்விடமிருக்கும் சிறைச்சாலைக்குப் பக்கத்தில்போய் நின்றுகொண்டிருந்தான்.

அப்பொழுது பாதியிரவாயிற்று. காவற்காரர்களும் அயர்ந்து நித்திரைபோனார்கள். சற்றுநேரம் பொறுத்து அச்சிறைச்சாலையைச் சுற்றிவருகையில் "சுவாமி! நமதுகதி யிப்படியாயிற்றே; இனிச்செய்வதென்ன? நாளைக்கோ நாளன்றைக்கோ நமக்கு மரணம் சம்பவிக்குமென்பதில் தடையில்லை. நமது புத்திரனை யினிப்பார்ப்போமென்கிற நம்பிக்கையு மொழிந்தது. நமக்கு அன்ன தாதாவாயிருந்த பிள்ளை யவர்களுக்கும் அபாயம் வந்துவிட்டது. தர்மம் தலைகாக்கும் என்கிற ஆப்தவசனமும் பொய்த்துப் போயிற்று. பாபியாகிய எனக்கு உபகாரம் செய்யாதிருந்தால் அவர்களுக்கு இந்தக்கெடுதி நேரிட்டிராது; இந்தக் காட்சி காணவோ நான் பெண்ணாகப் பிறந்தேன். நான் அவிநாசிக்குப் பெண் கேட்கப் போகாதிருக்கும் பட்சத்தில் ஒரு கெடுதியும் வந்திராது. சுவாமி! தமது புத்தியைக் கேளாமல் அவிநாசி போகவேண்டுமென்று பிடிவாதமாய் நின்று, தேவரீருக்கும், எனது உபசாரிகளுக்கும் பெருங் கேடுவிளைத்த மஹா பாவியாகிய எனக்கு என்ன கதி கிடைக்குமோ தெரியவில்லை. இனிமேல் செய்வதென்ன? என்று கூற, அதற்கு மறுமொழியாக அம்மா! எங்களுக்கு நேர்ந்த துன்பத்தைப்பற்றித் தேவரீர் கவலைப்படவேண்டுவதில்லை. குரு சுவாமியார்க்கு நேர்ந்த அவமானமும், துன்பமுமே யென்மனதை வருத்துகின்றது. அதற்கொரு பரிகாரமும் செய்யச் சக்தியில்லாத மஹா பாவியாய்விட்டு என்வி திக்கே நொந்து வருந்துகிறேன் என்று கூறிய தொனிகேட்டு இதுதான் நமது மாதாபிதாக்க ளிருக்குமிடமென்று கருதி யங்கேயே நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது சிவசுவாமி ஐயர் அவர்கள் பிள்ளையவர்களே ! எனக்கு அன்னவஸ்திரங் கொடுத்து உதவிசெய்த உமக்கு இக்கெதிவருதல் கூடாது. நீர்தான் எனக்குஉபகாரியா யிருந்தீர். இந்தச் சுந்தர ஐயர் அதற்காகச் சிறைச்சாலையிற் குடும்பத்தோடு பிரவேசஞ் செய்தீர்கள். அதற்காக அவருமவர்கள் ஒருநாள் தமது வீட்டில் வைத்திருந்ததேயன்றி வேறில்லை. ஒருவனால் பலர் கஷ்டப்படுவது இதென்னபாபம்! ஒருவனால் பலர் கஷ்டப்படுவதும், பலரால் ஒருவன் கஷ்டப்படுவதும் உலக வியற்கையானாலும் காரணமில்லாமல் என்னொருவனால் இத்தனை ஆத்மாக்கள் கஷ்டப்படுவதை நினைக்குந்தோறும் நெஞ்சம் புண்படுகின்றது. அத்துடன் நமது செல்வப் புத்திரர் காணமற்போனது பொறுக்க முடியாத துயரம். எல்லாவற்றுக்கும் தெய்வத்தையே நம்பியிருக்கிறேன். ஒரு கெடுதியும் வாராது; நன்மையாகவே முடியுமென்கிற நம்பிக்கை பூரணமாக விருந்தாலும் மனமட்டும் பதைப்பு அடங்கவில்லை யென்று கூறியவுடன் அவர் கண்களினின்றும் முத்துகள் போல நீர்த்துளிகள் சிந்தின. அதைக்கண்ட மற்றவர்களும் கண்ணீர்சொரிந்து கலங்கி யழுதார்கள். இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த ஜகதீசன் நமது ஜனங்கள் மெத்த வருந்தினார்கள். இதுதான் சமையமென்று கருதி இதோ நான்வந்தேன் நான்வந்தேனென்று சொல்லிக்கொண்டே யவர்களுக்கு மத்தியில் வந்து நின்று தன் பிதாவை வணங்கினான்

அப்பொழுது அவருக்கு உண்டான சந்தோஷ மெப்படி யிருந்திருக்குமென்று இதைப்
படிப்பவர்களே ஊகித் தறிந்துகொள்ள வேண்டியது. உடனே விஜயலட்சுமி அம்மாள்!
பாதங்களிற் பணிந்து தாயே வருந்தவேண்டாம், மனத்துயரொழியுங்கள். உங்களை யிவ்
வளவு துயரத்தில் வந்து காணும்படியாக இருந்த என் விதியையே நொந்துகொள்ள
வேண்டும். இனிக் கவலையை விடுங்களென்ற வுடனே தன் அருமைக்குமாரனது தீங்
குரலைக்கேட்ட தாய் தன்னை மறந்து, இன்னது செய்வதென்று தெரியாமல் சிறிதுநேர
மிருந்துவிட்டாள். எல்லாரும் ஆச்சரியத்தால் பிரமித்திருந்தார்கள். அப்பொழுது தாயா
னவள் தன் புதல்வனை வாரித் தழுவி முத்தமிட்டுத், திருமேனி முழுவதையும் தன் மெது
வான கைகளால் தடவி அப்பா குழந்தாய்! இப்பொழுதாவது உன் முகத்தைப் பார்க்
கும்படியா யிருந்ததே. நீயும் இத்துயரம் அனுபவிக்க வந்துவிட்டாயோ? இதுவுமெங்
கள் கர்மந்தானென்று கூற சிவசுவாமி ,ஐயர் முதலாக ஒவ்வொருவரும் அவனைக் கட்
டித்தழுவி முத்தமிட்டுக் கொஞ்சிக் களித்தார்கள். தந்தையானவர் குழந்தாய்! நீ யிதுகா
லும் யாதுசெய்தாய்? உன்க்ஷேம சமாசாரம் கூறு என்ன, அவன் அப்பா! சற்றுநேரம்
பொறுத்துச் சொல்லுகிறேன் என்றவுடன் அவர்களுக்கு நித்திரை மயக்க முண்டாகத்
தங்களை மறந்து தூங்கிவிட்டார்கள். உடனே ஜகதீசன் அவர்களோடு மாயாபுரிபோய்ச்
சேர்ந்து மங்களாம்பாளிடம் வரும்போது அவள் சௌந்தரவல்லியோடும், சின்னம்மா
ளாகிய முத்தம்மாளோடும் எதிர்கொண்டு வந்து அழைத்துப்போய் ஓர் இரத்தினாசனத்
தில் உட்காரச்செய்து அவன் மனங்களிக்க இன்பமான மதுரவசனங்கள் பேசிக்கொண்
டிருக்கும்போது முத்தம்மாள் அப்பா! உனக்கு இவ்வளவுமகிமை யுண்டாகச்செய்த ஆண்
டவன் திருவருள் நீடூழி வாழக்கடவது. உன் தாய்தந்தையரைக் கண்டாயா? எனச், சின்
னம்மா! இதோ எல்லாரும் வந்திருக்கிறார்கள். அவர்களை நாம்போய்ப் பார்ப்போமென்று
கூறி மங்களாம்பா! உன்மாமியார் மாமனார் முதலாயினோர் வந்திருக்கிறார்கள். அவர்
களைப் பார்க்க வேண்டாமா? அவர்கள் மெத்தவுங் களைத்திருக்கிறார்கள். சில சிற்றுண்டி
யான வர்க்கங்களோடு வாவென்றான். அவள் உள்ளமும் உடலும் பூரித்துப் பக்கத்திரு
ந்த பணிவிடைப் பெண்களின் முகத்தை நோக்கினாள். குறிப்பறிந்த அவர்கள் அந்தக்ஷ
ணமே சென்று வேண்டியவற்றை யெடுத்துக்கொண்டு வந்தது கண்டு ஓ! என் பிரா
ணேசா! என் இன்னமும் தாமதமென, அவன் ஆசனத்தினின்று மெழுந்திருந்து யாவ
ரும் சூழ்ந்துவரச் சிங்கார மண்டபத்துட் புகுந்து மங்களாம்பா! அதோ பார்த்தாயா ?என்
றவுடனே அவள் திடுதிடுஎன்று நடந்து சென்று தன் மாமியார் பாதத்தை தனது செந்தா
மரைக் கைகளால் தடவ அவள் விழித்துக்கொண்டு திப்பிரமையடைந்து நிற்கையில்
சௌந்தரவல்லியும் அவ்விருவரும் அவள் பாதத்தில் வணங்கி நின்றார்கள். முத்தம்மாள்
வந்து அம்மாவிஜயலட்சுமி! இவர்தான்மங்களாம்பாள் இவ்விருவரும்உன் மருகியர். நீநல்
லபாக்கியம் பண்ணியிருந்தமையால்இந்தப்பெண்மணிகள்உனக்குக்கிடைத்தார்களென்று
பக்கத்திலுட்கார்ந்தாள். இந்தத்தொனி கேட்ட யாவரும் விழித்துக்கொண்டு கண்திறந்து
பார்த்துத் தமக்குத்தாமே சந்தேகமடைந்து இது வென்ன புதுமையென்று மதிமயங்கி
யிருக்கையில் ஜகதீசன் வந்து தாய்தந்தையரையும் சுந்தர ஐயரையும் வணங்கிப் பிள்ளை
யவர்களுக்குப் பிரியவசனங் கூறி நின்றான். அவர்கள் ஒன்றுந் தோன்றாதவர்களாய் அப்
பா! இதுவென்ன புதுமை? எங்களுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. நெஞ்சங் கலங்குகின்
றது என்றதும், அவன் அப்பா! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்; தேவுன் நாம் வசி
க்கும்படி கட்டளை யிட்டருளிய அரண்மனையிது. முந்தி நீங்கள் களைதீர்த்துக் கொள்ளு
ங்கள் பிறகு பேசிக்கொள்ளலா மென்றவுடனே விஜயலட்சுமி மங்களாம்பாளை வாரி
யெடுத்து முத்தமிட்டுச் சௌந்தரவல்லியைத் தூக்கியெடுத்து முத்திசெய்து இரு



வரையும் சிறிது நேரங் கொஞ்சிப் பின்பு உங்கள் மாமனாரைப் பணிந்துகொள்ளுங்க
ளென்றுகூற அவ்விருவரும் போய் பணிந்தார்கள். ஐயரவர்கள் காணாது கண்டதுபோல
அவ்விருவரையும் இருகையாலுஞ் சேரவணைத்துத் தமதுமடியிலிருத்தி முத்தமிட்டு உச்சி
மோந்து களித்திருந்தார். மங்களாம்பாள் எழுந்திருந்து பணிவிடைக்காரிகளை நோக்கி
அவர்கள் எல்லோருக்கும் கைகால் கழுவநீர் கொடுத்துப் பலபல அற்புதமான சிற்றுண்டி
களையும் பழ வர்க்கங்களையும் கொடுக்க யாவரும் உண்டு, தேவாமுத போசனமுண்டவர்க
ளைப்போல மனமகிழ்ந்து இருக்கையில் ஜகதீசன் தான் பிரிந்தபின் நடந்தவற்றை விஸ்
தாரமாகச் சொல்லி யாவரையும் மிகமகிழ்வித்து நீங்கள் கவலை யற்றிருங்களென்று
கூறிப் பிள்ளையவர்களை நோக்கித் தாங்கள் செய்த பேருதவிக்கு நான் செய்யுங் கைம்
மாறு ஒன்றுமில்லை. இந்த இராஜ்யமே யும்முடையது. ஆகையால் தாங்கள் மந்திரத்தலை
மை வகித்து எனக்கு அறிவு புகட்டிச் சீமையைக் காக்கும் கடமை உமதேயாமென்று
கூறிச் சுந்தர ஐயரை நோக்கி நீர் என் சிறிய தந்தையாதலால் என் தந்தையோடு கூட
விருந்து சகல செல்வங்களையுஞ் சொந்தமாக அனுபவித்துக்கொண்டிருக்கப் பிரார்த்திக்
கிறேனென்று பிரிய வசனங்கூறி யவர்களை யழைத்துக்கொண்டுபோய் அரண்மனைச்
சிறப்பு முழுமையும் அவர்களுக்குக் காட்டினான். அவர்கள் எல்லாரும் விடியுமளவும் அர
ண்மனையைச் சுற்றிப்பார்த்து மனமகிழ்ந்து இது தெய்வ சிருஷ்டியே யல்லாமல் மனிதர்
கள் கைவேலை யன்றென்று கூறிக் களித்தார்கள். மங்களமுரசு முரசு முதலிய வாத்தி
யங்கள் கடலொலிபோலக் கோஷித்தல் கேட்டு விடிந்ததென் றறிந்து சபாமண்டபம்
வந்துசேர்ந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு தேவதா பூஜைசெய்து சிற்றுண்டியருந்
திக் கொலுமண்டபம் போய்ச்சேர்ந்து அவரவர்களுக்குத்தகுந்த ஆசனமிட் டுட்காரச்
செய்துதான் பூலோக தேவேந்திரனைப்போலச் சிங்காதனத்தில் வீற்றிருந்தபோது மந்
திரி முதலாயினார் வந்துபணிந்து தத்தம் இருப்பிடத்தில் உட்கார்ந்தபோது பிரதானி
யாகிய சங்காதரன் வந்து பணிந்து இராஜ்யங்களைப் பற்றிப்பேசி முடிந்தபிறகு அவனை
நோக்கிப் பிள்ளையவர்கள் முதலானவர்களுக் கென்று விதித்திருந்த விடுதிகளில் கொண்
டுபோய்ச் சேர்க்கும்படிக்கும் சகல சாமக்கிரியைகளும் தருமப்பட்டிக்கும் கட்டளையிட
அவன் அப்படியே நிறைவேற்றிவந்து அறிக்கையிட்டுப் பிள்ளையவர்களையும் சுந்தர ஐய
ரையும் அழைத்துக்கொண்டுபோய் அவரவர்கள் ஜாகையில் விடுத்துவந்து தெரிவித்த
பின்பு கொலுக்கலைந்து தன் பிதாவோடு அந்தப்புரம்போய் இரண்டு மருகியரும் பக்கத்
திலிருந்து உபசரிக்கத் தம் புத்திரனோடு தேவாமிர்த போஜன மருந்திக் களித்த மாதா
பிதாக்களிருவரும் அடங்கா மகிழ்ச்சிகொண்டு மருகியரையும் மகனையுங் கட்டித் தழுவி
யிது நாங்கள் செய்த பூஜாபலமென்று கூறி மகிழ்ந்தார்கள். விஜயலட்சுமி தன் மருகி
யரை யுட்காரவைத்துத்தான் பக்கத்திலிருந்து அமுதூட்டியபின் அவர்களோடு எல்லோ
ரும் சிங்காரமண்டபம் போய்ச்சேர்ந்து சந்தன புஷ்ப தாம்பூலந் தரித்து அளவளாவிக்
கொண்டிருக்கையில் பிள்ளையவர்கள் முதலாயினோரும் போஜன முடித்துவந்து சேர்ந்து
சொல்லமுடியாத ஆனந்தக்கடலில் மூழ்கி மங்களாம்பாள் சௌந்தரவல்லி இருவரை
யும் பார்த்து இவ்விருவரும் பூலோகத்துப் பெண்களல்ல; தெய்வமாதரே யென்று விய

ந்து, இலட்சுமி தேவியும் சரஸ்வதிதேவியுமே நம்மைக்காக்கும்பொருட்டு இவ்வுருவந் தரித்திருக்கிறார்களென்று புகழ்ந்துகூற அதுகேட்ட ஐயரவர்களும் விஜயலட்சுமியும் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்" என்ற வசனத்திற் கிணங்க அடங்கா மகிழ்ச்சி கொண்டு பிள்ளையவர்களை நோக்கியிது தமது அன்னத்தின் மகிமையும் சுந்தர ஐயருடைய சிநேகத்தின் மகிமையுமே யன்றி வேறல்லவென்று கூறினார்கள். அப்போது ஜகதீசன் என் தந்தையார் வாசகம் எள்ளளவுந் தவறாது. தமது உபகாரமில்லாவிட்டால் நாங்கள் முன்னுக்கு வரும்படியாயிராது. இன்றைசென்று முன்பின்னறியாத எங்களையழைத்து வைத்துக்கொண்டு அன்னை தந்தையரைப்போல வேறு பாடில்லாமல் காப்பாற்றினபடியால் அல்லவோ இவ்வளவு மகிமையுண்டாயிற்று. உமது அன்னத்தின் பிரபாவம் அல்லவோ என்னையிவ்வளவு பெரியவனாக்கி உங்களையெல்லாம் இத்தன்மையா யிருப்பதைப் பார்க்கச்செய்தது. என் சிறிய தகப்பனார் சின்னம்மாள் இருவருடைய தயவினாலல்லவோ மங்களாம்பாளை மனைவியாகப் பெறும் பாக்கியத்தை நானடைந்தேன். இவைகளெல்லா மிந்தச்சரீரம் உள்ள அளவும் மறக்கனவோ அல்ல அல்லவென்று கூறக்கேட்டு யாவரும் ஜகதீசனுடைய நன்றியறிதலுக்கு மகிழ்ந்திருந்தார்கள். அப்போது மங்களாம்பாள் ஓர்அறைக்குட்சென்று பின்சில வேலைக்காரர்களோடு வந்து தன் மாமி மாமனைப்பணிந்து இந்த வஸ்திர பூஷணங்களை யவர்களுக்குக் கொடுத்தருள வேண்டுகிறேனென்று கூறிய இனியகனி மொழியை யவர்கள் கேட்டு அவளுடைய பெருந்தன்மையான குணத்துக்கு ஆச்சரியப்பட்டுப் பிள்ளையவர்களை நோக்கி ஐயா! காஞ்சிமரம் கற்பகக்கனி யீன்ற மாதிரியாக விருக்கின்றது. என் சகோதரிக்கு இந்தப்பெண்மணி பிறந்தது. இப்பெண்ணின் சற்குணத்தை நானென்னென்று கூறுவேன். இனி யெனக்குக் கவலையேது? குறையேது? என் எண்ணமெல்லாம் நிறைவேறிற்று. நான் மேலான கதியை யிப்பொழுதே யடைந்தேன். இந்தப்பெண்ணமுதத்தால் நான் இம்மை மறுமைப் பயனிரண்டையும் பெற்றேனென்று களித்திறுமாந்து கூறி அவள் கொண்டுவந்த ஆடையாபரணங்களை யெல்லோர்க்கு முதவி யின்புற்றிருந்தார். ஜகதீசனும் பேராநந்தக் கடலில் மூழ்கினான். இப்படி யெல்லோருஞ் சிறிது காலம் இன்பக்கடலில் முழுகி யிருக்கையில் ஒரு நாள் ஜகதீசன் பிதாமுதலியோரை நோக்கி நமக்கு விரோதஞ் செய்தவர்களுக்குப் புத்தி கற்பிக்க நினைத்திருக்கிறேன். தங்களுடைய அபிப்பிராயமென்ன வென்று கேட்கப் பிதா சொல்லுகிறார்.

(இன்னும் வரும்.) ☞ தேவதுஞ்சரியம்மாள்.



# அலெக்ஸாண்டிரினா மகாராணியார்.

## (இரண்டாம் அத்தியாயம்.)

1867 வருஷத்தில் அலெக்ஸாண்டிரினா மகாராணியார் மூன்றாவது தடவை
கர்ப்பவதியா யிருக்குங் காலத்தில், அவர்களுக்கு வாய்வினால் கால்களின்
கணுக்கள் வீங்கி அதிக வலியுண்டாக ஆரம்பித்தது. அப்படி யிருந்தபோதி
லும் அந்தம்மாள் 1868வரு பிப்ரவரிமீ 20உ சுகமாக பிரசவித்தபோதிலும்
சில மாதங்கள் வரையில் தேக அசௌக்கியத்தால் வண்டியிலேறி உல்லாச
மாய் வேட்டையாடி நாள் கழிப்பதும் அந்தம்மாளுக்கு கஷ்டமாகவே யிருந்
தது. அதே வருடத்தில் அந்த அம்மாள் தமது புருஷருடன் அயர்லண்ட்
தேசத்துக்குப் போனார்கள் அக்காலத்தில் தான் அத்தேசத்தில் உண்டாயிரு
ந்த கலகங்கள் நீங்கும்பொருட்டு தகுந்த சட்டங்களை கிளாட்ஸ்டன் என்ற
பிரதான மந்திரியார் ஏற்படுத்திக்கொண் டிருந்தார். இவ்விருவரும் அவ்விட
த்திற்குப் போனபோது, அத்தேசத்து ஜனங்கள் தங்கள் கஷ்டங்கள் நீங்கு
வதற்கு இவர்களுடைய வருகையே காரணமென்று நிரூபிக்கும் பொருட்டு
ஒரு வெண்புறாவை அலெக்ஸாண்டிரீனா ராணியாருக்கு காணிக்கையாக அளி
த்தார்கள். ஏனெனில் அத்தேசத்து குடிகளுக் குண்டாயிருக்கும் கஷ்டங்கள்
நிவர்த்தியாகும் பொழுதெல்லாம், அக்கஷ்டங்கள் நீங்கினதற் கறிகுறியாக,
ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொள்வது அத்தேசத்து பூர்வீக வழக்க
மான படியால், அவ்விதமே ராணியாருக்கும் ஒரு புறா கொடுக்கப்பட்டது.
அதை நமது ராணியார் அக்குடிகளை கௌரவப் படுத்துவதற்காக பெற்றுக்
கொண்டு அவர்களுடைய கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாகும் வண்ணம் பிர
யத்தனஞ் செய்து கிளாட்ஸ்டன் மந்திரியாருடன் பேசி வந்தார்கள். இது சங்
கதியை யறிந்த நமது காலஞ்சென்ற மகா ராணியாரவர்கள், இவ்விருவர்
பேரிலும் சிறிது பிரியமற்றிருப்பதைக் காண்பித்தார்களாம். ஆனபோதி
லும் அலெக்ஸாண்டிரினா ராணியார் கடைசிவரையில் கிளாடஸ்ன் துரை யவர்
களுக்கு உதவியாகவே யிருந்து வந்தார்கள். அலெக்ஸாண்டிரினா ராணியார்
சிறிதுகாலம் அயர்லாண்ட தேசத்திலிருந்து பிறகு தமது கணவருடன் இங்கி
லாந்து தேசத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

பிறகு அம்மாதுக்கு நான்காவது புத்திரசந்தானம் உண்டானவுடனே
வியாதி உண்டாயிற்று. ஐரோப்பாகண்டத்தின் கிழக்கு தேசத்தில் சஞ்சாரம்
செய்தால் இப்போது உண்டாயிருக்கும் வியாதி நிவர்த்தியாகுமென்று சில
வைத்தியர்கள் கூற, அவ்விதமே அரசனும், அரசியும் நவம்பர்மீ புறப்பட்டு
பிரான்ஸ் தேசத்துக்குச் சென்று, அவ்விடத்திலுள்ள அரசனையும், இராணி
யையுங் கண்டு பேசிய பிறகு டேன்மார்க் தேசத்துக்குப் புறப்பட்டுச் சென்

றார்கள். அவ்விடத்தில் டிசம்பர்மீ 1 தேதியில் தமது குழந்தைக்குச் செய்ய வேண்டிய வருஷபூர்த்தி யுற்சவத்தை வெகு விமரிசையாக நடத்திவிட்டு, அங்கிருந்து பர்லின் பட்டணம் சென்று, அங்கிருந்து டிரீஸ்டீ புரத்திற்குச் சென்று, பிறகு அலெக்ஸாண்டிரினவுக்கு சமுத்திர யாத்திரையும் செய்தார்கள். பிறகு அவ்விடம்விட்டு நீல் நதியின் முகத்துவாரம் வரையும் நடந்து, அவ்வவ்விடங்களி லுள்ள விசித்திரமான வஸ்துக்களை யெல்லாம் கண்டு களிப்படைந்தார்கள். அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு கான்ஸ்டாண்ட் நோபில் என்ற பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அதை யரசுபுரியும் சுல்தான் நமது அரசனையும், அரசியையும் எதிர்கொண் டழைத்துப்போய் கௌரவப்படுத்தினார். அப்பட்டணத்தின் காட்சிகளைக்காண இராணியாரவர்கள் அதிக சந்தோஷத்துடன் சாதாரணமான ஒரு ஸ்திரீயைப்போல உடையுடுத்திக் கொண்டு கடைத்தெருவிற்குப் போனார்கள். அவ்விதம் சாதாரண உடை யுடுத்திக்கொள்ளாமல், தமது சொந்த உடுப்புகளுடன் சென்றிருப்பார்களாகில் அங்குள்ள ஜனங்கள் அந்தம்மாளைப் பார்க்கதிரளாய்க் கூடுவார்களாகையால் தான் அவ்வூரிலுள்ள காட்சிகளையும், நடையுடை பாவனைகளையும் பார்க்க முடியாதென்று கருதியே சாதாரண உடுப்பைத் தரித்துக்கொண்டு சென்றார்கள்.

இதர மதஸ்தர்கள் எப்போதும் காணமுடியாத சுல்தான் அவர்களின் அந்தப்புரத்திற்கு இராணியார் சென்று, அவ்விடத்திலுள்ள கோஷா ஸ்திரீகள் அனைவரையும் கண்டு, யாதொரு பெருமையில்லாமல் அவர்களுடன் வார்த்தையாடி, அவர்களுடைய மதாசார அநுஷ்டானங்களை யெல்லாம் அவர்களால் செவ்வையாக அறிந்து கொண்டார்கள். பிறகு அவ்விடத்தி லிருந்து அரசனும், அரசியும் ஏதேனி பட்டணம் சென்று, அங்குள்ள ஜியார்ஜ் பிரபுவினால் வெகுவாய் உபசரிக்கப்பட்டு, அங்கிருந்துதங்கள் சொந்த தேசமாகிய இங்கிலாந்து தேசத்துக்கு சௌக்கியமாகவந்து சேர்ந்தார்கள். இவர்கள் இந்த யாத்திரை செய்துவர நாலுமாதகாலம் சென்றது. இதனால் அந்தம்மாளுக்கு உண்டாயிருந்த ரோகம் நிவர்த்தியாயிற்று. இதனால் இந்துக்கள் அதிகவிசேஷமாக கடைப்பிடித் தொழுங்கும் யாத்திரையின் விசேஷம் நன்றாய் விளங்குகிறதல்லவா? இதனை யறியாத மேற்றேசத்து ஒரு பகுதியார் இந்துக்கள் செய்யும் க்ஷேத்திர யாத்திரையினால் என்னபலன் கிடைக்குமோவென்று ஐயுறுவது அவர்களுடைய அறிவின் குறைவைக்காண்பிக்கிறது.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 27 ... 1902 MADRAS


# மாதர்மனோரஞ்சினி.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்”—ஔவையார்.

VOL. III. புத்த. 3. | Madras: January 1902. சென்னப்பட்டணம் 1902ஞ ஜனவரிமீ. | No. 11. இல. 11.


## இந்து ஸ்திரீகளின் நிலைமை.

“எங்கு மாதர்கள் கண்ணியமாய் நடத்தப்படுகிறார்களோ அங்கு தேவதைகளும் சந்தோஷமாய் வசிக்கின்றார்கள்; ஆனால் எங்கு அவர்கள் கண்ணியப்படுத்தப்படவில்லையோ அந்தவிடத்தில் செய்கிறகாரியங்கள் எல்லாம் பலனில்லாததாகப் போய்விடுகின்றன.”.

“எந்த வம்சத்தில் பெண்பந்துக்கள் முதலியவர்கள் விசனப்படுகிறார்களோ அந்த வம்சம் நசித்துபோகின்றது. எந்த வம்சத்தில் அவர்கள் விசனப்படவில்லையோ அந்த வம்சம் எப்போதும்விருத்தியடைகின்றது.” (3-வது அத்தியாயம். 56, 57-வது சுலோகம். மநுதர்மசாஸ்திரம்.)

பூர்வீகத்தில் இந்தியாவில் ஸ்திரீகள் சந்மானிக்கப்பட்டும், அதிகமாய் கௌரவப்படுத்தப்பட்டும் வந்தார்களென்றும், அப்படிப்பட்ட நடத்தையை சந்தேகமற இப்பொழுது ஐரோப்பா கண்டத்தில் பார்க்கலாமென்றும் ஆனால் தற்காலத்தி லிந்தியாவிலோ ஸ்திரீகளுக்குண்டான மரியாதையை யிழந்து கேவலமாத்ம சந்துஷ்டிக்காகவும், வாய்திறவாமற் கீழ்ப்படிந்து நடக்கிறதற்குமே உபயோகப்படுத்தப் படுகிறார்களென்றும், பிரான்சு தேசத்திய கிரந்த கர்த்தாவாகிய லூயி ஜாக்கோலியட் என்பவர் நன்றாய்ச் சொல்லியிருக்கிறார். மேலும், இந்தியாவின் நாகரீகமோ மற்றதேசத்திய நாகரீகங்களைக்காட்டிலும் முந்தியதும், ஸ்திரீகளுக்கு மனிதர்களோடு குடும்பத்திலாவது வெளிச்சங்கத்திலாவது சமமான நிலைமையை யளிக்கக்கூடியதென்று மவரே சொல்லி யிருக்கிறார். வெகு காலத்திற்கு முன் மனுதர்மசாஸ்திரமானது ஹிந்துக்களால் கிஞ்சித்தேனுந் தவறாம லனுசரிக்கப்பட்டுவந்தது. ஆதி ஹிந்து சட்ட நிரூபணராகிய மனுவானவரிந்தப் பூமண்டல சிருஷ்டிக்குமுன், சுயம்புவாயும் பராபரவஸ்துவாயு மிருக்கிற கடவுள் தன்னையே யாணொருபாகமாயும் பெண்ணொரு பாகமாயும் வகுத்தாரென்று சொல்லியிருக்கிறார். மேற்கூறிய உதாரணத்தினால் ஸ்திரிகளுக்கும் மனிதர்களுக்கு மிருக்கிற சமமான நிலைமையை நன்றாய் விளக்குகின்றது. எப்படி ஒருப்ழத்தி னொரு சமபாகம் மற்ற சமபாகத்தைப் போல சுவையிலும், வாசனையிலும், மற்ற எல்லாவிதத்திலு மொத்திருக்கிறதோ அப்படியே ஆணும் பெண்ணு மொரே வஸ்துவின் சமபாகங்களாகையால், ஒரே விதமான குணமும், தேகவலிமையுமுடையவர்களும், ஒரே விதமான சுதந்திரங்களுக் குரியவர்களுமாயிருக்கிறார்கள். ஆகையால் புருஷர்களெந்தெந்த நிலைமைக்குரியவர்களோ அதே நிலைமைக்கு ஸ்திரீ

களு முரித்தானவர்கள். இவ்விரண்டு வகுப்பினர்களையும் பக்ஷபாதமின்றி, பேதமில்லாமல் நடத்துவதே தர்மசாஸ்திரத்தை யனுசரித்த நீதியேயாம்.

நம் பூர்விக சட்டநிரூபணர்கள் பலரிந்த வுண்மையைத் தீர வாராய்ந்தறிந்து, ஸ்திரீகள் மனிதர்களைப்போல கல்விப் பயிற்சிக்கும் தத்துவஞான போதனைக்கும் தகுதியானவர்களென்று உலகமறியக் கூறி யிருக்கிறார்கள். நமது சாஸ்திரங்களை நோக்குமிடத்து, அநேக ஹிந்து ஸ்திரீகள் நம் வேதங்களை நன்றாய்க் கற்று, இவ்வுலக சிந்தையை யொழித்து, மனதை பரபிரம்மத்தில் நாட்டி, தங்கள் வாழ்நாட்களை கழித்திருக்கிறார்கள். உதாரணமாக ருக்வேதத்தில் முதல் புஸ்தகத்தில் 126-வது சுலோகத்தை ரோமேஷா என்ற மாதும், அதே புத்தகத்தில் 179-வது சுலோகத்தை லோபாமுத்திரா என்ற மாதும், வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்திரனுக்கு பரம்பொருளாகிய சிவனைப்பற்றி உபதேசித்த அதிதியும், விஸ்வவரா, ஷஷ்வதி, கார்கி, மைத்ரேயி, அபல, கோஷ என்ற அநேக கல்வி தேர்ச்சியுள்ளமாதர்க ளிருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு வடமொழியில் "பிரம்மவாதினிகள்" என்றுசொல்லுவார்கள். ப்ரம்மவாதினீ யென்றால் ப்ரம்மத்வத்தை யாராய்ந் தறிந்து சொல்பவள். இப்படிப்பட்ட ஸ்திரீகள் முற்காலத்தில் மோக்ஷசாதனமான தர்மகைங்கரியங்களைச் செய்கிறவர்களும், பரிசுத்தமான பாட்டுப் பாடுகிறவர்களுமா யிருந்தார்கள். மேலுமிவர்கள் மகா பாண்டித்தியமுள்ள தத்துவஞானிகளோ டெதிர்த்து வாதாடி அவர்களைச் சிலகஷ்டமான தத்துவசங்கதிகளில் தோற்கடித்துமிருக்கிறார்கள். இதுவுமன்றிச் சில இந்து பண்டிதர்கள் தத்துவத்தைக் குறித்து வாதிக்கும்பொழுது மத்தியஸ்தர்களா யிருந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்குமிடத்து ஸ்திரீகள் கொஞ்சமேனும் மனிதர்களைக் காட்டிலும் தாழ்ந்தநிலைமைக் குரித்தானவர்க ளல்லரென நன்றாய்த் தெரியவரும்.

மேலுமொரு மனிதன் தன்னுடைய மனைவியோடு, ஒவ்வொரு தர்மகாரியத்தையும், மோக்ஷத்துக் குரிய காரியத்தையும் செய்யவேண்டியதென்றும், அவளன்றி யவனவைகளைச் செய்வானாகி லவனுடைய கோரிக்கை முழுது மீடேறா தென்றும், நம்முடைய வேதங்களும், சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. கணவனைத் தெய்வமெனக் கொண்டாடி மேற்கூறிய தர்மகாரியங்களி லவனோடுகூட இருந்துசெய்துவைக்கு மில்லாளுக்கு வடமொழியில் "சகதர்மிணீ" என்று பெயர்.

நம்முடைய புராணங்களும், மகாகாவியங்களு மேற்பட்டகாலத்திலும் ஸ்திரீகள் மனிதர்களோடு சமநிலைமையை யடைந்து சில சமயங்களிலவர்கள் துன்பப்படும்பொழு தவர்களுக்கு ஒத்த துணையாயிருந்து அவர்களுடைய ஓயாத துக்கங்களைக் களைந்து, அவர்களுக்குச் சந்தோஷத்தை யளித்திருக்கிறார்கள்.

நம்முடைய மகா காவியங்களிற் சிறந்தது ராமாயணமும், மகாபாரதமுமே. இவைகளில் ராமாயணத்தை வாசித்தவர்கட்கு மேற்கூறிய சங்கதிகள் தெளிவாய்த் தெரியவரும். நமது ஸ்திரீகளின் நிலைமையைச் சற்று உற்று நோக்க மேற் கூறிய காவியத்தின் கதாநாயகியாகிய சீதையாகிய ஒரு மாது சிரோன்மணியையே உதாரணமாகக்கொள்ளலாம். அம்மாதோ தமது கணவருடன் கடுங் கானகஞ் சென்று, அநேக கடுந் துன்பங்களிலும் தமது கற்புக்கு பங்கம் வாராது பாதுகாத்து, கணவன் மனதைக் களிக்கச்



செய்தவர்கள். அம்மாதைப்போல சீலத்திலும், குணத்திலும், தயாளத்திலும் தர்ம சிந்தனையிலும் வேறொரு பெண்மணி யிருந்தது மில்லை யிருக்கப்போகிறது மில்லை.

இதுவுமல்லாமல் ஸ்திரீகள் நியாயஸ்தலங்களுக்கு நேராய்ப்போய்த் தங்களுடைய கஷ்டநிஷ்டூரங்களை நியாயாதிபதிக்குத் தாங்களே முறையிட்டு நியாயம்பெற் றிருக்கிறார்கள். மகா காவியங்களில் மற்றொன்றாகிய மகா பாரதத்தில், அப்ஸரஸ்திரீயாகிய மேனகையின் புதல்வி சகுந்தலை யென்னும் பெண் சிரோன்மணி தன் கணவன் துஷ்யந்தசக்கிரவர்த்தி தூர்வாச மகரிஷி சாபத்தினால் தன்னை மறந்துபோக, தான் கர்ப்பவதி யாயினும், தானே யந்த மகாராஜனது கொலுக்கூடஞ் சென்று தன்னை யின்னாளென்றவனுக் குரைத்து, தனக்கு நியாயம் கிடைக்க மன்றாடினாளென்று கூறப்பட்டிருக்கின்றது. இன்னும் சில பெண்மணிகள் சேனாதிபத்தியம்வகித்துச் சைன்னியத்தைப் போர்முகத்தில் நடத்தி யெதிரிகளைச்சின்னாபின்னமாக்கிப் புறங்காட்டி யோட அடித்து ஜெயம்பெற் றிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற் குதாரணமாக நமுசி மகாராஜன், எதிரிகள் காலாபக்கத்தி லிருந்தும் தன் ராஜ்ஜியத்தின்மீது படையெடுத்துவரத் தன் மனைவியை யனுப்பி யவர்களைத் தோற்கடித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சேனாதிபத்தியம் வகிக்கும் வீரமும் ராஜ்ஜியபாரம் செய்யும் திறமையும் பிரிடிஷ் ராஜாங்க மிவ்விந்தியாவி லேற்பட்ட காலத்தில் காணலாம். சற்றேறக்குறைய 40-வருஷங்களுக்குமுன் இந்தியாவின் வடபாகத்தில் நடந்த பிரபலமான பெரும்சிப்பாய்கலகத்தில்ஜான்சியென்னும் சிற்றரசை யாண்டுவந்த ராணி தனது சேனைகளை யொருங்கு சேர்த்து, ஒரு குதிரைக்காரனைப்போலுடை யணிந்து போர்முகம்சென்று ஆங்கிலேய சேனையைத் தலையெடுக்கவொட்டாது கண்டித்துக் கடும்போர் புரிந்து படுகளத்தில் வீழ்ந் திறந்தாள். கொஞ்சகாலத்திற்குமுன் கவுரென்னும் பெண்ணொருவ ளாங்கிலேய ராஜாங்கத்தி னுதவிகொண்டு ஹிந்துக்களால், கலகத்தினாலும், திருட்டினாலு மழிந்திருக்கும் பாட்டியாலா மாகாணத்திற் கதிபதியாக நியமிக்கப்பட்டாள். இம்மாது ஒரு வருஷத்திற்குள் "துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம்" என்னும் பழமொழிக் கேற்ப சட்டதிட்டங்களை ராஜாங்கத்திற் செய்து கலகக்காரர்களைக் களைந்து ராஜ்ஜியம் செழிப்புற்றோங்க குடிகள் க்ஷேமத்தோடும், களிப்போடும்நீடூழிவாழும்படி யரசு புரிந்தாள்.

இன்னும் மாளவதேசத்தை யாண்ட அஹல்யாபாய் என்னும் ராணி மன்னுயிர்களைத் தன்னுயிர்போல் பாதுகாத்து குடிகளுக்கோர் குறைவு வராது, ராஜாங்கத்தில் சீர்திருத்தங்கள் செய்து 20 வருஷகாலம் செங்கோல் செலுத்தினாள். அவளிறந்து மவளுடைய சீர்திருத்த மழியாது மேன்மேலும் குடிகளுக்கு க்ஷேமத்தையே யளிப்பதால் அவ்விராஜ்ஜியத்திய மகமதியர்களும் ஹிந்துக்களும் ஒரேமனதாக இன்றைக்கும் அவளைத் தெய்வமெனக் கொண்டாடி வருகிறார்கள். இவளாளுகையி லுண்டான நாகரீகமும், இவளால் ஸ்திரீக ளளிக்கப்பெற்ற சுதந்திரமும் வெகு தூரத்திற்கப்பாலிருக்கும் அமெரிக்கா தேசத்திய மகா ராஜ தந்திரிகளின் மனதையும் அதிக களிக்கச் செய்கின்றன.

இதனால் ஸ்திரீகளுக்கு வேதாப்பியாசமும், தர்ம சாஸ்திரப் பயிர்ச்சியுமல்லாமல், சுத்தவீரர்களும் வியக்கும்படி போர்முகம் செல்லும் வீரமும், தீரமும், பெரும் ராஜரீகத்தை வகித்

துக் குடிகளுடைய க்ஷேமத்திற்காகத் தங்கள் சுகத்தையும் மறந்து நீதி வழுவாது செங்கோல் செலுத்துந் திறமையு மிருப்பதாகத் தெரியவருகிறது.

மேற்கூறிய விஷயத்தினால் கற்றுணர்ந்தநம் நேயர்க ளில்லாளை தங்களுடைய கடுஞ்சினத்திற்கு ஆளாக்காமல்,விசுவாஸத்துடன் நடத்தவேண்டுமென்பது நமது கோரிக்கையாம்.

## ஜீவகாருண்யம்.

*இஞ்சுக மொழியார் நெஞ்சகமலர்வெண், கஞ்சமின்னிக நம் ரஞ்சினி நங்கையே நினதங்கம தேற்றிம்மன்னிய கருணையை வஞ்சியர் குழைசேரஞ் செவிமடுப்பாம்.*

ஜீவர்களாகிய நமக்கெல்லா மிகபரமிரண்டிலு மஞ்சூராணி போனின்றுதவக்கூடியது காருண்யந்தான். இகத்திலுண்மைப் புகழையும், பரத்திலழிவில் வீட்டையும் காருண்யமற்ற வான்மா ஓர்போது மடையாது. பெருமைக்காகக் காண்போர் காருண்யரெனவும், பெருந்தகை யாளரெனவுங் கூறும்படிச் சிலர் பொருளைச் செலவிடுதலுமுண்டு.ஆயின் அன்னோரடையும்புகழ் உபசாரமாய் முக மெதிர் மொழியும் புகழே யாதலின் போலிப் புகழாகவே முடிந்தது. ஆகலின் காருண்யமற்றோ ரளவிறந்த நிதிபடைத்தோ ரேனும்.

“தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற்றோன்றாமை நன்று”.

என்றபடி அளவிறந்த அலரேயடையுந் தன்மைய ராதலின் இம்மைப் பயனை யடையாராகின்றனர். இவை இங்ஙனமாக மறுமைப் பயனென்பது கடவுளினருளுக்கு நாம் பாத்திரராய் அவரடிக்கலப்பது; கடவுளானவர்சூரியனைப்போலும், அவரது வொப்பற்றவருளானது அச்சூரியனது கதிரைப் போலுமாக விளங்குகிறது. எப்படிக் கதிரற்றவழிக் கதிரவனைக் கண்காணமாட்டாதோ, அப்படியே ஆன்மாக்களும் காருண்யமென்னும் மருளற்றால ஒப்பற்ற காருண்யமூர்த்தியினருளிற் குரியராகமாட்டார்.மேலும் எப்படி மண்ணைக்கொண்டு பாண்டமும் பொன்னைக்கொண்டு பூஷணமும் அதற்குடற்கூறானவற்றாலேயே அவ்வவற்றின்பிரயோஜனத்தை அடைய வேண்டுமோ போல் ஜீவர்களும், ஜீவர்களிடத்து அருளை வகித்துத்தான் ஒப்பற்ற கடவுளினருளுக்குப் பாத்திரராகவேண்டும். ஆதலின் அவ்வருளற்றார் மறுமைப் பயனையு மடையார். நிற்க ஜீவகாருண்ய முடையோர் முக்கியமாய்ப் பசியால்வருந்துமவரையும்,பிணியால் வருந்துபவரையும் ஜீவனுக்கோ மானத்திற்கோ தீங்கு நேரநிற்கு மபையமடைந்தோரையும் ஆதரியா தொழியார். முற்கூறிய பசிப்பிணியைக் கண்டிரங்கி இயன்றளவுதவு மனமுடையவொருவர்க்கு மற்றத் துன்பங்களைக் கண்டு மனமிரங்காமற்போகாது. உலகத்தில் மற்றெல்லாம் பசியைப் போல் கொடுமைசெய்யக் கூடியதல்ல ஆதலாற்றான் ஆன்றோர்களும்.

*“மானங்குலங்கல்வி வண்மை யறிவுடைமை தானந்தவமுயற்சி தாளாண்மை - தேனின் கசிவந்தசொல்லியற்பாற் காமுறுதல்பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்”*

யெனக் கூறியுள்ளார். இவ்வளவிற்கு மாதாரமான பசியின் வலுவை யென்னெனக் கூறுவது. பசியென்ற வொரு பகைவனற்றால் உயர்ந்தோரென்றும், தாழ்ந்தோ ரென்றும், நல்லோரென்றுந் தீயோரென்றும், இட்டாரென்றும் இடாதாரென்றும் யாவுமில்லை. பொருளை விரும்புவோர்களும், வழக்குதொடர்வோர்களும், நீதி செலுத்துவோர்களும, அடங்கி நிற்போர்களும்யாவுமில. நம்மையுமிவ்வுலகத்தையு மொக்க நின்றாட்டுவது பசிதான். உற்று நோக்கில் இப் பசிப்பிணியானது ஜீவர்களது பக்குவத்தை யளக்கும் பொருட்டு கடவுளா லமைத்த நாழியேயாகும். மேலும் ஜீவர்களுக்குப் பசி யதிகரித்தகாலத்து ஜீவ அறிவு மங்குகின்றது. ஜீவ அறிவு மங்கியகாலத்து அறிவுக் கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது. அது மறையவே புருட தத்துவஞ் சோர்ந்து விடுகின்றது. அதுசோரவே பிரகிருதி தத்துவ மழுங்குகின்றது. அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன. மனம் தடுமாறிச் சிதறுகின்றது. புத்தி கெடுகின்றது. சித்தங் கலங்குகின்றது. அகங்கார மழிகின்றது, பிராணன்சுழல்கின்றது. பூதங்க ளெல்லாம் புழுங்குகின்றன. வாதபித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன. கண்கள் பஞ்சடைந்து குழிந்துபோகின்றது. காது கும்மென்று செவிடுபடுகின்றது. நாவுலர்ந்துவறளுகின்றது. நாசி குழைந்து அழல்கின்றது. தேகம் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது. கை கால்சோர்ந்து துவள்கின்றன. வாக்குத் தொனிமாறி குளறுகின்றது. பற்கள்தளறுகின்றன. மலசலவழி வெதும்புகின்றது. மேனி கருகுகின்றது. ரோமம் வெறிக்கின்றது. நரம்புகள்குழைந்து நைகின்றன. நாடிகள் கட்டுவிட்டு நைகின்றன. எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன. இருதயம் வேகின்றது. மூளைகருங்குகின்றது. சுக்கிலம் வெதும்பிவற்றுகின்றது. ஈரல் கரைகின்றது. இரத்தமும் சலமும் சுவறுகின்றன. மாம்சம் குழைந்து தன்மை கெடுகின்றது. வயிறு பகீலென் றெரிகின்றது. தாபசோபங்கள் மேன்மேலு முண்டாகின்றன. உயிரிழந்து விடுவதற்கு மிகவும் சமீபித்த அடையாளங்களு மனுபவங்களும் தோன்றுகின்றன. இவ்வாறு ஜீவர்களுக்குப் பொதுவாயுள்ள இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்தபோது உண்டு பசிநீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாந் தழைத்துள்ளங் குளிர்ந்தறிவு விளங்கி அகத்திலு முகத்திலுஞ் சிவகளையுங் கடவுள் களையுந் துளும்பி ஒப்பில்லா திருப்தி யின்பமுண்டா கின்றது. இப்படிப்பட்ட இன்பத்தை யுண்டுபண்ணுகிற புண்ணியத்திற்குமுன் மற்றெந்தப்புண்ணியத்தை ஒப்பிடலாம்? இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்த தெய்வத்திற் கொப்பிடலாம். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளினமிசமென்றே புகல்வதல்லாது மற்றியாது புகல்வது? இதனால் கரணவேதனை, சன்னவேதனை, மரணவேதனை என்கின்ற மூன்று வேதனையுங் கூடிமுடிந்த வேதனையே பசிவேதனை யென்றும் எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோக்ஷவின்பமே ஆகாரத்தா லுண்டாகுந் திருப்தி யின்பமென்று மறியவேண்டும். மேலும் பசியுற்றவிடத்து உபகாரச் செய்கைதோன்றாது. அன்னமிட ஆன்மாக்கள் போதுமென்று திருப்தியடைவதுபோல பொருளில் போதுமென்று திருப்தி யுண்டாகாது. ஆதலின் ஜீவர்கள் காருண்யத்தைவகித்து அன்னதானத்தை விரித்து இம்மையிற் புகழையும மறுமையில் வீட்டையுமடைவார்களாகத் திருவருளைப் பிரார்த்திக்கின்றனன்.

உருக்குமணியம்மாள்.

# ஸிம்பலைன்.

(176-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்படியிருக்க, பாஸ்துமஸூம் ரோமன் ஜாதியரோடு சேர்ந்து யுத்தகளத்தைச் சமீபித்தவுடன் இரத்தக் குறிகளையுடைய தன் துவாலையைக் கையில் வைத்துக்கொண்டு பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்.

பாஸ்துமஸ்:— கைத்துவாலையே! பிஸானியோ விடத்தில் இமொஜனைக் கொன்று, அதின் அடையாளமாக அவளுடைய இரத்தத்தில் தோய்த்த ஒரு துணியைக் கொண்டுவரும்படியாக வுரைத்தேன். அவன், நான் இட்டவேலையை விசுவாசமாகச் செய்துவிட்டு அதற்கு சாக்ஷியாக உன்னை யெனக்கு அனுப்பினான்; ஆகையால் நான் உன்னை அதிக பத்திரமாக வைத்துக் கொள்ளுகிறேன். கலியாணஞ் செய்துகொண்ட ஆடவர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் நான் செய்தபடிச் செய்யத் துணிந்திருந்தால் கொஞ்சம் குற்றஞ் செய்ததற்காக அநேகம் பெண்டிர்களைக் கொன்றிருப்பீர்களே. ஏ பிஸானியோ! வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களிட்ட ஒவ்வொரு வேலையையும் செய்ய வேணுமென்கிற நியாயமுண்டோ? நியாயமில்லாத வேலையைச் செய்யவேண்டா மென்பதை நீ யறியாயோ? பிஸானியோ! நான் இட்டவேலையைச் செய்ய எவ்விதம் துணிந்தாய்? வீண்சாக்குகள் சொல்லி என்னை யேமாற்றிவிடக்கூடாதா? ஆனால் எஜமானன் இட்டவேலை ஒவ்வொன்றுக்கும் சாக்குப் போக்குகள் சொல்லவேணுமென்று நானுரைக்கவில்லை; அது வேலைக்காரர்களுக் கழகல்ல. நியாயமல்லாத வேலையைச் செய்யச்சொல்லி, அதைச் செய்யாமலிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும். இமொஜன் உன்னை நினைக்கிறபோது என் கண்ணீர் ஆறாகப்பெருகுகிறதே! அதிசீக்கிரத்தில் என்னைவிட்டு சுவர்க்கலோகம் சென்றனையோ? அநேகஞ் சிற்றரசர்களை வெறுத்து அனாதியாகிய என்னைக் கலியாணஞ்செய்து உன் தகப்பனுடைய விரோதத்தைச் சம்பாதித்த உனக்குக் கைம்மாறாக இக்காரியத்தையோ செய்தேன். இது துஷ்டர்களுக்கு இலக்ஷணமல்லவோ. இமொஜன் நீ சாகுந்தருணத்தில்,

வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடதாரி
யாங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்.

என்று சொல்லி உயிர் துறந்தனையோ? வாஸ்தவமாக அநேகஞ் சிற்றரசர்களை வெறுத்து என்னைக் கலியாணஞ்செய்த உன்னை, எனக்கு இரையாக்கிக் கொண்டேன். மதியீனனாகிய எனக்குச் செய்த உபகாரத்திற்குப் பதிலாக உன்னை வெட்டும்படியாக உத்தரவளித்தேன்; இ-



மொஜன்! உன்னைப்பிஸானியோ வெட்டவந்தபோது நீதான் ஓடிஒளிந்து கொள்ளக்கூடாதா? என்னசெய்வேன்! என் விதியைத்தான் நொந்து கொள்ளவேணும், என் வயிறு கொதிக்கின்றதே. பிஸானியோ! இக் காரியம் செய்ய எவ்விதம் துணிந்தனை. இந்த தோஷம்நான் ஈரேழு ஜென்மம் எடுத்தாலும் என்னைவிட்டுத் தொலையாதே. ஆனால் நீ செய்த குற்றம் என்னால்பொறுக்கக்கூடாததாயிருந்தது. அதினிமித்தம் உன்னை வெட்டும்படியாக உத்தரவளித்தேன்; ஐயோ! உன்னை நினைக்கிறபோது நான்படுகிற விசனத்திற் களவில்லை. நான் செய்த குற்றத்துக்குப் பிராயச்சித்தம் என்னவென்று தெரியவில்லை என்னுயிரைவிடுவது தான் இதற்குப் பரிகாரமென்று நினைக்கிறேன். இமொஜன் நீ இறந்தபின் என்னுயிரை வைத்துக்கொண் டிருப்பதில் பிரயோசனமில்லை. இமொஜன்! இமொஜன்! நான் என்னசெய்வேன், நீ யிறக்கும் சமயத்தில் என்னை க்ஷமித்தனையோ. உன்னை நினைத்து பரிதாபப் படுவதில் உபயோகமில்லை. உன்னுடைய இராச்சியத்திற்கு விரோதமாய்ச் சண்டைசெய்ய இட்டாலியா தேசத்தவர்களுடன் என்னை யழைத்துக் கொண்டுவந்திருக்கிறார்கள். பிரிட்டன் தேசத்துக்கு ஒரு இரத்தினத்துக்கு சமமாயிருந்த உன்னுடைய உயிரை வாங்கிவிட்டேன். அதை நினைக்கிறபோது என்மெய் நடுங்குகின்றது. இப்படியிருக்க உன்னுடைய இராச்சியத்துக்கு விரோதமாய்ச் சண்டை செய்து, அதையும் இழப்பேனோ? தெய்வமே, நான் இப்போது செய்யப்போகிற செய்கையைச் சொல்லுகிறேன் கேட்கவேணும். நான் என்னுடைய உடையை மாற்றி, பிரிட்டன் தேசத்திலுள்ள ஒரு குடியானவனுக்குத் தகுந்த உடையைத் தரித்து, என்னுடைய எண்ணங்களுக்கு விரோதமாயும், பிரிட்டன் தேசத்துக்குச் சகாயமாயும் சண்டைசெய்து, அவர்களுக்கு வெற்றியைக் கொடுப்பேன். ஏ! இமொஜன்! நான் உன்னைக் கொன்றதற்காக யுத்தகளத்தில் சண்டைசெய்து ஒருவரும் என்னை யறியாமலும், என்னிமித்தம் ஒருவரும் விசனப்படாமலும் அனாதியாக சண்டையில் என்னுயிரை விடுவேன். உன்னைக்கொன்ற பிறகு நான் உயிருடனிருக்க என் மனமிசையவில்லை. ஆகையால் என்னால்கூடியமட்டும் சண்டைசெய்து பிரிட்டன் தேசத்துக்கு வெற்றியைக் கொடுத்தவுடன் அந்த இடத்திலே என்னுயிரைத் துறப்பேன். தெய்வமே! நான் குடியானவனுடைய உடையைத் தரித்திருந்தாலும் இந்த யுத்தத்தில் எனக்கு நல்ல தைரியத்தைக் கொடுத்து உலகத்தாரை அதிசயிக்கச்செய்யவேணும். உலகத்தாரை மயக்கும்படியாக இழிவான உடைகளைத்தரித்துக்கொண்டு நன்றாய்ச் சண்டை செய்கிறேன் என்றுசொல்லி சண்டைக்குப்போனான்.

அப்போது ஒரு பக்கத்திலிருந்து ரோமாபுரி சேனைகளும், மற்றொரு பக்கத்திலிருந்து பிரிட்டன் சேனைகளும் ஆயுதபாணிகளாய் யுத்தத்துக்கு வந்தார்கள். ரோமாபுரி சேனையில் லூஷியஸ், இமொஜன், இயாக்கிமோவும், பிரிட்டன் சேனைக்குப் பின்னால் ஒரு இழிவான சேவகனுடைய வேடந்தரித்துக்கொண்டு வந்த பாஸ்துமஸூம் காணப்பட்டார்கள். இவ்விருஜாதியாரும் மும்முரமாய்ச் சண்டைசெய்து கொண்டிருக்கையில் பாஸ்துமஸூம், இயாக்கிமோவும் நேருக்குநேர் யுத்தஞ்செய்ய நேரிட்டது. அதில் பாஸ்

துமஸ் இயாக்கிமோவைத் தோற்கடித்து அவனை நிராயுதபாணியாக்கி தன்னுயிரைக் காப்பாற்றிக் கொண்டுபோகும்படி யனுப்பிவிட்டான். அப்பொழுது இயாக்கிமோ நான் செய்த குற்றங்கள் என்னை அதைரியனாக்கிவிட்டது. என்தைரியமெல்லாம் வெயிலிற் பட்ட பனிபோல் எங்கேயோ ஓடி ஒளித்துக்கொண்டது. நான் இராஜபுத்திரியாகிய இமொஜனுக்கு விரோதமாய் பொய் சொல்லி பாஸ்துமஸை ஏமாற்றிவிட்டேன், அதை நினைக்கிறபோது என்மனமுருகுகிறது. ஐயோ என் தைரியமெல்லாம் போய்விட்டதே. நான் என்னசெய்வேன்? அந்த மகானுபாவனுடைய தயாளகுணத்தினால் என்னை பிழைத்துக்கொள்ளென்று இப்பொழுது அனுப்பினான். தெய்வமே நான் அடைந்தபட்டங்களும், கண்ணியமானபெயர்களும் என்னிடத்திலிருந்து பிரயோசனமென்ன? இவைகள் நிந்திக்கத்தகுந்தனவா யிருக்கின்றன. என்ன அதிசயமாயிருக்கிறது! இந்த அற்ப குடியானவன் என்னையென்று நிராயுதபாணியாக்கிவிட்டான். இதுவும் கடவுளதுசெயல் தானோ? இவனைப்போல் மற்றவர்களும் யுத்தம் செய்திருந்தால் பிரிட்டன் தேசத்துக்கு நிச்சயமாக வெற்றிகிடைக்கும். இவர்களைத் தேவர்களுக்குச் சமமாகவும், ரோமன் ஜாதியாரை மிருகங்களுக்குச் சமமாகவும் ஒப்பிடலாம். சண்டையின் முடிவை பின்னால் வரவரப் பார்த்துக்கொள்வோம் என்று தனக்குள் சொல்லிக்கொண்டு ஓடிப்போய் விட்டான். இப்படியிருக்க, ரத, கஜ, துரகபதாதிகளுடன் எட்டுத்திசைகளும் நடுநடுங்க சென்னாள் எழுப்பி, பேரிகைகளையும், பறைகளையும் அடித்து, சின்னங்கள் முழக்கி, அகோரமாயுத்தஞ் செய்துகொண்டிருக்கையில் பிரிட்டன் தேசத்தார் தோல்வியடைந்து ஓடிப்போக ஸிம்பலீனை எதிரிகள் கைவசப்படுத்திக் கொண்டார்கள். அச்சமயத்தில் அவ்வரசனை காப்பாற்றபெலாரியஸ் கைடீரியஸ் ஆர்விராகஸ் இம்மூவர்களும் (நாம்முன்னுரைத்தபடி அங்கே வந்து)

பெலாரியஸ்:— நண்பர்களே! ஏன் ஓடுகிறீர்கள் நில்லுங்கள் நாம் நிச்சயமாக ஜெயிப்போம். நல்ல இடத்தைக் கைப்பற்றிக் கொண்டேன். இந்தச்சந்தையை நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். உங்களுடைய அதைரியந்தான் உங்களை யோட்டுகிறது. தைரியமாய் நில்லுங்கள். நாம் இதோ ஜெயித்துவிட்டோம்.

கைடீரியஸ் } ஆர்விராகஸ். } பயந்து ஓடாமல் நின்றுகொண்டு தைரியமாய் சண்டை செய்யுங்கள். நீங்களோ நல்ல வீரர்களாயிருக்கிறீர்கள்; உங்களுடைய தைரியம் எங்கே போய்விட்டது. இனிமேல் எங்களால் பொறுக்கமுடியாது. நீங்கள் பயந்து ஓடினால் உங்களை எங்களுடைய எதிரிகளாக நினைத்து கண்டதுண்டமாக வெட்டுவோம்.

என்று சொல்லுகையில் ஓடினவர்கள் திரும்பிவந்து தைரியத்துடன் சண்டைசெய்தார்கள். அச்சமயத்தில் பாஸ்துமஸ் ஓடிவந்து, இம்மூவர்களுடன் சேர்ந்து யுத்தஞ் செய்து, பிரிட்டன் தேசத்தாருக்கு வெற்றியுண்டாக்கி, ஸிம்பலீனை எதிரிகளிடத்திலிருந்து விடுவித்து அதிக சந்தோஷத்துடன் தங்களிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். இது இப்படியிருக்க, இமொஜன், லூஷியஸ், இயாக்கிமோ இம்மூவர்களும் ஓரிடத்தில் சந்தித்து

லூஷியஸ்:—(இமொஜனைப் பார்த்து) சீக்கிரம் தப்பிப்பிழைத்துக்கொள். நம்மை பிரிட்டன் தேசத்தார் ஜெயித்துவிட்டார்கள். சத்துருக்களுக்கும், மித்திரர்களுக்கும் இந்த யுத்தகளத்தில் கொஞ்சமாவது வித்தியாசம் காணப்படவில்லை. மித்திரர்கள் ஒருவரையொருவர் வாளால் வெட்டுகிறார்கள். சீக்கிரம் ஓடிப்போவோம், எவ்விதமோ அவர்கள் நம்மை ஜெயித்துவிட்டார்கள்.



இயாக்கிமோ—அந்த நாலுபேர்களுடைய சகாயமில்லாமற்போனால் நிச்சயமாய் நாம் வெற்றியடைந்திருப்போம். அவர்களைப்போல் சண்டைசெய்தவர்களை நான் இதுவரையில் பார்த்ததேயில்லை. அவர்கள் தேவலோகத்திலிருந்துதான் இவர்களைக் காப்பாற்ற வந்தார்களோ, அறியேன்.

லூஷியஸ்:—நாம் சீக்கிரம் ஓடிப்போவோம், வாருங்கள். இவ்விடத்திலிருந்து சண்டை செய்வதில் பிரயோசனமில்லை. விரைவில் போகலாம்.

என்றுசொல்லி அவர்கள் தங்களுயிரைக் காப்பாற்றிக்கொண்டு போனார்கள்.

வி. கோபால ஐயங்கார், பி-ஏ.

## *பெண் கல்வி.

ஒரு தேசத்து ஜனங்களெல்லாம் நன்மை யடைவதற்கு பெண்கள் கல்விப்பயிற்சி யடையாதிருத்தல், பெரியதடையாகுமென்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயமே. மேலும் ஒவ்வொருதேசத்திலும் பாதிப்பேர் ஸ்திரீகளிருப்பார்களென்பதும் நிச்சயம். ‘தாயைப்பார்த்து மகளைக்கொள்ளு’ என்ற பழமொழிப்படி தாய்களாகிய ஸ்திரீகள் கல்விப்பயிற்சியடையாவிட்டால் அத்தேசத்துக் குழந்தைகளுக்கும் அறிவு குன்றும் என்பது திண்ணம்; அதனால் அத்தேசத்தின் க்ஷேமம் வரவரக் குறையும். இந்த விஷயத்தை யோசித்துப் பார்த்தால் புருஷர்களைவிட ஸ்திரீகளுக்குக் கல்விப்பயிற்சி அதிக அவசியம் என்று தோன்றுகிறது. “விதையொன்று போட சுரையொன்று முளைக்குமா” என்றபடி நற்றாயின் வயிற்றிற்பிறந்தவன் நல்லவனாயிருப்பான்; புத்தியற்ற தாயோ அவளுடைய குழந்தைக்கு தன்னுடைய குணத்தைப் போதிப்பாள்

ஸ்திரீகளுக்கு கல்வி புகட்டவேண்டுமென்றால் எவ்வாறு போதிக்க வேண்டுமென்பதை நிச்சயிக்கவேண்டும். இப்பொழுது பெண்கல்வியில் அநேகருக்கு ஊக்கமுண்டா யிருப்பதால் இதைப்பற்றி ஒரு நல்ல ஏற்பாடு சீக்கிரத்தில் செய்யவேண்டி யிருக்கிறது. ஏனெனில் அப்படி ஏற்பாடு செய்யாவிடில் நமக்கு நன்மையை உண்டாக்கும்படியான கல்வியைவிட்டு வேறு ஏதாவதொன்றைப் பயின்றால் நன்மை யுண்டாகாமற் போவதுந் தவிர தீமை உண்டாகினும் உண்டாகும். இப்பொழுது பயின்றுவரும் கல்வியோ இங்கிலாண்டில் உயர்தரக் கல்வி என்று சொல்லப்பட்டதே.

இந்தியாவின் அநுஷ்டானங்களும் இங்கிலான்டின் அநுஷ்டானங்களும் ஒன்றாயிருக்கும் பட்சத்தில், அக்கல்வியும் இங்கே நன்மை பயக்குமென்பதற் கையமில்லை. ஆனால் அவைகளொன்றல்ல வென்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம்.

* Contributed to the "Indian Ladies' Magazine" by Mrs. Annie Besant.

இங்கிலாந்தில் அநேக ஸ்திரீகள் தாங்களே சம்பாதித்து காலங்கழிக்க வேண்டியிருக்கிறது; ஆகையால் அங்கே புருஷர்களுக்குக் கொடுக்கிற கல்வியையே பெண்களும் பயில்வது சரிதான். ஆனால் இந்தியாவிலோ அப்படியல்லவேயல்ல; இங்கே புருஷன் ஸம்பாதிக்க வேண்டியவனும் ஸ்திரீ வீட்டுவேலைகளைப் பார்க்கவேண்டியவளுமாயு மிருக்கிறார்கள். ஆகையால் இந்தியாவில் பெண்கல்வி இங்கிலாந்தைப் போல் இருக்கக்கூடாது. எப்படி இருக்கவேண்டு மென்பதை எம்மாலியன்றவளவு சுருக்கி இங்கே எழுதுவோம். அவரவர்கள் தங்கள் சுயபாஷையை ஐயந்திரிபறக் கற்றுணரவேண்டும். காளிதாஸன் முதலிய கவிகளுடைய நூல்களைப் படித்தானந்திக்குமாறு வடமொழியும் கொஞ்சம் கற்கவேண்டும்; ஆங்கிலமும் கற்றால் நலமே; ஏனெனில் அதனால் இங்கிலீஷ் பயின்ற புருஷனுக்கும் இவளுக்கும் மனது ஒன்றுபட்டு அந்நியோந்நியம் அதிகம் உண்டாகிறதுந் தவிர, சில சாஸ்திரங்களைநன்றாய்க்கற்க அதுவே நல்ல சாதகமாகிறது; நாகரீகமதிகப்படுகிறது. தேகசௌக்கியசாஸ்திரம், தேகதத்துவசாஸ்திரம், சங்கீதம், தையல் வேலை முதலியவைகளெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாவது தெரிந்திருக்கவேண்டியது. சுருக்கமாய் ஒரு குடும்பத்தைப் புருஷனுக்கு தொந்திரவே யில்லாமல் தன்னாலியன்றவளவு நடத்திக்கொண்டு வருவதற்கு எந்தெந்த சங்கதிகள் தெரியவேண்டுமோ அத்தனையும் பெண்கள் கற்றுக் கொள்ளவேண்டும்.

இந்தியாவுக்குத் தகுந்தகல்வி இதுதான். இப்படி செய்தால்தான் இந்தியர்களுக்கு நன்மை உண்டாகும்.

இந்து மதமே அவர்களுக்கு நன்மை பயந்துவந்தது; இனியும் அதுவே பயக்கும்.

# ஓர் எச்சரிப்பு.

**பண்டிதை அசலாம்பிகை யம்மாள் எழுதியது:—**

தமிழுக்கும ஸ்டைல் உண்டோவென்றும், தமிழைப் படிப்பவர்களுக்கே மரியாதை செய்யும் வழி தெரியாதென்றும், இவ்வகுப்புப்பெண்கள் கூசாமற் கூறத்தலைப்படுதலைக் காண்கின்றோம். அந்தோ! இவர்களின் நாகரீகம் எவ்வாறு முடிகின்றது பார்த்தீர்களா? இவ்விதமாக இளமைதொட்டே பயிற்றப்படும் அன்னிய பாஷாபிவிர்த்தியையுடைய நம்சுதேசச் சிறுவர்களுட் சிலரும் அன்னிய மதபோதகர்களின் வலைக்குள்ளாகி அறிவிழந்து மதப்பிரஷ்டர்களாய் குலத்திற்கே மானக்கேட்டை யுண்டுபண்ணுகின்றனர். நமது இந்துச் சிறுவர்களை யவ்விதம் வழுவவொட்டாமல் தக்க கவனத்துடன் பாதுகாக்கப்படல்வேண்டுமென நம் நாட்டுக்கு நன்மையைத் தேர்ந்து பாடுபடும் நல்லோர் பலர் ஆங்காங்கு முறையிட்டுவரும் இக்காலத்தில்வீட்டிற்குள்ளிருந்து இல்லறம் நடத்தப்பட்டவர்களாயுள்ள இந்துச் சிறுமியரையும் அம்பலத்திலிழுத்து விடுவது தேச க்ஷேமத்திற்கொத்த நற்குறியாகக் காணப்படவில்லை. அன்னிய பாஷையில் இவர்கள் பயிற்சி பெறுதுபோனால் இவர்கள் கிரககிருத்தியம் முட்டுப்பாடாக நில்லாதென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். ஜீவனோபாய நிமித்தம் இந்துச்சிறுவர்கள் அன்னியபாஷையைப் பயின்றே தீரவேண்டும். ஆதலின் அவ்வாறு அன்னியபாஷையில் விற்பத்தியடையும் சிறுவர்களைக் கணவர்களாகவடையும் இச்சிறுமிகளும், (அக்கணவர்களுக்கும் தமக்கும் அன்பு அதிகரிக்கவும், இன்பமுண்டாகவும்,) அன்னிய பாஷையைப் பயிலவேண்டியது அவசியமுடைத்தெனின் யாம்அதையும் ஒருதலையாக அங்கீகரிக்கின்றனம். எவ்வாறெனின், இச்சிறுமிகள் ஆங்கிலம் பயில்வதை யாம் மறுக்கவில்லை. ஆனால் சுயபாஷையையும் அவ்வன்னிய பாஷையைப்போல, மிக்க ஆவலுடனும் கவலையுடனும் கூடப் பயின்றுவருதல் வேண்டும். அவ்வாறின்றி அன்னிய பாஷையை மட்டில் பயில்வார்களாயின் அதனால் பெருத்த கெடுதி சம்பவிக்குமென்பது திண்ணம்.

நமது சிறுமிகளை நாம் அன்னிய பாஷையில் பயிற்றுவதுபோல அவ்வன்னிய பாஷைக்குரிய மதத்தினர்கள் அவர்கள் சிறுவர் சிறுமிகளைச் சொந்த பாஷையில் சுன்னமாக்கிவிட்டு இதர பாஷைகளைக் கற்பிக்கவிடுவார்களா? இதை யோசித்துப் பார்க்குமிடத்து நாம் கூறும் இவ்விஷயம் ந்யாயமென்பதும் இப்புது நாகரீகம் சுயநலக் கேட்டிற்கு அடிப்படையென்பதும் நன்குவிளங்குமென நம்புகின்றனம். நமது இந்துச் சிறுவரைத் தவிரச் சொந்த பாஷையிலும் மதத்திலும் அபிமானம் துறந்த சிறுவர்கள் வேறு எந்த மதத்திலும் இதுபோல் பெருகியிருத்த லரிது. இக்கவலை சிறுவர்கள்மட்டில் இருந்துவந்தது போதாதென்று சிறுமிகளிடத்திலும் வந்தடையக்கூடியதா யிருக்கின்றதைப்பற்றியே நாம அஞ்சவேண்டியிருக்கிறது. முக்கியமாக நம்மவர்களுக்கும் அவ்வன்னிய மததினர்க்கும் உள்ள விரோதக்கொள்கைகளைச் சற்று ஆராய்வோம.

| | |
|---|---|
| அவர்கள். | பரத்துவபுத்தியென்பதில்லாதவர்கள் (இறந்த பின் இங்கு செய்த நன்மை தீமைகளுக்குத்தக்கபடி சுகதுக்கங்களை அனுபவிக்க வேண்டிய வேறுலகமுண்டென்னும் எண்ணம்) |
| நாமோ. | அற்பகுற்றம் செய்தாலும் சுவர்க்க நரகங்களிலாவது மறுபடி இப்பூமியில் வந்து பிறந்தாவது அதற்குரிய தண்டனையையநுபவித்தே தீரவேண்டுமென்னும் நம்பிக்கையை யுட்கொண்டவர்கள் |

அதனால்அவர்களுக்குத் தாங்கள் எவ்விதமாக வாகிலும் சுயநலத்தையே விருத்திசெய்து கொள்வதில் துணிவும் விருப்பமு முடைய வர்களாய்த் தாங்கள் சுகமடையும் முகாந்தரத்தினால் பிறருக்காவது பிற செந்துக்களுக்காவது தீங்கையுண்டு பண்ணுவதில் அச்ச மில்லாமலும் முன்பின் ஆலோசனை யில்லாமலும் நடந்து கொள்ளக் கூடியவர்களாகிறார்கள்.

மறுபிறப்புண்டெனும் அச்சத்தினால் நமக்கு எப்பொழுதும் தீமை செய்வதில் பயமும், நாம் சுகத்திற் குறைவுபெற்றாலும் நமக்காகப் பிறர் துன்பத்திற்குள்ளாகக் கூடாதெனும் உறுதியும், மேற்கொண்டு ஒழுகுபவர்களாகின்றோம்.

பின்னும் அவர்கள் அவனவனும் கஷ்டப்பட்டுத் தேடவேண்டியதன்றி ஒருவன் ஆபத்திற்கு மற்றொருவன் உற்றுதவுதல் அனவசிய மென்னும் பிடிவாதத்தைக் கருதும் சுபாவமுடையவர்கள்.

நாமோ நம்மாலியன்றவரையிலும் ஏழைகளுக்கு உதவி செய்து காக்க வேண்டியது முக்கியகடமை யென்றும், அவ்வாறு உதவாவிடில்மறுமையில் நாமும் அவ்வித பரம ஏழைகளாய்ப் பிறரையாசித்தும் கிடைக்கப் பெறாத வர்களாகித் துன்பப்படுவோமென்றும் நினைத்து அவ்வேழைகளிடமும், பிறமதத்தினர்களிடமும்,

துவேஷத்தை யாவது கன்னெஞ்சுடைமையையாவது கொள்ளாதவர்களாய் நடக்கக் கூடியவர்கள்.

இவர்களோ ஜீவஹிம்சை செய்தற்கஞ்சாமல் மாம்ஸ மதுவாதிகளைப் பட்சிக்க ஆவலுடையவர்கள்.

நாமோ ஓர் சிற்றெறும்பினையும் கொல்லக் கூசி சாக பாகங்கள் சேர்ந்த பாபமற்ற ஆகாரத்தினையும் சாத்தியமான மட்டில் குறைத்துண்டு காமம், கோபம், மதம், மார்ச்சரியம், முதலிய துர்க்குணங்களை நாளடைவில் அடக்கிவரல் வேண்டுமெனும் ஆவலையும் கொள்கையையு முடையவர்கள். இதுபோலவே இன்னுமுள்ள ஒவ்வொரு அம்சங்களிலும் நம்மிந்தியரது கொள்கைகளுக்கு இதரமதஸ்தர்களதுகொள்கைகளானது நேர் முரணாகவுள்ளதென்பதை நம்மாரிய சகோதர சகோதிரிகள் அனைவருமறிந்திருப்பார்கள். ஆதலின் அத்தகைய நமது கொள்கைகளுக்கு எதிர்மறையான கொள்கைகளை நம்பிற்காலத்தினர்கள் கைக்கொள்வது எவ்வளவு அநீதம். அவர்களுடைய் கொள்கை நல்லதென்றாவது தீயதென்றாவது நாம் இப்பொழுது கூற வரவில்லை. கூறவந்ததெல்லாம் நமது கொள்கைகளுக்கும் அவர்கள் கொள்கைகளுக்கு முள்ள வித்தியாசங்களையேயாகும். இவ்விரண்டினையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து நமது கொள்கைகளின் சாந்தமான நிலைமையும், அந்நிலைமையை நாம் அடைந்ததற்கு மூலமாயுள்ளது பரத்துவ புத்தியேயென்றும், எல்லா நற்குணங்களையும் உண்டு பண்ணச் சக்தி யுள்ளதாகிய அப்பரத்துவ புத்தியை நம்முன்னோர் தீர்க்கயோசனையுடன் மேற்கொண்டு வந்ததும், அது அவர்கள் மட்டில் மறைந்துவிடாமல் பிற்காலத்தினர்களாகிய நமக்கும் பயன்படும்படி சொற்கட்டிடம் கற்கட்டிடம் ஆகிய இவ்விரண்டு வழிகளினாலும் நம் நாட்டில் ஸ்தாபித்து விட்டுச் சென்றமையும், (இறந்தபின்னர் நாமடைவதாகிய தன்மை யின்னதென்பதை நாம் அறிய மாட்டாதவர்களே யாயினும், இருக்குமளவும்நாம் பிறருக்குத் தீங்குசெய்யவாவதுகடிய சித்தத்துடன் ஒழுகவாவது நாமே தெய்வப்பிறவி யெனும் இறுமாப்பை யடையவாவது துணியாதவர்களாகவே வாழ்நாளைக் கழிக்கும்படி அப்பரத்துவபுத்தியானது) நமது மனக்குதிரைக்குக் கடிவாளம் போல விருந்து நன்னெறியிற் செலுத்திவருவதைநாம்கைக்குமெய்யாகக் காணலாமாதலின், இப்பெரும் பேற்றை நமக்குத் தந்த நம் முன்னோர்களிடத்து நாம் பூரண நம்பிக்கையுடையவர்களாய், அவர்கள் விதித்த வழிகளில் ஒழுகி நம் முன்னோருக்கும் நமது தேசத்திற்கும் பெருமையை யுண்டாக்கி நாமும் கடவுள் அருளுக்கும் உலகிற் கீர்த்திக்கும் உரியவர்களாய் ஒழுகி நமது சிறுவர் சிறுமிகளையும் நல்வழியில் பயிற்றுவிக்க வேண்டியது இன்றியமையாத கடனாகும்.

அவ்வித நன்னெறியில் நமது பின் சந்ததியார்களைப் பயிற்றுவிப்பதற்குச் சிறந்த உபாயம் பாஷாபிமானமும் அதிற்பயிற்சியுமே யாகும் ஆதலின், அத்தகைய உபாயத்தை நமது நாட்டின்கண் இலௌகிக வியாபகம் வாய்ந்த பல கனவான்கள் கவனியாது அசட்டை செய்து பிறபாஷா மோகத்திற் சிக்குண்டு வருவதாகச் சிற்சில விடங்களில் காணப் படுகிறபடியால், அவ்வாறு இவர்கள் புது மோகங் கொள்வது நமது சுதேசப் பெண்களின் கல்வி யபிவிர்த்திக்கு ஒத்ததல்ல வென்றும், பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை போல இப்பெண்கள் கொஞ்சகாலத்தில் (துரைமார்களாகி மாறிவிடும் நமது சிலஇந்துவாலிபர்களைப்போல) துரைசானிகளாகி மாறி விட்டால் என் செய்வதென்றும் முன்னாடிநமக்குள் நிகழ்ந்த அச்சத்தைவெளியிட விரும்பினம்.



இத்தகைய பெண்பாலாரை நோக்குமிடத்துகல்வியறிவு சிறிதுமில்லாதவர்களாய் நாட்டுப்புறங்களில் வசித்துவரும் பெருத்த அநாகரீகப் பேதையர்களும் கெலித்த வர்களாய்ப் பேசவும், தாங்கள் நினைத்தது மிக்க விவேகமென்றும், கைகொட்டிச் சிரிக்கவும் நேரிடும்.

நகரவாசிகளிலும் பாடசாலைப் பயிற்சியினால் நலமுண்டென நம்பி தத்தம் சிறுமிகளைக் கண்டெரியச் செய்யும் அபிமானிகளும் பீதிமேற்கொண்டு சுதேசபாஷாபி விர்த்தியையும் தடுக்கத் தலைப்படுவார்கள். ஆதலின் இத்தகைய அநர்த்தங்கள் நமக்கும், பிறர்க்கும் விளையா வண்ணம் முன்னெச்சரிக்கையாகவே நமது சிறுமிகளுக்கு சுதேசபாஷையில் நல்ல ஞானத்தை சாத்தியப்பட்ட வரையிலும் விர்த்தி செய்து அதற்குமேல் வேறெந்த பாஷையையாகிலும் தங்கள் விருப்பப்படி பயில இடங்கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றனம்.

இரு பாஷைகளையும் பயிற்றுவிக்கக் கூடாமையான நிலைமையிலிருப்பவர்களுக்கு நமதுசுதேசபாஷை ஒன்றேபோதுமானதாகும் என்றும் கூறத்துணிவோம்.

நமது சுதேசாபிமானிகள் பாலவிவாகம், பிள்ளையைப் பெண்ணிற்கு விற்றல், குடும்பப் பெண்பாலார்களின் தீராப்போர், முதலியவைகளில் எவ்வளவுசிரத்தையும், கவலையும்கொண்டிருக்கிறார்களோ அவ்வளவு கவலை யாம்கூறப்புகுந்த இவ்விந்து மாதர்களின் கல்விப்பயிற்சியின் கண்ணும் வைக்க வேண்டுமென வற்புறுத்தி விநயத்துடன் வேண்டுகின்றனம்.

முற்றிற்று.

குசலவாக்கியம் என்று வழங்கும்

# உத்தரராம சரித்திரம்

இந்தப் பாட்டு எப்பொழுது யாரால் செய்யப்பட்டது என்பது ஒருவருக்கும் தெரியாது. அச்சிற் பதிப்பிக்கப்படவுமில்லை. ஆனால் வெகுகாலமாய் அதின் சொற்களின் அழகுக்கும், புண்ணியசரித்திர மென்பதற்குமாய் நமது பாட்டி முதலானோர்களால் வாய்ச்சொல்லாய் உருப்போட்டுச் சொல்லி வழங்கி வருகிறது. அப்படிப் பாடமாய் தெரிந்த கிழவிகள் இப்பொழுது மிகவும் சொற்பம். இனி நமது நாகரீகத்திற்கு இது அச்சிற் போட்டாலொழிய முழுதும் மறைந்துபோகும். மேலும் ஒருவர் சொல்வதுபோல் ஒருவர் சொல்லாமல் அனேகவிடங்களில் பிழையானவும், அர்த்தமில்லாதவுமான பதங்கள் இருக்கின்றன. இவைகளைக் கூடியவரையில் திருத்தி அதாவது இப்படித்தான் இருக்கவேணுமென்று மாற்றி எழுதியிருக்கிறேன். இதை வாசிப்பவர்கள் இன்னும் திறமாய் அவ்வவ்விடங்களில் மாற்றி யனுப்பினால் முடிவில் புஸ்தகமாய் போடும்பொழுது சேர்த்துப் போடலாம்.

குசலவாக்கியம்.

## (குச, லவர் சரித்திரம்).

(1) என்றும் மறவாத தசரதனார் ஹரி முறையோர் கதையை
என் பழி பாவம் தீரவென்று பலதினமும் நினைந்தேன்.

(2) ராமர் கதையை நாம் பாடுகைக்கு கருத்தில் வரவேணும்
மதி மாருதி எனக்கு வந்து முன் னடவும்

(3) (ஆவின்) குளப்படிபோல் சமுத்திரத்தைக் கூசாமலே தாண்டி
அரக்கனதிலங்கை யெல்லாம் அரைக்ஷணமே தேடி

(4) நிருப்பமுள்ள தாயைக்கண்டு நெடுஞ்சோகம் நீங்கி
அரக்கன்குல அட்சயகுமாரனை விழவடிச்சு

(5) திரும்பி லங்கைசுட்டு மீண்டு சீதை சூடாமணியை
அயோத்தி ராமன் கைகொடுத்த அனுமானே முன்னடவீர்

(6) அஞ்சனையாள் திருவயிற்றில் அவதரித்த அமுதே
அருக்கன் கனி என்று சொல்லி சேரப்பாய்ந்த தீரன்

(7) வில்லாளி ராகவர்க்கு விஸ்வாஸ தூதா
கவி கல்லாமல் ஓதவல்ல கஞுஸ்த குமாரா

(8) சிலைவீர ராகவர்க்கு சிநேகமான தூதா
மாதின் குறைதீர்த்திலங்கை சுட்டு மணிவஹித்த ஆழ்வார்

(9) நான் தனிவீற்று குசலவர் தந்தையை விழ்வடிச்ச
கதை மஹத்துவம் பாட எனக்கு கருத்தில் வரவேணும்

(10) பிள்ளைகள் அம்பாலே தந்தையரை அடிச்ச கதைபாட
அன்பாகி வந்தெனக்கு அறிவு தரவேணும்

(11) மகாவிஷ்ணு தசரதர்க்கு மைந்தராகிவந்து
வானவர்கள் இடர்தீர தாட்கையை வதைத்து

(12) மஹாமுனிவர் பின்னடந்து எக்யம் நிறைவேற்றி
வரும் வழியில் கங்கையின் மகிமை தனைக்கண்டு

(13) சாபத்தாற் கல்லான அகலியைப் பெண்ணாக்கி
மிதிலையிலே போயிரங்கி வில்லெடுத்து முறித்து

(14) ஜனகர் குமாரியை மாலையிட தசரதனார் உடனே
செம்பொன்மணித் தேரேறி தேவிமார்கள் சூழ

(15) மனப்பிரியத் தோடே யந்த ஜானகியை வேட்டு
மறித்துமந்த தாசரதி வருகுமந்த வனத்தில்

(16) கனத்த ஒரு வில்லெடுத்து பரசுராமன் எதிர்க்க
எதிர்த்து ஒரு வில்லெடுத்து ரகுநாதனோடி

(17) வந்தவன் கைவில் பறித்து தந்தையரைத் தேற்றி
சேனையோடும் தேவியோடும் திருவயோத்தி வந்தார்.



(18) ராமர்திரு வேட்டுவர சிறந்த நகரெல்லாம்
செம்பொன்மணி அயோத்தியெல்லாம் சிறக்க அலங்கரித்தார்

(19) அன்புடைய ரகுநாதர் கண்டுமன மகிழ
அயோத்தியுள்ள மாதர்களும் ஹாராத்தி காப்பெடுத்தார்

(20) மங்கையர்கள் வாழ்த்திவர வாழும் ரகுராமர்
அந்தமான அரண்மனையில் அழகாக புகுந்தார்

(21) சிங்காசனத்தில் வீற்றிருந்தார் தேவியுடன்கூட
அன்புடைய பரதரப்போ அம்மானும் போனார்

(22) பச்சையுடனே தங்கம் பதித்துவிட்டாப்போலே
ஏற்றமான ராமருக்கு ஏர்வைசீதை என்றாள்

(23) வடிவுடைய ராமருக்கும் வாய்த்த சீதையற்கும்
பரிவுடனே பட்டாபி ஷேகமது சூடி

(24) காணவென்று தசரதனார் கனபிரியத்தோடு
அறமுனிவ ருடனேசொல்லி நகர் அலங்கரியுமென்றார்

(25) அப்படியே ஆனதென்று அறமுனியும் உடனே
அயோத்தி நகரந்தன்னை அலங்கரித்து மிருந்தார்

(26) கூனி யிந்த சொல் கேட்டு கைகேகியிடமோடி
குத்திரமாய் வார்த்தைதனை க்ஷாத்திரமாய் சொன்னாள்.

(27) கைகேகி தசரதரைக் கடிந்து மிக வெறுத்து
ஐயா ரகுபதியின் அபிஷேகம் பரதருக்கு என்றாள்

(28) மாதா சொன்ன வாக்கியத்தை மகிழ்ந்து ராமர் கேட்டு
பிதா வாக்கியம் நிறைவேற்ற லக்ஷ்மணரைக் கொண்டு

(29) மரவுரியைத்தான் தரித்து மகுடந்தனை வெறுத்து
வைதேகி அம்மனையும் கூட அழைத்துக்கொண்டு

(30) சுமந்திர மந்திரி விடும் தேரின் மேலே ஏறி
சித்திரகூட பர்வதத்தில் செழிக்க வந்து இருந்தார்

(31) ஸ்ரீ பரதர் அதுகேட்டு திகைத்தோடிவந்து
தந்தையார் விழுந்த துக்கம் தமயனுடன் சொன்னார்

(32) தம்பி சொன்ன வாக்கியத்தை தாசரதி கேட்டு
தந்தையரை தான் நினைத்து சலித்து மிக அழுதார்

(33) ஸ்ரீ ராமர் திருக்கையினால் செய்யும் கிரியை செய்து
தம்பியர்க்கு திருவடியை தானு மங்கே ஈந்தார்

(34) பரதருக்கு தேறுதலும் பரந்தாமர் சொல்லி
பஞ்சமியில் வருவேன் என்று பிரதிக்கினையும் செய்தார்

(35) தண்டகா வனந்தனிலே சீக்கிரமாய் நடந்து
பஞ்சவடி தீரத்திலே இருந்தார் ரகுராமர்

(36) சூர்ப்பனகை மூக்கறிந்து காதூஷணனை வதைத்து
துஷ்டர்களை வெட்டியங்கே சூரத்தனங் காட்டி

(37) மாரீசனை விழவடித்து ஜடாயுவுக்கு மோக்ஷம் கொடுத்து
வாலிதனைப் போய்வதைத்து சுக்ரீவ பட்டங்கட்டி.
(38) வானரங்களுடன் கூடிவந்து தென்முனையில்
சேதுதன்னில் அணையைக்கட்டி லங்கைதனில் சேர்ந்து
(39) வாளரக்கன் முடியறிந்து மைதிலியை மீட்டு
வாழும் விபீஷணர்க்கு மதித்த பட்டங்கட்டி
(40) அபவாதத்தால் மாதாவும் அனல்முழுகி ஏறி
களிப்புடனே காகுஸ்தனார் அடிக்கீழ்வந்து பணிந்தாள்
(41) அடிப்பணிந்த சீதையுடன் அமர்ந்த ரதமேறி
அடிஅணியழகி உனக்காக அடைத்த அணைஎன்று
(42) என்னுமந்த ஜானகிக்கு இங்குமங்கும் காட்டி
மஹாமுனிவர் பாரத்துவாஜர் கிரஹந்தனிலே வந்தார்
(43) வனவாஸம் போகும்போது மஹாமுனிவரோடே
திரும்புகாலில் புஜிப்போமென்று சொன்னதொரு வாக்கியம்
(44) தப்பாமல் புஜிக்கவேணும் மாருதியே இப்போ
என்தம்பி பரதருக்கு சொல்லிவாபோ என்றார்
(45) அபிராமர் உரைத்தவுமே மாருதியும் கேட்டு
வாயுவேக மனோவேகமாக அங்கே பறந்து
(46) அனலிலே விழுகிற பரதருக்கும் சொல்லி
மடுவில் நின்ற குகனுக்கும் வந்தனுமார் உரைத்தார்
(47) பாலடிசிலும் புஜித்துதேவி யுடன் இருக்கும்
பரந்தாமனிடத்தில்வந்து சேர்ந்தனுமான் இருந்தார்.

இன்னும்வரும்.

☞ R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்.

# விநோத விருக்ஷமும் மோகினியும்.

குழந்தைகள்: தாதா! எங்களுக்கு இன்றையதினம் ஒரு கதை சொல்லுங்கள்.

தாதா: குழந்தைகளே! இன்றையதினம் உங்களுக்கு விநோதவிருக்ஷமும் மோகினியுமென்ற ஒரு வேடிக்கை கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

(ஒரு கதை).

முன்னொரு காலத்தில் அரங்காபுரம் என்ற ஒரு சிறு ஊரில் ஒரு ஏழை ஸ்திரீயும், அவள் பையன் இராமன் என்பவனும் காலங்கழித்துக்கொண்டு வந்தார்கள். அவளுக்குப் புருஷன் முன்னமேயே இறந்துபோய் விட்டான். இந்தப் பிள்ளையை பிரியமாய் வளர்த்துக்கொண்டு வந்தாள்.

இராமன், தகப்பன் இல்லாததினால் சோம்பேறியாயும் முட்டாளாயும் ஆய்விட்டான். வீட்டு விசாரம் என்பதே அவனுக்கு கிடையாது. அதனால் அவர்கள் மிகவும் ஏழையாய்ப்போய் வீட்டில் ஒரு வேளை அன்னத்திற்குக் கூடவழியில்லாமல்தவிக்கலானார்கள்.



அப்பொழுது இராமனைப் பார்த்துக் கண்ணீர் பெருக்கிக்கொண்டு அவன் தாய் இருக்கிற சமாசாரத்தைச் சொல்லி தங்கள் வீட்டுப் பசுமாட்டை விற்கவேண்டுமென்று சொன்னாள். இராமன் அவளைப் பார்த்து "நீ விசனப் படாதே, அம்மா! நான் கடைவீதிக்குப்போய் பசுமாட்டை விற்று வருகிறேன்" என்றுசொல்லிப் புறப்பட்டான். தாயும் இராமனுக்கு ஏழைத்தனத்தினால் இந்தமட்டும் புத்தி வந்ததே இனிமேல் நமக்கு நல்ல காலந்தானென்று நினைத்து மனமகிழ்ந்து, "அப்படியே சரி" என்று மாட்டை ஓட்டி அனுப்பினாள். அவன் சிறிது தூரம் போகையில் அங்கே ஒரு கிழவன் விதம் விதமாய் விநோதமான விதைகளை வைத்துக்கொண்டு எதிர்ப்பட்டான். இராமன் அவைகளைக் கண்ணுற்றதும் அவற்றின்மேல் ஆவல் பிறந்தது. அந்தக் கிழவனும் அதைக் கண்டுகொண்டு இந்த முட்டாள் பையனிடத்தில் தனக்கிஷ்டமானபடி வியாபாரம் செய்யலாமென்று நினைத்து "அடே பையா! அந்த மாட்டை எங்கே கொண்டுபோகிறாய்" என, இராமன் "இதை விற்கவேண்டும்" என்றான். "ஆனால் நீயந்த மாட்டை எனக்கு கொடுத்தால் நான் இந்த விதைகளெல்லாம் உனக்கு கொடுக்கிறேன்" என்று கிழவன் சொன்னான். பையனும் சந்தோஷத்துடன் சம்மதித்து, மாட்டை விட்டுவிட்டு விதைகளை துணியில் முடிந்துகொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வந்ததும் அவன் தாய் நடந்த சங்கதிகளைக் கேட்டு மிகவும் துக்கமும் கோபமும்மேலிட, அவனை வலிய புடைத்து அந்த விதைகளை யெல்லாம் தோட்டத்தில் எறிந்துவிட்டாள்.

மறுநாள் காலமே இராமன் தோட்டத்தில் வந்து பார்க்க ஒரு பெரிய விருட்சம் புதிதாய் அங்கு வளர்ந்திருக்கக் கண்டான். அதன் உச்சி கண்ணுக் கெட்டவே யில்லை; அவன் கொண்டுவந்த விதைதான் ஒரு இரவில் முளைத்து அவ்வளவுபெரிய விருட்சமா யிருந்தது. அவனுக்கு வெகு ஆச்சரியமுண்டாகி உடனே மரத்திலேறிப் பார்க்கவேண்டுமென்று ஆவலுண்டாயிற்று. அவன் தாய் எவ்வளவு தடுத்துச் சொல்லியுங் கேளாமல் உடனே ஏற ஆரம்பித்தான். வெகு தூரம் ஏறிப் போகப்போக மரம்முடிவுக்கு வரவில்லை; அவனுக்கு மிகவும் களைத்துப்போய் விட்டது. கடைசியில் அதன் நுனியைக் கண்டுபிடித்தான்; அங்கே ஒருபுதிய ஊரிருந்தது; அதில் செடி விருட்சம் ஒன்றும் கிடையாது. வீடுகளுமில்லை. உயிர்ப்பிராணிகள் ஒன்றும் கிடையாது.

இராமன் உடனே தாய்சொன்ன வார்த்தையைத் தட்டி இங்கேவந்ததைப்பற்றி விசனப்பட்டு அழ ஆரம்பித்தான்.

உடனே ஒரு அழகிய பெண்ணொருத்தி அவனெதிரே தோன்ற அவனுக்கு மிகவும் ஆச்சரிய முண்டாயிற்று. அவள் "நீயார் இங்கெப்படி வந்தாய்" என, இராமன் தன்னுடையவிருத்தாந்தத்தையெல்லாம் சொன்னான். அவள் "உன்னுடைய தகப்பனைத் தெரியுமா" என, இராமன் எனக்குத் தெரியாது; எங்கள்ம்மாவை அவரைப்பற்றிக்கேட்டால் அவள் அழ ஆரம்பிக்கிறாள்; ஆகையால் நான் அவளைக் கேட்கிறதில்லை என்றான். உடனேயவள் "எனக்குத் தெரியும் அந்தசமாசாரம் உனக்குச் சொல்லுகிறேன் நீ ஆனால் ஒருவருடனும் சொல்லக் கூடாது. நான் ஒரு மோகினி நீ யாரிடத்திலாவது சொன்னால் கொன்றுவிடுவேன்" என்றாள். இராமன் மிகவும் பயந்து "அப்படியே ஆகட்டும்" என்று சொல்ல, உடனே அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

26

J2
Y15 m211, M99M6
M99.3-1
161164

உன் தகப்பன் வெகு நல்லவன் மிகவும் பணக்காரன் அவன் ஏழைகளைக் கண்டால் பிரியமாயுபசரிப்பான். ஒருவாரத்திற்கொருதரம் சுற்றியிருக்கிற ஏழைகளையெல்லாம் வரவழைத்து சாப்பாடு போடுவான். அவன் பெயர் சுற்றி வெகு தூரத்திற்கு எட்டியிருந்தது. ஒருராக்ஷஸன் இவன்பிரதாபத்தைக் கேள்விப்பட்டு அவனைக் கொன்று அவனுடையசொத்துக்களையெல்லாம் கொள்ளையிட்டுக்கொண்டு போகவேண்டுமென்று தீர்மானித்தான். உடனே அவன் தன் பெண்சாதியை யழைத்துக் கொண்டு அவனிடத்திற்கு வந்து "ஐயா! என்னை ரக்ஷியும். என்னுடைய சொத்துக்களையெல்லாம் ஒரு பூகம்பத்தில் போய் விட்டன, நான் ஒரு அநாதை" என்று கெஞ்ச, உன் தகப்பன் தன்வீட்டிலேயே இருக்கும்படி சொல்லி அவனுக்கு சாப்பாடு முதலியவைகளெல்லாம் கொடுத்து நடத்திவந்தான். ஒருநாள் இரவில் ராட்சசன் திடீரென்று ஓடிவந்து, இரண்டு மைலுக்கப்பால் ஒரு வெளிச்சத்தைக்காட்டி "அந்த ஊரில் நெருப்புப் பிடித்துக்கொண்டது என்று சொல்லி" உன்தகப்பனிடம் வேலையாட்களையெல்லாம் அங்கே உதவிக்கனுப்பும்படி சொன்னான். இவன் உடனே தன் வேலையாட்களில் இருவர் தவிர மற்றெல்லோரையும் அனுப்பிவிட்டான். உடனே அந்த ராட்சசன் உன் தகப்பன்பேரில்விழுந்து அவனைக் கொன்றுவிட்டு, வேலையாட்களையும் கொன்றுவிட்டு வீட்டிலிருந்ததையெல்லாம் எடுத்துக்கொண்டு, உன்னையும் உன் தாயையும் கொல்ல வந்தான். அப்பொழுது நீ மூன்று மாதக்குழந்தை. அவள் அந்த ராட்சசன் காலில் விழுந்து கொல்லக்கூடாதென்று கெஞ்சினாள். உடனே யவன் அவளை உன்னிடத்தில் உன் தகப்பனார் சமாசாரத்தை சொல்லக்கூடாதென்று பயமுறுத்திவிட்டு அப்படிச் சொன்னால் அவளைக் கொன்றுவிடுவதாகச் சொல்லி உங்கள் வீட்டில் நெருப்பு வைத்துவிட்டுப் போய்விட்டான். இப்பொழுது அவனிடத்தில் இருக்கிறதெல்லாம் உன்னைச் சேரவேண்டியது. அவைகளை உனக்கு வாங்கி கொடுப்பதற்கு உன்னை அந்தவிதைகளை வாங்கும்படி நான் செய்தேன். இந்த மரத்தை முளைப்பித்ததும் நான்தான். அவன் இந்த நிர்மானுஷியமான ஊரில்இருக்கிறான். அவனை நீ கொல்லுகிற வரைக்கும் சும்மா யிருக்கக்கூடாது. உன் தாயிடத்திலும் நான் உன்னிடத்தில் சொன்னசமாசாரத்தைச்சொல்லக்கூடாதென்று சொல்லி அந்த ராட்சசன் வீட்டுக்கு வழியையும் காண்பித்து போய்விட்டாள்.

இராமன் அந்த வழியே போய் இராட்சசன் வீட்டு வாசலில் அவன் மனைவி உட்கார்ந்திருக்கக் கண்டு மிகவும் பசியாயிருக்கிறது கொஞ்சம் சோறு போடவேண்டுமென்று கேட்டான். அவள், "அப்பா! என்புருஷன் ஒருராட்சசன், அவன்உன்னை இங்கே கண்டால் கொன்றுதின்றுவிடுவான்" என, அவன் கேளாமல் எப்படியாவது தனக்கு சோறுபோட்டு ரட்சிக்கவேண்டுமென்று கெஞ்சினான். உடனேயவள் அவனை இட்டுக் கொண்டு போய் சோறுபோட்டு இராட்சசன் வருகிற சமயத்தில் இவனை ஒருசிறிய அறையில் ஒளித்து வைத்தாள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ராட்சசன் வந்து "எங்கே நரமாமிச வாசனையுண்டாகிறது" என்று கேட்க, இராமன் நடுங்கிப்போய்விட்டான். அவள் அதெல்லா மொன்றுமில்லை யென்று சொல்லி அவனை அதை மறக்கடித்து சோறுகொண்டுவந்து சாப்பிடச்சொன்னாள். இராமன் அவன் தின்கிற அளவை கதவின் துவாரத்தின் வழியாய்ப் பார்த்து ஆச்சரியப் பட்டுக்



கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் இராட்சசன் விலாப்புடைக்கத்தின்று ஒரு பெட்டைக்கோழியை எடுத்து, "முட்டையிடு" என்றான். உடனே அது ஒரு தங்க முட்டையிட்டது. இப்படியே அதை தனக்கு திருப்தியாகிற வரைக்கும் முட்டையிடச்சொல்லி, அவைகளை யெல்லாம் எடுத்து வைத்துவிட்டு தூங்க ஆரம்பித்தான். அவன் குரட்டை கோடையிடி முழக்கம்போலிருந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இராமன், சற்று நேரத்திற்கெல்லாம் மெதுவாய்த் தான் பதுங்கி யிருந்தவிடத்தை விட்டுக்கிளம்பி அவனிடத்திற்கு சத்தப்படாமல் போய் அந்தக் கோழியை எடுத்துக்கொண்டு ஓட்டமாய் ஓடிவந்து மரத்திலிருந்து இரங்கி வீடு வந்துசேர்ந்தான். பிறகு அந்த கோழியை தங்க முட்டை யிடச்செய்து அவைகளை விற்று சௌக்கியமாய் இராமனும் அவன் தாயும் காலம் கழித்து வந்தார்கள். இப்படியே இரண்டு மூன்று வருஷங்கள் சென்றன. பிறகு ஒருநாள் அந்தமரத்தைப் பார்க்கவே மோகினி ஞாபகம் வந்து அந்த இராட்சசனைக் கொல்லுவதாக வாக்குத்தத்தம்செய்ததை நினைத்துக் கொண்டான். உடனே அவன்தாய் என்ன சொல்லியும் கேட்காமல் மரத்தின் மேலேறி அந்த இராட்சஸன் வீட்டுக்குப்போய் முன்போலவே அவன்மனைவி அங்கே உட்கார்ந்திருக்க கண்டான். அவளைஇவன் சோறுபோடச்சொல்லிக் கேட்க முன்போலவே அவள் என் புருஷன் ஒரு இராட்சஸன் அவன் வந்தால் உன்னைக்கொன்றுவிடுவான் என்று மறுத்ததுமல்லாமல், முன்னே ஒரு பையனை உள்ளே இருக்கச்சொன்னதற்கு அவன் தங்களுடைய சொத்தில் ஒன்றைத்திருடிக் கொண்டு போய்விட்டானென்றாள். இவன் அவளை மிகவும் வேண்டி உள்ளேபோய் சாப்பிட்டு வந்து ஒளிந்துகொண்டிருந்தான். இராட்சஸன் வந்து முன்போலவே வயிறு நிரம்பத் தின்றுவிட்டு தன்னுடைய பணப்பைகளைக் கொண்டுவரச் சொல்லி எண்ணிப்பார்த்து சந்தோஷப்பட்டு பிறகு அயர்ந்து நித்திரை போனான். சற்று நேரத்திற்கெல்லாம் இராமன் மெதுவாய்க்கிளம்பி அப்பணப் பைகளிரண்டை எடுத்துத் தோள்மேல் போட்டுக்கொண்டு வெகு வேகமாய் வீடு வந்துசேர்ந்தான். உடனே அவர்கள் ஒரு நல்ல வீடு கட்டிக்கொண்டு முன்னிலும் அதிக சௌக்கியமாய் ஜீவனம்பண்ணி வந்தார்கள். இப்படியே நாலு ஐந்து வருஷங்கள் சென்றன. பிறகு ஒருநாள் அந்த மரத்தைப் பார்த்து இராட்சஸன் ஞாபகம் பிறந்து அவனை எப்படியாவது கொல்லவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு மூன்றாந்தரம் மரமேறிப் புறப்பட்டான். இராட்சஸன் வீட்டில் போய்ச் சேர்ந்து எல்லாம் பார்த்துக்கொண்டு ஒளிந் திருந்தான். அவன் ஒரு வீணையை எடுத்து வாசியென்று சொன்னபொழுதெல்லாம் அது தானாய் வாசித்தது. இராட்சஸன் நித்திரை போனபிறகு இராமன் அந்த வீணையைப் போய் மெதுவாகத் தொடவே அது மந்திர வீணையாதலால் எஜமானனே! எஜமானனே! யென்றுகத்த ஆரம்பித்தது. இராட்சஸன் விழித்துக் கொண்டான். இராமன் வீணையை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடிக்க இராட்சஸன் வயறு நிரம்ப தின்று இருந்தபடியால் ஓடமுடியாமல் மெதுவாக துரத்திக் கொண்டு வந்தான். இராமனோ காற்றாய்ப் பறந்து வீடுவந்து சேர்ந்து மரத்தை அண்ணாந்து பார்த்தான். இராட்சஸன் பாதிவழி இறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு ஒருகோடாலியைக் கொண்டு மரத்தை அடியில் வெட்டி வீழ்த்தினான். இராட்சஸன்

கீழேவிழுந்து இறந்துபோய் விட்டான். பிறகு அந்த மோகினி அங்கே வந்து இராமனையும் அவன்தாயையும் ஆசிர்வதித்துப் போய்விட்டாள். இவர்கள் வெகுகாலம் பணக்காரர்களாய் எல்லோருக்கும் உதவிசெய்து கொண்டு சவுக்கியமாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

தாதா: குழந்தைகளே! நாழிகையானபடியால் நித்திரை செய்யுங்கள் நாளையதினம் ஒரு புதியவேடிக்கை கதை சொல்லுகிறேன் என்று சொன்னவுடனே குழந்தைகள் நித்திரை செய்ய பள்ளியறைக்குச்சென்றார்கள்:

முற்றிற்று

# முக்கிய குறிப்புகள்.

## எச். இ. லேடி ஆம்திலவர்களும சுதேச மாதர்களும்.

டிசம்பர்மீ 16வ சாயங்காலம் கிண்டியிலுள்ள விசித்திரமானவும், விஸ்தீரணமும், பற்பல விநோத விருட்சங்களும், செடிகளும் உள்ள கவர்ன்மெண்டு மாளிகையில் நமது எச். இ. லேடி ஆம்தில் அவர்கள் சென்னையிலுள்ள சுதேச மாதர்களை வரவழைத்து அவர்களுக்கு சிற்றுண்டி முதலியவைகளளித்தார்கள். அந்தச்சமயத்தில் ராணியார் லேடி ராமசுவாமி முதலியாரவர்களும் அவர் குமாரத்தியும், லேடி பாஷியம் ஐயங்காரவர்களும் அவர் குமாரத்தியும், மிஸ்ஸஸ் திவான் பஹதூர் வி. ராகவாசாரியரவர்களும் அவர் குமாரத்தியும், மிஸ்ஸஸ் கிருஷ்ணராவு அவர்களும் அவர் குமாரத்தியும், ராய்பஹதூர் எதிராஜுலு பிள்ளையவர்களின் புத்திரியும், மருமகளும், மிஸ்ஸஸ் நஞ்சுண்டராவும் அவர் புத்திரியும், மிஸ்ஸஸ் பட்டாபிராமய்யரும் அவர் மருமகளும். மிஸ்ஸஸ் ரங்கப்பா அவர்கள், மிஸ்ஸஸ் பாலய்ய நாயுடு அவர்கள், மிஸ்ஸஸ் நாராயணசுவாமி ஐயரவர்கள் மிஸ் தி எம். சுவாமிநாதய்யரவர்கள், மிஸ்ஸஸ் கிருஷ்ணசாமி ஐயரவர்கள் முதலி மாதர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அப்பொழுது பாம்பாட்டிகள் இவர்களைச் சந்தோஷிப்பதற்காக வரவழைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் தங்கள் பாம்புகளை பெட்டியிலிருந்து எடுத்து வெகு வேடிக்கையைக் காட்டினார்கள். (எட்டிஸென் போனகிராப்) அமேரிக்காதேசத்து எடிஸன் என்ற சாஸ்திரசிரோமணியால் கண்டு பிடிக்கப்பட்ட பேசும் கீதவாத்தியம் என்ற நவீன கருவியின் இயக்கத்தைக் கண்ட நமது மாதர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள். மேலும் காலஞ்சென்ற டி. முத்துசாமி ஐயருடைய பௌத்திரியும் மிஸ்டர் T. M. சுவாமிநாத ஐயருடைய குமாரத்தியுமாகிய மாதுசிரோன்மணி இனிய குரலோசையினால் பாடியபாட்டை ஒற்றுக்கொண்டு இக்கருவிமறுபடியும் இப்பாட்டை சுரம்தவறாமல் அம்மாதின் குரலோசை பிரதிபலிக்கும்படியாக இக்கருவி கீதம்பாடினபொழுது அம்மாதர்கள் மிகுந்த ஆநந்தத்தை யடைந்தார்கள். வேடிக்கை யானபின் மாதர்களுக்கு லேடி ஆம்திலவர்கள் விதம் விதமாயும் ருசியுள்ளவுமான பற்



பல சிற்றுண்டிகளை ஏராளமாக கொடுத்தார்கள். யாவரும் சந்தோஷமாக பேசியபின் சபையிலிருந்து அவரவர்கள்தங்களிருப்பிடம்சென்றார்கள். நமது லேடி ஆம்திலவர்கள் இவ்வளவு பிரியத்துடன் இந்தியமாதர்களை வரவழைத்து அவர்களுடன் யாதொரு பெருமையின்றி பேசியது மிகவும் மெச்சத்தகுந்ததே. இவ்விதம் நம்மவர்களும் ஐரோப்பிய மாதர்களும் அடிக்கடி சேர்ந்து அந்நியோந்நியம் பாராட்டி வருவார்களாகில் ஐரோப்பியருடைய மேன்மையான குணங்கள் நம்மவர்களுக்கு தெரிவதுடன் ஐரோப்பியர்களுக்கும் நம்மவர்களுடையஎண்ணம்முதலியவைகளும் நன்றாகத்தெரியும் என்பதற்கு சந்தேகமில்லை.

## நமது கவர்னரும் பிரைமரி பிள்ளைகளும்.

நமது கவர்னரவர்கள் நாளது மார்ச்சுமாதத்தில் சென்னையிலுள்ள பிரைமரி பாடசாலை பிள்ளைகளைத் தமது மாளிகையில் வரவழைத்து சிற்றுண்டிகளைக்கொடுக்கப்போகிறதாக ஏற்பாடு செயதிருக்கிறதைக்கேட்க மிகச் சந்தோஷப்படுகிறோம். இந்த ஏற்பாடானது ஒவ்வொரு வருடமும் நிரந்தரமாய் நடந்துவரவும் தக்க ஏற்பாடுகளை நமது கவர்னரவர்கள் செய்து வருவதும் யாவரும் மெச்சத்தகுந்ததே. இவ்விதம் ஒருகவர்னரும் செய்ததில்லை. ஆகையால் இக்காரியத்தைச் செய்ய வந்த முதல்கவர்னர் லார்ட் ஆம்தில் அவர்கள்தான். சிறு குழந்தைகளுக்கு இராஜப்பிரதிநிதி அவர்களே இவ்விதம் செய்வதானது அவருக்கு சுதேச குழந்தைகளிடத்திலிருக்கும் அன்பையும் தயாளகுணத்தையும் காண்பிக்கின்றதல்லவா? இக்காரியம் வெகுவிமரிசையாகநடக்குமென்று கேட்க மிக மகிழ்வதுடன் குழந்தைகளைச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்ற எண்ணமுள்ள நமது கவர்னரவர்கள் மிக தயாள குணமுள்ள வர்களென்பது சொல்லாமலே யாவருக்கும் தெரியும்.

## The fate of a brahman girl.

### ஓர்பிராமணப்பெண்ணின் பரிதாபநிலைமை.

தஞ்சாவூரில் சில தினங்களுக்குமுன் ஓர் குழந்தையை கிணற்றிலெறிந்து கொன்றதாக அனுமானிக்கப்பட்ட இந்த பிராமண ஸ்திரீ கீழ் கோர்ட்டாரால் மரணதண்டனை விதிக்கப்பெற்ற போதிலும் மாட்சிமை தங்கிய ஐகோர்ட்டார் இத்தண்டனையை மாற்றி ஆயுள்பரியந்தம் தீவாந்திர சிட்சை விதித்திருக்கின்றனர். அந்தோ பரிதாபம்! பார்த்தீர்களா? உயர் குலத்தில்

பிறந்தவளும் பதினெட்டு பிராயமுள்ள இந்தப்பெண் சிசுவதை புரிந்ததாக அனுமானிக்க நேரிட்டது யாது காரணம்? இதை இவள் செய்தாள் என்று திட்டமாய் ரூபிக்கத்தக்க சாட்சிக ளில்லாததினால் இவள் இந்ததண்டனையை யடைய நேரிட்டது பூர்வஜன்ம பாபமே. இந்தப் பரிதாபமான சிறுமியின் வயதையும் போதுமான சாட்சியமில்லாமையையும் மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் கண்டு இவள்மேல் இரக்கங்கொண்டு இவள்விஷயத்தில் தீர்க்காலோசனை செய்து உலகத்தில் யாவராலும் கொண்டாடத் தகுந்த தயையைக் காண்பித்தால் மிகநலமாகவிருக்குமென்று நம்புகிறோம்.

---



மகா கனம் பொருந்திய பத்திராதிபர் அவர்களுக்கு வந்தனம் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்-

ஐயா !

நான் ஒரு இந்து போர்டிங் பெண் பள்ளிக்கூடத்தில் படிக்க விரும்பி விசாரித்து பார்த்ததில் சென்னை ராஜதானியில் போர்டிங் ஸ்கூல் பெண்களுக்கு இருக்கிறதாக தெரியவராதபடியால், தாங்கள் தயவுசெய்து தங்களுக்கு தெரிந்த விஷயத்தை மாதர் மனோரஞ்சனியில் பிரசுரித்தால் என்னைப் போலொத்த பெண்களுக்கு பெரிய உபகாரமாயிருக்கும்.

15—12—1902.
பாரிட் பந்தர்பேரு

☞ ருக்மணி.




# KAWDER MOHIDIN & CO.,

## முக்கிய கவனிப்பு.

எங்கள் கம்பெனியில் அநேகவிதமான வாச்சுகளும, பெரிய கெடியா
ரங்களும், டைம்பீசுகளும் பலவிதமான கடியார சங்கிலியும், சாரம்முதலான
சாமான்களையும் மற்றக் கம்பெனியாரைப் பார்க்கிலும் வெகு குறைந்த விலை
க்கு விற்றுவருகின்றோம். கனவான்கள் எவ்விதமான கெடியாரங்கள் கேட்
டபோதிலும் எங்கள் ரூபில் எண்ணைபோட்டு டையம் செட் செய்து கார
ண்டி ஸ்டாம்பு பத்திரத்துடன் உடனே அனுப்புவோம். எங்களிடம் சாமான்
வாங்குவோர்க்கு எங்களால் கொடுக்கும் இனும் முதலானவை எங்கள் ஜெ
ன்ரல் கேட்லாக்கால் தெரிந்து கொள்ளலாம். வேண்டுவோர் $\frac{1}{2}$ அணா ஸ்டா
ம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விஷயம் இன்னதெனத் தெரியாமல்
வீணாய் பணத்தைக் கொடுத்து ஏமாந்து மோசம் போகாமல் 30 வருஷம்
அனுபோகமும் வெகு குறைந்த விலைக்கு விற்பவர்களுமாகிய எங்கள் கம்
பெனியில் ஒருதரம் வியாபாரம் செய்து பாருங்கள்; வெகு ஆனந்தப்படு
வீர்கள்

இதில் குறித்த நகைகள் தவிர இன்னும் அனேகவிதமான தங்க நகைகளும், ஜர்மன் வெள்ளி சுயமான வெள்ளி ஸ்வரப்பொன் இவைகளில் ஸ்திரீகள் அணியும்படியான எல்லாவித நகைகளும் தட்டு முட்டு சாமான்களும் கையிருப்பில்வைத்து விற்றுவருகின்றோம். இவையல்லது கனவான்கள் எவ்

விதமான நகைகள் வேண்டுமென்று கருதினபோதிலும் உத்திரவாத ஸ்டாம்பு பத்திரத்துடன் உடனே அனுப்பத் தடையில்லை ஆனால், எங்களிடம் வியாபாரம் செய்வோர்கட்கு மிகவும் சகாயவிலைக்கே கொடுத்து வருகின்றோம் மேலும் இக்காலத்தில் அனேக வேலையற்ற வீணர்கள் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திவிட்டு வரும் ஆர்டரைக்கொண்டு கடைகள்தோறும் அலைந்து எங்களால் கழித்துவிடுகிற அடாஸ்களை விலைக்குவாங்கிக் கொஞ்சம் கிலிட்டு போட்டு அதிக லாபம் வைத்துக்கொண்டு கனவான்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட நகைகளை வாங்கி ஏமாந்து கனவான்கள் ஒருதரம் எங்களிடம் வியாபாரம் செய்துபாருங்கள். நன்மைத்தேடுங்கள்.

காதர்மொய்தீன் அண்டு கோ.,
கடியார வர்த்தகர்கள், ரிபேர்வேலை செய்பவர்கள்,
& பொன் வெள்ளி நகை வியாபாரிகள்.
குஜிலி, சென்னை.

இச்சமயம் தவறினால் எலக்டிரிக் என்னும்
தங்கநகை எச்சமயமும் கிடைக்காது.

THE MADRAS RIPON BOOK DEPOT.
மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலை,
273, தம்புசெட்டி வீதி, சென்னை.

இப்புத்தகசாலையில் வேதாந்த சித்தாந்தம், தருக்கம், கட்டளை, ஸ்மிருதி, இதிகாசம், புராணம், மான்மியம், தோத்திரம், இலக்கண இலக்கியங்கள், பிரபந்தம், கோவை, திருப்புகழ், வகுப்பு, வண்ணம், நிகண்டு, அகராதி, நீதிநூல், வைஷ்ணவ நூல்கள், ஷை தமிழ்ப்பாஷை தெலுங்கு எழுத்து வைஷ்ணவ நூல்கள், வடகலை சம்பிரதாய கிரந்தங்கள், பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி, மாலை, வெண்பா, சதகம், வாசகம், கீர்த்தனை, ஜோதிடம், வைத்தியம், சங்கீதம், ஜாதிநூல்கள், படம், பூகோளம், பிராணி சரித்திரம், நாடகம், தமிழ் நாவல்கள், விநோதக் கதைகள், ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள், சம்ஸ்கிருத நாடகக் கதைகள், நீதிக்கதைகள், ஸ்திரீகளுக்குரிய நூல்கள், அறிவு கொடுக்கத்தக்க நூல்கள், கீர்த்தி பெற்றவர்கள் சரித்திரம், ஆக்ட்டு புத்தகங்கள், கிறிஸ்துமதகண்டனம் (தமிழ் & இங்கிலீஷ்), பதிகம், திருவிளையாடல் சிவனடியார் சரித்திரங்கள், தனித்தனி 3 - பை, 2 - பை, 1 - பை புத்தகங்கள் முதலிய சகலவிதமான சுத்தப் பதிப்புப் புத்தகங்களும் கிடைக்கும். வெளியூரிலுள்ளவர்களுக்குப் புத்தகங்கள் வி-பி. மூலமாய் அனுப்பப்படும்.

முழுப் புத்தக விளம்பரம் வேண்டுவோர் அடியிற் கண்டவருக்கு எழுதிக்கொண்டால் இனாமா யனுப்பப்படும்:—

☞ சை. சிவசங்கரசெட்டி, பி-ஏ.,
(காலஞ்சென்ற சை. ரத்தினசெட்டியார் குமாரர்)
சொந்தக்காரர்.
ரிப்பன் பிரஸ் & ரிப்பன் புஸ்தகசாலை,
273, தம்புசெட்டி வீதி, சென்னை.

OFFICE OF ... REGISTERED 5 JUN 1902 MADRAS

# மாதர் மனோரஞ்சனி.

“என்னும் எழுத்தும் கண்ணெனத்தகும்”—ஔவையார்.

VOL. III. } Madras: February 1902. { No. 12.
புத்த-3. } சென்னபட்டணம், 1902ஆம் ௵ பிப்ரவரி௴. { இல-12.

## முடிசூட்டுக் கொண்டாட்டம்.

[இந்திய மாதர்களுக்கு ஒரு கலாசாலை.]

நமது சக்ரவர்த்தினியாராயும் நமக்கெல்லா மன்புடையன்னையாராயு
மிருந்து விளங்கிய விக்டோரியா சக்ரவர்த்தினியாரை இழந்த பெருந்
துன்பத்தைத் தமது மாமியாரிலும் மிக்க நற்குணங்களும் பெண்
ணிலக்கணங்களுமமைந்து டேன்மார்க் தேசத்துதித்து பூரணச்
சந்திரன்போன்று குணத்திற்கேற்ப வனப்புவாய்ந்து நமது எட்
வர்ட் மன்னரின் அன்பிற்கு மந்தரங்கத்திற்கு முரியராகிய பெரு
மையும் வகித்த அலெக்ஸாண்டிரா என்னும் மாதாவை அரசியா
ராக நாம் கிடைக்கப்பெற்றதால் தசரத சக்ரவர்த்தியானவர் ஸ்ரீராமபிரானு
க்கு முடிசூட்டிவித்து தான் தவத்தைநாடி வனத்தையடைய நினைந்த எண்
ணத்தை மந்திரிகளுடன் வெளியிட்டபொழுது அறுபதினாயிரமாண்டு தங்
கள் உணர்வுபோன்றுற்ற மன்னவர் பிரிந்துபோகிறாரென்ற பெருந்துன்பத்
தை அளப்பிடற்கரிய அரியநற்குணங்கள் வாய்ந்த ஸ்ரீ ராமபிரானரசாகிறா
ரென்ற களிப்பான்று ஆற்ற ஆறியதுபோல நாமும் ஆறினோம். பூர்வம்
அநேக கொடுங்கோல் மன்னர்களுடைய காலங்களில் இந்தியர்களும் இந்
துப்பெண்களும் புலியைக்கண்டயர்வுற்ற பசுவைப்போல் தொழுந் தெய்வங்
களையு மிழந்து மத வேறுபாடுகளையு மடையுங்காலம் நேரினு நேருமென
நடுங்கி தாங்கமுடியாத் துயரமுற்றனர்களென விளங்குகிறது “கொடுங்
கோல் மன்னர், வாழுநாட்டின், கடும்புலிவாழுங் காடுநன்றே” என்றார்
ஆன்றோர்களும். ஆதலின் வழிவழியாய்ச் செங்கோலையே தாங்கிய இத்தரும
ராஜ்யபாரத்தில் நாம் யாதொரு குறைவுபாடுகளையு மனேகமாய் படைய
வில்லையென்றே சொல்லலாம். ஆயினும் இதர ராஜாக்கள் அரசாண்டகாலத்து
நம்மிந்துப்பெண்கள் தங்கள் உருவத்தையும் வெளிக்காட்டாமல் பதுங்கித்
துன்பமே குடிகடந்த உள்ளத்தாராயினர்; ஆதலின் அன்னோர் கல்விகேள்வி
களு மக்காலத்தில் மங்கியது பிற்காலத்தோர்களுங் காரணமறியாமல் அவ்

வித மூடத்தனமாகப் பெண்களை வைத்திருப்பதே தங்கட்குரிய நீதியென நினைந்து அவ்வழக்கத்தையே பின்பற்றினார்கள். அது அவ்விதமாக தற்கா லம் ஆங்கிலேய நாகரீகத்தில் பெண்கல்வி விருத்தியடைந்து வருகிறதெனப் பெயரளவாகவே நிற்கின்றது. காரணம் உள்ளபடி இவ்விஷயம் விருத்தியுற வேண்டுமென்னும் எண்ணமும் ஊக்கமும் அநேகருக்கு இல்லையென்று கட்டாயமாய்க் கூறலாம். ஏனெனில், தற்சுதந்திரமாய் தங்கள் மனோபாவப்படி நடக்கும் மற்ற வகுப்பைப்போல் நடக்கும் மார்க்கமுடையவர்களல்ல நம் மிந்துப்பெண்கள். கொடிய கிருத்தியமுற்ற கணவனாயினும் கீழ்ப்படிந்து நடக்குந்தகுதியை யுடையவர்களென்பது யாவருமறிந்தவிஷயம். ஆதலின் நீங்கள் தகுந்த கல்விகற்று சங்கங்கள் சேர்ந்து விவேகிகளாகவேண்டுமென ஒவ்வோராடவரும் தங்கள் தங்கள் வீட்டுப்பெண்களை வற்புருத்துவாராயின் ஒருபோதும் மறுக்கமாட்டார்கள். கல்விப்பாட்டையுடைய ஆடவர்கள் ஆதியில் கொஞ்சம் தூண்டுவாராயின் அக்கல்வி உருசி இவர்களுக்குந்தோன்றி அவர்களையே இவர்கள் தூண்டும்படியாய்விடும். அவ்விதமே சிலவிடங்களில் விருத்திக்கும் வந்திருக்கின்றது. அவ்விதம் விருத்திக்கு வரக்கூடியவர்களும் மைசூர்முதலாகிய விடங்களிலுள்ள பெண்களைப்போல் மேல்பதவிகளையடைந்து பட்டங்களையடைய மார்க்கமில்லாம லிருக்கின்றனர். ஆண்பிள்ளைகட்காக அநேக உயர்தரக்கலாசாலைகளை ஏற்படுத்தி அன்னோர்விருத்தியைக் கோரிய நம்ராஜாங்கத்தார் இப்பெண்பிள்ளைகட்காக ஓர் உயர்தரக் கலாசாலை ஏற்படுத்தி அன்னார் க்ஷேமத்தைக் கருதினாராகக் காண்கிலம். காங்கிரஸ் முதலான விடங்களிலும் பிரஸ்தாபமாத்திரமாகவே தணிந்துவிடுகிறது. கற்கண்டைக்கண்டு அழுது ஆறிய ஓர் குழந்தைக்கு பிறகும் அக்கற்கண்டையே காட்டியும் மறைத்தும் களிப்பையுந் துன்பத்தையும் அடிக்கடி உண்டிக்கியதைப்போல் மேற்கூறிய விஷயம் பிரஸ்தாபத்திற்கு வரும்போதெல்லாம் இப்பெண்களுங்களித்து அப்பிரஸ்தாபம் தணியும்போதெல்லாம் இவர்களும் வருந்துகின்றனர். கடந்த 63 வருடங்கள் விக்டோரியா சக்ரவர்த்தியென்னும் பெண்ணரசி அரசாக்ஷியில் 1858ஹு வரையிலும் கம்பெனியார் ஆண்டுவந்த இந்தியாவை அதுமுதல்தான் ஆள்வதாய்த் தெரிவித்து 1877ஹு ஜனவரிமீ" முதற்றேதி இந்திய சக்ரவர்த்தினியாரென்னும் பட்டமும்பெற்று கடந்த 24 வருடங்கள் பெண்ணரசுநடாத்திய அக்காலத்தும் பெண்கல்வி விருத்தியடையுமாறு நம் தலைநகரமாகிய சென்னையில் பெண்கட்காக ஓர் உயர்தரக்கலாசாலை ஏற்படாதொழிந்தது நம் துரதிர்ஷ்டமென்று கூறத்தடையுண்டோ? கடந்ததைக் கருதிப்பயனென்? அது அவ்விதமாக நம் சுதேசப் பிரபுக்களாகிலும் இதைப்பற்றி கவனிப்பாராயின் காரியம் கைகூடுமென்பதிற் றடையில்லை. அதற்கு இது ஒருநல்லசமயம். ஞாபகச் சின்னமென்பதாக சாக்ஷியளவில் இன்பந்தரக்கூடிய அநேகவிதமான மார்க்கங்களில் முயற்சியையும் பொருளையும் செலவிடும் நம் சுதேச கனவான்களும் மாதர்களும் ஒருங்குகூடி இச்சமயத்தை வீண்போக்காது சென்னையில் ஒரு



கலாசாலை ஸ்தாபிக்கவும் அக்கலாசாலைக்கு, அலெக்ஸாந்திரா என்னும் நமதரசியின் பெயர்தந்து இம்முடிசூட்டுக் கொண்டாட்டத்தில் அறிவை வளர்க்கும்படியான இச்சுபச்செய்தியை இந்துஸ்திரீகள் தங்கள் களிப்பிற் கறிகுறியாய் தங்கள் பெயரால் தற்காலம் நமதரசியாராகிய அலெக்ஸாந்திரா மகாராணியா ரவர்களுக்குத் தந்திபோக்குவார்களாயின் இவ்வாடவர் பட்டங்களுக்கும் கௌரவங்களுக்கும் தக்கபடி பொருளும் முயற்சியும் நன்மார்க்கத்திலாற்றதெனவும் இராஜவிசுவாசிகளெனவும் யாவராலும் புகழப்பட்டு தேசமும் சீர்திருத்தத்தை யடைந்து உண்மையான நாகரீகத்தையும் பொருந்தும். காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ பச்சையப்பமுதலியார் முதலான கனவான்களுடைய காலம் அநேக ஆண்டுகள் கடந்தும் அன்னோர் பெயரும் புகழும் எவ்விதம் அழியாநிற்கின்றதோ அவ்விதமே சரீரமழிந்தாலும் நம் கனவான்களும் நீடூழி நின்றவரேயாவார். இவ்விடயங்களுக்கு நம்மிந்துமாதர்கள் எவ்வளவு கல்வியும் ஊக்கமும் உற்றவர்களாயினும் ஆடவர் முயற்சி இன்றெனின் முடிவுபெறுங் காரியமன்று; ஆதலின் ஆங்காங்கு இது விஷயமாய்ச் சங்கம்சேர்ந்து நம்மாதர்களை பேசும்படிச்செய்து அவர்களைப் பெயரளவில் முன்னிலையாக்கி நம் சகோதரர்களே சகலபொருப்பையும் மேற்கொண்டு எடுத்தகாரியத்தை நிலைநிறுத்தவேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் ஆதலின் முன்வாருங்கள், ஒன்றுகூடுங்கள், நன்மைநாடுங்கள் புகழ்தேடுங்கள்.

உருக்குமணியம்மாள்.

---

# *மஹ்டாஜிமஹால் சக்ரவர்த்தினி.

நம்முடைய தேசத்துப் பெண்பாவையர்கட்கெல்லாம் ஒழுக்கத்திலும் பெருமையிலும் ஒப்பிலா பிரதிநிதி யிருந்திராவிட்டால் நாம் அப்பேர்ப்பட்ட பிரதிநிதியின் சரித்திரத்தை இப்பிரசுர சஞ்சிகையில் பெண்மணிகளுக்கு எடுத்துரைத்து அவர்கள் மனதைச் சந்தோஷிப்பிக்கும்படியான சந்தர்ப்பம் இல்லாமற் போவதுடன்கூட நீர்வளத்திலும் நிலவளத்திலும் ஈடில்லாத கரைகளோடுகூடிய ஜீவநதியாகிய யமுனை ஆற்றின்கரையில் சாரஸன் ஜாதியார்காலத்து சிற்பசாஸ்திரமுறைக்கிணங்க தேவநிர்மாணம்போல் ஒப்புவமையற்று என்றைக்கும் அழிவில்லாது விளங்குகிற ஓர் ஞாபகக் குரியான கல்லரைக்கட்டிடம் இருந்திருக்கமாட்டாது. மோகலாய ராஜாங்கத்தினுடைய தென்மாகாணத்தின் முக்கியபட்டணத்தில் அமைக்கப்பட்டு கல்லரைகளுக்கெல்லாம் ஒரு முத்துபோல் விளங்காநின்ற அக்கட்டிடம், காந்தம் ஊசியை இழுப்பதுபோல், ஒவ்வொரு யாத்ரிகா

* Translated from the Indin Ladics' Magazino.

லத்திலும் சிற்பவேலையிலும் அழகான விசித்திரவேலையிலும் அத்தியந்த ஆவலுடைய அநேகர்களை ஐரோப்பா கண்டத்திலுள்ள அநேக நாகரீகத்திற் சிறந்த தேசங்களினின்றும் இழுக்கின்றது.

இவ்வளவு பேர்கள் அவ்விசித்திரமான கல்லறையைப் பார்த்துக் களிக்க வெகு தூரமான தேசங்களினின்றும் வருபவர்களாயினும் அவர்களில் அநேகமாய் ஒருவராவது, முத்தையொத்த வெளுப்புள்ள, சலவைக்கற்களால் கட்டப்பட்ட மண்டபத்தின்கீழ் இவ்வுலகச் சிந்தையற்று இனி எழுந்திராத் தூக்கம் தூங்கும், புத்தி யுக்தி நற்குணம் அழகு இவைகளெல்லாம் ஒருங்குசேர்ந்து உருவெடுத்து வந்ததெனவோவென எண்ணும்படியான, பெண்மணியின் இன்பமான சரித்திரத்தைக் கேட்டாவது கேட்க சிரத்தையுள்ளவராயாவது இருந்திருக்கமாட்டார்கள்.

அப்பெண்மணி இளம்பிராயத்தில் "ஸௌபாக்கியவதி" என்னும் பொருளடங்கிய அர்ஜுமாண்டபானு வென்கிற மகம்மதியப் பெயரை வகித்தாள்.

மகம்மதிய அரசாக்ஷியில் தனக்குச் சமானமில்லையெனப் பெயரெடுத்து தன்பாட்டன் ராஜாங்கத்தில் நடந்தவழிமாறாது நடந்துவந்த ஷாஜிஹான் சக்கிரவர்த்தியினால் அப்பெண்மணி விவாகம் செய்யப்பட்டு அவனது அரண்மனையின் அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டு வரப்பட்ட பிறகு, தான் அரண்மனையிலுள்ள இதர ஸ்திரீகளுக்கெல்லாம் அழகிலும் நற்குணநற்செய்கைகளிலும் மேலானவளென்னும் பொருளடங்கிய மம்டாஜி மஹாலென்னும் மகம்மதியப்பெயரையும் அவளுடைய பெருந்தன்மைக்கும் உதாரகுணத்திற்கும் தக்கபடி என்னாளு மழிய மம்டாஜ் ஜாமினி என்னும் நாமமும் பெற்றாள்.

ஆனால் அநேகமாய் ஆக்ரா பட்டணத்திலுள்ள மற்ற ஸ்திரீகளுக்குள் அவள்பெயர் டாஜ்பிபி (கிரீடந்தரித்த சீமாட்டி) என வழங்கிவந்தது. அவள் 1590-ம் வருஷத்தில் பாரிசீக மகம்மதிய குலத்தில் பிறந்தவள். அவள் பாட்டன் மீர்ஜாகியாஸ்பேக் என்பவன் காலவித்தியாஸத்தினால் கஷ்டதசையடைந்து ஹிந்துஸ்தானத்தை யடுத்து மகா கீர்த்திபெற்ற ஆக்பர் சக்கிரவர்த்தியின் குடும்பகாரியங்களைச் சுற்றிப்பார்க்கும் அதிகாரியாக அமர்ந்து அச்சக்கரவர்த்திக்குப்பின் அவன் பிள்ளையாகிய ஜிஹாங்கியரால் மந்திரிஸ்தானம் பெற்றான். அவள் தந்தை அஸப்கானே முதலில் ஜிஹாங்கியர் சக்கிரவர்த்தியின் சேனைகளுக்கு தளகர்த்தனாக வமர்ந்து தன்னுடைய மகளை பட்டத்துக்குரிய ஷாஜிஹான் மணந்ததினால் மேற்கூறிய ஷாஜிஹான் பட்டம் தரித்தவுடன், மந்திரி பதவியையும் பெற்றான்.

அர்ஜுமாண்ட் பானுவின் இளமை பருவத்தையும் அவள் கல்விபயிர்ச்சியையும் பற்றி யாதொன்றும் தெரியாது.



ஆனால் பின் சொல்லப்போகிற அவளுடைய சரித்திரத்தையும் அவளுடைய பிள்ளைகளில் நாலுபேர் மோகலாய ராஜாங்கத்திலடைந்த வியாபகத்தையும், அவளினழகான இரண்டு பெண்களினிடமிருந்த நன்னடக்கை நற்குணம் நற்செய்கை முதலியவைகளையும் சற்று நோக்குமிடத்து அவள் சாதாரணமான ஸ்திரீயல்லவென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

அஸப்கான் தனது அரண்மனையில் வரும் விருந்தினர்களுக்குச் சிங்காரமான விடுதிகளேற்படுத்தி சகல வாத்தியங்களுமுழங்க முற்றிலும் தன்பெண்ணின் கலியாணச் சந்தோஷ மகோத்ஸவத்தில் மூழ்கி தம்பதிகளுக்கு அளித்த வெகுமதிகளுக்கு பிரதிவெகுமதிகளளித்து, ஏழைகளுக்கு அன்னமிட்டு அக்கலியாண மிந்தமாதிரி யிருந்திருக்கக் கூடுமென்று நம்மால் ஊகிப்பதற்கு அரிதானவும் இனி இப்புவியில் இதற்குச் சமதியான வைபவ மில்லையெனத் தோன்றும்படித் தனது மகள் அர்ஜுமாண்ட் பானுவை அவளது 14-வது வயதில் பட்டத்துக்குரிய ஷாஜிஹானுக்கு பாணிகிரஹணம் செய்து கொடுத்தான்.

விவாகமானபின்பு தன்கணவனைப் பிரியாது ஒத்துவாழ்ந்து 8-பிள்ளைகளையும் 6-பெண்களையும் பெற்றாள். அவைகளில் 7-குழந்தைகள் ஒன்றின்பின் ஒன்று இறந்துபோக அவள் கொஞ்சகாலம் துக்கத்திற்காளாகினளாயினும் தனது கணவனிடம்தான் நடந்துகொண்ட கீழ்ப்படிவினாலேயும் அவனிடம் தனக்கிருந்த விசுவாச நம்பிக்கையினாலேயும், அவன் தன்னிடம் காட்டிய தனக்குரித்தான மரியாதை விசுவாசத்தினாலேயும் அவ்வாறாத் துக்கத்தை சற்று மறந்து தன்கணவனே தெய்வமென கைக்கொண்டு வாழ்நாட்களைக் கழித்து வந்தாள். சாதாரணமாய் மகம்மதியமதத்தில் ஒருவன்தான் முதற்கலியாணம் பண்ணின மனைவியிருக்கும்பொழுதே மற்றொருபெண்ணை மணம் புரியலாமென்கிற கொள்கை யிருந்தபோதிலும், அவளுடைய கணவன் ஷாஜிஹான் சக்கிரவர்த்தியோ அர்ஜுமாண்ட்பானு இருந்தபொழுதும் வேறொருபெண்ணை கண்ணெடுத்துப் பார்த்தவனுமல்லன்; அவளிறந்தும் வேறொரு ஸ்திரீயை கைதொட்டுக் கலியாணம் செய்தவனுமல்லன். இப்பெண்மணி, மகம்மதிய சரித்திரத்தில் புத்தியிலும், யுக்தியிலும் ராஜதந்திர விஷயங்களிலும் மகா பிரக்கியாதி யடைந்தவும், ஜிகாங்கியர் சக்கிரவர்த்தியின் மனைவியுமான மிஹருன்னிஸாவென்னும் வளர்ப்புப் பெயருடைய நூர்மஹால் என்னும் சக்கிரவர்த்தியின் மருமகள். அர்ஜுமாண்ட்பானு புத்தி சாதுரியத்திலும் ராஜதந்திர விஷயங்களிலும் தீரத்திலும் தன் உடன்பிறந்தாளைக்காட்டிலும் குறைந்தவளாயினும் பிறரிடம் நேசம்பாராட்டி அவர்கள் மனதைக் கவரும்படியான சக்தியில் அதிகரித்தவளாயினள். ஷாஜிஹான் சக்கிரவர்த்தி வெளிநாடுகளின் மீது படையெடுத்துச் செல்லும் பொழுதெல்லாம் அவனை விட்டுப்பிரியாது கூடவே செல்லுவள்; மரணதண்டனைக்குள்ளான மகா பாதகர்களாயினும் அவர்கள் தன்னையடுத்தால் அவர்க

ளைக் கைவிடாது கணவனிடம் மன்றாடி அவர்களுக்கு உயிர் பிச்சையளிக்கும் உதாரசிலி. அம்மாது சிரோன்மணியின் நற்குண நற்செய்கைகளும் அந்தரங்க விசுவாசமும், கணவன் நோக்கமறிந்து அவனுக்குப் பணிவிடைசெய்யும் திறமையும், ஜனங்களின் கஷ்ட நிஷ்டூரங்களை விசாரித்து அவர்களுக்கு வேண்டிய சாதனங்களைச்செய்து அவர்கள் மனதை களிப்பிக்கும் அபார சக்தியும் அளவற்றன.

1630-ம் வருஷத்தில் தக்ஷிணத்திலிருக்கும் பர்ஹாம்பூரென்னும் ஊரில் ஆறாவது பெண்ணைப்பெற்று திடீரென 38-வது வயதிலேயே மனிதர்களுக்கெல்லாம் அதிகுரூரமான பகையாளியாயிருக்கிற காலனுக்கு இரையானாள். ஒன்றின்பின் ஒன்றுமாண்ட அவளுடைய குழந்தைகளின் துக்கமே தீரா மனோ வியாதியாயிருந்து அவளுடைய தேகமெலிவுக்கிடமாகி அகால மரணத்திற்கு அவளை ஆளாக்கிற்று.

தன்னாவி தன்னுடலைவிட்டுப் பிரியுமுன் தன் கணவனாகிய சக்கிரவர்த்தியினிடம் தன் குழந்தைகளை யொப்பிவித்ததுடன் கூட தன்வேலைக்காரிகளையும் கைவிடாது காப்பாற்றும்படிக்கும் அவனை வேண்டிக்கொண்டாள். அவளிறந்தபிறகு, அவள் பிள்ளையாகிய சாஷ-ஜா வென்பவன் தன் தாயின் சவத்தை, தாதிகளும் மற்றுமுள்ள உற்றத்தாரும் சுற்றத்தாரும் பின் தொடர்ந்துவர, கண்ணாடிபோல் பிரதி பிம்பிக்கும் சலவை கற்களாலமைக்கப்பட்டிருக்கும் மேற்கூறிய கல்லறைக்குக் கொண்டுபோய் அடக்கம் செய்தான்.

ஷாஜிஹானோ அவளிருந்தவரையில் மனோசஞ்சலமற்று வாழ்ந்து அவளிறந்ததும் பக்கபலமற்று மனந்தளர்ந்து, அவள்போனவழியே போய் என்னாளும் அவளைவிட்டுப் பிரியாது சேர்ந்திருக்கும் நான் யென்னாளோ வெனக் கோரினவனாகவேயிருந்து இறந்தான்.

இதனால் மேற்கூறிய சரித்திரமானது மனைவி தன் கணவனிடமிருந்து இல்லறம் வழுவாது நடந்துகொள்ளும் ஒழுக்கத்தையும், கணவன் தன் பெண்சாதியினிடத்து வைக்கவேண்டிய அன்பையும், அவளை நடத்தவேண்டிய மாதிரியையும், பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதத்தையும், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடத்து வைக்கவேண்டிய அன்பையும் மரியாதையையும் நன்றாய் விளக்குகின்றது.



# ஸிம்பலைன்

[9-ம் அதிகாரம், 176-வது பக்கத்தொடர்ச்சி.]

இவ்விதம் சண்டைசெய்து பிரிட்டன் தேசத்தாருக்கு வெற்றிகொடுத்து தன்னுடைய எண்ணங்கள் நிறைவேற வேணுமென்ற எண்ணத்துடன், பாஸ்துமஸ் ரோமன்ஜாதியருடன் சேர்ந்து அவ்விடத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள அவர்களை நோக்கிப்போய்க்கொண்டிருக்கையில் ஒரு பிரபுவைச் சந்தித்தான்; அப்பொழுது

பிரபு:— ஏ, வீரா! அதிக உக்கிரத்துடன் சண்டைசெய்துகொண்டிருந்த களத்திலிருந்துதான் வருகின்றனையோ?

பாஸ்துமஸ்— ஆ! ஆ! நீ சொன்னது வாஸ்தவந்தான். ஆனால் நீ ஓடிப்போனவர்களில் ஒருவன்தானென்று தோன்றுகிறது. நீ அவர்களில் ஒருவன்தானோ?

பிரபு:—ஆம், நான் அவ்விடத்திலிருந்துதான் வருகிறேன். ஐயோ! அந்தப்போர்க்களத்தைப்பார்க்க என்மனம் துணியவில்லை. தைரியமும் என்னைவிட்டகன்றது. அதினால் என்னுயிரைக்காப்பாற்ற விரைவாய் ஓடிவந்துவிட்டேன். அது இருக்கட்டும், யுத்தம் எவ்விதம் முடிந்ததென்று சொல்.

பாஸ்து:— உன்பேரில் ஒருகுற்றமுமில்லை. கடவுள் நமக்கு சகாயம் செய்யாமற்போனால் நாமனைவரும் இதற்குமுன் அதோகதியாய்ப்போயிருப்போம். நம்முடைய போர்வீரர்கள் யாவரும் அரசனைத் துறந்து தோல்வியடைந்து தங்களுயிர்களைக் காப்பாற்ற ஒரு சந்தின்வழியாகவேகமாய்ப்பின்வாங்கி ஓடத்தலைப்பட்டனர். இச்செய்தியை எதிரிகள் அறிந்து அதிக உற்சாகத்துடன் அவர்களைத் துறத்தி அனேகரைக்கொன்றும், காயப்படுத்தியும் செய்தார்கள். தவிர அனேகர் எதிர்களைக் கண்டு பயந்து கீழே விழுந்தார்கள். இவ்விதமாக அச்சந்து பிரேதக்குவியலால் மூடப்பட்டது.

பிரபு:— நண்பனே! அச்சந்து எவ்விடத்திலிருக்கிறது சொல்?

பாஸ்து:— யுத்தகளத்தினருகில்தானிருக்கிறது. பிரிட்டன் தேசத்தார் தோல்வியடைந்து ஓடுகிற சமயத்தில் தற்செயலாய் ஒரு விருத்தாப்பியன் இரண்டு வாலிபர்களைச் சேர்த்துக்கொண்டு அந்த சந்தில்வந்து சேர்ந்தான்.

பிரபு:— யுத்தத்தின் முடிவைப்பற்றி சீக்கிரம் சொல்வாயாக; வயதுசென்றவனைப்பற்றியும் இரண்டு வாலிபர்களைப்பற்றியும் எனக்கு ஒன்றும் இப்போது சொல்லவேண்டாம்.

பாஸ்துமஸ்:— "மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம் உடல் சிறியரென் றிருக்க வேண்டாம்" என்ற பாடலை நீ கேட்டிருப்பாயே. இச்சிறுவர்களை அலட்சியம் செய்துவிடாதே. இவர்களுடைய தைரியத்தை என்னால் விவரிக்கமுடியாது, செய்கைகளோ பெரிய மனிதர்களாலும் செய்யத்

தகாததாயிருக்கின்றன. தோல்வியடைந்து ஓடிப்போன ஆயிரக்கணக்கான சேனைகள் இவர்களுடைய சகாயத்தினால் வெற்றியடைந்தார்களென்றால் இவர்களுடைய தைரியத்தைப்பற்றி நான் விசேஷமாய்ச் சொல்லவேணுமோ. அந்த விருத்தாப்பியனுடைய தைரியத்தை இவர்களுடையதற்குச் சமமாய்ச் சொல்லலாம். இம்மூவர்களும் அந்த யுத்தகளத்தில் அமிர்த சஞ்சீவினி மருந்தைப்போல் காணப்பட்டார்கள். அந்த விருத்தாப்பியன் சிறுவர்களை யழைத்துக்கொண்டு சந்தின் சமீபம் வந்தவுடன் இரண்டு வாலிபர்களும் தைரியமாய் நின்று ஓடிக்கொண்டிருந்தவீரர்களைப்பார்த்து "நம்முடைய சேனையில் தைரிய மற்றவர்களல்லவா பயந்து ஓடிப்போவார்கள். வீராதிவீரர்களே! ஓடிப்போகவேண்டாம் பின் வாங்கி ஓடுகிறவர்கள் நிராநரகத்தை யடைவார்கள் தைரியமாய் நின்று சண்டை செய்யுங்கள் நான் சொல்வதைக் கேட்காமற்போனால் உங்களை விரோதிகளாக நினைத்து கண்டதுண்டமாய் வெட்டிப்போடுவோம். நீங்கள் திரும்பிவந்து எதிரித்து யுத்தஞ்செய்தால் உங்கள் இராச்சியத்தை நிச்சமாய்க் காபாற்றலாம். தைரியமாய் நின்று சண்டை செய்யுங்கள் சண்டை செய்யுங்கள்" என்று சொல்ல, எல்லாரும் இம்மூவர்களைக் கண்டு மூவாயிரம் ஜனங்கள் உதவி செய்தால் எவ்வளவு தைரியம் வருமோ, அவ்வளவு தைரியத்தை உடையவர்களாய் திரும்பி வந்து யுத்தஞ்செய்தார்கள். இம்மூவர்கள் அவர்களைப் பிரமிக்கச்செய்ததினால், அவர்களுக்குத் தைரியம்வந்து, சாகுந்தருணத்திலிருந்தவர்களும், கீழே விழுந்தவர்களும், ஓடிப்போனவர்களும் அதிக தைரியத்தைப்பெற்றவர்களாய் சிம்மங்களைப்போல் கர்ச்சித்துக்கொண்டு எதிரிகளுடன் மும்முறமாய்ச் சண்டைசெய்தார்கள். கீழேவிழுந்தவர்களுக்கு தைரியம்வந்ததினால் சிம்மத்தைப்போலாய் ஒவ்வொருவரும் எதிரிகளில் பத்துப்பேர்களை விழத்தள்ளினர். எதிரிகளைக்கண்டு பயந்து ஓடினவர்கள் ஒவ்வொருவரும் இப்பொழுது எதிரிகளில் பத்து இருபது வீரர்களை விழத்தள்ளினர். இவ்விதமாகச் சண்டைசெய்து மூவர்களும் பிரிட்டன் தேசத்துக்கு வெற்றிகொடுத்து ரோமான்ஜாதியரைக் கைதிகளாக்கினர். இம்மூவருடைய தைரியத்தைப்பற்றி இன்னும் கேட்கவேணுமா.

பிரபு:— இவ்வளவுபோதும், நல்ல அதிர்ஷ்டத்தினால் பிரிட்டன்தேசத்தார் வெற்றியடைந்தார்கள். என்னுடைய துர்அதிர்ஷ்டத்தினால் அம்மூவர்களைப் பார்க்க இடமில்லாமற்போய்விட்டதே. ஒருமுடுக்கில் ஒரு விருத்தாப்பியனும் இரண்டு வாலிபர்களுமா?

பாஸ்து:— அதைப்பற்றி நீ அதிசயப்படவேண்டாம். நான் சொன்னவற்றைக்கேட்டு இவ்வளவு ஆச்சரியப்பட்டால், நீ அதை நேரில் பார்த்திருந்தால் உனக்கு எவ்வளவு விநோதமாயிராது. நல்லது நீ சொன்னபடி இரண்டு வாலிபர்களும் ஒரு விருத்தாப்பியனும் ஒருமுடுக்கும் பிரிட்டன்தேசத்தைக் காப்பாற்றி ரோமான்ஜாதியாரை தோற்கடித்தார்கள் என்றதை வைத்துக்கொண்டு ஒரு பாட்டுபாடபோர்ப்போம்.

பிரபு:— நீ ஏன் என்பேரில் கோபித்துக்கொள்ளுகிறாய். நான் இதோ விடைபெற்றுப்போகிறேன்—(போகிறான்).



பாஸ்து:— அ! ஆ! என்னை விட்டுப்பயந்து ஓடிப்போகிறான். இவன் ஒரு பிரபுவாம். யுத்தகளத்திலிருந்துகொண்டு என்னிடத்தில் அங்கே நடந்தவரலாறு என்னவென்று கேட்கிறான். இவன் எவ்வளவு தைரியசாலியாயிருக்கவேணும். இன்றையதினம் எவ்வளவு வீரர்கள் மானத்தையிழந்து தங்களுடைய உயிரைக்காப்பாற்றி யிருக்கின்றனர். தவிர எவ்வளவுபேர்கள் சண்டைக்குப்பயந்து ஓடித் தங்களுயிரையும் கொடுத்திருக்கின்றனர்! ஐயோ! நான் மரணத்தை எவ்விடத்தில் காண்பேன். யுத்தகளத்தில் அனேகர் இறந்திருக்கின்றனர். நானோ மரணத்தை யதிகமாக விரும்பியும், இந்த பயங்கரமான யுத்தத்தில், அது என்னை அண்டாததின் காரணம் என்ன? நான் மந்திரவாதிதானோ, அதினிமித்தம் என்னைக்கண்டு ஓடிப்போயிற்றோ? இது என்ன விந்தையாயிருக்கிறது! ஆனால் அம்மரணத்தை பானகங்களிலும், விஷத்திலும் மிருதுவான மெத்தைகளிலும், அமிர்தமான வார்த்தைகளிலுந்தான் காணலாமோ. வாளையுருவிச்சண்டைசெய்கிற வீரர்களைத்தவிர வேறேவித தூதர்கள் மரணத்துக்குஉண்டோ, மரணமே! நீ எங்கே ஒளித்துக்கொண்டிருக்கிறாய்? நீ யமலோகத்துக்குச்சென்றாலும் நான் அங்கேபோய்க் கண்டுபிடித்துக்கொள்ளுகிறேன். நான் பிரிட்டன் தேசத்தவருடன் சண்டைசெய்து அவர்களுக்கு வெற்றியைக்கொடுத்தேன். இப்பொழுது நான் நினைத்தகாரியத்தை நிறைவேற்ற ரோமன் ஜாதியாருடைய உடுப்பைத் தரித்துக்கொள்ளுகிறேன் ... ... ... ... (தரித்துக்கொள்ளுகிறான்) இனியாராவது என்னைத்தொட்டால் அவருடன் போராடாமல் அவரிடத்தில்தானே சரணமடைவேன். ரோமன்ஜாதியார் பிரிட்டன் தேசத்து அனேக வீரர்களைக் கொன்றிருக்கிறார்கள்; அதற்காக அவர்கள் பழிக்குப் பழிவாங்குவார்கள் என்பது திண்ணம். நானோ என்னுயிரை யிழக்கவேணுமென்ற எண்ணத்துடன் தான் இங்கே வந்தேன். ஆகையால் அதை நிறைவேற்ற எதிரிகளுடன் சேர்ந்தால் பிரிட்டன் ஜாதியார் அவர்களுடன் என்னைக் கைதியாக்கிக் கொண்டுபோய் தங்கள் மனம் திருப்தியாக என்னைக்கொன்று விடுவார்கள். என் காரியம் நிறைவேறும். இமொஜன் விஷயமாக நான் இதைச் செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டிருக்கையில்,

ஒருதளகர்த்தன்— கடவுளைத்தான் தோத்திரம் செய்யவேணும், தெய்வானுகூலத்தால் லூஷியஸைப்பிடித்து விட்டோம் அந்த விருத்தாப்பியனையும் அவன் குமாரர்களிருவரையும் தேவதூதர்கள் என்றே நினைக்கவேணும்.

ஒருரபு.— இம்மூவர்களில் அழுக்குடை உடுத்திக்கொண்டு உலகமெல்லாம் அதிசயிக்கும்படி வேறொருவன் சண்டைசெய்தான்; அவனைக்காணவில்லையே. சற்றுநில் அதோ போகிறவன்யார்? அடே, நீ யார்சொல்,

பாஸ்துமஸ்:— நான் ரோமன் ஜாதியரில் ஒருவன். என்னைப்போல மற்றவர்களும் தைரியமாய்ச் சண்டைசெய்து என்னைச் சகாயித்திருந்தால் நாங்கள் வெற்றி யடைந்திருக்கலாமே யென்று விசனித்துக் கொண்டிருக்கிறேன்; வேறே விஷயமொன்றுமில்லை.

தனகர்த்தன்.— சீ! நாயே! என்ன சொல்லுகிறாய், நண்பா! அவனை சீக்கிரம்பிடி. கழுத்தைப்பிடித்துத் தள்ளிக்கொண்டு அரசனிடத்தில் சேர்ப்போம் சண்டையின் வரலாறை ரோமன் சாதியருக்குச்சொல்ல ஒருவரையும் இங்கேயிருந்து அனுப்பமாட்டோம். இந்த முட்டாள் தன்னுடைய தைரியத்தைப்பற்றி பெருமைபாராட்டுகிறான். அரசனிடத்தில்கொண்டுபோவோம்.

என்றுசொல்லி அரசனிடத்தில் அவனை யழைத்துக்கொண்டு போனார்கள். அரசன் உடனே ஒரு சேவகனைக் கூப்பிட்டு அந்தக்கைதியைச் சிறைச்சாலையிலடையென்று உத்தரவுசெய்ய அவனை அவ்வூரிலுள்ள சிறைச்சாலையில் அடைத்துவிட்டுப் போயினன் அப்பொழுது.

பாஸ்துமஸ் :— நான் சிறையில் அடைபட்டேன்; அதற்காக கடவுளுக்கு அநிகவந்தனமளிக்கின்றேன். இப்பொழுது இதின் மூலமாக அதிக விரைவில் உலகத்தினின்றும் விடுதலை யடையலாமென்று நினைக்கிறேன்.. என்றாலும் அனேகவித வியாதிகளால் கஷ்டப்படுகிற மனிதர்களைப் பார்க்கிலும் நான் இப்பொழுது அதிக மேன்மையான ஸ்திதியிலிருக்கிறேன். ஏனென்றால் இவ்வியாதியஸ்தர்கள் சாகிறதற்குப் பயந்து சர்வகாலமும் வியாதியினால் உபத்திரவப் பட்டுக்கொண்டிருந்தால் நலமென்று நினைக்கிறார்கள். நானோ சாகத்துணிந்தேன். என் நெஞ்சமே! இப்பொழுது தான் திருப்தியடைந்தேன். தெய்வமே! என்னுயிரை வதக்கி இச்சிறையினின்றும் என்னைச்சீக்கிரம் விடுவிக்கவேணும். நான் செய்த குற்றங்களுக்கு விசனப்பட்டால் மாத்திரம் போதுமா. அதல்லாமல் நான் அதற்கு பரிகாரங்களும் செய்யவேண்டுமா. நான் சிறையிலடைப்பட்டிருக்கிறதைவிட வேறேவிதபரிகாரம் எனக்கு ஒன்றுமில்லை. இச்சிறைச்சாலையிலடைப்பட்டபின்தான் என்மனம் திருப்தியடைந்தது. வேறேவித பரிகாரமும் உண்டு. என் உயிரைக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். சிலகொடியர்கள் தங்களுடைய கடன்காரரிடத்திலிருந்து, ஐந்து, ஆறு அல்லது பத்தில் ஒருபங்கு தொகையை வாங்கிக்கொண்டு மீந்ததை உபேக்ஷித்து விடுகிறார்கள். தெய்வமோ அவர்களைப்பார்க்கிலும் அதிக கருணை யுள்ளவர். அதினால் அவர்களைப் போலிராமல் சிலமாறனுடைய அருமையான உயிருக்காக என்னுயிர் முழுவதையும் எடுத்துக்கொள்ளவேணும். ஆனால் இமொஜன் உயிரையும் என்னுயிரையும் சமமாகச்சொல்லக்கூடாது. என்னுயிர் எவ்வளவு மாசுடையதாயிருந்தாலும் அதுவும் ஒரு உயிர்தான். அதை எவ்விதத்திலுமிழக்கத் தயாரா யிருக்கிறேன். ஆகையால், தெய்வமே! இமொஜனைக் கொன்றதற்குப் பிராயச்சித்தமாக என்னுயிரை எடுத்துக்கொண்டு என்னை இச்சிறையினின்றும் காப்பாற்றவேணும், ஏ இமொஜன்! நான் செய்த குற்றத்துக்காக என்னை மன்னிக்கவேணும். நான் மௌனமாயிருந்து உன்னுடன் வார்த்தை சொல்லுகிறேன்........(நித்திரை செய்கிறான்)

அயர்ந்து நித்திரைசெய்கையில் தன்னுடைய அன்னையும் பிதாவும் இரண்டு சகோதரர்களும் தன்முன்வந்து பரிதாபப் பட்டுக்கொண்டிருக்கிறதாகக் கனவு கண்டு திடுக்



கிட்டு எழுந்திருந்து ஆலோசனை செய்துகொண்டிருக்கையில் ஒரு ஜெயிலர் அங்கே வந்தான். அப்பொழுது,

ஜெயிலர்— ஏ, மனிதா! அரசனிடத்திலிருந்து உத்தரவு கிடைத்திருக்கிறது. சீக்கிரம் வா.

பாஸ்துமாஸ்— உனக்கு அனேகவந்தனங்கள் அளிக்கின்றேன். எனக்கு நல்லசெய்தி கொண்டுவந்தனையே.

ஜெயிலர்— நல்லசெய்தியா! உன்னைக் கொல்லும்படியாக அல்லவோ அரசன் உத்தரவு செய்திருக்கிறார். இதற்காக நீ பரிதாபப்படவேண்டியதற்குப் பதிலாக ஏன் சந்தோஷப்படுகிறாய்? சீக்கிரம் வா.

பாஸ்துமஸ்— அதற்காகத்தான் நான் சந்தோஷப்படுகிறேன் எனக்கு விடுதல் சமாசாரம் கொண்டுவந்தாயே. நீ தீர்க்காயுளாக விருக்கவேணும்.

ஜெயிலர்— உன்னுயிரையல்லவா வாங்கப்போகிறார்கள் உன்னை விடுதலை செய்ய மாட்டார்கள்.

பாஸ்துமஸ்— மடியில் பணமுண்டானால் வழியில் பயமுண்டு என்று சொல்லுவார்கள். நானோ சாகத்துணிந்துவிட்டேன். ஆகையால் நான் ஒன்றுக்கும் பயப்படவில்லை என்னுயிரை வதக்கிவிட்டால் உலகத்தினின்றும் நான் விடுதலையாவேன். இதற்கு என்மனமு மிசைந்திருக்கின்றது. சீக்கிரம் வா; ஏன் தாமதிக்கிறாய்.

இவ்வார்த்தைகளைக்கேட்டு ஜெயிலர் அதிக வியப்படைந்து இவ்வுலகவெறுப்பின் காரணம் என்னமோ அறியேன் என்று சொல்லிக்கொண்டு பாஸ்துமஸை யழைத்துக் கொண்டுபோனான்.

(10-ம் அதிகாரம்.)

இது இங்ஙனமிருக்க இராஜசபையில் நடந்தவரலாற்றை இப்பொழுது உரைப்போம். அரசன் முன்பாக பெலாரியஸ், கைடீரியஸ், போர்வீரர்களும் மற்ற பிரபுக்களும் இருந்து ஒரு இடத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது.

ஸிம்பலீன் :— (பெலாரியஸ், கைடீரியஸ், ஆர்விராகஸ், இம்மூவர்களையும் பார்த்து) என்னைச் சத்துருக்களினின்றும் விடுவித்து என் சிம்மாசனத்தைக் காப்பற்றின பிரபுக்களே! இங்கே வாருங்கள். சபையோர்களே, திரிமூர்த்திகளுக்குச் சமமான இவ்விருவாலிபர்களும் வயதுமுதிர்ந்த இம்மனிதனும் சதுர்வித உபாயங்களால் பஞ்சபாண்டவர்களாலும் அடையக்கூடாத வெற்றியை யடைந்து என்னிராச்சியத்தைக் காப்பாற்றினர்கள். இவர்கள் செய்தஉபகாரத்துக்கு பதிலாக என்னால் செய்யத்தக்கது யாது, ஒன்றுமறியேன். இது இங்கு நிற்கட்டும்; கிழிந்த கந்தை வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு மற்றவீரர்களை யவமானப்படுத்தி தன் மார்பில் கேடையங்களை யிகழச்செய்து வெற்றியைத்தந்த அந்த ஏழை சேவகனைக் காணவில்லையே. அவனைக்காணாது என்மனம் வாடித்துடிக்கிறது. அவனை யாராவது கண்டுபிடித்து இங்கே யழைத்துக்கொண்டு வந்தால் அவருக்குவேண்டிய திரவியத்தைக்கொடுத்து நல்ல ஸ்திதியில் வைக்கத்தயாரா யிருக்கிறேன். யாராவது போய்க்கூட்டிக்கொண்டு வாருங்கள்.

பெலாரியஸ்— இப்பேர்ப்பட்ட ஏழைமனிதனிடத்தில் நல்ல பெருந்தன்மையான குணத்தையும் பராக்கிரமத்தையும் எவரால் காணக்கூடும். இவனைப்போன்றவரையான் இதுவரையில் கண்டதேயில்லை. அவனோ ஒரு பிச்சைக்காரனாய்க் காணப்பட்டான். அவனிடத்தில் இவ்விதமான பராக்கிரமம் எங்கேயிருந்துவந்தது. இதைப்பார்க்கிறபோது அதிக விந்தையாயிருக்கிறது. களித்துக்கொண்டிருக்கிற இச்சபையில் அவனல்லவோ இருக்கவேணும் நீங்கள் யாராவது அவனைக் கண்டீர்களா.

ஸிம்பலீன்— பிரபுக்களே! அவனைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாதா?

பிஸானியோ— இறந்தவர்களிடத்திலும், உயிருடனிருக்கிறவர்களிடத்திலும் தேடிப்பார்த்தால் அவனைப்பற்றி ஒன்றும் தென்படவில்லை.

ஸிம்பலீன்— அவனுக்குத்தகுந்த பிரதிபலன் கொடுக்கவேண்டியவன் நான்தான்; அதை நினைத்துதான் அவனைக்காணாமல் அதிக விசனப்படுகிறேன், பிரிட்டன்தேசத்துக்கு திரிமூர்த்திகளுக்குச் சமமாக உதித்தவீரர்களே! இத்தேசத்தைக் காப்பாற்றி யென்னைச் சிறையினின்றும் விடுவித்ததற்காக உங்களுக்குத் தகுந்த வெகுமதிகள் தரத் தயாராயிருக்கிறேன். நீங்கள் எங்கேயிருந்துவந்தீர்கள். உங்கள்வரலாற்றை எங்களுக்கு விவரமாய்த் தெரிவிக்கவேணும்.

பெலாரியஸ்— நாங்கள் கேம்பிரியாவென்னும் ஊரில் நல்லவம்சத்தில் பிறந்தவர்கள் தவிர, நாங்கள் சத்தியமும் அடக்கமும், யோக்கியமு முள்ளவர்கள்.

ஸிம்பலீன்— நீங்கள் முழங்காலிடுங்கள். நைட் என்னும் பட்டப்பெயரை இன்றைய தினம் உங்களுக்கு அளித்தேன். இன்றுமுதல் என்னுடைய தோழர்களானீர்கள். உங்களுடைய யோக்கியதைக்குத் தக்கபடி மரியாதைகள் செய்வோம். (கார்னீலியஸும் சிலமாதர்களும் அங்கேவர, அவர்களைப் பார்த்து) உங்கள் முகங்களைப்பார்த்தால் விசனமான சங்கதி சொல்லவந்தாற்போல் தோன்றுகிறது. சந்தோஷமான இவ்வேளையில் என் விசனப்படுகிறீர்கள்? உங்களுடைய சுற்றத்தார்களையாவது யுத்தகளத்தில் கொன்றார்களோ? பிரிட்டன்தேசத்தாரைப் போலிராமல் எதிரிகளைப்போல் அதிக விசனத்துடன் காணப்படுகிறீர்களே. என்ன சங்கதி சொல்லுங்கள்?

கார்னீலியஸ்— மகாராஜாவே! இன்றுமுதல் உங்களுக்கு க்ஷேமம் உண்டாகக்கடவது. கடவுள் உங்களை யாசீர்வதிப்பாராக. உங்களுடைய மனைவியிறந்துபோய்விட்டனர்.

ஸிம்பலீன்— வைத்தியனாக இருந்து இச்செய்தியைக் கொண்டுவந்தனையே. மருந்துகளினால் பிராணனை நீடிக்கக்கூடாதா. விதியைவெல்ல யாரால் முடியும். வைத்தியர்களும் யமன் கைக்குள்ளாவார்கள். உன்னைப்பற்றிக் குற்றம் சொல்லக்கூடாது; அவள் எவ்விதமிறந்தாள் சொல்.

கார்னீலியஸ்:- உலகத்தாரை எவ்வளவு கோரமாய்க் கஷ்டப்படுத்தினளோ அதே மாதிரியாக அதிகபயங்கரமாயும் பைத்தியம் பிடித்தவளைப்போலவு மிறந்தாள்.

ஸிம்பலீன்— ஆ! என்ன சொன்னாய், கொடியவளா!



கார்னீலியஸ்:— மகாராஜாவே! நான்சொன்னது வாஸ்தவந்தான்; அங்கே நடந்தவற்றை விவரமாய்ச் சொல்லுகிறேன். சாகுந் தருணத்தில் தன்னுடைய செய்கைகள் இன்னின்னவைகளென்று வாஸ்தவமாய் ஒத்துக்கொண்டாள். அதை நான் சொல்லுகிறேன், தயவுசெய்து கேட்கவேணும். நான் இவ்விஷயத்தில் பொய் சொல்லுகிறேனென்ற சந்தேகம் உங்களுக்குண்டானால், இம்மாதர்களைக் கேட்டால் அதின் உண்மை தெரியவரும். இவர்கள் அழுத கண்ணீருடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஸிம்பலீன்:— கார்னீலியஸ்! தயவுசெய்து சீக்கிரம் சொல்.

கார்னீ— ஐயோ! அவளுரைத்ததைத் திரும்பி உங்களிடத்தில் சொல்ல என் மெய் நடுங்குகின்றது. ஆனாலும் சொல்லுகிறேன், செவிகொடுத்து கேட்கவேணும்:— முதலாவது, அவள் உங்களை கொஞ்சமாவதுவிரும்பவில்லையென்றும், ஆனால் உங்களுடைய பெருமையை மாத்திரம் நேசித்ததாகவும், ராஜாங்கத்தின்பொருட்டுதான் கலியாணம் செய்துகொண்டதாகவும் உங்களுடைய உயர்ந்த பதவிக்குமாத்திரம் மனைவியாயிருந்ததாகவும், கடைசியாக உங்களை யெப்பொழுதும் வெறுத்துக்கொண்டிருந்ததாகவும் சொன்னாள்.

ஸிம்பலீன்:— இவைகள் அவளுக்குமாத்திரம்தான் தெரியும்போலிருக்கிறது. அவள் வாயால்தானே வேறேசமயத்தில் சொல்லிக்கேட்டாலும் நான் இவைகளை நம்பமாட்டேன்; ஆனால் அவள் சாகுந்தருணத்தில் வெளியிட்டதனால் நீ சொன்னவற்றை நம்புகிறேன். நடந்தவற்றைப் பூராயும் விவரமாயும் சொல்.

கார்னீலியஸ்:— தான் முழுவதும் நேசித்ததாக நடித்த உன்னுடைய பெண்ணாகிய இமொஜன் அவளுடைய கண்ணுக்கு ஒரு கடும்விஷம்போல் காணப்பட்டதாகச்சொன்னாள். தவிர இமொஜன் ஓடிப்போயிராமற்போனால், தன் கையாலே விஷத்தைக் கொடுத்துக் கொல்லுவதாக நிச்சயித்திருந்தனளாம்.

ஸிம்பலீன்:— என்னை யதிகப்பிரியத்துடன் நேசித்ததாக நடித்த பிசாசுக்குச் சமமான கொடியபாதகி! என்னகாரியம் செய்தனை? ஸ்திரீகளுடைய இருதயத்தை யாரால் காணக்கூடும்? வெள்ளைக் காக்கையைக் கண்டாலும் காணலாம் இவர்களுடைய மனதை எவராலும் அறியமுடியாது. இன்னும் ஏதாவது இவள் வெளியிட்டனளோ.

கார்னீலியஸ்:- இன்னும் அனேகமுள. இப்பொழுதுரைத்ததைவிட அதிககோரமான சங்கதிகள் எவ்வளவோ இருக்கின்றன. உன்னை யிவ்வுலகினின்றும் யமலோகத்துக்கனுப்ப குளிகை ஒன்று தயார்செய்து வைத்திருக்கிறதாகவும், அதை உள்ளுக்கு எடுத்துக்கொண்டால், அது ஒவ்வொரு நிமிஷமும் நரம்புகளைத்தின்று, வரவர உடலை மெலியச்செய்து கடைசியாக உங்களுயிரை இவ்வுலகத்தினின்றும் அனுப்பிவிடுமென்றும் சொன்னாள். இதற்கிடையில் தன்னுடைய அழகை, ஆடல், பாடல், முத்தல்களினால் உங்களை கைவசப்படுத்தி, தன்னுடைய வஞ்சகத்தொழிலை உங்களிடம் செய்துமுடித்தவுடன் தன்னுடைய மகனுக்குப் பட்டங்

கட்டவேணுமென்று நினைத்தாகவும் உரைத்தாள். ஆனால் க்ளோட்டனைக் காணாததினால் தன்னுடைய எண்ணங்கள் நிறைவேற இடமில்லாமற்போக, ஏக்கம்பிடித்து, பித்தம் பிடித்தவளைப்போலாய், சாகுந்தருணத்தில் கடவுளையும் மனிதர்களையும் நிந்தித்து தன்னுடைய எண்ணங்களை வெளியிட்டு அவைகள் நிறைவேற வில்லையேயென்று விசனத்துடன் பெருமூச்சுவிட்டு உயிர் துறந்தனள்.

ஸிம்பலீன் :— அவளுடைய தோழிகளே! இவ்வளவும் நீங்கள் கேட்டீர்களா, சத்தியந்தானா?

மாதர்கள்:— மகாராஜாவே! இராணி உரைத்தவற்றைப் பூராவும் நாங்கள் அழுத கண்ணீருமாய்க் கேட்டுக்கொண்டிருந்தோம். கார்னீலியஸ் சொன்னவற்றிற்கும் அவள் சொன்னவற்றிற்கும் கொஞ்சமாகிலும் வித்தியாசமில்லை.

ஸிம்பலீன்.— நல்லது என் கண்களைப்பற்றி குற்றஞ் சொல்லமுடியாது. ஏனென்றால் அவள் அழகாயிருந்ததினால் அவள் மனதில் கபடமிருக்குமென்று என் புத்திக்குத் தோன்றவில்லை. அவளுடைய முகஸ்துதியைக் கேட்டுக்கொண்டிருந்த என் காதுகளும் வெளியில் காணப்படுகிறதுபோல அவள் உள்ளமும் இருக்கலாமென்று நினைத்த என் இருதயத்தையும் பழி சொல்லமாட்டேன். அவளிருந்த ஸ்திதியைப் பார்த்து அவளை நம்பாமற் போனால் நம்முடைய மனது எவ்வளவு கொடூரமாயிருக்கும். ஏ, இமொஜன்! உன் அனுபோகங்களால் என்பேரில் தப்பிதமிருக்கிறதென்று நீ நினைக்கலாம்; அவ்வளவும் சத்தியமே! உன்னை நினைக்கிறபோது விசனத்தால் என்மனம் துடிக்கின்றது. உனக்குச்செய்த குற்றங்கள் எல்லாவற்றையும் மன்னித்து கடவுள் நமக்கு சந்தோஷத்தை தரும்படியாக அதிக வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இவ்வாறுசொல்லிப் பரிதாபப்பட்டுக்கொண் டிருக்கையில் லூஷியஸும் இயாக்கிமோவும் மற்ற ரோமாபுரி கைதிகளும் அங்கேவந்தார்கள் அவர்களுக்குப் பின்னால் பாஸ்துமஸும் இமொஜனும் காணப்பட்டார்கள். இக்கூட்டத்தில் இமொஜனுக்கு தன்னுடைய தகப்பனாகிய அரசனும், லூஷியஸும், பெலாரியஸுக்கு அரசனும் இன்னாரென்று தெரிந்ததே தவிர வேறே ஒருவருக்கும் அங்கேவந் திருக்கப்பட்டவர்கள் இன்னாரென்று தெரியாது. அப்பொழுது அவர்களைப்பார்த்து

ஸிம்பலீன்.— நீங்கள் இப்பொழுதும் கப்பம் வாங்கத்தான் வந்திருக்கிறீர்களோ. லூஷியஸ், நம்முடைய வீரர்கள் கப்பம் என்றபெயரை வேருடன் அறுத்துவிட்டனர். ஆனால் இவ்விதம் செய்த நம்முடைய வீரர்களில் அனேகம்பேர் யுத்தகளத்தில் மடிந்து வீரசுவர்க்கம் போய்ச்சேர்ந்தனர். மடிந்தவர்களின் ஆத்மாக்களைத் திருப்திசெய்ய கைதிகளாக வந்திருக்கிற உங்களை நரபலியாகக் கொடுக்கவேணுமென்று அவர்களுடைய பந்துக்கள் முறையிடுகிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கு நான் இணங்கினேன். நீங்கள் மரணத்துக்குத் தயாராயிருங்கள். உங்களுக்கு ஏதாவது சொல்லவேணுமானால் சொல்லலாம். உங்களுடைய விதி இவ்விதமிருக்கிறது, யாரடா, சீக்கிரம்போய் கொலையாளிகளைக் கூட்டிக்கொண்டுவா.



ஒருசேவகன்.— இதோ அழைத்துக்கொண்டு வருகிறேன். (போகிறான்.)

லூஷியஸ்:— மகாராஜாவே! தயவுசெய்து நம்முடைய அதிர்ஷ்டத்தை ஆலோசனை செய்துபார்க்கவேணும். என்னவோ எங்களுடைய துரதிர்ஷ்டத்தினால் நீங்கள் எங்களை ஜெயித்துவிட்டீர்கள்; ஆனால் நாங்கள் உங்களை ஜெயித் திருந்தால், யுத்தம்கழிந்த பின், கையில் வாளை யேந்தி, யெங்களுடைய இறந்து போனவர்களின் உயிரைத் திருப்திசெய்ய உங்களைக் கொல்லுவோமா? நன்றாய் ஆலோசித்துப் பாருங்கள். ஆனால் இறந்துபோனவர்களின் ஆத்மாக்களைத் திருப்திசெய்ய வேறே ஒரு வழியுமில்லாமல் எங்களுயிரை வாங்கத்தான் வேணுமென்பது கடவுளுடைய சித்தமானால் நாங்கள் அதற்கு அதிக சந்தோஷத்துடன் உட்படத்தயாராயிருக்கிறோம். ரோமான் ஜாதியாருக்கு விசேஷமாயுள்ள தைரியத்துடன் நான் இறக்கப்போகிறதினால் பாதகமில்லை. இதற்காக எங்களுடைய சக்கரவர்த்தி உங்களிடத்தில் பழிவாங்காமல் விடார். நிச்சயமாய் நினைத்துக்கொள்ளுங்கள். என் விஷயமாக இவற்றைச் சொன்னேன்; மகாராஜாவே! ஒரு காரியத்தைப்பற்றி மாத்திரம் உங்களிடத்தில் இரந்து கேட்டுக் கொள்ளுகிறேன்; அதை எல்விதத்திலும் நிறைவேற்றித் தரவேணும். என்பக்கத்திலிருக்கப்பட்ட இந்தப்பையன் (இமொஜனைப்பார்த்து) பிரிட்டன் தேசத்தில் பிறந்தவன். அவனைமாத்திரம் காப்பாற்றவேணும். இவ்வளவு அன்புள்ளவனும் கீழ்ப்படிதலுள்ளவனும் சுறுசுறுப்புள்ளவனும் எஜமானனுக்கு வேண்டியவற்றைக் குறிப்பாலறிந்து செய்பவனும், சத்தியவானும், சமர்த்தனும் தாதிக்கு ஒப்பானவனுமான வேறே ஒரு பையனை இதுவரையில் ஒரு எஜமானனாவது வைத்திருந்ததில்லை. இவனுடைய குணங்களுக்காகவும் என்னுடைய வேண்டு கோளுக்காகவும் இரங்கி இவனைக் காப்பாற்ற வேணும். ரோமன் சேனையில் சேர்ந்திருந்தவனாயினும் பிரிட்டன் தேசத்தாருக்கு ஒருதீங்கும் செய்யவில்லை. தயவுசெய்து அவனைமாத்திரம் இரட்சித்து மற்றவர்களை உங்கள் இஷ்டம்போல செய்யுங்கள். இதைமாத்திரம் நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஸிம்பலீன்.— (இமொஜனை உற்றுப்பார்த்து) உன்னைப்பார்த்திருக்கிற ஞாபகம் வருகிறது. உன்முகத்தை நான் நன்றாக அறிவேன் பையனே, எவ்விதமோ, உன் முகக்களையினால் என்னைக் கைவசப்படுத்திவிட்டாய். இங்கேவா, இன்றுமுதல் நீ என்னுடைய அரண்மனை வேலைக்காரனாயிரு. என்னை மயக்கிவிட்டனையே! உன்னைக் காப்பாற்றவேண்டியதின் காரணம் எனக்குத்தெரியவில்லை. இதற்காக உன் எஜமானனை வந்தனம் செய்யவேண்டாம். அவன் இரந்து வேண்டிக்கொண்டதினால் தான் உன்னைக்காப்பாற்றினேனென்று நினைக்காதே. உன்னைக் காப்பாற்றினேன், பயத்தைவிட்டுவிடு. உன் ஸ்திதிக்கும் என் அந்தஸ்துக்கும் தக்கபடி ஒருவரம் கேட்டுக்கொள், தர நான் தயாராயிருக்கிறேன். நல்லவம்சத்தில்பிறந்து இங்கே கைதியாக வந்திருக்கும் ஒருவனை விடவேணு மென்றாலும் சொல், அவ்வரத்தைத் தருகிறேன். பயப்படாமல் கேள்.

இமொஜன்.— மகாராஜாவே! இதற்காக நான் வந்தனம் செய்கிறேன். கடவுள் உங்களை யாசீர்வதிப்பாராக.

ஊஷியஸ்.— என்னுயிரைக் காப்பாற்றவேணுமென்று அரசனிடத்தில் கேட்கும்படியாக உன்னிடத்தில் சொல்லவில்லை. ஆனால் நீ அப்படிச் செய்வாயென்பது எனக்கு நிச்சயந்தான். உன்னிஷ்டம்போல் வரத்தைக்கேட்டுக்கொள்.

இமொஜன்.— இல்லை, இல்லை, ஐயோ! வேறே சங்கதியுண்டு. மரணத்துக்குச் சமமான ஒன்றை நான் காண்கிறேன். என்பிரியமுள்ள எஜமானனே உங்களுயிரைப்பற்றி நீங்களே ஏற்பாடு செய்துகொள்ளவேணும்.

ஊஷியஸ்.— பார்த்தீர்களா, இந்தப்பையன் என்னை நிந்திக்கிறான், வெறுக்கிறான், என்னை விட்டுவிடுகிறான். பையன்களுடையவும் பெண்களுடையவும் வாக்குகளை உண்மையென்று நம்புகிறவர்களுடைய சந்தோஷம் எவ்வளவு பிரயோசனமற்றதா யிருக்கிறது. நல்லது, ஆனால் இவன் ஏன் இவ்விதம் தத்தளித்துக்கொண் டிருக்கிறான்.

ஸிம்பலேன்.— பையனே! உனக்கு வேண்டியவற்றைக்கேள். வர வர உன்னை அதிகமாய் விரும்புகிறேன். நன்றாய் எதைக் கேட்கலாமென்று ஆலோசித்துப்பார். நீ அவனையேன உற்றுப்பார்க்கிறாய்; அவனை உனக்குத் தெரியுமா? அவனைக் காப்பாற்றவேணுமா? சொல் அவன் உன்னுடைய பந்துவா அல்லது மித்திரனா? சீக்கிரம்சொல்.

இமொஜன்:— உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு சம்பந்தமுண்டோ அவ்வளவு சம்பந்தம் எனக்கும் அவனுக்குமுண்டு. (கடவுளே! நான் பொய்யுரைத்ததற்காக என்னை மன்னிக்கவேணும்)

ஸிம்பலீன்.— அப்படியானால் ஏன் அவனை உற்றுப்பார்க்கிறாய்.

இமொஜன்.— செவிகொடுத்துக் கேட்பீரானால் நான் இரகசியமாய்ச் சொல்லுகிறேன்

ஸிம்பலீன்:— நல்லது இரகசியமாய்ச்சொல்; சந்தோஷமாய்க் கேட்கிறேன். உன்பெயர் என்ன, வாலிபா!

இமொஜன்:— என் பெயர் "பைடலி"

ஸிம்பலீன்— நீயோ நல்லவாலிபனாக விருக்கிறாய். உன்பெயரும் உனக்கு தகுந்ததாயிருக்கிறது. நல்லது, என்கூட ஒரு ஒதுக்கிடத்துக்குவா, பேசவேண்டியதைத்தைரியமாய்ப்பேசு.

(இருவரும் இரகசியமாய் பேசுகிறார்கள்)

பெலாரியஸ்.— இறந்தவனைப்போலிருந்த இந்தப்பையன் பிழைத்து விட்டானென்று தோன்றுகிறது.

ஆர்விராகஸ்:— இறந்துபோனவனுக்கும் இவனுக்கும்கொஞ்சமாகிலும்வித்தியாசமில்லை; அண்ணா! நீ என்னசொல்லுகிறாய்.

கைடீரியஸ்:— முன்னே இறந்தவன்தான் இப்பொழுது வந்திருக்கிறான்; கொஞ்சமாகிலும் சந்தேகமில்லை.

பெலாரியஸ்:— என்ன, இவன், நம்மைப்பார்த்தும் நம்முடன்பேசாமல் சும்மாவிருக்கிறான். இனி நடக்கப்போகிற சங்கதிகளைப்பார்ப்போம். அவன் நம்மை நன்றாகப் பார்க்கவில்லையோ? ஒரே உருவத்துடன் இரண்டுபேர்கள் இருப்பார்களா? இறந்துபோன பைடலி இவன்தானென்றால், ஏன் இவன் நம்முடன் வார்த்தைசொல்லவில்லை.



கைடீரியஸ்:— ஆனால் நாம் அவனை இறந்ததாகக் கண்டோமே.

பெலாரியஸ்:— சும்மா இருங்கள்; பின்னால் நடக்கிறதைக் கண்டு நிச்சயிக்கலாம்.

பிஸானியோ—(தனக்குள்சொல்லுகிறான்) இவள் என்னுடைய எஜமானிதான்; அவள் உயிருடனிருக்கிறதினால் அவளுக்கு நல்லகாலம்வருமோ கெடுதி வருமோ பார்க்கலாம். கடவுளே! என் எஜமானியை யாசீர்வதிக்கவேணும்.

(இமொஜனும் ஸிம்பலீனும் திரும்பிவருகிறார்கள்)

ஸிம்பலீன்:— பைடலி என்பக்கத்தினின்று உனக்குக் கேட்கவேண்டியவற்றை தைரியமாய்க் கேள் (இயாக்கிமோவைப்பார்த்து) இங்கேவா இப்பையன் கேட்கிற கேள்விக்கு விடைகளைக் கபடமில்லாமல் சொல்லவேணும்; தவறினால் உன்னைச் சித்திரவதைசெய்து சத்தியத்தை வெளியிடச் செய்வேன். பைடலி, நீ கேட்கவேண்டியவற்றைத் தைரியமாய்க்கேள்.

இமொஜன்:— (கண்களில் தீப்பறக்கச் சொல்லுகிறாள்)— நான் கேட்கவேண்டியது வேறொன்றுமில்லை, ஒரு அற்பகாரியந்தான்;—அதாவது இவன் விரலில் அணிந்துகொண்டிருக்கிற மோதிரம் யாரிடத்திலிருந்து கிடைத்தது? இதை விவரமாய்ச் சொல்லவேணும். (கண்களினின்றும் நீர்த்துளிகள் கீழேவிழுந்தன.)

பாஸ்துமஸ்:— இதைப்பற்றி அவனுக்கென்ன? என்னைச் சந்தியிலிழுக்கப் போகிறானோ, தெரியவில்லையே (தனக்குள் சொல்லிக்கொண்டான்) வந்தது வரட்டும் என்று மனதில் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தான்.

ஸிம்பலீன்;— உன்கையிலிருக்கப்பட்ட மோதிரம் உனக்கு எங்கேயிருந்து கிடைத்தது, சீக்கிரம்சொல்,

(இன்னும் வரும்) வி. கோபால ஐயங்கார். பி. ஏ.

## நல்வழி

(1) நல்லாரோடு இணங்க விருப்பமும், பிறர்குணத்தில் பிரீதியும், குருவினிடத்தில் வணக்கமும், வித்தையில் சிரத்தையும், தன்மனையாளிடத்தில் அன்பும், உலக நிந்தைக்கு பயமும், நாராயணனிடத்தில் பக்தியும், தன்னைத்தான் அடக்குவதில் சக்தியும், தீயர்சகவாசத்தை விட்டு ஒழிப்பதும், ஆகிய நிர்மலகுணங்களை யுடைய பெரியோர்களுக்கு வந்தனம்.

(2) ஆபத்தில் தைரியமும், சம்பத்தில் அடக்கமும், சபையில் பேசுந்திறமையும், போரில் பராக்கிரமமும், கீர்த்தியில் ஆசையும், சாஸ்திராப்பியாசத்தில் சிரத்தையும், இவை பெரியோர்களுக்கு இயல்பாய் உளது.

(3) கையில் புகழத்தகுந்த ஈகை, தலையில் ஆசாரியன் அடிகளுக்கு வணக்கம், முகத்தில் சத்தியவார்த்தை, புஜங்களில் (யாவையும்) வெல்லும் ஒப்பற்ற பலம், ஹிருதயத்தில் அழுக்கின்மை, செவிகளில் (கேட்டு) அறிந்த வேதசாஸ்திரங்கள், இவை ஐசுவரியம்(நகை,நாணயம்) அன்றியே ஸ்வபாவத்தில் பெரியோர்களுக்கு பூஷணமாகும்.

(4) பிராணி ஹிம்சையினின்று ஒழிவு, பிறர்பொருளை கைக்கொள்ளாமை, வாய்மை, காலத்தில் கூடியதை கொடுப்பது பரஸ்திரீ பிரஸ்தாபத்தில் ஊமையாய்

இருத்தல், (யாசகன்) ஆசையைதீர்த்தல், குருவினிடத்தில் வணக்கம், எல்லாப் பிராணிகளிடத்திலும் தயை, எல்லா சாஸ்திரங்களிலும் பயிர்ச்சி, இவை மேன்மைக்கு மார்க்கம்.

(5) மகான்களில் மனது, சம்பத்து வரும்போது அல்லிப்பூவைப்போல் மிருதுவாயிருக்கும். ஆபத்திலோ கற்பாறைபோல் கடினமாகும்.

(6) (அனைவருக்கும்) இஷ்டமாயும், நியாயத்துக்குசரியாயும் ஜீவனம்செய்தல், பிராணன்போனாலும் தகாதகாரியத்தை செய்யாமை, கெட்டவர்களையும் பணமற்ற நண்பர்களையும் யாசிக்காமை, தாழ்ந்தஸ்திதியிலும்உயர்ந்ததைரியமுடைமை, பெரியோர்களுக்கு இஷ்டமானபடி நடத்தை, இவ்வாறு கத்திமுனையோடு பழகும் விருதம் போன்ற கஷ்டமான விருதத்தை எவர்தான் நல்லோர்களுக்கு உபதேசித்தார்களோ?

(7) (பிறர் அறியாது) மறைவில் கொடுத்தல், வீட்டுக்கு வந்தபோது, (வருபவர்க்கு) உபசாரம் செய்தல், இனியதைச் செய்து சொல்லாதிருத்தல், (பிறர் செய்த) உபகாரத்தை சபையில் எடுத்துக்கூறல், செல்வத்தில் செருக்கில்லாமை, நிந்தியாது பிறரைப்பற்றி பேசுதல், இந்த கத்தி பழக்கம்போன்ற கடோர விருதம் பெரியோர்களுக்கு எவர் உபதேசம் அளித்தனரோ?

(8) காச்சின இரும்பில் விழும் நீர்த்துளி, பேரு (ஊர்) இல்லாமல் போகும் அதேதுளி, தாமரை இலையில் விழுந்தால் முத்துபோல் காணப்படும் அதேதுளி சமுத்திரத்தினடியில் இருக்கும் முத்துச்சிப்பியில் விழுந்தால் முத்தாய்விடும். இவ்வாறு தாழ்ந்தோருக்கும், மத்தியம குணமுடையவருக்கும், உயர்ந்தோருக்கும், சான்றோர்களுக்கும் வரிசைக்கிரமமாய் நேரிடும்.

(9) நன்னடக்கையால் தன் தந்தைக்கு ஆநந்தம் அளிப்பவனே பிள்ளை, தன்கணவனுக்கு அநுகூலத்தைச் செய்பவளே இல்லாள், ஆபத்திலும் சம்பத்திலும் ஒரேமாதிரியாய் நடந்துகொள்பவனே தோழன், இம்மூன்றும் புவியில், புண்ணியம் செய்தவர்களுக்கே கிடைக்கும்.

(10) வணக்கத்தால் ஓங்கி மேன்மை அடைந்து, பிறர் குணத்தை (புகழ்ந்து) சொல்வதால், தங்குணங்களை வெளிப்படுத்தி, பிறர்பொருட்டு, பெரும் பிரயத்தனங்கள் செய்து, (அதைமுன்னிட்டே) தன் உபகாரியங்களை சாதித்துக்கொண்டு, தம்மை நிந்தித்து, கடோரமாய் பேசுகின்ற கெட்டவர்களை பொறுமையால் கண்டித்து, உலகில் எல்லாராலும் மதிக்கப்பட்டு, அற்புத நடத்தையுடைய சாதுக்களை எவர்தான் தொழார்கள்.

ஏ. ஸ்ரீநிவாசன்.

முற்றிற்று.

## சமாசாரக் குறிப்பு.

இந்தியாவிலுள்ள ஏழைஸ்திரீகள் சுறுசுறுப்பாய் பற்பல வேலைகளைச்செய்து வருவது போல ருஷியாவிலும் ஸ்திரீகள் தோட்டவேலை ஆடுமாடுகள் மேய்ப்பது, வெண்ணெய் எடுப்பது, துணிநெய்வது, உடுப்புகள் தைப்பது, முதலிய பற்பல வேலைகளைச்செய்கிறார்களாம். மேலும் அங்குபயிர்த்தொழில் செய்கிற வகுப்பைச்சேர்ந்த ஸ்திரீகள் வயல்களுக்குச் சென்றும் வேலை செய்கிறார்களாம். மத்திய ருஷியாவில்



அநேக மாதங்கள் மனிதர்கள் சொற்ப திரவியத்தைச் சேர்க்க வெளிதேசங்களுக்குச் செல்லும்பொழுது அவர்கள் வேலையை ஸ்திரீகள் முழுவதும் வயல்களில் செய்கிறார்களாம். இவர்கள் வீட்டில் செய்யும்படியான வேலைப்பாடுகள் மிகவும் சிறந்தனவாயும், மெச்சத்தகுந்தனவாயு மிருக்கின்றனவாம்.

***

மிஸ்துன்பாய் எப். பஜுஜி என்றமாது இங்கிலாந்துக்கு சிலவருடங்களுக்கு முன் சித்திரவேலை கற்றுக்கொள்வதற்காக சென்றிருந்தார். இம்மாது இப்பொழுது காலஞ்சென்ற மிஸ்டர் ரானடேயின் உருவத்தை வெகு நன்றாக எழுதியிருக்கிறதைக் கேட்க மிக சந்தோஷப்படுகிறோம்.

***

மிஸஸ்வித்திய R. நீலகண்டம், மிஸஸ் சாரதா மேத என்ற இரண்டு குஜராத்தி மாதர்கள் சென்ற வருடம் நடந்த பீ. ஏ., பரிட்சையில் பம்பாயில் தேறினார்கள்.

***

ஸெண்ட் பீடர்ஸ்பர்க்கில் ஒருமாது தன் ஓய்வு காலத்தில் படிப்பதற்காக ஒரு புஸ்தகசாலை வைத்திருந்தாளாம். அவள் சமீப காலத்திலிறந்தபின் அவள் புஸ்தகசாலையில் 18,000 புஸ்தகங்களிருப்பதாக தெரிவருகிறது. இவைகளெல்லாம் பலதேசத்து மாதர்களால் எழுதப்பட்டவைகளாம். பெண்களுக்கு பூஷணம் புஸ்தகமன்றோ தேவை?

அறிவுடைய யானைகள் :

இலங்கைத் தீவில் இப்போது யானைகளுக்குக் கொஞ்சம் மூளைப்பலம் அதிகரித்திருக்கின்றாற் போலிருக்கின்றது. மிஸ்டர் ரையன் என்பவருடைய கைக்கடியாரத்தையும் சங்கிலியையும் அவர் சொக்காய்ப் பைக்குள்ளிருந்து ஒரு யானைக்குட்டி பலவந்தமாய்ப் பிடுங்கிச் சென்றதாக அவ்விடத்திய பத்திரிகை யொன்றிற்கு ஒரு நிருபர் எழுதுகிறார். அன்றியும் ஒரு நாளிரவு மிஸ்டர், T. ரூ: ரைட் என்பவர் வீட்டில் சில சாமான்கள் திருட்டுபோயினவாம். இரண்டு விலையுயர்ந்த துப்பாக்கிகளும், அவருடைய ஆடைகளும், இன்னும்பல பொருள்களும் காணப்படவில்லையாம். ஆனால் ஒரு சிறு சோவில் போட்டு வைத்திருந்த அவருடைய ரொக்க இருப்பானது மறுநாட்காலையில் அவர் கூடாரத்திற்கு வெளியே கிடந்ததாம். இந்தத் திருடனுக்கு அதனுளிருப்பது இன்னதென விளங்கவில்லை போலும். இதுவும் யானைகளின் வேலை யென்றே நாம் நம்புகிறோம்.

## எறும்புகளும் வாகனமூர்கின்றன.

கொஞ்சநாட்களுக்குமுன் சையாம் காட்டிலே சார்லெஸ் பீசேன் என்னும் பிரஞ்சு யாத்திரிகர் போய்க்கொண் டிருக்கும்போது ஒருவகை வெண்மையான சிறு எறும்புகள் பட்டாளம் பட்டாளமாய்ப் போவதையும் அவற்றில் கொஞ்சம் பெரிதாயிருக்கப்பட்ட எறும்பின் முதுகின்மேல் அவ்வினத்தைச்சார்ந்த ஒரு எறும்பு ஏறிக்கொண்டு முன்னால் போவதும் பின்னால் வருவதும் இறங்கிப்போவதும் கூட்டமாய்ப் போகும் எறும்புகளின் மத்தியில் போய்த்திரும்பிவந்து பின்னும் பெரிய எறும்பின் மேல் ஏறிக்கொள்ளுவதுமாக இருந்ததைக்கண்டார். அப்படிப்போகும் எறும்புகளின் கூட்டத்தில வாகனம் நடத்தும் எறும்புகள் ஒவ்வொரு கூட்டத்திற்கு ஒன்று அல்லது

இரண்டு எறும்புகளே காணப்பட்டன. இவற்றை யெல்லாம் கண்ணுற்ற பிரஞ்சுயாத்திரிகர், நம்மில் பட்டாளங்களில் சேனைத்தலைவர்கள் இருந்து அவர்களை சீர்படுத்தி எவ்விதமாக நடத்துகிறார்களோ அவ்விதமாக இவ்வெறும்புகளும் தங்களில் கடையானவைகளில் ஒன்றைப்பிடித்து வாகனமாக வைத்துக்கொண்டு ஒன்று அக்கூட்டங்களுக்கெல்லாம் சேனைத்தலைமை வகித்து அவைகளைச் சீர்படுத்தி நடத்துவதுபோலு மிருந்தது என்று நிச்சயித்தார்.

சில எறும்புகள் தங்களுக்கு அடிமைகளாக வேறு எறும்புகளை வைத்துக்கொண்டு வேலைவாங்குவதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். தென் அமெரிக்காவில் ஒரு வகையான எறும்புகள் உண்டு. அவைகளில் தைரியசாலியான சில எறும்புகள் தங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை வெளியே போய் கொள்ளையடித்துக்கொண்டு வருகின்றனவாம்; மற்ற சாதாரண வேலை யெல்லாம் வேலைக்கார எறும்புகள் செய்கின்றனவாம். ஆனால் இந்தச் சையாம் நாட்டு எறும்புகளோ தங்களில் ஒன்றைத் தலைமையாக வைத்துக்கொண்டு மற்றவைகளெல்லாம் அதற்குக்கீழ்ப்படிந்து நடப்பதனால் உண்டாகும் நன்மைகளை மனிதர்களைப்போலவே அறிந்திருப்பதனால் மற்ற எறும்புகளுக்கெல்லாம் இவ்வெறும்புகளே புத்திசாலியான வைகளென்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

குமாரசுவாமி.



(1) தன்னரிய மென்மைத் தனங்களிடச் சுரக்கும்
இன்னமுத மூட்டி யிருதோண் மிசைத்துயிற்றிக்
கன்னமிசையுள்ளங் களிதுங்க முத்தாடி
என்னையளித்தவரார்? ஈன்றாளையன்றியுமே.

(2) உள்ளபிணியாலு மொல்காநலியாலுங்
கள்ளமிலா தேங்கிக்கலுழுமெனை நோக்கி
விள்ளுமுயிர் கொலென்னு விம்மியுள நடுங்கி
அள்ளு துயராலாற்றியதும் யாவர்கொலோ.

(3) தண்டாத வின்னதனிக்கருணை யென்டாவிற்
கொண்டாருந் தாயைக் கொடுமனத்தா லென்றேனும்
உண்டாம் வெறுப்பா லொறுத்தொழிக்க வல்லேனோ?
எண்டாலுங் கொள்ள வியையாதாமக் கருத்தை.

(4) ஆதலினாற்றாயே அடியேற்கினிதாயுள்
ஆதிமுடி வில்லா வமலனளித்திடுமேற்
ஆதரவாய் நிற்காத் தடியேன்கைம்மாறு செயப்
பேதுறவுகொண்டு பிழையேன் பிழையேனே.

பண்டிதை அசலாம்பிகை யம்மாள்.

மாதர் மனோரஞ்சினி.
"என்னும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.
VOL. IV. புத்தகம் ௪. | Madras: March 1902. சென்னப்பட்டணம் 1902 மார்ச்சு மீ | No. 1. இல. ௧.

# * Ravi Varama the Indian Artist.

## ரவி வர்மா

அநேககாலமாக திருவாங் கூரரசவமிசத்தோடு விவாகசம்பந்தமுடைய ஓர் குடியிற் பிறந்தவர் நமது ரவிவருமர் எதிரிகளுக்கு விரோதமாய்த் தங்களுக்கு நன்மை செய்ததின்பொருட்டு, திருவாங்கூர் அரசர்கள் நமது வருமரின் முன்னோர்களுக்கு கிலிமனூர் என்னும் ஜாகீரையினமாகக் கொடுத்தார்கள். மிகப் படித்த இவர் தாயார் சிருஷ்டிப் பொருள்களினழகை வியக்கு மாற்றலையும், குயிற்போன்ற குரலின் பாடுந் தன்மையையும், மலையாள பாஷையில் மிகச் சுலபமாகவே கவிபாடுந்திறமையையும் பெரிதும் உடையள். அவள் பாடிய "பார்வதிகல்யாணம்" என்னும் நூல் கற்றோரால் மிகவும் புகழப்படுகிறது. இரவிவருமர் தம்மிளவயதிலேயே வீட்டுவாத்தியாயரிடம் சமஸ்கிருதம் கற்றுவந்தார். அப்பொழுதே யிவர் தமக்குப்பாடமாகிய இலக்கணத்தைப் படிப்பதைவிட, வீட்டுச்சுவற்றிலும், தளத்திலும் கரியால் அநேக உருவங்களை யெழுதுவதிற் பிரியப்பட்டிருந்தார். இவருக்கு நெருங்கிய பந்துக்களிலொருவராகிய இராஜராஜ வருமர் படமெழுதுதலைப் பொழுதுபோக்காக வுடையவர். சாஸ்திர அளவை முதலியன சரியா யிராமல் தேவதைகளின் உருவப் படமெழுதும் அக்காலத்திய படமெழுதுபவர் மாதிரியன்றி, இவர்தா மெழுதிய படங்களில், உள்ளதையுள்ளபடியே காட்டியிருக்கிறார். இரவிவரும ரிவரெழுதும் படங்களை யுற்றுநோக்குவார்.

ஓர்நாள் இராஜராஜவரும ரெழுதிய சித்திரப்படத்தில், இரவிவருமர் ஓர் பட்சியை யெழுதவே, பெரியவர்வந்து விசாரித்து எழுதியதிரவிவருமரென்று தெரிந்தார். என்ன தண்டனைக்குள்ளாவோமோவென்று பயந்த நம்வருமர், அவரிடமிருந்து ஓர் வெகுமதி பெற்றார். அந்நாள்தொடங்கி இரவிவருமர் சித்திரப்படம் வரைவதில் இராஜராஜ கோயிற்றம்பிரானுக்கு சிடனாய் நீர்வர்ணப் படமெழுதுவதில் நாளுக்குநாள் தேர்ச்சி பெற்றார்.

இவர் 14-வயதுள்ளவரா யிருக்கும்பொழுது இராஜராஜ வருமரால் திருவனந்தபுரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டு அரசரிடம் விடப்பட்டனர். மகாராஜா அவர்கள் இவரெழுதியபடத்தைப் பார்த்து மிகவியந்து இவரது சக்திமென்மேலும் தேர்ச்சிபெறுவதற்கு வேண்டிய சாதனங்களையெல்லாம் செய்துவந்தார்.

* Translated from the Indian Ladies' Magazine.

1865 ஹூத்தில் (இவருக்கு 17 வயதாயிருக்கும்பொழுது), அக்காலத்திய மூத்த ராணி இளையராணிகளின் கடைசித்தங்கையை மணம்புரிந்தார். பின்னர் 1868ம் ஹூ மகாராஜா அரசவமிசத்தாரிவர்களின் படங்களை வரைந்த தியோடர் ஜேன்சன் (Theodare Jausen) என்பவர் வந்தார். இவர்தயிலவர்ணப்படங்க ளெழுதுவதைப்பார்த்த இரவிவர்மர் தமது நீர்வர்ணப்பெட்டியைத் தூரவிலக்கி, அந்த ஐரோப்பியர் வரைந்த படங்களையே மாதிரியாகவைத்துக்கொண்டு மகாராஜா மூத்த ராணி முதலாயினோர் படங்களை யெழுதினார்.

சித்திரவேலை வித்தியாசாலை மேல்விசாரணைக்காரராகிய (Superintendent of the School of arts) ஆர். எப். சிசோம் (R. F. Chisholm) என்பவர் திருவனந்த புரத்துக்கு வந்தபொழுது, அவர் இரவிவருமர் எழுதியபடங்களைப் பார்த்து அவற்றிற் சிலவற்றை அடுத்த சிற்பசித்திர அற்புதக்காட்சி (Fine Arts Exhibition)க்கு அனுப்பும்படி மகாராஜாவிடம் சொன்னார். ஜனவரியீ நடக்குங்காட்சிக்கு, 1873ம் ஹூ டிசம்பரீ இரவிவருமர் சென்றார். அவ்வருடம், இவரெழுதிய படமொன்று கவர்னர் ஏற்படுத்தியிருந்த தங்கப்பதக்கத்தை வென்றது. இவரது சாமர்த்தியத்தைப் பற்றி ஆபர்ட்பிரபுவும் (Lord Horbart) வியந்துபேசினார். அடுத்தவருட மிவரெழுதிய "சரபத் வாசிக்கும் தமிழ்ப் பெண்" படம் இவருக்கு மற்றுமோர்முறை பதக்கம் வரும்படி செய்தது. பிற்கூறியபடமும், மற்றொன்றும் இந்திய சக்ரவர்த்தியார் வேல்ஸ் இளவரசராக 1875ம் ஹூ வந்தபொழுது, அவருக்குக் கொடுக்கப்பட்டன. 1867ம் ஹூ இவருக்கு மூன்றுவதுமுறை பதக்கம் வென்றுகொடுத்த சகுந்தலா (Sakuntala's epistle to her royal lover) என்னும் படத்தை பக்கிங்ஹாம் பிரபு (Duke of Buckingham) விலைக்கு வாங்கிக்கொண்டார்.

பற்பல கீர்த்திகளைப் பெற்ற வருமர் சென்னையிலிருந்து திருவனந்த புரத்துக்கு வந்தபொழுது இவர்பேரில் மிகுந்த அபிமானம் வைத்திருந்த மகாராஜா, விண்ணுலகம் சென்றதனால் அவர் தம்பியார் பட்டத்திலிருந்தனர். மகாராஜாவின் உத்தரவின்பேரில் அவர் சீதையின் கற்பை ராமர் பரிசோதித்த காலத்து சீதை நிலத்தில் மறையுந்தன்மையாய் எழுதியிருந்தபடத்தை ஸர் மாதவராவ் பரோட நகரத்து கைக்வார் மகாராஜாவுக்காக விலைக்கு வாங்கினார். இப்படத்தைவியந்து கைக்குவார் மகாராஜா அவர்கள் 1881-82ல் நடந்த பட்டாபிஷேகத்துக்கு வரும்படி வருமாவுக்குத் திருமுகமனுப்பினார். பூனா பைன் ஆர்ட்ஸ் சொசைட்டி (Poona Fine arts Society) யில் இவரெழுதிய வீணைவாசிக்கும் நாயர் பெண்படம் இவருக்கு அங்கோர் தங்கப்பதக்கத்தை வென்றுகொடுத்ததுமன்றி, பம்பாய் கவர்னரையும் அந்தப் படத்தின் பிரதிதனக்கும் ஒன்று வேண்டுமென்று கேட்கும்படி செய்தது.

இவர் பரோடாவி லிருக்குங்காலத்து மகாராஜாமுதலிய நாலுபேருடைய உருவப் படங்க ளெழுதினார். இன்னும் இவர் பௌநகரிலிருக்கும் பொழுது அநேகபடங்களையும், 1885ம் ஹூல் அரசாங்க வித்தியாசாலைத் தலைவராகிய தாம்சன் (Thomson) துரை உருவப்படத்தையும், காலஞ்சென்ற மைசூர் மகாராஜா அவர்களுக்கு அநேகம் படங்களையும், புதுக்கோட்டை யரசருக்கு தர்பார் படத்தையும் வரைந்தார்.

இவர் தாயார் காலஞ்சென்றபின், 1888ம் ஹூ பரோடாநகரத்தின் புது அரண்மனையை யலங்கரிக்கப், பாரதம், ராமாயணம், என்னும் இரண்டு இதிகாசங்களிலுமுள்ள காணற்கினிய காட்சிக ளமைந்த படங்கள் வேண்டுமென்று கைக்குவாரிடமிருந்து கடிதம் வரவே, தன் தம்பியாராகிய சி. இராஜராஜவர்மருடன், அவ்விதிகாசங்களிற்



புகழ்ந்து கூறப்பட்ட தலங்களை நேரோபார்க்க வடஇந்தியாவுக்குப்போனார். இவர்களிருவரும் ஊர்வந்தவுடன் வேலைசெய்ய வாரம்பித்து, 2 வருஷத்துக்குள் 14 படமெழுதி, அவற்றைப் பரோடா நகரத்துக்குக் கொண்டுபோய் மகாராஜாவுக்கு சந்தோஷத்தை விளைவித்தனர். பம்பாய் இராஜதானியிலுள்ள ஜனங்கள் திரள்திரளாக, அப்படங்களைப் பார்க்க வந்தார்கள். இவர் வல்லமை யிந்தியாமுழுவதும் பரவிற்று. ஜனங்களி வரெழுதும் படங்களைமிகவிரும்பியதனால் யாவருக்கு முபயோகமாம்பொருட்டு பம்பாய்நகரில் அப்படங்கள் அச்சடிக்குமோர் அச்சுக்கூடம் வைக்கப்பட்டது. இப்பொழுது கன்னியாகுமரி முதல் ஹிமாசலம் வரையிலுள்ள இந்துக்கள் வீடுகளில் இரவிவர்மர் படமில்லாத வீடுகள் மிகச்சிலவே.

இரவிவர்மர் தம்பியாகிய சி. இராஜராஜவர்மர் சித்திரப்படம் வரைவதிற் றேர்ச்சி பெற்றவர், இவர் ஆங்கிலமும் பயின்றுள்ளார். இவர்கள் சகோதரியான மங்கள பாயம்மாளும் படமெழுதுதலிலும் சங்கீதத்திலும் வல்லவள்.

இரவிவர்மர் இவ்விந்தியாமட்டுமேயன்றி, வெளிநாட்டுக் கண்காட்சிச் சாலைகளிலுங்கூட பரிசுபெற்றிருக்கிறார். நாகரீகமடைந்தவுலகமுழுவதுங் கீர்த்திபெற்ற இரவிவர்மா இந்துதேசத்து சுதேசியாயிருப்பது நமது அதிர்ஷ்டமேயாம், இவருக்குக் கடவுள் நீடிய ஆயுள்முதலியன அருளுவாராக.

---

## அலக்ஸாண்டிரியா மகாராணியாரின் சரித்திரம்.

### இரண்டாம் அத்தியாயம்.

(184-வது பக்கத் தொடர்ச்சி.)

இதற்கநுகுணமாக மிஸ்டர் காட்டன் (Mr. Cotton I. C. S.) என்பவர் தமதுநூலில் பின்வருமாறு கூறியிருக்கிறார். அதாவது:—"பூரி அல்லது ஜகநாதம் என்கிற திவ்யக்ஷேத்திரத்துக்கு சுமார் 200 மைலுக்கப்பாலிருந்த ஒரு இந்துவாலிபன் அதிகநாளாய் பெரும் வியாதியால் அவஸ்தைப்பட்டு அநேக ஔஷதங்கள் சாப்பிட்டும் அநுகூலப் படாமற் போகவே மனம்வெறுத்து, ஆன்மாக்களுக் கருள்செய்யும் பொருட்டு ஆங்காங்கு திவ்யக்ஷேத்திரங்களில் எழுந்தருளியிருக்கும் கடவுளைத் தெரிசனஞ்செய்யவும், நதிகளில் ஸ்நானஞ்செய்யவும் இஷ்டமுடையவனாய், அவ்விதம் சென்றாலும் கடவுளுடைய கிருபையால் வியாதி நீங்காதாவென்று எண்ணங்கொண்டு கால் நடையாகவே யாத்திரை செய்யத் தொடங்கினான். அவ்விதம் யாத்திரை செய்துகொண்டு அநேக க்ஷேத்திரங்களைத் தெரிசித்தும், அநேக நதிகளில் நீராடியும்கடைசியாக ஜெகன்னாதத்துக்குவந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் கடவுளைத் தெரிசித்தும், அங்குள்ள நதியில் நீராடியும் மறுபடியும் தன் சொந்தவூருக்கு கால்நடையாகவே வந்து சேர்ந்தான். பிறகு அவனுக்குண்டாயிருந்த பெரும்வியாதி நீங்கிசொஸ்தமாயிருந்தான்" என்று கூறுகிறார். இதுஉண்மையே. யாத்திரையின் விசேஷத்தைப்பற்றி அதிகமாக எடுத்துரைப்பது அநாவசியமென்று இவ்வளவு நிறுத்தினோம். இவ்விதமாக இராணியார்வியாதியிலிருந்துசௌக்கியமடைந்தபோதிலும், இளவரசர் வியாதியால் பீடிக்கப்பட்டார். இவர் சுரத்தினாலும் வெகு தொந்தரையடைந்தார். அப்போது அவர் வசித்துக்கொண்டிருந்த அரண்மனையானது, அத்தேசத்து ஜனங்களுக்கு சிலநாள் வரையில், யாத்திரைசெய்யும் ஜனங்கள் கூட்டமாக

தங்கியிருக்கும் ஒரு சத்திரம்போ லிருந்தது. அதாவது இளவரசரைப் பார்ப்பதற்கு அடிக்கடி ஜனங்கள் கும்பல் கும்பலாய் வந்து சூழ்ந்துகொண்டிருந்தார்கள். சிலர் இவர் பிழைப்பது அரிதென்றும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட அவஸ்தையில் கணவனுடைய படுக்கையின் பக்கத்தில் விசனத்துட னுட்கார்ந்துகொண்டு தாம் தமது கணவரை இழக்கவேண்டி வருமோவென ஐயுற்றிருந்த இராணியார் கர்ப்பவதியாயிருந்தும் மனதுக்குள் எவ்வளவு விசனமிருந்தபோதிலும், வெளியில் கம்பீரத்துடன் விசனக்குறியைக் காண்பிக்காமல், தமதுகணவருக்கு தாம் உபசாரஞ்செய்வதும், வியாதியால் அவஸ்தைப்படும் தமது கணவருடைய தேகத்தை சௌக்கியப்படுத்தவேண்டுமென்று அநேக விதமாக கடவுளைப் பிரார்த்திப்பதுமாயிருந்து வந்தார்கள். அரசனைப்பார்க்க வந்த ஜனங்கள் யாவரும் இம்மாதைக்கண்டு அதிகமாக இரவும்பகலும் வருந்திக்கொண்டிருந்தபோதிலும், இம்மாதின் முகத்தில் விசனக்குறியில்லாததையும், இம்மாது தம் கணவருக்குச் செய்துவரும் உபசாரத்தையும்கண்டு ஒருவாறு சந்தோஷமு மடைந்திருந்தார்கள். அக்காலத்தில் கடவுளைத்துதிக்கும் ஓர்நாள் வந்தமையால், இராணியார் அவ்விடத்து மடாதிபதிக்கு பின் வருமாறு ஒரு கடிதம் எழுதினார்கள்.

"தெய்வகிருபையால் என் கணவர் வர வர சௌக்கியமடைந்து வருவதால் நான் இன்று ஆலயத்துக்கு வருகிறேன். ஆனபோதிலும் பிரார்த்தனை பூரணமாகும்வரையில் என் கணவரைப்பிரிந்து அவ்விடத்தில் இருக்க சாவகாசமிராதென்று சந்தேகிக்கிறேன். ஆகையால் தாங்கள் பிரார்த்தனைசெய்ய ஆரம்பித்தவுடனே என் அருமையான கணவரது ரோக நிவாரணத்தினிமித்தம் கடவுளுக்கு வந்தனம் செலுத்தினால் நான் தப்பாமல் வருவேன்." என்பதாம்.

இப்படி யிருக்கையில் இராணியாருடைய குதிரைக்காரருள் ஒருவனுக்கும் இதே சுரம் வந்துவிட்டது. அதைப்பற்றி இராணியார் அதிக விசனமடைந்து, அவனுக்கு தைரியத்தை யுண்டாக்கும் போதனையுள்ள பதில்களை சாம்த்துக்கொருதரம் எழுதி, தமது கணவருக்குச் செய்யவேண்டிய சிதோபசாரங்களைச் செய்து முடிந்த ஓய்வுகாலத்தில் அவ்வேலைக்காரனையும் போய்ப்பார்த்து அவனுடைய க்ஷேமசமாசாரங்களையும் விசாரித்து வந்தார்கள். இப்படி யிருக்க, சில தினங்கள் சென்றதும், குதிரைக்காரன் ரோகநிவர்த்தியாகாமல் இறந்துபோய்விட்டான். அப்போது அலெக்ஸாண்டிரினா மிக்க வருந்தி அவனை யடக்கஞ்செய்தவிடத்தில் ஒரு கோரிகட்டுவித்து, அதன்மீது பின் வருமாறு செதுக்கும்படி செய்வித்தார்களாம். "ஒருவனை வாரிக்கொண்டுபோய் விட்டது. இரண்டாவதானவரைவிட்டு பிரிந்துபோய்விட்டது" என்றால் வியாதியடைந்த இருவரில், குதிரைக்காரன் மிருத்யு தேவதையால் கொண்டுபோகப்பட்டான். இரண்டாவது மனிதரான தமது கணவர், (தெய்வகிருபையால்) பிழைத்தார் என்பது அர்த்தம். இம்மாதுக்கு வேலைக்காரனிடமிருந்த அன்பைப் பார்த்தீர்களா? வேலைக்காரர்களுக்கு வியாதி நேரிட்டபோது மருந்துமுதலானவைகள் கொடுத்து அவர்களுக்கு தைரியம் சொல்வது எவ்வளவு மேன்மையான காரியம். இச்சமயத்தில் நமது இராணியார் பிரசவித்து, ஒருநாள் உயிருடனிருந்து பிறகு இறந்துபோன சிசுவின் சங்கதி இராஜ்ய முழுவதும் பரவியிருக்கையில், இளவரசருடைய ரோகத்தின் சங்கதி தேசத்தில் எங்கும் பரவவில்லை. 1871-வது வருஷம் இளவரசர் பூர்ணமாய் சௌக்கியமடைந்தபின்பு, 20-வருடம் வரையில் அலெக்ஸாண்டிரினா ராணியாருக்கு அவ்வளவாக விசனமான சங்கதி யொன்றும் உண்டாகவில்லை. ஆயினும் 1891-வது வருடத்தில் அலெக்ஸாண்டிரீனாவின் பிரதம புத்திராகிய கிளாரன்ஸ்பிரபு இறந்துபோனதால்,



அம்மாதும், தேசமும், துக்கசாகரத்தில் முழுகவேண்டியதாயிருந்தது. அப்புத்திரரிடத்தில் அம்மாதுக்கு அதிக விசுவாசமிருந்தமையால், எப்பொழுதும் அவரைத் தனிமையாக விடாமல் காப்பாற்றிவந்தார்கள். அப்படிப்பட்ட புத்திரனை இயமன் கட்டாயமாய் அழைத்துக்கொண்டு போனவுடனே அலெக்ஸாண்டிரினாவின் நிலைமை எப்படி யிருந்திருக்குமோ அதை இதை வாசிப்போர் தெரிந்துகொள்ளவேண்டியதாயிருக்கிறதன்றி, எம்மால் எடுத்துரைக்குஞ் சாத்தியமன்று.

## மூன்றும் அத்தியாயம்.

இம்மகாராணியார் சாதாரணமாய் ராஜரீக வியவகாரங்களில் சீர்திருத்தம் செய்துகொள்ளவேண்டியதாயிருந்தபோது அந்தப்புரத்திலேயே வசித்துக்கொண்டிருப்பது இவருக்கு இஷ்டமாயிருந்ததே யொழிய அத்தேசத்தின் இதர சாதாரண ஸ்திரீகளைப்போல் வண்டியேறி தெருத்தெருவாய் சுற்றவும் எப்போதாவது சபைகளுக்குப்போகவும் இம்மாதுக்கு மனமில்லை. இவ்விதம் ஊர் சஞ்சாரஞ்செய்யாமலிருந்தபோதிலும்ஜனங்களின் அவஸ்தையைக்கண்டு இம்மாது அவர்களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்தேவந்தார்கள். அப்பேர்க்கொற்ற வைகளி லொன்றை இங்கு பிரசுரிக்கிறோம்:—ஒரு சமயத்தில் "கிருஸ்டமஸ்" பண்டிகைக்கு முந்தியநாள் ஒருமாது அலக்ஸாண்டிரினா அவர்களின் அரண்மனை வாசற்படியண்டை நின்றுகொண்டிருந்ததை இவர் கண்டார்கள். அக்கன்னிகை மிகுந்த பசியினால் பீடிக்கப்பட்டு இளைத்துமிருந்தபோதிலும் மரியாதையுள்ள குடும்பத்தில் ஜனித்தவளைப் போல் ராணியாருக்கு காணப்பட்டாள். நமது ராணியார் அம்மாதுவின் துர் அவஸ்தையைக் கண்டு சமீபத்தில் அவளை வரவழைத்து உட்காரவைத்து, இங்கு வந்த காரியமென்னவென கேட்டார்கள். அவள் அலக்ஸாண்டிரினா மகாராணியாரைக் காணக்கூடாமலிருந்தபோதிலும், ராணியார் கேட்டவுடனே, புதியதையல் யந்திரத்தினால் தானாகவே தைத்த சித்திர விசித்திரமான சில உடுப்புகளை ராணியாருக்கு காணிக்கையாக கொடுத்தாள். அவைகளை ராணியார்கண்டு மிக மகிழ்ந்து, மனம்பூரித்து, நம்ராணியார் உடனே அம்மாதை உள்ளே வரவழைத்து தமது அறைக்குள் அழைத்துக்கொண்டுபோய், இந்த உடைகளையெல்லாம் பரிசோதனைசெய்து அவளுடைய திறமைக்கு மிக் மகிழ்ச்சிகொண்டு, இவைகளை இவ்விதம் செய்தது யாரென்று அவளைக் கேட்டார்கள். அதற்கு அவள் மிகுந்த வினயத்துடன் பின்வருமாறு பதில் சொல்லத்தொடங்கினாள்:—"அம்மா! இவைகள் என்கையினாலேயே செய்யப்பட்டன. எந்த விதத்தாலும் வயிற்றுக்கு வழிதேடிக்கொள்ள முடியாமல் கடைசியில் இந்த புதிய தையல் எந்திரத்தில் வேலை செய்தால் வயதுமுதிர்ந்த என் தாயாரையும் என்னையும் நான் காப்பாற்றமுடியுமோ வென்கிற ஆசையினால் இவ்விதமாக பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறேன்; இது வரையிலும் வேலையில் திறமையடைந்ததற்கு தனிமையாக எனக்கொரு தையல் யந்திரம் கிடைத்தால் விசாரமில்லாமலிருக்கும், பசியினால் இப்படிசோர்ந்திருக்கமாட்டேன்" என்று கண்ணீர் தாரைதாரையாக விட்டழுதாள்.

இச்சமாசாரத்தைக் கேட்ட நமதுராணியார் மிகவருந்தி உடனே ஒருவேலைக்காரனை வரவழைத்து ஒரு கூடைநிறைய கிச்சிலிப்பழங்களையும், ரொட்டிகளையும் கொண்டுவரும்படி ஆஞ்ஞாபித்து, அது வந்தவுடன் அதைக்கொண்டுபோகும்படி அப்

பெண்ணிடம் சொல்லி, அப்பெண்ணின் பெயரையும், இருப்பிடத்தையும் கேட்டு எழுதிக்கொண்டார்கள். கிருஸ்தமஸ் பண்டிகைதினம் உதயத்தில் அப்பெண்ணின் வீட்டிற்கு ஒரு புதிய தையல்யந்திரம் நமது ராணியாரின் வேலைக்காரர்களால் கொண்டு போகப்பட்டு அப்பெண்ணுக்கு இனாமாக கொடுக்கப்பட்டது. அதன்மீது "அலக்ஸாண்டிரினா அவர்களின் கிருஸ்தமஸ்பண்டிகை வெகுமதி" என்று எழுதப்பப்பட்ட காகிதம் ஒட்டப்பட்டிருந்தது.

ராணியார் மிருகம், பக்ஷி முதலியவைகளின்மீதும் மிகவும் தயையுள்ளவர்களாயிருந்தார்கள். காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்களுக்கு நாய்களின்மீது அதிக பிரியமேயொழிய பூனைகளின்மீது பிரியமில்லை. அலக்ஸாண்டிரினா ராணியார் அப்படிக்கின்றி நாய்களையும், பூனைகளையும் சமமாக பிரியத்துடன் வளர்த்துவந்தார்கள். மேலும் ராணியாருக்கு குதிரைகளிடத்திலும் புறாக்களிடத்திலும் அதிக இஷ்டம். இவ ரரண்மனைதோட்டத்தில் முன்பாகத்தி னிருபக்கத்திலும் அழகானகூண்டுகளில் அநேகவிதம் விதமான புறாக்களும், ஆஸ்திரேலியா தேசத்தின் பக்ஷிகளுமுண்டு. அவைகளுக்கெல்லாம் அவரே ஆகாரம்கொடுப்பார்கள். இதுவுமல்லாமல் இன்னொருஜாதி பக்ஷி ராணியார் உடைதரித்துக்கொள்ளும் அறையில் அநேககாலம்வரையில் வசித்துக்கொண்டிருந்ததாம். மிருகங்களில் அந்த ராணியார் மூன்று வளர்ப்புப் பூனைகளையும், நான்கு குதிரைகளையும், ஒரு பெண்குதிரையையும் வளர்த்து வந்தார்கள். அந்தப்பூனைகள் மிகவும் பெரியவைகளாயும், அழகாயும், நீண்டவயறு உடையவைகளாயும் கருப்பு கலந்த பொன்னிறமாயுமிருந்தன. இவைகள் ராணியாரால் பிறந்ததுமுதல் வளர்க்கப்பட்டுவருகின்றன. நாய் ஜாதியில் ஏறக்குறைய 60 உண்டு. அவர் பிரதிதினம்காலையில் எழுந்திருந்தவுடன் உடைதரித்துக்கொண்டு கூடைநிறைய துண்டுரொட்டிகளை எடுத்துக்கொண்டு தமது குழந்தைகளோடும் தோழிமார்களோடும் நாய்களிருக்குமிடத்திற்குவந்து அவைகளின் சங்கலிகளை அவிழ்க்கும்படி உத்தரவுசெய்து பசும் புற்றரையில் ஒவ்வொரு நாயையும் பெயரிட்டு கூப்பிட்டு ரொட்டித்துண்டுகளை கொடுத்துக்கொண்டு வருவார்கள். அவைகள் தங்கள் எஜமானியிடத்தில் வந்தபொழுதெல்லாம் விசுவாசத்தோடு வால்களை ஆட்டிக்கொண்டு அவர் உடைகளையும் நக்கிக்கொண்டிருக்கும்.

ராணியாருடைய பெண்குதிரையின் பெயர் ரைவா (Ryva) இதன் வயது 21 யிருந்தபோதிலும் போஷிக்கப்படும் விதத்தால் மிகுந்த சொல்பவயதுள்ளதாக காணப்படும். இதை 16 வருஷகாலமாய் ராணியார் சவாரிசெய்துகொண்டு வருகிறார்கள். அவர்களுடன் இக்குதிரை அநேக தேசங்கள் சென்றிருக்கிறது. துக்கப்படுகிறவர்கள் வீட்டிற்கு இவர் குதிரைவண்டியில் ஏறிப்போய் அவர்களுக்குத் தைரியம்சொல்லி வருவார்கள். இவர்கள் வண்டியில் போகும்பொழுது காற்றுகாலத்தில் தெருக்களில் விளையாடிக்கொண்டிருக்கிற சிறுகுழந்தைகளை மெதுவாக தமது கையால் எடுத்து தமது வண்டியில் உட்காரவைத்துக்கொண்டு அவரவர்கள் வீட்டண்டை இறக்கிவிடுவார்கள். அக்குழந்தைகளை தாய் தந்தைகள் எந்தவண்டியில் ஏறிக்கொண்டு வந்தீர்களென்று பிரியமாய் கேட்கும்பொழுது, "ராணியார் வண்டியில்" என அவர்கள் சிரித்துக்கொண்டு பதிலுரைப்பார்கள்.

ஆ! ஆ!! பாருங்கள் சிறிய குழந்தைகளின்மீது நமது ராணியார் வகித்திருக்கும் பிரியத்தையும் அன்பையும்! ராணியார் வளர்ப்பு குதிரைகளெல்லாம் ராணியாரின் அடையாளத்தையும் அவர்களுடைய குரல் ஓசையையும் கேட்டவுடனே கனைக்கும். அவர்கள் பிரதிதினமும் குதிரை லாயத்திற்கு புசிக்கத் தகுந்த பதார்த்தங்களை எடுத்துக்



கொண்டு சென்று வரிசையாய் நின்றுகொண்டிருக்கும் குதிரைகளின் வாயில்கொடுப்பார்கள். அவைகளின் தேக ஸ்திதியை எப்பொழுதும் கவனித்துக்கொண்டும், குதிரைக்காரர்களிடம் மிகுந்த பிரியத்துடனு மிருப்பார்கள்.

நிற்க, ராணியார் தமது பர்த்தாவிடத்தில் நடந்துவரும் விதத்தைக்கொஞ்சம் எழுதுவோம். அவருக்கு சுரம்வந்தகாலத்தில் இவர்களே அவர் சமீபத்தில் எப்பொழுதுமிருந்துகொண்டு வேலைக்காரர்கள் செய்யவேண்டிய நீசவேலைகளையெல்லாம் "குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்" என்றதற்கிணங்க செய்துவந்ததானது இவருடைய பக்தியையும், விசுவாசத்தையும், பதிவிரதாதருமத்தையும் காண்பிக்கின்றதல்லவா. ராணியார் தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பதில் மிகுந்த திறமையுள்ளவர்களாம். இந்த வேலையை தமது ஜெனனதேசமாகிய டென்மார்க்கில் கற்றுக்கொண்டார்கள். இங்கிலாந்தில்கூட பசுக்களின்பாலை பத்திரப்படுத்தி வெண்ணெய் எடுப்பதற்காக ஒரு சாலை பிரத்தியேகமாக மகாராணியார் ஏற்படுத்தினார்கள். இவ்விடத்தில் தமது பெண் குழந்தைகளுக்கு தொழிலைக்கற்றுக்கொடுத்தார்கள். பெண்மணிகளே! பார்த்தீர்களா! மிக்க செல்வமுடைய ராணியாருக்கு வீட்டுவேலைகளைத் திறமையுடன் செய்வதில் ஊக்கமும், குழந்தைகளுக்கும் வீட்டுவேலைகளைக்கற்றுக் கொடுப்பதில் ஆசையையும்!! இவ்விதமன்றோ நமது தேசத்திலுள்ள தனவந்தர்வீட்டு மாதர்களுமிருக்கவேண்டும். இவர்கள் அடிக்கடி வேலைசெய்யாமல் வேலைக்காரரையே செய்யும்படி ஏவுதல் பிசகன்றோ? நம்மாதர்கள் வீட்டுவேலைகளைச் சரிவர கவனித்தால்தான் நலம். ஆனால் மத்திய கீழ்வகுப்பார் அக்கரையுடன் செய்துவருகிறார்கள். மேல்வகுப்பாரும் முக்கியமான கிருககிருத்திய வேலைகளைச் செய்யவேண்டிய அவசியமேயாம்.

[பத்திராதிபர்.]

(இன்னும் வரும்)

## "ஆசைக்கோ ரளவில்லை."

சில நூற்றாண்டுகளுக்குமுன் புங்கனூரிலிருந்து ஒருவன் ஆதிபுரி என்னும் நகருக்குப் புறப்பட்டான். இவ்விரண்டு நகரங்கட்கும் இடையில் ஏறக்குறைய இருநூறுமைல் தூரமிருக்கலாம். அக்காலத்தில் இருப்புப்பாதை முதலிய போக்குவரவுக்குரிய சாதனங்களொன்றுங் கிடையா. வழியில் தன் கையில் நடந்துசெல்லுகொண்டுபோனவையெல்லாம் ஒழிந்தது. பின் மிகுந்த கஷ்டத்துடன் தண்ணீரற்கையில், எதிரில் எங்கும்பரந்த மணற்காடாக இருந்ததையும் குடிப்பதற்குத் இங்கு எங்கேயிருந்ததையும் பார்த்து அவன் ஈசனைக் குறைகூறி, 'பாழுந்தெய்வம் நொந்துகொண்டேனும் ஒரு சேரங்கை ஜலமாவது வைத்திருக்கக்கூடாதா' என்று மகிழ்வுடன் நடக்கையில் எதிரில் ஒரு மரத்தின்கீழ் சிறுஊற்று ஒன்றிருப்பதைக் கண்டு இளைப்பாருகை அங்குசென்று கை கால் சுத்திசெய்து கொஞ்சம் நீரருந்தி மரத்தடியில ஸ்நானஞ்செய்து களைப்யில், இந்தஊற்றுச் சிறிது பெரிதாகவிருப்பின் 'நான் நன்கு ஓர் பெரிய கூபபையாற்றிக் கொள்வேன்' என்றெண்ணினான். உடனே யவ்வூற்று நின்று, 'நாமாயிற்று. அவன் சந்தோஷித்து அதனிடஞ்சென்று நீராடிக் கரையேறி யென்று நினைத்தான். நீராடியாய்விட்டது, இனி சாப்பிடுவதற் கொன்றுமில்லையே'

உடனே பலவகைப் பதார்த்தங்கள் இனிய அமுதுடன் அருகிலிருக்கக்கண்டு, அதை உண்டுகளித்து "உண்ட இளைப்புத் தொண்டர்க்குமுண்டு" என்ற பழமொழிக்கேற்ப மரநிழலி லுட்கார்ந்திருக்கையில், 'இம்மணல்தரையில் உட்கார்ந்திருப்பது எவ்வளவு கஷ்டமாக இருக்கின்றது. ஒரு ஊஞ்சில் பலகையிருக்குமேல் எவ்வளவுசுகமாக இருக்குமென்றவ னெண்ணியதும் எண்ணுதலும் அம்மரக் கிளைகளினின்றும் ஒரு ஊஞ்சல் தொங்குவதைப்பார்த்து ஆனந்தித்து அதன்மேலுட்கார்ந்து பின்வருமாறு லோசிக்கலாயினன். 'நாமிப்போது இவ்வூஞ்சலில் தனிமையாக இருப்பதிலும் இரண்டு தாதிகள் இவ்வூஞ்சலை யசைக்கவும் மற்றொருத்தி யருகிலிருந்து அடைகாய் கொடுக்கவுமிருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்குமென்று எண்ணவே அவன் வெறும் எண்ணம்முற்றும் உண்மையேயாகியது.

* * * *

இதை வாசிப்பவர்கள் இவற்றிற்கெல்லாம் என்னகாரணம் என்றுலோசிக்கலாம். கற்பக விருக்ஷமென்று ஒன்றிருப்பதாக நாம் எல்லோரும் கேட்டிருக்கிறோமல்லவா? அது தேவதருக்களில் ஒன்று. அதையணுகினோர் என்னவிரும்பினும் கொடுக்குந் தன்மையைத் தன்னிடந்தாங்கியுள்ளது. நமது பிரயாணி சிறு ஊற்றினருகிற் கண்டது கற்பகவிருக்ஷமே. ஆதலின் அவன் எண்ணமெல்லாம் சித்தியாயின.

இவ்விதம் அவன் உல்லாசமா யிருக்கும்பொழுது இதென்ன ஆச்சரியம் முதலில் ஒரு மரம் மாத்திரம் இருந்தது; பின்னர் சிறுஊற்று ஒன்று கண்டோம்; அவ்வூற்று விசாலமுள்ள கூபமாகியது; நல்லுணவு, ஊஞ்சல், தாதிகள் முதலிய வெல்லாம் எண்ணியவாங்கே யடைந்தேன். ஒருசமயம் அம்மரத்தி லேதேனுமொரு பிசாசுஇருக்குமோ என்னமோ' என்றுநினைத்த அளவில் ஒரு பிசாசு நிற்கக்கண்டு பயந்து 'இப்பிசாசு என்னை விழுங்கிவிடுமோ' என்றுஎண்ணித் திகிலடைந்தான். அப்பிசாசுஅவனை உடனே விழுங்கிவிட்டது.

பார்த்தீர்களா நண்பர்களே! திருப்தியில்லாமல் ஒன்றன்பின்னொன்றாய் பலவற்றை வேண்டியதனாலன்றோ பின்னால் சந்தேகிக்கநேர்ந்து இந்தக்கதியடைந்தான். மனிதருக்குச் சாதாரணமாக எதிலும் திருப்திஎன்பதில்லை. இந்தவிஷயத்தில் ஆயிரக்கணக்காய்ச் சம்பாதிப்பவர்களும் சோற்றுக்குங் கதியற்றவர்களும் ஒன்றாகத்தானிருக்கிறார்கள்; ஊன்றிப்பார்த்தால் பிந்தியவனுக்கே சிறிதுசுகமதிகம் என்னலாம். இது சம்பந்தமாக வேடிக்கைக் கதையொன்று சொல்லுவதுண்டு. ஒரு வாலிபன் ஒரு பெரியவரைப் பார்த்து ஐயா! 500,000 ரூபாய் உடையவனா அல்லது 7 பெண் பெற்றவனா எவன் அதிகபாக்கியவான்?" என்றான். அதற்கு உலகவியாபார மறிந்த அவர் அப்பா! நிச்சயமாகப்பிந்தினவனேதான் என்றார். ஏனென்று அவ்வாலிபன்கேட்க அவர் 500,000 ரூபாயுடையவனுக்குத் திருப்தியிராது. பின்னும் பணம்விரும்புவான். ஏழுபெண்களுடையவனோ அவற்றோடு திருப்தியடைவன் பின்னும் அதிகம்பெற விரும்பான் என்றாராம்.

அங்கே நமது கதாநாயகனாகிய வழிப்போக்கனுக்கு பசிதாகம் ஆற்றுதலுக்கு உணவும் நீருந்தானே வேண்டியிருந்தன. அவற்றைப் பெற்றபின் அவன் திருப்தியடைந்து மேற்செல்லலாமன்றோ? அப்படியில்லாதுமட்டு மீறினதனால்தானே அவ்வாறு மாய்ந்தான்.

இவற்றை யறியாமலா

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டி
யாளினுங் கடன் மீதிலே
யாணைசெலவேநினைவ ரளகேச னிகராக



வம்பொன் மிக வைத்த பேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரு
நிலையாக [illegible]னுங் காயகற் பந்தேடி
நெஞ்சு புண் [illegible]
யோசிக்கும் வேளையிற் பசிதீரவுண்பது
முறங்குவது மாகமுடியு
முள்ளதேபோதுநா னெனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலைமை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணனந் தமே.

என்றார் தாயுமானசுவாமிகள்.

M. V. M. B. A

---

## உத்தராம சரித்திரம்.

## (குச, லவர் சரித்திரம்).

(முன்றொடர்ச்சி.)

(48) தாசரதி தேவி யுடன் ஸகல கவி சூழ
தம்பியருங் கூட வர அயோத்தி வந்து சேர்ந்தார்

(49) தாய் மார்கள் மூவர்களை சரணமென்று பணிந்தார்
(அம்மன்) மாமிமார் பாதந்தன்னில் வணங்கியே தொழுதாள்

(50) பரிவுடனே பணிந்ததொரு மருமகளை வாழ்த்தி
மறவுரியை தான் களைந்து திரிசடையை பிரித்து

(51) மைதலிக்கும் ராமருக்கும் வாஸ எண்ணெய் சாத்தி
மணமுடைய அரப் பரைத்து மஞ்சள் நீராட்டி

(52) மாதளம் பூப் பட்டுடுத்தி வகைபணதி பூட்டி
மைதலியாள் பூங் குழலை வகுந்து துயிலாற்றி

(53) வர்ணமுள்ள பெட்டியிலே பல பணதி எடுத்து
அன்ன நடை சீதையற்கு அலங்காரஞ் செய்தாள்

(54) வகை வகையாய் மாலைதனை மைதலிக்கு சாத்தி
ஜெயவீர ராமருடன் ஸிங்கா ஸன மிருந்தாள்

(55) வஸிஷ்ட முனி கையாலே மகுடந்தனை சூட்டி
மைதலிக்கும் ராமருக்கும் மதித்த பட்டங் கட்டி

(56) இன்பமான சீதை யுடன் ராகவருங் கூடி
எதிர்த்ததோர் போகந் தன்னை அனுபவித்து வாழ்ந்தார்

(57) உமையுடனே சங்கரனுர் ஒங்கிச்சிருந்தாப் போல்
அயன்நாவில் ஸரஸ்வதியும் அமர்ந்து இருந்தாப்போல்

(58) மாலுடைய திருமார்பில் மாது மிருந்தாப் போல்
ராகவரும் ஜானகியும் நல முடனே [illegible]

(59) [illegible] பெரிதான அயோத்தி நகர்தன்னை
அபிராமர் தம்பி யுடன் அரசாளும் போது

(60) (நல்ல) தனதானியங்கள் உண்டாம் தர்மங்களு முண்டாம்
சகலவர்க்கு மிடர் தீர ஸந்தான முண்டாம்

(61) ரசமான களிக ளுண்டாம் யாகங்களு முண்டாம்
சதுர் வேத மோதுகிற மறையோரு முண்டாம்

(62) பசு பாக்கியங்க ளுண்டாம் குளிர் காற்றுமுண்டாம்
பல தினமுந் தப்பாதெ பஞ்சயக்யம் உண்டாம்

(63) வளமையான பயிர்க ளுண்டாம் மலரதிக முண்டாம்
மாதம் ஒன்றும் தப்பாதே மாரிமூன்று முண்டாம்

(64) சுக சரீராளுடன் கூட சோரர்க ளில்லாதே
(அந்த) அழகான பூமிதன்னை அபிராம ராண்டார்.

(65) மகிமை யுள்ள ரகுபதியும் மன்னனும் போது
மைந்தர் நமக்கில்லை என்று மனதுமெத்தச் சலித்து

(66) வழி வழியாய் ரகுவம்சம் மாராமல் ஆண்டோம்
(என்று) மைதலியும் ராகவரும் மனஸ்தாப மடைந்தாள்

(67) சலிப்புடனே இருக்கும் போது தாச ரதிதேவி
புவன முழு தாள்வதற்கு புத்திர னுண்டானுள்

(68) (அம்மன்) அழகான இடைதுவண்டு அன்ன மிறங்காதே
மதிமுகமும் வாணந் தட்டி வாந்திகளும் பண்ணி

(69) குறு வேர்வைகள் வேர்க்க கோவாயும் உலர
செங்கமல முகம் வெளுக்க தித்துடம்பு தவள

(70) நீல முள்ள கருங்குழலால் நித்திரைகள் பண்ணி
மைதலியாள் ஜானகியும் மசக்கை கொண்டு இருந்தாள்

(71) கௌசலையும் ராகவரும் கண்டு மன மகிழ்ந்து
குடி விளங்க் குமரன் நமக்குண்டாச்சென் றெண்ணி

(72) கலியாணம் வந்ததென்று கருத்தில் மிக மகிழ்ந்து
கனமுடைய ஜனகருக்குச் சேதி சொல்லி விட்டார்

(73) சந்தோஷ வார்த்தைதனை கேட்டு மந்த ஜனகர்
கொம்பனையாள் ஜானகியை கூட்டி வர எண்ணி

(74) அழகான அஞ்சு திங்கள் ஆன மைதலிக்கு
மணமகளார் மைதலிக்கு வளை காப்பு மிடவே

(75) ஜனகருக்கு தங்கையரும் சீதை யரை அழைக்க
செம்பொன்மணி தேரேறி அயோத்தி வந்து சேர்ந்தார்



(76) அருகில் வந்து சீதையரும் அத்தை அடிபணிய
பரிவுடனே மனமகிழ்ந்து வாழ்த்தி யவள் இருந்தாள்

(77) வண்ணமுள்ள மைதலிக் கிவளை காப்பு மிடவே
அன்புடைய ஜனகரிடம் அனுப்ப வேணு மென்றாள்

(78) ஆதி ரகு நாதருடன் தாயார் கௌசலையும்
அதி பிரியமாய் மகிழ்ந்து ஜானகியை அழைத்து

(79) தாயார் தன் மாளிகைக்கு போய்வாரு மென்ன
அப்படியே போய் வாரேன் என்று மடிபணிந்தாள்

(80) அடி பணிந்த மருமகளை பரிவுடனே வாழ்த்தி
பூமி கிள்ளி காப்புமிட்டு போகவிடை கொடுத்தாள்

(81) போக விடை கொடுக்கவுமே புண்ணியனுர் தேவி
செம்பொன் மணித் தேரேறி மிதுலைவந்து சேர்ந்தாள்

(82) தந்தை ஜனகர் கண்டு சந்தோஷப் பட்டு
அடிபணிந்த திருமகளை பரிவுடனே வாழ்த்தி

(83) தந்தையரும் தாயாரும் சிந்தை தன்னில் மகிழ்ந்து
மங்களமாம் ஜானகிக்கி வளை காப்பு மிடவே

(84) தங்கத்தினுல் காப் படிச்சாள் ஜானகியாள் தனக்கு
பொன்னுலே நெளி பூடம் பூங்கிளிக்குசெய்தாள்

(85) கணையாழி மோதிரமும் கனகப் பாட்டிலியும்
காலாழி பீலாழி செய்து கொண்டு வந்தாள்

(86) மகிழ்ந்து மந்த அத்தையரும் வாங்கி உள்ளேவைத்து
புகழுடனே காப்படுக்க நல்ல நாள் பார்த்தாள்

(87) வடி வுடைய மைதலிக்கு மருதாணி இட்டு
கோப்புடைய ஜானகிக்கு கொம்பரக்கு போட்டாள்

(88) மல்லிகையும் செம்பகமும் முடித்த குழலவுத்து
மைதலியாள் சீதையர்க்கு வாசு எண்ணெய்சாத்தி

(89) மணமுடைய அரப்பரைச்சு மஞ்சநீராட்டி
சிந்திரவாளி பட்டெடுத்து சீதை இடைதனிலே உடுத்தாள்

(90) பால் முழிக்கிமை எழுதி அரும்புகுழல் பின்னி
சுந்திரனுர் நாயகிக்கு நிலதப்பொட்டு மிட்டாள்

(91) வண்ணமுள்ள பெட்டியிலே பல பணதி எடுத்து
அன்புடைய சீதையர்க்கு அலங்காரஞ் செய்தாள்

(92) கூர்மையாகத் தரைமெழுகி கோலந்தனை இட்டு
நிரைநாழி முத்தளந்து நெய்விளக்கு மேற்றி

(93) மங்களமாம் வாத்தியங்கள் பதினெட்டும் முழங்க
மங்கையர்கள் வளையநின்று மங்களங்கள்பாட

(94) வளையடுக்கி காப்புமிட்டாள் மைதலியாள் தனக்கு
புகழுடனே பூச்சூட்டினுள் பொற்கொடியாள் தனக்கு

(95) தாம்பூலம் இலையடுக்காய் சகலருக்கும் கொடுத்து
சக்கரைகள் பழத்துடனேதான் வழங்கி நின்றாள்.

(96) திருப்தியுடன் சித்திரான்னம் சேர்ந்துமவாள் புஜித்து
அத்தனைபேர் மங்கைமாரும் அகமகிழ்ந்து மிருந்தாள்

இன்னும் வரும்.

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்.

## பெண் கல்வி.

நாகரீகத்தி னஸ்திவாரமிட்ட 20-ம் நூற்றாண்டிலுங்கூட ஜனசமுதாய அபிப்பிராயத்தை நன்காராய்வோமானால் முற்காலந் தொட்டிது காறும் பெண்கள் கற்றதில்லை. இன்னுங் கற்பது அனுசிதமென்று சுதேசபாஷாபிமானிகளும் ஆங்கில நூலாராய்ந்தோர் ஏற்பாடு செய்வதைத் தேடாமல் பெண்கல்வி அநாவசியமென்றுங் கூறுநிற்பர். உண்மையினளவு எவ்வளவு என்று நோக்கினால் முற்காலத்தில் தோன்றிய மகம்மதிய ராளுகையிலவர்கள் ஆதரணையைக் கருதி ஸ்திரீகளை அந்தப்புரத்திலிருத்துவதும், கல்லாத மடவாராகவும் வைத்த வழக்கமின்னும் ஜனங்களை விட்டகலவில்லை. மகமதிய ஆட்சி நீங்கி நீதிப்புலன் போதிக்கும் பிரிட்டிஷ் அரசாட்சி ஸ்தாபிதமாயும் பூர்வ ஆசாரத்தை தவிர்க்கர்தது பேதமை என்பது சொல்லாதே யமையும். இந்து ராஜரீகமான ஆதி மனுசக்ரவர்த்தி முதலிய செங்கோ லோங்குங் காலமெல்லாம் ஸ்திரீ புருடர் சமமாக கல்வி கற்றுவந்தார்க ளென்ற சாதன மிகவுள. "குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல; நெஞ்சத்து நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால் கல்வியழகேயழகு."

என்ற நாலடியாரில் ஸ்திரீகளுக்கு தலைமயிரழகேனும் சேலையின் முந்தாணி அழகேனும், மஞ்சளழகேனும் அழகல்லவென்றும் கல்விதான் சிறப்புடைமை என்று கூறுகிறது.

ஆகில் சர்வ சாதாரணமாய் ஸ்திரீகள் கல்வி பெருகி யிருந்ததில்லையே என்றகுதர்க்க முண்டாகலாம் அதற்கு சமாதானங் கூறுவோம். தற்காலம்போல அச்சின் சாதகமில்லாததினால் அக்காலங்களில் ஒருவரறிந்த கிரந்தங்களை மனப்பாடமாய் வைத்திருந்து, அந்தியகாலம் நெருங்கும்போதவர்கள் வாரீசாரறிந்து பரம்பரையாகவந்தன. சில காலங்கழிந்து ஏட்டுசுவடிகள்தயாராகுங்காலமேற்பட்டன. இந்தசாதன மேற்பட்டகாலத்திலாருஞ்சுலபமாய் வாங்கி வாசிக்குந் தகுதியுடையவராயிருக்கவில்லை. இப்போது 1 அணுவுக்குக் கிடைக்கும் புஸ்தகமப்போதுபல நூறுரூபாய் கொடுத்தும் கிடைப்பது நிச்சயமல்ல. இப்போது லட்சரூபாய்சம்பாதிப்பதுக்குமப்போது ஒருநூறுரூபா யுண்டாக்குவதுக்குங்கஷ்டம் ஒன்றே. இவ்வண்ணஞ் சிற்சில புருடரே கல்வி கற்பார்களானால் ஸ்திரீகள் முற்றிலும் கல்விராணியாகவில்லையே என்ற குறைகூறுவதசாத்தியம். கூடுமானவரை கற்றஸ்திரீகளிருந்து வந்திருக்கிறார்களென்று சில்சரிதங்களால் விளங்கும். நமக்குநீதிநூலருளிய திருவள்ளுவநாயனார் சகோதரிகளான: ஔவை: உப்பை: உருவை: வள்ளியம்மை: சைவநூலானபெரியபுராணத்தில் நாயன்மாரிலொருவரான காரைக்காலம்மை: வைணவகுருபரம்பரையிலொருவரான சூடிக்கொடுத்த நாச்சியார், கற்பின் றிலகமென்றுகொண்டாடும். சீதை, சந்திரமதி, திரௌபதை, தமயந்தி, சகுந்தலை, பாண்டியன் மனைவி, கம்பர் வீட்டுப் பணிப்பெண். இவர்கள் கல்வி யுடையவராயிருந்திருக்கிறார்க ளென்று சாதாரணமா யுரைக்கலாம். மேலும் கம்பராமாயணம் பாலகாண்டம் நாட்டுப்படலத்தில்

> பெருந்தடங்கட் பிறைநு
> தலரார்க் கெல்லாம்
> பொருந்து செல்வமுங்
> கல்வியும் பூத்தலால்
> வருந்தி வந்தவர்க்
> கீதலும் வைகலும்
> விருந்து மன்றி
> விளைவன யாவையே

என்பதால் கோசல நாட்டில் கற்றமடவா ரிருந்தார்களென் றேற்படுகிறது.

> சீவக சிந்தாமணி
> நாமகளி லம்பகத்தில்
> "வண்டுமொய்த் தாற்றும்
> பிண்டிவாமனால் வடித்தநுண்ணூல்
> உண்டுவைத் தனையநீயு
> முணரவிலா நீரையாகி
> விண்டுகண்ணருவி சோரவிம்
> முயிர்த் துணையையாதல்
> ஒண்டொடி தகுவதென்று
> லொழுகநின் கவலையென்றான்."

என்ற செய்யுளில் சச்சந்தன் மனைவியுஞ் சீவ கன்றாயுமான விஜயை கற்றவளென் றுதாரமேற் படுகிறது.

இதுபோன்ற வேதுக்களால்பூர்வகாலத்தில் கல்வியின் செல்வாக்கு நிகழ்ந்ததென்றும் மத்திய மகமதியர் காலத்தில் மறைந்தனவென்றும் இப்போதைய நாகரீகத்தின் பயனாக ஸ்திரீகளும் கல்வி கற்கவேண்டிய தவசியமென்று நிராட்சேபமாய் சொல்லக் கூடும்.

மனோரஞ்சனி நேசன்.

## ஸிம்பலைன்.

இயாகிமோ:—மகாராஜாவே! என் மெய் நடுங்குகின்றது. இம்மோதிரத்தின் வரலாறை நான் சொல்லாமற்போனால் நீங்கள் என்னை சித்திரவதை செய்து உண்மையை வெளியிடச்சொல்லுவீர்கள். ஐயோ! நான் உண்மையைச்சொன்னால், மகாராஜாவே! உங்களைச் சித்திரவதைசெய்ததைப்பார்க்கிலும், அதிகமாக வருத்தப்படுத்தும் என்னசொல்லுகிறீர்கள்?

ஸிம்பலீன்:—என்னசொன்னாய், சித்திரவதை செய்யுமா? என்னையா!

இயாக்கி:— உள்ளதை வெளியிடாமல் என்மனதைப் புண்ணாக்கிக்கொண்டிருக்கப்பட்ட சங்கதியை நான் சொல்லும்படிக்கு நீங்கள் கட்டாயப்படுத்தினதினால் நான் அதிக சந்தோஷமடைகிறேன். உங்களுக்கு வந்தனம்

அளிக்கின்றேன். துரோகம்—ஐயோ! என் மெய்நடுங்குகின்றது. நான்
துரோகம் செய்ததினால் எனக்கு இம்மோதிரம் கிடைத்தது. நினைத்த
மாத்திரத்தில், நீங்களும், நானும், மற்று யாவரும் அதிக விசனப்படத்
தக்கவனும், விண்ணிலும் மண்ணிலும் ஒப்புயர்வில்லாதவனும், பெருந்
தன்மையும், யோக்கியதையுமுடையவனும், கொஞ்சமாகிலும் ஆலோ
சனையின்றி உங்களால் நாட்டைவிட்டுப் போகும்படியாக சொல்லப்ப
ட்ட மகானுபாவானாகிய பாஸ்துமஸுடைய மோதிரம் இது. இதைப்
பற்றி இன்னும் கேட்கவேணுமா?

ஸிம்பலீன்:— நல்லது இதற்குச் சம்பந்தமாயுள்ளவற்றை முழுவதும் எனக்கு விவர
மாய்ச் சொல்லவேணும்.

இயாக்கிமோ:—ஆனால் நான் சொல்லுகிறேன். ஒப்புயர்வற்ற இரதிக்கும், அருந்ததிக்
கும் சமானமான உன்னுடைய புத்திரி-ஐயோ! நினைக்கிறபோது கண்
ணீர் ஆறாகப் பெருகுகிறது. இருதயத்திலிருந்து இரத்தம் சிந்துகிறது;
மெய்பூராவும் நடுங்குகின்றது—விடைகொடுக்கவேணும்; நான் சோர்
ந்துபோய்விட்டேன்.

ஸிம்பலீன்:— என்னுடைய புத்திரியா! அவளுக்கென்ன! தைரியத்தைவிடாதே.
அவளைப்பற்றி முழுவதும் சொல்லுகிறவரையில் நீ இறந்து போகாமல்
உன்னைக்கடவுள் காப்பாற்றவேணும். எவ்விதத்திலும் நீ முயற்சி
செய்து இமோஜனைப்பற்றிய சங்கதிகளைச் சொல்லவேணும்.

இயாக்கிமோ:—ஒரு காலத்தில்—என்ன! துர் அதிர்ஷ்டமான சமயம்—ரோமாபுரியில்
ஐயோ! வெறுக்கத்தக்க ஒரு வீட்டில்—என் மெய் நடுங்குகின்றதே!
ஒருவிருந்தில்—தெய்வமே! எங்களுடைய பானகங்களில் விஷத்தை
தான் கலந்தனரோ, அல்லது என்னுடையதில் மாத்திரம்தான் கலந்
திருக்கவேணும்; ஐயோ! அந்த விருந்தில் மேன்மையுள்ள பாஸ்து
மஸ் என் நாக்கு தடுமாறுகிறது, என்னசெய்வேன், என்னுயிர்போகும்
போல் தோன்றுகிறதே—உலகத்தில் எல்லாரிலும் அதிகச்சிறந்தவனும்
கெட்டவர்களுடைய கூட்டத்தில் இருக்கத் தகாதவனுமாகிய பாஸ்து
மஸ், எங்களுடைய மாதர்களின் குணகுணங்களையும், அழகையும்,
பதிவிரதா தருமத்தையும்பற்றி நாங்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண்
டிருக்கையில் மௌனமாய் கேட்டுக்கொண்டிருந்து,

ஸிம்பலீன்:— என்வயிற்றில் தீப்பிடிக்கிறது; நான்கேட்ட கேள்விக்கு சீக்கிரம் விடை
சொல்.

இயாக்கிமோ:—உங்களுடைய மனம் வருத்தப்படாமலிருந்தால் நான் இதைச்சீக்கிரம்
முடிக்கிறேன். இந்த பாஸ்துமஸ் தன் நாயகியை அதிகமாய் நேசித்த
வன்போலவும், அவளுடைய பதிவிரதா தருமத்தில் சிறிதேனும் சந்தே
கப்படாதவன்போலவும் மனதில் நினைத்துக்கொண்டு எங்களுடைய
மாதர்களைப்பற்றி ஒன்றும் இகழ்ந்து பேசாமல் இமோஜனின் குண
குணங்களையும் அழகையும், பதிவிரதா தருமத்தையும்பற்றி நாங்கள்
கண்ணால் கண்டதுபோல் வெகுநேர்த்தியாக எடுத்துரைத்தான்.

ஸிம்பலீன்:— வீண்வார்த்தைகள் வளர்க்காதே, காரியத்துக்குச் சீக்கிரம் வா.



இயாக்கிமோ:—இதோசொல்லி முடித்துவிட்டேன். உன்னுடைய புத்திரியின் பதிவி
ரதா தருமம். அதில்தான் கதை ஆரம்பிக்கிறது. பாஸ்துமஸ் இமோ
ஜனை அருந்ததிக்கொப்பான வளென்றும் அதிக ரூபவதி என்றும்,
அதிக ஞானமுள்ளவளென்றும், மகா பதிவிரதையென்றும், கற்பழியக்
கூடாதவளென்றும், அவளுக்குச் சமமாக பிரான்ஸ்தேசத்தில் ஒருவ
ரையும் காணமுடியாதென்றும், இப்படி பலவிதமாகப் புகழ்ந்துரைத்
தான். அப்பொழுது பரமசண்டாளனாகிய நான் அப்பெருமைகளை நம்
பாதவனாய் பாஸ்துமஸுடைய அபிப்பிராயம் நிச்சயமல்ல. இமோஜ
னுடைய கற்பை யாராவது அழித்திருப்பார்கள். அல்லது, நான்போய்
என் தந்திரங்களினால் அவளைமயக்கி அவளுடைய பதிவிரதா தருமத்
தைக் கெடுத்துவிடுகிறேன். அதற்குப் பந்தயமாக அந்த மகானுபாவன்
வைத்திருந்த இந்த மோதிரத்துக்குப் பதிலாக ஆயிரம் டக்கட்டுக்களைப்
பந்தயம் வைக்கிறேனென்று சொன்னேன். இமோஜனனின் கற்பில்
அதிக நிச்சயமுள்ளவனாகையால், இந்த மோதிரத்தைப்பார்க்கிலும் எவ்
வளவு விலையுயர்ந்த சாமான்வேணுமானாலும் தருகிறேனென்று சொல்லி
இதைப் பந்தயமாக வைத்தான், தவிர துரோகியாகிய என்னை உபசரிக்
கும்படி இமோஜனுக்கு ஒருஎழுத்தும் என்னிடத்தில் தந்தான்.

இமொஜன் :— (தனக்குள்) நல்லது, சங்கதி இப்படியாயிருக்கிறது.

இயாக்கிமோ – அந்த எழுத்தை வாங்கிக்கொண்டு பிரிட்டன் தேசத்துக்கு உடனே
ஓடிப்போனேன். போய் இமொஜனிடத்தில் பாஸ்துமஸைப் பற்றி
நிந்தித்துரைத்து என்காரியம் கைகூடுமோவென்று நோக்கியதில் என்
னுயிருக்கே அபாயம் வந்துவிட்டது. பிறகு என்னுடைய தந்திரங்களி
னால் அம்மாது சிரோன்மணியின் கோபத்தைத் தணியச்செய்து என்
காரியம் நிறைவேற வேறு உபாயங்கள் எடுத்தேன். இமொஜனை நினைக்
கிறபோது என்மெய் நடுங்குகிறது. ஐயோ! அவள் என்னை அதிக
விசுவாச முள்ளவனென்று நினைத்தாள். நான் அவளுக்குச் செய்த
துரோகமோ என்னால் விவரிக்கத் தக்கதல்ல.

இமொஜன்— எனக்கு என்ன துரோகஞ் செய்தனனோ தெரியவில்லை (தனக்குள்
சொல்லுகிறாள்.)

ஸிம்பலீன்— என்னால் பொறுக்கமுடியாது. சீக்கிரம் சொல். நெருப்பு எரிந்துகொண்
டிருக்கப்பட்ட காட்டின் மத்தியில் அகப்பட்ட மான்போல் துடித்துக்
கொண்டிருக்கிறேன்.

இயாக்கிமோ. பின்னடந்தவற்றைச் சொல்லுகிறேன். இமொஜனிருந்தால் நான் செய்த
குற்றங்களை மன்னிக்கச் சொல்லலாம். எங்கே யிருக்கிறாளோ அறி
யேன். அடுத்த நாள் ஒரு பீப்பாயில் விலையுயர்ந்த சாமான்களிருக்கிற
தென்றும், அவற்றை பாஸ்துமஸ் சக்கரவர்த்திக்கு வெகுமதியாகக்
கொடுக்கப்போகிறதாகவும், ஒரு இரவுமாத்திரம் அவற்றைப் பத்திர
மாக வைத்துக்கொள்ளவேணுமென்றும் இமோஜனிடத்தில் கேட்க,
தனனுடைய பர்த்தாவுடையது என்று நினைத்ததினால் அம்மகா பதி
விரதை அதைக்காப்பாற்ற தன் கற்பைவேணுமானாலும் அடகு வைக்

கிறேனென்று சொல்லி அதைத்தன் படுக்கை யறையில் வைத்துக்
கொண்டாள். ஐயோ! என்மெய் நடுங்குகின்றதே, ஒரு வார்த்தையையா
வது சொல்ல என் நாவெழும்பவில்லை. இதுவரையில் இரகசியமாக
வைத்திருந்த சங்கதியை இப்பொழுது எவ்விதம் வெளியிடுவேன்?
என்மனம் சகிக்கவில்லையே—(சோர்ந்து கீழேவிழுகிறான்.)

இமொஜன்:— (தனக்குள்) துரோகம் இன்னதென்று தெரியவில்லையே என்னமோ
சம் செய்தானோ. என்னுடைய காப்பை இவன்தான் கொண்டுபோய்
விட்டானோ.

பாஸ்துமஸ் (தனக்குள் இந்தப்பயல் மோசம் செய்தேனென்கிறான். இதை நம்பி
யல்லவோ என்மனைவியை வெட்டச்சொன்னேன். என்னசெய்வேன்?
என்னை தெய்வந்தான் காப்பாற்றவேணும்.

ஸிம்பலீன்— கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து அவன் முகத்தில் தெளியுங்கள்.
சங்கதிபூராவும் சொல்லட்டுமென்று சொல்ல கொஞ்சம் தண்ணீர்க்
கொண்டுவந்து அவன் முகத்தில் தெளிக்க இயாக்கிமோ மூர்ச்சை
தெளிந்தான். அப்பொழுது,

இயாக்கிமோ— நீங்கள் கட்டாயப்படுத்துகிறதினால் நான் சொல்லுகிறேன். மகாரா
ஜாவே! நான் சொல்வதைக்கேட்டு துக்கசாகரத்தில் மூழ்கிதளர்ந்து
போகக்கூடாது.

ஸிம்பலீன்— எரிந்துகொண்டிருக்கிற புண்ணில் எண்ணெயை வாரிவிடாதே, சீக்கி
ரம் சொல்.

இயாக்கிமோ:- அரசனே! அந்த பீப்பாயில் விலையுயர்ந்த ஆபரணங்களில்லை. என்னு
டைய காரியங்கள் நிறைவேற நான்தான் ஒளித்துக்கொண்டிருந்தேன்.
(இமொஜன் மெய்நடுங்கினது. பாஸ்துமஸுடைய உதடுகள் துடித்
தன) நடுராத்திரியில் இமோஜன் அயர்ந்து நித்திரைசெய்கையில் நான்
பீப்பாயிலிருந்து வந்து படுக்கையறையின் அடையாளங்களைக் குறித்
துக்கொண்டு, பின்பு அப்பதிவிரதை யிடத்திலிருந்து இந்தக்காப்பை
யும் எடுத்தேன். (காப்பைக் காட்டுகிறான்)—(இமோஜன் நீயா இம்மோ
சம் செய்தாய் என்று தனக்குள் சொல்லிக்கொள்ளுகிறாள்) தவிர
உடம்பிலுண்டான ஒரு இரகசியமான அடையாளத்தையும் பார்த்துக்
கொண்டு உடனேபோய் பாஸ்துமஸிடத்தில் சொன்னேன். இவற்
றைச் சொன்னால் யார்தான் நம்பமாட்டார்கள். ஐயோ! இந்த மகானு
பாவன் நான் இமோஜனின் கற்பை நிச்சயமாய் அழித்துவிட்டே
னென்று நினைத்தான். உடனே—ஐயோ! என் முன்பாக அவன் நிற்கி
றாற்போல் தோன்றுகிறதே—கீழே (விழுகிறான்)

இமொஜன்:— (தனக்குள் சொல்லுகிறாள்) அடா துரோகி! நீ என்னகாரியம் செய்தாய்,
என் நாதனை கெடுத்துவிட்டாயே! நான் இவரை எப்பொழுது காணப்
போகிறேன்? நாதா! என்னை ஏனென்று கேட்கமாட்டாயா! என்ன
செய்வேன்? என்று மனங்கலங்கிக்கொண்டு நின்றாள்.

பாஸ்துமஸ்:— [அதிக வீராவேசத்துடன் இயாக்கிமோவுக்கு முன்வந்து சொல்லுகி
றான்). நல்லது, இட்டாலியா தேசத்துப்பிசாசே! நீ இவ்விதமாசெய்தாய்!



என்னை ஒரு நொடிப்பொழுதில் ஏமாற்றிவிட்டனையே. நல்லது, நான்
சொன்னவற்றை எளிதில் நம்பக்கூடிய ஒரு பெரிய முட்டாளாய்விட்
டேன். என்னைப்போல் வேறே யாராவது துரோகியும், கொலையாளியு
மிருக்கிறார்களா? துரோகிகளுக் குண்டான குணமுழுவதும் என்
னிடத்தில் தங்கியிருக்கின்றன. ஏ, நியாயதிபதி! ஒரு துண்டுகயிற்
றையாவது, வாளையாவது அல்லது விஷத்தையாவது என்னிடத்தல்
தரவேணும்; என்னுயிரை இப்போதே விட்டுவிடுகிறேன். ஏன் தாமதிக்
கிறீர்கள்? இவ்விதமான பாவங்களைச்செய்ய என் மனம் எவ்விதம்
துணிந்ததோ! ஸிம்பலீன் என்னைக் கண்டதுண்டமாய் வெட்ட
கைதேர்ந்த சித்திரவதைக் காரர்களைக் கூப்பிடுங்கள். ஒரு க்ஷணப்
பொழுதாவது என்னுயிரை இவ்வுலகத்தில் வைத்திருக்க என்மன
மிசையாது. இக்குணங்களை யுடைத்தாயிருக்கிற நானு உலகத்திலுள்ள
பாவங்களை நிவிர்த்தி செய்யப்போகிறேன். சபையோர்களே! ஏன் வீணு
கத் தாமதிக்கிறீர்கள்? சித்திரவதைக்காரர்களைக் கூப்பட்டு சீக்கிரம்
என்னைக் கண்டதுண்டமாக வெட்டச் சொல்லுங்கள். உன்னுடைய
புத்திரியாகிய இமொஜனைக்கொன்ற மகாபாவி நான்தான். நான் இன்
னாரென்று உங்களுக்குத் தெரியவில்லையா? மகாதுரோகியாகிய பாஸ்து
மஸ் நான்தான்; அவளை என் கையால் கொல்லவில்லை. ஐயோ!
இமொஜனை எங்களுடைய விசுவாசமுள்ள வேலைக்காரனாகிய பிஸானி
யோவைக் கொண்டு வெட்டச்சொன்னேன். தருமத்தின் அவாதார
மாயிருந்தனளே; அல்ல, தருமமாகவே யிருந்தாள். அவளுயிரை வாங்க
எவ்விதம் என் மனந்துணிந்தது? ஏன் சும்மாவிருக்கிறீர்கள். என்பே
ரில் எச்சிலைத்துப்புங்கள், கல்லைவிட்டெறியுங்கள், என்னைக்கத்திகளால்
வெட்டுங்கள்; என்பேரில் எறியக்கூடாத கத்தியை என்பேரில் போடு
ங்கள்; வேட்டைநாய்களை விட்டு என்னைக் கடிக்கச்சொல்லுங்கள். என்
பேரில் ஒருவராவது இரங்கி நான் சொல்வதைச் செய்யமாட்டீர்களா?
என்னசெய்வேன்! நான் கொடியபாவியாய் விட்டேன். இனியாயினும்
வொருவரும் பாஸ்துமஸ் லியோநாட்டஸ் துரோகியென்று கூப்ப
டுங்கள். ஐயோ! நான் என்னகாரியம் செய்தேன்! நான்துரோகத்தைப்பா
ர்க்கிலும் அதிகக் கொரேமாயிருக்கிறேனே. ஏ, இமொஜன்! உன்னை
நினைக்கிறபோது என்வயிறு கொதிக்கிறதே, உனக்குச் செய்த அனியா
யத்துக்கு எவ்விதமான பரிகாரம் செய்யப்போகிறேன்? இமோஜன்
என்னை மன்னிக்கவேணும். உன்னை மோக்ஷலோகத்துக்கு அனுப்பின
மகாபாவிஇன்னும்உயிருடனிருக்கிறேன்; ஏ இமொஜன்! என்கண்ணே!
என்னுயிரே! என் பிராணநாயகி! நான் என்னசெய்வேன்? உன்னை
இவ்விதம் கொலைசெய்தேனே. என்னுடம்பு நடுங்குகின்றதே, உன்
னைப் பரலோகத்திலாவது காண்பேனோ? ஏ, இமொஜன்! இமொஜன்!!
இமொஜன்!!! என்று மனங்கலங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது,

இமொஜன்:— என்பிராணநாதா! மனதில் சஞ்சலப்படவேண்டாம். நான் இதோ
இருக்கிறேன்; நான் சொல்வதைக் கேட்கவேணும்.

பாஸ்துமஸ்:— (இமொஜன் என்பதை இன்னும் அறியாதவன்) இச்சமயத்தில்தானு நீ
என்னுடன் விளையாடுகிறாய். வெறுக்கத்தக்க துஷ்டப்பயலே! என்னை

இக்கோலமாக்கிவிட்டாய், உன் வேலையைப் பார்த்துக்கொண்டு சும்மா விரு (அவளை ஒரு அடி அடிக்க, இமொஜன் கீழே மூர்ச்சையிற்று விழுந்தான்).

**பிஸானியோ:**- பிரபுக்களே! அவளைக்கைகொடுத்துத் தூக்குங்கள். இவள் என்னுடைய எஜமானியாகிய இமொஜன்: ஏ! பாஸ்துமஸ்! இதுவரையில் நான் இமொஜனைக் கொல்லவில்லை. என் கண்ணியமுள்ள எஜமானியை எடுத்து மூர்ச்சை தெளிவிக்கவேணும்.

**ஸிம்பலீன்:**— இதென்ன விந்தையாயிருக்கின்றது! உலகந்தான் சுற்றிக்கொண்டிருக்கிறதோ, அல்லது தன்னைத்தான் மறந்துவிட்டதோ. நான் காணுகிறதெல்லாம் அதிக அதிசயமா யிருக்கின்றது.

**பாஸ்து:**— இது என்ன! எனக்குச் சித்தப்பிரமை எங்கே யிருந்து வந்தது? நான் கனவுதான் காணுகிறேனோ.

**பிஸானி:**— அம்மா! தயவுசெய்து, கண்களைத் திறந்துபார்.

**ஸிம்பலீன்**— இங்கே நடக்கிறதெல்லாம் உண்மையானால், நான் சந்தோஷசாகரத்தில் மூழ்கி என்னுயிர் போய்விடும் போல தோன்றுகிறது.

(இன்னும் வரும்.)

வி. கோபால ஐயங்கார். பி. ஏ.,

---

# NEWS & NOTES.

## சமாசாரக் குறிப்பு.

அதிசய வித்தை:—ஒரு மணிக்கு பதினாயிரம் வார்த்தை தந்தி மூலியமாய் பேசக் கண்டுபிடித்து நடந்துவருகிறதாம்.

---

பெருத்த பனிக்கட்டி:—அன்டார்டிக் சமுத்திரத்தில் 20-மயில் அகலமும் 40-மயில் நீளமும் 400-அடி உயரமுமுள்ள பனிக்கட்டியை கப்பலாளிகள் கண்டனராம்.

---

பொன்கம்பி:—உலகத்தை ஓரே சுண்டாகச் சுற்றி வளைக்கும்படியான கம்பிக்கு பொன்முலாம் கொடுக்க வேண்டுமானால் அதற்கு பதினாறு அவுன்ஸ் நிறையுள்ள பொன் பிடிக்குமாம்.

---

வளையும் கல்:—சென்னை டைம்ஸ் பத்திரிகைக்கு திண்டுக்கல்லிலிருந்து எழுதும் ஒருவர் திண்டுக்கல் மலைக்கோட்டையில் வளைக்கும்படி பதமாயிருக்கும் கல்லொன்றைப் பார்த்து வந்ததாகத் தெரிவித்திருக்கிறார்.

---

பிச்சைக்காரனிடமிருந்த பொருள்:—பாரிஸ் நகரத்தில் ஒரு பிச்சைக்காரன் இறந்துபோனான். அவன் படுக்கையின் கிழிந்த பாயிக்கு கீழ் பொன் சவரன்களும் நோட்டுமாகச் சேர்ந்து 8,000 பவுனுக்கு இருந்ததாம்.



பெருத்த கல்லறை:—உலகத்திலுள்ள எல்லா கல்லறைகளைக் காட்டிலும் சீபாஸ் நாட்டின் பைரமிட் கல்லறை மிகப் பெரியதாம். இது 416-அடி உயரமும் 36-ஏக்கர் நிலத்தில் ஏகாண்டமாகக் கட்டப்பட்டிருக்கின்றதாம்.

---

மோடர்வண்டி:—குதிரை நீராவி முதலியவைகளின் சகாயமில்லாமல் தானாகவே ஓடும் மோடார் வண்டிகள் என்று சொல்லப்படுவனவைகள் முதல் முதல் பாரிஸ் நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

---

ஓர் தைரியமுள்ள ஸ்திரீ:—மத்திய மகாணத்து பிரதான கமிஷனரான கனம் மிஸ்டர் ப்ரேசர் துரையவர்களின் மனைவி சென்றவாரம் வேட்டைக்குத் தனியாகப் போய் ஓர் பெருத்த புலியைச் சுட்டுக் கொன்றனளாம்.

---

மாதர் பட்டதாரிகள்:—இவ்வருஷம் சர்வகலாசாலை உயர்தரப் பட்டங்களை மூன்று மாதர்கள் பெற்றார்கள். மிஸ் கிருஷ்ணம்மாளும், மிஸ் காரியப்பெட்டும் (Carriapett) M. A. பட்டம் பெற்றார்கள். மிஸஸ். சீனிவாஸா L. T. பட்டம் பெற்றாள்.

---

பிரவேசப் பரிட்சை:—சென்னைச் சர்வகலாசாலையில் சென்ற டிசம்பர்மாதம் நடத்திய பிரவேசப்பரீட்சையில் இவ்வருஷம் வடக்கு மலையாளத்தைச் சேர்ந்த ஒரு பெண்பிள்ளை தேறியிருக்கிறாள். அவள் தீயர்சாதியைச் சேர்ந்தவள். அவளுக்கு நாராயணி என்று பெயர்.

---

காஞ்சீபுரம் ஹிந்துப் பெண்பிள்ளைப் பாடசாலை:—காஞ்சீபுரத்தில் ஹிந்துப் பெண்பிள்ளைப் பாடசாலை நடக்கும் தருமத்தை ஆறுகாட்டு நாராயணசாமி முதலியார் கட்டிக்கொண்டிருக்கிறார். அப் பாடசாலையில் சங்கீதப்படிப்பும் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்களாம்.

---

சென்றவருஷத்து இந்திய (ஸென்ஸஸ்) ஜனத்தொகை:—இக்கணக்கு பூர்த்தியாய் ஆண்பாலர் 14-கோடியே 99-லக்ஷத்து 53-ஆயிரத்து 765-உம், பெண்பாலார் 14-கோடியே 44-லக்ஷத்து 8-ஆயிரத்து 911-உமாக மொத்தம் 29-கோடியே 43-லக்ஷத்து 62-ஆயிரத்து 676 என நிகரமாய்க் குறிக்கப்பட்டிருக்கிறது.

---

பட்டாபிஷேக கீர்த்தி முத்திரை:—மாட்சிமைத் தங்கிய நமது சக்கிரவர்த்தியவர்களின் மகுடாபிஷேக சமயத்தில் இங்கிலாண்டு வாசிகளனைவரும் ஒன்றுகூடி ஓர் கீர்த்தி முத்திரை (Medal) யைப் பரிசளிக்கப் போகின்றனராம். இம்முத்திரை அதிக சித்திர விசித்திரவேலைப் பாடுகளினாலும், எட்டாவது ஹென்றியவர் பட்டத்திற்குவந்த சமயத்தில் செய்யப்பட்டிருந்ததைப் போலவும் செய்யப்படுமாம்.

---

ஒரு நிமிஷத்தில் சூரியனுடைய வேலை:—சூரியன் உலகத்தில் உதயமானது முதல் அஸ்தமிக்கிறதற்குள்ளாக நிமிஷம் ஒன்றுக்கு 37,000,000,000-டன் நிறையுள்ள ஜலம் நீராவி ரூபமாகக் கவிரப்படுகிறது. இந்த வெப்பம் ஒரு விநாடிக்குள் 200-மையில் நிகளம் 200-மையில் அகலம் 200-மையில் உயரமுள்ள சீமைக்கரியை (Coal) ஏககாலத்தில் கொளுத்திவிட்டால் எவ்வளவு வெப்பத்தை யுண்டாக்குமோ அவ்வளவிற்கும் சமானமானதாம்.

---

விலை மதிக்கப்படாத முத்து:—ஆஸ்டிரேலியா தீவுகள் ஒன்றில் முத்து வியாபாரி ஒருவனிடம் இவ்வளவு அவ்வளவு என்று விலைமதிப்பதற்கே முடியாத முத்தொன்று

வந்து சிக்கியிருக்கிறதாம். அந்த முத்து லண்டனுக் கனுப்பப்பட்டால் சக்கிரவர்த்தி முடிசூட்டுக்காலத்துக்கு ஏற்ற ஆபரணங்களில் ஒன்றாகுமென்று சொல்லிக்கொள்ளப் படுகிறது. அந்த முத்து 9000-பவுன் முதல் 15,000 பவுன்வரை விலைபெறும் என்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

---

மஞ்சள் நதி:—இது சீனாவிலிருக்கிறது. இதற்கு "சீனாவின் சஞ்சலம்" என்று மறு பெயர். இதிலடிக்கடி வெள்ளப் பிரவாக முண்டாவது வழக்கமாம். இது காறும் 22 தடவை தன்வழி மாறி பாய்ந் தோடியபடி 100 வருடத்துக்கு முன் விழுந்த முகத்து வாரத்துக்குந் தற்காலம் விழு முகத்துவாரத்துக்கும் 600 மைலுக் கதிகமா யிருப்பதாக வும் வெள்ளப்பிரவாக முண்டாகும் ஒவ்வொரு தடவையும் ஒரு கோடியே 10 இலட்சம்பேர் சேதமாகி யிருப்பதாகவும் தெரிகிறது.

---

ஸிலோனில் விக்டோரியா ஞாபகச் சின்னம்:—பம்பாயில் லார்டு நார்த் கோட்டின் பிரேரேபணையை யனுசரித்து எப்படி விக்டோரியா ஞாபகச் சின்னமாகக் குருடர்களுக்கு பள்ளிக்கூடம் வைக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதோ அதே மாதிரி சிலோனிலும் விக்டோரியா ஞாபகச் சின்னமாகக் கண் தெரியாதவர்களுக்குப் பள்ளிக்கூடம் வைக்கப்படலாமென்று ஸிலோன் கவர்னரின் மனைவியாராகிய லேடி ரீட்ஜ்வே அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள்.

---

அற்புத வண்டி:—பெல்ஜியம் தேசத்து அரசர் சுமார் 10,000 பவுன் செலவு செய்து தானாகவே செல்லும்படியான மோடார்கார் (நீராவியந்திரச் சகாயமில்லாததும் ரப்பர் சூத்திரத்தினால் செய்யப்பட்டதும்) என்றதை தயார் செய்திருக்கின்றனராம்; அதில் யாராகிலும் வந்தால் பகிரங்கமாக பேட்டி கொடுப்பதற்கு வேண்டிய பக்குவங்களுடன் கூடிய ஒரு அறையும் சையாக்கிருகம் ஒன்றும் உடை தரித்துக்கொள்ளும் அறையும், ஸ்னானபானாதிகளுக்கு ஓர் அறையும், வேலைக்காரர்களிருக்க ஓர் அறையும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதாம்.

---

லண்டனிலுள்ள வெளியூரார் மொத்தம் 135-ஆயிரம் பேருள், ருஷியர் மாத்திரம் 38-ஆயிரம் பேர். தற்கால ஜகதாம்புஜமாகிய லண்டன்நகரத்தாருள் மதபோதகர் 5,000; வைத்தியர்கள் 5,000; லாயர்கள் 6,000; லாகிளர்க்குகள் 9,570; உபாத்தியாயர்கள் 8,000; உபாத்திச்சிமார் 20,000; பத்திராசிரியர்களும் நூலாசிரியர்களும் 4,000; நாடகக்காரர்கள் 2,234; நாடகக் காரிகள் 29,000; பிரயாண வியாபாரிகள் 16,000; இஞ்சின் டிரைவர்களும் கார்டுகளும் 7,600; ஜட்காக்காரர்கள் 76,000; டிராம் டிரைவர்களும் கண்டக்டர்களும் 3,700; தாதிப்பெண்கள் 7,600.

---

மகுடாபிஷேகத்திற்குப் போகும் இந்திய மன்னர்கள்:—லண்டன் நகரத்தில் நடக்கப்போகும் மகுடாபிஷேக மகோற்சவத்திற்காக குவாலியர் மகாராஜாவும், கொல்ஹாபூர் மகாராஜாவும், ஜெயபூர் ராஜாவும், ஐடார் ஆண்டி பாவல்பூர் மகாராஜாக்களும், ஹிஸ் ஹைனஸ் ஸர் நிருபேந்திர நாராயணப்ப பகதூர், குச்பிகார மகாராஜா அவர்களும் லண்டன் நகரத்திற்குப் போகின்றனர்; இவர்களில் குச்பிகார் மகாராஜா சக்கிரவர்த்தி அவர்களின் மெய்காப்புத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். சென்னையிலிருந்து ராஜா சர் சவலை இரமசுவாமி முதலியாரவர்களும் போபிலி மகாராஜா அவர்களும் போவார்கள்.



## லண்டன் கவுண்டி.

சென்ற 1801 ஆம் வருஷம் $9\frac{1}{3}$ லக்ஷமாயிருந்த ஜனத்தொகை சென்ற வருஷத்தில் $45\frac{1}{3}$ லக்ஷமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. சென்ற 10-வருஷ காலத்தில் 3-லக்ஷம் ஜனம் விருத்தியெனவும் மரணத்துக்கு மேற்பட 5-லக்ஷம் ஜனனமாகிய தெனவும், சுமார் 2-லக்ஷம்பேர் வலசை போனார்களெனவும் ஏற்படுகிறது. லண்டனில் ஆண்பாலாரைப்பார்க்கிலும் பெண்பாலாரில் $2\frac{1}{2}$-லக்ஷம் பேர் அதிகமா யிருக்கிறார்கள். விவாகமாகாத ஆண்மக்கள் 10-லக்ஷம் பேரும், பெண்மக்கள் 14-லக்ஷம் பேரும் இருப்பதோடு புருஷரை யிழந்த ஸ்திரீகள் 2-லக்ஷம் பேர்.

---

பாங்குவெடிங் ஹால் ஸங்கீத ஸாஹித்யக் கச்சேரி:—இம்மாதத்தில் நடந்த ஸங்கீத நிபுணியாகிய மிஸ் வான்கேஸல் கேட்கக் கேட்கத் தெவிட்டாத இனிய கீதரசம் பெருகத் தனிப் பிடிலில் இரட்டொலியைக் காட்டிக் கல்லுங் கசிந்துருகும்படி யிசைக்கச் சபையார் அற்புதம் அற்புதமென வியந்து பெருங் கரகோஷம் செய்தனராம். ஸாஹித்ய வித்வமணியாகிய மிஸஸ் விண்டர்பாதத்தின் ஸ்ரீ கண்டசுகமும் அவ்வாறே மெச்சப்பட்டது. மிஸ் டிரெர்ஜெரியோ பையானோக் கருவி யிசைத்தவாறும், மிஸ்டர் கிங் பாட்டிசைத்தவாறும் தேன்மாரி பொழிந்ததுபோ லிருந்தன. இக்கச்சேரித் தலைவியாக விளங்கினவர் கர்னல் வான்கேஸலின் செல்வமகள்.

---

டில்லியில் பட்டாபிஷேக மகோற்சவம்:—மாட்சிமைத்தங்கிய நமது எட்வர்ட் மகாராஜா அவர்கள் பட்டாபிஷேக மஹோற்சவக் கொண்டாட்டம் வருகிற ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும். இக்கொண்டாட்டம் மகோற்சவத்திற் பட்டதாரிகளான சுமார் 80 இந்திய அரசர்களும், சென்னை பம்பாய் வங்காள கவர்னர்களும், ஆங்காங்கு கவர்ன்மெண்டாரில் நியமிக்கப்பட்டுள்ள ஏஜெண்டுகளும், கென்னாட்கோமகனும் வந்து சேர்வார்களாம். இவர்கள் தங்குவதற்காகச் சகலவிதமான ஏற்பாடுகளும் இப்பொழுது முதல்கொண்டே ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றனவாம். நமது ராஜப்பிரதிநிதியவர்கள், சுமார் 15 தினங்களுக்கு முன்னதாகவே அங்கு சென்று, சகல அதிகாரத்தையும் தம்முடைய கைவசத்தின் கீழ் வைத்துக்கொண்டு பட்டாபிஷேக மகோற்சவ வைபவத்தை வெகு விமரிசையாக நடத்தப்போகின்றனராம். டில்லி நகரத்தைச் சுற்றி சுமார் 5 மயில் விஸ்தீரணத்திற்கு ஆங்காங்கு சிருங்காரச்சோலைகளும், அழகிய கூடாரங்களும், வெகு பக்குவமாக நியமிக்கப்படும். ராஜாக்களும் பெருத்த உத்தியோகஸ்தரும் இந்த கூடாரங்களிலும் பங்களாக்களிலும் தங்குவதற்கு சகலமும் ஆயத்தம் செய்யப்படும். அம்மகோற்சவ சமயத்தில் தெருக்கள்தோறும் இருப்புப் பாதைகளும் நீராவி வண்டிகளும் ஓடும். மூலைக்குமூலை, கூடாரத்திற்குக் கூடாரம், தந்தி, டெலிபோன் கம்பிகளும், போலீஸ் பந்தோபஸ்துகளும், சரிவர யேற்பாடு செய்யப்படும். இந்த உற்சவக்கொண்டாட்டம் சுமார் 15 நாட்களுக்குக் குறையாமல் நடத்தப்படும். இதற்கு அந்த நகரத்து ஜனங்கள் தங்கள் தங்கள் வீடுகளை வாடகைக்கு விடுகின்றனர். இதற்குமுன் வாடகைக்கு இருந்தவர்களுக்கு வீட்டுச் சொந்தக்காரர்கள் நோட்டீஸ் கொடுத்து காலிசெய்ய எச்சரிக்கைக் கொடுத்திருக்கின்றனராம். டில்லி நகரத்தில், ஓர் பெருத்த பங்களா 50 ஆயிரம் ரூபாய்க்கு ஓர் மகாராஜாவினால் வாடகைக்கு இப்பொழுதே வாங்கப்பட்டிருக்கின்றதாம்.

---

## கவர்னர் விருந்து.

மார்ச்சுமீ 22உ நமது லார்ட் ஆண்டில் இட்டுக் களித்த இவ்விருந்துக்கு வந்திருந்த சிறுவர் 9,000-பேர். இவர்கள் பயிலும் பாடசாலைகளின் தொகை 214. அடையாறு,

பிரம்பூர், சேத்துப்பட்டு, கிண்டி முதலிய தூரமான இடங்களிலிருந்தும் சிறுவர்கள் வந்தார்கள். 1876-ஆம் வருஷம் இப்போது மஹாராஜ சக்கிரவர்த்தியாய் அப்போது வேல்ஸின் வரசரா யிருந்த எட்வர்டு மன்னர் விஜயம்செய்தகாலையில், பள்ளிக்கூடச் சிறுவர் கூட்டமொன்று சேர்க்கப்பட்டது. அதற்கு முன்னாவது பின்னாவது இம்மாதிரிச் சிறுவர் பெருங் கூட்டஞ் சேர்ந்ததாக ஏற்படவில்லை. 1876-ஆம் வருஷத்திய கூட்டத்திலுங் கூட விருந்திட்டது கிடையாது. ஆகவே, இது நமது கவர்னரவர்களின் புதினங்களி லொன்றாகும். பாடசாலைகளிலுள்ள சிறுவர்களுள் ஹெட்மாஸ்டர்களைக் கொண்டு, 7-க்குமேல் 12-க்குட்பட்ட வயதுப் பிள்ளைகளைமாத்திரம் பொறுக்கியெடுத்து, 25-பேருக்கு ஒரு வகுப்பாகக்கொண்டு, ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு உபாத்தியாயரைத் தலைவராக நியமித்து கவர்ன்மெண்டவுசுக்குக் கொண்டுவந்து, பாடசாலை பெயர்களைக் கொடிகளில் தீட்டி, அந்தந்தப் பாடசாலைக் கொடியின் கீழ் அந்தந்தச் சிறுவரை வெயிலில் நிறுத்திவைக்கலாயிற்று. பகல் $2\frac{1}{2}$-மணிக்கு ஒவ்வொரு சிறுவன் கையிலும் ஒவ்வொரு மிட்டாய் பழம் வைத்துக் கட்டிய பொட்டலந் தரப்பட்டது. இச் சிறுவர் கொண்டாட்டத்தைக் கவனித்துக் களிக்க லார்ட் ஆண்டில் தமது லேடி சகிதமாய் இடையிடையே சிறுவர் அணிகளுக்குள் நுழைந்து பார்த்துவந்தபோ தெழுந்த சிறுவர் கொண்டாட்டக் கூச்சலும் வந்தனோபசார ஓசையும் நம் சென்னைத் தலைவர்களுக்கு வெகு சந்தோஷத்தை விளைத்தன. கூடியிருந்த சிறுவர்களுள் சிறுவர்களுக்காக அஹஸ்யங்கள், நொடிப்புகள், ராட்டினச் சுற்றுகள் இவை செய்துவைக்கப்பட்டன. அப்பால் வேடிக்கைத்தாவைச் சுற்றிலும் சிறுவர் நின்று கண்டுகளிக்கும்படி பாடிகார்டு சங்கீத சகிதச்சவாரி யாட்டங் காண்பிக்கப்பட்டது. இதற்குள்ளாகப் பொழுது சாயுங்காலமாய், சிறுவர்க ளெல்லாரும் நமது கவர்னரவர்களிருந்த வழியே வரிசையாக விடைபெற்றுப் போனபோது மறுபடியும் ஒவ்வொருவருக்கும் பிஸ்கூத் வைத்துக் கட்டிய ஒவ்வொரு பொட்லம் தரப்பட்டது. மெஸஸ் வீல் அன்டு கிளீன் வகை மிஸ்டர் பார்க்கு இக்கொண்டாட்டக் காட்சியின் தக்ஷணப் புகையுருவப் படங்களைத் தயாரித்தார்.

---

## சென்னை வீல் அண்டு கிளீன் கம்பெனியார் பிரசுரித்த சென்னையிலுள்ள 24 காட்சிகள்.

இது நமக்கு மேற்கூறிய கம்பெனியாரால் அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் சென்னைத் துறைமுகம், பிரவிடென்சி போஸ்ட் ஆபீஸ், சென்னை பீச், பேரி கம்பனியிலிருந்து எஸ்பளனேட் ரோடிலுள்ள காட்சிகள், செண்ட் ஜார்ஜு கோட்டையின் அற்புதகாட்சி, விசித்திர கட்டிடமாகிய ஐகோர்ட், மதிராஸ் சென்டிரல் ஸ்டேஷன் (சென்னை இருப்புப்பாதை) விக்டோரியாஆல், கவர்ன்மெண்டு மாளிகை, செனட் அவுஸ், சேபாக்கம் அரமனை, மதிராஸ்கிளப், சென்னை சமுத்திரக்கரை, சென்னை ஜிம்கானா, அடையார் மாதர்கள் சங்கம், கூவம் நதி, மியூஜியம், கானிமாரா புஸ்தகசாலை, பரங்கிமலை முதலிய அற்புதகாட்சிகளும் சென்னை மவுண்ட்ரோடிலுள்ள பற்பல வியாபார கம்பெனிகளின் கட்டிடங்களும் வெகு அழகாக அச்சடித்து பைண்ட் செய்யப்பட்டிருக்கிறது. இவைகளின் மொத்தம் 24. விலையோ ஒன்றரை ரூபாய், சென்னையிலுள்ள கட்டிடங்களைப்பார்த்திராதவர்கள் இதை அவசியம் விலைக்குப் பெற்றுபார்த்து களி கூறலாம். இவைகள் வீல் அண்டு கிளீன் கம்பெனியாரிடத்திலும் நமது ஆபீசிலும் விலைக்கு கிடைக்கும்.

---



239

# RIPON TAMIL POCKET ALMANAC.

## * சுபகிருது வருஷத்திய ரிப்பன் மணிமினிட் தமிழ் பாக்கெட் பஞ்சாங்கம்.

இதில் வழக்கம்போலில்லாமல் ஸ்பெஷலாய் வீல் அண்டு கிளீன் கம்பெனியாரால் செய்யப்பட்ட வெகு நேர்த்தியான லார்ட் ரிப்பன் உருவப்படமும், ஒவ்வொரு தினத்திற்கும் முழுப்பக்கமும், இன்னும் வேண்டிய சகல சமாச்சாரங்களும் திதி, நக்ஷத்திரம், முதலியவைகள் சரியாய் கணிக்கப்பட்டு மிருக்கின்றன. இது மேலும் சென்றவருடத்திய பஞ்சாங்கத்தைப் பார்க்கிலும் இருமடங்கு பெரியதாயு மிருக்கிறது.

* இதன் விலை அணா 6. தபால் சார்ஜ் அணா 1. ஷை பென்சலுடன் பைவைத்தது அணா 10.

வேண்டுவோர் ரிப்பின்பிரஸ் சொந்தக்காரருக்கு எழுதிக்கொள்ள வேண்டும்.

# POSTAL NOTICE.

## தபால் விளம்பரம்.

---

"1902-ஞு எப்பிரல்மீ 1உயிலும் அதற்குப்பின் தேதிகளிலும் 5-ரூபாய்க்கு மேற்படாமல் செய்யப்படும் (உள்நாட்டு) மணியார்டர்களுக்கு, கமிஷன் 2-அணாவிற்கு பதிலாக, ஒரு அணா வாங்கப்படும். 5-ரூபாய்க்கு மேற்பட்டிருக்கிற தொகைகளடங்கிய மணியார்டர்களின் கமிஷன் இப்பொழுது வழக்கப்பிரகாரம் வாங்கப்படுகிற தொகைதான்.

2. மேற்கூறிய அல்லது அதற்கு பிந்திய தேதிகள்முதல் 5-ரூபாய்க்கு மேற்படாமல் குறிக்கப்பட்டிருக்கிற தொகைகளையுடைய வாலியுபேயபில் உருபடிகளின் சார்ஜ் 2-அணாவுக்கு பதிலாக ஒரு அணாவாக குறைக்கப்பட்டிருக்கிறது. வசூல்செய்யப்படும் தொகை 5-ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் வழக்கப்பிரகாரம் இப்பொழுது வாங்கப்படுகிற பிரகாரம் சார்ஜ் செய்யப்படும்."

இவ்விதம் மிஸ்டர் ஏ. யூ. பான்ஷா அவர்கள் இந்திய ஜனங்களுக்கு சகாயம் செய்தது மிக நலமேயாம்.

# ஸ்ரீ பக்தலீலாம்ருதவசனம்.

இப்பெயருள்ள (புண்டலீகர், ஜயதேவர், துளசிதாசர், நாமதேவர் முதலிய) 82-பக்தர்களின் சரிதங்களடங்கிய ஒருபுத்தகம் சுலபமான தமிழ் வசனநடையில் எழுதப்பட்டிருக்கின்றது.

இதன் விலை ரூபா 3-0-0. வி. பீ. போஸ்டில் ரூபா 3-6-0. மேற்படிக் 4-0-0 ரூபா.

வேதவியாஸ முநிவரருளிய பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய
ஸ்ரீ சைவபுராணமென்னும்

# ஸ்ரீ சிவமஹா புராணம்.

விலை ரூபா 5.

(தமிழ் வசனம் 48 படங்களுடையது.)

இந்நூல் தமிழ் கற்றோர்க் குபயோகமாகும்படி சமஸ்கிருதபாஷையிலிருந்து எளிய தமிழ் வசனநடையில் மொழிபெயர்க்கப்பட்டது. இதில்,

78 அத்தியாயங்கள் கொண்ட ஞானசம்ஹிதை.
64 அத்தியாயங்கள் கொண்ட தர்மசம்ஹிதை.
13 அத்தியாயங்கள் கொண்ட கைலாயசம்ஹிதை.
57 அத்தியாயங்கள் கொண்ட சநத்குமாரசம்ஹிதை.
60 அத்தியாயங்கள் கொண்ட வாயுசம்ஹிதை.
16 அத்தியாயங்கள் கொண்ட வித்யேஸ்வரசம்ஹிதை.

ஆக 288 அத்தியாயங்கள் கொண்ட ஆறு சம்ஹிதைக ளடங்கியுள்ளன. இப்புத்தகம் ராயல் 8 பேஜ் அளவில் 900 பக்கங்களுக்கு மேலுள்ளது.

# ஸ்ரீ விருத்திப்பிரபாகரம்.

விலை ரூபா 4.

இந்நூலில் ஷட்சாஸ்திர முணர்ந்தவரும் அற்புத பிரஹ்ம நிஷ்டருமாகிய மஹாத்மா ஸ்ரீநிச்சலதாஸரவர்கள் ஜீவர்கள் பேரில் கருணைகூர்ந்து, வியாகரண நியாயவைசேஷிக மீமாம்ஸா வேதாந்த முதலிய பல நூல்களை நுண்ணிய அறிவோடு பலகாலும் பயின் றுணர்தற்கரிய சித்தாந்தங்களை மந்தரும் எளிதிலுணருமாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டியிருக்கின்றனர். இவ்வரிய நூலில் பிரமாணங்கள் ஆறும், அவற்றில் மதவாதிகளின் அபிப்பிராயம் சித்தாந்தகொள்கை முதலியனவும், அத்தியாசலக்ஷணங்களும், அவற்றின் மதபேத சித்தாந்த முதலியனவும், வேதாந்த சித்தாந்தத்தின் பல நூலாசிரியர் அபிப்பிராயமும், அவற்றிற்கு ஒரே அத்விதீயப் பிரஹ்மத்தில் தாற்பரிய முண்மையும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நூலையும் இதற்குமுன் இந்நூலாசிரியரால் செய்யப்பட்ட விசாரசாகரநூலையும் கற்போர், நியாயவைசேஷிக சித்தாந்தங்களையும், சூத்திரம் பாஷியம் அவற்றின் வியாக்கியானங்கள் என்பன முதலாக இற்றைவரையுமுள்ள எல்லா அத்வைத நூல்களையும் நன்குணர்ந்தவராவர்.

இத்தகைய பெருமை பொருந்திய நூல் ஹிந்திபாஷையி லிருத்தல்பற்றி அதனைத் தமிழ்நாட்டாருக்குப் குபயோகமாக்குவான் கருதி விசாரசந்திரோதயம், தர்க்ககௌமுதி, ஹடயோகப்பிரதீபிகை முதலிய நூல்களின் மொழிபெயர்ப்பாசிரியராகிய தஞ்சைமாநகரம் ஸ்ரீமத் வே-துப்புஸ்வாமி ராஜா அவர்கள் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

☞ இப்புத்தகம் வேண்டுவோர் பின் வருமிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்:
ரிப்பன் புஸ்தகசாலை, 273, தம்புசெட்டிவீதி, சென்னை.


*Printed at:—The 'Ripon Press' Madras & Published by C. S. Ramaswamy Aiyar Triplicane, Madras.*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 5-...1902 MADRAS.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

VOL. IV. புத்தகம் ச. | Madras: April 1902. சென்னப்பட்டணம் 1902 ஏப்ரல்மீ | No. 2. இல. உ.

## ஒரு வீட்டில் ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும் அல்லது புருஷனும் பெண்சாதியும்.

முன் இரண்டு வார்த்தைகளுக்கு "புருஷன்" "பெண்சாதி" என்ற அர்த்தம் என்னமாய் வந்தது ஆராய்வோம்,

(1) ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்து தென்தேசத்தில் குடியேறினது
எல்லாருக்கும் தெரியும். தமிழர்கள் அப்போது இந்தியாவின் தெற்கு முனை
யில் இலங்கை தமுலான அயல் தேசங்களில் விரட்டப்பட்டுக் குடியேறினார்கள். அங்கே
யுள்ள சனங்களுக்குள் பிள்ளை என்னும் பட்டப்பெயர்தான் அநேகமாய் வழங்குகிறது.
முதலி, நாயகன், வாண்டையான், தேவன் இவையெல்லாம் திருநெல்வேலிக்கு வடக்
கேதான் வழங்கிவருகின்றன

(2) எப்படி பிராமணர்களுக்குள் ஐயர் (—ஆரியர் என்பதின் திரிபு) என்னும்
பட்டப்பெயர் முதன்மையைக் குறிப்பிட்டு வழங்குகிறதோ, அப்படித் தமிழர்களுக்குள்
இந்தப் பிள்ளை என்னும் பட்டப் பெயர் முதன்மையைக் குறித்து நிற்கிறது.
(3) இப்போது "பிள்ளையென்பது முக்கியமாய் யாதவசாதியார்க்குள்" தென்னிந்
தியாவில் திருநெல்வேலிச் சீமைக்கு வடக்கு தமிழ்நாடுகளில் வழங்கிவருகிறது.

(4) மேலும், பிள்ளை என்றால், பொதுவாய்ச் சந்ததிக்குச் சொல்லப்படும்.
"பிள்ளை பெற்றாள்" 'பிள்ளையுண்டா யிருக்கிறாள்' என்பன அதுக்குத் திருஷ்டாந்த
மாம்; ஆயினும் குழந்தைக்கே பிள்ளை என்று சொல்வதில்லை. தஞ்சாவூர் முதலான
சில ஜில்லாக்களில் அங்காடிக்காரியைப்பார்த்து ஓ! பிள்ளை என்று கூப்பிடுகிறார்கள்.
ஒருவருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தால் 'பெரியபிள்ளை'. 'சின்னபிள்ளை' என்று
சொல்லுகிறோம். ஆகையால் 'பிள்ளை' என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு மரியா
தைச்சொல்லாய் வழங்குகிறது.

(5) இதுவுமல்லாமல், பிள்ளை என்னும் வார்த்தையைத் தமிழிலக்கணத்தார் இடு
குறிப்பெயர் என்பர். ஏனென்றால் அதற்கு பகுதி விகுதி கிடையா.

இத்தியாதி காரணங்களால், இந்தப்பிள்ளை என்னும் வார்த்தை தமிழர்களுக்குள்
மனுஷ சாதிக்குப் பொதுப்பெயராக நின்ற ஒரு பட்டப்பெயராகத் தரிக்கப்பட்டு
வந்திருக்கிறது என்று தெரிகிறது.

பூர்வகாலத்தில் எல்லா மனுஷஜாதிகளைப்போலத் தமிழர்களும் நடை, உடை, பாவனை, ஒன்றும் ஏற்படாமல் காட்டாட்களாய்த் திரிந்துகொண் டிருந்தார்கள், என்பது எல்லாரும் ஏற்றுக்கொண்ட விஷயம். அப்போது கைவலுத்தவனுக்குதான் எல்லாச்சௌக்கியங்களு முண்டு. கை மாண்டவனுக்கு ஒன்றுங்கிடையாது. ஆகையால், ஸ்திரீசாதியார் கைவலுத்தவனுக்கு ஒரு அனுபவப்பொருளாய் இருந்துவந்தார்கள். இப்போதே நம்ம ஜனங்கள் வழக்கத்தில் அவர்களை அடிமைகளாய் நடத்தும்போது, அப்போது அவ்வாறு நடந்ததற்குச் சந்தேகமில்லை.

கைவலுத்தவன் கேவலம் காமக்குரோதங்கள் அதிகரித்துத் தான் ஐம்பொறிகளையும் அனுபவித்தற் பொருட்டு ஏராளமான ஸ்தாபரஜங்கம சொத்துக்கள் தேடிக்கொண்டு வந்து சேர்ப்பான்.

தான் 'பிள்ளை' என்று பட்டப்பேர் வைத்துக்கொண்டு படாடோபம் பண்ணிக்கொண்டிருப்பான். தன்போன்ற உருவம் கொண்டு ஒரு அங்கத்தில் மாத்திரம் வித்தியாசப்பட்டுத், தனக்கு ஐம்புலன்களில் ஒன்று திருப்தியாகும் பொருட்டு அனுபவப் பொருளாய்த், தன்னிடத்தில் இருக்கும் ஒரு பெண்ணை என்னமாய்க் கூப்பிடுவான்? ஆகையால் அந்த பெண்ணைக் கூப்பிட ஒரு அறிகுறி கண்டுபிடிக்கும்படி அவசியமொன்று அவனுக்கு ஏற்படும். அந்த அறிகுறிப் "பெண்பிள்ளை" என்பது தவிர வேறென்னமாய் இருக்கலாம்? அந்த அறிகுறி "பெண்" என்று மாத்திரம் இருந்தாற்போதாதா? "பெண்பிள்ளை" என்று என்ஆதன்பின் 'பிள்ளை' என்பதைச்சேர்த்துச் சொல்லவேண்டுமென்றால்:—தன்னைப்போல, அந்தப்பெண்ணுக்கும் உருவமிருக்கிறபடியால், தன்னைப்போல அவளும் ஒரு பிள்ளையாய்த்தான் இருக்கவேண்டியது; ஆனால், ஒருவிஷயத்தில் தன்னிலும் மாறியிருக்கிறாள்; ஆனபடியால் அம்மாறுபாட்டைக் குறிக்கப் "பெண்ணாகிய பிள்ளை" என்று கூப்பிடவேண்டியிருந்தது. சிலவேளையில் சாரை என்றால் போதாமல் நாம் சாரைப்பாம்பு என்று பாம்பையும் சேர்த்துச்சொல்வது சாரையும் ஒரு பாம்புபோல இருக்கிறபடியால் என்க.

ஆகையால், அந்தக்காலத்தில் ஒரு பிள்ளைப்பட்டம் தரித்தவனுடைய வீட்டில்'பிள்ளை என்று குறிப்பிட்டுச்சொல்ல வேண்டுமானால் அப்படிக் குறிப்பிடுபவர் ஆணோயோ பெண்ணோயோ இருக்கவேண்டும். ஆண்பெண்ணைப் பெண்பிள்ளையென்பான்; பெண் ஆணை 'ஆண்பிள்ளை' என்பாள். அன்றி அக்காலத்தில் ஒரு பிள்ளையினுடைய வீட்டில் வேறொரு பிள்ளைப்பட்டந் தரித்தவன்இருப்பது துர்லபம். ஏனென்றால் அவன் பிள்ளைப்பட்டந்தரிக்கக் கூடியவனாயிருந்தால், இந்தப்பிள்ளைவீட்டில் இருக்கமாட்டான். வேறே ஆண்மகன் இந்தப் பிள்ளைவீட்டில் வேலைவெட்டுக்கு மிருக்கமாட்டான்; ஏனென்றால் அவனும் தனக்கு மெலிந்தவர்களைப் பிடித்துகொண்டுபோய் ஒரு பிள்ளையென்று பட்டங்கட்டிக்கொண்டு அட்டஹாசமா யிருக்க முயலுவான்.

முன்சொன்ன வாக்குவாதத்தையும் சந்தர்ப்பத்தையும் சரியென்றுஒப்புக்கொள்ளும் பட்சத்தில் (1) ஆதியில் தமிழர்கள் காட்டாட்களாய்த் திரிந்து, கலியாணச் சடங்குகள் ஒன்றுமில்லாமல், இருந்தகாலத்தில், ஒரு பிள்ளையின் வீட்டுக்குள்ளிருந்த மனுஷர்கள் 'ஆண்பிள்ளை' 'பெண்பிள்ளை' என்று இரண்டுவிதமாக இருந்திருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது.

(2) அன்றி இவ்விருவருக்கும் சம்பந்தம் காமத்தைப் பொறுத்ததாயிருக்கவேண்டுமென்று மேற்படுகிறது; ஏனென்றால், காட்டாட்களுக்கு ஐம்புலன்களை அனுபவிக்க



வேண்டிய விஷயங்கள் ஈச்சுர சிருஷ்டியிலேயே கிடைத்துப்போகிறது. காட்டாட்
கள் ஒன்றும் புதிதாய் அமைக்கத் தேவையில்லை. பெண்டிர்களைப்பற்றித் தமிழர்களுக்
குள் இந்தமாதிரி இருந்த அபிப்பிராயம் ஆரியர்கள் அவர்கள்நாட்டுக்குவந்து குடியேறின
பிற்பாடும் இருந்ததாகத் தோன்றுகிறது. எப்படி நாம் இப்போது ஆங்கிலேயவார்த்தை
களை நம் வீடுகளிலும் புஸ்தகங்களிலும் உபயோகப்படுத்துவதில் ஒருவர்மேல் ஒருவர்
போட்டி போட்டுக்கொள்ளுகிறோமோ அதே மாதிரி அந்தக் காலத்திலும் ஆண்பிள்
ளைக்குப் பதிலாய் "புருஷன்" என்றும் பெண்பிள்ளைக்குப்பதிலாய் "பெண்சாதி" என்
றும் வடமொழிச் சொற்களைக் கையாளத் தொடங்கினார்கள்.

நாட்டுக்குள் சீர்திருத்தம் அதிகமாய்ப், பெண்பிள்ளையை ஆண்மகனுக்குள்ள சொத்
துக்களில் ஒரு ஜங்கமசொத்தாய் நினைக்காமல், அவர்களுக்கு ஒரு மரியாதையும் அந்
தஸ்தும் ஏற்பட்டபோது, அவளுக்குப் பேரும் மாறிப்போயிற்று. புருஷன் என்பதற்குப்
பதிலாய் அகமுடையவன், கணவன், கொழுநன், மணவாளன் முதலானவார்த்தைகளும்
பெண்சாதிக்குப் பதிலாய், அகமுடையாள், இல்லாள், மனைவி, மனையாள்.
மனையாட்டி, முதலான வார்த்தைகளும் உண்டாயின. இவற்றில் முக்கியமானவை
"அகமுடையான்" "அகமுடையாள்" என்பன. அதாவது "வீட்டையுடையான்" "வீட்
டைஉடையவள்" வீட்டை யுடைத்தாயிருத்தல் என்றால், "இந்த வீட்டில் அவர்களுக்குச்
சுவாதீனமுண்டு; புறத்தியாரைக் கேட்டுக்கேட்டு வீட்டுவேலைகளைப் புறத்தியாரின் சொ
ற்படி நடக்கவேண்டிய கட்டாயப்பட்ட வர்களன்றென்று "என்று அர்த்தம் செய்யலாம்,
அப்படி நாம் இப்போது நம் பெண்சாதிகளை நடத்திக்கொண்டு வருகிறோமே? யாரா
வது 10 பேர் அப்படிச் செய்துவருகிறார்களென்று நாம் நிலைக்கலாமா? "பேர் கங்கா
பவானி குடிக்கத் தண்ணீர் இல்லை" என்றார்போல, பேர் மாத்திரம் "அகமுடையாள்
என்று தம்பாஷையில் பெண்சாதிக்கு பேர்வைத்துக்கொண்டு, தம்வீட்டில் கேவலம்
ஒரு அடிமையைக்காட்டிலும் கேடாய் தம் மனைவியை நடத்துகிறார்கள். அது நியாயமா?
குடித்தனமென்னும் ஒரு வேலைக்கு புருஷன் பெண்சாதி என்பார் ஆயுள்பரியந்திரம்
உழைக்கும் இரண்டு கூட்டுத்தொழிலாளிகள் அல்லவா? அந்தக் கூட்டாளித்தனம் நிஜ
மாய் வழக்கத்தில் நடக்காவிட்டால், நாம் ஒருபெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்
வதில் உபயோகமென்ன? இதற்குப்பதில் "நாம் மணம்புரியும் பெண்களுக்கு அவ்வளவு
சாமார்த்தியமில்லையே! அவ்வளவுக்கு யோக்கியதை இல்லையே! என்று சிலர் சொல்ல
லாம். அந்தச் சாமார்த்தியமும் 'யோக்கியதையும் நம் பெண்களுக்கு யார் சொல்லிக்
கொடுக்கவேண்டும்? தகப்பனார் வீட்டில் ஒரு இந்துப்பெண் ருதுஆய் ருதுசாந்தியாகிற
வரையில்தான் கொஞ்சநாள் இருக்கிறாள். அவள் இல்லறத்துக்கு வேண்டிய துணைவி
யாயிருக்கும், சக்தியை இந்தச் சொற்பகாலத்தில் தகப்பன் வீட்டில் கற்றுக்கொள்வது
அசாத்தியம். ஆகையால் அவள் "அகமுடையான்" வீட்டில்தான் கற்றுக்கொள்ளவேண்
டும். "வீட்டுக்குப் பெரியவளாய் மாமியார் இருக்கும்போது, மனைவி என்னமாய் அந்
தப்பெருமையைக் கைக்கொள்ளலாம்" என்றால், அப்படியன்று; மனைவிக்குச் சாமர்த்
தியமும் யோக்கியதையும் இராதென்றுதான் அவர்கள் அப்படித்தாமே வீட்டுவேலை
பார்த்துவருகிறார்கள். மருமகளுக்குச் சாமார்த்தியமும், யோக்கியதையு மிருப்பதோடு
கூடப் பொறுப்பும் அக்கறையும், இருக்கவேண்டும். சிலபெண்கள் தம் கணவன் சம்பா
தித்து வீட்டில் கொண்டுவந்துபோடும் சாமான்களை அக்கறையாய்க் கரிசனத்துடன் சாவ
தானப்படுத்துகிறதில்லை. நாம் அந்தமாதிரிப் பெண்களை நேரிடப் பார்த்திருக்கிறோம்.
கணவன் சிரத்தையெடுத்துக்கொண்டு தன் சிறுமனைவிக்கு அக்கறையையும் பொறுப்
பையும் சொல்லிக்கொடுத்தால் தன் மனைவியான ஒரு சிறுபெண் கற்றுக்கொள்ளாமல்

போவாளா? கணவன் அச்சிறிய பெண்ணுக்குக் கற்றுக்கொடுக்கும் விதத்தினால்தான் அவளுக்கு அக்கரையும் பொறுப்பும் வரவேண்டும். அந்த விதமானது தன்வீட்டின் சந்தர்ப்பத்தை ஒட்டியிருக்கவேண்டும். அப்பெண்ணுக்கு அக்கரையும் பொறுப்பும் வந்தால் சாமர்த்தியமும் யோக்கியதையும் கூடவே வந்துநிற்கும். இந்த நான்கு குணங்களும் வந்துவிட்டால் அவள் நல்ல "அகமுடையாளா" யிருப்பதில் சந்தேகமில்லை.

"அப்படிப்பட்ட அகமுடையவளுக்குத் தன் வீட்டுக்குவேண்டியது இன்னது, வேண்டாதது, இன்னதென்று நன்றாய் தெரியும். கடையில் சாமான்கள் வாங்குவதும் பத்திரப்படுத்துவதும் அவளுக்குத்தான் தெரியும். செட்டுங்கட்டு மாய்க்குடித்தனம் பண்ணுவதற்கு அவளைவிட்டால் குடித்தனத்தில் வேறொருவருமில்லை. துணிகள் வாங்குவதும், உடைகள் தைப்பதும் பெண்களின் இஷ்டப்படி விட்டுவிடவேண்டும். ஒருவீட்டில் பெண்டாட்டியும் குழந்தைகளும் திருப்தியடைந்திருந்தால், புருஷன் வெளியில் இருந்து வந்தவுடன் தன் சிரமத்தைச் சந்தோஷமாய்க் குதூகலத்தில் பரிகாரம் பண்ணிக்கொள்வான். இப்படி வீட்டில் சந்துஷ்டி யிருக்கும்பட்சத்தில், அநேகவிதமான வியாதிகளும் நஷ்டங்களும் தடைபட்டுவராமலே நின்றுபோம்:

புருஷனானவன் நீர், நிலம், குடிவாக்கு, தோட்டம், துறவுமுதலான விஷயமாய்ச்சரியாய்ச் செலவிடுவான் என்பதில் சந்தேகமில்லை; வீட்டுச் செலவு விஷயத்தில் புருஷன் தலையிட்டால், புருஷன் பெண்சாதி யிருவருக்கும் சுகமில்லை.

ஆகையால் புருஷன்தேடும் பணத்தை இருவரும் முன்சொன்னபடி "அகமுடையானும்" "அகமுடையாளும்" முறையே தங்கள் தங்கள் விஷயங்களில் தடையில்லாமல் வேண்டியபடி செட்டுங்கட்டுமாய்ச் செலவழித்தாலொழிய, இருவரும் ஒரு குடித்தனத்தில், கூட்டாளிகள்போலச் சந்தோஷமாய் வாழ்வது அரிது.

செட்டும் கட்டுமாய்ச் செலவிடுவதும் அதினால் கூடியமட்டில், குடித்தனத்துக்குச் சுகந்தேடிவைப்பதும் ஒரு பெரிதல்ல. இவ்விருவருக்கும், அவரவர் மரியாதையை அவரவர் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். முன்காலத்தில் "பெருமையும் சிறுமையும் தான்தர வருமே" என்று பிரஜைகள் நடந்துக்கொள்ள வேண்டியிருந்தது. இப்போது "பெருமையும் சிறுமையுந்தான் கோள வருமே "என்று நடந்துக்கொண்டால் ஒழிய புறத்தியார், தகப்பனேயாகட்டும், அண்ணனேயாகட்டும், தம்பியாராகட்டும், தாயாராகட்டும், மாமனார் மாமியாராகட்டும், யாராகட்டும், நமக்கு மரியாதை வைக்கிறதில்லை. பெண்டாட்டி, மரியாதைக்காகத் தான் புருஷனிடத்தில் கொஞ்சம் வணங்கி நடந்து கொண்டால், அந்த வணக்கத்தை நல்லமாதிரியாய் எண்ணி அதற்குத்தக்கபடி அவளுக்குப்பிரதி மரியாதை பண்ணினால் சரியாயிருக்கும். அதல்லாது, அவள் வணக்கமா யிருக்கிறாளே என்று அவளை இல்லாத பாடெல்லாம் படுத்தினால், அவளுக்கு வணக்கமான குணமிருந்து என்ன உபயோகம்? அவளுக்கு ஒருசுகமுமில்லை. ஒரு பெண்சாதி தன் மரியாதையைத்தான் போக்கடித்துக்கொள்ளாமல் அதைவகித்துத்கொண்டு தன்கணவனிடத்தில் நடந்துகொண்டால், கணவன் சமர்த்தனாயிருந்தால், அந்த மரியாதைக்கு ஹானி பண்ணமாட்டான். மூடனாயிருந்தால் அந்தமாதிரி சாமர்த்தியமாய் நடந்துகொள்ளும் மனையாட்டிக்குச் சந்தேகமில்லாமல் பயப்பட்டே நடப்பான். அவள் ஒரு மரியாதையைவகித்துக் கொண்டு நடக்காத போனால் அல்லது கணவன் அவளுக்கு மரியாதை பண்ணவிட்டால், அவளால் வேண்டியகாரியங்கள் நடவா; அப்படி நடக்காததினால் குடித்தனங்களுக்கு எவ்வளவோ நஷ்டங்கள் நேரிடுகின்றன.



அவளுக்குச் சுவாதீனம் ஒன்றும் வைக்காமல், எல்லாச்செலவுக்கும் தன்கணவனை வந்து கேட்கவேண்டுமென்றால் அவளுக்கு வெகுகஷ்டமாய் இருக்கும்: அன்றி அவளுக்கு வெகு மானக்குறைவாயும் வெட்கமாயும் இருக்கும், ஆகவே அவள் பிரவேசித்து ஸ்திரீகள் மூலமாய் நடக்கவேண்டிய வற்றிலவளுக்கு அக்கரையுண்டாகாது "ஏன் இது செய்யவில்லை" என்று ஒருவேளைபுருஷன் கேட்டால் "ஆமாம் உங்களையார் தம்படி முதற்கொண்டு பிச்சை கேட்டுக்கொண் டிருப்பார்கள்? இந்தவீட்டில் எனக்கு ஒரு தம்படிக்குக்கூடச் சுவாதீனமில்லை" என்று சொல்லி உடனே அழுதுவிடுவாள். ஸ்திரீகளின் இருதயம் வெகு இளகினது. அவர்களின் மனதைக் கெடுக்காமல் அவர்களைக் கணவர்கள் தம்வழிக்குக் கொண்டுவரவேண்டும். சிலர் அவர்களின் வாயையும் கையும் கட்டி வைப்பதினால், வீட்டில் சிலபெண்கள் பணம்திருடிக் கடையில் அசுத்தமான பட்சணத்தைவாங்கித் தின்கிறார்கள். சிலவேளையில் சிறுதனம் விற்று அதினால் தமக்கு வேண்டிய சாமான்கள் வாங்கிக்கொள் கிறார்கள். அந்த அசுத்தமான பட்சணம் எவ்வளவு உடம்புக்கு கெடுதிபண்ணுமோ, அது கணவனுக்கு தெரிவதில்லை. அச்சிறுதனத்தால் கணவன் சொத்து எவ்வளவு நஷ்டப்படுமோ அதுவும் அவனுக்குத் தெரிகிறதில்லை. ஆகையால், ஒருகணவன் தனக்கு வீட்டில் சுகமிருக்கவேண்டுமென்றால், தன்மனைவியைத்தனக்கொரு நிதிக்காரனாய்ப் பாவித்து அவளிடத்தில் தான் சம்பாதிக்கும் பணத்தைக் கொடுத்துவிட்டு, அவன் தன்னைக் கேட்பதற்குப் பதிலாய்த் தான் ஒவ்வொரு தம்பதிக்கும் அவளைப்பணம் கேட்டுக்கொண்டு செலவழிக்கவேண்டும். அப்போது நாம் துன்மார்க்கமாய் ஒரு செலவு செய்வதாயிருந்தாலும் அது அவள் பார்வைக்கு வந்துவிடும். அப்போது அவள் நமக்குத்தன்னாலான புத்திமதி சொல்லக்கூடும்.

இப்படிச் செய்துபார்த்தால், கடைசியில் வருஷாந்திரத்தில் கணக்கு வழக்குகள் பார்க்கும்போது, அவளால் லாபம் வந்திருக்குமே ஒழிய வேறில்லை.

ஆனால் அவளை நாமெப்போதும் நமக்குத்தெரிந்தமட்டில் யுக்திபுத்திகள் சொல்லிக் கொடுத்து அத்தியாவசியமான பட்சத்தில் அவள் செலவிடும் பணத்துக்குக் கணக்கு சொல்லும்படிச் செய்ய வேண்டும்.

இல்லாளகத்திருக்க இல்லாளுமில்லாளே யாமாகில்
* * * *
புலிகிடந்த தூராய் விடும்.

---

## ஸிம்பலின்.

பிஸானியோ:—மாதே! உடம்பு சௌக்கியமா யிருக்கிறதா?

இமொஜன்:— சண்டாளா சீ, என் முன்னிற்காதே, ஒரு நொடிப்பொழுதில் இதைவிட்டு ஓடிப்போ, நீ எனக்கு விஷத்தை யல்லவா தந்தாய்? துஷ்டா! நீ இனி யரண்மனைக்கு வந்தால் உடனே யிறந்தாய், சீக்கிரம் ஓடிப்போ, என்முன்னிற்காதே.

ஸிம்பலீன்:— ஆ! இது இமொஜன் குரல்தான்!

பிஸானியோ:—நான் தந்தமருந்தை அதிக விலையுயர்ந்ததாக நான்நினைக்காமற் போனால் தெய்வம் என்னை நரகத்தில் வீழ்த்திச் சித்திரவதை செய்யட்டும் நல்லமருந்தென்று சொல்லி இராணி யெனக்குத் தந்தாள்.

ஸிம்பலீன்:— இன்னும் அதிக விசேஷ சமாசாரமா!

இமொஜன்:— அந்த மருந்து விஷத்துக்குச் சமமாயிருந்தது.

கார்னீலியஸ்:—மகாராஜாவே! இராணி சொன்னவற்றில் ஒன்றை உங்களிடத்திலுரைக்க மறந்துவிட்டேன்; ஒரு நல்லமருந்தென்று விஷத்தை பிஸானியோ விடத்தில் இராணி கொடுத்ததாகவும் அதை இமொஜனுக்குக் கொடுத்தால் அவள் உடனே யிறந்துபோயிருப்பாளென்றும் சொன்னாள்; ஆகையால் பிஸானியோ சொன்னது உண்மைதான்.

ஸிம்பலீன்:— கார்னீலியஸ்! இது என்ன சங்கதி?

கார்னீலியஸ்:—அரசனே! கெட்ட ஜெந்துக்களாகிய பூனை, நாய்முதலியவைகளை கொல்லுவதற்கு விஷம் ஒன்று செய்து தரவேண்டுமென்று இராணி பலமுறையும் நிர்ப்பந்தம் செய்ய நான் அவளுடைய கொடிய செய்கைகளுக்குப் பயந்து மற்ற விஷயங்களிலும் அவள் உபயோகிப்பாளென்று நினைத்து சாப்பிட்டமாத்திரத்தில் பிரேதம்போலாய் சிறிது பொழுதில் பஞ்சேந்திரியங்களெல்லாம் சுவாதீனத்தாலாகக்கூடிய ஒரு மருந்தை செய்து கொடுத்திருக்கிறேன். இமொஜன்! நீ அதை சாப்பிட்டாயோ?

இமொஜன்:— அதை உட்கொண்டு இறந்தவளைப்போலாய் விட்டேன்

பெலாரியஸ்:— பிள்ளைகளே! நம்முடைய தப்பிதத்தை யறிந்துகொண்டீர்களா.

கைடீரியஸ்:— இவன் நம்முடைய பைடீலிதான்

இமொஜன்:— என் பிராணநாதா! உங்கள் நாயகியை ஏன் தள்ளிவிட்டீர்? இன்னும் ஒரு தரம் தள்ளுங்கள் பார்ப்போம்! (அவனைக் கட்டிக்கொண்டாள்)

பாஸ்துமஸ்:— என் கண்ணே! என்னுயிரே!! ஒரு பழத்தைப்போல் நான் இறந்துபோகிறவரையில் என்னைப்பற்றித் தொங்கிக்கொண்டிரு; நான்உன்னைவிட்டு இனிமேல் பிரியமாட்டேன்.

ஸிம்பலீன்:— இமொஜன்! குழந்தாய்! என் செல்வமே! நீ யடைந்த சந்தோஷத்தினால் என்னை மறந்துவிட்டாயோ? என்னிடத்தில் ஒரு வார்த்தையாவது பேசக்கூடாதா?

இமொஜன்:— உங்களுக்கு நமஸ்காரம் செய்கின்றேன் பிதா! என்னைக் கருணையுடன் ஆசீர்வதிக்க வேணும்.

பெலாரியஸ்:— (மைந்தர்களைப்பார்த்து) நீங்கள் இச்சிறுவனிடத்தில் அதிகப்பிரியமுடனிருந்த காரணம் இப்பொழுது தான் தெரிந்துகொண்டேன். உங்கள் பேரில் குற்றமில்லை உங்களைப் பழிக்கவுமாட்டேன்

ஸிம்பலீன்:— இமொஜன்! என் கண்களினின்றும் ஆநந்த பாஷ்பம் சொரிகின்றன; கடவுள் உன்னை யாசீர்வதிக்கட்டும். இமொஜன்! எழுந்திரு நீ தீர்க்கசுமங்கலியாயிரு, இவற்றையெல்லாம் கண்டுகளிக்க உன் சிற்றன்னையில்லையே, அவள் இறந்துபோயினளே.



இமொஜன்:— பிதா! அதற்காக நான் அதிக விசனப்படுகிறேன்.

ஸிம்பலீன்:— வாஸ்தவமாக அவள் மகா கொடியவளாயிருந்தாள்; ஆனால் அவள் அவ்விதமிருந்ததினால் தான் நாமிருவரும் யாவரும் ஆச்சரியப் படும்படியாக இப்பொழுது சந்தித்தோம்; அவளுடைய பிள்ளையாகிய க்ளோட்டனைக் அனேக நாளாகக் காணவில்லை; அவன் எங்கே போனான்? எதற்காகப் போனானென்று ஒருவருக்கும் தெரியாது?

பிஸானியோ:—மகாராஜாவே! நான் இப்பொழுது ஒருவருக்கும் பயப்பட வேண்டியதில்லை உள்ளதைச் சொல்லுகிறேன் கேளுங்கள். இமொஜன் இதைவிட்டுப்போனவுடன் க்ளோட்டன் தன்னுடைய கண்கள் சிவக்க உதடுகளும் புருவங்களும் பட படவென்று துடிக்க, கையில் வாளை யேந்திக்கொண்டு இமொஜன் போயிருந்த இடத்தைச் சொல்லாமற் போனால் நான் உடனே யிறப்பேனென்று சொன்னான். என்னுடைய நல்ல அதிர்ஷ்டம், பாஸ்துமஸ் எழுதிய கள்ள எழுத்து ஒன்று என்னிடத்திலிருந்தது; அதைக் கண்டவுடன் மில்போர்ட் ஹேவனிலுள்ள மலைகளில் அவளைத் தேட வேணுமென்று நிச்சயித்து அதிக கோபத்துடன் என்னிடத்திலிருந்த பாஸ்துமஸுடைய உடைகளை வாங்கி அவற்றைத் தரித்துக்கொண்டு இமொஜனைக் கண்டு அவள் மானத்தை யழிக்கிறேனென்று கெட்ட அபிப் பிராயத்துடன் போனான். அதற்குப்பின் நடந்தது என்ன வென்று அறியமாட்டேன்.

கைடீரியஸ்:— இந்தக்கதையை நான் முடித்து விடுகிறேன்; க்ளோட்டனை நான் காட்டில் கொன்றேன்.

ஸிம்பலீன்:— ஆ! என்னசொன்னாய்! நீங்கள் எவ்வளவு நன்மை செய்த போதிலும் இக்காரியத்தைச் செய்ததற்காக உங்களைத் தெண்டிக்காமல் விடேன். ஏ! வீரா! நீ சொன்னவற்றை யில்லை யென்று சொன்னால் உன்னைக் காப்பாற்றுவேன்.

கைடீரியஸ்:— நான் சொல்லியது உண்மைதான், நான் தான் அவனைக்கொன்றேன்.

ஸிம்பலீன்:— அவன் சிற்றரசன் என்பதை நீ யறிந்திலையோ?

கைடீரியஸ்:— அவனைப்போல் மரியாதை கெட்டவனை இதுவரை நான் கண்டதே யில்லை. எனக்குச் செய்த கொடிய செய்கைகளைப்பார்த்தால் அவனைச் சிற்றரசனென்று சொல்லக் கூடாது. சிற்றரசர்களுக்குரிய குணங்களில் ஒரு அம்சமாவது அவனிடத்தில் காணப்படவில்லை. அவனுடைய வசைச்சொற்களோ ஒரு சமுத்திரம். இவ்விதம் கர்ச்சித்து வந்தால் உடனே அதை உதைத்துத் தள்ளியிருப்பேன். அவனுடைய தலையை நான்தான் வெட்டினேன். இச்சங்கதியைச் சொல்லுகிறதற்கு அவன் இங்கே இல்லாததைப்பற்றி அதிக சந்தோஷப்படுகிறேன்.

ஸிம்பலீன்:— உன்னைப்பற்றி அதிக விசனப்படுகிறேன். உன்வாக்கால் தானே நீ யிறந்து போகும்படியாய் நேரிட்டது, எங்கள் சட்டத்துக்குள்ளானாய்; அதின் பிரகாரம் நீ இப்பொழுதே யிறக்கவேண்டியது.

இமொஜன்:— அந்த தலையற்ற க்ளோட்டனை என் நாதன் என்றல்லவோ நினைத்தேன். க்ளோட்டனுக்காகவா கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தேன்.

விம்பலீன் :— (கைடீரியஸைப் பார்த்து) இனி என்முன்னிற்காதே அங்கே யாரடா, இவனைப் பிடித்துக் கட்டிக் கொண்டுபோங்கள்.

பெலாரியஸ் :— அரசனே! சற்று பொருத்துக் கொள்ளவேணும் இச்சிறுவன் கொன்ற க்ளோட்டனைப் பார்க்கிலும் அவன் அதிக மேன்மையுடையவனா யிருக்கிறான். தவிர உன்னைப்போல நல்ல வம்சத்தில் பிறந்தவனா யிருக்கிறான். ஆயிரம் க்ளோட்டனைப் பார்க்கிலும் அதிக மேன்மையுள்ளவன். அவனுடைய கைகளை விட்டுவிடுங்கள்; அவன் கட்டுப்படுகிறதற்கு பிறந்தவனல்லன்.

விம்பலீன் :— வயது சென்ற வீரனே! என்ன சொன்னாய்? உன் வார்த்தைகளால் என்னுடைய கோபத்தை யதிகரிக்கச் செய்தாய்; உங்களுக்குரிய வெகுமதிகளையும் தரவொட்டாமல் ஆக்கினாய். இவர்கள் என்னைப்போல நல்ல வம்சத்தில் பிறந்தவர்களா! எப்படி? ஏன் பொய்சொல்லுகிறாய்?

ஆர்விராகஸ் :— இந்தவிஷயத்தில் என் பிதாசொன்னது அதிகமாய்ப் போய்விட்டது.

ஸிம்பலீன் :— அதினால் நீங்கள் இப்பொழுதே இறக்கக்கடவீர்கள்.

பெலாரியஸ் :— நாங்கள் மூவரும் இறக்கச் சித்தமாயிருக்கிறோம். ஆனால் எங்களில் இவர்களை நானுரைத்தபடி நல்ல வம்சத்தில் பிறந்தவர்களாக முதலில் ரூபிக்கிறேன். மைந்தர்களே! நான் இப்பொழுது அபாயகரமான சங்கதி ஒன்றை வெளியிட வேண்டியிருக்கிறது. ஆனால் உங்களுக்கு நன்மை யுண்டாகும்.

ஆர்விராகஸ் :— பிதா! உங்களுக்கு அபாயம் வந்தால் அது எங்களுக்கும் அபாயந்தான்.

கைடீரியஸ் :— எங்களுக்கு நன்மையுண்டாகுமானால் அந்த நன்மை உங்களுக்கு முண்டாகும். நீங்கள் வேறு நாங்கள் வேறென்று நினைக்கவேண்டாம்.

பெலாரியஸ் :— ஆனால் நான் சொல்வதைக் கேளுங்கள். மேன்மை பொருந்திய அரசனே! உங்களுடைய தேசத்தில் பெலாரியஸ் என்ற பெயரையுடைய ஒரு வீரனிருந்தான்.

விம்பலீன் :— அவனைப்பற்றி உனக்கு என்ன, அவன் ஒரு கெட்ட துரோகி, அதினால் அவனை நாட்டைவிட்டுப் போகும்படியாக உத்தரவளித்தேன்.

பெலாரியஸ் :— நான் சொல்வதைக் கேட்கவேணும். உங்கள் முன்பாக கிழட்டு வடிவத்துடனிருக்கிறவன் தான் அந்த பெலாரியஸ். அவனை நாட்டைவிட்டு ஓடிப்போகச் சொன்னீர்கள்; ஆனால் அவனை துரோகி யென்றுரைத்ததின் காரணம் எனக்குத் தெரியவில்லை.

ஸிம்பலீன் :— நீ என் முன்னிற்காதே, இவனை அப்புறம் கொண்டுபோங்கள், உலக முழுவதையும் எனக்கு ஈடாகத்தந்தாலும் இவனைக்காப்பாற்ற மாட்டேன்.

பெலாரியஸ் :— அதிகமாய்க் கோபித்துக் கொள்ள வேண்டாம். முதலில் உங்களுடைய மைந்தர்களை இதுவரையில் வளர்த்து காப்பாற்றினதற்குண்டான கூலியைத்தாருங்கள். அதை நான் பெற்றவுடன் நீங்கள் அதை தாமதியாமல் உங்களுடைய பொக்கிஷத்தில்சேர்த்துவிடலாம். பிறகு என்னை உங்களிஷ்டம்போல் செய்துகொள்ளுங்கள். முதலில் என் கூலியைத் தாருங்கள்.



விம்பலீன் :— என்னுடைய மைந்தர்களையா! வளர்த்ததற்காகவா!

பெலாரியஸ் :— அரசனே! உங்களுக்கு நமஸ்காரம் செய்கின்றேன். நான் எழுந்திருக்கு
முன் உங்களுடைய குழந்தைகளை உங்களிடம் தருகிறேன்; தந்தபிறகு
இக்கிழவனைக் காப்பாற்றவேண்டாம். அரசனே! என்னைப்பிதாவென்று
கூப்பிட்டு, தாங்கள் என்னுடைய மைந்தர்களென்று நினைத்துக்
கொண்டிருக்கிற இந்த இரண்டு வாலிபப் பிரபுக்களும் என்னுடைய
குழந்தைகளல்ல. இவர்கள் உங்களுடைய பிள்ளைகள். உங்களுக்கு
ஜெனித்தவர்கள்.

ஸிம்பலீன் :— என்ன! என் குழந்தைகளா! கள்ளத்தனமாய் பட்டத்துக்கு வேறே
குழந்தைகளை என் குழந்தைகளென்று சொல்லிக்கொண்டு வரப்பார்க்கி
றாயோ, என்னதைரியம் உனக்கு?

பெலாரியஸ் :— நீங்கள் உங்களுடைய பிதாவின் குழந்தை என்பது எவ்வளவு நிச்சய
மோ, அவ்வளவு நிச்சயமாக இவர்களும் உங்களுடைய குழந்தைகள்
தான். சந்தேகிக்க வேண்டாம். மகாராஜாவே! ஒரு காலத்தில் நீங்கள்
நாட்டை விட்டுப்போகும் படியாகச் செய்த பெலாரியஸ் நான்தான்.
பிறர் என்னை துரோகி யென்று அநியாயமாய்ச் சொல்ல அதைக்
கேட்டு என்னை நாட்டை விட்டுப் போகச் சொல்லி அதிக சந்தோஷத்
துடனிருந்தீர். நீங்கள் கொடுத்த தெண்டனையை யனுபவித்தேனே,
அதுதான் நான் உங்களுக்குச் செய்த தீங்கு. இந்தவாலிபர்களை இரு
பது வருடகாலமாக நான் வளர்த்து அவர்களுக்கு சதுர் உபாயங்களைக்
கற்றுக்கொடுத்தேன். என்னுடைய திறமையோ உங்களுக்கு நன்றாகத்
தெரியும். இவர்களுடைய திறமையை இச்சண்டையில் நீங்கள்
அறிந்துவிட்டீர்கள். இவர்களைக் கொண்டுபோவதற்காக நான் கலியா
ணஞ் செய்துகொண்ட இவர்களுடைய தாதியாகிய யூரிபைலி,
என்னை நீங்கள் நாட்டை விட்டுப்போவென்ற வுடன், இவர்களைத் திரு
டிக்கொண்டு வந்தாள். என்னை அநியாயமாகத் தெண்டித்ததினால் இவர்
களைத் திருடிக்கொண்டு வரும்படியாக அவளிடத்தில் ஏற்பாடு செய்
தேன். என்னை எவ்விதம் கஷ்டப்படுத்தினீர்களோ, அவ்விதம் நானும்
உங்களைக் கஷ்டப் படுத்திவிட்டேன். என் கருணையுள்ள இறைவனே!
உங்களுடைய புத்திரர்கள் இதோ இருக்கின்றனர். நீங்கள் அவர்களை
திரும்ப எடுத்துக் கொள்ளலாம். ஆனால் உலகத்தில் நல்லதோழர்களா
யிருந்த இப்பிரபுக்களை நான் இப்பொழுது இழக்கும்படியாக நேரிடு
கிறது. தெய்வமே! இவர்களைப்பிரிந்து எவ்விதம் உயிருடனிருப்பேன்?
வாலிபர்களே! உங்களைக் கடவுள் கருணையுடன் ஆசீர்வதிப்பாராக.

விம்பலீன் :— நீ அதிக விசனத்துடன் அழுதுகொண்டு பேசுவதினால் நீ சொன்னவை
கள் உண்மையாக விருக்கலாம்; உங்களுடைய வீரத்தன்மை எவ்வளவு
உண்மையா யிருக்கிறதோ, அதேமாதிரியாக இவ்வரலாறும் உண்மையா
யிருக்கும். காணாமற்போன மைந்தர்கள் இவர்களாயிருந்தால் என்னைப்
போல பாக்கிய சாலியா யிருக்கிறார்கள்?

பெலாரியஸ் :—நான் சொல்வதை அன்புடன் கேட்கவேணும் பாலிடோர் என்றழைக்கப்பட்ட இச்சிறுவன்தான் கைடீரியஸ்; காட்வால் என்று கூப்பிடப்படும் இவ்வாலிபன்தான் ஆர்விராகஸ். அதிகவிநோதமாகச் செய்யப்பட்ட பட்டாடையினால் இவர்களை அரண்மனையிலிருந்தும் மூடிக்கொண்டுவந்தேன். நான் சொன்னவற்றை ருசுப்படுத்த அந்த ஆடையை வேணுமானால் கொண்டுவந்து காட்டுகிறேன்.

ஸிம்பலீன் :— அவர்களுக்கு வேறேவித அடையாளங்களுண்டு பார்த்துக்கொள்ளுகிறேன். கைடீரியஸுடைய கழுத்தில் நல்ல நக்ஷத்திரத்துக்குச் சமமான ஒரு மறு இருந்தது; அது ஒரு விந்தையாக விருந்தது, அதைப் பார்ப்போம்.

பெலாரியஸ் :—நான் உண்மையாகச் சொல்லுகிறேன், இவன் கைடீரியஸ்தான். பாருங்கள் நீங்கள் சொன்ன இயற்கையாயுள்ளமறு இன்னும் காணப்படுகின்றது. கடவுளே! உம்முடைய வல்லமையை யாரால் வரைக்க முடியும்? இவன் கைடீரியஸென்று ருசுப்படுத்த இந்த மறு அழியின்றிருப்பதைப்பார்க்க அதிக சந்தோஷப்படுகிறேன். கடவுளது செயலை யாரால்றியக்கூடும்?

ஸிம்பலீன் :— என்ன ஆச்சரியம்! ஒரு தடவையில் மூன்று குழந்தைகளைப் பெற்ற தாயாருக்குச் சமமா யிருக்கிறேன். நானிப்பொழுது அடைகிற சந்தோஷத்தைப் போல பிரசவகாலத்தில் யாராவது அடைந்திருப்பார்களா? குழந்தைகளே! உங்களை யாசீர்வதிக்கிறேன். நீங்கள் க்ஷேமத்துடனிருந்து இராச்சியப்பரிபாலனஞ் செய்துகொண் டிருங்கள். என்னுடைய துர் அதிர்ஷ்டத்தினால் உங்களைச் சிலகாலமாக காண சந்தர்ப்பமில்லாமற் போய்விட்டது. என்றாலும் நீங்கள் இராச்சியத்துக்குத் திரும்பி வந்ததைப்பற்றி அதிக சந்தோஷப்படுகிறேன். இமோஜன்! உன்னுடைய சகோதரர்கள் திரும்பி வந்ததினால் நீ இந்த இராச்சியத்தை யிழந்தாய்!

இமொஜன் :— பிதா! என்ன! இவ்விதம் சொன்னீர்கள்? இப்பொழுது நான் இரண்டு இராச்சியத்தையல்லவோ பெற்றேன். சகோதரர்களே! கடைசியாக நாம் இவ்விதம் சந்தோஷமாய்ச் சந்தித்தோம். இனிமேலாக நான் பொய்யனென்று சொல்லாதேயுங்கள். நான் உங்களுடைய சகோதரியாயிருக்க என்னை சகோதரனென்று கூப்பிட்டீர்கள். நானோ உங்களைச் சகோதரர்களென் றழைத்தேன். இதில் யார் சத்தியவானென்று நீங்களே சொல்லுங்கள்!

ஸிம்பலீன் :— நீங்கள் எப்பொழுதாவது சந்தித்தீர்களா?

ஆர்விராகஸ்:—பிதா! ஆம், நாங்கள் மலைகளுக்கு நடுவில் சந்தித்தோம்.

கைடீரியஸ் :— சந்தித்தவுடன் அதிகப் பிரியமாயிருந்தோம். இவள் இறந்துபோனதாக நினைத்து இவளை அடக்கம் செய்தவரையில் அப்படியே பிரியத்துடனிருந்தோம்.

கார்னீலியஸ்: அவள் இறந்தது இராணிகொடுத்த மருந்தினாலல்லவோ?



ஸிம்பலீன்:— ஆ! ஆ! இயற்கையின் அதிசயத்தைப் பார்த்தீர்களா? இவர்கள் சந்தித்தவுடன் ஒருவரை யொருவர் அதிகப்பிரியமாக நேசித்தார்களாம். நான் இக்கதையின் வரலாற்றை யெப்பொழுது முழுமையும் கேட்கப்போகிறேன்? எந்த இடத்தில்? எவ்விதம் காலங்கழித்தீர்கள்? நம் முன் கைதியாக வந்திருக்கிற லூஷியஸிடத்தில் எப்பொழுது வேலையை யேற்றுக்கொண்டாய்? நீ ஆண்வேடந் தரிக்கவேண்டிய காரணமென்ன? உன் சகோதரர்களை எப்பொழுது சந்தித்தாய்? அவர்களைவிட்டு எவ்விதம் பிரிந்தாய்? அரண்மனையிலிருந்து என்னகாரணமாக ஓடிப்போனாய்? எங்கே ஓடிப்போனாய்? நீங்கள் மூவரும் சண்டைக்கு வரவேண்டிய காரணம் என்ன? இன்னும் அநேகவித சங்கதிகளை அறியவேண்டியிருக்கிறது. இவைகளை அறியவேண்டிய இடமும் சமயமும் இதல்ல. இதோ பார், பாஸ்துமஸ் இமோஜனிடத்தில் அடைக்கலமா யிருக்கிறான். இமோஜனும் மின்னலைப்போல பாஸ்துமஸையும், சகோதரர்களையும், என்னையும், தன்னுடைய எஜமானனாகிய லூஷியஸையும் அதிக சந்தோஷத்துடன் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிறாள். அவர்களும் இவளைப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். நாம் இப்பொழுது இவ்விடத்தைவிட்டு கோவிலுக்குப்போய் சிறப்புகள் செய்து களித்திருப்போம் வாருங்கள்; (பெலாரியஸைப் பார்த்து) நீ செய்த குற்றங்கள் பூராவையும் மறந்துவிட்டேன், இன்றுமுதல் என்னுடைய சகோதரனைப் போலானாய்; எப்பொழுதும் இவ்வண்ணமே நினைத்துக்கொண்டிருப்பேன். எல்லாரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கிவிட்டோம். நம்முன்பாக நிற்கிற இக்கைதிகளனைவரையும் விட்டுவிடுங்கள். இந்தவேளையில் அவர்கள் விசனப்படவேண்டாம்; அவர்களும் சந்தோஷமா யிருக்கட்டும்.

இமொஜன்:— என் பிரியமுள்ள எஜமானனே! (லூஷியஸைப் பார்த்து) நான் முதலில் உங்களை மறந்தவள்போலிருந்ததற்காக என்னை மன்னிக்கவேணும்; நான் முன்னுழைத்ததைப் பார்க்கிலும் பதின்மடங்கு பணிவிடைகள் செய்ய இன்னும் தயாராயிருக்கிறேன். என்னை யாசீர்வதிக்கவேணும். (நமஸ்காரம் செய்கிறாள்.)

லூஷியஸ்:— நீ க்ஷேமத்துடனிருப்பாயாக.

ஸிம்பலீன்:— நல்லது, சந்தோஷத்தினால் ஒரு சங்கதியை மறந்துவிட்டோம். விசேஷமாக யுத்தஞ்செய்து வெற்றியைக்கொடுத்த அந்த எளியவீரன் இங்கேயிருக்கத் தகுந்தவனாயிற்றே; அவன் இங்கேவந்து என்னுடைய வந்தனங்களைப் பெற்றால் எவ்வளவு ஆனந்தமாயிருப்பேன். அவனைக் காணவில்லையே!

பாஸ்துமஸ்:— கந்த உடைகளைத் தரித்துக்கொண்டு இம்மூவர்களுடன் சண்டைசெய்தவன் நான்தான்; வேறே ஒருவருமில்லை. அது நான் நினைத்தகாரியம் நிறைவேறுகிறதற்கு இட்டகோலம். இயாக்கிமோ! அது நானே அல்லவோ' என்று ருசுச்சொல்லு. நான் உன்னைக் கீழேதள்ளி கொன்றுவிடும் சங்கர்ப்பத்திலிருந்ததை மறந்தனையோ?.

இயாக்கிமோ:—(குனிந்துகொண்டு) நான் இதோவிழுந்துவிட்டேன். குற்றமுடைய என்மனம் உன்பலத்தால் என்னைக் குனியச்சொல்லுகிறது. உனக்கு அநேகந்தடவை கடமைப்பட்டிருக்கிற இந்த உயிரை நீயே வாங்கிவிடு. ஆனால் முதலில் இந்தமோதிரத்தையும் பதிவிரதாசிரோன்மணியாகிய இமோஜனிடத்திலிருந்து நான் அபகரித்துக்கொண்ட இந்தக் காப்பையும் எடுத்துக்கொள்; பிறகு என்னை விட்டுவிடாதே.

பாஸ்துமஸ்:— என்னிடத்தில் குனிந்துநிற்காதே. உன்பேரில் எனக்கிருக்கிற அதிகாரமானது உன்னைக் காப்பாற்றச் சொல்லுகிறது. என்பேரிலிருக்கிற அகங்காரமோ நீ செய்த குற்றங்களுக்காக உன்னை மன்னிக்கச்சொல்லுகிறது. நீ ஜீவித்திருந்து மற்றவர்களை வஞ்சியாமல் பெருந்தன்மையுடனிரு.

ஸிம்பலீன்:— என்ன பெருந்தன்மையான தீர்ப்புச்செய்தான்! நம்முடைய மருமகன் காண்பித்த பெருந்தன்மையையும் தயாள குணத்தையும் நாம் பாடமாகப் படித்துக்கொண்டு எல்லாரையும் மன்னிப்போம்.

ஆர்விராகஸ்:— (பாஸ்துமஸைப்பார்த்து) நீ எங்களுக்கு ஒரு சகோதரனாய்விட்டாய்; அதனால் அதிக சந்தோஷப்படுகிறோம்.

ஸிம்பலீன்:— நல்லது, நாமனைவரும் சமாதானமாய்ப் போகலாம். ஓ லூஷியஸ்! நாங்கள் யுத்தத்தில் ஜெயித்தவர்களானாலும் உங்கள் சக்கரவர்த்திக்கு அடிமைப்பட்டவர்களாக நினைத்துக்கொண்டிருக்கிறோம். என் மனைவியுடையவும் க்ளோட்டனுடையவும் துற்போதனைகளால் கப்பந்தரமாட்டேனென்று சொல்லி சண்டையிட்டு நாங்கள் வெற்றியடைந்திருந்தாலும் வழக்கப்படி கொடுத்துக்கொண்டுவந்த கப்பத்தை இப்பொழுது கொடுக்கத் தயாராயிருக்கிறோம். தேவர்களைச் சந்தோஷிப்பிக்க கோவில்களுக்குப் போய் சிறப்புகள் செய்வோம். நம்முடைய தேசத்து ஜனங்களுக்கு இந்த சமாசாரத்தை தெரியப்படுத்துவோம். இனிமேலாக ரோமன் ஜாதியாரும் நாமும் முன்னிருந்ததைவிட அதிக இஷ்டர்களா யிருக்கவேணும். எல்லாருடைய மனதும் சந்தோஷமடைய யாவருக்கும் ஒரு பெரிய விருந் தளிப்போம் என்று சொல்லி அரண்மனைக்குப் போய்ச் சந்தோஷத்துட னிருந்தார்கள். அடுத்தநாள் காலையில் இமோஜனுக்கும் பாஸ்துமஸுக்கும் கோலா காலமாய் கலியாணத்தை முடித்து எல்லாரும் உண்டுகளித்து சுகமாய் நீடூழிவாழ்ந்திருந்தார்கள்.

வி. கோபால ஐயங்கார். பி. ஏ.,





# *பெண் கல்வி.

(மிஸ்ஸஸ் சத்தியநாதன் சொன்னதடங்கியது).

திருவள்ளுவநாயனார் "கற்க கசடற கற்றபின் நிற்க அதற்குத்தக" என்றார் கற்பதில் மாத்திரம் அப்படி நடந்துகொள்ள வேண்டு மென்பதில்லை சொல்வதிலும் அப்படியே ஒரு மனுஷன் நடந்துகொள்ள வேண்டு மென்பது என் தாத்பரியம். ஆகவே முன்சொன்ன குறளைப் பின்வருமாறு மாற்றலாம் "சொல்கச் செலவுற சொன்னபின் நிற்க அதற்குத்தக" இப்படி இலகுவாய் மாற்றலாமாயினும் மாற்றியபடி நம்முடையவர்களுக்குள் நிற்பாரைத்தான் காணோம். இந்தியாவில் எல்லாச் சங்கதிகளும் மகாபடாடோப வார்த்தைகளுடன் ஆரம்பிக்கப்படுகின்றன. படாடோப வார்த்தைகள் சொன்னதுக்குத் தக்கபடி நாம் நடந்து கொள்வதில்லை. இந்தியாவில் பெண்களுக்கு கல்வி வேண்டும் வேண்டுமென்று சொல்லாதவர்கள் இல்லை. சொல்லாதிருந்தாலும் ஒரு வேளை இந்தியாவுக்கு ஒரு விதத்தில் கண்ணியமாயினும் நிலைத்திருக்கும். எப்போது சொல்லிச் செய்யவில்லையோ அப்போது புறத்தேசத்தார் நம்மைப் பார்த்துப் பழிக்கிறார்கள். நல்ல வேளையாய் இப்போதிப்போது பெண்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கக் கூடாது. என்று நினைத்து வந்த நினைப்பு நீங்கிக்கொண் டிருக்கிறது. ஆகையால் இந்தியாவில் ஆண்பிள்ளைகள் மாத்திரமேயன்றி பெண்பிள்ளைகள் கூடப் பெண்பிள்ளைகளுக்குப் படிப்பு வேண்டுமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். முற்காலத்தைக் காட்டிலும் இந்தியாவில் பெண்களின் நிலைமை இப்போது வெகு விருத்தி யடைந்திருக்கிறது. ஆனாலும் எவ்வளவு விருத்தியாகவேண்டி யிருக்கிறதோ அவ்வளவு விருத்தியாகவில்லை. இந்தியாவில் பள்ளிக்கூடத்திற்குப் போகும் வயதுள்ள ஆண்பிள்ளைகளின் மொத்தத் தொகையில் பள்ளிக்கூடத்தில் இப்போது வாசிக்கும் ஆண் பிள்ளைகளின் தொகை 100-க்கு 22. அதேமாதிரி இப்போது வாசிக்கும் பெண் பிள்ளைகளின் தொகை 100-க்கு 3. அப்பர் பிரைமரி வகுப்புக்குப் பிறகு பெண்களுக்குக் கல்வி நடக்கிறதேயில்லை. அதைப் பார்த்தால், இந்தியாவில் பெண்கல்வி விருத்தியாகவே யாகாது என்று அதைரியம் பிறந்துபோகிறது. இது வெகு விசனகரமான செய்தி. இந்தியப் பெண்களின் நிலைமை விருத்திக்கு வருவது அவர்களின் படிப்பைப் பொறுத்தில்லையா? இருந்தும், வீட்டில் தகப்பனுக்கும் கணவனுக்கும் அற்பச் செய்திகள் சொல்லிக் குலாவிக்கொண்டும் அவர்களுடன் நகைப்பேச்சுகள் பேசிக்கொண்டும் பெண்கள் காலத்தை ஒழிக்கிறார்கள். அதினால் சில வேளையில் தகப்பனும் கணவனும் சாதாரணமாய்த் தமக்குப் புத்திமதி சொல்லுவாரில்லாமல் இவ்வுலக நடவடிக்கையில் நெறிதப்பித் துன்மார்க்கத்துக்குள் புகுகிறார்கள். இப்போது அநேக ஐரோப்பிய மாதர்கள் தம் கணவனுக்கும் தகப்பனுக்கும் எவ்வளவோ ஒத்தாசை செய்து வருகிறார்கள்.

இதைத்தவிர ஒரு படித்த ஸ்திரீ ஒரு வீட்டில் இருந்தால், அவள் தன் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லவும், அவர்களை நல்ல வழியில் நடத்தவும், உதவமாட்டாளா?

* A paper by Mrs. S. Sathianadhan Editor Indian Ladies' Magazine, read before the Madras Branch of the National Indian Association.

ஒருபடித்த ஸ்திரீ வீட்டிலிருப்பதும் சரி; நூறுபேர் ப்ரைவேட் டீச்சர் வைத்துப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதும் சரி, ஏனென்றால், வீட்டில் பெண்டிர்கள் கையொழிந்தகாலத்தில் சும்மாதானே உட்கார்ந்து கொண்டு வெட்டிவம்பு பேசிக்கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் படித்திருந்தால், தம் பிள்ளைகளுக்கு நல்ல படிப்புச் சொல்லிக்கொடுப்பார்கள். படிப்பு ஒன்றுதானா? வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொண்டு தம் பிள்ளைகளுக்கும், கணவர்கள், தகப்பன்மார்கள் முதலானவர்களுக்கும், வியாதி வெக்கைவ்ராமல் பார்த்துக்கொள்ள மாட்டார்களா? இப்போது சமைத்த கறி குழம்பு முதலானவைகளை மூடி வை யென்று எவ்வளவுதரம் பெண்டிர்களை வேண்டிக்கொண்ட போதிலும் மூடிவைப்பதில்லை. குழாய் சலத்தை வடிக்கட்டிக் காய்ச்சிப் பானையி லூற்றிச் சில்லிட்ட பிறகு குடிக்கக்கொடு என்று கணவன், தகப்பனார், முதலானவர் எவ்வளவு தரம் சொன்னாலும், அவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வேலை செய்வதற்குச் சோம்பி அப்படியே வடிக்கட்டிக் காய்ச்சாமல், பானையில் ஊற்றிவைத்துவிட்டு கணவன் முதலானவர்கள் கேட்டால் காய்ச்சி ஊற்றின தண்ணீர்தான் என்று சிலபேர் பொய்சொல்லி விடுகிறார்கள். இது அசுத்தமென்று தனக்கு மனதில் நிச்சயமாய்ப் பட்டுப்போயிருந்தால் அப்படிச் செய்வார்களா? அப்படி மனதில் படுவதற்குப் படிப்பு மறிவுமன்றோ காரணம்? ஆயினும், அந்தப்படிப்பு நாம் கவனிக்கிறதில்லையே நாம் பெரிய வார்த்தைகளை வீணே சொல்லிக் காலத்தை யோட்டிவருகிறோம்.

இப்போது நாம் பெண்களுக்குப் படிப்பு அவசியமென்று காண்பித்தோம். என்ன மாதிரி படிப்பு அவர்களுக்கு வேண்டும் என்பது அடுத்தகேள்வி. பின்வருமாறு அந்தக் கேள்விக்குக் காலஞ்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் பதில் சொன்னார்:—"பெண்பிள்ளைகளுக்குப் படிப்பு வழிகள் ஏற்படுத்தும்போது ஆண்பிள்ளைகளின் படிப்புக்கு ஏற்படுத்திய வழிகள்போல ஏற்படுத்தக் கூடாது. இந்தியாவில் பெண்களுயிர் வாழ்க்கைக்குத் தக்கபடி ஏற்பாடு செய்யவேண்டும், உயிர்வாழ்க்கையின் மத்தியில் அவர்களுக்கு நாம் அநேக செய்திகளுக்குத் தகுந்த உளவும் நீக்குப்போக்கும் தெரிந்துகொள்ளும்படியாய் அவர்கள் படிப்பு ஏற்படவேண்டும்.

அவர்கள் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டு கணக்குவைப்பது மாத்திரம் தெரிந்துகொண்டாற் போதாது, அவர்கள் படிப்பால் தமக்கு ஒரு கையிருப்பான அறிவு சேர்த்து வைத்துக்கொண்டு வீட்டு விசாரணை, பிணியுற்ற சுற்றத்தார்க்குச் செய்ய வேண்டிய ஊழியங்கள், தம் பிள்ளைகளைத் தகுந்தபடி நடத்தி வளர்க்க வேண்டிய விதம், சுத்தமாய் இருத்தல், அவர்களின் உடம்பு செம்மை கெட்டுப்போகாது பார்த்தல், வீட்டைச்சுத்தமாய் வைத்துக்கொள்ளல், வீட்டில் சாமான்களைக் கடைப்படுத்தாமல் பார்த்தல், வீட்டுக்குள் எல்லார்க்கும் திருப்தியும் இன்பமும் உண்டாகும்படி செய்தல், வீட்டுக்குள் எல்லாவற்றையும் சரிப்படுத்துதல் மாத்திர மல்லாமல் அந்தமாதிரிச் சரிப்படுத்துவதினால் இன்பமும் ஆசையு முண்டாகும் வீடாய்ச் சில பெண்கள் செய்யும் சாமர்த்தியத்தைக் காண்பித்தல், பெண்டாட்டியாகவும், பெண்ணாகவும், தாயாகவும் நடந்துகொள்ளும்போது, பிறக்கு மனைகவித நன்மை தீமைகளுக்கு மத்தியில். சபாஷ் என்று பேர்வாங்குதல் முதலானவற்றில் அவ்வறிவை அவர்கள் உபயோகப் படுத்தும்படியாய் அவர்களின் படிப்பு இருக்கவேண்டும். அவர்களின் படிப்பு பின்னால் எவ்வளவு அவர்களுக்குபயோகப் படும்படி யிருக்கிறதோ அவ்வளவு தூரம் தேசத்தில் பெண்களின் படிப்பு நிலையூன்றிப் போகும்".



ஆகவே, படிப்புவேண்டுவது அவசியமென்றும், அப்படிப்பு இந்தமாதிரி இருக்க வேண்டுமென்றும் சொன்னோம். இப்போது பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கும் படிப்பு எந்தமாதிரி என்று சற்றாராய்வோம்:—மிஸ்கார் என்னும் ஒரு ஐரோப்பிய மாது இதைப்பற்றிப் பின்வருமாறு சொல்லுகிறார்:—"பெண்பிள்ளைக்கும், ஆண்பிள்ளைக்கும், வாசிப்பு, எழுத்து, கணக்கு, சரித்திரம், பூகோள சாஸ்திரம் ஆகிய இவற்றில் ஒரேமாதிரி இருக்கவேண்டுமென்பதை எல்வாரும் ஒத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் பெண்களுக்குமாத்திரம், படிப்புவிஷயமாய் என்ன ஏற்பாடா யிருக்கிறதென்று பார்ப்போம். 1880ம் ௵ ஏற்பட்டபடிப்பு ஒழுங்குகளில், பெண்களுக்குப் பள்ளிக்கூடங்களில் தையல்வேலை கற்றுக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பட்டது. 1885-மாண்டில் 3,4 வது ஸ்டாண்டர்டு வகுப்பு பெண்களுக்கு சுகாதாரம் கற்றுக் கொடுக்கவேண்டுமென் றேற்பட்டது. மறுபடியும் 1890-ம் ௵ த்து ஏற்பட்ட விதிகளில் 1, 2, 3 பாரம் வகுப்புப் பெண்களுக்கு குடும்ப சம்ரக்ஷணை, விநோத தையல் வேலைகளும் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று ஏற்பட்டது. இத்தோடுகூட கிண்டர் கார்டன் விளையாட்டுக்கள், பொருள்பாடம், சித்திரம் எழுதுதல் ஆகிய இவையும் கற்றுக்கொடுக்கும்படி ஏற்பட்டன. பின்னும் 1895 - மாண்டேற்பட்ட ஒழுங்குகளில், பெண்களுக்கு, ஒழுங்குநடை (drill) களும், அபிநயப் பாட்டுகளும் ஏற்பட்டன. 1900ம் வருஷத்தில், இந்துப்பெண்களுக்கும்பாட்டுகற்பிக்கலாமெனவோர் ஏற்பாடு ஆயிற்று. இவைகளையெல்லாம் பார்த்துவிட்டு பெண்களின்படிப்பு தற்காலத்தில் லோயர் ஸெகண்டரி வகுப்பு வரையில், நன்றாயாராயப் பட்டு ஏற்பாடா யிருக்கிறதென்றும், அதினால் பெண்களுக்கு நல்ல படிப்புக்கு அஸ்திபாரம் ஏற்படுமென்றும் நாம் எண்ண வேண்டும். ஆகையால், இந்துப் பெண்களுக்கு, தற்காலத்துக்கு வேண்டியமட்டில், தகுந்த படிப்புக்குவேண்டிய வழிகள் ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும். ஆகையால், இவற்றைக்கொண்டு படிப்பேறவேண்டுமானால் பெண்பிள்ளைகள் இடைவிடாது பள்ளிக்கூடங்களுக்குப் போய்க்கொண்டே வரவேண்டும்"

மிஸ்கார் நன்று சொன்னார். பெண்கள் வாழக்கைப்படுமுன் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்கள்; பிறகு ருதுவாகிற வரையில் அப்போதப்போது நின்று நின்று போகிறார்கள். ருதுவான பிறகு கட்டோடே நின்றுபோகிறார்கள். ஆகையால் இப்போது இந்தமாதிரி செய்யாமல், ருதுவாகிறவரையில் அல்லது ருதுசாந்தியாய்ப் புக்காத்துக்குப் போகிறவரையில் விடாதும் நின்று நின்றுபோகாமலும் பள்ளிக்கூடத்துக்குப் போய்க்கொண்டிருந்தால் என் இந்துப் பெண்களுக்குப் படிப்பேறாதோ தெரியாது?

இந்து ஸ்திரீகளுக்கு போதனையாலும், வாசிப்பாலும், சகவாசத்தாலும், கூட்டங்கள் கூடுவதாலும், பெண்களுக்குப் படிப்பு கற்றுக்கொள்ளும் சக்தியிருக்கிறதென்று காட்டவேண்டும். இந்த விஷயத்தில், கணவர்களும், தகப்பன்மார்களும் தலையிட்டுத் தைரியம் சொல்லுவதைவிட வேறென்னவேண்டும். மாமியார்களின் தொந்திரவு இப்போதிப்போது நின்றுபோய்க்கொண்டுவருகிறது. அன்றி அவர்களுக்குப் படிப்பதினாலுண்டாகும் பிரயோசனத்தையும் காட்டிச்சொல்லவேண்டும். இந்த விஷயத்திலும்கூடத் தகப்பனும் கணவனும்தான் தலையிட்டுவரவேண்டும். இந்துப் பெண்கள் கணவனென்றால் மிகவும் மரியாதையும் பக்தியுமுள்ளவர்கள். ஆகையால் கணவன், ஸ்திரீகள் படிக்கவேண்டுமென்ற ஆசை தனக்கு உண்டு என்று தன்மனைவிக்கு வற்புறுத்தி னால் அப்பெண் தன்கணவன் வார்த்தையைக் கேட்காது போகமாட்டாள். கணவனும் தகப்பனும் அவளுக்கு அப்படிச்சொல்லாமல், வெட்டிவம்பும், நகைப்பேச்சும்

பேசிக்கொண்டு அவர்களுடனுட்கார்ந்து, காலங்கழிப்பதே குற்றமென்னலாம். வெட்டிவம்புபேசிக் காலம்கழிப்பதை விடச் சாப்பிட்டபிறகு பெண்குழந்தைகளைக் கிட்ட உட்காரவைத்துக்கொண்டு, நல்ல புஸ்தகங்களிலிருந்து கிரந்தகர்த்தாவின் அபிப்பிராயங்களை எடுத்து, "அவர் அப்படிச்சொன்னார். இவர் இப்படிச் சொன்னார். ஆகையால் நாமுமவ்வாறே நடந்துகொள்ளுதல் நலமும்புண்ணியமுமாம்" என்று சொல்லக்கூடாதா? பெண்பிள்ளைகள்தான் கேட்கமாட்டார்களா?

இரண்டு விஷயத்தில் இப்போதைய பெண்பாடசாலைகள் குறைவுகொண்டுள்ளன: பெண்பாடசாலைகளில் புருடர்களே உபாத்தியாயர்களாயிருக்கிறார்கள். இந்தப் பாடசாலைகளெல்லாம் நல்லகட்டிடங்களிலில்லாமல், அழுக்கும் அசுத்தமுமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்து ஸ்திரீகள் தம் பெண் குழந்தைகளுக்குப் புருஷர்கள் உபாத்தியாயராய்ப்படிப்புச் சொல்லிக் கொடுப்பதில் இஷ்டமிருக்காதுதான். அசுத்தமான இடங்களில் பாடசாலைகள் வைத்திருப்பதினால் அவர்கள் படிப்பின்மேலாசைப்படும்படியானமார்க்கங்கள் தேடுவது அசாத்தியம். இப்பாடசாலைகளுக்குச் சொந்தமான கட்டிடங்களிருந்தால், அவற்றில் எவ்வளவோ பெண்பிள்ளைப்படிப்பின் விருத்திக்குவேண்டியவைகளைச் செய்யலாமே? புஸ்தகசாலை ஒன்று ஏற்படுத்தலாம்; விளையாட உத்தியான வனங்கள் ஏற்படுத்தலாம்; தேகப்பயிற்சி முற்றமொன்று செய்விக்கலாம். இவற்றைப்பார்க்கப் பார்க்கப் பெண்பிள்ளைகள், நாமும் அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் படித்து விளையாட வேண்டுமென்ற ஆசை பிறக்காதா? அக்கட்டிடத்தில் தாமே கூட்டங்கள் கூடலாம்; சபைகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். புஸ்தகசாலை ஒன்றிருக்கும்பட்சத்தில் படிக்க ஆசையுமுண்டாகும். இங்கே தகுந்த விளையாட்டுக்கள் விளையாடலாம். இவையெல்லாம் ஒன்று கூடிச் செய்தால், ஒரு கோஷ்டி அபிவிருத்திக்கு வேண்டிய சாங்கத்தியமொன்று ஏற்படாதா?

பெண்குழந்தைகள் ப்ரைமரி ஸ்டாண்டெர்ட் வகுப்புக்கு மேலேன் வாசிக்கக்கூடாது? அவர்களுக்கு உயர்தரப் பரிக்ஷைகள் வேண்டாமென்று சொல்லுவது நியாயந்தான். இந்த உயர்தரப் படிப்பெல்லாம் பெண்களின் உயிர்வாழ்க்கைக்கு அவசியமன்று. ஆனால் அதெல்லாம் உயிர்வாழ்க்கையில் அவர்களுக்குத் தற்செயலாய்ச் சம்பவித்தால் சம்பவிக்கட்டும். அந்த உயர்தரப்படிப்பிற் கட்டோடே யுபயோகமில்லாமல் போகாது. மீஸ்ஸஸ் பெஸாண்டு அது உபயோகமில்லை யென்று சொல்லுவது நாமொப்புக்கொள்ளத் தக்கதன்று. ஆனால், உயர்தரப் படிப்பு வேண்டு மென்று பெண்களைக் கட்டாயம் பண்ணுவது தப்பு. இதில் நாம் யோசிக்க வேண்டியது என்னவென்றால், பெண்கள் முக்கியமாய் இந்தியப்பெண்கள், வாசிக்கவே இஷ்டப்படாதவர்களாயிருக்கிறார்கள். இந்தியப் பெண்கள் பூர்வகாலத்தில் சிலர் வாசித்துவந்த போதிலும், வெகு நாளாய் வாசிக்காமலே பொழுதுபோக்கிவந்ததால், இப்போது வாசிக்கும்புத்தி அவர்களுக்கு வருவிப்பது வெகு கஷ்டமாய் இருக்கிறது. ஆகையால், பெண்களுக்குப் பொதுவான படிப்பு எவ்வளவுபயோகமோ அவ்வளவுபயோகம் உயர்தரப் படிப்பு மிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பொதுவான படிப்பைப் பற்றி மீஸ்ஸஸ் ஆனி பெஸாண்டு என்ன சொல்லுகிறாரோ சற்று ஆராய்வோம்: நாட்டுபாஷைகள், சம்ஸ்கிருதம், ஆங்கிலேயம்; சுகாதாரம், தேகதத்துவம், கைமருந்து, பாட்டு வர்ணம் வைத்தல், ஊசிவேலை (தைத்தல் முதலியவை) ஆகிய இவற்றில் போதுமான ஞான முண்டாகும் படிப்பு இருந்தால், எந்தஸ்திரீக்கும் போதுமானது. இந்தியஸ்திரீகளுக்கு இந்த விஷயங்களில் தகுந்த படிப்புமாத்திர மிருக்குமே யானால், இந்தியாவில் பெண்கள் கல்வி



நன்றாய் மென்மேலு முயரவில்லை என்று ஒருவரும் முறையிடமாட்டார்கள். பெண்கள் உயர்தரப் படிப்பு படிக்கக் கூடாதென்ற தடையும் ஒருவரும் சொல்லக் கூடாது. ஏனென்றால், அந்தமாதிரி படிப்பால் இந்தியஸ்திரீகளின் தளுக்கு மினுக்கும் கெடுமென்று நினைக்க நியாயமில்லை; மேலும் அது அவர்களின் மனதைப் பெருக்கி, செல்வாக்கை உயர்த்தி, குணத்தைப் பலப்படுத்தும்: அதினால், இந்தியாவின் காரியமும் முடியும், இந்தியாவுக்குப் பலனும் நல்லதாய் வந்து கூடும்".

அன்றி, இந்தியஸ்திரீகளுக்கு வீட்டுப்படிப்பு நடக்கவேண்டிய விஷயத்தில்தான் இந்துகனவான்கள் ஒன்று கூடி உழைக்கவேண்டும். கையாலாகாதபோனால், வாயால் சொல்லி யுபயோகமென்ன? வாஸ்துவத்தில் அவர்களுக்குப் பெண்கல்வி விருத்தியாக வேண்டுமென்றால், தங்கள் ஸ்திரீகளுக்கு நல்ல உபாத்தியாயர்களை வைத்தாவது அல்லது தாங்களேயாவது படிப்பிக்கட்டும். பெண்களுக்குள் சிறுவயதுக்கலியாண மிருக்கிற வரையிலும், கலியாணம்பண்ணின பெண்கள் பள்ளிக் கூடத்துக்குப் போகக்கூடாதென்ற வழக்கமொன்று இருக்கிறவரையிலும், நம்பெண்களுக்குக் கல்வி வெகுசொற்பமாகத்தானிருக்கும். அப்போது அசம்பூர்ணமான கல்வியால் வரக்கூடிய அபாயங்களும் நேரிடலாம். ஆகையால் இந்த அபாயத்தைநீக்க நாமுயலவேண்டும். அதாவது கல்வியைப் பெருக்கவேண்டுமே ஒழிய, கல்வியை நிறுத்தக்கூடாது.

ஆங்கிலேயதேசத்தில் ஸ்திரீகளுக்குச் சரியானபாத்தியதையைக் கொடுக்க வெகு காலம்சென்றது, வெகு சிரமமுண்டாயிற்று. நம்மிந்தியாவில் அத்தனைகாலமும் சிரமமும் நமக்குவேண்டியது. ஆங்கிலேயர் கஷ்டப்பட்டு நமக்கு இப்போது வழியைச் சித்தம் பண்ணிவைத்திருக்கிறார்கள். நாமந்த வழியிலே போய்ச் சுகப்பட இஷ்டப்படாமல், தப்புவழியில்போகிறோம். அதுவும் பெண்ணுக்கும் இந்தியாவுக்குவந்த துரதிருஷ்டந்தான்.

## அலக்ஸாண்டிரிய மகாராணியாரின் சரித்திரம்.

### 4-ம் அத்தியாயம்.

மகாராணியார் கடிதமெழுதுவதில் மிகவும் திறமையுள்ளவர்களாம். கலியாணமான முதல் தமது கணவருடன் இங்கிலாந்திலிருந்து தமது தாய் தந்தையர்களுக்கும், சகோதரர்கள், சகோதரிகள் முதலியவர்களுக்கும் ராணியார் எழுதிய கடிதங்கள் அளவற்றன. இவைகள் வெகு நன்றாகவும், சாதுர்யமாகவும், ஆநந்தத்தை யுண்டாக்கும் படியாகவு மிருந்தன. இவைகளைக் கண்ணுற்ற தாய் தந்தையர்களும் இன்னும் மற்றவர்களும் மிகுந்த ஆச்சரியமடைந்தார்கள். முதலில் ராணியார் சிலநாள் வரையிலும் எழுதின கடிதங்கள் கலியாண நாளில் தமக்குக் கிடைத்த உடுப்புகளைப் பற்றி யவைகள். தமது தகப்பனாருக்கு எழுதின கடிதமொன்றில் தமது உடுப்புகளி லொன்றின் மதிப்பு டென்மார்க்கு தேசத்தின் இரண்டு வருஷத்திற்கு வரக்கூடிய வரும்படிக்குச் சமானமா யிருக்குமென்று எழுதி

விருந்தார்கள். ஆனபோதிலும் உடைகளின் பேரிலும், நகைகளின்பேரிலும் செலவிடுவதற்கு இவருக்கு கொஞ்சங்கூட இஷ்டமில்லையாம்.

இவர் இளவரசியாயிருந்தகாலத்தில் சித்திரமெழுதுவதிலும், அதற்கு விதம் விதமான வர்ணமிடுவதிலும் காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தாராம். மேலும், சங்கீதத்திலும் மிக திறமையுள்ளவராகவு மிருந்தார்களாம். உயர்ந்த பாடகர்களாகிய நாக்நர்சாகின் முதலானவர்கள் உண்டாக்கின கீதங்களை இவர் நன்றாகப் பாடிக்கொண்டிருப்பார்கள். "எண்ணெலெழுத்திலை கிள்ளல் பூப்பறித்தல், பண்ணமைந்த யாழினோடைந்து" என்று ஸ்திரீகள் கைக்கு ஐந்து வகையழகு கூறப்பட்டிருக்கின்றது. அவற்றுள் "எழுதல்" என்பதே ட்ராயிங் என்பது. இதற்குச் சரியாக நமது ராணியார் சித்திரம் எழுதுவதில் —மிகதேர்ந்திருந்தது மிகவும் மெச்சத் தகுந்ததே. நமது தேசத்தில் பெண்கள் தனவந்தராயிருந்தால் கோலம் முதலியவைகளை மறந்துவிட்டு வீண்வம்புப் பேச்சுகளைப் பேசி காலம் கழிக்கிறார்கள். அப்படிக்கன்றி சித்திரம் எழுதுதல், சங்கீதம் கற்றுக் கொள்ளல், வீட்டுவேலை களையும் சரியாய் கவனித்தல், முதலியவைக ளெல்லாவற்றையும் கற்றுக் கொண்டால்தான் நலம். இவ்விதம் மேற்கூறியவைகளில் தேர்ந்த பெண்மணிகள் தாங்களே ஆநந்தமடைவதுடன் தங்கள் கணவன் மார்களையும் சந்தோஷிப்பிக்கலாம். இவ்விதம் இந்திய மாதர்கள் செய்துவந்தால் அவர்களுக்குப் பெருமையன்றோ?

யாராவது டம்பமான காரியங்களுக்காக தங்களது வரவுக்குமேல் செலவு செய்யும் பட்சத்தில் இராணியார் அவர்களை மிகவும் கடிந்து கொள்வார்கள். ஏனெனில் இவ்விதம் செய்வதானது குடும்ப நாசத்திற்கு காரணமென்று ராணியார் அறிந்த விஷயம். காலஞ்சென்ற மகாராணியாரும் இவ்விதமே யிருந்தார்கள். இதற்கு திருஷ்டாந்தமாக இவர் பால்ய வயதுள்ளவரா யிருந்தபொழுது இவரது உருவம் எடுக்கப்பட்டது. அப்போது, மகாரானியார் டம்பமான உடைகளைத் தரித்துக்கொள்ளாமல் சாதாரண கறுப்புப்பட்டை மாத்திரம் தரித்துக்கொண்டும், யாதொருநகைகளையும் அணியாமலும் உருவம் எடுத்துக் கொண்டார்கள். உருவம் எடுத்துக் கொள்வதற்குமுன் சமீபத்திலிருந்த சில பெரியமனிதர்கள் "அம்மா! விலையயர்ந்த சில ஆபரணங்களை தரித்துக்கொண்டு உருவம் எடுத்துக்கொண்டால் அழகா யிருக்கும்" என்று சொன்னார்கள். அப்பொழுது விக்டோரியா மகாராணியாரவர்கள் "நகைகள் எனக்கு வேண்டாம்; ஏனெனில் இந்த உருவப்படத்தை என் அருமையான பிரஜைகள் யாவர்களும் பார்ப்பார்கள். அப்பொழுது என் பிரஜைகள் வீண்செலவு செய்வதை இது தடுக்கும், இந்த எண்ணம் என்மனதிலிருக்கிறது" என பதில் சொன்னார்கள். பெரியவம்சத்தில் பிறந்து மகாராஜனுக்கு மனைவியாக இருந்து எல்லாபாக்கியத்தை யடைந்திருந்த போதிலும், நமது ராணியார் மிதமான உடைகளைத் தரித்துக்கொண்டும் தமது குழந்தைகளையும் கூட அவ்விதமே நடங்களென்று கற்பித்தும்வந்தாராம். இவ்விஷயத்தைக் கேட்க எவ்வளவு சந்தோஷமாக விருக்கிறது.!

ராணியாரவர்கள் தையல் வேலையிலும் மிக திறமையுடையவர்கள், இவர் தாமே தமக்குவேண்டிய உடைகளுக்கு சித்திரமான கரைகளை பற்பல வர்ணமுள்ள நூல்களால் தைய்த்து நுணிகளை அழகாய் கத்திரித்து அநேக விதம்விதமான உடைகளை தைய்த்துக் கொள்வார்களாம். இப்படிச் செய்வதில் அவருக்கு மிகப்பிரியமாம். இதுவும் மிக விசேஷமன்றோ?



இவர் இவ்வித்தையை தமது அருமையான குழந்தைகளனைவர்க்கும் மிகுந்த சிரத்தையோடு கற்றுக்கொடுத்தார்களாம். குழந்தைகளும் ராணியாருக்குத் தெரிந்த ஒவ்வொன்றையும் வெகு நன்றாக கற்றுக்கொண்டதும் தவிர அவருக்குச் சமானமாயும் தாய்க்குத் தகுந்த குழந்தைகளெனவும் பேர் பெற்றார்களாம்.

நமது ராணியாருக்கு எல்லா விஷயத்திலும் மிதமாகவிருக்க இஷ்டமிருந்தபோதிலும் தர்மம் செய்வதில்மாத்திரம் அதிகமாக செலவிடுவதவசியமென்று எண்ணி தமது கையிலிருக்கும் பொருள்களில் ஐந்தில் ஒருபாகம் தமது சொந்தசிலவிற்கும் மீதியுள்ள நாலுபாகம் தர்மத்திற்குமே எடுத்துவைத்து செலவிடுவது வழக்கமாம். இதுவன்றோ விசேஷம்.

---

# திரௌபதி.

## 1. திரௌபதியின் பிறப்பு.

துவாபரயுகத்தின் கடையில், இப்போது பஞ்சாப் என்று வழங்கிவரும் பாஞ்சால தேசத்திற்கு, காம்பில்லியா நகரத்தை பிரதான பட்டணமாக ஏற்படுத்திக் கொண்டு துருபதன் என்ற அரசன் நீதிமுறை தவறாமல் செங்கோல் செலுத்தி அரசுபுரிந்து வந்தார். இவருக்குப் புத்திரப் பேறின்மையால் மிகவும் மனம் வருந்தி, அநேகமான தானதருமங்களைச்செய்தும், தீர்த்தயாத்திரையும் செய்து கொண்டு வந்தார். இவருடைய மனைவியாராகிய கோகிலாதேவியம்மாளும் உடன் சென்று வந்தார்கள். இவ்விருவரும் ஒருகால் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு வனாந்தரமார்க்கமாய் வந்துகொண்டிருக்கும்பொழுது, தவசிரேஷ்டராயும், மகாஞானியாயுமிருந்த உபயாசன், யாசன் என்ற இரண்டு முனிவர்களைக் கண்டு வணங்கி அவர்களிடம் தங்களுக்கிருக்கும் குறையைக் கூறினார்கள். இதைக்கேட்ட முனிவர்கள் துருபத மகாராஜனை நோக்கி புத்திர காமேஷ்டி என்னும் யாகத்தைச் செய்யும்படி ஆக்ஞாபித்தார்கள். உடனே துருபத மகாரஜன் யாகத்துக்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் தமது நாட்டிலிருந்துவரவழைத்து, அம்முனிவர்களையே யாககர்த்தாக்களாக்கிக்கொண்டு அவ்விடத்திலேயே யாகத்தை நடத்தத் தொடங்கினார். அந்த யாகத்தினிடமாக முதவில் ஒரு புத்திரன் தோன்றினான். பின்பு, மின்னலையழிக்கும் மருங்குலையும், வேளைப்பழிக்கும் மேனியையும்; பூவைப்பழிக்கும் பதத்தினையும், முல்லை யரும்பையொத்த பற்களையும், மகாலட்சுமியைபோன்ற அழகினையுமுடைய ஒரு புத்திரி ஒரு வில்லுடன் தோன்றினாள்.

இப்பெண்மணி தோன்றினவுடனே, ஆகாயத்திலிருந்து, "முற்காலத்தில் இராட்சதர் குலத்தை நாசஞ்செய்ய சீதை பிறந்ததுபோல, இவள் வீரகண்டாமணியைத் தரித்துப் புகழுடன் வாழும் அரசர்குலத்தை நாசஞ்செய்யப் பிறந்தாளென்று" ஒரு அசரீரி வாக்குண்டாயிற்று. மேலும் புத்திரனுக்கு திருஷ்டத்துய்மனென்றும், புத்திரிக்கு திரௌபதை யென்றும் நாமமிடும்படியும் அசரீரிவாக்கியம் பிறந்தது. பிறகு துருபத மகாராஜன், தன் மனைவியையும், குழந்தைகளையும், உபயாசன் யாசன் என்கிற முனி

சிரேஷ்டர்களையும் அழைத்துக்கொண்டு தன் பட்டணம்போய்ச் சேர்ந்தார். பிரஜை
கள் தங்கள் அரசனுக்கு புத்திரசந்தானம் உண்டானதைக்குறித்து, மிகவும் மகிழ்ந்து,
'தெருக்களில், தோரணங்கள் கட்டியும், பனிநீர் தெளித்து கோலங்களிட்டும், திண்ணை
கள் தோறும் தூங்காவிளக்குகளை யேற்றியும் பூரண கும்பங்கள் அமைத்தும், முத்தால
த்தி பவழாலத்தி முதலிய ஆலத்திகளை யெடுத்தார்கள். அரசன் வெகு ஆடம்பரத்து
டன் ஊர்வலம் வந்து அரண்மனைக்குச் சென்று, உபயாசன், யாசன் என்ற இருமுனி
வர்களையும், இன்னும் மற்றுமுள்ள பெரியோர்களையும் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்
செய்து, அவர்களுக்கு வேண்டிய வெகுமதிகளைக் கொடுத்தனுப்பிவிட்டு, தமது குழந்
தைகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் சீராட்டி ஊட்டி வளர்த்து
க்கொண்டு வந்தார்.

## 2. இளமைப்பருவம்.

சாதாரணமாய் குழந்தைகளுக்கு ஆறுவது மாதம் முடிந்தவுடன் அன்னம் உண்பிக்
கும் நமது இந்துக்களின் வழக்கம் போல துருபத மகாராஜன் தன் குழந்தைகளுக்கு
வெகு விமரிசையாக அன்னமூட்டும் சடங்கை நிறைவேற்றினன். பிராமணர்களுக்கு
வெண்ணெயும், வெண்சர்க்கரையும் நிறைந்த தங்கக் கிண்ணங்களை தானமாகக்
கொடுத்தான். சதுர் வர்ணத்தாருக்கும் வஸ்திரதானஞ்செய்தான். பிராமணர் நீங்க
மற்றயாவருக்கும் அன்னமிட்டான். பிறகு வித்தியாரம்பஞ் செய்யும் ஐந்தாம் வயதை
யடைந்தவுடன் குழந்தைகளுக்கு வித்தியாரம்பஞ்செய்வித்தான். அக்காலத்தில் வித்தியா
போதகருக்குக் கொடுத்த வெகுமதிகளும், செய்த தானதருமங்களும் அளவற்றன. திருஷ்
டத்துய்மன்முறையே நாலுவேதம் ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைக்கியானம்
முதலியவைகளை ஐயந்திரிபரக் கற்றுத்தேர்ந்தவுடன், தமது குலவித்தையாகிய தநுர்வே
தத்தைக் கற்கவிரும்பி தந்தையிடம் சென்று அவரைவணங்கி, அப்பா! எனக்கு வில்வித்
தைகற்றுக்கொள்ள ஆசையாயிருக்கிறது. அதை எனக்கு கற்பிக்கத்தகுந்த ஆசிரியர்
துரோணாசாரியர் ஒருவரே யாகையால், நான் அவரிடம் சென்று வில்வித்தை கற்றுக்
கொள்ள மனமகிழ்ந்து உத்தரவுதாரும் என்று வணங்கிக்கேட்டான். அதற்கு துருபத
மகாராஜன் மனமுவந்து விடைகொடுக்கவே இவன் துரோணாசாரியிடம் சென்று, தன
க்குவில்வித்தை கற்பிக்கும்படியாகவும் தன்னை அவரது சிஷ்யர்களி லொருவனாகவும்
அங்கீகரிக்கும் படியாகவும் வணங்கிக் கேட்டுக் கொண்டான். அவர் இவனது வேண்டு
கோளுக் கிணங்கி தநுர்வித்தையை சிறிதேனும் சந்தேகமுண்டாகா வண்ணங் கற்பித்
தார். திஷ்டத்துய்மன் தநுர்வித்தை முழுவதையும் ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தபிறகு
அவரிடம் விடை பெற்றுக்கொண்டு தனது தேசம் வந்துசேர்ந்து சுகமாக வாழ்ந்து
கொண் டிருந்தான்.

இது நிற்க, இவனுடைய அருமை சகோதரியாகிய திரௌபதியோ சாஸ்திரங்களை
யும், நீதி நூற்களையும் கற்றுக்கொண்டு வந்தாள். சாயங்காலத்தில் தனது தோழிமார்க
ளுடன் கூடிபந்து முதலிய விளையாட்டுகளை விளையாடுவாள். சில சமயங்களில் காலை
யில் தனது தோழிமார்களை அழைத்துக்கொண்டு புஷ்பத்தோட்டத்துக்குச் சென்று
அவ்விடத்தில் புஷ்பித்திருக்கும் ரோஜா, சண்பகம், பாரிசாதம், மல்லிகை, முல்லை,
இருவாட்சி, சரக்கொன்றை முதலிய பலவித புஷ்பங்களைக் கண்டு பலவிதமாக வர்ணிப்
பாள். அவ்விடத்திலுள்ள புஷ்பங்களில் சிலதைப்பறித்து தானே தன் கையால் வெகு
விசித்திரமாக மாலைதொடுத்து எடுத்துக்கொண்டு போய் தன் தாய் தகப்பன்மார்களுக்கு
காண்பிப்பாள். அவர்கள் அதைக்கண்டுவெகுவாய் ஆநந்தப்படுவார்கள். இதுவுமன்றிதன்



250

தகப்பனார் செய்யும் தேவபூசைக்கு வேண்டிய புஷ்பங்களைக் கொய்து தங்கத் தட்டிலெ
டுத்துக் கொண்டுவந்து பூசையறையில் வைப்பாள். வீட்டில் தன்னால் கூடிய வீட்டுக்
காரியங்களையும் செய்துவருவாள். இவ்விதம் இவள் செய்துவந்ததானது இவளுடைய
தாய் தகப்பன்மாருக்கும் அதிக சந்தோஷத்தை யுண்டாக்கிவந்தது. இவள் இவ்விதமாக
சகல சாஸ்திரங்களையும் கற்புடைய ஸ்திரீகளின் சரித்திரங்களையும் நன்றாய் கற்றுக்
கொண்டாள். தாய் தகப்பன்மார்களுக்கு ஒருசிரோ ரத்னம்போல் விளங்கிவந்தாள். சில
குழந்தைகளைப்போல பிடிவாதம் பொறாமை முதலிய துர்க்குணங்கள் இவளிடத்தில்
கிடையவேகிடையாது. "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்ற நமதுமூதாட்டி
யின் வாக்கியத்துக் கிணங்க தாய் தகப்பன்மார்களை தெய்வமாகப் பாவித்து அவர்களிடத்
தில் பயபக்தி விசுவாசத்துடனும் "மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்" என்றவாக்கியத்
துக் கியைய பெரியவர்கள் சொல்லும் வார்த்தையைத் தள்ளாமல் பூஷணம்போற்
கொள்வதும் "அறஞ்செய விரும்பு" என்கிற வார்த்தைக் கிணங்க தருமத்தை மறவா
மற் செய்வதும் "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்பதற்கேற்ப எந்நேரமும்
படிப்பதும் "எவ்வகை யுயிர்கண் மாட்டுமிரக்கமே பூண்டு மாதர் அவ்வியமறுத்து வாழ்
தலறமெனக் கூறுமரதோ" என்பதற்கிணங்க எவ்வகை யுயிர்களிடத்திலும் ஏழைகளி
டத்திலும் தயை பச்சாதாபம் முதலிய நற்குணங்களை யுடையவளாயும் விளங்கிவந்
தாள்.

## 3. பாண்டவர்கள்.

அஸ்தினபுரத்தில் திருதராஷ்டிர மகாராஜன், பாண்டு மகாராஜன் விதுர மகாரா
ஜன் என்கிற இம்மூன்று சகோதரரும் சுகமாக வாழ்ந்துவரும் நாளில் திருதராஷ்டிர
மகாராஜன் பிறவிக் குருடராகையால், பாண்டு மகாராஜனையே அரசனாக ஏற்படுத்தி
அரசுபுரிந்து வந்தார்கள். மந்திரிகளில் சிரேஷ்டராகிய பீஷ்மாசாரியர், திருதராஷ்டிர
மகாராஜனுக்கு சுபலதேசாதிபதியாகிய சுவேத மகாராஜனது புத்திரி காந்தாரியை
மணம்பேசினார், அதற்கு சுவேத மகாராஜனும் தன குமாரத்தியை திருதராஷ்டிர மகா
ராஜனுக்கு மணஞ்செய்துகொடுப்பதாக ஒத்துக்கொண்டார். பிறகு மந்திரிகள் திருத
ராஷ்டிர மகாராஜன் பிறவிக் குருடனாகையால் அவருக்கு தமது குமாரத்தியை விவாகம்
செய்துகொடுப்பது தகாதென்று சுவேத மகாராஜனிடம் கூறினார்கள். அதைக்கேட்ட
சுவேத மகாராஜன், திருதராஷ்டிர மகாராஜன் பிறவிக் குருடனென்பதை தான் முன்
பு அறியாமையாலும், இப்போது மந்திரிகளால் தெரியவந்ததாலும் தனது குமாரத்தியை
விவாகம்செய்து கொடுக்கமாட்டேனென்று மறுத்துவிட்டார். இதையறிந்த காந்தாரியா
னவள் தன் தகப்பனாரிடம் சென்று வணங்கி அப்பா! தாங்கள் என்னை திருதராஷ்டிர
மகாராஜருக்கு விவாகம்செய்து கொடுப்பதாக வாக்களித்து, இப்போது மறுப்பது தகாது;
அவருக்கு என்னை விவாகம்செய்து கொடுப்பதாக வாக்களித்தபோதே அவர் எனக்கு
கணவராய்விட்டார். அவருக்கு கண்ணில்லையென்று இப்போது மறுத்துவிடுவது கண்
ணில்லாதவர்கள் காரியமாக விருக்கிறது. தாங்கள் முதலில் நிச்சயித்தபடியே அவருக்
கு என்னை மணஞ்செய்துகொடுப்பது உசிதம். ஒரு சமயம் தங்கள் மருமகனுக்கு கண்
ணில்லையே யென்றுதாங்கள் எண்ணுவீராயின், அதற்கு நியாயஞ்சொல்லுகிறேன். கற்
புடைய ஸ்திரீகளின் கடமை யென்னவெனில், தமது கணவரது வடிவழகை நோக்கா
மல் நற்குணங்கள் பொருந்தியிருப்பதை நோக்கி பெரிதும் மகிழ்வார்கள். மற்றவர்கள்
அவயவப் பழுதில்லாமல் அழகிற் சிறந்தவர்களையே கணவராக விரும்புவார்கள்.

C. S. R.

(இன்னும் வரும்.)

# NEWS & NOTES.

## சமாசாரக்குறிப்பு.

லண்டன் தபால் ஆபீஸ் மூலவாக 1801-வது வருடத்தில் சென்ற கடிதங்கள் 50,000. 1840௵ 300,000, 1870௵ 2,600,000, 1900௵ 8,300,000.

---

கடிதங்களுக்காக கவர்கள் 1839-வது வருடத்தில் உபயோகிக்கப்பட்டதாம். முதல் தடவை உபயோகித்தத் தபால் ஸ்டாம்பு 1847-வது வருடத்தில்.

---

ஒவ்வொரு தினத்திலும் நமது சக்கிரவர்த்தியாகிய 7-வது எட்வர்டு அவர்களுக்கு 3000 சமாசாரப் பத்திரிகைகளும், 1000 கடிதங்களும் வந்து சேர்கின்றன.

---

ராணிமுடி:—ராணிமுடிசெய்ய மாதிரிகள் அநேகமாக வருகிறதாம். சக்கிரவர்த்தியினுடைய முடிமாத்திரம் பதிப்பிக்கப்பட்டு வருகிறதாம்.

---

குருடர் எண்ணிக்கை:—யுனை டெட்ஸ்டேட்ஸில் 50,000, கிரேட் பிரடனில் 30,000 குருடர்கள் இருக்கிறார்களாம்.

---

ஸர் ஹர் நாம்ஸிங்கும் அவர் மனைவியாராகிய லேடி ஹர் நாம்ஸிங்கும் முடிசூட்டுக்கு இங்கிலாந்துக்குப் போவார்கள்.

---

ஒரு பெரிய நன்கொடை:—லிவர்பூலில் வசித்து ஒரு வருஷத்திற்குமுன் இறந்துபோன மிஸ் ஒலிவியா அதர்டன் துரைசாணி தன் சொத்து 20,250 பவுனையும் அவ்வூரிலேயே தர்மவிஷயங்களுக்கு உபயோகப்படுத்த திட்டம் செய்திருந்தார்களாம்.

---

ஒரு பழைய கடிதம்:—டியூக் ஆப் கெண்ட் என்பவரால் தன் பாட்டனுருக்கு 1809௵ தன் கையெழுத்தில் எழுதிய கடிதம் ஒன்றை மி-ர். டாம்லின் பிரிடிஷ் மியூசியத்திற்கு கொடுத்து 10 பவுன் வெகுமானம் பெற்றார்.

---

முழுப்புள்ளி, ஸெமிகோலன், கோலன், கமா, இவைகள் இன்னின்னகாலத்தில் உபயோகிக்கப் பட்டதென்பதை பின்வருமாறு காண்க:—

( . ) முழுப்புள்ளி 15-வது நூற்றாண்டிற்கு முன்னமே, கோலன் ( : ) 1485 வருடத்தில், கமா ( , ) கோலன் உபயோகிக்கப்பட்ட 35 வருடத்திற்கு பின்னும், ஸெமிகோலன் ( ; ) ஏறக்குறைய 1570 வருடத்திலும் உபயோகிக்கப்பட்டதாம்.

---

சக்கரவர்த்தி பிறந்தநாள்:—சக்கரவர்த்தி பிறந்தநாள் நவம்பர்௴ 9௳ யாயிருக்கிறபோதிலும் இவ்வருஷம் அந்ததேதியில் பிறந்தநாள் கொண்டாடுவதற்கு சில அசௌகரியங்கள் நேரிடுகின்றமையால் வருகிற மேமீ 30௳ வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுமென்று அபிஷலாக அறிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

---

1900-01வருடத்தில் இந்தியாவிலுள்ள தபால் ஆபீஸுகளில் மொத்தம் 250,858,165 கடிதங்கள் போடப்பட்டனவாம். இவைகளில் 211,018,910க்கு ஸ்டாம்பு ஒட்டப்பட்டவைகள், 29,228,913, ஸ்டாம்பு ஒட்டப்படாதவைகள், 10,610,342 ரிஜிஸ்டர்ட் கடிதங்கள், கார்டுகளில் 218,351,317 ரிஜிஸ்டர்ட் பத்திரிகைகள் 32,091,400, புஸ்தகம் முதலியவைகள் 28,302,751, ரிஜிஸ்டர்ட் பார்ஸல்கள் 2,177,948, ரிஜிஸ்டர்ட் செய்யப்படாதவைகள் 501,161, இவைகள் மொத்தம் 532,282,742ம் இவ்வருஷம் அனுப்பப் பட்டன.

---



ஆனரெபில் மிஸ்டர் காடனும் பெண்கல்வியும்:—அஸ்ஸாம் முக்கிய கமிஷனராகிய ஆனரெபில் மிஸ்டர் காடன் அஸ்ஸாம் கூலிகளுக்கு அனுகூலங்கள் செய்திருப்பதுந் தவிர வட இந்தியாவில் பெண் கல்வியையும் விருத்திசெய்ய உழைத்திருக்கிறார். அதுபற்றி அவருக்கு அஸ்ஸாமிலுள்ள இந்தியர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்ட வந்தனோபசாரப் பத்திரங்களில், அவர் பெண்கல்வி விருத்தியை நாடி யுழைத்ததற்காக வாசித்துக் கொடுக்கப்பட்ட வந்தனோபசாரப் பத்திரமானது ஸ்ரீ மதி ஹேமந்த குமாரியால் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

---

மைசூர் மகாராஜாவுக்குப் பட்டாபிஷேகம்:—மைசூர் மகாராஜாவுக்கு பட்டாபிஷேகஞ் செய்ய ஆகஸ்டுமாதத்தில் பொருந்திய நாள்களாயிரண்டுதினங்கள் தான் இருக்கின்றன வென்று சொல்லப்படுகிறது. ஆகஸ்டுமாதம் 8-ந்தேதியும், 29-ம் தேதியும் பொருந்தி யிருக்கின்றனவாம். இவ்விரண்டு தேதிகளில் நமது ராஜப்பிரதிநிதிக்கு சௌகரியமாய் வந்திருந்து பட்டாபிஷேகத்தை நடப்பித்துவிட்டுப் போகக்கூடிய தினம் எதுவோ அந்ததினத்தில் மைசூர் மகாராஜாவினது பட்டாபிஷேகம் சகல வைபவங்களுடனும் நடத்தப்படுமென்று அறிகிறோம்.

---

கரையானுக்கு ஒரு மருந்து:—நம்மவர்கள் கட்டும் வீடுகளின் சுவர் உப்படித்தும் கரையான் பிடித்தும்போவது சகஜந்தான். அதற்கு இடைப்பளவு தார்பூசி வருவதுமுண்டு கரையான் வையாமல் இருப்பதற்கு வேறொரு உபாயம் செய்யலாமென்று ஒரு பத்திரிகை கூறுகிறது. சுவர்களுக்குமேல் பூச்சுப் பூசும் சுண்ணும்போடு கற்றாழைச் சோற்றையும் சாற்றையும் சேர்த்துக்கொண்டு மேல்பூச்சுப் பூசப்பட்டால் கரையானே யண்டாதென்று அப்பத்திரிகை தெரிவிக்கின்றது. மேற்பூச்சுச் சுண்ணும்பில் கற்றாழைச் சாற்றைவிட்டுக் கலந்துகொண்டு பூசப்பட்ட வீட்டுச்சுவர்கள் கட்டினபடியே உறுதியாய் இருக்கின்றனவாம்.

---

வருகிற முடிசூட்டு தினத்தன்றைக்கு நடக்கவேண்டிய கொண்டாட்டங்களைப் பற்றி 21௳யன்று சென்னையில் விக்டோரியா ஹாலில் ஒரு கூட்டம் கூடப்பட்டது. அந்தக் கூட்டத்தில் (1) முடிசூட்டு தினத்தில் சென்னை மகாஜனங்கள் ரு கூட்டம் கூடவேண்டுமென்றும், (2) வீடு வாசல் தெருக்களை அலங்கரிக்கவும், ஏழைகளையும் பள்ளிக்கூடப் பிள்ளைகளையும் அன்னம் போட்டாதரிக்கவும், இன்னும் நடக்கவேண்டிய கொண்டாட்டங்கள் நடக்கவும் தகுந்த ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றும், (3) முடிசூட்டுப் பேட்டிக்கு வசூலான பணத்தின் பாக்கியை இதுக்கு ஒரு முதலாக வைத்துக்கொண்டு இன்னும் வேண்டிய பணம் வசூல் பண்ணவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

முடிசூட்டு வாழ்த்துப் பத்திரங்களை வைத்து அனுப்பச்செய்யப்படும் பெட்டிகளில் பல இந்தியத் தொழிலாளிகளால் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் வேலைப்பாடுள்ளனவா யிருக்கின்றனவென்று நமது எட்வர்ட் சக்கிரவர்த்தி புகழ்ந்து பேசக்கூடும். ஆனால் அம்மாதிரி அவர் புகழ்ந்துபேச சில மாதங்கள் போகவேண்டும். அவர் புகழ்வதற்கு முன்னே அலக்சாடிராண் மகாராணி இந்தியக் கைத்தொழிற் சாமான்களைப் புகழ்ந்து பேசுவது சாத்திய மாகும்படி பஞ்சாப் லெப்டினண்டு கவர்னராயிருந்து சென்றஸர் மாக்வொர்த் யெங்குடைய மனைவி லேடிமார்க்வொர்த்யெங்கு விக்டோரியா ஞாபகச் சின்ன சம்பள உபகார நிதிக்கு கையொப்பஞ் செய்த பஞ்சாப் ஸ்திரீகளின் பேர்களடங்கிய ஜாப்தாவுடன் சேர்த்து ஒரு கடிதத்தை தந்தத்தினூற் செய்த ஒரு பெட்டியில் வைத்து அனுப்பி யிருக்கிறார். அந்தத் தந்தப்பெட்டி மிகுந்த வேலைப்பாடுள்ளதாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. அதனைச் செய்தவர் டில்லியி லுள்ள பகீர் சந்து என்ற ஒரு இந்தியத் தொழிலாளியே யாவர்.

---

அலகாபாத் பெண்பாடசாலைத்தலைவி:—“அலகாபாத் பெண்பிள்ளைப் பாடசாலைத் தலைவி 12-வயது பெண்ணொருத்தியைப் பலகையோடு கட்டிவைத்து அடித்தாள் என்

றும், அப்படி அவள் செய்தது பெண்பிள்ளைகள் செய்யத்தகாத கொடிய செய்கை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது? அப்பள்ளிக்கூடத்தலைவி தன்னைக் கொடியவள் என்று பலரும் இகழ்ந் துரைக்கும்படி ஒன்றும் அதிகமாய்ச் செய்துவிடவில்லையாம். அடிபட்ட பெண் சுபாவத்திலே சற்றுச் சல்லியஞ் செய்யும் குணமுடைய பெண்தானும். அவளுடைய தாயே அவளைப் பிரம்பு கொண்டடிக்கும்படி பள்ளிக்கூடத் தலைவியைக் கேட்டுக்கொண்டிருப்பது முண்டாம். வாத்தியாரம்மைக்குக் கீழ்ப்படிந்து நடவாமல் சற்றுத் துடுக்காயும் பேசினளாம். அக்குற்றத்துக்காகவே அடிக்கப்பட்டாளாம். அவள் அடிபடும்போது துள்ளிக் குதித்து அடிபடக்கூடாத விடங்களில் அடிப்படப்பெறும் வழக்கமுண்டாம். அவளுடைய நன்மைக்காகவே யவள் கட்டிவைத் தடிக்கப்பட்டாளாம்," இது உண்மையா யிருக்கலாமென நம்பலாம். நமக்குமிவ்விதமான விஷயத்தில் அனுபோகம் உண்டு. ஒரு துஷ்டபையனை நாம் ஒருபொழுது அடிக்கும்போது அவன் தன் கையை கண்ணுக்குச் சரியாக தூக்கி விட்டான். உடனே நாம் அடிப்பதை நிறுத்தி அவனுக்குத் தகுந்த எச்சரிக்கைசெய்து பின் அவன்கையில் அடிக்கவேண்டியிருந்தது. பாடசாலை தலைமை உபாத்தியாயர்களும், தலைவி உபாத்திமார்களும் இவ்விதமானபிள்ளைகளிடத்தில் பக்குவமாக நடந்துகொள்ளவேண்டும். இப்படி இத்தலைவி செய்தது பிசகென்றே நினைக்கிறோம்.

---

முடிசூட்டல்:—நமது சக்கிரவர்த்தி அவர்கள் முடிசூட்டும் தினமும் அன்றுமறுநாளும் பாங்கிகளுக்கு விடுமுறையாகும்படி அறிக்கைப் பத்திரத்தில் தன் கையெழுத்து போட்டிருக்கிறார். முடிசூட்டுகிற தினம் சக்ரவர்த்தி சக்ரவர்த்தினி இவர்கள் இருவரும் 10½ மணிக்கு பக்கிங்காம் அரண்மனையைவிட்டு ஆபே என்னு மிடத்திற்கு போகப் புறப்படுவார்கள். இவர்கள் மிகவும் உன்னதமான இராஜாங்க கோச்வண்டியிலேறி அநேக சிற்றரசர்கள் புடைசூழ புறப்படுவார்கள். இது ஏறக்குறைய 1887ளு விக்டோரியா மகாராணி அம்மாள் கோல்டன் ஜூபிலி மகோற்சவத்தில் நடந்த ஏற்பாடுபோலவேயிருக்கும். சக்ரவர்த்தினி அன்றி இதர துரைசானிமார்களெல்லாம் வெவ்வேறு வண்டியில் ஏறிப்போவார்கள். எல்லாதூதர்களும் அந்நாளில் அங்கு வந்திருப்பார்கள் என்று எண்ணப்படுகிறது. இந்தசமாசாரம் இன்னம் முடிவாக தீர்மானிக்கப்படவில்லை. ஆபே என்னுமிடத்தில் சடங்குகள் 11 மணிக்கு ஆரம்பமாகி 2 மணிக்கெல்லாம் முடிவுபெறும். ஆகையால் விக்டோரியா மகாராணியார் முடிசூட்டு மகோற்சவத்தின்போது நடந்த சடங்குகளுக்கு இது குறைவாகவேயிருக்கும். அன்றையதினம் ஏழைஜனங்களுக்கு விருந்து அளிக்க, சக்கிரவர்த்தி 50,00,000 கிண்ணிகள் செய்ய ஒரு கம்பனிக்கு உத்திரவு கொடுத்திருக்கிறார். கிண்ணியின் மாதிரி மிகவும் அழகாக விருக்கவேணுமென்று கருதிரெண்டொரு கம்பனியாரை முன்னதாக மாதிரிகிண்ணம் செய்து தனக்கு காண்பிக்கவேணுமென்று திட்டஞ்செய்தார். அந்த கிண்ணியின் புறமாக சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினி இவர்களுடைய பிம்பங்கள் பதிவுசெய்திருக்கும். அன்று ஏழைகளுக்கு அக்கிண்ணத்தில் உணவுகொடுத்து அதை தன் முடிசூட்டல் ஞாபகார்த்தமினுமாக கொடுத்துவிடப்படும்.

## முக்கிய அறிவிப்பு.

☞ நமது பத்திரிகைக்கு பாக்கியுள்ள சந்தாதாரர்கள் ஜூன்மீ 15-உக்குள்ளாக சந்தாவை அனுப்பிவிடவேண்டும். அவ்விதம் அனுப்பாதவர்களுக்குஅம்மாதத்திய பத்திரிகை வி. பி. மூலமாக அனுப்பப்படும். மற்றவர்கள் தங்கள் சந்தாவை கூடிய சீக்கிரத்தில் அனுப்பவேண்டும். இப்படிச் செய்துவந்தால்தான் நமது பத்திரிகையைக் கிரமமாக பிரசுரிக்க முடியும். இன்னும் இதை விருத்திக்குக் கொண்டுவர உட்சாகத்தையும் கொடுக்கும்.

25உ ஏப்ரல்மீ 1902ளு
திருவல்லிக்கேணி.

C. S. இராமசுவாமி ஐயர்.
எடிடர் & புரொப்பரைட்டர்.
மாதர் மனோரஞ்சினி.

Printed at the Ripon Press Madras & Published by C. S. Ramaswamy Aiyer, Triplicane, Madras.

252
OFFICE OF THE REGISTRAR
REGISTERED
19 JUL. 190
MADRAS.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. IV } Madras: May 1902. { No. 3.
புத்தகம் ௪. } சென்னப்பட்டணம் 1902 மே௴ { இல. ௩.

## நமது பத்திரிகை.

நமது பத்திரிகையை பெண்கல்வி விருத்திக்காக 1899 வருஷம் மார்ச்சுமீ ஆரம்பித்தோம். இதுவரையிலும் இடையில்நேரிட்ட இடையூறுகளுக்கெல்லாம் இது தப்பித்து இப்பொழுது நான்காம் வருடம் ஆரம்பம் ஆகிறது. இப்பொழுது சுமார் 3 பக்கம் அதிகமாகச் சேர்த்திருக்கிறோம். சந்தாவைமாத்திரம் உயர்த்தவில்லை.

1902மீ ஜனவரிமீ முதற்கொண்டு லண்டன் மாநகரத்தில் பிரசுரமாகிற பியர்சன் என்ற மாதாந்தரப் பத்திரிகையில் சரத் குமாரகோஷ் என்பவர் இந்திய இரவுக்கதைகளெனத் தலைப்பெயரிட்டுச் சித்திரப் படத்துடன் மிக விநோதமாயும், யாவரும் ஆச்சரியப்படத் தகுந்ததாயுமுள்ள கதைகளை எழுதிவருகிறார். அக்கதைகளை இந்தமீ பத்திரிகை முதற்கொண்டு மொழி பெயர்த்து பிரசுரிக்கும்படியாக பியர்சன் பத்திரிகையின் ஆசிரியர் நமக்கு உத்திரவு அளித்திருக்கிறார். அவர் நமக்கு அனுப்பிய ஆறு கதைகளும் சென்றவாரத்தில் வந்து சேர்ந்திருக்கின்றன. ஜயகோபுரம் என்ற முதற்கதையை ம-ா-ா-ஸ்ரீ கே. ஜி. வெங்கிடசுப்பய்ய ரவர்களைக்கொண்டு மொழி பெயர்த்திருக்கிறோம். அது அடுத்த பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுளது. அதைஒருவரும் நமது உத்திரவன்றி பிரசுரிக்கக்கூடாது. அக் கதையைப்பற்றி சென்னையிலுள்ள மெயில், ஹிந்து, ஸ்டாண்டர்டு, டைம்ஸ் பத்திரிகாசிரியர்களும், இன்னும் பம்பாய் கல்கத்தா முதலிய விடங்களில் பிரசுரிக்கப்பட்டு வருகின்ற இந்திய டைம்ஸ், பைனியர், ஸ்டேட்ஸ்மென், இங்கிலீஷ்மென் முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களும் நல்ல அபிப்பிராயப்பட்டுத் தமது பத்திரிகைகளில் எழுதி யிருக்கிறார்கள்.

சித்திரப்படங்களையும் பிரசுரித்தால்தான் அழகாகவிருக்கும்; ஆனால் அவைகளை வாங்குவதினால் நமக்குமிகச் செலவாகும்; இப்பெருங்காரியம் நிறைவேறவேண்டுவதற்கு நமது கையொப்பகாரர்களி லொவ்வொருவரும்

தங்களாலியன்றமட்டும் ஜூன்மீ 15உக்குள் உதவிபுரிந்தால் நாம் அத்திரவியத்தைக்கொண்டு சித்திரப்படங்களை லண்டனிலிருந்து தருவித்து நமது பத்திரிகையில் பிரசுரிக்கமுடியும். இல்லாவிடின் சித்திரப்படமில்லாமலே கதைகளைமாத்திரம் பிரசுரிப்போம்.

நமது பத்திரிகையை நாமே சகலவேலைகளையும் செய்துவருவது யாவருக்கும் தெரியும். நமக்கு இதுவரையில் சுமார் ரூ. 400 நஷ்டமாயிருக்கிறது. இதை நாம் கவனிக்காமலே இப்பத்திரிகையை நமது அருமைக் குழந்தையைப்போலப்பாவித்துகஷ்டங்களையெல்லாம் சுகமாக எண்ணிக்கொண்டு இதை ஊக்கத்துடனும், பிரியத்துடனும் சுயநன்மையைப் பாராட்டாமல் நடத்திவருகிறோம். நாம்மாத்திரம் இவ்விதம் உழைத்துவந்தால் போதாது, ஒருவனால் எவ்வளவு காலம் இப்படிச் செய்யக்கூடும்? ஆனதுபற்றி இனிமேலாகிலும்நமக்குநஷ்டம்வராமல் பத்திரிகையைக் கிரமமாக நடத்திவர நமது சந்தாதாரர்கள் இதன் விருத்தியைக்கோரி தங்களா லியன்றளவு முயன்று கையொப்பக்காரர்களைச் சேர்க்கப் பிரயத்தினம் செய்வார்களென்று நம்புகிறோம். ஏழைகள்கூட இதைவாங்கி படிக்கவேண்டுமென்ற எண்ணத்தினால்தான் இதன் சந்தாவை நாம் உயர்த்தவில்லை. ஆகையால் தனவந்தராயுள்ள கனவான்களும், மாதர்களும் இதற்கு தங்களாலியன்றளவு பொருளுதவி புரிவார்களென்று நம்புகிறோம். அல்லது அவர்கள் 4 அல்லது 5 பத்திரிகைகளை வாங்கினாலும் நலமே. நமது பத்திரிகைக்குச் சந்தாதொகையைச் செலுத்தாதவர்கள் தயவுசெய்து கூடியசீக்கிரத்தில் செலுத்துவார்களென்றும் நம்புகிறோம். இம்மூன்றுவருஷகாலமாக நமது பத்திரிகையை ஆதரித்துவந்த சந்தாதாரர்களுக்கும், நிருபநேயர்களுக்கும், இன்னும் மற்ற கனவான்களுக்கும் நமது வந்தனத்தை யளிக்கின்றோம். இனியும் இவ்விதமே சந்தாதாரர்களும் நிருபநேயர்களும் நமது பத்திரிகையை ஆதரித்து வருவார்களென்று நம்புகின்றோம்.

இங்ஙனம்:
C. S. இராமசுவாமி ஐயர்,
மாதர்மனோரஞ்சினி எடிடர்.



**Indian Nights Entertainment**
*published in the*
PEARSON'S MAGAZINE
*by*
**A. Sarath Kumar Gosh.**
*(All Rights Reserved.)*

# இந்திய இரவுக்கதைகள்.

## முகவுரை.

மகாராஜா ஸ்படிக கட்டிலின்பேரில் வியாதியாய் படுத்திருந்தார்; அவர், படுத்திருந்த பட்டுப்பீதாம்பரத்தின்பேரில் அயர்ந்த கைகளால் தாளம் போட்டுக்கொண்டிருந்தார்; ஒரு அடிமை தன் மிருதுவான கையின்பேரில் கிண்ணத்தில் குளிர்ந்த ஷர்பத் ஏந்திக்கொண்டிருந்தான்; இன்னொருவன் வாசனை திரவியங்களடங்கிய வெற்றிலை பாக்குத் தட்டும், மற்றொருவன் சிறந்த பக்ஷணத் தட்டும் ஏந்திக்கொண்டிருந்தார்கள். மற்றுமொருவன் தலைப்பக்கத்தில் நின்றுகொண்டு உஷ்ணித்திருக்கும் நெற்றியைக் குளிர்ச்சி செய்யும்பொருட்டு பரிமளமான வெட்டிவேர் விசிறிகொண்டு மெல்ல விசிறிக்கொண்டிருந்தான்: ஆனால் மகாராஜாவோ பிழைக்கமுடியாத வியாதியுடனிருந்தார்.

அப்பொழுது அரண்மனை வைத்தியன் மிக அதிசயமாய் வியாதியைச் சொஸ்தப்படுத்த உபாயமொன்று யோசித்தான். அரண்மனை வாசலுக்கருகே, முத்துப்போல் வார்த்தைகளைச் சாதுர்யமாய்க் கோர்த்து மனதைக் கவரும்படி கதைகள் சொல்லக்கூடிய நரைத்த தலைக்கிழவன் ஒருவனிருந்தான். மகாராஜா சோர்ந்திருக்கும் சமயத்தில் அவர் காலத்தைப் போக்குவதற்காக அந்தக் கதை சொல்பவனைத் தருவித்தான்.

“ஓ ஞானியே! மனிதருடைய அபாயத்தைக் குறித்து ஒருகதை எனக்குச் சொல்லும். என் கழுத்திலிருக்கும் ஹாரத்தை உமக்கு வெகுமதி கொடுக்கிறேன்” என்று தலையணையில் சாய்ந்துகொண்டிருந்த அரசன் சொன்னான்.

ஜகத்ஜோதியே! தங்கள் சொல்லுக்குத் தடையுண்டா என்று தங்கமெத்தையின் நுனியில்படும்படி தன்தலையை தாழ்த்திக்கொண்டு கதையுரைப்போன் மறுமொழியுரைத்து, பிறகு ஜமக்காளத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு கதைசொல்ல ஆரம்பித்தான். மகாராஜாவினுடைய காரியங்களை உண்மையாய்க் குறிப்போனாகிய நான் கட்டிலின் மற்றப் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்து இதை வாசிப்போர்களுக்குப் பொருள் விளங்கும்படி இங்கே எழுதலானேன்.

நாராயண லாலாவினுடைய சங்கடங்கள்.

# I

# ஜயகோபுரம்.

பூரத்தினமே! தங்களுடைய அடிமை சிறியவனாயிருந்த காலத்தில் யமுனா கங்கா தீர்த்தங்களினிடையே யிருக்கும் புண்ணிய பூமியில் ஓர் அரசனிருந்தான். அவனுக்குக் கண்மணிபோல் ஒரே ஒரு பெண்குழந்தைமாத்திர மிருந்தது.

தேவளா ராஜகுமாரத்தி சிறந்த அழகுடையவள், தேவகன்னிகைக்குச் சமானமானவள். பார்வதி, சரஸ்வதி, லக்ஷ்மீ தேவிமார்கள் அவளுக்கு ஜனனகாலத்தில் திவ்விய வரப்பிரசாதங்களை யளித்திருந்தார்கள். அவளுடையகண்கள் கருநீரோடிய வைரங்கள் போலவும், உதடுகள் சிவந்த இரத்தினங்கள்போலவும், அவளுடைய முகம் உருக்கிய தங்கம்போலவும் பிரகாசித்துக்கொண்டு மிருந்தன. அவளுடைய கூந்தலோ கார்மேகத்தைப்போ லிருந்தது. அவளுக்குத்தகுந்த ராஜகுமாரன் உலகத்திலில்லவே யில்லை யென்று தனது முன்னோர் சாக்ஷியாய் அரசன் சொல்லுவான்; ஆதலால் பதினேழுவயதாகியும்கூட அவளைக் கன்னிகையாகவே நிறுத்தியிருந்தான். அவள் அரண்மனை உத்தியானவனத்தைச் சுற்றியிருந்த சண்பகத் தோப்புகளிலும், தாமரைத் தடாகங்களிலும், தனது பாங்கிமார்களுடன் விளையாடிக்கொண் டிருந்தாள். தனது தகப்பனைத்தவிர வேறொரு புருஷன் முகத்தை பார்த்தவளல்லள்.

அரசன் ஒருநாள் சாயங்காலம் சூரியாஸ்த மனத்தைப் பார்க்கப்போகையில் தன் மகளின் அறைக்கடுத்த ஒரு சிறிய குளத்தின் அருகே நின்றுகொண்டிருந்தான். அவனது ஹிருதயம் தன் காலடியிலிருந்த தண்ணீரைப்போல் அமரிக்கையா யிருந்தது. ஆனால் திடீரென்று அது கொந்தளிக்கும் கடல்போலாயிற்று. குளத்தில் ஒருபக்கத்தில் தற்செயலாய்ப் பார்க்க, அவனது நெஞ்சை ஈட்டி போல் குத்தி முகத்தில் இரத்தம் முழுவதும் உறிஞ்சப்பட்ட ஒரு தோற்றத்தின் பிரதிபிம்பந் தெரிந்தது.

அவன் மேலே நிமிர்ந்துபார்க்கவே, இராஜகுமாரத்தி தனியாய்த் திரையில்லாமல் திறந்திருந்த ஜன்னலண்டை நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்தில் புன்சிரிப்பும், கண்களில் காமக்குறிகளும் தோன்றின. ஜன்னலின்கீழ் கூப்பிய கைகளை மார்பின்மேல் வைத்துக்கொண்டு ஓர் வாலிபன் நின்றுகொண்டிருந்தான். கண்கள் கண்களையழைத்தன; ஹிருதயம் ஹிருதயத்தை ஆவலுடன் இச்சித்தது; போதும்!

வியாகூலத்துடன் அரசன் கூச்சலிடவே ராஜகுமாரத்தி திடுக்கிட்டு, திடீரென்று வரும் அபாயத்தை நீக்குவதுபோலத் தனது கைகளை மேலேவீசி கீழே மூர்ச்சையாய் விழுந்தாள்.

வாலிபன் அரசனிடம்வந்து முழந்தாளிட்டுத் தலையை முன்னிட்டுக்கொண்டு அடியை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். ஆனால் அரசன் கத்தியின்பிடியை விளையாட்டாக ஆட்டிக்கொண் டிருந்தான்.

“வெட்டிவிடுங்கள், ஓ இராஜாவே! ஏன் வெட்டவில்லை?” என்று வாலிபன் சந்தேகத்தினாலுண்டாகும் வியாகூலத்துடன் கூச்சலிட்டான்.

“துரதிர்ஷ்டமுள்ளவனே! பயப்படாதே, பூமாதேவி சீக்கிரம் உன் இரத்தத்தைப் பானம்செய்வாள். ஆனால் மாசற்ற என் கத்தியினால் அது பெருகுவது சரியல்ல” என்று அரசன் அடங்கின தொனியுடன் மறுமொழி சொன்னான்.



அவன் கையைத்தட்டவே பன்னிரண்டு காவற்காரர்கள் முன்வந்தார்கள். “உன்னுடைய கத்தியை உருவி அந்தத்தலையை வீசிவிடு” என்று முதலில் நின்றவனுக்கு அரசன் உத்திரவுசெய்தான். காவற்காரன் கனத்த கத்தியைவீசி ஒரு க்ஷணம் மேலேநிறுத்தி-பிறகு திடீரென்று நுனியை கீழே எறிந்தான்.

“என்னால் முடியாது! இவனிடத்தில் ஏதோ மந்திரமிருக்கிறது. என்று” வாய்க்குள் சொல்லிக்கொண்டான்.

அரசன் சப்தம் செய்யாமல் இரண்டாம் காவற்காரனுக்குச் சைகை காட்டினான். ஆனால் அவனும்வெட்டமுடியாமல், “இந்த மனிதனுக்கு ஒரு தேவதையின் சகாயமிருக்கிறது” என்றான்; அப்படியே மூன்றாவதவனும், நாலாவதவனும் 12-வதவன்வரையில் மற்றவர்க ளெல்லோரும் சொன்னார்கள்.

ஏதோ ஒரு மாயாசக்தி தங்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு விட்டது-என்று அவர்கள் சொன்னார்கள். ஒருக்கால் அவனை அவர்கள் அடையாளங்கண்டு பிடித்ததனால் தானிருக்கக்கூடும்.

அவன் அரசனுடைய மந்திரவாதியாகிய நாராயணலாலா; காசிதேசத்திய ஹீரலாலா என்ற பெயர்கொண்ட அவன் தகப்பன் அவனுக்கு முன் அரண்மனை மந்திரவாதியா யிருந்தான். ஒருக்கால் (அவனுடைய மந்திர சகாயத்தினால்) மற்ற எந்த மனுஷனாலும் அடையக்கூடாத இராஜகுமாரத்தியினுடைய பேட்டியை அடைந்திருக்கக்கூடும். ஒருவேளை அதனால் தான் அவனுடைய கொலையாளிகளின் நெஞ்சில் சூதாக பயத்தையும் உண்டுபண்ணி யிருக்கக்கூடும்.

“கத்தியை இங்கே கொண்டுவா, நானே வெட்டிவிடுகிறேன்” என்று அரசன் தனக்கருகாமையி லிருந்த காவற்காரனைக் கேட்டான்.

ஆனால் சிறுவன் தலை நிமிர்ந்து “ஓ இராஜாவே! உன் கத்தியினாலேயே வெட்டு. நான் க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவன்” என்று சொன்னான்.

பொய்! நீ என் அடிமையாகிய ஹீரலாலாவினுடைய பிள்ளை, பிரயோஜனமற்ற பிள்ளை.

“ஓ இராஜாவே! ஜனங்கள் சொல்லும் பிள்ளை! எனக்கு உயிரளித்தவன் ஒரு இராஜபுத்திர தகப்பன்” என்று சொல்லி தன் தலையைப் பின்சாய்த்து இராஜாவின் முகத்தைக் குறிப்பாய் விழித்துப்பார்த்தான்.

“என்மார்பில் அணைத்து உனக்கு பால் வார்த்து வளர்த்தேன். உன்னைமிகப் பிரியத்துடன் காப்பாற்றிவந்தேன். என் கிருபைகளால் உன்னை அலங்கரித்து வந்தேன். பொய் சத்தியமுள்ள துரோகியாய் விட்டாய்; என் தலைக்கு அபவாதம்கொண்டு வந்து விட்டாய்” என்று அரசன் சொன்னான்.

பக்கத்தில் நின்றுகொண் டிருந்தவர்கள் வாலிபனுடைய குற்றமென்ன தென்று அறிவதற்கு இதுதான் முதல் குறிப்பு.

“ஓ இராஜாவே! பூரணசந்திரன் புழுவின்பேரிலும் பிரகாசிக்கலாம்!”

“ஆனால் புழு பூரண சந்திரனுக்கு ஆசைப்படக்கூடாது!”

அவன் புழுவல்ல. இராஜகுமாரியின் பாக்கியத்தை தன் பாக்கியத்துடன் ஒப்பிடும் பொருட்டு அவ்விதம் தன்னைத்தான் சொல்லிக்கொண்டான்.

“ஓ அரசனே! க்ஷத்திரியர்கள் இராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள்” என்று நாரையைப்போல இரைந்து வாலிபன் சொன்னான்.

அச்சொற்களில் நிறைந்திருந்த இறுமாப்பின் முன் எப்பேர்க்கொத்த அவமானமும் நிற்கவில்லை. இதுதான் அவனுடைய கடைசி உபாயம்.

இந்தப் பந்தயத்தின் முடிவின்பேரில் அவன் உயிர்மாத்திரமல்ல இன்னும் விலையுயர்ந்த சில விஷயங்களும் சார்ந்திருந்தன.

வருணாசிரம விதிகள் இராஜாவின் நிலையற்றபுத்திக்கு மேற்பட்டவை; அவை பூர்வ வினையில் உற்பத்தியானவைகள்; தேவதைகளின் அநுக்கிரகம்.

வானத்திலிருந்து தலையின்பேரில் இடி விழுந்தாற்போல் பேசக்கூடாத கோபமூண்டு பிரமித்து அரசன் நின்றான்.

"ருசுபடுத்து, அதிக பிரசங்கி நாயே! உனது க்ஷத்திரிய வம்சத்தை ருசுபடுத்து"

"அதுதான் என் வேண்டுகோள்" இச்சொல்லம்பு அரசன் மனதைக்குத்த சாவகாசம் கொடுத்து, வாலிபன் கொஞ்சம் தாமதித்தான்.

அரசனே ருசுகேட்டான். அவன் உத்திரவாய் விட்டது. சாட்சியத்தை அவன் பார்க்கவே வேண்டும்.

"கடும் பரிக்ஷைக்கு என்னை உள்ளாக்கு. அது இராஜபுத்திரர்களுக்கு சுதந்திரம். நான் மரித்தால் பொய்யன். காயப்படாமல் தப்பினால் நீ சாற்றிய குற்றமற்றவனாவேன். பரமேசுவரனே எனக்கும் என் அரசனுக்கு மிடையிலிருந்து நியாயஞ்சொல்லட்டும்."

"அப்படியே ஒருதடவை யல்ல ஆறு தடவை யம தரிசனம்கண்டு மரணத்தை யடைவாய்; உன்னைக்கொன்ற பாவம் உன் தலைமேலேயே யிருக்கட்டும். ஜய கோபுரத்தின் மேல் உன் விதியையடை, நான் சொல்லியாயிற்று."

"ஒரு தடவையல்ல, ஆறுதடவை யமனை ஜயித்தால் என்னுடைய வெகுமதியென்ன?"

அது மிக தைரியமான கேள்வி; விதி மூண்டவன்தான் கேட்கத்தக்கது.

"உன்னுடைய க்ஷத்திரிய வம்சம் அதன் வெகுமதியைதானே காணும்" என்று அரசன் அளவில்லாத வெறுப்புற்று புன்சிரிப்புடன் அரண்மனைக்குள் சென்றான்.

இவன் இங்கே ஊர்த்தசுவாசம் விட்டுக்கொண்டு படுத்திருக்கையில் இது அவன் கண்முன் ஆடின ஒருபொய்யான நம்பிக்கையோ? அரசன் தன் சொற்களை சத்தியமாகச் சொன்னானோ? பைத்தியம் பிடித்த ஆவலுடன் அவசரமாய் நம்பிக்கையைக் கைப்பிடித்தான்.

ஆனால் காவற்காரர்கள் அவன்பேரில் விழுந்து சங்கிலிகளால் அவனைக் கட்டி அரண்மனைக்குள்ளே கொண்டுபோனார்கள். ஆயினும் ஓர் இருண்ட வழியில்போய்க் கொண்டிருக்கையில்—எங்கிருந்தோ தெரியாது—"பயப்படாதே காத்துக்கொண்டிரு, குறிப்பாய் பார்த்துக்கொண்டிரு, ஜயத்தை எதிர்பார்" என்று ஒரு சிறிய கீச்சுக் குரல் கேட்டது.

அவ்விராத்திரி அவர்கள் அரண்மனைவாயிலில் உட்கார்ந்துகொண்டிருக்கையில் ஒரு காவற்காரன் "அண்ணே! அது யாருடைய குரல்" என்று மற்றொருவனைக் கேட்டான்.

"ஒரு பையனது தான், சந்தேகமென்ன" என்று கைதியினுடைய குற்றத்தை யறியாத மற்றவன் சொன்னான்.



"ஐயன்மீர்! மன்னியுங்கள், அது ஒரு ஸ்திரீயினுடையது" என்று வாசலண்டை போய்க்கொண்டிருந்த ஒருவன் குசுகுசென்று சொன்னான்.

அவனை அவர்கள் உற்றுப்பார்த்தார்கள், உச்சியில் பிச்சைக் குடுமிதவிர அவன் தலைமுழுவதும் சிரைத்திருந்தது. மேலே ஒன்றும் போர்த்திராத அவன் மார்பிலும் கைகளிலும் தானே செய்துகொண்ட புண்ணின் காயங்களிருந்தன. அவன் நெற்றியில் அகலமாய் நாமமிருந்தது. ஒருக்கால் மற்றக்காவற்காரர்களிடத்திலிருந்து அரசனுடைய கோபத்தைப் பற்றி இவன் கேட்டிருக்கக்கூடும்.

அவர்கள் அவனை அடையாளம் கண்டுபிடித்தார்கள். பதினேழு வருடங்களுக்கு முன் அவன் திடீரென்று அந்த ஊருக்கு வந்தான்-அதாவது காசிதேசத்து ஹிரலால் அரசனிடம் வேலை ஒப்புக்கொண்ட வருஷம்தான். அவன்யாரோ, அவன் தகப்பன் யாரோ, அவன் பாட்டன் யாரோ, யாருக்கும் தெரியாது. அவனுக்கு இராமகிருஷ்ணனென்றபெயர்; ஏனெனில் 'அவன் கிருஷ்ண, இராமாவதாரங்களெடுத்த விஷ்ணுவின் பக்தன்.

அவன் ஏழைகளுடனும் ஜாதியற்றவர்களுடனும் கலந்து பிச்சைக்காரர்களுடன் சாப்பிடுவான். ஆயினும் ஒவ்வொரு காலங்களில் அரைகுறையாகச் சொன்ன சிலவார்த்தைகளின் தொனியினால் அவன் அதிகாரம் செய்யப் பிறந்த மனிதன் என்று தெரியும், தவிர, ஒவ்வொருவேளை அவனுடைய பார்வை உலகத்தில் ராஜ ராஜாக்களும் பயப்படத்தக்கதா யிருக்கும். ஆனால் இப்பொழுது அவன் பக்தன்தான், ஜனங்களுக்கு உபதேசம் செய்பவன்.

தொங்கிய புருவத்தின்மேல் தனது மெல்லிய ஆள்காட்டி விரலை வைத்துக்கொண்டு இருவரையும் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டு சிரித்து ஐயன்மீர்! அவர்களெல்லாம் ஒன்றுதான்; ஸ்திரீகள் எப்பொழுதும் புத்திமானைவிட சௌந்தரியவானையே இச்சிப்பார்கள். இவளுடைய குரல் மறுபடியும் கேட்கும் என்று சொல்லி அறியப்படாத இரகசியச் சொற்களுக்கு பொருள் சொல்லென்று அவர்கள் கேட்குமுன்னர் இருட்டில் அந்தரத் தியானமானான்.

"பண்டிதன், தத்துவ சாஸ்திரி. வரப்போகிற கடும் பரிக்ஷையிலும் அவனைப் பார்க்கலாம்" என்று முதல்வன் சொன்னான்.

ஆ! ஆறுவது வரையிலும்! என்று இரவின் இருளிலிருந்து கண்டத் தொனி மறுமொழி சொல்லிற்று.

(இன்னும் வரும்) K. G. Venkatasubbiar B. A. B. L. & L. T.

## உத்தரராம சரித்திரம்.

# குச, லவர் சரித்திரம்.

(12-வது பக்கத் தொடர்ச்சி.)

(97) அன்புடைய தந்தையரின் அடிமலரை வணங்கி
இன்பமுள்ள அயோத்திநகர் போகவிடை கேட்டாள்
(98) மைதலியாள் ஜானகிக்கு வரிசைநிரம்ப கொடுத்து
மன்னரந்த ஜனகராஜா வாழ்த்திவிடை யளித்தார்
(99) செம்பொன் மணித்தேரேறி தோழிமார்கள் சூழ
அன்புடனே அயோத்திவந்து அபிராமரைப் பணிந்தாள்

(100) அந்தமுள்ள மாமிமாரின் அடிதனிலே வணங்க
வந்துநின்ற ஜானகியை வாழ்த்திமன மகிழ்ந்தாள்
(101) பரிவுடனே ரகுராமர் பரதர்தம்மை அழைத்து
அறமுனிவர் வசிஷ்டதம் அனுமதி யின்படியே
(102) சீமந்தக் கலியாண ஓலைதன்னை எழுதி
சீக்கிரமாய் ஜனகருக்குப் போகவிடு மென்றார்
(103) ஸ்ரீராமர் உரைத்தவுடனே சூரபரதாழ்வார்
சீரானகணக்கர் தம்மை சீக்கிரமா யழைத்து
(104) வாசித்தசபை யோருடனே மந்திரி மாருடனே
ஆகூஷியான மண்டபத்தில் காக்ஷிபெற விருந்து
(105) ஸ்ரீகோஷந்தலை யெடுத்து தேசகாலம் பார்த்து
நாள்கள் நல்லதாயமைத்துநல் முகூர்த்தம் வைத்தாள்
(106) வெள்ளியோலை தனையெடுத்து விரும்பி ரண்டும்சீவி
தங்கப்பொன்னோலைகளின் தலைப்புரங்கள் நறுக்கி
(107) மணிபதித்த எழுத்தாணி வலக்கையிலே பிடித்து
வகைவகையாய் வாசகங்கள் மணிப்பரதர் எழுதி
(108) ஒச்சமில்லாச் சோபனத்தை ஓலையிலே எழுதி
தொட்டுமெஞ் சள்தடவி தூதர்கையில் கொடுத்தார்
(109) வாங்கியந்த தூதர்களும் வெகு பிரியத்தோடு
பலபேர்கள் வாழுகிற பட்டணங்கள் சென்று
(110) ஸ்ரீராமர் கலியாணம் திக்கெங்கு மறிய
புகழ்வீரர் கலியாணம் பூமியெங்கும் உரைத்தார்
(111) ஸ்ரீமிதிலைதனில் புகுந்து ஜனகருக்குஞ் சொல்லி
ஸ்ரீராமர் தூதர்களும் தண்டனிட்டு இருந்தார்
(112) ஜனகர் சதானந்தருடன் தாமிருந்த கொலுவில்
அவர்கனிவாயும் முறுவலித்து களிப்புடனே உரைப்பார்
(113) தாடகையின் தலையரிந்த தாசரதி ராமர்
ஜானகிமனோ கரனார் மனஸ்தாபம் தீர்த்தார்
(114) தாசரதி ராமருட தம்பிபர தாழ்வார்
சதுராக ஓலைதன்னை எழுதிவர விட்டார்
(115) மங்களங்கள் சொன்னவர்க்கு வெகுமதிகள் கொடுத்து
மன்னரந்த ஜனகராஜர் மந்திரி மாருடனே
(116) (என்) பொற்கொடிக்கு அங்கமணி எடுக்க நாள்பாரீர்
(என்று) புகழுடைய ராஜாவும் சொல்லி வீற்றிருந்தார்
(117) ஆனைமேல் அங்கமணி அழகாக நிறைத்தார்
குதிரைமேல் அங்கமணி கோப்பாக எடுத்தார்
(118) ஜனகர் சதானந்தருடன் தேவியுடன் கூட
சீருடைய அயோத்தி தன்னில்வந்து மவர்சேர்ந்தார்
(119) ஜனகருடைய வரவுதன்னை தூதர்வந்து சொல்ல
ஸ்ரீராமர் அதுகேட்டு சிந்தைமெத்தமகிழ்ந்து



(120) (தம்பி) வாய்த்தபுகழ் ஜனகராஜா (தன்) மாதுடனே வாரார்
(உன்) மணிக்கடகக் கைக்கொடுத்து வரவழையு மென்றார்
(121) ஸ்ரீராமர் ஏவலுமே ஸ்ரீபரதர் நடந்து
செம்பொன்மணி தேங்காயைக் கைக்கொடுத்து அழைத்தார்
(122) அழகாஸனத்தில் இருத்தி அள்ளிமலர் தூவி
அபிராமரும் தம்பியரும் அடிவணங்கி இருந்தார்
(123) சித்தடியாள் ஜானகியும் சிலம்புகொஞ்ச நடந்து
செல்வமுள்ள தங்கையரும் தானும்வந்து பணிந்தாள்
(124) மங்கையர்கள் நாலுபேரும் மாதா அடிபணிய
மயிர்க்குழலை முகந்துகொண்டு மாதுமெடுத் தணைத்தாள்
(125) பூரித்துமே மனமகிழ்ந்து புகழ்வீரர் நால்வர்
பொன்பூவைக் காதில்வைத்து மாமியடி பணிந்தாள்
(126) இலையுடனே பாக்குகளும் ஏலம் கற்பூரம்
வரிசையுடனே கொடுத்து வாழ்த்திமன மகிழ்ந்தாள்
(127) நல்லிடையில் பீதாம்பரம் நாலு திக்கும் விளங்க
மாணிக்கக் கிரீடம்மின்ன வெகுபணதி யசைய
(128) மாணிக்கத்தால் மோதிரங்கள் வகைவகையாய் மின்ன
வந்தசபையோர்கள் தம்மை கையமர்த்தும் அழகும்
(129) மகலக்ஷ்மி வீற்றிருக்கும் வலமார்பின் அழகும்
மணவாள ராமர்தன்னை மாமியருங் கண்டு
(130) இந்தகாகுஸ்த ராகவரை கணவராக அடைய
என்காரிகையாள் என்னதவம் செய்தாளோ முன்னே
(131) என்மைதலியாள் ஜானகியை மணமாலை சூட
மன்னராமர் பாக்கியங்கள் செய்தாரோ முன்னே
(132) (என்று) காகுஸ்தரை சீதையரை கண்டுமன மகிழ்ந்து
கலியாணி தேவியரும் களித்துப் பார்த்திருந்தாள்
(133) ஸ்ரீராமரை பயந்தெடுத்த கௌசலை மாதாவும்
செம்பவழவாய் திறந்து சுமித்திரையோ டுரைப்பள்
(134) அபிராமர் தேவியுடன் அன்புள்ள மாதாவை
(நம்ம) சித்திரப்பொன் கூடத்திற்கு சென்றழையு மென்றாள்
(135) கௌசலையும் ஏவலுமே சுமித்திரையு மெழுந்து
காக்ஷியுள்ள அரண்மனையின் தாசிமாரை யழைத்து
(136) பளிங்குப் பொன்னாலிழைத்து பட்டுமேல் கட்டி
பவழத்தினால் தூண்நிறுத்தி பன்னீர்கள் தெளித்து
(137) தங்கப் பொடிகள்தூவி சந்தனத்தால் மெழுகி
முத்தாலே கோலமிட்டு முன்காவி யிட்டு
(138) சித்திரமும் பொன்பூவும் சேர்ந்தழகாய் மின்ன
தூண்டா விளக்கெரிய வண்டு கீதம்பாட
(139) சித்திரமாய்ப் பஞ்சவர்ண கிளிகளது கொஞ்சும்
சோதிரகு ராமருடன் மண்டபத்தி னடுவே
(140) கலியாணி தேவியரை கடுக அழையென்று
காரிகையாள் சுமித்திரையும் தாசியுடன் சொன்னாள்.

(இன்னும் வரும்)

R. S. சுப்பலக்ஷ்மி.

## துரௌபதியின் சரித்திரம்.

## 3. பாண்டவர்கள்.

(43-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனதுபற்றி அவரே எனக்கு கணவராக அமையவேண்டுமென வேண்ட
தகப்பன் மிக மகிழ்ந்து தனது குமாரத்தியை திருதராஷ்டிர மகாராஜ
னுக்கு விவாகம் செய்வித்தார்.

பின்பு இந்திபோஜன் பரம்பரையில் தோன்றிய சூரசேனன்
என்பவனுக்கு ஒருபுத்திரியுண்டு. அவள் அழகில் இலக்ஷ்மியையும்,
கல்வியில் சரஸ்வதியையும், கற்பில் அருந்ததியையும் ஒத்து,
யாவரும் புகழும்படியாக வாழ்ந்துவந்தாள். அவள் வசுதேவரு
டைய சகோதரி. கிருஷ்ணபகவானுக்கு அத்தை. அவளை பிருதையென்றும், குந்தியென்
றும், பெயரிட்டு அழைப்பார்கள். அவள் பாண்டு மகாராஜனை மணம்புரிந்தாள். மறுபடி
யும் பாண்டுமகாராஜன் மந்திரதேச அரசனாகிய சல்லியனுடைய சகோதரியாகிய
மாத்திரியையும் மணம்புரிந்தார். திரிதராஷ்டிரனுக்கு 100 புத்திரர்களும், துஸ்
ஸலைஎன்ற ஒரு புத்திரியும் ஜனித்தார்கள். 'பாண்டுமகாராஜனுக்கு ஐந்து புத்திரர்கள்
உதித்தார்கள். இவர்களின்பேர் தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்.

இவர்களை வெகு அன்பாகஙாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்
துவருகையில பாண்டுமகாராஜன் இறந்துபோனான். அவருக்குச் செய்யவேண்டிய கிரி
யைகளைச் செய்தானபின்பு திருதராஷ்டிரன் தனது குழந்தைகளுக்கும் தனது சகோத
ரன் குழந்தைகளுக்கும் துரோணாசாரியரைக் குருவாக நியமித்து கல்வி புகட்டிவரும்படி
அவர்க்குஆஞ்ஞாபித்தார்.பஞ்சபாண்டவர்களாகியதருமன் முதலானோர் மிக புத்தி சாதுர்
யமுள்ளவர்களென்றும்,மகாதீரர்களென்றும் பேரெடுத்தார்கள். துரியோதனன்'முதலா
னோர் அவ்வளவுசாமர்த்தியவான்களென்றும்பாண்டவர்களுக்குநிகரென்றும்பேரெடுக்க
வில்லை. இதனால் துரியோதனனும் இவன் தம்பிமார்களும் பஞ்சபாண்டவர்களின் மீது
மிக்க பொறாமைகொண்டு, துரியோதனன் பலவகையினால் பீமனைக்கொல்ல நினைத்
தான். ஒரு சமயத்தில் பீமனை கங்காநதியில் ஸ்நானம்செய்ய அழைத்துக்கொண்டு
போய் அதில் தள்ளிவிட்டான். இதற்கு பீமன் தப்பித்துக்கொண்டான். மற்றொரு தட
வை இவனை விருந்துண்ணவரும்படி அழைத்து விஷமிட்ட அன்னத்தைமாத்திரம் இவ
னுக்குப் போட்டான். இன்னும் பலவிதமான துரோகங்களையெல்லாம் செய்தான்.
இவைகளுக்கெல்லாம் தப்பி பிழைத்தான் பீமன். துரியோதனனுக்கு இன்னும் பொறா
மை யதிகரித்துக்கொண்டே வந்தது. துரோணாசாரியருக்கும் பாண்டு புத்திரர்களிடத்
தில்தான் மிகப்பிரியம்; ஏனெனில் அவர்களுக்கு ஒரு விஷயத்தைப்பற்றி ஒரு தடவை
சொன்னமாத்திரத்தில் கிரகித்துக்கொள்வார்கள். துரியோதனன் முதலியவர்களுக்கு
அச்சாமார்த்தியம் கிடையவே கிடையாது. இப்படி யிருக்கையில் வீஷ்மர் துரோணாசா
ரியரையும் குரு குமாரர்களையும் அழைத்துவரும்படி கட்டளையிடவே, வேலைக்காரன்
உடனேசென்று "ஐயா, உம்மையும் உமது மாணாக்கர்களையும் உடனே இட்டுக்கொண்டு
வரும்படியாக வீஷ்மர் கட்டளையிட்டிருக்கிறார்" என்று சொல்லவே, துரோணாசாரி
யார் தமது 105 மாணாக்கர்களையும் அழைத்துக்கொண்டு வந்துசேர்ந்தார். அரசர்களெ



ல்லாம் துரோணாசாரியருக்கு மரியாதைசெய்து பொற்பீடத்திலிருத்தி சோடச
உபசாரஞ்செய்தார்கள். துரோணாசாரியார் அவர்களுக்கெல்லாம் ஆசீர்வாதம் செய்து
"ஓ அரசர்களே" இது நல்ல முகூர்த்தகாலமாதலால் வில் அரங்கேற்றுங்கள் என்று
சொன்னார். அவ்விதமே மாணாக்கர்கள் தாங்கள் கற்ற பற்பல வித்தைகளையெல்லாம்
யாவரும் மெச்சும்படி வெகுநன்றாக விளையாடினார்கள். துரியோதனன் பொறாமை
யால் பீமனைக்கொல்ல இதுதான் சமயமென்று எண்ணி கதாயுதத்தை எடுத்து பீமனுடன்
விளையாடுகையில் பீமன்மார்பில் அடித்தான்; பீமன் இதைக்கண்டு வெகு சாக்கிரதை
யாக நாம் விளையாடவேண்டும், சத்துருவை அடிப்பதுபோலல்லவா நம்மை அடித்தா
னென்று எண்ணி,பக்குவமாக விளையாடினான்: துரியோதனன் மறுபடியும் ஒரு அடி அடி
க்கவே பீமன் மிக சினங்கொண்டு அவனை எதிர்த்து கொரேமாய் யுத்தம்செய்தான்; இவ்
விதம் செய்வதைக்கண்ட அரசர்கள் இதென்ன? விளையாட்டு வினையாக முடிந்ததே.
ஆயுதப்பயிர்ச்சியைக்காண்பிக்கவந்தஇவர்கள்விரோதங்கொண்டுயுத்தம் செய்கிறார்களே!
ஏ துரோணாசாரியரே! இவர்களைச் சமாதானம்செய்யும் என்று சிலர் சொன்னார்கள்.
உடனே துரோணாசாரியர் புத்திரன் அஸ்வத்தாமன் எழுந்து ஏ இராஜபுத்திரர்களே!
ஆயுதப் பயிர்ச்சியைக் காட்டவந்த நீங்கள் இவ்விதம் விரோதங் கொண்டு சண்டைசெ
ய்யலாமா வென்று சொன்னான். உடனே அவர்கள் ஒதுங்கி விட்டார்கள். அர்ச்சுனன்
வந்து வில்லையெடுத்து குருவை வணங்கியபின் மந்திரோபதேசத்தோடு தொடுத்துவிட்
டான். அதுவானத்தி லெழுந்து, மின்னல் இடி, மழை மேகங்களையும், காற்றையும்,
பர்வதங்களையும் இன்னும் பற்பல விநோதங்களையும் காண்பித்தது; இன்னும் அநேக
பாணங்களைத்தொடுத்து அருமையான செய்கைகளையும் செய்து காட்டினான். அங்
கிருந்த யாவரும் அர்ச்சுனனைப் புகழ்ந்தார்கள்.

உடனே கர்ணன் எழுந்திருந்து சிறுவனாகிய அர்ச்சுனன் செய்த சொற்பவிளை
யாட்டைக் கண்டு பரமாதமாக புகழ்ந்து பேசினீர்கள். நான்கற்ற வித்தையை இதோ
காண்பிக்கிறேன் என்று சொல்லி வில்லை யெடுத்து தான் கற்றவைகளை யெல்லாம்
வெகு சாதுரியமாக விளையாடிக் காட்டினான். சபையோர்கள் இவன் செய்ததைக்
குறித்து மிக்கப் புகழ்ந்தார்கள். துரியோதனன் முதலியவர்கள் கர்வத்தினால் அர்ச்சுன
னைப் பார்த்து இளித்தார்கள், கைகொட்டி எளனம் செய்தார்கள். அர்ச்சுனன் மாத்திரம்
வெட்கித்து ஒரு மாதிரியாகவிருந்தான். கர்ணன் அர்ச்சுனனைத் தன்னுடன் வில்வித்தை
யைச்செய்ய வருகிறாயா வென கேட்டான். அர்ச்சுனன் "நீ தேர்ப்பாகன் பிள்ளையாகை
யால் உன்னுடன் சமமாக விளையாட வரமாட்டேன்" என பதிலுரைத்தான். உடனே
கர்ணன் "அடே பற்குனா! நான் தேர்ப்பாகன் பிள்ளைதான். நீ வில்லெடுத்துதைரியமாய்
என்னுடன் போர் செய். நான் நிச்சயமாய் உன் கமலத்தைக் கொய்து அரங்கு பூசை
செய்கிறேன்" என்றான். அர்ச்சுனன், "அடே! நீச்சா! உனக்கு இவ்வளவு துடுக்கும்
தைரியமும் எங்கிருந்து வந்ததடா? நீ சொன்னபடி செய்ய நீ உயிருடன் இருந்தாலல்
லவோ செய்வாய்? அதற்குள் உன் தலையை பூமியில் உருட்டிவிடுகிறேன். ஒரு சமயம்
இங்குள்ளவர்கள் தடுத்தால் எச்சமயத்திலாவது அப்படிச் செய்யாமல் விடேன். நான்
பிடித்திருப்பது வில்லல்ல, நானும் க்ஷத்திரியனல்ல" வென்று சபதங் கூறினான். யாவ
ரும் இதென்ன விபரீதமாக விருக்கிறதே என திகைத்துக் கொண்டிருக்கையில் தவ
சிரேஷ்டராகிய கௌதமர் எழுந்து இருவரையும் பார்த்து அப்பாகுழந்தைகளே! வில்
நாணியைத் தளர்த்துங்கள்!! என சொன்னார். உடனே பெரியவர் வார்த்தையைத்
தட்டாமல் இருவரும் கையிலுள்ள வில் நாணியைத் தளர்த்தினார்கள்.

வீஷ்மர் மிக கோபங் கொண்டு பின்வருமாறு சொல்லுகிறார். "ஓ சபையாரே! நமது குழந்தைகளாகிய குரு குமாரர்களை அரங்கேற்ற வைத்த சமயத்தில் இந்த தேர்ப் பாகன் மகன் தனது வித்தையைக் காண்பிக்க வந்தான். வித்தை எல்லாருக்கும் சம மென்று இவன் திறமையையும் காண்பிக்கச் சொன்னோம், அப்படிக்கன்றி குழந்தையாகிய அர்ச்சுனனை பலவிதமாக திட்டினதுமல்லாமல் அவன் கமலத்தைக்கொய்து அரங்கு பூசைசெய்கிறேன் என்று சொன்னது தப்பல்லவா? இவனுக்கு இவ்வளவு துணிவா? உங்களுக்கு இது தருமமாக விருக்கின்றதா?

இவ்வார்த்தைகளைக் கேட்ட மற்றவர்கள் வீஷ்மருக்கு இனிய வசனங்களைச் சொல்லி சமாதானப் படுத்தினார்கள். கிருபாசாரியரும் உடனே "கர்ணன் தேர்ப்பாகன் புத்திர னென்பதற்குச் சந்தேகமுண்டோ? இவன் இழிகுலத்தோ னல்லவா! இராஜாதி இராஜனாகிய பாண்டுவின் குழந்தையை எளனமாக இவன் பேசலாமா" வென மிகுந்த கோபத்துடன் சொன்னார். இவைகளைக் கேட்ட சபையார் யாவரும் நடுங்கினார்கள். துரியோதனன் எழுந்து கிருபா சாரியருக்கு மனவருத்த முண்டாகும்படி பேசியபின் கர்ணனை அங்க தேசத்துக்கு அரசனாக்குகிறேன் என்று சொல்லி அவ்விதமே செய்வித்தான். வீஷ்மர் முதலியவர்கள் குழந்தைகளின் விசேஷ கல்விப் பயிர்ச்சியைக் குறித்து துரோணாச்சாரியரைப்பலவிதமாகத் துதித்து அவரவர் தங்களிருப்பிடத்திற்குச் சென்றார்கள்.

(இன்னும் வரும்.)

## வைரமும், தவளைக் குஞ்சும்.

குழந்தைகள்: "தாதா! அன்றைய ராத்திரி தாங்கள் சொல்லிய விநோத விருக்ஷமும் மோகினியும் என்ற கதை வெகு நன்றாகவிருந்தது, இன்றையதினம் ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி உற்சவமாகிய குதிரைவாகன சேவையைப் பார்த்து வந்தோம், தூக்கம் வரவில்லை; தயவுசெய்து ஒரு சிறிய கதை சொல்லுங்கள்.

தாதா: குழந்தைகளே! நாழிகை ஆய்விட்டது. ஆயினும் உங்களுக்கு "வைரமும் தவளைக்குஞ்சும்" என்ற கதையைச் சொல்லுகிறேன்; கவனமாய்க் கேளுங்கள்.

### உ-வது கதை.

மதுராபுரி பட்டணத்தில் அம்பாலிகை என்னும் மாதுக்கு சந்திரவதனி, சுந்தரி என்கிற இரண்டு குமாரத்திகளிருந்தார்கள். தாய் சந்திரவதனிமேல் அதிக பிரியங்கொண்டு தன்னோடிருக்கச் செய்து சுந்தரியை வேலை ஆள்களோடு சமையல் செய்யுமிடத்திலேயே காலைமுதல் மாலைவரையில் சகல பணிவிடைகளையும் புரியும்படி கட்டாயப்படுத்தி வந்தாள். சுந்தரி தனக்குறிய சகல வேலைகளையும் செய்வதோடு தன் வீட்டிற்கு ஒன்றரை மையில் தூரத்திலுள்ள ஓர் நீர் ஊற்றிற்குப்போய் ஜலம்திரட்டிவர. வேண்டியதாக விருந்தது. ஓர் நாள் சுந்தரி தன்னந்தனியே இருந்து ஜலம் எடுக்கும் சமையத்தில் அவ்வன தேவதை ஓர் கிழவி உருகொண்டு அவள் அருகில் சென்று தாகத்திற்கு ஜலம் தாவென கேட்க சுந்தரி வெகு அனுதாபத்தோடு தண்ணீர் குடிக்கக் கொடுத்து உபசாரவார்த்தைகளை மொழிந்தாள். இவ் வார்த்தைகளைச் செவியுற்ற அவ்வன தேவதை சுந்தரிமேல் அதிக பிரியங்கொண்டு அவள் பேசும் போதெல்லாம் ரோஜா புஷ்பங்களும், முத்தும், வைரமும், விழும்படி வரமளித்தாள்.



சுந்தரி தண்ணீர்கொண்டு வீடு சேர்ந்தபோது கால தாமதம் செய்ததாக கடுங்கோபங் கொண்ட தாய் அவளை ஏசிபேசி புடைக்க வருங்கையில் அடிக்குப் பயந்து சுந்தரி அலரி அழுது தாயே! இது என் குற்றமன்று; நீர் ஊற்றண்டை கண்ட ஓர் கிழவியின் நிமித்தம் நான் நேரம்சென்று வரநேரிட்டதென புகலவே அவள் வாயினின்று முத்தும் புஷ்பமும் முறையே சொரிந்தன. இதைக்கண்ட தாய் ஆச்சரியமுற்று, என் அருமை மகளே! இவ்வரம் உனக்கு எப்படி வந்ததென்று கேட்டாள். அதற்குச் சுந்தரி தனக்கு ஒரு வனதேவதை இவ்வரத்தை யளித்தாளென்று சொன்னாள். உடனே அம்பாலிகை யானவள் ஆசித்து நேசித்துவரும் அருமை புத்திரி சந்திரவதனியையும் இவ்வரத்தை அடையும்படி தன் வீட்டிலிருந்த வெகு சித்திரவேலை அமைந்த ஓர் வெள்ளிக் கிண்ணத்தை அவள் கையில் கொடுத்து நீர் ஊற்றிற்கு வெகு துரிதமாய்ப் போகும்படி செய்தாள். சந்திரவதனி மிக்க கோப வேஷ்டை கொண்டவளாய் நீர் ஊற்றை அடைந்து ஜலமெடுக்கையில் தன் அருகில் வந்து தாகத்திற்கு தாவென்று கேட்ட கிழவிக்கு உனக்குத்தான் தொலைக்கவந்தேனே குடியுமென்று வெடுவெடுப்பாய்ச் சொல்லவே இவ்வார்த்தைகளைச் செவியுற்று கோபங்கொண்ட அத்தேவதை இவள் பேசும்போதெல்லாம் பாம்பும், தவளைக்குஞ்சுகளும் விழச்சபித்துச் சென்றனள். அவள் வீட்டிற்கு வந்தபோது தாய் "என் அருமை மகளே! வரத்தைப் பெற்றாயா" வென்று ஆவலோடு கேட்டதற்கு சந்திரவதனிப் பெற்றேன் அன்னையே! என்று புகன்றமாத்திரத்தில் பாம்பும் தவளையும் பலபலவென்று சொரியவே இவைகளைக் கண்ணுற்ற தாய் கடுங்கோபங்கொண்டு இவைகள் யாவும் சுந்தரியால் நிகழ்ந்தன; ஆகையால் இனி அவள் நமது கிரகத்தில் ஒருபோதும் இருக்க லாகாதென புடைத்து வீட்டிலிருந்து விரட்டிவிட்டாள். சுந்தரி காட்டின் வழியாய் கதறிச் செல்லுகையில் அங்குவேட்டையாட வந்திருந்த அப்பட்டணத்தின் இராஜகுமாரன் அவளைச் சந்தித்து அவளுடைய பரிதாபச்செய்தியைக் கேட்டு துக்கித்தான். அவள் அரசனோடு வார்த்தை யாடுகையில் அவள் வாயிலிருந்து விழுந்த ரோஜா புஷ்பமும் முத்தும் வைரமுங் அவள் பாதத்தருகே குவித்திருக்ககண்டு அவளை தன் இராஜகிரகத்திற்கு அழைத்துக்கொண்டு போய் தன் தந்தைக்குக் காட்டி அவர் சம்மதிபெற்று அவளைத் திருமணஞ் செய்துகொண்டான். சுந்தரி காலகிட்டத்தில் மதுராபுரியின் அரசியானாள்.

"பட்டவனுக்கு பாக்கியமுண்டு."

தாதா: என் அருமைக் குழந்தைகளே! நாழிகையானபடியால் நித்திரை செய்யுங்கள்; நாளையதினம் ஒரு புதிய வேடிக்கைக்கதை சொல்லுகிறேன். உங்கள் மதினி சுப்பலக்ஷ்மியும் ஊரிலிருந்து வந்துவிடுவாள் என்று சொன்னவுடனே குழந்தைகள் நித்திரைசெய்ய பள்ளியறைக்குச் சென்றார்கள்.

(இரண்டாவது கதை முற்றிற்று.)

---

# தென்னாலிராமன் கதை.

## தலைமறைவாகத் திரிந்தது.

ஒரு நாள் தென்னாலிராமன் ஒரு பெருத்த குற்றம் செய்தான். இராயர் மிக கோபங்கொண்டு உடனே சேவகர்களை யழைப்பித்து இன்று முதல் "தென்னாலிராமன் என்னெதிரே தலையைக் காட்டாமல் மறைவாக யிருக்க வேண்டும். அவ்விதம் செய்யாமற்போனால் அவன் தலையை வெட்டும்படியாக நான் உத்திரவு செய்திருக்கிறேன். நீங்கள் உடனே அவனுக்குத் தெரிவியுங்கள்" என ஆஞ்ஞாபித்தார். சேவகர்கள் உடனே சென்று இராயர் சொன்னபிரகாரம் அவனிடத்தில் சொன்னவுடனே அவன் புன்சிரிப்புடன் திடீரென எழுந்து ஒருபெரிய பானையை தன் தலைமேல் கவிழ்த்திக்கொண்டு இராயர் சபைக்குச் சென்று அவருக்கு எதிரில் திரிந்துகொண்டிருந்தான், இராயர் இவனைப்பார்த்து என்னடா! இந்த விதமாய் ஆகாத்தியம் செய்கிறாயென்று கேட்டார். அதற்கவன் "ஓ! இராஜனே! நீங்கள் தலைமறைவாகத் திரியச்சொல்லி ஆக்கியாபித்தருளியபடியே நானிவ்வித கோலத்துடன் திரிகிறேன்" என்றான். இராயர் மிகச்சந்தோஷப்பட்டு இத்தடவையும்தென்னாலிராமனை மன்னித்தார்.




"என்ன, வாமனசாஸ்திரியாரே! உமது அழகுள்ள ராதையை எனக்கு விவாகம் செய்துகொடுக்கத் தீர்மானித்து விட்டீரா? ஏனென்றால் என் வீட்டுவேலையைக்கவனிக்க ஒருதகுந்தமனைவியில்லாமல் எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. என்ன! உண்டா, இல்லையா? நான் காக்கமுடியாது தக்க மறுமொழி நீர் எனக்கு கொடுக்காவிட்டால் வேண்டிய ஏற்பாடு செய்வதற்கு நான் இன்றிரவு வசந்திபுரம் போகிறேன்." என்று சீதாநகரம் என்னும் சிறிய கிராமத்தில் பெரிய தெருவில் ஒரு வீட்டின் வாயிலில்

* Translated from the Indian Ladies' Magazine.



ஒருவர் திண்ணையிலுட்கார்ந்துகொண்டிருந்த வீடடுக்காரரான வாமன சாஸ்திரியாரைக் கேட்டார். அவர் முகம் மிகவும் சந்தோஷத்தால் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வெள்ளி நாணயங்களும் நோட்டுகளும் சப்தித்துக் கொண்டிருக்கிற ஒரு தோல்பை அவர் கையிலிருந்தது. இரவு சுமார் எட்டுமணியிருக்கும், வீட்டிற்குள் எப்படி யிருக்கிறது. எட்டிப் பார்ப்போம். வாமன சாஸ்திரியார் மனைவி சசீலை சமையல் செய்துகொண்டிருக்கிறாள். அவள் குமாரத்தி ராதை அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு [illegible] நாட்டுப்புறத்துப் பாட்டொன்றைப் பாடிக்கொண்டிருக்கிறாள். இப்பொழுது திடீரென பாடுவதைவிட்டு சமையல்வேலையில் தன் தாய்க்கு உதவிசெய்து கொண்டிருக்கிறாள். கிராம தேவதையாகிய பவானியினது கோயிலிலிருந்து அப்பொழுதுதான் திரும்பிவந்த தன்தகப்பனார் சந்தியாவந்தனம் செய்யும்பொருட்டு அர்க்கியத்திற்காக தீர்த்தம் நிறைந்த பித்தளை பாத்திரங்கள் முற்றத்தில் இருக்கின்றன. கோயில்மணி யோசை நமது காதுகளிலும் அங்கே வாசற்றிண்ணையில் பேசிக்கொண்டிருக்கும் அவ்விருவரின் காதுகளிலும் சகுனமுண்டாகும்படி கணீரென்று கேட்கிறது.

"எல்லாம் சரிதான். ஆனால் நீர் இவ்வளவு அவசரப்படக்கூடாது ஒரு அற்பவிஷயத்துக்காக அந்த மூடாத்மாவாகிய லக்ஷ்மண சாஸ்திரியால் நான் மிகவும் வருந்துகின்றேன். அவனுக்கு நான் 2500 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. நீர் 4000 ரூபாய் எனக்குக் கொடுத்தாலொழிய என் செல்வப் புதல்வியை உமக்கு மணம் செய்விக்க நான் சம்மதப்படமாட்டேன். நிச்சயமாய், பாவம்! அவள் வீணாகப் பிறக்கவில்லை. அவளுக்கு வயது பன்னிரண்டு ஆகிவிட்டது. இந்த வருஷம் அவளுக்கு விவாகம் செய்யாவிட்டால் வாமன சாஸ்திரி தலைகிளப்புவதற்கில்லை. இரும்! இரும்! என்ன அது? அது கோயில் மணியோசை யல்லவா? நல்ல சகுனந்தான். பாவம் வீட்டிலே எனக்காக காத்துக்கொண்டிருப்பார்கள். என்ன சொல்கிறீர் ஒரு காசு குறைந்தாலும் சரிப்படாது. போம்! போம்! என்று சொல்லிக்கொண்டேதான் எழுந்திருந்து வீட்டுக்குள்ளே நுழையப்போனார். "போகாதேயும்! போகாதேயும்! இரும், ஐயா?" என்றுசொல்லி வாமனசாஸ்திரியை மறுபடியும் முன்போல இருக்கச்செய்து, "என்ன சாஸ்திரீ! நீர் மிகவும் பேராசைபிடித்தவரா யிருக்கிறீர். எப்படியானாலும் சரிதான், இதோ பணம் ரூ. 4,000. பெற்றுக்கொள்ளும், நாளை நான் திரும்பிவரும்பொழுது முகூர்த்தம் பார்ப்பதற்காக பஞ்சாங்கமும் கையுமாயிரும். நான் இதோபோகிறேன்; எல்லாவிஷயத்தையும் யோசித்துப்பார்த்தால் காரியம் நிச்சயந்தானே! சாஸ்திரியாரே நான் போகிறேன் நீர் சந்தோஷமாக யிரும். எனக்குக் கொடுப்பதாக நிச்சயம் செய்திருக்கிற பெண் ராதை க்ஷேமமாயிருக்கட்டும்." என்று சொல்லிக்கொண்டு முதலில் 'பேசியவர் கோயிலுக்கு மற்றொரு பக்கத்தில் ஒரு வீதியிலிருந்த தன் வீட்டுக்குப் போய்விட்டார்.

இப்படியாக வியாபாரம் பேசின தகப்பன், "இந்த கிராமாதிகாரியாகிய மகாபாபி சங்கரசாஸ்திரிக்கு என் பெண்ணை விற்கும்படிச் செய்தது என் வறுமை யல்லவா? நான் யாதொரு காரணமுமில்லாமல் அந்த மோசக்கார நியாயவாதிக்கு 2000 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் என் மனைவியோ, அரிசி வியாபாரி இராமலிங்க ஐயருடைய ஓடிப்போன பிள்ளையான துர்முகி நாராயணனுக்கு ராதையை மணம் செய்யும்படி பிடிவாதம் செய்கிறாள், ஐயோ! எனக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லையே. என்னவேளையிற் பிறந்தேனோ?" என்று தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு வீட்டிற்குள்போக, வழக்கம்போல் அவர் புதல்வி "அண்ணா! ஏன் ஒவ்வொரு நாளும் நாழிகை கழித்து வருகின்றீர். இனிமேல் நீர் இப்படி செய்வதாயிருந்தால் நான்

உமக்குக் கார்க்கமாட்டேன்." என்றுசொன்னள். "கண்ணே! ராதை! இனிமேல் நான் இப்படிச்செய்யவில்லை. இன்றைக்கு காளஹஸ்தி ஜமீன்தார் தன்னுடைய குமாஸ்தாவை அனுப்பி சுவாமி அம்மனுக்கு அபிஷேகம் செய்வித்தார். அதற்காக நானும் இருந்து அப்பொழுது வேத அத்தியயனம் செய்துகொண்டிருந்தேன்." என்று சாஸ்திரியார் சொன்னர். "கோயிலிலிருந்து ஏதாவது சுவாமி பிரஸாதமாவது அல்லது குங்குமமா கொண்டுவெங்கீரா? என்றாள் குழந்தை. "ஆகா இன்னும் ஒனறுகூட கொண்டுவந்தேன்." என்றுசொல்லிக்கொண்டே தகப்பனா ஒரு சிறுபெட்டியை அவள்கையில் கொடுத்து, "இன்றையதினம் உனக்கு நல்ல அதிர்ஷ்டம்; உன்னுடைய விவாகம் சீக்கிரத்தில் நடக்கவேண்டியதற்காக ஏற்பாடு செய்திருக்கிறேன். என்ன ராதை இது வுனக்கு நல்ல சமாசாரமல்லவா?" என்றார் தகப்பனர். இந்த திடீரென்ற சமாசாரத்தைக் கேட்டவுடன் அவள் அசட்டையாய் மறுமொழிசொன்னள்.

"எப்பொழுதும் உமக்கு பரிஹாசந்தான். அண்ணு! எனக்குப் பசியாயிருக்கிறது. சந்தியாமந்திரத்தைச் சீக்கிரத்திற் செய்துவிட்டு போஜனம் செய்யவாரும்'! என்று அவள் சொல்லிக்கொண்டு போஜனத்திற்காகவேண்டிய ஏற்பாடு செய்யும்பொருட்டு கவலையோடு போய்விட்டாள். இந்த ராதை முந்தியே கூறியபடி மிகுந்த அழகும், நாகரிகமுமுள்ளவள். அவள் ஆங்கிலேயம் படித்தவளல்லள். ஆனல் அவள் தமிழ் தெலுங்கு, சம்ஸ்கிருதம் இந்தபாஷைகளில் மிகவும் தேர்ந்து மைசூர் தெலுங்கு லோயர் செகண்டரி பரீக்ஷையில் வெகுமானம் பெற்றவள். அவளுக்கு இப்பொழுது விவாகஞ்செய்யும்படியான வயது வந்துவிட்டது. அவளுக்குத்தகுந்த வரன் எங்கும் கிடைக்கவில்லை. அவள் பிதா வாமனசாஸ்திரி தன்னலியன்றமட்டும் எங்கும் தேடிப்பார்த்தார். ஆனல் மருமகன் ஒரு பி. ஏ யாகவாவது அல்லது பி. ஏ., பி. எல், யாகவாவது இருக்கவேண்டுமென்பது ராதையினுடையவும் அவள் தாயினுடையவும் முழுமனதாக யிருந்தது. அவளை மணக்கும்பொருட்டு வந்தவர்களில் ஒருவரையாவது குறிப்பிட நம்முடைய சாஸ்திரி எவ்வளவு முயன்றும் முடிப்வில்லை. ஏனென்றால் ஒவ்வொருவருடைய ஜாதகரீதியும் நம்முடைய ராதையின் க்ஷேமத்திற்கு மாருகவே யிருந்தது. ஆகையால் எல்லா வரன்களையும் தட்டிவிட அவநம்பிக்கையும் அதைரியமும் அவருக்கு உண்டாயிற்று. ஸ்திதிமதி முதலியவைகளைப் பற்றி இனி கவனிக்காமல் யாராயினும் ஒருவனைப்பார்ப்பதாய் அவர் தீர்மானித்துக்கொண்டார்: ஆனல் ஒரு புதிய தடங்கல் ஏற்பட்டது. தன்னுடைய யோக்கியதைக்குத் தக்கபடி விவாகத்தை விமரிசையாய் நடத்தபோதுமான பணம் தன்னிடம் இல்லை. ஏனென்றால் தீக்குண களஞ்சியமாகிய லக்ஷ்மண சாஸ்திரியாரால் மிகவும் உபத்திரவப்படுத்தப்பட்டவும் நியாயஸ்தலத்திறகிழுக்கப்பட்டவும் ஒரு தரித்திரனயிருந்தார். தனக்கு வேண்டிய பணத்தையார் கொடுப்பார்கள் ? ஒரு தரித்திரனையார் நம்புவார்கள்? மிகவும் செல்வம் படைத்த ஒரு தனவான் தவிர வேருெருவராலும் தனக்குப் பயனில்லை. இப்படிப்பட்டவர் அந்த கிராமத்திலேயே இருந்தார். அவர்தான் எல்லாராலும் விரும்பப்பட்ட முன்சீப்பாகிய சங்கர சாஸ்திரி. அவருடைய வீட்டிற்கு வாமனசாஸ்திரி நினைத்தபோது போகலாம். அவரிடமிருந்து பணம் கடன் வாங்குவதான பேச்சு வந்தபோதெல்லாம் அவருடைய கண்கள் சந்தோஷத்தினல் விகசிக்கும். தான் நெடுநாளாய் நினைத்திருந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும்படியான சமயம் நேர்ந்ததேயென்று அவர் சந்தோஷித்தார். அவருடைய மனைவி இறந்துபோய்விட்டாள். இவருடன் வாமனஸாஸ்திரி சம்பந்தஞ் செய்துக்கொள்ள முயன்றார். முன்சீப்பினுடைய



வீட்டிற் குடிகொண்ட குபேரனுடைய சன்னிதானத்திற்கு ஒரு நாள் விடாமல் வாமன சாஸ்திரி போய் வணங்குவதும், பதில் பிரயோசனமில்லாமற் திரும்புவதுமா யிருந்தார்

முதலில் சொன்ன இருவருக்கும் சம்பாஷணை நடந்ததற்குச் சில நாள் முந்தியிருக்கும். அன்றைக்கு சந்திரிகை. சந்திரன் தன்னுடைய பிரகாசமான துல்லிய நிலவை எரித்துக்கொண்டு மேகங்களினிடையே மறைவதும் பிரகாசிப்பதுமா யிருந்தான். நமது முன்னோர்கள் பந்து மித்திரர்களுடன் உட்கார்ந்து பேசுவதற்கான தெருத்திண்ணையில் வாமன சாஸ்திரி குளிர்ந்த இளந்தென்றல் காற்றை அனுபவித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பொழுது சங்கர சாஸ்திரி வந்து நமஸ்காரஞ் செய்து எதிர் திண்ணையில் தானும் உட்கார்ந்தார்.

"நல்லது சாஸ்திரியாரே! க்ஷேமமா? நீர் பணம் கேட்டீரே அதைப்பற்றி யென்ன கெட்டியாய் பேசாதேயும்; உம்மை நான் ஒருவிஷயம் கேட்கவேண்டும். 12, 13, வயதில் உமக்கு ஒரு பெண்ணில்லையா ? நீர் எப்பொழுது அந்தப் பெண்ணுக்கு விவாகஞ் செய்து வைக்கப்போகிறீர்? மணளன் பார்த்தாய்விட்டதா? சீக்கிரமாகவே செய்துவிடும்; இல்லாவிட்டால் நீர் அனியாயமாய்ப் போய்விடுவீர். சங்கரா சாரியர் ஒப்புக்கொள்ள மாட்டார். நானே முதலில் ஒப்புக் கொள்ளமாட்டேன். பின்னல் வரும் தண்டனையைப் பற்றி முந்தியே ஜாக்கிருதையாயிரும் என்றார். சங்கர சாஸ்திரி "என்ன தண்டனை ? என்றார். வாமன சாஸ்திரி "என்னதண்டனையா ? ஏன் ? ஜாதி பிரஷ்டந்தான், கிருஷ்ண தலத்து நியோகிப் பிராமணன் கதி என்ன ஆயிற்று ? தெரியாதோ ?" என்றார். சங்கர சாஸ்திரி "ஆமாம் ஐயா ? என்னல் கூடியவரையில் நான் முயன்று'பார்த்தும் முடியவில்லை. கிழவனே சிறுபிள்ளையோ யாரா யிருந்தாலுஞ் சரிதான், அவனுக்குக் கொடுத்துவிடுகிறேன். அவனுடைய ஸ்திதிமதி குலம் கோத்திரம் இதுகளைநான் கவனிக்கவேயில்லை. நீர் என்ன சொல்லுகிறீர்." என்றார். வாமன சாஸ்திரி "ஆமாம், என்னுடைய அபிப்பிராயமும் அப்படித்தான். அப்படியானல் மருமகன் உமக்கு முன்னிலையிலேயே யிருக்கும்பொழுது ஒரு காசுமில்லாத ஒரு கிழவனை நீர் ஏன் தேடச் செல்லவேண்டும்," என்று ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு, ஒரு ஸ்திரீ எனக்கு அவசியமா யிருக்கிறளென்பது உமக்குத்தெரியும்; உம்மை நிர்பந்தம்செய்ய எனக்கு இஷ்டமில்லை. பணம் வேண்டுமானல் நான்கொடுக்கிறேன். வட்டி 100க்கு 18 அகப்பட்டதல்லவா? யோஜனைபண்ணும் என்றார் சங்கரசாஸ்திரி.

ஆமாம், நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனல் விவாகவிஷயத்தை நானே முதலிற் பிரஸ்தாபிக்க பயந்துகொண்டிருந்தேன். என்னுடைய மகளை உமக்குக் கொடுக்க எனக்கு முழுசம்மதந்தான். ஆனல் என் பெண்சாதி—என்று வாமனசாஸ்திரி சொல்லிநிறுத்தினர்.

சரிதான், சரிதான் தெரிந்தது. ஒரு தாலூகாகச்சேரியில் ஒரு 15 ரூ. வேலைக்குத் தடுமாடுகிற ஒரு பி. ஏ. யோ! ஆம்-ஆம்-உன் மகளுக்கு ஒரு பி. ஏ. மருமகன் வேண்டுமோ! வற்றி உலர்ந்த தேகத்தை யுடையவன் சுமார் இரண்டு வருஷத்திற்கு முன் இங்கே வந்து தான் ஏதோ தேவலோகத்திலேயிருந்து குதித்தவன்போல் நம்மையொத்த வைதிகர்களையும் அவர்கள் சமயாசாரங்களையும் சீர்திருத்துவான் போல் தூஷித்தான். நடந்துகொண்டிருக்கிற விஷயங்கள் எனக்கு ஒன்றும் தெரியாம லிருக்கவில்லை. உம்முடைய ராதை பேரில் அவனுக்கு ரொம்பவும் இஷ்டம் பிறந்தது என்பது கேட்டிருக்கிறேன். அவளைக் கூப்பிடும்படியாய் அவ்வளவு துணிச்சல் கூட இருந்ததாம். பிரும்மாவே தனக்காக இவளை சிருஷ்டித்ததாக நினைவு. அவனைப்பற்றி நினைத்

துக்கொண் டிருப்பானே? அவன் தன்னுடைய கிழபாட்டனுரோடு சண்டை போட்டுக்கொண்டு—எங்கே அது என்னவோ சொல்லுகிறார்களே—பட்டணமா மதிராஸாம். அங்கே ஓடிப்போய்விட்டான். அந்தப் பட்டண மென்கிறது இந்த பரதக்கண்டத்திற்குள்ளே மகா அசௌக்கியமானது; எச்சல் தீட்டு என்கிறதே கிடையாது, அது மகா பாபத்திற்கு ஏதுவான இடம். அங்கே எங்கே பார்த்தாலும் துன்மார்க்கம் அதிகம். அங்கே பிராமணன் நீசன் இருவரும் சமானந்தான். அங்கே ஒரு அசுத்தமான ஒரு மூலையில் அவனிருந்தான். அவன் இருக்கிறானோ இறந்துபோய் விட்டானோ அது எனக்குத் தெரியாது. எது அவன் பிழைத்திருப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை. அப்படி யிருந்தாலும் அவன் மகா தரித்திரன். அவன் பி. ஏ. யாக யிருந்தாலென்ன. எங்கே எந்த பி. ஏ. யாகட்டும் எனக்குச் சரியாய் ரோடு சொல்லு கணக்கு தயார் செய்யட்டும் பார்ப்போம்!

"ஆ! முன்சீப்தாரே, ஏன் அவ்வளவு? ஓயாத பேசுகிறவரா யிருக்கிறீரே. என்னுடைய செல்வப் புதல்வியை அந்த இழிவான தரித்திர பிள்ளைக்குக் கொடுப்பதாய் எனக்கு எண்ணம் கிடையவே கிடையாது. ஒரு நாளுமில்லை. என்மனைவிக்கு என்னவோ பைத்தியம்; முடியாத விஷயத்தை யெல்லாம் பற்றி யோசனை பண்ணிக்கொண் டிருப்பாள். ஒரு வைரக்கம்மல் போட்டால் அதுக்குமேல் அவள் பேசமாட்டாள். நீர் என்ன முடிவு சொல்லுகிறீர்?

"சரிதான். உம்முடைய பெண்ணை எனக்குக் கொடும், நகை விவாகச் சிலவு இதுகளுக்காக நான் 4000ரூ. உமக்குக் கொடுக்கிறது நிச்சயம். இது சங்கதி நமக்குள்ளேயே இருக்கட்டும். தெரிந்ததா? ஆமாம், ஞாபகமிருக்கட்டும் ஒரு வார்த்தை வெளியில் வரக்கூடாது."

"ஆனால் நான் நிச்சயமாய் சொல்லமாட்டேன். மனைவியோடு யோசனை செய்து உமக்கு மறுமொழி சொல்லுகிறேன். அதற்குள் நீர் பணத்தைக் கொடும்."

"ஐயா, சரிப்படாது. நீர் வீட்டுக்குப்போம் நாளன்றைக்கு நீர் நிச்சயம் சொல்லும். இதற்குள் நானும் லக்ஷ்மண சாஸ்திரியைக் கொண்டு பத்திரம் எழுதிவைக்கிறேன். அதற்கு மறுநாள் நாமிருவரும் துப்பம் சப்ரிஜிஸ்ட்ரார் நரசிங்கராவிடம் போய் ரிஜிஸ்டர் செய்து கொள்வோம். அவசியம் என்னைப்பாரும். நான் கோயிலுக்குப் போகும்போது உம்முடைய வீட்டுக்கு வருகிறேன்."

பொழுது விடிந்தது; கதிரவனும் குணதிசையில் தன்கதிர்களாகிய அம்புகளைத் தன் அம்புராத் தூணியிலிருந்து பிரயோகித்துக் கொண்டிருந்தான். சீதா நகரம் என்னும் கிராமத்தில் ஒவ்வொருவரும் விடியற்காலமுதல் எழுந்து நடமாடிக்கொண் டிருந்தனர். அந்த கிராமத்திலுள்ள எல்லோருக்கும் தைமாதத்தின் 14-ம் தேதி மிகவும் சந்தோஷமானது. வாமன சாஸ்திரி வீட்டில் ஒரு விவாகம். அதற்கு கிராமத்திலுள்ள எல்லோரும் போக வேண்டும்.

விவாக சம்பரமங்களில் வழக்கமா யிருப்பது போல் வீட்டுவாயிலில் பல நிறமான அழகும், வாசனையும் பொருந்திய இலைக் கொத்துகளால் தோரணங்கள் கட்டப்பட் டிருந்தன. வீட்டிற்குள் வெகுஅழகாய் வளைவாய் அமைக்கப்பட்ட இளந்தென்னை ஓலைக்குருத்துகளும், வரிசை வரிசையான வாழைமரங்களும் கட்டப்பட்டிருந்தன. பிராமணர்கள் வேதமந்திரோச்சாரணம் செய்துகொண்டு முகூர்த்தத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்நாட்டு வாத்தியங்கள் முழங்கிக்கொண் டிருந்தன. தென்னாட்டு பெயர் பெற்ற வாத்தியக்காரனான கந்தன் சிஷ்யன் ஒரு நாகசுரக்காரன்



இதற்காகவே வரவழைக்கப்பட்டு தன்னாலானமட்டும் மிகவும் நன்றாய் வாசித்துக்கொண்டிருந்தான். மேளம், தாளம், நாட்டியம் இதுகளும் அங்கங்கே நடந்துகொண் டிருந்தன. உள்ளே முற்றத்தில் நம்முடைய மிகவும் அழகுள்ள ராதை உட்கார்ந்துகொண் டிருந்தாள். அவளுக்கு இடது பக்கத்தில் மணாளன் உட்கார்ந்துகொண் டிருந்தான், கண்ணைப்பறிக்கும் அழகு இல்லாதவனா யிருந்தும் சிறு வனாய்த் தோன்ற மிகவும் முயன்றவனாயிருந்தான். யாவரும் என்ன சொல்லுவார்கள் என்பதை கவனிக்காமலே, ஒரு தேனடையைச் சுற்றி யிருக்கும் தேனீக்களின் கூட்டம் போல் அவனைச்சுற்றி யிருக்கும் யாவருக்கும் அவன் ஒரு விஷயத்தில் கண்ணைக்கவரும் அழகுள்ளவனாகவே யிருந்தான். மைதீட்டின கண்களுடனும், நன்றாய் க்ஷவரம் செய்துகொண்ட முகத்துடனும் காதுகளில் வைரக் கடுக்கன்களுடனும் அவன் அழகு வாழ்ந்தவனாகக் காணப்பட்டான். சிறு பிள்ளையாகவும் தோன்றினான்.

வீட்டின் பின்புறத்திலேயோ என்ன நடக்கிறதென்று பார்ப்போம். ராதையின் தாய் சீதை ஒரு ஓரத்திலுட்கார்ந்து சற்று அழுவதும், சற்று தன் துக்கத்தை ஆற்றிக்கொண்டும் இருக்கிறாள். "என் சகோதரன் வந்துவிட்டானா? அவன் எங்கே?" என்று முணுமுணுக்கிறாள்.

"என் இந்த தாமதம்? மாற்றாந்தா யென்கிறதினால் உண்டாகும் வருத்தமோ நான் அவனிடத்தில் மிகவும் அன்புபாராட்டினேன். என்னுடைய தந்தி அவனுக்கு சரியானகாலத்தில் கிடைக்கவில்லையோ? ஐயோ, தம்பி! வந்து என்னையும் என் பெண்ணையும் என்னுடைய புத்தியற்ற கணவனையும் காப்பாற்றுவாய். இன்னும் ஒருமணி போனால் அவள் அந்த கிழவனுக்கு மனைவியாகிவிடுவாள். இப்படிக் கொண்டுபோய் தள்ளிவிடவா அவள் பிறந்தாள்?" என்ற இப்படிப்பட்ட விசனகரமான எண்ணங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அவள் மனதில் உதித்து அவள் மூளையைக் கலக்கி மிகவும் கவலையை உண்டாக்கின.

இப்பொழுது திடீரென்று மேளத்தின் ஓசை அதிகரிக்கின்றது. அங்குள்ள ஒவ்வொருவருக்கும் மிக்க ஆனந்தத்தை உண்டாக்கும்படி மிகவும் இனிமையான ராகங்களை நாகசுரக்காரன் வாசிக்கிறான். "என்ன விசேஷம்? முகூர்த்தகாலம் கிட்டுகின்றதா? மனதின் வேதனையை, ஐயோ! என்னால் இனிச் சகிக்கமுடியாது. தம்பி!" என்று சொல்லிக்கொண்டு அந்த முகூர்த்த நாழிகை உண்மையாகவே வந்துவிட்டதா" என்று அறியும் பொருட்டு தானிருந்த இடத்தைவிட் டெழுந்தாள். சீக்கிரம்! சீக்கிரம்!! வழிவிடுங்கள்! வழிவிடுங்கள்! அவள் எங்கே? அவளை அழைத்துவாருங்கள் அவளில்லாமல் நாம் எப்படி கன்னியாதானம் நடத்துவது? நாழிகை வந்துவிட்டது. வாமனசாஸ்திரி, போம், போம், உமது மனையாளை அழைத்துவாரும்," என்று சொல்லிக்கொண்டு புரோகிதர் பஞ்சு தீக்ஷிதர் நம்முடைய துக்கத்திலாழ்ந்த சீதையைத் தேடிச்சென்றார். இந்த வார்த்தைகள் அவள் காதில் விழுந்தவுடன் அவளுடைய தம்பியின் பழக்கமான வார்த்தைகள் போலிருந்தன. எங்கிருந்து இந்த வார்த்தை பிறந்ததென்று அறியும் பொருட்டு அவள் அங்கு மிங்கும் ஓடினாள். இப்படிப்பேசியது புரோகிதரென்று அறிந்த வுடன் தான் எதிர்பார்த்தபடி இல்லாமையால் வருத்தப்பட்டு உடனே மூர்ச்சையாயினாள். ஆனால் இப்பொழுது வேறுவார்த்தைகள் அவள் காதுகளிற் படுகின்றன. அவள் எங்கே? சீதா! சீதா! நீயேன் என்னை வரவழைத்தாய்? தந்தி கொடுத்த அவசிய மென்ன? ஏதாவது ஆபத்தா? வா, சங்கதி என்ன சொல்லு" என்று சொல்லிக்கொண்டு மிகவும் அழகான இருபத்தைந்து

வயதுள்ள ஒரு சிறுவன் பிராமணர்களின் கூட்டத்தில் இடித்துத் தள்ளிக்கொண்டு வந்தான். உடனே சீதை மூர்ச்சை தெளிந்து வஸ்திரத்தைச் சீர் படுத்திக்கொண்டு அவனுக்கு எதிரில் ஓடினாள். "தம்பி! தம்பி! என்னுடைய குமாரத்தியை இந்த அபமிருத்தியுவினின்றும் காப்பாற்ற நீ கடைசியாக வந்தாயா? ஐயோ! பாவம்! ஒன்றும் தெரியாதவன், இப்பொழுது பேசுவதற்கு நேரமில்லை. பந்தலுக்கு ஓடி விவாகத்தை நிறுத்து. மற்ற விசேஷங்கள் பிற்பாடு சொல்லுகிறேன். நான் சொன்னதைச் செய். முகூர்த்தம் சமீபித்துவிட்டது." அவளுடைய சகோதரன் பந்தலுக்குள் ஓடி ஒரு உயர்ந்த ஆசனத்தின் மேல் நின்றுகொண்டு தன்னா லியன்றமட்டும் உறத்த குரலுடன், "நான் இந்த விவாகத்தை நிராகரிக்கிறேன். ஒரு கெட்ட துற்சகுனம் நேர்ந்தது. இந்தவிவாகம் நடந்தேறினால் அவமானம், தீங்கு, நாசம் இவைகள் அந்தப்பெண்ணுக்கு அவசியம்நேறுமென்கிறது சீதம்மாளுடைய அபிப்பிராயம். ஆகையினாலே அவள் விஷயமாகவும் அவள் மகள் விஷயமாகவும் நான் பகிரங்கமாய் இந்த விவாகத்தை தடுக்கிறேன்." என்று சமயத்துக்குவேண்டிய கொடிய வார்த்தைகளை இறைந்துகொண்டு ராதை வருத்தத்தால் அழுதுகொண்டு தன்னைப் பின்தொடர தான் வீட்டிற்குள் ஓரறைக்குட் சென்றான்.

இந்த துரதிர்ஷ்டமான விவாகம் தடுக்கப்பட்டு அதினால் அந்த கிராமமுன்சீப் மிகவும் தாழ்ந்த நிலையடைந்து அனேக மாதங்கள் ஆயின. இந்தக் கம்பீரமான முன்சீப் இப்படி சீர்கெட அநேகருக்குச் சந்தோஷமாயிருந்தது; ஆனால் களத்தில் காயப்படுத்தப்பட்டஒருவனைப்போல்அவனிருந்தான். வாமனசாஸ்திரியின்குடும்பத்தில் நேர்ந்த அனேக துக்கசம்பவங்களும் கஷ்டங்களும் இன்னின்னவென உறைக்கப்பட வேண்டுவனவல்ல. நம்பிக்கைதுரோகம் என்னும் குற்றம் சாற்றப்பட்டு கச்சேரிக்கு அவர் இழுக்கப்பட்டார். லக்ஷ்மணசாஸ்திரியின் கொடிய தூண்டுகோலின்பேரில் அந்த கிராமமுன்சீப் அந்த வாமனசாஸ்திரிமேல் வியாச்சியம் தொடுத்தான். தன்னுடைய குற்ற நிவாரணத்திற்காக வாமனசாஸ்திரி ஏற்படுத்திய மிகவும் பெயர்பெற்ற இரண்டு நியாயவாதிகளில் தன்னுடைய குமாரத்தியை மணக்கவிரும்பின மிகவும் கெட்டிக்கார சிறுவராகிய நாராயணசாஸ்திரி என்பவர் ஒருவர். அவருக்கு வயது 25. தன்னுடைய உத்தியோகத்தில் நல்ல பெயர்வாங்கி அறிவுக்கும் கண்ணியத்திற்கும் தன்னுடைய கக்ஷிக்காரர்களாலும் நியாயாதிபதிகளாலும் மரியாதை செய்யப்பட்டார். ஆகையால் வாமனசாஸ்திரிக்கு நல்ல அதிர்ஷ்டம். அவருடைய வக்கீல் நியாயாதிபதிக்கு திருப்திகரமாய் தன்னுடைய கக்ஷிகாரன்மேல் குற்றமில்லாததை எடுத்துக்காட்டினார். கச்சேரி முழுதும் மூச்சுவிடுவதற்கிடமில்லாமல் ஒரேகூட்டம். அந்த நியாயவாதியினுடைய ஒவ்வொரு வாதத்தையும் யாவரும் மிகவும் ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தனர். வாமனசாஸ்திரி விடுதலை செய்யப்பட்டார். உடனே மூர்ச்சையாகிவிட்டார். ஆனாலும் அவர் சீக்கிரத்தில் ஆசுவாசப்படுத்தப்பட்டதும் அவருடைய முதல் உணர்ச்சியாகத் தன்னை விடுதலைசெய்வித்தவருக்கு நன்றிபாராட்டினார். அவர் நன்றிபாராட்டல் வெறும்வார்த்தையோடு நிற்கவில்லை, அதுவே சம்பந்தப்பட்ட யாவருக்கும சந்தோஷத்தை உண்டாக்கும்படியான ஒரு செய்கையாயிருந்தது.

உடனே அந்த சிறியகிராமத்தில் விவாகம் நடந்தது. மணாட்டி ராதை. மணாளன் நாராயணசாஸ்திரியேயாம். விவாகம்முன்னிலும் அதிகசம்பிரமத்துடன்நடந்தது. விவாகத்தில் ஒருவருக்காவது மனஸ்தாபமென்பதே கிடையாது. மிகவும் சந்தோஷகரமாய் நடந்தது. ராதையோ தனக்கு படித்த சிறுவயதுள்ள கணவன் கிடைத்ததைப்பற்றி மிக மகிழ்ந்தாள்; அதற்குபிறகு சில நாளைக்கெல்லாம் ராதை தன்புருஷன்வீடுசென்றாள்.



262.

இப்பொழுது சகலசெல்வமும்பெற்று வாழ்ந்துகொண்டிருக்கிறாள். ராதை அவளுடைய முழங்கால்களில் இரண்டு குழந்தைகள் ஏறி விளையாடிக்கொண்டிருக்கின்றன. இரண்டு கந்தர்வர்கள் போன்றுள்ளன. அவளுடைய கணவன் அவள்மேல் மிகவும் அன்புபாராட்டிக்கொண்டு வருகிறான். ஒரு ஸ்திரீக்கு வேறு என்ன செல்வங்கள் வேண்டும்?

---

## மாதர்மனோரஞ்சினி வாசிக்கும் சிறுமிகளுக்காகக் கதைகள்.

## (1) ஓணான் சம்சார வாழ்க்கை.

ஒரு ஊரில் ஒரு ஓணான் இருந்தது. அதற்கு ஒரு நண்டு, ஒரு கட்டெறும்பு, ஒரு வண்டு, ஒரு கொக்கு, ஒரு காகம், இப்படி ஐந்து பெண்சாதிகள் இருந்தன. இவர்களோடு சுகமாக வாழ்ந்துகொண் டிருக்கும்போது நண்டு கர்ப்பமாகி பிரஸ்வத்திற்கு வரப்பருகில் இருந்த தன் தாய்வீடு போயிருந்தது. ஒருநாள் கட்டெறும்பு நண்டின் பிறந்த விடத்துக்குப்போய் திரும்பிவந்து வண்டினிடத்தில் நண்டு சுகமாய் பிரஸவித்த சேதியைச்சொல்லிற்று. வண்டு வரிசையுடன் நண்டினிடம் போய்

"நண்டே பெருந்தேவி
அம்பி பிறந்தானா
அழுது கிடந்தானா
குழிதோண்டுங் கையாலே
முலைதாங்கி உண்டானா"

என்று விசாரித்தது. அதற்கு நண்டு

"தும்பி, தும்பி, தூணைத் துளைப்பாய்
காட்டு வண்டே கல்லைத் துளைப்பாய்
நீயா என்குலத்தை ஏச வந்தாய்
கொண்டுவந்த சாமானை கூடத்தில் வைத்துவிட்டு
தலைக்கடையாலே வந்தவள்புறக் கடையாலே போய்விடு"

என்று சொல்லிற்று. வண்டு கோபமாய் கொக்கினிடம் ஓடிவந்து கேட்டையா சேதி, நான்

"பொன்னா பொன்னா மஞ்சள் குளித்து
பொன்னுந் தூணிலே சாய்ந்து கொண்டு
தேவனுருக்குக் கஞ்சி வார்க் கையிலே
கட்டெறும்பு என்கிற கரட்டாணி வந்து
அங்கச்சி ஆண்பிள்ளை பெற்றாளே என்க"

### நான்.

"சுக்குக் கொண்டு மிளகு கொண்டு
சூலடிக் கஞ்சு பணமுங் கொண்டு
நாயின் கூலையில் நல் லெண்ணெய்
பூனையின் தலையில் பூண்டுங் கருப்புட்டியும்
இத்தனையுங் கொண்டு காணப் போனேன்"

என்று சொல்லி தான் அங்கு சொன்னதையும் அதற்கு அது சொன்ன பதிலையும் சொல்லி முறையிட்டது. * அதற்குக் கொக்கு

"சொல்லுவள் சொல்லுவள் சொரணைகெட்ட வெள்ளாட்டி
சொல்லாளே என்று எண்ணவும் வேண்டாம்
கொக்குக் கழுத்துக்குக் காரையைப் பூட்டினால்
அதுவு மெத்தனை அழகா யிருக்குமே"

என்று என்னையே சொன்னாளே, உன்னைச் சொல்லக் கேட்பானேன்? என்றது, பிறகு காகத்தினிடம் போய் முறையிட * காகம்,

"சொல்லுவள் சொல்லுவள் சொரணைகெட்ட வெள்ளாட்டி
சொல்லாளே என்று எண்ணவும் வேண்டாம்
கரத்த'காலுக்குப் பாடகத்தை இட்டால்
அதுவு மெத்தனை அழகா யிருக்குமே"

என்று என்னையே சொன்னாளே, உன்னைச்சொல்லக் கேட்பானேன் என்றது.

S.

# NEWS & NOTES.

## சமா,சாரக்குறிப்பு.

முடிசூட்டுக் காலத்துக்கூடும் பிரிடிஷ் இந்திய குடியேற்றநாட்டுப்படைகளது தலைமை கொனாட்டு கோமனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரிச்மாண்டில் பழைய டியர்பார்க்கில் முடிசூட்டுக்குப் போகும் இந்தியப்படைகள் தங்கப்போகின்றன.

***

லண்டன், மே 5—முடிசூட்டுக்கு வரும் இந்திய அரசர் மேஜரும் நகரச்சபையாரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வின்செஸ்டர் வந்துசேரும்படி லார்ட் நார்த்புருக் வரவழைப்புச் சீட்டனுப்பியிருக்கிறார்.

* குறிப்பு:—கதை சொல்லும்பொழுது வண்டு சொன்ன பாட்டையும் அதற்கு நண்டு பதில் சொன்ன பாட்டையும் சொல்லவேண்டியது.



***

**திவான்பகதூர் கிருஷ்ணமாச்சாரியார்:**—வழக்கம்போல் இக் கல்விமான் இங்கிலண்டு முடிசூட்டு வைபவத்தின் சமயோசிதமாய், நமது மஹாராஜா சக்கிரவர்த்தியாரின் வாழ்க்கை நலப்புத்தக மொன்றியற்றி வருகிறதைக்கேட்க மிக சந்தோஷப்படுகிறோம். இவருக்கு ஈஸ்வரன் தீர்க்க ஆயுளையும், தேக சௌக்கியத்தையு மளிப்பாராக.

***

**பெண்கல்வி:**—பர்மா தேசத்துப் பெண்களுக்குள் கல்வி பரவிவருகின்றது. சென்ற வருஷத்திற் பெண்பிள்ளைகளுக்காக மாத்திரம் ஏற்பட்டிருந்த பாடசாலைகள் 336. அவைகளில் 8,582 பேர் படித்துவந்தனர். இஃதன்றி, ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடங்களிற் கலந்து வாசித்து வந்த பெண்பிள்ளைகள் 26,201; பிரைவேட் பாடசாலைகளிற் படித்தவர் 3,361; ஆக மொத்தம் 38,144 பெண்கள்.

***

**சுகாதாரக் கமிஷனரின் தெரிவிப்பு:**—நமது சென்னைச் சுகாதாரக் கமிஷனர், இந்த இராஜதானியிலுள்ள எல்லா ஜில்லா போர்டு பிரெஸிடெண்டுகளுக்கும் முனிசிபல் சேர்மன்களுக்கும் இவ்வருஷம் நமது மாகாணத்தில் அம்மை யுபத்திரவம் அதிகமாயிருக்கக்கூடுமென்றும் அதுபற்றி குழந்தைகளுக்கு அம்மை வைப்பதில் விசேஷக் கவலை யெடுப்பதுடன் வயதானவர்களுக்கும் மறுபடியும் அம்மை வைப்பதிலும் கவனஞ் செலுத்த வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

***

லண்டன், மே 4—முடிசூட்டு வாரத்தின் கொண்டாட்டங்கள் விஷயமாய் வெகு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அடுத்த ஜூன்மீ 30-ஆந்தேதி விண்ஸர் மாளிகையில் ஒரு பெரு விருந்து நடக்கும் ஜுலைமீ 1-ஆந்தேதி கவெண்டு தோட்டத்தில் ஒரு திருவிழா நடக்கும். ஜுலைமீ 3-ஆந்தேதி கில்டுஹாலில் ஒரு சிறு விருந்து நடக்கும், தெய்வப்பிரார்த்தனை முடிசூட்டிலே நடத்தப்படுவதோடு, சர்ச்சுகளிலும் நடத்தப்படும்.

***

**எரிமலை விபத்து:**—வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள மேற்கிந்தியாத் தீவுகளில் பிரெஞ்சு காரர்களுக்குச் சொந்தமான மார்ட்டினீக் தீவில் ஒரு எரிமலை விபத்து நேர்ந்து ஆயிரக்கணக்காய் ஜனங்கள் சேதமாய் விட்டார்கள். அத்தீவிலுள்ள ஸெயிணட் பயாரி என்னும் பட்டணத்து 25,000 ஜனங்களில் 30-ஜனங்கள்தான் உயிரை யிழந்துவிடாமல் தப்பிப் பிழைத்திருக்கிறார்களாம். அத்தீவுக்குச்சென்று வேலைசெய்து பிழைத்த இந்தியர்கள் 5000 - பேருக்குக் குறையில்லை. அவர்களின் பெரும்பாலார் ஸெயிண்ட் பயாரியில் வசிப்பவர்களா யிருந்திருக்கவேண்டும். அவர்கள் கதி யென்னாயிற்றோ அறியோம். இந்த எரிமலைவிஷயத்தைப்பற்றி சித்திரப்படத்துடன் ஜூன்மீ பத்திரிகையில் பிரசுரிப்போம்.

***

**சென்னை மாகாணத்து ஜன சங்கியை:**—1872-ஆம் வருஷத்தில் நமது மாகாணத்திலிருந்த ஜனங்களின் தொகை 31,220,973. 1881-ல் சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை 30,827,218. இப்படி 1872-ஆம் வருஷத்துக்கும் 1881-ஆம் வருஷத்துக்கு மிடையே ஜன சங்கியை குறைந்ததற்கு 1876-முதல் 1878-வரை இரண்டுவருஷக்

காலம் நாட்டில் பஞ்சம் பரவியிருந்ததே காரணமாகும். அந்தப் பஞ்சகாலத்தில் சேலம், பல்லாரி, கடப்பை, கர்நூல், அனந்தபுரம் ஜில்லாக்களது ஜனங்கள் மிகுதியாய் மாண்டார்கள். மறுபடியும் 1891-ம் வருஷத்தில் எடுக்கப்பட்ட கானிஷ்மாரியின்படி சென்னை இராஜதானியின் ஜனத்தொகை 50 - லட்சம் அதிகப்பட்டது. அவ்வருஷத்தில் இராஜதானியின் மொத்த ஜனசங்கியை 3,56,30,440. சென்ற வருஷமெடுக்கப்பட்ட கானிஷ்மாரிக் கணக்கின்ப்படி ஜனத்தொகை. 3.82,09,436. 1872-ம் வருஷமுதல் 1901-ம் வருஷத்திற்குள் நமது மாகாணத்தின் ஜனத்தொகை 69,88,463. அதிகமாயிருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

***

ஓர் இந்தியப்பேண்ணின் தைரியம்:—மாணிக்டோலா என்ற ஊரில் இரண்டு சிறுபெண்கள் மத்தியானம் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு பக்கத்து ஒரு குளத்தில்கையலம்பப்போனார்கள். இருவரும் கால்நழுவி ஆழத்தில் போய்விட்டார்கள். என்ன காலைக் கையை உதைத்துக்கொண்டபோதிலும் கரைக்குத் தூரத்தூரப் போனார்களேயன்றிக் கரையண்டை வரவில்லை. வீட்டில் இன்னுமிருவரும் வரவில்லையே என்று ஒரு ஸ்திரீ வெளியே தேடிக்கொண்டுவந்து குளத் தில் பார்க்கும்போது இவ்விருவரும் குளத்தில் தத்தளித்துக்கொண்டிருந்தார்கள். உடனே அந்த ஸ்திரீ குளத்திலிறங்கி நீந்திக்கொண்டு ஒரு பெண்ணைக் கரையில் இழுத்துப்போட்டாள், மறுபடியும் நீந்திக்கொண்டு மற்றொரு பெண்ணண்டைபோவதற்குள் அப்பெண் ஜலத்துக்குள்ளே போய்விட்டாள். ஆயினும் சுவாமிமேல் தன் பாரத்தைப்போட்டு அந்தப்பெண் மூழ்கிப்போன இடத்தில்ஜலத்துக்குள் முழுகி அந்தப் பெண்ணையும் கரையில் கொண்டுவந்து போட்டாள். இந்த ஸ்திரீ இந்த இரண்டாம் பெண்ணோடு கரைக்கு வரவே அதற்குள் குளக்கரையில் கூடியிருந்த பெரிய கூட்டம் இந்தமகாதயாளுவும் தைரியசாலியுமான ஸ்திரீயை மெச்சிக்கொண்டார்கள். பாலக்காடு முதலிய விடங்களிலும் ஸ்திரீகள் இவ்விதமாகச் செய்திருப்பதாக நாம் கேள்வியுற்றிருக்கிறோம்.


## மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலை.

**273, தம்புசெட்டி வீதி, சென்னை.**

இப்புத்தகசாலையில் வேதாந்த சித்தாந்தம், தருக்கம், கட்டளை, ஸ்மிருதி, இதிகாசம், புராணம், மான்மியம், தோத்திரம், இலக்கண இலக்கியங்கள், பிரபந்தம், கோவை, திருப்புகழ், வகுப்பு, வண்ணம், நிகண்டு, அகராதி, நீதிநூல், வைஷ்ணவ நூல்கள், ஷை தமிழ்ப்பாஷை தெலுங்கு எழுத்து வைஷ்ணவ நூல்கள், வடகலை சம்பிரதாய கிரந்தங்கள், பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி, மாலை, வெண்பா, சதகம், வாசகம், கீர்த்தனை, ஜோதிடம், வைத்தியம், சங்கீதம், ஜாதி நூல்கள், படம், பூகோளம், பிராணிசரித்திரம், நாடகம் தமிழ் நாவல்கள், விநோதக் கதைகள், ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள், சமஸ்கிருத நாடகக் கதைகள், நீதிக் கதைகள், ஸ்திரீகளுக்குறிய நூல்கள், அறிவு கொடுக்கத்தக்க நூல்கள், கீர்த்தி பெற்றவர்கள் சரித்திரம், ஆக்ட்டு புத்தகங்கள், கிறிஸ்துமத கண்டனம் (தமிழ் & இங்கிலீஷ்), பதிகம், திருவிளையாடல், சிவனடியார் சரித்திரங்கள், தனித்தனி 3-பை, 2-பை, 1-பை புத்தகங்கள் முதலிய சகலவிதமான சுந்தப் பதிப்புப் புத்தகங்களும் கிடைக்கும். வெளியூர் விருப்பவர்களுக்குப் புத்தகங்கள் வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

1902-ம் வருஷத்துப் புதிய புத்தக விளம்பரம் வேண்டுவோர் அடியிற் கண்டவருக்கு எழுதிக்கொண்டால் இனாமா யனுப்பப்படும்:—

**சை. சிவசங்கரசெட்டி, பி. ஏ.,**

சொந்தக்காரர்,
ரிப்பன் பிரஸ் & ரிப்பன் புஸ்தகசாலை,
273, தம்புசெட்டி வீதி, சென்னை.


Printed at the Ripon Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

204 REGISTERED 19 JUL 1902 MADRAS

## H. M. The King's illness and recovery.

# CORONATION POSTPONED.

## KING IS IMPROVING.

## PRAYERS OFFERED THROUGHOUT INDIA.

# பட்டாபிஷேகம்

## நிறுத்தப்பட்டது.

### நமது மகாராஜா அவர்கள் அசௌக்கியமாயிருந்து சௌக்கியமடைந்து வருகிறார்கள்.

நாம் நமது பத்திரிகையை அச்சடித்தபின் நமது மகாராஜாவாகிய 7-வது எட்வர்ட் அவர்களுக்கு தேக அசௌக்கியமா யிருக்கிறதென்றும் இதனால் பட்டாபிஷேகம் நிறுத்தப்பட்டதென்றும் கேட்டபோது மிகவும் விசனப்பட்டோம். இந்தியர்க ளனைவரும் இடிவிழுந்தாற்போன்ற இச் சமாசாரத்தைக் கேட்டபோது எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி திடுக்கிட்டு, பிரமித்து, சித்தங்கலங்கி, கண்ணீர் தாரைதாரையாகச்சொரிந்து, மனோவாக்குக்காயமென்ற மூன்றுகரணங்களாலும் மிகவருந்தினார்கள். இப்பொழுது இவர் சுகமடைந்து வருவதைக் கேட்டுச் சந்தோஷித்து, எங்கு பார்த்தாலும் கடவுளை ஸ்தோத்திரஞ் செய்துகொண்டே யிருக்கிறார்கள்.

நமது மகாராஜாவினுடைய் அடிவயிற்றிலுண்டான ஒரு கட்டியால் அவர்கள் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்க, அதை தன்வந்திரிக்கு நிகரெனச் சொல்லும்படியான பேர்பெற்ற 5 டாக்டர்கள் சேதித்தார்களாம். இப்பொழுது மகாராஜா அவர்கள் சௌக்கியமடைந்து வருகிறார்கள். இன்னும் சிலதினத்தில் பூர்ணமாய் சுகமடையும்படி ஈஸ்வரன் கருணை புரியுமாறு பிரார்த்திக்கின்றோம்.

இனி மற்ற முழு விஷயத்தை அடுத்த சஞ்சிகையில் விவரித்து எழுதுவோம்.

# மாதர் மனோரஞ்சினி.

"என்னும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. IV } Madras: June 1902. { No. 4.

புத்தகம் ௪. } சென்னப்பட்டணம் 1902 ஜுன்மீ. { இல. ௪.


## Indian Nights Entertainment.

*Published in the*

PEARSON'S MAGAZINE

*by*

**A. Sarath Kumar Gosh.**


*(All Rights Reserved.)*


# இந்திய இரவுக்கதைகள்.

## I. ஜய கோபுரம்.


முன் 55-வது பக்கத் தொடர்ச்சி.


நகரத்து மதில்களுக்குவெளியே பழைய அரண்மனை மேட்டுக்கு அருகாமை
யில் புராதன கோபுரமொன்றிருந்தது. அது ஆயிரவருஷங்களுக்குமுன் இந்த
அரசனது முன்னோன் ஒருவனைத் தோற்கடித்து, அடைந்த ஜயத்திற்கு
அறிகுறியாய் ஒரு வெற்றிவீரனால் கட்டப்பட்டது. அது அரசன் கண்
ணுக்கு எபபொழுதும் வெறுப்பாகவேயிருந்தது. தனது மூச்சால் அதை
நாசப்படுத்தத் தன்னால் கூடுமாயிருந்தால் செய்திருப்பான்; ஆனால் அதை
யிடிக்க அவனுக்குத் தைரியமில்லை;பொதுக்கட்டடங்களுக்கு மதசம்பந்தத்
தினால் உண்டாகும் மரியாதையைப்போல பாரம்பரியத்தினால் மரியாதையுண்டாகிறது.
மனிதனுடைய கைகளினால் இதை யழிக்கமுடியாது; ஆனால் கடவுளது ஆஞ்ஞையினால்
முடியும். அரசன் ஆஞ்ஞையைப் பரிசோதிக்கத் தீர்மானித்தான். நாராயணலாலா
அதற்குக் கருவியாயிருக்கட்டும்.

உயர்ந்து ஒடுங்கியிருந்த இந்தக்கல் ஸ்தம்பம் இப்போது நேராயிருக்கவில்லை. ஒரு பூ
கம்பம் அதை ஒட்டுக்குத்திலிருந்து சாய்த்துவிட்டபடியால் நூறுமுழ உயரமிருந்த அ
தன் சிகரம் ஒருபக்கத்தில் ஆறுமுழம் சாய்ந்துவிட்டது. அசனுடைய சுற்றடியானது

குறுக்கடியில் நான்குமுழம்தானிருந்தபடியால், இச்சாய்வு ஸ்தம்பத்தைக் கீழே தள்ளியே யிருக்கவேண்டும்; ஆனால் பூமியின்கீழ் தெரியாதிருந்தபாகம் அதன் மையத்தை கீழேகொண்டுவந்து ஸ்தம்பத்தை நிலைநிறுத்திற்று.

அதில் எவ்வளவு ஆழமோ ஒருவருக்கும் தெரியாது. அதன்பேரில் ஒருமனிதன் ஏறிச்சென்றால் போகப்போக பாரமதிகமாய் மையம் நிலையில் நிற்காமல் ஸ்தம்பத்தின் மேல்பாரம் கீழ்பாரத்தைவிட அதிகமாய் ஸ்தம்பம் கீழே நின்றுவிடும். அப்படி விழாமல் எவ்வளவு உயரம் அபாயமின்றி ஏறக்கூடுமோ என்பது ஒருவருக்கும் தெரியாது.

அது இந்தப் பரிக்ஷைக்குத் தகுந்தவிஷயம்.

நாராயணலாலா மேலே ஏறஏற மையமானது அஸ்திபாரத்தின் நுனிக்குப்பக்கம் பக்கமாய்வரும்; கடைசியாக அதற்கப்புறம் போய்விடும். அப்போது கோபுரம் விழுந்துவிடும். அரசனுடைய மனோபீஷ்டம் திருப்தியாய்விடும். நாராயணலாலாவும் மரித்துவிடுவான். அதுவும் அரசனது மனோபீஷ்டத்துக்குத் தக்கதுதான்; தேவதைகளுடைய ஆஞ்ஞை இவ்விரண்டுவிஷயங்களில் வெளிப்படையாகத்தெரியும்.

எழுதினங்களுக்குப்பிறகு உத்தியான வனத்தில் நடந்த செய்கையைப் பார்த்திருந்த பன்னிரண்டு காவற்காரர்களிடத்திலிருந்து காற்றுமூலமாய்ச் செய்திகளையறிந்த ஒரு பெருங்கூட்டம் ஸ்தம்பத்தைச் சுற்றிச் சேர்ந்தது; சுற்றி, ஆனால் நூறுமுழத்திற்கப்பால்தான்; எல்லோரும் புருஷர்கள். ஸ்திரீகளேயில்லை. மானிட உயிர்வாங்குவதைப் பார்த்தல் ஸ்திரீகளுக்கு அடாது.

கொந்தளிக்கும் கடலைப்போல் அந்தக்கூட்டத்தில் தலைகள் ஓயாமல் அசைந்துகொண்டேயிருந்தன. வெள்ளைத் தலைப்பாவும், சிவப்புத் தலைப்பாவும், மஞ்சள் தலைப்பாவும் நிறைந்திருந்தன. வயல்களிலிருந்து வந்த வேளாளர்களும், மதோன்மத்தராய் தின்றுவிட்டுவந்த பிரபுகுமாரர்களும், பூஞ்சானம்பிடித்த ஏட்டுப் பிரதிகளை விட்டுவந்த பண்டிதர்களும், இப்படி எல்லாவகைஜனங்களு மிருந்தார்கள். ஏனென்றால், இம்மனிதன் மிக தைரியமாய் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எத்தனம்செய்யாமல் சாகமாட்டானென்று அவர்கள் பூரணமாய் நம்பினார்கள்.

அவன் குற்றத்தைப்பற்றி அவர்களுக்குக்கொஞ்சமாகிலும் தெரியாது. அதைப்பற்றி அவர்கள் சட்டையும் செய்யவில்லை. அது அவனுக்கும் நியாயாதிபதிக்கும் சேர்ந்த விஷயம்.

"அழகிய ராஜகுமாரத்தியின்மேல் நோக்கம் வைத்தானாம்" என்று ஒரு ஒற்றைக்கண் குருடன் பயங்கரமான பார்வையுடனும், அபினிதின்று இரத்தம் செத்த முகத்துடனும் முணுமுணுத்தான்.

"ஆனால் இவர்களிருவருக்கும் இன்னும் சமாசாரம் நிரம்ப நடந்திருக்கவேண்டும் ——அதை யொருவரும் வெளிப்படுத்தமாட்டார்கள் போலிருக்கிறது."

அதைக்கேட்டோர்கள் அந்த இழிவான ஜாடைச்சொற்களைத் தப்பென்று அகற்றினார்கள்.

"ஆனால் அவன் உயிர்வாங்க அரசனுக்கு இவ்வளவு கோபமேன்" என்று அவன் திருப்பிக்கேட்டான்.

"இருக்கட்டும், இவன் க்ஷத்திரியவம்சத்தில் பிறந்தவனென்று சொன்னானே அப்படியிருக்க, காசிதேசத்து ஹிரலால் பிள்ளையென்று ஜனங்கள் எப்படி சொல்ல வந்தார்கள்?" என்று மற்றொருவன் கேட்டான்.



அப்போது சொல்வதையெல்லாம் கேட்டிருந்து தான் ஒன்றும் பேசாமல் நின்று சொண்டிருந்த தாடிநரைத்த ஒரு சுவாமியார் தன் அபிப்பிராயங்களை வெளியிட்டார்.

"கேளுங்கள் சகோதரர்களே! தர்மவிதியைச் சொல்லுகிறேன். க்ஷத்திரியனாயில்லாதவன் அரசனாயிருக்கக்கூடாது; ஆனால் ஒவ்வொரு க்ஷத்திரியனும் அரசனாகவேண்டியதில்லை. இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் காசிதேசத்து ஹிரலால்கங்கையின் பேரில் ஒரு மூங்கில்கூடையில் ஒருகுழந்தை மிதக்கக் கண்டெடுத்தான்" என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நக்ஷத்திரமண்டலத்திலிருந்துகுறிப்பினால்அறிந்திருப்பேன். அல்லது தேவதைகளே இந்த ரகசியத்தை எனக்குச் சொல்லியிருப்பார்கள். எப்படியிருந்தாலும் சங்கதியிது.

உடனே கூட்டம் நிச்சப்தமாயிற்று. ஒவ்வொருவரும் பயபக்தியுடன் இச்சொற்களின் பொருளை நன்றாய் அறியும்பொருட்டு அவருடைய முகத்தைக் குறிப்பாய் ஆவலுடன் பார்த்தார்கள்.

"அந்தக் கூடையில் ஒரு முத்துஹாரமும், சந்தனக்கட்டையும், துவிஜர் அணியும் பூணூலுமிருந்தன. அதற்குஒருவருஷம்கழித்துக்குழந்தைக்கு அந்தப் பூணூலைப்போட்டுச் சந்தனக்கட்டையில் சந்தனமிழைத்து நெற்றிக்கு இட்டான். முத்துஹாரத்தை இராஜகுமாரத்தி பிறந்தபிறகு அவளுக்குக் கலியாணமாகுங்காலத்தில் கொடுக்கும்படி அரசனிடம் கொடுத்தான்."

"நல்லசகுனம்! நல்லசகுனம்!! பரமேஸ்வரனது வழிகளெல்லாம் ஆச்சரியமானவை. இச்சகுனம் எப்படிவெளியாகிறதோ பார்ப்போம்" என்று பயந்த ஒருவன் சொன்னான்.

கூட்டத்திலிருந்தவர்களெல்லாம் குற்றவாளி நின்றுகொண்டிருந்த ஸ்தம்பத்தை நோக்கினார்கள்; அங்கிருந்து வடக்கே இருநூறு முழத்திற்கப்பால் உயர்ந்தமேடையில் உட்கார்ந்திருந்த அரசனை நோக்கினார்கள். அவனுக்குப்பின்னால் மரித்து விழுந்திருக்கும் இராக்ஷசனைப்போல், பழைய அரண்மனையின் மேடு இருந்தது.

வாலிபன் கைகளை மார்மேல் கட்டிக்கொண்டு அரசனை வணங்கினான்; ஆயினும் அவன் கண்களில் வீசிய ஒளியினால் அவமானமே அவனை மூடியிருக்கவில்லையென்று தெரியவந்தது. வணங்கிய தலையை நிலத்தினின்றும் நிமிர்த்தியவுடன் அவன் உதடுகளில் சோர்ந்த புன்சிரிப்பு தோன்றிற்று. காவற்காரர்கள் விட்டுவிட்டு இருபுறமும் நீங்கவே, முதல்மெத்தையின்சாளர மேடையை நோக்கிக்குதித்து தனது நீண்ட மெல்லிய கைகளினால் அதைப்பிடித்துக்கொண்டு ஆடினான்.

எழு அடிக் கொருதடவை சுற்றி சாளர மேடையிருந்தது. அதற்கு கோபுரத்தின் நடுவே சுற்றிப்போகும் படிக்கட்டின் வழியாய் ஏறிப்போகலாம்; ஆனால் இந்தக் கைதியோ தனது கைகளால் வெளிச்சுவரைப்பற்றித் தொத்தித்தான்போகவேண்டும். கடைசி மெத்தை போகும்வரையில் வெளியில் இருப்போர் எல்லாருக்கும் அவன் தெரியவேண்டும். அப்படிச்செய்து க்ஷேமமாய் பூமிக்குத்திரும்பி வருவானானால் அவனுக்கு முதல் பரிக்ஷைமுடியும்.

அவன் மறுபடியும் முதல் மேடையின்மேல் நின்றுகொண்டு இன்னொருதடவை அரசனை வணங்கினான். பரீக்ஷை ஆரம்பித்துவிட்டதென்று புலப்படவே பெருங்கூட்டத்தில் எல்லோரும் நிச்சப்தமாய்விட்டார்கள். ஒருமனிதனுடைய உயிர் நூலில் எப்படித் தொங்கிக்கொண்டிருக்கிறதென்பதை இப்பொழுதுதான் நிஜமாய்ப் பார்த்தார்கள்.

சூரியாஸ்தமனத்திற்கு இன்னும் ஒருமணிகூட இல்லை. ஸ்தம்பம் ஆகாயத்திற்கு முன்னால் பிரகாசித்து நின்றது. மேற்கில் அது சாய்ந்திருந்தது. விழுந்தால் சூரியனை மறைத்துவிடும். சூரியகிரகங்கள் ஒரு தேவேந்திர லோகவட்டத்தில் அம்மனிதனை மூழ்த்தினாற்போலிருந்தது. அவ்வொளியில் அவனது வெள்ளை உடுப்பும் வெள்ளைத்தலைப்பாவும் பிரகாசித்தன. அறியக்கூடாத அவ்வொளியில் அவன் முகம் மாறிவிட்டது. கூட்டத்தை ஆளுபவன்போல் அங்கே நின்றான். அவனைப்பார்த்தால் நியாய மூர்த்திபோலவும் சுவாமிபோலவு மிருந்ததே யொழிய தண்டனை பெற்ற கைதியைப்போல் இல்லவேயில்லை.

இவன் இச்சென்மத்தில் மனிதர்கள் அடையக் கூடாத தேவதா சகாயமொன்று பெற்றிருக்கிறான் என்று கூட்டத்திலிருந்தவர்களுக்கு மங்கினாற்போல ஒருவித அறிவு புலப்பட்டது. இவனை வளர்த்த தகப்பனாகிய காசி தேசத்து ஹிரலாலாவினுடைய கீர்த்தி அவர்களுக்கு ஞாபகம் வந்தது; எங்கிருந்தோ கங்கையில் அடித்துக்கொண்டு வந்த இச்சிறுவனுக்கும் அவனுடைய அம்ச மிருக்கிறதென்று அவர்களுக்குத் தெரியவந்தது. கங்கை பரமேஸ்வரன் தலையிலிருந்துதான் உற்பத்தியாகிறதென்று அவர்களுக்கெல்லாம் தெரியும்.

இதுதான் அவனுடைய ஜயகாலம் என்று கூட்டத்திலிருந்தவர்கள் எண்ணினார்கள். அவன் விழுந்து இறந்துபோனால் அவர்களுக்கு அதிக சங்கடமா யிருக்கும்; அப்படியானால் சர்வசக்தியுள்ள கடவுளும் தோற்றுவிட்டதாகத் தோன்றும்.

பிறகு வரவர மேலே ஏறினான். ஒவ்வொரு மாடியிலும் சற்று நின்று அரசனை வணங்கினான். ஆனால் அவன் மௌனியாயிருந்தான். அவன் வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவேயில்லை. பக்கத்திலிருந்து ஊகமாய்ப் பார்த்தவர்கள் அவன் வணங்குகையில் புன்சிரித்ததாகச் சாதித்தார்கள். ஆனால் அந்தப்புன்சிரிப்போ மணமகளைக் கைபிடிக்கச் செல்லும் மணமகனுடைய புன்சிரிப்பைப்போ லிருந்ததாம்.

அரசனும் மௌனமாயிருந்தான். அவ்விருவர்களிடம் ஒரு சண்டையுண்டாய்க் கொண்டிருந்தாற்போ லிருந்தது. அது ஜனங்களுக்கு மனதில் புலப்பட்டதே யொழிய அதை வெளிப்படையாய்ச் சொல்லமுடியவில்லை.

திடீரென்று ஆவேசம் கொண்டவனைப்போல் நாராயணலாலா சாளரமேடையைச் சுற்றிச் சென்றான். கிழக்கேநின்று அங்கிருந்த ஜனங்களைவணங்கினான். தெற்கே வந்து நின்று அங்கிருந்தவர்களையும் வணங்கினான். மேற்கே சென்று அஸ்தமிக்கும் சூரியனை வணங்கினான்.

சூரியபகவான் ஓடிக்கொண்டிருக்கும் மேகத்தினின்றும் குதித்து அவனைக்கண்டு புன்னகைசெய்தார். நாளதுவரையிலும் ஜனங்கள் அப்படியே சொல்லுகிறார்கள்; தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன்மார்களுக்கும் ஒரு அதிசயமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நிலமட்டத்துக்கு 70 அடிக்குமேலே யிருக்கையில் அந்த மேடையின் கைப்பிடி மரத்தின்பேரில் நேராய் கைகளை விரித்துக்கொண்டு நிற்கிறதைப் பார்த்தார்கள். அவன் சிம்மாசனத்தில் வீற்றிருந்த அரசனை நோக்கிப்பார்த்தான்.

"ஓ! அண்ணே! அவன் வாயினின்றும் என்னவருகின்றது பார்," என்று வடதிசையிலிருந்த ஒருவன் உரத்துக் கூவினான்.



"அதைப் பார்த்தால் சிலந்தி நூலைப்போலவும் அவனைப் பார்த்தால் சிலந்திப் பூச்சியைப் போலவு மிருக்கிற தென்று" மற்றொருவன் பதில் சொன்னான்.

ஏனெனில் அது அவன் வாயினின்றும் புறப்பட்டு தெளிந்த நீல ஆகாயத்திற்கு ஊடே வெண்மையாய் ஓர் மெல்லிய கோடுபோலிருந்தது.

அது மிகவும் மெல்லியதா இருந்தது. மனக்கண்ணுக்குத்தான் புலப்படும் மெல்லிய கோடுகளைப்போ லிருந்ததே யொழிய சத்துள்ள வஸ்துவா யிருக்கவில்லை. ஒரு நிமிஷமிருக்கும்; அடுத்த நிமிஷத்தில் போய்விடும்; மூன்றாவது நிமிஷத்தில் திரும்பிவரும். இங்கே, அங்கே——எங்கேயும்——இருக்கும்எங்குமில்லை.

"அது ஒரு நூல், பட்டுநூல், அரசன் பக்கமாய்ப் போகிறது" என்று தூரதிருஷ்டிக்காக கையைக் கண்ணின்மேல் சாய்த்துக்கொண்டு பார்த்த இன்னொரு மனிதன் கூவினான்.

அது வரவர தடிப்பாயிற்று. இப்பொழுது நிசமான வஸ்துவாகவே தோன்றிற்று. ஒவ்வொரு நிமிஷமும் நீண்டு, அழகாய்வளைந்து ஆகாயத்தில் பறந்து நுனி அரசனிடம் சென்றாற்போலிருந்தது.

ஆயினும் காற்றேயில்லை. ஆகாயம் அமரிக்கையா யிருந்ததால் அணுவும் அசையவில்லை.

"இல்லை ஐயன்மீர்! அது நூலல்ல ஒருகயிறு!"

நிச்சயம்—, கயிற்றைப்போல் தடித்துத்தானிருந்தது. ஒரு நிமிஷத்திற்கு முன் நூலா யிருந்தது. கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்ததும் கயிறாகிவிட்டது.

"வெண்மையல்ல, சாம்பல் வர்ணமாயிருக்கிறது"

அதுவும் நிஜம்தான். வெண்மையாயிருந்த சிலந்திநூல் சாம்பல்வர்ணமான கயிறாய் விட்டது. இப்பொழுது கோபுரத்திலிருந்து அரசனிருக்கும் மேடைக்குப் பாதிதூரம் வந்துவிட்டது.

"பார்! பார்!! அது அவன் வாயிலிருந்து வரவில்லை, வலது கையிலிருந்தும் வருகிறது.

"இடதுகையிலிருந்து!"

"இல்லை, தலைப்பாவைச் சுற்றி!"

அவர்களிப்படி எங்கேயிருந்து வருகிறதென்று தங்களுக்குள் நிச்சயம்செய்துகொள்வதற்கு முன் நாராயணலாலா மறுபடியும் மேலே ஏற ஆரம்பித்துவிட்டான். இப்போது சிகரத்திற்குப்போக இன்னும் ஏழுமேடைகள்தா னிருக்கின்றன ——ஆறுதான் ——ஐந்துதான்.——

"அதோபார்!" என்று கீழே பூமி அசைந்தது என்று எண்ணினவன்போல் ஒருவன் தன்பக்கத்திலிருந்தவன் பேரில் உருண்டு விழுந்து சொன்னான்.

"என்ன ? எங்கே?"

அந்தக்கேள்வி கேட்டவுடனே அம்மனிதன் முகத்தில் திடீரென்று உண்டாகிய பயக்குறிகளே அக்கேள்விகளுக்குத் தகுந்த மறுமொழி தந்தன.

கோபுரம் ஆகாயத்தில் மெல்ல ஆட ஆரம்பித்தது. அதனுடைய நுண்ணிய சிகரம் கடைசியாய்த் தான் சொல்லவேண்டிய விஷயங்களை வானத்தில் எழுதிற்று.

ஒருக்கால் ஒரு சிறிய மேகம் ஓடிக்கொண்டிருந்ததினாலேதான் கோபுரம் அசைந்ததுபோல் தெரிந்திருக்கக்கூடும். ஆனால் ஓடும் மேகம் வந்தவழி திரும்பாது. கோபுரமோ வானத்தில் திரும்பி இந்தண்டை ஆட ஆரம்பித்தது.

"கீழே வந்துவிடு! கீழே வந்துவிடு" என்று நிச்சப்தமாயிருந்த ஜனங்கள் இப்பொழுது கூக்குரலிட்டார்கள்

மூன்றாவது மேடையில் கை வைக்கவே நாராயணலாலா அசைய ஆரம்பித்தான். தனது விதியையறிந்து கொள்வதற்காகத் தூரத்திலிருந்த சிம்மாசனத்தை நோக்கினான். அதில் வீற்றிருந்த உருவமோ விறைப்பாய் மனவிளக்கமின்றி உட்கார்ந்திருந்தது. அவன் கண்ணில் கருணையில்லை. உதடுகளில் புன்னகை தோன்றவில்லை. கையினால் இரக்கக் குறிகள் ஒன்றும் காட்டவில்லை.

"இல்லை! மேலே——இன்னும் மேலே! நாதா, உன்வேலை இன்னும் முடியவில்லை மேலே——மேலே" என்று கீச்சென்று ஒரு குரல் கேட்டது. ஆனால் அது உன்மத்தன் ஜயத்தைப்பற்றி உண்டான குரல். நிர்ப்பயமாய் அளவில்லாத நம்பிக்கை நிறைந்திருந்தது.

கூட்டத்திலுள்ளோர் அந்நம்பிக்கையைக் கைப்பற்றினார்கள். பொங்கும் ஆசையால் அவ்வளவு உரத்துக் கூவின ஒரு சிறு குரல் அவர்களைக் காப்பாற்றிற்று. சற்றுமுன் இவன் விதி மூண்டதென்று தங்களுக்குள் நிச்சயித்திருந்தார்கள். இப்போது இச்சிறு குரல் ஒன்று தப்பித்து விட்டது.

"நாராயணலாலா இன்னும் மேலே!"

"ஓ விதியை வென்றவனே சிகரத்திற்கே செல்."

க்ஷணநேரத்திற்குள் திடசித்தமற்ற அச்சனங்கள் தங்களுடைய முன் எண்ணங்களையெல்லாம் மறந்துவிட்டார்கள். வானத்திலிருந்து நக்ஷத்திரங்களைப் பறித்துக்கொண்டு வரச்சொல்லி நாராயணலாலாவைக் கூக்குரலிட்டுக் கேட்டார்கள்.

இப்பொழுது புதிதாயுண்டான உற்சாகத்தில், கோபுரம் அதிகமாய் ஆட ஆரம்பித்ததைக் கவனிக்கவேயில்லை. எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள். வருத்தத்துடன் ஜயத்தை யடையப்போகும் அந்த உருவத்தின்பேரில்தான் கவனமிருந்தது.— அது ஜயத்தையோ மரணத்தையோ அடையப்போகிறது! சுவாமிக்குத்தான் தெரியும்.

"பாருங்கள் பாருங்கள் அண்ணே! அது சிறு கயிறல்ல தாம்புக்கயிறு" என்று ஒருவன் பெருமூச்சிட்டுக் கூவினான்.

"அது வரவர இன்னும் தடிப்பாகிறது. அரசனுக்கின்னும் அருகாமையில் வருகிறது."

"எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நீங்கள் எல்லாரும் கனவு கண்டவர்கள்போலும் என்று மற்றொருவன் முணுமுணுத்தான்.

அந்தக் கூட்டத்திலுள்ள ஜனங்கள் சிலர் இன்னொருபக்கமும் பேசினார்கள். சிலர் அது கயிறு தான் என்றும், அரசனிருக்கும் மேடைக்குப்பத்துமுழ உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்ததென்றும் தங்கள் தகப்பன் ஆணையாகச் சொன்னார்கள். நுனிமாத்திரம் தெரியவில்லையென்று ஒத்துக்கொண்டார்கள். ஏதோ ஒருமப்பில் அதுமறைந்து விட்டாற்போல் தோன்றிற்று.



மற்றவர்கள் ஒன்றுமில்லவேயில்லை யென்று உறுதியாய்ச் சாதித்தார்கள். ஆகாயத்தின் உயரே புகை அல்லது மேகரேகையா யிருக்கக்கூடும். அதைத்தான் அருகாமையில் ஒரு கயிறென்று ஜனங்கள் சந்தேகிக்கக்கூடும்

நிஜமோ பொய்யோ! வான அந்தக்கயிற்றின் நுனியை எல்லா ஜனங்களும் உற்றுப் பார்த்தார்கள். இடி இடிக்கும்காலத்தில் பயந்த ஜனங்கள் அடையும் உணர்ச்சியைப் போல் சொல்லக்கூடாத ஒருவித உணர்ச்சியை யடைந்தார்கள். ஆகாயத்தில் ஏதோ கனமாகவும் மூச்சுவிடக் கூடாததாகவு மிருந்தாற்போலிருந்தது. அதனால் மூளை உணர்ச்சி கெட்டுக் கைகால் ஓடாமல் போய்விட்டது. இது ஏதோ சக்தியின் பாவம்.

"எங்கே, அவன் எங்கே?" என்று தற்செயலாய் கோபுரத்தைப் பார்த்த ஒருவன் திடீரென்று கூவினான்.

ஆகாயவிமானம் (Balloon) ஆகாயத்தில் ஏறுவதை நோக்குங்கால் கடைசியாக அது ககோளத்திலிருந்து தொங்கும் கறுத்த ஓர் புள்ளிபோல் தோன்றும். அது மேலே செல்லச்செல்ல புள்ளியின்னும் சிறியதாகத் தோன்றும். பிறகு கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தால் அது இருக்குமிடம் நமக்கு சந்தேகமாய்த் தோன்றும். அங்கேதான் இருக்கிறதென்று நாம் சொல்வோம்; இன்னும் கண்ணுக்குத் தெரிகிறதாக சிலர் சாதிப்பார்கள். அடுத்த க்ஷணத்தில் மனத்தோற்றம்தான் அல்லவோவென்று அவர்கள் சந்தேகிப்பார்கள்.

நாராயண லாலா அவர்கள் காட்சியினின்றும் அப்புள்ளிபோல் மறைந்தான். கோபுரத்தின் கடைசிமூன்றுமேடைகளையும் ஒரு மப்பு மறைத்துக்கொண்டுவிட்டது—அது நிஜமானமப்போ அல்லது அவர்கள் கண்ணுக்குத்தான் அப்படித் தோன்றியதோ ஒருவருக்கும் சொல்லமுடியவில்லை.

திடீரென்று சிகரத்தில் மப்பு நீங்கிவிட்டது; அதனது கூர்மையான உச்சி கண்ணுக்குப்புலப்பட்டது.

"போ, போ, எல்லாரும் பின்னே போங்கள்! கோபுரம் விழுகிறது!!" என்று பைத்தியம் பிடித்தாற்போல் ஆயிரம்பேர் கூவினார்கள்.

சிகரம் ஒரு பாய்ச்சலாய் மேற்கேபாய்ந்தது......ஆனால் மறுபடி கிழக்கே திரும்பிப் பாய்ந்தது.

"சபாஷ்! நாராயணா!! உச்சிக்குச் சென்றுவிட்டான் அவனைப்பார்!" என்று ஒருவன் வானத்தைப்பார்த்துக் கூவினான்.

பித்தம் பிடித்த ஜனங்கள் அந்தச் சொல்லைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள். சிலர் குதித்தார்கள், சிலர் பைத்தியம் பிடித்து உளறினார்கள்; சிலர் கீழே மூர்ச்சையாய் விழுந்தார்கள்.

மப்பு மேலே உருவமில்லாத வெண்மையுள்ள வஸ்து ஒரு நிமிஷ நேரம் வெளியாயிற்று. அது தலைப்பாகட்டிய ஒரு தலையா யிருக்கக்கூடும்——அல்லது மேகமாயிருந்தாலும் இருக்கக்கூடும். சிகரத்துடன் அதுவும் ஆடிற்று.

கிழக்கே சிகரம் எவ்வளவு தூரம் சாயவேண்டுமோ அவ்வளவு தூரம் சாயவில்லை ......ஆனாலும் திடீரென்று திரும்பி உச்சிக்கே வந்துவிட்டது. கடகட பாதாளத்தில் குதிக்கும் ஒரு முரட்டுக்குதிரையைப்போல் மேற்கேசாய்ந்தது. மேற்கே சாய்ந்த கடைசியிடத்தில் ஒரு க்ஷணநேரம் நின்றது——பிறகு அதைத் தாண்டி விழுந்தது......

பிரமாண்டமான கோபுரம் வானத்தைக் கிழித்துக்கொண்டு ......அஸ்தமிக்கும் சூரியனை விழுங்கி......அதை மறைத்துவிட்டது.

பூமியின்பேரில் இடிபோல் பயங்கரமான ஒரு அடி விழுந்தது. சமுத்திரத்தின் பேரில் ஒரு கொட்டாங்குச்சியைப்போல் அதை ஆட்டிவிட்டது. விழுந்த கோபுரம் அதிர்ச்சியினால் குதித்து மனிதனால் கொல்லப்பட்ட ஒரு பெரும் ராக்ஷசனைப்போல் குப்புறவிழுந்தது.

இரு புறமும் புழுதிநிறையக் கிளம்பி சூரியனை ஒரு திரைபோல் மறைத்துக் கொண்டுவிட்டது. ஜாலவித்தையைப்போல் சூரியன் சிவப்பும் செம்பிசமும் தாமிரவர்ணங்களுமாய்க் கிரணங்களைச் சாய்த்தது. பரஞ்சோதியாகிய பகவான் பதினாயிரம் கைகளால் பூமாதேவியை ஆலிங்கனம் செய்துகொள்வது போலிருந்தது.

இதனிடையே கூட்டத்திலிருந்த மனிதன் பெருமூச்சு விடவே அடங்கியிருந்த மற்றெல்லோருடைய பயமும் வெளியாயிற்று.

"பகவானே கிருபா நாதா! ஓ! ஓ!——அவனிறந்து விட்டான், கோபுரம் நசுக்கி விட்டது!!"

அந்த மானிட சமுத்திரம் ஒருவிதத் தீர்மானமின்றி ஒரு க்ஷணநேரம் இங்குமங்கும் அசைந்துகொண்டிருந்தது. பிறகு பைத்தியம் பிடித்தாற்போல் கோபுரத்தின் தலையண்டை பாய்ந்தது. திடீரென்று "அரசன்! அரசன்!" என்ற கூக்குரலைக்கேட்டு நிறுத்திவிட்டார்கள். திரும்பி பேய்க்காற்றைப்போல் மேடையண்டை பாய்ந்தார்கள்.

நெடுநெடுவென்று உயர்ந்த முகத்தில் இரத்தம்வற்றி இளைத்த அந்த உருவம் நிச்சப்தமாய் நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தது. அவன் கண்களில்—இருட்டான இடங்களில் சிலவேளைகளில் காணும் ஒளியைப்போல்——ஒரு நரகலோகத்து ஒளி பிரகாசித்தது. கண்ணுக்குப் புலப்படாத ஓர் மனோவிகாரம் தணிக்க வொட்டாமல் உள்ளே குத்துவதினால் அவன் மார்பு தூக்கி எரிந்துகொண்டிருந்தது.

இரண்டுதடவை அவன்வலது கையை மேலே உயர்த்தினான். இரண்டு தடவையும் ஏதோ சில சொற்களை முணுமுணுத்துக்கொண்டு கையைக் கீழேகொண்டு வந்துவிட்டான். மூன்றாம்தடவை ஏதோ ஒரு மாயாசக்தியினால் கைமேலே நின்றுகொண்டிருந்தாற்போலிருந்தது—இடது கையையும் மேலேகொண்டு வந்து இரண்டு கைகளையும் மெதுவாய்க் கீழே யமர்த்தி உள்ளங்கை கீழே தெரிய இருகைகளையும் தன் முன்னால் சேர்த்துக்கொண்டான்.

சுவேதாம்பரம் தரித்த ஓர் உருவம் அவன் முன்னால் வணங்கிற்று. அவன் காலடியில் முழந்தாளிட்டு நீட்டிய அவன் கைகளைத் தன் கையிறபிடித்துக் கொண்டு அவைகளைத்தன் உதடுகளில் அமர்த்தி முத்தமிட்டான்.

"ஓ இராஜாவே! உனது அடிமையின் முகத்தைப்பார் பரமேஸ்வரனுடைய ஆஞ்ஞை நடந்துவிட்டது!"

சுற்றியிருந்த ஜனங்கள் நிமிர்ந்த அவன்முகத்தை அஸ்தமிக்கும் சூரியனுடைய கடைசி கிரணங்களுடைய ஒளியில் பார்த்தார்கள்.

அது நாராயணலாலா. தூக்கத்தில் நடப்போர்களைப்போல் கூட்டத்தினின்றும் ஜனங்கள் கலைந்துபோனார்கள்.



"ஆனால் அவன் எங்கிருந்துவந்தான்?" என்று ஒருமனிதன் மற்றொருவனை வினவினான். அவர்கள் நாராயணலாலா குற்றம்செய்த இராத்திரி அரண்மனைவாயிலில் உட்கார்ந்திருந்த இரண்டு காவற்காரர்கள்தான்.

"கோபுரத்தின் உள்படிக்கட்டின்வழியாக அவன் கீழே வந்திருக்கவேண்டும்" என்று மற்றவன் மறுமொழிசொன்னான்.

"அப்படியானால்——அது விழுவதற்குமுன் அவன் இறங்கிவந்திருந்தால்——கோபுரம் எப்படி விழுந்தது?" என்று கேள்விகேட்டவன் பிடிவாதமாய்க் கேட்டான்.

"அந்தக் கயிற்றின்வழியாய் இறங்கியிருப்பானென்று எனக்குத் தோன்றுகிறது."

"கயிறு——சயிறு!" என்று பக்கத்தில் நின்றோர்கள் கூச்சலிட்டார்கள்.

ஆனால் இப்போது கயிறு ஒன்றும் காணவில்லை.

"கயிறு எப்பொழுதுமிருக்கவேயில்லை" என்று புத்தியில்லாத ஒருவன் சாதித்தான்.

"சிநேகிதர்களே, மன்னியுங்கள், இருந்தது——உங்கள் மனதில். தூங்கும்
குழந்தைகளைப்போல் ஆகாயத்தில் கயிறுகளைப் பார்த்துக்கொண்டும் வீணைகானங்களைக்
கேட்டுக்கொண்டும் நீங்களெல்லோருமிருந்தீர்கள். கனவு கண்டுகொண்டிருந்தீர்கள்;
தோழர்களே, கயிறு இல்லாவிட்டால் கோபுரமுமில்லை, அரசனுமில்லை, நாராயண
லாலாவுமில்லை. அவைகள் எல்லாவற்றையும் பார்த்தீர்கள்; ஆயினும் ஒன்றையும் பார்க்
கவில்லை. குறைந்தபக்ஷம் கோபுரமிருந்தது, நாராயணலாலாவு மிருந்தான்; நீங்கள்
இதுதவிர இன்னுமநேக விஷயங்களைக்குறித்து கனவு கண்டீர்கள். நற்சனங்களே!
வீட்டிற்குப்போய் உங்கள் சுவாமிகளை உங்களுக்கு ஞானமளிக்கும்படி பிரார்த்தியுங்
கள்."

அந்த உருவம் கூட்டத்தில் மறைந்துவிட்டது. அவன் நெற்றியில் அகன்ற வைஷ்
ணவ நாமமும், அவன் தேகத்தில் தானே உண்டாக்கிக்கொண்ட காயங்களையும் கண்டு
பிடித்தார்கள். அது இராமகிருஷ்ணபண்டிதன்.

"நிச்சயமாய் ஆச்சரியமான தப்புகைதான். ஆனால் அது எப்படி நடந்ததென்று
உனக்குத் தோன்றுகிறது." என்று தலையணையினின்றும் மகாராஜா கேட்டான்.

கதைசொல்வோன் நிலத்தில் தலைபடும்படி வணங்கி "ஜகத்ஜோதியே! பரமேஸ்
வரனுடைய ஆஞ்ஞை" என்றான்.

ஆனால் கட்டிலின் மற்றப்பக்கத்தினின்றும் கேட்டுக்கொண்டிருந்த மகாராஜா
வுக்கு உண்மையை வரைவோனாகிய நான் நாராயணலாலாவினுடைய பராக்கிரமத்தி
னுடைய நிஜமான செய்தியை ரகசியமாயறிந்துகொண்டிருக்கிறேன். இதை வாசிப்போ
ருடைய நன்மைக்காக இங்கே எழுதலுற்றேன்.

அந்த வித்தைசெய்த வழி மிகச்சுலபமும் ஜனங்களுக்குச் சற்றும் சமுசயம் உண்
டாக்கத்தக்க தல்லாததாயுமிருந்தது. பார்த்தோர்களி லொருவன் சொன்னது நிஜம்
தான்; கயிறு இருக்கவேயில்லை. தன் வாயினின்றும் நாராயணலாலா ஒரு நூற்கண்டை
யெறிந்தான்; எந்த ஜாலவித்தைக்காரனும் அது செய்வான். கயிறு விஷயத்தைக்குறித்
தோ சிலர் தாங்கள் கண்டதாக நினைத்தார்கள்; மற்றவர்கள் காணவில்லையென்று

சாதித்தார்கள். முதற்சொன்னோர்களுக்கு வீண்எண்ணம் அதிகம்; ஒன்றுகண்டால் ஒன்பது நினைப்பவர்கள்; நூலிருப்பதைக்கொண்டு அதையொரு பெரிய கயிறென்று திரித்துவிட்டார்கள். இல்லை, நிஜமாய் நடந்தவழி இது:

அந்தக்கோபுரம் கட்டியகாலத்தில் அஸ்திபாரத்திற்கடியே ஒரு நிலவறையிருந்தது; அதற்கும் வடக்கே வெகுதூரத்திலிருந்த பழைய அரண்மனைக்கும் நிலத்திற்குக் கீழ் வழியிருந்தது. இந்தக் கோபுரத்தைக்கட்டிய ஜயவீரன் தன் சிம்மாசனத்திற்கு குறிப்பு வைத்தார்களென்று குற்றம் சாற்றிய தமது பந்துக்களை இரகசியமாய் அந்த இருண்ட குகைக்குள் நீக்கிவைக்கிறதுண்டு என்று ஜனங்கள் சூக்ஷமமாய்ச் சொல்லுவார்கள். ஆனால் பல நூற்றாண்டுகளுக்குமுன், பழைய அரண்மனை முற்றுகையில் அழிந்தகாலத்தில் அந்தவழி மூடப்பட்டுவிட்டது. அதனுடைய ஞாபகமும் நிலவறையினுடைய ஞாபகமும் ஜனங்கள் மறந்தேவிட்டார்கள். ராமகிருஷ்ண பண்டிதன் நாராயணலாலாவினுடைய க்ஷேமத்தையும் ஐசுவரியத்தையும் உள்ளத்தில் பூர்ணமாய்க் கருதியிருந்தவன்; ஏன் என்பதுபின்னால் விளங்கும். அவனுடைய பூர்வசரித்திரம் ஜனங்களுக்குத் தெரியாத ஏதோ விதமாய் அந்தவாலிபனுடைய சரித்திரத்துடன் சம்பந்தப்பட்டிருந்தது. எப்படி என்பது பின் சொல்லப்படும். காவற்காரர்களிடமிருந்து, அரசன் வாலிபனை ஜயகோபுரத்தில் கடும்பரிக்ஷைக்கு உள்ளாக்குவதற்கு தீர்மானித்திருக்கிறானென்று அறிந்தவுடனே, அப்பரீக்ஷையின் குணமின்னதென்று அறிந்துகொண்டுவிட்டான். தவிர மிகப் படித்தவனாகையால் பூர்வசரித்திரங்களில் எல்லோரும் நெடுநாளாய் மறந்திருந்த நிலவறையைக் குறித்தும் படித்திருந்தான்.

ஆகையினால், அரசன் தீர்மானித்த தினம் முதல் பரிக்ஷை நடக்கும் தினம்வரையில் இடையிலிருந்த நாட்களில் இராக்காலங்களில் அரண்மனை மேடுகளுக்கு இரகசியமாய்ச்சென்று நிலத்திற்குள்ளிருக்கும் படிக்கட்டுச் செல்லும்வழியை வெட்டித் திறந்தெடுத்து நிலவறைக்குச் சென்றான். அங்கே, நிலவறையின் கூரைக்கும், கோபுரத்திற்குள்ளிருக்கும் படிக்கட்டின் அடிக்கும் ஒரு வழி யுண்டாக்கினான்; அதன்வாயின்பேரில் ஒரு பலகையை வைத்து, தொய்ந்த மணலைக்கொண்டு ஜாக்கிரதையாய் மூடிவிட்டான்.

பிறகு எல்லாம் சுலபம்தான். நாராயணலாலா கோபுரத்தின் உச்சிக்கு அருகாமையிலிருக்கையில், அஸ்தமனகாலத்தில் சாதாரணமாய் திடீரென்று உண்டாகும் ஒரு மப்புக்குள் மறைந்துவிட்டாற்போல பார்ப்போர்கண்களுக்குத் தோன்றிற்று; நிஜமாய் அவன் உள் படிக்கட்டுக்குள் பிரவேசித்துவிட்டான். இதற்குள் கீழேயிருந்த அவன் சிநேகிதன், நிலவறைக்குச்செல்லும் வழியைத் தைரியமாய்த் திறந்துவிட்டான். அதை அடைவதற்கு ஒரு நிமிஷம்தான் பிடித்தது.

கோபுரம் சாய்ந்திருந்த காரணத்தினால் அஸ்திபாரம் முன்னேயே அமிழ்ந்திருந்தது. அதை நாராயணலாலாவினுடைய சிநேகிதன் கீழே தோண்டியின்னும் அமிழ்த்திவிட்டான். ஜனங்கள் சிகரத்தின் மேலிருந்த மப்புக்குள் ஒரு மேகத்தை தலைப்பாகட்டிய தலையென்று எண்ணிக்கொண்டு அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த காலத்தில் கீழே இவ்விரு ஜனங்களும், கட்டைபாரைகளும், சன்னக்கட்டைகளும்கொண்டு ஆவேசம் பிடித்தவர்களைப்போல் வேலை செய்துகொண்டிருந்தார்கள். கோபுரம் மேற்கே சாய்ந்த காலத்தில் வடக்கே நிலத்திற்குள்ளிருந்த படிக்கட்டுக்குள் ஓடி ஒளித்தார்கள்; அது [illegible] சாய்ந்தகாலத்தில் [illegible] இன்னும் [illegible] பிறகு வெளிவந்தார்கள்.



இதனால்தான் கோபுரத்திற் கிருபுறமும் ஆட்டம் அதிகமாயிற்று. கடைசியாக கோபுரம் தரையின்பேரில் திடுதிடென்று விழுந்தகாலத்தில் அவர்கள் நிலத்திற்குள்ளிருந்த படிக்கட்டின் வழியாய் ஓடி அரசனிருந்த மேடைக்குப்பின்னாலிருக்கும் பழைய அரண்மனையின் மேடுபோய்ச் சேர்ந்தார்கள். ஜனங்கள் தங்கள் கண்முன் நடந்துகொண்டிருந்த விஷயங்கள்பேரிலேயே கவலையாயிருந்துகொண்டிருந்த காலத்தில் மேட்டினின்றும் வெளிவந்து ஜனங்களுடன் கலந்துவிட்டார்கள். கதையை வாசிக்கும் என் அருமையுள்ள நண்பர்களே! இப்படித்தான் கோபுரம் விழுந்தது.

ஆனால், நாராயணலாலா ஏன் தப்பித்து ஓடிப்போகவில்லை? இன்னும் அபாயங்களை யிச்சிப்பவன்போல் ஏன் தன் எஜமானன் முன்வந்து நின்றான்? என்று நீங்கள் கேட்கக்கூடும். அருமையுள்ள நண்பர்காள்! சொல்வேன் கேளுங்கள்: நாராயண லாலா அப்படிச் செய்திருப்பானேயானால் சற்றேனும் சந்தேகமின்றி தன் குற்றத்தைப் பிரசுரப்படுத்தி யிருப்பான்——இராஜ குமாரத்தியினுடைய விதியும் மீண்டுபோயிருக்கும். நாராயணலாலா மாத்திரமல்ல அரசகுமாரத்தியும் பரிக்ஷைக்குள்ளா யிருந்தாள். அவன் நியாயத்தை நிலைநிறுத்தும் பரிக்ஷையினின்று ஓடிப்போ யிருப்பானேயாகில் அது அவள் தலைக்கு வந்திருக்கும்; அபவாதத்திற்கும் உள்ளாயிருந்திருப்பாள். நண்பர்காள் அதனால் தான் இதைவிட இன்னும் கடுமையான பரிக்ஷைக்கு அவன் கீழ்ப்படிந்தான்.

"நாளை இராத்திரி அதை எனக்குச்சொல்" என்று மகாராஜா உத்திரவு செய்தான்.

"என் வாயாலேயே சொல்லுகிறேன்" என்று கதைசொல்வோன் மறுமொழி சொன்னான்.

அப்படியே அடுத்த இரவில் "லக்ஷம்பேர் அழுதகிணற்றைக்" குறித்துக்கதை சொல்ல ஆரம்பித்தான்.

[அடுத்த மாதத்தில் இரண்டாம் கடும்பரிக்ஷை விவரிக்கப்படும்.]

☞ கே. ஜி. வெங்கிட சுப்பய்யர், பி. ஏ.,

# மார்டினீக்தீவில் நேர்ந்த
## பயங்கரமான எரிமலைத் தீவிபத்து.



எரிமலை.

தென் அமெரிக்காவின் வடக்கே அட்லாண்டிக்மகா சமுத்திரத்திலுள்ள மேலிந்திய தீவுகளில் ஒன்றான மார்டினீக் தீவில் உலகத்தைத் திடுக்கிடச் செய்த பயங்கரமான எரிமலைத் தீவிபத்தொன்று சமீபத்தில் நேரிட்டது. இம் மேலிந்திய தீவுகளுள் சில அங்கிலேயருக்கும் சில பிரஞ்சுக்காரருக்கும் சில ஸ்பெயின் தேசத்தவர்க்கும் சொந்தமானவை. இவற்றுள் மார்டினீக்தீவு பிராஞ்சுக்காரருக்குச் சொந்தமான தீவுகளுள் ஒன்று. இதன் விஸ்தீரணம் சுமார் 391 சதுரமயில; ஜனத்தொகை 190,000. இதில் எரிமலை விபத்துகளுக்குக் காரணபூதமான அனேக குன்றுகள் அடர்ந்திருக்கின்றன. இவற்றுள் மவுண்ட்பீல் என்னும் 4400 அடி உயரமுள்ள குன்றொன்றில் 1851-ம் வருஷத்தில் சொற்பமான எரிமலை விபத்தொன்று நேரிட்டதாம். அதற்குப் பிறகு இம்மாதிரியான சம்பவமொன்றும் நேராமையால், மேற்படி தீவில் எரிமலைகளே கிடையாதென்று நம்பப்பட்டிருந்தது. ஆனால் இத்தீவில் அடிக்கடி பூகம்பங்கள் மாத்திரம் நேரிடுவதுண்டு. இந்த மவுண்ட் பீல் என்னும் குன்றுக்கு மேற்கே சேன்ட் பியர் என்னும் துறைமுக நகரமொன்றுண்டு. இந்நகர வாசிகளிற் சிலர் மேற்படி குன்றின் சரிவுகளில் குடியிருந்துகொண்டும், பயிரிட்டுக்கொண்டும் ஜீவித்துவந்தார்கள். இப்படியிருக்கும்போது சென்ற ஏப்ரல்மீ 23உ முதல் மேற்படி குன்றின் உச்சியிலிருந்து புகை வரத்தலைப்பட்டது. மேமீ 3உ மேற்படி புகை அதிகமாகி, அன்று நடு ராத்திரியில் அக்கினிச்சுவாலை வீச ஆரம்பித்தது. மறுநாள் 4உ சாம்பல் தூள்கள் திரள் திரளாய் வெளிப்பட்டன. அடுத்த 5உ மேற்படி குன்றிலிருந்து உருகிய கல்லும் மண்ணும் குழம்புபோல் வெளிக்கிளம்பி சில நிமிஷநேரத்தில் சுமார் அரைமயில் அகலம்வரையில் பாவிச் சமுத்திரத்தை நோக்கி ஆறாக ஓடத் தலைப்பட்டது. அப்படி ஓடும்போது வழியிலிருந்த கட்டட முதலிய யாவும் பொடிசூரணமாயின. அயலிலிருந்த ஜனங்கள் பயந்து சுற்றுப்பக்கத்திலிருந்த குன்றுகளிற் போய்ப் பதுங்கிக்கொண்டார்கள். சிலர் அத்தீவை விட்டே தப்பிக்கொண்டார்கள். அப்படி தப்பியவரிற் பலர் அக்கினிக் குழம்பு வெளிப்பட்டு விட்டமையால் இனி யொன்றும் அபாயமில்லை யென்று எண்ணி மீண்டும் தமது வீடுவாசல்களுக்கு வந்துவிட்டனர்கள். அப்படியிருக்க, இரண்டு மூன்று தினங் கழித்து முன்னிலும் இருமடங் கதிகமான மும்முரத்துடன் மற்றொருவிசை அக் குன்றிலிருந்து அக்கினிக்குழம்பு வெளிக் கிளம்பி, எரிகின்ற கரித்தூள்களும் சாம்பல் தூள்களும் மழைபோல் சொரிய ஆரம்பித்தன. இப்பயங்கரமான நெருப்புமழை சுமார் 5 மயிலுக் கப்பாலிருந்த ஸெண்ட் பியர் என்னும் துறைமுக நகரம்வரையிற் பரவ, அவ்விடத்திலிருந்த கட்டடங்களெல்லாம் தீப்பற்றி யெரியத்தலைப்பட்டன. ஜனங்கள் நெருப்பில் வெந்தவர் பாதியும், புகையால் மூச்சடைத்துப்போனவர் பாதியுமாக மாண்டனர்கள். அந்நகரமுழுதும் எங்குபார்த்தாலும் ஒருபக்கம் வலிவுள்ள நீக்ரோஜாதிப் புருஷர்களும், ஒருபக்கம் நுட்ப சரீரமுள்ள ஸ்திரீகளும், ஒருபக்கம் மரண வேதனையால் உடல் சுருண்ட இளங் குழந்தைகளுமாகப் பிணங்கள் குவியல் குவியலாகத் தென்பட்டன. ஏறக்குறைய 30,000 பேர் இவ்விபத்துக் குள்ளானதாக மதிப்பிடப்படுகின்றது.

ஊருக்குள் ஜனங்கள் கதி யிப்படியாக, கடற்கரையில் வந்து தங்கியிருந்த கப்பல்களும் அதேகதி யடைந்தன. இவ்விபத்து நேரிடுதற்குச் சற்றுமுன்னர் வந்து தங்கிய பிரிட்டிஷ் ஸ்டீமரொன்று நெருப்பு மாரிசொரிய ஆரம்பித்தவுடன் நங்கூரத்தைக் கிளப்பிக்கொண்டு ஓடத்தலைப்பட்டது. அப்படி அத்துறைமுகத்தைவிட்டு ஓடத்தலைப்பட்டு சுமார் 6 மயில் தூரம் வரையில் நெருப்புப்பொரிகள் சொரிந்துகொண்டே யிருந்தனவாம். அக் கப்பலிலிருந்த சிலர் இருந்தவிடத்திலேயே எரிந்து மாண்டார்கள். ஆனால் கப்பல்மாத்திரம் தப்பிக்கொண்டது. அதேசமயத்தில் அவ்விடத்திலிருந்த மற்றொரு பிரிட்டிஷ் ஸ்டீமர் மாலுமி முதலிய மற்ற ஜனங்களுடன் நெருப்பில் வெந்து முழுகிப்போயிற்றும். சிலர்மாத்திரம் தப்பித்துக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. நெருப்பினால் வெந்து குற்றுயிரோடிருந்த சிலர் மாத்திரம் அத்தீவினின்றும் அப்புறப்படுத்தப்பட்டார்கள். தீ வெப்பத்தினால் அத்தீவிலிருந்த ஜலமெல்லாம் வற்றிப்போயினமையால் அவ்விடத்தில் வருந்திக்கொண்டிருந்தவர்களுக்கு அடுத்த தீவுகளிலிருந்து போகும் ஆகாராதிகளைத் தவிர வேறு ஆதரவு இல்லையாம். தீவில் மாண்டவர்களை மொத்த

மொத்தமாய் வைத்துக் கொளுத்திவருகிறார்கள். கொளுத்தப்படாமல் நின்றிருக்கிற ஆயிரக்கணக்கான பிரேதங்கள் சீக்கிரம் கொளுத்தப்பட்டாலொழிய, பிளேக் நோய் வரக்கூடுமென்று பயமுண்டாயிருக்கின்றதாம்.

இப்பயங்கரமான விபத்தால் அத்தீவில் இன்னும் வருந்திக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஒத்தாசையாகப் பலவித முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்தீவு பிரஞ்சுக்காரருடையதாகையால், பிரஞ்சு தேசத்து அரசருக்கு நமது காருண்ணிய எட்வர்ட் சக்கரவர்த்தியவர்கள் தமது பரிதாபத்தைத் தெரிவித்துத் தந்தி சமாசாரமனுப்பி யிருக்கிறார்கள். அன்றியும் இவ்விபத்தால் கஷ்டமடைந்தவர்களுக்கு உதவியாகப் பாரிஸ்நகரத்தில் சேகரிக்கப்பட்டுவரும் பண்டுக்கு நன்கொடையாக நமது எட்வர்ட் சக்கிரவர்த்தி 1000 பவுனும், ஜர்மன் சக்கரவர்த்தி 500 பவுனும் அனுப்பியிருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள ஐக்கியநாடுகளின் பார்லிமெந்தில் இதற்காக 2 லக்ஷம் டாலர்கள் அனுப்பும்படி உத்தரவா யிருக்கிறது. கனடா பார்லிமெந்திலும் 50,000 டாலர்கள் சாங்ஷனா யிருக்கின்றன.

மார்டினீக் தீவுக்குச் சமீபத்திலுள்ள பிரிட்டிஷ் தீவாகிய ஸேன்ட் வின்ஸேன்ட் என்னுமிடத்திலும் அதே காலத்தில் மேற்குறித்தமாதிரியே பயங்கரமான எரிமலை விபத்து நேரிட்டு ஆயிரக் கணக்கான ஜனங்கள் மாண்டதாகச் சமாசாரம் வந்திருக்கிறது.

உ

## ௭-வது எட்வர்ட் சக்கிரவர்த்தியவர்களின்

## முடிசூட்டு

# வாழ்த்துப் பாக்கள்.

சீர்வளரும் புயத்தரசர் திறையளந்து சிரம்வணங்கச்
    செங்கோ லோச்சிப்
பேர்வளர வுலகமெலா மினிதளித்த பெருமாட்டி
    யரிதி னீன்ற
ஏர்வளருந் திரட்புயத்தெம் மெட்வர்டா மியற்பேர்கோ
    ளேந்தலின் பாய்த்
தார்வளரு மணிமௌலி தரித்தென்றுங் குறைநீக்கித்
    தழைக்க மாதோ.

ஆண்டாயிரத் தின்மேலமைந்த தொளாயி ரத்திரண்டில்
ஈண்டார்தரு சூனி லிரு பானுருந்திகதி
பூண்பார் மகுடமதைப் பொற்புறவே நம்மவரிற்
காண்போர் விழியுடையோர் காதுடையோ ராமெல்லாம்.

நாடறிய வுலகாண்டு நுமக்கன்றி யெமக்கெல்லாம் நற்றாயாகி
தேடரிய வுலகடைந்த செல்விபிரி துயரமதிற் றேறுயாங்கள்
மாடரிய சோதரரார் மதிப்பதனால் மனத்தினுறு துயருமாய்த்தோம்
கோடரிய கோலோச்சிக் குவலயங்க ளினிதாண்டு குலவிவாழ்க.

மாயப் பெரும்போர் செய் வல்லரக்கர் மாண்பதிலும்
போயப் பெருந்தலைவர் புரிந்த பெரும் போரும்
ஓயக் கழிந்த தன்மேல் ஒளிர்மகுடம் உற்றதுவே
ஆயிற் பெருங் குறியாம் அரசென்றுந் தழைப்பதற்கே.

எப்பெரும் பரிசு மிசைந்திடு டென்மார்க்கெனும்
    பெருந்தடத்தி னின்றெழுந்த
ஒப்பருங் கமல மலரெனத் தோன்றி யோங்கிடு
    முலகெலாம் புகழ்ந்து
செப்பரு மழகின் றெய்வத மென்னச் சிறந்தொளிர்
    லண்டன்மா நகரம்
துப்புர வமைந்த வரசியை யீசன் றன்னுபே
    ரருளினிற் காக்க.

உருக்குமணியம்மாள்.

# 1. துறைமுகவாராவதியிலிருந்து சென்னைக்காட்சி.

இம்மாதப் பத்திரிகையில் துறைமுக வாராவதியிலிருந்து சென்னைக் காட்சிப் படமொன்று அச்சடித்து சேர்த்திருக்கின்றோம். இது மௌண்ட்ரோட்டிலுள்ள வீல் அண்டு கிளீன்கம்பெனி (*Messrs. Wiele & Klein*) யாரால் செய்யப்பட்டது. ஒவ்வொருமாதமும் இவ்விதம் சென்னையிலுள்ள பிரதானகட்டடங்களின் காட்சிகளைப் பிரசுரிக்க எண்ணியிருக்கிறோம்.

சென்னையில் வடகிழக்கில் துறைமுக வாராவதி வெகு அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. இத்துறைமுகத்தில் பலதேசத்திய கப்பல்கள் தங்கும். அவைகளைப் பார்க்கும்பொழுது வெகு அழகாகத்தோன்றும். ஜனங்கள் கப்பல்வேடிக்கையைப் பார்ப்பதற்காக படகில் ஏறிக்கொண்டுபோய் கப்பலிலுள்ள அதிசயங்களையெல்லாம் கண்டு சந்தோஷமடையலாம். படகில் செல்லும்பொழுது குளிர்ந்த காற்று வீசும். அலைகளெல்லாம் சப்தித்துக் கொண்டிருக்கும். கப்பலிலுள்ள விநோதங்களோ பல.

இத்துறைமுகத்தில் வாராவதி இரும்பால் கட்டப்பட்டிருக்கிறது. இதன்மேல் வெகுதூரம் நடந்து போகலாம். இங்கிருந்துதான் கப்பல்களுக்கு ஒரு யந்திரத்தின் மூலமாக மிக பளுவான சாமான்களை ஏற்றுகிறார்கள். கப்பலிலுள்ள சாமான்களையும் இறக்குகிறார்கள். (வர்த்தகம் நடப்பதற்கும் ஜனங்கள் இதரதேசங்களுக்குச் செல்லவும்) இவ்வாராவதி இல்லாவிடின் மிகக் கஷ்டமேயாம். இவ்விதத் துறைமுகமும் வாராவதியுமிருப்பதால்தான் ஜனங்களுக்கு மிக உபயோகமாயிருக்கின்றன.

இத்துறைமுகத்திற்கு மேற்கே வரிசையாக் அநேக அழகுள்ள ஆபீசுகளிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை:—கஸ்டம் அவுஸ், கலெக்டர் ஆபீஸ், ஆர்பத்நெட் கம்பனி, நேஷனல்பாங்க், பெஸ்ட் அண்டு கம்பெனி, ஜெனரல் போஸ்டாபீஸ், போலீஸ்கோர்ட், மதிராஸ் பாங்க், ஸ்காட்லண்ட்மிஷின்பாடசாலை, பாரி அண்டு கம்பெனி. இவைகளை இச்சித்திரப்படத்தில் காணலாம்.

இதற்கும் சமுத்திரத்திற்கும் மத்தியில் விசாலமான தெருவொன்றிருக்கிறது. இங்கு சமுத்திரக்கரையோரமாக தென்னிந்தியா ரயில்பாதையிருக்கிறது. தெருமத்தியில் மின்சாரவண்டி ஓடுகிறது. குதிரைவண்டிகளும், மின்சாரவண்டியும், ரயில்வண்டியும் ஓடுவதைக் காணும்பொழுது வெகு அழகாகவிருக்கும்.

சாயங்காலத்தில் துரைமார்களும், துரைசானிகளும் அணியணியாக வண்டியில் ஏறிக்கொண்டு சவாரிசெய்வார்கள். இன்னுமிந்துக்களும், மகமதியர்களும், பார்ஸீகர்களும் செல்லுவார்கள். இக்காட்சிகளை அவசியம் ஒவ்வொருவரும் பார்க்கவேண்டியது. பார்க்காதவர்கள் இங்குள்ள படத்தைப் பார்த்துச் சந்தோஷமடையலாம். பார்த்தவர்களும் இதையும்பார்த்து விசேஷஞானத்தை யடைவதுடன் மகிழ்ச்சியையும் பெறலாம்.

[அடுத்ததடவை ஜெனரல் போஸ்டாபீஸ் சித்திரப்படம் பிரசுரிக்கப்படும்.]

Wiele & Klein, Photo Engravers, Madras.



துறைமுகவாராவதியிலிருந்து சென்னைக்காட்சி.

# CORONATION CEREMONY.

## பட்டாபிஷேகச் சடங்கு.

### கோயிலுட்குள் பிரவேசம்.

1902-ம் வருஷம் ஜூன்மீ 26-ந்தேதி வியாழக்கிழமை யன்று வெஸ்ட்மின்ஸ்டர் செண்ட் பீடர் ஆபிக்கோயிலில் நமது சக்ரவர்த்தி 7-வது எட்வர்டுக்கும் சக்கிரவர்த்தினி அலக்சாண்டராவுக்கும் நடக்கும் பட்டாபிஷேகச்சடங்கின் முக்கியமான சிலவற்றை எழுதுகிறோம்;—

கோயிலின் மேற்குதிசையிலுள்ள கதவுக்கு வெளியில் பிரதான குருமார்களும், பிஷப்புகளும் அழகான உடைகளைத் தரித்துக்கொண்டு நிற்பார்கள்.

இராஜனும், இராணியும் அக்கதவண்டை வருமளவும் காத்துக்கொண்டிருந்து அவர்கள் வந்ததும் அவர்களை தரிசித்துவிட்டு கோயிலுக்குள் எல்லோரும் போவார்கள்.

இவ்விதம் கோயிலுக்கு அரசரும், இராணியாரும் செல்லும்போது "அவர்கள் நாம் அவுஸ் அப்லார்ட் என்ற மண்டபத்திற்குச் செல்லுவோம் என சொன்னபொழுது நான் சந்தோஷப்பட்டேன்" என்ற விஷயங்களடங்கிய ஒரு பாடலை அங்குள்ள சங்கீத வித்வான்கள் பாடுவார்கள்.

பாடும்பொழுது உள்ளே சிம்மாசனங்களுக்குச் சமீபத்திற் சென்று கடவுளை வணங்கி சிம்மாசனத்தின் கீழ் போட்டிருக்கும் நாற்காலிகளில் அவர்கள் உட்காருவார்கள்; முக்கிய குருமார் தமது பரிவாரங்களுடன், மண்டபத்தின் நாலாபக்கமும் செல்லுவார். அதாவது கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு:—முக்கிய குரு அங்குள்ளவர்களைப் பார்த்துப் பேசும்பொழுது நமது மகா இராஜா அவர்கள் எழுந்து நின்றுகொண்டு அங்குள்ள ஒவ்வொரு திக்கிலுமுள்ள ஜனங்களைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

முக்கிய குரு அவர்கள் ஜனங்களாகிய குடிகளைப்பார்த்து 'ஐயா! உங்களுடைய அரசராகிய எட்வர்ட்டை இதோ பாருங்கள். இவர் உங்கள் அரசுக்கு இராஜன் என்பதில் ஐயமேயில்லை; இங்கு அரசரை வழிபடுவதற்கு வந்திருக்கிற நீங்களெல்லோரும் அவருக்கு வழிப்பாடு செய்ய உங்களுக் கிஷ்டமா" வென கேட்பார்.

இவ்விதம் கேட்டவுடன், அங்குள்ள யாவரும் மிகச்சந்தோஷத்துடன் கெட்டியாய் "எட்வர்ட் மகாராஜா வாழ்க" "எட்வர்ட் மகாராஜன் வாழ்க" வெனச் சொல்லுவார்கள். சங்கீதமும் அப்பொழுது கொஞ்சநேரம் நடக்கும். பின்பு குருமார்கள் பைபிலை பலிபீடத்தில் வைப்பார்கள். இதன் தென்புறத்தில் ராஜனும், ராணியும் வந்து முழங்காவிட்டு வணங்குவார்கள்; உடனே சங்கீத வாத்தியம் முழங்கும்.

### சத்தியம் செய்வது.

குருமார் தெய்வஸ்துதி முதலியவைகள் செய்தபின் இராஜனுக்கெதிரில் நின்றுகொண்டு "ஐயா, தங்கள் கனத்துக்கு சததியம் செய்துகொடுக்க இஷ்டமா?" வென்று கேட்பார். "எனக்கு இஷ்டந்தான்!" என்று மகாராஜா அவர்கள் பதிலுரைப்பார்கள்.

பிரதான குரு இன்னும் சிற்சில கேள்விகளையும் கேட்டு விடை பெற்றுக் கொள்வார். அரசர் விடைகொடுத்தபின் எழுந்து பலிபீடத்திற்கு குருமார்களுடன் செல்வார். அப்பொழுது அவர்முன் அரசுமுறைக் கத்திபிடிக்கப்படும்.

உடனே குருமார் அரசரிடத்தில் பைபிளைக்கொடுத்து 'பரிசுத்தமான சுவிசேஷம்' என்றவிடத்தில் தமது வலதுகையை வைத்துக்கொள்ளும்படி சொன்னவுடன், நமது மகாராஜா அவர்களும் அவ்விதமே செய்து, முழங்காலிட்டு பின் வருமாறு சத்தியம் செய்வார்.

"நான் சற்று முன்செய்த சத்தியப்பிரகாரம் இவைகளை நான் பூர்ணமாய் செய்யக் கடவேன்; நிலைக்கவும் செய்வேன்; கடவுளே! என்னை ரக்ஷிக்கவேண்டும்." என சொல்லி அரசர் பைபில் புஸ்தகத்தை முத்தமிட்டு சத்திய பத்திரத்தில் கையெழுத்துப் போடுவார்.

மகாராஜாவும், மகாராணியாரும் முழங்காலிட்டுக்கொண்டிருப்பார்கள். உடனே சில குருமார்கள் அவர்களுக்கு மேலேபட்டுத் துணியைப் பிடித்துக்கொண்டிருப்பார்கள். பிரதான குருமார் அரசருக்குத் தலையிலும், மார்பிலும், உள்ளங்கைகளிலும் எண் ணெயைத் தொட்டுவைப்பார்கள். "அநேக இராஜாக்கள் ஆண்டுவந்ததுபோலவே தாங் களும் ஆண்டுவரும்படி கடவுள் உங்களுக்கு இப்பதவியை யளித்திருக்கிறார்" 'வென ஆசிர்வதிப்பார்.

## ஆசீர்வாதம்.

மகாராஜா அவர்கள் ஆசீர்வாதம் பெறும்பொழுதும் முழங்காலிட்டுக்கொண்டிருப் பார். அவருக்கு குரு பலிபீடத்திலிருந்து நியாயம் பொருந்திய கத்தியை யளிப்பார்.

பின்பு அரசருக்கு இராஜவுடுப்பு தரிப்பார்கள். பின்பு இராஜா அவர்கள் உட்காரு வார். பிரதான குரு அவர்கள் ஸ்தோத்திரம் செய்வார். அப்பொழுது இராஜன்கையில் பலிபீடத்திலிருந்து சிலுவையையும், சக்கரம்போன்றுள்ள பரிசுத்தமான ஆர்ப் என் றதையும் எடுத்துக் கொடுப்பார்கள். ஸ்தோத்திரம் முடிந்தவுடன் அவைகளை மறுபடியும் வாங்கி பலிபீடத்தில் வைப்பார்கள்.

பிரதான குரு அவர்கள் இராஜாக்கள் பட்டாபிஷேக காலத்திலணியும் முத்திரை மோதிரத்தை மகாராஜாவினுடைய வலதுகையில் சிறு விரலில் போடுவார்.

மகாராஜா அவர்கள் தமக்கு அளித்த கைமூடியால் கையை மூடிக்கொள்வார். சிலுவை வடிவமமைத்த இராஜதண்டத்தை வலதுகையிலும், புருவடிவமமைத்த இரா ஜதண்டத்தை இடது கையிலும் வைத்துக்கொள்வார்.

## கிரீடம் தரித்தல்.

இது சுவர்ணத்தால் வட்டமாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஓரத்தில் நல்ல விலை யுயர்ந்த முத்துகளும், இரத்தினங்களும், இழைக்கப்பட்டிருக்கின்றன. இது இன்னும் பலவகைச் சித்திர வேலைப்பாடுள்ளதாயும் ஆங்கிலேயர் மிக விரும்புகிற "லிலி" என்ற புஷ்பத்தைப்போன்ற சித்திரவேலைக ளுள்ளதாயும், முத்து, ரத்தின வைடூரியம் முத லியவைகளால் இழைக்கப்பட்டதாயு மிருக்கின்றது. இது நாகரீகத்திற்குத் தகுந்த தாயு மிருக்கிறது. இது முதலில் பலிபீடத்தில் வைக்கப்பட்டிருக்கும். பின்பு பலி பீடத்திலிருந்து பிரதான குரு அவர்கள் இதை எடுத்து அரசருக்குத் தரிப்பார். அப் பொழுது ஜனங்கள் "இராஜனை கடவுள் காப்பாற்றுக" வென கரகோஷத்துடன்சொல்



லுவார்கள். மேளதாளங்கள் கோஷிக்கும். பீரங்கிகளின் சப்தம் கேட்கும், இன்னும் இராஜவம்சத்தவர்களும் தங்கள் தங்கள் கிரீடங்களைத் தரித்துக்கொள்வார்கள். உடனே பைபில் அரசருக்கு வெகுமதியாக பிரதான குருமார்களால் அளிக்கப்படும். ஆசீர்வாத மானவுடன் மகாராஜா அவர்கள் சிம்மாசனத்தில் பிரதான குரு முதலியவர்களால் உட் கார வைக்கப்படுவார். பிரதான குரு அவர்கள் ராணியார் அவர்களுக்கும் பட்டாபிஷே கம் செய்வார்.

கடவுள் ஸ்தோத்திரம் பின்பு நடக்கும். மகாராஜா அவர்கள் ஒரு பவுண்டு நிறை யுள்ள சுவர்ணக் கட்டியையும், பலிபீடத்திலுள்ள வஸ்திரத்தையும் இனாமாகக் கொடுப் பார்கள். மகாராணியாரவர்களும் ஒரு வஸ்திரத்தையும், சுவர்ணக் கட்டியையும் இனா மாகக் கொடுப்பார்கள்.

[இத்துடன் பட்டாபிஷேகச் சடங்கு முடிவுபெறும்.]

# சென்னை மாதர்களின் விக்டோரியா ஞாபகச்சின்ன நிதி.

இதன் பிரஸிடெண்டாகிய H. E. லேடிஆண்டில் பின்வருமாறு தெரிவிக்கி றார்:—

"இந்நிதி சேகரம் முடிவுசெய்யப்பட்டது. மொத்தமாய் வசூல் செய்யப் பட்ட ரூ. 90,731 அ. 15. பை. 2, ஆனால் இதில் ரூ. 16,860. அ. 7. பை. 6. பெல்லாரி, மலையாளம், தென்கன்னடம் ஜில்லாக்களின் சுயப்பிரயோஜனார்த் தமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுபோக மிகுதி ரூ. 73,871 அ. 7. பை 8-ம் ஆ னரெபில் மிஸ்டர் தாம்ஸன், ஸர்ஜன் ஜெனரல் வின்கினேர் C. S. I, ஆனரெபில் ஜஸ்டிஸ், ஸர், வி. பாஷியமய்யங்கார் ஆகிய இம்மூன்று டிரஸ்டிகள் வசம் ஒப்பிவிக்கப் பட்டிருக்கிறது. இம்மொத்தத்தின்வட்டித்தொகை டப்ரீன் நிதியாருக்குச்சேரும். இதில் அரைலக்ஷம் ரூ. சென்னை கோஷாவைத்தியசாலைக்கு உபயோகப்படும், இங்கே ஞா பகச்சின்னமும் அமைக்கப்படும். மீதியுள்ளது பிரசவ வைத்திய மாணுக்கியர் பயிற்சிக் காக உபயோகப்படும். இவ்விஷயத்தில் திரவிய உதவிபுரிந்த மாதர்களுக்கும், இன்னும் எனக்கு இவ்விஷயமாக உதவி புரிந்தவர்களுக்கும் வந்தன மளிக்கின்றேன். இவ்விவ ரங்களெல்லாம் நமது ராணியாராகிய அலக்ஸாண்டரா அவர்களும் அறிந்து பிரியப்பட் டிருக்கிறார்களென முன்னமே சொல்லியிருக்கிறேன். இவ்வாறு சென்னை மாதர்கள் ஒரு பெருந்நிதி சேகரத்துக்கு உதவி, ஞாபகச்சின்ன ஸ்தாபனப்படுத்தியது முதல் தட வையாய், இவர்கள் பெருமைக்கிடமாகியது."

H. E. லேடி ஆண்டில் எழுதிய விஷயங்கள் மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. அரைலக்ஷம் ரூ. கோஷா வைத்தியசாலைக்கும், மீதியுள்

ளாது பிரசவ வைத்தியமாணுக்கியர் பயிற்சிக்காக உபயோகப்படும்படி உதவி புரிந்த நமது மாதர்களுக்கு கௌரவமேயாம். இவ்வளவு சிரமப்பட்டு இந்த நிதிக்குத் திரவியஞ் சேகரித்து உதவிபுரிந்த நமது H. E. லேடிஆண்டில் அவர்களுக்கு நமது மனப்பூர்ணமான வந்தனத்தைச் செலுத்தவேண்டியவர்களாயிருக்கின்றோம். தர்மம் செய்தாலிப்படி யல்லவோ செய்யவேண்டும்? இது அல்லவோ ஜனங்களுக்கு மிக உபயோகம். கடவுள் லேடி ஆண்டிலவர்களுக்குத் தீர்க்காயுளையும் தேகசவுக்கியத்தையு மளிப்பாராக.

# பட்டாபிஷேகம்.

நமது மகாராஜா 7-வது எட்வர்ட்டு அவர்களுக்கு ஜூன்மீ 26-உயன்று பட்டாபிஷேகம் நடக்கப் போகின்றதென்பது யாவருக்கும் தெரியும். அக்காலத்தில் அவர்கள் அனுசரிக்கவேண்டிய சடங்கின் விதிகளை முன் பக்கத்தில் எழுதியிருக்கிறோம்.

நமதிந்தியாவிலிருந்து அநேக இராஜாக்களும், பிரபுக்களும் பட்டாபிஷேகத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இன்னுமிதர தேசங்களிலிருந்தும் போயிருக்கிறார்கள். நம் தேசத்தில் இந்திய அரசர்களுக்குப் பட்டாபிஷேகஞ்செய்யும்பொழுது அவர்களுக்கு முக்கிய தீர்த்தங்களைக் கொண்டுவந்து ஸ்னானம் செய்துவைப்பது வழக்கம். அம்மாதிரி அங்கிலேயருக்குள் ளில்லாவிடினும் அரசருக்கு எண்ணெயிடுவது ஒருவழக்கமாக வழங்கிவருகிறது. எப்படி முக்கியகுரு நமது ராஜாக்களுக்கு ஸ்னானம் செய்து வைப்பார்களோ அவ்விதமே அங்கில இராஜாக்களுக்கும் அவர்களுடைய பிரதான குரு அவர்களுடைய தலை, மார்பு, கை, கால் முதலியவைகளுக்கு எண்ணெயிடுவார்கள். நம்மவர்கள் தானதர்மங்கள் தெய்வஸ்தோத்திரம் முதலியவைகளையும் செய்வதுண்டு. அவர்களும் இவைகளை அனுஷ்டித்து வருகிறார்கள். ஊர்கோலம் செய்தல்; கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குதல் முதலியவைகளும் அங்கிலேயர்களுக்குமுண்டு. சுவர்ணதானம் குருக்களுக்குச் செய்வது நம்மவர்களில் வழக்கம். இதே வழக்கம் அங்கிலேயர்களிடத்தினு மிருப்பதாகத் தெரிகிறது. இராஜர்களுக்குரிய உடுப்புகளைத் தரித்துக்கொண்டும், கத்தி, கேடையம், செங்கோல், கிரீடம் முதலியவைகளை அணிந்துகொண்டு சிம்மாசனத்தில் உட்காரும் வழக்கம் நம்மவர்களிடத்திலிருப்பதுபோலவே அங்கிலேயர்களிடத்திலுமுண்டு. பட்டாபிஷேக



காலத்தில் நமது அலக்ஸாண்டரா மகாராணியார் அவர்கள் லேடிகர்ஸன் மேல் பார்வையில் இந்தியாவில் செய்யப்பட்ட மேன்மையான சித்திரத் தையல்வேலை உள்ள பட்டாடையைத் தரித்துக்கொள்வார்கள். இவ்வுடுப்பைக் கண்டு நமது ராணியார் மிகச் சந்தோஷப்பட்டார்களாம்.

மைசூர் மகாராஜாவுக்குப் பட்டாபிஷேகம் நடக்கும்பொழுது இவ்விதிகளெல்லா மனுசரிக்கப்படும். இன்னும் நமக்குத் தெரியாதவைகளையும் அக்காலத்தில் அறிந்துகொள்ளலாம்.

நமது மகா ராஜாவின் பட்டாபிஷேகம் வெகு விமரிசையாக நடக்குமென்றும் இப்பொழுதே அங்கு ஜனங்கள் கும்பல் கும்பலாய் குவிகிறார்களென்றும் லண்டன் டைம்ஸ் என்னும் பத்திரிகை கூறுகிறது. மகாராஜா அவர்களுக்கும் மகாராணியாரவர்களுக்கும் கடவுள் சரீராரோக்கியம், திரவியப்பேறு, கீர்த்தி, தீர்க்காயுசு இவைகளையளித்து, சுகத்துடன் மங்களகரமாக வாழும்படி அநுக்கிரகம் செய்வாராக.

# உத்தரராமசரித்திரம்.

## குச, லவர் சரித்திரம்.

142. (தாசி) செம்பொன் மணிமாலைகொண்டு சென்றெதிரே கண்டு
வாருமம்மா அரண்மனைக்கு என்றுமவள் அழைத்தாள்

143. சிலம்புடனே பாடகமும் சலசலென்று அசைய
செம்பொன் மணி ஆபரணம் பொன்பதக்கமின்ன

144. சாதி ரத்தினத்தாலிழைத்த தங்கமண்டபத்தில்
தலைவாசல் தன்னில் அவள் தட்டாமல் நுழைந்தாள்

145. அங்கிருந்த சுமங்கிலிமார் அருகிலே வந்து
அன்புடனே ஆரத்திக் காப்புமவாள் எடுத்தாள்

146. சாதிக்காய் கற்பூரம் தாம்பூலத்துடனே
தாதிமார்கள் தானெடுத்து கைதனிலே கொடுத்தாள்

147. கோலவளை தான்குலுங்க கொடிமணிகள் அசைய
கொம்பனையாள் கலியாணி கைதனிலேவாங்கி
148. மைதலியாள் ஜானகியை அருகில் வைத்துக்கொண்டு
வண்ணமுள்ள பெண்களுடன் மாது வீற்றிருந்தாள்
149. ஸ்ரீ ராமரை பயின்றெடுத்த கௌசலை மாதாவும்
செம்பவழ வாய்திறந்து சுமித்திரையோ டுரைப்பள்
150. (நம்ம) செல்வமுள்ள தசரதனார் சிவலோகஞ்சேர
(நாம்) செம்பொன் மணி ஆபரணம் திருவாங்கினபின்
151. ஜனகரோடே பாரியரை சீதையின் மாதாவை
அன்றுமுதல் இன்றுவரை கண்டதில்லையம்மா
152. சீருடைய அயோத்தியிலே செய்யும் கர்மம் நடந்து
ஸ்ரீராமர் திருக்கையினால் செய்யும் கர்மம் நடந்து
153. வாயத்தபுகழ் ஜனகராஜா மாதுடனே வந்து
வரிசையுள்ள சீர்செய்ய வந்திருப்பர் அம்மா
154. (நம்ம) சோதி ரகுராமரோடே கலியாணந் தன்னில்
துக்கமென்று சொன்னாக்கால் வெக்கமன்றோ அம்மா
155. சுவர்ணவடிவான தொருமேனியெங்கும் வேர்க்க
சோதிவர்ணபட்டாலே தேகமெங்கும் போத்தி
156. சீருடைய சுமித்திரையை கைப்பிடித்துக்கொண்டு
தேன்மொழியாள் தாசியரை முன்கொண்டு நடந்தாள்
15 அபிராமர் மாதாவின் வரவுகண்டுதேவி
அழகாஸனத்தைவிட்டு எழுந்தெதிரே வந்தாள்
15 செம்பொன் மணியாபரணம் திக்கெங்கும் விளங்க
சிலம்புடனே பாடகமும் சொன்றுற்க பணிந்தாள்
15 பணிந்த ஜனகர் பாரியரை பார்த்து கௌசலையும்
பார்முழுதும் ஆண்டிடுவீர் வாழ்ந்திடுவீர் அம்மா
16 சீருடைய மிதிலையிலே செழிப்புடனே இருந்து
ஜனகராஜா திருத்தோளை பிரியாமல் வாழ்வீர்
161. மைந்தர் பதினாறும்பெற்று மங்கிலியம் பெருகி
வாழ்ந்திடுவீர் என்றுசொல்லி கௌசலை வாழ்த்தினாள்
162. சிவந்தெழுந்த சூரியன்போல் தேவி எதிர்நின்று
செம்பவழவாய் திறந்து கலியாணி உரைப்பள்
163. உங்கள்செல்வ முள்ளதசரதனார் சிவலோகஞ் சேர்ந்த
அன்றுமுதல் இன்றுவரை கண்டதில்லை நானும்
164. என்சிற்றிடையாள் ஜானகியும் இல்லாத மனையில்
சென்றுஉம்மை காண்பதுவும் எப்படிஎன் றிருந்தேன்

இன்னும் வரும். R. S. சுப்பலக்ஷ்மி



# NEWES & NOTES.

## சமாசாரக்குறிப்பு.

---

பெங்காளம், பீஹார் ஒரிஸாவிலுள்ள இந்திய மாதர்கள் சக்கிரவர்த்திக்கு பட்டாபிஷேக தினம் ஒரு வந்தனோபசாரப் பத்திரிகை யனுப்பப் போகிறார்களாம். சென்னைமாதர்கள் என்ன செய்யப்போகிறார்களோ தெரியவில்லை.

---

அமெரிக்கா தேசத்தில் நியூயார்க் என்ற பட்டணத்தில் ஒரு கட்டடம் 30—நிலையுள்ளதாம். இது உலகத்திலுள்ள எல்லாக் கட்டடங்களிலும் உயர்ந்ததாக மதிக்கப்படுகிறது. லண்டன் பட்டணத்தில் உள்ள மிகவுயர்ந்த கட்டடம் 13—நிலைதானுள்ளதாம்.

---

படம்:—சென்றவருஷம் அலக்சாண்டரா ராணியின் படத்தை எழுதின பேர்போன சித்திரக் காரராகிய மிஸ்டர் ராபர்ட் கீலிங், வாஷிங்டன் என்னும் ஊரிலிருந்து தருவிக்கப்பட்டு ஏழாவது எட்வர்ட் மகாராஜாவின் படத்தை எழுதும்படியாக உத்திரவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

---

ஜூலைமாதப் பத்திரிகையில் 7-வது எட்வர் சக்கிரவர்த்தி அலக்ஸாண்டரா சக்கிரவர்த்தினி முதலியவர்களுடைய திவ்வியமான சித்திரப் படங்களும் மிஸஸ் சத்தியநாதன் அவர்கள் சகோதரியார் முதலியவர்களுடைய சித்திரப் படங்களும் நமது பத்திரிகையில் அடங்கியிருக்கும்.

---

மிஸ்ஸஸ் ரோசனலால் என்றமாது பம்பாய் ஆரிய சமாஜத்தில் அக்கிராசனதை வகித்துப் பிரசங்கம் செய்தார்களாம். அச்சபையில் இன்னும் பத்து மாதர்களும் பேசினார்கள். இவ்விதம் இவர்கள் செய்த உபந்நியாசத்தை மிக மெச்சி பம்பாய் பேபர்கள் எழுதியிருக்கின்றன.

---

இத்தாலி தேசத்து ராணியார் ஐரோப்பா கண்டத்தில் உள்ள இராஜ வம்சத்தார் எல்லாரினும் மிக்க படிப்புள்ளவர்களாம், இவருக்கு அங்கிலம், பிரஞ்சு, ஜர்மன், ஸ்பானிஷ் என்ற நால்வகைத் தேசாந்தரப் பாஷைகள் நன்றாகப் படிக்கவும் எழுதவும் தெரியுமாம். மேலும் இவருக்கு கிரீக் ரோம காவியங்களில் விசேஷமான பாண்டித்தியமும் உண்டாம். இவ்விதமல்லவோ மாதர்களிருக்க வேண்டும்; வீண் வம்புப்பேச்சு பேசுவதில் பிரயோசனமென்ன?

---

நமது பத்திரிகைக்கு சென்ற வருடத்திய சந்தா கொடுக்காதவர்கள் உடனே அனுப்புவார்களென்று நம்புகிறோம். கிரமமாய் சந்தா வசூல் ஆனால் தான் பத்திரிகையைச் சரிவர பலவித சித்திரப் படங்களுடன் பிரசுரிக்க முடியும். ஆனதுபற்றி நமது சந்தாதாரர்கள் கூடியசீக்கிரத்தில் சந்தா தொகையை யனுப்பவேண்டும். அவ்வித மிஷ்ட மில்லாதவர்களுக்கு அடுத்த மாதப் பத்திரிகை வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

---

தமிழ் வித்வான்கள் மதுரையில் தமிழ்ச் சங்கம் என்று ஒரு சபை ஏற்படுத்திஅநேக புதிய கிரந்தங்களை தக்கவாறு பரிட்சித்து அதன்பெருமையை எடுத்துக் கூறுகின்றார்கள். இச்சங்கத்தின் முதல் வருஷமகோற்சவம்சென்ற மேமீ 24உ சனிக்கிழமை சாயரட்சை நடத்தப்பட்டது. ம-ா-ா-ஸ்ரீ பாண்டித்துரைசாமி தேவர் அவர்கள் அக்கிராசனாதிபதியா யிருந்தார். அனேக கனவான்கள் அங்கு கூடியிருந்தார்கள். வருஷாந்தர ரிபோர்ட்டு சபையோருக்கு வாசிக்கப்பட்டது. கல்வியிற் சிறந்த கனவான்களில் சிலர் பற்பல விஷயங்களைப்பற்றி உபந்யாசம் செய்தார்கள்.

இச்சங்கத்தை விருத்திக்குக் கொண்டுவர நமது ம-ா-ா-ஸ்ரீ பி. பாண்டித் துரைசாமி தேவர் அவர்கள் மிக ஊக்கத்துடனும்விடாமுயற்சியுடனும் உழைத்து வருவதனது மிகமெச்சத்தகுந்ததே. இவருக்கு ஈஸ்வரன் தீர்க்க ஆயுளையும் தேகசௌக்கியத்தையு மளிப்பாராக.

---


## மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலை,

**273, தம்புசெட்டி வீதி, சென்னை.**

இப்புத்தகசாலையில் வேதாந்த சித்தாந்தம், தருக்கம், கட்டளை, ஸ்மிருதி, இதிகாசம், புராணம், மான்மியம், தோத்திரம், இலக்கண இலக்கியங்கள், பிரபந்தம், கோவை, திருப்புகழ், வகுப்பு, வண்ணம், நிகண்டு, அகராதி, நீதிநூல், வைஷ்ணவ நூல்கள், ஷை தமிழ்ப்பாஷை தெலுங்கு எழுத்து வைஷ்ணவ நூல்கள், வடகலை சம்பிரதாய கிரந்தங்கள், பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி, மாலை, வெண்பா, சதகம், வாசகம், கீர்த்தனை, ஜோதிடம், வைத்தியம், சங்கீதம், ஜாதி நூல்கள், படம், பூகோளம், பிராணி சரித்திரம், நாடகம், தமிழ் நாவல்கள், விநோதக் கதைகள், ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள், சம்ஸ்கிருத நாடகக் கதைகள், நீதிக் கதைகள், ஸ்திரீகளுக்குகுரிய நூல்கள், அறிவு கொடுக்கத்தக்க நூல்கள், கீர்த்தி பெற்றவர்கள் சரித்திரம், ஆக்ட்டு புத்தகங்கள், கிரிஸ்துமதகண்டனம் (தமிழ் & இங்கிலீஷ்), பதிகம், திருவிளையாடல் சிவனடியார் சரித்திரங்கள், தனித்தனி 3-பை, 2-பை, 1-பை புத்தகங்கள் முதலிய சகலவிதமான சுத்தப் பதிப்புப் புத்தகங்களும் கிடைக்கும். வெளியூரிலுள்ளவர்களுக்குப் புத்தகங்கள் வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

முழுப் புத்தக விளம்பரம் வேண்டுவோர் அடியிற்கண்டவருக்கு எழுதிக்கொண்டால் இனாமா யனுப்பப்படும்:—

சை. சிவசங்கரசெட்டி, பி.ஏ.,
(காலஞ்சென்ற சை. இரத்தின செட்டியார் குமாரர்)
சொந்தக்காரர்.
ரிப்பன் பிரஸ் & ரிப்பன் புஸ்தகசாலை,
273, தம்புசெட்டி வீதி, சென்னை.


Printed at the Ripon Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

OFFICE OF THE ... BOOKS, REGISTERED 29 ... 1902 MADRAS
277

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.


| Vol. IV<br>புத்தகம் ௪. | Madras: July 1902.<br>சென்னப்பட்டண 1902 ஜூலைமீ. | No. 5.<br>இல. ரு. |
|---|---|---|


## H. M. The King's illness and recovery.

நமது மகாராஜா அவர்கள் அசௌக்கியமாயிருந்து சௌக்கியமடைந்து வருகிறார்கள்.

## பட்டாபிஷேகம் அநேகமாக ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியில் நடக்கும்.

பிரஜைகள் மகாராஜாவினுடைய வியாதி நீங்கும்பொருட்டு ஸ்தோத்திரம் செய்துகொண்டே யிருக்கிறார்கள்.

நமது மகாராஜா அவர்கள் ஜூன்மீ 15உ முதற்கொண்டு நோயால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பின்பு இந்நோய் சீக்கிரத்தில் நீங்கிவிடுமென டாக்டர்கள் எண்ணி பலவித சிகிச்சைசெய்துகொண்டிருந்தார்கள். ஆனால் 23-ந் தேதியன்று நோய் அதிகரித்தமையால் செவ்வாய்க்கிழமை அந்தக்கட்டியை வெகு ஜாக்கிரதையாயும் யாதொரு அபாயத்திற்கிடமில்லாமலும் சஸ்திரத்தினால் தன் வங்கிரிக்கு நிகரெனச் சொல்லும்படியான 5 பேர்போன டாக்டர்கள் சேதித்தார்கள். மயக்கமுண்டாக்கும்படியான க்ளோரொபார்ம் என்றமருந்தை உபயோகித்திருந்தார்கள். மகாராஜா

அவர்கள் சுமார் 10 மணிவரையிலும் பிரமையற்றிருந்தார்கள். இச்சங்கதி நமக்கு எட்டியதும் நாம் விசனப்பட்டு இவர் தேக சௌக்கியத்தைக் குறித்து எங்குபார்த்தாலும் கடவுளை ஸ்தோத்திரம் செய்துகொண்டேயிருந்தோம். 26-ஆந் தேதியன்று பகல் 10 மணிக்கு வெளிப்பட்ட விளம்பரத்தின்படி முன்னிரவு மகாராஜா அவர்கள் சுகமாய்த் தூங்கினார்கள் என்றும் 28-ம் தேதி வந்த தந்தியால் அரசர் முன்னிரவை சுகமாய்க் கழித்தாரெனவும் அவருடைய சுகவிருத்திக்குக் குறைவேதுங் கிடையாதெனவும் அவருக்கு வந்த கண்டம் தொலைந்ததெனவும் ஆனால் ரணம்மாத்திரம் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டு வரப்படவேண்டியதெனவும் ஏற்பட்டது. பின்னிட்டு அரசர் ஒரு மஞ்சத்துக்கு மாற்றப்பட்டு, சந்தோஷகரமாயும், சுருசுருப்பாயும் இருப்பதுடன், அதிசயிக்கத்தக்க சுகவிருத்தியடைந்து வருகிறார் என்ற சங்கதி வெளிவரவே நாம் மிக சந்தோஷப்பட்டோம். 27-ந் தேதியன்று அரசர் க்ஷணத்திற்கு க்ஷணம் சுக விருத்தியடைந்து வருகிறாரென்றும், அவர் சுகமாய்த் தூங்கினாரென்றும், ஆனால் ரண பரிகாரத்தில் மிக்க உபத்திரவமட்டும் அவருக்கு இருந்ததென்றும் தெரியவந்தது.

30௳ யன்று ரண உபத்திரவம் குறைந்துவிட்டதாம். ஜூலைமீ 1௳ வந்த தந்தியால் நமது மகாராஜா அவர்கள் முன்னிரவு வெகு சுகமாயிருந்து நன்றாகத் தூங்கினாராம். இவருக்கு சற்று பலமுமுண்டாய் எல்லா வகையிலும் சுகவிருத்தி யுண்டாயிருக்கிறது. ரண உபத்திரவமும் தணிந்தே யிருக்கிறது. 3௳ யன்று ஒரு பிரசித்தமான கோர்ட்டு டாக்டர் அரசருக்கு நேர்ந்த அபாயம் அடியோடு தொலைந்ததென்று தெரிவிக்கிறார். இதைக்கேட்க நாம் மிக சந்தோஷப்படுகிறோம்.

நமது மகாராஜா அவர்கள் 3௳ யன்று நன்றாகத் தூங்கினார். சுகமாகவேயிருந்திருக்கிறார். பிரஜைகள் யாவரும் அரசரின் அதிசயிக்கத்தக்க வலுவைப்பற்றிக் கேள்விப்படுத்தினால் களிகூர்வார்களென்று லான்ஸெட் பேபர் கொண்டாடுகிறதோடு, ரணமாறிப் பக்குவப்பட்டு வருவதால் அரசர் சீக்கிரம் சொஸ்தமாய் விடுவாரெனக் கூறுகிறது. 4௳ யன்று வந்த தந்தியால் மகாராஜா அவர்கள் சுகமா யிருப்பதாகவும், சிகிச்சை செய்துகொண்ட நாள்தொடங்கி யென்றுஞ் சொல்லாத நித்திரை செய்தார் எனவும், ரண உபத்திரவமோ தணிந்து வருகிறதெனவும், அவர் படுக்கையில் சுலபமாய் நடமாடுகிறார் எனவும், உணவேற்றமும் விருத்தியாய் வருகிறதெனவும் தெரியவருகிறபடியால் அதிக சீக்கிரத்தில் நமது மகாராஜா அவர்கள் பூர்ண சுகத்தை யடைவது நிச்சயம்.

இவர் அசௌக்கியமா யிருந்தகாலத்தில் தமது ஜேஷ்ட புத்திரனைப் பார்க்கவேண்டுமென்று சொல்லவே உடனே அவருக்கு இச்சமாசாரத்தைத் தெரிவிக்க அவர் வந்து தமது தந்தையாரைப் பார்த்து அவர் பக்கத்திலுட்கார்ந்து கொஞ்சநேரம் பேசினாராம். சிகிச்சை நடக்கும் முன்னர் "எனது பிரஜைகள் என்னை மன்னிப்பார்களாக" வென்று சொன்னாராம். ஏனெனில் குறித்த தேதியன்று பட்டாபிஷேகம் நடத்தப்படாமல் நிறுத்தப்பட்டமையால் ஜனங்கள் ஏமாந்துபோனது அவருக்கு மிக விசனத்தை உண்டாக்கியதாம். அதனால்தான் அவர் அவ்விதம் சொன்னார்கள். இவர்களுக்கு நமது இந்தியாவின்பேரில் மிகப் பிரியம். மிக விசுவாசம். நமது இந்தியாவிற்கும் முன்னமே 1871௵ வந்திருக்கிறார். இவருக்கு 61-வயதாகியும் பட்டாபிஷேகம் செய்துக்கொள்ளவேண்டுமென்ற ஆசை மிகவுண்டு. அது அப்பொழுது தவறிப்போனதைப்பற்றி மிக வருந்துகிறோம். ஆயினும் இப்பொழுது நமக்கு எட்டிய சமாசாரத்தின் பிரகாரம் ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியின்று இவருக்கு பட்டாபிஷேகம் நடத்தப்படுமென அறிகிறோம்; அவ்விதம் நடத்துவது நலமே.



கூடிய சீக்கிரத்தில் இவருக்கு கடவுள் தேக சௌக்கியத்தை அளித்து ஆகஸ்டு மாதத்திலேயே பட்டாபிஷேகமும் நடக்கும்படி கருணை புரியுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

## மிஸ்ஸஸ் கமலசத்திய நாதனவர்கள்.

மிஸ்ஸஸ் கமலசத்தியநாதனவர்கள் 1879௵ ஜூலைமீ 2-ம் தேதியன்று இராஜமகேந்திரபுரத்தில், மிஸ்டர் O. S. R. கிருஷ்ணம்மாவுக்கு ஜேஷ்ட புத்திரியாக ஜனித்தார்கள். மிஸ்டர் கிருஷ்ணம்மா அவர்கள் பிராமணராயிருந்து கிறிஸ்தவமதத்தில் சேர்ந்திருக்கிறார். இவர் இப்பொழுது மங்களூரில் சப்-ஜட்ஜியாக விருக்கிறார். இவர் தமக்கு மூதல் புத்திரியாக உதித்த கமலம்மாளுக்கு கல்வி புகட்டவேண்டுமென்கிற எண்ணத்துடன், தக்க வயதுவந்தபோது, சென்னையிலுள்ள டப்டன் பாடசாலையில் கல்வி கற்கும்படி அமர்த்தினார். கமலம்மாள் அங்கு ஆங்கிலமும், சம்ஸ்கிருதமும் செவ்வையாய் கற்றுவந்தார்கள். கமலம்மாள் மிகுந்த புத்திகூர்மையுள்ளவர்களாதலால், தம் 14-வது வயதில் மெட்ரிகுலேஷன் பரீட்சையிற்றேறினார்கள். பிறகு கமலம்மாள் மசூலிபட்டணத்திலுள்ள நோபில் காலேஜியில் சேர்ந்து வாசித்து, தமது 16-வது வயதில் எப் ஏ. பரீக்ஷையில் முதல்வகுப்பிற்றேறினார்கள். தாம் பி. ஏ. பரீட்சையிற்றேறும்படி அக்காலேஜியிலேயே வாசித்து, தமது 18-வது வயதில் அப்பரீட்சையிலும் தேறினார்கள். இதில் அந்தம்மாள் எடுத்துக்கொண்ட விஷயம் சரித்திரமும், சம்ஸ்கிருதமுமேயாம். அதன் அடுத்தவருடத்தில் அந்தம்மாள், சென்னை பிரெசிடென்ஸிகாலேஜியில் புரொபெஸராகவிருக்கும் மிஸ்டர் S. சத்தியநாதனவர்களை

நன்மணம் புரிந்தனர். சிலகாலஞ் சென்றபின் இவர்களுக்கு ஒரு புத்திரசந்தான முண்டானது. அக்குழந்தைக்கு இப்போது சுமார் இரண்டுவருடமும், நான்குமாதமுமாகிறது. அதன் பிறகும் கமலம்மாள் காலத்தை வீண்போக்காமல் எம். ஏ. பரீட்சைக்குப் படித்துக்கொண்டுவந்து, சென்றவருடத்தில் அப்பரீட்சையிலுந் தேர்ச்சியடைந்தார்கள். இவர்களுக்கு சமஸ்கிருதத்தில் நல்லவிற்பத்தியுண்டு. தெலுங்கும் நன்றாய்த்தெரியும். இவர்கள் அநேக பத்திரிகைகளுக்குவிஷயங்கள் எழுதியிருக்கிறார்கள். அவ்விஷயங்கள் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றனவென்று அநேகர் வெகுவாய்ப் புகழ்ந்தார்கள். இது முகஸ்துதியன்று. இவர்களுடைய் உண்மையான சாமர்த்தியத்தைக் கண்டே புகழ்ந்திருக்கிறார்கள். சென்றவருடம் ஜூலைமீ முதற்கொண்டு தமது அன்பான சகோதரிகளுக்கொப்பான இந்தியஸ்திரீகட்கும், மற்றுமுள்ள ஸ்திரீகட்கும் நல்லறிவைப் புகட்டவேண்டுமெனறுன்னி "இம்மைபயக்குமாலீயக் குறைவின்றால், தம்மை விளக்குடாற்றா முணராக்கேடின்றால், எம்மை யுலகத்தும்யாங்காணேங் கல்விபோல், மம்மரறுக்கு மருந்து" என்ற பாடலுக் கிணங்க மக்களுயிர்க்கு உற்றதுணையா யிருந்து தவுவது கல்வியைத் தவிர வேறொன்றுமில்லையெனத் தேறி, ஒரு மாதாந்தப் * பத்திரிகை ஏற்படுத்தி அதன்மூலமாக நல்லறிவுச் சுடர்கொளுத்தி வருகின்றார்கள். அதில் இந்தியமாதர்களுக்கு கற்பைக் காக்கும்பொருட்டு முக்கியமாய் வேண்டிய அநேக விஷயங்களை தாமே எழுதிவருவதைக்கண்டு அநேகர் மெச்சுகிறார்கள். அநேகர் வெகு நன்றாய் எழுதப்படுகிறதென்றும் தங்களபிப்பிராயங்களை பல பத்திரிகைகள் மூலமாக பரப்பி வெளியிடுகின்றனர்கள். மேலும், இந்திய, ஆங்கில, மகம்மதிய மாதர்களும் அதில் அடிக்கடி விஷயங்களை எழுதிவருகிறார்கள். இந்த மாதுசிரோன்மணி தமது சுயநலத்தைக் கருதாமல் இப்பத்திரிகையை ஒருவருடகாலமாய் நடத்திவருவது, பரோபகாரசிந்தையையும், தமது சகோதரிமார்களிடத்திலுள்ள வாஞ்சையையும் அநுதாபத்தையும் காண்பிக்கிறதல்லவா? மாதர்களுக்கு உயர்ந்த கல்வி யிருப்பதனால் விளையும் பயன்களிலிது ஒன்றன்றோ? இம்மாது எம். ஏ. பரீட்சையிற்றேறியது மிகுதியும் மெச்சத் தகுந்ததே. இந்தியமாதர்களில் எம். ஏ. பரீட்சைக்குப் படித்து முதலில் தேறியது இந்தமாதேயாம். இந்த மாதின் சகோதரியாரும் முறையே படித்துவந்து இவ்வருடத்தில் எம். ஏ. பரீட்சையிற்றேறி யிருக்கிறார்கள். இவர்களுக்கு 16-வயதும், 18 வயதும் உள்ள இரண்டு சகோதரர்களிருக்கிறார்கள். அவர்களிருவரும் இங்கிலாந்தில் படித்துக்கொண்டுவருவதுடன், மிகுந்த புத்திசாலிகளென்றும் பேர்பெற்று வருகின்றார்களாம்.

இவர்கள் கீர்த்திபெற்று ஜனங்களுக்கு நன்மைசெய்துகொண்டுவர ஈஸ்வரன் தீர்க்க ஆயுளை அளித்து சுகமாக வாழ்ந்துவர கருணை புரிவாராக.

* The Indian Ladies' Magazine.

279



JL
Y15m21.M99M0

**Indian Nights Entertinment.**

*Published in the*

PEARSON'S MAGAZINE

*by*

**A. Sarath Kumar Gosh.**

*(All Rights Reserved.)*

280

# இந்திய இரவுக்கதைகள்.

## 2. பதினாயிரம் கண்ணீர்க்கிணறு.

(முன் 83-வது பக்கத்தொடர்ச்சி.)

சூரிய குலத்திலுதித்தவனே! உமது பதினாலாம் மூதாதை நாட்கள் முதற்கொண்டு "பதினாயிரம் கண்ணீர்க் கிணறு" வறண்டிருந்தது. நாராயண லாலாவினுடைய இரண்டாம் கடும் பரீக்ஷை நடந்த காலத்திலும் அப்படியே வறண்டுதானிருந்தது. அது வனத்தின் ஓரத்திற்கருகாமையில் 20 முழ ஆழமும் 5 முழ குறுக்களவுமுள்ள ஒரு பெருங்குழி. அதன் உள் சுவர் கருங்கற்களால் கட்டப்பட்டு தளம் உலர்ந்த இலைகளால் மூடப்பட்டிருந்தது.

ஒரு காலத்தில் இரண்டு புருஷர்கள் ஒரே ஸ்திரீயை நேசித்துக்கொண்டிருந்ததாகவும் வேண்டாமென்று விலக்கப்பட்டவன் மற்றவனைச் சூதாய்ப் பிடித்துக்கொன்று அவன் பிரேதத்தை வறண்டிருந்த கிணற்றிற்குள் போட்டுவிட்டதாகவும் ஜனங்கள் சொல்லுவார்கள்.

அந்தஸ்திரீயானவள் ஒன்பது நாள் கிணற்றிற்குவந்து அங்கே மிகவும் கண்ணீர் சொரிந்தாள். தேவதைகள் அவளுடைய விசுவாசத்தைக் கண்டு மெச்சி அற்புதமான ஓர்-காரியம் செய்தார்கள். ஒன்பதாம் நாள் சாயங்காலம் தூக்கத்தினின்றும் திடீரென்று எழுந்திருந்து அழும் மனிதனுடைய அழுகையைப்போல் கிணற்றினடியிலிருந்து ஒரு குரல்கேட்டது.

JL
Y15m211.M99M0

செத்தவனுக்கு உயிர் திரும்பி வந்துவிட்டது! அந்தஸ்திரீயினுடைய கண்ணீர் அவன் காயங்களின்மேல் விழுந்து அவைகளைச் சொஸ்தமாக்கின. அவளுடைய அமுகைகளால் அவன் தேகத்திற்குள் புதிய ஆவிவந்துவிட்டது. இதுதான் ஜனங்கள் சொல்லும் கதை. இதனால் தான்கிணற்றிற் கந்தப்பெயர். இதைப்போல் அந்நாட்டிலனேகம் கதைகளுண்டு.

மிகுந்த அற்புதங்களை ஊக்கத்துடன் எதிர்பார்த்துக்கொண்டு, ஜனங்கள் கூட்டமாய் கிணற்றிற்கு வந்தார்கள். நாராயணலாலா இரண்டாம் கடும் பரீக்ஷையில் தோற்றுப்போவது அசாத்தியமென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் அப்பரீக்ஷையின் சுபாவமின்னதென்று அவர்கள் அனுமானிக்கவுங் கூடவில்லை. கடைசி நிமிஷம் வரையில் அரசன் இரகசியத்தை வெளியிடவில்லை. அவனுடைய அபிப்பிராயத்தை யறிய ஒரே சூக்ஷமம்தானிருந்தது. அது நிஜமாய் கிணற்றின் வாயின்பேரிலிருந்தது. அதன்பேரில் ஒரே ஒரு பெரிய கல் மூடப்பட்டிருந்தது——நடுவில் மாத்திரம் கொஞ்சமிடம் திறந்திருந்தது. அது இரண்டு சதுரமுழந்தான், அந்த துவாரத்திற்குமேல் ஒரு தூலேணி காணப்பட்டது. அதனுடைய நுனி கிணற்றில் பக்கத்திலிருந்த ஒரு ஸ்தம்பத்தில் கட்டப்பட்டிருந்தது. பக்கத்தில் கையும் கொல்லுமாய் கொல்லத்துக்காரர்கள் கூட்டமாய் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் காலடியில் கல்லும் காரையுமிருந்தது.

"நாராயணலாலா! சென்றதடவை நீ மேலே ஆகாயத்தில் யமன்கோயிலை எட்டிப்பார்த்தாய். இப்பொழுது என் தீர்மானம் என்னவென்றால் பூமிக்குள்ளே மறுபடியும் யமதரிசனம் காணக்கடவாய்" என்று கிணற்றிற்கு முன்னால் உயர்ந்த ஒரு மேடையில் வீற்றிருந்த அரசன் சொன்னான்.

கூடியிருந்த ஜனக்கூட்டத்தினின்றும் மெதுவாய் ஒரு இரைச்சலுண்டாயிற்று. ஆனால் அங்கீகாரத்தின்பேரிலோ அல்லவோ வென்று இக்கதையை நடிக்கும் ஜனங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் பின்னாலிருந்து திடீரென்று ஒரு பெருமூச்சு உண்டாயிற்று. அதனால் இச்சொற்களின் பயங்கரமான உட்கருத்தைச் சரியாய் உணர்ந்த ஒருவனிருந்ததாகத் தெரியவந்தது.

"நீ இப்பொழுதிருக்கும் ஸ்திதியிலேயே——அதாவது ஆகாரமும் எவ்விதக் கருவியுமின்றி——கிணற்றிற்குள் இறங்குவாயாக! கிணற்றின் வாயை மூடிவிடுவோம். காற்றில் ஒரு தூசாகிலும் உள்ளேயும் வராது. உள்ளிருந்து வெளியேயும் வராது.

ஒன்பது நாள் நீ உள்ளே யிருக்கவேண்டியது. ஒன்பதாம்நாள் சாயங்காலம் கிணற்றைத் திறந்து உன் தேகத்தையோ அல்லது தேகத்தில் என்னமீதி யிருக்கிறதோ அதையோ வெளிக் காட்டுவோம். நான் உத்திரவு செய்தாயிற்று" என்று அரசன் முடித்தான்.

இந்தக் குரூரமான சொற்களைக்கேட்டு நாராயணலாலா——பூமிக்குள் இருபதுமுழ ஆழத்தின் கீழ் சக்தியற்ற தனது கைகளால் விஷம் நிறைந்திருக்கும் காற்றை இப்பொழுதே அடிப்பவன்போல்——மூச்சுவிடக்கூடாமல் பெருமூச்செறிந்தான். பைத்தியம் பிடித்தவனைப்போல் இப்பொழுதே சுற்சுவர்களைத் தனது கைவிரல்களால் சுறண்டினான். இப்பொழுதே உதித்துப்போய் விட்ட அவன் நரம்புகள் படபடவென்று அடிக்கும் நெற்றியிலிருந்து வெடித்து விட்டாற்போலிருந்தது. இப்பொழுதே——

என்று திக்பிரமையடைந்த ஜனங்கள் எண்ணினார்கள். நாராயணலாலாவோ வீண் விசனங்களில் காலங்கழிக்கவில்லை. தப்பிக்கும் வழி ஏதேனுமிருக்குமாயின் அதைத்தீர்மானிக்க அவனுக்குச் சில நிமிஷங்கள்தானிருந்தது.



அதன் துணிவை நோக்கினால் பயமுறுத்தத் தக்கதும் அதன்நடவடிக்கையை நோக்கினால் அதன் அபாயத்தைக் கண்டு நடுநடுங்கச் செய்யத்தக்கதுமான ஒருவித உபாயத்தைத் தீர்மானித்தான். அப்படிச் செய்தபிறகுங்கூட கடைசியாக ஜெயிப்போமென்ற நம்பிக்கை அவனுக்கில்லவேயில்லை. அவனை வளர்த்த தகப்பனைத்தவிர வேறொரு மனிதனும் அந்த உபாயத்தைச் செய்து தப்பவில்லை. அவனுங் கூடத்தன் வாழ்நாளில் ஒரே ஒருதடவைதான் செய்தான்.

நாராயணலாலாவும் அப்படியே செய்யத்தீர்மானித்தான். அது ஒன்றுதான் அவன் தப்புவதற்குத் தகுந்த உபாயம். மகாவித்துவானாகிய தனது ஆசிரியர் தனக்குக் கற்றுக் கொடுக்கக் கூடியதையெல்லாம் கற்றிருந்தான். ஆனால் இந்தவிஷயமோ உபதேசத்தினால் வரத்தக்கதல்ல. அது காரியம் செய்யும் கர்த்தாவினுடைய வல்லமையை முக்கியமாய் பொருந்தியவிஷயம்.

இந்த வல்லமையைத் தனக்கு அளிக்கும்படி தேவதைகளைப் பிரார்த்தித்தான். ஒரு சார்பில் யோசிக்குமிடத்து மரணம் நிச்சயம். மிகுந்த அவஸ்தையுடன் மரணம் என்பது நிச்சயம். மற்றொரு சார்பில் யோசிக்குமிடத்து இந்த உபாயம் தப்பினால் முன்போலவே மரணம் நிச்சயந்தான்; அது கைகூடினால் அதிருஷ்டமிருந்து பிழைத்தால் பிழைக்கலாம். அந்த அதிர்ஷ்டத்தைக் கைப்பிடிக்கத் தீர்மானித்தான்.

"ஓ தேவதாம்சமுள்ள மகாராஜாவே! உனது சொற்கள் விவேகம் நிறைந்தவை. உன் உத்திரவுப்படியே நடக்கட்டும். ஆனால் நான் ஒரே ஒரு தயவு கேட்டுக்கொள்ளுகிறேன்."

அதைக் கேட்குமுன் ஒரு நிமிஷம் தாமதித்தான். அவனுடைய நிஜமான உள் கருத்தைக் காட்டிவிட்டால் பிறகு கதிமோக்ஷமே கிடையாது.

"காளிகோயிலில் சில பரிசுத்த மகான்களிருக்கின்றார்கள்; அவர்கள் துறவிகள், சந்நியாசிகள், பைராகிகள். அந்தக் கூட்டத்தில் நான் பாலமாணாக்கன். இது விஷயம் இதுவரையில் நான் வெளியிடாதது வெட்கிக்கத்தகுந்தது."

சுற்றியிருந்த கூட்டத்திலிருந்து ஆச்சரியத்தைக் குறிக்கும் தொனியொன்று உண்டாயிற்று. சந்நியாசிகளும் பைராகிகளும் மிகக்கடுமையான ஆசாரத்தை யனுசரிக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வுலக மானிடர்களுக்கு உரித்தல்லாத அற்புதமான சக்திகள் அவர்களுக்கு உண்டென்று சொல்லுவார்கள்.

தான் சொல்வதே தனக்கு நம்பிக்கையில்லாதவன்போல் மெதுவாய் ஒவ்வொரு வார்த்தையையும் உச்சரித்து அடியில் வருமாறு சொல்லத்தொடங்கினான்:— "எங்கள் கூட்டத்தாரின் ஆசாரத்தின் பிரகாரம் எங்களுள் ஒருவன்——பாலமாணாக்கனாயினும்——மரிக்கும் சமயத்தில், மற்றவர்கள் அவனுக்குக் கடைசி கைங்கரியங்கள் செய்வதற்கு வரவேண்டியது——அதாவது——அவர்களை அப்படிச் செய்யவிடும்பக்ஷத்தில். இப்போது அவர்கள் எனக்கு அப்படிக் கைங்கரியம் செய்யச் சொல்லவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

பிறகு அரசன் நம்பாமையை அவன் முகக்குறியாலறிந்து தீவிரமாய் அடியில் வருமாறு சொல்லலுற்றான்.

"இதில் ஏதோ மோசமிருக்குமென்று பயப்படுவாயானால் முதலில் கிணற்றிற்குள் நானே செல்லுகிறேன். பிறகு என்னைச்சேர்ந்தவர்களுக்குள் ஐவர் என் பின்னால் வரட்டும். அங்கே நீ எவ்வளவு நேரம் விடுகிறாயோ அவ்வளவு நேரம் எனக்கு வேண்டிய காரி

யங்களை செய்யட்டும். பின்பு ஒவ்வொருவராய் மேலே ஏறி உன் முன் அவர்கள் வருவார்கள். நான்மாத்திரம்——அல்லது என்னில் என்னமிச்சமிருக்கிறதோ அது மாத்திரம்—கீழேயிருப்பேன்."

இதைப் பின்யோசனையாகச் சேர்த்துச் சொன்னாற்போலிருந்தது. ஒருக்கால் அது அங்கேயிருந்தவர்கள் ஒருவரும் சம்சயிக்காத விஷயமோ என்னமோ.

"பிறகு கிணற்றை மூடி முத்திரையிட்டுவிடு; எனக்குவந்த விதி வரட்டும். இது தான் என் பிரார்த்தனை."

இந்தக் கடைசி சொற்களில் ஒருவித முடிவும், அமைதியும், விரக்தியும், காணப்பட்டன. அதனால் அதைக் கேட்டோர்களுக்கு இது சாதாரணமான பரிக்ஷையல்லவென்றும், அவனுடைய விதி தேவதைகளுடைய கையிலகப்பட்டிருக்கிறதென்று; அவன் தெரிந்து சொன்னானென்றும் தோன்றிற்று. ஒருக்கால் அப்படி வேண்டுமானால் தன் விதியை யடைய சித்தம் செய்துகொண்டிருந்தான்.

அரசன் தன்கையை ஆட்டி, தன் சம்மதத்தைத் தெரிவித்தான். இரக்கும் மனிதர்களுடைய கடைசி வேண்டுகோளை—அரசனே யாயினும்—யாரும் தவிர்க்கமாட்டார்கள் இந்தியாவில், சமயவிதிகளோ அரசனுடைய மனோலௌல்லியங்களுக்கு மேற்பட்டவை. காளிகோயிலிலிருந்து சந்நியாசிகளை யழைத்துவர, அருகாமையிலிருந்த நகரத்திற்கு ஒரு தூதன் துரிதமாய் ஓடினான்.

நாராயணலாலா கிணற்றங்கரையில் கைகட்டிக்கொண்டு அசையாமல் நின்றுகொண்டிருந்தான். அவனுடைய உதடுகள் யாருக்கும் கேட்காத வார்த்தைகளை உச்சரித்து விரைவாய் அசைந்துகொண்டிருந்தன; ஆயினும் மிக மனவுருக்கத்துடன் முறையிடுகிறானென்றும், கடைசியாக அவர்களிடம் செலவுபெற்றுக்கொள்ளுகிறானென்றும் பொதுவாய் எல்லாரும் சம்சயித்தார்கள்.

பிறகு கைகளை மேலே உயர்த்தி எல்லோரையும் ஆலிங்கனம் செய்துகொள்பவன்போல் அவைகளை அணைத்து—ஏணியில் குதித்து காட்சியினின்றும் துரிதமாய் மறைந்துவிட்டான்.

கூட்டத்திலிருந்து பயத்தினால் ஒரு பெருமூச்சு கிளம்பிற்று—அது பச்சாதாபம், கண்டனை, கலகம் முதலியவைகளைத் தெரிவித்தது, பிரளய காலத்து கார்மேகம்போல் ஓர் ஏக்கம் அங்குள்ள எல்லோரையும் மூடிக்கொண்டது.

மணி ஓசை இந்த மயக்கத்தை நீக்கிற்று. நெட்டையான மெலிந்த ஓர் உருவம் கூட்டத்தினின்றும் வெளிப்பட்டது. நரைத்த அவன் தாடி மார்பில் தொங்கியிருந்தது. எண்ணெய்யும் தண்ணீரும் என்றும் காணாத ஜடைகள் தோளில் தொங்கிக்கொண்டிருந்தன. மஞ்சளில் நனைத்த இடுப்புவேஷ்டி ஒன்றுதான் அவன் தரித்துக்கொண்டிருந்தான். அவனது இடதுகையில் சாம்பிராணி வாசனை வீசும் தூபம் நிறைந்த ஒரு தூபக்காலும், வலதுகையில் கலகலவென்று சப்தம் செய்யும் ஒரு நீர்க்காவையும் வைத்துக்கொண்டிருந்தான்.

அவன்தான் குரு, சந்நியாசிகளுக்கெல்லாம் பிரதம குரு.

அவனைப்போலவே உடையும் வேடமும் தரித்த நால்வர் பின்வந்தார்கள். மனோவிகாரம் ஒன்றும் காட்டாத அவர்கள் முகத்திலும்கூட "தான் தனது" என்னும் அகங்காரங்களை நிக்கிரகித்த கடும் சிக்ஷையின் குறிகளும், இந்தக்காயத்தினது பஞ்சேந்திரியங்களையும் அடக்கிய நுண்ணிய சக்தியின் குறிகளும் நன்கு விளங்கின.



பிரதம குரு மௌனமாய் அரசனை வணங்கி, விரைவாயும், மௌனமாயும் கிணற்றுக்குள் இறங்கினான். அவனது சஹபாடிகள் பின் சென்றார்கள்; ஆகாயத்தில் கொள்ளுவாய் பிசாசைப்போல் வெளுத்த புகை சூழ்ந்திருந்தது; அதில் அவர்களைப் பார்த்தால் மௌனமான மாயாரூபங்கள் போலிருந்தது.

1. "ஹ்ராம்! ஹ்ராம்! ஹ்ராம்!" என்று ஒரே ஒரு மெல்லியதொனி கிணற்றிலிருந்துகேட்டது; தூபத்தின் புகை கிணற்றுவாய்க்கு வந்துகொண்டிருந்தது; விபரீதமான ஏதோ ஒரு சடங்கைக் கீழேசெய்துகொண்டிருந்தார்கள்.

"ஓம்! ஓம்! ஓம்!" என்று ஓர் கண்டத்தொனி திடீரென்று ஆவேச உக்கிரத்துடன் புறப்பட்டது——வரவர அதன் சத்தம் அதிகரித்தது.

அல்லெனும் பெண்பானுக் கோரழகுள்ள மாதாவாகிக்
கல்லெனு மனப்பேயெல்லாங் கலந்துமேயீர்க்க நன்கு
ஒல்லெனத் தேரிலேறி யுகந்துநற் கபாலமேந்தி
ஜ்லென மயானம்வா ழேந்திசை சாமளையே வாழி.

இன்னதென்று சொல்லக்கூடாத குறிப்பற்ற ஓர்வித பயம் கூட்டத்திலிருந்த ஜனங்களுடையமனதைப்பற்றிற்று. மற்ற தேவதைகளையெல்லாம் சக்தியற்றவர்களாய் நிற்கச்செய்து இவ்வுலகத்தில் மானிடர்களுடைய அந்தியகாலத்தில் முக்கியதேவதையாய் முன்நிற்கும் பயங்கரமான தேவதையாகிய காளியினது வல்லமை அவர்கள் ஞாபகத்திற்கு வந்தது. எதிரில் நின்றவர்கள் அத்தேவதையை வணக்கத்துடனும், ஆரவாரத்துடனும், பரவசத்துடனும் பிரார்த்திக்கும் இஷ்டபக்தர்கள்.

ஹ்ராம் ஹ்ராம், ஹ்ராம் என்ற ஆவேசம்கொண்ட ஆரவாரத்தை கீழே அநேக ஜனங்கள் கைக்கொண்டார்கள். பிறகு திடீரென்று பாழடைந்த நகரத்தைப்போல் எல்லாரும் நிச்சப்தமாயிருந்தார்கள்.

ஒவ்வொருவராய் சந்நியாசிகள் தங்கள் ஜேஷ்டகுருவுக்குப்பின்னால் பூமிக்குத் திரும்பிவந்தார்கள். தீ யெரியும் தூபக்காலுடனும், கலகலவென்று சத்தம் செய்யும் நீர்க்காவையுடனும், உள்ளே சென்ற ஜனங்கள்தான் சரியாய் வெளியே வந்தார்களென்று அரசன் அவர்கள் முகங்களைப்பார்த்து கணக்கு எண்ணும்படி அவன் பக்கத்தில் வரிசையாகச்சென்று, பின்மறைந்தார்கள்.

பிறகு கொல்லத்துக்காரர்கள் இரண்டுகனமானபலகைகளைக்கொண்டு கிணற்றின் வாயையும் அதற்கப்புறம் நான்குபக்கங்களிலும் ஒருஅடி தூரம் வரையிலும் மூடிவிட்டார்கள். பலகைகளுக்கிடையிலுள்ள சந்தை லப்பங்கொண்டு மூடிவிட்டார்கள். அரசன் மேடையினின்று மிறங்கிவந்து அதன்பேரில் மத்தியிலும் இரண்டு மூனைகளிலும் தன் முத்திரைமோதிரத்தைக்கொண்டு முத்திரையிட்டான். முத்திரையை உடைக்காமல் பலகைகளை மறுபடியும் தூக்குவது அசாத்தியம்.

முத்திரைகளையும், பலகைகளினிடையே யிருந்த சந்தையும் பித்தளையில் ஒரு லேசான தகடால்மூடிவிட்டு கொல்லத்துக்காரர்கள் கிணற்றின்பேரில் மூன்று முழ உயரத்திற்கு சுவர் ஒன்று விரைவாய் கட்டிவிட்டார்கள்.

பன்னிரண்டு காவற்காரர்கள் முறையாய்க்காக்க, வந்து அதைச்சுற்றி நின்றுகொண்டார்கள்.

"அந்தச்சுவற்றில் ஒரு சிறு கீறலேனும் காணுமாயின் உங்களை சிரசாக்கினை செய்துவிடுவேன்." என்று பயமுறுத்தி அரசன் எழுந்துசென்றான்.

நாராயணலாலாவை சமாதியில் சேமித்து ஏழுராத்திரியாய் விட்டது; ஏழாவது இராத்திரி காடாந்தகாரமாயிருந்தது. சந்திரசையில்லை; நக்ஷத்திரமுமில்லை; ஏனெனில் கார்மேகங்கள் வானமுழுவதும் மூடிக்கொண்டுவிட்டன. இடைஇடையே அடிக்கும் காற்றினால் பக்கத்திலிருந்த காட்டிலிருந்து பயங்காரமான சப்தங்களின் மாறொலிகள் தான் கேட்டன.

அத்தருணத்தில் காடுமுழுவதும் தூக்கமின்றி ஊக்கமாயிருந்தாற்போலிருந்தது. தூரத்திலிருந்த ஓநாயினது ஊளையும் கழுதைப்புலியின் பயங்கரமான சிரிப்பும் கலந்து வந்தன. Nilghau வின் மெல்லிய ஒலி காற்றில் மிதந்து வந்தாற்போற் கேட்டது. இடைஇடையே வெகுதூரத்திலிருந்து வரும் இடியைப்போன்ற உரத்த அபசகுனமான ஓர் சப்தம் மற்ற சப்தங்களுக்குமேலே கேட்டது. அப்பொழுது மற்ற மிருகங்களெல்லாம் பூமியில் தலையைக் கவிழ்த்துக்கொண்டு நிச்சப்தமாய் விட்டன.

அங்கே ஓர் கிணற்றண்டை தன்கிளைகளால் கிணற்றை மூடிக்கொண்டிருந்த ஒரு அரசமரத்தின்கீழே, கிணற்றைச் சுற்றி நான்குமனிதர்கள் உட்கார்ந்திருந்தார்கள். மிகக் குளிரா யிருந்தாற்போல் அவர்கள் கூனிக்குனிந்து கொண்டிருந்திருந்தார்கள். ஆனால் குளிரில்லை. அவர்கள் கையிலீட்டிகளிருந்தன. ஆனால் கண்களோ மரங்களில் அடிக்கொருவிதமாய் ஓடும் நிழல்களை நிலையற்றுப் பார்த்துக்கொண்டிருந்தன.

"சகோதரர்காள்! ஏதோ ஒரு சப்தம்—ஒரு சலசலப்பு—கேட்டாற்போலிருந்தது!" என்று ஊடுருவிப் பார்க்கக்கூடாத இருளில் பிரமைபிடித்தவன்போல் பார்த்துக்கொண்டு, அடக்கி இரகசியமாய் ஒருவன் சொன்னான்.

மற்றவர்கள் ஈட்டிகளை நடுநடுங்கிப் பிடித்துக்கொண்டு, கடைக்கண்ணைச் சாய்த்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"சகோதரர்காள்! எனக்கு பயமாயிருக்கிறது; கண்ணுக்கும் புலப்படாத இக்ஷிணி பிசாசுகளைக் குறித்து பயமாயிருக்கிறது" என்று முதல் காவற்காரன் மறுபடி சொன்னான். அசைவற்ற தனது கண்கள் கிணற்றின்பேரில் விழவே திகிலடைந்து நடுங்கினான்.

அங்கே தங்களறிவுக் கெட்டாத ஏதோ ஒரு விஷயம் நடந்து கொண்டிருப்பதாக அவர்களுக்குத் தோன்றிற்று. ஏதோ அறிவுக்கும், புலன்களுக்கும் எட்டாததும், இன்னதென்று சொல்லக் கூடாதது மான ஓர் விஷயம். நாராயணலாலா இப்பொழுது நிச்சயமாய்மரித்திருக்கவேண்டும்—அவன் பிரேதத்திற்குச்சடங்குகளொன்றும் செய்யவில்லை, அப்படிச் செய்யும்வரையில் அவன் ஆவிக்கு அமைதிகிடைப்பதரிது.

அமைதியில்லை! ஆகாயத்தில்—சுற்றியும்—மேலேயும்—கீழேயும் — எங்கும் ஓடிக்கொண்டிருந்தது.

திடீரென்று மங்கலான ஒரு வெண்மை கிணற்றினது மற்றப் பக்கத்தில் தோன்றிற்று; ஸ்பரிசத்திற் கெட்டாத மெல்லிய ஓர் மேகம்; எதிர்த்து அடுத்த ஒளியில் அது ஒரு இமைப்பொழுது காணப்பட்டது.

"ராதாகிருஷ்ணா! ராதாகிருஷ்ணா!" என்று கடவுளைப் பிரார்த்தித்து காவற்காரர்கள் கூப்பிட்டார்கள், ஏனெனில் இது இவ்வுலகத்து எதிரியல்ல.

"பயங்கரமான ஆவியே! சமாதானமாய்ப் போய்விடு, நாங்கள் ஏழைகள்; உனது அடிமையின் அடிமைகள்!"

ஆனால் மேகத்தைப் போன்ற அத்தோற்றம், கண்ணினின்றும் மறைந்து விட்டது; பூமிக்குள் அமிழ்ந்து விட்டது, ஆயினும் எதிர்ப்பக்கத்திலிருந்து மறுமொழிவந்தது; கிளை யொன்று ஒடிந்து விழுந்தது, இட்றிவிழுந்த மெதுவான காலடி சப்தம் ஒன்றுகேட்டது.



"போ, பின்னே போ, குத்திவிடுவேன்!" என்று ஒரு காவற்காரன் குதித்து உரக்கக்கூவினான். இது இவ்வுலகத்திய எதிரி யென்பதற்குச் சந்தேகமில்லை.

மேலேகண்ட சொற்களை உச்சரித்தவுடன் நெட்டையான ஒரு மனிதன் அவர்களுக்கு எதிரேவந்து நின்றான். அவன்தலை சரைத்திருந்தது, திறந்திருந்த அவனது மார்பிலும் கைகளிலும் தானேசெய்து கொண்டகாயத்தின் தழும்புகளிருந்தன. அவர்கள் திகிலடைந்து பார்த்துக் கொண்டிருக்கிறதை நோக்கி கம்பீரமாய்ப் புன்சிரித்தான்.

"சிநேகிதர்காள்! கணப்பண்டை சற்று நேரம் நானும் உட்காருகிறேன்; இன்றிரவு நான் வெகுதூரம் நடந்து வந்திருக்கிறேன்."

பண்டிதன், தத்துவ சாஸ்திரி! அவனுடைய காரியங்களும், அவன் இராக்காலங்களில் விழித்திருப்பதும் அவர்களுக்கு நன்றாய்த்தெரியும்.

"அதைக்குறித்து எங்களுக்குச் சற்று சொல்," என்று கிணற்றை ஓரக்கண்ணாற் பார்த்துக்கொண்டு மூச்சை அடக்கிகொண்டு சொன்னார்கள்.

"அது வெகு சுலபம்" என்று அவர்கள் நெஞ்சில் திகிலுண்டாகும்படி முறண்ட தொனியுடன் அவன் பின் வருமாறு சொன்னான்.

"அந்த கிணற்றிலிருக்கும் ஆகாயம் ஒரு மணிநேரத்திற்குள் விஷம் நிறைந்துவிடும் என்று புஸ்தகங்களில் சொல்லியிருக்கிறது; ஒருநாள் சென்றால் அதிலிருக்கும் மனிதன், ஜலத்தில் முழுகிப்போகும் ஒருவன் மூன்றாந்தடவை முழுகுங்காலத்தில் பிரமைதப்பி விடுவதுபோல் தப்பிவிடுவானாம். பிறகு உடனே இறந்துவிடுவான். வெகு நாளுக்குமுன்னேயே நாராயணலாலா இறந்திருக்கவேண்டும்."

அவர்கள் மனதில் முன்னில்லாத அநேக எண்ணங்கள் இற்சொற்களால் வந்து நிறைந்தன; சமாதியை விட்டுவந்த பிரேதப் பிசாசுகள் இப்பூமியில் அவைகள் அநியாயமாய் மரணமடைந்த இடங்களுக்கு வந்து கொண்டிருப்பதையும், பயங்கரமான இக்ஷிணிகள் இவ்வுலகத்தில் அரைகுறையாக செய்து வைத்திருந்த காரியங்களைமுடிப்பதற்கு திரும்பிவருவதையுங் குறித்துச் சொன்னான்.

திடீரென்று ஏதோ விதமான ஒரு சப்தம் காதில் பட்டது—ஒரு பெருமூச்சு, அடக்கக்கூடாத விசனத்தினால் தேம்பும் அழுகைக்குரல்; அது வரவர உரக்கக்கேட்டது.

வெண்மையான மப்பு பழையபடி வந்து கிணற்றிற்கந்தண்டை ஒரு க்ஷணநேரம் அசைந்து மறுபடி இருட்டில் மறைந்து விட்டது.

"இந்தக் கிணற்றின் ஸ்திரீ," என்று ஒருவன் திக்பிரமையுடன் பிதற்றினான்.

கணப்பைச் சுற்றி கூனிக்குனிந்து அவர்களெல்லாம் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள், மார்பைக் கெட்டியாய் கையால் அமர்த்திக்கொண்டு அத்தோற்றம் திரும்பி வரப்போகிறதென்று பயந்து மூச்சை யடக்கிக் கொண்டிருந்தார்கள்; இப்படி வெகு நேரம் காத்துக் கொண்டிருந்தார்கள்.

பிறகு மெல்ல மெல்ல, இரவினது ஒலிகளெல்லாம் அடங்கிப்போய் விட்டன. மேற்காற்று நின்று காட்டில் பழையபடி அமைதியுண்டாயிற்று, பூமாதேவி நித்திரையடைந்தாள்.

பண்டிதனும் அப்படியே மறைந்து விட்டான். எப்பொழுது மறைந்தானோ? என்ன விதமாய் மறைந்தானோ ஒருவருக்கும் தெரியாது.

உடனே அரசனுடையகட்டளை அவர்களுடைய ஞாபகத்திற்கு வரவே நடுநடுங்கி வழிக்கு ஒளிகாட்ட தீவர்த்திகளைப்பிடித்துக்கொண்டு கூனிமெலிந்து கிணற்றிற்குச் சென்றார்கள்.

"இங்கேபாருங்கள் சகோதரர்களே" என்று கிணற்றின்பேரில் கட்டியிருந்த சுவற்றின் புறத்தைச்சுட்டிக்காட்டி ஒருவன் மெதுவாய் சொன்னான்.

அது ஈரமாயிருந்தது, ஒருகை அகலம் ஈரமாயிருந்தது.

"பனி, பனிபெய்வதனால்!" என்று மற்றொருவன் விவரித்துச்சொன்னான்; ஆனால் அதைச் சுற்றியிருந்தமற்ற பாகமெல்லாம் உலர்ந்திருந்தது.

'கண்ணீர்! ஒரு ஸ்திரீயினது கண்ணீர்!" என்று ஆழ்ந்த வெங்கலத் தொனியுடன் இரவினது இருட்டிக்குள்ளிருந்து ஒருசத்தம் மறுமொழி சொல்லிற்று.

(இன்னும் வரும்.) K. G. V.

# உத்தராராம சரித்திரம்.

## குச, லவர் சரித்திரம்-

41-வது பக்கத்தொடர்ச்சி.)

165. என்மாற்ற ரியாபாலனும் வனவாஸம்போன
(அந்த) மனஸ்தாபத்தாலே யன்றோ வாராமலிருந்தேன்
166. கட்டிநின்றபொற் காப்பும் மாலை புலராமுன்
கருத்துடைய லக்ஷுமணரும் கூடவனம் நடந்தார்
167. அம்புவில்லும் தானெடுத்து லக்ஷுமணரும் போக
(என்) அருங்கிளியாள் ஊர்மிளையும் அருஞ்சிறையிலிருந்தாள்
168. பூமியிலேதான் பிறந்த பொற்கொடி சீதாவை
போற்றியே நான் வளர்த்தேன் எழுத்தையறியாத
169. கலப்பையோடே குழியினுள்ளே வந்துதிச்சாளென்று
கலியுகத்து மானிடர்கள் அதிசயமாய்ச் சொல்வாள்
170. (என்) கோப்புடைய மாளிகையில் குடிகொண்ட செல்வம்
கொம்பனையில் கால்விசேஷம் என்று நானிருந்தேன்
171. (என்) தாக்குடைய மாளிகையில் தையல்வந்து பிறக்க
சந்தானம் சம்பத்தும் சகலமும் உண்டாச்சு
172. செல்வமுள்ள சீதையரை நினைத்து மனமுருகி
சீர்செய்யும் தந்தையரும் மனந்தளர்ந்தாரம்மா
173. (என்று) கலியாணிதேவி சொல்லி கலங்கிநிற்கும்போது
கௌசல்யா தேவியம்மன் கனிந்துமப்போ துரைப்பள்
174. (என்) லக்ஷுமியும் வனம்போகி நெடுங்கானல் அலைய
நாங்கள் நீலியன்றோ பூமியிலே நெஞ்சு நிலைதரித்தோம்.



175. வாய்த்ததொரு மிதிலையிலே நின்று வில்லைமுறித்து
மன்னராமர் தேவியுடன் மகிழ்ந்து வந்தபோது
176. (என்) மைதலியும் ராகவரும் வாழ்ந்திருக்கும்போது
மகுடாபிஷேகம் செய்ய மன்னவர் கோடித்தார்.
177. அரிதான கைகையவள் கேட்டவரத்தாலே
(எங்கள்) அன்பான தசரதனார் ஆவியது இழந்தார்.
178. கன்னெஞ்சு கூனியோடே கற்பனையினாலே
கயட்டினோம் மங்கிலியம் கற்சிறையி லிருந்தோம்.
179. வாய்த்ததொரு ஸ்ரீராமர் மணிமகுடஞ்சூட
வாய்மையுள்ள தசரதனார் அரசுநிலை நிறுத்த
180. காக்ஷியுள்ள பந்தலிலே காலைவிளக்கெரிய
கல்ப்பூர ஹாரத்தி எடுக்க அதிஷ்டமற்றோம்
181. கௌசல்யாதேவி யம்மன் கண்டுடனே சொல்வள்
கலியாணிதேவியம்மன் கண்டுடனே சொல்வள்
182. (அம்மா) காக்ஷியுள்ள தசரதனார் காணுதகாக்ஷி
கௌசல்யாதேவியரே கண்குளிரப்பாரும்
183. (என்று) கலியாணி தேவியரும் கௌசலமாதாவும்
கனகசிங்காஸனத்தில் கலந்து வீற்றிருந் தாள்.

(இன்னும் வரும்.) R. S. சுப்பலக்ஷுமி.

# மயாபுரிவிநோதக் கதையின்

## முன் தொடர்ச்சி.

சிவசுவாமி ஐயரவர்கள், அப்பா! ஜகதீசா! சர்வேசுவரனாலருளப்பட்ட உன்னத பதவியிலிருக்கிறநீதற்காலம் நினைத்தபடிசெய்யலாம். அது உனக்கு அரிதானது ஒன்று மில்லை ஆனாலும் சற்று நிதானிக்கவேண்டும். தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டுவது ஒரு பெருமையாகாது. ஈனஜந்துக்களாகிய நாய்முதலியமிருகங்களும் தீமைக்குத் தீமைசரிக்கட்டுவதால் அவற்றுக்கும் மனிதராகிய நமக்கும் பேதமென்ன? ஒருவர் தமக்குச் செய்த கெடுதியைமறவாமல் மனதில் வைத்துக்கொண்டிருந்து, சமயம்வந்தபோது தமது சாமர்த்தியத்தைக்காட்டியப் பழம் பகையை முடித்துக்கொள்ளுகிறசுபாவமுடையவர்கள் ஈனஜாதியென்று நூல்கள் கூறுகின்றன. அவர்களை உலகத்தில் பண்டிதர் பாமரராகிய எல்லாரும் இகழ்வது பிரத்தியட்சம். அவர்கள் பெற்ற ஐசுவரியமும் பெருமையும் சீக்கிரத்தில் அழிந்துபோம். இத

னால் அவர்களுக்கு இம்மை மறுமையாகிய இருவகைப் பயனும் இல்லாமற்போகின்றன.
இது பற்றியே "கற்பிளவோடொப்பர் கயவர்கடுஞ்சினத்துப், பொற்பிளவோ டொப்பா
ரும் போல்வாரே" என்று மூதுரையும் சலம் சாதித்திருப்பவரைக் கயவரென்றிகழ்
ந்து கூறிச்சினமும் பகையுமற்றிருப்பவரை "விற்பிடித்து நீர்கிழிய வெய்த வடுப் போ
லமாறுமே, சீரொழுகுசான்றோர் சினம்" என்று புகழ்ந்து கூறியது. அன்றியும் "நன்றி
மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றேமறப்பது நன்று" என்றதனால் பிறரால் செய்
யப்பட்டதீமைகளையுடனே மறந்து விடுவதே நன்மை. மனதிற் பகைமுதலிய களங்க
மில்லாதிருப்பவரைப்புலி சிங்கம் முதலிய துஷ்டமிருகங்களும் நேசித்து விசுவசிக்கின்
றன. உலகத்திலெல்லாராலும் புகழப்படுகிறார்கள். மறுமைப்பயனையுமெளிதிலடைகின்
றார்கள்: பகையென்கிற களங்கம் மனதிலில்லாமையினால் அவர்களுக்கு அச்சமென்பது
சிறிதுமில்லை. சதாமனத்திருப்தியோடு மிருக்கிறார்கள். ஆகையினாலே நாம் அவர்க
ளைக்கவனியாமல் விட்டுவிடுகிறதே நலம். அவரவர்களுடைய கர்மபலனையவரவர்களேய
னுபவிக்கவேண்டும். "தாந்தாமுன்செய்த வினைதாமேயனுபவிப்பார், பூந்தாமரையோன்
பொறிவழியே" என்பாதிப்பிரமாணவசனங்களும் பிரகாசிக்கின்றன. சகலஜீவராசிக
ளின் இதயாரவிந்தத்தில்அந்தர்யாமியாயெழுந்தருளியிருக்கும்ஸ்ரீபரமேசுவரன்அவரவர்
கள் செய்த கர்மங்களை யுணர்ந்து, அவற்றுக்குரிய பலன்களைத் தானேயருளிச்செய்
வான். இதைக்குறித்து நாம் முயற்சி செய்யவேண்டிய அவசியமில்லை யென்பது எனது
அபிப்பிராயமென்று கூறிமுடித்தார்.

இதைக்கேட்டுக் கொண்டேயிருந்த சுந்தர ஐயரவர்கள் மனதைவிட்டுப் பொங்கி
யெழுந்த கோபத்தையும், வருத்தத்தையும் அடக்கிக்கொண்டு சிவசுவாமி ஐயரை நோக்
கிச் சுவாமீ! தாங்கள் சொல்லியவைகளெல்லாம் பாபரகிதமான புண்ணியாத்மாக்களு
டைய பரிசுத்தமானகருத்தைத் தழுவியதும், தர்மசாஸ்திரங்களோடு மாறுபடாதநீதிவச
னங்களாகையால் அதனை மறுத்தும் பேசவல்லார்யார்? ஆயினுமென்சிற்றறிவுக்குத் தோ
ன்றிய சிலவார்த்தைகள் கூறுகின்றேன்; அதையுங்கேட்டருள வேண்டும். தமது வசன
ங்களெல்லாம் உலகபாசமெல்லாவற்றையும் பற்றறக்களைந்து விட்டு மானாபிமானங்க
ளையும் இன்பதுன்பங்களையும் சமனாகக்காணும் பெரியோர் செயலாகவேயிருக்கின்றன.
தற்காலத்தில் நமது குழந்தைக்குத் தெய்வானுக்கிரகத்தினால் பூலோகமுழுவதையும் ஏக
சக்கிரமுருட்டி இராஜரீகம் செலுத்தும்படியான இராஜ்யலட்சுமிகைவசமாயிருக்கிறாள்.
இராஜ்யலட்சுமியைச் சுதந்தரித்துக் கொண்டிருக்கும் புண்ணியவான்களுக்கு இந்த
உபதேசம் சிறிதும் பிரயோசனப்படாது. ஏனென்றால், இராஜத்துவத்தையடைந்தவர்
களுக்குத் துஷ்டநிக்கிர சிஷ்டபரிபாலனமே பிரதானமானதர்மமாகும். இந்ததர்மத்
தைக்கைவிட்டு வேறெதையனுஷ்டித்தாலும் இராஜனாயிருக்கிறவன் நரகதுன்பத்தை
யனுபவிக்கவேண்டிவருமேயன்றி நற்கதிபெறுவதில்லையென்று தர்மசாஸ்திரங்கள் கூறு
கின்றன. அரசன் துஷ்டநிக்கிரகம் செய்யாமல் சிறிதுபராமுகமாயிருந்தால் உலகத்தில்
சாரர் சோரர் முதலிய மஹாபாபிகள் நிறைந்து விடுவார்கள். தனவந்தர்களெல்லாரும்
அச்சமற்றுமமதையடைந்து எளியவர்களைத்துன்பப்படுத்து வார்கள். சிஷ்டர்களோ அர
சனுடைய காவலிழந்தமையால் துஷ்டர்களுக்கஞ்சி வேறுதேசம் போய்விடுவார்கள்.
துஷ்டர்கள் நிறைந்தநாடு கரடி புலிகள் உலாவித்திரியும் காடாகக்கருதப்பட்டுச் சீர
ழியும். உலகத்தையாளும் அரசர்கள் சாம, தான, பேத, தண்டமென்கிற சதுர்விதமான
தந்திரங்களைக் கையாள வேண்டுமென்று நூல்கள் விதித்திருப்பதை யறியாதார்
யார்? அவற்றுள் முதல்மூன்று உபாயங்களும் வலிமையில்லாதவர்களுக்குரியன. பராக்
கிரமசாலியான அரசன் துஷ்டர்களிடத்தில் தண்டோபாயத்தையே செலுத்திவர



வேண்டும். எளியவர்களிடத்தில் இரக்கம் பாராட்டவேண்டும். அரசன் தண்டியாவிட்
டால் துஷ்டர்கள் அரசனை மதிப்பதில்லை. தன்னையண்டியிருக்கும் யோக்கியர்களைப்
பரிபாலித்துமதியாத துஷ்டர்களை கட்டாயம் தண்டிக்கவேண்டுவது அரசன் கடமை.
அப்படிச் செய்யாவிட்டால் அரசனாயிருப்பதினால் யாதுபயன்? ஸ்வரூபத்தினால் மனிதர்
களாகக்காணப்பட்டாலும்குணத்தினால்மிருகங்களையொப்பாயிருப்பவர்களும்பலருண்டு.
அவர்களிடத்தில் தயை பாராட்டுவது பயன் தாராது. நாம் பெருமையாகவாழ்ந்திருந்தகா
லத்தில் நம்மாலே பெருமையடைந்து சிறந்தவர்கள், நாம் தாழ்வடைந்த காலத்தில் உப
காரஞ்செய்யாவிட்டாலும் அபகாரம் செய்வது நியாயமாகுமோ? குப்புசாமிஐயன் செ
ய்ததீமையைக்கனவில்நினைத்தாலும் மனது வெந்துபுண்ணாகிறதே? செல்வத்தால் மதங்
கொண்டு பாபபுண்ணியங்கருதாமல், பெரியோர்சிறியோரென்று பாராமல், நாம் செய்த
உபகாரத்தைச்சிறிதும் எண்ணாமல் நமக்கு அளவிலாத துன்பத்தையும் அபாயத்தையுந்
துணிந்து செய்த அந்தச்சண்டாளனிடத்திலும் கிருபையாயிருக்கலாமா! மதங்கொண்டு
ஊரைப்பழிக்கப்புகுந்தயானையைப்பாகனானவன் அங்குசத்தினாலேமண்டை பிளக்கவடி
த்து மதத்தை யடக்கிப்பின்பு வஸ்திராபரணங்களா லலங்கரித்துப் பெருமைப்படுத்து
வது போலக்குப்புசாமி ஐயருடைய கருவங்குலையத்தண்டஞ் செலுத்திப்புத்தி கற்பி
த்துப்பிறகு அவனுக்கு நன்மைசெய்வதேதகுதியென்று எனக்குத் தோன்றுகிறது.தவிர
ஜகதீசன் அவிநாசிவந்து அவமானப் பட்டகாலத்தில் குப்புசாமி ஐயரையும், விசாலட்
சியையும் நமது பணிவிடைக்காரர்களாகும்படி செய்கிறேனென்று கூறியசபதமொழியு
முண்டு. அதுவும் வியர்த்தமாகக் கூடாது, எல்லாவற்றையும் நீரயோசித்துத் தகுந்த
படிசெய்து சத்துருக்களுக்கு முன்னாலே நமது பெருமையை நிலை நிறுத்திக்கொள்
ளுவதேநியாயம். பிறகு தமது சித்தமென்று கூறிவாளாவிருந்தார்.

பிறகு, பிள்ளையவர்கள், ஐயரவர்களை நோக்கிச், சுவாமீ! எனக்கு இம்மைமறு
மைப் பயனையளித்தருளும் தெய்வமும் குருவும் தேவரீரையன்றியில்லை யாகையால்
தமது திருவாக்கைமறுத்துப் பேசத்தகுதியுடையவ னல்ல? ஆயினுமிந்த விஷயத்தில்
என்னுடைய மனதும் சுந்தர ஐயரவர்களுடைய அபிப்பிராயத்தையே யனுசரிக்கின்றது.
நமது விரோதிகளைமுற்றுங் கெடுத்து விடவேண்டும் என்பது எங்களுடைய கருத்
தல்ல, அவர்களுக்குப் புத்திகற்பித்து நல்வழிப் படுத்தவேண்டு மென்பதேயாம். அப்ப
டிச் செய்யாவிட்டால் அவர்கள் மேன்மேலும் பாபத்தொழிலைச் செய்து நரகதுக்கா
ளாவார்கள். அன்றியும் அநேக ஏழைகளைக்கெடுத்து நாசம் பண்ணுவார்கள். அப்படிக்
கெல்லாம் நேரிடாதபடி நாம் செலுத்தக்கருதுகிற தண்ட நீதியும் கருணைகாரணமா
கவேயாதலால் அதுகுற்றமன்று? தகுதியுடையதே யென்று நினைக்கிறேன் என்று முடி
த்தார்.

இவைகளைக்கேட்டுக் கொண்டிருந்த ஜகதீசன் எழுந்திருந்து பிதாவின் திருவடி
களில் வணங்கித்தாம் கட்டளையிட்டருளிய நீதிவசனங்களும் மறுக்கப்படாதவேதமொ
ழிகளே. இவர்கள் கூறியதும் நியாயமாகவேகாணப்படுகின்றன; ஆதலால் இருதிறத்தா
ரது கருத்துக்கும் பழுது வாராமல் நமது நீதியைச் செலுத்த உத்தேசிக்கிறேன்; பின்
கட்டளைப்படி நடந்துகொள்ளுகிறேனென்று கூறக்கேட்ட ஐயரவர்கள் ஜகதீசனது
விநயமொழிக்குமகிழ்ந்து உள்ளும் புறமும்பூரித்து அப்பா! குழந்தாய்! ஆலமரத்திலி
ருந்து தோன்றுகிறவிழுது, அம்மரத்தினது பாரமுழுமையும் தானே சுமந்து அதைக்
காப்பாற்றுகிறதுபோல எங்களெல்லாரையும் பாதுகாக்கும் கடமை உன்னுடையதே
யாதலால் உன் மனதுக்கு மாறுபட்டு நடப்பவர் இங்கொருவருமில்லை. ஆதலால்

தர்மத்துக்கு விரோதம்வாராமல்உன்னெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளென்று விடையளித்தார்.

சிலநாட்கள் சென்றபின் ஒரு நாளிரவில் ஜகதீசன் தனது தேவிமாரிருவரோடும் விநோதமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் சௌந்தரவல்லியின் குழந்தை தவழ்ந்து வருவதை மங்களாம்பாள் பார்த்து வெகு சீக்கிரமாய் ஓடி, அதைத் தூக்கிவந்து தன் மடியில்வைத்துக்கொண்டு சிறிதுநேரம் விளையாடினாள். பின் சௌந்தரவல்லியிடங் கொடுக்கத் திரும்பிப்பார்த்து இந்தா குழந்தை; இதற்குப் பால்கொடு என்றுசொல்ல, அவள் இதைக் கவனியாமல், முகம் சுண்டி விசாரத்தில் மூழ்கியிருப்பதைக்கண்டு மங்களாம்பாள் திடுக்கிட்டு ஐயோ! நான் ஒன்றுஞ்செய்யவில்லையே வழக்கம்போலக் குழந்தையை எடுத்ததே தவிர வேறில்லையே. என்றும் வாராதகோபம் இன்று என் இவளுக்கு வந்தது? இவளுக்கு இவ்வளவு வருத்தம் வரும்படி நான் என்னகாரியஞ் செய்தேன்? எனக்கு ஒன்றுந் தோன்றவில்லையே யென்று பலவிதமாக எண்ணமிட்டுச் சிந்தை வருந்திக் குழந்தையை யேந்தினபடியே சித்திரம்போல் நின்றுவிட்டாள். இவ்விருவரையும் ஜகதீசன்பார்த்துக் கலகல வென்றுநகைத்து மங்களாம்பா! என்ன யோசித்துக்கொண்டு நிற்கிறாய்? உனக்கேன் இந்தயோசனைத் தாழ்வுண்டாயிற்று? நீ எண்ணினபடியல்ல! சௌந்தரவல்லி தன் தாயாரை நினைத்துக் கொண்டு மதிமயங்கியிருக்கிறாள். உன்னையலட்சியம்பண்ணவில்லை! உன்னிடத்தில் யாதொருகெட்ட அபிப்பிராயமும் கொள்ளவில்லை யென்று சொல்லி அவளைத்தன்மடியில் உட்காரவைத்துக் கவலை தீர்த்தான். இதைக்கண்ட சௌந்தரவல்லி மனம் பதைத்து ஐயோ! நான் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்து விட்டதே. அக்காள் மனம் வருந்தும்படி செய்து விட்டேனே. என்கருத்தை வெளியிடாமல் நான் மனதுக்குள்ளேயே வைத்து யோசித்த தனாலல்லவோ இந்தக்கெடுதி சம்பவித்தது என்று மனதிற்குள் சிந்தித்துத் திடீரென்று எழுந்திருந்து அக்கா நானுன்னிடத்தில் விரோத புத்தி வைப்பேனோ. நானிப்பொழுது வாழ்கிற வாழ்வு நீ தந்ததல்லவோ? இந்தக் குழந்தையினிடத்தில் உன்னைவிட எனக்கு அதிக பாத்தியமுண்டோ? நானும் குழந்தையும் உனக்கு உரிய உடைமைப்பொருளல்லவோ? இந்தக்குந்தையைப் பார்த்தவுடனே யென்னிடத்தில் அதிகபிரியமுள்ள மாதாவானவள் இந்தவாழ்வைக் கண்டுகளிக்கப்பிராப்தியில்லாமற் போயிற்றேயென்றுவருத்தமுண்டாக அதனால்நான் பரவசப்பட்டுநின்றேன். உண்மையாகவே உன்னிடத்தில் ஒருகெட்ட எண்ணமும்நான் கொள்ளவில்லையென்று மனம் வருந்திக்கூறும் வார்த்தையைக்கேட்டு மங்களாம்பாள் சௌந்தரவல்லியைத்தழுவி மனக்கவலைமாற்றி என் பிராணநாதா! இவள் கவலைநீங்கும் மார்க்கமில்லையோவென்றாள். ஜகதீசன் அவளுடைய தயாளகுணத்துக்கு மனமகிழ்ந்து மங்களாம்பா நீ நினைத்தகாரியம் நிறைவேறாமற்போமோ! இன்னம் அரைநொடிப்போதில் சௌந்தரவல்லி தாயார் இவ்விடம் வருவாள் என்றுகூறி அவளைத் தேற்றியபின் சௌந்தரவல்லி! அதோ உன்தாயார் நித்திரைசெய்கிறாள் பார். அவ்விடம்போய் எழுப்பி உன்தாயாருக்கு உபசாரம்செய். சற்றுப்பொறுத்து நானும்வருகிறேன் என்றான். அவள் அளவுக்கடங்கா மகிழ்ச்சிகொண்டு, தன் தாயார் படுத்திருக்கு மிடத்திற்குவந்து மெல்லப் படுக்கையை யசைத்து எழுப்பினாள். தாயார் கண்ணைத்திறந்து பக்கத்தில் நிற்கிற தனதருமைத் திருமகளைப்பார்த்து இருகையாலு மணைத்துத் தழுவிக்கொண்டு ஆனந்தத்தினால் தன்னை மறந்து பரவசப்பட்டுச் சிறிதுநேரமொன்றும் பேசாமலிருந்து பிறகு என் செல்வச் செருக்கே! நான் இன்றையதினம் உன்னை பார்க்கும்படியான புண்ணியஞ்செய்திருக்கிறேனோ? என்னைப்போலப் பாக்கியசாலிகள் பூலோகத்திலிருந்திருக்கமாட்டார்கள்.



இனிமேலு மிருக்கப்போகிறதில்லை. நீ யெங்கிருக்கிறாய்? என்னசெய்கிறாய் என்று கேட்க, அவள், அம்மா! இதுதான் என் கணவனிருக்கும் வீடு. நான் அவரிடத்தில் ஜீவித்துக்கொண்டிருக்கிறேன் என்றவுடனே மங்களாம்பாளுடைய உத்தரவின்பேரில் பணிவிடைப்பெண்கள் பலர் நாலாவிதமான சிற்றுண்டிகள், கனிவர்க்கங்கள், பானங்கள், கற்பூரதாம்பூலாதிகள்கொண்டுவந்துவைக்கச் சௌந்தரவல்லி அவற்றால் தன் தாயாருக்குபசரித்துக்கொண்டிருக்கையில், அம்மா! அம்மாவென்று ஒரு அற்புதலாவண்யம் பொருந்திய குழந்தை தவழ்ந்து வருகிறதையும், அதன்பின்னாலே மன்மதனைப் போன்ற ஓர் வாலிபன் வருகிறதையும் பார்த்து ஆச்சரியத்தால் மதிமயங்கி நிற்கக்கண்டு அம்மா! அதுதான் என் குழந்தை; அதன்பின்வருகிறவர்தான் எனது கணவன் என்று சொல்லிக் குழந்தையைக்கொண்டுவந்து தன் தாயின்கையில் கொடுத்தாள். ஜகதீசனும் வந்துசேர மூவரும் நெடுநேரம் விநோதமாகப் பேசிக்கொண்டிருக்கையில் தாயார் மகளைநோக்கி அம்மா இவ்விதமான அற்புதசிற்பம் நிறைந்த அரண்மனை எப்படி வந்தது? நீயெப்படி இங்கேவந்து சேர்ந்தாயென்று சொல்லிக்கொண்டே தன்னை மறந்து தூங்கிப்போனாள். சற்றுநேரங்கழித்து விழித்துக்கொண்டு தான் தன் கணவன் பக்கத்தில் படுத்திருப்பதையும், தான் கண்ட காட்சியையும் நினைத்து ஒன்றுந்தோன்றாமல் புலம்பிக்கொண்டிருந்தாள். பிரபாகரன் விழித்துத் தன் மனைவியைக் கூப்பிட்டுப் பெண்ணே! குழந்தை காணாமற்போன விசனம் உனக்கு மாத்திரந்தானா! எனக்குக் கிடையாதா? நீ யெப்போதும் அதையே நினைத்துக்கொண்டு இரவுபகல் நித்திரைகூட இல்லாமலிருப்பது தகுதியல்லவென்றான். அதுகேட்டபத்தினி சுவாமீ! எனக்கு அதைக் குறித்து இப்பொழுது வருத்தவில்லை. ஒரு ஆச்சரியங்கண்டேன். அதென்னவென்றால் தேவநிர்மாணம்போன்ற ஓர் அரண்மனையிருந்தது. அதில் நான் படுத்துக்கொண்டிருக்கையில் நமது குழந்தைவந்து எனக்குப் பலவகைச் சிற்றுண்டிகளை யுதவி உபசரித்தாள். அவளுக்கொரு குழந்தையிருக்கிறது. அதைப்புகழ்ந்து வர்ணிக்க என்னால் முடியாது. அவளுடைய நாயகனது ரூபலாவண்ணியத்துக்கொப்பே கிடையாது. அவர்களோடு பேசிக்கொண்டே நித்திரைபோய்விட்டேன். விழித்துக்கொண்டுபார்க்கும்போது இங்கே படுத்திருக்கக்கண்டு ஆச்சரியமும், வருத்தமும் அடைந்து புலம்பிக்கொண்டிருந்தேன். இந்தக்காட்சியைத் தேவரீர் காணவில்லையேயென்று வருந்துகிறேனென்றாள்.

பிரபாகரன் அதைக்கேட்டுச் சிரித்துப் பெண்ணே, இது கனவு, நாம் ஜாக்கிரத்தில், நினைப்பது, காண்பது, செய்வது எல்லாம் மனதிலடங்கியிருந்து நித்திரைசெய்யுங்காலத்தில் தோன்றும். அதற்குத்தான் கனவு என்றுபேர். நல்ல நித்திரையிருந்தால் கனவு காண்பதில்லை. நல்லதூக்கம் வாராவிடில் அப்பொழுது கனவுகாணும். நீ எப்பொழுதுங் குழந்தையைநினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டு நல்லதூக்கமில்லாமலிருப்பதால் அவ்வெண்ண முன் கனவில் தோன்றியது. வேறொன்றுமில்லை. ஆகையால நீ கவலையொழிந்து தூங்கவேண்டுமென்றான். கமலாட்சி சுவாமீ! அது நியாயந்தான்;: குழந்தையை நான் நினைத்துக்கொண்டே யிருப்பது நிச்சயமாகையால் அவளைக் கனவில் காணக்கூடும். ஒருபோதுங் கேட்டிராததும், மனிதர்களுடைய எண்ணத்துக்கு வரக்கூடாததும், கதையிலேகூட பார்த்திராததுமான அற்புதசிற்பமமைந்து நவமணிசொரிந்து, பொன்னொளிதவழும் அரண்மனையைக் கனவில் காண்பது எப்படி? இல்லாதவஸ்து ஒருபோதும் சொற்பனத்தில் வரக்கூடாதல்லவா? நமது புத்திரியை நினைத்ததே தவிர மருமகனையும், பேரனையுங்கூட நினைத்ததுண்டோ இல்லையே. ஆதலால் இது கனவு என்று எனக்குத்தோன்றவில்லை. அது இன்னதுதானென்று நிச்சயமா யறியவுங்கூட

வில்லை என்றாள். அரசன் பெண்ணே! நீ மயங்காதே; அதற்கினமான வெள்ளிக்காசு, தங்கக்காசுகளும் தோன்றுவதுபோல அதிக ஞாபகத்திலிருக்கும் பொருளைக் கனவில் காண்கிறபோது அதற்கு இனமாயுள்ள பொருள்களும் கூடக்காணப்படுவது இயல்பு தான் என்று சொல்லவும், தேவரீர் என்னசொன்னபோதிலும் எனக்கு நம்பிக்கை கொள்ளவில்லை. நான் கண்டதைத் தேவரீர் கண்டிருந்தால் அப்பொழுது இவ்வாறு சொல்லமாட்டீர்களென்று நினைக்கிறேனென்றாள். இப்படி இருவரும் பேசிக்கொண் டிருக்கையில் பொழுதும் விடிந்தது. அரசன் மனைவியை அந்தப்புரத்துக்கு அனுப்பிவிட் டுத் தான் அரசாங்ககாரியம் பார்க்கப்போய்விட்டான். அஸ்தமித்தபின் இருவரும் போ ஜனமுண்டு வழக்கம்போலப் பள்ளியறை வந்துசேர்ந்து சிறிதுநேரம் பேசிக்கொண் டிருந்து நித்திரைபோய்விட்டார்கள்.

(இன்னும்வரும்) தேவதுஞ்சரியம்மாள்.

---

# துரௌபதியின் சரித்திரம்.

## 3. பாண்டவர்கள்.

(60-வது பக்கத் தொடர்ச்சி.)

குருகுலமக்கள் மூன்றைவரும் பிறைவளர்வதுபோல் வளர்ந்து வருகிறகாலத் தில் நுட்பமாகிய நூல்களைக் கற்ற கல்வியையுடைய தருமன் அன்புடைமை, ஒழுக்கமுடைமை, இனியவைகூறல், நடுவு நிலைமை, பொறையுடை மை, வாய்மை, அருளுடைமை, அறிவுடைமை முதலியவற்றைப் பெற்று அழுக்காறு, கடுஞ்சொல், சினம், பேராசை, பொய்மை முத லியவற்றை நீக்கி உலகத்திலுள்ள யாவரும் மெச்சும்படியாய் சிறப் புற்று விளங்கினன்.

தருமனது நல்லொழுக்கம் முதலியவைகளைத் திருதராட்டிரன், விதுரன், வீஷ்மர் கண்டு மகிழ்ந்து இவனுக்கே இளவரசுப்பட்டம் கட்டவேண்டுமென்று நினைத்து ராஜசபை கூடும்படி ஏற்பாடு செய்தார்கள். திருதராட் டிரன் கொலுவிருந்து சபைகூட்டுவித்து வந்திருக்கிற ஜனங்களைப்பார்த்து சபையார் களே! திருதராட்டிர மகாராஜனுச்கு உதவியாக யிருக்க இளவரசுபட்டம் குரு குலமக் களிலொருவனுக்கு கொடுக்கவேண்டும். இதற்கு எனக்கு 100 புத்திரர்கள் பாண்டு மகா ராஜனுக்கு 5 புத்திரர்கள், இவர்களில் யாருக்கு பட்டம் கொடுக்கலாம் சொல்லுங்க ளென்று சொன்னார்.

சபையோர்கள் பின்வருமாறு சொல்லுகிறார்கள்:—ஓ மகாராஜாவே! யயாதி மகா ராஜா முதல் திருதராட்டிரமகாராஜா அவர்கள் காலம்வரையில் வயதிலுயர்ந்தவருக்கே பட்டம்கொடுத்துவந்திருக்கிறோம். இப்பொழுது குருகுலமக்களில் மூத்தவன் தருமன். இவனே சகலகுணத்திலும் மேன்மைபொருந்தி யிருக்கிறான். வயதிலும் பெரியவன், அரசுக்குறிய தன்மையையும் பெற்றிருக்கிறான். இவனுக்கே பட்டம் கொடுக்கவேண் டும். திருதராட்டிரன், விதுரன், பீஷ்மர் முதலானோர் இவ்வசனத்தைக்கேட்டுச் சந்தோ ஷப்பட்டார்கள்.



திருதராட்டிரன் எழுந்து ஓ சபையார்களே! நான் பட்டத்துக்குமாத்திரம் உரிய வனுயிருந்தபடியால் பட்டம் பெற்றேன், ஆனால் ராஜ்யபரிபாலனஞ்செய்து அநேக தேசத்தையும் என் கைவசமாக்கினன். ஆதலால் நான் அனுபவிக்கும் பாக்கியமோ பா ண்டுமகாராஜனது. அவனது புத்திரனாகிய தருமனுக்கு இளவரசுபட்டம் கொடுப்பதில் எனக்கு மெத்தவும் சந்தோஷமென்றும்

"மைந்தருடன் செயல் வழுவறவெண்ணிக்
குந்திபயந்தருள் குரிசிலையிவனே
யிந்த நிலக்கினி யிளவரசென்றான்
கந்தன் மதிக்குடைமுடியொ டளித்தான்."

தருமன் இனி இந்தத்தேசத்திற்கு இளவரசனென்றும் சொல்லி அழகிய பூரண சந்தி ரன்போலுள்ள குடையை முடியோடு அவனுக்குக் கொடுத்தார்.

வந்திருந்தவர்களுக்குத் தகுந்த மரியாதைகளைச் செய்து, வேதவேதியர்களுக்கு தானதருமங்களைச் செவ்வனே செய்தார். பின்பு தனது முத்திரை மோதிரத்தைத் தருமராஜன் விரலில்போட்டு சபையோர்களைப்பார்த்து "தனவான்களே! இன்று முதல் தருமன் கட்டளைக்குட்பட்டு நடங்களென்று" சொன்னார். பின்பு சபை கலைந் தது.

தருமன் துரியோதனன் முதலியவர்களைத் தனது சகோதரர்போல பாவித்து, துரியோதனனை சிங்காசனத்தில் வைத்துக்கொண்டு அவனால் சகல காரியங்களையும் நடப்பித்துக்கொண்டு செங்கோல் செலுத்திவந்தான்.

ஜனங்கள் இவனது அரசுமுறைமை ராஜ்யபரிபாலனம் முதலியவற்றைக்கண்டு மிகப் புகழ்ந்தார்கள். வீஷ்மர் பிரதானமந்திரியாயிருந்து தருமன் சொல்லும் வார்த் தைக்கு ஒன்றும் சொல்லாமல் சரியாய் நடந்துவந்தார். இதைக்கண்டு துரியோதனன் முதலியவர்கள் மிகப்பொருமைக்கொண்டு, தனது தகப்பனிடம் சென்று "அப்பா! எனக்கு ஒரு குறையிருக்கிறது. அதைத் தங்களுக்குத் தெரிவிக்கவந்தேன்." என்று சொன்னான். அவர் என்னசங்கதி யென்று கேட்டா. துரியோதனன் "தங்களது புத்தி ரர்கள்மீது அன்பு பாராட்டாமல் பாண்டவர்களின்மீது மிகப்பிரியமாயிருப்பதுடன் தருமனுக்கு இளவரசுபட்டம் கொடுத்ததைத்தவிர வேறில்லை" என பதில் சொன் னான்.

திரதராஷ்டரன் அப்பா குழந்தாய்! எனது தம்பியினுடைய தேசம் அவன் புத்தி ரர்களுக்குத்தான் கிடைக்கவேண்டும். மேலும் நீ மனுநீதிப்பிரகாரம் நடப்பவனல்ல நீ இவ்விதம் சொல்வதால் பிரயோஜனமில்லை. நீ பாண்டவர்கள் ஐவருடனும் கலந்து அரசுபுரிவதுதான் தர்ம நீதியாகும் என இடிவிழுந்தாற்போல் உரக்க கோபத்துடன் சொன்னார்.

துரியோதனன் துற்போதனையால் தன்னுடன் நட்பில்லாபாண்டவர்களோடு இனி சேரமாட்டேன் என்று பதில்சொன்னான்; இவன் இவ்விதம் சொன்ன வார்த்தைக்கு பிதாவாகிய திருதராட்டிரன் மயங்கி வீட்டுமன், பீஷ்மர் முதலியவர்களிடம் இச்சங்க தியைச் சொன்னவுடன் அவர்களும் திகைத்து இளமைப் பருவத்தில்தானே பகை யைப்பொருந்தினார்கள். தங்கள்தான் அவனுக்குப்புத்தி புகட்டவேண்டும் என்றார்கள்.

பின்பு திரதராஷ்டிரன் பாண்டவர்களைப் பார்த்து பிராமணர் எவராலும் புகழப் படுவதும் விஷ்ணு முதலிய தேவர்கள் வரப்பெறுஞ் சிறப்பை யுடையதும், தோரணம்

முதலியன விளங்கும் அழகிய கோபுரங்களையுடையதுமான வாரணாவதம் என்ற பெரிய நகருக்கு புரோசனனென்ற மந்திரியுடன் போய் சுகமாக அரசுபுரியுங்கள் எனவாழ்த்தி அனுப்பினார்.

பாண்டவர்களனைவரும் குந்திதேவியும் நிறைந்த அறிவையுடைய புரோசனனும் வாரணாவதம் போய்ச்சேர்ந்தார்கள். அப்போது ஜனங்கள் குவியலாய் எதிர்கொண்டு மரியாதை செய்தார்கள். சகல வாத்தியங்களும் முழங்கின; பாண்டவர்கள் இங்கு மந்திரி புரோசனன் சொற்படி அரசுபுரிந்து பூமிதேவி உடம்பு களிப்படைய சிறந்திருந்தார்கள்.

அப்பொழுது துரியோதனுடைய துற்புத்தியினால் புரோசனன் மெழுகு மாளிகையொன்று கட்டுவிக்க ஏற்பாடு செய்யவே வேலைக்காரர்கள் வேலைகளைச் சரியாய்செய்து முடித்தார்கள். மெழுகுமாளிகையோ இராஜாக்கள் வசிக்கக்கூடிய அழகான அரண்மனைபோல் தோன்றிற்று. இச்சங்கதி பாண்டவர்களுக்கும் சந்தேகமாகத் தோன்றவே புரோசனனை நம்பாமல் ஜாக்கிரதையாகவே யிருந்தார்கள்.

அப்போது சிற்பநூலில் சிறந்த ஒரு தச்சன் வீமனை மிகத்தனியிடத்திற் கண்டு வணங்கி, மகாராஜாவே! தருமமே வடிவாகிய விதுரராசர் துரியோதனாதிகள் பாண்டவர்களைக் கொல்ல ஏற்பாடு செய்துகொண்டிருப்ப துண்மைதானா வென்றார். மகாராஜாவே! அது உண்மைதான் என்றேன். அவர் உங்களைத் தப்புவிக்க ஏற்பாடு செய்யச் சொன்னார். நான் அப்படிச் செய்கிறேன் என்று சொல்லி உத்திரவு பெற்றுவந்தேன். அங்கு சென்று மாளிகையைக் கட்டி ஒரு மண்டபத்தின் வழியாக வெகு தூரமுள்ள காட்டிற்குச் செல்லும்படியாய் ஒருசுரங்கம் செய்திருக்கிறேன் என்றும் சொன்னேன்.

ஒருவரும் அறியாத உபாயத்தினால் அம்மண்டபத்தின் கீழ் சுரங்கம் செய்திருக்கிறேன். இம்மண்டபத்தின் மத்தியில் ஒரு தூணிருக்கிறது, இதை நீ தள்ளினால் ஒரு சுரங்கம் தென்படும்; இதன் வழி சென்றால் இடும்பவனம்போகலாம் என்று சொல்லிய பின்பு வீமனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு சென்றான். வீமன் இத்தச்சன் விடைபெற்றுச் சென்ற உடன் பயமின்றி எப்போது இந்தமாளிகை அக்கினிக்கு இரையாகுமோவென எண்ணிக்கொண்டிருக்கையில் ஒரு நாள் புரோசனன் தருமனைப் பார்த்து மகாராஜாவே! ஏதாவது கட்டளையிட வேண்டியிருந்தால் இடுங்களென்று கேட்டான். தருமன் ஓ புரோசனா! நாம் இங்கு வந்ததுமுதல் நகரம் முழுமையும் பார்த்தோமேயன்றி காட்டைப்பார்க்கவில்லை; ஆகையால் வனத்திற்குச் சென்று வேட்டையாடலாம் எனபதிலுரைத்தான். உடனே யாவரும் வனத்திற்குச் சென்று வேட்டையாடி களைத்து அரண்மனை வந்து சேர்ந்து போஜனமுண்டு நித்திரைசெய்ய பள்ளியறைக்குச் சென்றார்கள். வீமனோ நித்திரை செய்யாமல் கண்விழித்துக்கொண்டு யாவரும் நித்திரை செய்வதைக்கண்டு மெதுவாகதானே ஒரு மூலையில் நெருப்பை வைத்துவிட்டு தனது தாயாரை முதுகிலும், தருமனை ஒரு புஜத்திலும் அர்ச்சுனனையும் இரண்டு தம்பிமார்களை இரண்டு கையிலும் ஏந்திக்கொண்டு மண்டபத்திற்கு வந்து நடுவிலுள்ள தூணைத்தள்ளி பாறையை எடுத்துவிட்டு சுரங்கத்தின் வழியாகச் சென்று இடும்ப வனம் வந்தான். இங்கு தனது தாயார் முதலியவர்களை மெதுவாக படுக்கவைத்து மிருகஜெந்துக்கள் அதிகமாகையால் தான் நித்திரைசெய்யாமல் காவலிருந்தான்.

நிற்க, வீமன்வைத்த அக்கினி குபீரென்று தணல் அதிகரித்தெழும்பி இடியிடித்தாற்போலப் பேரொலி யுண்டாக நகைத்து யாவற்றையும் எரித்தது. அவ்வூர் ஜனங்கள் காலையில் எழுந்து மாளிகை எரிந்திருப்பதைக் கண்டு மிக வருந்தினார்கள், பாண்டவர்கள் வெந்து நீறாகிவிட்டாரே இனி நாமென்ன செய்யப்போகிறோம் என அலறினார்கள்; உடனே ஹஸ்தினாபுரிக்கு இச்சங்கதியைத் தெரியப்படுத்தினார்கள். அங்குள்ளவர்கள் இதைக்கேட்டதும் மிக விசனப்பட்டார்கள். விதுரர் மூர்ச்சையடைந்து கீழே விழுந்துவிட்டார்; பின்பு விதுரர்மனதை தைரியப்படுத்திக்கொண்டு யாவரையும் இட்டுக்கொண்டு வாரணாவதம் வந்து சேர்ந்து அரக்கு மாளிகை எரிந்ததை சோதித்துப்பார்க்கும்பொழுது பாண்டவர்களைக் கபடமாய்க் கொல்லவந்திருந்த ஐந்து வேடர் எலும்பும் அவ்வேடர்களின் தாயெலும்பும் தோன்றிற்று. இவைகளைக்கண்டு அவர்கள் நிச்சயமாய் இறந்திருக்கவேண்டுமென்று நினைத்து புலம்பினார்கள்.



பின்பு இவர்களுக்குச் செய்யவேண்டிய உத்திரக்கிரியை முதலியவைகளைச்செய்து ஹஸ்தினாபுரம் சென்றார்கள். கெட்ட எண்ணமுள்ள துரியோதனன் மிகச்சந்தோஷத்துடன் இராஜியத்தை ஆண்டுவந்தான்.

## இடும்ப வனவாசம்.

நிற்க பாண்டவர்கள் இடும்பன் என்ற ராக்ஷசன் வசிக்கும்படியான வனத்தில் நித்திரை செய்துகொண்டிருக்கும் பொழுது இடும்பன் மனிதர் களிருப்பதை யறிந்து தனது தங்கையாகிய இடும்பியை அனுப்பி அவர்களைக் கொன்று விட்டுவாவென்று சொன்னான். இவள் உடனே சென்ற பீமனைக்கண்டு மிக மோகங்கொண்டு தன்னை விவாகம் செய்துக் கொள்ளும்படி கேட்டாள். பீமன் மறுத்தான். இதற்குள் தன் தங்கை இன்னும் வராததைக் கண்ட இடும்பன் புறப்பட்டு வந்து பீமனைப் பார்த்து அடே நீ யாரடா என் தங்கையை யிச்சிப்பதுபோல் காண்கிறது. வாடா என்னுடன் யுத்தத்திற்கு இதோ உங்கள் எல்லோரையும் கொன்று புசிக்கிறேன் என உரக்கக்கூவினான். பீமன் மிகக் கோபங் கொண்டு அவனுடன் சண்டைசெய்யச் சென்று வெகுநேரம் சண்டை செய்த பின் இவனைச் சீக்கிரம் கொல்லவேண்டுமென்று தீர்மானித்து பலமாக ஒரு குத்து குத்தினான். இடும்பன் கீழே விழுந்து இறந்தான். இடும்பி உடனே இராக்ஷசரூபத்தையொழித்து அழகுள்ள ஸ்திரீரூபங்கொண்டு பீமனைக்கெஞ்சி தன்னை விவாகம் செய்துகொள்ளும்படி கேட்டுக் கொண்டாள். பீமன் பலதடவை மறுத்தான். இதனைக்கண்ட குந்திதேவியார் அப்பாமகனே! இப்படி நீ மறுத்து உரைப்பது கடன் அன்று, ஆகையால் நீ இப்பெண்ணை விவாகம் செய்துகொள் என்றாள். உடனே பீமன் தனது மாதாவாக்கியத்திற்கு ஹானி வாராவண்ணம் அவளை மணம் புரிந்து சுகமாகவிருந்தான்; இவர்கள் அங்கு ஒருவருடம் வேட்டையாடி ஜீவனம் செய்து கொண்டிருந்தார்கள். இடும்பிக்கு ஒரு புத்திரன் ஜனித்தான். அதற்குக் கடோத்கசன் எனப் பெயரிடப்பட்டது. பின்பு வேதவியாசர் அங்கு வந்து இவர்களைப் பார்த்து நீங்கள் இங்கு இனி இருக்கவேண்டாம். பிராமணவேடம் பூண்டு மகிழ்ச்சியோடு வேத்திரகீயம் என்னும் நகரத்தை யடையுங்கள் எனச் சொல்லிவிட்டுப்போய் விட்டார்; இவர்கள் இடும்பியையும் அவள் குழந்தையையும் கண்டு மிகச் சந்தோஷப்பட்டு நாங்கள் வேத்திரகீயம் போகிறோம் எனச் சொன்னார்கள். அவள் அவ்விதமே செய்யுங்கள் என்னை எப்பொழுது நினைத்தபோதிலும்நான் வந்து சேருகிறேன் எனப்பதிலுரைத்து அவர்களுக்கு நல்லமார்க்கத்தைக் காட்டி அனுப்பினாள்.

## வேத்திரகீயம் - பகாசுரன்வதம்.

இவர்கள் வேத்திரகீயம் போய் அங்கொரு பிராமணர்வீட்டில் வசித்துக்கொண்டிருந்தார்கள், இவர்கள் பிக்ஷையெடுத்துக் கொண்டுவந்து தினம் தங்களது அருமைத்

தாயாருக்கு அன்ன மிட்டு தாங்களும் புசித்து சுகமாக வாழ்ந்து வந்தார்கள். இப்படியிருக்கையில் அவ்வூருக்கருகில் பகாசுரன் என்ற அசுரன் இருந்தான் அவன் மகாகொடியவன். அவனுக்கு வருடத்திற் கொருமுறை அவ்வூரார் ஒரு வண்டிசாதமும் ஒருபிள்ளை, இரண்டு எருமை முதலியவைகளைக் கொண்டுபோய் பலியிடுவது வழக்கம், இவ்வழக்கம் வெகு நாளாக நடந்து வந்தது, இம்முறை மறுநாள் இப்பிராமணரதாகையால் அப்பிராமணர் வீட்டிலுள்ளோர் மிகவருந்திக் கொண்டிருந்தார்கள். இச்சங்கதி குந்திக்குந்தெரிந்தது. குந்தி மிக அன்பாய் அவர்களைக் கேட்டபோது அவர்கள் யாவற்றையும் ஒளிக்காமல் சொன்னார்கள். குந்தி தனது பிள்ளைகளில் ஒருவனாகிய பீமனை அனுப்புகிறேன் பயப்படாதேயுங்கள் எனச்சொல்லி தேற்றினாள். அவர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஏனெனில் விருந்தாளியாக வந்தவர்களை இப்படிச்செய்யச் சொல்லமனமொப்பவில்லை. குந்திதேவியார் அவர்களை சம்மதிக்கும்படி செய்து பீமனை அனுப்பினாள். பீமன் மிகச் சந்தோஷத்துடன் அவைகள் யெல்லாவற்றையும் சித்தம் செய்துகொண்டு பகாசுரன் இருக்குமிடத்திற்குச் சென்றான், அங்கு ஒருநதியிருந்தது. அதன் கரையில் எல்லாவற்றையும் வைத்து எருமையிரண்டையும் அவிழ்த்து துரத்திவிட்டான். இவன் உடனே எல்லா அன்னத்தைப் புசித்துக் கொண்டிருக்கையில் பகாசுரன் ஏன் இன்னும் அன்னம் முதலியவைகள் வரவில்லையென்று மிக கோபாவேசத்துடன் வந்து பீமனைக் கண்டான். கோபம் அதிகரித்தது. உடனே பீமனைக் குத்தினான். இருடா இதோ வருகிறேன் என்றான் பீமன். மறுபடியும் ஒரு விருக்ஷத்தைப் பிடுங்கி அவன்மேல் எறிந்தான். அதை ஜாக்கிரதையாய் தன்மேல் விழாமல் செய்து சீக்கிரத்தில் அன்னத்தைப் புசித்து விட்டு பகாசுரனுடன் கடுஞ் சண்டைசெய்து அவனைக் கடைசியாகக் கொன்றுவிட்டான். பிறகு இவன்பந்துக்களை அழைத்து இனி இவ்வூராருக்கு இவ்விதம் செய்வீராகில் உங்களை இப்பொழுதே கொன்றுவிடுவேன் என சொன்னவுடன் அவர்கள் பயந்து நடுநடுங்கி துஷ்டத்தனம் செய்வதில்லையென வாக்குறுதி கொடுத்தார்கள். பீமன் உற்சாகத்துடன் பிராமணர் வீட்டுக்குவந்து கொண்டிருக்கையில் எருமைகள் ஊருக்குத் திரும்பிவந்ததைக் கண்ட ஊரார்மிக விசனப்பட்டுக் கொண்டு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார்கள். பீமனோ சிங்கத்தைப்போல் கர்ச்சித்துக்கொண்டு பிராமணர் வீட்டுக்கு வந்தான். யாவரும் மிகச் சந்தோஷப்பட்டு என்ன சங்கதி என்று கேட்கவே விஸ்தாரமாக யாவற்றையும் அவர்களுக்குச் சொல்லி இனி உங்களுக்கு அசுரபயமில்லையெனச் சொல்லித் தேற்றினான்; பிராமணர்கள் பீமனுக்கு பல ஆசிகள் கூறி வாழ்த்தினார்கள்.

## புஸ்தகக் குறிப்புகள்.

**தமயந்தி:**—இப்புஸ்தகம் ம-ா-ா-ஸ்ரீ பி. எ. பிரணதார்த்தி சிவனார், பி. எ., அவர்களாலியற்றப்பட்டு சென்னை ம-ா-ா-ஸ்ரீ தி. சுப்பிரமணிய ஐயரவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது நாடக ரூபமாக எளிய நடையில் எழுதப்பட்டிருப்பதுடன் தமயந்தியின் சித்திரப்படம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இது நமது மாதர்களுக்கு மிக அவசியமானதென நம்புகிறோம். மிஸ்டர் சிவனார் தமிழ் புஸ்தகங்கள் எளியநடையில் எழுதுவதில் மிகப்பிரியமுள்ளவர். இதை அனைவரும் வாங்கி வாசிப்பார்களென்று நம்புகிறோம்.



**மரகதவல்லி:**—இது அனந்தபுரம்ஜில்லா கலெக்டர்கச்சேரி குமாஸ்தா பண்ணுருட்டி மிஸ்டர் சி. கோவிந்தசாமி ராஜா அவர்களால் இயற்றப்பட்டது. இக்கதை உண்மையில் நடந்தவாறு எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. இக்கதை அநேகர் நல்லவர்களுடன் சேர்ந்திருப்பது எப்போதும் நலமென்பதைச் செவ்வனே போதிக்கிறது. இதுவும் நமது மாதர்களுக்கு மிக உபயோகமானதென நம்புகிறோம். இதை அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டியதவசியமேயாம்.

**ரகுவம்சம்:**—இது பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ நடேச சாஸ்திரியாரவர்களால் எளிய நடையில் சம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட் டிருக்கிறது. இதில் இப்பொழுது 6 சர்க்கங்கள்தான் அடங்கியுள. மற்றவைபின் பிரசுரிக்கப்படும். இதில் அரசியல், அரண்ணியம், அரசன் மாடுமேய்க்கும் அழகு, காமதேநு அரசனைப் பரிசோதித்தல், சுதக்ஷிணியின் கர்ப்பம், ரகுவின் பிறப்பு, குழந்தை வளர்த்தல், ரகுவின் பட்டாபிஷேகம், ரகுவின் திக்விஜயம், அஜன் பிறப்பு, அஜன் சுயம்வரத்திற்குச் சென்றது, பிராதக்காலத்தில் துயிலெழுப்புதல், இந்துமதிசுயம்வரம் முதலியவைகளடங்கியிருக்கின்றன.

இதிலுள்ள பிரயோகங்கள் வெகு அபூர்வமாயும் யாவரும் வியந்து கூறும்படியாயுமிருக்கின்றன. இதை முதலில் சமஸ்கிருதத்தில் செய்தவர் கவிரத்னங்களில் சிரேஷ்டரான காளிதாஸ மகாகவி. ம-ா-ா-ஸ்ரீ நடேசசாஸ்திரியாரவர்கள் இராமாயணம்-பாலகாண்டம் என்பதை எளிய நடையில் எழுதியிருக்கிறது யாவருக்கும் தெரிந்த விஷயம், அவ்விதமே இதுவும் எழுதப்பட்டிருக்கிறது. இது யாவருக்கும் உபயோகமானதென்றே சொல்லுவோம்.

# NEWS & NOTES.

## சமாசாரக்குறிப்பு.

சீனாதேசத்தில் சிலகிராமங்களில் பன்றிகள் வண்டிகளுக்கு மாடுகளைப் போல் கட்டப்படுகின்றன.

ருஷியாதேசத்தின் அரசருக்கு பட்டாபிஷேகம்நடந்தகாலத்தில் சுமார் 3,000,000 பவுனுக்கு மேல் செலவழிக்கப்பட்டதாம்.

80,000 பூனைகள் கிரேடர் பிரிட்டனி (பிரிட்டிஷ்தேசம்)விருந்து ஏற்றுமதிசெய்யப்படுகின்றதாம். இத்தீவில் சுமார் 7,000,000 பூனைகளிருக்கின்றனவாம்.

நமது மகாராஜா அவர்களுடைய கிரீடம் 7 பவுன்ட் நிறை யுள்ளதாம் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரின் கிரீடம் 3 பவுன்ட், 6 அவுன்ஸ்நிறை யுள்ளதாம்.

---

ஜப்பான் தேசத்தில் ஒவ்வொரு தெருவிலும் சிறியகட்டிடமும் அதில் ஒரு அடுப்பு மிருக்கும், பிரயாணிகள் இங்கு சென்று சொல்ப காசுகொடுத்து விட்டு தாங்களே சமையல்செய்து புசித்து போகவேண்டுமாம்.

---

பெல்ஜியம் என்ற தேசத்தில் பசுமாடுகளுக்கு கடுக்கன்கள் காதுக்குப் போடுகிறார்களாம். ஒவ்வொரு கன்றுக்குட்டிக்கும் 3 மாத மானவுடன் காதில் கடுக்கண் இருக்கவேண்டுமென ஒரு சட்ட மிருக்கிறதாம்.

---

பர்லின் என்றவிடத்தில் பலவித வேடிக்கை செய்யும் ஒரு சர்கஸ் கம்பெனியிருக்கிறது. அக்கம்பனியார் எரும்புகளைச் சண்டைசெய்யவும், கூத்தாடவும், மூட்டைகளைத் தூக்கவும் பழக்கியிருக்கிறார்களாம். இதுவும் அதிசயமே!

---

அல்ஜீரிய என்றவிடத்தில் இரண்டு நதிகள் சேருமிடத்திலுள்ள ஜலம் கருமையான மையாக யிருக்கிறதாம். இதை எழுத உபயோகித்தும் வருகிறார்களாம். ஆபிரிக்கா தேசத்திலுள்ள நதிகளுக்கு ஒவ்வொரு விசேஷ முண்டென சொல்லப்படுகிறது.

---

ஒரு பிரயாணி பேங்காக் என்ற விடத்தில் தங்கியபொழுது ஒருவர் வீட்டில் ஒரு எலி வேகமாகவந்து அவ்வீட்டுக்காரரிடத்தில் வந்ததாம். அவர் அதை எடுத்து கொஞ்சநேரம் தனது கையில் வைத்திருந்து விளையாடியபின்பு கீழே விட்டுவிட்டாராம். அது குதித்துக்கொண்டு அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்ததாம்.

---

ஆபிரிக்காவின் கிழக்குபாகம் ஜர்மானியருக்குச் சேர்ந்தது. இங்குள்ள ஜனங்கள் நாகரீக மற்றவர்களாயிருந்தார்கள். இப்பொழுது நல்ல உடைகளைத்தரித்துக்கொண்டு போஜனத்திற்கு நல்ல சாமான்களாகிய பீங்கான் தட்டுகள்,கிண்ணங்கள் முதலியவைகளை உபயோகிக்கிறார்கள்.மேலும் குடை,கத்தி, கண்ணாடி முதலியவவைகளையும் உபயோகப்படுத்துகிறார்கள். ஸ்திரீகள் ஐரோப்பிய மாதர்கள் தரித்துக்கொள்ளும் உடைகளைத் தரித்துக்கொள்ளுகிறார்களாம். இவர்கள் தையல் வேலை விசேஷமாகச் செய்து வருகிறார்கள்.

Printed at the Ripon Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
28 NOV.1902
MADRAS

290


# மாதர் மனோரஞ்சினி

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. IV — Madras: September 1902. — No. 7.

புத்தகம் ௪. — சென்னப்பட்டணம் 1902 செப்டெம்பர்மீ. — இல. ௭.


## மாயாபுரி விநோதக்கதை.

(134-வது முன்தொடர்ச்சி.)

உடனே அவர்கள் தெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டு, யாதொன்றும் பேசாமல் அவன் பின்னாலேபோய்க் கோட்டைவாசலில் பெரிய சிம்மாசனத்தில் மந்தகாச முகத்தோடு கெம்பீரமா யுட்கார்ந்திருந்த மஹா புருஷனைக் கண்டு வணக்கஞ் செய்து நின்றார்கள். அவன் அரசன்முதலிய நால்வர்களை நோக்கி, நீங்கள் எங்கள் அரசனுடைய அந்தப்புரத்தில் அச்சமில்லாமற் புகுந்தது மன்றி, அங்கிருந்த பஞ்சவர்ணக் கிளிகளைத் திருடிக்கொண்டுபோன தென்னவென்றான். அரசன் சுவாமீ! தாங்கள் கூறிய கிளிகளென்னிடமிருப்பது நிச்சயம்தான். ஆனால் அவைகளை நாங்கள் திருடவில்லை. நானும் என்மனைவியும் ஓர் அற்புதமான அரண்மனைக்குப் போனதாகவும் அங்கே யெங்களுடைய குமாரத்தி யிந்தக் கிளிகளை யெங்களுக்குப் பரிசாக அளித்ததாகவும் கனவுகண்டோம். பிறகு விழித்துப்பார்க்கையில் அக்கிளிகள் எங்களிடமிருந்தன. அதை யெங்களுடைய மந்திரிக்குத் தெரிவித்து வெகு பயத்தோடும் யோசித்துக்கொண்டிருக்கையில் எப்படியோ இந்தச் சிறைச்சாலையிற் கண்டு அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறோம். இதுதான் நடந்த சங்கதி; பிறகு உமது சித்தம் என்று கூறினான். நியாயாதிபதி சிரித்து இதை யார் நம்புவார்கள்? உலகத்தில் நடவாத சங்கதிகளைச் சொல்லுகின்றீர்கள். இது ஒருபோதும் சம்பவியாது. அசம்பாவிதமான இதனை நம்புதற்கு நாங்கள் மூடர்களல்ல. நீரும் அரசனாக இருக்கிறீரே! உமது சந்நிதானத்தில் ஒரு குற்றவாளி இப்படிப் பதில் சொன்னால் நீர் நம்புவீரா என்றான். அரசன் நம்பமாட்டேன் என்றான். நானும் உமது வார்த்தையை நம்பமாட்டேன். உங்கள் நால்வருக்கும் மரணத்தீர்ப்பு விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி நில்லும் என்று சற்றுத் தூரத்தில் நிறுத்திவைத்தபின் துப்புசாமி ஐயனை நோக்கிச் செல்வச்செருக்

கினால் மமதைகொண்டு ஏழைகள்குடியைக் கெடுக்கத் துணிந்த பாவியே!
முன்பின் யோசித்துப் பாராமலும், பாவபுண்ணியங் கருதாமலும உபகாரஞ்
செய்தவர்களுக்கு அபகாரஞ்செய்த அதமனே! எங்கள் அரச குடும்பத்
தாரை நிர்மூலமாக்கக் கருதிய சண்டாளா! உன் கருவங்குலையுங் காலம்
நேர்ந்தது. நீ செய்த துஷ்டத்தனத்துக்குத் தக்க தண்டனை செய்யும் சமை
யம் வாய்ந்தது. இப்பொழுது என்ன சொல்லுகிறாயென்று கேட்க, அவன்
கைகால் நடுங்கி, நாக்குழறச் சுவாமீ! நான் எம்மாத்திரம்? அரசர்களுக்குத்
தீங்குசெய்யத் தக்கவனோ? நான் உமது அரசகுடும்பத்தாரைக் கண்டது
மில்லை கேட்டதுமில்லையே! இது அநியாயமாயிருக்கிறதே யென்றான். நியா
யாதிபதி ஓய்! நீர் அவிநாசி துப்புசாமி ஐயரல்லவா? அந்த அம்மாள் உமது
பத்தினி விசாலாட்சி அல்லவா? நான் உம்மை நன்றாயறிவேனே; நீர் என்னை
யும், எங்கள் அரச குடும்பத்தாரையும் அறியமாட்டேன் என்கிறது சுத்த
பொய்; நீர் வயலூர் அருணாசலம் பிள்ளை அவர்களைச் சிறையாக்க வில்லையா?
இன்னம் மான குடும்பத்தாரைச் சிறையாக்கி அவமானம் பண்ணவில்லையா?
"எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்" என்
கிற பழமொழி உம்மிடத்தில் பலித்தது. சிவசுவாமி ஐயருக்கு நீர் செய்த
தீங்கை நினைத்துப்பாரும். அவிநாசி சுந்தர ஐயருக்குச் செய்ததை யோசித்
துப்பாரும். இப்படிப்பட்ட மஹா பாதகங்களைச்செய்த நீர் தப்புவது அரிது!
என்ன சொல்லுகிறீர் என்றான். துப்புசுவாமி ஐயர் ஒன்றுஞ் சொல்லத்
தோன்றாமல் தலைகுனிந்து சும்மா நின்றான். நியாயாதிபதி ஓய் துப்புசுவாமி
ஐயரே! "தன்வினை தன்னைச் சுடும்" என்ற பழமொழிப்படி நீர் பிறருக்கு
ச்செய்யத்துணிந்த தீமை உமக்கே பலித்தது. நீர் செய்த அக்கிரமத்துக்கு
உம்மைச் சித்திரவதை செய்யவேண்டும். அதை மன்னித்து மரணாக்கினை
விதித்திருக்கிறேன். குற்றவாளிகளாகிய நீங்கள் எல்லாரும் அடுத்த திங்க
ட்கிழமை சாயந்திரம் தூக்குப்போடப்படுவீர்கள்; தெய்வத்தைச் சிந்தித்து
க்கொண்டிருங்கள். என்னை நன்றாய் உற்றுப்பார்த்துத் தெரிந்துகொள்ளும்
என்று சொல்லிக் கிங்கரர்களை நோக்கி, பாவர்களை முன்போலக் கோட்டை
க்குள் விட்டுக் கதவை யடைத்துவையுங்கள். அடுத்த திங்கட்கிழமை சாயந்
திரம் இவ்விடத்தில் ஆறு தூக்குமரங்கள் கொண்டுவந்து நாட்டி யெனக்
குத் தெரிவியுங்களென்று கட்டளையிட்டு எழுந்துபோய் விட்டான். கிங்கர
ர்கள் தங்களுக்கிட்ட கட்டளையை நிறைவேற்றியானபின் அவர்களும் போய்
விட்டார்கள். அரசன் மந்திரிமுதலிய நால்வரும் தங்கள் தலைவிதிக்கு வரு
ந்தி "அன்றெழுதினவன் அழித்தெழுதப்போகிறதில்லை." "வருந்தி யழைத்
தாலும் வாராத வாரா, பொருந்துவன போமினென்றாற் போகா" என்கிற
ஆப்தவாக்கியங்களைச் சிந்தித்து நாமென்ன செய்கிறது? நம்மிடத்தில் குற்ற
மிருப்பதாகத் தோன்றவேயில்லை. ஆதலால் இது பூர்வ கர்மபலன்தான்.
வருவது வரட்டும் என்று மனக்கவலை யொழிந்து தெய்வதியானஞ் செய்து



கொண்டிருந்தார்கள். துப்புசாமி ஐயர் மனைவியை நோக்கி, விசாலாட்சீ!
இதென்ன விந்தை! நியாயாதிபதி சொன்னதைக் கேட்டாயே; நாமவனை
யறியாதிருக்கும்பொழுது அவன் நம்மை நன்றாயறிந்து பேசினான். நாம்
செய்த செய்கை ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டி யிடித்துப் பேசினான்.
இராஜ குடும்பத்தார் மட்டும் இன்னாரென்று தெரியவில்லை. மற்றவையெல்
லாம் சரிதான். நாம் பிறருக்குச் செய்ய நினைத்தகேடு நமக்கே பலித்தது.
மனிதர்கள் எப்பொழுதும் பிறருக்குக் கேடுசெய்ய நினைப்பது நியாயமோ?
மற்ற காரியம்தான். மதங்கொண்டயானை தன் தலையில்தானே மண்போட்
டுக்கொள்வதுபோல நமக்கு நாமே பிராணாபாயந் தேடிக்கொண்டோம்.
"முற்பகல்செய்யின் பிற்பகல் விளையும்" என்ற நீதிவசனம் பழுதுபடா
மல் நம்மிடம் பலித்துவிட்டது. குற்றமற்ற சிவசுவாமி ஐயரவர்களுக்கு நாம்
விளைத்த தீமை நமக்கு மரணக்கனி தந்தது. இனி யதைப்பற்றி நாம் நினைத்
துப் பிரயோசனமில்லை. பெண்ணே! நாம் மறுமைக்கு நல்வழி தேடுவதே
யுசிதம். ஆதலால் இன்றுமுதல் உலகத்தை மறந்து சர்வேசுவரனுடைய
திருவடியைச் சிந்தித்துக்கொண்டிருந்தால் கருணைக்கடலாகியதேவன் நமது
தீவினையை மன்னித்து நற்கதி தருவார் என்று கூறி யிருவரும் மனமொரு
மித்துக் கடவுளடியைக் கனவிலும் மறவாது கருதி யிருந்தார்கள். இவ்வாறு
அரசன்முதலிய அறுவரும் அகப்பற்று புறப்பற்று களைமுற்றுந்துறந்த முனீ
சுவரர்களைப்போலப் பிரபஞ்சவாழ்வைச் சிறிதுங் கருதாமல், ஆசாபாச
முற்றுமொழிந்து சுத்தஸ்படிகம்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற
ஹிருதய தடாகத்தில் மலர்ந்தொளிரும் ஸ்ரீபரமேசுவரனுடைய திவ்யசர
ணம்போருக தரிசனஞ் செய்துகொண்டு, கவலையற்று ஆனந்த பரிபூரிதர்
களாயிருந்தார்கள்.

திங்கள்கிழமை உதயமாயிற்று. யாவரும் நித்திரை தெளிந்தெழுந்து
வழக்கம்போல தங்கள்தங்களுக்குரிய நித்தியகருமானுஷ்டானங்களை முடித்
துக்கொண்டு, ஒன்றாகக்கூடி யோரிடத்திலிருந்து இன்று நாம் சரீரத்தைத்
துறந்து, உலகத்தைவிட்டுப் பரலோகம் போகவேண்டிய தினமாதலால்
எல்லாருந் தேவனைத் தியானிப்போமென்று பலவகையான பாடல்களால்
கடவுளைத் துதித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சில கிங்கரர்க
ளோடு ஒரு மனிதன் வந்து உள்ளே புகுந்து, அவர்களைநோக்கி யின்றைய
தினம் உங்களுக்கிட்ட மரணாக்கினை நிறைவேண்டியதாகையால் உங்களுக்
குப் பிரியமானதைச் சொல்லுங்களென்றான். அரசன் முகமலர்ச்சியோடு
ஐயா! எங்களுக்குச் சகல ஆடையும் ஒழிந்தது. உலகத்தைத் துறந்துபோக
வேண்டியகாலத்தை மனமகிழ்ச்சியோடும் எதிர்பார்த்திருக்கிறோம் என்
றான். வந்தவன் துப்புசுவாமி ஐயனை நோக்கி ஐயா! செல்வச்செருக்கினாலே
செய்வதும் தவிர்வது முணராமல் மதம்கொண்ட யானையைப்போல இறு
மாந்து நிரபராதிகளாகிய எங்களை சிறைச்சாலையிலடைத்துச் சிரசாக்கினை

செய்விக்கத் தீர்மானித்திருந்த உமது கதி யிப்பொழுது என்னமாயிருக்கி
றது என்று நன்றாய் யோசித்துப்பாரும். நீர் இறுமாந்திருந்தகாலத்தில் அர
சனுடைய காவற்சேவர்கள் வசத்தில் ஒப்புவித்துச் சிறையி லடைத்துவைத்
துக் கண்குளிர யாரைப்பார்த்துப் பரிகாசம்செய்து சிரித்துக்கொண்டிருந்
தீரோ அந்த அவிநாசிச் சுந்தர ஐயர் நான்தான். காலம் எப்படி மாறியது
பார்த்தீரோ? என்னை மரணத்துக்குள்ளாக்கிக் கண்களிக்கப் பார்க்கவேண்
டுமென்றிருந்த உமக்கு எமது அரசனால் விதிக்கப்பட்ட மரணத்தீர்ப்பை
நானே நேரில் நிறைவேற்றி வைக்கும்படி வந்திருக்கிறேன். "கோபுரந்தா
ழ்ந்து குப்பையுயர்ந்தது" என்ற பழமொழிபோலச் சிறுமையடைந்திருந்த
சிவசுவாமி ஐயரவர்களை, அவரால் பெருமையடைந்திருந்த நீர் என்னபாடு
படுத்தினீர்? செல்வமும், வாழ்வும், யாக்கையும், நிலையற்றதென்று சிந்தித்து
அடங்கியிராமல் ஆகாசமும் கீழ்ப்படத்தக்க கெருவமுடையவராய்க் குற்ற
மற்றவரான புண்ணியாத்துமாக்களுக்குச் செய்ய நினைத்த தீமை இப்பொ
ழுது உம்மைத் தலைகுனியச்செய்து உமது பிடரியின்மேல் ஏறிக்கொண்டு
எமலோகத்துக்குச் செலுத்திக்கொண்டுபோகக் காத்திருக்கிறது. "ஒன்றை
நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும், அன்றியது வரினும் வந்தெய்தும்,
ஒன்றை நினையாதமுன்வந்து நிற்பினு நிற்கும், எனையாளுமீசன் செயல்"
என்கிற மூதுரை உம்மிடத்தில் பலித்தது பார்த்தீரா? எப்பொழுதும் "தரு
மம் வெல்லும் அதருமம் கொல்லும்" என்கிற அமிர்தவாக்கை நினைந்து
அடங்கியிருப்பவரே மேன்மை பெறுவார். அதுவன்றி மதத்தினாலே நன்
மைதீமைகளைக் கவனியாமல் துள்ளுக்காளைபோலத் திரிபவர்கள் துன்ப
த்தை யடைவார்கள் என்பதை யிப்பொழுதாவது தெரிந்துகொள்ளும்.
இப்பொழுது என்கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற உம்மை நான் எப்
படி வேண்டுமோ அப்படிக்கெல்லாம் நடத்திச் சித்திரவதை செய்யலாம்;
ஆனாலும் தெய்வத்துக்கும், பாபத்துக்கும் பயந்து அப்படிச் செய்யவில்லை,
என்று கூறிப் பின் கிங்கரர்களை நோக்கிக் குறித்தவிடத்தில் தூக்குமரங்
களை நாட்டிச் செவ்வானந்தோன்றும் மாலைப்பொழுதில் இவர்களை அங்கே
கொண்டுவந்து தூக்குமரத்தி லேற்றிவைத்துவிட்டு எனக்குவந்து தெரிவி
யுங்கள். நான்வந்து பின் அரசாக்கினையை நிறைவேற்றலாம் என்றி கூறிப்
போய்விட்டார். பின் துப்புசுவாமி ஐயர் மனைவியை நோக்கிப் பெண்ணே!
பார்த்தாயா; நமது காலின்கீழொதுங்கிப்பிழைத்த சுந்தரம் இப்பொழுது
நம்மைச் சிரசாக்கினைசெய்யப்போகிறான். இது சிவசுவாமி ஐயர் அவர்களு
க்கு நாம் செய்த தீமையின் பயனே யன்றி வேறல்ல. இனிச் சிந்திப்பதில்
பயனில்லை. காலம் கடந்துபோயிற்று என்று கூறிச் சும்மாவிருந்தான்.
பிறகு மாலைப்பொழுது வந்தது. கொலையாளிகள் வந்து அந்த ஆறுபேரை
யும் அழைத்துக்கொண்டுபோய்த் தூக்குமரத்திலேற்றித் தூக்குவாங்கச்
சித்தம் செய்துவிட்டுச் சுந்தர ஐயரவர்களுக்குத் தெரிவிக்க அவர்போய்



ஜகதீசனுக்குச் சமாசாரந் தெரிவித்தார். அவன் நான் மேன்மாடியில் வந்தி
ருக்கிறேன். நான் ஜாடைகாட்டும்பொழுது பலகையைத் தட்டிவிடுமென்று
உத்தரவளித்து அனுப்பிவிட்டான்.

பிறகு தன் மனைவியிடம் போய் மங்களாம்பா! இன்றைக்கோர் விநோத
காட்சி நடக்கப்போகிறது. நீயும்வா பார்ப்போம் என்றான். மங்களாம்பாள்
பிராணநாதா! அதென்ன வேடிக்கையென, பெண்ணே! மற்றொன்று மில்லை;
நான் அவிநாசிக்கு வந்திருந்தபோது என்னை அவமானம் பண்ணினவர்களைத்
தண்டிக்கிற காட்சியென்றான். மங்களாம்பாள் என் தாயும் தந்தையும் வந்திருக்
கிறார்களாவென்று ஆவலோடுகேட்டாள். அவள் தன் மாதா பிதாவிடத்தில்
வைத்திருக்கும் வாஞ்சையையும், அதை இதுவரைக்கும் வெளிக்குக் காட்
டாமலிருந்த புத்திசாலித் தனத்தையும் நோக்கி மகிழ்ந்து பெண்ணே! ஆம்
சீக்கிரம் வா என்று கையைப் பிடித்துக்கொண்டு மேன்மாடிக்குப்போய்
என் கண்ணே! அதோ பாரென்று காட்டினான். அது இன்னதென்றறியாத
மங்களாம்பாள் இது என்னவென்றாள். என்னையும், என் மாதாபிதாவையும்
அவமானம் பண்ணினதுமல்லாமல், என் தாய்தந்தையரைச் சிறைச்சாலையில்
வைத்து மரணதண்டனை விதிக்கச்செய்த உன் பிதாவும், மாதாவும் அதோ
தூக்குமரத்திலேறி நிற்கிறார்கள். அவர்களுடைய இரண்டு பக்கத்திலும்
சௌந்தரவல்லியின் தாய்தந்தையும், மந்திரியும் அவன் மனைவியும் இருக்கிறா
ர்கள். அவர்களை யிப்பொழுது தூக்குப்போடப்போகிறோம் என்றான். தன்
மாதாபிதாவின் மரண சமாசாரம் கேட்டவுடனே மங்களாம்பாளுக்கு முகம்
வெளுத்து வேறுபட்டது; சிந்தைகலங்கியது; சரீரம் பதறிக்கை கால் நடுங்
கியன; வாயில் பேச்சு வரவில்லை. அவர்கள் செய்த அக்கிரமத்தை நினைத்து,
ஒன்றுஞ் சொல்வதற் கிடமில்லாமல் கொஞ்சநேரம் சும்மாவிருந்து, பிறகு
பிராணநாதா! நினைக்கப்படாத மஹாபாதகத்தைசெய்தஅந்தப் பாவிகளுக்கு
இதைத் தவிர வேறு தண்டனை கிடையாதோ? என்று சொல்லிக் கண்களி
னின்றும் முத்துப்போல் நீர்த்துளி சிதறச் சித்திரப்பாவையைப்போல மெ
ய்ம்மறந்து அசைவற்று நின்று விட்டாள். உடனே ஜகதீசன் மனம் வருந்தி
அவளை யிருகைகளாலும் தழுவியெடுத்துத் தன்மடிமீதில் வைத்துக்கொ
ண்டு கண்ணீர் துடைத்துக் களைதெளிவித்துக் கொஞ்சிமுத்தமிட்டு, ஆ!
என்னரும்பெருஞ் செல்வமே! பசுவின் கண்ணெதிரில் கன்றுக்குட்டியின்
கழுத்தையறுப்பதுபோல் உன் கண்ணெதிரில் உன் தாய்தந்தையரைக் கொ
லைசெய்வேனோ? அப்படிச்செய்தால் உன் மனம் எப்படி வருந்துமென்பதை
நான் அறியேனோ? அவர்களைக் கொன்றுவிட்டதனால் நமக்கு வரும் பெருமை
யென்ன? கடவுள் நமக்கு அருளிய மகிமையைக் கண்களாற் பார்த்துக்கொ
ண்டிருப்பதே அவர்களுக்குப் பெருந்தண்டனையாவதன்றி வேறில்லை. நீ
பயப்படவேண்டாம். இன்னம் கொஞ்சநேரத்தில் அவர்களெல்லாரும் இங்
கேவந்து சேர்வார்கள். சிலநாள் அவர்களைப் பிரமிக்கச்செய்து பிறகு சுக

வாழ்வில் வைப்போமென்றான். அது கேட்டவுடன் மங்களாம்பாளுக்குக் கரைகடந்த ஆனந்தம்பொங்கித் தன்னை யறியாத மகிழ்ச்சி யடைந்து நாயகனது தோளில் சாய்ந்துகொண்டு பிராணநாதா! மங்கையர்க்குக் கணவனை யன்றி வேறு தெய்வமில்லையாகையால் என்னுள்ளக்கருத் துதவுதலும் உமது கடமையாம். உமது இஷ்டம்போல நடத்தியருளுமென்று அமிர்தம் போல மழலைமொழிகளைப்பொழிந்து அவனுடைய மனதுக்கானந்த மளித்தாள். அங்கே சுந்தர ஐயர் அவர்கள் குப்புசுவாமி ஐயர் முதலியோரை நோக்கி நீங்கள் உங்களுடைய இஷ்டதெய்வங்களைத் தியானித்துக்கொள்ளுங்களென்று சொல்லி ஜகதீசனைப்பார்க்க அவன் காட்டிய ஜாடையைக்கண்டு உடனே தூக்குப்பலகையைத் தட்டிவிட்டான். உடனே ஜகதீசன் மனைவியை யழைத்துப் பெண்ணே! நாம் அந்தப்புரம்போய் விடுவோம். உன் தந்தை முதலியோர் இங்கேவந்து விட்டார்கள். அவர்களை மயங்கவைத்துப் பின்பு நாம் வெளிப்படுவோம் என்று அவள் கையைப் பிடித்தழைத்துக்கொண்டு போய்விட்டான். அவளுடைய பிதாமுதலானவர்கள் மரணமுண்டாமென்கிற பயத்தினால் மதிமயங்கிச் சிறிதுநேரம் ஒன்றுமறியாமற் கிடந்தார்கள். பிறகு அரசனும் மந்திரியும் களைதெளிந்து ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து வாய்பேசாமலிருந்தார்கள். முதலில் அரசன் வாய்திறந்து மந்திரீ! நாமிப்பொழுது எங்கே வந்திருக்கிறோம்; இது எவ்வுலகமோ வென்று கேட்டான். சுவாமீ! தேவரீர் தர்மமாக இராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்த காரணத்தினால் இது புண்ணியாத்மாக்களடையத்தக்க ஓர் போக பூமியாகத் தானிருக்கவேண்டும். சற்றுப் பொறுத்து நிதானித்துப் பார்ப்போம். எனக்கு இன்னம் மதிமயக்க மொழியவில்லை யென்று சும்மாவிருந்தான். பின்னர் மற்றவரும் ஒருவர்பின் ஒருவராகக் களைதெளிந்து கண்விழித்துப் பார்த்து யாவருமொருங்கே கூடி யரசனைச் சூழ்ந்து உட்கார்ந்தார்கள்.

(இன்னும் வரும்.) தேவதஞ்சரியம்மாள்.

# திரௌபதி சுயம்வரம்.

(முன் தொடர்ச்சி.)

பஞ்சபாண்டவர்கள் அரக்குமாளிகையில் இறந்துவிட்டாரென்கிற சங்கதியை அநேகரால் கேள்விப்பட்ட பாஞ்சாலதேசத்தரசன் மிகவருந்தி ஐயோ! துரோணாசாரியரைக் கொல்ல ஒரு புத்திரனையும் குரு வார்த்தையை சிரசின்மேல் வைத்துதன்னைக் கட்டிக்கொண்டுபோன அர்ச்சுனனுக்கிசைந்த மனைவியாக யிருக்க



ஒரு புத்திரியையும் வரபிரசாதத்தால் பெற்றும் பிரயோஜனமில்லாமற்போ
யிற்றே; எனது அருமைப் புத்திரியோ மங்கைப்பருவ மடைந்திருக்கிறாள்.
அவளைக் கன்னியாமடத்தில்வைத்து எவ்வாறுபார்ப்பேன்? அல்லது வேறெ
வருக்காவது மணம் புரியலாமென்றால் என் சபதம் வீணாகிவிடும். மேலும்
ஒருவருக்கு நியமித்தபெண்ணை மற்றொருவனுக்கு மணம்புரிவித்தால் தகாது
அப்படிச்செய்தால் அபவாதம் நேரிடுமே; இதற்கென்ன செய்வேனென்று
மிக வருத்தப்பட்டுக்கொண்டு மந்திரியிடத்தில் யாவற்றையும் சொன்னான்.
மந்திரி மகாராஜாவே! உங்கள் வார்த்தைக்கு கழிவுவராது. பாண்டவர்கள்
ஐவர்களும் தெய்வானுகூலத்தினால் ஜனித்தவர்களென்று பெரியோர்களால்
கேள்விப்பட்டிருக்கிறோம். தங்கள் அருமைப்புத்திரியும் வரப்பிரசாதத்தால்
பிறந்திருக்கிறாள், ஆனதுபற்றி அவர்கள் இறந்திருக்கமாட்டார்கள், தங்கள்
பயப்படவேண்டாம் எனதேற்றினான். பின்புசோதிடர்களையும் வரவழைத்து
பாண்டவர்கள் உயிருட னிருக்கிறார்களாவென கேட்டபோது அவர்கள்
சாஸ்திரங்களையெல்லாம் நன்றாகப் பரிசோதித்துப்பார்த்து பாண்டவர்கள்
உயிருடன்தானிருக்கிறார்களென உறுதியாய்ச் சொன்னார்கள். அரசன் மகிழ்
ந்து தமது குலகுருவாகிய உலோகமஹாமுனியை முகூர்த்ததினம் ஏற்படுத்
தும்படி சொன்னார். மேலும் சித்திரக்காரரைக் கூப்பிட்டு தமது புத்திரி
யைப்போல் படமெழுதி வாருங்களென்று கட்டளையிட்டான். பாஞ்சாலன்
உத்திரவுப்பிரகாரம் மணவோலையையும் சித்திரப்படத்தையும் தூதர்கள் எடு
த்துக்கொண்டு அருணம், அவந்தி, ஆந்திரவம், இலாடம், யவனம், ஒட்டி
யம், கருசம், கலிங்கம், கன்னடம், காஸ்மீரம், காந்தாரம், காம்போஜம்,
திராவிடம், குரு, குடகம், குந்தனம், குவிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேர
ளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சவ்வீரம், சாலவம்; சிங்கநம்,
சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்
கணம், நிடதம், நேபாளம், பப்பரம், பல்லவம்,பாண்டியம, புலிந்தம், போடம்,
மகதம், மச்சம்,மராடம், மலையாளம்,மானவம், வங்கம்; வங்காளம்,விதர்ப்பம்
முதலிய தேசத்து மன்னர்களுக்கும் குருகுல மன்னர்களுக்கும் பிராமணோ
த்தமர்களுக்கும் தெரிவித்துவிட்டு திரும்பி வந்துவிட்டார்கள். நிற்க வியாச
முனிவர் பாண்டவர்களிடம் சென்று நீங்கள் இன்றைக்கு இரவும் தங்காது
போய் பாஞ்சாலதேசத்தை அடையுங்கள், பாஞ்சாலிக்கு நாளையதினம்விவா
கம் நடக்கப்போகிறது அவசியம் நீங்கள் போகவேண்டும் என சொல்லி
விட்டு சென்றார். பாண்டவர்களும் அவர் சொல்லியபடி அன்று இராத்திரி
யிலே புறப்பட்டு கங்காநதியின் கரையின் சமீபத்தில் வந்தார்கள். அங்கு
அந்தரவாசிகளாகிய தேவர், முனிவர், கிம்புருடர், காந்தருவர், சித்தர வித்
தியாதரர் என்னும் தேவவகுப்பில் காந்தருவகுலத்தில் உதித்தவனாகியும்
அந்தரலோக வாசியாகியுமிருந்து சொர்க்கமத்திய பாதாளமென்கிற மூன்று
உலகங்களிலும் வெற்றியால் தன்பெயரை நாட்டி விற்பிடித்தவர்களை யெல்

லாம் தன் வலிமையினால் ஒரு திரணம்ரயெண்ணி யாவரும் புகழ வெற்றி பெற்றிருக்கும் சித்திராங்கதனென்பவன் தானும் தன் தேவிமாரும் ஜலக்கிரீடை செய்ய கங்காநதிக்கரையில் ஒரு சிங்காரவனம் அமைத்து கங்கைக்கரையையும் வளைத்து வேலியிட்டு தினம் வந்து ஜலக்கிரீடை செய்தபின் தன்னூருக்குப் போய்விடுவான்; இந்தவனத்தின் வழியாகப் பாண்டவர்கள்சென்று இந்த வேலியைக் கண்டு இதைக்கடந்துபோனால் தருமத்துக்கு விரோதம் வேலியைத் தாண்டாமல் மற்றவழியாகச் சென்றால் வெகுநேரம் செல்லும். மேலும் கங்கைக்கரைப் பொதுவானது. ஆகையால் இதைத் தாண்டுவதில் குற்றமில்லையென தீர்மானித்து தாண்டினான் மற்றவர்களும் பின்சென்றார்கள். சித்திராங்கதன் அப்பொழுது தனது தேவிமார்களுடன் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தமையால் மிகசினங்கொண்டு இவர்களைப் பலவாறாகத் திட்டி யுத்தத்திற்குக் கூப்பிடவே வெகுதீரனான அர்ச்சுனன் சித்திராங்கதனுடன் சண்டை செய்து அவனைக் கீழே தள்ளிவிட்டான்; அப்பொழுது அவன் மூர்ச்சையடைந்தான்; உடனே அர்ச்சுனன் அவன் சிகையைப்பற்றி இழுத்துவந்து தன் தமயனாகிய தருமன் பாதத்திற்போட்டான். சித்திராங்கதன் மனைவியார் இதையறிந்து ஓடிவந்து குந்திதேவிகாலில் விழுந்து மங்கலியப்பிச்சை கேட்டார்கள். குந்தி அப்போது தருமன் முகத்தைப் பார்த்தாள் தருமன் இதையுணர்ந்து அப்பாதம்பி! இவன் தெரியாத்தனமாய் செய்த குற்றத்தை மன்னித்துவிட்டு இவனை சுகப்படச் செய்யென சொன்னார். உடனே அர்ச்சுனன் தக்கசிகிச்சைசெய்து சொஸ்தப்படுத்தினான். சித்திராங்கதன் வெகு சந்தோஷப்பட்டு இவர்கள் பாண்டவர்களாய்த்தானிருக்க வேண்டும், அர்ச்சுனனைத் தவிர மற்றவர்கள் என்னைஜயிக்க முடியாது ஐயா! நீங்கள் யார் தயவுசெய்து சொல்லுங்கள் என்று கேட்டான்; அவர்களும் உண்மையைத் தெரிவித்தார்கள். அவன் மிகமகிழ்ந்து அவர்களுக்கு சுருக்கமான வழியைக் காண்பித்து பல உபசாரங்கள் செய்து ஒருகுருவை நியமித்துக்கொண்டு போவது நலமென்றும் சொல்லி விடைபெற்றுச் சென்றான். பாண்டவர்கள் அவன் காட்டிய வழியே சென்றபோது உற்கயமென்கிற நதி தோன்றவே அந்நதியின்நாற்றிசையும் தேடித் தவுமியர் ஆசிரமத்தைக்கண்டு அவரை வணங்கி தங்கள் வரலாற்றை விஸ்தாரமாக உரைத்து தங்களுக்கு அவர் குருவாகயிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இதற்கு அவர் மிகமகிழ்ந்து உடனே இவர்களுடன் அவரும் பிரயாணப்பட்டார். இவர்கள் சூரிய உதயமாக இரண்டுநாழிகை யிருக்கும்போது பாஞ்சால தேசம்போய் அங்குள்ள விசித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு குயவன் இவர்களைப் பார்த்து, பிராமணோத்தமர்களே நமஸ்காரம் செய்கிறேன், என்வீட்டில் தங்கள் தங்கியிருக்கலாமென்னச்சொன்னான். இதற்கு அவர்கள் இசைந்து அவன் வீட்டிற்குப்போய் வீட்டை சுத்திசெய்து அங்கு தங்கினார்கள். பின்பு குந்திதேவியை அங்கிருக்கச் சொல்லிவிட்டு தவுமியரு



டன் இராஜசபை வந்து பிராமணருக்கென்று பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருக்கிற சிங்காரமண்டபத்தில் மற்ற பிராமணர்களோடு கலந்திருந்தார்கள்.

## திரௌபதியின் விவாகம்.

நிற்க, திரௌபதியோ தனது பிரியமுள்ள தந்தையார் துரோணாசாரியரை தன் சபையிற் பல அவமானப்படுத்தியதையும், அவர் அர்ச்சுனனால் துருபதனைப் பிடித்துவந்து தன் சபையில் பங்கப்படுத்தியதையும், பின்பு துருபதன் துரோணாசாரியரைக் கொல்ல ஒரு புத்திரனையும், தன்னைவெற்றி கொண்ட மகா பராக்கிரமசாலியான அர்ச்சுனனுக்கு ஒரு புத்திரியையும் பெறுகிறேனென்று சபதம் செய்ததையும் அவ்விதமே பெரியோர்களைக் கொண்டு மக்களைப் பெற்றதையும் தாதியரால் திரௌபதி கேள்விப்பட்டு உள்ளம்பூரித்து அர்ச்சுனனுடைய வல்லமை, அழகு, நற்குணமுதலியவற்றை யுமறிந்துகொண்டாள். பின்பு அவர்கள் அரக்குமாளிகையில் இறந்துவிட்டாரென்பதைக் கேள்விப்பட்டபோது எண்ணாத எண்ணமெலாம் எண்ணி எண்ணி விசனப்பட்டு ஐயோ நமது கதி இவ்விதமாகுமோவென பலவா ருக விசனமுற்று வருந்திக்கொண்டே யிருந்தாள். பின்பு தனது தந்தையார் உலோகமாமுனி அவர்களால் பாண்டவர்கள் உயிருடனிருக்கிறார்களென்ற சங்கதியை அறிந்தது இவளுக்குத் தெரிந்தவுடன் கொஞ்சம் சந்தோஷப் பட்டு நான் எப்பொழுது அவர்களைப் பார்க்கப்போகிறேன்? அவர்களை அடைய எனக்குபாக்கியமிருக்குமோ? வென எண்ணி அன்ன ஆகாரமின்றி இதே சிந்தனையாகவிருந்தாள் திரௌபதை என்ற மகா பதிவிரதை. பின்பு தன் தந்தையார் சுயம்வரம் ஏற்படுத்தி லக்ஷயக் குறியை வைத்து ஐம்பத் தாறு தேசத்தரசர்களுக்கும் மணவோலை அனுப்பியதைக்கேள்வியுற்று அர்ச் சுனன் வருவானென்ற எண்ணமுடையவளா யிருந்தாள். மேலும் அந்த மணவோலை அவர்களுக்குச் சேருமோ சேராதோ என்கிற எண்ணமும் அவள் மனதில் உதித்தது; எப்படி உருக்குமணி தேவியார் ஸ்ரீ கண்ணபிரானுக்கு கடிதம் எழுதியபோது அது அவருக்கு கிடைத்திருக்குமோ அல்லது அது கிடைத்திருந்தபோதிலும் லக்ஷியம்செய்யாமல் எங்கு வராமலிருப் பாரோவென பலவாறாக எண்ணியமாதிரி நமது பதிவிரதா சிரோன்மணியாகிய திரௌபதியும் எண்ணினாள். இவ்விதம் இவள் வருந்திக்கொண்டிருக் கையில் துருபதமகாராஜன் தாதிகளைவரவழைத்து எனதுசெல்வக்குமாரத்தியைஸ்நானஞ்செய்வித்து, அலங்கரித்து அழைத்துவாருங்களென்று கட்டளையிட்டார். இவர்கள் திரௌபதியினிடம் சென்று உமக்கு ஸ்நானம் செய்வித்து அலங்கரித்துக்கொண்டு சபைக்கு இட்டுக்கொண்டு வரும்படி மகாராஜா அவர்கள் கட்டளையிட்டார் என்றார்கள். திரௌபதி இதைக்கேட்டு

திடுக்கிட்டு ஓ! தாதியரே!! என் உட்கருத்தைச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள்:—நான் பாண்டு புத்திரனுக்கு மாலையிடுவேனே யன்றி மற்றவர்க்கு மாலையிடேன். அவர் வராதிருந்தால் நான் அக்கினியிற் பிரவேசம் செய்வேன். இது சத்தியம் என பகர்ந்தாள். தாதிகள் கேட்டு மிக வருந்தி அம்மா! தாங்கள் இப்படிச்சொல்வது தகுதியல்ல, மேலும் தாங்கள் தங்கள் கருத்துக்கு விரோதமாகச் செய்யவேண்டாம். உங்களிஷ்டப்படியே செய்யுங்கள்; ஆனால் ஒரு விசேஷம், அதென்னவெனில் உமது தந்தையார் யாவருக்கும் அசாத்தியமாயிருக்கிற வில் அம்புடன் குறிவைத்து அந்த வில்லை வளைத்து அம்பைத்தொடுத்து லக்ஷயத்தை விழச்செய்பவன் எவனோ அவனுக்கு என் அருமையான மகள் மாலையிடுவளென்று தெரிவித்திருக்கிறார். இதை அர்ச்சுனன்மாத்திரம்தான் செய்யக்கூடும். மற்றவர்களால் முடியாது. அவர்கள் அவசியம் வருவார்கள். தங்கள் தயைகூர்ந்து ஸ்நானம் செய்யவாருமென்று கெஞ்சி கேட்டவுடன் திரௌபதி மிக மகிழ்ந்து ஸ்நானம் செய்யச்சென்றாள். இவர்கள் உடனே சென்று பலவாசனை எண்ணெயிட்டு தேய்த்துக் கங்காதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வித்து விலையுயர்ந்தவும் அழகுபொருந்திய வஸ்திரத்தை தரித்து, பற்பல நகைகளையும் அணிந்து, அகிற் புகைஊட்டிய மாலையைச் சூட்டி, காணும் அரசருடைய மனதைக் கவரும்படி செய்தார்கள். எல்லா இராஜாக்களும் சுவாலிக்கின்ற அக்கினியிற் பிறந்த கொல்லிப்பாவைபோன்ற திரௌபதியினுடைய பிரகாசிக்கும் சரீரத்தின் அழகை பொலிவடையும்படி கண்களால்பார்த்து உடனே அக்கினியிற்பட்ட நெய்போல் உருகினார்கள். பாண்டு புத்திரர்களை இந்தச் சுயம்வரச் சபையில் காணலாமென்று கருதிச் சந்திரன் வந்தாற்போல் பிரகாசிக்கின்ற முகத்தையுடைய திரௌபதி இரத்தின மியற்றிய பொற்பீடத்தில் அரசர்கள் வியப்புற இனிது வீற்றிருந்தாள். அப்பொழுது திட்டத்துய்ம்மன் அங்குள்ள அரசர்களைப் பார்த்து

"சிலையிதுசிலீமுகங்களிவைகடுந்திரிகைவேகத்
திலமுகத்துழலுகின்றவெந்திரத்திகிரிநாப்ப
ணிலையிலாவிலக்குமஃதேநெஞ்சுறயாவரெய்தார்
கலைவலீரவர்க்கேயந்தக்கன்னியுமுரியளென்றான்"

ஓ! கலைஞானங்களில் வல்லவர்களே! இதோயிருக்கிற வில்லைப்பாருங்கள், அம்புகளிதோ விருக்கின்றன. இந்த வில்லைவளைத்து, அம்புபூட்டிலைத் தாங்கி கடாரசலத்தில் தோன்றும் மூன்று துளைக்குறியைப்பார்த்து அந்தரத்தில் சுழலும் சக்கரத்தின் முனைவழியில் கணைகளைப்போக்கி முதலில் மச்சத்தையறுத்து பின்பு சக்கரத்தைக்கொய்து இரண்டையும் பூமியில் விழாமல் கணைகளால் ஏந்தி அவைகளைக் கைக்கொண்டு வருபவர்யாரோ அவருக்கு என் அருமைத் தங்கை மாலையிடுவளென்றான்.



திட்டத்துய்ம்மன் சொன்னதைக்கேட்ட அரசர்களில் சிலர், இடியைக் கேட்ட நாகம் எவ்வாறு நடுங்குமோ அவ்வாறு நடுக்கங்கொண்டு பெருமூச்செறிந்தார்கள். அதிக காதல்கொண்டு வந்த சிலர் சித்திரப் பாவைப்போல் அசைவற்று பிரமித்திருந்தார்கள். பாஞ்சாலன் புத்திரன் ஏதோ சொல்லப் போகிறானென் றிருந்தோம் வில்லை ஒடிப்பவருக்குத்தான் அக்கன்னிகை மாலையிடுவளென்று சொன்னானே. நாமெப்படி அதை ஒடிக்கிறதென்று சொன்னார்கள். சிலர் நம்மால்முடியாது இதை ஒடித்து இந்தக்கன்னிகையை மணம்புரியும் மகாபுருஷனைப் பார்த்து சந்தோஷப்படலாம் என்றார்கள். இவ்விதம் இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் திரௌபதிக்கு தாதிமார் வந்திருக்கும் அரசர்களின் பெயரையும் அவர்களின் பராக்கிரமத்தையும் சொன்னார்கள்; திரௌபதியோ அவர்கள் வார்த்தையைக் கவனியாமல் அர்ச்சுனனையே நினைத்துக்கொண்டு கடவுளே! தயவுசெய்து அம்மகா புருஷனை எப்படியாவது அனுப்புங்கள் என பலவாறாக கடவுளை தியானித்துக்கொண்டேயிருந்தாள். நிற்க துரியோதனன், கர்னன் இன்னும் அநேக இராஜாக்கள் வந்து வில்லை எடுத்து வளைக்கப் பார்த்தும் முடியாமல்போகவே அவமானம் அடைந்து தங்களிருப்பிடத்திற்குச் சென்று உட்கார்ந்தார்கள். பின்பு பிராமணர் கூட்டத்திலுள்ள அர்ச்சுனன் எழுந்துபுன்சிரிப்புடன் ஐயா! மகாராஜாவே, இந்தவில்லை எவ்வர்ணத்தில் உதித்தவனும் எடுத்து லக்ஷயத்தில் கணைதொடுத்தால் மணஞ்செய்யலாமாவெனகம்பீரமாகக் கேட்டான். அப்பொழுதுசிலர் இவனைப்பார்த்து நகைத்தார்கள், சிலர் பிராமணனுக்கு க்ஷத்திரியதைரியம் எப்படிவரும் என்றார்கள். சிலர் இவனுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறதோவென சொன்னார்கள். சிலர் ஒருக்கால் ஜபம் அடந்தாலும் அடையலாமென்றார்கள். உடனே திட்டதுய்ம்மன் இப்பொழுது இந்தக்காரியத்திற்கு க்ஷத்திரியரென்றும் பிராமணரென்றும் நியமமில்லை. உமக்கு சாமர்த்தியமிருந்தால் சுகமாய் தாங்கள் சென்று ஒருகை பார்க்கலாமென்றான். அர்ச்சுனன் புன்சிரிப்புடன் ஆ! ஆ!! வென்று சொல்லி மெதுவாக வில்லினிடம் சென்று கடவுளை தியானித்து வில்லை ஒருகையில் பிடித்து வளைத்து நாணிபூட்டி ஓசை காட்டி அம்பையெடுத்து சந்தானம்பண்ணி காதளவுமிழுத்து இயந்திர ஸ்தம்பத்தின் அடிவாரத்தில் ஒரு கடார நிறைய வைத்திருக்கும் மஞ்சள் நீரில் அக்குறி நிழலைப்பார்த்துக்கொண்டே ஆகாயத்தில் அம்பைத் தொடுத்து அந்த மச்சியயந்திரத்தை அறுத்தான். உடனே திரௌபதி பூமாலையை அர்ச்சுனன் கழுத்தில் அணிந்தாள். பிராமணர்கள் மிகச்சந்தோஷப்பட்டு தம்பதிகளுக்கு ஆசிர்வாதம் செய்தார்கள். பாஞ்சாலன் முதலியவர்கள் மிகச் சந்தோஷப்பட்டார்கள். வாத்தியகோஷம் நடந்தது; திரௌபதி இம்மகா புருஷர் அர்ச்சுனராகவே யிருக்கவேண்டும் ஏனெனில் இவருடைய உருவப் படத்தை நாம் பார்த்திருக்கிறோம் அதுபோலவேயிருக்கிறார்; மேலும் தேவவாக்கு வீணாகாது என மனதில் எண்ணிக்கொண் டிருந்தாள்.

அர்ச்சுனன் மகாராஜாவே! இதோ நீங்கள் சொன்னபிரகாரம் செய்துவிட்
டேன் இதோ உங்கள் புத்திரியை கைபிடிக்கிறேன் என்றுசொல்லி கையைப்
பிடித்துக்கொண்டான், திரௌபதிபுன்சிரிப்புடன் ஆனந்தக்கண்ணீர் ததும்ப
தேகத்தில் புளகமுற்று கடைக்கண்ணினால் தன் கணவனைப் பார்த்துக்
கொண்டிருந்தாள். அர்ச்சுனன் பின்பு மிகச் சந்தோஷத்துடன் தன்
மனைவியை யிட்டுக்கொண்டு தன் தமையன் தம்பிமார்களி னிடத்தில்
சென்று வீட்டிற்குப் போக எத்தனித்தான்; துரியோதன மகாராஜன்
வேர்வை யுண்டாகும் நெற்றியையும், சிவந்த கண்களையும் உடையவ
னாய் எழுந்து, ஓ மகாராஜாக்களே! ஒரு பிராமணன் வந்து இராச
கன்னிகையை எடுத்துக்கொண்டு போவதைப் பார்க்க உங்களுக்கு அவ
மான மில்லையோ? நாம் க்ஷத்திரியர்களல்லவா? நாம் சும்மாயிருக்கலாமா ?
அக்கன்னிகையை விடலாமா? நாம் அந்தப் பிராமணனுடன் யுத்தம் செய்ய
வேண்டாமா? என கோபத்துடன் சொல்வதைக் கேட்ட அரசர்களில்
சிலர் ஒன்றாய்க் கூடி சண்டைக்குக் கிளம்பினார்கள், அர்ச்சுனனும் பீமனும்
இறகினடிக்குருத்துப் போலுமொளி மிக்க பற்கள் பொருந்திய பவளம்
போன்றவாயை யுடைய முகத்தையுடையாளை தங்கள் தமையனாகிய தரு
மனிடத்தில் ஒப்புவித்து அவர்களை அழிக்க யுத்தம் செய்தார்கள். மத்தியில்
பிராமணர்கள் இவர்களுக்கு உதவிசெய்ய வந்தார்கள் அர்ச்சுனன் அவர்க
ளைப் பார்த்து பிராமணோத்தமர்களே இவர்களை நானே அழிக்கிறேன்
எனக்கு பூர்ண ஆசீர்வாதம் மாத்திரம் செய்யுங்களென்று சொல்லி அரசர்
களுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்தான், கர்னன் ஒருபாணத்தினால் மூர்ச்சை
யால் கீழேவிழுந்தான், சல்லியன் வர பீமன்கண்டு சுயம்வரப்பந்தலின்
ஸ்தம்பத்தைப் பிடுங்கிக் கொண்டு வந்து சல்லியன் விட்டபாணத்தை
யெல்லாம் தடுத்து சல்லியன் மார்பில் ஒரு குத்து குத்தினான். இவனும் மூர்ச்
சித்து கீழே விழுந்தான். இவ்விதம் ஒவ்வொருவரையும் ஜயித்துக்கொண்டி
ருக்கையில் அரசர்கள் ஓட்டலைப்பட்டார்கள், துரியோதனன் கண்டு இ
தென்ன மோசம் எல்லாரும பயந்து ஓட்டலைப்படுகிறார்களே எனபயந்து
அவர்களை ஒன்றாகச் சேர்த்து தான் யுத்தம் செய்ய புறப்படுகையில் ஸ்ரீ கிரு
ஷ்ணபகவான் முதிர்ந்த பிராமண வேடங்கொண்டு துரியோதனனிடத்தில்
வந்து அப்பா அந்தக்கன்னிகையை யடைந்த புருஷன் அர்ச்சுனன் சல்லிய
னைக்குத் தினவன் பீமன் இதை யொருவருக்கும் சொல்லாதே யென்று
சொல்லிவிட்டு போய்விட்டார். துரியோதனன் திகைத்து அரக்குமாளிகை
யில் சாம்பலாய்ப் போய் விட்டார்களே இவர்கள் எப்படி தப்பித்துக்
கொண்டார்கள்? இது தெய்வசங்கர்ப்பம், இவர்களைப் பார்த்தால் அர்ச்சுனன்
பீமனைப் போல் தோன்றுகிறார்களென எண்ணி மற்றவர்களிடத்திலும்
சொன்னான். அவர்களும் ஆம் அவர்களும் அவ்விதம் தான் காணப்படுகிறார்
களென்று சொல்லி யுத்தத்தை நிறுத்தி தங்களிருப்பிடத்திற்குப் போய்



விட்டார்கள். அர்ச்சுனன் மற்றவர்களுக்கு விடையளித்து தனது மனைவியுட
னும் தமையன் தம்பிமார் களுடனும் வீட்டிற்குச் சென்று தனது தாயி
டத்தில் ஒரு கனிபெற்றேன் அம்மா! வென்றான். குந்திதேவியார் இதையறி
யாமல் ஐவரும் அக்கினியைப் புசியுங்களென்றாள், பின்பு வந்துபார்க்கை
யில் ஒரு தேவப்பெண்ணைப் போல்நிற்கின்ற திரௌபதியைக் கண்டு மகி
ழ்ந்து தெரியாமல் இப்படி சொன்னோமே புத்திரர்களோ தாய்வார்த்தைக்
கும் சத்தியத்திற்கும் தவறுதுநடப்பவர்கள்; இனியென்ன செய்வதென்று
பிரமித்திருக்கையில், அர்ச்சுனன் அண்ணாவுக்கு கலியாணம் ஆகாமலிருக்
கும்பொழுது எனக்குமாத்திரம் விவாகம்கூடாது; ஆகையால் ஐவரும் விவா
கம் புரிவது நலம் என்றான், தருமர் இவ்விதமே அபிப்பிராயப் பட்டு சொ
ன்னார். திரௌபதி குந்தேவியாருக்கு நமஸ்காரம் செய்தாள் அவர்கள்
திரௌபதியை மனக்களிப்புடன் ஆசீர்வதித்தார்கள்.

## கும்பகோணம் கவர்ன்மென்ட் பெண்பாடசாலை.

செப்டம்பர்மீ 27உ காலையில் இப்பாடசாலையில் 8-மணிக்கு இப்பாட
சாலையின்வருஷோற்சவ கொண்டாட்டம் நடந்தேறியது. அக்கா
லத்தில்பெண்பாடசாலைகளுக்கு இன்ஸ்பெக்டராகியமிஸ். A. ஆர்
னல்ட என்றமாது சபைத்தலைவியாக விருந்தார். இன்னும் அநேக
இந்துமாதர்களும் வந்திருந்தார்கள்.

இப்பாடசாலையின் மொத்த பெண்கள் 135. பரிக்ஷையில்
பெண்கள் திருப்திகரமாய் தேறினார்கள். ஒரு பெண் லோயர்சகண்டரி பரி
க்ஷையில் தேறியிருக்கிறாள், இந்தவருடம் மார்ச்சுமாதம் நமது கவர்னரும்
அவர் மனைவியாரும் இங்குவந்து இப்பாடசாலைப் பெண்களைப்பார்த்து மிகச்
சந்தோஷப்பட்டார்கள். கல்வியிலாகா அதிகாரியும் இந்தபாடசாலை நன்றாக
நடத்தப்பட்டு வருகிறதென்றும், பெண்கள் விருத்தியடைந்து வருகிறார்க
ளென்றும் சௌபாக்கியவதிசேல்லம்மாளுடைய முயற்சியாலும் ஊக்கத்தினா
லும் இந்தபாடசாலை யாவராலும் மதிக்கும்படியா யிருக்கிறதென்றும்எழுதி
யிருக்கிறார் என ரிபோர்ட்வாசிக்கப்பட்டது.

பின்பு சிலபெண்கள் கல்வியிற் றேறியவும், கற்புடையவும், தன் கணவ
னிடத்தில் மிக விசுவாசமுள்ளவும், ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்களு
ள்ள ஒரு இராஜபுத்திரியின் கதையை சம்பாஷித்ததைக் கேட்டவர்கள் மிக

மகிழ்ந்தார்கள். சில பெண்கள், கோலாட்டம், கும்மி, கிண்டர்கார்டன் முதலிய விளையாடல்களைச் செய்தார்கள். உடனே பெண்களுக்கு வெகுமதி யளிக்கப்பட்டது.

திவான்பஹதூர் ஆர். ரகுநாதராயருடைய பௌத்திரி பின்வருமாறு சொன்னாள். மாதர்களே! கனவான்களே! நீங்கள் யாவரும் இங்குகூடியது எங்களுக்கு மிகச் சந்தோஷத்தை யுண்டாக்கியதும் தவிர தைரியத்தையு முண்டாக்கியது. நாங்கள் உங்களுக்கு மிக விசுவாசமுள்ளவர்களா யிருக்கின்றோம். எங்களுக்கு பரிசளித்த மிஸ் ஆர்னல்ட் அம்மாளவர்களுக்கு எங்கள் மனப்பூர்ண வந்தனத்தை யளிக்கின்றோம். நமது ஏழாவது எட்வார்டு மகாராஜா அவர்களுக்கு பட்டாபிஷேகமானதைப் பற்றியும் அவர் சௌக்கியமாயிருக்கிறதைப் பற்றியும் மிகச்சந்தோஷப் படுகிறோம்.

நமது மகாராஜா அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் நீடூழிவாழும்படி கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். சென்றமார்ச்சுமாதம் இங்குவந்து எங்களைப் பிரியத்துடன்பார்த்த எச். இ. லார்ட் ஆம்டில் அவர்களுக்கும் அவர் மனைவியாருக்கும் எங்கள் வந்தனத்தை யளிக்கின்றோம்.

பின்பு திவான்பஹதூர் ஆர். ரகுநாதராயர் அவர்கள் பின்வருமாறு சொன்னார்:—நான் அநேக வருடங்களாக இப்பாடசாலையின் வருஷோற்சவங்களைப் பார்த்துக்கொண்டு வருகிறேன். ஒவ்வொரு வருஷமும் இப்பாடசாலை அபிவிருத்தியடைந்து வருகிறது. இப்பாடசாலையின் தலைவி உபாத்திமார் பி. செல்லம்மாள் மிக ஊக்கத்துடனும் பிரியத்துடனும் உழைத்துவருவது மெச்சத்தகுந்ததே. ஒவ்வொருவரும் கிரமமாய் தங்கள்பெண்களை பாடசாலைக்கு அனுப்பி வரவேண்டுமென்றும், பாடசாலை விருத்தியைக் கோரவேண்டுமென்றும் நான் அபிப்பிராயப் படுகிறேன். சபைத்தலைவியாகிய இம்மாதுக்கு எனது வந்தனத்தை யளிக்கின்றேன்.

இப்பாடசாலையின் விருத்தியைகோரிக்கொண்டிருக்கும் மிஸ் ஆர்னல்ட் என்றமாது பெண்கள் கற்பதால் விளையும் நன்மையைப் பற்றியும் பெற்றோர்கள் தங்கள் புத்திரர்களுக்கு கல்வி புகட்டி வருவதுபோலவே தங்கள் புத்திரிகளுக்கும் கல்வி புகட்டிவரவேண்டுமென்றும் சுருக்கமாகச் சொல்லி முடித்தார்கள்.

பின்பு புஷ்பம் தாம்பூலம் அளித்தபின் சபை கலைந்தது.

கும்பகோணம். ஓர் மாது.



# *சென்னை ஜெனரல் போஸ்டாபீஸ்.

சென்னைத் துறைமுக வாராவதியைப்பற்றி ஜூன்மீ சஞ்சிகையில் சித்திரப்படத்துடன் எழுதியிருந்தோம். இவ்விதம் ஒவ்வொரு பத்திரிகையிலும் எழுதப்படவேண்டுமென்று நமது கையொப்பநேயர்கள் நமக்கு கடிதங்கள் எழுதியிருப்பதும் தவிர சென்னை இந்து, ஸ்டாண்டர்டு, சுதேசமித்திரன், இந்துநேசன் முதலிய பத்திரிகைகளும் நல்ல அபிப்பிராயப்பட்டு இவ்விஷயம் அடிக்கடி வந்தால் மாதர்களுக்கு மிக உபயோகமாக விருக்குமென்று கூறுகின்றன.

இச் சஞ்சிகையில் சென்னை சமுத்திரக்கரையின் வடகோடியிலிருக்கும் ஜெனரல் போஸ்டாபீஸின் சித்திரப்படத்தைப் பிரசுரித்திருக்கிறோம்.

இந்த ஆபீஸ் 1884ஆம் மேமீ 1௳ யன்று கவர்ன்மெண்டாரால் கட்டப்பட்டது. இதற்கு 7 லக்ஷம் ரூபா செலவிடப்பட்டது. இது பெரியகட்டிடமாக விருப்பதுடன் பார்வைக்கு வெகு அழகுள்ளதாக விருக்கிறது. இவ்வூருக்கு வருகிற ஒவ்வொருவரும் இக் கட்டிடத்தைப் பார்க்காமலிருப்பதில்லை. இதில் தினம்4878 கவர்காகிதங்களும், 3359 கார்டுகளும், 303 சமாசாரப்பத்திரிகைகளும், 870 பாக்கட்டுகளும், 52 பார்சல்களும் வெளிதேசங்களிலிருந்து இங்குள்ளவர்களுக்கு கொடுக்க வருகின்றன. தினம் கவர் காகிதம் கார்டுகள், சமாசாரப் பத்திரிகைகள், பாக்கட்டுகள், 13084-ம் பார்சல்கள் சுமார் 215-ம் வெளிதேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சென்னையில் சுமார் 33 சிறிய தபால் ஆபீசுகளும், தபால் காகிதங்கள் போட தபால்பெட்டிகளுள்ள தூண்கள் சுமார் 120 மிருக்கின்றன. இவைகள் ஜனங்களுக்கு மிக உபயோகமானதென்று நாம் சொல்லவேண்டியதவசியமல்ல. தபாலாபீசுக ளில்லாதகாலத்தில் ஜனங்கள் ஓலையிலெழுதி வேலைக்காரன் மூலமாக அனுப்பிவந்தார்கள். இப்பொழுது காசிக்கு காலணா கார்டில் சங்கதிகளை யெழுதி அனுப்பினால் போதுமானது இது 5, 6 தினத்தில் அங்குள்ளவருக்கு கிடைக்கும். 5000 மைல் தூரமுள்ள லண்டன்முதலிய விடங்களுக்கும் 1 அணா கார்டிலாவது அல்லது 2½ அணா ஸ்டாம்பு ஒட்டவைத்த கவரிலாவது விஷயங்களை எழுதி அனுப்பினால் 16, 17 தினத்தில் போய் சேர்ந்துவிடும். இவ்விதம் தபால்களை யனுப்ப ஆபீசுகளை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவைகளால் நமக்குமிக உதவியாக விருக்கிறதுமன்றி கவர்ன்மெண்டாருக்கும் லாபகரமாயிருக்கிறது.

* Our thanks are due to the Presidency Post Master, for the information he kindly has given. (Editor)

## பனிக்கட்டியும் அதன் விசித்திரங்களும்.

சூரிய உஷ்ணத்தினால் சமுத்திரம் - தடாகம் - ஏரி முதலிய நீர் நிலைகளிலிருந்து ஆவியாயெழும்பி ஆகாயத்திற் சென்ற அணுக்களின் சமூகமான மேகமானது குளிர்ச்சியான வாய்வு தாக்குவதினாலே மழைத்தண்ணீராகக் கீழே விழுவதுபோல், பின்னும் குளிர்ச்சியான வாய்வு தாக்குவதினாலே பனிக்கட்டிகளாக விழுகின்றன. உஷ்ணப் பிரதேசமாகிய இந்தியாவைப் போன்ற தேசங்களிலுள்ளவர்களுக்கு அப்படிப்பட்ட பனிக்கட்டிகளின் விசித்திரங்கள் இன்னவையென்று புலப்படா. துருவப்பிரதேசங்களிலுள்ள சிலதேசங்களிலும் ஐரோப்பா முதலிய கண்டங்களிலிருக்கும் அதிசீதள தேசங்களிலும் பனிக்கட்டிகளின் விசித்திரங்களைப் பிரத்தியட்சமாகக் காணலாம். உஷ்ணப்பிரதேசங்களிலே உன்னதமான மலைகளின்மீது மாத்திரம் அனேகஆயிர அடிகளுக்கு மேலாகப் பனிக்கட்டிகள் கரையாமல் சதா இருந்துக்கொண்டிருக்கும். சீதளப்பிரதேசங்களிலோ தரை மட்டத்திலேயே நாற்புறமும் பனிக்கட்டிகள் நிறைந்திருக்கும். ஜலம் குளிர்ச்சியின் மிகுதியால் பனிக்கட்டிகளாய் இறுகியகாலத்து அவற்றைக் கற்பாறைகளைக் கொண்டு உடைத்தாலும் அவை உடையமாட்டா. ஐரோப்பாவிலுள்ள ஆல்ப்ஸ் என்னும் பர்வதத்தின் சாரல்களில் யாத்திரைபோகும் அனேகர் தம் மேல் கருங்கற்களைப் போன்ற பனிக்கட்டிகள் அப்பர்வதத்தின்உச்சியிலிருந்தும் விழ எலும்புகளொடிந்து உரு தெரியாமல் மாய்ந்தனரென்று நாம் கேள்விப்படுகிறோம். கிரீன்லாண்டு என்னும் தேசத்தில் சற்றேறக்குறைய முக்காலே மூன்றுவீசநிலம் பனிக்கட்டிகளாகிய புலத்தால் மூடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பனிக்கட்டிகள் பர்வதாகாரமாய் அடுக்கடுக்காக ஓங்கிவளர்ந்து சமுத்திரத்தில் மிதந்துகொண்டேபோகும். அப்படிபோகையில் சமுத்திரத்தின் மேற்பாகத்திலே எவ்வளவு தூரம் அவைகள் உயர்ந்து தோன்றுகின்றனவோ அதைவிட எழெட்டுமடங்கு அதிகமாய் சமுத்திரத்தின் அடிப்புறத்தில் அவைகள் ஆழ்ந்து கிடக்கும். பெருத்த பர்வதாகாரமாய் மகா கெம்பீரத்தோடு மிதந்துகொண்டுபோகும் இப்பனிக்கட்டிகள் மரக்கலங்களைத் தாக்குமாயின் அம்மரக்கலங்கள் எவ்வளவு பெரிதானவைகளாகவும் திண்மையான வைகளாகவும் இருக்கினும் அவை ஒரு நொடியில் பொடிப் பொடியாய் விடுகின்றன. பர்வதாகாரமான இப்பனிக்கட்டிகள் சுமார் இரண்டாயிர அடி உயரத்துக்கு ஓங்கிவளர்ந்து சமுத்திரத்தில் மிதந்து வருவதுண்டு. பெரியமலை ரூபமாக உயர்ந்துள்ள யாதொரு பெரும்பனிக்கட்டி அடுக்கடுக்காக மேலே அமைக்கப்பட்டுள்ள பற்பல சிறு பர்வதாகார பனிக்கட்டிகளின் சமூகமாதலால் அவற்றில் ஏதாவது ஒருபாகம் இற்று சமுத்திரத்தில் விழுமானால் அதுவிழும் அதிர்ச்சியினால்



சுமார் நூறு மைலுக்கு அப்புறமிருக்கும்யாதொரு மரக்கலமும் திடீரென்று
அலைகளினால் மொத்துண்டு உடைந்தாவது கவிழ்ந்தாவது போய்விடும்.
பர்வதரூபம்போல் ஓங்கியுள்ள பனிக்கட்டிகள் வெகுசாய்ச் சுத்த ஜலம்
இறுகியதனால் உண்டானவைகளாம். இன்னும் ஒருவகையான பனிக்கட்டி
கள் உண்டு. அவை பர்வதாகாரமாக மேலெழுந்து வளராமல் அனேக மைல்
தூரம்வரையில் நாற்புறமும் பாளம் பாளங்களாய்ப் பரவிப் பெருங்கட்டு
மரங்கள் போல் சமுத்திரத்தில் மிதந்து கொண்டேபோகும். இந்த வகை
யான பனிக்கட்டிகள் பெரும்பாலும் சமுத்திரத்திலுள்ள உவர்நீர் இறுகிய
தனால் உண்டானவைகளாம். மேலே பர்வதாகாரமாயிருக்கத் தக்க பனிக்
கட்டிகளைவிட, கட்டுமரங்கள் போலிருக்கும் இப்பனிக்கட்டிகளுக்கு மா
லுமிகள் கர்ப்பங் கலங்குவார்கள். ஏனென்றால்; பர்வதாகாரமான பனிக்
கட்டிகளைத்தூரத்தில் கண்டமாத்திரத்தில் அவர்கள் மரக்கலங்களை ஒதுக்கி
வேறே மார்க்கமாகக் கொண்டு போய்விடக்கூடும்; நீர்மட்டமாயிருக்கும்
இவைகளோ மாலுமிகளின் கண்ணுக்குப் புலப்படாமல் ஜலத்தின் ரூபமா
கவே தோன்றி மரக்கலத்தை வந்து நாற்புறமும் கிட்டிக்கொள்ளும். இவற்
றிற்கு இடையில் அகப்பட்டுக்கொண்ட மரக்கலம் அப்பனிக்கட்டிகள் ஒன்
றோடொன்று குளிர்ச்சியின் மிகுதியினால் இறுகஇறுக நசுங்குண்டு முறிந்து
தவிடுபொடியாய் விடும். அப்போது அதிலுள்ள ஜனங்களெல்லாம் அன்ன
மாகாரமின்றிக் கட்டுமரங்களைப் போலிருக்கும் அப்பனிக்கட்டிகளின் மீது
நிற்கவேண்டிவரும். இந்தப்படி அவர்கள் நின்று கொண்டேயிருக்கையில்
சீதளம் சற்றேகுறைந்து உஷ்ணம் கொஞ்சம் மிகுந்த உடனே கட்டுமரம்
போல்தாங்கிக் கொண்டிருந்த பனிப்பாளங்கள் தம் நிஜசொரூபமாகிய ஜல
ரூபமாய் அத்தனை ஜனங்களையும் ஒருநொடியில் தமக்குள் ஐக்கிய மாக்கிக்
கொள்ளும்.

பர்வதரூபங்களாயிருக்கும் பனிக்கட்டிகள் வெவ்வேறு திசைகளிலி
ருந்து சமுத்திரத்தில மிதந்து கொண்டே வந்து ஒன்றோடொன்று தாக்கும்
போது உண்டாகும் பெருத்த சப்தத்துக்கு உலகத்தில் மற்றெந்த ஒலியை
யும் நிகராகச் சொல்வது முடியாது. சமீபத்திலுள்ள தேசங்களிலிருந்து
ஜனங்கள் காது செவிடுபட்டுப் பிரமையடைந்து விடுவார்கள். பலஹீனர்க
ளாயிருக்கும் சிலர் இறந்தும் போவதுண்டு. கோடையிடி முழக்கத்தையும்
அதன் பேரொலிக்கு ஒப்பிடுதல் - சிங்ககர்ச்சனைக்குப் பூனைக்கூச்சலை உவ
மித்தலையே நிகர்க்கும். பர்வதாகாரமான இப்பனிக்கட்டிகளைத் தூரத்திலிரு
ந்து பார்த்தால் அவைகள் உன்னதமான எழுநிலை மாடமாளிகை கூடகோபு
ரங்கள் போலவும், இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச் சைன்னியங்
கள் போலவும், புலி ஒட்டக முதலிய விலங்குகள் போலவும் பற்பல வர்ண
பேதங்களுடன் விளங்கித் தோன்றும்.

(Arctic Ocean) உத்தரதுருவ மகா சமுத்திரமும் (Antarctic Ocean)
தட்சண துருவ்மகா சமுத்திரமும் மேற்கண்டவாறு சதா பனிக்கட்டியி

னல் நிறைந்து கிடக்கின்றபடியினால் அங்கு மரக்கலங்களைச் செலுத்திக் கொண்டுபோக மனிதர்களுக்குச் சாத்தியமாவதில்லை. பூமியைச் சுற்றிலும் யாத்திரை செய்யவேண்டுமென்று புறப்படுவோர்களெல்லாம் கிழக்காகவாவது மேற்காகவாவது மரக்கலங்களைச் செலுத்திக் கொண்டு போவார்களேயன்றி வடக்காகவாகிலும் தெற்காகவாகிலும் போகத்துணிவதில்லை. அங்ஙனம் அவர்கள் போவதற்குச் சாத்தியமாயிருக்குமானால் இன்னும் என்னென்ன விசித்திரங்கள் புலப்படுமோ அறிகிலம். பனிக்கட்டிகள் பாளம் பாளங்களாகவும் உண்டை உண்டைகளாகவும் அநேகமைல் விஸ்தீரணம் வரையில் கட்டுமரங்களைப்போல் மிதக்கப்பெற்ற சமுத்திரபாகங்களையே பூர்வீக இந்துக்கள் அலங்காரமாய் (ததி) தயிர் சமுத்திரம் என்று கூறியிருக்கலாம். இதுபோலவே இப்போது உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவாவது கண்டுபிடிக்கப்படாததாகவாவதுள்ள என்னென்ன சமுத்திரங்களை (க்ஷீர) பாற்சமுத்திர மென்றும், (சர்ப்பி) நெய்சமுத்திரமென்றும், (இட்சு) கரும்பு சமுத்திரமென்றும், (சுரா) தேன் சமுத்திரமென்றும் பூர்வீக இந்துக்கள் உருவகப் படுத்தினார்களோ அது இக்காலத்தவர்களுக்குத் தெரியவில்லை.

[ஜ. வி.]

## போவர் யுத்தப் பிரசுரங்கள்.

சென்ற சில வருடங்களாக பிரிட்டிஷாருக்கும் போவருக்கும் தென்னாப்பிரிகாவில் பெருஞ் சண்டை நடந்து சிறிதுகாலத்திற்குமுன் தான் சமாதான முடிந்ததென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் போவர்கள் இன்னார் என்பதும் சண்டையின் காரணம் என்ன என்பதும் யுத்தத்தின் வரலாறு எவ்வாறு என்பதும் ஆங்கிலங்கற்ற சிலருக்கேயன்றி தமிழ் மட்டும் அறிந்த அநேகருக்கும் தெளிவாய்த்தெரியாது. அவர்களும் இவ்விஷயங்களையெல்லாம் எளிதில் உணரவேண்டுமென்பதை உத்தேசித்த ஒருவர் 'போவர் யுத்தப் பிரசுரங்கள்' என்ற பொதுப் பெயரிட்டு "டிவெட், டிலாரி, போதா"; "குருகர், ஜூபார்ட், கிராஞ்சே"; "போவர் பராக்கிரமம்"; "போவர் பிடிவாதம்"; என்னும் நான்கு புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றார். சமாதானத்தைப் பற்றிய ஒரு புத்தகமும் தயாராய் வருவதாகப் பிரசுரித்திருக்கிறார். மேற்குறித்த நான்கு புத்தகங்களும் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டன. முன்னைய இரண்டு புத்தகங்களில் அவ்வவர்களின் சரிதமும் அவர்களது யுத்தமுறைமைகளும் நன்கு விவரிக்கப்பட்டுள. லார்ட் கிச்சனர் ஜோகான்ஸ் பர்க்கில் நடந்த ஒரு விருந்தின்போது—"போவர்கள் பிடிவாதக்காரர்கள் என்றும் பராக்கிரம சாலிகள்" என்றும் சொல்லியிருப்பதால் பின்னைய இரண்டு புத்தகங்கட்கும் ஆசிரியர் இட்ட பெயர் மிகப்





பொருந்தும் என்பது யாம் கூறுமலே விளங்கும். போவர் பராக்கிரமத்தில் போவர்களின் பூர்வீக சங்கதிகள், அவர்களினது உண்மைத்தன்மை, போவர்ப் பெண்களின் குணம், யுத்தத்தின் மொத்த சாராம்சங்கள் முதலியவெல்லாம் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றது. போவர் பிடிவாதத்தில் போவர் தாஞ்கி கோரியது, மீண்டும் போர்க்கோலம் கொண்டது, மத்தியஸ்தம் பேசியது முதலியவெல்லாம் அருமையாய் கூறப்பட்டிருக்கின்றது. மற்றும் "தமிழில் இதுவரையும் இல்லாத கருத்துக்களையும் இதுவரையில் இருந்து இப்போதைய தமிழர்க்கு அர்த்தமாகாமல் இருக்கும் கருத்துக்களையும் ஆங்கிலேய பாஷையிலுள்ள கருத்துக் கிசையக்காட்டும்படி புதிதாய் இப்போது புனைந்து அமைக்கப்பட்ட" சில பதங்களும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் புத்தகத்தின் இறுதியில் ஒரு அனுபந்தமாகச் சேர்த்து பொருளுடன் பதிப்பித்திருக்கிறது. இப்பதங்களிற் பல மிக மேன்மையானதே. ஆயினும் சில அவ்வளவு சிரேட்டமுடையதெனச் சொல்ல இடமில்லை. மொத்தமாகப் புத்தகங்கள் சாதாரண அறிவுடைய ஜனங்கள் அறிந்துகொள்ளும்படியான அவ்வளவு எளியநடையில் எழுதப்பட்டுள்ளது. யாவரும் இப்புத்தகங்களை வாங்கி வாசித்தல் நலமே. ஆசிரியர் யாதுகாரணம் கொண்டோ தம் உண்மைப்பெயரை வெளியிடாது 'தன்னுடு நேசி' என்ற நாமத்துடன் புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றார். இப்புத்தகங்களாலேயே இவர் 'தன்னுடு நேசி' யென்று நாம் கூறுவோம். புத்தகங்கள் 'பைகா' எழுத்தில் நேர்த்தியான கடிதாசியில் ரிப்பன் அச்சியந்திரசாலையில் அழகாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. விலை தனித்தனி அணா ஆறு. ஆனால் மேற்படி நான்கு புத்தகங்களில் ஒரேகாலத்தில் ஏதாவது இரண்டிற்குக் குறையாது வாங்குவோர்க்கு ஒவ்வொன்றும் நான்கு அணாவுக்குக் கொடுக்கப்படும். ஆதலின் இவ்விரண்டாக வாங்குவதே யாவருக்கும் நன்மை.

## தருமம்.

உலகத்தில் நாம்செய்யவேண்டிய எல்லாவித நற்காரியங்களையும் தருமமென்றே கூறலாம். தருமத்திற்கு எதிரிடையாயிருப்பது அதருமம், அல்லது பாவமென்று சொல்லப்படும்; அதாவது நாம் உலகத்தில் செய்யும் கெட்ட காரியங்களெல்லாம் அதருமத்தில் அல்லது பாவத்திலடங்கும். இதனால்தருமமானது புண்ணியமென்றும், அதருமமானது பாவமென்றும் தெளிவாய்த் தெரியவருகிறது. இவைகள் தான் நல்வினையென்றும், தீவினையென்றும் சொல்லப்படுகின்றன. உலகத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் தருமத்திலும், அதருமத்திலும், அல்லது நல்வினை, தீவினைகளிலும்தான் கட்டுப்பட்டவைகளாய்

தருமமானது, புண்ணியம் எனப்பெயர் பெறும்.

ருக்கின்றன. ஜீவராசிகளுக்குள் அநேக பேதங்களிருந்த போதிலும், அவை
களுக்குட் சிறந்தது மனிதப் பிறவியாதலால் முக்கியமாய்இப்பிறவியே அவ்
விரண்டிலும் கட்டுப் பட்டதாயிருக்கிறது. ஏனெனில், இப்பிறவி ஒன்றி
னுக்கே இது நன்மை, இது தீமை யென்று பகுத்தறியுங்குண மிருப்பதினு
லும், இதற்குக் கீழ்ப்பட்ட பிறவிகளுக்கு அப்பகுத் தறியும் குணமில்லா
மையினுலும், இப்பிறவியே தருமத்தையும், அதருமத்தையும் அறிந்து செ
ய்யக் கூடிய தென்றும் யாவருக்கும் நன்ருய்த் தெரியவரும். மற்றப் பிறவி
கள் மேற்கண்ட தருமத்தையும், அதருமத்தையும் அறியாமலே செய்யக்
கூடிய வைகளாயிருக்கின்றன. அதனுல் உண்டாகும் லாபமும் நஷ்டமும்
அவைகளுக்கு தெரியாமலே போய்விடும், இதனுல் பகுத்தறியுங்குணமுள்ள
மனிதர்கள் தாம், தருமத்தையும், அதருமத்தையும் கடைப்பிடித் தொழுக
வேண்டு மென்பது விசதமாகின்றது. உலகத்தில் தருமங்கள் பலவாயிருக்
கின்றன. சாஸ்திரங்களில் தருமங்கள் முப்பத்திரண்டாகப் பிரிக்கப்பட்டி
ருக்கின்றன. இம் முப்பத்திரண்டு தருமங்களுள், உலகத்தில் உள்ள எவ்வி
ததருமங்களும் அடங்கிவிடும். அதுபற்றியே நூல்கள் முப்பத்திரண்டாகப்
பிரித்துக் கூறுகின்றன, அம்முப்பத்திரண்டு தருமங்களாவன:—ஆதுலர்க்
குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க் குண்டி, பசுவுக்குவாயுறை,
சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்
தல், அறவைப்பிணஞ் சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து,
வண்ணூர், நாவிதர், கண்ணுடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய்,
பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தல், மடம், தடம், சோ
லை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலை கொடுத் துயிர்
காத்தல், கன்னிகாதானம் என்று சொல்லப் பட்டவைகளாகும். இவைக
ளுட் ஆதுலர்க்குச் சாலைமுதலாகக் கூறப்பட்ட சில தருமங்கள் அன்னதா
னத்தின்கண்ணடங்குமாதலால், அவ்வன்னதானமே சிறந்த தென்று
கொள்ளப்படும். இவ்வன்னதானம் ஒன்றே அதனை யேற்பவர்களை திருப்தி
செய்யக்கூடியதா யிருக்கிறதேயன்றி ஏனையவைகள் அங்ஙனம் திருப்திசெய்
யக்கூடியவைகளாயிருக்கவில்லை. உலகத்தில் ஒவ்வொரு ஆத்மாக்களும்
முதலில் விரும்புவது அன்னமேயன்றி வேறொன்றல்ல. அதனை ஒரு
வன் திருப்தியாயடைந்தபோதுதான், உலகத்திலுள்ள மற்ற இன்பங்களின்
மேல் மனஞ்செல்லும். அதனை ஒருவன் அடையாதபோது, அவனுக்கு மற்
றவைகளின் பேரில் வெறுப்புண்டாமென்பது நூல்களின் கருத்தாயிருக்கி
றது. இதுபற்றியே "மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை, தானந்தவ
முயற்சிதாளாண்மை, தேனின், கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்
தும், பசிவந்திடப் பறந்துபோம்" என்று மேலோர் கூறியிருக்கின்றார்கள்.
இதனுல் அன்னபேட்சையாகிய பசியினுல் இவ்வளவும் அற்றுப் போகிற
தானுல் அன்னதானத்தைவிட எந்த தானத்தைச் சிறந்ததென்று கூறலாம்.
உலகத்தில் ஒவ்வொரு ஆத்மாக்களும் தம்மால் கூடிய வரையில் அன்னதா



னத்தை செய்து வருவார்களானுல், மற்ற எல்லாவித தருமங்களையும் ஒருங்
கே செய்தவர்களாவார்களென்பது திண்ணம். நமது மூதாட்டியாராகியஔ
வையாரும் முதலில் "அறஞ்செயவிரும்பு" என்றுகூறி அதில் ஆத்மாக்கள்
என்ன அறமோவென்று சந்தேகங்கொள்ளா திருக்கும் பொருட்டு, அதனை
விளக்க "ஐயமிட்டுண்" என்று பின்னெருவாக்கியத்தால் விளக்கிக் கூறியி
ருக்கின்றார்கள். இதனுல் அன்னதானமே மனிதர்கள் செய்யவேண்டு மென்
பது ஔவையாருக்கும் இஷ்டமாயிருந்த தென்பது தெளிவாய் விளங்
குகின்றது. அப்படிப்பட்ட அன்னதானஞ் செய்வதிலும், தான் கஷ்டப்
பட்டு சம்பாதித்த திரவியமாயிருக்கவேண்டும். இது பற்றியே "வருவாயுட்
கால்வழங்கி" என்றுமுன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள். தன்னுடைய வரு
மானத்தில் கால்பங்கு வருமானத்தை தர்மத்தில் செலவு செய்யவேண்டு
மென்பது அதன் கருத்தாயிருக்கின்றது. இப்படியல்லாமல் தான் தருமஞ்
செய்வதாக பலரிடத்தில் பொருளைப் பெற்று, அதில் சிலதை தருமத்தில்
செலவு செய்துவிட்டு மீதியை தன்னுடைய சொந்த செலவுக்கு வைத்துக்
கொள்வதாவது, அல்லது ஒருவரை மோசஞ் செய்து சம்பாதித்த திரவியத்
தைக்கொண்டு தருமஞ் செய்வதாவது, அநியாயத்தில் பொருளையீட்டி
அதைக் கொண்டு தருமஞ் செய்வதாவது, இன்னும் பலவித அநியாயவழி
களில் பொருளைச் சம்பாதித்து தருமஞ் செய்வதாவது ஒருக்காலும் தரும
மாகாது. இதுபற்றியே தருமத்தை, உத்தம தருமமென்றும், மத்திமதரும
மென்றும், அதமதரும மென்றும் நூல்கள் முறையிடுகின்றன. மேலே
கூறியபடிநியாயவழியில் பொருளைச் சம்பாதித்து அதைக்கொண்டு தருமம்
செய்வது ஒன்றே உத்தமதருமத்தில் சேரும். மற்றவைகள் யாவும் அதன
தன் யோக்கியதைக்குத் தகுந்தபடி மத்திமம், அதமம் என்கிற இரண்டி
லும் அடங்கும். அப்படியடங்கின போதிலும் அதன் பலன்கள் செய்தவனை
யடையாமல், பொருளின் சொந்தக் காரனைத்தான் அடையும். அதனுல்
இருவருக்கும் தகுந்த பலனில்லாமற் போய்விடுகிறது. வித்தியாதருமமும்
சிறந்ததுதான், ஆனுல் அவ்வித்தையும், ஆகாரமில்லாதவிடத்து பிரயோச
னப்படுவதுகிடையாது. நித்தியதரித்திரன்ஒருவன் வித்தையையடையவிரும்
பினுல் அவன் முதலில் அன்னத்திற்கு வழிதேடிக் கொண்டுதான் பிறகு
வித்தைக்கு முயலவேண்டியதாயிருக்கிறது. ஆனதுபற்றி எவ்வித தருமங்
களிலும் அன்னதானமே சிறந்த தென்பதும், இவ்வன்னமில்லாத விடத்து
தேகத்தில் ஆத்மாவும் நிலைபெருதென்ருல் இதைவிட எந்த தருமம் சிறந்த
தென்று நாம் கொள்ளலாம்? [பத்திராதிபர்.]

# NEWS & NOTES.

## "சமாசாரக் குறிப்பு."

பீரங்கி குண்டு சுமார் 15-மைல் தூரம் செல்லும்.

---

பிரான்சுதேசத்தின் மொத்த ஜனங்களில் ஐந்தில் ஒரு பாகத்தினர் விவாக மானவர்களா யிருந்தபோதிலும் அவர்களுக்கு குழந்தைகளில்லை யாம்.

---

மூங்கில் மற்ற செடிகளைக்காட்டிலும் அதிசீக்கிரம் வளருவதாகத்தெரி கிறது. 24 மணிநேரத்திற்குள் இது 2-அடி உயரம் வளருவதாக கண்டுபிடி க்கப்பட்டிருக்கிறது.

---

யானைக்கு மொத்தமாக எட்டு பற்கள் தானிருக்கின்றன. இதற்கு 14-வயதுண்டானபோது முதலிலுண்டான பற்களெல்லாம் விழுந்து மறு படியும் புதிதாகக் கிளம்புகின்றன.

---

சென்னை இராஜதானியில் ஒருபுதிய அஸிஸ்டெண்ட் இன்ஸ் பெக்டர் பெண்பாடசாலைகளுக்காக இருக்க வேண்டுமென கல்வியிலாக்கா உத்தியோ கஸ்தர்கள் ஏற்பாடு செய்து அநேக வருடமாக கவர்ன்மெண்டு பெண்கள் பாடசாலை விஷயமாக உதவி புரிந்து வந்த மிஸ்-கோவிந்தராஜுலு அவர்களை ஏற்படுத்தியிருப்பதைக் கேட்க மிகச்சந்தோஷப்படுகிறோம்.

---

உலகத்தில் சுமார் 1,000,000-குருடர்களிருக்கிறார்கள். இவர்களில் அதிகத்தொகை ருஷியாவிலிருக்கின்றார்கள். அங்கு சுமார் 200,000-பேர் கள் நடந்து செல்லுகிறார்கள். இதற்குக் காரணம் இவர்கள் இருட்டானவும் நல்ல காற்றில்லாதவுமான குடிசைகளி லிருப்பதனால் கண்கள் கெட்டுப் போகின்றன. பின்பு இவர்களுக்கு வைத்தியம் செய்வதற்கு தக்க வைத்தி யர்களுமில்லை.

---

அமெரிக்காதேசத்து ஜனங்கள் தங்கள் குழந்தைகள் சந்தோஷமாய் விளையாடும்படி அவர்களுக்கு மற்ற தேசத்தாரைக்காட்டிலும் அதிக விளை யாடும் கருவிகளைக் கொடுக்கிறார்களாம். பொம்மைகள் செய்யும் பெரிய இயந்திரசாலை நியூயார்க்கி லிருக்கின்றதாம். ஒருநாளைக்கு சுமார் 1607-விதம் விதமான பொம்மைகள் செய்யப்படுகின்றதாம். சென்ற வருடம் சுமார் 100 - கோடி பொம்மைகள் வெளிதேசங்களுக்கு அனுப்பப்பட்ட தாம்.



ஓர் பிராமணமாது பின்வருமாறு எழுதிகிறர்:—மாது ஸ்ரீலலிதாபாய் என்ற பிராமணமாது பிரவேசப் பரிட்சையிற்றேறியிருக்கிறார். இம்மாதுக்கு வி வாகமாயிருக்கிறது; ஆயினும் திருவல்லிக்கேணி கோஷாவைத் தியசாலைக் குத் தினம் சென்றுமருத்துவத் தொழில்முதலியவைகளைக் கற்றுவருவதை க்கேட்க மிகச்சந்தோஷப்படுகிறோம். இம்மாது பணம் சம்பாதிக்கவேண்டு மென்ற எண்ணங்கொள்ளாமல் தமது குழந்தைகளுக்கும், பொதுவாக இதரர்களுக்கும் உபகாரம் செய்யவேண்டுமென்ற எண்ணங் கொண்டே தமது கணவர் உத்திரவு பிரகாரம் இத்தொழிலைப் பயின்று வருகிறார்கள். இம்மாதுக்கு சங்கீதமும் நன்றாய் வாசிக்கத் தெரியும், இவ்விதம் இம் மாது படித்திருப்பதும் பரோபகார சிந்தையுடன் இத்தொழிலைக் கற்று வருவதும் மெச்சத் தகுந்ததே.

---

பெண்கல்வி:—இந்துப் பெண்கள் கல்வி யபிவிருத்தியின் விஷயமாய் மைசூர் ராச்சியம் அதிக முயற்சிசெய்து வருகின்றது. தேவராஜ அரசபக தூர் தரும நிதியிலிருந்து, பெண்கல்விக்கென்றே ரூபாய் 2 முதல் 5-வரை யிலுமுள்ள அநேகம் உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படும். இந் நன்கொ டைக்கு பலஜாதி விதவைகளிடமிருந்தும் விண்ணப்பம் வந்திருக்கின்றனவெ ன்று கேட்கச் சந்தோஷிக்கிறோம். அவ்வாறு விதவைகளுக்கு வித்தியாப்பி யாசம் செய்வித்து, பின் அவர்கள் பெண்பள்ளிக்கூடங்களில் உபாத்திமார் கள் ஆவதற்கு வேண்டிய பயிற்சியையும் செய்வித்தல் மிகவும் நல்லஏற்பாடு. நம் தேசத்தின் மற்றப் பாகங்களிலும் இவ்வாறு செய்வது உசிதமே. இந்து விதவைகளுக்கு, பெண்களுக்குக் கல்வி புகட்டுவதைவிட வேறொரு வேலை யும் அவ்வளவு நல்லதாகத் தோன்றவில்லை. இவ்வாறே பெண்கல்வி முதலிய விஷயங்களில் இத்தேசத்தில் இருக்கும் கெடுதிகளெல்லாம் நாளடைவில் நீங்குமென்று நினைக்கிறோம்.

---

ஜப்பான்தேசத்தில் மாதர்களுக்காக பிரத்தியேகமாக ஒரு யுனிவர்சிடி யிருக்கிறது. இங்கு 82 மாதர்கள் பி-ஏ. பட்டம் பெற்றிருக்கிறார்கள். தற்கா லம் 800 மாதர்கள் படித்துக்கொண்டு வருகிறார்கள், அந்த யுனிவர்ஸிடிகட்டி டம் விசாலமாயும் பார்ப்பவருக்கு அழகாயுமிருக்கிறது. இடம் போதாமை யால் இன்னும் அதை விஸ்தாரமாய்க் கட்ட உத்தேசித்திருக்கிறார்களாம். இப்படியல்லவோ இந்தியமாதர்களும் உயர்ந்தகல்வியிற்றேற வேண்டும். ஆ ளுல் அவ்விதம் செய்ய இங்கு தனிமையான காலேஜ்யில்லாத குறையொ ன்று. அவ்விதமிருந்தபோதிலும் சிலர் பெண்களுக்கு உயர்ந்த கல்விபுகட்டக் கூடா தெனமறுப்பார்கள். இப்பொழுதே சிலர் பெண்கல்விக்கு விரோதமா யிருப்பவர்கள் அப்பொழுதும் மிகவிரோதமா யிருப்பார்களென்பதற்குத்

தடையுண்டோ? ஜப்பான் இந்தியா வாகுமோ? காரியவாதிகள் ஜப்பானி யர்கள்; வாய்ப்பந்தலுள்ளவர்கள் நம்மவர்கள். "ஸ்திரீகள் விருத்திக்கு வந்தா லொழிய ஒரு தேசம் விருத்திக்கு வருவது கஷ்ட" மென ஒரு சரித்திரக் காரர் சொன்னது பொய்யாகுமோ.

---

**மங்கப்பட்டணம் ரேயில்வே விபத்து:**—செப்டம்பர்மீ 11௳ மாலை சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பம்பாயுக்குப் புறப்பட்ட மெயில் வண்டியானது அடுத்தநாள் அதிகாலை சுமார் $3\frac{1}{2}$ மணிக்கு மங்கப்பட்டணம் ஸ்டேஷனை விட்டுச் சென்றதும் அருகிலிருந்த ஒரு பள்ளத்தில் அதிக ஜலம் வந்து ரெயில்வே பாலத்தை இடித்துவிடவே வண்டி கீழே விழுந்து அதினால் அநேக உயிர்ச்சேதங்கள் உண்டாயிற்றென்பது யாவருடைய மனதிலும் பதிந்திருக்கும். இப்பள்ளத்தில் இதுவரையும் ஐந்து அடிக்குமேல் ஜலம் வந்ததே கிடையாது. ஆனால் வண்டி விழுந்த அன்று 13-அடி ஜலம் வந்ததும் இவ்விபத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் ஒரு பிரதம அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் பிரகாரம் வீழ்ந்த வண்டியில் பிரயாணம் செய்தவர்கள் 153 ஜனங்கள் என்றும், இதில் பிரேதமாய் அகப்பட்டவர்கள் 64, உயிர் தப்பியவர்கள் 60, ஆஸ்பத்திரியிலிருப்பவர்கள் 5, என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே, 24 ஜனங்கட்குக் கணக்குக் கிடைக்கவில்லை. இவ்விருபத்துநான்கு ஜனங்களில் சிலர் பிழைத்தும் இருக்கலாம்; ஆனால் அநேகர் இறந்திருக்கலாம் என்றே தோன்றுகிறது. சங்கதிகள் இவ்வாறிருக்கச் சிலர் இவ்விபத்தில் 300, 400 ஜனங்களுக்குக் குறையாது மாண்டிருக்க வேண்டுமென்றும் இதைப்பற்றி கவர்ன்மெண்டார் அதிகமாய்க் கவனித்து கமிட்டிவைத்து விசாரிக்கவேண்டுமென்றும் கூறுகின்றார்கள். வீழ்ந்த வண்டித்தொடரில் இருந்த வண்டிகளில் எத்தனை ஜனங்கள் ஏறியிருக்கக்கூடும் என்று யோசிக்கும் பக்ஷத்தில் அவர்கள் கூற்று அசம்பாவிதம் என்றே புலப்படும். இவ்விபத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் கடைசியான ரிபோர்ட் ஒன்று சீக்கிரம் வெளியிடுவார்கள். பிரதம ரிபோர்ட்டிலேயே இவ்விபத்தால் நேர்ந்த உயிர்ச்சேதங்களைக் குறித்து கவர்ன்மெண்டார் மிகுந்த மனநோவுற்று உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்காக அத்தியந்த அநுதாபமடைவதாகத் தெரியவருகிறது. நாமும் உயிரிழந்தவர்கட்கும் அவர்களின் இனத்தாருக்கும் மிக அநுதாபப்படுகின்றோம். கடைசி ரிபோர்ட்டில் கவர்ன்மெண்டார் இவ்விபத்து சம்பந்தமான சகல சங்கதிகளையும் வெளிப்படுத்துவார்களென் றெண்ணப்படுகின்றது.

Prnited at the Ripon Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 JAN 1903
MADRAS

302

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. IV } Madras: October 1902. { No 8
புத்தகம் ௪. } சென்னப்பட்டணம் 1902 அக்டோபர்மீ. { இல. அ.

## சத்தியத்தின் பெருமை.

சத்தியம் என்பது வாய்மை, உண்மை, கட்டுரை, உறுதிமொழி, வாக்குறுதி, பொய்சொல்லாமை, மெய்கூறல் எனப்பல அர்த்தங்கள் தரும் ஒரு பதமாயிருக்கின்றது. அச்சத்தியத்தை உலகத்திலுள்ள மக்கட்பிறவிகளுள்ளடங்கிய ஆண் பெண் என்கிற இருபாலாரும் ஒப்பற்ற இரத்னாபரணம் போலக் கொண்டு போற்றிவாழவேண்டும். அச்சத்தியத்தையுடைய ஆண்மக்கள் சத்தியவான்களென்றும், பெண்மக்கள் சத்தியவதிகளென்றும் சொல்லப்படுவார்கள். அதனைப்பொருந்தியிராதவர்கள் அசத்தியவான்களென்றும், அசத்தியவதிகளென்றும் கூறப்படுவார்கள். இதனால் உலகத்திலுள்ள ஆண்மக்களுக்கும், பெண்மக்களுக்கும் இது இன்றியமையாத ஒரு சாதகமாயிருக்கிறதென்பதையும், அதனை ஒவ்வொருவரும் தங்கள் ஆயுள் அளவும் கடைப்பிடித் தொழுகவேண்டுமென்பதையும், அதனையுடையவர்களைத்தான் உலகத்திலுள்ள மேலோர்கள் ஒரு பொருளாகமதிப்பார்களென்பதையும், அங்ஙனமல்லாதவர்களைமதிக்கமாட்டார்களென்பதையும், நாம் நன்றாய் தெரிந்து கொள்ளவேண்டியவர்களாயிருக்கின்றோம்.

இது பற்றியே வேதத்திலும் "சத்தியம்வத" எனசொல்லப்பட்டிருக்கிறது. வாய்மை என்றபதம் வாயினிடத்து உண்டாதல் என்றுபொருள்படும், இப்பதம் மெய்மை, உண்மை என்னும் அர்த்தத்தில்பெரியோரால் உபயோகிக்கப்பட்டு வருவதை யோசித்துப்பார்க்கையில், மனிதனுடைய வாயினிடமாக இயற்கையில் உண்டாகி வெளிப்படுவது மெய்மையே என்று தெளிவாய் விளங்குகின்றது. ஆனதுபற்றி மெய்யுரைத்தல் நமது இயற்கைக்கு ஏற்றதென்றும்,பொய்யுரைத்தல் நமதுஇயற்கைக்கு ஏற்றது அன்றென்றும் நாம்வசனிக்கும் ஒவ்வொருவார்த்தையும் மெய்யாகவே இருத்தல் வேண்டு

மென்றும் மானிடலட்சண சாஸ்திரிகள் எண்ணுவது சரியே. நம்முடைய இயற்கைக்கு ஏற்றதைச்செய்வது அதிகசுலபமென்பதையும், ஏலாதவற்றைச் செய்வது அதிககஷ்டமான தென்பதையும் ஒருவரும் மறுக்கத்துணியமாட்டார்கள். ஒவ்வொருமனிதனும் இரண்டுகாலால் நடக்கிறான். இது இயற்கையின் சுபாவம். ஆனால் இரண்டுகால்களையும் மேலே தூக்கிக்கொண்டு கைகளால் நடப்பது சரியன்று. இது இயற்கைக்கு விரோதமானது. இது போல் இயற்கையாகிய மெய்யைவிட்டு பொய்யைப் பேசுவது மிகவும் தப்பு. அவ்விதம் பொய்பேசுபவர்கள் ஒரு சமயத்தில் தாங்கள் பேசியது பொய் யென்று ஒத்துக்கொள்ளுவார்கள். ஆதலின் மனச்சாட்சிக்கு விரோதமாய் பொய்யுரைப்பது மிக்கதப்பென்பதை ஒவ்வொருவரும் அறிவாராக.

இச்சத்தியத்தைக் கையாண்டவர்களே அழிந்தும், அழியாப்புகழுடம்புபெற்றவர்களாய், இன்னும் அவர்களுடைய பெயரானது இவ்வுலகில் நிலைபெற்று நிற்கின்றது. சத்தியத்தை தம் உயிர்க்குறு துணையாகக் கொண்ட அரிச்சந்திர மகாராஜாவானவர் சத்தியத்தைப்பாதுகாத்து வந்ததனால், தம்முடைய அரசு, பூமி, பொருள், பெண்டு பிள்ளை முதலியவைகளைத் துறந்து தனியாய் வருந்திக் கொண்டிருக்கும்போது, அவரிடம் விஸ்வாமித்திரமகாரிஷியானவர் சென்று இப்பொழுதாவது நீர் ஒரு பொய் சொல்லிவிட்டால் நான் உம்மைவிட்டு விடுகிறேன் என்று கூறினார். அதைக்கேட்ட அரிச்சந்திரர் பின்வருமாறு கூறிசத்தியத்தின் பெருமையை நிலை நிறுத்துகின்றார்.

அதாவது:—

"செய்மையன்மையினுயிர்க் கொருத்துணை யெனச்சிறந்த
வாய்மையா லகந்தூய்மையா மற்றிலம்புயத்தைத்
தூய்மைசெய்வது நீரலாற்சொல்லின் வேறுளதோ
நோய்மைசெய்யினும் வாய்மையே நோன்பெனக்கருதி."

புறக்கருவிகளாகிய அவயவங்களைச் சுத்திசெய்வதற்கு நீர் அமைந்திருப்பதுபோல, அகக்கருவியாகிய மனதைச் சுத்திசெய்வது உண்மைபிறழாமலிருப்பதேயாகும். ஆகையால் அவ்வாய்மையை நான் ஒரு விரதமாகக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னை எவ்வளவு வருத்தினபோதிலும் நான் உண்மைபேசுவதிலிருந்து சிறிதும் பிசகமாட்டேனென்று கூறி மீண்டும்,

"இம்மையம்மை வீடெனமறைபுலங் கொளவியம்பும்
மும்மையுந்தரு முறையுடைத்தெனு நிலைமுரணி
யெம்மையாழ்வயிற் றடக்கிமீட்டுமிழ் கலாவெரிவாய்
வெம்மைகூர்நரகுய்க்கினு மெய்ம்மையை விடேமால்."

உலகவின்பம், சொர்க்கவின்பம், மோக்ஷவின்பம் என்று வேதம்சொல்லுகிற மூன்றுவித இன்பங்களையும் பொய்சொல்வதினால் ஒருங்கே அடையக்கூடியதாயிருந்தபோதிலும், பொய் சொல்லாததனால் என்று மீளாநரகத்தில்



நான் அழுந்தி அவஸ்தைப்படுவதா யிருந்தாலும் சத்தியத்தைக்கைவிடமாட்டேனென்று கூறினார். பின்னும் சத்தியத்தின் பெருமையை வலியுறுத்திக் கூறும்பொருட்டு,

"புலையனும்விரும்பாத விப்புன்புலால் யாக்கை
நிலைபெனுமருண் டுயிரினுநெடி துறச்சிறந்தே
தலைமைசேர்தரு சத்தியம்பிறழ்வது தரியேம்
கலையுணர்ந்த நீயெமக்கிது கழறுவதழகோ."

என்று கூறினார். அதாவது நீசனும் விரும்பிக்கொள்ளாத இந்தச் சரீரத்தை நிலையுள்ளதென்பதாக மதித்து, சத்தியத்தை விடமாட்டேன். உயிரைவிட்டாவது சத்தியத்தைப் பாதுகாக்க விரதங்கொண்ட எனக்குவேத முதலிய கலைகளையெல்லாம் முற்றுமுணர்ந்து பரமஞானியாய் விளங்கும்தாங்கள் சத்தியத்திலிருந்து பிறழும்படி போதிப்பது அழகல்லவென்று கூறினார். கடைசியாக அவ்விஸ்வாமித்திரர் தம்மன உறுதியைக்கண்டு தன்னைவிட்டு வெட்கிப் போகும்படியாக மறுபடியும் சத்தியத்தின் பெருமையை இன்னும் வற்புறுத்திக் கூறுகின்றார்.

"பதியிழந்தனம் பாலனையிழந்தனம் படைத்த
நிதியிழந்தனமினி நமக்குளதென நினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலே மென்றார்
மதியிழந்துதன் வாயிழந்தருந்தவன் மறைந்தான்."

இதனால் அரிச்சந்திர மகாராஜன் பின்வருமாறு கூறியதாகத் தெரிகிறது. அதாவது நான் இதுகாறும் சத்தியத்தைப் பாதுகாத்துவந்ததனால் என்னுடைய நாட்டையும், என்னுடைய அருமைக் குமாரனையும், என் அளவில்லாத செல்வத்தையும் இழந்துவிட்டேன்; இனி எனக்குகிடைக்கக்கூடியதாக நான் நினைத்துக்கொண்டிருக்கிற மோட்சத்தை யிழந்துவிடக்கூடியதாயிருந்தாலும் நான் மேற்கொண் டொழுகிவரும் சத்தியத்தை மாத்திரம் இழக்கமாட்டேனென்று உறுதியாகச் சொன்னார். அதைக்கேட்ட விஸ்வாமித்திர மகாரிஷியானவர் தம் அறிவுகெட்டு, மறுபேச்சுபேச வாயில்லாமல் போய்விட்டார். தன்னுடைய ஆபத்துகாலத்திலும் சத்தியத்தையே அரும்பொருளாக மதித்து தன்னுடைய குருவாகிய வசிஷ்டருக்கும், விஸ்வாமித்திரருக்கும் நடந்த வாக்குவாதத்தை அறியாமலே பெரியவராகிய விஸ்வாமித்திரருடைய வேண்டுகோளை பலதடவை மறுத்து மறுத்து சத்தியத்தையே நிலை நாட்டினமையால்தான் அவர் என்றும் அழியாப்புகழுடம்பு பெற்றதுமன்றி, தன்னுடைய குருவுக்கும் தெய்வசபையில் அழியாப்புகழையடைவித்தார்.

சத்தியமானது ஒருதரம் சொன்னசொல்லை மறுதரம் மறுக்காமலிருப்பதுமாகும். அரிச்சந்திர மகாராஜாவானவர் தாம் விஸ்வாமித்திருக்கு

கொடுக்க ஒப்புக்கொண்டபொன் அளவைகுறைவாகக் கொடுத்ததனால் இவ்வளவுபொறுக்க முடியாத கஷ்டங்களை யடைந்தார். இதைக்கண்ட விஸ்வாமித்திரர் தன்னுடைய சபதத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணமுடையவராய் அரிச்சந்திர மகாராஜாவினிடம் வந்துதான் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளவில்லையென்று, சொன்னசொல்லை மறுத்துச்சொல்லும்படிகேட்க அவர் அப்படிச்சொல்ல மனமொப்பாமல், தான்கொண்ட சத்தியத்தையே நிலை நாட்டினர். தன்னுடைய குருவுக்கும் விஸ்வாமித்திரருக்கும் தெய்வசபையில் நடந்தவாக்குவாதத்தைதான் அறிந்து சத்தியத்தைநிலைநிறுத்தினரோ வென்றால், அதைத் தெரிந்துகொள்ளாமலே தான் சத்தியத்தை நிறுத்தினரென்றும் நிலைநிறுத்தவேண்டியது தமது முக்கியகடமையென்றே எண்ணி தான்செய்ததாகவுங் கொள்ளவேண்டும். ஒருபுகழை இச்சித்து நிலைநிறுத்தினரோவென்றால் அதுவுமன்று "இனிநமக்குளதென நினைக்கும்கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலேம்" என்றுமோட்சத்தை யிழந்தபோதிலும்சத்தியத்தை யிழக்கமாட்டேனென்று கூறியவர்புகழையிச்சித்து நிலைநிறுத்தினரென்றுகூறலும் பொருந்தாது "நமக்கு" என்று பன்மையாகக் கூறியதால், தபோபலங்களையெல்லாம் ஒருங்கே யடைந்த நீரும், நானும் எதிர்பார்த்திருக்கிற மோட்சத்தை யிழந்துபோனாலும் என்று அவரையும் உடன்கூட்டிக் கூறினரென்றாலும் பொருந்தும். ஆகவே அரிச்சந்திரர் தாம் பிறவியெடுத்ததற்கு சத்தியத்தை நிலைநிறுத்த வேண்டியது தமதுகடமையென்றே கொண்டாரென்பதே பொருந்தும்.

சத்தியத்தை நிலைநிறுத்துவதானது தன்பொருட்டென்றும், பிறர்பொருட்டென்றும், இருவகைப்படும். அரிச்சந்திரர் நிறுத்தினது இருவகையினும் பொருந்தும். ஒருவகையானது அவருக்குத்தெரியாமலே நடந்ததாகக் கொள்ளவேண்டும். நிற்க, மகாபலி சக்கிரவர்த்தியும் விஷ்ணுவுக்கு கொடுக்கிறேன் என்று சொன்ன நிலத்தை கொடுத்தார். இவ்விதமே உலகத்தில் மஹாவீரர்களென பெயர்பெற்ற மஹான்கள் பொய்யை பேசியதேயில்லையென இந்தியா, இங்கிலாந்து ஜெர்மனி ஸ்காட்லாண்டு முதலியதேசச் சரித்திரங்களால் தெரியவருகிறது.

"பொய்யாமை பொய்யாமை யாற்றிறைப்பாற் செய்யாமை செய்யாமை நன்று."

பொய்பேசாமல் சத்தியத்தையே ஒருவன் எப்பொழுதும் பேசிக்கொண்டுவருவானானால் அதுவேபோதுமானது; வேறு தர்மத்தை அவன் செய்யவேண்டுவதில்லை என தெய்வப்புலவர் கூறிய திவ்வியமானவாக்கை தீர்க்காலோசித்துப்பார்த்தால் பலதர்மங்களை ஒருவனே செய்வது சாத்தியமாகாதென்பதும் அவ்விதம் செய்யமுயன்றால் சிலதவறுமாயின் குற்றம் உண்டாகுமென்பதும் மற்ற தருமங்களெல்லாம் கொடுக்கக்கூடிய பயனை சத்தியமொன்றே தரவல்லதென்பதும் இதையே ஒருவன் குறையொன்று மில்லாமல் செய்துவருதலே அவன் ஈடேறுவதற்குப் போதுமானதென்பதும் அவருடைய கருத்தென்று ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. மேலும் சத்தியமே பராபரமென்பது முதியோர் கடைபிடியாகையால் சத்தியத்தை அவசியம் நாம் கையாடவேண்டியது.



# * டெங்கு ஜுரம். DENGUE FEVER.

BY

**Mrs. E. WINCKLER KING, M. D.,**
**L. M. S., L. R. C. P., L. R. C. S., &c.,**
*Superintendent,—Victoria Caste & Gosha Hospital.*

மனிதர்களைப்பிடிக்கிற ஜுரங்களுள் இது ஓர்வகையாம். இதுமுடக்குமாரி, டாண்டி ஜுரம் (Dandy Fever) முதலிய பலபெயர்களால் வழங்கிவருகிறது. சற்றுவெப்பமான நாடுகளில்தான் இந்நோய் அதிகமாக காணப்படுகிறது. இச்சுரம் அதிகநாள் நீடிக்கிறாவிடினும் நோயாளியின்கைகால் முதலிய அவயவங்களின்ஒவ்வொரு மணிக்கட்டிலும் மிகுதியான வலி தோன்றுவதுடன் அவன் பல நாள்வரையில் வெளியே நடமாடவாவது தன் அலுவல்களை கவனிக்கவாவது முற்றிலும் சக்தியற்றவனாகசெய்துவிடுகிறது. இதுகண்ட சிலதினங்களுக்குள் நமது தேகத்தில் அரிப்புஉண்டாவதுமல்லாமல் சொரி சிரங்குகளும் தோன்றுகின்றன. இச்சுரம் ஒருவனுக்கே இரண்டு மூன்று முறை விலகி விலகி வருவதை நாம்காண்கிறோம். இது இந்தியா, பர்மா, பாரசீகம்(Persia) இஜிப்து (Egypt)வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, மேல் இந்திய தீவுகள் முதலிய இடங்களில் மிக ஜாஸ்தியாக காணப்படுகிறது. இதுகுளிர்காய்ச்சல் மற்றைய கடுஞ்சுரத்தைப்போல் திடீரென்று வந்தபோதிலும், தொத்துவியாதி யென்பதற்கு ஐயமேயில்லை. இதுமனிதர்கள் வழியாகவே ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்கு பரவுகிறது. நன்றாய் பாதுகாக்கப்படாத இடங்களில் வெகு சீக்கிரம் உலாவுகிறதை நாம் காண்கிறோம். இரண்டு அல்லது மூன்று தினங்களுள் இச்சுரம் வந்து வந்தவாறே நீங்குவதும் யாவரும் அறிந்ததே. தென்னிந்தியாவில் 1872, 1873 ம் வருஷங்களில் இச்சுரத்தால் கிழவர்களன்றி சிறுவர்களும் தனவான்களன்றி ஏழைஜனங்களும் அடிபட்டு வருந்தியதை நம்பெரியோர் சொல்லக் கேட்கிறோம்.

* *Our thanks are due to Mrs. E. W. King, M. D. for her special contribution to our lady readers.*

ஒருவனுக்கு இந்நோய் தோன்றியமாத்திரம் அவன் சரீரத்தில் இரண்டொருமணிக்கட்டுகளில் (அநேகமாய் கைவிரல்களிலும் கால்விரல்களிலும்)

**இதன் குணங்கள்.**

மிகுந்த வலிவுண்டாவதுமல்லாமல் தலைநோயும் கடுமையான ஜுரமும் ஒன்றன்பின் ஒன்றாய் வெகு சடிதியாக தொடர்கின்றன. தேகத்திலுள்ள இதர பாகங்களிலும் வரவர வலிபரவுகின்றது. ஆனால் ஒருபாகத்தில் வந்தவுடன் மற்றொருபாகத்தில் அவ்வலி குறைந்துவிடுவதும் ஆச்சரியமாகத்தான் காணப்படுகிறது. இவ்வகை ஜுரத்தால் தேகத்தில் மணிக்கட்டுகள் தளர்ந்து பலக்குறைவு நேரிடுகிறது. மேற்சொன்ன தலைநோய் வருங்காலத்தில் நமது கண்முழிகளிலும் வலி உண்டாகிறது. ஜுரமோ 102 முதல் 105 டிகிரி (Degree) வரையில் அடிக்கிறது. தாது நூற்றுக்குமேல் சற்று அதிகமாகத்தானிருக்கிறது. சிலவேளையில் நெஞ்சுகரிப்பும் கழுத்திலுள்ள கோளங் (Glands) களில் வலியுமுண்டு. அநேக இடங்களில் இச்சுரம் முதலில் வரும்போது முகம் சிவந்து சொரி சிரங்குகளும் தோன்றுகின்றன; ஆயினும் சுரம் தணியத்தணிய சொரிகளும் விலகிவிடும். சில சமயங்களில் 24-மணி நேரத்திற்கு இதுகண்டு, பின்பு அடங்குவதை நாம் கண்டிருக்கிறோம். திடீரென்று தேகமெல்லாம் வியர்த்து சுரம் நீங்குவதுமுண்டு. இதன்வலி குறையக்குறைய நோயாளி கொஞ்சம் கொஞ்சமாக சௌக்கியமடைவானாயினும் படுத்த படுக்கையினின்று சிலநாட்கள் வரையில் வெளியே நடமாட எண்ணுவது அசாத்தியம். இச்சுரம் இரண்டாவதுமுறை ஒருவனுக்கு வரும்போது நமது உள்ளங்கை முதலிய இடங்களில் அரிப்பெடுத்து பின்பு மற்றை இடங்களிலும் இதேவிதமாக பிடிக்கிறது. சமயத்திற்கு தக்கவாறு 2, 3 மணிநேர முதல் 2, 3 நாள்வரையில் இவ்வரிப்பு ஜாஸ்தியாக காணப்படுகிறது. இச்சுரம் விலகினபின்னும் கைகால்கள் நீட்டவும் மடக்கவும் முடியாமல் பலநாளிருந்தாலும் இருக்கும். கர்ப்பணிகள் இச்சுரத்தில் வருந்துவதால் அகால பிரஸவம் அநேகமாய் நேரிடுகிறதென்பதைக் கேட்க விசனிக்கிறோம். சிலபோகளுக்கு இச்சுரம் வந்தவுடன் 2, 3 தினங்கள் வரையில் வாந்தியெடுப்பது வழக்கம். தற்காலம் இங்கு பரவி வருகிற ஜுரம் சாதாரணமாய் 8 நாளுக்குமேல் நீடிக்கவில்லை. சற்று முன்னமேயே அடங்கியும் விடலாம். இச்சுரம் நமது அதிர்ஷ்டவசமாய் உயிர்ச்சேதமில்லாததென அறிய சந்தோஷிக்கிறோம். தகுந்தவைத்தியமில்லாமலும் அறியாமையாலும் அபாயம் நேர்ந்தாலொழிய வேறுபயமில்லை.

நம்மவர்கள் இச்சுரத்திற்கு மருந்து கூடாதென்று மறுக்கிறார்கள். சாதாரண ஜுரம் வந்தால் எவ்வளவுவைத்தியம் செய்வார்களோ அவ்வளவு

**இதற்கு வைத்தியம்.**

கூடசெய்வதில்லை. இவ்விதம் செய்வதில் சுரத்தின் வேகத்தையும் நீட்சியையும் குறைக்கலாமென்பதை முற்றிலும் மறந்துவிடுகிறார்கள். நமது தேகத்திலுள்ள கெட்ட வாயுக்கள் கழியத்தக்க மருந்துகளை (Purgatives) விரோசனகாரிகளை அவசியம் எடுத்துக்கொள்ளவேண்டும். இத்துடன் நமது ஆகாரம் முதலியவைகளிலும் சற்று கவனமாகவே யிருத்தல் நலம். தேகம் உஷ்ணமாயிருந்தாலும் அரிப்பெடுத்தால் குளிர்ந்த ஜலத்தில் தோய்த்த பஞ்சி (Sponge) னால் துடைக்கலாம். சொரிக்கு சாம்பிராணி தைலத்தை உபயோகிக்கலாம். இச்சுரம் கடைசியாக விலகினவுடன் தேகத்திற்கு பலந்தரும் (டானிக்ஸ் Tonics) மருந்துகளை சாப்பிட்டால் பலமின்மை நீங்கி பலமுளராகி தந்தம் அலுவல்களை கவனிக்க சக்தியுடைவராவார்கள்.



# திரௌபதியின் சரித்திரம்.

## ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாண்டவரிடம் செல்லுதல்.

நிற்க ஸ்ரீகிருஷ்ணபகவான் பலராமன் முதலானவர்களை நோக்கிகேட்
டீர்களோ ஒரு அதிசயம், வில்லை வளைத்து திரௌபதியை யடை
ந்தவன் அர்ச்சுனனும், மற்றவர்கள் தருமன்முதலானவர்களாம்;
இவர்கள் அடுத்த தெருவில் ஒரு குயவன் வீட்டிலிருக்கிறார்க
ளென ஒரு முதிர்ந்த பிராமணோத்தமர் சொன்னார் என்று சொ
ன்னபொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய பந்துக்கள் சந்தோஷமடைந்
தார்கள். ஸ்ரீ கிருஷ்ணபகவான் “நானும் அண்ணாவும் சென்று அவர்களைப்
பார்த்து வருகிறோம்” என்றார். அவர்களும் மனக்களிப்புடன் உத்திரவளிக்
கவே ஸ்ரீ கிருஷ்ணபகவான் பலராமருடன் சென்று குந்திதேவியார் பாண்டு
புத்திரர்கள் முதலியவர்களைக் கண்டு ஆநந்தமடைந்து க்ஷேமசமாசாரத்
தை விசாரித்தார். அவர்களும் முறையே ஸ்ரீபகவானுக்கும் பலராமருக்
கும் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து க்ஷேமசமாசாரங்களை விசா
ரித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணபகவான் உங்களுக்கு இந்தப் பெண்கிடைத்தது
னால் உங்கள் சத்துருக்கள் நாசமடைவார்கள். உங்களுக்கு இலட்சுமிகடாட்
சமும்கிடைக்கும். உங்களுக்கு நல்லகாலமும் இனி உண்டாகுமெனசொல்லி
அவர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு சென்றார்கள்.

இந்தப் பிராமணன் ஜயத்தையடைந்தான். நாமெண்ணின எண்ணம்
வீணாகப்போய்விட்டது. இனி நாம் என்னசெய்வது என்று துருபதன் ஏக்
கம்கொண்டு மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு

**துருபதன் ஏக்கம்.**

தன் அருமைப் புத்திரனைக் கூப்பிட்டு, அப்பா குழந்
தாய்! நமது குழந்தைக்கு வாய்த்தவன் அர்ச்சுனனென்று
ஜனங்கள் சொல்லுகிறார்கள். நீ வேடம் தரித்துக்கொண்டு அவர்க ளிருப்

பீடத்திற்குச் சென்று அறிந்துவாவென்று சொன்னார். துஷ்டத்துய்ம்மன் உடனே மறுவேடம் தரித்து அங்கு சென்று அவர்களுடைய நடை, உடை, பாவனை முதலிய வற்றை அறிந்து தன் பிதாவிடத்தில் வந்து அப்பா! அவர்கள் பாண்டவர்கள் போல் தான் காணப்படுகிறார்கள், வயது முதிர்ந்த ஒரு மாதுயிருக்கிறாள். அவள் குந்திதேவியாரைப்போல் காணப்படுகிறாள் என்றான்; பின்புதுருபதன் பிராமணர்களில் மிக புத்தி சாமார்த்தியமுள்ள ஒருவரைக் கூப்பிட்டு பாண்டவரிடம் சென்று அவர்களுடைய விருத்தாந்தம் முதலியவைகளை யறிந்து வரும்படி அனுப்பினார். அவ்விதமே அப்பிராமணர் சென்று அவர்களைக் கண்டார்; அவர்கள் இவருக்கு தக்க மரியாதை செய்து ஐயா! தங்கள்யார்? எங்கிருந்து வந்தீர்களென கேட்டார்கள் ? அவர் நான் துருபத மகாராஜாவால் ஏவப்பட்டவர், உங்களுடைய மரியாதையையும் நல்லொழுக்கத்தையும், சௌரியம், முதலிய வைகளையும் பார்த்தால் பாண்டவர்கள்போல் காணப்படுகிறீர்கள்; தயைசெய்து தங்கள் குலம் கோத்திரம் முதலியவைகளைச் சொல்ல வேண்டுமென்றார். இதற்கு தருமர் உங்கள் மகாராஜா எங்கள் குலகோத்திரம் விசாரிக்க வேண்டியதில்லையே ! அவர் மகாபுத்திமான் ஆச்சுதே! அவர் யாதுகாரணம்பற்றி இவ்விதம் ஏக்கங்கொண்டிருக்கிறார் ? மகா புத்திசாலியும் பகுத்தறிவுடையவருமாகிய தாங்களும் இவ்விதம் கேட்கலாமா வென சொன்னார். அவர்சரிதான் என பதிலுரைத்து விடை பெற்றுக்கொண்டு மகாராஜாவிடம் சென்று நடந்த சகல விஷயத்தையும் தெரியப்படுத்தினார்.

பாண்டவருக்கு வரிசை யனுப்புதல்.

இராஜன் உடனே மந்திரிகளைக்கூப்பிட்டு பாண்டவர்களுக்கு வேண்டிய திவ்விய ஆபரணங்கள், வஸ்திரங்கள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு ரதத்துடன் சென்று அவர்களை இங்கு அழைத்துவரும்படிசொன்னார். மந்திரிமார்களும், துஷ்டத்துய்ம்மனும் அவ்விதமே மங்கள வாத்தியத்துடன் சென்று ஐயா எங்கள் தகப்பனார் தங்களுக்கு வரிசை யனுப்பிவைத்தார். இவைகளைத் தயைசெய்து அங்கீகரிக்க வேண்டும் மேலும் நல்ல ஆடை ஆபரணங்களிதோ இருக்கின்றன. இவைகளை யணிந்துகொண்டு தங்கள் மாதாவுடன் எங்கள் கிரகத்திற்கு வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறார் என்று சொன்னபொழுது அவர்களும் மிக மகிழ்ந்து ஆடை ஆபரணங்களை யணிந்து ரதத்திலேறி துருபத மகாராஜன் மாளிகைக்கு வந்தார்கள். துருபதன் மிக மரியாதையுடன் அவர்களை உள்ளே யழைத்துக்கொண்டுபோய் சபா மண்டபத்தில் உட்காரவைத்தான். கோகிலா தேவியார் குந்திதேவியாரையும், திரௌபதியையும் அழைத்துக்கொண்டுபோய் சந்தோஷமாய் பேசிக்கொண்டிருந்தாள். துருபதன் பாண்டவர்களைப் பார்த்து ஐயா ! நீங்கள் பாண்டவர்களோ அல்லவோ என்ற சந்தேகம் என்னை வாதிக்கிறது. இதை



306

தயவுசெய்து நீக்கி என்னைச் சந்தோஷப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

தருமர், மகாராஜாவே! உமக்கேன் இக்கவலை; உமது எண்ணம் வீணாகுமோ? உமக்கும் எங்களுக்கும் தெய்வகிருபை யிருக்கிறதென்றார். அவர் சந்தோஷித்து, உங்கள் சுயரூபத்தைக் காண்பிக்க வேண்டுமென்று சொன்னவுடன் அவர்கள் தங்கள் சுயரூபத்தை வரப்பிரசாதத்தால் அடைந்தார்கள். இவர்களை மகாராஜாவும் மற்றவர்களும் கண்டுமகிழ்ந்து ஆநந்தசாகரத்தில் மூழ்கினார்கள். உடனே மகாராஜா எழுந்து திரௌபதியிடம் சென்று அம்மா குழந்தாய்! இதோ வா, ஒரு அதிசயம் காண்பிக்கின்றேன் என்றுசொல்லி சபாமண்டபத்திற்கு அவளையிட்டுக்கொண்டுவந்தார். அவள் பாண்டவர்களைக்கண்டு ஆநந்தித்து ஆ! ஆ! நாம் அடைந்தபாக்கியமே பாக்கியம் எனச்சொல்லிக்கொண்டு தனதுகணவனை இடைக்கண்ணால்இன்னொருதடவை பார்த்துவிட்டு தனது தாயாரிடத்திற் சென்று அம்மா! சபாமண்டபத்தில் எனது கணவரிருக்கிறார் என்றாள். தாயாரும் மற்றவரும் சென்று அவர்களைப் பார்த்துவிட்டு நமது புத்திரி அதிர்ஷ்டவதியென்று எண்ணிக்கொண்டு குதூகலத்துடன் அந்தப்புரம் சென்றார்கள். பின்புதுருபதன் தனது குமாரத்தியின் விவாகத்தைப்பற்றி பேசினார். தருமர், எங்கள் தாயாரிடத்தில் அர்ச்சுனன் ஒரு கனியைக்கொண்டுவந்திருக்கிறோம் என்றபோது எங்கள் மாதா நீங்கள் ஐவரும் புசியுங்களென்றாள். ஆகையால் நாங்கள் மாதுருவாக்கியத்தைத் தவறாமல் இக்கன்னிகையை நாங்களைவரும் மணம் செய்யவேண்டு மென்றார். மகாராஜா மறுபடியும் வியாகூலத்தை யடைந்து இதென்ன விபரீதமாகவிருக்கிறதே என்று எண்ணிக்கொண்டிருந்தார்.

வியாசர் வருகை.

தபோமகிமையுடைய வேதவியாசர் பாஞ்சாலன் சபைக்கு அப்பொழுது வந்தார்; பாஞ்சாலனும் பாண்டவர்களும் அவருக்குச் சோடச உபசாரம் செய்தார்கள் வேதவியாசரும் அவர்களுடைய க்ஷேம சமாசாரத்தை விசாரித்தார்.

பின்பு வியாசமகாமுனிவர் துருபதனைப்பார்த்து மகாராஜாவே நீர் ஏதோ வியாகூலத்துட னிருப்பதாகத் தெரிகிறதென்றார். துருபதன் பாண்டவர்கள் சொன்னதைச் சொன்னார். வியாசர் அது சரியே; எப்படியெனில் திரௌபதிக்கு ஐந்து புருஷர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; குந்திதேவியின்வாக்கிலும் அவ்விதமே வந்ததும் உண்மையே; இந்த திரௌபதிக்கும் இந்த ஐந்துபேரிடத்திலும் மனதுண்டு; இவர்களுக்கு மவ்வாறே எண்ணம்; ஆனால் இது இந்த சனனத்தைப்பற்றியதல்ல; முற்சனனத்தைப்பற்றியதாகையால் அது சங்கதி உமக்கு சொல்லுகிறேன் என்றார். நாளாயினி, இந்திராணி எனப்பெயர்கொண்டு ஜனித்ததிரௌபதியின் விருத்தாந்தத்தை இராஜனுக்குச் சொன்னார். இராஜன் சந்தோஷப்பட்டு விவாகத்திற்கு வேண்டிய காரியங்களைச்செய்ய உத்திரவு யளித்தான்.

## பத்திராதிபர் குறிப்பு.

### அதைச் செய்.

அமெரிக்காவில் நியூயார்க் என்ற நகரத்தில் கூப்பர் பாடசாலை யொன்றிருக்கிறது. இதை ஸ்தாபித்தவர் பீற்றர் கூப்பர் என்பவர். இவர் சிறுவயதில் ஒரே வருடகாலந் தான் பாடசாலைக்குச் சென்றார். இவர் மிக ஏழைக் குடும்பத்தில் பிறந்தவரானதால் மிகக் கஷ்டப்பட்டு ஜீவிக்கவேண்டியிருந்தது. இவரது 8-வது வயதில்முயல் தோல்களை சுத்தம் செய்யும் வேலை செய்து வந்தார், பின்பு நியூயார்க்கு நகரத்திற்குச் சென்று ஒருவண்டி செய்பவரிடம் கூலிவேலை செய்துவந்தார். உலக இன்ப மனுபவிக்க பணமுமில்லை காலமுமில்லை. ஆனால் நன்மைசெய்ய வேண்டுமென்ற நம்பிக்கை இவர் மனதில் வேரூன்றியிருந்தது. இதே இன்பமென்று எண்ணியிருந்தார். சிலகாலஞ் சென்றபின் வாரத்திற்கு 50- சென்ட் சம்பாதித்துக் கொண்டிருந்தபொழுது "நான் அதிக திரவியத்தையடைந்தால் நியூயார்க்கிலுள்ள ஏழைப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் பிரத்தியேகமாய் ஒரு தர்ம பாடசாலை ஏற்படுத்துவேன்" என தனக்குள் சொல்லிக்கொண்டிருந்தார். இவ்விதமே இவர்தமதுவிடா முயற்சியால் அளவற்றதிரவியத்தைச் சம்பாதித்துவேழைப் பிள்ளைகளும் பெண்களும் தர்மமாக படிக்கும்படி ஒருபாடசாலையையேற்படுத்தினார். இதைத் தான் கூப்பர் பாடசாலை யென்று முதலில் சொன்னோம். "செய்ய உத்தேசித்திருப்பதைப்பற்றி வீணாகபேசாதே! அதை உடனேசெய்" என சித்திரம் எழுதுவதில் மிக சமர்த்தரான வில்லியம் ஹன்ட் என்பவர் கூறுகிறார். நம்மவர்கள் ஜனசாரகூட்டம் கூடும்பொழுதும் மேடையில் பிரசங்கம் செய்யும் பொழுதும், அல்லது ஒரு ஐரோப்பியருடன் பேசும் பொழுதும் பெண் கல்வியை விருத்திசெய்ய எனக்கு இஷ்டமிருக்கிறது ; நான் இதன்விஷயமாக உழைக்க முயன்றுவருகிறேன் என்பார்கள். பின்பு பெண்கல்வி விஷயமுடைய பத்திரிகையை எவராவது அவருக்கு அனுப்பினால் எனக்கு வேண்டாம் எங்கள் வீட்டு பெண்களுக்குப் படிக்கத் தெரியாதென சொல்வதும் வழக்கம். இப்படியிருக்கிறார்கள் சிலர்.

---

கும்பகோணம் பெண் பாடசாலையைக்குறித்து ஒரு மாது எழுதி யனுப்பி யதைச் சென்ற பத்திரிகையில் பிரசுரித்திருந்தோம். இப்பாடசாலையில் பெண்களுக்கு கல்வி வெகு சிரத்தையுடன் போதிக்கப்பட்டு வருகிறதென தெரிகிறது. மேலும் ஒருபெண் லோயர்சகண்டரி பரிக்ஷையில் தேறியிருப்பது அப்பாடசாலையின் தலைமைஉபாத்தியார் சௌபாக்கியவதி செல்லம்மாளுடைய ஊக்கத்தினாலும் முயற்சியினாலும்தான். பெண்களுக்கு மாத்திரம் கல்வி புகட்டாமல் ஆண்பிள்ளைகளுக்கு கல்வி புகட்டிவருபவர்கள் தங்கள் பெண்பிள்ளைகளுக்கும் கல்வி புகட்டிவர முயலவேண்டுமென்று சபைத் தலைவியாராகிய மிஸ் ஆர்னல்ட் சொன்னது மிகச் சரியானதே. நமது ரகுநாதராய ரவர்களின் பௌத்திரியும் கல்வி கற்று வருவதுடன் அப்பாடசாலையின் ஒவ்வொரு வருஷோற்சவ காலத்தில் ஆஜராயிருப்பதும் மெச்சத்தகுந்தது. மற்றவர்களும் இவ்விதம் தங்கள் பெண்களுக்கு கல்வி புகட்டிவந்தால் நலமன்றோ?

---



# 'A WORD TO HINDU YOUNG WOMEN.'

# இந்துப்பெண்களுக்கோர் சொல்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்று திருவள்ளுவனார் சொல்லியிருத்தலால் உலகத்தில் பெண்களாய்ப் பிறந்தவர்கள் தமக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களையுந் தழுவி மனதைக்கெட்டவழியிற் செல்லவிடாது கற்புநிலையில் நிறுத்தல்வேண்டும்.

"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்."

என்பதனால் ஒருவனுடைய மனைவியிடத்தில் நற்குண நற்செய்கைகள் உண்டாயிருத்தலால் அவர்கள் வீட்டில் ஒன்றுமில்லாதிருப்பினும் எல்லாம் உள்ளனவேயாம்; அவளிடத்தில் அந்நற்குணங்கள் இல்லையாயின், அவ்விடம் எல்லாமிருப்பினும் ஒன்றும் இல்லாததுபோலாம். கற்புடைய மனைவியில்லாத வீடானது தாமரையில்லாத தடாகமும், சந்திரனில்லாத ஆகாயமும், அரசனில்லாத நாடும், தலைவனில்லாத சேனையும், நற்சிந்தையில்லாத மனமும், கிருபையில்லாத கண்ணும், பயனில்லாத சொல்லும், மணமில்லாத மலரும்போல சிறப்பின்றி இடுகாட்டுக்கொப்பாகும்.

கண்டவர்கள் கேட்டவர்களெல்லாம் மகிழும்படி ஒருத்தி விவேகமும், கற்பும், இரக்கமும் மற்றுமுள்ள நற்குணங்களு முடையவளா யிருக்கவேண்டுமேயல்லாமல் விலையுயர்ந்த வஸ்திரம், ஆபரணம் முதலியவைகளால் அலங்கரித்துக்கொண்டு தண்டுமாரியாய் மினிக்கித்திரிதல் கூடாது; இப்படியிருப்பது 'விலைமகட்கு அழகு தன்மேனி மினுக்குதல்' என்று சொல்லியபடி இல்லறத்தில் வாழும் குலமகட்குச் சரியானதல்ல.

தெய்வச் செயலால் தனக்கு வாய்த்த புருஷன் மிக்க குரூபியாயிருந்தாலும் அவனை மன்மதனாகவும், நிரட்சர குட்சியாயிருந்தாலும் கல்விக் களஞ்சியமாகவும், அன்னவஸ்திரத்துக்குங் கதியில்லாத அஷ்ட தரித்திரனாகவிருந்தாலும் அவனைக்குபேரனாகவும் எண்ணி, அவனை அவமதியாமல் அவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்து அவனைத் தன்னால் இயன்றமட்டும் சீர்திருத்த முயலவேண்டும்.

மனைவியானவள் தன் கணவனுக்குத் தாதிபோலப் பணிவிடை செய்பவளும், மந்திரிபோல சமயோசிதமறிந்து நல்லயோசனை சொல்பவளும், பூமா

தேவிபோலச் சலியாத பொறுமை யுடையுவளும், வேசைபோல பர்த்தாவைப் பிரியப்படுத்துகின்றவளுமா யிருக்கவேண்டும்.

புருஷன் ஒருவேளைகோபித்தால் தானும் கோபித்துக்கொள்ளாமலும், அவன் வைதால் தானும் வையாமலும் அவன் ஏதாவது ஒரு காரியம் செய்யச்சொன்னால் அதற்கு மாறுதலான மற்றொருகாரியத்தைச் செய்திடாமலும் இருக்கவேணும்,

சோழநாட்டில் ஒரு வேளாளன் ஒரு நாள் தன் பெண்சாதியுடனே இன்றைக்குப் பெரியவர் ஒருவருக்கு அமுது படைக்கவேண்டும் என்று சொல்ல அவள் இதென்ன சங்கடமாயிருக்கிறது நல்ல வேடிக்கைதான் "தன்னைப்பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை யெடுக்கிறாள், தம்பி கும்பகோணத்திலே கோதானம் பண்ணுகிறான்" என்பதுபோல இருக்கிறது. "அஞ்சு மூன்றும் அடுக்காய் இருந்தால் அல்லவோ அறியாத பெண்ணும் கறியாக்குவாள்" அரிசி வேண்டும், மற்றப் பதார்த்தம் வேண்டும், இதற்கெல்லாம் நான் எங்கேபோகிறது, என்று சொல்ல, அவன் எங்கேயோ போய் வேண்டிய பதார்த்தங்களைச் சேகரித்துக்கொண்டு வந்து, அவளை சீக்கிரத்தில் சமை என்று சொன்னான். உடனே அவள் 'நீ போ' உனக்கு என்னவேலை, எனக்குத் தலைவலி பிராணம்போகிறது என்று சொல்லிக்கொண்டு பாயைவிரித்து நெடுமுக்காடிட்டுப் படுத்துவிட்டாள்.

சிலபெண்கள், புருஷன் கோபிக்கத் தங்கள் கோபத்தை அவரிடம் வெளியிடச் சரிப்படாவிடின் தங்கள் வீட்டில் இருக்கும் பாத்திரங்களை யுடைப்பதும் தங்கள் குழந்தைகளையடிப்பதும் மற்றும் இப்படிப்பட்ட துர்நடத்தைகளால் தங்கள் கோபத்தைநிவர்த்தி செய்துகொள்ளுகிறார்கள். இத்தகைய செயல்கள் கற்புடைமாதர்க்குச் சிறிதேனும் சிறப்பல்ல.

மாமனார், மாமியார், மைத்துனர்கள், நாத்தன்மார்கள் முதலியவர்கள் இப்படிப்பட்ட பெண் நமக்கு வாய்த்தது நமது பெரியோர்கள் செய்த பாக்கியந்தான் என்று சொல்லி மனமகிழும்படி நடந்துகொள்ளவேண்டும்.

புருஷனுக்குப் பொருள்வரவின்றி அவன் வறுமையால் துன்பப்படுங்காலத்தில் "ஏருழுகிறவன் என்னசெய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்" என்று நினைக்கவேண்டுமே யல்லாமல் அவன் மனம் சலிக்கும்படி அவனை எந்நேரமும் வருத்தப்படுத்தலாகாது. தான் மிக்க செல்வவான் வீட்டிற் பிறந்திருந்தாலும் வறியவனுக்கு வாழ்க்கைப்பட்டால் அவனைத்தன் செல்வச் செருக்கினால் அசட்டைபண்ணாமல் "மலையிலே விளைந்தாலும் உரலிலே வந்துதானே மசியவேண்டும்" என்பதை நினைத்து அவனுக்கு அடங்கி நடக்கவேண்டும்.



மாமியார், மாமனார் முதலானவர்கள், தெரியாமல் இப்பெண்ணைக் கொண்டோமே "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்துவிட்டதே" என்று விசனப்படும்படி ஒருவன் நடந்துகொள்ளலாகாது.

தன் கணவன் சம்பாதிக்கும் பொருளுக்குத் தக்கபடி ஒருவள் தன் வீட்டில் செலவு செய்யவேண்டுமே யல்லாமல், கணவனுக்குத் தெரியாமல் தான் கண்டபடி வேண்டியவர்களுக்கு வாரிக்கொடுப்பதினால் "ஏது இவள் கட்டிக்கொண்டவன் தலையில் சீக்கிரம் ஓட்டைக் கவிழ்த்து விடுவாள்போல் தோன்றுகிறது" என்று சொல்லுவதான கெட்டபெயர் வாங்குவது மிகவும் அருவருக்கத்தக்கது. இதனால் பிறருக்கு ஒன்றுமே கொடுக்கக்கூடாது என்பது தாத்பரியமல்ல. தமக்கு இயன்ற அளவு பிறருக்கு உதவவேண்டியது நல்லவர்களின் கடமை. தம்முடைய பொருளுக்குத் தக்கவாறு 'தேகி' என்று வந்தவர்களுக்குநாஸ்தி என்று சொல்லாமல் பிச்சையிட்டு அவர்களை சந்தோஷப்படுத்தி அனுப்பவேண்டும், அப்படி யில்லாமல் பிச்சைக்கு வந்தவர்களைக் கண்டபடிவைது சும்மா அனுப்புவது மிகக்கொடுமையான காரியம் 'இல்லையென்னுமிடம் பல்லியுஞ் சேராது' என்று பெரியோர் சொல்லுகிறார்களே.

"தந்தையாயினும் விழைவயிற்றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும் மைந்தராயினு மிகவும் வனப்புடைய ரெனிலவர் மேன்மட நல்லார் தம் சிந்தை நடந்திடும்."

என்று சொல்லியிருப்பதினால் ஒருவன், பிதாவானாலும், சகோதரர்களானாலும், பெற்ற பிள்ளையானாலும் மற்று எவரானாலும் அவர் இருக்குமிடத்தில் தனியாய் இருக்கலாகாது. மூன்று வயது புருஷனைக் கண்டால் முப்பது வயது பெண்பிள்ளையும் எழுந்திருக்கவேண்டு மென்கிறார்களே.

நடக்கும்போது தன் முந்தானை சமீபத்தில் நிற்கிறவர்களின் மேற்படும்படி வீசிக்கொண்டு மதயானைபோல் நடக்காமல் அன்னப்பட்சிபோல் நிலத்தைப் பார்த்தவண்ணம் தலைகுனிந்து நடத்தல் வேண்டும்.

கணவன் யாரோடாவது பேசிக்கொண்டிருந்தால் தானும் அங்கே போய் நின்றுகொண்டு அவன் தான் நிற்பதைக் கவனிக்காவிட்டாலும் "உங்களைத்தானே, அதென்ன சங்கதி எனக்குச் சொல்லப்படாதாக்கும்"; என்று புத்தியில்லாமல் கேட்கவாவது, அல்லது கதவுமறைவில் நின்று ஒற்று கேட்கவாவது கூடாது.

நல்ல இல்லறத்தை நடத்தவேணுமென்கிற விருப்பமுடையவர்கள் திருவள்ளுவர் மனைவியாகிய வாசுகியென்னும் மாதுசிரோமணியை உதாரணமாய்க்கொண்டு நடத்தல் நலம்.

ஒருநாள் வாசுகி தன்கணவன் சாப்பிடுவதற்காக இலைபோட்டு நீரில் போட்ட அன்னத்தை வைத்தபொழுது திருவள்ளுவர் இந்த அன்னம் மிகச் சுடுகிறது. விசிறியைக் கொண்டுவந்து சற்று விசிரு என்றார். உடனே அந்தம்மாள் விசிரியைக் கொண்டுவர அப்பொழுதுஅவ்வன்னத்தில்இருந்து புகை கிளம்புவதைக் கண்டு அதை விசிரி அவ்வன்னத்தை ஆரச்செய்தாள். கற்பினின்றும் சிறிதும் வழுவாத அம்மாது தன் கணவன் சொல்வது மெய் தானென்றுநினைத்து உடனே விசிரியைக்கொண்டு வந்ததனாலல்லவா, நீரிலே போட்டுவைத்திருந்த அன்னமும் சுடு அன்னமாய் அதில் இருந்து புகை கிளம்பியது! இக்காலத்திலோவென்றால் ஒரு புருஷன் குளிர்ந்தசோற்றில் இருந்து புகை கிளம்புகிறதுஎன்று சொன்னால் உடனே மனைவி உமக்கு சித்தஸ்வாதீனமில்லையா என்ன, கொஞ்ச நேரத்துக்குமுன் சரியாய் இருந்தீரே, நீரில்போட்ட அன்னத்தை வைத்திருக்கிறேன் சுடுகிறது என்கிறீரே என்று உரக்கச் சொல்லிக்கொண்டு உடனே அண்டைவீட்டுக்குப் போய்த் தன் கணவனுக்குப் பைத்தியம் பிடித்துப்போய்விட்டது என்று முறையிடுவாள்.

கற்பினின்றும் சிறிதும் வழுவாதவர்கள் குளிர்ந்த அன்னத்திலிருந்து புகை கிளம்பச்செய்வது ஒரு ஆச்சரியமா! பூர்வத்தில் சந்திரமதி காட்டுத் தீயைக் குளிரச்செய்யவில்லையா. தமயந்தி தன்னையிச்சித்தவனை யெரித்தாள். சாவித்திரி தன் நாயகன் உயிரை யமன்கொண்டுபோகிற தருணத்தில் அவனுடன் வாதாடி தன் கணவன் உயிரை மீட்டாள். இப்படியெல்லாம் இருப்பதினாலல்லவோ "பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர்ப் பெருஞ்சிறப்புப், புத்தேளிர் வாழுமுலகு" என்றபடி இம்மையில் கணவனைப் பூசித்த பெண்கள் மறுமையில் தேவர்களால் பூசிக்கப்பெற்றுப் பெறுஞ்சிறப் படைவார்கள் என்று பெரியோர் சொல்லுகிறார்கள்.

E. சுப்பிரமணியம்.

# நூர்ஜஹான்.

வட இந்தியாவில் மகம்மதிய சக்கரவர்த்திகள் 6 நூற்றாண்டுகள் அரசு செலுத்தினார்கள். அவர்களுக்குப் பிரதான நகரங்களாய் இருந்தவை டெல்லியும் ஆக்ராவும். இந்த ஆறுநூற்றாண்டுகளில் 3 சக்கரவர்த்தினிகள்தான் சரித்திரத்தில் தங்கள் பெயரை நிலைநிறுத்தினார்கள். இவர்களில் முதல்வராகிய சுல்தானாரீசியா வென்பவர் மிகக் கெட்டிக்காரரென்றும் ராஜதந்திர நிபுணரென்றும் பெயரெடுத் திருப்பினும் தம் கடைசிகாலத்திய துர்நடத்தையால் ஜனங்கள் மதிப்பையிழந்



தனர். அவர் சரித்திரத்தை யெழுதப் போதுமான சமாசாரமும் நமக்குவந்திலது.

இவர் 15-வது நூற்றாண்டில் 3 வருஷமே அரசு செலுத்தினார். இரண்டாவதவராகிய நூர்ஜஹான் சுமார் 15 வருஷம் ராஜகாரியங்களுக்கு மூலகாரணமாயிருந்தார். இவரைப்பற்றி யிரண்டு மகம்மதிய சரித்திரக்காரர் எழுதியிருக்கின்றார்கள். அடிக்கடி யிவரைப்பற்றி சரித்திரக்காரர் பின்னும், எழுதிவருகிறார்கள். அவ்விதமாகக் கடைசியாக எழுதப்பட்டது இந்திய மகளிர்க்கான பத்திரிகையில். இவரைப் பற்றித்தான் நாமும் இங்கே எழுத எடுத்துக்கொண்டது. நாம் கீழே எழுதுவதில் அநேக சமாசாரங்கள் மேற்படி இந்திய மேன்மகளிர்க்கான பத்திரிகையிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும். மூன்றாவதாகிய மம்டாஜ்மால் என்பவர் ஜிஹான்கீர் சக்கிரவர்த்திக்குப் பின் ஆண்ட சாஜஹான் சக்கிரவர்த்தியின் மனதுக்குரிய மனையாட்டி. ஜிஹான்கீர் சக்கரவர்த்தியின் மந்திரியாகிய ஆசப்கானின் புத்திரி. மேற்கூறிய நூர்ஜான் சக்கரவர்த்தினியின் மறுமகள். இச்சக்கரவர்த்தினியின் பெயரை நிறுத்தத்தான் ஆக்ராவில் டாஜ்மஹால் கட்டப்பட்டது. இவர் மிகநல்லவரென்றும் இவருடைய உதவியால் சாஜஹான் சக்கரவர்த்தி நற்செய்கை பலசெய்து நற்குணம் மிகுந்தவர் என்றும் சொல்லப்படுகிறது. இவரைப் பற்றியும் நமக்கு அதிகமாகத்தெரியாது; இருந்தாலும் சுல்தானாரிஜியா போலல்லாது கொஞ்சம் தெரிந்திருப்பதால் இவரைப்பற்றியும் சரித்திரக்காரர்கள் எழுதுவதுண்டு. நம் மாதர்மனோரஞ்சினியிலும்முன்னொரு சஞ்சிகையில் இச்சக்கரவர்த்தினியைப் பற்றி யெழுதப்பட்டதை நேயர்களெல்லோரும் பார்த்திருப்பார்கள்.

இக்காலத்திற்போல 16,17-வது நூற்றாண்டுகளில் பரம்பரைப் பெரிய மனிதர்களைப் நாம் பார்ப்பது கஷ்டம். ஒரு அரசன் அல்லது அவன் ஆசைக்குரிய மனைவி முதலியோர் நன் மதிப்பைற் பெற்றோ அல்லது தன் சாமர்த்தியத்தாலோ ஒரு காலத்து உன்னத ஸ்தானத்தை யடைதலும் அந் நன்மதிப்பை இழந்தாவது அல்லது தன்னிலும் அதிகமான சாமர்த்தியமுடையோன் ஒருவன் வருவதினாலாவது அவ்வுன்னத ஸ்தானத்தை இழத்தலும் சர்வசாதாரணம். ஒருவன் ஆயுள் நாளிலேயே இப்படியாகுமானால் அவனுக்குப் பின் அவன் சந்ததியாரின் நிலைமையைப் பற்றிக் கேட்பானேன்? இதற்கு உதாரணமாக நம் கதாநாயகியின் முன்னோர்கள் சரித்திரமே உபயோகப்படும். அவருடைய பாட்டனாகிய காஜா மகம்மத ஷாரீப் என்பவர் பார்ஸியா தேசத்து முதல் மந்திரியாயிருந்தார். ஆனால் அவர்குமாராராகிய மர்ஷாகியாஸ் என்பவர் உடுக்கத்துணியும் குடிக்ககஞ்சியு மின்றிதன் தேசத்தைவிட்டு இந்தியாவிற்கு வந்து பிழைக்க வேண்டியதாயிற்று. அவர் இந்தியாவிற்குவரும் வழியில் காந்தஹார் என்னுமிடத்தில் நம் நூர்ஜஹான் பிறந்தாள். அவருக்கு இதற்கு முன்னேயே மூன்று குழந்தைகள் இருந்

தன; அவற்றோடு இக்குழந்தையையும் வைத்து ஆதரிப்பது முடியாதகாரிய
மென்று அவருக்குப்பட்டது. ஆயினும் என் செய்வார்கள். பெற்றமனம்
பித்தன்றோ? பிள்ளையைக் கொல்லமனம் வரவில்லை, பிள்ளையை வளர்க்க ஏது
வுமில்லை ஆகையால் மனந்துணிந்து மார்ஷாகியாஸும், அவர்பத்தினியும் இக்
குழந்தையை வழியில் போட்டு விட்டுச் செல்லத் தீர்மானித்தார்கள். மனி
தர்கள் என்னென்ன எப்படி யெப்படிச் செய்தனரேனும் உலகத்தைக் காக்
கும் கடவுள் ஒருவர் தோன்றாது நிற்கின்றார் என்னும் சாஸ்திரங்களை மெய்ப்
பிக்கும் பொருட்டுத் தானோ என்னவோ அவர் செய்கையால் அக்காலத்
துச் சிலபணக்கார டில்லி வர்த்தகர் அவ்வழிச் சென்றபோது இக்குழந்தை
யின் உதவியற்ற நிலைமையையும் அதனுடைய அழகையும் கண்டு ஆற்றாத
வர்களாய் அக்குழந்தையை தங்களோடு எடுத்துச் சென்றது மன்றி அத
னுடைய தாயையே அதை வளர்க்கும் செவிலித் தாயாகவும் நியமித்தார்
கள். ஆகவே ஒருங்கே குழந்தையின் அபாயமும் அதன் பெற்றோரின் ஏழை
மையும் தொலைந்தன.

குழந்தையை எடுத்து வந்த வியாபாரி ஆக்பர் சக்கரவர்த்தியிடம் செல்
வாக்குடையோனானதால் அக்குழந்தையின் தகப்பனை சக்கரவர்த்தியிடம்
அழைத்துச் சென்றான். சக்கரவர்த்தி தன் தகப்பனாகிய உமாயூன் பார்ஷியா
சென்றபொழுது தன்னிடம் அப்போது வந்திருக்கும் மார்ஷா கீஸின் தகப்
பனாகிய மகம்மது காஜாசாரிப் என்பவர் அதிக உதவி செய்தாரெனக் கேள்
வியுற்று மார்ஷா கீஸிடம் அன்புபாராட்டத் தொடங்கினார். மார்ஷாகீஸ் இந்
நன்மதிப்பாலும் தன் சாமர்த்தியத்தாலும் சீக்கிரத்தில் ஒரு மந்திரி ஸ்தா
னத்தையடைந்தார். அவர் பெண்சாதியும் தன் படிப்புக்கும் சாமர்த்தியத்
துக்கும் ஏற்க ஆக்பர் சக்கிரவர்த்தியின் அந்தப்புறத்தில் பெண்களுக்கு
கல்வி கற்பிக்கும் வேலையில் அமர்ந்து சீக்கிரத்தில் அவர்கள் அன்பைப்பெற்
றாள். இக்காலத்தில் நம் கதாநாயகி நிலைமையென்னவாக விருந்ததென்று
பார்ப்போம். அவர்க்கு முதலில்வைத்தபெயர் மெக்ரம் நைசா என்பது. அவ
ளுக்கு வயது வரவர அழகும் அதிகரித்தது; அவளுடைய சாந்தகுணமும்
அடக்கமும் எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டது. அவள் தன் தாயுடன்
அடிக்கடி சக்கரவர்த்தியின் அந்தப்புறத்துக்குப் போய்க்கொண்டிருந்தாள்
சீக்கிரத்தில்அவள்ஜிஹான்கீரின் தாயினிடம் மிகஅன்பு சம்பாதித்ததுமன்றி
சக்கரவர்த்தியின் புத்திரிகளோடிருந்து கல்விகற்கும் உயர்பதவியையுமடைந்
தாள். அவள் கொரான் படிக்க முதலில் ஆரம்பித்தாள். மகம்மதியர்களுக்
குள்ள பல வகுப்புகளில் தன் தாயின் வகுப்பாகிய சீயாமதத்து நூல்களைத்
தீரக்கற்றாள். அதோடு படம் எழுதவும், சித்தரிக்கவும், பாடவும், தைக்க
வும், குதிரைசவ்வாரி செய்யவும், சுடவும், வில் வளைக்கவும் கற்பிக்கப் பட்
டாள். காவியமெழுத கற்பிக்கவில்லையேனும் அவளுக்கு இயற்கையாகவே
அதில் பிரீதியுண்டாயிருந்தது.



அக்காலத்தில் அவளுடைய சௌந்தரியத்தையும் ரோஜாப் பூக்களோ
வென்று சொல்லும்படியான கன்னங்களையும், கறுத்தகண்களையும் பார்த்து
தங்கள் மனம் கவரப்படாதா ரொருவருமில்லை. ஒரு நாள் நந்தன வனத்தில்
ஜிஹாங் கீர் இவளைக் கண்டு இவளோடு பேசுவதற்கு ஓர் வழியாகத்தான்
பூக்கொய்து வரும்வரை தான் வைத்திருந்த கிளிகளை வைத்திருக்கும்படி
கேட்டான். அவள் அதற்கு சம்மதித்து கிளிகளை வாங்கிக்கொண்டாள்;
ஆனால் அவைகளில் ஒன்று ஜிஹாங் கீர் திரும்பி வருவதற்குமுன் ஓடிவிட்
டது; அது எப்படி ஓடித்தென்று அவன் கேட்டதற்கு மக்ரம் நைசா இன்
னொன்றையும் விட்டுவிட்டாள். இந்த விளையாட்டுத் தனமும் அவளுடைய
சுந்தரவடிவமும் ஜிஹாங் கீரை அவளுக்கு அடிமையாக்கின. இந்த சமாசா
ரத்தை தெரிந்த ஆக்பர் தன் மகனிடம் கோபங்கொண்டது மன்றி அவர்க
ளில் ஒருவரும் சேராதவண்ணம் அவளை இன்னொருவருக்கு மணஞ்செய்விக்
கத் தீர்மானித்தார். மக்ரம் நைசாவுக்கு மணாளனாகத் தெரிந்தெடுக்கப்பட்ட
வன் பார்ஷியா தேசத்திலிருந்து கஷ்டகாலத்தால் இந்தியாவுக்கு ஓடிவந்து
இங்கே கான்கானுவுக்கு செய்த உதவியால் சக்கரவர்த்தியிடம் நன்மதிப்புப்
பெற்று அவரால் டெக்கான் முழுதுக்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்ட
கீர் ஆப்கன் என்பவன். பெண்கள் நாயகமாகிய மக்ரம் நைசாவோடுகூட
இவ்வதிர்ஷ்டசாலி ஓர் ஜாகீரும் பங்காளத்தில் கொடுக்கப் பெற்றான். அவ்
விடத்தே மக்ரம் நைசாவும் அவள் கணவனும் சந்தோஷமாக இல்லம் நட
த்திவந்தார்கள். அவர்களிருவரும் ஒருவருக் கொருவர் அன்பும் மரியாதை
யும் வைத்திருந்தார்கள்; ஆகவே அவர்கள் மிக அதிர்ஷ்டசாலிகளென்றே
சொல்லத்தக்கதா யிருந்தது; ஆனால் எத்தனை நாளைக்கு இப்படியிருக்க முடி
யும்! ஜிஹாங் கீர் இம்மாது ரத்தினத்தின்பேரில் ஆறாக்காதலை கொண்டிரு
ந்தான். ஆக்பருக்குப்பின் அவன்தான் பட்டத்துக்கு வருவானென்பதற்கும்
சந்தேகமில்லை. ஆகையால் இவர்கள் ஒற்றுமை கெட்டுக் கஷ்டமடைய
நாட்களிருந்தவை கொஞ்சமே என்பது வெளிப்படை.

கொஞ்சக் காலத்துக்கெல்லாம் ஜிஹாங் கீர் சிம்மாசன மேறினான்.
அவர் உடனே கீர் ஆப்கனைக் கொல்லப் பலவாறு முயன்று கடைசியாகக்
கொலைபுரிவித்தனன். மக்ரம் நைசா உடனே டெல்லிக்கு அனுப்பப்பட்
டாள், அங்கே அவள் தன் புருஷனைக் கொலை செய்தபாதகனை மணக்க
இசைந்திலள். ஜிஹாங் கீர் என் செய்வான்? அவளைத் தன் வழிப்படுத்த
வகை யொன்றும் கண்டிலனாய் தன் தாயின் தோழிகளில் ஒருத்தியை இவ
ளிடத்தில் அனுப்பினான். காலம் செய்யாத காரியம் இவ்வுலகிலென்ன விருக்
கின்றது? ஆறாத்துயரத்தையும் ஆற்றுவிப்பததுவன்றோ? காலம் செல்லச்
செல்ல மக்ரம் நைசாவுக்கும், ஜிஹாங்கீர் மீதிருந்த கோபந் தணிந்திருந்தது.
கொஞ்சக்காலஞ் சென்ற பிறகு அவள் சக்கரவர்த்தியை மணந்தாள்.
அப்போது அவளுக்கு நூர்மஹால் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதற்

குப்பின் நூர்ஜஹான் என்ற பெயரும் கொடுக்கப் பட்டது. இக்கடைசிப் பெயரால் தான் அவள் பிரபலமாக வெளியில் தெரிந்திருப்பது. அப்பெயரின் பொருள் "இவ்வொளியின் திலகம்" என்பது. அவளுடைய சுந்தரத்துக் கேற்கவே இப்பெயரிட்டனர். கல்யாணமானவுடனே அவள் சக்கரவர்த்தியின் உயிர்த் தோழியானாள். அவளுடையவார்த்தை தான் ஜிஹாங்கீருக்கு சட்டம். அவளுடைய தகப்பன் ராஜ்யமுதல்மந்திரியானார். அவளுடைய சகோதரனும் சுற்றத்தார்களும் உயர்பதவி பெற்றார்கள்.

இக்காலமுதல் நூர்ஜஹான் ராஜ நிர்வாக விஷயத்தில் சர்வசுதந்தரமுமுள்ளவளானாள். அக்காலத்தில் அதிமுக்கியமான விஷயம் சக்கரவர்த்திக்கப்புறம் யார்சிம்மாசன மேறவேண்டு மென்பது. சக்கரவர்த்திக்கு நூர்ஜஹானிடம் ஒன்றும் புத்திரோத்பத்தியில்லை. ஆகையால் நூர்ஜஹான் முதலில் தன்கணவனின் மூன்றாவது புத்திரனும் சாமர்த்திய சாலியுமான சாஜஹானுக்கு தன் சகோதரனாகிய ஆசப்கானின் மகளாகிய மம்டாஜ் மஹாலை மணஞ் செய்வித்து அவன் பக்கம் சேர்ந்தாள். ஆனால் கொஞ்சகாலத்துக்கப்புறம் அவளுக்கு தன் முதல் கணவனிடம் தோன்றிய ஒரு பெண்ணை, சக்கரவர்த்தியின் கடைசி மகனாகிய சாரியர் என்பவன் மணந்தான். ஆதலால் அக்காலமுதல் நூர்ஜஹான் சாரியருக்கு ராஜ்யத்தைக் கொடுக்கமுயற்சிசெய்தாள். இதற்காகத்தான் சாஜஹான் வடமேற்குத் திசையில் சண்டைக்கனுப்பப்பட்டதும், பின் தன் சேனையை சாரியர் வசம் ஒப்புவிக்கும்படி உத்திரவு செய்யப்பட்டதும், இது ராஜ்யத்தில் பல கலகங்களுக்கு காரணமாகின்றது.

நூர்ஜஹான் அதிகாரமிக்கவர்க ளெல்லோரையும் கீழ்ப்படுத்த முயன்றாள். உதாரணமாக மரியாதை மிகுந்தவனாகிய மகமட்கான் என்னும் தளகர்த்த னொருவனிருந்தான். அவன்மரியாதையையும் அதிகாரத்தையும் நூர்ஜஹான் பொறாதவளாய் அவனைச் சக்கரவர்த்தியைக் கொண்டுமரியாதையீனமாய் நடத்தும்படி செய்வித்தாள். இதை அவன் ஆற்றாது சக்கரவர்த்தியை ஐடாஸ் பஸ் நதியண்டை சிறை செய்தான். சிறை பிடித்தும் சக்கரவர்த்தியை மிக்க மரியாதையுடனேயே நடத்தினான். கடைசியாக சக்கரவர்த்தி சுயாதீனம் பெற்றபொழுது அவன் சாஜஹானிடம் சென்று அவனோடு சேர்ந்துகொண்டான்.

மனிதர்கள் என்ன அந்தஸ்திலிருந்தால்தா னென்னபயன்? சும்மா விடுகிறானா? காலம்வந்தபோது உயிரைக் கவர்ந்தல்லவோ விடுகிறான்? 1627 ஷூத்தில் ஜிஹாங்கீர் உயிரையும் ஒழித்தான். நூர்ஜஹானுக்கு அப்போதுண்டான துக்கத்துக்களவில்லை. அவளுடைய அதிகாரமும் போய்விட்டது. அவள் 1646ல் இறக்கும்வரை சந்தோஷ சாகசமான காரியங்களொன்றிலும் பிரவேசியாது இறந்த கணவனை எண்ணி எண்ணி யேங்கிக்கொண்டேயிருந்தாள்.



அவளுடைய சௌந்தரியத்தோடும் முன்சொன்ன பல தொழிற்பயிற்சியோடும் அவளுடைய ராஜ்ய நிர்வாக சாமர்த்தியமும், வைத்திய சாமர்த்தியமும், தயாள சிந்தையும் சேர்ந்து அவளைப் பெண்கள் பின்பற்றும் பெரியவளாக்கின. இவைகளோடு கூட அவள் சொற்சாதுரியமும் மகாகௌரவமுமுள்ளவளா யிருந்தாளென்று சொல்லுகிறார்கள். மகம்மதியர்களெல்லோரும் அவளை அவளுடைய நற்குணங்களுக்காகவும், புத்தி சாமர்த்தியத்துக்காகவும் அழகுக்காகவும், நன்குமதிக்கிறார்கள்.

தன்னழகைப்பற்றி நூர்ஜஹான் பாடல்கள் பாடியதாக பார்ஸி கவிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் இம்மாது அதிகமாக வித்தியாப்பியாசத்திலுந் தேறியிருப்பாளெனவே தோற்றுகின்றது.

T. A. RAMALINGAM, B. A.

உ

## மங்கையர்க்கரசி யம்மையார் சரித்திரம்.

தன்கொழுநன் புறச்சமயஞ் சார்ந்தொழுகக் கண்டுமனந் தாளாளாகி
என்செய்வ தென்றேங்கி யிறையமைச்சாங் குலச்சிறையோ டினிதிறைய்ந்து
புன்சமய மதுவெனவிப் பூவறியப் புகலியர்கோன் பூதிதன்னால்
மன்செயலை மாற்றியருண் மங்கையர்க்கரசியிணை மலர்த்தாள் போற்றி.

இம்மங்கையர்க்கரசி யம்மையார் சோழமகாராஜன் செய்த தவப்பயனெல்லாந் திரண்டு ஒருருவாய் வந்ததுபோல், அம்மகாராஜனுக்கு பெண்மகவாய்த் தோன்றினர். இந்த அம்மாள் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய்ப் பேணி வளர்க்கப்பட்டு வரும்நாளில், அக்காலத்தில் மதுரைமா நகரத்தை தருமநெறிப்படி செங்கோலோச்சி அரசுபுரிந்துவந்த கூன்பாண்டியனென்னும் அரசன் தனது புயவலிமையால், இச் சோழமகா ராஜனிடத்திலும் சண்டையிடத்திலும், வஞ்சிநாட்டுக் கரசனாகிய சேரமகா ராஜனிடத்திலும் சண்டைசெய்து, அவர்களை ஜெயித்து, அவர்களுடைய நாடுகளையும் தன் வசமாக்கிக்கொண்டான். அதுகண்ட சேரமகாராஜன், யானைகளையும், பொன்னையும், இரத்தினங்களையும், பணிப் பெண்களையும் கூன்பாண்டிய மகாராஜனுக்கு காணிக்கையாகக் கொடுத்து, முன்போல தனது வஞ்சிநாட்டை தான்பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

சோழமகாராஜன் முன்போலத் தனது சோழநாட்டையடைந்து அரசுபுரிவதற்காக பெட்டையானையொத்தவரும், சைவசமயத்திற்கு ஒரு இரத்தின தீபம்போன்றவரும், கன்னிப்பருவமுடையவருமான தனது அருங்குமாரத்தியான மங்கையர்க்கரசியம்மாளை, அக்கூன்பாண்டிய மகாராஜனுக்கு மணஞ்செய்வித்து, தனது சோழநாட்டைப் பெற்றுக்கொண்டான்.

பிறகு சோழமகாராஜன், தன்னுடைய குமாரத்திக்குச் சீதனமாக அளவில்
லாத பொன்னையும், பீதாம்பரங்களையும், பலவித ஆபரணங்களையும், வேண்
டியபோது வேண்டியபடி உபசாரஞ் செய்யத்தகுந்த பாங்கியர்களையும் கொ
டுத்ததுமல்லாமல், தன்னிடத்தில் கல்வி கேள்விகளில் மிக்க வல்லவராயும்
நற்குணங்களில் சிறந்தவராயு மிருந்த குலச்சிறையாரென்பா ரொருவரையும்
அனுப்பினர். இவைகளையெல்லாம் பெற்றுக்கொண்ட எமதம்மையாராகிய
மங்கையர்க்கரசியம்மாள், தாமரைமலரில் வசிக்கும் திருமகள் திருமாலை
மணந்து செல்வதுபோல, தமது கணவராகிய கூன்பாண்டிய மகாராஜா
வோடு மதுரைநகரை யடைந்தார்கள். தமக்கு சோழமகாராஜனால் சீதனமாக
அனுப்பப்பட்ட குலச்சிறையாருடைய சிறந்த அறிவையும், நற்குணங்க
ளையும், தன்னிடமிருக்கும் மற்ற மந்திரிகளிடம் ஒப்பிட்டுப்பார்த்து, மேன்
மையாகக் காணப்பட்டமையால் அவரை தனக்குமுதல் மந்திரியாக்கிக்கொ
ண்டு கூன்பாண்டிய மகாராஜன் அரசுபுரிவானாயினன்.

மங்கையர்க் கரசியம்மாள், குலச்சிறையார் மந்திரித்துவஞ் செய்ய,
தாம் தம்கணவனாகிய கூன்பாண்டிய மகாராஜாவுடன் குறையாச் செல்வ
த்துடன் வாழ்ந்துவரும் நாளில், அருகக்கடவுளை தெய்வமாகக்கொண்டு,
கொல்லா விரதமுடையவராய், வஞ்சனைகளையே தமக்கு குணங்களாகக்
கொண்டிருந்த சமணர்களுடைய பொய்ப்போதனையால், கூன்பாண்டிய மகா
ராஜன் அதுவரைக்கும் மேற்கொண் டொழுகிவந்த சைவசமயத்தை கர்மவ
சத்தால் மறந்து சமணமதத்தில் பற்றுடையவனானன். "அரசனெவ்வழி குடி
களவ்வழி" என்கிற வாக்கியத்துக்கேற்ப, எப்போது அரசன் சமணமதத்
தைச் சேர்ந்தானோ அப்போதே அரசனுடைய கட்டளையால் அம்மதுரைமா
நகரத்திலுள்ள குடிகள்யாவரும் அச்சமணமதத்தையே மேற்கொண்டொழு
கலானார்கள். எமது அம்மையாராகிய மங்கையர்க் கரசியம்மாளும், மந்திரி
யாகிய குலச்சிறையாரும், வஞ்சனையே உருவமாகிய சமணருடைய போதனை
யால், அரசனிடம் ஆக்கினைக்குப் பயந்தவர்களாய், சமண சமயத்தைச் சார்ந்
தவர்கள்போல வெளிக்கிக் காண்பித்து, திருநீற்றை ஜலத்திற்குழைத்து
மெய்யிலணிந்துகொள்ளாமல், சிரசில் பிறர் கண்ணுக்குத் தெரியாவண்ணம்
உரோமங்களின் மறைவில் விபூதியை யணிந்துகொண்டு, அம்மதுரைமா
நகரத்தில் பரவியிருக்கும் சமணசமயமாகிய களையைக் களைந்து, சைவசமய
மாகிய பயிரை வளர்க்கப்போகிறவர்கள் என்பதாக யாரோ சதாசிவபெரு
மானுடைய திருவடிகளை தியானித்துக் கொண்டிருந்து, நான் மாடக்கூடலி
லெழுந்தருளி யிருக்கும் சோமசுந்தரப் பெருமானை ஒருநாள் தெரிசனம்
செய்யப் போனார்கள்.

அங்கு மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும், சோமசுந்தரக் கட
வுளைநோக்கி, "எமதையனே! வேதத்தில்மயக் கங்கொண்ட முனிவர்களை
அம்மயக்கத்தினின்று நீங்கும்படி விளக்கியருளிய நீர், எங்களது அரசன்



இப்போது அநுசரித்துவரும் சமண சமயத்திலிருந்தும் அவரைவிடுவித்து,
தேவரது திருவடிகளில் அடிமைகொண்டருள மாட்டீர்களா வென்று,
பலவாறு தோத்திரஞ்செய்து வணங்கிக்கொண் டிருந்தார்கள். அப்போது,
ஒரு பிராமணர் தேகத்தில் விபூதியும், கழுத்தில் உருத்திராட்ச கண்டிகையு
மணிந்துகொண்டு, சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு அங்குவந்து சோமசுந்த
ரப் பெருமானை தெரிசனஞ் செய்துகொண் டிருப்பதை, நமது மங்கையர்க்
கரசியாரும், குலச்சிறையாருங்கண்டு, ஓ பிராமணோத்தமரே! தாங்கள் எங்
கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு பிராமணர், "நான்
சோழமகாராஜா அரசுபுரியும் காவிரிநாட்டி லிருந்துவந்தேன்" என்று கூறி
னார். அங்கு ஏதாவது விசேஷம் உண்டோவென்று கேட்டார்கள். ஆம் உண்
டு என்று பின்வருமாறு கூறுகின்றார்:—

"சீர்காழிப்பதியில் வேதபாரகர்களாகிய அந்தணர் குலத்திலே சிவபாத
விதயர் என்னும் நாமதேயமுடைய ஒரு பிராமணோத்தமர் இருக்கின்றார்.
அவர் தமக்கு ஒரு நற்புத்திரப் பேறுண்டாக வேண்டுமென்று சிவபெரு
மானை நோக்கித் தவங்கிடந்தார். அதற்கு சிவபெருமான் திருவுளமிரங்கி
உலகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படியாக இளஞ் சூரியனைப்போல ஒரு புத்திர
னைத் தந்தருளினார். அக்குழந்தைக்கு இரண்டு வருடங்கடந்து மூன்றாவது
வருடத்தில், அச்சீர்காழிப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி
யிருக்குந்தோணியப்பர் உமாதேவியாரோடும் விருஷபாரூடராய்எழுந்தருளி
காட்சிதந்து, உமாதேவியாருடைய திருமுலைப் பாலுடன் ஞானத்தையும்
குழைத்து, பொற்கிண்ணத்திற் கொண்டு அப்பிள்ளைக்கு ஊட்டினார். அதை
உண்டவுடனே அப்பிள்ளையார் வேதாகமமுதலிய கலைகளையெல்லாம் ஒருங்கே
யுணர்ந்தவராய், சிவஞானத்துடன் பொலிவெய்தினார். அதுமுதல் அப்பிள்
ளையார் நம்மையெல்லாம் சிவபெருமானுடைய திருவடிகளில் சம்பந்தப்படுத்
தும் சம்பத்துடையவராய், திருஞானசம்பந்தரென்னுந் திருநாமத்தையும்
பெற்று, வேதங்களிற் கொள்ளக்கிடக்கும் அரும்பொருள்களையெல்லாம்
திரட்டி, தமிழ்ப் பாசுரங்களாகச் செய்து, சிவபெருமான் எழுந்தருளியிருக்
கும் ஒவ்வொரு ஸ்தலங்களுக்குஞ் சென்று, அத்தமிழ்ப்பாமாலைகளைச் சாற்
றிக்கொண்டு வருகிறார். இதுவுமன்றி, பொற்றாளம், பொற்சின்னம், முத்துச்
சிவிகை, முத்துப்பந்தல், படிக்காசுமுதலியவைகளை சிவபெருமானருளப்
பெற்று, பாலைநிலத்தை நெய்தனிலமாக்கி, வேதங்களா லடைபட்டிருந்த
திருமறைக்காட்டு க்ஷேத்திரத்தின் கதவை தமது தமிழ்வேதமாகிய பாசுரத்
தால் திறந்து மூடி இன்னும் க்ஷேத்திரங்கள்தோறும் தெரிசித்துக்கொண்டு
வருகிறார் அவர் இம்மதுரைமா நகரத்துக்கும் வருவார் என்று கூறி முடித்
தார்,"

இவைகளையெல்லாம் கேட்ட எமது மங்கையர்க்கரசியம்மையாரும்
குலச்சிறையாரும் அத்திருஞாந சம்பந்தரென்னும் சிவப்பிரகாசத்தால்,

தமது அரசனைப்பற்றி யிழிக்கும் சமணரிருளை யோட்டலாமென்று மிகுதியும் மகிழ்ச்சியடைந்தவர்களாய், திருஞானசம்பந்த சுவாமிகளது தாமரை மலர்போன்ற திருவடிகட்கு தாங்கள் ஒரு விண்ணப்பத் திருமுகமெழுதி அப்பிராமணோத்தமரிடம் கொடுத்து, சோமசுந்தரப் பெருமானை தெரிசனை செய்துவிட்டு தங்கள் அரண்மனைக்கு எழுந்தருளினார்கள். அப்பிராமணோத்தமர், தாமும் சோமசுந்தரக் கடவுளைத் தெரிசனைசெய்துவிட்டு, மறுதினம் திருஞானசம்பந்த சுவாமிகளிடஞ் சென்று அவ்விண்ணப்பத் திருமுகத்தினைக் கொடுத்தார். அதனைக்கண்ட சுவாமிகள் தமது திருக்கூட்டத்துடன் மதுரைமா நகரத்துக்குப் பிரயாணமாய் இடையில் உள்ள க்ஷேத்திரங்களையெல்லாம் தெரிசித்துக்கொண்டு மதுரைமா நகரத்தை வந்தடைந்தார்கள். பிறகு அங்கு எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளை தெரிசனை செய்துவிட்டு வரும்பொழுது, அந்நகரத்திலிருக்கும் ஒரு சிவயோகியார் சுவாமிகளை தமது திருமடத்துக்கு எழுந்தருளும்படி வேண்ட, அவரிஷ்டப்படி அவருடைய திருமடத்துக்கு எழுந்தருளியிருந்தார்கள்.

இதனை யறிந்த சமணர்கள், சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் திருமடத்தை நெருப்பிட்டுக் கொளுத்த உத்தேசித்து, தங்கள் மந்திரபலத்தினால் அக்கினி தேவனை வேண்ட அவன் வராதுபோனமையால் தங்கள் கைகளில் அக்கினிபொருந்திய குச்சிகளையெடுத்துச் சென்று, மடத்தின் பலபக்கங்களிற் செருகிவிட்டார்கள். இத்தீச்செயலை யறிந்த எமது சுவாமிகள் "செய்யனே திருவாலவாய்மேவிய, ஐயனே யஞ்சலென்றருள் செய்யெனை, பொய்யரா மமணர்கொளு வுஞ்சுடர், பையவே சென்று பாண்டியற்காகவே" என்னுந் திருப்பதிகத்தைப்பாடி சிவத்தியானத்திலமர்ந்திருந்தார்கள். உடனே அத்தீயானது மடத்தையொன்றுஞ் செய்யாமல், கூன்பாண்டிய மகாராஜாவினுடைய தேகத்தில் சுரமாகச் சென்று பற்றிக்கொண்டு, அரசனை மிகவும் வருத்தத் தொடங்கிற்று. அதனைக்கண்ட எமது மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மிகவும் வருத்தமடைந்தவர்களாய் சிறந்த வைத்தியர்களை யழைத்து ஔஷதம் கொடுத்தும், அச்சுரம் தணியாமல் அதிகப்படுவதைக் கண்டு, பொழுது விடிந்ததும், இப்போது நமது நகரத்திலெழுந்தருளி யிருக்கும் திருஞானசம்பந்த சுவாமிகளாலன்றி மற்றெவராலும் இந்நோய் நீங்கமாட்டாதென்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

இதைக்கேட்ட கூன்பாண்டிய மகாராஜன் "சைவராகிய அவர் எனது தேகத்தில் திருநீறிட்டு என்னுடைய சுரத்தைப் போக்குவது தகுதியாகுமோவென்று" கூறினான். அதற்கு எமது மங்கையர்க் காசியாரும், குலச்சிறையாரும் எவ்விதமாவது நமதுநோய் தீருவதைத்தானே யோசிக்கவேண்டும், இவைகளையெல்லாம் யோசித்துக்கொண்டிருந்தால் நமது நோய் எவ்விதம் நீங்குவது என்று கூற, அதற்கு ஒருவாறு இசைந்தவனாய் சுவாமிகளை அழைப்பிக்கும்படி உத்தரவு செய்தான்.



உடனே எமது மங்கையர்க் கரசியார், தமது அரண்மனைக்கும் சுவாமிகள் எழுந்தருளிய மடத்திற்கும் மத்தியிலுள்ள வீதியை அலங்காரஞ்செய்ய கட்டளையிடும்படி குலச்சிறையாருக்கு உத்தரவு செய்தார்கள். அவ்வண்ணமே குலச்சிறையாரும் கட்டளையிட வேவுகாரர்கள் வீதியை நன்றாய் சுத்தஞ்செய்து பனிநீர் தெளித்து, பலவித கோலங்களிட்டு, மகிட தோரணங்கள், மாந்தோரணங்கள், வாழைமரங்கள் முதலியன நிறுத்தி, இடைக்கிடையே பூரண கும்பங்கள், தீபங்கள் முதலியன வமைத்து வெகு விநோதமாக அலங்காரஞ் செய்துவிட்டார்கள். இதனையறிந்த எமது மங்கையார்க்கரசியார், அரசனது தலைபக்கத்தில் ஒரு பொன்பீடத்தை யமைத்துவைத்து மந்திரியாகிய குலச்சிறையாரை உடன் அழைத்துக்கொண்டு சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் திருமடத்துக்கு வந்து சுவாமிகளது தாமரைமலர் போன்ற திருவடிகளில் விழுந்து நமஸ்காரஞ்செய்து, எமது ஞானசாரியரே? சமணர்கள் ஒழியவும், இத்திருநாடானது சைவமணம் பெற்று வாழவும், அரசனையடைந்து வருத்தும் சுரநோய் நீங்கவும் எமதரண்மனைக்கு எழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து கொண்டார்கள். சுவாமிகள் அதற்கிசைந்தவர்களாய் தமது முத்துச் சிவிகையின் மீதெழுந்தருளி, முத்துக்குடை, முத்துப் பந்தல் முதலியன பிடிக்க, எண்ணிறந்த திருக்கூட்டங்கள் புடைசூழ, பொற்சின்னம் ஒலிப்ப வெகுகம்பீரமாகப் புறப்பட்டு அரண்மனைக்கு எழுந்தருளி, அங்கு அரசனது தலைப்புறத்தி லிடப்பட்டிருந்த, நவரத்தினங்கள்பதித்த பொற்பீடத்தில் வீற்றிருந்தருளினர்.

சுவாமிகள எழுந்தருளியதை யறிந்த கூன்பாண்டிய மகாராஜன், தன்னை இதுகாறும் வருத்திக் கொண்டிருந்த சுரநோய் சிறிது தணிந்தவனாய், சுவாமிகளை நோக்கி எனதையனே! அடியேனை வருத்திக்கொண்டிருக்கும் சுரநோயை நீக்கி ஆட்கொண்டருளுமென்று குறையிரந்தான். அதைக்கேட்ட சமணர்கள் மனம் பொறாதவர்களாய், அரசனே! உமது வலப்புறத்து நோயை சுவாமிகள் போக்கட்டும், இடப்புறத்து நோயை நாங்கள் போக்குகிறோமென்று கூறினார்கள். அப்படியே செய்யுங்களென்று பாண்டியன் சம்மதிப்பதற்கு முன் சமணர்கள் தங்கள் கடவுளை நினைந்து, தங்கள் கைகளில் வைத்திருக்கும் மயிற்கற்றையால் தடவியும், கமண்டல நீரைத்தெளித்தும் சுரம் நீங்காமல், நெருப்பிற் பெய்த நெய்போல முன்னிலும் அதிகமாக அரசனை வருத்தத் தொடங்கிற்று. இதனையறிந்த சமணர்கள், அவமானமடைந்தவர்களாய், தங்கள் அகந்தை நீங்கியிருக்க, எமது திருஞானசம்பந்த சுவாமிகள் தமக்கு விடப்பட்ட வலப்புறத்து நோயை நீக்கதிருநீற்றுப் பையிலிருந்து விபூதியையள்ளினார்கள். அதனை யறிந்த சமணர்கள் அதுமாயநீறு, அதனால் நீக்குவது கூடாதென்று மறுத்தார்கள்.

உடனே சுவாமிகள், சோமசுந்தரக் கடவுளது ஆலயத்திலுள்ள திருமடைப்பள்ளியின் நீற்றைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்கள்.

அப்படியே கொண்டுவர, அதனை சுவாமிகள் வாங்கி, "மருந்தாயிருப்பதும், மந்திரமாயிருப்பதும், மோட்சவீட்டைக் கொடுப்பதும் திருநீறேயென்று கூறி" "மந்திரமாவது நீறு, ஏலவுடம் பிடர்தீர்த்து இன்பந்தருவது நீறு" என்பது முதலாகவுள்ள பதிகங்களைக்கட்டளையிட்டு, அரசனது வலப்பாகத்திற் பூசித்தடவினர். உடனே அப்பக்கத்திலிருந்த சுரநோயானது, மறுபக்கத்திற் சென்று வலப்பக்கம் குளிர்ச்சியடைந்து 'இடப்பக்கத்தில் முன்னிலும் அதிகமாக வருத்தத் தொடங்கிற்று.

அதைக்கண்ட சமணர்கள் மனம் புழுங்கினவர்களாய், முன்னிலும் அதிகமாக தாங்கள் கற்றுக்கொண்ட எல்லா மந்திரங்களையும் பூராவாக உச்சரித்து, கரகநீரைத் தெளித்து, மயில்கள் சேர்த்து கட்டப்பட்டிருந்தபீலியைக்கொண்டு இடப்பக்கம் முழுவதும் பலதரம் தடவிப் பார்த்தார்கள்; அப்பக்கம் முன்னிலும் பதின் மடங்கதிகமாக வருத்துவதைக் கண்ட அரசன், சமணர்கள் மீது அதிக வெறுப்படைந்தவனாய், அவர்களை அப்புறப்படுத்திவிட்டு, சுவாமிகளை நோக்கி, என தாண்டவரே! இந்த இடப்பக்கத்து சுரத்தையும் தாங்களே கருணை கூர்ந்து தீர்த்தருளவேண்டுமென்று குறையிரந்தான். அப்போது எமது சுவாமிகள் கருணைகூர்ந்தவராய் முன் வலப்பக்கத்துக்குக்கொண்ட நீற்றினையே இடப்பக்கத்திலும் தடவியருளினர். அதனால் அரசனுக்கு அப்போது உண்டாயிருந்த சுரநோயும், பழமையாயிருந்த கூனும் நீங்கி, சூரியனைப் போல் பொலிவெய்தினன். அது முதல் வரசனுக்கு கூன் பாண்டியனென்னும் பெயரானது நீங்கி, சவுந்தரபாண்டியனென்னும் பெயர் வந்தது.

பிறகு எமது மங்கையர்க் கரசியம்மையார், எமது சுவாமிகளைக் கொண்டு தமது கணவருக்குப்பற்றியிருந்த சமணசமயவிருளை நீக்கி, சைவசமய வொளியை பிரகாசிக்கச் செய்து, தாமும், மந்திரியாகிய குலச்சிறையாரும், சிவபெருமானுடைய திருவடிக் கண் இடையறாத பக்தியுடைய வர்களாய நெடுங்காலம் வாழ்ந்திருந்து பிறகு சிவசாயுஜ் ஜியத்தை யடைந்து பொலிவெய்தினர்கள்.

நமது இல்லற தருமத்தை வழுவற நடத்தும் மாதர்கள் தம் கணவருக்கு நேரிடும் கஷ்ட துக்கங்களை சமயமறிந்து மதிமந்திரிகளைப்போல தக்க யோசனை தந்து ஈஸ்வர அநுக்கிரகத்தைப் பெறும்படியான ஏதுவைச் செய்து உலகம் புகழும்படியான நிலைமையில் வைக்கவேண்டியது. நமது காருண்ணிய இராஜாங்கத்தில் அரிதாகிய கல்வியை பூஷணமாகத் தரித்த அநேக மாதர்கள் நாளடைவாகப் பரவிவருவதால், அவர்கள் மங்கையர்க் கரசியம்மையாரைப்போல் நடந்துகொள்ள என்னதடை?

☞ பத்திராதிபர்.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

| | | |
|---|---|---|
| Vol. IV<br>புத்தகம் ச. | Madras: November 1902.<br>சென்னபட்டணம், 1902 நவம்பர்மு | No. 9.<br>இல, கூ. |

## புத்தக வரவு.

**கோமளம் குமரியானது.**

இங்கிலீஷ் பாஷையில் ரொமான்ஸ் என்று சொல்லப்படும் கதைகளைப் பின்பற்றி நம் பண்டிதர் நடேச சாஸ்திரியாரால் தமிழ் நடையில் எழுதப்பட்டது இப்புத்தகம். இத்தகைய புத்தகங்கள் அதிகமாய் நமது தாய் பாஷையில் கிடையாதென்றே சொல்லலாம். இப்புத்தகத்தில் "இரண்டு சகோதரிகள் முதுமைப் பருவம் நீங்கி தாங்கள் 25 வயதுப் பருவமுள்ள கட்டழகிகளாக ஒரு மருந்து கண்டறிந்து அதைத் தங்களுக்குள்ளேயே ரகசியமாய் வைத்துக்கொண்டு ஒருவித ஆபத்தால் அம்மருந்து முழுவதையும் ஒருவரே அருந்திக்கைக்குழந்தையானதும், அவளுக்கு அப்பருவத்தில் சம்பவித்த சங்கடங்களும், அப்பருவம் நீங்கி மறுபடி முன்போல் 60-வயதானதும் அவள் அடைந்த ஆநந்தமும்" இன்னும் பலவிஷயங்களும் வெகுஹாஸ்யமாய் யாவரும் அதிக கஷ்டமின்றி உணருமாறு மிக எளியநடையில் கூறப்பட்டிருக்கின்றன. இம்மாதிரிக்கதைகள் பொழுது போக்குவதற்கு மிகப் பிரயோசனப்படும் என்பதில் தடையில்லை. புத்தகத்தின் முதலில் எடுத்துக் காட்டியிருக்கும்,

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தனபோக மவரவராற்றான்
விளங்காய் திரட்டினாரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாருமில்."

என்னும் நாலடிச்செய்யுளின் கருத்திற்கு ஒரு சிறந்த இலக்ஷியமாகக்கூறலாம் நமது சாஸ்திரியாரின் கதையை. யாவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்து ஆநந்தமடைவார்களென்று நாம் உறுதியாய் எண்ணுகின்றோம். இதன்விலை அணா பன்னிரண்டுதான். நேர்த்தியான கடிதாசியில் பைகா எழுத்தில் ஸாரென்ஸ் அசைலம் அச்சாபீசில் வெகு அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்பெயர்கொண்ட புஸ்தகத்தைப்பற்றி 1900 வருஷம் அக்டோபர்மீ பத்திரிகையில் நமது அபிப்பிராயத்தைத் வெளியிட்டோம். இப்பொழுது தீனதயாளு. இந்நூலாசிரியராகிய பிரமஸ்ரீ பண்டிதர் எஸ். எம். நடேச சாஸ்திரியாரவர்கள் இரண்டாம் பதிப்பாக இதை ஆங்கில நாவல்களைப்போல உயர்ந்த வெண்மையானவும் பளபளப்புமுள்ள கடிதாசியில் பைகா என்ற பெரிய எழுத்தில் லாரன்ஸ் அசைலம் அச்சியந்திர சாலையில பதிப்பித்திருக்கிறார். இதில் 200-பக்கங்களுள. இதில் தந்தி சமாசாரக் குழப்பம் என்ற முதல் அத்தியாயம் ஆங்கில நாவல்களில் எவ்விதம் முதல் அத்தியாயமாயிருக்குமோ அவ்விதமே யிருக்கிறது. இது நமது ஜனங்களுக்குப் புதுமையாக விருக்கினும் கதாநாயகன் கதாநாயகிகள் எவர்களென்பதையும் கதையின் முடிவு என்ன என்பதையும் செவ்வனே அறிந்துகொள்வதற்காக ஒவ்வொருவரும் மிகஆவலுடன் மற்ற அத்தியாயங்களைப் படிக்க ஆரம்பிப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

தமிழில் நாவல் எழுதி ஜனங்களுக்கு அபிருசியை யுண்டாக்கியவரில் நமது சாஸ்திரியார்தான் முதல்வர்.

இதை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தால் அநேக உலக வியவகாரங்களும், குடும்பத்தை நடத்தவேண்டிய மாதிரிகளும், விடாமுயற்சி ஒவ்வொருவனுக்கு மிருக்கவேண்டுமென்றும் அறிந்துகொள்ளலாம். ஆனதுபற்றி இவ்விரண்டாம் பதிப்பாகிய தீனதயாளு வென்ற திவ்ய நாவலை யாவரும் வாங்கி வாசிப்பதுடன் மூன்றும் பதிப்பு அதிசீக்கிரத்தில் வெளிவருமாறு ஆசிரியருக்கு ஊக்கத்தையும் தைரியத்தையும் உண்டாக்குவது மிக நலமென நம்புகிறோம். மேலும் பாடசாலைப் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் இப்புத்தகத்தை டிஸ்டிரிக்ட் போர்டாரும், கல்வி யிலாகாவைச் சேர்ந்தவர்களும், இன்னும் மற்ற கனவான்களும் பரிசளிக்க ஏற்பாடு செய்வது உத்தமமென எண்ணுகிறோம்.

ஆசிரியர் இன்னும் மூன்று புஸ்தகங்களை அதிசீக்கிரத்தில் வெளியிடுவாரெனக் கேட்க மிகச் சந்தோஷிக்கிறோம். தமிழருக்குப் புஸ்தகங்களைப் பதிப்பித்துப் படிக்க ஊக்கத்தை உண்டாக்கிவரும் நமது ஆசிரியருக்குக் கடவுள் தேக சௌக்கியத்தையும் தீர்க்காயுளையும் அளிப்பாராக.

புஸ்தகம் வேண்டுவோர் சென்னைத் தம்புசெட்டிவீதி 273-ம் நெம்பர் மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலைத் தலைவருக்காவது, அல்லது சென்னை எடுகேஷனல் டிரேடிங் கம்பெனியாருக்காவது எழுதி 12-அணாவுக்கு பெற்றுக் கொள்ளலாம்.

315



## முக்கிய அறிவிப்பு.

பாக்கியுள்ள சந்தாதாரர்கள் கூடியசீக்கிரத்தில் தங்கள் பணத்தை யனுப்புவார்களென நம்புகிறோம். பணம் சரிவர வசூலானால்தான் பத்திரிகையை விருத்திசெய்ய முக்கிய ஏற்பாடுகள் செய்யலாம்.

C. S. இராமசுவாமி ஐயர்,
புரொப்ரைடர்,
மாதர் மனோரஞ்சினி.

———)O(———

## வி. பி. ராமானுஜலு செட்டி அண்டு கம்பெனி.




இங்கு முதல்தரமான சீமையிலிருந்து வரவழைக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் அதிக சரசவிலைக்குக்கொடுக்கப்படும். கண்பரீக்ஷையில் மிகத் தேர்ந்தவரால் பரீக்ஷை செய்யப்பட்டு வருகிறது.

வேண்டுவோர் சென்னை மயிலப்பெருமாள் தெருவிலிருக்கும் வி. பி. ராமானுஜலு செட்டி கம்பெனி யென்று எழுதவேண்டும்.

லண்டன் கதா சபை மெம்பர்
பண்டித நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட

## தமிழ் நாவல்களின் வரிசை.

| | | | |
|---|---|---|---|
| 1. தீனதயாளு, இரண்டாம் பதிப்பு | 0 | 12 | 0 |
| 2. கோமளம் குமரியானது | 0 | 12 | 0 |
| 3. திக்கற்ற இரு குழந்தைகள் | 1 | 4 | 0 |
| 4. மதிகெட்ட மனைவி | 1 | 4 | 0 |
| 5. ஸ்ரீ மாமி கொலுவிருக்கை | 0 | 8 | 0 |
| 6. சந்திர சேகரன் | 0 | 8 | 0 |

சென்னை ரிப்பன் புஸ்தகசாலைக்காவது, அல்லது மதராஸ் திருவல்லிக்கேணி மாதர் மனோரஞ்சினி ஆபீஸுக்காவது எழுதவும்.

## சமாசாரக் குறிப்பு.

டெல்லியில் தர்பாருக்காக இங்கிருந்து அநேக பிரபுக்களும், மகாராஜாக்களும் செல்லுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாதேசத்திலிருந்து உயர்ந்த வம்சத்தைச்சேர்ந்த 8 வாலிப மாதர்கள் ஜெப்பானில் படிக்கச் சென்றிருக்கிறார்களாம்.

மைசூரிலுள்ள இரண்டு பிராமண மாதர்கள் டிசம்பர்மாதம் சென்னையில் நடக்கும் பி - ஏ - பரீட்சைக்கு ஆஜரா யிருப்பார்களெனக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

ஒரு ஐரோப்பிய டாக்டர் பாலைப் பொடிரூபமாக்கும் விதத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். இதற்குப் பாலின் குணம் முழுவதுமிருக்கிறதாம், இது கெடுவதில்லையாம், இதை நல்ல ஜலத்தில் கலந்து உபயோகிக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

நமது மகாராஜா 7-வது எட்வர்டினுடைய வண்டிக்காரனுக்கு இன்னவிடத்திற்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போகவேண்டுமென்று மகாராஜா அவர்கள் உட்காரும் வரையில் தெரியாதாம். இவ்வழக்கம் நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்கள் பட்டத்திற்கு வந்தது முதல் நடந்துவருகிறதாம்.

ஐரோப்பா கண்டத்தில் சில சாஸ்திரிகள் 1220-குழந்தைகளை வளர்த்து இவைகள் நடக்கும் காலத்தைப் பின்வருமாறு கண்டுபிடித்திருக்கிறார்கள்; 100-க்கு 95-குழந்தைகள் 24-மாதமானவுடன் நடக்க ஆரம்பித்தன. 100-க்கு 46-பேர் 18-மாதமானவுடனும், மூன்றிலொருபங்கு 12-மாதமானவுடனும், 100-க்கு 10-பேர் 10-மாதமானவுடனும், நடக்கஆரம்பித்தன. இவைகளில் 3-குழந்தைகள் 8-மாதத்திற்குள் நடக்க ஆரம்பித்ததாம். இவைகள் யாவற்றும் நமது மாதர்களுக்கு அநேகமாகத் தெரிந்திருக்குமென்று நம்புகிறோம்.

நமது பத்திரிகை மிகத் தாமதமாக வெளியானதைப்பற்றி மிக விசனிக்கிறோம். அக்டோபர் நவம்பர்மாதப் பத்திரிகைகளை யொன்றாகப் பிரசுரிக்கவேண்டியதைக்குறித்தும் மிக வருந்துகிறோம். ஆயினும் டிசம்பர்மாதப் பத்திரிகை கூடியசீக்கிரத்தில் வெளிவரும். ஜனவரிமாதப் பத்திரிகையில் அடியில் வரும் சித்திரப்படங்கள் அடங்கியிருக்கும். நமது 7-வது எட்வர்டு மகாராஜா அவர்கள், அலக்ஸாண்டிரியா மகாராணியாரவர்கள், பிரின்ஸ் ஆப் வேல்ஸ், பிரின்ஸஸ் ஆப்வேல்ஸ், லார்டு கர்ஸனங்கள், லேடி கர்ஸன், லார்டு அண்டு லேடி ஆம்தில், தமயந்தி, ராதா, டெல்லிபடம்.

OFFICE OF ... OF BOOKS. REGISTERED 2-APR 1903 MADRAS.
316

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. IV புத்தகம் ௪. | Madras: December 1902. சென்னபட்டணம், 1902 டிசம்பர்மீ | No. 10. இல. ௧௦.

## செல்வம்.

செல்வம் என்பது:—திரு சம்பத்து, ஐஸ்வரியம், செல்லம் எனப் பல
பொருள் தரும் பதமாயிருக்கிறது. உலகத்தில் செல்வமானது அநேகவகை
களாகப் பிரிந்திருக்கின்றது. அவ்விதம் பிரிவுபட்ட செல்வங்களானவை
கடைசியாக இருவகையில் அடங்கிவிடுமென்பது யாவரும் சந்தேகமின்றி
ஒப்பத்தகுந்ததா யிருக்கின்றன. அவ்விருவகைச் செல்வங்களும் எவை
யென்று யோசிக்குமிடத்து, கல்விச் செல்வமும், பொருட் செல்வமும் என
நன்கு விளங்கும். இதுபற்றியே ஆன்றோர்களும் "கல்வியுடைமை பொரு
ளுடைமை யென்றிரண்டு செல்வமுஞ் செல்வமெனப்படும்" என்று கூறி
யுள்ளார்கள். உலகத்தில் பிறவிகள் அநேக விதங்களாய்ப் பிரிந்திருந்தபோதி
லும், அவைகளுள் தலைமையானது மானிடப்பிறவியென்று நூல்கள் முறை
யிடுகின்றன. மானிடப் பிறவியென்றாலும், மக்கட் பிறவியென்றாலும் பொ
ருந்தும். அம்மக்கட் பிறவியில், ஆண்மக்கள் பெண்மக்கள் என்ற இரு
பாலாரும் அடங்கியிருக்கின்றார்கள். பிறவிகளுள் மக்கட்பிறவி மாத்திரம்
தலைமைபெற்றும், மற்றப் பிறவிகள் தலைமை பெறாமலிருப்பதற்கும் காரண
மென்னவென்று யோசிக்குங்கால், சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்னப்
படுகின்ற பஞ்சேந்திரிய அறிவுகளின் ஏற்றந் தாழ்வுகளினாலென்றறிய
வேண்டியதாயிருக்கிறது. அப்படியிருந்தால், மிருகங்களுக்கும், மக்களுக்
கும் ஐயறிவு சமமாயிருக்க மக்கள்மாத்திரம் தலைமைபெறுவதற்கு கார
ணம் என்னவென்று யோசிக்கும்போது, மிருகங்களைவிட மக்களுக்கு மன
வறிவு ஒன்று அதிகமாக விருத்தலினாலென்றறியவேண்டியதாயிருக்கிறது.
இதுபற்றியே ஆன்றோர்களும் "மக்கண் மானிடரென்று மனத்தினால், மிக்க
மேன்மை விளங்கினரன்றெனில், பொக்கமேவும் பொறிகளோரைந்தினால்,
ஒக்குமாவினையொத்துயர்வுற்றிடார்" என்றும், அம்மனவறிவு ஒன்று
விசேஷித்திருக்கின்றபடியினாலேயே "அரிது அரிது மானிடராதலரிது" என்
றும், "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவியேயாதினும் அரிது" என்
றும் கூறி யுள்ளார்கள்.

அம்மனவறிவைக்கொண்டு தான் மக்கட்பிறவியினிலடங்கிய மனிதர்கள், மாதர்கள் என்கின்ற இருபகுதியாரும், உலகத்தில் இது நன்மை, இது தீமை என்று பகுத்தறியக்கூடிய தன்மையுடையவர்களா யிருக்கின்றார்கள். ஆகையால் இவ்விருபகுதியார்களே, செல்வங்களையெல்லாந் தம்முளடக்கிக்கொண்டு தலைமைபெற்று விளங்கும் மேலேகூறிய கல்விச்செல்வம்,பொருட்செல்வம் என்கின்ற இரண்டுசெல்வங்களையும் நிரம்பப்பெற்று உலகத்தில் வாழவேண்டியது அத்தியாவசியகமாகவிருக்கின்றது, அவ்விரண்டு செல்வங்களும், ஒன்றினொன்றடங்குந் தன்மையும், ஒன்றினொன்றடங்காத் தன்மையும் பெற்று விளங்குகின்றன. பொருட் செல்வமானது, கல்விச் செல்வத்திலடங்கியும், கல்விச்செல்வமானது பொருட்செல்வத்திலடங்காமையும் பெற்று விளங்குவதே உலகத்தில் அநுபவசித்தமாயிருக்கின்றது. இதனால் கல்வியில் பொருளடங்கியும் பொருளில் கல்வியடங்காமலுமிருப்பதுவிளங்குகிறது. இவ்விரண்டு செல்வங்களிலும் கல்விச்செல்வமே தலைமை பெற்று விளங்குகிறதென்பது நன்கு புலப்படுகின்றது. இவ்விதம் தலைமை பெற்று விளங்கும் இக்கல்விச்செல்வத்தைமனவறிவையுடையமனிதர்கள், மாதர்கள் என்கின்ற இருபாலாரும் பெறவேண்டுமென்பதும், அக்கல்வியானது மனவறிவுக்கு தூண்டுதற் கருவிபோல் நின்றுபிரகாசிக்கச் செய்கிறதென்பதும், அக்கல்வியில்லாதபோது அம்மனவறிவுபிரகாசத்தை யடையாது அப்பிரகாசத்தை யடையுமென்பதும் ஆன்றோர்களது துணிபாயிருக்கின்றன. அம்மனவறிவை மக்கள் சமமாக உடையவர்களா யிருந்தபோதிலும், அக்கல்விச் செல்வமுடையவர்களை மேலோர்களென்றும், அறிவுடையவர்களென்றும், கல்வியில்லாதவர்களைமூடர்களென்றும், அறிவில்லாதவர்களென்றும் புகழ்ந்தும், இகழ்ந்தும் நூல்கள் கூறுகின்றன. இதை நோக்கியே "ஓதாதார்க்கில்லை யுணர்வொடு மொழுக்கம்" என்றும், "உணர்வொடு போகங்கள் நுகர்தல்" என்றும் மேலோர் கூறியிருக்கின்றார்கள். இவ்விதம் உம்மால் சிறப்பித்துக் கூறப்பட்ட கல்விச்செல்வமும், பொருட்செல்வ மில்லாதபோது அதை யடைவது அசாத்தியமாயிருப்பது உலகத்தில் அநுபவசித்தமா யிருக்கிறதே யென்றும், அதனால் பொருட்செல்வத்தை யேன் தலைமையாகக் கூறப்படாதென்றும், அக்கல்வியைப்போல அநேகவித தொழிற் கல்விகளும் உலகத்திலிருக்கின்றனவே அவைகளையெல்லாம் ஏன் சிறப்பித்துச் சொல்லக்கூடாதென்றும் சிலர் ஆட்சேபிக்கலாம். கல்விச் செல்வமே பொருளை யீட்டுவதற்கு சிறந்த வழியாயிருக்கிறதென்றும், பொருளில்லாமலே ஒரு ஆசாரியனிடத்து பணிவிடைகள் செய்து கல்வியை யடையலாமென்றும், உலகத்திலுள்ள மற்ற தொழிற் கல்விகளுக்கெல்லாம் உபசாரமாயும், காரணமாயும், அவைகளிடத்தும் கற்றுக்கொள்ளுகிற ஒரு தொழில் நிகழ்கின்றமையால் கல்வியென்று கூறலாமே யன்றி, ரூடியாகவும் இடுகுறியாகவும் கூறப்படாதென்றும், அத்தொழில்களும் கல்வியானே மிகவும் விளங்கக்கூடியதென்றும், அது விளக்கத்தான் அவ்வவை விளங்குமென்



றும், பாஷைகளுக்கே கல்வியென்றபெயர் ரூடியாகவும்; இடுகுறியாகவும் விளங்குமாகையாலும் பாஷைகளுக்கெல்லாம் எழுத்துக்களே காரணமாகவிருக்கின்றமையால் அவைகளையும் அவைகளின் சேர்க்கை, வேறுபாடு முதலானவைகளைக் கற்றுக்கொள்வதே கல்வியென்று கூறப்படும். இதுபற்றியேநமதுமூதாட்டியாகிய ஔவையாரும்"எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும்" என்று கூறியுள்ளார்கள். இக்கல்வியொன்றே உலகத்திலுள்ள பதவிகளிற் சிறந்ததாகிய அரசபதவியையும், அதனினும் மேலானதாகிய மோட்ச பதவியையும் அடைவிக்கும். மற்றவைகள் அங்ஙனமாகாது. அக்கல்வியொன்றே மக்களுயிர்க்கு உறு துணையா யிருக்கிறதென்பதும், உலகத்தில் அடையவேண்டிய புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நான்கினையும் அடைவதற்கு ஆதாரமாயிருக்கிறதென்பதும், நூல்களின்றுணிபா யிருக்கிறது. இது நோக்கியே "அறம்பொரு ளின்பமும் வீடும்பயக்கும், புறங்கடை நல்லிசையுநாட்டும்-உறுங்கவலொன், றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை, சிற்றுயிர்க் குற்றதுணை" என்று மேலோர் கூறியிருக்கின்றார்கள். புருஷார்த்தங்களென்றபோது அவைகளை புருஷர்கள்மாத்திரம்தான் அடையவேண்டியது, மாதர்கள் அடையவேண்டியது இல்லையென்று சிலர் கூறினும் கூறலாம். உலகத்தில் புருஷர்களுடன் மாதர்களும் கூடியிருந்து இன்பதுன்பங்களை அடையவேண்டியது நூல்களின் முறையாதலாலும், தலைமைபற்றி புருஷார்த்தம் என்றுபுருஷர்கள்மேல் ஏற்றிக் கூறினமையாலும், மேற்சொன்ன செய்யுளில் "சிற்றுயிர்க் குற்றதுணை" என்று பொதுப்படக் கூறியுள்ளமையாலும், மாதர்களும் புருஷர்களுடனிருந்து அப்புருஷார்த்தங்களை ஒக்க அடையவேண்டுமென்பதே நூல்களின் சம்மதமென்பதும்விளங்குகின்றது, பொருளினால் அறத்தையும், இன்பத்தையும்அடையக்கூடியதாயினும்,அப்பொருளையீட்டுவதற்குங்கல்வியின்றி கூடாது. கல்வியிருந்தால் அப்பொருளை நல்வழியில் சம்பாதித்து அறத்தை யின்னவிதமாக செய்யவேண்டு மென்பதும், இன்பத்தை யின்னவிதமாக அநுபவிக்க வேண்டுமென்பதும், அநுபவிக்கக்கூடாத இன்பம் இன்னவையென்பதும், அநுபவிக்கக்கூடியஇன்பம்இன்னவையென்பதும் அக்கல்வியால் நன்கு விளங்குமாகையால் அதுவே இம்மூன்றுக்கும் முக்கிய காரணமாய் நிற்கின்றது. இம்மூன்றையுந் தவிர மோட்சத்தையும் கொடுக்க காரணமாய் நிற்கின்றது. இதனாலேயே "அறம்பொருளின்பமும்" என்றும், "வீடும்" என்றும் தனித்தனியாக உம்மைகொடுத்துக் கூறியுள்ளார்கள். இதுவுந்தவிர "புறங்கடை நல்லிசையு நாட்டும்" என்று, உலகத்தில் என்றும் அழியாப் புகழ் பெறுவதையும், "உறுங்கவலொன் றுற்றுழியுங் கைகொடுக்கும்" என்று, ஆபத்துக் காலத்தில் உறுதுணையாகி நின்று நன்மை யுண்டாக்கக் கூடிய தன்மையையும் விளக்கிக் கூறியிருக்கின்றார்கள். இதனாலே செல்வங்களுக்கெல்லாந் தலைமையாயுள்ள கல்விச்செல்வம், பொருட்செல்வம் இரண்

டினுள்ளும் கல்விச் செல்வமே முதன்மைபெற்று நிற்கின்றமையால் அக்கல்வியை மக்கட் பிறப்பினராகிய மனிதர்கள், மாதர்கள் என்கின்ற இருபாலாரும் குறைவறப்பெற்றும், இகத்திலடையவேண்டிய அறம், பொருள், இன்பம் மூன்றையும் அடைந்தும், பரத்தில் அடையவேண்டிய மோட்சசாம்பிராச்சியத்தையும் அடைந்து நித்தியாநந்த வாழ்வை யடையவேண்டுமென்பதும் நன்கு விளங்குகின்றது.

## 'A SHASTRI AND HIS WIFE FOR DELHI DURBAR.'

## ஒரு சாஸ்திரியும் அவர்மனைவியும் டில்லிதர்பாருக்குப் போதல்

(ராமர்சாஸ்திரியும், அவர்மனைவி வாலாம்பாளும்.)

காலம்—திங்கட்கிழமை இரவு பத்துமணி.

இடம்—ராமாசாஸ்திரியின் வீட்டுத்திண்ணை.

வாலா.—இன்னிக்கி என்ன இத்தனை நாழி ஆச்சு நீங்கவரத்துக்கு? எங்கேபோயிருந்தீர்கள் இத்தனை நாழி?

ராமா.—எங்கேயும் இல்லேடி அடுத்தவீட்டுத்திண்ணேலே சிவராமபட்டரோடே பேசிகிண்டு இருந்தேன்.

வாலா.—இத்தனைநாழி என்னபேச்சு. நாளைக்கு வெளீலே எங்கேயாவது காரியமுண்டா என்ன? (இருவரும் உள்ளேபோகுதல்)

ராமா.—இல்லேடி இல்லே, என்னமோ டில்லி அங்கர பட்டணத்திலே நம்ப ராஜாவுக்குப் பட்டங்கட்டப் போராளாம, அவாத்திய வேடிக்கையாயிருக்குமாம். எல்லா ராஜாக்களும் அங்கே போப்போராளாம். மூணு நாலு மாஸத்துக்கு முன்னாலேயே பிடிச்சி இவாளெல்லாம் போய் இருக்கிறத்துக்கு அங்கே ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறதாம். அரமனை அரமனையா வீடு கட்டராளாம். சீமையிலேயிருந்து எத்தனையோ வெள்ளக்காராளெல்லாம் வரப்போராளாம். சென்னப்பட்டணத்திலிருந்துகூட கட்டு கட்டாய்ப் போப்போராளாம். அங்கே அசாத்திய வேடிக்கையெல்லாம் நடக்கப்போறதாம். அவர் இத்தனைநாழி அதையெல்லாம் பத்தி கதை கதையாச் சொல்லிகிண்டிருந்தார். அதுக்குத்தான் இத்தனைநாழி ஆச்சு.

வாலா.—அப்படியிருந்தா நாம்பளும் போவோமே. நீங்கதான் என்னை எங்கேயும் அழச்சிகிண்டு போறதில்லே. இதுக்கானும் நீங்க என்னைக் கட்டாயம் அழச்சிகிண்டுதான் போகணும். இல்லாதபோனா சரிப்படாது. எத்தனை செலவு ஆனாலும் ஆகட்டும். போகத்தான்வேணும். அதிருக்கட்டும், அந்த ஊர் பேரென்னா தில்லியா பிள்ளியா அது எங்கே இருக்கு?

318



ராமா.—அதென்னமோ கல்கத்தாவுக்குப்போய் அங்கே யிருந்து பம்பாய்க்குப்போய் அப்பறம் டில்லிக்குப் போகணுமாம். காசிக்குப்போற வழியாம் அது. அந்தஊர் எங்கேயிருந்தா நமக்கென்ன நான் உன்னெ அழச்சிகிண்டு இழச்சிகிண்டு போமாட்டேன். அவ்வளவுதூரம் போரத்துக்கு கையிலே பணம் எங்கேயிருக்கு? அங்கே போனப்பரம் சாப்பாட்டுக்கு எப்படியாவது பாத்துக்குவம். அங்கே இத்தனை ஸம்பரவத்துலே சமாராதனை நடக்காதா. அங்கேபோய் சாப்புட்டா போச்சு அடெ அப்படி இல்லாட்டாதான் என்ன? அங்கே எத்தனையோ பேர் பிராம்மணா எல்லாம் வரப்போராளே அவாளுக்கு ஏதானா வைதீக காரியம் பண்ணிவைக்கும் படியாவராதா பாத்துக்குவம் அதிருக்கட்டும். மொதல்லே இங்கேயிருந்து அவ்வளவுதூரம் போரத்துக்குக்கட்டெவண்டி கடையாதாம். பொகைவண்டிலே தான் போகணுமாம். அதுக்கு நம்படத்திலே பணம் எங்கெருக்கு.

வாலா.—பணத்துக்கென்ன. வேணுமன்னா ஆப்படாதா என்ன. நான் இதுவரைக்கும் கல்லியாணங்கள்ளே பூரிவாங்கின பணமெல்லாம் சேத்து வச்சிகிண்டு இருக்கேன். எல்லாய்சேத்து இப்போ நாலு அஞ்சுரூபா இருக்கும். அப்படி போராட்டா, பஞ்சாங்கக்கார சிவராம பட்டரிடத்திலே ஏதானா. இப்பொ ரெண்டு மூணு ரூபா கடன்வாங்கிகிண்டா அப்பறம் நம்ப வந்தவுடனே எப்படியானேகொடுத்துக்குவம். நீங்க ஒருசிராத்தம் பண்ணி வைக்கப்போனாலும் சரியாபோச்சு. அதுந்தவிர அந்த ஊரு காசி கிட்ட இருக்கு அண்ணீளே. அப்படியானா அங்கே வேடிக்கைபார்த்துட்டு அப்படியே காசிக்கும்போய் கங்காஸ்தானம் பண்ணிபிட்டு வரலாமே.

ராமா.—சரிதாண்டி சரிதான் இந்தப்பணமெல்லாம் போராது. அவர் சொன்னத்தைப்பாத்தா ஏதானா பத்து பன்னெண்டு ரூபாய்க்குக் கொறையாமே வேணும்போலிருக்கு. அத்தனை பணத்துக்கு நம்ப எங்கெபோரது இப்போ? அது கடக்கு, நீ எனக்கு சாதம்போடு பசிப்பிராணம்போரது,

வாலா.—(கண்ணீர்வழிய) ஆனாஎன்னை அழச்சிகிண்டு போமாட்டீளோ எனக்கு அப்பாவே தெரியுமே ஒங்க குணம். ஒமக்கு எனையாளாவாக்கப்பட்டத்துக்கு இதான் சுகம். மின்னேயும் இப்படித்தான் அந்த செட்டி வீட்டுக் கல்லியாணத்துக்கு நீங்கமாத்திரம்போய் தட்சணைவாங்கிகிண்டு அங்கே வேடிக்கையெல்லாம் பாத்துட்டு வந்தீள். அதுக்குப் பதிலா இப்போ என்னை அழச்சிக்குண்டு போனாத்தான் ஆச்சு.

(அழுதுகொண்டு பாயை விரித்துப்போட்டு முக்காடிட்டுப் படுத்துக் கொள்ளுதல்)

ராமா.—(மனதுக்குள்ளே) இதேதுடா சங்கடமாயிருக்கு. நான் இந்த சங்கதியை சொல்லாமலிருக்கப்படாதா. அது போனா போரது. எப்படியாவது இவளை யிழுத்துக்கொண்டுபோய் அந்தவேடிக்கையெல்லாம் ஒரு நாள்

16116

காண்பிச்சுவிட்டு வந்தால்தான் தேவல்லெ. இல்லாட்டா நம்மெ உசிரோடே வக்கெமாட்டா. (கிட்டப்போய்) அடியே எந்திருடீ எந்திரு, எப்படியாவது உன்னை அழச்சிகிண்டுபோரேன் எந்திரு. அடுத்த சனிக்கிழமை நம்ப வக்கீல் கிருஷ்ணசாமி அய்யர் ஆத்துலே ஒரு சிரார்த்தம்வரது. அதை நடப்பிச்சூட்டு, பத்தாநாள் நாயித்துக்கிழமை யண்ணிக்கி கட்டாயம் பரப்பட்டுப் போவோம். நீ இப்போ எந்திருந்து எலையைப்போட்டு பரமாறு.

வாலா.—(பாயிலிருந்தே)அதெல்லாம் சரிப்படாது. நாளைக்குக்காலமே பரப்பட்ரதாயிருந்தால் நான் எந்திருக்கிறேன்.

ராமா.—(மனதுக்குள்)இதேதுடா நல்லபிசாசாவந்து தலைப்பட்டிருக்கு நன்னா பிடிச்சிகிண்டு ஆட்ரதுராப்பா நம்மை. சரிதான் அப்படியே ஆகட்டும் எந்திரு. (அவள் எழுந்திருந்து பரமாறுதல்.)

காலம்—செவ்வாய்க்கிழமை காலை.

இடம்—வக்கீல் கிருஷ்ணசாமி அய்யர் வீடு,

(கிருஷ்ணசாமி அய்யர் காபி சாப்பிடுகிற சமயம். காபியை ஆற்றிக் கொண்டிருக்குப்போது ராமா சாஸ்திரி பிரவேசித்தல்.)

கிருஷ்.—வாரும் சாஸ்திரிகளே இப்பொழுதுதான் உங்களுக்குச் சொல்லியனுப்ப வேணுமென்று நினைத்தேன். அதற்குள் நீங்களே வந்துவிட்டீர்கள் நல்லவேளை. என் தகப்பனார் சிரார்த்தம் எப்பொழுது?

ராமா.—அதைச் சொல்லத்தான் நான் இப்போ இங்கேவந்தேன். அது வருகிற சனிக்கிழமை. ஆனால், அதுக்கு நான் இருந்து நடப்பிக்கமுடியாது. நம்ப சிவராம பட்டரிடத்திலே சொல்லியிருக்கிறேன். அவர் வந்து நீங்கள் ஆபீசுக்குப்போர டயத்துக்கு அரெமணி முன்னாலேயே பண்ணிவச்சூடரேன் என்றுசொல்லியிருக்கிறார். அவர் அப்படியேசெய்வர். நீங்கள் அதைப் பத்தி யோசிக்கவேண்டியதில்லை.

கிருஷ்.—ஏன் நீர் எங்கேபோகிறீர்? சிரார்த்தம் பண்ணிவைத்துவிட்டுப் பிறகு போகக்கூடாதோ?

ராமா.—அவ நாளைக்கே போகணும் அன்ராளே, சுருக்கப்பரப்பட்டா தானே ரெண்டுநாள் முன்னாலேயே டில்லிபோய்ச்சேரலாம்.

கிருஷ்.—(ஆற்றிக்கொண்டிருந்த காபியை கீழே வைத்துவிட்டு ஆச்சரியத்துடன்), டில்லியா! அவளா! அதென்னங்காணுமது சங்கதியென்ன விவரமாய்ச் சொல்லும் கேட்போம்!

ராமா.—டில்லிப்பட்டணத்திலே என்னமோ கும்பாபிஷேகம், இல்லே இல்லே பட்டாபிஷேகம் நடக்கப்போகிறதாமே. அதுக்கு நானும் அவளும் போப்போறோம்.



கிருஷ்.—(கொல்லென்று நகைத்துக்கொண்டு)ஓய், ஓய் என்னைக்கூட அழைத்துக் கொண்டுபோக மாட்டீராங்காணும், நான்கூட வருகிறேன் காணும். கொஞ்சமிரும். இந்தக் காபி ஆறிப்போகிறது, இதை சாப்பிட்டு விட்டு வருகிறேன் (காபியைக் குடித்தல்.)

ராமா.—என்ன பரியாஸம் பண்றீளே, அவ என்னைத் தொந்தரவுபண்ணினா. அதுக்கோசரம் அவளை அழைச்சுக்கொண்டுபோய்க் காண்பிச்சூட்டு வருவோமன்னு போரேன். எனக்காக நான் ஒண்ணும் போகல்லே.

கிருஷ்.—போங்காணும் போம். அவளுக்காகப் போகவாவது, உமக்காகப்போகவாவது. உமக்கு வேறுவேலை யொன்றுமில்லையா யென்ன? நீர் உம்முடைய வைதீக விர்த்தியிலே மண்ணைப்போட்டுக்கொள்ளப் பார்க்கிறீரா என்ன? இதெல்லாம் உம்முடைய ஸம்ஸாரம்பண்ணுகிற கூத்துப்போலிருக்கிறது. நீராவது டில்லிக்குப் போகவாவது காணும், நான் போகவேணுமென்று பார்க்கிறேன் எனக்கே சரிப்படவில்லையே. பேசாமல் வீட்டுக்குப் போய் வேலையேதாவது இருந்தால் பாரும் போம்.

ராமா.—அதென்ன இப்படிச் சொல்லுகிறீளே. சங்கதியென்ன? விவரமாய்ச் சொன்னான்னா தெரியும்?

கிருஷ்.—ஆனால் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளும். டில்லியென்பது பூர்வீகத்தில் இந்தியாவிற்கு மிக்கப் பிரசித்தமான முக்கிய பட்டணமாயிருந்தது. அது பங்காள ராஜதானியின் மத்தியில் இருக்கிறது. அதில் அநேக யுத்தங்கள்செய்து வெற்றிபெற்ற மொகலாய சக்கிரவர்த்திகள் பலர் இருந்து அரசாண்டு வந்தார்கள். இப்பொழுது இந்தியாவானது இங்கிலீஷ்காரர்கள் வசம் வந்த பின்பும் அந்தப்பட்டணத்தின் மகிமை குறையவில்லையென்று தெரிகின்றது. இப்பொழுது இங்கிலாந்தின் அரசனாகிய எட்வர்ட் துரையவர்கள் இந்தியாவுக்குச் சக்கிரவர்த்தியாகப் போவதால், அவரது முடி சூட்டுதலின் விபவங்களை டில்லியில் கொண்டாடுகிறார்கள். முடிசூட்டுதலுக்கு சக்கிரவர்த்தியே நேராக இந்தியாவுக்குவர சாத்தியமில்லாததினால் அவர் தமது சகோதரராகிய டியூக் ஆப்கான்னாட் என்பவரை அனுப்புகிறார். இவரும், ராஜப்பிரதிநிதியாகிய லார்ட் கர்ஸன் துரையவர்களும், இந்தியாவிலுள்ள ராஜாக்களும், நவாபுக்களும், மற்றுமுள்ள பெரியகனதனவான்களும் டில்லியில் வருகிற ஜனவரிமீ 1௳ ஒன்றுசேர்ந்து பட்டாபிஷேக முடிசூட்டுதலைக் கொண்டாடப்போகிறார்கள்.

ராமா.—ஆனா யார் வேணா வேடிக்கை பாக்கப் போகலாமோ இல்லையோ?

கிருஷ்.—யார் வேணுமென்றாலும் போகலாமா! அங்கே இடம் ஏது காணும்? அவரவர்கள் அப்ளிகேஷன்போட்டு இடம் திட்டம்பண்ணி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் காணும்.

ராமா.—ஆனா நாங்கூட அந்த அக்கிளிவேஷம் (அப்ளிகேஷன்) போட றேனே.

கிருஷ்.—அடெ நீர் என்ன வேஷம்போட்டாலும் முடியாதுகாணும்.

ராமா.—அது கடக்கு நீங்க சொல்லுங்கோ மேலெ காதாலெயானுங் கேப்போம் (மெதுவாக) வீட்டுக்குப்போனா அவ என்ன சொல்றளோ.

கிருஷ்.—இப்படி அங்கே வருபவர்கள் முன்னமே தங்கள் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி இருப்பதற்கு இடம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அநேகர் தாங்கள் இருப்பதற்குக் கூடாரங்கள் அடித்துவை வத்திருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மிக்க செல்வவான்கள் இருக்க கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை கவர்னர் ஜெனரல் இருக்கும் இடமும், டியூக் ஆப் கான்னாட் இருக்கும் இடமுமாம். இந்த வீடுகள் கற்களால் கட்டப்பட்டு நமது தேசத்தில் உள்ள அநேகவிதமான சித்திர வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்படுகின்றன.

அங்கே எல்லாவற்றிலும் முக்கியமான கட்டடம் ஆம்பிதியேடர் என்பது. இங்கேதான் ஜனவரிமீ 1௳ காலையில் முடிசூட்டுதலைக் கொண்டாடுவதற்காக எல்லாரும் வந்து சேருவது. இது, நடுவில் சுமார் 600 அடி விஸ்தீரணத்தைச் சுற்றி சக்கரவடிவாகப் படிகள் அமைந்துள்ள ஓர் கட்டடம். இப்படிகளில் சுமார் ஆயிரம் ஜனங்கள் உட்காரலாம். அந்த நடுவிடத்தில் உயர்ந்த மேடையொன்று யெழுப்பப்பட்டிருக்கிறது. இந்தமேடையின்மேல் நின்றுகொண்டுதான் நமது ராஜப்பிரதிநிதியாகிய கர்ஸன்துரையவர்கள் சக்கிரவர்த்தியின் முடிசூட்டுதலைப்பற்றி பேசுவர். வேடிக்கை பார்க்கவந்த ஜனங்கள் ஜனவரிமீ 1௳ காலை 10 மணிக்கு தங்கள் தங்கள் இடங்களில் உட்காரவேண்டியது. ராஜாக்களெல்லாம் 11-மணிக்கும், கவர்னர்களெல்லாம் 11—15-மணிக்கும், தங்கள் இடங்களில் உட்காருவார்கள்.

ராமா.—ஏ அப்பா! இங்கே நாம் எந்த மூலை!

கிருஷ்.—பிறகு, டியூக் ஆப்கானாட்டும் அவர் மனைவியும் பலவித வாத்தியங்களுடனும் பரிவாரங்களுடனும் வந்தவுடன் கவர்னர் ஜெனரலும் வந்து தங்கள் இடத்தில் உட்காருவார்கள். அதன்பின்பு மேஜர் மாக்ஸ்வெல் (Major Maxwell) என்னும் முக்கிய தூதர். மற்று 12 தூதர்களுடனும் மிக்க ஆடம்பரத்துடன் வந்து சீமைத்துரைத்தனத்தாரிடமிருந்து வந்திருக்கும் ஏழாம் எட்வர்டு இந்தியாவுக்குச் சக்கிரவர்த்தியாக ஏற்படுத்தப்பட்ட விஷயமடங்கிய ப்ராக்ளமேஷன் (Proclamation) என்னும் அறிக்கைக் கட்டளையை வாசிப்பார். உடனே பலவிதமான வாத்திய கோஷங்களுடன் இங்கிலாந்துக்குரிய வெற்றிக்கொடியை யுயர்த்தி 101 பீரங்கி வெடி தீர்ப்பார்கள். பிறகு கர்ஸன்துரையவர்கள் அந்த மேடையின்மீதேறி நின்று சக்கிரவர்த்தியின் முடிசூட்டுதலைப்பற்றி பேசியானவுடன் அங்கே வந்திருக்



கும் ராஜாக்களெல்லாம் அம்மேடைக்குச் சமீபத்திற்போய் சக்கிரவர்த்திக்கும், டியூக் ஆப்கானாட்டுக்கும் கர்ஸன்துரை யவர்களுக்கும் வந்தனமளித்துப் பதில் மரியாதை பெற்றுக்கொண்டுத் திரும்புவார்கள். அதன் பின்பு நமது சக்கிரவர்த்தி நெடுங்காலம் வாழ்கவென்று எல்லாரும் கடவுளைத் தொழுதபிறகு அவரவர்கள் தங்கள் தங்கள் பரிவாரத்துடன் தாங்களிருக்கும் இடம்போய்ச் சேருவார்கள்.

ராமா.—அப்புறம்?

கிருஷ்.—அப்புறமென்ன எல்லாருந் தங்கள் இஷ்டர்களுடன் சேர்ந்து விருநதுண்டு களித்திருப்பார்கள்.

ராமா.—இப்படி எத்தனை நாள் இவர்கள் அங்கே யிருப்பார்கள்?

கிருஷ்.—சுமார் பத்து அல்லது பதினைந்து நாளுக்குக் குறையாமல் இருப்பார்கள். ஒரு அரசனை மற்றொரு அரசன் அவன் இருப்பிடம்போய்க் காணுதல் இவர்களெல்லாம் டியூக் ஆப் கானாட்டையும், கவர்னர் ஜெனரலை யும் காணுதல் இவற்றிற்கெல்லாம் பத்து நாளுக்குக் குறையாமற் செல்லும்.

ராமா.—நீங்க சொல்றத்தைப் பத்தா நானும் அவளும் போய் அந்த வேடிக்கையெல்லாம் பாத்துட்டு வரல்லாமன்னு தோண்றதே அவகிட்ட நாலு அஞ்சு ரூபா இருக்கு நான் வேறே ஒரு ரூபாய் வச்சிண்டு இருக்கேன். எல்லாஞ்சேத்தா இங்கேயிருந்து போரத்துக்கு மாத்திரம் வண்டிச் சத்தத்துக்குப் போராதா. அங்கே போனப்பரம் சாப்பாட்டுக்குப் பாத்துக் குவம், எத்தனையோ ராஜாக்கள் சமாராதனை பண்ணமாட்டாளா? அங்கே யிருந்து திரும்பி வரத்துக்கும் பணம் சம்பாதிக்க வழி இருக்கு. டிசம்பர்மீ 29-ம் தேதி யன்னிக்கி அமாவாசை ஒன்னு வரது. அன்னிக்கி அங்கே எத்தனைபேர் தர்ப்பணம்பண்ணுவா. அவா எல்லாருக்கும் நான்போய்ப் பண்ணி வைக்கறேன். அங்கேவேறேஎந்தசாஸ்திரி வந்திருக்கப்போறான்? பேருக்கு ஒரு ரூபா மேனிக்கிக் கொடுத்தாகூட எனக்கு எதேஷ்டமாச்சே! [illegible] பேருக்கும்

கிருஷ்.—அதெல்லாமிருக்கட்டுங் காணும். சென்னப்பட்டணத்திலிருந்து டில்லிக்குப் போகமாத்திரம் ரயில் சார்ஜ் முப்பத்தைந்து ரூபா ஆகிறதே அவ்வளவு பணத்துக்கு நீர் எங்கேகாணும் போவீர்?

ராமா.—எத்தனை! முப்பத்தஞ்சி ரூபாயா!! போரும் போரும் என்னையும் அவளையும் வித்தாகூட முப்பத்தஞ்சி ரூபா கிடைக்காது. போரும் நான் ஆத்துக்குப் போயிட்டு வரேன். திரும்பிப் போகும்போது இத்தனை நாழி அவ என்ன சொல்றளோ. யைப்பேசிவிட்டு ஆத்துக்குப்போனா அவ என்ன சொல்றளோ. நான் டில்லிக்

கிருஷ்.—ஒன்றுஞ் சொல்லமாட்டாள். பயப்படாதேயும். நான் டில்லிக் குப் போகிறபோது உங்கள் இரண்டுபேரையும் கட்டாயம் அழைத்துக் கொண்டு போகிறதாகச் சொன்னேனென்று தைரியமாய்ச் சொல்லும்.

E. சுப்பிரமணியம்.

# காரைக்காலம்மையார் சரித்திரம்.

தன்னரிய செயல்கண்டு தன்கணவன் றணந்தயலூர் சார்ந்துமாறு
நன்னலஞ் சேரொருமாதை நயந்து மணம்புரிந்தொழுகு நாளினோர்ந்து
மன்னரியகிளையோடு மவண்மேவியவன் றன்னை வணங்கக்கண்டு
பின்னரியதன் றநுவை நீக்கியருட் பேய்வடிவம் பிறங்க நின்று.

நின்று மரனமறைகலைக் கேகவுளம் வியந்து நனிநிறை சாரன்பி
னென்றுமவன் றாளிணைக்கே யிசைந்தபலபாமாலையினிதிற் சூட்டிக்
கன்று சிரமதினடந்து கைலைசெலப் பரனுமையோ டம்மையென்னுத்
துன்று மன்பி னப்பாவென் றருகணைந் தவம்மைபதஞ் சூடிவாழ்வாம்.

நீர்வளம் மலிந்து, நிலவளம் யொலிந்து குடிவளம் மிகுந்து விளங்குங் காரைக்கா லென்னும் பதியில் வாழும், நால்வகைக் குடிகளுள் மூன்றாவதாகிய, வைசியகுலத்தைச்சார்ந்த வணிகமாக்களுள், தலைவராயும், அளவு காண்டற்கரிய அறநூல்கள் கூறும் ஒழுக்கங்களிற் சிறிதும் தவறாது, மெய் பேசுதலையே ஒரு நல் விரதமாகக் கொண்டு ஒழுகிவந்த தனதத்த செட்டியாரென்பவர் ஒருவர் இருந்தார்.

அத் தனதத்த செட்டியாருக்கு, லட்சுமிதேவியே அவதாரஞ் செய்தது போல் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை சீராட்டி ஊட்டி வளர்த்துவரும் நாளில், அக்குழந்தை தளர் நடையிட்டு நடக்கும் பருவத்திலேயே, சிவபெருமானிடத்து தமக்கு பக்தியிருப்பதை வெளிப்படுத்தும்படி அன்பு பொருந்திய மொழிகளைப் பயின்றுவந்தது. அக்காலையில் தனதத்த செட்டியார், ஆண்டுதோறும் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் தம் உறவின் முறையார், களிகூரும்படி செய்து, அக்குழந்தைக்கு புனிதவதியார் என்னுந் திருநாமமிட்டு வளர்த்துவர, சிவபெருமானிடத்துள்ள அன்பைப்பா... ...ிறங்கவர்களாய் புனிதவதியார் வளர்ந்து வந்தார்கள். அக்காலத்திலேயே தமது இல்லத்துக்கு யாராவது அடியார்கள் வருவார்களானால், அவர்களைப் பரிவாய் உபசரிப்பதும், அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைப் புரிவதும், விளையாடும் நேரங்களில் சிவபெருமானிடத்து அன்புபொருந்திய வார்த்தைகளைப் பேசுவதுமாயிருந்து, தமது மங்கைப் பருவத்தை யடைந்தார்கள். அப்போது நாகப்பட்டினத்தில் வசித்துவந்த நிதிபதி செட்டியார் என்பவர் ஒருவர், தமது குமாரனாகிய பரமதத்த செட்டியாருக்கு மணஞ்செய்யக் கருதி, காரைக்காலில் வசிக்கும் தனதத்த செட்டியார் கிரகத்திற்கு புனிதவதியாரை மணம் பேசும்படி தமது பந்துக்களில் அறிவுடையார்களான சில முதியோரை அனுப்பினர், வந்த அம் முதியோர் தனதத்த செட்டியாரைக் கண்டு, நாகப்பட்டினத்தில் வாழும் நிதிபதி செட்டியார் மகனாகிய பரமதத்த செட்டியாருக்கு உமது அருங்



குமாரத்தியாகிய புனிதவதியாரை, நமது குலமுறைப்படி விவாகம் செய்து கொடுக்க ஒருப்படுகின்றீரா வென்று கேட்டார்கள்.

அதனைக்கேட்ட தனதத்த செட்டியார், அவர்களுடைய வரன்முறை
களை நன்றாய் விசாரித்தறிந்து அப்படியே தமது புத்திரியாகிய புனிதவதி
யாரை விவாகஞ் செய்துகொடுப்பதாக ஒத்துக்கொண்டார். உடனே முதி
யோர்கள் நாகப்பட்டினஞ் சென்று, தனதத்த செட்டியார் விவாகத்துக்கு
ஒத்துக்கொண்டதை நிதிபதி செட்டியாருக்கு அறிவித்தார்கள். அதனை
யறிந்த நிதி பதி செட்டியார், விவாகத்துக்கு வேண்டிய காரியங்களை முடித்
துக்கொண்டு, விவாக நாளைக் குறிப்பிட்டு தனதத்த செட்டியாருக்கு மண
வோலை யெழுதிவிட்டு, விவாக நாள் சமீபித்திருக்கும்போது, பரமதத்த
செட்டியாருக்கு மண அலங்காரஞ்செய்து, மங்கல வாத்தியங்கள் முழங்க
தமது பந்துக்களுடன் காரைக்கால் பட்டினம் வந்து சேர்ந்தார். தனதத்த
செட்டியார் மணவோலையில் குறிப்பிட்ட நாளில் தமது அருங் குமாரத்தி
யாகிய புனிதவதியாரை அக்கினிசாட்சியாக பரமதத்த செட்டியாருக்கு,
பந்துக்கள் யாவரும் களிக்கும்படி பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்தார்.
கலியாண காரியங்கள் யாவும் செவ்வனே முடிந்தபிறகு, தங்கள் குலத்துக்கு
புனிதவதியார் அருமையான ஒரே புத்திரியாகையால், அந்தம்மாளை நாகப்
பட்டினத்துக்கு மணமகனுடன் அனுப்ப இசையாதவராய், தமது அருங்
குமாரத்தியும், மருமகனும் வசிப்பதற்கு தமது கிரகத்தின் பக்கத்திலேயே
ஒரு மாளிகை யமைத்து, அதில் மகளையும், மருமகனையும் குடிவைத்தார்.
அதன்பிறகு தனது மருமகப்பிள்ளையாகிய பரமதத்த செட்டியாருக்கு
வேண்டிய சீதனங்களைக் கொடுத்தார். பரமதத்த செட்டியார் அதைக்கொ
ண்டு தமது மனையின் வளப்பத்தை வாணிபத்தாற் பெருக்கிவரத் தொடங்
கினர்.

இவ்விதமாக எமது புனிதவதியார் தமது கணவருடன் இல்லற தரு
மத்தை நடத்திக்கொண்டு, சிவபெருமானுடைய அடியவர்கள் எவராவது
தமது கிரகத்திற்கு வருவார்களானால், அவர்களுக்கு நல் வார்த்தைகள்கூறி,
அமுதிட்டு உபசரித்து வருவார்களாயினர். இப்படியிருக்கையில் ஒருநாள்
பரமதத்த செட்டியாரைக் காணவந்த ஒரு வர்த்தகன் அதிமதுரமான இர
ண்டு மாம் பழங்கள் கொண்டுவந்து கொடுத்தான். அவைகளை அவர் வாங்கி
தமது வேலைக்காரனிடம் கொடுத்து கிரகத்தில் கொடுத்துவிட்டு வரும்படி
கட்டளையிட்டார். அவன் அவைகளை புனிதவதியாரிடம் கொண்டுவந்து
சேர்த்தான். அவைகளை எமது புனிதவதியார் வாங்கி வைத்திருக்குங்
காலத்தில், ஒரு சிவனடியார் அதிக பசியுடன் கிரகத்துக்கு வந்தார். அவ
ரைக் கண்டவுடன் எமது புனிதவதியார் சாஷ்டாங்கமாக நமஸ்காரம்
செய்து, இனிய உபசார வார்த்தைகள் கூறி, அவர் அதிக பசியாயிருப்பதை
யறிந்து, அவரை உபசாரமாக ஆசனத்தின்மீதுட்காரவைத்து, இலையில்

சாதம் வட்டித்து, அப்போது பதார்த்தம் ஒன்றும் இல்லாமை கண்டு, தமது கணவனார் அனுப்பிய மாம்பழங்களில் ஒன்றை வைத்து, அவரைச் சாப்பிடும்படி செய்து உபசரித்து அனுப்பிவிட்டார்கள்.

சிவனடியார் இவ்விதம் அமுதருந்திபோனபிறகு, மத்தியானகாலத்தில் தமது கணவனார் வந்து, குளித்து பூசை முதலானவைகளை முடித்து, போஜனத்துக்கு வந்தார். உடனே கணவனாருக்கு செய்யவேண்டிய உபசாரங்களையெல்லாம் செய்து, பரிகலந்திருத்தி, அன்னமளித்து, கறியமுதுகளையெல்லாம் படைத்து, சிவனடியாருக்கு வைத்த ஒரு பழம் போக மற்றொரு பழத்தை தமது கணவனாருக்கு கொண்டுவந்து வைத்து முறைப்படி ஊட்டுவாராயினார்கள். பரமதத்த செட்டியார் அப்பழத்தைப் புசித்துவிட்டு, அது மிகவும் மதுரமாயிருந்தமையால், மற்றொரு கனியையும் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டார்.

இதைக்கேட்ட எமது புனிதவதியார், மற்றொருபழத்தையும் கொண்டுவரப் போகிறவர்கள்போல் உள்ளே சென்று, ஆபத்துக்காலத்தில் உதவிபுரியும் சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை மனத்துட் கொண்டு பிரார்த்திக்க, அவருடைய அருளால் எமது புனிதவதியார் கையில் அதிமதுரமான மாங்கனியொன்று வந்தது. அதைக் கொண்டுபோய் தமது கணவனாருக்கு படைத்தார்கள். அதைச் சாப்பிட்ட பரமதத்த செட்டியார், முன்னிலும் அதிக மதுரமாயிருந்ததைக் கண்டு, இது நான் முன் அனுப்பின மாங்கனியன்று. இது மூவுலகங்களிலும் அகப்படாதது போன்ற மதுரமாயிருக்கின்றது. இது வந்தவிதம் என்னவென்று கேட்டார். அதற்கு எமது புனிதவதியார், சிவபெருமான் அடியார்களுக்கு அருளுந் திறமையை வெளிப்படுத்தக்கூடாதென்று, அதனை சொல்லாதவராயும், கணவரிடம் உண்மை கூறுதலன்றி பொய்கூறுவது கற்புடைமை யாகாதென்றும் நினைந்தவராய் அஞ்சி நின்று, நடந்ததை நடந்தபடி சொல்லிவிடுவதே கற்புடைமைக்கு அழகென்று நினைந்து, நடந்த விருத்தாந்தங்களை யொன்றும் ஒளியாமல் கணவனாரிடம் சொல்லிவிட்டார்கள். அதைக் கேள்வியுற்ற பரமதத்தசெட்டியார், இக்கனி பரமசிவனுடைய அருளால் கிடைத்தது உண்மையாயிருக்குமானால், அதைப்போலொத்த கனி இன்னொன்று வரப்பெற்று தருவாயாகவென்று கேட்டார். எமது புனிதவதியார் அவ்விடம் விட்டகன்றுபோய் பரமசிவனுடைய திருவடிகளை மனதிற் றியானித்து, தேவரீர் இன்னொரு கனி யருளிச்செய்யா திருப்பீரேல் எனது கணவனாரிடம் என்னுடைய வார்த்தை பொய்யாய்ப் போய்விடுமென்று குறையிரந்து வேண்டித் துதிக்க, திருவருளால் அதைப்போன்ற வேறொரு கனி தமதுகையில் வந்திருக்க, அதிக சந்தோஷ முடையவர்களாய், அதைக் கொண்டுபோய் தமது கணவனாரிடம் கொடுத்தார்கள். அக்கனியை பரமதத்தசெட்டியார் அதிக அதிசயத்துடன் கையில்வாங்கினார். உடனே கையில்



இருந்த அக்கனி மறைந்துபோனதைக் கண்ட அப்பரமதத்த செட்டியார், நீங்குதற்குக் கூடாத அதிக பயங்கொண்டு, மனக்கலக்க மடைந்து, எமது புனிதவதியாரை தெய்வமாது என்று நினைந்து, அவர்களை விட்டுப்பிரிந்து போய்விட வேண்டுமென்ற எண்ணத்துடன் இல்லற தர்மத்தை நடத்திக் கொண்டு வந்தார். அதே எண்ணமாக விருந்த பரமதத்தசெட்டியார், கடல் யாத்திரை சென்று திரவியத்தை சம்பாதிக்க வேண்டுமென்கிற எண்ணங் கொண்டு, அக்கடல் யாத்திரைக்கு வேண்டிய மரக்கலமொன்றை சமைப்பித்து, அதில் வேண்டிய பொருள்களை யெல்லாம் சித்தம்செய்து ஏற்றிக்கொண்டு கப்பல் ஆட்களுடன் கடல் யாத்திரை செய்யப் புறப்பட்டார். பிறகு தான் குறித்த தேசம்போய்ச் சேர்ந்து, அங்கு சிலநாள் வியாபாரஞ் செய்து, திரண்ட திரவியத்தை சேர்த்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு பாண்டி நாட்டிலுள்ள ஒரு பட்டினம் வந்து சேர்ந்தார். அங்கு சிலகாலம் வர்த்தகஞ் செய்துகொண்டிருந்து, அதிக திரவியத்தைச் சம்பாதித்து, அப்பட்டினத்திலுள்ள ஒரு வணிகனுடைய குமாரத்தியை மணம் புரிந்துகொண்டார். அங்கு பரமதத்தசெட்டியார் தாம் புதிதாக மணம் புரிந்துகொண்ட காதலியுடன், எமது புனிதவதியாரை விட்டுவந்த சங்கதியை ஒருவருக்குந் தெரிவிக்காமல் வாழ்ந்துவரும் நாளில் அங்கு தமக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அப்பெண் குழந்தைக்குதான் முன்தெய்வமாது என்று நினைத்து, உடன்வசிக்கப்பயந்து நீத்துவந்த புனிதவதியாரையேவழிபடுங் குலத்தினர்களாகதாம் ஆகவேண்டு மென்கின்ற எண்ணமுடையவராய் புனிதவதியார் என்கின்ற திரு நாமத்தையே யிட்டார்.

இவ்விதம் பரமதத்தசெட்டியார் இவ்விடத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில், காரைக்காலில், வர்த்தக நிமித்தமாகப் போயிருக்கிற தமது கணவனாரை, எமது புனிதவதியார் இரவும் பகலும் இடையறாது சிந்தித்துக் கொண்டு, இல்லற தருமத்தை வழுவற நடத்திக்கொண்டு, சிவனடியார்களை முன்போல் உபசரித்து, அவர்களுக்கு வேண்டியதை உதவிபுரிந்து வந்தார்கள். இவ்வண்ணம் எமது புனிதவதியார் காரைக்காற் பதியில் வசித்துக் கொண்டு வரும்நாளில், வர்த்தக நிமித்தமாக கப்பல்யாத்திரைபோன பரமதத்த செட்டியார் பாண்டி நாட்டின் ஓர் பட்டணத்தில், அதிக திரவியத்தை சம்பாதித்துக் கொண்டு, சௌக்கியமாக வாழ்ந்து வருகிறாரென்று சொல்ல புனிதவதியாருடைய சுற்றத்தார்கள் கேள்வியுற்றார்கள். அதைக் கேள்வியுற்ற சுற்றத்தார்கள், தம்மில் சிலரை அப் பட்டணத்திற்கு அனுப்பினார்கள்; அவர்கள் அவ்விடம் போய் அவருடைய நிலைமையை யறிந்துவந்த பிறகு, வருத்தமுடையவர்களாய், தம்முடைய குலக்கொடிபோன்ற புனிதவதியாரை இட்டுக்கொண்டுபோய் அவரிடத்தில் விட்டுவிடுவது நலமென்று யோசித்தார்கள்.

அந்த யோசனையே நலமென்று யாவரும் ஒருப்பட்ட பிறகு, எமது புனிதவதியாரை, தாமரைப் பீடத்தில் வசிக்கும் ஒப்பற்ற திருமகள்போல,

மாணிக்கங்கள் பதித்த பல்லக்கிலேற்றி, சிலதினங்களாக யாத்திரைசெய்து, பாண்டி நாட்டை யடைந்து, பரமதத்தசெட்டியார் வசிக்கும் பட்டணம் வந்துசேர்ந்து, தாங்கள் புனிதவதியாரை அழைத்துக்கொண்டு வந்திருக்கும் சங்கதியை, பரமதத்தசெட்டியாரிடம்போய் தெரிவிக்கும்படி சிலரை அனுப்பினார்கள். இதைக் கேள்வியுற்ற பரமதத்தசெட்டியார், மனதில் மிகுந்த அச்சமுடையவராய், தாம் அவ்விடத்தில் புதிதாக மணஞ் செய்துகொண்ட பத்தினியையும், குமாரத்தியையும் அழைத்துக்கொண்டுபுனிதவதியார்வந்து தங்கியிருக்குமிடத்திற்குவந்து, தாமும், தமது மனைவியும், குழந்தையும், எமது புனிதவதியாருடைய காலில் வீழ்ந்து, "உங்களுடைய அருளினால் இவ்விடத்தில் நான் சுகமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறேன். இந்தக் குழந்தைக்கு உங்களுடைய திரு நாமத்தை வைத்திருக்கிறேனென்று" கூறி சாஷ்டாங்கமாக வணங்கினார்.

தமது கணவனார் தம்மை வணங்கக் கண்ட எமது புனிதவதியார் அச்சத்தோடு தமது சுற்றத்தார் பக்கத்தில் ஒதுங்கி நின்றுகொண்டிருக்கும்போது, அதைக் கண்ட சுற்றத்தார்கள் வெட்கமடைந்து பரமதத்தசெட்டியாரைநோக்கி, உம்முடைய மனைவியாரை நீர் வணங்குவது என்னகாரணமென்று கேட்டார்கள். அப்படிகேட்ட சுற்றத்தார்களை பரமதத்தசெட்டியார் பார்த்து, "இந்தம்மாள் நம்மைப்போல மானிடப் பிறப்பினரல்லர், தெய்வப்பிறப்பாயிருப்பதை நானறிந்து, இந்தம்மாளைப் பிரிந்துவந்த பிறகு, எனக்குப் பிறந்த இப்பெண் குழந்தைக்கு இந்தம்மாளுடைய திரு நாமத்தையிட்டு வளர்த்து வருகிறேனாகையால் நான் தெய்வமாக வணங்கினேன் நீங்களும் வணங்குங்களென்று" கூறினார். இதனைக்கேட்ட சுற்றத்தார்கள் யாவரும் இதென்ன அதிசயமென்று பிரமித்து நின்றுகொண்டிருந்தார்கள். எமது புனிதவதியார் பரமதத்தசெட்டியார் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, நீண்ட சடாமகுடத்தையுடைய சிவபெருமானுடைய திருவடிகளை மனதிற் றியானஞ்செய்து, பொருந்திய திருவுள்ளக் குறிப்பினை, அதிக அறிவுடையவர்களாய் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்கள். "இப்பரமதத்தசெட்டியார் மனதிற்கொண்ட எண்ணம் இவ்வாறு யிருந்தது. இதுவரையில் இவர் பொருட்டு நான் தாங்கியிருந்த, அழகு வசிப்பதற்கிடமாகிய மாமிசத்தாலாகிய சுமையை நீக்கி, உம்முடைய கைலைமலையில் வசிக்கும் சிவகணங்கள் வணங்கும் பேய்வடிவம் அடியாளுக்கு அருள்செய்ய வேண்டுமென்று" சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி நின்றார்கள். அப்பொழுதே எமது சிவபெருமானுடைய அருளால், தாம் வேண்டியபடி பெற்றுக்கொள்ளும் அன்பையுடைய எமது புனிதவதி யம்மையார், மாமிசத்தாலாகிய அழகையெல்லாம் உதறிவிட்டு, எலும்புடம்பாக, விண்ணுலகமும் மண்ணுலகமுமாகிய எல்லா உலகங்களும் வணங்கும்படியான பேய்வடிவத்தை யடைந்தார்கள். அப்பொழுது தேவர்கள் யாவரும் ஆகாயத்திலிருந்து



மழைபோல மலர்களை வாரி யிறைத்தார்கள். தேவதுந்துபி வாத்தியமானது உலகமெங்கும் கேட்கும்படி சப்தித்தது. தேவர்களும், முனிவர்களும் சந்தோஷித்துக் கொண்டாடினார்கள். சுற்றியிருந்த சுற்றத்தார்கள் யாவரும் பயந்து வணங்கி தங்கள் தங்களிடங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

தசையுடம்பைப் போக்கி எலும்புடம்பாய் நின்ற எமது அம்மையாருக்கு, அப்பொழுது உண்டான சிவஞானத்தின் மிகுதியினால், உமாதேவியாருடைய நாயகராகிய சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளை என்றும் துதித்துக் கொண்டிருக்கும், சிவகணங்களுள் நானும் ஒன்றாய்விட்டேனென்று "அற்புதத்திருவந்தாதி" என்கிற ஒரு அந்தாதிப்பிரபந்தத்தைப் பாடி முடித்தார்கள். மறுபடி எமது அம்மையார் "திருவிரட்டைமணிமாலை" என்ற அந்தாதியைப் பாடி சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் கைலாசமலைக்கு செல்லவேண்டுமென்ற எண்ணமானது தமக்கு உண்டாக, அவ்வெண்ணத்துடன் சிலகாலம் உலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். எமது அம்மையார்கொண்ட வடிவத்தைக்கண்ட யாவரும் பயந்து அப்புறம்போய் விடுவார்கள். பிறகு எமது அம்மையார், வடக்குதிசையிலுள்ள தேசங்களையெல்லாம், மனவேகத்திலும் அதிகவேகமாய்க், கடந்து சென்று, கைலாசமலையை யடைந்து, இங்கு நாம் பாதத்தினால் நடந்து செல்வது தகாதென்று கருதி, தமது தலையினால் நடந்து சென்றார்கள்.

இவ்விதம் எமது அம்மையார், தலையினால் நடந்து கைலாசமலையின் மீதேறிச் செல்லும்போது, சிவபெருமானுடைய இடதுபாகத்தில் வீற்றிருந்தருளும் உமாதேவியார் எமது அம்மையாரைக்கண்டு, அதிசயமுடையவர்களாய், தமது கணவனாராகிய சிவபெருமானை நோக்கி "எம்பெருமானே! தலையினால் நடந்து இங்குவரப்பட்ட எலும்புடம்பின் அன்பு என்ன" வென்று கேட்டார்கள். அதற்கு சிவபெருமான் "தலையால் நடந்து வரப்பட்டவள் நம்மை வழிபடும் புனிதவதி யம்மையார். இவ்வுருவத்தையும் என்னிடம் விரும்பிப் பெற்றுக்கொண்டாள்" என்று கூறி எமது அம்மையார் சமீபமாக வந்துவிட்டதைப் பார்த்து அம்மையே யென்று உலகமெல்லாம் பிழைக்கும்படி அழைத்தருளினார். உடனே எமது அம்மையார் அப்பாவென்று சமீபத்திற் சென்று, தாமரை மலர்போன்ற பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி எழுந்தார்கள். அவ்விதம் எழுந்து நின்ற எமது அம்மையாரை சிவபெருமான் பார்த்து" "இக்கைலைமலையில் நீ விரும்பிவந்தது என்னவென்று" கேட்க, எமது அம்மையார் வணங்கி சொல்லத் தொடங்கினார்கள், எமது அம்மையார் முதலில் அழியாத இன்பத்தை யுண்டாக்கும் அன்பைக்கேட்டு பின்னும், உலகத்தில் ஜெனனம் உண்டாகா திருக்கவேண்டும். வினைவசத்தால் மறுபடியும் 'உலகத்தில் பிறப்பதாயிருந்தால், தேவரீரை எப்போதும் தியானஞ் செய்துகொண்டிருக்கவேண்டும். இன்னும் தேவரீர் ஆனந்த நிருத்தம் செய்யும்போது, நான் பாடிக்கொண்டு உம்முடைய திரு

வடியின் கீழ் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள், சிவபெருமான் கேட்ட வண்ணமே வரங்களையுங் கொடுத்து, எமது அம்மையாரை நோக்கி, "தெற்கு திசையிலிருக்கும் திருவாலங்காட்டிற்கு நீசென்று, நாம் ஆடும் ஆட்டத்தைக் கண்டு ஆநந்தமடைந்து, நம்மை எப்போதும் பாடிக் கொண் டிருப்பாயென்று" அருள்புரிந்தார். அதனைக்கேட்ட எமது அம்மையார் சிவபெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு, திருவாலங்காட்டுக்கு முன்போல தலையினாலேயே நடந்துவந்து சேர்ந்தார்கள். அங்குவந்து சேர்ந்த எமது அம்மையார், அவ்விடத்தில் சிவபெருமான், அண்டம் வரைக்கும் தமது பாதத்தைத் தூக்கி நடனஞ்செய்கின்ற திருக்கோலத்தை தெரிசனை செய்யும்போது, தமக்குள் எழுந்த அன்பின் மிகுதியினால், சிவபெருமான் மீது "மூத்ததிருப்பதிகம்" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளி ஊர்த்தத் தாண்டவத்தைத் துதித்திருக்கும் நாளில், மேலும் மேலும் உண்டான அன்பின் மிகுதியினால் பல திருப்பதிகங்களைக் கட்டளையிட்டு, என்றும் சிவபெருமானுடைய ஆநந்தத் தாண்டவத்தை தெரிசித்துக்கொண் டிருக்கும் பேறு பெற்று வாழ்ந்துகொண் டிருக்கின்றார்கள். இந்த அம்மையாருக்குத்தான் "காரைக்காலம்மையார்" என காரணநாமம்வழங்கிவருகிறது. அந்தம்மாள் அறுபத்துமூன்று அடியவர்களுள் ஒருவராக எண்ணப்பட்டுள்ளவர்கள்.

## மாதர் மனோரஞ்சனி வாழ்த்து.

அகவல்.

பொன்னமர் மார்பன் புகழ்செறி யனந்தன்
தனாற் றுங்குமித் தரணியிலுள்ள
எப்பெருந் தேசமு மிதற்கிணையல வெனச்
செப்புதற் கொளிருமிப் பரதகண்டத் தினை
நற்பெய ரிந்திய நாடென நவின்று
பொற்புறப் பகுத்ததன் பொன்போ லிலங்கு
மிராசதானிக ளெனப்படு மூன்ற னுட்
சென்னையின் மிக்க செழிப்புடன் விளங்கும்
பல்வகை நகர்க்கொரு பளிங்குபோற் காணுஞ்
சென்னைமா நகரிற் சிறந்தினி தொளிரு
மல்லிக் கேணியெ னம்மையாற் பிறந்து
நற்குடிபிறந்த நல்லிராமசாமிப் பேர்
பெற்றவ னன்பாற் பேணி வளர்த்தலின்
கற்புடை மகளிர்போற் கவின்பெற விளங்கி

324



வயதொரு மூன்றும் வளர்ந்தனை யாதலின்
இம்மூன்று வருடமுஞ் செம்மையாய் நீசென்
றேந்துவார் கையி னிளமக வென்னத்
தளர்நடை யிட்டுக் குதலை பயின்று
அன்னவர்க் கினிதா யறிவினைப் பெருக்கி
நின்னுடை யாற்றலா னிலைபெறுவித் தனை
யஃதொரு பாலி னமைந்தது கிடப்பவும்
நின்னைப் போற்றி நேர்மையாய் வளர்க்கும்
மதிபர் தாம் வேண்டு மரும்பொரு ளனைத்தையு
மித்தகி யினி லளித்துத் தளராமே
பொற்புடை மகளிர்கள்புகழ்ந் தனையேற்று
வாசித் துன்னரு மாட்சியை யுவக்க
நின்னரு மாகந் தன்னிலே விஷயக்
கலன்பல பூண்டு களிப்புட னுலாவி
பூரணமாக நின் னாயுளைப் பெருக்கி நீ
வளர்ந் திவ்வுலகில் வளம்பெற வாழ்கவே.

T. முத்துராமபிள்ளை.

## * ஒரு கடும் பரீக்ஷை.

### காயும் எண்ணையில் கையை யிடுதல்.

ஒருநாள் மாலைப்பொழுதில் கிராமதேவதை கோவிலில் பெரிய கூட்டம் ஒன்று கூடியிருந்தது. அங்கு கூச்சலே கொண்டாட்டமாக இருந்தது. அப்போது தேரும் இல்லை, திருநாளுமில்லை. ஆனால் என்னத்திற்காக கூட்டம் கூடியிருக்கலாம் என்று ஒருவன் ஆலோசிக்கக்கூடும். சிறிதுநேரம் பொறுத்தால் சங்கதியெல்லாம் வெள்ளிடை மலைபோல் தெள்ளிதிற் புலப்படும். கூட்டமோ அசாத்தியம். சிலர் பக்கங்களில் திரிந்துகொண்டிருந்தார்கள். வேறு சிலர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள். ஒழுங்கென்பதே யில்லாமலிருந்தது. ஏழை, சாவுகார், சிறியோர், பெரியோர், பிராமணர், சூத்திரர் ஆகிய எவ்விதஜாதியாரும் ஒருவர்மேலொருவர் வித்தியாசமில்லாமல் இடித்துக்கொண்டு தங்கள் தங்கள் இஷ்டப்படி வேடிக்கையாயிருந்தார்கள். சில தாய்மார்கள் தங்கள் மேனியைச் சிங்கரித்துக்கொண்டு தங்கள் குழந்தைகளையும் சிங்காரித்து தங்களுடன் அழைத்து வந்திருந்தார்கள். ஜாதிபேதமில்லாமல் எல்லா வருணத்தாரும் இச்சமயத்தில் ஒன்றுசேர்ந்திருந்தார்கள். விதவைகளும் கூட தங்கள் வெள்ளை உடையோடு வெளிவந்தார்கள். இவையெல்லாம் பார்ப்பதற்கு வெகு வினோதமாகவேயிருந்தது. கூட்டம் இருக்க இருக்க அதிகரித்துக்கொண்டே வந்தது. இக்கூட்டத்தில் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், ஒரு ஆண்பிள்ளையின் முகமாவது காணப்படாமையே. கூட்டத்திலிருந்த பலரும் காளிகோவிலுக்குட் போகத் தலைப்பட்டார்கள். உடனே உள்ளிடத்திலும் அதிக நெருக்கமாயிற்று.

* Translated from the Indian Ladies, Magazine.

உள்ளே நடக்கப்போகும் விஷயத்தைப்பற்றிக் கூறுமுன் வெளியே
நடந்த ஒரு சங்கதியைப்பற்றிச் சிறிது கூறுவாம்.

சில பெண்கள் சேர்ந்து பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு ஒரு வித
வை வந்து சேர்ந்தனள். சேர்ந்ததும்,

வந்தவள்:—(அருகிலிருந்தவளை நோக்கி) இன்று இவ்விடம் இவ்வளவு
கூட்டம் கூடவேண்டிய காரணமென்னை? நான் காளியம்மனைத் தொழ
வேண்டி ஈண்டுற்றேன். இக்கூட்டம் என்னை உள்ளே போகவிடாது போ
லிருக்கிறதே.

அங்கிருந்த ஒருமாது:—உனக்குச் சங்கதி யொன்றும் தெரியாதா ? கிரா
மம் முற்றும் விஷயம் பரவியிருக்கும் என்றல்லவோ நான் எண்ணினேன்.
ஒருசமயம் நீ வேறு இடத்திலிருந்து வருகிறாயோ, என்னவோ ?

வந்தவள்:—உண்மையை உடனே யறிந்தாய். நீ வெகு சமர்த்திதான்.
நான் அயலூர்.

ஒருமாது:—நல்லது நீ இங்குவந்து அரைவினாடியா யிருந்தாலும், இவ்
விஷயத்தைக் கட்டாயம் அறிந்திருக்கவேண்டியது.

மற்றொருமாது:— (இதுவரையும் வந்தவளுடன் பேசிக்கொண்டிருந்த
மாதைப் பார்த்து) என்ன ருக்குமணி நீ யாருடன் பேசுகின்றாய் என்பதை
எண்ணவில்லை போலிருக்கிறது. அவள் கிருஷ்ணசாஸ்திரியாரின் சகோதரி
யாக்கும். அவளுடன் ஒன்றும் வேடிக்கை பேசவேண்டாம். இதைக் கேட்
டவுடன் ருக்குமணி சற்று மனம் வருந்தினாள். அடுத்த கிராமத்திலிருந்த
ஒரு பெரிய மிராசுதாரின் மனைவியாதலால் கிருஷ்ணசாஸ்திரியாரின் சகோ
தரி மிகவும் கண்ணியமுள்ளவள்.

ருக்குமணி:—நான் ஏதாவது கொஞ்சம் கொடூரமாகப் பேசியிருந்தால்
மன்னிக்கவேண்டுகின்றேன். இவ்வூரிலிருக்கும் கோபாலன், ஹரிஹரன்
என்னும் இருவரும் உமக்குத் தெரியுமோ ?

சாஸ்திரி சகோதரி:—யார் ? நாராயண சாஸ்திரிகள் குமாரர்களா ?

ருக்குமணி:—ஆம் அவர்கள்தான்; கோபாலய்யருக்குச் சுமார் 30-வய
திருக்கும். அவர் மனைவி சுந்தரி. ஹரிஹரனுக்குச் சுமார் 25 வயதிருக்கும்.
அவன் மனைவி ஜானகி. இவ்விரு பெண்களுக்குள் ஒற்றுமை யில்லையென்
பதும், அதற்குக் காரணம் ஜானகியே யென்பதும் உமக்குத் தெரியுமென்
றெண்ணுகிறேன. ஹரிஹரன் வாசிப்பின் பொருட்டு 200-மைல் தூரத்தி
லிருக்கிறபடியால் தன் மனைவியின் துர்க்குணத்தை யறியாதவனாயிருக்கிறான்.
ஒரு மாதத்திற்குமுன் வேற்றூரில் வேலையிருந்தபடியால் கோபலய்யர் வீட்
டுக்காரியங்களை ஓர்ப்படிமார்கள் சரிப்படுத்திக்கொள்வார்களென்றெண்ணிப்
போய்விட்டார். பின்னர் ஜானகி செய்த சமாசாரம் தெரியுமா ?

சா - சகோ:—(ருக்குமணியின் தீய எண்ணங்களை யுன்னி தனக்குள்
ளேயே சிரித்துக்கொண்டு) எனக்கொன்றும் தெரியாதே, அதென்ன?

ருக்குமணி:—உமக்குத் தெரியாமலிருப்பது ஆச்சரியமல்ல. சங்கதி இப்
படியிருக்குமென்று நானும் கூட முதலில் எண்ணவேயில்லை. சிலநாட்களுக்கு



முன் சுந்தரியின் மூக்குத் தளுக்கு ஒன்று காணமற்போய்விட்டது. ஜானகி
அதைப்பற்றி தனக்கு ஒன்றும் தெரியாதென்றாள். கடைசியில் அந்தத்
தளுக்கு ஜானகியின் கைப்பெட்டியில் காணப்பட்டது. பின்னும் ஜானகி,
தான் குற்றவாளி யல்லவென்றனள். தன் புருஷனும் மைத்துனனும் ஊரில்
இல்லாத காரணத்தால் இச்சமாசாரத்தை ஊராருக்கு அறிவித்து, அவர்க
ளைக்கொண்டு எல்லோருடைய முன்னிலையில் ஜானகியின்குற்றத்தைக் கடும்
பரீக்ஷையால் அறியவேண்டுமென் றெண்ணினாள். அவ்வாறு அறிவதற்
காகவே எல்லோரும் இங்கு கூடியிருக்கின்றார்கள். ஜானகியின் வெண்மை
யான கைகள் இன்னும் சிறிதுநேரத்தில் சூடுண்டு வீங்குவதைப் பார்க்க
விரும்பும்பக்ஷத்தில் கோவிலுக்குள் என்னுடன் வரலாம். இதோ அவர்க
ளெல்லாம் அங்கு வருவார்கள் என்று சொல்லிக்கொண்டே ருக்குமணி
கூட்டத்தினுள் நெருக்கிக்கொண்டு கோவிலுக்குள் சென்றாள். இதையெல்
லாம் கேட்ட கிருஷ்ணசாஸ்திரியின் சகோதரிக்கு மனம் சகிக்கவில்லை. இக்
கொடிய பரீக்ஷைக்கு ஜானகியை ஆளாக்குவது நியாயமன்றென்றே அவள்
எண்ணினாள். இக்கடும் பரீக்ஷையைத் தடுக்கமுடியுமானால் தடுத்திருப்பாள்.
ஆனால் அந்த சமயத்தில் அதை தடுக்கமுடியாமலிருந்தது. ஆயினும் தன்
னால் கூடிய சகாயம் ஜானகிக்குச் செய்யலாமென்று நெருக்கத்தில் தள்ளிக்
கொண்டு கோவிலுக்குள் சென்றனள். அங்கு சுமார் 5, 6 பேர் நிற்பதற்குத்
தகுதியான இடம் காலியாக இருந்தது. கிருஷ்ணசாஸ்திரியாரின் சகோ
தரி உள்ளே சென்றதும் பின்னாலேயே இரண்டு ஸ்திரீகளும் ஒரு குழந்
தையும் சென்று காலியிடத்தில் நின்றார்கள். அவ்விருவரும் சுந்தரியும்
ஜானகியும்; குழந்தை ஜானகியின் புத்திரன். அச்சமயத்தில் சுந்தரிக்கு
அளவில்லா ஆநந்தமாயிருந்தது. ஜானகி வெகுவாய் நாணினவளாய் குனிந்த
தலை நிமிராது நின்றனள். பரீக்ஷை யாரம்பமாகத் தாமதம் ஒன்றுமில்லை.
இவர்கள் வந்ததுதான் பாக்கி. உடனே இருவர் ஒரு பெரிய பாத்திரத்தில்
தளதளவென்று கொதிக்கும் எண்ணெய்யைக் கொண்டுவந்து வைத்தார்கள்.
அப்போது கோவிலின் பெரிய மணிகள் சப்தித்தன. சுந்தரி முன்வந்து
ஜானகியை நோக்கி தயாராயிருக்கிறாயா என வினவினள். அதற்குப் பதி
லளிக்காமல் தன் இடுப்பில் இருந்த குழந்தையை சுந்தரியிடம் கொடுக்க
அவள் குழந்தையை வாங்காது இறுமாப்புக் கொண்டிருப்பதைப்பார்த்துக்
குழந்தையைக் கீழே விட்டுவிட்டு எண்ணெய்ப்பாத்திரத்தை எதிர்நோக்கிச்
சென்றனள். அப்போது தன்னையாரோ பின்னாலிருந்து தடுப்பதைத் தெரிந்
தும் அதைக் கவனியாமல் திடீரென்று எண்ணெய்ப்பாத்திரத்தில் கையிட்ட
னள். கையின் கதி யின்னவாயிற்றென்று நாம் கூறவேண்டுவதில்லை. எல்
லாம் காயமாகி வீங்கியதும் தவிர அவளும் மூர்ச்சையாகிக் கீழே வீழ்ந்த
னள். கூடினோரெல்லாம் ஜானகி குற்றவாளியென்று தீர்மானித்து ஒவ்
வொருவராக எல்லோரும் கோவிலைவிட்டகன்றார்கள். கடைசியில் மூர்ச்சை
யாய்க் கிடக்கும் ஜானகி, அவள் குழந்தை, கிருஷ்ணசாஸ்திரியாரின் சகோ
தரி ஆகிய மூவருமே அங்கு இருந்தனர். ஜானகிக்குச் சிறிது மூர்ச்சைவந்
ததும், சாஸ்திரியின் சகோதரி ஒரு வண்டிவைத்து அதில் ஜானகியையும்,
அவள் குழந்தையையும் கொண்டு தன் சகோதரன் வீட்டிற் கேகினள்.
அங்கு ஜானகிக்கு தகுந்த சிகிச்சை செய்யப்பட்டதுமன்றி குழந்தையும்
நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இச்சம்பவத்திற்குப் பின்பு கிராமத்தார்களிற் பலரும் சுந்தரியை மிகவும் கொண்டாடினார்கள். ஏறக்குறைய ஒருவாரம் வரையும் இளம்பெண்களின் துஷ்டத்தன்மையையும், அத்துஷ்டத்தன்மையை யடக்கும் விதத்தையும் பற்றியே எல்லோரும் பேசலானார்கள். அவ்வூரிலிருந்த மாமிமார்களெல்லாம் தங்கள் மருமக்கள் சுந்தரியைப்போலவே இருக்கவேண்டும் என்று எண்ணினார்கள். வெளியில் எல்லோரும் இவ்வாறு எண்ணியும் சுந்தரியின் மனம் மட்டும் சந்தோஷகரமாயில்லை. தன்னுடைய கணவனின் குணத்தை நன்றாக அறிந்தவளாதலால் அவர் வந்தபின்பு தனக்கு என்ன அநர்த்தங்கள் நேரிடுமோவென்று எண்ணி ஏங்கினாள். சாதாரணமான காரியங்களில் தன் இஷ்டப்படி கணவனைத் திருப்பிவிடுவாள். ஆனால் இப்போது நடந்திருக்கும் விஷயம் அத்தகையதன்று. இவ்விஷயத்தில் மட்டும் தன் கணவன் தன்னைக் கண்டிப்பார் என்றெண்ணினாள். இப்படியிருக்க சிலநாளைக்கெல்லாம் தன் கணவனும் திரும்பிவிட்டார். தம்முடன் ஜானகியின் பர்த்தாவாகிய தமது சகோதரரையும் அழைத்துவந்தார். ஹரிஹரன் தன் மனைவி வீட்டில் இல்லாமையை யறிந்தும் ஒன்றும் கேட்கவில்லை. கேட்டால் யாருக்காவது வருத்தமுண்டாகு மென்பதே அவர் எண்ணம். அவர் மிகவும் பொறுமையுடையவர். கோபாலனும் ஜானகியில்லாமையைப் பார்த்து தன் மனைவி சுந்தரியைக் கேட்டார். அவள் நடந்த சங்கதிகளை தன்னிஷ்டப்படி குறைவாகவும் அதிகமாகவும் ஜானகிக்கு விரோதமாகக் கூறி, ஜானகி நகையைத் திருடினதைத் தானே நேரில் பார்த்ததாகவும் சொல்லி கோவிலில் நடந்த சோதனையைப்பற்றி விவரியாது ஒருவார்த்தையி லடக்கிச் சொல்லிவிட்டாள். கோபாலன் மிகவும் தயாளகுணமுள்ளவராகலின் இக்கதையைக் கேட்டதும் ஜானகி பட்ட கஷ்டத்திற்காக மிக துக்கித்தார். உடனே அதிக கோபமுண்டாகி உண்மையில் ஜானகி குற்றவாளியாக இருந்தபோதிலும் நீ அவளுக்குச் செய்த கொடுமைக்காக உன்னை,இதோ ஓட்டிவிடுகின்றேன் பார் என்று சுந்தரியை வெருட்டினார். இதைக்கேட்ட சுந்தரி மிகவும் பயந்து எங்கு தன்னை ஓட்டிவிடுவாரோ என்று சந்தேகித்து அவர் காலில் வீழ்ந்து நடந்த விருத்தாந்த முற்றும் உண்மையாகக் கூறுகின்றேன் மன்னிக்கவேண்டும் என்று மன்றாடி "தன்னினும் ஜானகி பல விஷயங்களிலும் உயர்ந்தவளாக இருந்ததால், தான் அவள்மீது பொறாமைகொண்டு வெறுத்து, திருட்டுக் குற்றத்தை அவள்மேல் சுமத்தியதாகவும், வாஸ்தவத்தில் நகை திருட்டுப்போகவில்லை யென்றும், தானே கொண்டுபோய் ஜானகியின் பெட்டியில் வைத்து அவளை வம்புக்கு இழுத்ததாகவும்" முற்றும் சொன்னாள். விடிந்ததும் ஹரிஹரனுக்கும் சமாசாரம் தெரியவந்தது. பின்பு இரண்டு சகோதரரும் சாஸ்திரியாரின் வீட்டிற்கு ஜானகியைப் பார்ப்பதற்காகச் சென்றார்கள். அங்கு அவள் சொஸ்தமாயிருப்பதைப்பார்த்து மகிழ்ந்து அவளையும் அவள் குழந்தையையும் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். ஜானகி தன் வீட்டிற்குவந்த அன்றே கிராமத்தில் அன்று சாயந்திரம் கிராமதேவதை கோவிலில் ஜானகிக்காக மீண்டும் ஒரு கூட்டம் கூடும் என்றும் வதந்தி யுலாவியது. அஸ்தமனத்திற்குப்பின் தேவதை கோவிலில் அதிக கூட்டம் கூடியது. ஜனங்களுக்கு ஏதேனும் ஒருகாரணமிருந்தாற் போதுமன்றோ. சிறிதுநேரத்திற்கெல்லாம் கூட்டம் நிரம்பிய கோவிலுள் கோபாலன், ஹரிஹரன், சுந்தரி, ஜானகி, ஜானகியின் குழந்தை, சாஸ்திரியாரின் சகோதரி ஆகிய இவர்களெல்லோரும் வந்தார்கள். ஜனங்க



ளெல்லோரும் என்ன நடக்குமோவென்று மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் சுந்தரி முன்வந்து தான்செய்ததெல்லாம் தவறு என்றும், ஜானகி யோக்கிய முள்ளவள் என்றும், தான் செய்த குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்றும் கூறினாள். இதைக்கேட்ட எல்லோரும் "என்ன இப்படியும் ஒருத்தி இருப்பாளா" என்று எண்ணி திகைத்தார்கள். பின்பு கூட்டம் கலைந்து ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இடங்கட்குச் சென்றார்கள். கிராமத்தாரெல்லாம் சுந்தரியை இகழ்ந்துகொண்டும் ஜானகியை புகழ்ந்துகொண்டும் இருக்கிறார்கள். சுந்தரி தன் அகங்காரம், பொறாமை முற்றும் நீங்கி இப்போது நல்ல ஸ்திதிக்கு வருவாள் எனவே எல்லோரும் நம்புகின்றார்கள்.

M. V. மீனாக்ஷிசுந்திரமுதலியார் பி-ஏ.

# புத்தக வரவு.

"சேந்தமிழ்" எனப் பெயர் வாய்ந்த ஓர் மாதாந்த தமிழ்ப் பத்திரிகையை "மதுரை தமிழ்ச்சங்கத்திலிருந்து" வரப்பெற்றோம்.

அதில் பல அருமையான விஷயங்கள் தேர்ந்த பண்டிதர்களால் எழுதப்பட்டுள்ளன.

கனம் கனகசபை பிள்ளை B. A., B. L., அவர்களால் எழுதப்பட்டுள்ள "சோழ சக்கரவர்த்திகள்" என்ற விஷயம் பூர்வ வித்வான்களின் பாடல்களைக்கொண்டு அவர்களது பரம்பரையை கரதலாமலகம்போல விளக்கிக் காட்டக்கூடியதாயிருக்கிறது. பத்திரிகாசிரியரால் எழுதப்பட்ட "முகவுரை" என்ற விஷயம் இப்பத்திரிகை உண்டான காரணத்தையும், தமிழ்ப்பாஷையை விருத்திசெய்யவேண்டியது அத்தியாவசியக மென்பதையும் விளக்கிக் காட்டக்கூடியதாயிருக்கிறது.

கனம் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி B. A., அவர்களால் வரையப்பட்ட "உயர்தனிச் செம்மொழி" என்ற விஷயம், ஆரியத்திற்கும், திராவிடத்திற்கும் உள்ள வேற்றுமையை நன்கு விளக்கிக் காட்டக்கூடியதாயிருக்கிறது. கனம் பண்டிதர் ச. ம. நடேச சாஸ்திரியார் B. A., அவர்களால் எழுதப்பட்ட புராதன சரித்திர விஷயமும், கனம் தி. ர. ஸ்ரீனிவாச சாரியாரவர்களால் எழுதப்பட்ட பிரதாப ருத்திரீயமும், கனம் எஸ். நாராயணசாமி ஐயர் B. A., அவர்களால் எழுதப்பட்ட தருக்க சாஸ்திரமும், கனம் அ. சண்முகம் பிள்ளையவர்களால் எழுதப்பட்ட நுண்பொருட் கோவையும், பத்திரிகாசிரியரால் எழுதப்பட்ட ஆராய்ச்சி என்கிற விஷயமும், ஒவ்வொன்றும் உற்று நோக்குமிடத்து உயர்வு தாழ்வு இல்லாதனவாய், எடுத்துக்கொண்ட விஷயங்களை நன்கு விளக்கக்கூடியவைகளாகவு மிருக்கின்றன. ஐந்திணை, நேமிநாதம், இவ்விரண்டும் தமிழ் பயில்வோருக் கின்றியமையாதனவைகளாயிருப்பதால், இப்பத்திரிகையை தமிழ் பயில்வோர்களும், தமிழாராய்ச்சியில் விருப்பமுள்ளவர்களும், தமிழ்ப்பாஷை செழித்தோங்கி வளரவேண்டுமென்கிற விருப்பமுடையவர்களும் வாங்கி வாசித்து இன்புறுவார்களென்று

விரும்புகின்றோம். மதுரை தமிழ்ச்சங்கத்தார் தற்போது எடுத்துக்கொண்ட பெரு நன்மைக்காக யாது கைம்மாறு இவ்வுலகம் செய்யக்கூடுமென்பதை நினைக்கவு மரிதாயிருக்கும்.

அன்னிபெசன்டு அம்மையவர்கள் இங்கிலீஷ் பாஷையில் அருளிச்செய்த ராமாயணப் பிரசங்கசாரத்தை பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் தமிழ்வாசக நடையில் மொழிபெயர்த்துள்ளார். அதுவே இப்போது நாம் பார்வையிடும் ஸ்ரீ ராமசந்திரர் என்னும் புத்தகம். இப்புத்தகம் மிஸஸ் அன்னிபெசன்டு அம்மையவர்கட்கே உரிமையாக்கப்பட்டிருக்கின்றது. அவதாரம், "இளமையும் திருமணமும், "அரசைவிட்டரணியஞ்சார்ந்து" சகோதரவிசுவாசம்,; "சீதா ஹரணம்; "சீதா தேவியாரின்கற்புநிலைமை; யுத்தம்; "விஜயம்; என்னும் எட்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் முதல்அதிகாரத்தில் 'பரதகண்டத்தின் பூர்வஸ்திதி' ராமாயணம் இயற்றியவரலாறு,அவதாரங்கள்,நன்மை தீமை, உயர்வையடைவார்க்குற்ற குணங்கள், முதலியவும், இரண்டாவதில் விசுவாமித்திரரின் வரலாறும், எட்டாவதில் நாரதர் சரிதமும், கதையின் இடையிடையே அமைக்கப்பட்டிருப்பது மிகவும் இனிமையாகவிருக்கிறது. ராமாயணத்தின் கதையை அறியாதவர்கள் ஒருவரும் நம்நாட்டில் இல்லையென்றே சொல்லலாம். ஆயினும் அவர்கள் வெறும் கதையைமட்டும் அறிந்திருக்கிறார்களேயன்றி,கதையின்நுட்பம்,அதைப்படிப்பதால்அடையும் பயன் முதலியவைகளையெல்லாம் அறியாதவர்களாயிருப்பதால் இத்தகைய புத்தகம் அவற்றை அறிந்துகொள்வதற்குத்தக்க சாதனமென்று சந்தேகமில்லாமல் சொல்லலாம். ஆண்பாலாரும் பெண்பாலாரும் கற்றோரும் மற்றோரும்ஆகிய எல்லோர்க்கும் இன்பமளிக்கும்படியான தன்மையுடையது இவ்விராமசந்திரர் எனும்சிறு புத்தகம். இது மிகவும் தெளிவாகிய செந்தமிழ்நடையில் எழுதப்பட்டு நேர்த்தியாக பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இது தியசாபிகல் சொசைட்டியின் பெல்லோக்களில் ஒருவரும் டிஸ்திரிக்ட் முன்சீபுமாகிய மிஸ்டர் சதாசிவய்யரால் அதிக சிலாக்கியமாய் பேசப்பட்டிருப்பதோடு ஷை சொசைட்டியின் மொழிபெயர்ப்புக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்டுமிருக்கிறது. ஆகலின் இப்புத்தகத்தின் பெருமையைப் பற்றி நாம் விரித்தல் கூறியது கூறலின் பாற்படுமென்றஞ்சி விடுத்தாம். இந்நூலாசிரியராகிய மிஸ்டர் பிள்ளையவர்கள்முன் இயற்றிய புத்தகங்களி லொன்றாகிய "மாணிக்கவாசகர்" 1904-ஆம் எப். ஏ. பாடபுத்தகங்களில் ஒன்றாக ஏற்படுத்தப்பட்டிருத்தலும் ஆசிரியரது தேர்ச்சிக்கும் அவரது புத்தகங்களின் மேன்மைக்கும் போதுமான சான்றெனப் புகலலாம்.

ஸ்ரீராமசந்திரரின் விலை அணா பன்னிரண்டுதான்; புத்தகத்தின் பயனை நோக்குங்கால் இவ்விலை மிகவும் சொல்பமென்றே சொல்லுவார்கள். யாவரும் எளிதில் அப்புத்தகத்தை யடைந்து வாசிக்க வேண்டுமென்னும் கருத்தைக்கொண்டே குறைந்தவிலை ஏற்படுத்தப்பட்டிருப்பதால் யாவரும் இதை வாங்கி வாசித்து ஆநந்தமடைவார்களாக.

ஆசிரியர் இப்புத்தகத்தை "வித்தியாசுதர்சினி" இனத்தில் முதலாவது இலக்கமாக பிரசுரித்திருப்பதால் அவ்வினத்தில் இன்னும்பல புத்தகங்கள் விரைவில் வெளிவருமென்றெண்ணப்படுகிறது.



# சமாசாரக் குறிப்பு.

சென்னை பிரிசிடென்சி காலேஜில் போதகராயிருக்கும் மிஸ்டர் எஸ். ஸத்தியநாதன் அவர்களுக்கு கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையாரால் எல். எல் .டி. என்னும் பட்டம் அளிக்கப்பட்டதைக் கேட்டு மிகச் சந்தோஷப்படுகிறோம்.

---

வேல்ஸ் இளவரசரின் பெண்சாதிக்கு நான்காவது பிள்ளை இப்பொழுதுதான் பிறந்தது. தலைமகனாகிய 'எட்டி' என்பவன் 1894-ம்வருஷத்திலும், ஆல்பர்ட் என்னும் இரண்டாவது குமாரன் 1895-ம் வருஷத்திலும், ஹென்றி என்னும் மூன்றாவது பிள்ளை 1900-ம் வருஷத்திலும், விக்டோரியா என்று பேர்கொண்டபெண் 1897-ம் வருஷத்திலும் பிறந்திருக்கின்றன.

---

விக்டோரிய ஞாபகச்சின்ன நிதிக்கு 322,000 ரூபாய்கள் வரைக்கும் சென்ற இரண்டுவாரங்களில் புதிதான கையொப்பங்கள் வந்துசேர்ந்தனவாம். மேற்படி நிதியின் தொகையானது வட்டிவருமானமுள்பட தற்காலம் 4,827,000 ரூபாயாகிறது. மேற்படி நிதியின் சங்கத்தார், சேரவேண்டுமென்று நோக்கங்கொண்ட 50லக்ஷம் ரூபாய்க்கு இன்னும் 73 ஆயிரம் ரூபாய்தான்தேவையாயிருக்கிறது. பல்ராம்பூர் மகாராஜா, டும்ரான் மகாராணியார், ராம்ரிக்தாஸ் பொனசிங்கா இவர்களில் ஒவ்வொருவரும் லக்ஷம் ரூபாய் கையொப்பமிட்டார்கள். லண்டோஷிலிருக்கும் மன்மதராய் சௌதுரி என்பவர் இன்னும் 22ஆயிரம் ரூபாய் அளிக்கவே, அவரிட கையொப்பம் 50 ஆயிரம் ரூபாயாகிறது.

---

### உபவாஸமிருக்கும் ஸர்ப்பம்.

1899ஆம் நவம்பர்மீ 17உ யன்று ஜெப்பான் தேசத்திய ஸர்ப்பமொன்று பாரிஸ் நகரத்திலுள்ள மியூஜியத்திற்கு கொண்டுவரப்பட்டது. இது அக்காலத்தில் பலமுள்ளதாயும், தேகசௌக்கிய முள்ளதாயு மிருந்தது. இது மிக பளபளப்புள்ள வர்ணமுடையதாயும், 8 அடி நீளமுள்ளதாயும், பருத்த தேகத்தை யுடையதாயு மிருந்தது. இதற்கு வாத்து, கோழி, ஆடு முதலியவைகளை ஆகாரமாக கொடுத்த பொழுது இவைகளி லொன்றையும் புசிக்காமல் 1902ஆம் ஆகஸ்டுமீ 20உ வரையில் ஜீவித்திருந்து அன்று இறந்துவிட்டதாம். அதாவது 2-வருஷம், 9-மாதம், 3-நாள் ஜீவித்திருந்தது. இதுவொரு அதிசயமல்லவா?

### பிராணிகளின் வயது.

ஆடு 10-வருஷம் ஜீவிக்கும், பூனை 15-வருஷம், சிம்மம் 20, ஒட்டகம் 40, கிரடி 20, நாய் 14, அணிப்பிள்ளை 8, பாடுகிற ஒருஜாதி பக்ஷி 6, காக்கை 15, எருது 25, பன்றி 7, குதிரை 25, அன்னம் 25, திமிங்கிலம் 300, ஆமை 100, யானை 120, கிளி 125, வருடம் ஜீவிக்கும்?

---

சீனதேசத்தார் தங்களுக்கு ஜனிக்கிற பெண் குழந்தைகளுக்கு வரிசைக்கிரமமாக 1, 2, 3, 4 என பெயரிடுகிறார்களாம்.

## வி. பி. ராமானுஜுலு செட்டி அண்டு கம்பெனி.




இங்கு முதல்தரமான சீமையிலிருந்து வரவழைக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் அதிக சரசவிலைக்குக் கொடுக்கப்படும். கண் பரீக்ஷையில் மிகத்தேர்ந்தவரால் பரீக்ஷை செய்யப்பட்டு வருகிறது.

வேண்டுவோர் (சென்னை மயிலப்பெருமாள்) தெருவிலிருக்கும் வி. பி. ராமானுஜுலு செட்டி கம்பெனி யென்று எழுதவேண்டும்.

லண்டன் கதாசபை மெம்பர்.

பண்டித நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்டது.

## தமிழ்நாவல்களின் விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தீனதயாளு, இரண்டாம் பதிப்பு ... ... | 0 | 12 | 0 |
| 2. | கோமளம் குமரியானது ... ... | 0 | 12 | 0 |
| 3. | திக்கற்ற இருகுழந்தைகள் ... ... | 1 | 4 | 0 |
| 4. | மதிகெட்ட மனைவி ... ... | 1 | 4 | 0 |
| 5. | ஸ்ரீ மாமி கொலுவிருக்கை ... ... | 0 | 8 | 0 |
| 6. | சந்திரசேகரன் ... ... | 0 | 8 | 0 |

சென்னை ரிப்பன் புஸ்தகசாலைக்காவது, அல்லது மதராஸ் திருவல்லிக்கேணி தணிகாசலபிள்ளைத் தெரு, 12-ம் நம்பர் வீடு, மாதர் மனோரஞ்சனி ஆபீஸுக்காவது எழுதவும்.


Printed at the Ripon Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 2-APR 1903 MADRAS.
328

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.


| Vol. IV<br>புத்தகம் ௪. | Madras: Jannaury 1903.<br>சென்னபட்டணம், 1903 ஜனவரி மீ. | No. 10.<br>இல. ௧௦. |
|---|---|---|


## H. E. LADY CURZON.

## கனம் கர்ஸன் பெருமாட்டி.

இத்தேசத்து இந்துமாதர்கள் அனைவரும் கர்ஸன் பெருமாட்டியின் சரிதத்தை அறியவேண்டிய தவசியம். இப்பெருமாட்டி நமது சுதேச மாதர்களின் கல்வித்தேர்ச்சி சௌக்கியமுதலியவற்றில் மிக்க கருத்தும் காருண்யமும் உள்ளவரெனயாவரும் அறிந்ததே. இந்துமாதர்கள் இவரது நன்கொடையையும் பேருதவியையும் எந்நாளும் கொண்டாடுவார்க ளாதலால் இவரது சரிதத்தை நமக்கெட்டியமட்டில் அவர்களுக்கு எடுத்துரைப்பது நமது கடமை ஆகையால், இச்சரிதத்தை நாம் களிப்புறக்கூற நம்பத்திரிகையைப் படிப்பவர்யாவரும் மிகுந்த விருப்பத்துடனும் ஆவலுடனும் கேட்பார்களென்பதற் கையமில்லை.

இவர் 1872ஆம் மேமீ 27உ அவதரித்தனர். இவர்தந்தையாராகியலீதர் பிரபு அமெரிக்காகண்டத்தில் ஓர் மிகுந்த செல்வவான். லீதர் பிரபுவானவர் கோடைநாட்களில் வாஷிங்டனி-(Washington) லும் ஜினீவ-ஏரியி(Geneva Lake)லும் போய் தங்குவது வழக்கம். இவ்வூர்களிலேயேதான் கர்ஸன் பெருமாட்டி தன்னுடைய இளமைப்பருவத்தைப் போக்கினர். இவர் தந்தை தனது பெண்மாணிக்கத்திற்கு சகல வித்தைகளையும் கற்பிக்க வேண்டுமென்று விரும்பி ஒவ்வொரு படிப்புக்கும் ஏற்றபடி தகுந்த உபாத்தியாயர்களை நியமித்துவந்தனர். கர்ஸன் பெருமாட்டியோ தன்தந்தையின் எண்ணத்திற்கேற்றவண்ணம் சகலகலைகளிலும் நல்லதேர்ச்சி யடைந்தனர். அநேக கல்வி நூல்களாராய்ந்துளராதலால் இலக்கியத்தில் நல்ல பழக்கமுண்டு. ரசாயனம் இதிகாசம் முதலிய கணித சாஸ்திரத்திலோ நன்ருய் படித்துளர்.

வற்றிலும் செவ்வையாக அறிந்தவரன்றி பரநவீன பாஷைகள் கற்றுள்ள். மேற்சொல்லிய கலைகளை அமெரிக்காவி லிருந்தபடியே கற்றபின் கடைசியாக பாரிஸ் நகரத்திற்குப் போய் "ஸோர்போனில்" அநேக பிரசங்கங்கள் கேட்டு சங்கீதத்திலும் சிறந்த தேர்ச்சி அடைந்தனர். 1890 முதல் 1895-ம் வருஷங்களில் இவர் தந்தை தாயனைவரும் ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்து சஞ்சரித்து வந்தார்கள் (Egypt) எகிப்து நாட்டிலும் நெடுநாள் சுற்றிப்பார்த்து இங்கிலாந்தில் சிலகாலம் தங்கினர். 1895-ம் வருஷத்தில்தான் இவர் கனம் கர்ஸன் பிரபுவை தமது 23-வது வயதில் மணம்புரிந்து அதன்பின் லண்டன் நகரத்தில் வாழ்ந்து வந்தனர். இப்போது 4-வருடங்களாக இந்தியாவில் தங்கி இராஜப் பிரதிநிதியாகிய கர்ஸன் பிரபுவின் தயையைப் பெருக்கி இந்தியநாட்டை நல்ல அரசாக்ஷிக்குக் கொண்டுவர முயலுவதையும் நாம் களிப்புடன் கண்ணுறுகிறோம். இப்பெருமாட்டியின் கருணையை விளக்குமாறு நாம் முக்கியமாய் எடுத்துரைக்கவேண்டிய விஷயமொன்றுண்டு, அதாவது நமது விக்டோரியா சக்கரவர்த்தினியார் காலஞ்சென்றபோதிலும் அவர் ஞாபகம் நம்மனதில் எளிதில் அழியமாட்டாது. அவர்களது ஞாபகச்சின்னமாக கர்ஸன் பெருமாட்டி தற்காலம் ஓர்நிதி சேகரித்திருக்கின்றனர். அந்நிதியின் மொத்ததுகை சுமார் 7-லட்சம். இத்துகையை பாங்கிகளில் வைத்து வருடந்தோறும் அவைகளின் வரும்படியைக்கொண்டு இந்துமாதர்களின் பிரஸவ ஹிம்ஸைகளை நீக்கத்தக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். அதாவது வைத்தியசாலைகளிலும் சில பெண் பள்ளிக்கூடங்களிலும் பெண்பிள்ளைகளை வைத்திய வழியில் கற்பித்துமற்றஜனங்களுக்கு உபயோகமாக்குவதுடன் இந்துதேசத்திய நாட்டு வைத்தியத்தை விருத்திக்கு கொண்டுவர வேண்டுமென்பது. மேலும் பெண்பிள்ளைகளுக்கு அந்தந்த ஊருக்கேற்றபடி சம்பளம்கொடுத்து வைத்தியம்கற்றுக்கொள்ளச் செய்திருக்கிறார். ஆகையால் இப்பேருதவிக்காக இந்துமாதர்களன்றி ஆண்மக்களும் இப்பெருமாட்டிக்கு எந்நாளும் மிகவும் நன்றி பாராட்ட கடமைப்பட் டிருக்கிறார்கள்.

இந்தியாவில் ஒவ்வொரு வீட்டிலும் இவரை எந்நாளும் நினைந்து கொண்டாடச்செய்யவல்லதாகிய இவ்வேற்பாட்டை, பெண்களின் பிரசவானுபவங்களை அநுமானித்தறியும் ஆண்பாலார்களாகிய நாம் புகழ்ந்து பேசுவதைக் காட்டிலும் பிரசவ இம்சைகளைத் தாமே அனுபவித்தறிந்த பெண்பாலார்கள் நன்குணர்ந்து மகிழ்ந்து என்றும் மறவாது நன்றிபாராட்டுவார்கள்.

329



எச். இ. லேடி கர்ஸன்.

# THE DELHI DURBAR.

## டெல்லி தர்பார்.

இந்தியர்கள் மற்றவர்களைவிட இரண்டுகுணங்களில் மேம்பட்டவர்கள்.
அவைகள்தாம் ராஜவிசுவாசமும் பெரும் வேடிக்கைகளில்
விருப்பமுமாம். அவர்கள் ராஜவிசுவாசத்துக்கு அளவு கரை
களில்லை. அரசன் கொடியனாயினும் அறிவிலியாயினும் அவன்
அரசனாயிருக்கும் காரணம் ஒன்றையே மதித்து அவனுக்குக்
கீழ்ப்பட்டிருந்து நடப்பது அவர்கள் வழக்கம். மேற்குதேசத்
தியவர்களைப்போல அரசனுடைய அதிகாரத்தை சபைகள்
முதலியவைகளால் குறைப்பதென்பது இவர்களுக்குக் குற்றமாகத் தோன்
றும். இத்தகையவர்களுக்கு புது அரசர் ஒருவர் சிம்மாசன மேறுவதைக்
காண்பது அல்லது அக்காலத்தில் உயிரோடு இருந்து அதை அறிவது தங்
கள் புண்ணியத்தால் தங்களுக்கு நேர்ந்த நற்காலம் என்று தோன்றும்.
அப்படியிருக்க தாங்கள் கொஞ்சக் காலத்துக்கு முன்வரை தங்கள் தாயோ
டும், குலதெய்வத்தோடும் சேர்த்து எண்ணிவந்த விக்டோரியா மகாராணி
யாரின் புத்திரனுடைய மகுடாபிஷேகமென்றால் அதைக்காண்பதும் அதைப்
பற்றிக் கேட்டானந்திப்பதும் ஒவ்வொருவனுக்கும் பெருமைக் கிடமாகும்
செயல்களாமென்பதில் சந்தேகமில்லை. இந்தியா கவர்ன்மெண்டாரும் அதற்
குத் தலைவராக இப்போது இந்தியாவில் இருக்கும் கர்ஸன் பிரபுவும் இந்தி
யர்களின் அவாவைத் தெரிந்து அவர்களில் அதிகமானபேர் 5-மாதங்களின்
முன் இங்கிலாந்தில் நடந்த மகுடாபிஷேகத்திற்குப் போக சக்தியற்றவர்க
ளாயிருந்தது காரணமாக இந்தியாவில் மகுடாபிஷேகப் பிரசித்த தர்பார்
ஒன்று தயார் செய்தார்கள். அத்தர்பார் கூடுதற்கு தயார்செய்த இடம் நம்
கவர்ண்மெண்டார் தங்களுக்குத் தலைநகரமாகக் கொண்டிருக்கும் நகரங்கள்
இரண்டில் ஒன்றல்ல. ஆனால் அதுதான் சென்ற 3500-வருஷங்களாக இந்
துக்களும் மகம்மதியர்களும் தங்கள் தலைநகர் தங்கள் தலைநகரென்று சொல்
லிக்கொள்ளும் டெல்லி. இது பாண்டவரில் முதல்வராகிய யுதிஷ்டரர் மகு
டஞ் சூட்டப்பெற்ற இடம்; இது பாண்டவரால்தான் கட்டப்பட்டது. அவர்
களால் இதற்கு வைக்கப்பட்ட பெயர் இந்திரப்ரஸ்தம் என்பது. பின்பௌத்
தர்கள் காலத்தும் அதன்பின் மகம்மதியர்கள் காலத்தும் இது இந்தியா
வின் தலைநகராயிருந்தது. 1858-ம்வருஷம்வரை இந்தியச்சக்கரவர்த்தியென்ற
பட்டம்வகித்த மொகலாய அரசரொருவர் அதில் வசித்தார். இந்தியாவில்
பேர்போன அநேக கட்டடங்களும் தூண்களும் அதில் இன்னும் காணப்படு

கின்றன. இப்போதும் இந்தியாவிலுள்ள பெரிய பட்டணங்களில் அது ஒன்று. மேலும் அது இந்துஸ்தானத்தின் மத்தியிலுள்ளது. இவ்வளவு சிறப்பினதாய டெல்லியில் சென்ற 1-ம் தேதியன்று ஒரு பெரிய தர்பார் கூடியது.

நாம் பழைய நூல்களில் அநேக ராஜாக்களுடைய மகுடாபிஷேகக் காலத்து எல்லாதேசத்து அரசர்களும் வந்திருந்தார்களென்று எழுதியிருக்கப்பார்த்து அதனுண்மையைப் பற்றிச் சந்தேகமடைந்திருக்கிறோம். சரித்திரக்காரர் அதுவெறும்பொய்யென்று தள்ளிவிடுகிறார்கள். இப்போது டெல்லியில் நடந்த தர்பார் பழைய நூலாசிரியர்களின் வாக்கை மெய்ப்பித்தது. இந்தியா முழுதிலும் நாடாளும் வேந்தரெல்லாரும் அவ்விடம் சென்றிருந்தார்கள். அதோடு நில்லாது வெளிதேசத் தரசர்கள் தங்களுக்காகப் பிரதிநிதிகளை அனுப்பினார்கள். நம்மரசாங்கத்தினராகிய ஆங்கிலேயர்கள் அனேகம்பேர் வந்திருந்தார்கள். நம்ராஜகுலத்தின் பிரதிநிதியாக மங்கையர்க்கரசி விக்டோரியாவின் 4-வது புத்திரர் கன்னாட்பிரபு வந்திருந்தார். இவ்வளவு பேர் கூடிய சபையைப் பார்த்தல் சாதாரணமான காரியமா? அதிலும் இப்பெரிய கூட்டம் ராஜமகுடாபிஷேகப் பிரசித்தி விஷயமாகக் கூட்டப்பட்டதென்றால் இதனால் நூதன வேடிக்கை விஷயங்களில் விருப்பமுள்ள இந்துக்களடைந்த குதூகலத்தைப்பற்றிக் கேட்பானேன்.

தர்பார் ஆரம்பித்தவுடன் 5-மாசத்துக்கு முன் இங்கிலாந்தில் ராஜமகுடாபிஷேகமான சங்கதி பிரசுரிக்கப்பட்டது. அதன்பின் வழக்கப்படி மரியாதைகள் ஆயினபின் கர்ஸன் பிரபு நம் சக்கரவர்த்தி யிடமிருந்து வந்திருந்த கடிதத்தை வாசித்துக் காட்டிப் பின்னர் ஒரு பெரு வியாசஞ் செய்தார். அவ்வியாசத்தின் பயனைப்பற்றிப் பலபேர் பலபடி சொல்லினும் அவ்வியாசமட்டில் நிரம்பவிசேஷமானதே என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய வியாசங்கள் பலவாகவில்லை. அவ்வியாசத்தின் சுருக்கத்தை இதன்கீழ் எழுதுகிறோம்.

“26-வருஷங்களுக்கு முன் இதே இடத்தில் விக்டோரியா அரசி இந்தியாச் சக்கரவர்த்தினியென்று பிரசுரிக்கப்பட்டனர். இன்று இவ்விடத்தில் அவர் புத்திரராகிய எட்வர்ட் அரசர் மகுடாபிஷேகம் பிரசுரிக்கப்படுகிறது. அவர் நேரில் இங்கே அநேகம்பேருக்குத் தெரிந்தவர் (ஏனெனில் அவர் இந்தியாவுக்கு ஒருமுறைவந்திருக்கிறார்.) ஆகையால் அவர் மகுடாபிஷேகம் உங்களுக்கு அதிக சந்தோஷத்தை உண்டாக்கவேண்டும். இந்தியா முன்னெப்படி பழைய பெருமைகளில் விசேஷமடைந் திருந்ததோ அப்படி இப்போது ராஜவிசுவாசத்திலும் மேம்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய கூட்டம் இதற்குமுன் கண்டதல்ல. இதுமாத்திரமல்ல இவ்வளவு கூட்டமும் குறிப்பது இந்தியாவின் ஜனத்தொகையை.



அதுதான் பூலோகத்து ஜனங்களில் 5-ல் ஒருபங்கு இவ்வளவு பேரை ஒன்று சேர்த்தது ஒரு பெரியகாரியம். இவர்களைக் கிரமமாக ஆள்வது அதிலும் பெரிது. இவர்களை ஒருமிக்கச் சேர்த்து ஒரு ஜனமாக்குவது இன்னும் பெரிது. நம் சக்கரவர்த்தி தன் இந்திய ஜனங்களுக்குத் தெரிவிக்கும்படி எழுதியிருக்கும் கடிதத்தை வாசிக்கிறேன் கேளுங்கள்.

‘என் மகுடாபிஷேகத்தைக் கொண்டாட இந்திய ஜனங்கள்கூடி யிருக்கும்போது அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுவது எனக்கு அதிக ஆனந்தத்தை விளைவிக்கிறது. லண்டனில் நடந்த என் மகுடாபிஷேகத்தைக் காணக் கொஞ்சம் அரசர்களும் பிரதிநிதிகளுமே இந்தியாவிலிருந்து வந்திருந்த படியால் இந்த நல்விஷயத்தைக் கொண்டாட இந்திய அரசர்களுக்கும் கவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடந்தரும்பொருட்டு ஒருதர்பார் கூட்டும்படி என்பிரதிநிதிக்கு உத்திரவளித்தேன். நான் 1875-ல் இந்தியா வந்ததுமுதல் அதன் ஜனங்களை நான் நேசிப்பதோடு அவர்களுக்கு என் வம்சத்தினிடத்தும் என் சிம்மாசனத்தினிடத்து முள்ளபற்றைத் தெரிந்துமுள்ளேன். சென்ற கொஞ்சக் காலத்தில் அவர்களது பற்றுக்கு ஆதரவாக பலசமாசரங்கள் எனக்குத் தெரிந்தன. இந்திய சேனைகள் என் மண்டலத்தின் யுத்தங்களில் கீர்த்தி பெற்றிருக்கின்றன. என்குமாரனாகிய வேல்ஸ் இளவரசரும் அவர் பத்தினியும் இந்தியாவைப் பார்க்கவேண்டு மென்பது எனதாசை; அவர்களும் அவ்வாசை கொண்டவர்களாகவே யிருக்கிறார்கள். அவர்களைசீக்கிரம் இந்தியாவிற்கு அனுப்புவேனென்று நம்புகிறேன். கூடுமானதாயிருந்தால் இவ்விசேஷகாலத்தில்நானே இந்தியாவிற்குவந்திருப்பேன். ஆயினும் என் குடும்பப் பிரதிநிதியாக என் பிரிய சகோதரரும் உங்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரிந்தவருமாகிய கன்னாட் பிரபுவை அனுப்பியிருக்கிறேன். புகழ்பெற்ற முதல் இந்திய சக்கரவர்த்தினியாகிய என் தாய்க்குப்பின் நான் சிம்மாசனமேறினது முதல் அவரது இந்திய ஜனங்களின் பற்றுக்கும் மதிப்புக்கும் காரணமாயிருந்த கருணை, நீதி இவைகளில் அவரைப் பின்பற்றுவதில் விருப்பமுடையவனா யிருக்கிறேன். என் கீழரசர்களுக்கும் என் குடிகளுக்கும் நான் அவர்களுடைய விசுவாசத்தை கவனிப்பதாகவும் அவர்களுடைய கௌரவத்தை மதிப்பதாகவும் இவர்கள் விருத்தியடைவதில் ஆர்வங்கொண்டிருப்பதாகவும் வாக்களிக்கிறேன். இவைகள்தான் என் ஆட்சியின்கருத்து. அவைகளால் இந்தியா செழிக்கவும் ஜனங்கள் சந்தோஷமடையவும் கடவுள் அருள்புரிவாராக.’

கர்ஸன் பிரபு இதுதான் சக்கரவர்த்தியின் கடிதம் என்றுசொல்லி நம் தேசத்து அரசர்கள் சென்ற பஞ்சகாலத்தில் வாங்கிய கடனுக்கு 3 வருஷத்துக்கு வட்டி கொடுக்கவேண்டியதில்லையென்றும் இண்டியின் ஸ்டாப்கோர் என்ற இந்தியசேனையின் பெயர் இனிமேல் ராஜாவின் இந்தியசேனையென்று

மாறுமென்றும் கூறினர். மேலும் கூடிய சீக்கிரம் கூடுமானால் இந்தியாவில் வரிகுறைக்கப்படுமென்றும் கூறினர்.

"எட்வர்ட் சக்கரவர்த்தி நீடூழிகாலம் வாழ்வாராக".

## The Comedy of Errors.

## நகைபிழை நாடகம்.

பூர்வத்தில், ஸைரகியூஸ் எபிஸஸ் என்னும் இராஜ்ஜியங்கள் ஒன்றுக்கொன்று விரோதப்பட்டிருந்த காலத்தில், ஸைரகியூஸ் வணிகன் எவனாவது எபிஸஸ்ஸின் தெருவிற் காணப்படின், அவன் ஆயிரம் .மார்க் என்னுந் தொகையை எபிஸஸ் துரைத்தனத்தார்க்குச் செலுத்த வேண்டுமென்றும், அப்படிச் செலுத்தாவிடின் மாணத்துக்குட்பட வேண்டுமென்றும் எபிஸஸ்ஸில் ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஒரு நாள் ஸைரகியூஸில் உள்ள ஒரு வர்த்தகனாகிய இஜியனென்னும் ஒரு கிழவன் எபிஸஸ்ஸின் தெருவிற் காணப்பட, அவன் அத்தேசத்து நியாயாதிபதியினிடம் அச்சட்டத்துக் குட்படும்படி கொண்டுபோய் நிறுத்தப்பட்டான்.

நியாயாதிபதி இஜியனிடம் பணம் இல்லாததைக் கண்டு அவனுக்கு மர்ணதண்டனை விதிப்பதற்குமுன் மரணத்துக்குக்கூட அஞ்சாமல் எபிஸஸ் நகரத்துக்கு அவன் வந்தகாரணம் யாதென்று வினவி அவன் வாழ்நாளைப் பற்றியொரு விருத்தாந்தஞ் சொல்லும்படி கட்டளையிட்டான்.

அதற்கு இஜியன், தான் சாவுக்குத் துணிந்தது தான் படுந் துக்கத்தினாலேயே யன்றி வேறல்லவென்று கூறிப் பின்வருமாறு தன் கதையைச் சொன்னான்.

" நான் ஸைரகியூஸில் பிறந்துவளர்ந்து வர்த்தகத் தொழிலை மேற்கொண்டு, ஒரு நல்ல பெண்ணை விவாகஞ்செய்து சுகமாய் வாழ்ந்திருக்குங் காலத்தில், வர்த்தக விஷயமாய் எபிடாம்னியம் என்னும் நகரத்துக்கு ஒரு தரம் போகும்படி நேரிட்டது. அவ்விடம்போய் ஆறுமாதத்தில் என் காரியத்தை முடித்துக் கொண்டுத் திரும்பி வந்துவிடலா மென்றுபோன எனக்கு, இன்னுங் கொஞ்சகாலம் அங்கேயே யிருக்கும்படியாயிற்று. ஆனதால் என்



மனைவியை நான் இருக்கும் இடத்திற்கு வரவழைத்தேன். அவள் அவ்விடம் வந்த கொஞ்ச நாளுக்கெல்லாம் கர்ப்பவதியாய் இரட்டை ஆண் பிள்ளைகளைப்பெற்றாள். அப்பிள்ளைகள் உருவத்தில் ஒன்றுங்கொன்று எல்லா விஷயத்திலும் ஒத்து, பார்ப்பவர்களுக்குக் கொஞ்சங்கூட வித்தியாசந் தோன்றாமல் ஒரேமாதிரியாக விருந்தன. இக்காலத்திலேயே நாங்கள் இருந்த சத்திரத்தில் ஒரு பெண் இதேமாதிரியாக வித்தியாச மில்லாத இரட்டையாண் குழந்தைகளைப் பெற்றாள். இக்குழந்தைகளின் தாய்தந்தையர்கள் மிக்க வறியவர்களா யிருந்தபடியால், என் பிள்ளைகளுக்கு ஊழியஞ்செய்ய உதவுவார்களென்று நினைத்து இப்பிள்ளைகளை விலைக்குவாங்கி என் பிள்ளைகளோடு வளர்த்துவந்தேன்.

என் மனைவி தன் குழந்தைகளின் அழகைக் கண்டு மகிழ்ந்து, எமது சொந்த ஊராகிய ஸைரகியூஸுக்குப் போகவேண்டுமென்று ஒவ்வொரு நாளும் என்னை வருத்துவாள். கடைசியாக ஒரு நாள் நாங்கள் ஊருக்குப் போக நிச்சயித்து ஒரு கெட்டவேளையில் எபிடாம்னியத்தை விட்டுக் கப்பலேறினோம். ஏனெனின் புறப்பட்டு இரண்டு மூன்று மைல்தூரம் போனவுடன், மிகக்கொடிய காற்றுமழை யொன்று புறப்பட்டு வீசி யடித்தது. அதினால் கப்பலில் இருந்த மாலுமிகள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அவ்விடமிருந்த ஒருபடகில் ஏறிக்கொண்டு எங்களை மாத்திரம் முழுகிக்கொண்டிருக்கும் கப்பலில் விட்டுவிட்டுச் சென்றார்கள்.

நாங்கள் இருக்குங் கொடிய நிலையைப்பார்த்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, என்மனைவியையும், ஆண்டிபாலிஸ் என்னும் ஒரே பெயரையுடைய எனது இரண்டு பிள்ளைகளில் மூத்தவனையும், டிரோமியோ என்னும் ஒரே பெயரையுடைய நான் விலைக்குவாங்கின அடிமைப் பையன்களில் மூத்தவனையும், அக்கப்பலினது ஒரு பாய்மரத்தின் நுனியில் கட்டிக்கொள்ளச் சொல்லி நானும் என் இளைய குமாரனும் இளைய அடிமைப் பையனும் மற்றொரு பாய்மரத்தின் நுனியில் கட்டிக்கொண்டு, எங்கள் உயிரைக் காப்பாற்ற யாராவது வருவார்களாவென்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். இதற்குள் அக்கப்பல் ஒரு பெரிய பாறையில் மோதி யுடைந்து நீரில் ஆழ, நாங்கள் மாத்திரம் நீர்ப்பரப்பின் மீது பாய்மரத்தில் தொத்திக்கொண்டிருந்தோம். சற்று நேரத்துக்குள், காரின்த் என்னும் பட்டணத்திலிருந்து மீன் பிடிப்பதற்காக ஒரு படகில் ஏறிவந்த சில செம்படவர்கள் என் மனைவியையும் அவளோடு இருந்த மூத்த ஆண்டிபாலிஸையும், டிரோமியோவையும் தங்கள் படகில் ஏற்றிக்கொண்டு போய்விட்டார்கள். பிறகு நாங்களும் ஒரு கப்பற்காரரால் உதவி செய்யப்பட்டு ஜாக்கிரதையாய் ஸைரகியூஸ் நகரத்துக்குவந்து சேர்ந்தோம். ஆனால் அந்நாள் முதல் இதுவரையிலும் என் மனைவியும், என் மூத்தகுமாரனும் எவ்விடம் இருக்கிறார்களென்பது தெரியவேயில்லை.

"என்னிட மிருந்த இளைய குமாரனுக்குப் பதினெட்டாம் பிராயம்வந்த பொழுது அவன் தன் தாயையும், சகோதரனையும் பற்றி விசாரிக்க லாயினான். அவன், தன்னோடிருக்கும் அடிமைப் பையனாகிய இளைய டிரோமியோவைத் துணையாகக்கொண்டு அவர்களைத் தேடிவர அனுமதி கொடுக்கும்படி அடிக்கடி என்னை வருத்துவான். கடைசியாக அவர்களைத் தேடிவரும்படியவனை அரை மனதோடு அனுப்பி இன்றைக்குச் சற்றேறக்குறைய ஏழுவருஷம் ஆயின. இன்னும் அவன் திரும்பி வரவில்லை. ஆகையால் கிரீஸ் முழுதிலும், ஆசியாவுக்குச் சுற்றிலுமுள்ள நாடுகளிலும் அவனைத் தேடிக்காணாமல் கடைசியாக நான் வீட்டுக்குத் திரும்பும்வழியில் இவ்விடம் எபிஸஸ்விலும் பார்த்துவிட்டுப் போவோமென்று வந்தேன். நான் இறப்பதற்குமுன், என்மனைவியும், குழந்தைகளும் சவுக்கியமா யிருக்கிறார்க ளென்பதைக் கேட்டால் என்சாவு எனக்கு மிகத் திருப்தியை யுண்டாக்கும்." என்று கூறினான்.

இக்கிழவன் இப்படித் தன் இடையூறுகளையெல்லாஞ்சொல்லி முடித்தவுடன், நியாயாதிபதி இரக்கப்பட்டு, அவனை மரணதண்டனைக் குட்படுத்தாமல் விட்டுவிடுவது சட்டத்துக்கு விரோதமாதலால், அவனுக்கு ஒரு நாள் கெடுக்கொடுத்து அதற்குள் அவனை எங்கேயாவது போய்த்தான் செலுத்தவேண்டிய பணத்தை யாசகம் வாங்கிச் செலுத்திவிட்டுத் தன்னுயிரை மீட்டுக் கொள்ளும்படி யொரு சேவகன்வசம் அவனை யனுப்பினான்.

இஜியன் எபிஸஸ்ஸுக்கு வந்தது அன்றைக்குத் தான், அவன் இளைய மகன் ஆண்டிபாலிஸ் தன் அடிமை டிரோமியோவோடு அதேபட்டணம் வந்து சேர்ந்தான். ஆனால் இவ்விளைய ஆண்டிபாலிஸ்தான் எபிடாம்னியத்து வணிகனென்று தன்னைக் கேட்டவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தான்.

இஜியனது மூத்தகுமாரனோ, எபிஸஸ்விலேயே இருபது வருஷகாலமாக விருந்துகொண்டு ஒருமிக்க செல்வவானாக வாழ்ந்துகொண்டிருந்தான். முன்னமே செம்படவர்களால் கடலில் இருந்து தப்புவிக்கப்பட்ட இம்மூத்த ஆண்டிபாலிஸ் தன் தாயாரினின்றும் பிரிக்கப்பட்டு, தன் அடிமையாகிய மூத்த டிரோமியோவோடு, எபிஸஸ்வின் டியூக்கினது மாமனாகிய டியூக் அப்மென்பன் என்பவனுக்கு விற்கப்பட்டான்; பிறகு எபிஸஸ்வில் ஒரு மிக்க செல்வவானது மகளை இவன் விவாகஞ் செய்துகொண்டு, சுகமாய் வாழ்ந்துகொண் டிருந்தான். தன் அடிமையாகிய டிரோமியோவும் இவனோடேயே யிருந்தான்.

இளைய ஆண்டிபாலிஸ் தன் தாயையும், சகோதரனையுங் காணாமல் எபிஸஸ்வில்வந்து தடுமாறிக் கொண்டிருக்குங் காலத்தில், தன் அடிமையைத் தான் இறங்கியிருக்கும் சத்திரத்துக்கு ஏதோ ஒரு காரியமாக அனுப்பிவிட்டு, இவன்மாத்திரம் ஒரு தெருவின் கோடியில் நின்று ஆலோசித்துக் கொண்டிருந்தான்.



இச்சமயத்தில் மூத்த டிரோமியோ தன் எஜமானியாகிய ஆடிரியானாவின் உத்திரவின்படி, வெளியில்சென்ற தன் எஜமானனாகிய மூத்த ஆண்டிபாலிஸ்ஸை சாப்பாட்டுக்குக் கூப்பிட வரும் வழியில் இவ்விளைய ஆண்டிபாலிஸ்ஸைக்கண்டு, தன் எஜமானனென்று நினைத்து அவனைத் தன் எஜமானியாகிய ஆடிரியானா சாப்பிடக் கூப்பிடுவதாகச் சொன்னான். இவ்விளைய ஆண்டிபாலிஸ், மூத்த டிரோமியோவைத் தன் சொந்த அடிமையாகிய இளைய டிரோமியோ என்று நினைத்து "ஆடிரியானா என்பது யாரடா" என்றான். அதற்கு டிரோமியோ "ஐயா, ஆடிரியானா யார் என்கிறீர்களே! தங்கள் மனைவியென்று தெரியாதா" என்றான். அதற்கு இளைய ஆண்டிபாலிஸ் "என் மனைவியா! எனக்கு மனைவியேதடா, என்னடா பரிகாசம் பண்ணுகிறாய்" என, இப்படி ஒருவரையொருவர் பரிகாசம் பண்ணுவதாக நினைத்துக்கடைசியில் ஆண்டிபாலிஸ் தான் இருக்கும் சத்திரம் போய்ச்சேர்ந்தான். பிறகு டிரோமியோ தன் எஜமானியாகிய ஆடிரியானாவிடம் போய்த் தன் எஜமானன் தனக்கு மனைவியேயில்லையென்றும், ஆடிரியானாவென்பவள் இன்னாளென்று தெரியாதென்றும் சொல்லுகிறானென்று கூற, அவள் சத்திரத்துக்கு ஓடிவந்து, இளைய ஆண்டிபாலிஸ்ஸைத் தன் கணவனென்று நினைத்துப் பலவாறு அவனை வைது கடைசியில் அவனைத் தன் வீட்டுக்குப்போஜனம்பண்ண அழைத்துக்கொண்டு வந்தாள். இளைய ஆண்டிபாலிஸ் தான் ஆடிரியானாவின் கணவனல்லவென்று பல முறைகூறியும் அவள் கேட்காததைக்கண்டு, பிறகு, நான் ஒருவேளை யவளை கனவில் விவாகஞ் செய்துகொண்டிருக்கிறேனோ என்னமோவென்று நினைத்துக் கடைசியாக அவள் சகோதரியான லியூஷியானாவென்பவளோடு சாப்பாட்டுக்கு உட்கார்ந்தான். இப்படியிருக்க இவனோடு வந்த இளைய டிரோமியோவை அவ்வீட்டில் சமையல் செய்யும் பெண் தன் கணவனாகிய மூத்தடிரோமியோ வென்று நினைத்து முறையிடுகிறாள்.

இப்படியிவர்கள் போசனம் பண்ணும்போது, ஆடிரியானாவின் உண்மையான புருஷனாகிய மூத்த ஆண்டிபாலிஸ் வந்து கதவைத்தட்ட இவள் அவனை யாரோவென்று நினைத்துக் கதவைத் திறக்கவில்லை. பிறகு அவன் மிக்க கோபத்துடன் போய்விட்டான்; போசனமானவுடன் இளைய ஆண்டிபாலிஸ்ஸும், டிரோமியோவும் தாங்கள் இருக்கும் இடத்துக்குப் போனார்கள். வழியில் ஒரு தட்டான் தங்கச்சங்கிலி யொன்றைக் கொண்டுவந்து மூத்த ஆண்டிபாலிஸ் என்று நினைத்து இளைவனிடம் கொடுக்க இவன் வாங்கமாட்டேனென்று மறுதளிக்கக் கடைசியில், தட்டான் விடாததைக்கண்டு அச்சங்கிலியை வாங்கிக்கொண்டு இளைவன் தானிருக்குமிடம் போய்ச் சேர்ந்தான்.

இப்படியிருக்க மூத்த ஆண்டிபாலிஸ், தான் தங்கச் சங்கிலியொன்று செய்யச்சொல்லி அத்தட்டானிடம் பணம் கொடுக்க, அவன் அச்சங்கிலி

யைச் செய்து கொடாமல் பணத்தை மோசம் பண்ணினனென்று நியாயாதி
பதியிடம் முறையிட, அதற்காக அத்தட்டானை அடுத்த வீதியில் போலீஸ்
காரர்கள் பிடித்துக்கொண்டுபோக அச்சமயத்தில் மூத்தவன் அவ்விடம்
வர, இவன் சங்கிலியை அக்காலையில் தன்னிடமிருந்து பெற்றுக்கொண்டு,
இல்லையென்று பொய் சொல்லுகிறானென்று தட்டான் முறையிட, இதைக்
கண்டு போலீஸ்காரர்கள், தட்டான், மூத்த ஆண்டிபாலிஸ் இருவரையும்
சிறைச்சாலைக்கு இட்டுக்கொண்டு போனார்கள். வழியில் இளைய டிரோ
மியோவைக் கண்டு மூத்தவனாகிய தன் அடிமையென்று நினைத்து, மூத்த
ஆண்டிபாலிஸ், தன் மனைவியிடம் போய்த் தன்னை மீட்டுக்கொள்ளப்
பணம் வாங்கிவர அவனை அனுப்பினான். இளையடிரோமியோ இவனைத்தன்
எஜமானனென்று நினைத்து, முன் தாங்கள் போஜனஞ்செய்த வீட்டுக்குப்
போய் ஆடிரியானாவிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு ஓடிவந்தான். வழி
யில் இளைய ஆண்டிபாலிஸ் நின்று கொண்டிருப்பதைக் கண்டு, தன் எஜமா
னன் சிறைச்சாலையினின்றுந் தப்பித்து வந்துவிட்டானென்று நினைத்து அவ
னிடம் அப்பணத்தைக் கொடுத்தான். இளைய ஆண்டிபாலிஸ் தான் போலிஸ்
காரர்களால் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டானென்பதையும்,
பணத்தை வாங்கி வரச்சொன்னான் என்பதையும், மற்ற சங்கதிகளையும்
டிரோமியோ சொல்லக்கேட்டு, இவனுக்கு ஏதோ பித்தம் பிடித்து விட்ட
தென்றும், தாங்களெல்லாம் ஏதோவொரு மாயையில் அகப்பட்டு அவஸ்
தைப்படுகிறதாகவும் நினைத்து மிக்க துயரப்பட்டுக்கொண்டிருந்தான்.

தன் கணவன் சற்று நேரத்துக்குமுன் டிரோமியோவோடு வந்து போச
னம் பண்ணிவிட்டுப்போய், பிறகுவந்து தனக்குச் சாப்பாடு போடாமல்
தன்னை வெளியில் விட்டு கதவைச்சாத்தி வேறு ஏதோ புருஷனுக்குச்சாப்
பாடு போட்டு அனுப்பினாளென்று சண்டைபோட்டதையும், தான் அவள்
புருஷன் அல்லவென்று வாதாடினதையும் ஆடிரியானா பார்த்து தன் கணவ
னுக்குப் பைத்தியம் பிடித்துப் போய் விட்டதென்று நினைத்து தன் வேலைக்
காரர்களைக் கூப்பிட்டு அவனைக்கட்டி ஓர் அறையில் போடச்சொல்லிப்
பிறகு ஓர் வைத்தியனை வரவழைத்தாள். தன் வேலைக்காரனான மூத்த
டிரோமியோவும் தன் எஜமானன் சொல்லியபடியே எல்லாவிஷயங்களையும்
பிடிவாதமாகச் சொல்வதைக்கண்டு அவனையும் கட்டித் தன் எஜமானனோடு
போகும்படி உத்திரவு பண்ணினாள்.

கொஞ்சநேரத்துக்கெல்லாம் ஒருவன் ஆடிரியானாவிடம் வந்து அவள்
புருஷனும் வேலைக்காரனும் தங்கள் கட்டினின்றும் தப்பித்துக்கொண்டு
போய் அடுத்த தெருவில் நின்று அந்த தட்டானோடு வாதாடிக்கொண்டிருக்
கிறார்களென்று சொன்னான். உடனே ஆடிரியானா தன் வேலைக்காரர்களைக்
கூட்டிக்கொண்டு தன் பைத்தியம் பிடித்த புருஷனைப் பிடித்துக்கொண்டுவர



ஓடினாள். இவள் இப்படி வருவதைப் பார்த்த இளைய ஆண்டிபாலிஸ்ஸஉம் டிரோமியோவும் பயந்து அங்கிருந்த ஒரு மடத்துக்குள் ஓடினார்கள். அம் மடத்திலிருந்த ஒரு கிழவி என்ன சங்கதியென்று வெளியில் வந்துபார்க்க, அங்குநின்ற ஆடிரியானா தன் கணவனையும் வேலைக்காரனையும் தன்னிடம் விடும்படி வாதாடினாள்.

இதற்குள் அந்நாளின் பகற் பொழுதெல்லாம் முடிந்து சூரியாஸ்தமன மாயிற்று. இஜியனென்னும் கிழவனது வாழ்நாளும் முடிவதற்குக் காலங் கிட்டியது. அவன் உயிரை மீட்க யாரும் பணம் கொடாததினால் அவன் உயிரை வாங்குவதற்கு அவ்வஸ்தமன காலத்தில் அம்மடத்துக்கு எதிரிலுள்ள கொலைசெய்யும் இடத்துக்கு அவனைக்கொண்டுவந்தார்கள். அவனுக்கு மரணதண்டனை விதித்த நியாயாதிபதியும் கூடவந்தான். மடத்துக்கு வெளியில் நின்ற ஆடிரியானா நியாயாதிபதி வருவதைப்பார்த்து கிட்டப்போய் அவனைநிறுத்தி அவனிடம், மடத்துக்குள்ளிருக்கும் தன் புருஷனையும் வேலைக்காரனையும் தன் வசம் ஒப்புவிக்கும்படி முறையிட்டாள். இச்சமயத்தில், வீட்டில் கட்டுண்டு கிடந்த மூத்தஆண்டிபாலிஸ் அவ்விடம் வந்து தன்னை தன் மனைவி அநியாயமாக கட்டி வீட்டில் ஓர் அறையில் போட்டாள் என்று நியாயாதிபதியிடம் கூறினான். மடத்துக்குள்ளிருக்கிறான் என்று நினைத்த ஆடிரியானா தன் புருஷன் வெளியில் நிற்பதைப்பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டு ஒன்றுந்தெரியாமல் நின்றாள். இஜியன் ஆண்டிபாலிஸ்ஸைத் தன் மூத்தகுமாரனென்று தெரிந்து தன் உயிர்தப்பினதென்று நிச்சயித்து அவனோடு அன்புடன் பேசினான். இப்படியிருக்க, மடத்துக்குள்ளிருந்த இளைய ஆண்டிபாலிஸ்ஸஉம், இளையடிரோமியோவும், அக்கிழவியும் வெளியில் வந்தார்கள். உடனே ஆடிரியானா தனக்கு முன் இரண்டு புருஷர்களும் இரண்டு வேலைக்காரர்களும் இருப்பதைக்கண்டு திகைத்து நிற்க, நியாயாதிபதிக்குக்காலையில் இஜியன் சொன்ன கதை நினைவிற்கு வந்தது. நியாயாதிபதி சங்கதிகளையெல்லாம் ஆதியோடந்தமாய் விசாரித்த வளவில், இவ்விரண்டு ஆண்டிபாலிஸ்ஸர்களும் இஜியனது புத்திரர்களென்றும், இரண்டு டிரோமியோக்களும் விலைக்குவாங்கின இரண்டு அடிமைகளென்றும், அக்கிழவி இஜியனது மனைவியென்றும் வெளியாயிற்று. நியாயாதிபதி மனமுருகி இஜியனை மரணதண்டையினின்றும் விடுவித்து, பணமும் வாங்கிக்கொள்ளாமல் மன்னித்தும், பிறகு எல்லாரும் அம்மடத்திற்குள் போய் கொஞ்சகாலம் வேடிக்கையா யிருந்தார்கள்.

சிலகாலஞ் சென்றபின் இளைய ஆண்டிபாலிஸ் ஆடிரியானாவின் சகோதரியாகிய லியூஷியானாவை மணஞ்செய்துகொண்டு இஜியனது குடும்பத்தார்களெல்லாம் எபிஸஸ் நகரத்திலேயே நெடுங்காலம் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

(முற்றிற்று.)

E. சுப்பிரமணியம்.

# * இந்தியத்தாரகை.

## THE STAR OF INDIA.

மந்திரி முதலாயின ஆலோசனைச்சபை யங்கத்தினர்கள் அரசனது சிம்மாசனத்தைச் சூழ்ந்து தமக்கு விதித்த ஆசனங்களி லமர்ந்திருப்பவும், நட்சத்திரங்களாகிய நால்வகைச்சேனைகளும் ஆங்காங்கே தத்தம் இடங்களிலிருந்து ஒளியோடு மிளிர்ந்து கொண்டிருப்பவும் இனிதாக ஒருநாள் மாலைக்காலத்துக் காண்பவர் மனமுங்கண்ணுங்கொள்ளை கொள்ளத்தக்கதாய்க் கவினொரு கலைகள் நிரம்பப்பெற்று அந்தரமாகிய தன் அழகிய ஆசனத்தின் மீது இந்திரனோவெனச் சந்திர னரசுவீற்றிருந்தனன். இவ்வுலகி லெதையும் அவ்வினியகாட்சிக் கிணையெனச்சொல்ல நாம் துணியமாட்டோம். அப்போது அச்சேனையின்முன்னே பற்பல விஷயங்கள் அரசனது தீர்மானத்திற்காகக்கொண்டுவரப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாய் முடிவுசெய்யப்பட்டன-அப்பொழுது திடீரென்று இராஜசந்நிதானத்தில் மங்கிய ஒளியொன்று தோற்றியது. அதினின்றும் தன்னொளி மழுங்கிய தாரகையொன்று கூப்பிய கையும் குவிந்திரங்கிய முகமுமாக, அரசன் முன்னர் வந்து, அரசற்கஞ்சலி செய்து நின்றது. அப்படி வந்து நின்ற அவனை அங்குள்ளவர்கள் தாம் பார்த்த முகமும் பழகிய தோற்றமு முடையவனென்று அவரவர்க்குள் ஐயுற்றனரேயன்றி எவரும் அவனை இன்னானென்று நிச்சயிக்கக்கூடவில்லை.

அப்போது அரசன் அவனை "நீ யாவன் என்று வினவ, அவன் "ஐயா நான் நின்கோலின்கீழ்க் குறைவற்றுவாழும் குடிகளுள் ஒருவன். என் பெயர் இந்தியத்தாரகை" என்றியம்பினன். அரசன் தன் ஆலோசனைச் சபையாரை நோக்கி "நீங்கள்யாரேனும் இவனை யறிந்ததுண்டா" என்று கேட்டனர்.

அப்போது அங்குள்ள ஒருவன் "ஆம், அரசர்பெரும! இப்போது இவனையறிந்தேன். அவன் இங்கே வந்தவுடனே இவனுடைய தோற்றம் பழகியதோற்றமாகக்காணப்பட்டதேயன்றி இவனை இன்னானென்று நான் உரைக்கக்கூடவில்லை. இப்போது இவன் பேரைக் கேட்டபின் இவன் என் பிரிவிலேயே என்கீழ் இருந்து வேலைசெய்துவந்தானென்பது என் ஞாபகத்திற்கு வருகின்றது. அவன் இங்குவந்து நெடுநாட்களாயின. நாங்கள் இவனுக்கேதோ அந்தியம் வந்துவிட்டதாக எண்ணி இவன் நினைவையே ஒழித்துவிட்டோம்" என்றான்.

பின் அரசன் வந்தவனைநோக்கி "நீ இவ்வளவு காலம் எங்கிருந்தனை" என்ன, அவன் "நான் அஸ்தமித்திருந்தேன் " என்றான்.

* *Adapted from the "Indian Ladies' Magazine".*



அரசன் ஏனென்று வினவ அவன் இயம்பலானான். ஏனென்னும் இறைவனே! ஸ்ரீராமரையும் யுதிஷ்டிரரையும் போன்றமக்கள் இந்தியாவிற் பிறக்கவில்லை என்பது நீ யறியாத விஷயமல்ல. நாம் அவ்வகண்ட தேசமுழுவதும் அலைந்து திரிந்தாலும் உண்மையில் விருப்பம், சுயநலம்பாராமை மதாபிமானம், ஈசுவரபக்தி என்பன வாதி பூர்வ காலத்திய நற்குணங்களெல்லாம் பொருந்தப் பெற்ற நன்மக்களைக்காண்போமென்று நம்புதல் வீணேயாகும். ஒரு தேசமானது இப்படியாக நன்மக்களைப் பெற்றிராதபோது அத்தேசத்தின் தாரகைக்கு அஸ்தமித்தலைவிட வேறென்ன விதி யிருக்கின்றது!",

அதற்கரசன் "அதினால் நீ தாரகையாக விளங்கும் தேசத்தில் அந்நன்மக்கள் அறவே ஒழிந்து போகவேண்டிவந்த காரணம்யாது?" என்று வினவினான். அதற்கவன்,

"அதன்காரணம் வெளிப்படை.கோசலாதேவியாரைப்போன்ற தாய்மாரும்,சீதாதேவியைப்போன்ற மனைவிமாரும் அத்தேசத்தில் அற்றுப்போய்விட்டனரென்றால், அம்மக்கள் கீழ்ப்பட்டமையும் ஒரு ஆச்சரியமாகுமோ?" என்றுரைத்தான். "அவ்வன்னையாரும் பன்னியாரும் அற்றவிதந்தானெப்படி" என்றானரசன்.

"அண்டங்களின் மீதாணை செலுத்தும்ஆண்டகை! அதை நீயே நன்கறிவை. ஒரு தேசத்தில் பெண்கள் நிலைமையிற் பெரிதுந்தாழ்ந்து கல்வியில்லாராய்ப் பாராதீனப்பட்டுச் சமநிலையாதலின்றி அடிமைகளாக நடத்தப்பட்டுத் தம் நிலையை யுயர்த்திக் கொள்ள யாதொரு வழியுமில்லாதவர்களாக விளங்கினார்களானால், இப்படி அறியாமைக்கும் அடிமைத்தன்மைக்கும் இடமாய் நிற்கும் ஆயிழையார் கூட்டத்தில் சீதைபோன்றாரை நாம் எங்ஙனம் எதிர்பார்க்கக்கூடும்? தங்கள் கேட்டுக்கே காரணமாக, எந்த நாளிலே ஆண்மக்கள் தங்களுடைய தேகவன்மையையே ஆதாரமாகக்கொண்டு கொடுங்கோன்மை செய்து தம் பெண்பிள்ளைகள் தேகத்திலும் மனதிலும் ஒழுக்கத்திலும் உயர்ச்சியடையும் வழிகளையவர்களுக்கில்லாமற் செய்துவிட்டார்களோ அன்றையதினமே அந்த ஜனசமூகமானது தாழ்வடைந்து தடைபட் டொழிந்த தென்பதற் கையமுமுண்டோ? இவ்விதமான தாழ்ச்சியானது தலைமுறை தலைமுறையாக நடந்து வந்தது. வரவே என் ஒளியும் மழுக்க மடைந்து வந்தது. கடைசியாக நானும் அஸ்தமித்துவிட்டேன். எல்லாரும் என்னை மறந்தொழித்தார்கள்."

இவ்வண்ணமத்தாரகை யுரைக்க அதைக்கேட்ட வந்தல். "ஆயின் நீ மீளவும் இங்குத்தோன்றினதுதானெங்ஙனம் எனக்கேட்க தாரகை விடை பகர்வதாயிற்று:—

"இப்போது ஆங்கிலேயர் அரசாட்சியின்கீழ் இந்தியமக்கள், மேற்றிசையாருடைய நாகரீகத்தையும் கல்வியின்பயனையும் நுகர்ந்து அனுபவிக்கும் பெரும்பாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள்-அதினாலே தேகவன்மையானது வெறும் மிருகபலமேயன்றி மனிதர்கள் புகழ்ந்து கொள்ளக்கூடிய பொருளல்ல வென்பதும், மனோவன்மையிலும் புத்தியிலும் ஒரு பாலார் மற்றவரைவிடத் தாழ்ந்தவர் அல்லர் என்பதும் இந்தியர்களின் ஞாபகத்திற்கு வந்திருக்கின்றது. தனித்தனியாகப்பார்த்தால் ஒரு ஆண்மகன் அதிகஞ்செய்யக்கூடும். ஒரு பெண்மகள் குறைந்த சக்தியுள்ளவளாயிருத்தல் கூடும். ஆனால் ஒரு தொகுதியாகப்பார்க்குமிடத்து ஒரு பாலார் மற்றபாலாரைவிட ஞானோதயவன்மையில் ஒருபோதும்குறைந்திருக்கமாட்டார்கள். இந்த உணர்வானது இப்போதாயினும் கீழ்த்திசையாராகிய இந்தியர்களுடைய உள்ளத்தில் உதித்திருக்கின்றது. இதனாலேதான் என் முன்னைய ஒளியும் கொஞ்சம் எனக்குண்டாயிற்று. மனிதர்களுடைய உணர்வும் குணமும் இவ்விதமாகவே குறைவில்லாது நிறைவடையுமாயின் பெண்களின் நிலைமை யுயர்ந்து விளக்கமடையும் காலம் சமீபத்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். ஆகவே இந்தியாவும் பூர்வகாலத்தைப்போலவே பெருமையுற்று விளங்கும். நானும் என் முன்னொளி பெற்றுத் தப்பில்லாத அழகுடனே விண்ணகத்தில் விளங்குவேன் !"

இவ்வாறு தாரகையுரைத்தது கேட்ட மன்னனும் மகிழ்ந்து புன்னகை புரிந்து, எல்லாம்வல்ல கடவுளைக் கைகூப்பி யஞ்சலிசெய்துவிட்டு, ஏ தாரகாய்! செல்வாயாக. நீ எப்போதும்போல விண்ணில் மிளிர்ந்து உன் தேசத்திற்கு நன்மைசெய்து விளங்கும்படியாக ஈசன் இன்னருள் செய்வாராக, என் ஆசீர்வாதமும் பூரணமாக உனக்கிருப்பதாக, செல்க" என்றுரைத்து அதற்கு விடைகொடுத்தனுப்பினன்.

சி. கே. சுப்பிரமணிய முதலியார், பி-ஏ.

## சிறுவர்க்கான கதை.

### 1. ஆட்கொல்லி.

உலகத்தார் பணத்தை ஆட்கொல்லியென்று கூறுவது சாதாரணமன்றோ? அவர்கள் அவ்வாறு கூறுவானேன் என்று ஆலோசித்தால் ஒருவன் மற்றொருவனுடைய உயிரை மாய்ப்பதற்கு பல காரணங்களுள் பணமும் ஒன்றாகஇருப்பதனால் தானென்னத்தெரியவரும். அது இச் சிறுகதையால் நன்கு விளங்கும். மூன்று வாலிபர்கள் ஒருநாள் காலையில் சிறிது ஆகாரம் புசித்துக்கொண்டு தங்கள் ஊருக்குச் சுமார் 18 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் அன்றிரவு நடக்கும் தேர் திருநாள் வேடிக்கைகளைப்



பார்ப்பதன்பொருட்டுப் புறப்பட்டார்கள். இம்மூவரும் அதிக சிநேகர். அநேகமாக தேர் திருநாட்கு சிநேகர்கள் ஒன்று சேர்ந்து போவது வழக்கமன்றோ? இவர்கள் இப்படிப் போய்க்கொண்டிருக்கையில் வழியில் ஒருவருமில்லை. இம்மூவர் மட்டுமே நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இப்படியிருக்க வழியில் ஒரு சிறுமூட்டை கிடப்பதாக ஒருவனுக்குத்தெரிந்தது. அவன் மற்றவர்களைப் பார்த்து இதென்ன! சற்று தூரத்தில் நாம் போகும் வழியில் ஒரு சிறுமூட்டை கிடக்கிறதுபோலிருக்கிறதே. அது பணமாக இருக்கும் பக்ஷத்தில் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். அதை மூவரும் பகிர்ந்து வைத்துக்கொள்ளலாம் அன்றோ—என்றான். மற்ற இருவரும் "ஆம் அப்படித்தான் போலிருக்கிறது. சீக்கிரம் செல்வோம்" என்றார்கள். இப்படிச்சொல்லிக்கொண்டே மூவரும்அம்மூட்டையினருகிற் சென்றார்கள். சென்றுசோதிக்கவே அதனுள்முழுவதும் வெள்ளிநாணயங்கள் பலகலந்திருந்தனவாக தெரியவந்தது. உடனே அதில் எவ்வளவிருந்தபோதிலும் சரி, மூவரும் சரிபாகமாகப் பங்கிட்டு ஆளுக்கு ஒவ்வொருபாகம் எடுத்துக் கொள்ளலாம் எனத்தீர்மானம் செய்துகொண்டு தங்கள் வழியை நோக்கிச் சென்றார்கள். தாங்கள் அடையவேண்டிய இடத்திற்கு இன்னும் இரண்டு மைல்தானிருக்கும். அப்போது இவர்கள் ஒரு ஆற்றைக் கடந்தார்கள். அந்த ஆற்றின் இரு புறங்களிலும் நெருங்கியடர்ந்த, குளிர்ந்த சோலைகள் காணப்பட்டன. அப்போது சுமார் 4 மணி இருக்கலாம். இப்படியிருக்க ஒருவன், "ஆ! ஆ!! எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறது இவ்விடம். இரு பக்கங்களிலுமிருக்கும் சோலைகள் கண்ணைப்பறிக்கின்றனவே" என்றான். மற்றொருவன் "ஆம் நண்ப! நீ சொல்வது முற்றும் சரியே, ஒரு கவிராயர் இப்போது இங்கிருப்பாராயின் ஆற்றின் அழகையும்,சோலையின் அழகையும் பற்றி வெகு நேர்த்தியாக வர்ணித்து கவிகள் பாடுவார்" என்றுசொன்னான். மூன்றாவான், "சந்தேகமென்ன! இக்காட்சியைப் பார்த்தவுடனே கம்பராமாயணத்திலுள்ள ஒரு வர்ணனை எனக்கு நன்றாக ஞாபகத்திற்கு வருகின்றது, ஒருசமயம் கம்பர் இச்சோலையைப்பார்த்துத்தான் அக்கவிகளைஎழுதினரோ" என்று சொன்னான். (இச்சம்பாஷணையால் இம்மூவரும் மிக அன்னியோன்னிய நண்பர்களென்று எண்ணலாம், இன்னும் ஒரு நிமிஷத்தில் பணம் செய்யும் வேலையின்னதெனத்தெரியும்). இப்படியே பேசிக்கொண்டு அவ்விடத்தில் சற்று நின்றார்கள், நிற்கையில் ஒருவன் நாம் போகவேண்டியது இன்னும் இரண்டு மைலுக்கு குறைவாகத்தானிருக்கிறது. நேரமோ வேண்டிய அளவு இருக்கின்றது, பசியும் ஆகின்றது. ஆகையால் இதோ! அருகில் தெரியும் கிராமத்திற்குச்சென்று சில தின்பண்டங்கள் வாங்கிவந்து இவ்வழகிய இடத்தில் இருந்து புசித்துச் சற்று இளைப்பாறிவிட்டுப்போவோமானால் அங்கு இரவு வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு நாளையதினம் அதிகாலையில் ஊருக்குத் திரும்பிவிடலாம்." என்று கூறியதைக் கேட்ட மற்றொருவன் ஆம், ஆம், நீ சொல்லியது மிகவும் சரி, அப்படியே செய்யலாம். வேண்

டிமானால் நானே சென்று சில தின்பண்டங்கள் வாங்கிவருகின்றேன் என்று சொல்லிப் புறப்பட்டான். போனான் அச்சிறுகிராமத்திற்கு வாங்கினான் தின்பண்டங்களை. வாங்கும்போது இவனுக்கு ஒரு யோசனையுண்டாயிற்று. நாம் நல்ல அதிர்ஷ்டசாலிதான், ஒரு தந்திரம் செய்தால் இன்னும் அதிக அதிர்ஷ்டசாலியாகலாம் என்றெண்ணி தனக்குள்ளேயே "சும்மாயிருந்தால் இன்று கண்டெடுத்ததிரவியத்தில் மூன்றில் ஒருபங்குதான் நமக்குக்கிடைக்கும். கொஞ்சம் விஷம் வாங்கித் தின்பண்டத்தில் கலக்கி அவர்களிடம் கொடுத்தால் அவர்கள் அதைத்தின்று உடனே இறந்து விடுவார்கள். பின்பு திரவியமுற்றும் நம்மதே ஆய்விடும். இதுதான் நல்லவழி" என்று சொல்லிக்கொண்டு தான் அங்கேயே சில பண்டங்களைப் புசித்துவிட்டு மற்ற பண்டங்களில் பாஷாணம் கலக்கித்தன் நண்பர்களிருந்தஇடத்திற்குதிரும்பினான். நிற்க, ஆற்றிலிருக்கும் இருவர்கள் என்னசெய்கின்றார்களென்றாராய்வோம். அவர்கள் கடைக்குச்சென்றவனைப்போலவே அவ்வளவு புத்திசாலிகள்தான். ஒருவன் மற்றவனைப் பார்த்து "இன்று கிடைத்த திரவியத்தில் மூன்றில் ஒரு பங்கு என்றால் அதிகமாயிராது. இரண்டிலொருபங்கு அதிகமாயிருக்கும்" என்று சொன்னதும் மற்றவன் "ஆம், ஆம், நானும் இப்போது அதைப்பற்றித்தான் யோசித்தேன். நீயும் நல்லவேளையாய் அதையே நினைத்தாய். கடைக்குப்போனவன் வந்ததும் நாம் இருவருமாகச் சேர்ந்து அவனைக் கொன்றுவிட்டால் பணத்தில் ஆளுக்குப்பாதி வைத்துக்கொள்ளலாம்" என்றான். இதைக்கேட்டதும் "ஆம் அதுவே சரி. அவன் வந்ததும் அவனைக் கொன்றுவிடுவதேசரி. நீ தயாராயிரு, நானும்ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான். இப்படி இவர்கள் பேசிமுடிந்தபின் கடைக்குச் சென்றவனும் வந்தான். வந்ததும் அங்கிருந்த இருவரும் முன் தீர்மானித்தபடியே ஒரு நொடிப்போதில் அவனை உயிர் தீர்த்துவிட்டு பிரேதத்தை புதரில் ஒருவரும் காணாதபடி ஒளித்துவிட்டுப் பின்பு அவன் கொண்டுவந்த தின்பண்டங்களைத்தின்றார்கள். தின்று சற்றுநேரம் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போதே ஒருவன் "ஐயோ! இதென்ன இது எனக்கு என்னமோ ஒருமாதிரியாகக் கிறு கிறு என்று வருகிறதே" என்றான். இதைக்கேட்டதும் மற்றவன் "ஆம் அடா எனக்கும் அப்படித்தான் வருகிறாப்போலிருக்கிறதே. ஐயோ! அந்தப்பாவி தின்பண்டத்தில் ஏதேனும் விஷம் கலந்திருப்பான்போலிருக்கிறது. ஒரு சமயம் நாம் எண்ணிய மாதிரியே அவனும் எண்ணி பணத்தை முற்றும் அபகரிக்க நினைத்து தின்பண்டத்தில் விஷங்கலந்து கொண்டுவந்திருப்பான்" என்று வாய்குழறிக்கொண்டே சொன்னான். மற்றவன் அதற்குச் சந்தேகமேயில்லை. அவன் அப்படியேதான் செய்திருப்பான்: தெரியாமலா பெரியோர்கள் "கெடுவான் கேடு நினைப்பான்" "முற்பகற்செய்யிற் பிற்பகல் விளையும்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவன் நமக்குக் கெடுதி நினைத்தான், நாம் அவனைக்கொன்றோம். அவனுக்கு நாம் கேடு எண்ணினோம். நம்மையவன் கொன்றான். சரிக்கு



சரி, ஆ! ஆ!! இந்தப் பாழும் பணம் என்னென்ன வேலை செய்கின்றது. அந்தப்பாழும்பணத்தை நாம் இன்று கண்டிராவிட்டால் எவ்வளவு சந்தோஷமாய் நாம் மூவரும் சென்று வேடிக்கை பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்பி உற்றார் பெற்றாருடன் கூடி வாழ்ந்திருக்கலாம். பணத்தை ஆட்கொல்லியென்று சும்மாவா சொல்லுகின்றார்கள். (மிகத் தாழ்ந்த குரலில்) ஏதேது நம்முடிவு வந்துவிட்டது" என்று சொல்லி முடிப்பதற்குள் இன்னொருவன் இறந்துவிட்டான். இப்படியே இன்னும் கொஞ்சநேரம் பிரலாபித்து கடவுளை நினைத்து இவனும் உயிர்துறந்தான். M. V. M.

## H. E. Lord Curzon & the Delhi Durbar.

### லார்ட் கர்ஸனும் டெல்லி தர்பாரும்.

டெல்லிமாநகரத்தில் தர்பார் கூட்ட வேண்டுமென்று மிக ஊக்கத்துடன் உழைத்து அத்தர்பாரை வெகு விமரிசையாக நடத்தியது, லார்ட் கர்ஸனுடைய மனப்பூர்வமான ராசவிசுவாசத்தையும், அத் தர்பாரைக் கண்ணால் கண்டுகளிக்க வேண்டுமென்னும் மனக் களிப்பையும் அங்கையி னெல்லிக்கனிபோல யாவருக்குந் தெரியவிளக்குகின்றதல்லவா? இவர்சுமார் ஆறுமாத காலமாக வெகுசிரமப்பட்டுவந்ததுந்தவிர, அடிக்கடிடெல்லிக்குஞ் சென்று ஒவ்வொரு ஏற்பாட்டையும் தாமே நேரில் பார்த்தும் வந்தார். இவ்வளவு ஜனக்கூட்டம் லார்ட் லிட்டன்காலத்தில் கூடிய தர்பாரிலும் இருந்ததில்லையாம், அது இவ்வளவு சிறப்பாகவும் இருந்ததில்லையாம். நமது இந்து சக்கிரவர்த்திகளி லொருவராகிய தரும புத்திரர் பட்டாபிஷேக காலத்தில் இதே இடத்தில் அனேக தேசத்து மன்னர்களும், பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்கிற நாற்பெருங் குலத்தினர்களும், திரள் திரளாக வந்து கூடினதாக பாரதமென்கிற இதிகாசத்தின் மூலமாக வறிகிறோம். அவ்வழக்கத்தின்படியே நமது காருண்ய ஆங்கிலேய கவர்ன்மெண்டு சக்கிரவர்த்தியாகிய 7-வது எட்வர்ட் சக்கிரவர்த்திக்கும் முடிசூட்டு தர்பார் கொண்டாட்டம் அதே இடத்தில் இப்பொழுதும் நடந்தேறியது. நமது வீட்டில் ஒரு கலியாணகாரியம் நடக்கவேண்டி யிருந்தால் அதை நடத்தி முடிப்பதற்கு வெகு சிரமமாயிருக்கிறது. அதைவிட வெகுசிறப்பான சக்கிரவர்த்தியின் முடிசூட்டு தர்பாருக்கு, பற்பல நாடுகளிலுமிருந்து மன்னர்களையும், தக்க கௌரதையுடைய பெரிய மனிதர்களையும் வரவழைத்து, அவரவர்களுக்கு தக்கவிதமாக மரியாதையுடன் இத்தர்பாரை யாதொருவிபத்துமில்லாமல் நடத்தி முடித்தது, நமது கர்ஸன்பிரபு அவர்களுக்கு இது விஷயத்தில் இருந்த ஊக்கத்தையும் இராஜ விசுவாசத்தையும் வெள்ளிடைமலைபோல விளக்கிக் காட்டக்கூடியதா யிருக்கின்றது. இவர் எடுத்தகாரியத்தை யாதொரு விக்கினமுமில்லாமல் முடித்தது பெருங் கீர்த்தியல்லவா? இவ்வித

பெருங் கீர்த்தியுடையவரை கல்கத்தாவில் பிரசுரமாகும் இந்தியன் மிரார் (Indian Miror) என்கிற பத்திரிகை அவதார புருடரென்று கூறியது உண்மையேயாகும். அரசர்களை விஷ்ணுமூர்த்தியின் அம்ஸம் பொருந்தியவர்கள் என்று புராணங்கள் கூறுவதை யோசித்தால், நமது லார்ட்கர்ஸன் பிரபுவும் நமது இந்தியாவிற்கு முதல் பிரதிநிதியாகையால் இவரை (Avatar) அவதாரமென்று கூறியது மிகவும்பொருத்த முடையதேயாகும். நமது லார்ட் கர்ஸன்பிரபு அவர்கள் அவதார புருடர்கள் செய்யும் அபாரமான சக்தி பொருந்திய காரியத்தை நமது 7–வது எட்வர்ட் மகாராஜா அவர்களின் மகுடாபிஷேக கொண்டாட்ட காரியத்தில் விளக்கிக் காட்டினார்கள்.

நிற்க, அத்தர்பார் நடந்த காலத்தில் நமது சென்னைக் கவர்னரவர்களும், ஆங்கு விஜயம் செய்திருந்து, நமது இராஜதானியிலிருந்து போயிருந்த மன்னர்களும், பெரிய மனிதர்களும், இறங்கியிருந்த விடங்களுக்கு அடிக்கடி சென்று, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை குறைவில்லாமல் செய்து வந்தார்கள். இதுவும் இவருடைய மிக்க பெருந்தன்மையைக் காட்டக்கூடியதாயிருக்கின்றது.

வாழ்க மாதுடனே கனங் கர்ஸனும்
வாழ்க மாதொடு மாம்தில் மகிபனும்
வாழ்க நன்கலெக் ஸாண்ட்ரின மாதுடன்
வாழ்க வேழாவ தெட்வர் டிறையுமே.

## சென்னையில் ரவிவர்மா சித்திரக்கூடம்.

சென்ற இரண்டு மாதங்களாக சித்திரம் எழுதுவதில் மிகச் சிறந்தவரும், ஆங்கிலேயராலும் நம்மவர்களாலும் அதிகமாக கௌரவிக்கப்பட்டவருமான ராஜா ரவிவர்மா அவர்கள் பேட்டர்ஸ் தோட்டத்தில் தமது சிப்பந்திகளுடன் வசித்து வருகிறார். இங்கு மாட்சிமைதங்கிய ஐகோர்டு ஜட்ஜிகளிலொருவரும் நியாய சட்ட விஷயத்தில் மகா நிபுணரென யாவராலும் மதிக்கப்பட்டுவரும் ம-ா-ா-ஸ்ரீ. சர். வி. பாஷியமய்யங்கார் அவர்களுடைய உருவப் படத்தைக்கொண்டு இம் மகான் வெகு நேர்த்தியாயும், எவர் இதைப் பார்த்தாலும் இங்கு பாஷியமய்யங்கார் வந்திருக்கிறாரெனச் சொல்லும்படியாயும் ஒரு பெரிய சித்திரப்படம் எழுதியிருக்கிறார்.

மேலும் அதே ஐகோர்ட்டு ஜட்ஜிகளில் மற்றொருவரும் தேசாபிமானமும், தயாளகுணமும், தருமசிந்தையுமுள்ள ம-ா-ா-ஸ்ரீ சர்-எஸ். சுப்பிரமணிய அய்யரவர்களைப் போலவே மிக அழகான ஒரு சித்திரப்படமும் இம்மகானால் எழுதப்பட் டிருக்கிறது.

நமது முனிசிபல் ஆபீஸில் பிரஸிடெண்டா யிருந்த கர்னல் மூர் படமும் வெகு நன்றாக எழுதப்பட் டிருக்கிறது. கடைசியாக ஒரு பிராமண மாது கோயிலுக்குச் சென்று சுவாமி தெரிசனம் செய்துவிட்டு வரும்பொழுது தன் கையில் தாம்பாளத்தில் வைத்திருந்த தேங்காய் பழம் முதலியவைக,



அலெக்ஸாண்ட்ரா மகாராணியாரவர்கள்.

ளில் சிலவற்றைப் பிச்சைக்காரர்களுக்கு கொடுக்கும் பாவனைபோல் யாவரும் அதிசயிக்கும்படியாயும், இவ்விதம் இவ்வுலகத்தில் சித்திரம் எழுதுவதில் மிகுந்த சாமர்த்திய முடையவர் இருக்கிறாரென நினைக்கும்படியாயும் எழுதப்பட் டிருக்கிறது.

இம்மகானையும், இவைகளையும் பார்க்க நாம் சென்று அவர் அநுமதியின்மேல் யாவற்றையும் பார்த்து மிகமகிழ்ந்தோம். இவருடைய படத்தை நமது பத்திரிகையில் பிரசுரிக்கலாமென முன்னமே நமக்கு உத்திரவளித்திருந்தது யாவருக்கும் தெரியும்; மேலும் இப்பொழுது அவரிடத்திலுள்ள சித்திரப் படத்தின் பொடகிராப்பு அல்லது உருவப் படமும் நமக்கு அனுப்புவதாகசொல்லி யிருக்கிறார்; இதனால் நமக்கு வெகு லாபமுண்டு. சித்திரப் படம்செய்ய வேண்டுமானால் அவர் எழுதிய படத்தைப்போல பொட்டகிராப் எடுத்து படம் எடுத்தபின்பு ஈயத்தில் படமாக செதுக்கசெய்யவேண்டும். இவ்வுதவி மகாராஜா அவர்கள் நமக்கு செய்ததற்காக நாம் அவருக்குநமது வந்தனத்தை அளிக்கின்றோம்.

நிற்க ஒவ்வொருவரும் இம் மகான் எழுதிய சித்திரப் படங்களையும் இவர் இங்கு வைத்திருக்கிற சித்திரக் கூடத்தையும் பார்க்கவேண்டிய தவசியம்.

# குடும்ப ஆரோக்கியம்.

*(An adaptation from "Health in Home" being a series of papers specially written for Indian women and contributed to the "Indian Ladies' Magazine" by Mrs. I. Brander.)*

தேக ஆரோக்கியம், மன ஆரோக்கியம் என இருவகையாகப் பகுக்கக்கூடிய, ஆரோக்கியம் என்பதில் எவ்வளவுபொருள்கள் அடங்கியிருக்கின்றன. நமது கொள்கையின்படி வாழ்க்கையின் மகிழ்ச்சியும், உள்ளக்கிளர்ச்சியும், ஊக்கமும், உற்சாகமும், நம்முள் உவகையும், உற்றவர்க்குதவியும் ஆகிய இவைபோன்ற பொருள்களெல்லாம் அவ்வொருபதத்தில் அடங்கியிருக்கின்றன.

"வருந்திநா ளலைவது வாழ்வினுக் கேயன்றிச்
சரிந்து பிரிந்து சாவதற்கன்று;
சுகமுற வாழ்க்கை நீடி யிகமுற
விரும்பி யிருந்தனம்; அது நிறை வுறவே
அரும்பு மெம்மனத் தாவலுள் ளோமே."

ஆயினும் நம்முட் பெரும்பாலாரும், அதனையிழந்து போகும்வரையதனை எவ்வளவு அற்பமாக நினைக்கிறோம்! எவ்வளவு அலட்சியம் செய்கிறோம்! அவ்வரும் பொருளை நம்மிலும் பிறரிலும் போற்றிக்காப்பாற்றி, அதன் பயனை நாமும் நமதன்பிற்கும் இன்பிற்கும் உரியபிறரும் நுகருமாறு செய்வதற்கு நாம் தேடும் வழிகள் எவ்வளவு போதாதவையாயிருக்கின்றன.

பிணியும் வாழ்வும் விதிவசத்தால் வருகின்றனவென்றும், பிணியையொழிக்கவாவது, வாழ்வை வருவிக்கவாவது நம்முடைய முயற்சி பயன்படாதென்றும் நம்முள் இருக்கும் ஒருவகை யுணர்ச்சியானது இதற்கு ஒரு காரணமாயிருக்கின்றது. ஆனால் இந்த உணர்ச்சியானது பூரண நம்பிக்கையாகமாட்டாதென்பது உண்மைதான், ஏனென்றால் சாதாரணமாக நோய் வந்ததனால் விதிவசமென்றெண்ணிச் சும்மா இருப்பாரை நாம் காண்பதில்லை. ஆனால் நாம் மேற்கூறிய உணர்ச்சி நம்முள் ஒருபுறம் ஊன்றியிருக்கின்றதென்பதை மட்டும் ஒருவரும் மறுக்க முடியாது. அதுவே ஜனங்களை அவர்கட்கின்றியமையாததாகிய ஆரோக்கிய விதிகளைக் கவனியாதிருக்கத் தூண்டுகின்றது. வானசாஸ்திரமும் கணிதசாஸ்திரமும் அவசியமாயிருந்தபோதிலும், அவையெல்லாவற்றிலும் முக்கியமானது ஆரோக்கிய வழிகளைப்போதிக்கும் சாஸ்திரமாகும். ஆனதுபற்றி மனிதர்கள் அதை அவசியம் கவனிக்கவேண்டியது. அதிலும் முக்கியமாய்ப்பெண்களாகிய நாம் அவ்விதிகளைக்கவனித்து அவற்றிற்கிணங்க நடக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் நம்முடைய குடும்பங்களின் நிலைமைக்கும், நம்கணவர்கள், நம்குழந்தைகள், நம்வேலையாட்கள் என்றிவர்களுடைய ஆரோக்கியத்திற்கும் நாமே உத்திரவாதிகளல்லவா? இங்கிலாண்டில் மிகவும் பேர்போன பாதிரியாராகிய கிங்ஸ்லி என்பவர் முப்பது வருஷங்களுக்குமுன் இவ்விஷயத்தைப்பற்றிப் பிரசங்கித்தபோது கீழ் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

சூரிய வெப்பத்தினாலும் வெளிச்சத்தினாலும் உண்டாகும் தேகாரோக்கிய விதிகளைச் சிறிதே அறிந்திருப்பார்களானால் நம்முடைய பெண்களிற் பலரும் தாங்கள் நாளுக்குநாள் இருண்ட அறைகளில் அடைத்துக் கிடப்பதனால் நிச்சயமாய்த் தமது ஆரோக்கியத்திற் கழிவையே தேடிக்கொள்கிறார்களென்றும், அவ்வளவிற் கவ்வளவு விஷத்தையே உட்கொண்டது போன்ற கெடுதி யடைகிறார்களென்றும் உணர்வார்கள். பெண்மணிகளே! வாட்டர்லூவென்னும் பேர்போன அகோர சண்டையில் மடிந்த ஜனத்தொகையைவிட இங்கிலாந்தில் வருஷாவருஷம், நாம் தடுத்துக்கொள்ளக் கூடிய சிறு வியாதிகளால் மடிந்தொழியும் ஜனத்தொகை அதிகமென்று உங்களுக்குத் தெரியுமா?

அப்படி மடிவாரிற் பெரும்பாலார் சிறு குழந்தைகளே என்பதை நீங்கள் அறிவீர்களா? அச்சிறுவரை ஆயிரக்கணக்காக வாரிக்கொண்டுபோகும் நோய்களிற் பெரும்பான்மையும் அச்சிறுவர்பால் அன்புமிகுந்து சீராட்டிப் பாராட்டிப் பயிற்றி வளர்த்து அம்மக்களுக்காகத் தம்மாருயிரையும் தரச் சித்தமாயிருக்கும் பெண்களாற் றடுத்துக் காக்கக் கூடியனவென்றும் அங்ஙனம் காப்பாற்றாமைக்கு அவர்களே உத்திரவாதிகளாவார்களென்பதும் நீங்கள் கவனித்தீர்களா? படுக்கை யறைகளில் போதுமான பரிசுத்த வாயு இல்லாததினால் எவ்வளவு வகைப்பட்ட வியாதிகள் உண்டாகின்றனவென்பதும், தேகதத்துவவிதிகளை அறியாதகாரணத்தினாலே பள்ளிச்சிறுவர்களுக்கு நேரும் வியாதிகள் எவ்வளவென்பதும் நீங்கள் கணக்கிட்டீர்களா? இவ்விஷயங்களையெல்லாங் கவனிக்குமிடத்து, தாய்மார்களாகவாயினும், சகோதரிகளாகவாயினும், செவிலிகளாகவாயினும், வேறெந்தவகையாகவாயினும், குழந்தைகளை-அதிலும் முக்கியமாய்ப் பெண் குழந்தைகளை-வளர்க்குந்தொழிலை மேற்கொண்டவர்கள் மானிடவாழ்க்கை விதிகளையும், தேகா



ரோக்கியவிதிகளையும் நன்குணர்ந்து, வாழ்க்கையையும் தேகசுகத்தையும் அழிவின்றிக் காப்பாற்றக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று நாம் சொல்வதும் மிகையாகுமோ?."

இதற்கும் இன்னும் இதுபோன்ற நன்மொழிகட்கும் இங்கிலந்து தேசத்துப்பெண்கள் உள்ளம் ஒருமித்துடன்பட்டு முழு மனதோடு உழைக்கத்தொடங்கினார்கள். சுகாதார விதிகளைப்பற்றிப் பற்பல பிரசங்கங்கள் செய்யப்பட்டன-அவற்றிற்குப் பெண்கள் திரள்திரளாகச் சென்று கேட்டு வந்தார்கள். தேகதத்துவ சாஸ்திரமும் சுகாதாரசாஸ்திரமும் அநேக பெண் பாடசாலைகளில் பாடமாகக் கற்பிக்கப்பட்டன-பெண்களின் சுகாதாரங்கம் எனவொரு சங்கமேற்படுத்தப்பட்டு இன்றைக்கும் நடந்துவருகின்றது. அதனாலுண்டான நன்மைக்களவில்லை. சுகாதாரத்தைப்பற்றிய அநேகம் புத்தகங்களும், குறைந்தது ஒரு வாராந்தரப் பத்திரிகையும் இப்பொ வெளிப்பட்டு உலாவுகின்றன, அவற்றைப் பலரும் படித்துப் பயன்பெறுகிறார்கள். இவையெல்லாங்காரணமாகச் சுகாதார விதிகள் எங்கும் பரவி, ஆங்கிலேய குடும்பங்களையெல்லாம் அணிபெறுவித்து விளக்கமடைகின்றன.

எனக்குத் தெரிந்தவரையில் தமது குழந்தைகளுக்கும் தம் குடும்பங்களிலுள்ள பிறர்க்கும் தம்மாலியன்ற நன்மைகளைச் செய்யவேண்டுமெனும் விருப்பத்தில் நமது இந்தியமாதர்கள் தம் ஆங்கிலேய சகோதரிகளைவிட ஒரு சிறிதும் குறைந்தவர்களல்லர் என்பதே என் அபிப்பிராயம். ஆகையினால் சுகாதாரத்தைப்பற்றிய சில குறிப்புகளும் இப்பத்திரிகாபிமானிகளுடைய மனதிற்கு தகுந்தவையாயிருக்குமென்று நம்பி இதனை எழுதத்துணிந்தேன்.

தேகாரோக்கியத்திற்கு முக்கியமாகவேண்டிய பொருள்களானவை நல்ல காற்றும், நல்ல உணவும், நல்ல தேகப்பயிற்சியும், நல்ல அமைதியும், பரிசுத்தமும் ஆகிய இவ்வைந்துமே என்பது நாம் எல்லாம் அறிந்த விஷயம்- ஆகையினால் நாம் இத்தலைப்பின் கீழ் இனிமாதந்தோறும், எழுதப்போகும் விஷயங்களில் இவ்வைந்து பொருள்கட்கும் தேகாரோக்கியத்திற்கும் உள்ள சம்பந்தத்தைக் கவனிப்போமாக-

**M. V. மீனாக்ஷிசுந்தர முதலியார் பி. ஏ.**

# உத்தரராம சரித்திரம்.

(குச, லவ வாக்கியம்).

225. கைத்தலங்கள் மிகநோக கண்ணில் புகை சூழ
காசாம்பூ மலர்மேனி கண்ணி மெத்த சிவக்க
226. இடையில் பட்டு தான் கசங்க எங்கும் அனல் வீச
ஏற்றமுள்ள மார்பின் மாலை வாடித் துவண்டசைய

227. பூசின கஸ்தூரி சாந்து புழுங்கி வேர்த்தரும்ப
புகழுடைய ரகு ராமர் ஓமம் பண்ணி இருந்தார்
228. கடைக் கண்ணல் சீதை தன்னை கண்டு மெத்த மகிழ்வர்
மந்திரமும் தப்பாதே மகமுனியோருரைப்பர்
229. அக்ஷதையைத் தானெடுத்து அனைவரிடங் கொடுத்து
உத்தரியத் தொங்கல் தலை ஒளி பெறவே விரித்தார்
230. ஆசீர்வாதங்கள் செய்து அடர்ந்த முனிதேவாள்
வேதத்தினலே யவாள் மிக வாழ்த்திப் போட்டார்
231. தலைப்பில் விழும் அக்ஷதையை தாசரதி வாங்கி
சிரசிலேதான் தரித்து சீதையற்கும் போட்டார்
232. தாய்மார்கள் கைகொடுத்து சரணமென்று பணிந்து
மாமனரும் ஜனகரிட மலரடியில் பணிந்தார்
233. பணிந்த சீதா ராகவரைப் பார்த்து மந்த ஜனகர்
பரிவுடனே தான் வாழ்த்தி பிரியத்துட னுரைப்பர்
234. (ராமா) என்தனங்கள் என் தரணி தாசி பரி கரியும்
அடங்கலும் என் ஜானகிக்கு அங்கமணி வைத்தேன்
235. (நீர்) ஆனபடி ஆண்டுகொள்ளும் அபிராமா என்று
ஸ்ரீ ராமர் கரந்தனிலே ஜனகர் தாரை வார்த்தார்
236 அனைவர்களும் உகந்திருக்க அருந்ததிமார் கூடி
அபிராமர்க்கும் சீதையர்க்கும் ஆரத்திக்காப்பெடுத்தார்
237. சீருடைய தம்பியரை ஸ்ரீ ராமர் அழைத்து
தாம்பூலம் பல தானம் சகலருக்கும் ஈயும்
238. ஈயுமென்று அண்ணர் சொல்ல இனிப்பரதர் உகந்து
தாம்பூலம் தக்ஷிணைகள் சகலருக்கும் கொடுத்தார்
239. காளமேகர் கலியாணம் காணவந்த பேர்க்கு
பாலடிசில் பருப்பமுது பதினயிரவர் சமைத்தார்
240. ராஜ அன்னம் சம்பா அன்னம் நலம் பெறவே சமைத்து
காய்கறி வகைகளிலே அனேகமது திருத்தி
241. பாகமான பருப்பமுதும் தாள தங்களுடனே
போன கறும்பொரிக் கறியும் பாயஸமும் அமைத்தார்
242. ஆமவடை போளியுடன் அதிரச வகையும்
தேன்குழல் மனோ அரமும் சிற்றுண்டிக ளுடனே
243. முப்பழமும் அப்பளமும் பரமான வகையும்
தேன் பாலும் சீனிகளும் சேர அவாள் அமைத்தார்
244. அழகாக இலைபோட்டு அமுர்த நீர் தெளித்து
பரிவுடனே அனுமாரும் பாத்திர சுத்திபண்ண
245. புத்துருக்கு நெய்யெடுத்து தொன்னை தனில் நிரப்பி
அத்தனை பேர் மன்னவர்க்கும் அன்னம் பரிமாறி
246. கோலமணி கெண்டியிலே கொண்டு கங்கா ஜலத்தை
ஸ்ரீ கிருஷ்ணனுக்கே பிரீதி என்று தத்தம் பண்ணினரே
247. எந்தன் மீது கிருபையாகவே வந்த மறையோர்காள்
உங்களுக்கு ஆனதுகள் ஒன்று மிங்கு இல்லை
248. சாறுடனே பச்சடியும் ரசசாதத்தைக் கூட்டி
(நீங்கள்) எந்தவிதமானலும் அமுது செய்யுமென்று
249. அன்புடனே உபசாரம் அபிராமர் உரைக்க
இன்பமுள்ள போஜனங்கள் எல்லாரும் செய்தார்
250. முப்புறத்தை எரித்ததொரு முக்கண்ணர் பிர்ம
கபாலரையை கையிலேந்தி பிச்சை பூந்த ஆண்டி
251. எப்பொழுதும் ஸ்துதிக்க வல்ல ஈஸ்வரனர் தாமும்
அற்புதமாம் ராகவரை பார்த்து மவர் உரைப்பர்



252. (இந்த) பதினலு உலகத்திற்கு அதிபதியும் நீரே
(உம்ம) அவதாரலீலைகளை ஆறறியப் போரார்
253. முப்பத்து முக்கோடி தேவர்களுக்காக
அசுரர்குலம் களையவென்று அவனியிலே உதித்தீர்
253. தசரதனர் இடர்தீர்த்த தீர ரகுராமா
கௌஸலையின் கலிதீர்த்த கல்யாண மூர்த்தி
254. தவமுனியின் யாகந்தனை தப்பாமற் காத்து
அருங்கல்லைப் பெண்ணக்கி அகலிசாபம் தீர்த்தீர்
255. மிதிலை தனிலே நடந்து வில்லெடுத்து முறித்து
சீதையரை மணம் புரிந்து சிந்தை மனம் மகிழ்ந்தீர்
256. மணி மகுடஞ் சூட்டவென்று மன்னவர் கோடிக்க
மாதாவும் கேட்ட வரம் மனமகிழ்ந்து கிரஹித்து
257. மரவுரியைத் தான்வாங்கி இடைதனிலே தரித்து
சீதையோடுந் தம்பியோடுஞ் சேர்ந்து வனம் நடந்தீர்
258. அடர்ந்த வனம் போம்போது அயோத்தி யுள்ளோர் புலம்ப
தம்பியருந் தாமிருப்பார் தளர வேண்டாமென்றீர்
259. பரதர் வந்து தான் கேட்டு பரிதாபத்துடனே
(என்) அபிராமா என்று சொல்லி அழுதுகொண்டு வரவே
260. தவியாதே என்று வந்த தம்பியரை அணைத்து
தந்தையார் விழுந்த துக்கம் தம்பியுடனுகி
261. செந்தாமரைத் திருவடியை ஸ்ரீ பரதர்க்கீந்து
தம்பியரை அனுப்பிவைத்த சர்வேச மூர்த்தி.

R. S. சுப்பலக்ஷ்மியம்மாள்.

## புத்தக வரவு.

### திக்கற்ற இரண்டு குழந்தைகள்

இப்போது தமிழ் பாஷைக்கு ஒரு நல்லகாலம் என்றே சொல்லலாம்; நாளுவிதமான நூதன தமிழ்ப் புத்தகங்கள் வெளிவந்துலாவுவதால். இப்பு த்தகங்களிற் சில முற்காலத்திய உரையாசிரியர்கள் நடையைப்பின்பற்றிக் கடினமான நடையில் எழுதப்பட்டும், சில சாதாரண கல்வி யுடையவரும் எளிதிலுணருமாறு சுலபமான நடையில் எழுதப்பட்டும் சில வழூக்கள் நிறைந்த நடையில் எழுதப்பட்டும் உள்ளன. இம்மூன்று வகுப்பினுள் நடு வகுப்பைச்சார்ந்தது நம்பார்வையிலிருக்கும் "திக்கற்ற இருகுழந்தைகள்" என்னும் புத்தகம். இக்காலத்திற்கு இந்நடையே மிகச் சிரேட்டமென்றே நாம் தைரியமாகக் கூறுவோம்.

இப்புத்தகத்தில் ஆசிரியர் முகவுரையிற் கூறுமாறு ஒரு உத்தமி யின் கதை கூறப்பட்டிருக்கின்றது. "கதையெனப்படுவது கழறுங்காலை பல்பிறலைப்பட்டபண்புடைத்தாகி" என்று கூறியலக்ஷணம் இக்கதையில் யாம் காணலாம். கதையின் சுருக்கத்தை இங்கு எழுதுவதென்றால் இயலாதகாரியம். ஒவ்வொருவரும் அதைப்படித்தே அறிந்துகொள்ள வேண்டியது. புத்தகம் 412 பக்கங்களையுடையது. எவ்விடத்தெடுத்தபோதி லும் மிக இனிமையாக இருக்கும் என்பதில் தடையில்லை. ஒருவர் அதை

ப்படிக்க ஆரம்பித்துவிட்டால் அதை முடித்துவிட்டுத்தான் வேறுவேலைபார்ப்பார். கதையின் முடிவு இன்னதுஎன்று அறியும் ஆவல் அதிகரிக்கின்றதாகலின். கதையில் ராதை, அலமு, என்னும் இரண்டு திக்கற்றகுழந்தைகள் எவ்வளவோ கஷ்டங்கட்குள்ளாகி-பின்பு சொந்த பிதாவைத்தெரிந்தபின் சுகப்படுகின்றன. இவ்விருவரையும் கொல்ல முயன்ற இவர்களின் சிற்றன்னையாகிய அமிருதவல்லி என்பவளை அழுக்காறு, அவா, வெகுளிமுதலியதீக்குணங்களை எடுத்துவந்த ஒரு உருவு என்னலாம். 'தன்வினை தன்னைச்சுடும்' என்று கடைசிகாலத்தில் அவள் கூறுமாதிரி அவள் செய்த ஒரு கொலையின் காரணமாக தானும் கொலையுண்டாள். தர்மபாடசாலையில் செலுவ அம்மாளை அவமானம் செய்ய ராதை செய்த உபாயமும், பாகீரதி வீட்டிற்கு ராதை, பாலலதைவேஷத்துடன் சென்றதும் அதினால் நேர்ந்த சப்பவங்களும் படிப்பவர் மனதை ரம்மிக்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. இதில் பண்டித நடேச சாஸ்திரியாரின் அழகான உருவப்படமிருக்கிறது.

புஸ்தகவரவு:—ஸ்ரீ சைதன்னியர் சரித்திரம், முடிசூட்டு இன்பங்கள், ஓதெல்லோ.

## சமாசாரக் குறிப்பு.

கல்கட்டாவிலுள்ள மிஸ்கோஷல் என்ற மாது காங்கிரஸ் சம்பந்தமாக பற்பல விளையாட்ல்களும் ஒவ்வொரு வருஷத்திலும் நடத்தப்பட்டால் நலமென அபிப்பிராயப்பட்டு ஒரு கடிதம் காங்கிரஸைச் சேர்ந்தவர்களுக்கு எழுதியிருக்கிறாராம்.

தென் ஆபிரிகாவில் மிஸ்டர் ஆல்பர்ட் பீட் என்பவர் மிகதனவானும், இவருக்கு, 200,000,000 சாவரனிருக்கிறதாம் 100-க்கு 5-வட்டி வீதம் ஒரு மணிக்கு 1100-சாவரன் வரும்படியாம்.

நமது பத்திரிகைக்கு ரூபம் எழுதுகிறவர்களி லொருவராகிய மிஸ்டர் E. சுப்பிரமணியம் இவ்வருஷம் பி. ஏ. பரிட்சையில் தேறியிருப்பதைப்பற்றி சந்தோஷப்படுகிறோம். இவ்வருஷம் பி. ஏ. பட்டத்தையும் அடைவார்.

நாம் வெளிஜில்லாக்களுக்கு டிசம்பர் ஜனவரி௴ சென்றிருந்தமையால் நமது பத்திரிகை வெளிவர தாமதமாயிற்று; புதியதாய்ச்சேர்ந்த கையொப்பநேயர்களும், பழைய கையொப்பநேயர்களும் நமது பத்திரிகையை விருத்திக்குக் கொண்டுவர முயலுவார்களென்று நம்புகிறோம்.

மைசூரிலிருந்து இரண்டு பிராமண மாதர்கள் பி. ஏ. பரிட்சைக்கு இங்கு வந்திருந்ததாக சென்ற பத்திரிகையில் எழுதியிருந்தோம். இப்பொழுது அவர்களிருவரும் அப்பரிட்சையில் தேறியிருக்கிறதைக் குறித்து மிகச் சந்தோஷப்படுகிறோம். நமது மாதர்கள் இவர்களைப் பின்பற்றி தங்கள் குமாரத்திகளைப் படிக்கவைக்க முயலுவார்களாக.

Printed at the Ripon Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

342
REGISTERED 12 AUG 1903 MADRAS

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. IV } Madras: February 1903. { No. 12.
புத்தகம் ௪. } சென்னபட்டணம், 1903 பிப்ரவரி௴ { இல. ௧௨.

## நமது மாதர்களுக்கு ஒரு புஸ்தகசாலை.

பம்பாய் முதலிய விடங்களில் மாதர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து அடிக்கடி சபை கூட்டி பற்பல விஷயங்களைப் பேசி வருகிறார்கள். சென்னையிலோ அவ்வித மொன்றுமில்லை. ஆனால் "லேடிஸ் பார்க்" என்கின்ற தோட்டமிருக்கிறது. இங்கு வருபவரேயில்லை. இது எப்பொழுது அப்பெயருக்குத் தக்கபடியிருக்குமோ அதுவும் தெரியவில்லை. நமது மாதர்களோ தனிமையாக உலாவுவதும் சபைகளுக்குச் செல்லுவதும் வழக்கமுமில்லை. இவர்கள் தங்கள் வீட்டு வேலைகளை முடித்தபின் நாலு ஐந்து பேர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து வீண்வம்புகளை விலைக்கு வாங்கி பேச்சுகள் பேசுகிறார்கள். படிக்கவேண்டுமானால் மனது வருகிறதில்லை. அவ்விதம் படிக்க யிஷ்டமிருப்பவர்களுக்குத் தேவையானபுஸ்தகங்கள்கிடைப்பதில்லை. கணவர்களும் முழுமனதுடன் புஸ்தகங்களை வாங்கிக்கொடுத்து ஓய்வுகாலத்தில் வீண்வம்பு பேச்சுகளைப் பேசாமல் படியுங்கள் என்று பல தடவை சொல்லிவந்தால் அவர்கள் அவ்விதம் செய்யமாட்டார்களா? சில மாதர்கள் அடிக்கடி தமிழ்ப்புத்தகங்கள், பேபர்கள் முதலியவைகளை தங்கள் சிநேகிதர்களிடத்திலிருந்து பெற்று வாசித்தபின் திரும்பி அனுப்பிவிடுகிறார்கள். வெகு சிலர் தங்கள் சிநேகிதர் வீட்டுக்குச்சென்று புஸ்தகங்களை வாங்கி ஆவலுடன் படித்து வருகிறார்கள். இவர்கள் அடிக்கடி யாதொரு கஷ்டமுமின்றி தமிழ்ப் புஸ்தகங்களைப்படிக்க ஒரு ஏற்பாடுசெய்ய வேண்டுமென்கிற எண்ணம் நமதுமனதில் வெகுநாளாக உதித்திருக்கிறது. இதை எவ்விதமாக நிறைவேற்றுவதென யோசித்துக்கொண்டிருந்தோம். இப்பொழுது நமது "மாதர் மனோரஞ்சினி" ஆபீஸில் சுமார் 50 புஸ்தகங்களிருக்கின்றன. சில தினப் பத்திரிகைகளும் வாரப் பத்திரிகைகளும் வருகின்றன. இவைகளை விரும்பும் மாதர்களுக்கு அனுப்ப உத்தேசித் திருக்கிறோம். அவர்கள் மாதர்மனோரஞ்சினி கையொப்பக்காரராய் யிருக்கவேண்டும் இப்புஸ்தகங்

களுக்காக பணமொன்றும் கொடுக்கவேண்டியதில்லை. வாரத்திற் கொரு முறை ஒரு புஸ்தகம் ஒருமாதுக்கு அனுப்பப்படும். இவ்வேற்பாடு ஜூலைமீ 15உ முதல் ஊர்ஜிதத்திற்கு வரும். இதில்சேர இஷ்டமுள்ள மாதர்களின் கணவர்கள் நமக்குத் தெரிவித்தால் தக்க ஏற்பாடு செய்யப்படும். இவ்விதம் நடந்தால் நமது மாதர்களுக்கு பற்பல புஸ்தகங்களைப் படிக்கவேண்டுமென னும் எண்ணம் உண்டாவதுடன், வீண் வம்புப் பேச்சுகளைப் பேசுவதும் ஒழியும். மேலும் இவர்கள் ஒருசமயம் ஒன்றாய்ச் சேர்ந்தால் சகோதரிகளை ப்போல அந்நியோன்னியமாயும் பக்ஷமாயும் ஒருவர் மற்றொருவரிடம் நடக் கமுயலும்படிசெய்யும். இவர்கள்இவ்விதம் கல்வியில்தேர்ச்சி யடையும்போது மற்றவர்களும் இவர்களைப் பின்பற்ற முயலுவார்கள். மேலும் இவர்கள் தங் கள் குழந்தைகளுக்கும் பல புஸ்தகங்களைப் படிக்கும்படி போதிப்பார்கள். இவ்விஷயங்களையெல்லாம் கணவர் கண்டுகளிக்கக்கூடும். தங்கள் மனைவிமா ர்களுக்கு இன்னுமதிகமாக போதிக்க கணவர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் இது விளைவிக்கும்.

## ஐகமத்திய மில்லாமல் வந்தகேடு.

நமது பரதகண்டத்தில் ஆதிகாலம் பற்றி அநேக துரைத்தனர்களுக்கு அசைத்துக் கொடுத்துக்கொண்டு முதலில் வைதீகமென்றும், பிறகு பிராம மமென்றும் இப்பால் ஹிந்து சம்பந்தமென்றும் கருதப்படுகிற நம் கொள் கையின் பிரகாரம் நாம் அனுசரிக்கும் ஆசாரங்கள் முதலில் ஆரியர்களால் இயற்றப்பட்டுப் பிறகு பௌத்தர் மகம்மதீயர்களால்மாற்றுவிக்கப் பட்டுள் ளவைகள். இவைகளுள் மகம்மதீயர் மதத்தை ஸ்தாபித்த மகம்மது இற ந்து சுமார் 1200 வருஷங்களுக்கு மேலாயின. மகம்மதீயர்கள் இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தபோது உள்ளூரில் ஆண்டுகொண்டிருந்த ஆரியர் கள் மனுவின் கோட்பாட்டின் பிரகாரம் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத் திரர்கள் என்று பிரிவினையடைந் திருந்தார்கள். இவர்களில் நாடுகளுக்கு அரசர்களாகவும் வேறு இன்னும் சூரர்களாகவும் அத்தியந்த புஜபல பராக் கிரமத்துடன் விளங்கினவர்கள் க்ஷத்திரியர்கள். ஆயினும் மூன்று மகா சமு த்திரங்களையும்வானத்தை அளாவிநிற்கும் மலைத்தொடர்களையும் எல்லைகளா ய்க்கொண்டு ஒரு கோட்டைபோல் இவைகளால் சுபாவத்திலேயே ரக்ஷிக் கப்பட்டுள்ள நம்வளம்பெற்ற நாட்டை இந்த க்ஷத்திரியர்கள் ஒரு மித்து ஆண்டதாகத்தெரியயில்லை. அகம் மிகுந்தோர்க்கு தங்கரில்லை என்ற படி தான் தானே பெரியோன், பிறரெல்லாம் பதர் என்றும் தங்கள் சுதேச அரசர்களுடனேயே மாச்சரியம் கொண்டார்கள். "வயிறும் உறுப்புகளும்"



என்கின்ற போதகப் பாடத்தின் பொருளை நிரூபிக்க இவர்களை உதாரண மானார்கள். இது விஷயம் நமக்குச் சரித்திரங்களால் தெரிகிறது.

மகம்மதியர்களுள் நம் தேசத்தில் சுமார் 730 வருஷங்களுக்குமுன் படையெடுத்து வந்தவர் மகம்மதுகோரி என்பவர். இவர் படையெடுத்து வந்த நாளில் கானோஜ் தேசத்து அரசர் இந்துஸ்தானத்தில் சக்கிரவர்த்தி யாக ஆண்டுகொண்டிருந்தார். இவருக்கு எல்லா அரசர்களும் கப்பம் கட் டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் டில்லி தேசத்தரசர் மாத்திரம் கப்பம் கட்ட மறுத்தார். இவர் இளைஞர் கானோஜ் சக்கிரவர்த்திக்கு ஒரு குமாரி உண்டு. இந்த இளைஞரின் கலியாணத்தின் பொருட்டு இத் தேசத்தார் களும் வேறுவேறாக வரந்தேடிப் போனார்கள். டில்லி அரசன் தனக்கெ ன்று பார்த்துவந்த எந்த வதுவையும் ஏதாவது கோணல்சொல்லி நிராகரி த்து வந்ததினால் தன் பிரதான மந்திரிகளும் மற்ற பெரியோர்களும் தகு ந்த பெண்களை வீணில் சல்லடைபோட்டுச் சலித்துப்பார்த்துச் சலித்துப் போய் விட்டார்கள்; ஆனால் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததெ ன்று தேடிப்போனவர்களுக்கெல்லாம் புலப்படாத பெண் சிரோமணி தன்னையே மணம்புரிய நிச்சயித்த டில்லி அரசனை நேரே கண்டுவிட்டாள். அதெப்படி என்றால், அந்த பெண்மணி தன் ஜனங்களுடன் ஒரு காலத்தில் காட்டுமார்க்கமாய்ப் பிரயாணம் செய்து போகுங்கால் பின்தங்கிப் பிரிந்து போக நேரிட்டது. அப்பொழுது அக்காட்டுக்கு வேட்டைக்கு தற்செய லாக வந்த டில்லி அரசன், ஏதோ விதிவசமாய் திடீரென்று தன்னை எதிர் த்து வந்து தன்னை மணம்புரியவோ அல்லது தன்மேல் அணிந்திருந்த ஆபர ணங்களை அபகரிக்கவோ யத்தனித்துத் தன்னைத்தூக்கிப்போன ஒரு கொடு ர மஹாபாவியினின்று இவளை விடுவித்தான். "பழம் நழுவிப் பாலில் விழுந் தது போலாயிற்று, ஒருவரை யொருவர் நேசிக்கத் தலைப்பட்டார்கள். ஒருவரை யொருவர் மணம்புரிகிற தென்று மனதில் ஒருவாறு நிச்சயம் கொண்டார்கள்.

இவ்வாறு மிருக வேட்டைக்கு வந்தவன் அழகும் தீரமுமான அம்புக ளால் ஒரு பெண் இரத்தினத்தை எய்து கவர்ந்தான். டில்லி அரசன் டில் லிக்கும் இராஜ குமாரி கானோஜூக்கும் போய்விட்டார்கள். இவர்கள் பிரிந்திருந்ததினால் இவர்களுக்குள்ளுண்டான நேசமென்னும் தீ நெய்விட் டெறிந்ததுபோல் நாளுக்கு நாள் நன்று பெருகிப் பிறகு துக்கத்தை விளை விக்க ஆரம்பிக்கும்போ லிருந்தது. டில்லி அரசன் இன்னது செய்வது என்று துணியாமல் தயங்கினான். கானோஜ் இராஜகுமாரியோ நாளுக்கு நாள் அகமெலிந்தாலும் அழகு மிகுத்துவந்தாள். டில்லி இராஜன் தன் கலியாண விஷயமாய் இப்பெண்ணின் பிதாவை நேரேகேட்க ஒருதடங்கல் இருந்தது. பெண்ணை கேட்கவந்தால் கப்பம் கட்டவேணுமாம். பெண்வீட்டுக்காரன் எப்பொழுதும் சற்று, என்னமாயிருந்தாலும் கொஞ்சம் தாழ்மைதான். நம்

அனுஷ்டானம் இதுவே. இப்படி இருக்க, பெண் வீட்டுக்காரன் பிள்ளை தனக்கு அடிமையாகவேணும் என்று கேழ்ப்பதுண்டோ. இது நவு ரவமாகுமோ? பெண்ணைக் கொடுத்தாயோ கண்ணைக் கொடுத்தாயோ என்ற பழமொழிப்படி, பெண்ணை மணந்தவன் புதல்வனுக்குச் சரியாய் கௌரவப்படுத்த வேண்டாமா? ஏதோ அவனுக்கு இறுமாப்பு மீறும்; பிறர் நாலைச் சொல்லுவார்கள் இராச்சிய தந்திரத்திற்கு இல்லாவிட்டால் அழகில்லை யென்றால், இராச்சிய தந்திரம் செய்கிறவன் சாதாரண மானிடநேசத்தை மாய்த்துவிடலாமா? மேலும் இருதரத்தாரும் க்ஷத்திரியர்தானே? க்ஷத்திரியரும் அன்னியோந்யப் படாமல் போனால் வேறு தரத்தார்கள் எவ்வாறு ஒருமிக்கஇடமுண்டு? இப்படி ஆங்கிலேய மஹாகவி ஷேக்ஸ்பியர் இயற்றியிருக்கிற ரோமியோ ஜூலியட் நாடகத்தில் உள்ளபடியே பெண்ணின் தகப்பன் மனமும், பெண்ணின் மனமும் வரன்விஷயத்தில் மாறுபட்டிருந்தது. கடைசியாக சுயம்வரம் ஏற்படுத்தினதினால் தான் ஸதா தியானித்துக் கொண்டிருக்கும்புருஷனை ஒருக்கால்அடையலாமோஎன்றுஒருவாறு ஸமாதானப் படுத்திக்கொண்டாள். ஆயினும் தன் தகப்பனை சக்கிரவர்த்தியாருக்கு தன் ஆசைகண்மணியாகிய தனக்குஉயிர்கொடுத்த சுந்திரபுருஷன் மேல் அவர் அடங்கா அரசென்ற வைரமுண்டென்று இவளுக்குத் தெரியுமாகையால் எங்கே அவர் வாராமலிருப்பாரோ என்று கிலேச முள்ளவளானாள். மேலும் சுயம் வரதினத்தில் டில்லி இராஜகுமாரன் வந்ததாகத்தெரியவில்லை. தேடிப்போன தன்னுடைய உண்மையான தோழிகளெல்லாரும் காணேன் காணேன் என்றே சொல்லிவிட்டார்கள். இது காரணம்பற்றியே மஹாராஜா கடுங்கோபம் கொண்டு டில்லி அரசனை வெகு மரியாதையாக அவமரியாதை செய்ததெப்படி யென்றால்:—தங்கத்தினாலே அவர்போல் சரியாக ஒரு விக்கிரகம் வார்ப்பித்து அதற்கு உத்தமமான ஆடையாபரணங்கள் பூட்டி அந்த உன்னத விக்கிரகத்தை சுயம் வர சபைக்கு உள்வாசல் படியண்டை நிறுத்திவைத்தார்!

ஆலாசிய மணியடித்தது. நிருபங்களுக்கு கீழ்ப்படிந்து வராத ஒரே அரசனைத் தவிர எல்லாரும் தயாரானார்கள். எல்லாரும் தங்கள் அழகை கவனிப்பவர்களும் பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து தன்னையும் பார்த்துக்கொண்டு திடமடைகிறவர்களும் தான் தான் பூமாலையை வகிக்கும் பதவிக்குப் பாத்திரவான் என்றும் கர்வங் கொள்ளுகிறவர்களுமாக ஒவ்வொருவரும் வாசல் படியையே பார்த்துக்கொண்டு கொட்டாத கண்களுடன் இருக்கும்போது கல் கல் கிண் கிண் என்று சிற்றொலிகள் தொனிக்க, தான் வரும் வழியெல்லாம் பரிமளம் பரவ மின்னொளிபோல் மெலிந்து மகா காந்திபெற்ற இராஜ குமாரி தோழிகளுடன் சபையை அடைந்து அம்மின்னலைப்போலவே மறு நிமிஷம் மறைந்தாள். ஒரே கூட்டமாகக் கூடிற்று. பலர் கத்திகளையும் பாலாக்களையும் உருவினார்கள். "இராஜ



குமாரியை யார் தூக்கிக்கொண்டு போகிறது?" யார் தூக்கிக்கொண்டு
போகிறது?" "கூ கூ!!" என்று கூச்சலாயிற்று "அதோ இறக்கையுள்ளது
போல் பறந்துபோகிற கருப்புக் குதிரை டில்லிதேசத்தசனது போலிருக்கி
றதே. அவன் இங்கே வரவேயில்லையே! அவனைத்தான் அவமானம் செய்
தாச்சுதே!" இப்படி பிரஸ்தாபம் ஆச்சுது! ஒரே அலங்கோலமாக யிருந்
தது. மஹாராஜா பொறுக்கக்கூடாத கோபங்கொண்டு "நான் அவமானம்
செய்வதற்காக யத்தனித்து வாசல்படியில் நிறுத்தின தங்கச்சிலைக்கே
மாலை யிட்டாளல்லவா! ஆ! அவள் கொடியவள்! பெற்று வளர்த்துப் பல
பாடுபட்டுப் பயனென்ன? தலைந்தது. இனி யெப்படி போனாலென்ன,
வென்று தன் உயிரையே வெறுத்து பெருமூச்சுவிட்டு ஒரு பக்கம் கோபத்
தினால் உதடு துடித்து உடல்பதறி நின்றுகொண் டிருக்கும்போது வாய்
நுரை ததும்ப ஓடிவந்த குதிரையின் மீதுள்ள வீரன் ஒருவன் இராஜகுமாரி
யை டில்லி அரசன் தூக்கிகொண்டு போய்விட்டான் என்று பிதற்றினான்.
என்னசெய்வது?.

இராஜகுமாரி
அமளி அடங்கிற்று. சுயம்வர சபைக்குள் வந்த
சபைக்குள் வீற்றிருந்த ஒரு அரசரையும் தலையெடுத்துப் பார்க்கவேயில்லை.
வாசல்படியிலிருந்த டில்லி இராஜா பிரதிமையை கண்டமாத்திரத்தில் அங்
கேயே அதின்மேல் மாலையிட்டுத் திரும்பினதாகத் தெரிந்தது. டில்லி
அரசனும் அண்டையிலேயே ஒளிந்திருந்தான்போலும். டில்லி அரசனு
டைய மேற்கூறிய நடத்தை காஞேஜ் மஹாராஜாவுக்கு நிரம்ப அவமா
னத்தை விளைவிக்கத் தக்கதல்லவா? ஆகவே, காஞேஜ் அரசர் பெரும்படை
யெடுத்து டில்லிக்குச்சென்று தன்பெண்ணை பலாத்காரமாய் தூக்கிப்போன
விநயமின்மைக்காக அந்த இராஜாவைத் தண்டித்து தன்பெண்ணை மீட்டுக்
கொண்டு வரவேணும் என்று நிச்சயித்தான். சண்டையும் நடந்தது.
டில்லி அரசர் பிரசண்ட யுத்தம் செய்து போர்க்களத்திலேயே கத்தியும்
கையுமாய்க் காலஞ்சென்று போனார். ஆனால் காஞேஜ் இராஜகுமாரி
தன் பிதாவுடன் திரும்பிப்போக மறுதளித்து தன் பிராணநாதன் இறந்த
பின்னர் தன் தனிவாழ்வு ஒரு பெருவாழ்வா என்று மனந்துணிந்து இறந்த
டில்லி அரசனுக்கு ஸம்ஸ்கார மாகும்போது தானும் உடன்கட்டையேறி
ஸதிலோகம் சேர்ந்தாள்.

என். சுவாமிநாத ஐயர்.

# நமது முதல் யாத்திரை.

நாம் வெகு நாளாக வெளி ஜில்லாக்களுக்குச் செல்ல வேண்டுமென்று
எண்ணியிருந்தோம். ஒவ்வொரு தடவையும் சரிப்படாமல்
போயிற்று; தெய்வாதீனமாய் சென்ற டிசம்பர்மீ 13௳ சென்
னையைவிட்டுப் புறப்பட்டு கூடலூர் வந்துசேர்ந்தோம். இங்கு
நமது நண்பர் மிஸ்டர் ரங்கசுவாமி ஐயங்காரவர்கள் வெகு
மரியாதை செய்ததுடன் தமது வீட்டிலேயே நம்மைத் தங்கி
யிருக்கும்படி செய்தார். இங்கு அநேசர் நமது பத்திரிகையை விருத்திக்
குக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னதுடன் கையொப்பமும் செய்
தார்கள். பின்பு இவ்வூரைப் பார்வையிட்டோம். இங்கு ஒரு பர்லாங்கு
தூரத்தில் ஒரு நதி யிருக்கிறது. பார்க்க ரமணீகரமாயும் நாலாபக்கமும்
அடர்ந்த செடிகளு மிருக்கின்றன. இந்நதியில் கொஞ்சம் ஜலம் ஓடிக்
கொண்டிருந்தது; இவ்வூரில் ஒரு பெரிய ஆலயமிருக்கிறது. இதுவும் வெகு
அழகாக கட்டப்பட்டிருக்கிறது. இங்கு சேன்ட் டேவிட் என்ற பழைய
கோட்டையின் இடத்தைப் பார்த்தோம் இங்கு இடிந்த சுவர்கள் தென்படு
கின்றன. சமீபத்தில் ஜலம் தங்கியிருக்கின்றன, பின்பு சமுத்திரத்திற்குச்
சென்று அங்கு கொஞ்சநேர மிருந்துவிட்டு வீடுவந்து சேர்ந்தோம். இவ்
வூரிலுள்ள நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு திவ்விய க்ஷேத்திரமா
கிய சிதம்பரத்திற்குச் சென்று அங்கு பிரபல வக்கீல்களி லொருவராகிய
மிஸ்டர் வராஹாசாரியாரைக் கண்டோம். அவர் உடனே நம்மை தமது
கிரகத்திற்கு கூட்டிக்கொண்டுபோய் அங்கேயே யிருக்கும்படி சொன்னார்.
நாம் வெகு சந்தோஷத்துடன் சம்மதித்து அங்கு சாமான்களை வைத்து
சில கனவான்களைப் பார்த்தோம். அவர்களும் நமது பத்திரிகைக்கு
கையொப்பக்காரர்களாக விருக்க சம்மதித்தார்கள். இராத்திரியான படி
யால் வீடுசென்று போஜனத்தை முடித்துக்கொண்டு கோயிலுக்குச்சென்று
சுவாமி தரிசனம் செய்துவிட்டு வந்தோம். மறுநாள் காலையில் நமது நண்பர்
திவ்யமான காப்பி அளித்ததை பானம் பண்ணிவிட்டு வெளிச்சென்று
இன்னும் சிலரைக்கண்டு அவர்களையும் நமது கையொப்பக்காரர்களாகச்
செய்துகொண்டோம். இங்கு கும்பகோணம் காலேஜ் சம்ஸ்கிருத வித்து
வான் ம-ா-ா-ஸ்ரீ சதாவதானம் ஸ்ரீனிவாசாசாரியா ரவர்கள் பாபம் புண்
ணியமென்று விஷயத்தைக் குறித்து ஒரு உபந்நியாசம் செய்தார். பிரசங்
கத்தைக் கேட்டு மகிழ்ந்தோம்; அவ்வித்துவானும் நமது பத்திரிகைக்கு
நிரூபம் எழுதுவதாக வாக்களித்தார். இங்கு மிஸ்டர் சுவாமிநாத அய்யர்



நமக்கு வெகு மரியாதைசெய்து விருந்தளித்தார். இவருக்கும் நமது நண்
பர் மிஸ்டர் வராஹாசாரியாருக்கும் நமது வந்தனத்தை யளித்து விடை
பெற்றுக்கொண்டு சீகாழி க்ஷேத்திரத்திற்குச் சென்று பிரபல வக்கீலா
யுள்ள மிஸ்டர் சொக்கலிங்க முதலியாரவர்கள் பங்களாவில் நமது சாமானை
வைத்துவிட்டு சாயங்காலமானபடியால் கோயிலுக்குச் சென்று சுவாமி
தரிசனம் செய்துவிட்டு போஜனமுண்டபின் பங்களாவிற்கு வந்து முதலியா
ரவர்களுடன் கொஞ்சநேரம் சில விஷயங்கள் பேசிவிட்டு நித்திரைக்குச்
சென்றோம். முதலியாரவர்கள் சைவர், தமிழபிமானமுள்ளவர், நமது பெண்
கள் கற்றுத் தேறவேண்டுமென்ற எண்ணமுடையவர். பெண்களுக்கு தக்க
புஸ்தகங்கள் எழுதப்பட வேண்டுமென்றும், புத்தி புகட்டக்கூடியதாய் மிரு
க்கவேண்டுமென்று மபிப்பிராயப்பட்டார். இவ்விதமல்லவோ விருக்கவேண்
டும் கற்றறிந்த கனவான்கள்? பின்பு மறுநாள் காலையில் சிலரைப் பார்த்து
அவர்களை நமது கையொப்பக் காரர்களாகச் சேர்த்துக்கொண்டபின் முத
லியாரிடம் விடை பெற்றுக்கொண்டு திருச்சி சென்று இராத்திரி பொழுதை
இங்கு கழித்துவிட்டு காலையில் வண்டி அமர்த்திக்கொண்டு ஸ்ரீரங்கத்தி
லுள்ள எமது நண்பராகிய மிஸ்டர் ராஜாராம ராயர் கிரகத்திற்குச் சென்
றோம்; அவர் நம்மைக் கண்டதும் வெகு குதூகலத்துடன் க்ஷேம சமாசா
ரத்தை விசாரித்துவிட்டு உடனே காபி முதலியவைகளைத் தயார்செய்து
நமக்கு அளித்தார். அவருடன் சில நண்பர்கள் இருந்தார்கள்; காபி முத
லியவைகளை புசித்தபின் நமதுபத்திரிகைக்கு அடிக்கடி நிருபம் எழுதிவரும்
மிஸ்டர் T. A. இராமலிங்கம் அவர்கள் அங்குவந்தார்; அவரைக் கண்டதும்
இருவரும் மிக மகிழ்ந்து ஒருவருக்கொருவர் கைகொடுத்து கொஞ்சநேரம்
வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தோம். பின்பு மிஸ்டர் இராமலிங்கம்
அவர்கள் மதுரைக்குச் சென்று அங்கிருந்து இராமேஸ்வரம் செல்லுவ
தாகச் சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றார். நாமும் நாழிகை வெகு
நேரமானபடியால் ஸ்நாநம் செய்துவிட்டு போஜனத்திற்குச் சென்றோம்.
இரண்டு கரி, இரண்டு கூட்டுவகைகள், முதல்தரமான பச்சிடிகள், கோஸ்
மரி பாயசமுள்பட திவ்ய போஜனம் தயாராயிருந்தது. மிஸ்டர் ராஜாராம்
ராயரவர்களும் நாமும் உட்கார்ந்து பல பேச்சுகளைப் பேசிக்கொண்டு
போஜனமுண்டபின் தாம்பூலம் அருந்தலானோம். பிறகு நமது நண்பர்க
ளுக்கு சில கடிதங்களை எழுதிவிட்டு கொஞ்சநேரம் இளைப்பாறியபின், ராய
ருடன் நாமும் மிஸ்டர் T. K. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் கிரகத்திற்
குச் சென்று அவரைக் கண்டோம். அவரும் நமது க்ஷேம சமாசாரத்தை
விசாரித்தபின் பட்டாபிஷேக விஷயமாக சில சங்கதிகளைப் பேசினோம்;
பின்பு சாயங்காலம் பிள்ளைகள் பட்டாபிஷேகத்திற்காக ஸ்பெஷலாக விளை
யாடிக்கொண்டிருந்த இடத்திற்குச் சென்று அவர்களையும் அவர்கள் செய்த
ஆடல்களையும் கண்டுகளித்தோம். பின்பு ம-ா-ா-ஸ்ரீ வாசுதேவ ஐயங்கா

ரவர்களைச் சந்திக்கவே எல்லாரும் சேர்ந்து அவருடைய அழகானவும் விசாலமானவுமான தோட்டத்திற்குச் சென்றோம். அங்கு இரண்டு மூன்று பெரிய பந்தல்கள் போடப்பட்டிருந்தன; இரண்டு மூன்று அழகான கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. பந்தல்களுக்கு வேலைக்காரர்கள் அலங்காரம் செய்துகொண்டிருந்தார்கள்; இவைகள் பட்டாபிஷேகத்திற்காவென நாம் கேட்கவே மிஸ்டர் வாசுதேவ ஐயங்காரவர்கள் ஆம் நீங்களும் அவசியம் இங்கு வரவேண்டுமென்றார். இவர் அங்கு அன்றுசிறப்பான தோட்டவிருந்து அளித்தாராம். அநேக கனவான்கள் திரளாகவந்திருந்தார்களாம். கலெக்டர் முதலிய உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தார்களாம். சங்கீதம் முதலியவைகளும் வெகுசிறப்பாக நடந்ததாம். ராஜவிசுவாசத்துடன் மனப்பூரணமாய் இவர் இவைகளையெல்லாம் செய்தார் என்பதற்குத் தடையில்லை. இவர் மகா தயாளு தருமசிந்தனை யுள்ளவர் தெய்வபக்தியிற் முதிர்ந்தவர். ஜனங்களுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்ற எண்ணமே இவர் மனதில் குடிகொண்டிருக்கும். இவ்வித குணங்கள் வாய்ந்தவருடைய தோட்ட விருந்திற்கு நாம்போக முடியாமலிருந்ததற்காக மிக வருந்தினோம். நம்மை அவர் மன்னிப்பாராக. அவரிடம் விடைபெற்று வீடுசென்று இராப்போஜனமுண்டு மிஸ்டர் இராஜாராம் ராயரிடம் விடைபெற்றுக்கொண்டு மதுரை மாநகரம் சேர்ந்தோம். அங்கு மிஸ்டர் பி. நாராயண ஐயரவர்களும் மிஸ்டர் S. சங்கரய்யரவர்களு மில்லாமையால் தியாசாபிகல் ஸோசைடியில் நமது சாமான்களை வைத்துவிட்டு காப்பி ஒட்டலுக்குச் சென்று காப்பி உண்டபின் வெளிச்சென்று; சில கனவான்களைக் கண்டோம். சிலர் பெண்களுக்கு படிப்பு வேண்டுமென்றார்கள். வேறு சிலர் பொதுவாய் சகல விஷயங்களையும் பெண்களறிய வேண்டுமென்றார்கள். இன்னும் சிலர் எனக்குபத்திரிகை வேண்டாமென்றார்கள். உடனே நாம் திகிலடைந்து "இதென்ன விபரிதமாக விருக்கிறதே! இன்று சாயங்காலமே ரயிலேறி திருநெல்வேலி செல்வோம்" எனத் தீர்மானித்துவிட்டு ஒட்டலுக்குச் சென்று ஸ்நானஞ்செய்துவிட்டு போஜனமுண்டு, உடனே இன்னும் சிலரைப் பார்ப்போம் என்று எண்ணி வெளிச்சென்றோம். அப்பொழுது ஒருவரைக் கண்டு ஐயா நான் பட்டணம் இந்த மாதர்மனோரஞ்சனிக்கு அதிபன் இப்பத்திரிகைக்கு தாங்களும் ஒரு கைகொப்பநேயராக சேருவீராவென கேட்கவே அவர் முகமலர்ச்சியுடன் எனது பெயரை எழுதிக்கொள்ளும் இன்னும் ஆறு கனவான்கள் பெயரையும் எடுத்துக்கொள்ளும் என்று மிக பிரியத்துடன் சொல்லவே நாம் கொஞ்சம் தைரியமடைந்து இன்னும் சிலரைப் பார்த்தோம். அவர்களும் கையொப்பம் செய்தார்கள். இன்னும் கொஞ்சதூரம் சென்றபோது நமது நண்பராகிய மிஸ்டர் ராஜாவையரைக் கண்டோம். அவர் நம்மை தமது கிரகத்திற்கு உடனே கூட்டிக்கொண்டுபோய் நமக்கு விருந்தும் செய்துவித்தார். பின்பு மறுநாள் பட்டாபிஷேக தினமாகையால் நாம்



அங்கு தங்கவேண்டியிருந்தது. பட்டாபிஷேக வைபவம் வெகு விமரிசையாக நடந்தது. தர்பார் திருமலைநாய்க்கன் ஆலில் சுமார் 3-மணிக்குகூடிற்று. அப்பொழுது கலக்டர், ஜமீன்தார்கள் இன்னும் மற்ற கனவான்களெல்லாம் வந்தார்கள். உடனே கலக்டர் ஆங்கிலத்தில் நமது மகாராஜா எ-வது எட்வர்டின் பட்டாபிஷேகத்தைப்பற்றி பேசினார். உடனே மிஸ்டர் சுதர்சன முதலியாரவர்கள் தமிழில் மொழிபெயர்த்துச்சொன்னார். பின்பு 101-குண்டுகள் போடப்பட்டன. மதுரையில் டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்களாயிருந்து பொது ஜனங்களுக்கு நன்மை செய்த சில ஜமீன்தாரர்களுக்கும், கனவான்களுக்கும் சர்டிபிகேட் கொடுக்கப்பட்டது. பூமாலை புஷ்பச்செண்டு யாவருக்கும் அளித்தபின் தர்பார் கலைந்தது. சாயங்காலம் ஊர்கோலம் வெகுவிமரிசையாக நடந்தது. மறுநாள் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் சிற்றுண்டி முதலியவைகள் கொடுக்கப்பட்டன. அப்பொழுது காட்சிபார்க்க வெகு அழகாக விருந்தது. இவ்வளவு ஒழுங்காக இந்த தர்பாரை விமரிசையுடன் நடத்தியது கலெக்டரும், மிஸ்டர் சுதர்சன முதலியாரும், மிஸ்டர் வக்கீல் எஸ். நாராயணசுவாமி ஐயரவர்களுமே. மறுநாள் மகாராஜா தினகரசுவாமிதேவர் அவர்களைக்கண்டோம், அவர்நமதுபத்திரிகைக்கு போஷகராக விருப்பதாக வாக்களித்தார். அவருக்கு நமது வந்தனத்தை யளித்தபின் ராஜா பாண்டிதுரை தேவரவர்களைக் கண்டோம். தமிழ் சங்கத்தையும், செந்தமிழ் அச்சாபீஸையும், கண்டு மிகச் சந்தோஷப்பட்டோம். இவரும் நமது பத்திரிகைக்கு போஷகராகவிருக்க சம்மதித்தார். இவருக்கும் நமது வந்தனத்தை அளித்துவிட்டு நமக்கு மிக உதவிபுரிந்த மிஸ்டர் ராஜாவை யரவர்களுக்கும் மிஸ்டர் சுப்பய்ய ரவர்களுக்கும் நமது வந்தனத்தை யளித்து அவர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு திருநெல்வேலி சென்று மிஸ்டர் K. R. குருசுவாமி ஐயரவர்கள் உதவியால் அங்கு தாமதித்தோம். இங்கு எங்கு பார்த்தாலும் ரஸ்தாக்கள் பட்டணம் ரஸ்தாவைவிட ஒழுங்காயும் அழகாயும் காணப்பட்டன, சோலைகளோ அதிகம், பனைமரத் தோப்புகளோ கணக்கில்லை, வயல்களெல்லாம் பச்சையாயும்பார்க்க வெகு அழகாயுமிருந்தன. தாம்பிரபாணி நதியில் ஒருதடவை ஸ்நாநம் செய்தவருக்கு எப்பொழுதும் அங்கேயே வாசம்செய்ய வேண்டுமென்று தோன்றும். அந்த ஜலம் அவ்வளவு நன்றாக யிருந்தது. சோடக்கர் என்கின்ற பெண்கள் படிக்கும் காலேஜியைப் போய்ப்பார்த்தோம். மிஸ் அஸ்குவித் என்கின்ற ஐரோப்பிய மாது நமக்கு யாவற்றையும் காண்பித்தார்கள். குருட்டு பிள்ளைகளும், பெண்களும் படிப்பதையும் நமக்கு காண்பித்து நம்மையே அவர்களைப் பரீக்ஷிக்கும்படி சொன்னார்கள். நாம் அவ்விதம் செய்ததில் சாதாரண பாடசாலைப் பெண்கள் பிள்ளைகள் கணக்குப் போடுவதைவிட அதிக சீக்கிரத்தில் கணக்குகளைப் போட்டார்கள், தமிழ் புத்தகங்களை எடுத்து வெகு துரிதமாகவும் நன்றாகவும் படித்தார்கள். இவர்

களைக்கண்டு நாம் மிக சந்தோஷப்பட்டு மிஸ் அஸ்குவித்து மாதுக்கு வந்தனம் அளித்துவிட்டு விடைபெற்று வீடுபோய்ச் சேர்ந்தோம். மறுநாள் மிஸ்டர் குருசுவாமி ஐயரவர்களுடைய குமாரத்தி பிடில் வாசிப்பதைக் கேட்டோம். அக்குழந்தைக்குப் படிக்கவும் தெரியும், சங்கீதமும் தெரியும், இப்படியல்லவோ கற்றறிந்த தனவான்கள் தங்கள் குமாரத்திகளுக்குப் போதிக்கவேண்டும்? இவரிடம் விடைபெற்றுக்கொண்டு கோயம்புத்தூருக்கு அவ்சரமாக போகவேண்டி யிருந்ததால் உடனே புறப்பட்டு கோயம்புத்தூர் சென்று அங்கு சிலதினம் தங்கியிருந்து 12உ யன்று பட்டணம் வந்து சேர்ந்தோம். நமக்கு ஒவ்வொரு ஊரிலும உதவிபுரிந்த நண்பர்களுக்கு நமது மனப்பூர்ண வந்தனத்தை யளிக்கின்றோம்.

## சிறுவர்க்கான கதைகள்.

(1) ஒரு மூடனது பராக்கிரமம்:—ருஷியாதேசத்துச் சக்கிரவர்த்தியாகிய ட்ஸாரினது சேனை வீரர்கள் ஒரு யுத்தத்திற்குப் போய்வந்த பிறகு, ஒவ்வொருவரும் சண்டையில் நடந்த தங்கள் வீரச்செயல்களைக் குறித்துப் பேசிக்கொண் டிருந்தார்கள். இப்படி யிருக்கும்போது அவ்வாஸ்தான விகடகவி நடுவில் வந்து "நான் என் பராக்கிரமத்தைப்பற்றிச் சிறிது சொல்லுகிறேன் கேளுங்கள்" என்றான். "ஆனால் சொல்லு கேட்போம்" என்று அவ்வீரர்கள் உத்திரவுகொடுக்க, விகடகவி பின் வருமாறு சொன்னான்;—இக்காலத்தில் யுத்தம் செய்யும்மாதிரியே எனக்குப் பிடிக்கவில்லை. எல்லாரும் ஒரே கூட்டமாய் நின்றுகொண்டு யுத்தஞ் செய்தால் ஒவ்வொருவனது பராக்கிரமம் எப்படிவெளிப்படும். ஒண்டிக்கொண்டு நின்று சண்டை செய்தாலல்லவோ ஒவ்வொருவன் சங்கதியும் தெரியும். ஸ்வீடன் தேசத்துச் சேனை ஒருவிசை முற்றுகை போடவந்து ஓரிடத்தில் தங்கி யிருந்தபொழுது நான் அவ்விடம் போகும்படி நேர்ந்தது. அப்பொழுது அங்கே ஒரு யுத்தவீரன் படுத்துக்கொண் டிருப்பதைப் பார்த்தேன். உடனே ஒரு நிமிஷங்கூட தாமதியாமல் அவனுக்குச் சமீபத்தில் சென்று என் வாளை யுருவி அவன் வலது காலை ஒரே வெட்டில் நறுக்கென்று வெட்டித் தள்ளி விட்டேன்" இதைக் கேட்டவுடன் அவர்களில் ஒருவன் 'அடே, மடையா! நீ அவன் தலையையல்லவா வெட்டியிருக்கவேண்டும், அவன் காலை வெட்டினதைப்பற்றிப் புகழ்ந்துகொள்ளுகிறாயே' என்றான். அதற்கு விகடகவி ஆமாம், நீர் சொல்லுவதெல்லாம் சரிதான். ஆனால் நான் பார்க்கும்போது அவ்வீரனுக்குத் தலை இல்லை; என்றான்.



(2) ருஷியா தேசத்துச் சக்கிரவர்த்தி ஒருதடவை தன்னிடத்தில் இருக்கும் விகடகவியின் மருமகன் ஏதோ ஒரு பெரிய குற்றஞ் செய்ததற்காக அவனுக்கு மரணதண்டனை விதித்தான். இதைக்கேட்ட விகடகவி எப்படியாவது தன் மருமகனை கொலைசெய்யப் படுவதினின்றும் மீட்க வேணுமென்ற ஆவலுடன் சக்கிரவர்த்தி யிருக்குமிடஞ் சென்றான். இவன் வருவதைப் பார்த்து சக்கிரவர்த்தி இவன் தன் மருமகனை மீட்டுக்கொண்டு போக வருகிறானென்பதைத் தெரிந்து அவனைப் பார்த்து 'நீ வருகிறகாரியம் எனக்குத் தெரியும். நீ கேட்கப்போகிறபடி நான் உத்திரவு கொடுக்க மாட்டேன்' என்றான், உடனே விகடகவி சக்கிரவர்த்தி காலில் விழுந்து 'மகாராஜா நீங்கள் எப்படியாவது என் மருமகனைக் கொன்றுவிடவேண்டும்' என்று உரக்கக் கத்தினான். மகாராஜா புன்சிரிப்பு சிரித்துக்கொண்டு, தானே தன் வார்த்தையினால் சிக்கிக்கொண்டதை நினைத்து அவனை உடனே விடுதலை செய்யும்படி கட்டளையிட்டான்.

E. சுப்பிரமணியம், பி-ஏ.

## விடுகதைகள்.

1. நாலுமுகமுண்டு வினையின்றி மிகவே பேசி நான்முகனைவனைப் பழிக்கும், காலுங் கரமின்றிக் கரணங்களைப் போட்டுக் கழைக்கூத்தரைப் பழிக்கும், வாலுங்கொம்புண்டு இறகில்லாமற் பறந்துபோய் வான்பசுவினைப் பழிக்கும், பாலுண்ணும் பாலரும் விரும்பாரிதை யாய்ந்து பகருவீர் படித்தோர்களே.

2. ஈரேழுபதினாலு லோகங்களதிலே இருபுறமும் சக்கரமமைத்திட்டதுவுமதிலே மாமேருநேர் புளியமரவிதையுமதிலே வந்தாடும் பெண்களுக்கு மாலுண்டுமதிலே.

3. முன்னொரு ஊரின் பேராம் முதலெழுத் தில்லாவிட்டால் நன்னகர் மன்னர்பேராம் நடுவெழுத்தில்லாவிட்டால் கன்னமாம் மிருகப்பேராம்கடையெழுத்தில்லாவிட்டால் உன்னிய தேனின்பேராம் ஊரின்பேர் விளம்புவீரே.

4. காலுமில்லை இறகுமில்லை கணப்பொழுதில் கோடிகாதம் ஓடும் அது ஆறுகளுக்கும் அஞ்சாது மலைகளுக்கும் மயங்காது சுவருக்கும் சலிக்காது.

5. காசி இராசா மகள்பேரு தில்லை அவள் பூசுகிறது கெந்தகப்பொடி பில்லை அவள்யாரோடும் பேசுகிறதில்லை அவள் வயிற்றில் ஆறுமாதம்பிள்ளை.

6. எட்டுக்கட்டும் கட்டி இடைக்கட்டும் கட்டி இடைத் தெருவே போகிற பெண்ணே நீ யென்ன விலைபெறுவாய் நான் சொன்ன விலை பெறுவேன்.

7. நாரணனார் மார்புறையும் நாயகியார் வன்மைதனக் கோரெழுத்துப் பேரென்ன வோதுதெவ்வப் பேரன்னை புள்ளுணர்த்து நாமமென்ன பொல்லாத ராவணனாற் கொள்ளப்பட்டாளெவளோ கூறு.

பாரதி அம்மாள்.

———(—)———

## NOTICE TO OUR SUBSCRIBERS.

☞ SUBSCRIBERS WHO ARE IN ARREARS ARE REQUESTED TO SEND THEIR SUBSCRIPTIONS WITHOUT DELAY.

## முக்கியக் குறிப்பு.

பாக்கியுள்ள சந்தாதாரர்கள் தங்கள் தொகையைத் தாமதமின்றி அனுப்பவேண்டும். வெளியில் சுமார் ரூபா 800 பாக்கி யிருப்பதால் பத்திரிகையை சரிவர நடத்த முடியவில்லை. நமக்கு இதுவரையிலும் ரூபா 400 நஷ்டம். இன்னும் நஷ்ட மடைந்துவர சரிப்படாதாகையால் சந்தாதாரர்களும், பெண்கல்வியில் அபிமான முள்ளவர்களும் இப்பத்திரிகையைக் கிரமமாக நடத்திவர நமக்கு இப்பொழுது உதவி செய்வார்களென்று நம்புகிறோம்.

☞ C. S. இராமசுவாமி ஐயர்,
மாதர் மனோரஞ்சினி எடிடர், ப்ரொப்ரைடர்.

rinted at the Ripon Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

348

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. V. Madras: March 1903. No. 1.
புத்தகம் ரு. சென்னபட்டணம்: 1903 மார்ச்சுமீ. இல. க.

## * கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

மைசூர் நாட்டைச்சார்ந்த ஒரு சிறு நகரத்தில் சௌதப்பன் என்கிற ஒரு பெரிய வர்த்தகன் வசித்துக்கொண்டிருந்தான். அவன் கண்ணியமுள்ளவன். சோம்பலற்ற உழைப்பாளி. வியாபாரத்திலோ மகா சாமார்த்தியமுடையவன். தனக்குரிய இவ்வித குணங்களினாலேயே திரண்ட திரவியத்திற்கு அதிபதியானான். தன்னிடத்தில் சதாபிரியமுள்ள அழகியலக்ஷ்மி தேவியை மணந்து களித்திருந்தான். கணவனும் மனைவியும் தெய்வ பக்தியில் சிறந்தவர்கள். ஒருவரை ஒருவர் கைவிடாது ஒத்து கண்ணியத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அளவில்லாத ஐசுவரியத்திற்கு அதிபதியாகி தன்னை உற்றார் சுற்றத்தார் மதிக்கும்படியான ஸ்தானமடைந்து எல்லாச்சுகம் பெற்றும் மக்களில்லாது வருந்தினன். தன் துர்பாக்கியத்தை நொந்து இது தெய்வ குற்றமோ வென பயந்து கோவில்களிலெல்லாம் பூஜைகளும் அபிஷேகங்களும் செய்வித்தான். பிராமணர்களுக்கு சமாராதனை செய்வித்தான். இதுவுமன்றி சாஸ்திரவிற்பன்னர்களுக்கு அநேக உயர்ந்த வெகுமதி யளித்தான். ஆனால் இவைகளினால் எவ்வளவும் பயன் உண்டாகவில்லை. தாங்கள் எண்ணியிருந்த எண்ணமெல்லாம் வீணாயிற்றே யென்று புருஷனும் பெண் சாதியும் மனம் நொந்தார்கள்.

இவ்வாறு வெகுநாள் கழிந்த பின்னர் தெய்வ கடாக்ஷத்தினால் சௌதப்பனுக்கு ஒரு அழகிய புத்திரன் பிறந்தான்.

சௌதப்பன் அளவிலாச் சந்தோஷம் அடைந்தான். அக்குழந்தைக்கு 'குமார்' என்று பெயரிட்டார்கள். அழகே இக்குழந்தையாய் உருக்கொண்டதோ வென வியக்கும்படி குமார் நாளுக்கு நாள் விருத்தியடைந்து தன் பெற்றோர் மனதை களிப்பித்தான். ஆனால் சௌதப்பன் இச்சமதியற்ற சுகம் எந்நாளும் அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லை. திடீரென ஒருநாள் குமார் காணமற்போக தன் தலையில் இடிவிழுந்தாற்போல் கலங்கினான். குமார் பெற்றோருக்கு ஒரே புதல்வனானதினால் வெகு அன்புடன் வளர்க்கப்பட்டு அநேக விலையுள்ள ஆபரணங்கள் அணிந்து வந்தான். அன்று காலையில் தான் நாடெங்கும் அலைந்து கண்கட்டி ஜாலவித்தை செய்யும் ஒரு கூட்டத்தார் சௌதப்பன் வீட்டெதிரில் தங்கள் ஜாலவித்தைகளைச் செய்தார்கள். அவர்கள் வித்தை முடிந்து சென்ற பின்னரே குமார் காணமற் போனான். வித்தை செய்தவர்களாவது அல்லது வேடிக்கை பார்த்த ஜனங்களில் ஒருவராது குழந்தையை எடுத்துக்

* *Adapted from the Indian Ladies, Magazine.*

கொண்டு போயிருக்கலாம். உடனே ஊரெங்கும் ஆள்களனுப்பி தேடுவித்தான். டாணுக்காரர்களுக்கு வேண்டிய வெகுமதி அளிப்பதாகவும் வாக்களித்தான். இது விஷயமாய் அவன் செலவிட்ட பணம் எண்ணி முடியாது. ஆனால் எல்லாம் அவல மாயின. அவன் குலத்துக்கு திடீரென்று தோன்றின கதிரொளி என்றைக்கும் இருண்டது.

மேற் கூறிய சங்கதி நடந்து பன்னிரெண்டு வருஷங்கள் கடந்தன. சௌதப்பன் பிள்ளையிழந்த விசனத்தினாலே சம்பாதனையில் ஆசையை யொழித்து வர்த்தகத்தையும் கைவிட்டான். பெருமையும் பிரியமுள்ள பெண்சாதியைத் தவிரத் தனக்கு இவ்வுலகத்தில் வேறு சம்பந்தமில்லையென்று எல்லாவற்றையும் துறந்தான். இத்துலை யாக்கஷ்ட காலங்களிலும் அவன் மனைவி ஒருநாளும் கடிந்து பேசாள். இதுவும் கடவுள் ஆணையென்று அதற்கு உட்பட்டாள். இதுவரையில் அவள் மனதிணங்க நடந்த அவள் புருஷன் இக்கஷ்டகாலங்களில் அவள் மனம் வருந்த நடக்கலாயினான். அவன் எவரையும் கடு கடுப்பான். அவனை களிப்பது கஷ்டம். லக்ஷ்மியோ இரவும் பகலும் பிள்ளையை நினைந்து நினைந்து அழுது தீராநோய்க்காளாகினாள். தன் மனைவி நோயினால் வருந்துவதைக்கண்ட சௌதப்பன் இதுவரையில் தன்னால் மறக்கப்பட்டிருந்தபோதிலும் தன்னிடத்தில் ஆசைகுன்றாது நல்லொழுக்கத்துடனும் பொருமையுடனும் நடந்துகொண்ட லக்ஷ்மிதேவியை தன்னிடமிருந்து சாவு பிரித்து விடுமோவென பயந்து மிகவும் துக்கித்தான்.

நாட்டு வைத்தியர்களையும் இங்கிலீஷ் வைத்தியர்களையும் அழைப்பித்தான். அவர்களெல்லோரும் அவன் மனைவி பிழையாள் என்று சொல்லிவிட்டார்கள்.

சௌதப்பனுடைய அயல் வீட்டார்களில் ஒருவனாகிய தாஸப்பனுக்கு பயிராகிகளுடன் அதிக பழக்கம். அவன் அவர்களை அழைத்து பிச்சையிடுவதுண்டு. அவர்கள் வார்த்தையிலும் மருந்திலும் அவனுக்கு அதிக நம்பிக்கை. அயலாரில் எவனாவது நோயினால் வருந்தினால் அவனுக்குச் சிநேகிதரும் பயிராகிகளில் ஒருவருமான கிஷோரி தாஸ் என்பவரிடம் போய் ஆலோசிப்பான். அவர் மந்திர தந்திரம் கற்று துர்தேவதைகளை யோட்டுவதில் மகா சாமார்த்திய முடையவரென்று பெயரெடுத்தவர். இவ்விடந் தான் தாஸப்பன் லக்ஷ்மி தேவியைக்குறித்து ஓடினான். கிஷோரிதாஸ் பரம தயாளுவானதினால் உடனே லக்ஷ்மிதேவியை வந்து பார்த்தார். அவர் அவள்கைதொட்டு நாடி பார்க்கவேயில்லை. அவர் சிலநேரம் தியானம்செய்பவர்போல் கண்ணை மூடிக் கொண்டிருந்து திடீரென மயக்கத்தினின்றும் விழித்தவர்போல் பின்வருமாறு கூறினர்.

ஓ காளியம்மையே! உன் ஆகாரம் கொடுக்கப்படாமற்போகாது. என்ன சொல்லுகின்றாய் என் தாயே! இந்த பாவி பிழைக்கவேண்டுமானால் அவ்வுயிர்க்கு பதில் உயிர் கொடுக்கவேண்டுமென்று கேழ்க்கின்றாயா? உன் உத்திரவின்படி அவ்விதமே சாவு கொடுக்கப்படும். இவ்வெளிய ஸ்திரீயின் பேரில் க்ஷாத்திரம வைக்காதே.” இம்மாதிரி சொல்லி முடிந்தவுடன் மறுபடியும் கண்ணை மூடிதன்னை மறந்தவன் போலிருந்தார். இவ்வாச்சரியத்தைக் கண்ணுற்றவர் அந்நோயாளியாகிய லக்ஷ்மி தேவியின் புருஷனும் தாஸப்பனுந்தான். மகா பக்தியுள்ளவும், பார்ப்பதற்குப் பயங்கரமுமான அத்தேவதை பயிராகியின் மூலமாய் தெரிவித்த அபராத்தை அவ்விருவரும் கேட்க நடுங்கி தயங்கினார்கள். வேறொரு ஜீவனை சாவு கொடுக்காமற்போனால் லக்ஷ்மி பிழையாளென்று தெரிந்துகொண்டார்கள். சாவு கொடுப்



பது அவர்களுக்கு எவ்வளவு அருவருப்பாயினும் லக்ஷ்மி தேவியின் உயிர்க்காக அவர்கள் துணியவேண்டியதாயிற்று.

கால தாமதமின்றி அக்கொடிய காளியை சாந்தபடுத்துவதற்கு வேண்டிய சாவை யடைய விரும்பி சௌதப்பனும், பூசாரியும் வீடு விட்டு புறப்பட்டார்கள். சூரியனும் மறைந்தான். இராக்காலமோ இருண்டுநெரிக்கொண்டிருந்தது. அச்சிறு நகரத்தின் சஞ் சலமற்றிருக்கும் தெருக்களில் புயல் காற்று வீசியது. அன்றையதினம் அம்மாவாசையும் சேர்ந்தது. அத்தெருக்களில் லாந்தல்களினின்றும் உண்டாகும் மங்கிய வெளிச்சத்தைத் தவிர வேறொன்றும் கிடையாது. அந்நேரத்தில் தெருக்களில் நடப்பே கிடையாது. வெகுநேரம் அவர்கள் சந்துபொந்துகளெல்லாம் அலைந்து திரிந்தும் அவர்கள் தேடிய சாவு அகப்படவில்லை. சௌதப்பன் மனந்தளர்ந்தான். ஆனால் அவன் சிநேகிதனோ விடா முயர்ச்சியுள்ளவன். சௌதப்பன் தயங்குவதைக் கண்டு நீ ஒரு ஆண்பிள்ளையா? உன் மனைவியைக்காப்பாற்றும் பரிகாரம் உனது கையிலிருக்கையில் அவளை சாவுக்கிரையாக்குவது உனக்கு வெட்கமில்லையா வென்றான். இவ்வாறு சொல்லிச் சில நேரத்திற்குள் மங்கி மங்கி யெரிந்துகொண்டிருந்த தெரு லாந்தல் ஒளியினால் ஒரு கட்டை வண்டியின் கீழ் ஒரு மனித உருவம் படுத்திருப்பதைக்கண்டார்கள். இதோ பார் கடைசியில் நமக்கு நல்ல தருணம் வாய்த்தது என்று தாஸப்பன் சொல்லிக்கொண்டு குனிந்து தூங்கும் அம்மனிதன் முதுகில் தட்டினான். அம்மனிதன் திடுக்கிட்டு எழுந்து பயந்தவன்போல் தன்னைச்சுற்றிலும் பார்த்தான். அவன் முகம் லாந்தலின் வெளிச்சத்தில் திரும்ப இவர்களிருவரும் அவன் 12 அல்லது 13 வயதுள்ள வாலிபன் என்று தெரிந்துகொண்டார்கள்.

அவ்வெளிச்சம் அமாவாஸை இருளைப்போக்கப் போதாதாயினும் அவ்வாலிபனது முகத்தின்நற்குறியும் அழகும் அவர்களுக்குத் தெரியாமற் போகவில்லை. அவ்வாலிபனைப் பார்த்ததும் சௌதப்பன் மனது உருகியது. ஆனால் அவன் சிநேகிதன் தாஸப்பனோ கல்மனதுடையவன். தாஸப்பன் அச்சிறுவனை நோக்கி அடாபையா! நீயாவன்? என்று கேட்டான். நான் ஒரு ஏழைப்பையன். என் சுற்றத்தாரைத் தேடிவந்தேன். எனக்குத் தீங்கு செய்யாதேயுங்கள். நான் இன்று இரவு இவ்விடம் படுத்துக் கொள்ளும்படி விடுங்கள் என்று மிகவும் வணக்கத்துடன் மறுமொழி கூறினான்.

சி, சீ, நான் தீங்கு செய்வேனென்று உனக்கு என்னமாய்த் தெரியும். ஆனால் இக்குளிரில் நடுங்குவதைக் காட்டிலும் என்வீட்டில் நல்ல உணவு உண்டு அடக்கமான படுக்கையில் படுத்துத் தூங்க என்னுடன் வருவதற்கு உனக்குப் பிரியமில்லையாவென தாஸப்பன் அச்சிறுவனைக் கேட்டான். அதற்கவ்வாலிபன் ஐயா! தங்களுக்கு அநேக வந்தனம்; தங்கள் கட்டளைப்படி நடக்கக் காத்துக்கொண் டிருக்கிறேன் என்றான்; ஆனால் என்னுடன் வாவென்று தாஸப்பன் வழி நடத்தினான்.

அந்நகரவாசிகள் தாஸப்பன் நடத்தின வழியாய் நடப்பது அரிது. அக்குறுகலான சுத்துவழி கிராமத்தின் எல்லைக்கப்புறம் கொண்டுபோய்விட்டது. தாங்கள் வீடுகளெல்லாம்தாண்டி தடல்களுக்கு வந்துவிட்டதாகத் தெரிந்துகொண்டார்கள். பையனுக்கோ மனதில் பயம் உண்டாயிற்று. சீக்கிரத்தில் வீடுபோய்ச்சேரலாமென்று எதிர்பார்த்திருந்த அச்சிறுவனுக்கு தன்னை திடீரெனக் காப்பாற்ற வந்தவர் அழைத்துச் செல்லும் இடம் அவனுக்கு தோன்றவில்லை. தான் தனிமையா யிருப்பதால் அவர்களைக் கேட்பதற்கும் பயம். அவர்கள் கொலைபாதர்களோ வென்றுகூட அவனுக்குச் சந்தேகம். இவர்கள் தனக்குக் கெடுதல் செய்வதற்குக் கூடதன் கைகால்களில் ஆபரணமும் நல்ல உடை

யும் இல்லாமலிருக்கும்பொழுது தன்னை இவ்விதம் அழைத்துச்செல்லும் அவர்கள் எண்ணம் என்னமோவென்று ஆச்சரியப்பட்டான். ஆ! என்மனம் சஞ்சலிக்கின்றது. ஆனாலும் யோசித்துப் பார்ப்போம் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இம்மூவரும் நகரத்தைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டார்கள். சுமார் 2, 3 மயில்தூரம் நடந்தும் இன்னும் இவ்விருவரும் கோரியவிடம் வரவில்லை. பையனும் தனக்குள் தைரியப்படுத்திக்கொண்டு சென்றான். வழி நடத்திவந்த தாஸப்பன் திடீரென நின்றான். அவனுக்கு எதிரில் சுமார் 10கஜம்தூரத்தில் பழையகாலத்து கல்விளக்கின் மங்கின வெளிச்சத்தில் தெரிந்தும் தெரியாமலுமிருந்த ஒரு கரடுமுரடான கட்டடத்தைக் கண்டான். அதனுள் பார்த்தவர் மனதைக் கலக்கும் கருத்த பயங்கரமான காளியின் உருவத்தையும்பார்த்தான். பையன் பலவிதமாகச் சந்தேகித்தான். மனது பதைபதைத்துத் துடித்தது. பேசுவதற்கோ நாவெழவில்லை; ஆனால் அவர்கள் அவன் கழுத்தில் பூமாலை போட்டவுடன் அவன் சந்தேகங்களெல்லாம் ஒழிந்தன. அவர்கள் தன்னை காளிக்கு நரபலியாக்கப் போகிறார்களென்று தெரிந்துகொண்டான்.

ஐயய்யோ! என்னை காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள். என்னை நீங்கள் இவ்விதம் கொல்லும்படி நான் என்ன குற்றங்கள் செய்தேன் என்று பரிதாபப் படும்படி ஏங்கி யழுதான்.

அடா!முட்டாள் பையா! பேசினால் தெய்வகுற்றம் செய்தவனாவாய் காளியம்மனுக்கு இரையாகி அவள் பசியை தீர்ப்பதற்கு எல்லாருமே புண்ணியசாலிகளாக மாட்டார்கள். உன் நல்லகாலத்தைப்புகழ். பலியிடுவதை நிந்தித்தால் அது பலனற்றுப்போம் என்று தாஸப்பன் சொன்னான்.

அச்சிறுவன் கண்களினின்றும் தண்ணீர் ததும்பி கன்னங்களின் வழியாக தாரை தாரையாய் பெருகிற்றே யொழிய அவன் ஒரு வார்த்தையாவது சொல்லவில்லை. சௌத்தப்பன் தயாளுவானதால் அப்பையனின் கஷ்ட நிலையைப்பார்க்க அவன் மனது உருகியது. முகத்தை கைகளினால் மூடிக்கொண்டு கண்ணீர்விட்டுத் தனக்குள் அழுதான். அவன் சிநேகிதனோ கல்நெஞ்ச முள்ளவன். சௌதப்பன் கைகளாலேயே அவ்வாலிபன் பலியிடப்பட வேண்டுமென்றான். சௌதப்பன் கண்களில் நீர்ததும்ப இச்சாவு கொடுப்பதைத் தாமதித்து செய்யலாமென்று வெகு நேரம் மன்றாடியும் அவன் சிநேகிதன் பிடிவாதத்தைக் கண்டு அவனே அக்காரியத்தை முடித்துவிடும்படி கேட்டுக்கொண்டான். அதற்கும் தாஸப்பன் சம்மதியாதது அறிந்து கை நடுநடுங்க பளபளப்பான கத்தியைப் பிடித்தான். அதைக் கண்டவுடன் இடிவீழ்ந்தாற்போல் அச்சிறுவன் மனங்கலங்கினான். அக்கத்தியின்முனை அவன் கழுத்திற்பட ஐயோ! என் தந்தையே! என் தாயே! நான் எப்பொழுது உங்களைக் காண்பேன் இனி ஒரு நாளும் காணப்போகிறதில்லை என கடைசியாகக் கதறி கீழே வீழ்ந்திறந்தான். அக்கொலையும் அறியாமல் செய்யப்பட்டது. அச்சவத்தையும் வெகு எளிதாய் தடல்களில் அடக்கஞ் செய்துவிட்டார்கள். சவத்தைப் புதைப்பதற்குமுன் தாஸப்பன் அவ்வாலிபனது கழுத்திலேதோ ஒரு தாழ்த்து தொங்குவதைக் கண்டு அதை தன் வசத்தில் வைத்துக் கொண்டான். சௌதப்பன் மிகவும் மனந்தளர்ந்தவனாய் சிநேகிதன் தன்பின்வர வீட்டை நோக்கிச் சென்றான்.

இவ்விருவரும் வீட்டிவில்லாதிருக்கும் சமயத்தில் ஒரு அற்புதம் உண்டாயிற்று, லக்ஷ்மி தேவி வியாதியினின்றும் தேறினாள். காளியம்மனின் வாக்கு ஒருபொழுதும் தவறுகிறதில்லையென்று நான் உனக்குச் சொல்லவில்லையா வென்று தாஸப்பன் ரகஸ்ய



மாய் சௌதப்பன் காதிற் சொன்னான். இராத்திரி 12 மணியாய் வெகு நேரமான படியால் சௌதப்பன் அன்று இராத்திரி நடந்த காரியங்களால் களைத்து படுக்கைக்குப் போயும் தூக்கம் பிடியாதது கண்டு தன் சிநேகிதன் தன்னிடம் கொடுத்த அந்த தாழ்த்தின் ஞாபகம் வர காலப்போக்காக அதில் என்ன விருக்கிறது என்று அதை எடுத்து அதன்மேல் வெள்ளித் தகட்டைப்பிரித்தான். அதனுள் ஒரு சிறு காகிதச்சுருளைக் கண்டு அதைப் பிரித்தவுடன் அச்சிறுவனது வயது இருப்பிடம் பெற்றோர்களின் பெயர் இவைகளெல்லாம் அக்காகிதத்தில் தெளிவாய் எழுதப்பட்டிருந்தது. அதை வாசித்தவுடன் அவன் மயங்கியதற்கு காரணமென்ன? ஐயோ பாவம்! தன் கைகளாலேயே தன் குழந்தையைக் கொலைசெய்துவிட்டதை யறிந்துகொண்டான். பின்னிட்டு இவர்கள் மிக விசனப்பட்டு துறவிகளாய் காசிக்குச் சென்று மரணமடைந்தார்கள்.

☞ கருத்து:— இக்கதையால் குழந்தைகளுக்கு நகைகளை யணிந்து தனிமையாக விடக்கூடாதென்றும், ஒவ்வொரு காரியத்தையும் ஆய்ந்து ஓய்ந்து செய்யவேண்டுமென்றும், பேய், பிசாசுகளை ஓட்டுகிறேன், இன்னும் வியாதிகளை சொஸ்தம் பண்ணுகிறேன் பலியிடவேண்டுமென்று சொல்லுகிற பூசாரிகளை நம்பக்கூடாதென்றும் ஸ்பஷ்டமாக விளங்குகின்றது.

ப. ரீ.

# * குடும்ப ஆரோக்கியம்

* Contributed to the Indian Ladie's Magazine by Mrs. I. Brander.

## ஆகாயத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் உள்ள சம்பந்தம்.

நான் இப்போது எழுதுவதிலும் இனிமேல் எழுதப்போவதிலும் இதை வாசிப்பவர்கட்கு நன்றாகத் தெரிந்த விஷயங்கள் பல இருக்கலாம். ஆயினும் அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும். ஏனெனில் எல்லோருமே இவ்விஷயத்தைப்பற்றி அறிந்திருக்க முடியாது. அப்படித் தெரிந்தவர்களும் கூட நான் எழுதுவதனால் அவ்விஷயங்களை ஞாபகப்படுத்தப்பட்டுப் பயனடைவார்கள்.

சென்றமாதச் சஞ்சிகையில் நான இவ்விஷயத்தைப்பற்றி எழுதியபோது ஆரோக்கியத்திற்கு முக்கியமாக வேண்டியவற்றில் நல்ல ஆகாயம் ஒன்று என்று குறிப்பிட்டிருந்தேன். அது எவ்வாறு என்பதைப்பற்றி இப்போது ஆராய்வோமாக:—இரத்தாசயத்திலிருந்து (Heart) ஆர்டரிகளின் * (Arteries) வழியாய் தேகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டுபோய் படுகிற இரத்தத்தினாலே மானிடதேகமானது வளர்க்கப்பட்டு வருகின்றது. இரத்தாசயத்திலிருந்து வெளிவரும் இரத்தம் மிகவும் பரிசுத்தமுள்ளது. இவ்விரத்தம் தேகத்தின் எல்லாப்பக்கங்களிலும் உலாவிக்கொண்டே தன்னிடத்திலிருக்கும் பிராணவாயுவைத் தசைகட்குக் கொடுத்து அதற்குப் பதிலாக அவைகளிடமிருந்து கெட்ட கரியமலவாயுவைத் தான் வாங்கிக்கொண்டு செல்வதனாலே தான் தசைகள் வளருகின்றன. இந்தக் கரியமல வாய்வு இரத்தத்தை அசுத்தம்செய்து விடுவதினாலே அவ்விரத்தம்தசைகட்கு மேலும் பயன்படக்கூடிய தன்மையைக்கெடுத்து விடுகிறது. ஆகையால் இவ்வசுத்த இரத்தமானது வெயின்கள் † (Veins) வழியாக

* இரத்தாசயத்திலிருந்து சுத்த இரத்தமானது தேகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் சிறு சிறு குழாய்களின் வழியாய்க் கொண்டுபோகப் படுகிறது. அப்படிச் சுத்த இரத்தத்தை கொண்டுபோகும் இரத்தக் குழாய்களுக்கு ஆர்டரிகள் என்றுபேர். இப்படிக் கொண்டுபோகப் பெற்ற இரத்தமானது அங்கங்கே தேகதாதுக்களில் உண்டான அசுத்தங்களை உட்கொள்வதால் அசுத்த இரத்தமாகிவிடுகின்றது. அதை மீட்டும் சுத்தமாக்கும்பொருட்டும் ஈரலுக்குக்கொண்டுபோகும் பொருட்டும் வேறு குழாய்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படி அசுத்த இரத்தத்தைக் கொண்டுவந்து சேர்க்கும் இரத்தக் குழாய்களுக்கு வெய்ன்கள் என்றுபேர்.

† ஆர்டரி என்பதன்கீழ் கொடுத்திருக்கும் குறிப்பைப் பார்க்க.



350

மீண்டும் இரத்தாசயத்தில் சேர்க்கப்படுகிறது. அங்கிருந்து அது ஈரலினுள்ளே (Lungs)
செலுத்தப்படுகிறது. நாம் சதாசுவாசிக்கும் ஆகாயம் நமது ஈரலினுள் செல்லுகின்றது.
இது சுத்த ஆகாயமாயிருந்தால்தான் இதில் அதிக பிராணவாய்வு இருக்கும். ஈரலினுள்
செலுத்தப்பட்ட கெட்ட இரத்தமானது மேற்கூறிய ஆகாயத்தின் அருகாமையில் ஓடி
அதிலிருக்கும் பிராணவாயுவைத் தானுட்கொண்டு தன்னிடமிருக்கும் கரியமலவாயுவை
அதனிடம் செலுத்திவிடுகிறது. இதனால் இரத்தம் பரிசுத்தமாகி மீண்டும் தசைகட்கு
உணவு கொடுக்கத்தக்கதாய் இரத்தாசயத்துட் செல்கின்றது. ஈரலில் இரத்தமானது
கக்கிய கரியமலவாய்வு நாம் சுவாசம் விடுவதால் வெளிப்பட்டு ஆகாயத்தோடுகலக்கிறது.

ஆகையால் நாம் உட்கொள்ளும் சுவாசமாகிய 'உச்சுவாசத்திற்கும்' வெளியேவிடும்
சுவாசமாகிய 'நிச்சுவாசத்திற்கும்' எவ்வளவு வித்தியாசமிருக்கிறதென்பதைப் பாருங்கள்
நாம் உட்கொள்வது பெரும்பாலும் பிராணவாய்வுடன் கூடியதாகிய சுத்த ஆகாயம்.
நாம் வெளியே விடுவது கரியமலவாய்வும் ஆரோக்கியத்திற்குப் பொருந்தாத சில வஸ்
துக்களும் நிறைந்த கெட்ட ஆகாயம்.

ஆகையால் நாம் நிச்சுவாசித்ததையே மீண்டும் எக்காரணத்தாலும் நாம் உச்சுவா
சித்தல் கூடவே கூடாது அதை விஷமென்றே சொல்லலாம். அதை உட்கொண்டால்
ஆரோக்கியத்தை இழந்துவிடுவோம். கொஞ்சம் அதிகமாகவே நாம் உட்கொள்வோ
மானால் நம்மை அது கொன்றாலும் கொன்றுவிடும். மானிட தேசத்தின் ஆரோக்கியம்
முக்கியமாக இரத்தத்தின் பரிசுத்த நிலைமையைப் பொருத்ததாக இருக்கிறது. இரத்
தத்தின் பரிசுத்த நிலைமை நாம் உட்கொள்ளும் ஆகாயத்தைப் பொருத்ததாக இருக்கி
றது. நற்காற்றைச் சுவாசிப்போர் நன்றாகவளர்ந்து சுகதேகிகளாகவும் தெளிவான புத்தி
யுடையவர்களாகவும், ஊக்கமுடையவர்களாகவும் தம் வேலைகளைச் சரிவரச் செய்யத்
தகுதியுடையவர்களாகவும் இருப்பார்கள். தாமே சுவாசித்த அல்லது மற்றப் பிராணி
கள் சுவாசித்த நிச்சுவாசக் காற்றை வழக்கமாக உச்சுவாசம் புரிவோர்கள் வளர்வது
அரிது. அப்படி வளர்ந்தாலும் மெலிவாயும் உடல் வெளுத்தும் உறுதியு முற்சாகமு மற்
றும் வேலைக்குதவாதவர்களாகவும் இருப்பார்கள்.

இவற்றையெல்லாம் உணர்ந்து உங்கள் குழந்தைகளையாவது அல்லது உங்கள்
கீழ்வரும் வேறுயாவர்களையாவது வாயை மூடிக்கொண்டு தூங்கும்படி செய்யலாகாது.
அவர்கள் அப்படிச் செய்வார்களேயானால் அவர்கள் தங்கள் நிச்சுவாசத்தையே மீண்
டும் மீண்டும் உச்சுவாசிக்கவேண்டும். அப்படி அவ்வசுத்த ஆகாயத்தை உட்கொள்வதால்
அவர்கள் உடலிலுள்ள கெட்ட இரத்தம் சுத்தம் ஆவதில்லை. அதன் காரணமாக
அவர்கள் ஆரோக்கியமற்றவர்களாகவும் பலவீனர்களாகவும் தேககாந்தியற்றவர்களாக
வும் ஆய்விடுவார்கள் என்பதற்கையமில்லை.

ஆகாயத்திலிருக்கும் பிராணவாயுவை மனிதர்கள் உட்கொள்வதுபோலவே எரி
யும் நெருப்புகளும் விளக்குகளும் உட்கொள்ளுகின்றன.

இவ்விரண்டிலும் ஒரேவிதமான காரியம்தான் உண்டாகின்றது. உயிராகிய
நெருப்பை ஓங்கி எரியச் செய்வது பிராணவாய்வே என்பதும் அதைத் தழைத்தோங்
காது அழிக்கச்செய்வது கரியமலவாய்வே என்பதும் முற்றும் உண்மையே. நம்மவர்க
ளில் ஒவ்வொருவரும் ஒரு எரியும் நெருப்புக்குச் சமானமானவர்கள். அதுவே நம்மு
டம்பு வெப்பமாயிருப்பதற் குற்றகாரணம். ஒரு நெருப்பில் விரகும் கரியும் விளக்கில்
எண்ணெயும் எப்படி எரிகின்றனவோ அப்படியே ஒவ்வொரு ஜீவஜெந்துவின் உடலில்
ஒரு நெருப்பு எரிந்துகொண்டிருக்கிறது என்னலாம். இந்நெருப்புகளைப் பிராண
வாய்வு பிரகாசிக்கச் செய்யும்; கரியமலவாய்வு அவித்துவிடும்.

எங்கெங்கே ஜீவப்பிராணிகள் சுவாசித்துக்கொண்டிருக்கின்றனவோ, எங்
கெங்கே நெருப்பு அல்லது விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றனவோ அங்கங்கெல்
லாம் ஆகாயத்திலுள்ள பிராணவாய்வு மிகக் குறைந்து வருகின்றதென்றும் அதிருந்த
இடத்தில் கரியமல வாய்வு அதிகமாய் நிரம்புகிறதென்றும் இப்போது நாம் எளிதில்
உணரக்கூடும். சுருங்கச்சொல்லில் அவ்விடங்களில் நல்ல காற்றோட்ட மில்லாவிட்டால்
அங்குள்ள காற்றுமுழுமையும் விஷத்தன்மையை யுடையதாய்விடும்.



கெட்ட ஆகாயத்தை வெளியே அகற்றலும் நல்ல ஆகாயத்தை உள்ளே கொண்டு
வருதலும்தான் காற்றோட்டம் என்பது. இதைச் சரிவரச் செய்வதற்கு நாம் இந்தச்
சிறுவிதியைக் கவனிக்கவேண்டும். ஆகாயம் உஷ்ணமாகும்போது பரிமாணத்திற்
பெருக்கின்றது. அப்போது அது கனமற்றதாகி மேலே கிளம்பும். ஆகாயம் குளிர்ச்சி
யடையும்போது அது குறுகி கனமுள்ளதாகி கீழேயே தங்குகின்றது.

நாம் வெளியே விடும் கரியமல வாய்வு உஷ்ணமாக இருப்பதனால் சாதாரணக்
காற்றைவிடக் கனம்குறைந்து மேலே கிளம்புகின்றது. ஒரு அறையில் பெரிய ஜன்
னல்களும் கதவுகளும் இருந்து அவைகள் திறந்து வைக்கப்பட்டால் கரியமல வாய்வா
கிய கெட்ட ஆகாயம் கதவு ஜன்னல்கள் ஆகிய இவற்றின் மேற்பாகங்களின் வழியாக
வெளிச்செல்லும். அப்போதே அவைகளின் கீழ்ப்பாகங்களின் வழியாக சுத்த ஆகாயம்
உள்ளே நுழையும். காற்றோட்டமில்லாத ஒரு அறையில் அதிக ஜனங்களிருந்தால் அவ்
வறையின் முகட்டினருகில் எப்போதும் கரியமலவாய்வு சேர்ந்துகொண்டே வரும்.
அப்போது நாம் முக்கியமாய்ச் செய்யவேண்டிய தென்னையெனின் அக்கரியமலவாய்வு
குளிர்ந்து கீழே இறங்காதபடி வெளியே அதைப் போக்கவேண்டியதுதான். அது
அப்படி வெளிப்படுத்தப் படாவிட்டால் சீக்கிரத்தில் குளிர்ந்துவிடும். அப்படிக் குளிர்ந்த
பின்னர் சாதாரணமாகக் காற்றைவிட அது கனமுள்ளதாகலின் தரையில் வந்து தங்
கும். அப்போது ஜனங்கள் அதை மறுபடியும் உச்சுவாசிக்க வேண்டிவரும்.

சுவரில் கூரைக்குச் சமீபத்தில் சிறிய ஜன்னல்களையாவது அல்லது காற்றுப்
போகும்படியான சிறு துவாரங்களையாவது அமைத்து அவைகளைத் திறந்து வைப்பது
மிகவும் நலம். இந்தத் துவாரங்களின் வழியாக உஷ்ணம் பொருந்தி இலேசாக உள்ள
கெட்டகாற்று வெளியே யகன்றுவிடும். அதேகாலத்தில் எப்போதும் நல்ல காற்று
வருவதற்காக ஜன்னல்களும் கதவுகளும் திறந்துவைக்கப்பட வேண்டும்.

சாதாரணமாகப் படுக்கை யறைகளில் காற்றோட்டத்தைப்பற்றி அதிகமாகக் கவ
னிக்கிறதில்லை. இரவுகளில் குளிர்காற்று பனிமுதலிய வீசுங்கால் அவற்றை ஒருவாறு
தடுப்பது அவசியமே. ஆயினும் காற்றோட்டம் சரியாக இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடு
செய்தல் மிக அவசியம். படுக்கையறைச் சுவர்களில் மேற்கூறியவாறு சிறிய ஜன்னல்
களும் காற்றுப்போகும் துவாரங்களும் அவசியம் இருக்கவேண்டும். அதனுட் படுப்பவர்
கள் கட்டில் நாற்காலி முதலியவைமே லல்லாது தரையில் படுப்பவர்களானால் அத்துவா
ரங்கள் (அத்தியாவசியம் அப்படித் துவாரங்க ளில்லாவிட்டால்) என்ன ஆகுமென்பதை
விவரிக்கின்றேன். உறங்குபவர்கள் கரியமலவாயுவை நிச்சுவாசிக்கின்றார்கள். இது
உஷ்ணமாயிருப்பதால் உயரத்தில் போய்த்தங்குகின்றது. விடியற்காலம் 3 அல்லது
4 மணிக்கு அறை குளிர்ச்சியடையும்போது கரியமலவாய்வும் குளிர்ந்து கீழே இறங்கித்
தரைக்கு அருகாமையில் நிற்கும். அப்போது உறங்குபவர்கள் அக்கரியமலவாயுவையே
மீண்டும் உச்சுவாசிக்கின்றார்கள். ஆகையால் அவர்கள் காலையில் சுறுசுறுப்பில்லாமல்
சோம்பலாயும் சில சமயங்களில் தலைவலியுடனும் எழுகின்றார்கள். குளிர்காற்று உறங்
குபவர்கள்மேல் படாது பாதுகாத்துக்கொள்ளுதல் அவசியமெனினும் நல்ல காற்று
அறைக்குள்புக ஏற்பாடு செய்யவேண்டியது அதனினும் மிக அவசியம். மிகுந்த குளிர்
காலங்களிலும் கூட கெட்ட காற்று வெளிச்செல்ல ஒரு காற்றுத்துவாரம் நல்ல காற்று
உள்ளேவர ஒரு ஜன்னலுமாவது திறந்து வைக்கப்படவேண்டும்.

வேனிற்காலத்தில் பாதுகாப்பிற்குப் பங்கம் வாராதபடி எத்தனைக் கதவு ஜன்னல்
களைத் திறந்துவைக்க முடியுமோ அத்தனைக் கதவு ஜன்னல்களையும் திறந்துவைக்க
வேண்டும். சில இந்தியர்கள் வேனிற்காலத்தில் வீட்டின் மாடியின்மேலும் திண்ணை
களிலும் முற்றங்களிலும் படுத்துறங்குவது வழக்கம். அவர்கள்மேல் பனியாவது மழை
யாவது படாமலிருக்கும் வரையும் அது மிகவும் நல்லதே.

தனவான்கள் வீடுகளில் நல்ல காற்றோட்டமிருக்க அறைகள் உயரமாகவும் அவை
களில் ஜன்னல்களும் கதவுகளும் ஏராளமானவையுமாக இல்லாமலிருக்க ஒரு காரண
முமில்லை. விசாலமான திண்ணைகள் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் கதவு ஜன்னல்
களைத் திறந்து வைக்கும்போது காற்று நன்றாக வரும். அதிக வெளிச்சமும் உஷ்ணமும்
அதேசமயத்தில் அறைக்குள் நுழையா. ஏழைகள் வீட்டிலோ வென்றால் காற்றோட்டத்

திற்கு வேண்டிய சௌகரியம் எல்லாம் செய்வது மிகவும் கஷ்டமே. ஆயினும் ஜாக்கிர
தையாயிருந்தால் அதிக பயனடையலாம்.

ஒரு அறையில் ஒரே கதவும் ஜன்னலும் தான் இருக்க இயலுமானால் அவைகளை
அறைக்குத் தக்கபடி எவ்வளவு பெரியனவாக வைக்க முடியுமோ அவ்வளவு பெரியன
வாக வைப்பதுடன் ஜன்னலை கூரைக்கு அருகாமையில் வைக்கவேண்டும். ஏனென்றால்
கெட்ட ஆகாயம் அதன் வழியாக வெளியேபோகவும் நல்ல ஆகாயம் கதவின் வழியாக
உள்ளே வரவும் கூடுமல்லவா? கெட்ட ஆகாயம் புகைமுதலியன எல்லாம் வெளியே
போவதற்கு ஒன்றுமில்லாததைவிட கூரையில் ஒரு துவாரமாவது இருத்தல் மிக நலம்.
மிக எளியவனுடைய குடிசையிலும்கூட இந்தத் துவாரம் இருத்தல் மிக அவசியம்.
அந்தத் துவாரமானது குறைந்தது ஒருசதுர அடி அளவாவது இருக்கவேண்டும். அதை
மிக உஷ்ணமான நேரங்களிலும் மழைபெய்யும்போதும் மூடிவிடலாம்.

இந்தியாவில் மிக உஷ்ணமான நேரங்களில் சூரியவெப்பத்தைத் தடுப்பதற்காக
கதவுகளை மூடிக்கொள்ள வேண்டிவருகிறது. அக்காலங்களில் காற்று வீட்டின் எல்லாப்
பக்கங்களிலும் செல்லும்படி காலை மாலை வேளைகளில் எல்லா ஜன்னல் கதவுகளையும்
திறந்துவைக்க வேண்டும். மத்தியான நேரத்திலும்கூட சூரியவெப்பம் வீட்டின் ஒரு பக்
கத்தில்தான் அதிகமாய் அடிக்கும். ஆதலால் மற்றப்பக்கத்திலுள்ள ஜன்னல் கதவுகளைத்
திறந்து அறைகளிற் காற்றோட்டத்தை உண்டுபண்ணிக்கொள்ளலாம். இது நாமே கவ
னிக்கவேண்டிய வேலைகளிலொன்று. சூரியன் நிலையையும் காற்றடிக்கும் திசையையும்
கண்டுபிடித்து அதற்குத் தக்கவாறு கதவு ஜன்னல்களைத் திறந்தலும் மூடலும் நமது
வேலையாட்களுக்குத் தெரியாது.

ஆகாயம் கெட்டுப்போவதற்குக் காரணம் ஜீவஜெந்துக்கள் சுவாசிப்பதும் நெருப்பு
விளக்குகள் எரிவதும் மட்டுமல்ல. எந்தவிதமான அசுத்தமும் காற்றைக் கெடுத்துவிடும்
'சுத்தம்' என்பதைப்பற்றி எழுதுங்கால் இதைப்பற்றி விரிக்கப்படும்.

(இன்னும் வரும்.)

M. V. Menakshi Sundara Mudaliar B. A.

# நட்பு.

செயற்கரிய யாவுள நட்பினதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

என்று திருவள்ளுவநாயனார் சொல்லியபடி நட்பைப்போலத் தேடுவதற்கு அரிய
தும் ஆபத்துக்கு உதவத்தக்கதும் வேறு ஏதாவது ஒன்றுண்டா? அத்தன்மையுடைய
நட்பானது எளிதிற்கிடைத்தலரிது. 'முகநகநட்பது நட்பன்று' என்றதின் கருத்திற்
கிசைய ஒருவரையொருவர் காணும்பொழுது முகமலர்ச்சிகாட்டி இனிய பேசுதலும்
மகிழ்ந்திருத்தல் முதலிய வெளிச்சிநேகம் பாராட்டுதலும் மாத்திரமே உண்மையான
சிநேகமாகாது.

"சமயம் வரினிடித்துரைப்பார் தக்கவழிச்செலச் செய்வா
ரிமையவர்த மூலகுறவு மிருளுலகம் பகையுமா
யமையவறி வுறுத்துவா ரந்தோ நூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கு மரிதரிது."

(குசேலோபாக்கியானம்.)



என்றபடி தமக்குள் ஒருவர், தீமைவிளைக்கத்தக்க கெட்டவழியிற் செல்வாராயின்
அப்பொழுது அவரை அவற்றிற் செல்லவொட்டாமற்றடுத்தும், நன்மை விளைக்கத்தக்க
நல்வழியிற் செல்லாராயின் அவரை யவற்றிற் செலுத்தியும், தமக்குள் ஒருவருக்கு
ஏதேனுந்தீங்கு நேர்ந்தவிடத்து, அதைத்தனக்கு நேர்ந்ததாகப் பாவித்து, விட்டு நீங்கா
மற் கூடவே யிருந்து அனுபவித்தும் இங்ஙனம் ஒற்றுமை யுடைமையே சிநேக தரும
மாகும். இக்குணங்களையுடைய அறிவுடையோரோடு செய்தநட்பு சுக்கிலபட்சத்துச்
சந்திரன்போல முதலிற் சிறிதாயிருந்து வரவர வளரும்; அறிவிலாரோடு செய்த
நட்போ, கிருஷ்ணபட்சத்துச் சந்திரன்போல வரவரக் குறையும்.

ஆகையால் ஒருவன் வாழ்நாளில் உண்டாகக்கூடிய துன்பங்களை யணுகவொட்டா
மற் றடுக்கவும், துக்கம்நேர்ந்தவிடத்து மனமுருகச்செய்யாமல்
பொறுக்கச்செய்யவும் களிப்புடன் காலங்கழிக்கவும் அவசிய
மாய்ச் செய்யவேண்டுங் காரியம் நற்குணம் பொருந்திய நண்
பனைத்தேர்ந்தெடுத்து பிரிவன்றி யொத்து வாழ்தலேயாம். ஒருவனுடைய குணமுதலிய
வற்றைப் பாராமல் ஒருவனோடு நட்புக்கொள்ளலாகாது. பழிபாவங்களுக்கு அஞ்சுபவ
னெவனோ, அவனோடன்றி பிறரோடு சிநேகித்தல் கூடாது. நமக்கிதஞ் சொல்லிக்கண்
டிப்பவர் மட்டுமே சிறந்தநண்பராவர். மாசற்ற மனதுடையவரோடு மட்டுமே நட்புச்
செய்யவேண்டும். அப்படிப்பட்ட நட்பிற்கு எப்பொழுதுங் கூடவே யிருந்து பழகுதல்
அத்தனை அவசியமன்று; 'நெஞ்சத்தகநகநட்பதுநட்பு' என்றபடி நெஞ்சார நட்பதே நட்
பாகும். நட்டபின்பு விடுவது தீதாதலால் பார்த்தறிந்து நட்புச் செய்துகொள்ளவேண்
டும். நம்மைக்கடித்துக் கொள்ளுகிற பாம்பினோடும் பழகினபின்பு விடுவது தீதாகும்.
"நெல்லுக்குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்குமுண்டு." என்றவண்ணம்
இவ்வுலகிற் குற்றஞ் சிறிதேனுமில்லாதது ஒன்றுமில்லையாதலால் விரும்பிக்கொண்ட
நட்பினை விட்டுவிடுவது நன்றன்று. ஆறு, குளமுதலியவைக் கரையையுடைத்துக்
கொண்டுபோனாலும் ஜலத்தின்பொருட்டுப் பயிரிடுவோர் அவற்றை யடைப்பதுபோல
வே நமது நண்பர் நமக்கு வெறுப்பானவற்றைச் செய்தாலும் பொறுத்தலேவேண்டும்.
ஒருவர் பொறை யிருவர் நட்பாதலால் நட்டார் இருவருள் ஒருவர் பொறுத்தால்மட்டுமே
அந்நட்பு நிலைபெறும். நுண்ணுணர்வு கொண்டவர்களோடு கொண்டநட்பு விண்ணுலக
த்திருப்பதுபோல பேரின்பத்தைத்தரும். அறிவில்லாதவர்களுடன் கொண்டநட்பு நரக
வேதனையைத் தரும்.

ஆகையால் 'சேரிடமறிந்துசேர்' என்று ஔவை சொல்லியபடி இணக்கமறிந்து
இணங்கல்வேண்டும். "உற்றாரெல்லாம் உறவினரல்லர்' என்றவண்ணம் சிலவிடத்தில்
சுற்றத்தாரே பகைவர்களாதலு முண்டாதலால் ஆழ்ந்த நட்பினுக்கு உறவே காரண
மன்று. அப்படிக்கன்றி உறவினரே நல்ல நண்புடையவர்களா யிருந்தால் அது பொன்
மலர் நாற்றமுடையது போலாகும். தெய்வபக்தி யுடையவர்களுடைய நட்பு என்றும்
மாறாது மேன்மேலும் வளர்ந்தோங்கும். முதலில் நல்லாருடன் நட்புக்கொண்டால்,
பின்பு தீயாருடைய நட்பு சிறிதும் மனதிற்கொவ்வாது. அமுதமுண்டவர்க்கு வேம்பு
இனித்திருக்குமா. சிற்பியின் கைத்திறத்தினால் முப்பத்திரண்டு இலக்கணமும் பொருந்தி
நம்மோடு எதிரில் வந்து வார்த்தை சொல்லுகிறது போலிருக்கிற மரப்பாவையைப் பார்
த்த கண்ணுக்கு, கம்பத்தின்மேலேறி உட்கார்ந்திருப்பதுபோல சித்திரத்திலெழுதிய
குரங்குச் சிறந்ததாகத் தோன்றுமா. இவ்வாறே, நமக்கு ஏற்றவர்களோடு நட்புண்டா
னால் மாத்திரமே மனதுக்கு இனிமையாயிருக்கும். நட்பைப்பற்றி ஸிஸரோ என்பவர்
சொல்லியதென்னவெனில், ஜனங்கள், தங்களுக்கு ஐசுவரியம் செல்வாக்கு முதலியன
மிகுந்திருக்குங்காலத்தில், குதிரைகளையும் உயர்ந்த வஸ்திரங்களையும், சாமான்களையும்
வாங்குவதில் மிக்க ஊக்கங்கொண்டவர்களா யிருக்கிறார்களே யொழிய, இவைகளை
யெல்லாம்விட வாழ்நாளுக்கு மிக்க அவசியமானதும் விலையுயர்ந்ததுமான நல்ல சிநேகி
தனைத் தேடியடைய அவ்வளவு முயற்சி யெடுத்துக் கொள்ளுகிறதில்லை,

ஒருவனைத் தன்னிடத்தில் எத்தனை குதிரைகளும், நாய்களும் இருக்கின்றன
வென்று கேட்டால், உடனே அவைகளை அவன் கணக்கிட்டுச் சொல்லுவான். ஆனால்
எத்தனை சிநேகர்களிருக்கிறார்களென்று வினவினால் அவனாற் சொல்லமுடியாது. நம்மி

டத்தில் பழகுகிறவர்களோடு எல்லாம் நாம் மரியாதையாய் இருக்கவேண்டியதுதான்.
ஆனால் அவர்களை யெல்லாம் உண்மையான நேசர்களாய்ப்பாவிப்பது சரியன்று. தங்கள்
வீட்டுக்குச் சமீபத்தில் வசிப்பதினாலேயும், தன்னோடு ஒரே உத்தியோகத்திலிருப்பதினா
லேயும் அவர்களையுண்மையான சிநேகிதர்களாகக் கொள்வதைக்காட்டிலும் பிழைவே
றொன்றுமில்லை. பெரும்பாலும் நல்லோர்க்கு நல்லோரும், தீயோர்க்குத் தீயோரும்
சிநேகமாவது இயற்கை. இப்படிக்கன்றி சகவாசதோஷத்தினால் வேறுதலுமுண்டு.
சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒன்றுக்கொன்று ஒட்டாததுபோல நல்லோருக்குந்
தீயோருக்கும் ஆழ்ந்தநட்பு என்று முண்டாகாது. அப்படிக்கன்றி வேறு யாது காரணத்
தினாலே யாவது ஒருவேளைத் தெரியாமலுண்டானால் "நொய்யரிசி கொதி பொறாது"
என்றதுபோல் அவ்வாறு கொண்ட நட்பு நிலைபெற்றிராது. தீயவர்களோடு இணங்கியி
ருத்தலே தீதாகும். ஏனெனில் பின்பு இது பெருங் கேட்டை விளைவிக்கும். இதற்கு
ஒரு திருஷ்டாந்தம் :—

கிரேக்கு தேசத்தின் ராஜதானியாகிய ஆதேன்ஸ் என்னும் நகரத்தில் டைமான்
என்னும் பிரபு ஒருவர் இருந்தார். கொடையில் அவரைக் கர்

கதை.

ணனுக்கு நிகராகச் சொலலலாம். யார் எதைக் கேட்டாலுங்
கொடுப்பதே அவருக்கு ஆனந்தம். எந்த நாளிலும் எந்த வேளை
யிலும் அவருடைய மாளிகையில் பாட்டுங் கூத்தும் விருந்தும் வேடிக்கையுமாய் நித்திய
கல்யாணமாய் இருக்கும். எவரேனும் அவரிடத்திலுள்ள பொருளுக்கு ஆசைப்பட்டு,
அறியாததுபோல் அதை யென்னவென்று கேட்டால் சிறிதேனுந் தடை சொல்லாமல்
அதைக் கொடுத்துவிடுவது அவருக்கு பிறவிக்குணம். அந்நகரத்தில் யாரேனு மரிய
பண்டங்களை விற்கவேண்டி அவரிடஞ் சென்று அவற்றைக் காட்டினால், உடனே
அவர் எதிர்பேசாமல் சொன்னவிலை கொடுத்து வாங்கிக்கொள்ளுவார். அவரண்டை
யிருந்த கணக்குப்பிள்ளைகளும் நண்பர்களும் ஏற்றசமயங் கண்டபோதெல்லாம் அவரை
யிந்திரனென்றுங் குபேரனென்றும் புகழ்ந்துபேசிப் பொருளைப் பறிப்பதிலேயே நாட்
டமுடையவர்களாயிருந்து, அவர்ச் செல்வங் கரைந்தவுடன் அவரைக் கைவிட்டுக் காற்
றாய்ப் பறந்துபோனார்கள். டைமான், பெருங் கொடைவள்ளலாதலால், அவர் தமக்
குள்ளவற்றையெல்லாங் கொடுத்தது மன்றி, அதற்காகக் கடனும் படவேண்டியதாயி
ற்று. ஆகையால், அவர் தாம் செல்வ முடையவரா யிருந்தகாலத்தில் தம்மோடு அதிக
நேசமாயிருந்த லூஷியஸ், லூதலஸ், வெம்பிரோனிஸ் என்னும் பிரபுக்களிடம் தம்
வேலையாட்களையனுப்பி ஒவ்வொருவரிடமிருந்தும் ஐம்பது டாலெண்டு கடனாக வாங்கிக்
கொண்டு வரும்படி அனுப்பினார். அவருடைய வேலையாட்கள் அப்படியே லூஷியஸ்
ஸைக் கண்டுப் பணங் கேட்டபொழுது அவன் தேடிப்பார்த்துந் தான் அகப்படவில்லை
யென்று, போய்ச்சொல்லும்படி சொன்னான். இரண்டாவனாகிய லூகுலஸ் என்பவன்,
தன்னிடமிருந்த பணத்தைக் கொடுத்து அதற்கு முதல்நாள்தான் ஏதோ வொன்றை
விலைக்குக் கொண்டதாகவும், அதனால் தன் தோழனுக்குச் சமயத்தில் உதவி செய்யக்
கூடாமற் போயிற்றென்றுஞ் சொன்னான். மூன்றாவனாகிய வெம்பிரோனிஸ் என்
பவன் தன்னை மதியாமல் கடைசியில் தன்னிடம் பணத்துக்கு வரும்படி அனுப்பின
ராகையால் அது தன் கௌரவத்திற்குக் குறைவென்றும், ஆதலினாற் பணங் கிடையா
தென்று போய்ச் சொல்லிவிடலா மென்றுஞ் சொல்லியனுப்பினான். அன்றுமுதல்
டைமானுக்கு மனிதர்மேல் வைத்திருந்த விருப்பமெல்லாம் வெறுப்பாயிற்று. அதன்
பின்பு டைமானுக்கு மீண்டும் மிகப் பொருள் கிடைத்ததென்றாலும் அவர் அதன்மேல்
ஆசையை முற்றுமொழித்து அதைப் பிறருக்குக் கொடுக்கவும் விரும்பாமல் ஏகாந்தமாய்
வாழ்ந்து தன் காலத்தைக் கழித்தார்.

மேற்சொல்லிய டைமான் பிரபுவுக்கிருந்த நண்பரைப்போலில்லாமல் சுக துக்கங்
களுக் குடன்பட்ட நண்பர்களே சிறந்த நண்பராவர். சபையில்

நடக்கை.

ஒருவனுக்கு ஆடையவிழ்ந்துவிழும்போது எவ்வாறு அவனது
கைகள் விரைந்துசென்று உதவுகின்றனவோ அவ்விதமே ஆபு
த்துவந்தவிடத்து உதவவேண்டும்.



இதற்குத் திருஷ்டாந்தமாகஸைரகியூஸ் என்னும் பட்டணத்தில் தீயோனிஸியஸ்
என்னுங் கொடுங்கோல் மன்னனது ஆளுகைக்குட்பட்ட இர

தாமன், பிதியஸ் கதை.

ண்டு அத்தியந்த சிநேகிதர்களாகிய தாமன், பிதியஸ் என்னும்
இருவரில் தாமன் ஏதோ ஒரு குற்றத்திற்காகக் கொலை செய்
யப்படும்படி அக்கொடிய அரசனாற் கட்டளை யிடப்பட்டதும்
அப்பொழுது தாமன் தன் குடும்பத்தாரைப் பார்த்துவிட்டு வருவதற்கு உத்திரவளிக்
கும்படி அவ்வரசனை வேண்ட அதற்கு அவன் வேறு யாரையாவது பிணைபடுத்தினால்
மட்டுமேதான் அவனைப் போகவிடுவதாகச் சொன்னதும், அதற்குத் தாமனது உயிர்த்
தோழனாகிய பிதியஸ் என்பவன் அவ்வரசனுக்கு முன்வந்து தன் நேசனுக்குப் பிணை
பட்டு அவனை விடுவித்ததும், பிறகு கொலைசெய்வதற்குக் குறிப்பிட்ட சமயத்திற்குள்
தாமன் திரும்பி வாராததினால் பிதியஸ்ஸைக் கொலைசெய்யு மிடத்திற்குக் கொண்டு
போய் அவனைத் தூக்கிற் போடப்போகிற தருணத்தில் தாமன் வந்துவிட்டதும், பிறகு
அக்கொடியோனும் அவர்களது நட்பின் வலிமையைப்பார்த்து மனமுருகி அவர்களிரு
வரையும் விடுவித்துவிட்டதும் யாவருக்குந் தெரிந்த விஷயமே.

நமக்கு வேண்டியவ னென்பதும், வேண்டாதவ னென்பது மாபத்துக்காலத்திலே
தான் தெரியும். நாம் தீயனவற்றைச் செய்யப் புகுகையில் நமது நற்றோழர் சிறிதும்
ஆற்றப்பொறாது நம்மைக் கடிந்துக்கொள்ளுவார்; அவர் அப்படிக் கடிந்துக்கொள்ளு
வதும் "இனியவ ரென்சொலினு மின்சொல்லே, யின்னார்க்கனியு மொழியுங் கடுவே"
என்றபடி நமக்கு அது குற்றமாகத் தோற்றாது.

நாம் அடிக்கடி நம்முடைய நண்பர்க ளிருக்கு மிடஞ்சென்று அவர்களோடு சம்
பாஷித்துவரவேண்டும். இல்லாவிடில், எப்படி ஒரு பாதையானது ஒருவரும் அதன்
மேல் நடக்காவிடில் புற்பூண்டு முளைத்து சில நாட்களில் மறைந்து அது இருந்த விடந்
தெரியாமற் போகின்றதோ அப்படியே நண்பர்கள் அடிக்கடி சந்திக்காவிடில் அவர்கள்
நட்பாகிய பாதையானது மறதியென்னும் புல்லினால் மூடப்பட்டுக் கடைசியில் அந்த
நட்பு இருந்தவிடந்தெரியாமல் மறைந்துபோய்விடும்.

மேலும் நாம் பேசும் விஷயமானது குதிரைப் பந்தயம், குத்துச்சண்டை, விளை
யாட்டு இன்னும் இதைப்போல்வனவற்றையல்லாமல் நம்மோடு பழகுகிறவர்களுடைய
பொறுமையையும், விடாமுயற்சியையும் உதாரகுணத்தையும் மற்றுமுள்ள குணாதிசயங்
களைப்பற்றியும் சம்பாஷித்து அதினால் சந்தோஷ மடைவதே சிறந்தது என்று ஒரு ஆங்
கிலேய வித்துவான் கூறியிருக்கிறார்.

நண்பர்களில்லாத ஒருவனுக்கு இவ்வுலகம் ஒருகாடுபோலவும், ஜனங்கள் காட்டி
லுள்ள பிராணிகளைப்போலவும் காணப்படும். ஒரு நல்ல சிநே

நன்மைகள்.

கிதனால் பிரயோசன மென்னவென்றால் தன்னுடைய கஷ்
டங்களையும் சுகங்களையு மவனிடஞ் சொல்லித் திருப்தி யடை
வதற்கே. தேகத்தில் எந்தவிடத்தில் ஒரு புண் உண்டானாலும் அதை மருந்துகொடு
த்து ஆற்றிவிடலாம். ஆனால், மனதில் உண்டான புண்ணுக்கு ஒரு நல்ல சிநேகிதனை
விட சரியான மருந்து வேறொன்றுமில்லை. தன் நேசனோடு தன் சுக துக்கங்களைச்
சொல்லிக்கொள்ளுவதில் இரண்டுவித லாபமுண்டு. அவையாவையெனின், தன் சந்
தோஷத்தைச் சொல்வதினால் அது விருத்தியடைகிறது. தன் துக்கங்களைச் சொல்
வதினால் அது கொஞ்சங் குறைகிறது.

ஒருவனுக்குத் தன் மனதில் ஏதாவதொரு விஷயத்தைப்பற்றிப் பல சந்தேகமிருந்
தால் அதைப்பற்றித் தான் ஒருவனுடன் சம்பாஷிப்பதினால் தன் அபிப்பிராயங்களை
யெல்லாம் விவரமாய் எடுத்துச்சொல்லித் தன்சந்தேகங்களையெல்லாந் தீர்த்துக்கொண்டு
ஒருநாள்முழுதுந் தானே யோசனை செய்தாலும் அறியக்கூடாத பல விஷயங்களை ஒரு
மணிநேரஞ் செய்யுஞ் சம்பாஷணையினால் தெரிந்துகொள்ளுகிறான். ஆனால் இப்படித்
தெரிந்துகொள்வதற்காக நாம் சம்பாஷிக்க விரும்புகிறவர்கள் நமக்குப் போதிக்குந் திற
மையில் வல்லவராய் இருக்கவேண்டுமென்பது அவசியமேயில்லை. ஒரு கல்லில் ஒரு
சத்தியை (அக்கல்லுக்கு ஒரு பிரயாசமுமில்லாமல்) சாணை பிடிப்பதுபோல தன் எண்

ணங்களை யவனிடத்தில் வெளிப்படுத்துவதினால் அவனுடைய முயற்சியில்லாமலே தன் மனதைத் தெளிவாகச் செய்துகொள்ளுகிறான். ஆனால் தானே தன் மனதுக்குத் தோன்றினபடி நடந்துகொள்ளுவதைவிட ஒரு உண்மையான சிநேகிதனது யோசனையைக் கேட்டு அதன்படி நடத்தல் சிறந்தது. ஏனெனில் ஒரு மனிதனை ஸ்தோத்திரஞ் செய்வதில் அவன் மனதைவிட வல்லது யாதொன்று மில்லையாதலின் அப்படிப்பட்ட கெட்ட நண்பனது யோசனையாகிய அவன் சொந்த யோசனையைவிட ஒரு நல்ல நண்பனது யோசனையைக் கேட்டு நடத்தல் நன்று. அப்படி யோசனை செய்வதிலும், தன்னுடைய நட்வடிக்கை முதலிய குணங்களை நன்றாக அறிந்துள்ள நேசனிடத்தில்தான் எதைப்பற்றியாவது யோசனை செய்யவேண்டும். அப்படியல்லாமல், ஒரு சமயத்தில் ஒருவன் புத்திமதியையும் மற்றொருசமயத்தில் வேறொருவன் புத்திமதியையும் ஒருவன் கேட்பானாகில், எப்படி வியாதியினால் வருந்துகிற ஒருவன் தனது குணங்களை நன்றாக அறிந்து வழக்கமாய் மருந்துகொடுத்துக்கொண்டிருக்கிற ஒரு வைத்தியனை விட்டுவிட்டு வேறொரு வைத்தியனிடம் மருந்துவாங்கிசாப்பிட, அம்மருந்து அச்சமயத்தில் அவ்வியாதியைத் தீர்த்தபோதிலும், பிறகு அம்மருந்து தன் உடம்புக்கு வேறொரு பெரிய கெடுதியை யுண்டுபண்ணிதான் அதினால் பெரிய துக்கத்தை யனுபவிக்கிறானோ, அப்படியே கடைசியில் அவர்கள் கெட்ட புத்திமதியினால் தனக்குப் பெருந் தீங்கை விளைவித்துக்கொண்டு அதினால் நாசமடைவான். ஒரு அன்புள்ள சிநேகனுடைய முக்கியப் பிரயோசன மென்னவெனின் தன்னாலாகாத காரியங்களையெல்லாந் தன் நண்பனது உதவியினால் முடித்துக்கொள்ளுவதுதான். ஆகையால் அப்படிப்பட்ட சிறந்த குணத்தையுடைய நண்பர்களை யடையும்படியான புண்ணியத்தைச் செய்து அவர்களையு மடைந்தோமாகில் அவர்கள் தங்கள் வாழ்நாளில் மாத்திரமேயல்ல வேறுலகஞ் சென்றபோதிலும் நம்மைவிட்டுப் பிரிந்திராரென்பது நிச்சயம்.

E. சுப்பிரமணியம் பி. ஏ.

## சமாசாரக் குறிப்புகள்.

நீலகிரிமலையில் குன்னூரில் பெண்களுக்காக ஒரு ஐஸ்கூல் செண்ட் ஜோசப் மிஷனரிகளால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாம்.

மாதர்கள் இப்பத்திரிகைக்கு அடிக்கடி விடுகதைகளையும், நிருபங்களையும் எழுதி வருவார்களென நம்புகிறோம்.

பத்திராதிபர் இப்பத்திரிகை தாமதமாய் வெளிவந்ததைப்பற்றி மிக வருந்துவது யாவருக்கும் தெரியும். நமது கையொப்பநேயர்கள் தங்கள் சந்தாவையும் கூடிய சீக்கிரத்தில் அனுப்புவார்களென்று நம்புகிறோம்.

நமது பார்வைக்குவந்த புஸ்தகங்கள்:—மாமிகொலுவிருக்கை, மதிகெட்ட மனைவி, Hindu Fasts and Feasts, சாவித்திரி, எட்வர்ட் சக்ரவர்த்தி, Indian Progress; இவைகளைப்பற்றி நமது அபிப்பிராயம் அடுத்த பத்திரிகையில் வெளிவரும்.

நமது பத்திரிகைக்கு அநேக இடையூர்கள் வந்தமையால் தாமதித்தே பத்திரிகையைப் பிரசுரிக்கவேண்டிவந்தது. இத்தடவை பிப்ரவரி மார்ச்சு மாதத்திய பத்திரிகைகள் ஒன்று சேர்க்கப்பட்டுளது. ஏப்பிரல், மேமாதத்திய பத்திரிகையும் இவ்விதமிருக்கும். ஆயினும், இனி இவ்விதமிராது பத்திரிகையும் தாமதமில்லாமல் அந்தந்த மாதத்திலேயே பிரசுரிக்கப்படும்.

பிரைமரி உபாத்தியாயர் சங்கத்தின் முதல் வருஷோற்சவம் வெகு விமரிசையாக மார்ச்சுமீ 28வ நடந்தது. அப்பொழுது மிஸ்டர் எஸ். மார்ஸ்டன் சபைத்தலைவராகவிருந்தார். அக்காலத்தில் கீழ்தரப்படிப்பைப்பற்றி மிஸ்ஸஸ் யன். எ. கோர்ட்ரைட் என்றமாது உபந்நியாசித்தார். இது மிகவும் நன்றாகவிருந்தது. பின்பு சபாநாயகருக்கும், மிஸ்ஸஸ் கோர்ட்ரைட் என்ற மாதுக்கும் வந்தன மளித்தபின் சபை கலைந்தது. இப்பிரசங்கத்தை மொழிபெயர்த்து சீக்கிரத்தில் நமது பத்திரிகையில் பிரசுரிப்போம்.

Printed at the Ripon Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

353
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
17 JUN 1904
MADRAS.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. V. | Madras: April 1903. | No. 2.
புத்தகம் ௨. | சென்னப்பட்டணம், 1903வருஷம் ஏப்ரல்மீ | இல. ௨.

## FEMALE EDUCATION IN MYSORE.

## மைசூரில் பெண் கல்வி.

மைசூரில் பெண் கல்வி விருத்தியடைந்து கொண்டேவருகிறது. அங்கு "மகாராணியார் பெண்கள் காலேஜ்" ஒன்றிருக்கிறது. இதில் பெண்களுக்கு கல்வி கூடாதென்று சொன்ன பிராமணர்களும் கற்று வருகிறார்கள். இவர்கள் விருத்திக்குவருவது நலமே; ஆனால் மற்ற ஜாதியாரும் கல்வி கற்றுவரவேண்டும், மேலும் இதில் வயது சென்ற பெண்களும் படித்து வருகிறார்கள். லேடி சூபிரன்டெண்டாகிய மிஸ் பால்தோர்ப் பெண்களுக்கு படிக்க ஆசையுண்டாகும்படி மாதம் மாதம் உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் அதிகமாகப்படிக்க சக்தியில்லாதவர்கள் வேறு உபயோகமுள்ள மருத்துவத்தொழில், சங்கீதம், முதலியவைகளைக் கற்றுக்கொண்டு இதரர்களுக்குப் போதிக்கலாமென்றும், இங்கிலீஷும், கணக்கும் பெண்களுக்கு அதிக தவணை கொடுத்து கற்பிக்கலாமென்றும் சென்றவருடம் முயற்சி செய்தார்கள்.

மேலும் தேவராஜ பஹதூர் தர்ம மொன்றிருக்கிறது, இதில் சுமார் 50,000 ரூபா கவர்ன்மெண்டில் 100க்கு 5 வீதம் வட்டிக்குப் போடப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து வருடம் 2500 ரூ, வருகிறது, இது இந்து விதைவைகள் படித்து விருத்திக்கு வரும்பொருட்டு செலவழிக்கப்பட்டு வருகிறது, இவ்வேற்பாடு இந்தப்பண்டுக்கு காரியதரிசியாராகிய மிஸ்டர் A. N. நரசிம்ம ஐயங்காருடைய முயற்சியாலும் ஊக்கத்தாலும் ஊர்ஜிதத்திற்கு வந்ததென்று சொல்லத்துணிவோம், இவருக்கு பெண்கல்வியில் மிக அபிமானம். இவர் பிராமண விதவைகள் படும் கஷ்டத்தை நோக்கி இவர்கள் படித்து தங்களது சகோதரிகளுக்குப் போதித்து வருவார்களானால் எவ்வளவு நலமென்றும் பெண் கல்வியும் மைசூரில் விருத்தியடையுமென்றும் தமது அபிப்பிராயத்தை முன் திவானாயிருந்த சர். கே. சேஷாத்திரி ஐயரவர்களுக்குத் தெரியப்படுத்தினார். அவர் இவரது அபிப்பிராயத்தை அங்கீகரித்து விதவைகள் படிக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்தார். இவ்விதம் செய்ததினால் அநேகர் படித்துவருகிறார்கள், சென்றவருடம் 5 விதவைகள் பெங்களூரிலும் தும்கூரில் 5ம், சிக்பலட்பூரில் 3ம், க்ளோஸ்பெட், சிட்டல்கட்டா, தாலாக்காடு, கோலார் இவைகளில் ஒவ்வொன்றிலும் ஒருவராக படித்து வந்தார்கள். இவர்களைத்தவிர மகாராணியார் காலேஜியில் 18 விதவைகள் உபகாரச்சம்பளம் பெற்றும் படித்து வந்தார்கள். இவர்களெல்லாம் உபாத்திமார்களாகவும் மருத்துவவேலை செய்பவர்களாகவும் பழக்கப்படுவார்களென கேட்க சந்தோஷப்படுகிறோம். சுதேச ராஜ்யத்தில் பெண் கல்வி விருத்தியடைந்து வருவது அந்த ராஜியத்திற்கு கௌரவமல்லவா? நமது தேசத்தில் இரண்டு மூன்று வகுப்பு வரைக்கும் சிலரும் 4 அல்லது 5 வரைக்கும் சிலரும் படிக்கிறார்கள். அதற்குமேல் படிக்க முடியவில்லை, ஏனெனில் பெண் உபாத்திமார்களில்லையென அநேகர் சொல்லுகிறார்கள்; இது வாஸ்துவமே. இக்குறையைநீக்க மிஸ்கார் என்றமாது இந்து மகமதிய கைம் பெண்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுத்து கல்வி போதித்து வந்தால் இவர்கள் கல்வியபிவிருத்தியடைந்து மற்றவர்களுக்கு உபாத்திமார்களாக விருக்க முடியுமென அபிப்பிராயப்பட்டதை நமது கனம் டைரக்டரவர்களும் அங்கீகரித்து இவ்வருஷமுதல் இவ்வேற்பாட்டை ஊர்ஜிதத்திற்கும் கொண்டுவரும்படி உத்தரவு அளித்திருப்பதைக்கேட்க மிக சந்தோஷப்படுகிறோம்.



## பத்திராதிபர் குறிப்பு.

**பெண் கல்வி.**

இந்தியாவில் மொத்தமாக 447 உயர்தர பாடசாலைகளிருக்கின்றன. இவைகளில் சென்னையில் 209, பம்பாயில் 165, மற்றவை பர்மா, கல்கத்தா முதலிய விடங்களி லிருக்கின்றன. இவைகளில் படிக்கும் பெண்கள் தொகை 44,377, சென்னையில் மாத்திரம் 21,440, பர்மாவில் 5,807, அதாவது இது சென்னைக்கு இரண்டாவது, மற்ற விடங்களில் பெண்கள் குறைந்திருக்கிறார்கள்.

நமது சென்னையில் மாத்திரம் அதிக பெண்கள் படித்து வருவதற்குக் காரணம் சுதேச கிறிஸ்தவர்கள் ஊக்கத்துடன் படித்துவருவதே. இவர்கள் கல்வியிற்றேறி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பாடமும் கற்பித்து வருகிறார்கள். இவ்விதம் இவர்கள்செய்து வருவது நலமே.

**மிஸ்கார் என்ற மாதும் கைம்பெண்களுக்கு உதவியும்.**

மிஸ்கார் என்றமாது இந்து மகம்மதிய கைம்பெண்களும், கல்வியிற்றேறி இதர பெண்களுக்கு கல்வி போதிக்க சக்தியுள்ளவர்களாயிருக்க வேண்டுமென எண்ணங்கொண்டு அவர்கள் அவ்விதம் செய்ய மாதம் அவர்கள் சாப்பாட்டுக்கு பணம் கவர்ன்மெண்டார் கொடுத்து உதவ வேண்டுமென்று தமது அபிப்பிராயத்தை கனம் டாக்டர் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். கனம் டாக்டரவர்கள் இம்மாதுவின் அபிப்பிராயத்திற்கு இணங்கி அவர்களுக்கு அவ்விதம் உதவிசெய்யவும் ஏற்பாடும் செய்துவிட்டதைக் கேட்க நாம்மிக்க சந்தோஷப்படுகிறோம். மிஸ்காரும் டாக்டர் அவர்களும் நீடூழிவாழும்படி ஈசுவரன் கிருபை செய்வாராக.

**மிஸ்ஸஸ் பிராண்டர் மாது.**

இம்மாது பாடசாலைகளுக்கு இன்ஸ்பெக்டராக யிருந்து இப்பொழுது வேலையினின்று நீங்கியிருப்பதாகக் அறிகிறோம், இம்மாது இந்து மாதர்களுக்கும் பெண்களுக்கும் வேண்டிய உதவிகள் செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டுமென இம்மாதுமிக ஊக்கத்துடனும் பிரியத்துடனும் வெகு காலம் உழைத்து வந்தது யாவருக்கும் தெரியும் இவருக்கு இப்பொழுது வந்தனே

பசார பத்திரிகை அளிக்கவும் இவர் ஞாபகச்சின்னமாக யாதாவது செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதென கிறிஸ்டியன் காலேஜ் மகாஸின் பத்திரிகையின்மூலமாய் கேட்க மிகச்சந்தோஷப்படுகிறோம், இம்மாதின் சரித்திரம் இவருடைய உருவப்படத்துடன் நமது பத்திரிகையில் சீக்கிரம் வெளிவரும்.

மாது ஸ்ரீ பண்டிதை அசலாம்பிகையம்மாள்.

இம்மாது இம்மாதம் 25உயன்று கூடலூரில் கௌசல்யா இராணியாரின் திவ்விய சரித்திரத்தை அங்குள்ளவர்களுக்கு உபந்நியாசம் செய்ததைக் கேட்க மிக்கச்சந்தோஷப்படுகிறோம். நமது சகோதரிகளுக்கு கல்விபுகட்டவேண்டுமெனமிக்க அவா இம்மாது சிரோன்மணிக்கு உண்டென்பது நமது நேயர்களுக்குத் தெரியும்.

## பாலிய விவாகம்.

### ஓர் சம்பாஷணை.

கமலாக்ஷி:—விசாலாக்ஷி! என்ன நீ இங்குவந்து வெகு நாளாச்சுது உன்னைப்பார்க்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன் நீயே வந்துவிட்டாய், உன் குழந்தைகள் சௌக்கியமா?

விசாலாக்ஷி! க்ஷேமம் நானும் உன்னைப்பார்க்க எண்ணியிருந்தேன் நேற்றுதான் நான் இங்கு இன்னம 10 நாள் இருக்க ஏற்பாடாயிற்று. பழைய தோழியாகிய உன்னைப்பார்த்து விட்டுப் போகலா மென்று வந்தேன். உன்குழந்தைகள் க்ஷேமமா? 7 அல்லது 8வருஷத்திற்குமுன் உனக்குப்பிறந்த வனமாலிகை இப்பொழுது படிக்கிறாளா?

கமலாக்ஷி! ஆம் அவள் மூன்றாவது வகுப்பில் படிக்கிறாள்; அவளுக்கு கலியாணம் பண்ணவேண்டுமென்று எங்கள் பந்துக்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள், பற்பலசாதகங்களையும் அனுப்புகிறார்கள். உன்னைக்கண்டு எல்லாம் யோசித்துக்கொள்வோம் என்றிருந்தேன். நீயே வந்ததைக்குறித்து மிக்கச் சந்தோஷப்படுகிறேன்; உன் அபிப்பிராயத்தை எனக்கு சொல்லம்மா.



விசாலாக்ஷி! என்பெண்ணுக்கு வயது 10 ஆய்விட்டது இன்னும் படித்துக் கொண்டிருக்கிறாள், அவளுக்கு 12 வய தானவுடன் விவாகம் செய்யலா மென்று எண்ணியிருக்கிறோம இப்பொழுது என்ன அவசரம்?

கமலாக்ஷி! ஆமாம் அதுசரி யென்று தான் எனக்குத்தோன்றுகிறது, ஆனால் எல்லாரும் பரிகாசம் பண்ணுவார்களே, என்ன பண்ணுகிறது?

விசாலாக்ஷி! பரிகாசமா! என்னபரிகாசம்? நாம் திருடுகிறோமா அல்லது பொய் சொல்லுகிறோமா? நீ இவ்வளவு படித்திருந்தும் இப்படிச் சொல்லுகிறையே, சாஸ்திரத்திற்கு விரோதமில்லாமல் அவள் புஷ்பவதியாகுவதற்கு முன்னமே ஏன் விவாகம் செய்யக்கூடாது? அப்படி பண்ணினால் பரிகாசம் ஏன் செய்கிறார்கள்?

கமலாக்ஷி:—ஒன்று மில்லை ஏதாவது சொல்லுவார்களென்று தான் அஞ்சுகிறேன்.

விசாலாக்ஷி:—நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், இப்பொழுது பெரிய மனுஷாள் வீட்டிலும் இவ்விதம் தான் நடக்கிறது, தப்பென்ன? குழந்தைகள் நன்றாகப்படிக்க வேண்டாமா? முற்காலத்தில் மாதர்கள், எவ்வளவோ படித்துக்கொண்டிருந்தார்களே.

கமலாக்ஷி:—ஆமாம் அதுமெய்தான் நாம் இக்காலத்தில் அவ்விதம் செய்யமுடியுமா? நமது பெண்கள் படிக்கிற வழக்கமே கிடையாது. அவவிதம் படித்தாலும் இரண்டு மூன்று வகுப்புவரையும் தான் படிக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு அதிகமாக கல்வி புகட்டினால் நல்லதல்லவா?

விசாலாக்ஷி:—ஆம் நல்லதுதான் விவாகமானவுடன் கணவன் அவ்விதம் செய்யட்டுமே; தினம் ஒரு மணி நேரம் தனது மனைவிக்குப் போதித்து வந்தால் போதுமானது. எனது கணவர் எனக்கு அவ்விதம் செய்து வைத்ததையால்தான் இப்பொழுது எனக்கு சௌக்கியமாயிருக்கிறது, ஏன் இவ்விதம்செய்யக்கூடாது?

கமலாக்ஷி:—செய்யலாம் தகுந்த கணவனாகவிருக்க வேண்டும் அவன் கற்றவனாக யிருக்கவேண்டும பெண்களுக்கு கல்வி அவசிய மென்று தெரிந்தவனாயு மிருக்கவேண்டுமே.

b

விசாலாக்ஷி:—இது கஷ்டமல்ல கூடிய வரையிலும் நமது குழந்தைக்கு கல்வி போதித்து வருவோமானால் அவளுக்கு விவாகமானவுடன் தனது கணவனைக் கேட்டு படிப்பாள். அவரும் இவளுக்குச் சொல்லிக்கொடுப்பார். கற்றவருக்குத்தான் பெண்ணைக்கொடுக்க வேண்டும்.

கமலாக்ஷி:—நீ சொல்வது சரிதான் நீ சொல்லியபடியே எனது கணவரும் சொல்லுகிறார் அப்படியே செய்கிறேன், நீ அடிக்கடி உன் க்ஷேமத்தைக் குறித்து கடிதம் எழுதவேண்டும் நானும் அவ்விதம் செய்கிறேன்.

விசாலாக்ஷி:—நாழிகையாய் விட்டது நாளைக்கு வருகிறேன். எனக்கு உத்தரவு கொடுவென்று சொல்லவே கமலாக்ஷி, தாம்பூலம் குங்குமம் கொடுத்தபின் விடை கொடுத்து தனது தோழியை யனுப்பினாள்.

ஓர் மாது.

## கணவனுக்கு ஓர் புத்திமதி.

இந்நிலமையில் தான் ஒருவனுடைய நடவடிக்கைகள் அவனுடைய கஷ்ட சுகங்களுக்கு முக்கியமான காரணமாகின்றன.

முதலில் ஒருவன் ஒரு நல்ல பெண்ணை விவாகம் செய்து கொண்டதாக எண்ணிக்கொள்ளுவோம். பிறகு அவளது நல்லகுணத்துக்கும் கெட்டகுணத்துக்கும் இவனே உத்திரவாதியாகிறான். ஒருமனைவியின் இயற்கையான குணங்களும், கல்வி யினால் உண்டான குணங்களுந்தவிர மற்றவை, தன் கணவனாலேயே உண்டாக்கப்படுகின்றன. சாதாரணமாக ஒருவள் நல்லவளாவதும் கெட்டவளாவதும் தன் கணவனாலே தான். ஆகையினால் ஒருவன், தன் மனைவியை நல்லவளாகச் செய்யத் தன்னால் இயன்ற மட்டும் முயலவேண்டும்.

ஒருவன் தனக்கு ஆஸ்தி எவ்வளவு இருந்த போதிலும், கட்டும் செட்டுமாய்க் குடித்தனம் செய்ய வேண்டும் மென்கிற எண்ணத்தை தன்மனைவியின் மனதில் உண்டாக்கச் செய்யவேண்டும். தங்கள் விவாகத்தின் பலனாகக் குழந்தைகள் பிறக்கு மென்றும், பின் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடன்களை சரியாகச் செய்யவேண்டுமென்றும் எண்ணி பணத்தை வீணாகச் செலவழிக்காமல் ஜாக்கிரதையாய்க் குடித்தனம் செய்ய வேண்டும்.



முதலில் வேலைக்காரர்களை யேற்படுத்துவதைப் பற்றி சற்றுக் கவனிப்போம். வேலைக்காரர்கள் இல்லாமல் காரியம் நடக்காத வீடுகளில் வேலைக்காரர்களை நியமிக்க வேண்டியது அவசியந்தான். அப்படியில்லாமல்- புருஷன் மனைவி இரண்டேபேர் இருக்கும் சில வீடுகளில் கூட வேலைக்காரர்கள் ஏற்படுத்தப் படுகிறார்கள். வீட்டில் ஒரு குழந்தை யிருந்தால், வேறு யாராவது துணைக்கு ஒருவர் இருக்கவேண்டியது தான். அப்படிக்கன்றி சௌக்கிய மாகவிருக்கும் புருஷன் மனைவி இரண்டுபேருக்கு வேலைக்காரன் எதற்கு? இது வீண்செலவேயன்றி வேறல்ல. மேலும், ஒருவேலைக்காரன் இருப்பதினால் வீட்டில் இரண்டு மடங்கு செலவு ஆகிறது. வீட்டுக்காரர்களுக்கு வேண்டாவிட்டாலும் வேலைக்காரனுக்காகவாவது வேறு பதார்த்தங்கள் வாங்க வேண்டியிருக்கும். அவன் தின்பதல்லாமல் அவனுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுப்பதற்குக்கூட இவர்கள் தயாராய் இருக்கவேண்டும். அமெரிக்காவிலுள்ள ஸ்திரீகள் வீட்டுக் காரியங்கள் முழுதலும்தாங்களே பார்க்கிறார்கள். அவர்களுக்கு, தங்கள் காரியங்களைச் செய்து கொள்ளுவதற்கு அவமானமும் வீண்கர்வமும் கிடையாது. அவ்விடத்துப் புருஷர்களும் அப்படியே. அப்படி யிருக்க நம்முடைய தேசத்து இளையவர்கள் இப்படி வீணாய்ப் பணத்தைச் செலவழித்து நாசம் அடைவானேன்.

ஒரு சிறிய குழந்தைக்குச் சட்டை தைப்பதற்கும், கைகுட்டைகள் தைப்பதற்குங்கூட தையற்காரனிடம்போகவேண்டியிருக்கிறதே. இப்படிப்பட்ட சுலபமான காரியங்களை ஏன் பெண்களே செய்யக்கூடாது? அவர்களுக்குத் தெரியாவிட்டால் புருஷர்கள் ஏன் கற்பிக்கக் கூடாத? இப்படிப்பட்ட காரியங்களைச்செய்தால் அவமானமென்று எண்ணுகிறார்களே இதென்ன அநியாயம்!

பிறகு இளையமனைவியிடத்தில் ஒருவன் எப்படி நடந்துக்கொள்ள வேண்டியதென்பதைப்பற்றிச் சற்று யோசிப்போம். வயது முதிர்ந்த ஸ்திரீகளுக்கு, கணவன் எவ்வளவு கடூரமாயிருப்பினும், மனதில் அதிகமாய்ப்படாது. புதிதாய்க் கணவன் வீட்டிற்கு வந்த இளம் பெண்களுக்கோ என்றால், கணவனுடைய கோப முகத்தைக் கண்டபோதெல்லாம் இருதயத்தில் வேல பாய்ந்தது போல மிக்க வருந்துவார்கள். புருஷனும் மனைவியும் சேர்ந்தநாள் முதல் வரவர புருஷனுக்கு ஆசை குறைவது இயற்கை. ஸ்திரீகளுக்கோ வரவர அதிகப்படுகிறது. ஆகையால் எந்தக்காரியம் எப்படி நடந்த போதிலும் ஒருவன் தன் கோபத்தைத் தன் மனைவியிடம் காட்டாமல் நடந்து கொள்வது நலம். ஆனால் அவன் செய்யும் ஒவ்வொரு அற்ப காரியங்களுக்கும் அவளை வீண்ஸ்தோத்திரம்

செய்து கொண்டிருப்பது மூடத்தனம். அப்படிச்செய்வதினால் மனைவிக்கும் அக்கம் பக்கத்தார் களுக்கும் இவனிடத்தில் கௌரவக்குறைவும், அறுவருப்பும் உண்டாகின்றன. அப்படியன்றி கம்பீரியமான செய்கைகளால் அவளிடத்திலுள்ள அன்பைத் தெரிவிக்கவேண்டும். இவன் செய்யுங்காரியங்களெல்லாம் அவளுக்கு சுகத்தையும், நன்மையையும் தருவதாக விருக்கவேண்டும்.

தமது வீட்டிற்கு வரும் நண்பர்கள் உறவினர்கள் நற்குண நற்செய்கைகளுடையவர்களாய் இருக்கவேண்டும். இவன் போகிற இடங்களும் நல்லகாரியங்கள் செய்யும் இடங்களாயிருத்தல் வேண்டும் அப்படியன்றி கெட்டகுணமுடையவர்களோடு சேர்ந்து திரிந்து கொண்டிருந்தால், அவன் மனைவியும் வரவர தன்கணவனையே உதாரணமாகக்கொண்டு தானும் கெட்டவழியில் பிரவேசிக்கத் தொடங்குவாளென்பதற்குச் சந்தேகமேயில்லை. இவன் வெளியில் போய்த்திரியாமல் வீட்டிலேயே இருக்கத்தீர்மானித்தால், இவன் வெளியில் அடையும் இன்பத்தை விட வீட்டில் அதிக இன்பத்தை யடையலாம், தாய் தந்தை, மனைவி சகோதரன், சகோதரி குழந்தை முதலியவர் களினிடையில் அனுபவிக்கும் இன்பத்தைவிட வெளியில் அனுபவிக்குமின்பம் அதிகமா!

ஆனால், மனைவியை மிக்க அன்போடு நடத்தவேண்டுமென்பதினால், அவளுக்கு அடிமையாய் அவள் சொல்லியபடி ஆடவேண்டுமென்பது தாற்பரியமல்ல. அவள் நடந்து கொள்ளவேண்டிய கிரமப்படி நடக்கச் செய்யவேண்டுவது கணவனது கடமை. தனக்கு நியாயமாகத்தோன றியபடி மனைவி நடந்து கொள்ள வேண்டியது. அவள் செய்கிற காரியங்களுக்கெல்லாம் புருஷனே உத்திரவாதி யாகிறபடியால், அவளை கிரமப்படி இவன் நடந்துக்கொள்ளச் செய்யவேண்டியது. அவள் வாயாடியா யிருப்பின் அவள் வாயை யடக்க வேண்டியது. தனக்குச் சம்மந்தமில்லாத விஷயத்தில் தலையிட்டுக்கொண்டு கலகத்தை யுண்டாக்குவது ஸ்திரீகளின் இயற்கையாதலால், அவர்களை அப்படிச் செய்யவொட்டாமல் தடுப்பது அவசியம். அப்படியில்லாமல் அவள் போனபோக்கெல்லாம் விட்டு, அவள் சொல்லியபடி தானும் கேட்டுக் கொண்டிருந்தால், தன் வீட்டு வேலைக்காரர்களுக்கும், வீட்டு வாசலில் வரும் பிச்சைக்காரர்களுக்குங் கூட தன்னிடம் கௌரவம் இல்லாமல் இகழப்படுவாள்

(இன்னும் வரும்)

E. சுப்பிரமணியன். பி. ஏ.




# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. V. புத்தகம் ரு. | Madras: May 1903. சென்னப்பட்டணம், 1903ளு மேமீ | No. 2. இல. உ.


## கனவோ நினைவோ.

காவிரிந்து நதிக்கு வடக்கே ஒருவன் குதிரைமேல் ஏறிக்கொண்டு கொ
ஞ்சம் ஆகாராதிகளை எடுத்துக் கொண்டு வேறு தேசத்திற்குப்
போகப்புறப்பட்டான். இவன் வெகு தூரம் சவாரிசெய்ததனால்
களைத்துப்போய் சாயங்காலவேளையில் மரங்களடர்ந்த சோலை
யில் தங்கினான். அங்கு மரங்களெல்லாம் அடர்ந்து உயரமாக
வளர்ந்திருந்தன; காட்டு மிருகங்களோ அங்கு அநேகம்; இராத்திரி இருள் மூ
டிக்கொண்டது; அப்போது அப்பிரயாணி தன்னிடத்திலிருந்த ஆகாரத்தைப்
புசித்து சிறியதீவர்த்தி ஒன்றைவைத்துக்கொண்டு படுத்துக்கொண்டிருந்தான்.
கொஞ்ச நேரம் சென்றபின் ஒரு சிங்கம் வந்து அவனது குதிரையைக் கொ
ன்றது, அப்பொழுது ஒரு பயங்கரமான சப்தம் கேட்கவே இவன் துப்பாக்
கியை எடுத்துக்கொண்டு போய் குதிரையைப் பார்த்த பொழுது அது இறந்தி
ருக்கக் கண்டதுமல்லாமல் ஒரு சிங்கத்தையும் கண்டான். உடனே அச்சிங்கத்
தைச் சுடவே அது இறந்து போயிற்று. பின்பு இராத்திரிப்பொழுதை அங்
கேயேகழித்து விட்டு மறுதினம் காலையில் பிரயாணம்செய்யப் புறப்பட்டான்.
இவன் காலால் நடக்கவேண்டியிருந்தமையால் மிக கஷ்டப்பட்டுக்கொண்டு
வெகுதூரம் அக்காட்டின் வழியாக நடந்தான். கால்களில் முள்ளுகள் தைத்
தன; மிகவருந்தினான்; மணியோ 9 ஆய்விட்டது; பசி அதிகரித்தது; அப்பொ
ழுது ஒரு அழகான காட்டுக்கோழி தனது குஞ்சுகளுடன் போவதைக் கண்டு
நமக்கு நல்ல ஆகாரம் கிடைத்ததென எண்ணி அந்தக் குஞ்சுகளைப் பிடிக்கச்

சென்றான் ஒன்றே ஒன்று தான் அவன் கையில் சிக்கிக்கொண்டது. மற்றவைகள் பறந்து ஓடின. இதன் தாயோ மிக வருந்தி தன் குஞ்சையும் அதன் திருடனையும் கண்டு மிகவிசனப்பட்டுக் கொண்டிருந்தது. இவனும் அதன் தாயைக் கண்டு இன்னும் என்ன செய்கின்றதோ அதைப் பார்ப்போமென்று எண்ணி கொஞ்சதூரம் சென்று அந்தக்குஞ்சை ஓரிடத்தில் வைத்துவிட்டு சமயல் செய்யப் போனான். அப்பொழுது இதன் தாய் இக்குஞ்சினிடத்தில் வரும்; அழுவது போல் பாவனை செய்யும், பின்பு ஐயோ! உனக்கு இப்படி யாயிற்றுவென மறுபடியும் அழுதுகொண்டு போகும். இவ்விதம் செல்லுவதை அவன் கண்டு பச்சாத்தாப முடையவனாய் இதன்மேல் மிக இரங்கி அக்குஞ்சை விட்டு விட்டான். தாய்க்கு அப்பொழுது உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. குஞ்சும் தான் விடுபட்டதைக் கொண்டு மிக மகிழ்ச்சியுடன் தன் தாயைச்சுற்றி சென்றது. தாயோ தனது குஞ்சு க்ஷேமமாய் வந்ததைக் குறித்து அப்பிராணிக்கு "நன்றி மறவேல்" எனபதற்குச் சரியாக வந்தனம் செய்வது போல் அப்பிராணியை இரண்டு மூன்று தரம் பார்த்து விட்டும் சந்தோஷத்தால் கூச்சலிட்டும் தன் குஞ்சுகளுடன் அக்காட்டினுள் சென்றது. இவன் ஜீவகாருண்ணியமுள்ள மனிதனல்லவா? இவன் மனது சந்துஷ்டியடைந்திருக்குமல்லவா? இவ்விதமல்லவோ மனிதர்கள் வாயில்லாப் பிராணிகளிடத்தில் பக்ஷமாயிருக்கவேண்டும்? அவைகளை இம்சிக்கலாமோ. காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா? அதுபோல் உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் முள்ள குழந்தைகள் பொன் குஞ்சுதான், அவர்களுக்கிருக்கும் பிரியமோ அதிகமென் பதற்குச் சந்தேகமில்லை. இவன் குஞ்சை தீங்கு செய்யாமல் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு விட்டதே இவனுக்கு ஒருவித உணர்ச்சியை உண்டாக்கியது. இவன் தன்னிடத்திலிருந்த கோதுமையை எடுத்து ரொட்டி செய்து போஜனம் செய்துவிட்டு அன்று இராத்திரி அதேயிடத்தில் கொஞ்சம் சத்தைகளை எடுத்து மெத்தையாகச் செய்து, பின்பு ஒரு சிறிய குடிசையாக மேலே சிறு மூங்கில்களை வைத்து அதன் மீது சத்தைகளை நிரப்பியபின் படுத்துக் கொண்டான்.

அப்பொழுது சந்திரன் மரங்களின் வழியாக இவன் கண்ணுக்குத் தென்பட்டது. மரங்களின் கிளைகள் அசையும் பொழுது மினு மினு பூச்சியின் வெளிச்சமும் பாஸ்பாஸ் என்ற ஓர் வகை அக்கினியின் பிரகாசமும் தாண்டவம் ஆடுவது போல் தோன்றின. நிச்சப்தமான அக்காட்டில் ஆகாயத்திலுள்ள வெண்மையான காந்தியும், செடிகளின் அழகும், அவைகள் காற்றால் அசையும்பொ



ழுது உண்டாகும் ஒருவித இன்மையான சப்தமும் இவன் மனதைச் சந்தோஷப்படுத்தின. இவனும் அவைகளைக் கவனித்துக்கொண்டேயிருந்தான், இவனது குதிரை இறந்த ஞாபகம் வந்தவுடன் இவன் விசனம் அடைந்தபோதிலும் பகலில் இவன் கோழிக்குஞ்சுக்குச் செய்த நன்மையானது யாவற்றையும் மறந்திற்று. இவன் சிலநேரம் கடவுளை துதி செய்து விட்டு ஏதோ யோசிப்பவன் போல் யோசித்துக் கொண்டிருக்கையில் அதிக சிரமத்தால் நித்திரை செய்து விட்டான், அப்பொழுது அவன் எதிரில் ஓர் தேவதூதன் தோன்றி பின் வருமாறு சொன்னதாகக் கனவு கண்டான்:—"நீ பயப்படாதே, உனக்கு இராஜப் பதவி அவசியம் கிடைக்கும்; நீ இன்று ஒரு பிராணியைக் கொல்லாமல் விட்டு விட்டதைக்குறித்து கடவுள் மிகச்சந்தோஷப்பட்டார், உனக்கு அதற்காகத் தான் மேற்கூறியவெகுமதி கிடைக்கும். இனியும் இவ்விதமே செய். பிராணிகளிடத்தில் அன்பு பாராட்டினதைப்போல் ஜனங்களிடத்திலும் அன்புவை" என சொல்லி விட்டு தேவதூதன் மறைந்தான். உடனே அவன் கண்விழித்துக்கொண்டு அங்கு மிங்கும் பார்த்து விட்டு இது என்ன கனவோ அல்லது நினைவோ வென சொல்லிக்கொண்டு ஆகாயத்தைப்பார்த்தான். சந்திரன்பிரகாசித்துக்கொண்டிருந்தது, மறுபடியும் தூங்க அவனுக்கு இஷ்டமில்லை. உடனே எழுந்து பிரகாசித்துக்கொண்டிருக்கிற நட்சத்திரங்களைப் பார்த்தான். அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. பனியோ அதிகமாயிருந்தது, எங்கு பார்த்தாலும் புகை சூழ்ந்தாற்போலிருந்தது, குளிரோ அதிகம் உடனே அவன் சில செத்தைகளை எடுத்து நெருப்புபோட்டு கனல் வைத்துக்கொண்டான், பொழுது விடிந்தவுடனும் சுமார் 7-மணி வரையிலும் நெருப்பண்டையிலிருந்துவிட்டு பின்பு கொஞ்சம் ரொட்டி செய்து புசித்து அங்குள்ள இலைகளில் விழுந்திருந்த பனி ஜலத்தை திரட்டி எடுத்து பானம் செய்துவிட்டு கடவுளையும் ஸ்துதி செய்த பின் பிரயாணம் செய்தான். இவன் நடந்துபோகையில இவன் கண்ட கனவைப் பற்றி யோசிக்கலானான். என்ன உடுக்கத் துணியும், குடிக்கக் கஞ்சியும், இருக்க வீடு, இல்லாதவும் அனாதியாயுமிருக்கிற எனக்கு எப்படி ஒரு இராஜ்ஜியாதிபத்தியம் கிடைக்கும்! இது முடியாத காரியமென்றே சொல்லவேண்டும்.

எது நம்மால் முடியுமோ அதையல்லவா நாம் செய்யமுடியும், இப்பேர்ப்பட்ட அசாத்தியமான காரியம் யாரால் செய்யமுடியும் என யோசித்துக்கொண்டு காட்டின் வழியாகவே நடந்து சென்றான். மணியோ சுமார் 11 அல்லது 12 யிருக்கும். அப்பொழுது எங்கேயாவது கொஞ்சநேரம்

தங்கலாமென்று நினைத்து செல்லுகையில் பேச்சுக்குரல் கேட்டது. இங்கு எங்கேயோ மனிதர் குரல் கேட்கிறதே என்று சொல்லிக்கொண்டு போகையிலேயே 7 அல்லது 8 மனிதர்கள் கும்பலாக உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டு மெதுவாகச் சென்றான்.

இப்பிரயாணி அம்மனிதர்களைக் கண்டவுடன் இவர்கள் நல்லவர்களாக விருந்தால் நலம். ஒருக்கால் துஷ்டர்களாக விருந்தால் என்ன செய்கிறது என யோசித்த பின் எவர்களாக விருந்தாலும் சரி நான் அவர்களிடம் சென்று சமீபத்தில் கிராமமிருக்கிறதாவென கேட்கிறேன் என எண்ணிக்கொண்டு அவர்களிடத்தில் தைரியமாகச்சென்று ஐயா! சமீபத்தில் கிராமம் எதாவது இருக்கிறதோவென கேட்டான். அவர்களிலொருவன் சுருட்டு பிடித்துக்கொண்டும் சிலர் பேசிக்கொண்டும் மற்றவர் கனல் காய்ந்துக்கொண்டுமிருந்தார்கள். இவன் கேட்ட கேள்விக்குஅவர்களிலொருவன் எழுந்து இவனிடத்திற்கு வந்து உன்னுடைய பிரயாணத்தை இத்துடன் நிறுத்தவேண்டுமென்று நினைக்கவில்லையா யென கேட்டான்.

"ஆம், அது நிச்சயந்தான்; ஆனால் நீ சரியான பாதையைக் காண்பித்தால் நான் அவ்விதம் செய்ய முடியும், இல்லாவிட்டால் வீண் வாதத்திற்கு வர நான் ஆளல்ல." என்று சொன்னான் பிரயாணி.

"பேஷ்! நல்லது! வீண் வாதமா? ஆனால் இக்காட்டின் வழியாகச் செல்லுகிற பிரயாணிகள் தாங்கள் க்ஷேமமாய் செல்லுவதற்காக பணம் கொடுக்கிற வழக்கம்."

"எனக்கு வழியும் காட்டவேண்டாம், என் க்ஷேமத்திற்காக ஒரு காசு கூட கொடுக்கமாட்டேன், நீ உன் வேலையைப் பார்."

ஆ! ஆ! வெகு நேர்த்தி! நீ எட்டு மனிதர்களுக்கு ஈடாகுவையா? புத்தியுடன் யோசித்து தாழ்ந்த தொனியுடன் பேசு. நாங்கள் வழிப்போக்கர்களால் ஜீவிக்கப்படுகிறோம். அவ்விதம் வழிப்போக்கர்கள் இவ்வழியாகச் செல்லாவிட்டால் இக்காட்டிலுள்ளதைக்கொண்டு புசித்து ஜீவிக்கின்றோம், உன்னிடத்திலுள்ள பணம், துணி, ஆகாராதிகள் முதலியவைகள் எங்களுக்கு வேண்டும், நாங்கள் இவ்விதம் கேட்கும்போது நீ மறு பேச்சு ஒன்றும் பேசக்கூடாது.



"இப்பொழுது நான் திருடர்கள் முன்பாக இருக்கிறேன்போல் தோன்றுகிறது."

"என்னவென்று நினைத்துக்கொண்டாயப்பா?"

"நல்லது; இந்த பயமுறுத்தலுக்கும் உங்களுக்கும் நான் கொஞ்சமாகிலும் பயப்படமாட்டேன், உனக்கு உதவிசெய்ய இந்த 7 அல்லது 8 பேருக்கு பதிலாக 200 பேர் வந்தாலும் சரி நான் அஞ்சவேமாட்டேன்."

அத்திருடன் சிரித்தான்; பின்பு தனது தோழர்களைப்பார்த்து "இவன் மகாமுரடன் போலிருக்கிறது. நாம் செய்யவேண்டியதைச் செய்தால் தான் இவனுக்குச் சரிப்படும். வீணாக இவனுடன் வாதாடுவதில் பிரயோஜனமில்லை" என சொல்லிவிட்டு பிரயாணியைப்பார்த்து "அடே! தைரியமிருந்தால் சாமான்களை யெல்லாம் கீழே வைத்துவிட்டு குத்துசண்டைக்குவா பார்ப்போம் உன்சாமர்த்தியத்தை" என உரக்க கோபத்துடன் சொன்னான்.

"என்சாமான்களைக் காப்பாற்ற வேண்டியதவசியம், உயிர்போனாலும் போகிறது. கடவுள் கிருபைமாத்திரம் வேண்டியது. இவர்களுக்கிணங்கக் கூடாது. மகாகொடியவர்கள்," என சொல்லிக்கொண்டு சாமான்களை கீழே வைத்துவிட்டு "வா அடா துஷ்டா! ஒரு கை பார்ப்போம், உயிர் சாஸ்வதமன்று ஆறிலேயும்சாவு, நூறிலேயும்சாவு! இப்படியிருக்க, துராக்கிரதமாய் என்னை வம்புச்சண்டைக்கு இழுக்கிறீர்கள், ஓ திருடர்களே! வாருங்கள் எல்லாரும் சண்டைக்கு என்று கெம்பீரத் தொனியுடன் சொல்லி, ஒரு மரத்தண்டைச்சென்று தனது சாமான்களை யெல்லாம்வைத்து உருவியகத்தியுடன் இவர்களுடன் சண்டைசெய்ய வந்துவிட்டான்.

திருடர்களோ அம்பு பெட்டிகளையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு இவனுடன் சண்டைசெய்ய வந்தார்கள். சண்டையோ வெகுநேரம் நடந்தது, பிரயாணி ஒருவன் 8 பேர்களுடன் ஒண்டியாக எவ்வளவு நேரம் சண்டைசெய்ய முடியும்? இவ்வளவுநேரம் தைரியமாகச் செய்ததே இவனுடைய வீரத்தன்மையையும், பராக்கிரமத்தையும் காண்பிக்கிறதல்லவா? கடைசியாக இவனுடைய கை முறிபட்டுபோகவே மூர்ச்சையடைந்து கீழேவிழுந்தான், உடனே திருடர்கள் ஓடிவந்து இவனுடைய சாமான்களைப் பரிசோதித்துப்பார்க்கையில்

ஒன்று மகப்படவில்லை. சீ. சீ. ஒன்றுமில்லையே, வீணாகத்தான் சண்டை செய்தோம். ஆயினும் இவனை நமது கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளுவது பிரயத்தினம் செய்வோம் என்று சொல்லிக்கொண்டு அவன்கையைப்பார்க்கையில் ஒரு கை ஒடிந்திருந்தது. அதை ஒன்றுக்கட்டி வேண்டியமருந்துகளையும் போட்டார்கள்; பின்பு இவனை தாங்களிருக்கும் இடத்திற்கு தூக்கிக்கொண்டு போனார்கள். அங்கு எட்டு குடிசைகள் தானிருந்தன; ஒவ்வொன்றிலும் ஒருசம்சாரமிருக்கவும். இவனுக்காக உடனே ஒரு குடிசையைக்கட்டி அதில் படுக்கவைத்து இவனுக்குவேண்டிய ஆகாரத்தையும் கொடுத்தார்கள். இரண்டுமூன்றுதினங்கள் சென்றபின் கைகொஞ்சம் சுவாதீனத்திற்கு வந்தது, உடனே அவர்கள் இவனிடத்திற்குச் சென்று "இன்னும் இரண்டு மூன்று தினத்தில் கை சௌக்கியமாய்விடும், நீ எங்களுடன் சேர்ந்து எங்கள் தொழிலையும் கைப்பற்றவேண்டும், நாங்களோ அசல் திருடர்கள், எங்கள் தொழிலோ திருடுவதுதான்; இதற்கு தீவிரபுத்தியும், திடமான மனதும், சுறுசுறுப்புமிருக்க வேண்டியதவசியம். நீயோ மகாவீரனாயிருக்கிறாய், நீ எங்களுக்கு உச்சமான மானவன் என்பதற்குத்தடையில்லை, சாமான்களிருக்கிற வரைக்கும் வெளியில் செல்ல வேண்டியதில்லை. சாமான்களில்லாத காலத்தில், வெளியிற்சென்று வழிப்போக்கரைக் கண்டவுடன் கொள்ளையடித்துக்கொண்டு வரவேண்டியது; நீ என்னசொல்லுகிறாய்?" என்று திருடர்களிலொருவன் சொன்னான்.

"நான் பயப்படுகிறேன்; எனக்கும் அத்தொழிலுக்கும் வெகுதூரம், என் மனச்சாக்ஷி அப்பேர்ப்பட்ட கெட்டகாரியங்களுக்கு இடம்கொடாது. என்னை நீங்கள் நம்பவேவேண்டாம்; அவ்விதம் செய்வீர்களேயானால் நான் உங்களுக்குத் துரோகம் செய்யவேண்டிவரும்" என்று மறுமொழி பகர்ந்தான்.

"அது எங்கள்பாடு; ஒரு தைரியவான் தனது தைரியத்தைப் போக்கடித்துக்கொள்ளாமல் கௌரதையைக் காப்பாற்றிக்கொள்வான், பயங்காளிகள் தான் துரோகசிந்தனையுடையவர்கள். ஆகையால் உன்னை நாங்கள் நம்புவோம்" என்று சொன்னார்கள் திருடர்கள்.

"நீங்கள் இப்படிச்சொல்வது சரியல்ல; ஏனென்றால் தைரியசாலிகள் எப்பொழுதும் கெட்டகாரியங்களைச் செய்யமாட்டார்கள். அவர்களை அப்பேர்ப்பட்ட விஷயங்களைச் செய்யச்சொல்வது மகாதப்பிதம். அவர்கள் கெட்டவர்



களை நீக்கமுயல்வார்கள், அப்படிச்செய்வதுதான் கண்ணியம், அதுதான் தர்மம். அப்போதுதான் கடவுள் சந்தோஷப்படுவார்" என்று சொன்னான்.

"உன்னை நாங்கள் யோக்கியன் என்று சொல்லவேயில்லை; நீ தைரியவானென்றுதான் சொன்னோம். இப்பொழுது நீ யோக்கியனுமல்ல, தைரியவானுமல்ல, ஆனால் ஒரு அடிமையென்றே சொல்வோம். ஆகையால் நீ அடிமையாகயிரு, எங்களுக்கு ஆக்ஷேபமில்லை" என்று சொன்னார்கள்.

"பயமுள்ளவர்கள் அபாயத்திலிருக்கும்பொழுது தைரியவான்களாவார்கள், என் கை ஒடிந்திருக்கும்பொழுது என்னை நீங்களிவ்விதம் நிந்திக்கலாமா? இது உங்களுக்குத்தகுமா?" வென்று கேட்டான்.

திருடர்கள் இவன் சொன்னதைக்கேட்டு இவன் பிரயோஜனமற்றவன் என்று எண்ணி "உன்னை இவ்வளவு நாள் காப்பாற்றினோம், எங்கள் கஷ்டத்திற்குத்தகுந்த கூலி உன்னிடத்தில் கிடையாது, ஆகையால் உன்னையாருக்காவது விற்க உத்தேசித்திருக்கிறோம்" என்றுசொல்லவே அவனும் ஆம்! அதுவே சரி! அவ்விதமே செய்யலாம் என்றான்.

அவர்கள் இவனை யிட்டுக்கொண்டு காட்டுக்கு வெகுதூரம் சென்றார்கள். பிரயாணிக்கோ கைவலி அதிகமாயிருந்தது, பாரம் நடக்கமுடியவில்லை, என்ன செய்வான்! பேசாமல் இதுவும் நமது கஷ்டமென்று எண்ணிக்கொண்டு சென்றான், ஒருகிராமம் தென்பட்டது. அங்கு இவர்கள் போனவுடன் ஒரு வியாபாரியைக்கண்டு தங்களிடத்தில் ஒரு அடிமையிருக்கிறானென்றும் தக்க வரும்படி கிடைக்கும் பக்ஷத்தில் அவனை விற்க அவர்களுக்குச் சம்மதமென்றும் சொன்னார்கள்; அந்த வியாபாரி அவர்களுக்குப் பணம் கொடுத்து அந்தப்பிரயாணியாகிய அடிமையை விலைக்குவாங்கிக்கொண்டு தனது வீடு சென்று அவன் கை இன்னும் பலஹீனமாயிருப்பதைக்கண்டு அதற்குத்தகுந்த மருந்தைப்போடும்படி தனது வேலைக்காரர்களிலொருவனுக்கு உத்தரவு செய்தான்; இரண்டு மூன்று தினம் சென்றபின் அவன் கை சௌக்கியமடைந்துவிட்டது. பிரயாணியும் முன்னைவிட பலசாலியாக காணப்பட்டான்; வர்த்தகன் தன்பணம் வீணாகப்போகவில்லை, இந்த அடிமையைவிற்றால் தக்கலாபம் கிடைக்குமென்று எண்ணினான்; பின்பு தனது வேலைக்காரர்களை கூப்பிட்டு இவனை நன்றாகபோஷித்து வரும்படி உத்திரவளித்தான்; அவ்விதமே அவர்களும் செய்துவந்தார்கள். சிலதினங்கள் சென்றபின் இந்தவியாபாரி தன்னிடத்

தில் ஒரு கொழுத்தவனும அழகுள்ளவனுமான ஒரு அடிமையிருக்கிறானென்றும் இவனுக்கீடாக ஒருவனும் அத்தேசத்தில் இல்லையென்றும் விளம்பரப்படுத்தினான். அநேகர் வந்துபார்த்து சந்தோஷப்பட்டு விலை அதிகமென்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள், வியாபாரிமிகவருந்தி ஐயோ! இவ்வளவுசிரமப்பட்டு இவனை போஷித்துவந்தும் தக்கலாபம் கிடைக்கவில்லையே; இனிநாம் எவ்விதமாய் இவனைத் தொலைக்கிறது? சும்மாவிடுவதும் தகாது; நமக்கு ஏதாவது கொஞ்சம் லாபம் கிடைத்தாலும்போதும் என நிச்சயம் செய்துகொண்டு பிராணியாகிய அடிமையினிடத்தில்வந்து "உன்னை உன் இஷ்டப்படி விட்டுவிட உத்தேசிக்கிறேன் உன் இஷ்டமென்ன" வென கேட்டான்.

"பசியால் வருந்துபவனை உனக்கு அன்னம் வேண்டுமாவென கேட்பதுபோலிருக்கிறதே! எனக்கு பூர்ணசந்தோஷம்தான்" எனப்பகர்ந்தான்.

அப்படியானால் நீ இவ்வளவு நாளிருந்ததற்குப் பணம் கொடுக்கவேண்டாமோ? என்றான்.

"என்னத்திற்காக" "எப்படி" என்றான்

உன்னைக் காப்பாற்றியதற்காகப் பணம் கொடுக்கவேண்டும்."

ஆ! ஆ! வெகுநன்றாக விருக்கிறது! நான் அவ்விதம் செய்யமாட்டேன், நீ மகாதுஷ்டன் என்னைக்கெடுக்க நினைக்கிறாய். உன்னைத்தகுந்தபடி தண்டிப்பதே உனக்கு நான் கொடுக்கப்போகும் பணம். வேறொன்றுமில்லை என கோபாக்கினியுடன் உரத்துச் சொன்னான்.

அந்தவியாபாரிக்கு வருத்தமும், கோபமும் இவன் சொன்ன சொற்களால் உண்டாயின; ஆனால் என்னசெய்யமுடியும்! அடிமையோ பலமுள்ள வீரன், உண்மைபேசுபவன்; தெய்வபக்தியுள்ளவன், இவன் தேகத்தில் தேள் கொட்டியமாதிரியிருந்தது. ஒருதரம் ஒற்று அடிமையைப்பார்த்தான், பற்களை காகாவென்று கடித்தான். ஆ ஆ உ ஊ வென கூச்சலிட்டான், ஒன்றுக்கும் அடிமை பயப்படக்கூடியவனல்ல வென்பதை அறிந்து வேலைக்காரர்களையழைப்பித்து இவனை அதிகமாக வேலைசெய்யும்படியும், இவனுக்கு ஆகாரம் குறைத்துப்போடும்படி ஆஞ்ஞாபித்தான், அவர்களும் தங்கள் எஜமான் உத்திரவுபிரகாரம் நடந்தார்கள், பிரயாணியோ பலவேலைகளைச் செய்யவேண்டி



யிருந்தது, மிககஷ்டப்பட்டுக்கொண்டு தெய்வமே நமக்குத்துணையென எண்ணிக்கொண்டிருந்தான். இவ்விதம் சிலதினம் தான் இவன் செய்யவேண்டியிருந்தது, கடவுள் கிருபையும் இவனுக்கு வந்து விட்டது.

ஒருநாள் காஸ்மீரதேசத்தரசன் இவனைப்பற்றி அதிகமாக கேள்வியுற்றான். அநேகர் இவ்வடிமை மகத்தான பெருந்தன்மை யுடையவனென்றும், மகாவீரனென்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்; இவைகளெல்லாம் இராஜன் காதில்பட்டன. இராஜனுக்கு இவனை நோகபார்க்கவேண்டுமென்ற எண்ணம் உதித்துவிட்டது; உடனே அரசன் அவ்வடிமையிருக்கும் விடத்திற்கு தானேசென்று அவ்வடிமையைப்பார்த்து இவனிடத்தில், தைரியம், வீரத்துவம், தயாளகுணம், தெய்வபக்திமுதலிய நற்குணங்களிருக்கக்கண்டு மிகமகிழ்ந்து அந்த வியாபாரிக்கு வேண்டியபணத்தையளித்து விட்டு இந்த அடிமையை தனது அரண்மனைக்கு யிட்டுக்கொண்டுபோனான். இவ்வளவு கஷ்டங்களைப்பட்ட இந்தப்பிரயாணிக்கு நல்லகாலம் வந்துவிட்டதென்றே சொல்லலாம். இவனுக்கும் ஒருவித சந்தோஷமுண்டாய் விட்டது; முகமும் தாமரை புஷ்பம் போலிருந்தது. இராஜா கிரகத்தில் யாவருடனும் சந்தோஷமாகவே பேசிக்கொண்டிருந்தான்.

அந்த அரசன் இந்த அடிமையை பக்ஷமாக வளர்த்து வந்ததும் தவிர இவனுக்கு வீட்டில் ஒருவேலைசெய்யும்படி உத்திரவு அளித்தான். அடிமை தன் வேலையைக் கிரமமாகவும் எஜமானன் மெச்சும்படியாகவும் செய்து வந்தான். இவ்விதம் இவன் செய்துவந்ததானது எஜமானனாகிய அரசனுக்கு மிகச் சந்தோஷமுண்டாகி இவனை உயர்ந்த பதவியை யுடையபடியும் செய்தது. அரசன் தன் இராஜியத்தில ஒரு உயர்ந்த உத்தியோகத்தில் இவனை அமர்த்தினார். இவ்வடிமை யாவரும் இவன் மகாபுத்திசாலியென்றும் உழைப்பாளியென்றும் பக்ஷபாதமின்றி வேலைநடத்துவோன் என்றும் சொல்லும்படியாய் வேலைபார்த்து வந்தான், இவ்வளவு பெருமைவாய்ந்த அடிமையை ஒருநாள் அரசன் பார்த்து "அப்பா உன் விருத்தாந்தம் முழுமையும் கேட்க விருப்பமுடையவனாயிருக்கிறேன்" என்று கேட்கவே அடிமை பின் வருமாறு மிகவணக்கத்துடன் சொல்லுகிறான்:—

"மகாராஜாவே! என் சரித்திரம் சுருக்கமானதுதான், நான் காஷ்மீர தேசத்திற்கு வடக்கிலுள்ள சோமுகி என்ற சிற்றரசன் வம்சத்தைச் சேர்ந்தவன்,

நான் இப்போது அடிமையா யிருந்தபோதிலும் நான் இராஜவம்சத்தைச் சேர்ந்தவன், நான் ஏழையா யிருந்தபோதிலும் தங்களுடைய அநுக்கிரகத்தால் சுகமாக காலம் கழித்து வருகிறேன், நான் இளம் பிராயத்தில் படித்து வந்தேன், வில்வித்தையிலும் தேர்ச்சி அடைந்திருக்கிறேன், யுத்தம் செய்யவும் எனக்குத்தெரியும். இவைகளெல்லாம் எனது தந்தையால் கிடைத்தன. அவர் மகாபுத்திமான்; தமது குமாரனுக்கு கல்விதான் துணையென்று எண்ணி எனக்கு கல்விபுகட்டி வந்தார்போலும். அவர் இப்பொழுது காலஞ்சென்று விட்டார். என் வயதுசென்ற தாய் அத்தேசத்திலிருக்கிறாள், நான் எனது 19-வது வயதில் புறப்பட்டு ஒரு இராஜாவிடத்தில் இராணுவத்தொழில் செய்து ஜீவிக்கலாமென்று எண்ணி வந்தேன், வரும்பொழுது படாத கஷ்டங்களையெல்லாம் பட்டேன்; கடைசியாக மிக தயாளமும் தர்ம சிந்தையுமுள்ள எஜமானரிடத்திலிருக்கிறேன்."

அந்த அரசன் இவன் சொன்னதைக்கேட்டு மிகமகிழ்ந்து இவனை இராணுவத்திற்குத் தலைவனாக ஏற்படுத்தினார். இவன் அந்நாள் முதற்கொண்டு இராணுவத்தில் என்னென்ன புதிய ஏற்பாடுகள் செய்தால் நலமோ அவைகளையெல்லாம் சரியாகச்செய்து முன்னிருந்ததை விட பத்துமடங்கு பலமாக இராணுவத்தை விருத்திசெய்தான். இவ்விதம் இவன்செய்த சங்கதி மந்திரி முதலியோர் அறிந்து இராஜனிடத்தில் சென்று "மகாராஜாவே! நமது இராணுவத் தலைவன் சிறுவனாகவிருந்தபோதிலும் புத்தி சாதுர்யமுள்ளவன்போல் தோன்றுகிறது. இராணுவத்தை முன்னைவிட அநேகம் பங்கு பலப்படுத்திவிட்டான், எத்தேசத்து மன்னர்களும் நம்முடன் எதிர்க்கமுடியாதென நினைக்கிறோம், தாங்களும் ஒருகடவை வந்து இராணுவத்தைப்பார்வையிட வேண்டுமென்று" கேட்டுக்கொண்டார்கள், மகாராஜாவும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி மறுநாளே தான்வருவதாக வாக்களித்துவிட்டு அந்தப்புரம் சென்றார்.

உடனே ஸ்நாநம் செய்துவிட்டு போஜனமுண்டு தாம்பூலம் தரித்து தமது மனைவியோடு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது இராணியார் நமது இராணுவத்திற்கு தலைவராக ஒருசிறுவன் நியமிக்கப்பட்டிருப்பதாக முன் சொல்லியிருந்தீர்களே அவன் எவ்விதம் வேலை செய்து கொண்டிருக்கிறான்" என்று கேட்டாள் இராஜன் புன்சிரிப்புடன் அவன் மகாயோக்கியனும், கெட்டிக்காரனும். இராணுவவேலையில் வெகுதிறமையுள்ளவனென்றும் நமது மந்திரிகள் இன்று தான் சொன்னார்கள். நான் அவனையும்



இராணுவத்தையும் பார்க்க நாளையதினம்போக உத்தேசித்திருக்கிறேன். உன் எண்ணமெனவென்று கேட்க அவ்விதமே செய்யுங்களென்று முகமலர்ச்சியுடன் சொன்னாள். இராஜன் உன் மனதில் எதோ தோன்றி யிருக்கிறதுபோல் தென்படுகிறது. அதென்ன? என்னிடத்தில் சொல்லக்கூடாதா வெனக் கேட்டார். இராணியார் ஒன்றுமில்லை நமது குழந்தைக்கு அவரைக் கணவராகச்செய்யலாமாவென எண்ணினேனே தவிர வேறன்று என உத்திரமளித்தாள், ஆம்! அது சரி நமது பெண்ணோ அநேக இராஜபுத்திரர்களை வேண்டாம் வேண்டாமென்று சொல்லி யிருக்கிறாளே, இவனிடத்தில் அவளுக்குப் பிரியமிருந்தால் நலமே என்று சொன்னான். இராணியாரும் ஆமாம் யோசித்துக் கொள்ளுவோம் என்று சொன்னாள். இராஜன் பின்பு சில இராஜ காரியங்களைப் பார்க்க சபா மண்டபத்திற்குச்சென்று இராஜகாரியங்களைச் செய்துவிட்டு சாயங்காலம் குதிரைசவாரிசெய்பவர்போல் குதிரைமேல் ஏறிக்கொண்டு தனிமையாக இராணுவஸ்தலம் வரையிலும்சென்று ஒரு சேவகனைக்கூப்பிட்டு இந்த வூர் அரசரைப் பார்க்கவேண்டும்? அவர் எங்கே, என்று கேட்டார். அவன் அவர் அரண்மனையிலிருப்பார் என்று பதில் உரைத்தான்.

பின்பு இங்குயாரிருப்பது? என்று கேட்டார்.

இதுதான் சேனைத்தலைவரும் சேனைகளுமிருக்குமிடம் என்றான்.

ஆனால் சேனைத்தலைவரைப்பார்க்க முடியுமாவென்றார்.

இப்பொழுது தான் 7-வது பட்டாளத்திற்கு பரீட்சை நடக்கிறது, அவர் அங்கிருக்கிறார், இன்னும் ஒரு மணிக்குள் முடிந்துவிடும், பின்பு அவரைக் காணலாமென்றான்.

ஆனால் சரி, அவர் நல்லவரா கெட்டவரா என்றான் அரசன்.

சேவகன் கோபங் கொண்டவன் போல் முகத்தை வைத்துக் கொண்டு என்ன ஐயா! இவ்விதம் கேட்கிறீர்கள்? எனக்கு அர்த்த மாகவில்லை, என்றான்.

என்னப்பா! அவர் யோக்கியர்தானாவென்றேன் தப்பென்ன? ஏன் கோபித்துக்கொள்ளுகிறாய்? என்றார்.

இராஜனைப்போல் தயாளகுண முள்ளவராயும் தர்மசிந்தனையுள்ளவராயும், இன்னும் இராணுவத்திற்கு வேண்டிய சாமர்த்திய முள்ளவராயு மிருக்கிறார். இவருக்குச் சமானமான தலைவன் எத்தேசத்திலும் கிடையாது, என்று சொன்னான்.

வெகு சந்தோஷம், உனக்கு என்ன சம்பளம்? என்றார்.

ஐயா! எனக்கு 750 ரூபா; நான் இக்கோட்டை வாசலுக்கு அதிகாரி என்றான்.

அப்படியா வென்று சொல்லி இன்னொரு தடவை வருகிறேன் என்று புறப்பட்டு அரண்மனைக்குப் போய்விட்டார்.

மறுநாள் இராஜன் மந்திரிகளுடன் குதிரையேறி இராணுவத்திற்குச் சென்று இராணுவத் தலைவனைக்கண்டார். அவன் இவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்துவிட்டு தனது ஆசனத்தில் உட்கார்ந்தான், 7-வது பட்டாளம் நன்றாயிருக்கிறதாவென்று கேட்டபோது அது வெகு நன்றாகத் தானிருக்கிறதெனச்சொன்னான், நேற்று தினம் பரிக்ஷை நடந்ததாம். அது எந்தபட்டாளத்திற்கு என்றுகேட்டார். அது 7-வது பட்டாளத்திற்குத் தான் என்றான். அது நன்றாக விருக்கும்பொழுது பரிக்ஷைசெய்வானேன் என்றார் நான்புதிதாய் பள்ளத்தில் உட்கார்ந்து யுத்தம் செய்யும்விதம் ஒன்று கண்டு பிடித்தேன், முதல் ஆறு பட்டாளங்களுக்கு அதைக் கற்பித்தேன். இந்த ஏழாவது பட்டாளத்திற்கு சென்றவாரம் தான் போதித்தமையால் ஒரு தடவை பரிக்ஷைசெய்யும்படி நேரிட்டதென்று சொன்னான். இராஜன் மிக மகிழ்ந்து உத்திரவுபெற்றுக்கொண்டு தனது அரண்மனைக்கு மந்திரிமுதலியவர்களுடன் சென்றான்.

அடிமையோ தன்வேலையை முடித்துவிட்டு வீடுசென்று ஐயோ! நமது தந்தையில்லையே யென்று கொஞ்சம் விசனப்பட்டு பின்பு தனது தாயாரை வரவழைக்க தனது வேலைக்காரர்களை காஷ்மீரத்திற்கு வடக்கேயுள்ள கோமுதி பட்டணத்திற்கு அனுப்பினான். அவர்கள் அங்கு சென்று அந்தம்மாளைக்கண்டு தங்களை தங்கள் குமாரன் காஷ்மீரத்தில் சேனைக்குத் தலைவராக யிருக்கிறார் இப்பொழுது மாதம் ரூபா. 5000 சம்பளம். அவர் தங்களை யழைத்துக்கொண்டு வரும்படி உத்திரவளித்திருக்கிறார் என்றார்கள். தாயார் மிகச்



சந்தோஷப்பட்டு தனக்குவேண்டிய சிலசாமான்களை எடுத்துக்கொண்டு இவர் களுடன் புறப்பட்டு தனது குமாரனிருக்கு மிடத்திற்கு வந்து, தமது அரு மைக் குமாரனைக் கண்டு மடியில் வைத்து முத்தமிட்டு க்ஷேம சமாசாரத்தை விசாரித்தாள். அடிமை யாவற்றையும் சொல்லி தாயாருக்கு உயர்ந்த புடவை களை எடுத்துக்கொடுத்தான். அவளும் மகிழ்ச்சியுடன் கட்டிக்கொண்டு போஜன முண்டான பின்பு தாய் தனது மகன் யோக்கியனாயும் பெரியமனித னாயு மிருப்பதைக்கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

சிலமாதங்கள் சென்றபின் ஒருநாள் இராஜன் சபைக்குவந்து மந்திரி பிரதானி இராணுவத்தலைவன் முதலியவர்களைக் கண்டு சந்தோஷத்துடன் பின்வருமாறு செல்லுகிறார்:— மந்திரிமார்களே! இராணுவ மந்திரி நமது தேசத்திற்கு வெகுநாளாக இல்லை. இது ஒரு குறையன்றோ? இக்குறையை நீக்க நீங்கள் ஒருவரை இராணுவ மந்திரியாக நியமிக்க வேண்டுமென்றார். மந்திரி முதலியோர்கள் தீர்க்காலோசித்தபின் பிரதான மந்திரியர் இராணுவத் தலைவன் இராணுவ மந்திரி வேலைக்கு உரியவனென்று சொன்னார். யாவரும் அவர்தான் தக்கவர் என்று ஆமோதித்துப் பேசினார்கள். இராஜன் அன்று முதல் அந்த அடிமையை இராணுவமந்திரியாக்கினார்; பின்பு சபைகலைந்தது, அவரவர்கள் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

இராணுவத்தலைவனுக்கு இப்பொழுது இரண்டுவேலை அல்லவா? சம் பளமோ 10,000 ரூ. இவன் தாயாரும் இதைக்கேட்டு சந்தோஷித்தாள். இவ னும் தனக்குக்கிடைத்த புதியவேலையை ஜாக்கிரதையாகச்செய்து வருவான். இராஜ இராஜனும் இவனிடத்தில்தான் சகலவிஷயங்களையும் யோசிப்பான். இராஜ னுக்கு இவனிடத்தில் மிகப்பிரியம் உண்டாய்விட்டது. இவனும் அதற்குத் தக்கபடி நடந்துவருவான்.

பாருங்கள்! அனாதியாய் ஊரைவிட்டுவந்து பல கஷ்டங்களை அநுபவித் தவனுக்கு வந்த பாக்கியத்தை! இதல்லவோ அதிர்ஷ்டம்! மேலும் அதிர்ஷ் டம் நல்லவனுக்கும் யோக்கியனுக்கும் வருவது சகஜமே. இராஜன் இவனை தனக்குச்சமமாகவே நடத்துவார். இவன் அவருடன்கூட குதிரைச்சவாரி செய்வான்; மந்திராலோசனை சபையில் பிரதான மந்திரியும், இராஜனும் இவன் யோஜனையைத்தான்கேட்டு மற்றவை செய்யத்தலைப்படுவார்கள். இவன் இவ்வளவு பாக்கியவானாகவிருக்கும்பொழுது ஒருகுறையிருந்தது; அதாவது

இவனுக்குத்தகுந்த மனைவிகிடைக்கவில்லை, அக்கவலை இவனுக்கு அப்பொழுதுதான் உண்டாய்விட்டது.

இராஜனுக்கு ஒருபுத்திரியுண்டு; அவளுக்கு 16 வயதாய்விட்டது. அவள் மிக அழகுள்ளவள், அவளுக்குச்சமானம் அவ்வூரில் இல்லையென்று சொல்லலாம். அனதுபற்றி அவளை அநேகர் ஜகத்ஜோதி என்று அழைப்பதும் உண்டு, இவள் படித்திருக்கிறாள், மகாபுத்தி சாதுர்யமுடையவள். தெய்வபக்தியும் தகப்பனுரைப்போல் தயாளகுணமும் தர்மசிந்தனையும் பொருந்தியவள். இவள் அந்த இராஜனுக்குப் பிறந்தபொழுது மகாலக்ஷிமியைப்போல் இவள் விளங்குவாள் என்று ஜோசியர்கள் சொன்னார்களாம். இவளை மணம்புரிய அநேகதேசத்து மன்னர்கள்வந்து கேட்டார்கள். இவள் எனக்கு ஒவ்வொருவனும் சம்மதமில்லையென சொல்லிவிட்டாள். இவள் இவ்விதம் செய்கதானது தனது தாய்தகப்பன் யார்களுக்கு விசனத்தையுண்டாக்கியபோதினும் இவளுடையகுணங்கள் அதைமாற்றின.

சேனைத்தலைவன் அடிக்கடி இராஜன் அரண்மனைக்கு வருவதுண்டு. இவனை இராஜகுமாரத்தி பலதடவை கண்டிருக்கிறாள், ஒருநாள் தற்செயலாய் இவன் பூந்தோட்டத்தில் பூபரித்துக் கொண்டிருக்கும்பொழுது இவளுடைய அருமையான பஞ்சவர்ணக்கிளி வெளியிற் ஓடத்தலைப்பட்டது. அப்பொழுது சேனைத்தலைவன் அதைக்கண்டு பக்குவமாக அதைப்பிடித்துக்கொண்டான். இராஜகுமாரத்தி இதைப் பார்த்துக்கொண்டிருந்தவளாதலால் ஐயா! இராணுவ மந்திரியாரே! தயவுசெய்து அக்கிளியை எனக்குக்கொடுக்கவேண்டும் என்றாள்.

இராணுவ மந்திரி தங்களுடையதென்றே பிடித்தேன். இதை எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் ஒருவார்த்தை தங்களிடத்தில் சொல்லவேண்டியிருக்கிறதென்றான்.

அக்கன்னிகை புன்சிரிப்புடன் நீங்கள் சொல்லப்போகிறது எனக்கும் தெரியுமென்றாள்

அவன் ஆனால் என்ன? நீங்களே சொல்லுங்கள் அதை என்றான்.
இராஜகுமாரத்தி தங்கள் கையிலிருப்பது பெண்கிளியல்லவா. என்றாள்.
உடனே அவனுக்கு அர்த்தமாய்விட்டது.



ஆமாம் ஆண்கிளி ஒன்றுசம்பாதிக்கவேண்டும், ஆனால் இராஜ அரண்மனையிலிருக்கும் இதற்கு வேறுநாட்டு ஆண்கிளி சரிப்படாதே என்று சொன்னான்.

இராஜ குமாரத்தி மறுபடியும் புன்னகையுடன், சரிப்படாதா சரிப்படும் என்றாள்.

நானோ மகாஏழை, அடிமைத்தொழிலிருந்து மந்திரிவேலைக்கு வந்திருக்கிறேன் என்றான்.

உடனே முகமலர்ச்சியுடன் இராஜகுமாரத்தி பிரபுவே! நமது வாழ்நாளைக்கழிக்க நம்முடனிருக்க நல்ல யோக்கியதையுள்ளவரைத்தேடவேண்டும். அவன் விதிவசத்தால் இராஜனாகக்கூடும் அல்லது பிச்சைக்காரனாகக்கூடும்? ஆனால் தனவந்தனைத்தேடுவது வெகுசுலபம், நல்லகுடும்பத்தில் பிறந்து கீர்த்திபெற்ற இராஜகுமாரனைத்தேடுவது கஷ்டமல்லவா? நான் இந்த இரண்டுவிதத்திலும் அநேகரைக்கண்டிருக்கிறேன், நீர் தான் தக்கவர். ஆனால் மகாசத்தியவானையும் யோக்கியனையும் அடையவேண்டுமென்ற எண்ணம் என்மனதில் உதித்திருந்தது. அது இன்றைக்குத்தான் பலித்துவிட்டதுபோல் தோன்றுகிறதெனச்சொல்லி அந்தக்கிளியை சரேலென்றுதாவி புன்சிரிப்புடன் எடுத்துக்கொண்டாள். இராணுவமந்திரி பேஷ்! இப்படியும் அவசரப்பட்டு கிளியை நசுக்கலாமா? என்னைக்கேட்டால் நான் கொடுக்கமாட்டேனென்று பொதுவாக புன்சிரிப்புடன் சொல்லிவிட்டு இராஜகுமாரத்தியே! நீசொல்வது சரியாகவிருந்தாலும் நான்யோக்கியனென்று ஒருசமயமும் டாசாங்குசெய்யமாட்டேன். இங்குமாத்திரமல்ல, எவ்விடத்திலும், உனக்கும் எனக்கும் ஒரே வித்தியாசமிருக்கிறது. நீயோ இராஜகுமாரத்தி நான் இராஜவம்சத்தில் பிறந்தபோதிலும் என்திறமையால் இந்த ஸ்திதிக்கு வந்திருக்கிறேன் என்றான். இராஜகுமாரத்தி இதற்குமுன் நீங்கள் என்னவேலை செய்தீர்களென்று கேட்டு, நாணி தன்கையிலிருந்த கிளியைப்பார்த்துக்கொண்டாள்

நான் வெகுகஷ்டங்களைப்பட்டவன் என்றும் தனது விருத்தாந்தம் முழுவதையும் சொன்னான்.

இராஜகுமாரத்தி உடல் பூரித்து, ஆனால் இந்தக்கிளிக்கு தகுந்தவரம் கிடைத்திருக்கிறது, இனிவிசாரமில்லை என்றாள்.

உடனே இராணுவத்தலைவன் அதற்கென்னதடை? உன் முழு எண்ணத்தை எனக்குத் தெரியப்படுத்தினால் நலமென்றான்.

எனக்கு தங்களை மணம்புரிவதில் ஆக்ஷேபனை கொஞ்சம்கூடவில்லை. எனக்கு பூர்ணசம்மதம், ஆனால் என்தாய் தந்தையர்களைக் கேட்க வேண்டியதவசியம், அவர்கள்மனம் கோணநடப்பது சரியன்றல்லவா. அவ்விதமே கணவனிடத்திலும் மனைவிநடக்கவேண்டும். ஒருவள் அவ்விதம் செய்யத்தவறினால் தன் கணவனிடத்திலும் அவ்விதமே செய்துக்கொண்டிருப்பாளல்லவா வென்றாள்.

ஆனால் சரிபெண்ணே! நான் இப்பொழுதே மகா இராஜாவிடம்சென்று அவர்சம்மதியைப்பெற்று வருகிறேன், அவர் என்னிடத்தில் பிரியமாயிருப்பதும் என்னை அவர் குமாரன்போல் நடத்திவருவதும் யாவருக்கும் தெரியுமென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு இராஜனைக்காண உட்சென்றான்.

அப்பொழுது இராஜன்தன் மனைவியோடு தன்குமாரத்தியின் விவாகத்தைப்பற்றி பேசிக்கொண்டிருந்தான்.

மனைவி இராணுவமந்திரிக்கு தமது பெண்ணை விவாகம் செய்விப்பது நலமென்று பல தடவைசொல்லி யிருக்கிறாள். இவருக்கும் அப்படியே இஷ்டம்.

இராணுவத்தலைவன் வந்தவுடன் இராஜன் வெளியிற்வந்து என்னசமாசாரம்? அப்பா! என்றார் அரசன்.

என்பிதாவே! தங்கள்குமாரத்தியை நான் மணம் செய்யவிரும்புகிறேன், மன்னிக்க வேண்டுமென்றான்.

இராஜன் அப்பாகுழந்தையே எனக்குகோபமொன்றுமில்லை. எனக்குச் சந்தோஷம் தான். அவளுக்கும் சுமார் 16-வயதாய்விட்டது, எனக்கும் ஒரே குமாரத்திதான். அவள் அநேகரை விவாகம் பண்ணிக்கொள்ளேன் என்று மறுதளித்துவிட்டாள். நீயோ மகாயோக்கியன் அவளை உனக்கு விவாகம்செய்விப்பதில் எனக்கு யாதொருதடையுமில்லை; ஆனால் அவளுடைய சம்மதத்தைமாத்திரம் தெரிந்துகொள் என்றார்.

365

# மாதர்மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. V. | Madras: June 1903. | No. 2.
புத்தகம் ரு. | சென்னப்பட்டணம், 1903 ஹு ஜூன்மீ | இல. உ.

மகாராஜாவே! அவள் என்னை மணம்புரிய சம்மதித்து விட்டாள், தங்கள் உத்திரவு வேண்டுமென்று சொன்னவுடன் இராஜன் மிகச்சந்தோஷப்பட்டு தன் மனைவியிடத்திற்குச் சென்று நமது குழந்தை இராணுவ மந்திரியை மணம்புரிய சம்மதித்தாளாம், நாம் பேசிய விஷயம் பலித்து விட்டது, இது ஈசுவர சங்கல்பம் தானென்று சொல்லிக்கொண்டு இருவரும் வெளிவந்தார்கள்.

இராஜன், வெகுசந்தோஷம்! அவள் சம்மதம் போதுமானது, ஈசுவரன் உங்களுக்கு தீர்க்க ஆயுளையளித்து சுகமளிப்பாராக, அவள் தக்க கணவனைத் தேடிக்கொண்டாள். இவ்விஷயத்தில் எனக்கு திருப்திதான் என்று சொல்லும்பொழுதே இராஜகுமாரத்தி கிளி ஒருகையிலும் மற்றொரு கையில் நாலு ஐந்து ரோஜா புஷ்பங்களை எடுத்துக் கொண்டு வந்து தான் வரிக்கப்போகும் கணவருக்கு ஒன்றும் தாயாருக்கு ஒன்றும் தகப்பனாருக்கு ஒன்றுமாகக் கொடுத்து சந்தோஷமாகக் கிளியுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தாள்.

உடனே இராஜன் இராணுவ மந்திரியை தன் வீட்டில் அன்றைய தினம் போஜன முண்ணும்படி கேட்டான்; அவனும் சம்மதித்து யாவரும் போஜன முண்டார்கள். பின்பு இராஜா பிரதான மந்திரியை வரவழைத்து தனது குமாரத்திக்கும் இராணுவ மந்திரிக்கும் அடுத்தவாரம் திங்கட்கிழமை விவாகமுகூர்த்தம், விவாகத்திற்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்தும்படி உத்திரவு அளிக்கவே, மந்திரி அவ்விதமே செய்வித்தான். இராஜா வீட்டு கலியாணத்திற்கு கேட்கவேண்டுமா. சிலவோ அதிகம்; தெருக்களிலெல்லாம் முத்தால் தோரணங்கள் கட்டப்பட்டன. பெரிய பந்தல்கள் போடப்பட்டன; பந்தல்கால்களுக்கு இரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன; வாத்தியங்களோ தினுசு தினுசாக வந்திருந்தன; பல தேசத்திலிருந்து மன்னர்களும் பிரபுக்களும் வந்திருந்தார்கள். இவர்களெல்லாம் தங்கியிருக்க விசாலமான விடுதிகளும் தயார்செய்யப்பட்டன.

இந்த இராஜ குமாரத்தி அநேகரை எனக்கு வேண்டாம் வேண்டாமென்று நீக்கிய அரசர்களுக்கு இந்த புதிய மாப்பிள்ளையின் மேல் வெறுப்பிருந்த போதிலும் இவனுடைய பெரிய அந்தஸ்திற்கும் இவன் குணத்திற்கும் அஞ்சி யாவரும் விவாகத்திற்கு வந்து காலத்தைச் சந்தோஷமாக கழித்தார்கள். விவாகமோ வெகு விமரிசையாக நடந்தது; தானதர்மங்களோ அளவிடக்கூடாமல் செய்யப்பட்டன. பாண வேடிக்கையும் சங்கீதக் கச்சேரியும் வெகுநன்றாக நடந்தன, பின்பு தம்பதிகள் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இராணுவமந்திரியின் தாயாருக்கோ சந்தோஷமாச்சுது. மருமகளை வெகு பிரியத்துடன் நடத்தி வந்தாள்.

இவ்விதம் வாழ்ந்து வரும் நாளில் இந்த இராஜனுடைய மைத்துனன் இறந்து போய் விட்டான். அவனுக்கு புத்திரனுமில்லை, புத்திரியுமில்லை. உடனே வேறு தேசத்து இராஜன் யுத்தத்திற்கு வந்து இந்த தேசத்தைப்பிடித்துக் கொண்டதாக இந்த இராஜனுக்கு சங்கதி வந்தது. உடனே மருமகனாகிய இராணுவ மந்திரி நான் சென்று இராஜியத்தை வசமாக்கிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு திரண்ட சேனைகளுடன் அங்கு சென்று அந்தப் புதிய இராஜனுடன் அகோர யுத்தம் 3 நாள் செய்து அவனைத் தோற்கடித்தான். அவன் பயந்து தப்பிப்பிழைத்தோம் என்று எண்ணிக் கொண்டு ஓடிப்போய் விட்டான். இவன் இராஜியத்தை சரிவர சீர்படுத்தி விட்டு தன்மாமனார் இராஜியத்திற்கு வெகு சந்தோஷத்துடன் சென்று ஜயக் கொடியை நாட்டினான். இராஜா மகிழ்ந்து அந்த இராஜியத்தையும் தனது இராஜியத்தையும் இவனுக்குக் கொடுத்து இவனுக்குப் பட்டாபிஷேகமும் செய்வித்தான்.

இவன் தருமம் வழுவாமல் இராஜிய பரிபாலனம் செய்துக் கொண்டு வந்தான். இவனுக்கும் ஒரு புத்திரனும் புத்திரியும் ஜனித்தார்கள், யாவரும் புத்திர சந்தான முண்டானதைப் பற்றியும் தங்களுக்குத் தகுந்த இராஜன் அமைந்து நீதிவழுவாமல் இராஜிய பரிபாலனம் செய்து வருவதைப்பற்றியும் மகிழ்ந்து இராஜனையும் இராணியையும் வாழ்த்திக்கொண்டேயிருந்தார்கள்.

ஒருநாள் உல்லாசமாய் பூந்தோட்டத்தில் புதிய இராஜனும் இராணியும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இராணி தன் கணவனைப்பார்த்து இந்தக் கிளிக்கு விவாகம் செய்விக்க வேண்டுமென்றாள். அவரும் அதற்கென்ன நாளைய தினம் ஒரு பஞ்சவர்ணஆண் கிளியைத்தரு



விக்கிறேன் என்றான், இராணி சரி, அது அடிமைக்கிளியாக விருக்குமோ என்று வேடிக்கையாகக் கேட்டாள். இராஜன் புன் சிரிப்பு சிரித்து இராஜக்கிளி யாகத்தானிருக்கும் என்றான்.

தாங்கள் ஒரு சமயத்தில் என்னிடத்தில் "கனவோ நினைவோ" என்று எண்ணினேன் என்று சொன்னீர்களே, ஞாபகமிருக்கிறதா, வென்றாள். இராஜன் ஆம் ஞாபக மிருக்கிறது அது கனவல்ல; நினைவுதான் என்று சிரித்துக் கொண்டு சொல்லிவிட்டு இருவரும் சந்தோஷமாக உட்சென்றார்கள்.

இவர்கள் வெகு வருஷம் சௌக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

(முற்றிற்று.) C. S. R.

## ராணிபவானி.

### I.

வங்காள இராஜதானியானது மகம்மதியருடைய ஆளுகையிலிருந்த போது, சுதேச இராஜாக்களும் தங்கள் தங்கள் இராஜ்ஜியத்தை அரசாண்டு வந்தார்கள். இவர்கள் அதிக பராக்கிரம முள்ளவர்கள். இவர்கள் தங்களிஷ்டப்பிரகாரம் அரசாட்சி செய்து வந்தார்கள். வங்காள இராஜதானிக்கு முக்கிய பட்டணமாகிய மூர்ஷிடாபாத்தில் நவாப் வசித்துக் கொண்டு "இப்பொழுது கவர்னர் எவ்விதம் இராஜ்ஜிய பரிபாலனம் செய்து வருகிறாரோ அவ்விதமே" இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்து வந்தார். சிற்றரசர்களாகிய சுதேச இராஜாக்கள் வருஷா வருஷம் தங்கள் கப்பங்களை நவாப்பு அவர்களுக்குக் கட்டிக்கொண்டு வந்தார்கள். இச்சிற்றரசர்களில் எவராவது தங்கள் கப்பங்களைக் கட்டத்தவறினால், நவாப்பு அவர்கள் தங்கள் இராணுவ உத்தியோகஸ்தர்களை அவர்களிடம் அனுப்பி கப்பத்தை வசூல்செய்தும், இனிமரியாதையாக கப்பம்கட்டவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லும்படியும் கட்டளையிட்டுவருவது வழக்கம். இப்படியிருக்குங் காலத்தில் சென்ற நூற்றாண்டின் கடைசியில் மகம்மதியருடைய அரசாட்சியின் பலம் குறைந்து போகவே, இந்தியாவின் பிரதான சக்கிரவர்த்தியாக டெல்ஹியில் ஆண்டு வந்த சக்கர

வர்த்திக்கு ஒருவரும் பயப்படவில்லை. இவர் பேருக்கு மாத்திரம் சக்கிரவர்த்தி என்ற பெயரைப் பெற்றிருந்தார். சிற்றரசர்கள் சுதேச்சையாய் தங்கள் இராஜ்ஜியத்தை ஆளத்தலைப்பட்டார்கள். அதனால் மகம்மதியர்களுடைய பராக்கிரமும், சக்கிரவர்த்தி என்கிற மதிப்பும் போய்விட்டது. இவர்களுக்குள் அடங்கி அரசுபுரியும் இராஜாக்களும் இவர்களுக்கு அடங்காமல் தங்கள் தங்களுடைய தேசங்களை தங்களிஷ்டப்பிரகாரம் அரசுபுரிய தலைப்பட்டு கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். இதனால் இவர்களுக்கு அபகீர்த்தியுண்டானது மல்லாமல், இவர்களுடைய தேசங்களும் பலவீனமடைய ஆரம்பித்தன. மகம்மதிய ஆளுகையில் கடைசியாக வங்காள இராஜதானியை அரசுபுரிந்தவர் அல்வர்டிகான் என்பவர். இவர் அதிக பராக்கிரமசாலி; ஆகிலும் இவருடைய ஆளுகையில் சண்டை அதிகரித்தே யிருந்தது. இவர் தன்னுடைய பேரனை சுராஜிடௌலா என்ற சிறுவனை நவாபாக ஏற்படுத்திவிட்டு கி. பி. 1756ம் வருஷம் இறந்துபோய் விட்டார். அப்பொழுது சுராஜிடௌலா பதினெட்டு வயதுடையவராயிருந்தார். இவர்காலத்தில் இவராளுகையின் கீழடங்கிய நான்கு பராக்கிரமமுள்ள சுதேச இராஜாக்கள் இருந்தார்கள். கிருஷ்ணநகர் இராஜாவாகிய கிருஷ்ண சந்திரர் ஒருவரும், மதக்கணத்து இராஜாவாகிய இராஜ ராஜவல்லபர் என்பவரும் பாடலிபுத்திற்கு (Patna) இராஜாவாகிய இராஜாராய் துர்லவர் என்பவரும், நாட்டூருக்கு இராணியும் உத்தமஸ்திரீயுமாகிய ராணிபவானி என்கிற நால்வருமே. இந்நால்வரும் இராஜ்ஜிய பாரஞ்செய்வதில் வல்லமையுள்ளவர்களாகவும், அநுபவமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இவர்களைப்போலவே சுராஜிடௌலாவின் சேனைத்தலைவராகிய மிர்ஜாபர் என்பவரும், தனவந்தராகிய ஜகதசத் என்பவரும் அக்காலத்தில் அதிக திறமையுள்ளவர்களாகவும், அநுபவமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இந்த ஆறு பேர்களுந்தான் கடைசியாக வங்காள இராஜதானியை இங்கிலீஷ்காரர் வசம் ஒப்புவித்தார்கள். இது நிற்க:— மேற்சொல்லியவர்களில் ஒருவராம் நாட்டூர் இராணியாராகிய ராணிபவானி அம்மாள் என்கிற உத்தமஸ்திரீயின் சரித்திரத்தை எழுதுகிறோம். நாட்டூர் தேசத்தின் வருஷவரும்படி ஒன்றரைக்கோடி ரூபாய். இதில் நவாபுக்கு வருடந்தோறும் கட்டவேண்டிய பகுதி ரூபாய் ஐம்பத்திரண்டுலக்ஷம். மிகுதி ரூபாயைக்கொண்டு ஐம்பதாயிரம் காலாட்படைகளையும், குதிரைப்படைகளையும் போஷித்து மிகுந்ததை இராஜ்ஜிய பொக்கிஷத்தில் சேர்த்துக்கொண்டு வருவார்கள்.




# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஒளவையார்.

Vol. V. | Madras: July 1903. | No. 5.

புத்தகம் ரு. | சென்னப்பட்டணம், 1903ளு ஜூலைமீ | இல. ரு.


## சமாசாரக் குறிப்பு.

* * *

ஒரு வருடாந்தரப் பத்திரிகை ஆர்டிக் மகாசமுத்திரத்திற்கு சமீபத்திலுள்ள கேப்பிரின்ஸ் ஆப்வேல்ஸ் என்றவிடத்தில் வருடத்திற்கொருமுறை பிரசுரிக்கப்பட்டுவருகிறதாம்.

* * *

காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் பட்டத்திற்கு வந்தபொழுது கிரேட் பிரிட்டனில் ஜனங்களில் 100-க்கு 40-க்குமேல் தங்கள் பெயரை எழுதத் தெரியாதாம். ஆனால் இப்பொழுது 100-க்கு 7 பேர்தான் அவ்விதம் எழுதத் தெரியாமலிருக்கிறார்களாம்.

* * *

குழந்தைபிறந்தவுடன் அதன் மூளை 10 அவுன்ஸ நிறையுள்ளதாகவிருக்கும். ஒருவருடம் சென்ற பின்பு அது 2 பவுண்டிருக்கும்.

* * *

மிஸ்டர் கார்நீகி அவர்களுடைய வருடாந்தர வரும்படி 2,000,000 பவுண்டு. அதாவது ஒரு நிமிஷத்தில் 4 பவுண்டு, ஒருமணியில் 240 பவுண்டு. நமது தேசத்திலுள்ள சிலதனவான்கள் வீண்பெருமைக்கும் பேருக்கும் தங்

h

கள் பணத்தை செலவழிப்பது போலல்லாமல் தர்மமான விஷயத்தில் பணத்தை இவர் செலவழித்து வருவது யாவருக்கும் தெரியும், இப்படியல்லவோ நம்மவர்களிருக்கவேண்டும்!

* * *

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 7-ல் 1 மாது பூமியுடையவளாம். இவ்விதம் அங்கு 38,000 மாதர்கள் பூஸ்திதி யுடையவர்களாயிருக்கின்றார்கள்.

* * *

சுவிட்ஸர்லேண்டில் பசுமாடுகளுக்கு மணிகட்டுகிற வழக்கமுண்டு; காட்டில் இவைகளிருக்கும்பொழுது மணிசப்தம் கேட்டால் புலிகள் ஓடிப்போய் விடுமாம். இவ்விதமே ஹிமயப் பர்வதசார்பிலும் செய்யப்பட்டு வருகிறதாம்.

* * *

ஒரு எறும்பின் அபாரசக்தி:—நமது பத்திரிகையில் எறும்பைப்பற்றி பல விஷயங்களை யெழுதியிருக்கிறோம். இப்பொழுது ஒருவர் ஒரு எறும்பையும் ஒரு கருப்பாம்பூச்சியையும் நிறுத்ததில் கருப்பாம்பூச்சி எறும்பைவிட 60 மடங்கு அதிகமாம். எறும்பு கருப்பாம்பூச்சியை இழுத்துக்கொண்டுபோனதாம், 150 பவுண்டு பாரமுள்ள ஒருமனிதன் 4½ டன் அல்லது 1200 பவுண்டு நிறையுள்ளசாமானைச் சுமக்கக்கூடும் ஒருஎறும்பும் ஒருமனிதனுக்குச் சமானமெனச் சொல்லப்படுகிறது.

* * *

பாடும்பூச்சிகள்:—ஜப்பான் தேசத்தில் ஓர்விதபூச்சிகள் இருக்கின்றனவாம். அவைகள் இவ்விடத்திலுள்ள மயினாக்குருவியைப்போல வெகுநன்றாகப் பாடுமாம், அவைகளை அத்தேசத்திலுள்ள சுமார் 3000 ஜனங்கள் காப்பாற்றி விலைக்கு விற்று ஜீவித்துவருகிறார்களாம்.

* * *

ஆம்பைன் என்ற பட்டணத்தில் ஒரு பிரபுயிருக்கிறாராம். அவருக்கு கைகளில்லையாம் ஆனால் கால்களால் வெகு நன்றாய் எழுதுகிறாராம், கால்களாலேதான் கத்தி கரண்டி முதலியவைகளை எடுத்து போஜனம் முதலியவைகளை வெகுநன்றாகசாப்பிடுகிறாராம்.

* * *



திமிங்கிலத்தின் மேல்வாய்க்கட்டையிலுள்ள எலும்பு 25 அடி நீளம். அதன்நாக்கிலிருந்து சுமார் 1 டன் எண்ணெய் எடுக்கப்படுகிறது.

* * *

கோயம்பத்தூரிலுள்ள கவர்ன்மெண்டு பெண்கள் பாடசாலை வெகுநன்றாக கட்டப்பட்டுவருகிறது. இது சீக்கிரத்தில் பூர்த்தியாய்விடும். அப்பொழுது அங்குள்ளவர்கள் தங்கள் குமாரத்திகளை அப்பாடசாலைக்கு அனுப்புவதுடன் சுயநலம் பாராட்டாமல் இதரர்களையும் தூண்டுவார்களென நம்புகிறோம்.

* * *

"இவ்வருஷம் விவாகங்கள் அதிகமாக நடக்கப்பட வில்லை. ஆனால்
தஞ்சாவூர் திருச்சிநாப்பள்ளி ஜில்லாக்களில் வரதக்ஷணை வாங்கும் தொத்து
வியாதி கோயம்புத்தூர் ஜில்லாவிலும் பரவியிருக்கின்றதைப் பார்க்க மிக
வருந்துகிறோம். இவ்வியாதியை நீக்க ஒரு முக்கிய கமீஷனரும் 10 அல்
லது 12 இன்ஸ்பெக்டர்களும். 20 அல்லது 25 ஓவர்சியர்களும் தேவை
யென" ஒரு நிருபர் தெரிவிக்கிறார். கோயம்புத்தூர் ஜில்லா சீர்திருத்தத்திற்
குப்போர்போனதென அநேகர் சொல்லுகிறார்கள். இது வாஸ்துவமோ
பொய்யோ? வாஸ்துவமாயிருந்தால் வீண்பெருமைக்கும் பேருக்கும் அந்த
ஜில்லா பாசாங்கு செய்துக் கொண்டு வந்திருக்கவேண்டும். இவ்வித பாசா
ங்கு எப்பொழுது நீங்கி அந்த ஜில்லா கண்ணிய முள்ளதா யிருக்குமோ?

## முக்கிய நோட்டீஸ்.

நமது பத்திரிகைக்கு இடையூறுகள் அடிக்கடி சம்பவிக்கின்றன. இ
வைகள் நமக்கு மிக கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டே
யிருக்கின்றன. ஆயினும் இனியாவது பத்திரிகையைக்
கிரமமாகப் பிரசுரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். நமது
பத்திரிகை தாமதமாக வெளிவருவதைக்குறித்து வருந்
தாத சந்தாதாரர்களில்லை. பத்திராதிபரும் மிக வருத்தப்படுவதும் தெரிந்த
விஷயமே. நமக்கு பாக்கியுள்ள சந்தாதாரர்கள் கூடிய சீக்கிரத்தில் தங்கள்
பாக்கி பணத்தை அனுப்பினால் நமது பத்திரிகையை சரிவர நடத்த முடியும்.
நமது பத்திரிகைக்கு மிஸ்டர். T. முத்துராம பிள்ளையவர்கள்
மானேஜராக நியமிக்கப் பட்டிருக்கிறார். அவருடைய முயற்சி
யால் இனி நமது பத்திரிகை சரிவர பிரசுரிக்கப்படுமென்றே நம்புகின்றோம்.

நமது சந்தாதாரர்கள் பத்திரிகை விஷயமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களுக்கு "மானேஜர், மாதர் மனோரஞ்சினி ஆபீஸ். திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவேண்டும். மணியார்டர் முதலியவைகளும் மானேஜர் பேருக்கே அனுப்பப்பட வேண்டும். பத்திராதிபருக்கு எழுதவேண்டியவர்கள் மாதர் மனோரஞ்சினி பத்திராதிபர்; மாதர் மனோரஞ்சினி ஆபீஸ் திருவல்லிக்கேணி, சென்னை என்று தான் எழுதவேண்டும். பத்திரிகைகள், புஸ்தகங்கள், நிரூபங்கள் முதலியவைகளும் பத்திராதிபர் பேருக்கே அனுப்பப்படவேண்டும்.

C. S. இராமசுவாமி ஐயர்,
எடிடர் அண்டு ப்ரொப்ரைடர்,
மாதர் மனோரஞ்சினி.

16164

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிக்கை.

நமது பத்திரிகைக்கு பாக்கியுள்ள சந்தாதாரர்கள் கூடிய சீக்கிரத்தில் தங்கள் பாக்கி தொகையை அனுப்புவார்கள் என்று நம்புகிறோம். பத்திராதிபருக்கு நேரிட்டிருக்கும் கடனை இதைக்கொண்டு தான் அடைக்கவேண்டும்.

T. முத்துராம பிள்ளை. மானேஜர்.

### விடுகதைகள்:

1. கைகளுண்டு, ஆயின் வேலைசெய்ய விரல்களில்லை; கழுத்துண்டு ஆயின் அதின்மேலுள்ள முகமில்லை; மானிடரை விழுங்கவல்ல வயிறுண்டு, ஆயின் விழுங்கினதை ஜீரணம்செய்ய சக்தியில்லை கழுத்தே யதின் வாயாகும். கருத்தறிந்து இதன் பொருளியம்புவீரே.

2. அது விருக்ஷத்தை யொத்தது; கிளைகளுள்ளது; பத்திரங்களும் அனேகமுள; பத்திரங்களிலுள்ள நரம்பு இரேகைகளை இவைகளிடத்தும் காணலாம். விருக்ஷமோ நின்றவிடம் செழித்துப் போற்றுவாருக்கு நிழலளித்துப் பலனளித்திடவும்; ஆயின் விருக்ஷத்தையொத்த இதுவோ உலகமெலாமுலாவிச்சென்ற விடமெல்லாம் சிறக்கிப் பெருமையாக்கிப் பேரானந்தத்தை விளைவிக்கும். இதுயாதென கூறுவீர் நீவிர்.

ஓர்மாது,

Printed & published by P. MUNNULAUL LALAH, at the GUARDIAN PRESS, MOUNT ROAD, for the Proprietor C. S. RAMASAWMY IYER, TRIPLICANE, MADRAS.

Y15m211, M99M0
M1913-4